ஸ்ரீ ராமகிருஷ்ணரின் மொழியமுதம்

மொழி பெயர்த்தவர் :

சுவாமி பரமாத்மாநந்தா

UNIVERSITY EXTENSION LIBRARY
29 MAR 1961
MADURAI

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் :: சென்னை-

இ:.து

சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ணமடத்துத் தலைவரால்

வெளியிடப்பட்டது

உரிமை பதிப்பாளர்க்குரியது

முதற்பதிப்பு

XXXII — 3 — '54

14911

அச்சிட்டோர் ;

பி. என். கே. அச்சகம் லிமிடெட்

மதராஸ்—1

முகவுரை

உலகெலாம் போற்றும் உத்தம குரவரான ஸ்ரீ ராமகிருஷ்ணர், 1880 பெப்ரவரி முதல் 1886 ஏப்பிரல் 23-ம் தேதிவரை, தமது சீடர்களோடும், அடியார்களோடும், காணவந்தவர்களோடும் நிகழத்திய சம்பாஷணைகளை, அவரது இல்லறச் சீடர், மகேந்திரநாத் குப்தா என்பார், தாம் கேட்ட வண்ணமே அன்றுடம் குறித்து வைத்திருந்தார். பின்னர் அவற்றை உண்மையினின்றும் வழுவாது வங்காளமொழியில் "ஸ்ரீ ராமகிருஷ்ண கதாமிருதம்" என்னும் பெயரோடு ஐந்து தொகுதிகளாக ம—என்னும் புனைபெயரைக்கொண்டு வெளியிட்டார். அந்த முதனூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து "ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசம்" என்னும் பெயரோடு வெளியிட்டவர், அமெரிக்காவிலே நியூயார்க்கிலுள்ள 'ராமகிருஷ்ண—விவேகாநந்த நிலைய'த் தலைவர், சுவாமி நிகிலானந்தர் என்பார். அந்நூல் மிகப் பெரிதாயும், பல விடங்களில் கூறியது கூறலாயும் இருந்தமையின், அதனைச் சுருக்கியும், உபதேசம் ஒன்றையும் விடாமலும் மாற்றுமலும், மீண்டும் ஒரு நூலை அவரே வெளியிட்டார்; அதன் மொழிபெயர்ப்பே இந்நூல். இதில் ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கை வரலாறு முன்னுரையாகவும், சம்பாஷணையிற் பலமுறை குறிப்பிடப்படும் அவதார புருடரான ஸ்ரீ சைதன்யரது வரலாறு அனுபந்தமாகவும் சேர்க்கப்பட்டுள்ளன. விரிவான விஷயசூசிகை (நூற்பொருட் குறிப்பு) ஒன்றும் பயன்படத்தக்க முறையில் நூலின் இறுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நூல் தமிழ்மக்களிற் பெரும்பாலார்க்கும் பயன்படவேண்டும் என்னும் கருத்தோடு மிக எளிய தெளிவான நடையில் எழுதப்பட்டுள்ளது. சம்பாஷணையில் வரும் முக்கியமான இடங்களிலும், தொடர்மொழிகளிலும், குருதேவர் கூறிய வடமொழிப் பதங்களே வழங்கப்பட்டுள்ளன. பொருள் பலர்க்கும் விளங்காத இடங்களில் அவற்றுக்கு நேரான தமிழ்மொழிகளும் தரப்பட்டுள்ளன. வங்காளநாட்டினரின் பெயர்களும், ஊர்ப்பெயர்களும், பெரும்பாலும் அவர்கள் உச்சரிக்கும் முறைப்படியே அமைக்கப்பட்டுள்ளன. சுருங்கக் கூறின், இயன்றவரை குருதேவருடைய திவ்யமொழிகளின் மணம் கமழுமாறே இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

உள்ளுறை

		பக்கம்
	முன்னுரை	1
1.	குருவும் சீடரும்	103
2.	வித்யாசாகரரைப் போய் பார்த்தல்	128
3.	இல்லறத்தார்க்குப் புத்திமதி	143
4.	குருதேவரும் கேசவரும்	163
5.	குருதேவரும் விஜயகோசுவாமியும்	189
6.	அடியார் கூட்டத்தின் நடுவே	210
7.	பண்டிதர் சசதர்	244
8.	கடவுள் வெறிநிலை	281
9.	சில நெருங்கிய சீடர்கள்	322
10.	சியாம்புகூரில் ஸ்ரீராமகிருஷ்ணர்	362
11.	காசிப்பூரில் குருதேவர்	407
12.	குருதேவர்க்கு அடியார்மீதுள்ள அன்பு	438
13.	விண்ணகம் புக்கபின்	457
	அனுபந்தம் :	
	ஸ்ரீசைதன்யர்	495
	கால வரிசைப்படி ஸ்ரீ ராமகிருஷ்ணரது வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு	500
	விஷயசூசிகை	503



UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

முன்னுரை

வங்காள மாகாணத்திலே ஹுக்ளி ஜில்லாவிலேயுள்ள கமார்ப்புகூர் என்ற கிராமத்திலே ஸ்ரீராமகிருஷ்ணர் அவதரித்தார். அக்கிராமத்திலே சென்ற நூற்றுண்டில் சிற்றூர்களுக்குரிய எளிமையும் அழகும் குன்றாது குடிகொண்டிருந்தன. 'ரயில்' பாதைக்குத் தொலையிலிருந்தமையால், பட்டண வாழ்க்கைக்குரிய பகட்டு அங்கே புகவில்லை. நெல் வயல்களும், உயர்ந்த கமுகு முதலிய மரங்களும், கம்பீரமான ஆலமரங்களும், ஒரு சில குளங்களும், இரு மயானங்களும் அதனிடம் இருந்தன. கிராமத்திற்குத் தெற்கே ஓர் ஓடை மெதுவாகத் தவழ்ந்துகொண்டிருந்தது. அண்டையிலுள்ள ஒரு ஜமீன்தாரால் பொது உபயோகத்திற்கென விடப்பட்டிருந்த ஒரு மாஞ்சோலையிலே சிறுவர்கள் நடுப்பகலிலே விளையாடும்பொருட்டு அடிக்கடி கூடுவார்கள். அக் கிராமத்தின் வழியாகச் செல்லும் ஒரு பெரும்பாட்டை பூரியில் ஜகந்நாதப் பெருமானது திருக்கோயிலுக்கு மக்களைச் செலுத்தும்; அதனால் குடியானவர்களும் தொழிலாளிகளுமான அக்கிராமத்தாருக்குத் தம்மூர் வழியாகச் செல்லும் யாத்ரீகர்களையும் சாதுக்களையும் உபசரிக்கும் பாக்கியம் கிடைக்கலாயிற்று. மந்தமாக ஒரே மாதிரியாகச் செல்லும் கிராம வாழ்க்கையின் அருவருப்பை நீக்க, அங்கே மக்கள் குதூகலமாகத் திருவிழாக்களை நடத்துவர்; புண்ணிய நாட்களைக் கொண்டாடுவர்; பக்திரஸமான பாடல்களைப் பாடுவர், மற்றும் குற்றமற்ற போகங்களை அனுபவிப்பார்,

ஸ்ரீராமகிருஷ்ணர் தமது பெற்றோர்களைப் பற்றி ஒருமுறை கூறியதாவது: "எனது அன்னை நேர்மைக்கும் சாந்தத்திற்கும் உருவேயாயினள். உலகப் போக்குகளை அதிகமாக அவள் அறிந்தவள் அல்லள்; ஒளிக்கும் திறமையற்றவளாய், அவள் தன் உள்ளத்தில் இருப்பதை அப்படியே வெளியிடுவாள். அவளது கபடமற்ற தன்மைக்காக மக்கள் அவள்மீது அன்பு கொள்வர். எனது தந்தையார் ஒரு வைதிக பிராம்மணர்; நான்காம் வருணத்தாரிடமிருந்து ஒருக்காலும் தானம் வாங்கார். அவர் தமது பொழுதிற் பெரும் பகுதியைப் பூஜையிலும், தியானத்திலும், ஜெபத்திலும், பகவானது திருப்புகழைப் பாடுதலிலும் கழித்தனர், தினசரி 'சந்தியா' காலத்தில் அவர் காயத்திரியை ஆவாஹனம் செய்யும்போதெல்லாம், அவரது மார்பு சிவக்கும், கண்ணீர் கன்னத்தின் வழியாகப் பெருகும். ஒழிவு நேரத்தில் தமது குல தெய்வமாகிய ரகுவீரர்க்கு மாலை தொடுத்துக் கொண்டிருப்பார்."

ஸ்ரீராமகிருஷ்ணரின் பெற்றோரான குதிராம் சட்டோபாத்தியாயரும் சந்திரா தேவியும் 1799-ல் மணம் புரிந்து கொண்டனர், அக்காலம் குதிராம் கமார்ப் புகூர்க்கு அதிகத் தொலையிலில்லாத திரைப்பூர் என்னும் பூர்வீக கிராமத்தில் வாழ்ந்து வந்தார். அவர்கட்கு முதல் குமாரரான குதிராம் 1805-ல் பிறந்தார்: அவர்கட்கு முதல் குமாரியான காத்யாயினி 1810-ல் உதித்தாள். 1814-ல் அவ்வூர் ஜமீன்தார் பக்கத்திலுள்ள ஒருவர்க்கு விரோதமாக நீதித்தலத்தில் பொய்சாக்ஷி கூறும்படிக் குதிராமை ஏவினர். அவர் அதற்கு மறுத்தபோது, ஜமீன்தார் அவர் மீது பொய் வழக்குத் தொடுத்து, அவரது பூர்வீக சொத்தைப் பறித்துவிட்டார். இவ்வாறு தமது காணியை இழந்தவராய், இன்னொரு ஜமீன்தாரின் அழைப்புக்கு இணங்கி, கமார்ப்புகூர் எனும் அமைதியான கிராமத்திற்கு வந்து சேர்ந்தார்; அங்கே குடியிருக்க ஒரு வீட்டையும், ஏறக்குறைய ஓர் ஏக்கர் செழிப்பான நிலத்தையும் பெற்றார். இச் சிறு சொத்திலிருந்து வந்த மாசூல் அவரது குடும்பத்தின் தேவைக்குப் போதியதாயிருந்தது. அவரது வாழ்வு இங்கே எளிய முறையிலும் மதிப்போடும் திருப்தியோடும் கழிந்து வந்தது.

குதிராம் கமார்ப்புகூர்க்கு வந்து பத்து ஆண்டுகள் கழிந்தபின், அவர் இந்தியாவின் தென் கோடியிலுள்ள ராமேஸ்வரத்திற்குக் கால்நடையாக யாத்திரை செய்தார். அங்கே ராமேசுவரர் எனும் பெயரோடு வணங்கப்படும் சிவபெருமானது திருவுருவத்தை, ஸ்ரீராமர் இலங்கையின் அரக்க மன்னனுகிய இராவணனைக் கொன்று இந்தியாவிற்குத் திரும்பும் வழியிலே பிரதிஷ்டை செய்தார் என்பர். இரண்டு ஆண்டுகட்குப் பின் அவர்க்கு இரண்டாவது மகன் பிறந்தான்; அவனுக்கு ராமேஸ்வரர் என்று பெயரிட்டார். மறுபடியும் 1835-ல் அவர் தமது அறுபதாவது வயதில் யாத்திரை செய்ய நினைந்து, கயைக்குச் சென்றார்; இங்கே மிகப் பழங்கால முதல் இந்தியாவின் நான்கு மூலைகளிலிருந்தும் இந்துக்கள் வந்து, இறந்துபோன தமது முன்னோர்கட்கும் உறவினர்கட்கும் நற்கதி கிடைக்குமாறு, பிண்டமும் நீரும் ஸ்ரீவிஷ்ணு பாதத்திலே தத்தம் செய்வது வழக்கம். இத்தூய தலத்திலே குதிராம் ஒரு கனவு காண, அதில் பகவான் விஷ்ணுவே அவர்க்கு மகனுக உதிப்பதாக வாக்களித்தார். கமார்ப்புகூரிலே சிவபெருமான் கோயிலின் முன்பு சந்திரா தேவியும் ஒரு காட்சி பெற்றாள்; அதிலும் தெய்விக மகன் தமக்குப் பிறப்பான் என்ற அறிகுறி இருந்தது. கணவர் திரும்பியதும், தமது மனைவியார் கர்ப்பந் தரித்திருத்தலைக் கண்டார்.

1836-ல் பெப்ரவரி 18-ல் தான் பிற்காலம் ராமகிருஷ்ணராகவும், தற்கால இந்தியாவின் தெய்விகப் புருடராகவும் விளங்கிய குழந்தை தோன்றலாயிற்று. கயையிற் கண்ட கனவினைக் கருதி, அதற்கு விஷ்ணுவின் பெயர்களுள் ஒன்றுகிய கதாதரன் (கயையிலுள்ள எம்பிரானின் திருப்பெயர்) எனும் பெயர் சூட்டப் பட்டது. மூன்று ஆண்டுகட்குப்பின், அவனுக்கு ஒரு தங்கை பிறந்தாள்.

இளமை

கதாதரன் வளர வளர உடல் நலமும் சுறுசுறுப்பும் வேடிக்கையும் இனிய குறும்பும் நிறைந்த ஒரு பையன் ஆனான். அவன் புத்திசாலியாயும், வயதிற்கு மிஞ்சிய பக்குவமுடையவனுயும், அளவு கடந்த ஞாபக சக்தி வாய்ந்தவனுயும் இருந்தான். அவன் தந்தையின் மடியில் அமர்ந்தே தனது முன்னோர்களுடைய பெயர்களையும், தேவ தேவியர்களின் தோத்திரப்பாடல் களையும் மனப்பாடம் பண்ணினான்; கிராமப் பள்ளிக்கூடத்தில் அவன் வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டான். ஆனல் இந்துமதப் புராண இதிகாசாங்களிலுள்ள கதைகளை உற்றுக் கேட்பதில் அவனுக்கு மிக மிக மகிழ்ச்சி பொங்கும். இக்கதைகளைப் பிற்காலம் அவன் ஞாபகம் வைத்திருத்து திரும்பிக் கூறுவான், அதைக் கேட்கும் கிராமத்தார் பெரிதும் களிப்படைவார். சித்திரம் எழுதுவதில் அவனுக்கு மிக்க ருசி உண்டு; தேவர்கள் தேவியர்கள் ஆகியோரின் உருவங்களை ஆக்கும் வித்தையை அவன் குயவர்களிடம் கற்றுக்கொண்டான். ஆனல் கணக்கு ஒன்றே அவனுக்கு அருவருப்பாயிருந்தது.

கதாதரன் ஆருவது வயதிலோ ஏழாவதிலோ முதன் முதலாக ஆனந்த பரவச நிலையை எய்தலானன். ஜூன் மாதத்திலோ ஜூலையிலோ ஒரு நாள் அவன் ஒரு சிறு கூடையிலே எடுத்துச்சென்ற பொரியைத் தின்றுகொண்டே, வயல்கட்கிடையேயுள்ள ஓர் ஒடுங்கின வரப்பின் வழியாக நடந்துகொண்டிருந்தான்; அச்சமயம் அவன் வானத்தை நிமிர்ந்து நோக்க ஓர் அழகிய இருண்ட மேகத்தைக் கண்டான். அது விரைவில் பரந்து வானை முழுதும் மறைத்தபோது, பனிபோன்று வெண்மையான கொக்குகளின் கூட்டம் ஒன்று அதற்குக் கீழே பறந்தது. இரண்டிற்கும் உள்ள முரண்பாட்டின் அழகினுல் அவன் தன் வசமிழந்தான். அவன் மெய்ம்மறந்து கீழே விழ்ந்தான், பொரி நான்கு பக்கங்களிலும் சிதறலாயிற்று. கிராமத்தார் சிலர் அவனைக் கண்டெடுத்து, தம் கைகளில் அவனை வீட்டிற்குத் தூக்கிச் சென்றனர். கதாதரன் அந்நிலையில் சொல்லுக்கு அடங்காத ஆனந்தத்தைத் தான் அனுபவித்ததாகப் பிற்காலம் கூறினன்.

கதாதரனுடைய தந்தை இறந்தபோது, அவனுக்கு வயது ஏழே. அந் நிகழ்ச்சி அவனது நெஞ்சை நன்றுகக் கலக்கிற்று. முதல் முதலாக அச் சிறுவன் உலக வாழ்வின் நிலையாமையை உணரலானன். பிறர்க்குத் தென்படாமல் அவன் மாஞ்சோலைக்குள்ளோ, மயானங்களில் ஒன்றிற்குள்ளோ நழுவ ஆரம்பிப்பான்; அங்கே தன் நினைவுகட்குள்ளே மூழ்கியவண்ணம் மணிக்கணக்காகப் பொழுது போக்குவான். அன்னை தனது வீட்டுக் கடமைகளை இயற்றி வருகையில், அவன் அவட்கு முன்னினும் அதிக உதவிபுரியும் இயல்பினனனன், புராணங்களில் எழுதிவைக்கப்பட்டுள்ள மதவிஷயமான கதைகளை

வாசிப்பதிலும் கேட்பதிலும் அதிகக் கவனம் செலுத்தலானான். ஊரூராய்த் திரியும் முனிவர்களும் பக்தி பூண்ட யாத்திரிகர்களும் பூரிக்குச் செல்லும் வழியில் கமார்ப்புகூரில் தங்கும்போது, அவர்களிடம் சிரத்தை கொள்வான். இந்தியாவின் ஞானக்காணியைத் தம் வசம் வைத்திருப்பவர்களும், உலகைத் துறத்தலும், பகவானிடம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அன்பைச் செல்லுத்துதலுமாய இலக்ஷியத்திற்கு உயிருள்ள சாக்ஷிகளாக விளங்குபவரும் இப்புண்ணிய மக்களல்லவா? இவர்கள் இந்துமத இதிகாசக் கதைகளையும், அடியார்களும் மதக்குரவர்களுமான பெரியோர்களின் சரித்திரங்களையும், தமது சொந்த வீரச் செயல்களைப் பற்றிய கதைகளையும் கூறி அச்சிறுவனை மகிழ்விப்பார். அவனும் அதற்குப் பதிலாக அவர்கட்கு நீரும் விறகும் கொணர்வான், இன்னும் பல வழிகளிலும் பணிவிடை செய்வான். இதற்கிடையிலே அவன் அவர்களுடைய தியானத்தையும் பூஜையையும் உற்று நோக்கிக் கொண்டிருப்பான்.

ஒன்பதாவது வயதிலே கதாதரனுக்குப் பூணூல் அணியும் சடங்கு நடந்தது. இதனால் அவன் அந்தணரது மரபிற்குரிய உரிமைகளையெல்லாம் பெற்றான். குலதெய்வமாகிய ரகுவீரரை வணங்கவும் தகுதியுடையவனானான். ஒரு பிராம்மணனது வாழ்க்கைக்குரிய பல கண்டிப்பான அடக்கமுறைகளையும் தன்மீது சுமத்திக்கொண்டான். பூணூற் சடங்கு நடக்கும் சமயம், தனக்கு வளர்ப்புத் தாய்போன்ற கம்மாளப் பெண்பிள்ளை ஒருத்தி சமைத்த உணவை அவன் ஏற்றுக்கொண்டமையால், அவனது உற்றார்க்குத் திகில் உண்டாயிற்று; அம்மாதிரியான ஒரு செயலைச் செய்ய அவனது தந்தையார் கனவிலும் துணிந்திருக்கமாட்டார். ஆனால் வினையாட்டாகக் கதாதரன் ஒருமுறை அப்பெண் பிள்ளையிடம் அவள் தரும் உணவைத் தான் ஏற்றுக்கொள்வதாக வாக்களித்திருந்தான்; இப்போது அவ்வாக்கை நிறைவேற்றினான். அவள் பக்தியும் சிரத்தையும் வாய்ந்திருந்தாள்; அப்பையனுக்கு ஸமூக வழக்கங்களைக் காட்டிலும் இக்குணங்களே மிக முக்கியமானவையாகத் தோன்றின.

கதாதரனுக்கு இப்போது ரகுவீரரை வணங்க அனுமதி கிடைத்தது. இவ்வாறு முதன்முதலாக அவனுக்குத் தியானப் பயிற்சி கிடைத்தது. அவன் முழுமனதோடும் பூஜையில் ஈடுபட்டமையால், விரைவில் கற்சிலை உயிருள்ள ஜகந்நாதனைக் காட்சியளித்தது. தியானத்திலே தன்னை மறந்து நிற்கும் இயல்பு அவனிடம் இருந்தமை அப்போதுதான் முதன்முறை கண்டுபிடிக்கப் பட்டது. அவனது இளமைக்குரிய விளையாட்டுத்தனத்திற்கு அடியிலே அவனது ஞான இயல்பு முதிர்ந்து வருதல் காணப்பட்டது.

இக்காலம் ஒரு சிவராத்திரியன்று இரவில் ஒரு நாடகம் நடிக்க ஏற்பாடாயிருந்தது. சிவனது வேடம் பூணுவதாயிருந்த முக்கிய நடிகன் திடீரென நோயுற, அவனுக்குப் பதிலாகக் கதாதரனை நடிக்குமாறு வேண்டினர். நண்பர்கள் அவனுக்குச் சிவவேடம் புனைவதற்காக, உடலில் விபூதியைப் பூசியும்

தலையைச் சடையாக்கியும், கையில் திரிசூலம்கொடுத்தும், கழுத்திலே ருத்ராக்ஷ மாலையைப் போட்டும் வரும்போதே, சிறுவன் வேறொன்றில் கவனம் ஊன்றியவனானான். அவன், நண்பர்கள் தாங்கிவர, நாடக மேடைமீது மெதுவாக அடியடியாக நடந்து வந்தான். அவன் சிவபெருமானின் உயிருள்ள சிலையெனத் தோன்றினான். அதனை நடிப்பின் திறமையாக நினைத்துக் கரகோஷம் செய்தனர். ஆனால் அவன் உண்மையாகவே தியானத்தில் ஆழ்ந்துவிட்டான் என்பதை விரைவில் அறிந்தனர். அவனது முகத்திலே ஜோதி வீசலாயிற்று; அவனுடைய கண்களினின்றும் நீர் பெருகலாயிற்று. அவன் புற உலக உணர்ச்சியை இழந்தவனானான். இக்காட்சியால் சபையினரின் உள்ளங்களில் விளைந்தபயனே பேரளவினதாயிருந்தது. சிவபெருமானையே நேரில் தெரிசிக்கும் பாக்கியம் பெற்றதுபோல மக்கள் உணர்ந்தனர். நாடகத்தை அதோடு நிறுத்தவேண்டியதாயிற்று. பையனின் தியான நிலை மறுநாட் காலைவரை நீடித்து நின்றது.

கதாதரன் இப்போது தானே தன் நண்பர்களைத் துணையாகக்கொண்டு, ஒரு நடிகர் கூட்டத்தை அமைத்தான். மாஞ்சோலையிலே நாடகமேடையொன்று ஏற்படுத்தப்பட்டது. ராமாயண மகாபாரதக் கதைகளிலிருந்து நாடகத்திற்கு வேண்டிய விஷயங்களைப் பொறுக்கிக்கொண்டான். கதாதரன் எல்லா நாடக பாத்திரங்கட்கும் உரிய பேச்சுக்களையும் கிட்டத்தட்ட மனப்பாடம் பண்ணி விடுவான்; நடிப்பதைத் தமது தொழிலாகக்கொண்ட நடிகர்களிடமிருந்து அவற்றைக் கேட்டுப் படிப்பான். அவனுக்குப் பிரியமான நாடகம் ஆவது, கிருஷ்ணனுக்கும் ஆய்ச்சிகட்கும் இடையர் பையன்கட்கும் சம்பந்தப்பட்ட மிக இனிய காதற் கதைகளை விரித்துரைக்கும் கண்ணனது பிருந்தாவன லீலையைப் பற்றிய நாடகமே. கதாதரன் இந் நாட்கத்தில் ராதையாகவோ, கிருஷ்ணனாகவோ நடிப்பான். பன்முறையும் அந்தந்த வேடத்துக்குரிய குணத்திலே ஆழ்ந்து மெய்ம்மறந்திருப்பான். அவனுக்கு இயல்பாக இருந்த பெண்மையின் எழில் அவனது நடிப்பின் திறமையை உயர்த்திக்காட்டும். மாஞ்சோலை முழுவதிலும் பையன்கள் உரத்த குரலிற் பாடும் கீர்த்தன ஒலி முழங்கிக் கொண்டேயிருக்கும். இவ்வாறு பாட்டிலும் கேலி விளையாட்டிலும் ஈடுபட்டிருந்த கதாதரன் பள்ளிக்கூடத்திலே முறையாகச் செய்யவேண்டிய காரியங்களிற் கருத்தற்றவனானான்.

1849-ம் ஆண்டில் அனைவர்க்கும் மூத்த மகனை ராம்குமார் தமது குடும்பத்தின் பொருளாதார நிலையை உயர்த்த எண்ணிக் கல்கத்தாவிற்குச் சென்றார்.

கதாதரர் காளைப்பருவம் எய்தும் வயதினரானார். அக் கிராமத்திலுள்ள பெண்கள் அனைவர்க்கும் செல்வக் குமரரானார். அவர் பேசுவதையும் பாடுவதையும் சாஸ்திரங்களிலிருந்து ஒப்பிப்பதையும் கேட்க அவர்கட்குப் பிரியம். பிறரைப்போன்று அவரவர் குரல்களிலே பேசும் திறமை அவரிடத்து அமைந்திருந்தமையின், அதில் இன்புறுவார் அம்மாதர். அவர்கள் தம்மிடம் இயல்பாய்

வாழ்ந்திருந்த பெண்ணியல்பினால், மாசற்றநிறமும், சரிந்த கூந்தலும், ஒளிரும் கண்களும், முறுவல் அரும்பிய முகமும், ஓயாத விளையாட்டும் அமையப் பெற்றுள்ள அச்சிறுவரின் உள்ளத் தூய்மையையும் கபடமற்ற தன்மையையும் உணர்ந்து கொண்டனர். பக்திமிகுந்த முதியோரான மாதர் அவரைப் பால கோபாலராகவும், இளம்வயதினரான மங்கையர் அவரை இளமைமிக்க (பிருந்தா வனக்) கிருஷ்ணனாகவும் கருதி வந்தார். கிருஷ்ணன்மீது கோபிமார்க்கு இருந்த பிரேமையை அவரே இலக்ஷியமாகக் கொண்டார்; அதனால் மறுபிறவி தமக்கு உண்டாயின், தமது நெஞ்சார ஸ்ரீ கிருஷ்ணன்மீது தமது பிரேமையைச் செலுத்தும் பொருட்டு அவர் பெண்ணாகப் பிறக்கவும் சில சமயம் துடிப்புள்ளவ ராவர். பிராம்மண குடும்பத்திலே பிறந்து, மணம் முடிந்ததும் தாம் விதவையாக வேண்டும் என்றும் விரும்புவார். அவ்வாறுயின், அவரது தொழிலெல்லாம் கிருஷ்ணனைத் தீர்மானிப்பதும், அவரை வணங்குவதும், அவர்க்காகச் சமையல் செய்வதும், ஒழிந்த வேளையில் நூல் நூற்பதுமாகவே அமையும் என்று நினைப் பார். இன்னும் பசுக்கள் வீடு திரும்பும் அந்தி மாலைவேளையில், அவ்விதவை தன்கையால் செய்த இன்சுவைப் பண்டங்களைக் கையில் வைத்துக்கொண்டு, தனது காதற் கண்ணனது வரவை எதிர்ப்பார்த்து நிற்பாள் என்றும் ஸ்ரீ ராம கிருஷ்ணர் பகற் கனவு காண்பர். இந்த நினைவே அவரது உள்ளத்தை உரைக்க முடியாத ஆனந்தத்தாற் பூரிக்கச் செய்யும்.

கல்கத்தாவுக்கு வரல்

கதாதரனுடைய தமையனார் ராம்குமாருக்கு அவர்க்குரிய பூஜைத் தொழிலை இயற்றுதற்கு உதவி தேவையாயிருந்தது; ஆதலால் பதினாறு வயதுள்ள கதாதரனை அவர் கல்கத்தாவிற்கு அழைத்தார். ராம்குமார் தமது வரும்படியை அதிகப்படுத்துதற்காக ஒரு ஸம்ஸ்கிருத பாடசாலையை அமைத்திருந்தார்; தமது தம்பியின் மனதைக் கல்வியை நோக்கி மெல்ல மெல்லத் திருப்ப அவர் கருதினார். கல்கத்தாவிலே பல குடும்பங்களிலே பூஜை செய்யும் தொழிலை ஏற்றுக்கொண்டிருந்த கதாதரன் அத்தொழிலில் தனது முழுக்கருத்தையும் செலுத்தலானன். அவன் பூஜை செய்யும் முறைக்கும் பூசாரித்தொழிலை ஏற்றுக் கொள்வாரது பூஜை முறைக்கும் பெரும் வேறுபாடு இருந்தது. விக்கிரகங் கட்கு அலங்காரம் பண்ணுவதிலும், தோத்திரப் பாக்களையும் பக்திப் பாடல் களையும் பாடுவதிலும் அவன், மணிக்கணக்காகப் பொழுது போக்குவான்; தனது தொழிலுக்குரிய மற்றக் கடமைகளையும் அன்போடு இயற்றுவான். அவனது சிரத்தையை மக்கள் பெரிதும் போற்றுவாராயினர். ஆனால் அவனுக் குப் படிப்பிலோ கவனம் செல்லாது போயிற்று.

ராம்குமார் முதலில் தம்பியின் மனப்போக்கைத் தடுக்காதிருந்தார். கதா தரன் நகர வாழ்க்கைக்குரிய சூழ்நிலைக்கு ஏற்றவாறு பழகிக் கொள்ளட்டும்

என்று அவனே விட்டிருந்தார். ஆனலும் ஒருநாள், உலக வாழ்க்கையில் அவன் கவனம் செலுத்தாதிருப்பதைப்பற்றி அவனுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும் எனத் தீர்மானித்தார். எப்படியும் அவன் வருங்காலத்தில் இல் வாழ்வான் ஆகும் நிலையில் தனது அந்தணமரபிற்குரிய கடமைகளே இயற்று வதன் மூலம், சமீப காலத்திற்குள் பொருள்தேடவேண்டும் அன்றே? இதற்கு இந்துமதச்சட்டம், ஜோஸ்யம், இன்னும் இவைபோன்ற சாஸ்திரங்களைப் பற்றிய அறிவைப் பெறுதல் அவசியம் அன்றே? இவ்வாறு எண்ணிய ராம்குமார் கதா தரனுக்குச் சாந்தமாகப் புத்திமதி கூறி, அவனைக் கல்வியிற் கருத்தூன்றுமாறு வேண்டினர். ஆனல் பையனே ஊக்கத்தோடு பின்வரும் பதிலைக் கூறினன்; "வெறும் வயிற்றுப்பிழைப்புக்கு மட்டும் பயன்படும் கல்வியால் எனக்கு ஆவதென்? என் நெஞ்சிற்கு ஒளியை ஊட்டி, எக்காலமும் மனத்திருப்தியை அளிக்கும் அந்த ஞானத்தையே மேலானதென என்மனம் நாடுகின்றது,"

பாரத நாட்டின் அந்தரங்கத்தில் இருந்த துயரமே இளங் கதாதரனின் வேகமிகுந்த மொழிகளின் வழியாக வெளிப்படலாயிற்று. இந்தியாவின் தலைநக ராயும், தற்காலப் பண்பாட்டிற்கும் கல்விக்கும் நடு நிலையமாயும் அக்காலம் விளங்கிய கல்கத்தாவிலே, சுற்றிலும் அவனது திருகற்ற மனக் கண்ணுக்குத் தென்பட்டது யாது? காமமும் லோபமும் ஜனமூகத்திலே உயர்ந்த தர மக்களை அடக்கியாண்டன; அங்கங்கே காணப்பட்ட சமய சாதனங்களும் உயிரற்ற வெறும் உடல்களேயாயின. கமார்ப்புகூரிலே எளிமையும் பக்தியும் வாய்ந்த கிராம மக்களிடையே அம்மாதிரியான எதையும் கதாதரன் என்றைக் கும் கண்டதில்லை. அவன் இளமையிலே எவர்க்குத் தொண்டு செயும் பேறு பெற்றனே அந்த சாதுக்களும், ஊரூராய்த் திரியும் துறவிகளும் தமது வாழ்வால் தனக்குக் காட்டியிருந்த இந்தியாவின் காட்சியோ அதற்கு முற்றிலும் வேறு பட்டதாயிருந்தது. அன்னருடைய பக்தியும் தூய்மையும் தன்னடக்கமும் துறவும் அவனது உள்ளத்தில் நன்கு பதிந்திருந்தன. அவர்களிடமிருந்தும், தனது ஞானவிழியாலும் பெற்ற முடிபாவது; இந்தியாவின் பண்டைய முனிவர் தனக் குப் போதித்த வாழ்க்கை இலக்ஷியம் ஈசனை நேரில் தரிசித்தலே என்பது.

ராம்குமார் தமது தம்பியினது மறுமொழியில் அடங்கிய உட்கருத்தை அறிய இயலாதவரானர். கல்கத்தாவின் ஜன ஸமூகத்திலே பண்டிதர்கட்கு வாய்த்துள்ள ஆனந்தமான தொந்தரவற்ற வாழ்க்கையை அவர் தெளிவாக வருணித்தார். ஆனல் கதாதரரோ பண்டிதர்களுடைய வாழ்விலுள்ள தாழ்வை ஞானக்கண்ணல் அறிந்திருந்தனர்; அவர் கூறிய ஓர் உவமையின்படி, அவர்கள் அத்தனை பருந்துகளைப் போன்றனர், தமது ஞான ஊக்கமில்லாத அறிவெனும் சிறகுகளின் வலிமையால் உயரம் பறப்பார்கள், ஆயினும் அவர்களது நாட்டமோ பொருளாசையும் காமமும் ஆகிய பிணக் குழியிலே பதிந்திருக்கும் என்பதை நன்கு உணர்ந்திருந்தனர். ஆதலின் அவர் உறுதியில் தாழாதிருக்க, ராம்குமார் தம் கருத்தைக் கைவிட வேண்டியதாயிற்று.

தக்ஷிணேசுவரத்திலே காளிகோயில்

அந்நாளிலே கல்கத்தாவிலே ராணி ராஸமணி யெனும் பெயர் பூண்ட ஒரு பணக்கார விதவையான அம்மையார் வாழ்ந்துவந்தனர், நான்காம் வருணத்தைச் சார்ந்த அவர் தமது தொழிலின் திறமையாலும் தீரத்தாலும் புத்தியாலும் புகழொடு விளங்கியது மன்றி, உதார குணத்திற்கும் வைதிக சிரத்தைக்கும் பக்திக்கும் பெயர் பெற்றவரா யிருந்தார். அவரது ஏராளமான சொத்துக்களே மேற்பார்ப்பதற்கு அவரது மருமகரான மதுர் மோஹன் உதவியா யிருந்தார்.

1847 ம் ஆண்டிலே, கல்கத்தாவிற்கு வடக்கே ஏறக்குறைய நான்கு மைல் தொலையிலே உள்ள தக்ஷிணேசுவரம் எனும் கிராமத்தில் அம்மையார் இருபது ஏக்கர் நிலம் விலைக்கு வாங்கியிருந்தார். இங்கே அவர் கோயிற்குரிய ஒரு பூந்தோட்டத்தை அமைத்து, பல கோயில்களையும் கட்டியிருந்தார், அவரது இஷ்ட தெய்வம் காளி தேவியே.

கோயில் தோட்டம் கங்கையின் கிழக்குக் கரையிலே உள்ளது, நிலத்தில் வடபகுதியிலும் கிழக்கில் ஒரு பகுதியிலும் ஒரு பழச்சோலையும் பூந்தோட்டங்களும், இரு சிறு நீர் நிலைகளும் அமைந்துள்ளன. தென்பகுதி செங்கலும் சுண்ணும்பும் சேர்ந்த தளவரிசை போடப்பெற்றுள்ளது. தோணியில் வரும் பிரயாணி அலங்காரமான நீராடுதுறை யொன்றின் படிகள் வழியாக ஏறி ஒரு மண்டபத்திற்குச் செல்வான்; அதன் இரு பக்கங்களில் ஒவவொன்றிலும் வரிசையாக ஆறு சிவ பெருமான் கோயில்கள் இருக்கின்றன. மண்டபத்திற்கும் சிவன் கோயில்கட்கும் கிழக்கே தளவரிசையுள்ள நீள்சதுர வடிவமான ஒரு பெரும் முற்றம் வடக்கும் தெற்குமாக உள்ளது. இம்முற்றத்தின் நடுவே இருகோயில்கள் எழுகின்றன; அவற்றில் தெற்கேயும் தெற்குமுகமாகவும் உள்ள பெரிய கோயிலில் காளியும், கங்கையை நோக்கியுள்ள சிறியதில் 'ராதா காந்தர்' எனும் கிருஷ்ணனும் எழுந்தருளியுள்ளார். காளி கோயிலின் உச்சியில் கோபுரங்களைத் தாங்கிய ஒன்பது கோளவடிவ மோடுகள் அமைந்துள்ளன; அதன் முன்பேயுள்ள விசாலமான இசை மண்டபம் ஒன்று கம்பிரமான தூண்களை யுடையது. கோயில் எல்லைக்குள் வடமேற்கு தென்மேற்கு மூலைகளில் இரு மேள கோபுரங்கள் உள்ளன; கோயிற் பூஜை நடக்கும் வேளைகளில்— முக்கியமாக, காலையிலும் உச்சிவேளையிலும் மாலையிலும் — இவற்றிலிருந்து மேளம் சேவிக்கப்படும். தளவரிசை முற்றத்தின் மூன்று பக்கங்களிலும்— மேற்கு தவிர மற்றவைகளில்—சமையல் அறைகளும், பண்டசாலைகளும், சாப்பாட்டுக்குரிய அறைகளும், கோயிற் சிப்பந்திகட்கும் விருந்தினருக்கும் உரிய கட்டிடங்களும் வரிசையாகக் கட்டப்பட்டுள்ளன. கடைசிச் சிவன் கோயிலுக்கு அப்பால் வடமேற்கு மூலையிலுள்ள அறை சிறப்பாக நமது கவனத்திற்கு

உரியது; இங்குதான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் வாழ்விற் பெரும் பகுதியைக் கழிக்க நேர்ந்தது. இவ்வறைக்கு மேற்கே அரை வட்ட வடிவமாக அமைந்த உச்சியோடு கூடிய ஒரு வழி நதிக்கு உயரே உள்ளது. இவ்வழிக்கு முன்பு வடக்கும் தெற்குமாக ஒரு காலடிப்பாதை செல்கின்றது. இப்பாதைக்கு அப்பால் ஒரு பெருந் தோட்டமும், அத் தோட்டத்திற்குக் கீழே கங்கையும் உள்ளன. கட்டிடங்கட்கு வடக்கேயுள்ள சோலையிலே, ஸ்ரீ ராமகிருஷ்ணர் பழகிய ஞானசாதனங்களோடு சம்பந்தமுள்ள பஞ்சவடியும், ஆலமரமும், வில்வமரமும் காணப்படுகின்றன. கோயிலின் எல்லைச் சுவர்க்கு வடக்கே வெளியே உள்ளதொரு பங்களாவில் தோட்டத்தைப் பார்க்கவரும் ராணி ராசமணியாரது குடும்பத்தினர் தங்குவர். கோயில் தோட்டத்திற்கு வடக்கே, அதனின்றும் விலகி ஓர் உயர்ந்த சுவரோடு கூடிய ஒரு வெடிமருந்துக் கிட்டங்கி இருக்கின்றது; அது பிரிட்டிஷ் அரசாங்கத்தார்க்கு உரியது.

சிவபெருமான்

பன்னிரண்டு சிவன்கோவில்களிலும் துறவுப் பெருந் தெய்வமான சிவபெருமானின் லிங்கங்கள் அவருடைய பலவகையான நிலைகளைக் குறிக்கும்படி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன; இவற்றிற்குத் தக்க கிரியைகளோடு தினமும் பூஜை நடக்கும். அப்பெருமானுக்கு வேண்டிய பூஜைப் பொருள்களோ மிகச் சில. வெண் மலர்களும் வில்வ தளங்களும், ஒரு சிறிது கங்கை நீரும் பக்தியோடு சமர்ப்பிக்கப்பட்டால், அக்கருணையார்ந்த தெய்வத்தைத் திருப்தி செய்து, அவரிடமிருந்து முத்திவரம் பெறவும் அவை போதும்.

ராதா காந்தர்

விஷ்ணு கோவில் எனப்படும் ராதா காந்தரது கோயிலில் ராதை கிருஷ்ணன் எனும் இருவரின் உருவங்களும் உள்ளன. இவை பிரேமையால் இறைவனோடு ஒன்றுபடுதற்கு அறிகுறியாகின்றன. இவ்விரு வடிவங்களும் ஒரு பீடத்தின் மீது மேற்கு முகமாக நிற்கின்றன. சலவைக் கல்லால் தளம் அமைந்துள்ளது. போகும் வழிக்கு மேலுள்ள உச்சியிலிருந்து தொங்கவிடப்பட்டுள்ள சரலாந்த லின்மீது தூசி விழாதபடி பாதுகாக்கச் சிவந்த துணிகளால் அது மூடப்பட்டுள்ளது. அஸ்தமன சூரியனின் கிரணங்கள் திருவுருவங்களின்மீது விழாத வண்ணம் தடுப்பதற்காகக் கனத்த திரைகள் அவற்றின்முன் தொங்குகின்றன. கர்ப்பக்கிருகத்தின் வாயிற்படிக்கு அருகே ஒரு சிறு பித்தளைப் பாத்திரத்தில் (ஸ்ரீபாத) தீர்த்தம் வைக்கப்பட்டுள்ளது. கோயிலுக்கு வருவார்க்குள் சிரத்தை யுடையோர் பாத்திரத்திலின்றும் ஒரு சில துளிகளைப் பக்தியோடு குடிப்பர்.

காளி

முக்கியமான கோயில் காளிதேவியின் கோயிலே; இங்கே அத் தேவியை 'பவதாரிணி' (பிறவியினின்றும் காப்பாற்றுபவள்) எனும் பெயரோடு வழி படுகின்றனர். இக் கோயிலும் சலவைக் கல் தளவரிசையை யுடையது. மேன்மை யான தங்கச் சரிகை உடை அணிந்துள்ள தேவியின் கருங்கல்லுருவம் அவளது தெய்வ நாதனை சிவபெருமானது படுத்துக்கிடக்கும் உடலின் வெண் சலவைக் கல் உருவத்தின்மீது நிற்கிறது. சிவபெருமான் பிரம்மத்திற்கு அறிகுறியாவர். தேவியின் திருப்பாதங்களில் மற்ற அணிகளோடு தங்கப் பாதசரங்கள் உள்ளன. அவளது கரத்தினில் மணிகள் பதித்த தங்க அணிகள் உள்ளன. தங்க ஆரங்களும், முத்தாரங்களும், மனிதக் தலைகளால் ஆன ஒரு பொன் மாலையும், மனிதக் கைகள் தொங்கும் ஒரு மேகலையும் அவள் அணிந்துள்ளாள். ஒரு தங்கக் கிரீடமும், தங்கக் காதோலைகளும், முத்து தொங்கவிட்ட ஒரு தங்க மூக்குத்தியும் அவளுடைய ஆபரணங்கள். அவட்கு நான்கு கைகள் உள்ளன. இடது கீழ்க்கை ஒரு வெட்டுண்ட மனிதத் தலையையும், மேற் கை இரத்தந் தோய்ந்த ஒரு வாளையும் பற்றியுள்ளன. ஒரு வலக்கை அவளுடைய குழந்தைகட்கு வரங்களைத் தருகின்றது. மற்றொன்று அவர்களுடைய பயத்தைப் போக்குகிறது. அவள் நிற்கும் நிலையின் கம்பீரத்தை வருணிக்க முடியாது. அழிவின் பயங்கரத்தையும் தாயின் இளகிய நெஞ்சத்தால் விளையும் உறுதியான நம்பிக்கையையும் அந்நிலை ஒன்றுக இணைக்கின்றது. எவ்வாறெனில், அவளே ஜகத் சக்தியும், பிரபஞ்ச முழுமையும் ஒன்றுக் கொன்று முரண்பட்ட இரட்டைப் பொருள்களின் மேம்பட்ட இணைவும் ஆவாள். அவள் படைப்பதும் காப்பதும் போன்றே அழிவையும் தருகிறாள். அவள் மூன்று கண்களையுடையவள். மூன்றாவது கண் ஞானக்கண்ணே; அக்கண்கள் துஷ்டர்கட்கு மனத் தளர்ச்சியை ஊட்டி, அடியார்கட்கு அன்பைப் பொழி கின்றன.

ஞான வாழ்விற்குரிய குறியீடுகள் பலவும் கோயிற் பூஞ்சோலையிலே அமைந்துள்ளன. இயற்கையன்னை (காளி); பரம்பொருள் (சிவபெரு மான்), அன்பு (ராதா காந்தர்) எனும் முப்பொருள்களும், பூவுலகையும் பர உலகையும் ஒரே தாவில் இணைக்கும் வில் வடிவ வளைவும் அங்குள்ளன. தந்திர சாஸ்திரங் கூறும் கோர தேவியும், பாகவத நூல்கூறும் மனங்கவரும் வேணு கான லோலனும், வேதங் கூறும் தன்மய நிலையிலுள்ள பிரம்மமும் ஒன்றுக அங்கு வாழ்தலின், மிகவுயர்ந்த சமய சமரசம் அங்கே எடுத்துக்காட்டப் படுகிறது. உண்மைப் பொருளின் பகுதிகள் யாவும் அங்கே குறிக்கப்பட் டுள்ளன. ஆனால் இத் தெய்வக் குடும்பத்திற்குக் காளிதான் ஆதாரமாவாள், அரசியாவாள். அவளே பிரகிருதி, அனைத்தையும் ஈன்றவள், இயற்கை;

அவளே அழிப்பவளும் ஆக்குபவளும் ஆவாள். காணக் கண் பெற்றார்க்கு அதனினும் விரிவும் ஆழமுமுள்ள ஒரு தத்துவமாயும் இருப்பாள். அவள் உயிரினத்திற்கும் தாய்; ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவதுபோல் 'என் அம்மை'; தனது மக்கட்குப் பலவேறு நிலைகளிலும் அவதாரங்களாகவும் தன்னைக் காட்டியருளும் எல்லாம் வல்ல இறைவி; தெரிந்தெடுக்கப்பட்டவரை, காணமுடியாத மெய்ப் பொருளை நோக்கி வழி நடத்திச் செல்லும் கண் கண்ட தெய்வம்; அவளுக்கு இஷ்டமானால், படைக்கப்பட்ட உயிர்களினிடமிருந்து அகங்காரத்தின் லவலேசத்தையும் போக்கி, அதீத அகண்டப் பிரம்மத்தினிடம் லயிக்கச் செய்பவளும் அவளே. அவளது அருளால் வரையறையுற்ற அகங்காரம் வரையறையற்ற அகங்காரமாகி, ஆத்மன் — பிரம்மன் எனும் பொருளிலே கரைந்து மறைந்து விடுகிறது.

ராணி ராசமணியார் கோயிற் பூஞ்சோலையை அமைத்தற்காகப் பெரு நிதியைச் செலவு செய்தாள். 1855 மே 31-ம் தேதியன்று நிகழ்ந்த கோயிற் பிரதிஷ்டைக்குப் பின்னும் மிக்க பொருளைச் செலவிட்டனள்.

ஸ்ரீராமகிருஷ்ணர்,—இனிக் கதாதரரை இப்பழக்கமான பெயரைக் கொண்டே அழைப்போம்—தமது தமையனரான ராம்குமாரோடு கோயிற் பூஞ்சோலைக்கு வந்தார். ராம்குமார் காளி கோயிற்குப் பூசாரியாக நியமிக்கப் பட்டார். ஸ்ரீராமகிருஷ்ணர் கடை வருணத்துப் பிறந்த ராசமணியார்க்காக ராம்குமார் வேலைப்பார்ப்பதை முதலில் ஒப்புக்கொள்ளவில்லை. கோயிலில் வழங்கும் சமைத்த பிரசாதங்களை (நைவேத்தியங்களை) உண்ணுதற்கும் மறுத்தார்; ஏனெனில் வைதிக இந்து முறைப்படி அத்தகைய உணவை அந்தணரது இல்லத்தில் மட்டும் தெய்வத்திற்குச் சமர்ப்பிக்கலாகும். ஆனால் கோயில் நிலங்களிலுள்ள தூய ஆகாயமும், சுற்றியுள்ள காடுகளின் ஏகாந்தமும், தமையனார் ராம்குமாரின் அன்பார்ந்த சிரத்தையும், ராணி ராசமணியாரும் மதுர் பாபுவும் அவரிடம் காட்டிய மதிப்பும், கோயிலிலே காளி தேவியின் உயிருள்ள ஸாந்நித்தியமும் (முன்னிலையும்), அனைத்திற்கும் மேலாக, தூய கங்கையின் அருகேயிருக்கும் தன்மையும் (ஸ்ரீராமகிருஷ்ணர் எப்போதும் கங்கையின்மீது வணக்கம் செலுத்துவார்)—இவை யாவும் நாளடைவில் அவரது சம்மதமின்மையை வெல்லலாயின; அவரும் மனமார இசையத் தொடங்கினர். (ராமகிருஷ்ணர் என்ற பெயர் எவ்வாறு வந்தது என்பதைப்பற்றி நிச்சயமாக ஒன்றும் தெரியவில்லை. ஸ்ரீராமகிருஷ்ணரின் தம்பியாரது புதல்வர் ராம்லால்' தமது பெரிய தந்தையாரது வார்த்தையின்படியே சொன்னதிலிருந்து, மதுர்பாபுவாலே அப்பெயர் இடப்பட்டிருக்கலாம் என்பது மட்டும் தெரியவருகின்றது).

சிறிது காலத்திற்குள் ஸ்ரீ ராமகிருஷ்ணரது ஞானத்தின் தீவிரத் தன்மையை நன்குணரப் பெற்ற மதுர்பாபு அவர்பால் மனங்கவரப்பெற்றார்; காளி கோயிற் பூஜையிற் பங்கு கொள்ளுமாறு அவரை வேண்டினர். ஆனால் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சுயேச்சையில் விருப்பமுடையராதலின், எவ்வித லௌகிகத்

தொழிலிலும் கவனமற்றவரானார், செல்வமுடைய மங்கை ஒருத்தியாற் கட்டப் பட்ட ஒரு கோயிலில் பூசாரியின் பதவியை ஏற்பது அவரது மன்த்திற்குப் பிடிக்கவில்லை. மேலும், கோயிலிலுள்ள விலையுயர்ந்த நகைகட்கும் மற்றப் பொருள்கட்கும் பொறுப்பேற்றுக் கொள்ளவும் அவர் தயங்கினர். மதுர் தக்க சமயம் வரும்வரை காத்திருக்க நேர்ந்தது.

இக்காலத்தில் பதினறு வயதுள்ள ஓர் இளைஞன் தக்ஷிணேசுவரத்திற்கு வரலானன்; அவன் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வாழ்க்கையாகிய நாடகத்திலே ஒரு முக்கியமான நடிகனையிருக்கும் விதியுடையவனனன். ஸ்ரீ ராமகிருஷ்ணரது அத்தை மகளின் குமாரனகிய இருதாய் கமார்புகூர்க்குப் பக்க்த்திலுள்ள சிஹோர் எனும் கிராமத்தைச் சேர்ந்தவன், அவரது இளம்பருவ நண்பன். சாமர்த்தியமும், அசாதாரணமான சுறு சுறுப்பும், சங்கட காலத்தும் சமயோசித புத்தியும் வாய்ந்திருந்த அவன் பின்னளைய வாழ்க்கையில் ஸ்ரீ ராமகிருஷ்ண ரைத் தொடர்ந்து நிழல் போலத் திரிந்து வந்தான்; தனது சொந்த சௌகரி யத்தை இழந்தாயினும் அவர்க்கு உதவி செய்ய எப்போதும் தயாராயிருப்பான். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஞான அனுபூதிகள் பலவற்றிற்கு ஒரு மௌன சாக்ஷியாயும், அவரிடம் ஞான சாதனப் புயல் வீசியபோது அவரது உடலைப் பாது காத்தவனகவும் விளங்கும் விதி அவனுக்கு இருந்தது. இருதாய் ஒரு வேலையை நாடி தக்ஷிணேசுவரம் வர, ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவனைக் கண்டு மகிழ்ந்தார்.

மதுர்பாபுவின் வேண்டுதலை மறுக்க இயலாத நிலையில், கடைசியாக ஸ்ரீ ராமகிருஷ்ணர், தமக்கு இருதாய் உதவியாயிருக்கவேண்டும் என்னும் நிபந் தனைக்கு உட்பட்டுக் கோயிற் பூஜையை ஏற்றுக்கொண்டார். காளி தேவிக்கு ஆடை ஆபரணங்களை அணிவதே அவனது முதற்கடமை.

ஒருநாள் ராதாகாந்தரது கோயிற் பூசாரி கிருஷ்ணனது விக்கிரகத்தைத் தற்செயலாகத் தரையிற் போட்டு, அதன் கால்களில் ஒன்றை உடைத்து விட்டார். உடைந்த உறுப்போடு கூடிய ஒரு விக்கிரகத்தை வணங்குதல் சாஸ்திர விதிகட்கு மாறுனது; ஆதலால் பண்டிதர்கள் புதிய விக்கிரகம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்யுமாறு ராணிக்குப் புத்திமதி கூறினர். ஆனல் ராணிக்கு அவ்விக்கிரகத்தின்மீது பிரியமிருந்தது; அதனல் அவர் ராம கிருஷ்ணரது அபிப்பிராயத்தை அறிய விரும்பினர். உண்முகப்பட்ட ஆவேச நிலையில் அவர் "இம்முடிவு கேலிக்கு இடமாயிருக்கிறது. ராணியின் மருமகர் ஒருவர் தமது காலை ஒடித்துக்கொண்டாரனல், அவள் அவரைத் தள்ளிவிட்டு வேறெருவரை மருமகராகக் கொள்ளுவாளோ? அவரது காலைச் சீராக்குதற்கு ஏற்பாடு செய்யமாட்டாளா? இவ்விஷயத்திலும் அவள் ஏன் அவ்வாறு செய்ய லாகாது? அந்த விக்கிரகத்தைப் பழுது பார்த்து முன்போல் அதை வழி படுவாராக" என்று கூறினர். இது எளிய நேரான ஒரு முடிபு; அதனை ராணி ஒப்புக்கொண்டாள். ஸ்ரீ ராமகிருஷ்ணரே உடைந்ததைச் செம்மை

யாக்கினர். பூசாரி கவனமின்மைக்காக வேலையினின்றும் விலக்கப்பட்டார்; மதுர்பாபுவின் மனப்பூர்வமான வேண்டுகோட்கு இணங்கி ஸ்ரீ ராமகிருஷ்ணர் ராதாகாந்தரது கோயிற் பூசாரி வேலையை ஏற்றுக்கொண்டார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் பூசாரியாதல்

வைதிக பிராம்மண குடும்பத்திற் பிறந்திருந்த ஸ்ரீ ராமகிருஷ்ணர் பூஜைக்குரிய முறைகளையும், கிரியைகளையும், கிரமங்களையும் அறிந்திருந்தார். இந்து மதத்திலே எண்ணிறந்த தேவர்களும் தேவியாரும் உளர்: வருணனைக்கும் அறிவுக்கும் எட்டாத பரம் பொருளிற்கு எல்லையுற்ற மனிதன் தனது மனக் கற்பனையால் அளித்துள்ள மனித வடிவங்களே அவர்கள். அவர்கள் மனிதனது அன்பையும் பாவனைகளையும் அறிந்து மதிப்பார்; மனிதர் தமது உலக வாழ்க்கைக்கும் ஞானவாழ்க்கைக்கும் உரிய இலக்ஷியங்களை அடைவதற்குத் துணையாவார்; முடிவில் பிறவித் துயரங்களினின்றும் விடுதலை அடையும் திறமையை மனிதர்க்கு அளிக்கின்றனர். ஒளி, அறிவு, ஞானம், பலம் இவற்றிற்கு ஒரே மூலமாவது, மனித ஆசையை நிறைவேற்றவல்ல ஏகப்பரம் பொருளே. ஆயினும், ஒரு மனிதன் தனது பிறவிக்குரிய வரையறைகட்குக் கட்டுப்பட்டுள்ளவரை, அவன் இறைவனை மனித வடிவங்கள் மூலமாக வழிபடுவதைத் தவிர்க்க முடியாதவனுவான். அன்னன் மனிதக் குறியீடுகளைப் பயன்படுத்துவது கட்டாயமாகும். அடியார்கள் இறைவனை இலக்ஷியத் தந்தையாகவோ, இலக்ஷியத் தாயாகவோ, இலக்ஷியக் கணவனுகவோ, இலக்ஷிய மகனுகவோ, இலக்ஷியத் தோழனுகவோ பாவிக்கட்டும் என்று இந்து மதம் கூறுகிறது. ஆனல் பெயர் முடிவிலே பெயரற்ற பொருளிடத்தும், வடிவம் வடிவமற்ற இடத்தும், மொழி மௌனத்தினிடத்தும், அன்புணர்ச்சி இயல்பான ஸச்சிதாநந்த நிலையில் உள்ள சாந்தியின் உணர்விலும் கொண்டு சேர்க்கின்றது. தேவர்கள் படிப்படியாகத் தெய்வத் தன்மையில் லயித்து விடுகின்றனர். ஆனல் அந்த மெய்யுணர்வு நிலையை அடையும்வரை, பக்தன் தனது பூஜையினின்றும் மனித அம்சங்களைப் பிரிக்கமுடியாதவனுவான். ஆதலால் தெய்வத்தை நீராட்டி, அதனை ஆடை யாபரணங்களால் அலங்கரிக்கின்றனன். அதற்கு உணவூட்டி, அதனை உறங்க வைக்கின்றனன். தோத்திரங்களாலும், பாடல்களாலும், பிரார்த்தனைகளாலும் அதனை மகிழ்விக்கின்றனன். இந்தச் செயல்கட்கெல்லாம் சம்பந்தப்பட்ட பொருத்தமான கிரியைகளும் உள. உதாரணமாக, பூசாரி தான் புறத் தூய்மை பெறுதற்காகப் புண்ணிய தீர்த்தத்திலே முழுகுகிறுன், தூய ஆடையை அணிந்து கொள்கிறுன். அவன் தனது மனதையும் இந்திரியங்களையும் பொருத்தமான தியானங்களால் தூய்மையாக்குகிறுன். பூஜை நடைபெறும் இடத்திற்குள்ளே தீய சக்திகள் புகாதவண்ணம் தடுக்க அதைச் சுற்றித் தீயாலும் நீராலும் வட்டங்களை வரைந்து, அதற்கு அரண்

அமைக்கிறான். அவன் உடலிலுள்ள பற்பல யோகசக்தி நிலையங்களை (ஆதாரங்களை) விழிக்கச் செய்து, பரம்பொருளைத் தனது இருதயத்தில் எழுந்தருள வேண்டுகிறான். பின் அப்பரம்பொருளைத் தன்முன் உள்ள விக்கிரகத்திற்கு எழுந்தருளச் செய்கிறான்; பின் அதனை மண்ணென்றே கல்லென்றே கருதாது, உயிரும் சைதன்யமும் பெற்று விளங்கும் பரம் பொருளின் வடிவமாகவே கருதி வணங்குகிறான். பூஜை முடிந்ததும், பூசாரி பரம் பொருளை மறுபடியும் விக்கிரகத்தை விட்டுத் தனது நெஞ்சமாகிய மெய்யான கோயிலுக்கு எழுந்தருளும்படி வேண்டுகிறான். உண்மையான பக்தனே அனைத்திற்கும் அதீதமான பரம்பொருளை உலகப் பொருள்களால் வணங்குதல் அறிவிற்குப் பொருந்தாத செயலாவதை அறிவான்—அதாவது, பிரபஞ்ச முழுவதிலும் வியாபித்து அதற்கப்பாலும் உள்ள பொருளுக்கு ஆடையுடுத்தலும், இடமாகிய எல்லைக்குள் அடங்காத பொருளை ஒரு பீடத்தின்மீது அமர்த்துதலும், உடலினின்றும் விடுபட்டதும் உடலாகாததுமான பொருளிற்கு உணவளித்தலும், எதனுடைய புகழை அண்டங்கட்கும் தமது இனிய கானத்தால் பஹிரங்கப் படுத்த ஒண்ணாதோ அதன்முன் பாடுதலும் யுக்திக்குப் பொருந்தாதவையேயாம். ஆனால் இக்கிரியைகள் மூலம் பக்தன் இறுதியில் கிரியைகளையும் கிரமங்களையும், வடிவங்களையும் பெயர்களையும், மொழிகளையும் புகழ்தலையும் தாண்டிச் செல்லவும், இறைவனை எங்கும் பரந்தசைதன்யமாக உணரவும் முயற்சிக்கிறான்.

இந்து பூசாரிகள் பூஜாக்கிரியைகளை நன்குணர்ந்தவர்; எனினும் அவர்களில் ஒரு சிலரே அவற்றுக்கு ஆதாரமான கருத்துக்களை அறிந்திருப்பர். ஞானமில்லாப் பூசாரிகள், சாஸ்திரங்களிலுள்ள வார்த்தைகட்குக் கீழ்படிந்து, தமது கைகளையும், கால்களையும் யந்திரம்போல அசைக்கின்றனர், மந்திரங்களைக் கிளிகளைப்போல ஒப்பிக்கின்றனர். ஆனால், ஸ்ரீராமகிருஷ்ணர்க்கோ ஆரம்ப முதலே இக்கிரியைகளின் உட்பொருள் விளங்குவதாயிற்று. அவர் திருவுருவத்தை நோக்கி உட்கார்ந்ததும், ஒரு புதிய மாறுதல் அவருடைய மனதில் உண்டாயிற்று. ஏற்பட்ட கிரியைகளை இயற்றும்போதே, தம்மைச் சுற்றி ஒரு தீவட்டம் எழுந்து, தம்மையும் பூஜை செய்யும் இடத்தையும் வளைந்து கொண்டு, ஞானத்தன்மையற்ற நினைவுகளின் அதிர்ச்சிகள் உள்ளே புகாத வண்ணம் பாதுகாப்பதையும் அவர் நேரே காண்பார்; சில சமயம் உடலிலுள்ள பற்பல ஆதாரங்கள் வழியாகக் குண்டலினி கிளம்புவதையும் உணர்வார். அவரது முகத்திலிருந்த ஒளியும், அவரது ஆழ்ந்த மெய்ம்மறந்த நிலையும், கோயிலிலுள்ள ஆகாயத்திலே தீவிர ஞான இயல்பு குடிகொண்டு உறைந்தமையும், அவர் பூஜை செய்வதைக் கண்ட ஒவ்வொருவரது உள்ளத்தையும் கவரும்.

ஸ்ரீராமகிருஷ்ணர் காளி பூஜைக்குரிய சிக்கலான கிரியைகளைக் கற்றுக் கொள்ளவேண்டும் என்பது ராம்குமாரது விருப்பம். காளிக்குப் பூஜை செய்ய விரும்புவோன் அதிகாரம் பெற்ற குருவினிடமிருந்து சிறப்பான ஒரு தீக்ஷை

பெறவேண்டும். ஆதலால் ஸ்ரீராமகிருஷ்ணர்க்காக ஒரு தக்க பிராம்மணரைக் கண்டு பிடித்தனர். ஆனல் அந்த அந்தணர் அவரது காதிலே மந்திரத்தை ஓதித் தீக்ஷையளித்ததும், ஸ்ரீராமகிருஷ்ணர் உணர்ச்சி பொங்கியவராய்க் கூக்குரலிட்டு, ஆழ்ந்த தியானத்தில் மூழ்கினர்.

மதுர் ஸ்ரீராமகிருஷ்ணரைக் காளி கோயிற் பூஜையை ஏற்றுக்கொள்ளு மாறு கெஞ்சினர். இளம் பூசாரியோ தாம் அதனை இயற்றத் தகுதியற்றவர் என்றும் தமக்குச் சாஸ்திரம் தெரியாது என்றும் வழக்காடினர். மதுரோ ஒருவரிடம் உள்ள பக்தியும் சிரத்தையும் சாஸ்திர முறைமைகளை அறியாத அவரது குறைக்கு ஈடுசெயும் அளவிற்கும் மேலான பயனைத்தரும் என்றும், அவை தேவியைத் திருவுருவத்திலே வெளிப்படுத்த ஏதுவாகும் என்றும் வற்புறுத்தினர். முடிவிலே ஸ்ரீராமகிருஷ்ணர் மதுருடைய வேண்டுகோளுக்கு இணங்கவேண்டியதாயிற்று. அவர் காளிக்குப் பூசாரியானர்.

1856-ல் ராம்குமார் மரித்தார். ஸ்ரீராமகிருஷ்ணர் குடும்பத்திலே ஒரு மரணத்திற்குமேல் நிகழ்ந்திருந்ததை முன்னரே பார்த்திருந்தார். உலக வாழ் வின் அநித்தியத் தன்மையை அவர் நன்கு உணர்ந்துவிட்டார். உலகப் பொருள்களின் நிலையற்ற இயல்பை மேலும் மேலும் அறிதலும், அமரத்துவத் தின் ஊற்றேயான இறைவனை உணர்வதில் அவர் அதிக ஆவலுடையவ ரானர்.

காளியின் முதற் காட்சி

உண்மையாகவே, தாம் பணி செய்வதற்காகத் தெரிந்தெடுத்த தேவியின் புதுமையான இயல்பை அவர் விரைவில் கண்டுகொண்டனர். அத் தேவியின் எங்கும் பரந்த ஸாந்நித்தியம் எனும் வலையில் அவர் படிப்படியாகச் சிக்கிக் கொண்டார். அறியாதார்க்கு அவள் அழிவின் வடிவமாவது உறுதியே; ஆனல் அவர்க்கோ அருளும் அன்பும் நிறைந்த அன்னையாகக் காணப்பட் டாள். அவளது கழுத்தைச் சுற்றித் தலைகளின் மாலை உள்ளது; அவளது அரையைச் சுற்றி மனிதக் கைகளாலான ஒரு மேகலை உள்ளது; அவளுடைய கைகள் இரண்டு கொலைக் கருவிகளைக் கொண்டுள்ளன; அவளுடைய கண் களிலிருந்து தீப்பார்வை பாய்கிறது. ஆனல், என்ன புதுமை! அவளுடைய மூச்சிலே மென்மையான அன்பின் குளிர்ந்த பரிசத்தை அவர் உணர்ந்தார். அவளிடத்தே அமிருதத்துவத்தின் வித்தைக் கண்டார். அவள் தனது கணவ ரான சிவபெருமானின் மார்பின் மீதேறி நிற்கிருள்; அதன் காரணம் பிரம்மத் தினின்றும் பிரிக்கவொண்ணுத சக்தியாய் அவள் இருப்பதேயாம். மயானத் தில் வாழும் நரிகளும் மற்ற தூய்மையற்ற உயிர்களும் அவளைச் சூழ்ந்து நிற்கும். ஆனல் தூய்மை, தூய்மையின்மை யெனும் இரண்டிற்கும் அதீ தமன்றே பரமான மெய்ப்பொருள்? மது வெறியில் அவள் தலை சுழல்வ

தாகத் தோன்றுகிறுள். தெய்விக வெறிக்கு உட்பட்டிருந்தாலன்றி இந்தப் பைத்திய உலகத்தை யார் படைப்பார்? நமது வெளிப் பார்வைக்கு ஒழுங்கான பிரபஞ்சம் போலத் தோன்றும் இதன் அஸ்திவாரமே ஒழுங்கின்மையன்றே? ஆதியிலிருந்த முழுக்குழப்பத்தினின்றே பரிணம முறையிலே இவ்வுலகம் உண்டாயிற்று. இயற்கைச் சக்திகள் அனைத்திற்கும் மிக உயர்ந்த அறிகுறியாவாள் காளியே; முரண்பாடுள்ள அச் சக்திகள் ஒன்றுக இணைந்து நிற்கும் வடிவமும் அவளே; பெண் வடிவான பரதேவதையும் அவளே. ஸ்ரீராமகிருஷ்ணர்க்கு அத்தேவியே மெய்ப்பொருளானுள். உலகம் பொருளாகாத ஒரு நிழலேயாயிற்று. அவளை வழிபடுவதிலே அவர் தமது ஆவியைச் சொரிந்தார். உரை வரம்பிற்கு அடங்காத மெய்ப்பொருளின் கோயிலுக்கு மறைக்காத தெளிவான வாயிலாக அவள் அவர்க்குமுன் நின்றுள்,

கோயிலிற் செய்த பூஜையினுல் ஜகன்மாதாவின் உயிருள்ள வடிவக் காட்சியைப் பெறும் துடிப்பு ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கு முறுகிற்று. கோயிற் பணிக்குரிய பொழுது போக மற்றப் பொழுதை யெல்லாம் அவர் தியானத்திற் கழிக்கத் தொடங்கினர்; இந்நோக்கத்தோடு அவர் முற்றிலும் ஏகாந்தமான ஓர் இடத்தைத் தெரிந்தெடுத்தார். கோயில்கட்கு வடக்கே செடிகொடிகளும் முள்ளியும் அடர்ந்து வளர்ந்த ஒரு காடு இருந்தது. ஒரு காலம் இடுகாடா யிருந்த அதனுள் பகற்காலத்தும் பேய்ப்பயத்தால் மக்கள் புகாமல் விலகுவார். அங்கே ஸ்ரீ ராமகிருஷ்ணர் இரவை யெல்லாம் தியானத்திற் கழிக்கத் தொடங்கி, மிக அழுதவர்போலக் கண்கூடு வீங்கியவராய்க் காலையில் மட்டுமே தமது அறைக்குத் திரும்புவார். தியானம் பழகும்போது அவர் தமது ஆடையையும் பிராம்மண ஜாதிக்குரிய பூணூலையும் கழற்றிவைப்பார். புதுமையான இம்மாதிரி ஒழுக்கத்தை விளக்கக் கருதி அவர் ஒரு நாள் பின் வருமாறு இருதாயிடம் கூறினர்: "இறைவனைப் பற்றி நினைக்கும்போது ஒருவன் எல்லாக் கட்டுகளினின்றும் விடுபட்டிருக்க வேண்டும் என்பதை நீ அறியாயோ? நமது பிறவி முதலே நம்மிடம் பகை வெட்கம் குடிப்பிறப்பு குணப்பெருமை அச்சம் ஒளிப்பு ஜாதி துயரம் என்னும் எண்வகை விலங்குகள் உள்ளன. நான் பிராம்மணனதலின், அனைவர்க்கும் மேலானவன் என்பதைப் பூணூல் எனக்கு நினைவூட்டுகிறது. தேவியிடம் பிராத்திக்கும்போது அம்மாதிரியான எண்ணங்களையெல்லாம் ஒதுக்கி வைக்கவேண்டும்." இருதாய் தமது மாமாவிற்கு (அன்னையின் அம்மானுக்கு)ப் பைத்தியம் பிடிப்பதாகவே நினைத்தார்.

பக்தி ஓங்கியதும், பூசைக் கிரியைகளை அவர் மறக்கவோ விடவோ தொடங்கினர். திருவடிவத்தின் முன்பு உட்கார்ந்துகொண்டு, தேவியின் பேரடியார்களான கமலாகாந்தர் ராமப்பிரசாதர் போன்றவர்களின் பக்திச்சுவை மிகுந்த பாடல்களை மணிக்கணக்காகப் பாடிக்கொண்டே இருப்பார். கடவுளை நேரே காண்பதைப்பற்றிய இப்பிரேமைப் பாடல்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரது துடிப்பைத் தீவிரமாக்கின. தாயைப் பிரிந்து துடிக்கும் சேய்போல அவர் பரித

விக்கலானர். சில சமயங்களில் அவர் கடுந்துயரத்தால் தரைமீது தமது முகத்தைத் தேய்த்து, ஆற்றாது அழுவார்; அதைக் கண்ட மக்கள், பெற்ற தாயைப் பறிகொடுத்துத் தவிப்பவர்க அவரைக் கருதி, அவர்மீது அனுதாபங் காட்டுவார். சில சமயம் சந்தேகந் தலையெடுக்கும் வேளையில் அவர் "அம்மே, நீ இருப்பது உண்மைதானு? இல்லையாயின் சற்றும் உண்மையற்ற கவியின் வாக்கேதானு, முழுக் கட்டுக் கதையே தானே? நீ இருப்பது உண்மையாயின், உன்னை யான் காணுதேன்? சமயம் ஒரு பாவனை மாத்திரமோ? நீ மனி தனின் கற்பனையில் மட்டும் உண்மையோ?" என்று கத்துவார். சில சமயம் ஒரு சடப்பொருளைப் போன்று இரண்டு மணி நேரம் பூஜைக்குரிய ஆசனக் கம்பளத்தின்மீது அமர்ந்திருப்பார். அவர் வழக்கத்திற்கு மாறுன முறையிலே நடக்கத் தொடங்கினர்; அச்சமயம் நேரத்திற் பெரும்பாகம் அவர் உலகை மறந்த நிலையிலே இருந்தார். அவர் கிட்டத்தட்ட உணவை விட்டுவிட்டார். உறக்கமோ அவரை விட்டு முற்றும் நீங்கி விட்டது.

ஆனல் நீண்ட காலம் அவர் தாமதிக்க வேண்டியிருக்கவில்லை. அவர் தேவியின் முதல் தரிசனத்தைப் பின் வருமாறு வருணித்துள்ளார்: "ஈரத் துணியைப்பிழிவது போன்று என் நெஞ்சைக் கசக்கிப் பிழிவதாக நான் உணர்ந்தேன். இப்பிறவியில் யான் தேவியைக் காணுது போகும் விதியுளதோ எனும் அச்சத்திற்கும் மிக்க பரபரப்புக்கும் ஆளானேன். அவளை ஒரு கணமும் பிரிந்து தரிக்க இயலாதவனுனேன். இனி வாழ்வதாற் பயனென் என்று தோன் றிற்று. திடீரென எனது பார்வை தேவியின் கோயிலில் வைக்கப்பட்டுள்ள வாளின் மீது சென்றது. எனது உயிரை மாய்த்துக் கொள்வதாக யான் தீர் மானித்தேன். ஒரு பைத்தியக்காரனைப் போல் யான் குதித்தேன், அதைப் பற்றினேன். திடீரெனத் தேவி தனது தரிசனத்தை அருளினுள். கட்டிடங் களும், அவற்றின் வெவ்வேறு பகுதிகளும், கோயிலும், மற்றும் யாவும் மறைந்தன; மிஞ்சியது யாதொன்றும் இல்லை; அவற்றுக்குப் பதிலாக ஓர் எல்லையற்ற அகண்ட ஜோதிமயமான சைதன்யக் கடலைக் கண்டேன். என் கண்ணுக்கு எட்டிய தொலைவரை சோதியலைகள் நாலா பக்கங்களிலிருந்தும் பயங்கரமான இரைச்சலோடு என்மீது வெறிகொண்டு பாய்ந்து, என்னை விழுங்க முயன்றன! நான் மூச்சுத் திணறினேன். அப் பாய்ச்சலில் நான் அகப் பட்டேன், மெய்ம்மறந்து விழுந்தேன். புற உலகத்தில் யாது நடந்து கொண் டிருந்ததோ அறியேன்; ஆனல் என்னுள்ளே, எனக்கு முற்றிலும் புதிதான கலப்பற்ற பேரின்ப வெள்ளம் ஒழுங்காகப் பெருகிற்று; யான் தேவியின் இருப்பினை உணர்ந்தேன்." அவர் உலக நினைவு மீளப்பெற்றபோது, அவரது வாயிலே 'அம்மே' என்ற மொழியே வந்தது.

கடவுள்-வெறி கொண்டநிலை

எனினும், இது பின் விளையப்போகும் தீவிர அனுபூதிகளை முன்னரே ஒரு சிறிது சுவைத்ததாகவே முடிந்தது. தேவியின் முதல் தரிசனத்தால் அவளை இடைவிடாது எப்போதும் தரிசிக்கும் ஆவல் முன்னினும் அவர்க்கு மிகுந்தது. தேவியைத் தியான நிலையிலும், விழிகள் திறந்திருக்கும் நிலையிலும் காண விரும்பினார். ஆனால் தேவியம்மை அவரோடு கண்ணாம்பூச்சி விளையாடித் தொந்தரவு கொடுக்கத் தொடங்கி, அவருடைய இன்பத்தையும் துன்பத்தையும் ஒங்கச் செய்தாள். அவளைப் பிரிந்திருக்கும் நிலையில் மனமுருகியழுது, அவர் சமாதிநிலை யடைவார்; அப்போது தேவி தம் முன்பு நிற்பதையும், சிரிப்பதையும், பேசுவதையும் ஆறுதல் அளிப்பதையும், மகிழ்ச்சியோடிருக்கும் படித் தமக்குக் கட்டளையிடுவதையும், தமக்குத் போதிப்பதையும் காண்பார். அவர் தியானிக்க அமரும்போது, அவரை அசையாது வைத்திருப்பதற்காக அவருடைய காலிலுள்ள பொருத்துகளை யாரோ ஒருவர் ஒவ்வொன்றாகப் பூட்டி வருவதுபோல, அங்கே 'கிளிக்' என்னும் ஆச்சரியமான ஒலிகள் அவரது காதில்விழும்; தியானம் முடிந்ததும், அப்பொருத்துகளைத் திறந்து, அவரை இச்சைப்படி நடக்கவிடும்போதும் அதே ஒலிகள் மீண்டும் கேட்கும். ஒரு கூட்டம் மின்மினிகள் கண்முன் மிதப்பதுபோலே அவர் பளீர் என்று மின்னுவதைக் காண்பார்; உருக்கிவிட்ட வெள்ளியைப் போன்ற ஜோதி அலைகளோடு கூடிய கனமான பனிக் கடலை வேறொரு சமயம் காண்பர். மறுபடியும், ஒளி கசியக் கூடிய பனிக் கடலினின்றும் தேவி கிளம்புவதைக் காண்பார்: முதலில் அவளது திருவடியும், பின்பு அவளது இடுப்பு, மார்பு, முகம், தலை, பின் அவளது முழுவடிவமும் காண்பார்; அவள் மூச்சுவிடுவதையும் உணர்வார், அவளது குரலையும் காதாரக் கேட்பார். கோயிலில் பூஜை செய்யும்போது, சில சமயம் அவர் உயர்ந்த நிலையினை எய்துவர், சில சமயம் கல்லைப்போல் அசையாதிருப்பர், சில சமயம் மிகுதியான உணர்ச்சிக்கு வசப்பட்டு மயங்கி வீழ்பவர் போலாவார். அவருடைய செயல்களிற் பல வழக்கத்திற் கெல்லாம் மாறுக இருந்தமையால், மக்கட்கு அவை தெய்வ நிந்தனையாகத் தோன்றின. அவர் ஒரு மலரை எடுத்துத் தமது தலையிலும் உடலிலும் பாதத்திலும் வைத்து ஒற்றிவிட்டுப் பின் அதைத் தேவிக்குச் சாத்துவார். ஒரு சமயம், குடிகாரனைப் போலத் தலைசுற்றித் தள்ளாடி, தேவியின் பீடத்தை நாடி, அன்போடு அவளது மோவாயைத் தடவிப் பாடுவார், பேசுவார், விளையாடுவார், சிரிப்பார், கூத்தாடுவார். இன்னொரு சமயம் தட்டிலிருந்து ஒரு கவளம் அன்னத்தை எடுத்து, அவளது வாயில் வைத்து, அதை உண்ணுமாறு கெஞ்சுவர்! அவள் அதை உண்டதாக உணர்ந்தாலன்றித் திருப்தி அடையமாட்டார். தேவியை இரவில் தூங்கவிட்ட பின்பு, தமது அறையிலிருந்தவாறே, அவள் உல்லாசமான ஒரு

பெண்ணைப் போல் மெல்ல அடிவைத்துச் சிலம்புகள் ஒலிக்கக் கோயிலின் மேல் மாடிக்கு ஏறிச் செல்வதைக் காதாற் கேட்பார். பின்பு தேவியம்மை விரித்த கூந்தலோடு அங்கே நிற்பதையும். அவளது கரியவடிவம் இரவு வானத்திலே நிழற்படம் வரைவதுபோலிருப்பதையும், அம்மை கங்கையை நோக்குவதையோ, கல்கத்தாவிலே தொலையிலுள்ள விளக்குகளைப் பார்ப் பதையோ நேரிற் போய்க் காண்பார்.

இம்மாதிரியான இவரைக் கோயில் அதிகாரிகள் பைத்தியக்காரனைக் கருதுதல் இயல்புதானே. அவரது லௌகிக நண்பர்கள் அவரைத் தேர்ச்சி பெற்ற மருத்துவர்களிடம் அழைத்துச் சென்றனர்; ஆயினும் எம்மருந்தினாலும் அவருடைய பிணி தீரவில்லை. பலமுறை அவர் தமது புத்தியின் நிலைமையைப் பற்றித் தாமே சந்தேகங் கொள்ளலானார். ஏனெனில், செல்லும் வழியறியாத ஒரு கடலிலே நெறிகாட்ட வல்ல மனிதத்துணையின்றி அவர் பிரயாணம் செய்து வந்தார் அன்றே? அவர் புகலாகப்பற்றியது தேவி அம்மையையே. தேவியிடம் அவர் "இவை யாவை என்பதை யான் அறியேன். மந்திரமோ சாஸ்திரமோ யான் அறியேன். அம்மே, உன்னை உணரும் வகையை நீயே போதிப்பாயாக, வேறு யார் எனக்குத் துணையாவார்? எனக்குற்ற ஒரே புகலும் வழித்துணையும் நீயேயன்றே?" என்று பிரார்த்திப்பார். அவர்க்கு ஆதரவாயிருந்தது, தேவியின் (ஸந்நிதியில்) முன்பே மனத்தால் அவர் எப் போதும் இருந்தமைதான்; துயரம் வரினும் சந்தேகம் உண்டாயினும் அவ் வுணர்ச்சி அவரை ஒருக்காலும் கைவிடவில்லை. அவரது நடையைக் குறை கூறியவரும் அவரது தூய்மையையும், வாய்மையையும, நேர்மையையும், புனிதத் தன்மையையும் நெஞ்சாரப் போற்றுவாராயினர். அவர்களும் அவரது முன்னிலை யில் தமது மனம் உபர்த்தப் படுவதை உணர்வார்.

சமாதியென்பது ஞான உலகின் கதவைத் திறக்கமட்டும் செய்வதைத் தவிர அதிகமாக ஒன்றும் செய்வதில்லை என்று சொல்லுவர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்மிடம் இறைவனைப் பலவேறு வழிகளால் அனுபவிக்கும் அவா தணிக்க முடியாதவாறு எழுவதை உணர்ந்தார். தமது தியானத்திற்காகக் கோயில் தோட்டத்தின் வடபக்கத்திலுள்ள காடான பகுதியில் அவர் ஓர் இடத்தை அமைத்தார். இருதாய் என்பவரின் துணையால் அவர் ஐந்து புனித மரங்களை நட்டார். பஞ்சவடி எனும் பெயர் பெற்ற இவ்விடம், அவருடைய காட்சி களிற் பலவற்றை அவர் கண்ட தலமாயிற்று,

அவரது ஞான நிலை ஆழ்ந்து செல்லலும், அவர் தம்மைத் தேவியின் குழந்தையாகவே மேலும் மேலும் உணரலானார். தேவியின் சங்கற்பத்திற்கே தம்மை முழுதும் ஒப்படைக்கவும் அம்மையே தம்மை நடத்தும்படி விட்டு விடவும் கற்றுக்கொண்டார்.

அவர் பின்வருமாறு ஓயாது பிரார்த்திப்பார்; "அம்மையே, யான் உன் னிடம் அடைக்கலம் புகுந்துவிட்டேன். இன்னின்ன செய்வது, இன்னின்ன

இந்நாளில் ஸ்ரீராமகிருஷ்ணர்க்கு ஏற்பட்ட நோய்களில் மிக்க வருத்தத்தைக் கொடுத்ததொன்று, அவரது உடலில் உண்டான எரிச்சலேயாம்; அது ஒரு புதுமையான காட்சியால் குணமடையலாயிற்று. சாஸ்திர விதிகளைப் பின் பற்றிக் கோயிலில் பூஜை செய்யும்போது, தம்மிடம் 'பாவ புருஷன்' இருப்ப தாகவும், அது நாசமடைவதாகவும் பாவனை பண்ணுவார். ஒரு நாள் அவர் பஞ்சவடியில் தியானம் பண்ணிக்கொண்டிருக்கும்போது, அவர் தம்மிடமிருந்து கருத்த நிறமும் சிவந்த கண்ணும் உள்ள ஒரு மனிதன் குடிகாரனைப்போலத் தள்ளாடி நடந்துகொண்டு வெளியேறுவதைக் கண்டார். விரைவில் அவருடலி னின்றும் அமைதியார்ந்த முகத்தையுடைய வேறொருவன் துறவிக்குரிய காவி யுடையணிந்து, தனது கையில் திரிசூலம் ஏந்தியவனாய் வெளிவந்தான். இரண் டாவது புருடன் முதற்புருடனைத் தாக்கி, அவனைச் சூலத்தாற் கொன்றான். அதன்பின் ஸ்ரீராமகிருஷ்ணர்க்கு அந்த எரிச்சல் நீங்கிற்று.

ஏறக் குறைய இதே சமயம் அவர் பகவானை வேறொரு வழியாக வணங்கத் தொடங்கினர்; இறைவனை ஆண்டானாகவும் (எஜமானனாகவும்), தன்னை அடிமையாகவும் (தாஸனாகவும்) பாவனை பண்ணலானார். இராமாயணத்தில் குரங்குகட்குத் தலைவரான அனுமார் ஸ்ரீ ராமருக்கு அடிமை செய்வதில் இலக்கிய புருஷராயிருந்தவர், தன்னை மறக்கும் பக்திக்குப் பரம்பரையாக வந்த முன்மாதிரியானவர்; ஆதலால் அந்த அனுமாரது பாவனையைப் பின்பற்ற லானார். அவர் அனுமாரைப் பற்றித் தியானித்தபோது, அவர் ஒரு குரங்கைப் போன்றே திரியவும் வாழவும் தொடங்கினர். அவரது பார்வையில் பரபரப்பு தோன்றலாயிற்று. அவர் கனிகளையும் கிழங்குகளையும் உண்டு வாழ்ந்தார். அரையைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ள ஆடையில் ஒரு பகுதி வால்போலத் தொங்க, அவர் நடப்பதற்குப் பதிலாகக் குதித்துக் குதித்துச் சென்றார். சிறிது காலம் இவ்வாறு சென்றபின், ராமரின் தெய்விகப் பத்தினியாரான சீதையின் தரிசனம் பெற்றார்; அத்தேவியார் அவரது உடலிற் புருந்து, "எனது புன் சிரிப்பை உனக்குக் கொடுத்தேன்" என்று சொல்லி அங்கேயே மறைந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஞான ஊக்கம் உண்மையானதே என்ற நம்பிக்கை மதுர்பாபுவுக்கு உண்டு; ஆயினும் அவர்க்கு மூளை கலங்கி விட்டதோ என்ற சந்தேகம் மதுருக்கு எழத்தொடங்கிற்று, குரங்கைப் போல அவர் குதித்தோடு வதை மதுர் கவனித்திருந்தார். மேலும், ஒரு நாள் ராணி ராசமணியார் கோயி லில் ஸ்ரீ ராமகிருஷ்ணரது பாட்டைக் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்தபோது, இளவயதுள்ள அப்பூசாரி திடீரெனத் திரும்பி, அவரைத் தம் கையால் மெல்ல அடித்தார். வெளிப்பார்வைக்குப் பாட்டைக் கேட்டுகொண்டிருந்த ராணியார் உண்மையாகயே ஒரு வியாச்சியத்தை (நியாய வழக்கை)ப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தார். தேவியே தம்மை அவ்வாறு கண்டித்ததாக எண்ணி, அத் தண்டனையை ராணியார் ஏற்றுக்கொண்டார்; ஆனல் மதுரோ துயரமடைந் தார். உள்ளத்தில் ஊறும் உணர்ச்சிகளை அடக்கிக்கொள்ளும்படிக்கும் ஜன

ஸமூகத்திற்குரிய பழக்கவழக்கங்களைக் கவனித்து நடக்கும்படிக்கும் ஸ்ரீராம கிருஷ்ணரைக் கெஞ்சினர். பகவானும் நியதிகளைப் பின்பற்றுகிறார் என்று வழக்காடினர். உதாரணமாக, ஒரே காம்பிலே இருவண்ணப்பூக்கள் உண்டாக இறைவன் இடங்கொடுப்பதில்லை என்றார். மறுநாள் ஒரே காம்பிலே ஒன்று சிவப்பும் மற்றொன்று வெண்மையும் ஆன இரு செம்பருத்திப் பூக்களை மதுர் பாபுவுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் கொணர்ந்து கொடுத்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணரது மன நோய்க்கு அவரது கடுமையான பிரம்மசரியமே ஒருவாறு காரணமாகலாம் என மதுரும் ராணி ராசமணியாரும் கருதத் தொடங்கினர், இயற்கைக்கு ஒத்த வாழ்வு அவரது நரம்புகளின் விறைப்பைத் தணிக்கலாம் என்று நினைத்த அவ்விருவரும் இரு விலைமாதரின் துணையால் அவரது விரதத்தைக் குலைக்க ஓர் ஏற்பாடு செய்தனர். ஆனால் அம் மாதர் அறைக்குட் புகுந்ததும், ஸ்ரீராமகிருஷ்ணர் அவர்களிடம் அம்பிகையின் சக்தி வெளிப்படுவதைக் கண்டு, அத்தேவியின் பெயரை ஓதிக்கொண்டே சமாதி யடைந்தார்.

ஹலதாரி

1858-லே தக்ஷிணேசுவரத்திற்கு ஸ்ரீராமகிருஷ்ணரது உறவினரில் ஒருவ ரான ஹலதாரி என்பவர் வந்து சேர்ந்தார்; எட்டு வருட காலம் அவர் அங்கே யிருக்க நேர்ந்தது. ஸ்ரீராமகிருஷ்ணரது உடல் நல்ல நிலைமையில் இல்லாமையால் மதுர் அவரைக் காளி கோயிற் பூசாரி வேலைக்கு நியமித்தார். அவர் சாஸ்திரங்களில் உள்ள வாக்கியங்களை நன்கு கற்றவர், ஆனால் அவற்றின் உட்கருத்தைச் சற்றும் அறியாதவர். மிதமிஞ்சிய நுணுக்கத்தோடு மத விஷயமான தருக்கங்கள் செய்வதில் அவர்க்குப் பிரியம்; தமது கல்வி யறிவை அளவாகக் கொண்டு ஸ்ரீ ராமகிருஷ்ணரை அளந்து மதிப்பிட அவர் தொடங்கினர். வைதிக பிராமணராகையாலே அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அவைதிகமான செயல்களைச் சற்றும் ஒப்புக்கொள்ளமாட்டார்; ஆனாலும் ஸ்ரீ ராமகிருஷ்ணரது வாழ்க்கையிலுள்ள தூய்மையும், அவரது பிரேம பக்தியும் மெய்ப்பொருட் காட்சிக்காக அவர் அடைந்த துடிப்பும் அவரது உள்ளத்திற் பதியாமற் போகவில்லை.

ஒருநாள் ஹலதாரி, மனிதனது மனத்துக்கு இறைவன் எட்டா தவன் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் கூறி, அவரது மனத்தை நிலை குலையச் செய்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்குச் சந்தேகம் கிளம்பலும், தாம் பெற்ற காட்சிகள் தம்மைத் தவருன வழியிற் செலுத்திவிட்டனவோ என்று நினைத் தார்; அவரே தமக்குப் பெருஞ் சந்தேகம் உண்டானதைப் பின்வருமாறு வருணிக்கலானார்; "யான் விம்மி யழுதுகொண்டே தேவியிடம் 'என்னை முட்டாள் என்று தெரிந்து இம்மாதிரி என்னை ஏமாற்ற உனக்கு எவ்வாறு



நெஞ்சு துணிந்ததோ?' என்று பிரார்த்தித்தேன். என் கண்களினின்றும் கண்ணீர் பெருகிற்று. சிறிது நேரத்திற்குப்பின், தரையிலிருந்து, மூடு பனி மிகுதியாகக் கிளம்பி என் முன்னுள்ள இடத்தையெல்லாம் நிரப்புவதை யான் கண்டேன். அதன் நடுவே நீண்ட தாடியோடு கூடிய ஒரு முகம் அமைதி யாய் அழகுடையதாய், உள்ளக் கருத்தை வெளியில் நன்கு தெரிவிப்ப தாய் அமைந்து தோன்றிற்று. என்மீது நிலையாகப் பார்வையைச் செலுத்தி, சிந்தனை மிகுந்த குரலோடு 'பாவ(க)முக நிலையிலே, இயல்பான சைதன் யத்தின் (பாரமார்த்திக உணர்வு நிலையின்) வாயிற்படியிலே இரு' என்று கூறிற்று. இதை அது மும்முறை திரும்பக் கூறிவிட்டு, மெல்ல மெல்ல மூடுபனியில் மறைய, அதுவும் கரைந்தழிந்தது. இக் காட்சி எனக்கு மீண்டும் உறுதியளித்தது.''

ஸ்ரீ ராமகிருஷ்ணரது உடல் நலம் குலைந்ததையும், உலக வாழ்வில் அவர்க்கு இருந்த அலட்சியத்தையும் இன்னும் இயற்கைக்கு மாறுன பற்பல செயல்களை அவர் புரிந்து வந்தமையையும் பற்றிப் பொதுமக்கள் பலவாருகத் தத்தம் இச்சைப்படி மாறுபடுத்திக் கூறலானுர். அம்மாதிரியான செய்திகள் கமார்ப்புகூர்க்கு எட்டின; அவை அவரது அன்னையாரின் நெஞ்சைத் துளைக்கலாயின. அன்னையார் அவரைத் திரும்பத் திரும்ப ஊர்க்கு வர வேண்டவே, அவர் இடமாற்றத்தை விரும்பி அங்கே சென்ருர். ஆனல் அவருடைய இளம் பருவ நண்பர்களிடம் அப்போது மனம் செல்லவில்லை. ஒரு தெய்விக தாபம் அவரை எரித்துக்கொண்டிருந்தது. பகலிலும் இரவிலும் அவர் பெரும்பொழுதை ஒரு சுடலையிலே தியானத்திற் கழிக்கலானுர். மனித உடலும், மனித ஆசைகளும் பேறுகளும் நிலையற்றன என்பதை மயானம் அவர்க்கு நினைவூட்டியது; அன்றியும், அழித்தற்குக் கடவுளான காளியையும் அது ஞாபகப்படுத்தியது.

திருமணமும் அதன்பின்னும்

ஆனல் ஒரு சில மாதங்கட்குள் அவரது உடல் நலம் திருந்தியதாயிற்று; ஓரளவிற்கு அவரது இயல்பான நன்னிலை மீளவும் பெற்ருர். அதைக் கண்டு அகமகிழ்ந்த அன்னையார், அவரது திருமணத்திற்கு ஏற்பாடு செய்ய அதுவே நல்ல சமயம் எனக் கருதலானுர். குமாரர்க்கு அப்போது வயது இருபத்து மூன்று, அவரது மனத்தை ஒரு மனைவி உலகத்தை நோக்கி இழுத்துவிடுவாள் என அன்னையார் நினைத்தார். குமரரும் அந்த ஏற்பாட்டிற்கு இசைந்ததைக் கண்டதும் அன்னையாரது மகிழ்ச்சி பெருகிற்று. ஒருக்கால் அதனைக் குமரர் இறைவனது திருவுள்ளமென எண்ணினர் போலும். தமக்கெனக் குறித்து வைத்த மணமகளைக் கண்டுபிடிக்கும் இடத்தையும் ஸ்ரீ ராமகிருஷ்ணரே குறிப்பிட்டார்.

சாரதாமணி எனும் ஐந்து வயதுச் சிறுமி ஜைராம்பாடியெனும் பக்கத்துக் கிராமத்தில் வாழ்ந்தாள். அவ்வயதிலும் தனது ஒழுக்கத்தை வெண் முல்லை யைப் போன்று மாசற்றதாகவும் மணமுள்ளதாகவும் ஆக்குமாறு இறைவனிடம் அவள் பிரார்த்தித்து வரலானாள். நிறைமதியைப் பார்த்து அவள் "தெய்வமே, சந்திரனிடத்தும் களங்கங்கள் உள்ளன. ஆனால் எனது ஒழுக்கத்தை மறுவற்ற தாக்கியருள்க" என்று சொல்லுவாள். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு மணமகளாகத் தெரிந்தெடுக்கப்பட்டவள் இவளே.

திருமணம் முறைப்படி நடைபெற்றது. இம்மாதிரியான இளவயது மணம் மணம்புரிந்து கொள்ள வாக்குறுதி செய்வது போன்றதேயாகும்; மணமகள் பருவமடைந்த பின்னரே மண வாழ்வு நிறைவேறுவதாகும். ஆனால் இவள் விஷயத்தில் மண வாழ்வு என்றைக்கும் நிறைவேறுமலே போயிற்று. ஸ்ரீ ராம கிருஷ்ணர் கமார்ப்புகூரிலே ஒன்றரை வருடம் வாழ்ந்தபின், மீண்டும் தக்ஷி ணேசுவரமே சென்றார்.

அவர் காளிகோயிலின் எல்லைக்குட் புகுந்ததும், முன்னைய ஞானச் சுழல் காற்றில் மறுபடியும் சிக்கிக் கொண்டதை உணரலானார். அவரது சைத்தியம் பத்து மடங்கு வளர்ந்த நிலையில் மீண்டும் தோன்றிற்று. பழைய தியானமும் பிரார்த்தனையும், அதே ஆனந்த பரவச நிலைகளும், அதே உடல் எரிச்சலும் அதே அழுகையும் உறக்கமின்மையும், உடலிலும் புற உலகத்திலும் முன்னைய கவனமின்மையும், முன்னைய கடவுள் வெறியும் வந்தன. ஞான முன்னேற்றத்திற்கு இரு பெருந் தடைகளான பொருளாசையையும் காமத் தையும் வேரறுக்குமாறு அவர் புதிய சாதனங்களைப் பழகலானார். ஒரு கையில் ஒரு ரூபாயையும் மற்றென்றில் சிறிது மண்ணையும் கொண்டு, இறைவனது தரிசனத்திற்குத் துணை செய்வதில் இவ்விரண்டிற்கும் மதிப்பில் உள்ள தார தம்மியத்தைப் பற்றிச் சிந்திப்பார்; இரண்டும் சம அளவிற்குப் பயனற்றதா தலை அறிந்து, சம அளவு அலட்சியத்தோடு அவற்றைக் கங்கையில் எறிந்து விடுவார். மாதரைத் தேவியின் வடிவங்களாகவே அவர் கருதி வந்தார். கனவிலும் காமத் தூண்டுதலை அவர் உணர்ந்ததில்லை. ஜாதி மேன்மையைப் பற்றிய நினைவைத் தம் உள்ளத்தினின்றும் அடியோடு நீக்குதற்காக, அவர் தமது நீண்ட பேனுதை தலைமயிரால் ஒரு பறையனது வீட்டைப் பெருக்கினார். அவர் தியானத்தில் அமரும்போது, பறவைகள் அவரது தலைமீது உட்கார்ந்து, அரிசியை நாடித் தலைமயிரிற் கொத்தும். பாம்பு அவரது உடல்மீது நகர்ந்து செல்லும்; ஆயினும் ஒன்று மற்றென்றை உணராது போகும். உறக்கம் முற்றிலும் அவரைவிட்டு நீங்கிற்று. அல்லும் பகலும் ஞானக்காட்சிகள் அவர்க்கு உண்டாய்க் கொண்டே இருந்தன. முன்பு அவரிடமிருந்த 'பாப புருஷனை' மாய்த்த துறவி மறுபடியும் அவரது உடலிலிருந்து வெளிக்கிளம்பி, சூலத்தைக் காட்டிப் பயமுறுத்தி, இறைவன்மீது மனதை ஒரு முனைப்படுத்து மாறு உத்தரவிடுவதைக் காணலானார். சிலசமயம் அதே துறவி ஒளியுமிழும்

ஒரு பாதைவழியேசென்று, தொலையிலுள்ள இடங்களைப் போய்ப்பார்த்து, அங்கங்கே நிகழ்வனவற்றை அவருக்கு அறிவிப்பார். முதிர்ந்த சாதகன் ஒருவனுக்கு அவனது மனமே, உடலைத் தரித்த ஒரு மனிதனைப்போல வாழ்ந்தும் திரிந்தும் வரும் குருவாகிறது என்று பின்னாளில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவதுண்டு.

கோயிற் பூஞ்சோலையை நிலைநாட்டிய ராணி ராசமணியார் 1861-ல் இக வாழ்வை நீக்கினர். அவரது மரணத்திற்குப் பின் அவரது மருமகரான (புதல்வியாரின் கணவரான) மதுர்பாபு சொத்தை நிர்வாகஞ் செய்யும் தனி அதிகாரம் பெற்றார். அவர் தம்மையும் தமது செல்வத்தையும் ஸ்ரீ ராமகிருஷ்ணரது அடிக்கீழ் ஒப்புவித்து, அவரது உடலின் நலத்தில் கண்ணும் கருத்துமாய் இருக்கத் தொடங்கினர். தேவியால் தமக்காக நியமிக்கப்பட்ட ஐந்து களஞ்சியக் காரரில் (வேண்டிய பொருள்களைத் தந்து ஆதரிப்பவரில்) ஒருவர் அவர் என்று பிற்காலம் அவரைப் பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணர் பேசுவார். அவரது உள்ளத்தில் ஏதேனும் ஓர் ஆசை உதித்ததும் மதுர் அதனைத் தயங்காது நிறைவேற்றி வரலானர்.

பிராம்மணி

இவ்வமயம் தக்ஷிணேசுவரத்திற்கு ஒரு பிராம்மண நங்கையார் வந்தார்; ஸ்ரீ ராமகிருஷ்ணரது ஞானமலர்ச்சிக்காக அருந்தொண்டு புரியலானர். கிழக்கு வங்காளத்திற் பிறந்த அவர் தாந்திரிக வைஷ்ணவ பூஜை முறைகள் இரண்டிலும் வல்லவரா யிருந்தார். அவர் ஐம்பது வயதிற்குச் சற்றே கூடிய வயதினர், அழகுடையவர், இந்து சன்னியாசினிகட்கு (துறந்த மங்கையர்க்கு) உரிய காவியாடை புனைந்திருந்தவர். ஒரு சில புத்தகங்களும் இரண்டு உடைகளுமே அவருடைய உடைமையனைத்தும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்மிடத்திற்கு வந்தவரை மிக்க மரியாதையோடு வரவேற்றார்; தமது அனுபவங்களையும் காட்சிகளையும் அவரிடம் எடுத்துரைத்தார்; அவை பைத்தியக் குறிகள் என ஜனங்கள் நம்புவதையும் கூறினர். அம்மையார் அவருடைய மொழிகளைக் கூர்ந்து கவனித்தபின், "குழந்தாய், இவ்வுலகிலுள்ள ஒவ்வொருவரும் பைத்தியக்காரரே. சிலர்க்குப் பணப் பைத்தியம், சிலர்க்கு உணவு உடை முதலியவற்றிற் பைத்தியம், சிலர்க்குப் பெயரிலும் புகழிலும் பைத்தியம், உனக்கோ கடவுட் பைத்தியம்" என்று உரைத்தார். அவர்க்கு உண்டான அனுபவம், பிரேமையின் மிக உயர்ந்த ஆனந்த நிலை என்றும், உலகத்தார்க்குக் கிட்டத்தட்டத் தெரியாததான மஹா பாவ(க) நிலை என்று சாஸ்திரங்களிற் கூறப்படும் ஞான அனுபவ நிலையே என்றும் அம்மையார் உறுதி கூறினர். கண்ணீர் பொழிதல், உடல் நடுக்கம், மயிர்க் கூச்செறிதல், வியர்வை, எரிச்சல் முதலான பத்தொன்பதுவகைப்பட்ட தூல அறிகுறிகள் வாயிலாய் அந்த உயர்ந்த பக்திநிலை வெளிப்படுவதாக வருணிக்கப்

பட்டுள்ளது என்றும் சொன்னார். பக்தி சாஸ்திரங்களில் ஸ்ரீராதை ஸ்ரீசைதன்யர் என்னும் இருவர் மட்டுமே அந்த மேலான அனுபவத்தைப் பெற்றதாகவும் எழுதி வைக்கப்பட்டுள்ளதென அழுத்திக் கூறினார்,

மிக விரைவில் ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கும் அம்மையார்க்கும் இடையே அன்பார்ந்த உறவொன்று தோன்றலாயிற்று ; பிராம்மணியார் அவரைப் பாலகிருஷ்ணனாகக் கருத, அவர் அம்மையாரைத் தாயாராகக் கருதலானார். ஒவ்வொரு நாளும் அவர் கீர்த்தன நடுவிலும் தியானத்திலும் ஆனந்த பரவசம் அடைவதையும், அவரது சமாதியையும், அவரது பைத்தியம் போன்ற துடிப்பையும் அம்மையார் கவனிக்கலானார் ; பிறர்க்கு ஞானத்தை வழங்கும் சக்தி அவரிடம் இருப்பதையும் அம்மையார் உணரலானார். இவை போன்ற அனுபவங்கள் ஒரு சாதாரண அடியாரிடம் அமைவதில்லை, அம்மட்டோ ! மிக்க முதிர்ச்சியடைந்த ஒருவரிடத்தும் வாய்க்க இயலாதன ; அம்மாதிரியான ஞான சக்தி அவதார புருஷரிடத்தும் மட்டுமே வெளிப்படக்கூடும். ஆதலால் ஸ்ரீராம கிருஷ்ணர் ஸ்ரீ சைதன்யரைப்போலவே ஓர் அவதார புருடர் என்று பிராம்மணியார் பகிரங்கமாகக் கூறலானார்.

பிராம்மணியார் தம்மைப்பற்றிச் சொன்னதை மதுர் பாபுவிடம் ஸ்ரீ ராம கிருஷ்ணர் கூறியதும், மதுர் சந்தேகத்தோடு தலையை அசைத்தார். மதுர் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் அசாதாரணமான ஞான சக்தியின் இருப்பை ஒப்புக் கொண்டார் ; எனினும் அவரை ராமர் கிருஷ்ணர் புத்தர் சைதன்யர் போன்ற ஓர் அவதார புருடராக ஏற்க மதுர் பாபுவுக்கு மனமில்லை. இனத அறிந்த பிராம்மணியார் தம்மோடு அவ்விஷயத்தைப்பற்றித் தருக்கஞ் செய்யவல்ல பண்டிதர்களின் சபையொன்றைக் கூட்ட ஏற்பாடு செய்யும்படி மதுரை வேண்டினர். அவர் அதற்கு இணங்கி சபையைக் கூட்ட ஏற்பாடு செய்தார். காளி கோயிலுக்கு முன்புள்ள பஜனை மண்டபத்தில் சபை கூடுவதாயிருந்தது.

அந்நாளில் பெயர் பெற்று விளங்கிய இரு பண்டிதர்களான, வைஷ்ணவ சங்கத் தலைவர் வைஷ்ணவ சரணர்க்கும், கௌரிக்கும் அழைப்பு அனுப்பப் பட்டது. முதலில் வந்தவர் வைஷ்ணவ சரணர் ; அவர் பண்டிதர்களும் அடியார்களும், கலந்த ஒரு புகழுற்ற கூட்டத்தாரோடு புறப்பட்டார். பிராம்மணியார். ஒரு பெருமையுற்ற அன்னையைப்போல. அவர் முன்பு தமது கருத்தை வெளிப்படையாகக் கூறித் தமது முடிபைச் சாஸ்திர மேற்கோள்களால் (பிரமாணங்களால்) நிலை நாட்டினர். பண்டிதர்கள் இந்த ஆழ்ந்த மத விஷயமான கேள்வியைப் பற்றி, வழக்காடிக்கொண்டிருந்தபோது. ஸ்ரீ ராம கிருஷ்ணர் தம்மைச் சுற்றி நடக்கும் எதிலும் சற்றும் கவனமில்லாமல் ஒரு குழந்தைபோல நடுவே உட்கார்ந்திருந்தார் ; தமது சொந்த நினைவுகளில் ஆழ்ந்தவராய். சில சமயம் சிரித்துக்கொண்டும், சில சமயம் ஒரு பையிலிருந்து சிறிது வாசனைப் பண்டத்தை யெடுத்து வாயிற் போட்டுக்கொண்டும், ஒரு சமயம் வைஷ்ணவ சரணரைக் கையால் தள்ளி " இதோ பாரும், சில சமயம்

இதைப்போல எனக்கும் அந்த உணர்ச்சி உண்டாகிறது'' என்று சொல்லிக் கொண்டும் அவர் இருந்தார். சிறிது நேரத்தில் வைஷ்ணவ சரணர் கிளம்பி, பிராம்மணியாரது கருத்தைத் தாம் முற்றும் ஒப்புக்கொள்வதாகச் சொன்னர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் மஹா பாவ(க) நிலையை அனுபவித்திருப்பதில் ஐயமில்லை என்றும், பகவானது தன்மை மனிதனிடத்து வெளிப்படுதலாகிய அரிய நிகழ்ச்சிக்கு இது உறுதியான அடையாளம் என்றும் அவர் வற்புறுத்தினர். அங்கே கூடியிருந்த மக்களுக்கு, சிறப்பாகக் கோயில் தோட்டத்து உத்தியோகஸ்தர் கட்குப் பேச நா எழாது போயிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ணர் மதுரிடம் ஒரு சிறு வணைப்போல "இவரும் இப்படிப் பேசினர் பார்த்தீரா? சரி, முடிவிலே அது ஒரு நோயன்று என அறிந்தது பற்றி, யான் மகிழ்கிறேன்'' என்றனர்.

சில நாள்கள் சென்றபின் பண்டிதர் கௌரி வந்து சேர்ந்தார்; இன்னொரு சபை கூட்டப்பட்டது. பிராம்மணி, வைஷ்ணவ சரணர் ஆகிய இருவரது கருத்தையும் அவர் ஒப்புக்கொண்டார். ஸ்ரீராமகிருஷ்ணர், தம்மை அவதார புருடரென வைஷ்ணவ சரணர் கூறியுள்ளாரே யென்று பண்டிதர் கௌரியிடம் குறிப்பிட்டபோது, அப் பண்டிதர் கூறிய மறுமொழியாவது: "உம்மைப் பற்றி அவர் கூறியது அவ்வளவுதானு? அவ்வாறுயின் அவர் கூறியது வெகு சொற்பமே. எந்த ஞான சக்திச் சுரங்கமாய பரம்பொருளின் ஒரு சிறு கூறு இடையிடையே அவதார வடிவமாகப் பூமிக்கு இறங்குகிறதோ, அப்பொருளே நீர் என்பதைப் பற்றி எனக்கு முழு உறுதியுண்டு.''

அதைக் கேட்ட ஸ்ரீ ராமகிருஷ்ணர் புன்சிரிப்போடு, "இதென்ன! இவ் விஷயத்தில் வைஷ்ணவ சரணரை நீர் மூற்றிலும் மிஞ்சிவிட்டீர் எனத் தோன்றுகிறது. அம்மாதிரியான கருத்தை உம்மிடம் உண்டாக்க என்னிடம் நீர் யாது கண்டீரோ?'' என்றனர்.

கௌரி "என் நெஞ்சிலே உணர்ந்தது அது; சாஸ்திரங்களும் எனக்கு ஆதரவளிக்கின்றன. என்னை வாதுக்கு அழைப்பார் எவர் முன்னும் அதனை நிலைநாட்ட யான் தயாராயுள்ளேன்'' என்றார்.

அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர், "சரி, அவ்வாறு சொல்வது நீரே; ஆனால் என்னை நம்பும்; அதைப் பற்றிய யாதொன்றையும் யான் அறியேன்'' என்று பதில் மொழிந்தார்.

இவ்வாறுக; அந்நாளைய பெரும் பண்டிதர்களின் தீர்ப்பினால், பைத்தியங் கொண்ட பூசாரி பகவானின் ஓர் அவதாரம் என வெளிப்படையாகப் புகழப் பட்டார். அவருடைய காட்சிகள் மிதமிஞ்சிச் சூடான மூளையினின்றும் வீளைந்தவையல்ல; மெய்ஞ்ஞானியரது சரித்திரத்திலே முன்பு நிகழ்ந்தனவாகக் கண்டவையே. இம்மாதிரியான விளம்பரத்தால் ஸ்ரீ ராமகிருஷ்ணரது உள்ளம் எவ்வாறு மாறிற்றே என்னலாம். அவர் பிறந்த நாள் தொடங்கி இருந்தது போலவே தேவியின் எளிய மதலை யாகவே இருந்துவந்தார். பல ஆண்டுகள் கழிந்தபின், இரு இல்லறச் சீடர்கள் ஒரு சமயம் பலர் அறிய அவரை அவதார

மென்க் கூறலானர். அச் செய்தி அவரது காதிற்கும் எட்டலாயிற்று; அப்போது அவர் ஒரு சிறிது கேலியாக, "அவ்வாறு எனது மேன்மையை அதிகப் படுத்தலாம் என்று அவர்கள் நினைக்கின்றனரோ? அவர்களில் ஒருவர் நாடக மேடைமீது நடிப்பவர், மற்றொருவர் ஒரு வைத்தியர். அவதாரங்களைப்பற்றி அவர்கட்கு என்ன தெரியும்? பல ஆண்டுகட்கு முன்னமே கௌரியையும் வைஷ்ணவ சரணரையும் போன்ற பண்டிதர்கள் என்னை அவதாரமெனக் கூறவில்லையா? அவர்கள் பெரும் பண்டிதர்கள், தாங்கள் கூறியது இன்னதென அவர்கள் அறிவார்கள். ஆனலும் என் மனதைச் சிறிதும் அது விகாரப் படுத்தவில்லை" என்று உரைத்தனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது வாழ்வு முழுவதும் மாணவராகவே இருந்தார். தமது சீடர்களிடம் அவர் அடிக்கடி "நண்பரே, யான் அதிக காலம் வாழ்வதற்கு ஏற்ப, அதிகம் கற்கின்றேன்" என்ற பழமொழியை எடுத்துரைப்பதுண்டு. பிராப்மணியாரது விளம்பரத்தால் உண்டான ஆரவாரம் அடங்கியதும், அவர் தந்திர சாஸ்திரங்களிலும் வைஷ்ணவ சாஸ்திரங்களிலும் விதிக்கப்பட்டுள்ள பரம்பரையான முறைகளின்படி ஞான சாதனங்கள் பயிலுவதிற் கருத்தாயிருந்தார். இதுவரை அவர் தமது மனத்தினின்றும் நெஞ்சினின்றும் கிளம்பிய தூண்டுதல்கட்கு ஏற்றவாறே ஞான இலக்ஷியத்தைப் பின்பற்றி வந்தார். இப்போதோ அவர் பிராம்மணியாரைக் குருவாக ஒப்புக்கொண்டு, பரம்பரையாக வந்த ராஜபாதைகளிலே நடக்கத் தொடங்கினர்.

தந்திர சாஸ்திரம்

தந்திர சாஸ்திரத்தின்படி, அறுதியான உண்மைப் பொருள் சைதன்யமே, சித்தே; அச் சித்தும், ஸத்து ஆனந்தம் என்பவற்றோடு ஒன்றுனதேயாம். ஸச்சிதானந்தம் என்னும் இந்த அறுதியான உண்மை வேதங்களில் உபதேசிக்கப்படும் மெய்ப்பொருளேயாகும். மனிதனும் இம் மெய்ப்பொருளும் ஒன்றே; ஆனல் மாயையெனும் அவித்தைக்கு வசப்பட்டு அவன் தனது உண்மையான இயல்பை மறந்துள்ளான். காண்பான்—காட்சி இரண்டாலும் ஆகிய வெறுந் தோற்றமான உலகை உண்மையாகக் கொள்கிறன்; இப் பிழையே அவனது பந்தத்திற்கும் துயரத்திற்கும் காரணமாகிறது. தெய்விக மான மெய்ப் பொருளோடு தான் உண்மையில் ஒன்றியிருப்பதை மீண்டும் கண்டுபிடித்தலே ஞானப் பயிற்சியின் முடிவாகும்.

இம் முடிவை அடைதற்கு வேதாந்தம் விவேகமும் வைராக்கியமும் ஆன ஒரு கடுமையான 'நேதி' (இது வன்று) முறையை விதிக்கின்றது; கூரிய புத்தியும் அசைக்க வொண்ணுத மனத்திண்மையும் (சங்கற்ப சத்தியும்) வாய்க்கப்பெற்றுள்ள ஒரு சிலரால் மட்டும் அம்முறையைப் பின்பற்ற இயலும். ஆனல் தந்திர சாஸ்திரம் மனிதர்க்குரிய இயல்பான பலவீனத்தையும், அவர்

களுடைய தாழ்ந்த அவாக்களையும், தூலப்பொருளின்மீது அவர்க்குள்ள பிரியத்தையும் கவனத்தில் வைத்துக்கொள்கிறது. அது தத்துவத்தைக் கிரியைகளோடும், தியானத்தைச் சடங்குகளோடும், வைராக்கியத்தை (தியாகத்தை)ப் போகத்தோடும் இணைக்கிறது. இதில் அடங்கிய உட்கருத்தாவது, சாதகனுக்குப் பரம்பொருளும் தானும் ஒன்றே என்பதைத் தியானிக்கப் படிப்படியாகப் பயிற்சியளிப்பதேயாம்.

சாதாரண மனிதன் இவ்வுலகத்துள்ள சடப் பொருள்களை அனுபவிக்க விரும்புகிறான். தந்திர சாஸ்திரம் அவற்றை யனுபவிக்க அவனுக்கு இடந் தருகின்றது; ஆயினும் அதே சமயம் அவற்றில் இறைவனின் இருப்பையும் உணரும்படி ஏவுகிறது. அது உட்பொருள் அமைந்த கிரியைகளை விதிக்கிறது; இவற்றுல் மெல்ல மெல்லத் தூலப் பொருள்கள் ஞானமயமாகின்றன; ஐம்புலக் கவர்ச்சி இறைவன்மீதுள்ள பக்தியாக மாற்றப்படுகின்றது. ஆக, மனிதனுக்குரிய 'பந்தங்களே' 'முக்திக்குரியவை' யாக வடிவங்கொள்கின்றன. கொல்லும் நஞ்சே வாழ்விற்கு அமுதமாகப் புதிய உருவமடைகின்றது. வெளித் துறவு அவசியமன்று. ஆக, தந்திரத்தின் நோக்கமாவது, போகத்தை யோகமாக (சைதன்யத்தோடு மருவியொன்றுகும் நிலையாக) மேன்மைப்படுத்தலேயாம். ஏனெனில், தந்திரநூலின் தத்துவமுறைப்படி, உலகமும் அதிலுள்ள யாவும், பரம்பொருளாகிய சிவமும் அதன் அறிதற்கரிய சக்தியாகிய தேவியும் சேர்ந்து நடத்தும் விளையாட்டேயாம்.

தந்திர சாஸ்திர சாதனங்கள் எல்லா வகை சாதகர்களின் பக்குவங்கட்கும் ஏற்றவாறு படிப்படியாய் அமைந்துள்ளன: 'பசு' பாவனை (மிருக இயல்பு), 'வீர' பாவனை, 'திவ்விய' பாவனை எனும் மூவகைப் பாவனைகளோடு கூடிய மக்கட்கும் பயிற்சிகளை அவை விதிக்கின்றன. சில கிரியைகளை இயற்ற ஆண்கட்குப் பெண்களின் இருப்பும் வேண்டப்படுவதாகும். இதனுல் சாதகன் பெண்ணை ஜகதம்பிகையாகிய காளிதேவியின் வடிவமாகவே நோக்கக் கற்றுக்கொள்கிறான். தந்திரத்தின் அடிப்படையே தெய்வத்தைத் தாயாகக் கருதுதலும், பெண்ணிற்குப் பெருமை யளித்தலுமேயாம். ஒரு மங்கையினது உடலின் ஒவ்வொரு பகுதியும் வடிவுகொண்ட தெய்வத்தன்மையாகக் கருதப்படல் வேண்டும். ஆனல் அக்கிரியைகள் மிக உயர்ந்த அளவிற்குப் பேராபத்தை விளைப்பனவாம். தகுதிபெற்ற ஒரு குருவின் துணை முற்றிலும் அவசியம். விழிப்பாயிராத ஒரு பக்தன் அடிசருக்கித் தீமைக் குழியில் விழ்வான்.

தந்திரத்தின்படி இவ்வுலகிலுள்ள சுறுசுறுப்பான ஆக்கும் ஆற்றலே சக்தியெனப்படுவது. அனைத்தையும் கடந்த சிவம் ஏறக்குறைய இயக்கமற்ற ஒரு தத்துவமே. மேலும், தீயின் எரிக்கும் சக்தி தீயினின்றும் பிரிக்கபடாதவாறு போல, சக்தியும் சிவத்தினின்றும் பிரிக்க வொண்ணுததாகும். ஆக்கும் ஆற்றலாகிய சக்தி தன் அடிவயிற்றில் உலகினை அடக்கி வைத்துள்ளது; ஆதலால் அதுவே தேவியம்மையாகும். எல்லா மாதரும் அவ் அம்மையின் குறிகளே;

காளி அவளது பலவகை வடிவங்களுள் ஒன்று. படைக்கும் சக்தியாகிய காளிதேவியைத் தியானித்தலே தந்திரத்தின் முக்கிய சாதனமாகும். தியானிக்கும்போது சாதகன் முதலில் தானும் அதீதப் பரம்பொருளும் ஒன்றெனக் கருதுவான்; பின் அந்த நிர்க்குணச் சைதன்யத்தினின்றும் தானும் தேவியின் உயிருள்ள வடிவமும்ஆகிய இரு பொருள்களும் வெளிவருவதாக நினைக்கிறான். அதன் பின்பு தேவியைத் தன்முன் உள்ள தூல உருவத்தில் ஏறிட்டு, அதனையே தேவியாக வணங்குகிறான்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தந்திரசாதனங்களைப் பழகும் முயற்சியைத் தொடங்கலானார்; தேவியே கட்டளையிட்டதன்பின் அவர் பிராம்மணியாரைத் தமது குருவாக ஒப்புக்கொண்டார். பஞ்சவடியிலும், கோயில் எல்லைக்குள் வடகோடியிலுள்ள வில்வமரத்தடியிலும் ஆழ்ந்த நுண்ணிய கருத்துகள் அடங்கிய கிரியைகளை இயற்றினார். அறுபத்து நான்கு தந்திர சாஸ்திரங்களிலுள்ள சாதனங்கள் அனைத்தையும் அவர் பழகலானார்; அவற்றில் எந்த ஒன்றும் தருதற்குரிய உயர் பலனைப் பெற அவர்க்கு மூன்று நாள்கட்குமேல் என்றைக்கும் வேண்டியிருந்ததில்லை. ஒரு சில ஆரம்பக் கிரியைகளை இயற்றியதும், ஒரு புதிய தெய்வ ஆவேசத்திற்குள் அவர் ஆழ்ந்து சமாதியை அடைந்து விடுவார்: அந் நிலையில் அவரது உள்ளத்தே தெய்விக உணர்வே குடிகொண்டிருக்கும். தீமை அவர்க்கு இல்லாத பொருளாயிற்று. 'உடலைப் பற்றியது' எனும் மொழிகள் பொருளற்றனவாயின. உலக முழுமையும், அதிலுள்ள யாவும் சிவ சக்தி லீலையாகவே தோன்றின. அன்னையின் சக்தியும் அழகும் எங்கும் வெளிப்பட்டிருப்பதை அவர் கண்டார்; உயிருள்ளதும் உயிரற்றதும் ஆன பிரபஞ்சம் முழுவதும் சத்தும் ஆனந்தமும் வியாபித்திருப்பதாக அவர்க்குத் தோன்றிற்று.

பிரபஞ்சத்தின் மூல காரணத்தை ஒரு மிகப் பெரிய ஜோதி வடிவமான முக்கோணமாகவும், அதினின்றும் எண்ணிறந்த உலகங்கள் கணந்தோறும் பிறப்பதாகவும், ஒரு காட்சியிற் கண்டார். இப்பிரபஞ்சத்துள்ள கணக்கற்ற ஒலிகள் யாவும் எந்த ஒரே ஒலியின் பற்பல வேறுபாடுகளே யாகுமோ, அப் பேரொலியாகிய பிரணவ நாதமெனும் அநாஹத சப்தத்தைக் காதாரக் கேட்டனர், ஒரு மனிதனை ஏறக்குறைய எல்லாம் வல்லவனுக்கும் அணிமாதி அஷ்ட யோக சித்திகளைப் பெற்றார்; ஆனால் மெய்ப்பொருள் சம்பந்தப்பட்டமட்டில் இவை யாதொரு பயனையும் தாரா என்பதுபற்றி அவற்றை உதைத்துத் தள்ளினர். உலகினைப் படைத்தும் காத்தும் ஒடுக்கியும் வரும் பரம்பொருளின் உணர்தற்கரிய சக்தியாகிய தெய்விக மாயையின் தரிசனத்தையும் அவர் பெற்றார். இக்காட்சியில் பூரண கர்ப்பிணியான, பேரழகு வாய்ந்த ஒரு நங்கை கங்கையினின்றும் கிளம்பி, மெல்ல மெல்லப் பஞ்சவடியை அணுகுதலைக் கண்டார். சிறிது நேரத்தில் அவள் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்து, அதற்குப் பாலூட்டினாள். அடுத்த கணம் அவள் கோர வடிவங்கொண்டு, அக் குழந்தையைத் தனது கோரப் பற்களுக்கிடையே வைத்துப் பற்றி அதனை

நசுக்கினுள். அதை விழுங்கிவிட்டு அவள் கங்கை நீர்க்குள் மீண்டும் புகுந்தாள்.

ஆனால் இக்காலம் அவர்பெற்ற அனுபவங்கட்குள் மிகச் சிறந்தது, குண்டலினி சத்தியின் விழிப்பே. அச் சக்தி முதலில் முதுகெலும்பின் அடியில் உறங்கிக் கொண்டிருப்பதையும், பிறகு விழித்தெழுந்து சுழுமுனை நாடி வழியே மேலேறி, அதிலுள்ள ஆறு ஆதாரங்களாகிய தாமரைகள் வழியாகத் தலையின் உச்சியிலுள்ள ஆயிர இதழ்த்தாமரையாகிய ஸஹஸ்ராரத்திற்குச் செல்வதையும் நேரே கண்டார். இன்னும், குண்டலினி மேலே செல்லும்போது பற்பல தாமரைகளும் மலர்ந்ததையும் கண்டார். இந்நிகழ்ச்சியோடு காட்சிகளும் ஆனந்த பரவச நிலைகளும் உண்டாயின. பிற்காலத்தில் அவர் குண்டலினியின் பலவகைக் கதிகளையும்—உதாரணமாக, மீன்கதி, பறவைக்கதி, குரங்குக்கதி முதலியவற்றையும்—தமது சீடர்கட்கும் அடியார்கட்கும் வருணிப்பார். குண்டலினியின் விழிப்பே (மெய்யுணர்வு) மெய்ஞ்ஞான நிலையின் ஆரம்பமாகும்; ஸஹஸ்ராரத்தில் அது சிவனோடு ஐக்கியமாகும் முடிவுநிலையான சமாதியே தாந்திரிக சாதனத்தின் பூர்த்தியாகும்.

ஏறக்குறைய இதே சமயம் ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கு அருளப்பட்ட ஓர் உண்மையாவது, சிறிது காலத்திற்குள் அவரது துணையை நாடிப் பல அடியார்கள் வருவார் என்பதே.

வைஷ்ணவ சாதனங்கள்

தாந்திரிக சாதனத்தை முடித்ததும், ஸ்ரீ ராமகிருஷ்ணர் வைஷ்ணவ சாதனங்களையும் பிராம்மணியாரின் உதவியால் பழகலானார். வைஷ்ணவர்களாவார், 'எங்கும் வியாபகமுடைய' பரம் பொருளாகிய விஷ்ணுவை வழிபடுவோரே; இவ்விஷ்ணு ஹரியென்றும் நாராயணன் என்றும் பெயர் பெறுவர். விஷ்ணுவின் பற்பல அவதாரங்களுள் அனேத்தினும் மிக்க அடியார்களைப் பெற்றுள்ள இரண்டாவன, ராமரும் கிருஷ்ணருமே.

வைஷ்ணவம் முற்றும் தனியான பக்தி மதமே. பக்தியாவது, பகவானிடம் தீவிர அன்பு கொள்வதே, அவரொருவரிடமே பற்று வைத்தலாம்; அது ஆனந்த சொரூபமானது, பக்தனுக்கு அமிருதத்வத்தையும் (அமரத் தன்மையையும். அதாவது அழியாத் தன்மையையும்) முத்தியையும் கொடுப்பது. வைணவ மதப்படிப் பகவானைத் தருக்கத்தாலோ, அறிவாலோ உணர இயலாது; பக்தியின்றி எந்த நோன்புகளும் தவங்களும் கிரியைகளும் பயனைத் தரா. மனிதன் சுய முயற்சியால் மட்டும் பகவானை அறியவொண்ணாது. அவரைக் காண அவரது அருள் முற்றிலும் அவசியமாகும்; இந்த அருளை நெஞ்சத் தூய்மையுடையோர் உணர்வார். மனத்தைப் பக்தியால் தூயதாக்கல் வேண்டும். அப்போது தூயமனம் பகவானைக் காண்பதால் எழும் ஆனந்த வெள்ளத்து

எப்போதும் அழுந்திக் கிடக்கும். பக்தியை வளர்ப்பதே வைஷ்ணவ மதத்தின் முக்கிய நோக்கமாகும்.

விதிப்படி வரும் பக்தியில் மூன்று வகை உண்டு; தாமசிகம், இராஜஸிகம், சாத்துவிகம் என்பன அவை. ஒருவன் பக்தி செய்தற்குத் தீய நோக்கமோ, கருவமோ, பொருமையோ காரணமாயின். அவனது பக்தி சடத்தன்மைக்கும் இருளுக்கும்—அதாவது தமோகுணத்திற்கு—வசப்படுவதனால், அது தாமஸிகம் எனப்படும். புகழுக்கோ பொருளுக்கோ வேறு உலகப் பேராசைக்கோ வசப்பட்டு ஒருவன் ஈசனை வணங்குவானுயின், அந்த பக்தி ரஜஸ் என்னும் சுறுசுறுப்புத் தன்மையால் தூண்டப்படுதலின் இராஜஸிகம் எனப்படும். உலகப் பொருளில் எதனையும் பெறும் நினைவின்றி ஒருவன் பக்தி செய்வானுயின், இறைவனது பிரீதிக்கென்றே ஒருவன் தன் கடமைகளை இயற்றுவானுயின், சத்துவம் என்னும் சமநிலைத் தன்மையின் ஆட்சிக்கு அந்த பக்தி உட்படுதலின். சாத்துவிகம் எனப்படும். ஆனால், அனைத்தினும் உயர்ந்த பக்தியோ முக்குணங்களையும் கடந்ததாகும்; எவ்வாறெனின் எல்லா உயிர்கட்கும் அந்தராத்மாவாயுள்ள இறைவனை நோக்கி மனம் அந்நிலையில் தானுகவே இடையறுது சென்றுகொண்டேயிருக்கும். இறைவனது பெயரையோ குணங்களையோ சொல்லக் கேட்டதும் ஒரு மெய்யான பக்தனின் நெஞ்சிலே தானுகப் பக்தி ஊறுவதாகும். இம்மாதிரியான பக்தியைப் பெற்றுள்ள ஒருவன் சுவர்க்க இன்பத்தைப் பிறர் தனக்குத் தருவதானலும், பெற விரும்பான். அவனது ஒரே ஆசையாவது இன்பமோ துன்பமோ, வாழ்வோ சாவோ, புகழோ இகழோ, செழிப்போ வறுமையோ, எது வரினும், எல்லா நிலைகளிலும், இறைவன்மீது பேரன்பைச் செலுத்துதற்கேயாம்.

பக்தியில் இரு படிகள் உண்டு. முதற்படி வைதி பக்தி யெனப்படும். அதாவது, சாஸ்திர விதிகட்கு இணங்கிய வாழ்க்கையால் வரும் அன்பேயாம். ஒழுங்காக முறைப்படி செய்யும் பூஜையும், தோத்திரங்களும், பிரார்த்தனைகளும் பகவானது நாம ஜெபமும், அவரது புகழைப் பரடுதலும்—இவை இப்படியிலுள்ள பக்தர்கட்கு விதிக்கப்படடுள்ளவையாம். நாளடைவில் இந்த அபர பக்தி (தாழ்ந்த பக்தி) பர பக்தி(உயர்ந்த பக்தி)யாக முதிரும்; அது பிரேமை யெனவும் பெயர் பெறும். பக்தியே அடைதற்குரிய ஒரு பேருகும் (சாதனம் என்பது மட்டுமன்று). எல்லா மனித நெஞ்சங்களிலும் அது உள்ளடங்கி இருக்கிறது; ஆனல் பந்தத்துக்கு உட்பட்டவர்களிடம் அது உலகப் பொருள்களை நோக்கித் தவருகச் செலுத்தப்படுகிறது.

ஓர் அன்பர்க்குப் பக்தி வளர்தற்காக வைஷ்ணவ மதம் இறைவனை மனிதனுக்குகிறது. பக்தன் இறைவனைத் தனது பெற்ரோராகவோ, ஆண்டவனுகவோ, தோழனுகவோ குழந்தையாகவோ காதலனுகவோ கருதவேண்டும் என்றும், அம்முறைகளுள் ஒன்றைவிட அடுத்துப் பின்வருவது அன்பின் முதிர்ச்சியால் விஞ்சியிருக்கும் என்றும் கூறப்படும். இப் பாவனைகள்—இறை

வன்மீது கொள்ளும் உறவுகள்—முறையே சாந்த, தாஸ்ய, ஸக்ய, வாத்ஸல்ய, மதுர பாவனைகள் எனப் பெயர்பெறும். வேதங்களை வெளியிட்ட ரிஷிகளும், அனுமானும், பிருந்தாவனத்து ஆயர் சிறுவர்களும், ராமரின் அன்னை கோசலையும், கிருஷ்ணனின் காதலியாகிய ராதையும் முறையே இப்பாவனைகட்கு மிகப் பூரணமான உதாரணங்களாவார். உறவு ஏற ஏற, இறைவனின் மகிமைகள் படிப்படியாக மறக்கப்படுகின்றன; முன்னினும் அதிகமாகப் பக்தன் இறைவனோடு நெருங்கி யுறவாடுகிறான். இறுதியாக அவன் தன்னை இறைவனது காதலியாகக் கருதுகிறான்; செயற்கைத் தடை எதுவும் அவனைத் தனது இலக்கியமாகிய இறைவனிடமிருந்து பிரிக்க இயலாததாகிறது. உயர்ந்து செல்லும் அவனது ஆவியை உலகத்தோடு பிணைக்கும் எந்த ஸமூகக் கடமையோ அறக் கடமையோ அவனுக்கு இல்லை. அவன் இறைமையோடு பூரணமாகக் கலந்துவிட்டதை அனுபூதியால் உணர்கிறான். அறிவான்—அறியப்படும் பொருள் எனும் தொடர்பின் பலவகைகளையும் தாண்டி, அப்பாற் செல்ல முயலும் வேதாந்தியைப்போலன்றி, வைஷ்ணவ நெறியைப் பின்பற்றும் பக்தன் தனது சொந்த ஜீவான்மாவையும் பகவானது பரமான்மத் தன்மையையும் வைத்திருக்கவே விரும்புவான். இவனுக்கு இறைவன் உணர்தற்கரிய அதீதப் பிரம்மமாகாது, புருஷோத்தமன் ஆகிறான்.

மதுரபாவனையெனும் சாதனம் பழகும்போது ஆணாயிருக்கும் பக்தன் இப் பிரபஞ்சத்திலுள்ள ஒரே புருஷனான ஸ்ரீ கிருஷ்ணன்மீது மிக உயர்ந்த தீவிர பக்தியை வளர்த்தற் பொருட்டு, தன்னைப் பன்முறையும் பெண்ணாகப் பாவிப்பதுண்டு. ஆண் மகன் தனது எதிரினத்தாரது மன நிலையைப் பாவிக்கும் இதில் ஆழ்ந்த மனநூல் சம்பந்தமான கருத்தொன்று அடங்கியுள்ளது. யாதானும் ஒரு நினைவை மனதில் தீவிரமாகப் பதியச் செய்யும்போது, அதற்கு அன்னியமான ஒவ்வொரு நினைவும் மனதினின்றும் ஒழியும்வரை அதனைப் பதித்தல் இயலும் என்பது சாதாரண அனுபவமே. மனதிற்குரிய இந்தச் சிறப்பான இயல்பைத் தாழ்ந்த ஆசைகளை ஒடுக்குதற்கும், ஞான இயல்பை மலரச் செய்தற்கும் பயன்படுத்தலாம். ஒரு மனிதனிடத்துள்ள எல்லாக் காமக் குரோதங்கட்கும் அடிப்படையாயுள்ள கருத்து யாதெனில், ஓர் ஆண் உடம்போடு பிரிக்கவொண்ணாதபடி இணைக்கப்பட்டிருப்பதான உறுதியான உணர்ச்சியே. அவன் தான் பெண் என்ற நினைவை முழுதும் உணர்விற் செலுத்த வல்லவனானெனின், தனது ஆண் உடம்பிற்குத் தனியாக உரிய ஆசைகளை ஒழித்தல் அவனுக்கு இயலும். பின்னும் தான் பெண் என்னும் நினைவை ஒழிக்கத் தான் ஆணுமன்று, பெண்ணுமன்று, வடிவற்ற ஆன்மாவே என்ற அதனினும் உயர்ந்த நினைவையும் பயன்படுத்தலாம். வடிவற்ற ஆன்மாவே வடிவற்ற இறைவனோடு உண்மையாக நெருங்கி அளவளாவும் இன்பத்தைப் பெறக்கூடும். ஆதலால் வைஷ்ணவரின் உயர்ந்த அனுபூதி வேதாந்தியின் அதீத பிரம்மானுபூதியை அணுகுகின்றது.

வைஷ்ணவர் பிரேமையால் இறைவனை வழிபடும் முறைக்கு ஓர் அழகிய விளக்கம் பாகவதத்திலுள்ள பிருந்தாவன லீலையிற் காணப்படுகிறது. பிருந்தாவன ஆய்ச்சியர் (கோபிமார்) ஆறு வயதுச் சிறுவனை கிருஷ்ணனைத் தமது காதலனைக் கருதினர். அந்த அன்பின் பயனைத் தமக்கொரு லாபத்தையோ இன்பத்தையோ நாடினரல்லர். தமது உடல்களையும், மனங்களையும் ஆன்மாக்களையும் கிருஷ்ணனிடமே அவர்கள் ஒப்புவித்தனர். கோபியர்கள் அனைவரிலும் (ராதிகையே) ராதையே கிருஷ்ணன்மீது வைத்த முறுகிய பிரேமையால் அவனுக்கு மிக நெருங்கியவளாவாள். அவள் 'மஹா பாவனை' யெனும் நிலையினை அடைந்து தனது காதலனோடு மருவியொன்றினள். இக் கலப்பு சிற்றின்பப் பாஷையால் விளக்கும் பேரின்ப அனுபூதியைக் குறிப்பதாகிறது.

கௌராங்கர், கோரா, நிமை யெனும் மறுபெயர்களையுடைய ஸ்ரீசைதன்யர் 1485-ல் வங்காளத்துப் பிறந்தவர்; பகவானின் அவதாரமாகப் போற்றப் படுபவர். அவர் வைஷ்ணவ மதப் பெருங்குரவர் (சமயாசாரியார்) ஆவார். பகவானது நாமத்தின் சங்கீர்த்தனமே கலியுகத்திற்கு மிகப் பயன்தரத்தக்க ஞான சாதனம் எனச் சைதன்யர் வற்புறுத்திக் கூறுவர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் அனுமாராகத் தம்மைப் பாவித்துப் பகவானை ஆண்டானாக (எஜமானனாக) வழிபட்ட கதை முன்னரே கூறப்பட்டது. இப்போது அவர் வைஷ்ணவ சாஸ்திரங்களிற் கூறப்பட்டுள்ள மற்றைய உறவு நிலைகளைக் கையாளலானார்.

ராம்லாலா

ஏறக்குறைய 1864-ல், ராமரையே தமது இஷ்ட தெய்வமாகக் கொண்டு திரிந்த ஜடாதாரியென்னும் வைஷ்ணவ முனிவர் தக்ஷிணேசுவரம் வந்தார். அவர் எப்போதும் தம்முடன் உலோகத்தாற் செய்த சிறியதோர் இறைவனது சிலையை எடுத்துச் செல்வார்; அதை 'ராம்லாலா' (பால ராமர்) எனும் அருமைத் திருநாமத்தால் அழைப்பர். கோசலைக்குத் தனது தெய்வத் திருக்குமரனான ராமனிடத்து உண்டான கசிந்த ஆதரத்தையெல்லாம் அவர் அச்சிறிய சிலைமீது செலுத்தலானார். ஆயுள் முழுதும் ஞானசாதனம் பழகியதன் பயனாக அவர் அந்த உலோகச் சிலையிலே தமது இஷ்டதெய்வத்தின் தரிசனத்தைப் பெற்றார். ராம்லாலா அவர்க்கு ஓர் உலோக உருவமன்று; உயிருள்ள பகவானாகவே ஆயிற்று. அவர் ராமரைப் பாதுகாக்கவும் அவர்க்கு உணவூட்டவும், அவரோடு விளையாடவும், அவரோடு உலாவச் செல்லவும், அவரை நீராட்டவும் தமது பொழுதையெல்லாம் செலவு செய்தார். அவ்வுருவம் தமது அன்பிற்கு இசைந்து ஒழுகுவதையும் அவர் கண்டார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஜடாதாரியின் பக்தியில் ஈடுபட்டு, தக்ஷிணேசுவரத்திலே சில நாள் தங்குமாறு அவரை வேண்டினர். விரைவில் ராம்லாலா ஸ்ரீராம

கிருஷ்ணர்க்கும் பிரிய தோழர் ஆயினர். பின்னளில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் முன் அச்சிறு சிலை அழகாக நர்த்தனம் பண்ணியதையும், தமது முதுகின்மீது குதிப்பதையும், தமது கையில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தியதையும், வெயிலில் வயல்கட்கு ஓடியதையும், செடி கொடிகளிலிருந்து பூக்கள் பறித்ததையும், கீழ்ப்படியாத பையனைப்போலச் சேட்டைகள் செய்ததையும் பற்றித் தமது அடியார்களிடம் வருணித்தார். அவர்க்கும் ராம்லாலாவுக்கும் இடையே ஓர் இனிய உறவு உண்டாயிற்று; அவர் ராம்லாலாமீது தாயன்பு கொண்டார்.

ஒரு நாள் ஜடாதாரி தமது சிலையை வைத்துக்கொள்ளுமாறு ஸ்ரீ ராம கிருஷ்ணரை வேண்டி, கண்ணீர் ததும்ப அவரிடமிருந்து பிரிந்து செல்ல விடை பெற்றார். ராம்லாலா தமது மிக அந்தரங்கமான பிரார்த்தனையை நிறைவேற்றியதாகவும், அதற்குப் பின் தமக்கு முறைப்படி பூஜை செய்தல் அவசியமன்று எனவும் கூறினர். சில நாள்கட்குப் பின் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ராம்லாலா மூலமாக ராமச்சந்திரரது காட்சியைப் பெற்றார்; அதனால் அவர் உணர்ந்த உண்மைகளாவன: ராமாயணத்திற் கூறப்படும் தசரத குமாரரான ராமரே பிரபஞ்சமுழுவதும் ஆத்மாவாகவும் சைதன்யமாகவும் வியாபித்துள்ளார்; அவரே அதைப் படைப்பவரும், காப்பவரும் அழிப்பவரும் ஆவார்; அவரே இன்னொரு வகையில் வடிவமோ குணமோ பெயரோ அற்ற பரப்பிரம்மமும் ஆவார்—என்பன.

ராம்லாலாவைத் தெய்வக் குழந்தையாக வழிபடும்போது, ஸ்ரீ ராமகிருஷ்ணரது நெஞ்சு தாயின் பரிவால் நிறைந்ததாயிற்று; அவர் தம்மை ஒரு பெண்ணாகக் கருதலானர். அவரது பேச்சும் நடையுடைபாவனைகளும் மாறலாயின. மதுர் என்பவரின் குடும்பத்து மாதரோடு தடையின்றிப் பழகத் தொடங்கினர்; அம்மாதரும் அவரை அந்நாளில் தம்முள் ஒருவராகவே கருதலானர். இதே காலத்தில் அவர் தேவியைத் தோழியுறவிலும் வழிபட்டார்.

தெய்வக் காதலனோடு இரண்டறக் கலந்த நிலையில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஸ்ரீ கிருஷ்ணனைத் தமது ஆருயிர்க் காதலனாக வணங்கி, அவனோடு இரண்டறக் கலத்தலாகிய முயற்சியில் இனி ஈடுபடலாயினர். அதுவே துவைத வழிபாட்டின், கிட்டற்கரிய மிக உயர்ந்த சிகரமாகும். அவர் தம்மை பிருந்தாவனத்துக் கோபியருள் ஒருத்தியாகப் பாவித்து, அவரது தெய்வக் காதலனான கிருஷ்ணன் மீது பிரேமை வெறி கொண்டவரானர். அவரது வேண்டுகோளின்படி மதுர் அவர்க்கு மாதர்க்குரிய ஆடையணிகளை அளித்தார். இந்தப் பிரேமை முயற்சியில் உணவும் நீரும் (பசியும் தாகமும்) மறையலாயின. அல்லும் பகலும் அவர் ஸ்ரீ கிருஷ்ணனது தரிசனத்தைப் பெறும்பொருட்டு அகங்கரைந்து அழலாயினர், அத் துடிப்பு பிரேமைப் பித்தாக மாறியது; காரணம் யாதெனில், தெய்வக் கண்ணன் தான் கோபிகளோடு விளையாடின பழைய கேலி விளையாட்டுகளையே அவரிடத்தும் செய்யத் தொடங்கினன் என்பதே. இடையிடையே அவன்

உருக்காட்டியும், ஆனல் எப்போதும் தன்னைத் தொலையிலே வைத்துக் கொண்டும், அவரைத் தொந்தரவு படுத்துவான், ஏளனமும் செய்வான். ஸ்ரீராம கிருஷ்ணரது கடுந்துயரத்தால் பழைய அறிகுறிகள் மீண்டும் உடலில் தோன்ற லாயின; அவையாவன: உடலெரிச்சலும், தோலின் துவாரங்கள் வழியே இரத்தம் கசிதலும், மூட்டுகள் நெகிழ்வதும், உயிர் நிகழ்ச்சிக்குரிய தொழில்கள் நின்றுவிடுதலுமே.

ஸ்ரீ கிருஷ்ணனை அடைய விரும்புவார் ஸ்ரீமதி ராதையை மகிழ்வித்து, அவளுடைய அருளைப் பெறவேண்டும் என்று வைஷ்ணவ சாஸ்திரங்கள் போதிக்கும். ஆதலின் பெருவேதனையுற்ற ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது பிரார்த் தனையை அவளுக்கே செலுத்தினர். சிறிது காலத்திற்குள் அவர் ஆனந்த மயமான காட்சியை எய்தினர். ராதையின் உருவத்தையும், அவ்வுருவம் தம் உடலிற்குள் மறைந்ததையும் அவர் கண்டார்.

அவர் பிற்காலம் கூறியதாவது: "ராதையின் தெய்விக அழகையும் இனிமையினையும் வருணிப்பது இயலாத காரியம். ஸ்ரீ கிருஷ்ணனிடம் கொண்ட தீவிரப்பிரேமையால் அவள் தன்னை முழுதும் மறந்திருந்தாள் என்பதை அவளது தோற்றமே எடுத்துக் காட்டிற்று. அவளது நிறம் சொற்ப மஞ்சளாயிருந்தது."

ராதையோடு ஒன்றுபின் பேரானந்தப் பிரேமை யென்னும் 'மஹா பாவம்' ஆகிய உயர்வற உயர்ந்த நிலை ராதையிடம் வெளிப்பட்டதுபோலவே அவரிடம் பூரணமாகப் பொலிவதாயிற்று. பின்னளில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்னதாவது: "இறைவன் மீதுள்ள செழுங்காதலால் பத்தொன்பது வகைப் பட்ட வெவ்வேறான மெய்ப்பாடுகள் ஒரு மனிதனிடம் மலர்தலே, பக்தி சாஸ்திரங்களில் 'மஹாபாவம்' (மஹாபாவனை) எனப்படும். ஒரு சாதாரண மனிதனுக்கு இவற்றில் ஒன்றை (ஒரு பாவனையால் எழும் உள்ள உணர்ச்சியை) வெளியே தோன்றும்படி செய்தற்கும் ஓர் ஆயுட்காலம் முழுமையும் வேண்டி யிருக்கும். ஆனல் இவ்வுடலில் (தம்மிடத்தில் என்ற பொருளில்) அப் பத் தொன்பது வகைப்பட்ட எல்லாப் பாவனைகட்கும் உரிய உணர்ச்சிகளும் வெளியே முழுமையான நிலையில் தோன்றலாயின." (மெய்ப்பாடு—புறத்தே புலப்படும்படி வெளிப்படும் தீவிர மன உணர்ச்சி.)

ராதையின் அன்பே ஸ்ரீ கிருஷ்ண ஜோதி தரிசனத்திற்கு முன்னறிகுறி யாகின்றது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் விரைவில் அத் தரிசனத்தைப் பெற்றார். கிருஷ்ணனது மனமோஹன வடிவம் அவர்க்கு முன் தோன்றி, அவரது உடலிலே கலந்து ஒன்றியிற்று. அவர் கிருஷ்ணனுனர்; அவர் முழுதும் தம்மை யும் உலகத்தையும் மறந்தார்; அவர் கிருஷ்ணரைத் தம்மிடத்தும் உலகத்திலும் கண்டார். இவ்வாறு அவர் சகுணப் பிரம்ம வழிபாட்டின் முடிவை அடைந்தார். அழிவற்ற ஆனந்த ஊற்றினின்றும் அவர் அள்ளிக் குடித்தார். அவரது நெஞ் சத்தின் கூரிய துயரம் மீளா தொழிந்தது. மரணத்திற்கு அப்பாலான அமர நன்னிலையை அவர் உணர்ந்தார்.

ஒருநாள், ராதாகாந்தரது கோவிலின் தாழ்வாரத்தில் பாகவத பாராயணத்தை அவர் கவனித்துக் கொண்டிருந்தார்; அவர் தெய்விக நன்னிலையை எய்தினர், கிருஷ்ணனது ஆன்ம மோகன வடிவத்தைக் கண்டார். கிருஷ்ணனது பாத கமலத்தினின்றும் ஓர் ஒளிக்கதிர்ப் பிழம்பு (கிரணங்களின் தொகுதி) ஒரு பருமனான கயிறு வடிவத்தில் கிளம்புவதைக் கண்டார்; அது முதலில் பாகவதத்தையும், பின் அவரது மார்பையும் தொட்டு, பகவான் பாகவதம் பக்தன் எனும் மூன்றையும் ஒன்றாய் இணைத்தது. "இக் காட்சிக்குப்பின், பகவானும் பக்தனும் பாகவதமும் உண்மையில் ஒன்றே யென்ற அனுபூதியைப் பெற லானேன்" என்று அவர் சொல்லுவதுண்டு.

வேதாந்தம்

ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கு ஊக்கத்தோடு போதித்த குருவும், அவரது ஞான முன்னேற்றத்தை ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டிருந்தவரும் பிராம்மணியாரே. தமது இணையற்ற சீடரின் பேறுகளைக் கண்டு அவர் கருவம் அடைந்தார். ஆனால் மானவரோ இளைப்பாறியிருக்க அனுமதி பெறவில்லை; அவரது விதி அவரை முன் வருமாறு அழைத்தது. ஞானக் காட்சிகளும், அனுபூதிகளும், பேரின்பக் கனவுகளும் நிறைந்த துவைதராஜ்யம் முழுமையையும் தாண்டிச் செல்லும் வரை அவரது தேவியம்மை அவர்க்கு ஓய்வளிக்க விரும்பவில்லை. ஆனால் அப்புதிய ஏற்றத்திற் செல்ல, பழைய, மேன்மையார்ந்த வழித்துணை போதாததாயிற்று. மூன்று ஆண்டுகளாக அவர் எவரைச் சார்ந்து வளர்ந்தனரோ அப்பிராம்மணியார் கண்காண, அவரது பிள்ளை அவ்வம்மையாரிடமிருந்தும் விடுபட்டு, ஆண்மையும், கண்டிப்பான தோற்றமும், முரட்டு உடலும், வீரியம் மிகுந்த குரலும் வாய்ந்த ஒரு குரவரின் ஏவலுக்கு அடங்கி நடக்கலானார். இப்புதிய குரு ஊரூராய் அலைந்த துறவியும், திண்ணிய உடற்கட்டு வாய்ந்தவரும் ஆன தோத்தாப்புரியாரே; ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரை அன்போடு 'நங்தா'—நிர்வாணி—என்று அழைக்கலாயினர்; காரணம், அவர் எல்லா உலகப் பற்றுகளும், ஒரு கௌபீனம் உள்பட எல்லா உலகப் பொருள்களும், அற்றவராயிருந்தார்.

தோத்தாப்புரி ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்குப் புதிதாயிருந்த அத்வைத வேதாந்தம் எனும் ஒரு தரிசனத்தைப் பின்பற்றியவர்; அதன் முடிபுகளைத் தோத்தாப்புரியார் தமது வாழ்க்கையிலே அனுபவித்திருந்தவர். பழமையான இந்து சமயம் அறுதியான மெய்ப்பொருளுக்குப் பிரம்மம் என்று பெயரிடுகிறது; பாரமார்த்திக ஸ்ச்சிதானந்தம் என்றும் அதைக் கூறுகிறது. பிரம்மம் ஒன்றே உள்ள பொருளாகும். அதனிடத்துக் காலமோ இடமோ காரண—காரிய நியதியோ, பல வகைப்பட்ட வேற்றுமையோ இல்லை. ஆனால் மாயை யெனும் அதன் அறிய வொண்ணச் சக்தியால், காலமும் இடமும் காரண—காரிய நியதியும் படைக்கப்

படுகின்றன; ஒரு பொருள் (ஏகமான அது) பலவாகப் பிரிந்துள்ளதாகத் தோற்றமளிக்கிறது. அத்துவிதமான பரம்பொருள் உருவங்களைப் பெற்றும் காலத்தின் நிலைமைகட்குக் கட்டுப்பட்டும் உள்ள பலவகைப்பட்ட ஜீவர்களாக (தனி உயிர்களாக)த் தோன்றுகிறது. அழிவற்ற பொருள் பிறப்பிறப்புகட்கு இரையாகின்றது. மாறுதது மாற்றத்தை அடைகிறது. பாவமற்ற தூய ஆன்மா தனது சொந்த மாயையின் வசியத்திற்கு உள்ளாகிச் சுவர்க்க இன்பங்களையும் நரகத் துன்பங்களையும் அனுபவிக்கின்றது. ஆனால் ஞாதா—ஜ்ஞேயம் (அறிபவன்-அறியப்படும் பொருள்) எனும் தொடர்பாகிய துவைதத்தை அடிப்படையாகக் கொண்ட இவ் அனுபவங்கள் பொய்யானவையே. ஈசனைக் காணும் காட்சியும், முடிவான நிலையினின்று பேசுவோமாயின், மற்ற எந்தப் பொருளின் அனுபவத்தையும் போன்று மித்தையேயாம், ஆதலால் மனிதன் முத்தியடைவது, மாயையின் திரையைத் துளைத்து, தான் பிரம்மத்தோடு முற்றிலும் ஒன்றுயிருப்பதை மீண்டும் கண்டுபிடிப்பதனால் தான். தன்னை எங்கும் உள்ள அகண்ட சைதன்யத்தோடு ஒன்றுக உணர்ந்ததும், அவன் சொல்ல வொண்ணைச் சாந்தி அனுபூதியைப் பெறுகிறான். அப்போதுதான் பிறப்பிறப்பென்னும் பொய்ம்மையை அவன் தாண்டிச் செல்கிறான்; அப்போதுதான் அவன் அமர நிலையை (மரணமில்லாத நிலையை) அடைகிறான். இதுவே எல்லாச் சமயங்களின் அறுதியான நிலையும் ஆகும்; அதாவது, தனது அவித்தையால் இப்போது வசியப்பட்டுள்ள ஆன்மா அவ் வசியத்தினின்றும் விடுபடுதலேயாம்.

வேதாந்த சாதன முறை 'நேதி' என்னும் மறுப்பு முறையாகும். இதின் படி, கடுமையான (திண்மையுள்ள) மன உறுதியால், இல்லாதன யாவும் இல்லையென மறுக்கப்பட்டுத் துறக்கவும் படுகின்றன. இதுவே பிரம்மானுபூதியைப் பெறுதற்குரிய நேரான முறையாகிய ஞான மார்க்கம் எனப்படும். வியாவகாரிக நிலையில் தோன்றும் அனைத்தையும்—நித்திய-அநித்திய வேறுபாட்டினை உணரும் 'நான்' எனும் பொருள் உட்பட—இல்லையென மறுத்தபின், முத்தியில் இச்சையுடையோன் இரண்டற்ற ஏகப் பொருளில் மருவியொன்றுகிறான்; ஞாதா ஜ்ஞேயம் இரண்டையும் ஒருங்கே கரைத்துவிடும் நிர்விகற்ப சமாதியில் ஆனந்தமயமாகிறான். ஆன்மா மன உலகைக் கடந்துவிடுகிறது. துவைத எல்லையைத் தாண்டிச் செல்கிறது, மாயையும் அதன் மாற்றங்களும் விகாரங்களும் பின்னே விடப்படுகின்றன, உண்மையான மனித சொரூபமோ படைத்தல் காத்தல் அழித்தல் எனும் மயக்கங்கட்கு அப்பால் வெகு தொலையில் உள்ளது. உரைக்கவொண்ணாத ஆனந்தவெள்ளம் ஒன்று, வியாவகாரிக நிலைக்குரிய சுகம்-துக்கம், நன்மை-தீமை எனும் எல்லாக் கருத்துக்களையும் அரித்துச் செல்கின்றது. அழிவிலாத பிரம்மத்தின், இயல் உண்மை-அறிவு-இன்பமான (பாரமார்த்திக ஸச்சிதானந்தமான) பரம்பொருளின் மாட்சி நெஞ்சிலே ஜொலிக்கின்றது. ஞாதா ஞானம் ஜ்ஞேயம் (அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள்) எனும் மூன்றும் ஒன்றுன உலவாத (அழிவற்ற) சைதன்ய

(உணர்வு)க் கடலிற் கரைந்துவிடுகின்றன. அன்பு, அன்பு செய்வோன், அன்பிற்குரியோன் எனும் மூன்றும் அகண்ட பரம ஆனந்தக் கடலிடை ஒன்றுகி விடுகின்றன. பிறப்பும் வளர்ச்சியும் இறப்பும் அளவு படாத இருப்பில் (ஸத்துப் பொருளில்) மறைகின்றன. ஐயங்களும் அவநம்பிக்கைகளும் யாவும் என்றென்றும் அடங்கிவிடுகின்றன; மனதின் அசைவுகள் நின்றுவிடுகின்றன; பழைய கருமப் பயன்களின் இயக்க வேகம் ஓய்ந்துவிடுகின்றது. கணக்கற்ற காலமாக ஆன்மா தனது உறைவிடமாகக் கொண்டிருந்த உடலின் ஆதாரத்தை உடைத்துக்கொண்டும், உடலையும் மனத்தையும் அமைதியாக்கிக்கொண்டும், இனிய பிரம்மானந்தம் அந்த சமாதி நிலையில் ஊற்றெடுத்துப் பெருகுகிறது, இடம் சூன்யத்தில் மறைகின்றது, காலம் நித்தியத் தன்மையால் விழுங்கப் படுகின்றது; நிமித்தம் பழங்காலக் கனவாகிறது. ஸத்தே உள்ளது. ஆ! ஆன்மா பிரம்மத்தோடு ஒன்றுபடும்போது உணர்வதை யாரே வருணிக்க இயலும்!

ஒரு மனிதன் இந்தத் தலை சுழலும் உயரத்தினின்றும் கீழே இறங்கும் போதும், அவன், 'யான், எனது' என்னும் நினைவுகள் அற்றவனாகிறான். அவன் உடலை வெறும் நிழலாகவும், ஆன்மாவை மூடும் ஒரு வெளியுறைபோலவும் கருதுகிறான். அவன் சென்றது கருதான், நாளைச் சேர்வது நினையான்; நிகழ் காலத்தையும் உபேக்ஷையோடு நோக்குவான் (புறக்கணிப்பான்). உலகி லுள்ள அனைத்தையும் சமநோக்கோடும் காண்பான்; நிகழ்ச்சிகளிலுள்ள எல்லையற்ற வேற்றுமையாலும் அவன் மனவிகாரம் அடையான்; சுக துக்கங் கட்கு எதிராக ஒன்றும் செய்யான். அவனை—அதாவது, அவனது உடலை—நல்லார் வணங்கினும், தீயார் துன்புறுத்தினும், அவன் விகாரமடையாதிருப் பான்; காரணம் யாதெனில், அனைத்துப் பொருள்கள் வழியாகவும், விளங்கு வது ஏகமான பிரம்மமே என்பதை உணர்கிறான். அத்தகைய அனுபூதியின் தாக்கலால் உடலும் மனமும் பாழ்படும். சோதியின் கடுமையால் உணர்வு தேய்ந்ததுபோன்றதாகும். நிர்விகற்ப சமாதி அனுபூதியைப் பெற்றபின், உடல் உலர்ந்த இலையைப்போல் உதிர்ந்துவிடும் என்று வேதாந்த நூல்கள் கூறும். மன்னுயிர்கட்குப் பணிசெய்யும் குறிப்போடு பிறப்பார் ஒரு சிலர்க்கு மட்டுமே இச் சிகரத்தினின்றும் சாதாரண வாழ்க்கையெனும் பள்ளத்திற்கு மீள முடியும். அம்மாதிரியான மஹான்கள் உலகத்தில் வாழ்வதும் திரிவதும் உலக மக்களின் நன்மைக்காகவே ஆம். அவர்கள் பரம ஞான சக்தியொடு தோன்றுவார். ஒரு தெய்விக மகிமை அவர்களிடம் விளங்கிக்கொண்டிருக்கும்.

தோத்தாப்புரி

1864-ம் ஆண்டு முடிவிலே தோத்தாப்புரி என்பார் தக்ஷிணேசுவரக் கோயிற் பூஞ்சோலைக்கு வந்து சேர்ந்தார். அவர் பஞ்சாப் (பாஞ்சால)தேசத்திற்

பிறந்தவர் போலும். இந்தியாவில் அம்மாகாணத்திலுள்ள ஒரு மடத்திற்கு அவர் தலைவராயிருந்தார்; எழுநூறு துறவிகட்கு நாயகராகும் உரிமை கொண்டாடினர். இளமை தொடங்கியே அத்வைத வேதாந்த சாதனங்களிற் பயிற்சி பெற்றிருந்த அவர் உலகினை மித்தையாகவே கருதினர். துவைத வழிபாட்டுக்குரிய தேவர்களும் தேவியரும் மயக்கத்திற்கு உள்ளான மனதின் வெறுங் கற்பனைகளாகவே அவர்க்குத் தோன்றின. பிரார்த்தனைகளும், உபசாரங்களும் கிரியைகளும் சடங்குகளும் உண்மையான சமய வாழ்க்கையோடும் யாதொரு சம்பந்தமும் இல்லாதனவாம்; இவற்றை அவர் சிறிதும் பொருட்படுத்தாதிருந்தார். விவேகத்தையும் அசையாத மனத்திண்மையையும் பயன்படுத்தி அவர் வியாவகாரிக உலகிலுள்ள ஐம்புலப் பொருள்களிடம் பற்றுக்கொள்ளாதபடி தம்மை விடுவித்துக்கொண்டார். நாற்பது ஆண்டுகளாகப் புண்ணிய நருமதை நதியின் கரையிலே அவர் கடுமையான சாதனம் பழகி வந்தார்; முடிவில் பிரம்மத்தோடு ஒன்றுயிருக்கும் தமது இயல்பை உணர்ந்தனர். அது முதல் அவர் கட்டுகளினின்றும் நீங்கிய ஒருவராகவும், கூட்டினின்றும் விடுபட்ட கோளரி போலவும், உலகிலே திரியலானர். கோவணந் தரித்தவராய் வானமென்னும் மேற் கூரையின் கீழ், மழையிலும் வெயிலிலும் ஒரே மாதிரியாக வாழ்பவராய், பிச்சை ஏற்றுப்பெறும் அற்ப உணவை உண்பாய் நாள்களைக் கழித்து வந்தார். அவர் கங்கையின் சங்கமத்தை (கடலோடு கூடும் இடத்தை)க் காணச் சென்றிருந்தார். அத்தூய நதியின் கரைவழியாகத் திரும்பி வரும்போது, மக்களால் அறிய வொண்ணாத தெய்வ ஆணையாற் செலுத்தப்படுபவராய், தக்ஷிணேசுவரத்திலே தங்கலானர்.

வேதாந்தம் பழகும் தகுதி வாய்ந்தவராக ஸ்ரீ ராமகிருஷ்ணர் இருப்பதைக் கண்டதும், தோத்தாப்புரி அதன் இரகசியங்களை அறியும்பொருட்டுத் தீக்ஷை பெறும் விருப்பம் அவரிடம் உண்டோ என்று வினவினர். தேவியின் அனுமதியைப்பெற்றபின் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அதற்கு இணங்கலானர். ஆனல் தோத்தாப்புரியோ வேதாந்த போதனையைப் பெறத் துறவியொருவனே தகுதியுடையவனுவான் என்பதை விரித்துரைத்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் உலகைத் துறக்க இசைந்தார்; ஆனல் தம்மோடு தக்ஷிணேசுவரத்தில் வாழ்ந்துவந்த முதிய அன்னையாரின் உள்ளத்தைப் புண்படுத்தாதிருப்பதற்காக, துறவு நிலையிற் புகுதற்குச் செய்யத்தக்க கிரியைகளை இரகசியமாகவே இயற்றவேண்டும் என்ற ஒரு நிபந்தனையை மட்டும் வேண்டினர்.

குறிப்பிட்ட நாளன்று அதிகாலை வேளையில் பஞ்சவடியில் ஓமத்தீ வளர்க்கப்பட்டது. தோத்தாப்புரியும் ஸ்ரீ ராமகிருஷ்னரும் அதன்முன்பு அமர்ந்தனர். நெருப்புச் சுவாலை அவர்களின் முகங்கள்மீது மெல்லப் படலாயிற்று. "ராமகிருஷ்ணர் ஒரு சிறிய மாநிற மனிதர்; சிறு தாடியையும் அழகிய கண்களையும் உடையார்; அவரது நீண்ட கருங்கண்கள் ஒளி நிறைந்தனவாய், கோணலாக வைக்கப்பட்டனவாய், சிறிது மூடியனவாய், ஒருக்காலும் முழுதும் திறந்தன

வாகாதனவாய் இருந்தன; ஆனல் அரைக்கண் மூடியிருப்பினும் உள்ளும் புறமும் வெகுதொலை காணக் கூடியனவாயின. அவரது வாய் திறந்திருப்ப, அவருடைய வெண் பற்கள் ஒருங்கே அன்பையும் சேட்டையையும் காட்டும் ஒரு வித, மனதை மயக்கவல்ல புன்முறுவல் அரும்பிய நிலையில் இருந்தன. நடுத்தர உயரமுடைய அவர் மிக மெலிந்ததும், அளவு மிகுந்த மென்மை வாய்ந்ததுமான உடலைப் பெற்றிருந்தார். அவரது இயல்பு நன்கு விறைப்பா யிருந்தது: ஏனெனில், உடலைப்பற்றியும் ஒழுக்கத்தைப் பற்றியும் எழும் இன்ப துன்பக் காற்றுகளை யெல்லாம் அளவு மிகுந்த நுண்ணுணர்வுத் திறனேடு அறியவல்லாராய் அவர் இருந்தார். அவரது கண்ணெனும் கண்ணடியின் முன்பு— உள்ளும் புறமும் திருப்பப்பட்டிருந்த இருபக்க ஆடியின் முன்பு–நிகழ்ந்தவற்றிற் கெல்லலாம் உயிருள்ள பிரதிபிம்பமாகவே அவர் உண்மையாக விளங்கினர்." (ரொமெயின் ரோலண்டு எழுதிய 'ராமகிருஷ்ண சரிதம்'—பக்கம் 64.) அவர்க்கு எதிரே மற்றொருவர் ஒரு பாறைபோன்று நிமிர்ந்து நின்றார். இவர் மிக நெட்டை யாயும், பலமுள்ளவராயும், சிதைக்க முடியாத திண்ணிய கருங்காலி மரம் போன்று இருந்தார். அவரது உடற்கட்டும் மனமும் இரும்பாலானவை போன்றன. அவர் மக்களை ஏவி நடத்தும் வலிமையுடைய தலைவராயிருந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் தம் முன் உள்ள எரியும் தீச்சுவாலையில் உரிய கிரியைகளை இயற்றினர்; இக் கிரியைகளால் சன்னியாச தீக்ஷை பெறுவோன் உறவினர் மீதும், நண்பர் உடல் மனம் இந்திரியங்கள் அகங்காரம் உலகம் இவற்றின்மீதும் உள்ள பற்றுக்களை அழிக்கிறான். குதித்தெழும் தீச்சுவாலை அவற்றையெல் லாம் விழுங்கி, தீக்ஷை பெறும் ராமகிருஷ்ணரைப் பந்தமற்றவராகவும் தூய ராகவும் ஆக்கிற்று. பூணூலும் குடுமியும் நெருப்பில் இடப்படவே, ஜாதி வேற்றுமை பால்வேற்றுமை சமூகம் என்பவற்றினின்றும் அவர் விடுதலை பெற் றார். கடைசியாக, தூயனவெல்லாம் சாக்ஷியாக இம்மை - மறுமைப் - போக - நுகர்ச்சியில் உள்ள தமது இச்சையை அத்தீயில் எரித்தார். எல்லா உயிர்களும் தமது சொந்த ஆன்மாவின் அம்சங்களே யாதலின் அவற்றிற்கெல்லாம் மங்களத் தையும் அபயத்தையும் அளிப்பதாக உறுதி கூறும் தூய மந்திரங்களை ஓதினர். கிரியைகள் முடிந்ததும், தமது புதிய வாழ்க்கைக்கு அடையாளங்களான கோவ ணத்தையும் காவியாடையையும் குருவினிடமிருந்து பெற்றனர்.

குருவும் சீடரும் அருகிருந்த தியான அறைக்குச் சென்றனர். தோத்தாப்புரி ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கு வேதாந்த மஹாவாக்கியங்களின் போதனையை வழங்கத் தொடங்கினர்.

அவர் கூறியதாவது: "பிரம்மமே ஒரே மெய்ப்பொருள், எப்போதும் தூயது, எப்போதும் ஒளிவிளக்கம் பெற்றது, எப்போதும் விடுதலை பெற்றது; தேச-கால-நிமித்த எல்லைகளைக் கடந்து நிற்பது. நடக்க இயலாதவற்றையும் நடக்கச் செய்யவல்ல இந்திரசாலவித்தைக்காரியான மாயையின் அறியவொண் ணுத சக்தியினல் வெளிப்பார்வைக்கு நாமங்களும் உருவங்களும் பெற்றுள்ளது

போல் இருப்பினும், பிரம்மம் உண்மையில் ஒன்றே, அகண்டமே. முமுக்ஷு சமாதியின்பத்தில் லயமடையும்போது, அவன் மாயையின் குழந்தைகளான காலதேசங்களையோ, நாம ரூபங்களையோ காண்பதில்லை. மாயையின் எல்லைக்குள் இருப்பதெல்லாம் உண்மையற்றன. அதை விட்டுவிடுக. நாமரூபமென்னும் சிறையை அழித்துவிட்டு, ஒரு சிங்கத்தின் வலிமையோடு அதனின்றும் வெளியே பாய்ந்து விடுக. ஆன்மாவைத் தேடி, ஆழ்ந்து மூழ்குக; அதனைச் சமாதியில் உணர்க. பெயரும் வடிவமுமான உலகம் வெறும் பாழில் மறைவதையும், அற்பமான அகங்காரம் பிரம்ம ஞானத்தில் கரைவதையும் நீ காண்பாய். அதீத ஸச்சிதானந்தமாகிய பிரம்மத்தோடு நீ ஒன்றுபிருப்பதை (அதுவே நீயாய் இருப்பதை) உணர்வாய்." மீண்டும் உபநிடதத்தினின்றும் மேற்கோளை எடுத்துக் காட்டிப் பின்னும் கூறுவார்:

ஒருவன் வேறொன்றைக் காண்பதும், கேட்பதும், அறிவதும் எதனாலோ, அவ்வறிவு எல்லைக்குட்பட்டது. வரையறைக்கு உட்பட்டது பயனற்றது; அது ஒருக்காலும் மெய்யான ஆனந்தத்தைத் தாராது. எந்த அறிவினால் ஒருவன் வேறொன்றையும் பார்ப்பதில்லையோ, கேட்பதில்லையோ, அறிவதில்லையோ, எந்த அறிவு துவைதத்திற்கு அப்பாலானதோ, அது அளவுபடாதது, பெருமை வாய்ந்தது; அந்த அறிவினால் ஒருவன் எல்லையிலா ஆனந்தத்தை அடைகிறான். அழிவற்ற (நித்தியமான) திருக்கு (காண்பான்) ஆக அனைவரது நெஞ்சிலும் பிரகாசிப்பது எதுவோ (எந்த மெய்ப்பொருளோ) அதனை மனமும் இந்திரியங்களும் எவ்வாறு பற்றக்கூடும்?"

சீடர் தமது மனதை வியாவகாரிக உலகிலுள்ள எல்லாப் பொருள்களினின்றும்—தேவர்கள், தேவியர்களிடமிருந்தும் கூட—இழுத்து, பிரம்மத்தினிடம் ஒரு முனைப்படுத்துமாறு தோத்தாப்புரி அவரை வேண்டினர். ஆனால் அம்முயற்சி ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கும் எளிதாயிருக்கவில்லை; ஜெகதம்பிகையான காளி தேவிக்கு அப்பால் மனதைச் செலுத்துவது இயலாததாவதை அவர் கண்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிற்காலம் அந்நிகழ்ச்சியைப் பற்றிக்கூறியதாவது: "தீக்ஷைக்குப் பிறகு நங்தா என்பார் அத்வைத வேதாந்தத்தின் முடிபுகளைப்பற்றி எனக்குப் போதிக்கத் தொடங்கி, எல்லாப் பொருள்களினின்றும் மனதை முற்றிலும் இழுத்து ஆத்மாவிடத்தில் ஆழ்ந்து செல்லுமாறு வேண்டினர். ஆனால் யான் எவ்வளவோ முயன்றும், பெயரும் வடிவமும் கொண்ட உலகத்தை முற்றிலும் தாண்டி, அளவுகளைக் கடந்த நிலைக்கு என் மனத்தைச் செலுத்த இயலாது போயிற்று. உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களினின்றும் மனதை இழுப்பதில் எனக்கு வருத்தமேயில்லை. ஆனால் சுத்த சைதன்ய ஸாரத்தின் வடிவமான, ஆனந்தமயமான தேவியின் உருவம், சோதிமயமானதும் அளவுக்குமிஞ்சி யான் பழகியிருந்ததுமான அவ்வுருவம், என்முன் உயிருள்ள உண்மைப் பொருளாகத் தோன்றிற்று. அவளுடைய மோகன முறுவல் அப்பாலுள்ள பரம்பொருளை நோக்கிச் செல்லவொட்டாது என்னைத் தடுப்பதாயிற்று. திரும்

பத் திரும்ப யான் முயன்றேன்; ஆனல் ஒவ்வொரு முறையும் என் வழியில் குறுக்கிட்டாள். செய்வதறியாது திகைத்து, யான் நங்தாவிடம் 'ஐயனே, இதைச் செய்யும் நம்பிக்கை அற்றவனனேன். அளவுக்கு உட்படாத நிலைக்கு என் மனதை உயர்த்தவும், ஆத்மாவை நேராகக் காணவும் எனக்கு இயலவில்லை" என்று சொன்னேன். அவர் சினங்கொண்டவராய், கடுத்த குரலில் 'என்ன? உன்னல் அதைச் செய்ய இயலவில்லையா? ஆனல் செய்தே தீரவேண்டும்" என்று என்னிடம் உரைத்தார். அவர் தமது கண்களை நாற்றிசையும் சுழற்றினர். ஒரு கண்ணாடித்துண்டைக் கண்டெடுத்து, அவர் எனது புருவமத்தியில் அதன் கூரிய நுனியை அமுக்கினர். 'மனதை இப்புள்ளியில் ஒரு முனைப்படுத்துக" என்று அவர் முழங்கினர். அதன் பின் உறுதியான தீர்மானத்தோடு யான் மறுபடியும் தியானம் செய்ய அமர்ந்தேன். தேவியம்மையின் அருள் வடிவம் என் முன் திகழ்ந்ததும், யான் எனது விவேகத்தை ஒரு வாளாகப் பயன்படுத்தி, அதன் துணையால் அவ்வடிவத்தை இரண்டாகப் பிளந்தேன். கடைசியான தடையும் நீங்கிற்று. என் ஆவி உடனே வியாவகாரிக உலகைத் தாண்டிப் பறந்தது. யான் சமாதியில் என்னையும் இழந்தேன்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சமாதியில் முழுதும் அழுந்தியவராய் மூன்று நாள் இருந்தார். "இது நிஜமாக உண்மையா?" என்று தோத்தாப்புரி ஆச்சரியத்தால் கூக்குரலிட்டார்; பின்னும் கூறுவார்: "நாற்பது ஆண்டுகள் கடுமையாகச் சாதனம் பழகியதன் பயனைப் பெற்றபேற்றை இவன் ஒரே நாளிற் பெற்றிருத்தல் முடியுமா? பரம்பொருளே! இது அற்புதமேயாகும்!" என்று. தோத்தாப்புரியின் துணையால் ஸ்ரீ ராமகிருஷ்ணரது மனம் முடிவாக வியாவகாரிக உலகிற்குக் கீழிறங்கிற்று.

வைதிக முறையினின்றும் ஒரு சிறிதும் பிறழாத முனிவரான தோத்தாப்புரி மூன்று நாள்கட்கு மேலாக ஓரிடத்தில் ஒருக்காலும் தங்கியதில்லை. ஆனல் அவர் தக்ஷிணேசுவரத்தில் பதினெரு மாதம் தங்கலானர். அவரும் ஏதோ ஒன்று தெரிந்துகொள்ளவேண்டியதாயிற்று.

காமக்குரோதங்கட்கு வசப்பட்ட சாதாரண மக்களின் போராட்டங்களைப் பற்றிய கருத்து சற்றும் தோத்தாப்புரிக்கு இருந்ததில்லை. குழந்தைக்குரிய கள்ளமற்ற உள்ளத்தை வாழ்வு முழுதும் பெற்றிருந்தமையால், ஒரு மனிதன் இந்திரியங்களால் ஏமாற்றமடைந்து வழிதவறிச் செல்வான் என்ற நினைவும் அவர்க்குச் சிரிப்பை உண்டுபண்ணும். உலகம் மாயையாதலின், அதனை இல்லை யென மறுத்தல் ஒன்றினுலேயே அது மறைந்துவிடும் என்பது அவரது உறுதியான முடிபு. பிறவியிலே அத்வைதியான அவர்க்குச் சகுணப் பிரம்மமான கடவுளிடம் நம்பிக்கையில்லை. அவர்க்குக் காளியின் கோரவடிவத்தில் நம்பிக்கையில்லை. அவளது மங்கள வடிவத்திலோ நம்பிக்கை சற்றுமில்லை, சங்கீதமும் பகவானது தூய நாமத்தை ஓதுதலும் அவர்க்குப் பேதமை யென்றே தோன்றின. சகுணதெய்வத்தை வழிபடுதலில் உணர்ச்சியைச் செலுத்துவதை அவர் ஏளனம் செய்வார்.

காளியும் மாயையும்

இதற்கு மாறாக, ஸ்ரீ ராமகிருஷ்ணரோ தமது குருவைப்போன்று உலகம் மித்தையென்பதை முழுதும் அறிந்தவராயினும், மாயையை இகழமாட்டார், வியாவகாரிக வாழ்க்கையில் அதன் சக்தியை ஒப்புக்கொள்வார்—இதுவே சாதாரண அத்வைதியின் கொள்கையாகும். தெய்வத் தன்மையின் (பிரம்மத்தின்) அறிதற்கரிய கம்பீரமான பிரகாசத்தை மாயையினிடம் அவர் காண்பார்; அதனால் மாயையின்மீது முழு பக்தியையும் வணக்கத்தையும் செலுத்துவார், அவர்க்கு மாயையே கடவுளாகும், ஏனெனில் எல்லாம் கடவுளல்லவோ? மாயையும் பிரம்மத்தின் ஒரு முகமே. பாரமார்த்திக நிலையின் உச்சியிலே அங்கே அவர் உணர்ந்ததையே இங்கே கீழேயும், தம்மைச் சுற்றி எங்கேயும், நாம ரூபங்கள் என்னும் அறிதற்கரிய ஆடைக்குக் கீழ் இருப்பதை அவர் காணலானார். இந்த ஆடை உள்ளிருப்பதைச் சற்றும் மறையாத உறையாதலின், அதன் வழியாக ஈசனது அந்தர்யாமி நிலையின் மகிமையைக் காணலானார். இந்த ஆடையை நெய்யும் மாயை தேவியம்மையாகிய காளியினும் வேறல்லள். அவளே ஆதிப் பராசக்தி; எரிக்கும் சக்தியை நெருப்பினின்றும் வேறுபடுத்தியறிய முடியாது. அவள் உலகத்தை வெளிப்படுத்தி, மறுபடியும் தன்னுள் ஒடுக்கிக்கொள்கிறாள். சிலந்தி அதன் வலையை நூற்பது போலவே, அவளும் அதை நூற்கிறாள். அவளே உலகாம்பிகை; வேதாந்தம் கூறும் பிரம்மமும், யோகம் கூறும் ஆத்மனும் அவளேயாகும். நித்தியமாகச் சட்டதிட்டங்களை ஏற்படுத்துபவள்; அவள் சட்டங்களை ஏற்படுத்துபவளும் ஆழிப்பவளும் ஆவாள். அனைத்தையும் அடக்கியாளும் அவளது ஆணையின்படியே கருமம் அதற்குரிய பயனை அளிப்பதாகும். மக்களை மித்தையால் சிக்கச் செய்பவள் அவளே; மறுபடியும் தனது கருணைக் கண்ணின் நோக்கினால் பந்தத்தினின்றும் அவர்களை விடுவிப்பவளும் அவளே. பிரபஞ்ச லீலையின் பரம தலைவியாகின்றவள் அவளே; உயிருள்ளனவும் உயிரற்றனவுமான எல்லாப் பொருள்களும் அவளது ஆணையால் ஆடுகின்றன. நிருவிகற்ப சமாதியில் பிரம்மத்தை உணர்ந்தவரும், வியாவகாரிக நிலையில் இருக்கும்வரை அவளது ஆட்சிக்கு உட்பட்டவர்களேயாகின்றனர்.

இவ்வாறாக ஸ்ரீ ராமகிருஷ்ணர் நிருவிகற்ப சமாதிக்குப் பின்பு மாயையை முற்றிலும் ஒரு புதிய வகையில் உணரலானார். காளியின் கட்டுறுத்தும் பகுதி அவரது காட்சியின் முன்னின்றும் மறைந்தது. அவள் அவரது அறிவைப் பின்னர் மறைக்கவில்லை. உலகம் தேவியினது மகிமையின் பிரகாசமாக ஆயிற்று. மாயை பிரம்மமாக ஆயிற்று. பாரமார்த்திகப் பொருளே அந்தர்யாமிப் பொருள் வழியாகப் பிளந்துகொண்டு வந்தது, ஸ்ரீ ராமகிருஷ்ணர் கண்ட உண்மையாவது: மாயை வியாவகாரிக உலகில் இருவகையாக வேலை செய்து வருகிறது; ஒன்று அவித்யா மாயை எனவும், மற்றொன்று வித்யா மாயை

எனவும் பெயர் பெறும். அவித்யா மாயையே படைப்பிலுள்ள இருள் நிறைந்த சக்திகளாகிய இந்திரிய போக ஆசைகள், தீய சினம் முதலியன, பேராசை, காமம், கொடுமை முதலானவற்றைக் குறிக்கிறது; தாழ்ந்த நிலங்களில் உலகத் தொகுதியை அது பேணுகிறது. மனிதனது பிறப்பிறப்புச் சுழலுக்கு அதுவே பொறுப்பாகும். அதை எதிர்த்து வீழ்த்தல் கட்டாயமே, ஆனால் வித்யா மாயையோ படைப்பிலுள்ள உயர்ந்த சக்தியாகும்; அதாவது, ஞான நலன்கள், ஒளியைத் தரும் குணங்கள், அன்பு, தூய்மை, நேசம், பக்தி என்பவை. வித்யா மாயை மனிதனை உயர்ந்த ஞான பூமிகட்கு உயர்த்தும். வித்யா மாயையின் துணையால் ஒரு பக்தன் தன்னை அவித்யா மாயையினின்றும் விடுவித்துக்கொள் கிறான்; பின்னர் அவன் மாயாதீதனாய், மாயையற்றவனாய் ஆகிறான். மாயையின் இரு பகுதிகளாவன: படைப்பிலுள்ள இரு சக்திகள், காளியின் இருவகை ஆற்றல்கள்; காளியோ அவையிரண்டிற்கும் அப்பாலாக நிற்கிறாள். ஜோதி மிக்க சூரியன் பலவித வண்ணங்களும் வடிவங்களும் கொண்ட மேகங்களை உண்டுபண்ணிக்கொண்டும், அவற்றின் வழியாகப் பிரகாசித்துக்கொண்டும், அவற்றிற்குப் பின் நின்றும், இவ்வாறு நீலமான (சரத்கால) கூதிர்க்கால வானத் திலே ஆச்சரியமான வடிவங்களைப் படைத்துக்கொண்டும் இருப்பது போலவே அவளும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் நிர்க்குணப் பிரம்மத்தில் மூழ்கி உணர்வை இழவாமல், பாரமார்த்திக நிலையின் வாயிற்படியில், பாரமார்த்திகத்திற்கும் வியாவகாரிகத் திற்கும் உள்ள இடை வரம்பிலே,—அதாவது 'பாவ(க) முக' நிலையில்—நிற்கு மாறு அவரைத் தேவி வேண்டினர். தந்திர சாஸ்திரங்கள் கூறும் ஆறுவது ஆதாரத்தில் அவர் தம்மை வைத்திருக்க வேண்டியதாயிற்று; ஏனெனில் அதனிட மிருந்து அவர் ஏழாவதின் மகிமையைக் காண்பது மன்றி, கீழ் ஆதாரங்களில் குண்டலியின் தெய்விக சக்திப் பிரகாசங்களையும் காணல் இயலும். அவர் இடைவரம்பின் வழியாக முன்னும் பின்னுமாக மெல்ல ஊசலாடிக்கொண்டிருந் தார். தேவியின் மீதுள்ள பக்தியால் விளையும் பாவ(க) சமாதியும், ஏகமாகிய பிரம்மக் கடலிடை அமைதியாக ஆழ்ந்திருக்கும் நிலையும் அவரிடம் மாறி மாறி வந்து கொண்டே யிருக்கும். இவ்விதமாக, அவர் ஸகுணத்திற்கும் நிர்க்குணத் திற்கும், மெய்ப்பொருளின் அந்தர்யாமி நிலைக்கும் பாரமார்த்திக நிலைக்கும் இடையே யுள்ள கடலின்மீது ஒரு பாலத்தை அமைத்தனர். இவ்வுலகத்திலுள்ள ஞானத்தின் வரலாற்றில் இதைப்போன்ற ஓர் அனுபூதி இணையற்ற தாகும்.

தோத்தாப்புரி கற்ற பாடம்

ஸ்ரீராமகிருஷ்ணரிடமிருந்து தோத்தாப்புரி வியாவகாரிக உலகினைச் சார்ந்த பேருண்மையான காளி வடிவத்தின் உட்கருத்தையும், அவரது உரைக்க வொண்ணுச் சக்தியாகிய மாயையின் உட்பொருளையும் கற்கவேண்டியதாயிற்று.

ஒரு நாள், குருவும் சீடரும் வேதாந்தத்தைப் பற்றி ஊக்கமாக வாதாடிக் கொண்டிருந்தபோது, கோயிற் பூஞ்சோலையைச் சார்ந்த ஒரு வேலைக்காரன் அங்கே வந்து, அம்முனிவர் பெருமானுகிய குரு உண்டுபண்ணி யிருந்த தூய நெருப்பிலிருந்து ஒரு கரித்தணலை எடுத்தான். தனது புகையிலையைக் கொளுத்துதற்காக அவன் அதை எடுக்க விரும்பினன். அது அபசாரச் செயல் என்பது வெளிப்படை யாதலின், அதனுற் கோபம் மூண்டு, தோத்தாப்புரி அவனை அடிக்கத் தொடங்கினர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் உடல் குலுங்கச் சிரித்தார். "இதெவ்வளவு வெட்கம்! பிரம்மம் சத்தியமென்றும் உலகம் மித்தை என்றும் நீர் எனக்கு விளக்கிக் கொண்டிருக்கிறீர்; இருந்தும், இப்போது நீர் சின வெறியில் ஒரு மனிதனை அடிக்கும் நிலை வரும்வரை உம்மை அவ்வளவு மறந்து விட்டீர். மாயையின் சக்தி உண்மையாகவே அறிய வொண்ணுததாகிறது!" என்று அவர் உரக்கக் கூறினர். தோத்தாப்புரி கலக்கமடைந்தார்.

ஏறக்குறைய இதே சமயம் தோத்தாப்புரி கடுமையான வயிற்றுளைச்சலுக்கு ஆளாகிப் படுத்துக்கிடந்தார். இத்துன்பமிக்க நோயினுல் அவர்க்குத் தியா னிக்க முடியாது போயிற்று. ஓர் இரவு வேதனை மிகக் கூரியதாயிற்று. அவர்க் குப் பிரம்மத்தினிடம் மனதை நிலைநிறுத்த இயலவில்லை. உடலே இடையூரு யிருந்தது. உடலின் தேவைகள் வற்புறுத்தப் படுவதைக் கண்டு அவர் சினங் கொண்டார். முத்திபெற்றிருந்த அவர் உடலைச் சற்றும் பொருட்படுத்தாதவ ரானர். ஆதலால் அவர் கங்கையில் அதனை மூழ்கச் செய்து வீழ்த்தத் தீர் மானங் கொண்டார். அவ்வாறே அவர் நதிக்குள் நடந்து சென்றார். ஆனல் அவர் மறுகரைவரை நடந்தே போனர். என்ன! கங்கையிற் போதுமான ஆழம் இல்லையா? திகைத்தவராய் மறுகரையில் நின்று நதிக்குக் குறுக்காக, வந்த வழியைத் திரும்ப நோக்கினர், மரங்களும், கோயில்களும், வீடுகளும், வானத்தை மறைத்து நின்றன. திடீரென, ஞான ஒளி எழுந்த நிலையில், எல்லாப் பக்கங்களிலும் தேவியின் இருப்பினைக் கண்டார். தேவி ஒவ்வொன்றிலும் உள்ளாள்; ஒவ்வொன்றுயும் உள்ளாள், அவள் நீரில் உள்ளாள்; தரைமீது உள்ளாள். அவளே உடல்; அவளே மனம். அவளே வருத்தம்; அவளே சுகம். அவளே அறிவு; அவளே அறியாமை. அவளே வாழ்வு; அவளே மரணம். காண்பதும் கேட்பதும் கருதுவதும் ஒவ்வொன்றும் அவளே. அவள் 'இல்ல'தை 'உள்ள'தாக்குவாள், 'உள்ள'தை 'இல்ல'தாக்குவாள். அவளது அருளின் துணையின்றி எந்தச் சீவனும் அவளுடைய உலகின் எல்லை யைத் தாண்டிச் செல்ல இயலாது. மனிதனுக்குச் சுயேச்சை இல்லை. அவனுக்கு இறக்கவும் சுதந்திரம் இல்லை. ஆயினும், இன்னும், உடலுக்கும் மனத்திற்கும் அப்பாலுள்ள பாரமார்த்திகப் பரப்பிரம்மமும் அவளே. தோத்தாப்புரி தம் ஆயுள் முழுவதும் வழிபட்டு வந்த பிரம்மமும் அவளே.

தோத்தாப்புரி தக்ஷிணேசுவரம் திரும்பி, அன்று இரவில் மிஞ்சியபொழுதை யெல்லாம் தேவியின்மீது தியானம் செய்தே கழித்தார். காலையில்அவர் ஸ்ரீ ராம

கிருஷ்ணரோடு காளி கோயிற்குச் சென்று, தேவியம்மையின் திருவுருவத்தின் முன்பு விழ்ந்து பணிந்தார். பதினெரு மாச காலத்தைத் தக்ஷிணேசுவரத்தில் கழிக்க நேர்ந்ததன் காரணத்தை அவர் இப்போது உணரலானர். சீடரிடம்விடை பெற்றுக்கொண்டு, ஞான விளக்கமுற்றவராய்த் தம்வழியே தொடர்ந்துசென்ரார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிற்காலம், தோத்தாப்புரி கற்ற பாடத்தின் உட் பொருளை இவ்வாறு விரித்துரைத்தார்: "பரம்பொருளைச் சுறுசுறுப்பற்றதாகக் கருதும்போது—அதாவது, படைத்தல் காத்தல் அழித்தல் எனும் முத்தொழில் களை இயற்ரும நிலையை நினைக்கும்போது. யான் அவரை நிர்க்குணக் கடவுளான பிரம்மமென்ரே, புருஷனென்ரே அழைக்கிறேன். அவரைச் சுறுசுறுப்புள்ள வராக—அம் முத்தொழில்களையும் இயற்றுபவராக—நினைக்கும்போது, அவரை ஸகுணக் கடவுளான சக்தியென்ரே மாயை யென்ரே பிரகிருதியென்ரே அழைக்கின்றேன். ஆனல் அவை இரண்டிற்குமுள்ள வேற்றுமையால் அவை வேறு பொருள்களாகா. ஸகுணமும் நிர்க்குணமும், பாலும் அதன் வெண்மை யும்போல, மணியும் அதன் சோதியும்போல, பாம்பும் அதன் வளைந்த கதியும்போல, ஒரே பொருளே. ஒன்றைவிட்டு மற்ரென்றைக் கருதுவதும் இயலாது. தேவியும் பிரம்மமும் ஒன்றே."

தோத்தாப்புரி சென்ற பிறகு ஸ்ரீராமகிருஷ்ணர் ஆறுமாத காலம் பிரம்மத் தோடு முழுதும் ஐக்கியமான நிலையிலே இருந்தார். அவரே கூறியதாவது: "தொடர்ந்து ஆறுமாத காலம், சாதாரண மக்கள் எந்நிலையை அடைந்தபின் மீளாரோ, அந்நிலையில் இருந்தேன்; பொதுவாக உடல் உலர்ந்த இலையைப்போல் மூன்று வாரங்கட்குப்பின் விழுந்துவிடுகிறது. பகலையும் இரவையும் யான் உணராதிருந்தேன். பிணத்தின் வாயிலும் மூக்கிலும் ஈக்கள் புகுவதுபோல் என்வாயிலும் மூக்கிலும் அவை புகுந்தன; ஆனல் நான் அதை உணரவில்லை. எனது தலை தூசியால் சடையாயிற்று."

அச்சமயம் தக்ஷிணேசுவரத்தில் தற்செயலாக வாழ்ந்த ஒரு துறவி அன் போடு அவரது உடலைப் பேணி வந்திராவிடில் அது உயிரோடிருந்திராது; உலகத்தாரின் நன்மையைக் கருதி ஸ்ரீ ராமகிருஷ்ணரது உடலைப் பாதுகாத்தல் அவசியம் என்பதை அத்துறவி எவ்வாரே உணர்ந்தனர். கூட்டைவிட்டு ஓட முயலும் ஆன்மாவை உடற்சிறையில் வைத்திருப்பதற்காகப் பல உபாயங்களை அவர் கையாள முயன்ரார். உடலைத் தொந்தரவுக்கும் உட்படுத்துவார்; அதன் பயனைச் சில கணங்கள் உணர்ச்சி மீளும்பொழுது, ஸ்ரீ ராமகிருஷ்ணரது தொண்டை வழியாகச் சில கவள உணவைத் திணிப்பார். சிறிது காலஞ் சென்றபின் ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்குப் பாரமார்த்திக நிலையின் வாயிற் படியில் அமர்ந்திருக்குமாறு தேவியின் கட்டளை பிறந்தது. அதன்பின் விரைவில் அவர் கடுமையான வயிற்றுக் கடுப்புக்கு ஆளானர். இரவும் பகலும் அதன் வேதனை அவரைத் துன்புறுத்திற்று; படிப்படியாக அவரது மனமும் தூல உலகிற்குக் கீழிறங்கலாயிற்று!

தூயாரோடும் அடியார்களோடும் இணங்குதல்

இதுமுதல் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடியார்களுடைய இணக்கத்தையும் சாதுக்களின் சங்கத்தையும் தேடத் தொடங்கினர். ஞான சாதனங்களாலும் காட்சிகளாலும் ஏற்பட்ட நலக்குறைவையெல்லாம் அனுபவித்திருந்தார். இப்போது அவர் உள்ள அமைதியை உணர்ந்தவரானர், பிறருக்கு அவர் சாதாரண மனிதனாகத் தோன்றினர். ஆனால் உலகப்பற்றுள்ள மக்களின் சேர்க்கையை அவர் பொறுதவராயினர், அவர்களுடன் பேசுதலையும் சகியாதவரானர். அதிஷ்ர்ட வசமாக, தக்ஷிணேசுவரத்திற் குடிகொண்டிருந்த தூய்மையினாலும், மதுர் என்பவரின் தாராளத்தாலும் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் துறவிகளும் சாதுக்களும் அங்கே வரலானர். எல்லாவகை சாதுக்களும்—அத்வைதிகளும் துவைதிகளும், வைணவர்களும் வேதாந்திகளும், சாக்தர்களும் ராமரை வணங்குவோரும்—நாளும் தொகை பெருகக் கூடினர்கள். முனிவர்களும், தூயகாட்சி காண்போரும் ஸ்ரீ ராமகிருஷ்ணரது போதனையை நாடி அவரிடம் வந்தனர். அவர் வைணவ சாதனம் பழகும்போது வைணவர்களும், தந்திர சாதனம் பழகும்போது தாந்திரிக்களும் வந்திருந்தனர். தோத்தாப்புரி சென்ற பிறகு வேதாந்திகள் வரத் தொடங்கினர். ஸ்ரீ ராமகிருஷ்ணரது அறையில்—அப்போது அவர் வயிற்றுக் கடுப்பாற் படுத்திருந்த சமயம்—வேதாந்திகள் சாஸ்திர வாதங்களில் இறங்குவர்; அவர் தமது சொந்த உடல் வேதனையையும் மறந்து, தமது சுய அனுபூதிகளை எடுத்துரைத்து, அவர்களுடைய ஐயங்களைப் போக்குவார். அவரைக் காண வருவாரிற் பலர் உண்மையான ஞான தாகமுடையவராய், கண்ணிற்கு மறைவான நிலையிலே இந்து மதத்திற்குத் தூண்கள் போன்றிருந்தனர். அவர்களுடைய ஞான வாழ்வு தக்ஷிணேசுவர முனிவரது உதவியால் விரைவில் பெரிதும் முதிர்ச்சியடைவதாயிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவர்களிடமிருந்து சாதுக்களின் வழிகளையும் ஒழுக்கத்தையும் பற்றிய கதைகளை அறிந்து, பிற்காலம் தமது அடியார்கட்கும் சீடர்கட்கும் அவற்றைக் கூறினர். அவரது வேண்டுகோளுக்கு இணங்கி, மதுர் ஊரூராய்த் திரியும் துறவிகட்கு வழங்குவதற்காக, உணவுப் பொருள்கள் துணிகள் முதலியவற்றை ஏராளமாக அவரிடம் கொடுத்து வைத்திருந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் புத்தகங்களை வாசித்தவரல்லர்; ஆயினும் அவர் சமயங்களைப் பற்றியும் சமய சித்தாந்தங்களைப் பற்றியும் பெற்றிருந்த அறிவைக் கருதும்போது, அவரை அறிவுக் களஞ்சியமென்றே கூறல்வேண்டும். இவ்வறிவை அவர் பெற்றது, எண்ணிறந்த சாதுக்களோடும் பண்டிதர்களோடும் இணங்கியதனால்தான். கேள்வியாற் பெற்றதை உள்ளத்தோடு ஒன்றிக்கச் செய்யும் திறமை அவரிடம் இணையற்றதா யிருந்தது. அவ்வறிவைத் தியானத்தால் அவர் தமது அனுபூதியின் ஒரு பகுதியாக்குவார். வெளிப்படையாக

வற்றுதது போன்ற அவரது அறிவிற்கு மூலம் இன்னதென அறிய விரும்பிய ஒரு சீடர் அவரை அதுபற்றி வினவியபோது, அவர் உரைத்த மறுமொழியாவது: "யான் கற்றவனல்லேன்: ஆனல் கற்றுரிடமிருந்து கேட்டுளேன். அவர்களது அறிவை ஒரு மாலையாகக் தொடுத்து, எனது கழுத்தில் அதை அணிந்துக்கொண் டேன்; அதனையும் தேவியின் திருவடியில் ஒரு காணிக்கையாகச் சமர்ப்பித்து விட்டேன்."

பூக்கள் மலரும்போது, தேனீக்கள் தாமாகத் தேனுக்காக அவற்றை நாடி வரும் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவதுண்டு, இச்சமயம் பலர் தமது ஞான தாகத்தைத் தீர்த்துக்கொள்ளுதற்காகத் தக்ஷிணேசுவரம் வரத்தொடங்கினர். அடியாரும் முக்தியை நாடுவாருமாய் இருந்த அவர் குருதேவரானர். ஸ்ரீ ராம கிருஷ்ணரை அவதாரமென முதன் முதலிற் பலரறியக் கூறியவருள் ஒருவரான கௌரி யெனும் பெரும் பண்டிதர் 1870-ம் ஆண்டில் குருதேவரைக் காண வந் தார்; அவரது ஆசியைப் பெற்று உலகினைத் துறந்தார். நாராயண சாஸ்திரி என்னும் மற்றொரு பெரும் பண்டிதர் இந்துமத தரிசனங்கள் ஆறையும் கற்றுத் தேர்ச்சி பெற்றிருந்தார்; விஜயப்பூர் மஹாராஜா அவர்க்கு உயர்ந்த சம்பள முள்ள ஓர் உத்தியோகத்தைத் தருவதாகவும் சொன்னர்; ஆனல் அவர் குரு தேவரைச் சந்தித்தபோது, தாம் நூல்களில் மட்டும் கண்டிருந்த இலக்ஷியங்களை வாழ்க்கையில் அனுபூதியாக்கியிருந்த ஒருவர் என அவரை உணர்ந்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் நாராயண சாஸ்திரிக்கு அவரது மனமார்ந்த வேண்டுகோட்கு இணங்கிச் சன்யாச தீக்ஷையும் அளித்தார். பர்டுவான் மஹாராஜாவின் சமஸ் தான பண்டிதரும், வேதாந்த நியாய தரிசனங்களிற் புலமையுடையாரெனப் புகழ் பெற்றிருந்தவரும் ஆன பண்டிதர் பத்மலோசனர் குருதேவரை அவதார புருடரென ஒப்புக்கொண்டார். வேதாந்த நிபுணராண கிருஷ்ணகிஷோர் குரு தேவருக்கு அடியாரானர். விசுவநாத உபாத்யாயர் எனும் ஒருவரும் அவரைச் சார்ந்து, அவர்க்குப் பிரியமான அடியார் ஆகும் தறுவாயில் இருந்தார்; ஸ்ரீ ராம கிருஷ்ணர் அவரை எப்போதும் 'காப்டன்' (சேனதிபதி) என்று அழைப்பார். அவர் நேபாள மன்னரின் கீழ் ஓர் உயர்ந்த உத்தியோகஸ்தராயிருந்தார். அவரது தகுதியை உணர்ந்ததற்குச் சான்றாக மன்னர் அவர்க்குக் 'கர்னல்' என்னும் பட்ட்த்தையும் அளித்திருந்தார். கீதை, பாகவதம், வேதாந்தம் மூன்றி லும் விற்பன்னரான அவர் தமது இஷ்ட தெய்வத்தைப் பெரும் பக்தியோடு நித்தமும் பூஜித்து வந்தார். அவர் இவ்வாறு சொல்வதுண்டு: "வேதங்களை யும் மற்ற சாஸ்திரங்களையும் யான் கற்றுளேன். பற்பல இடங்களில் பலப்பல அடியார்களையும் துறவிகளையும் கண்டுளேன். ஆனல் ஸ்ரீ ராமகிருஷ்ணரது முன்னிலையில் தான் என் ஞான அவா நிறைவேறப்பெற்றேன். சாஸ்திரங்களி லுள்ள உண்மைகளின் வடிவம் அவர் என எனக்குத் தோன்றுகிறது."

நிர்விகற்ப சமாதியில் பிரம்மஜ்ஞானம் அடைந்ததன் பயனக ஸ்ரீ ராம கிருஷ்ணர் பெற்ற உறுதியான முடிபுகளாவன: பற்பல சமயங்களும் கூறும்

தெய்வங்கள் வியாவகாரிக பூமியில் திகழும் பிரம்மத்தின் சக்திப் பிரகாசங்களே என்பதும், அறுதியான பரம்பொருள் மனிதனது நாவால் உரைக்க முடியாத தொன்றே என்பதுமே. சமயங்கள் யாவும் தத்தம் அடியார்களை வெவ்வேறு பாதைகள் வழியாக நடத்தி, ஒன்றேயான முடிவிடத்திற்குக் கொண்டு சேர்க்கின்றன என்பதை அவர் அறிந்தார். இச்சமயம் அன்னிய மதங்களிற் சிலவற்றை ஆராய்ந்து காண ஆவலுடையவரானார்; காரணம் யாதெனில், அவரது கருத்தில் அறிவு என்பதற்குப்பொருள் உண்மையான அனுபூதி பென்பதேயாம்.

இஸ்லாம்

1866-ம் ஆண்டின் முடிவிலே குருதேவர் இஸ்லாமிய சாதனங்களைப் பழகத் தொடங்கினர். ஒரு முசல்மான் குரு அவர்க்குக் கூறியபடியே அவர் தம்மைப் புதிய சாதனத்திற்கே ஒப்புவித்தார். அவர் முசல்மானைப்போல உடையணிந்து, அல்லாவின் பெயரையே ஓதினர். அவருடைய பிரார்த்தனைகள் இஸ்லாமிய பக்தி முறையின்படி அமைந்தன. அவர் இந்துமத தேவர்களையும் தேவிகளையும்—காளி தேவியையும் கூட—மறந்தனர்; இந்து கோயில்கட்குச் செல்வதையும் நிறுத்திவிட்டார். கோயிலின் எல்லைக்கு வெளியே தமது இருப்பிடத்தை அமைத்துக் கொண்டார். மூன்று நாள்கட்குப் பின் சோதி வீசிய ஒரு திருவுருவத்தை—ஒருக்கால், மகம்மது நபிபோலும்—அவர் தரிசித்தார். இவ்வடிவம் அமைதியாக அவரை அணுகி, முடிவில் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் புகுந்து மறைந்தது. இவ்வாறு அவர் முசல்மான் கடவுளை உணர்ந்தார்; அதிலிருந்து பின்னர் பிரம்மத்தோடு ஐக்கியமாகும் நிலையினை அடைந்தார். இஸ்லாம் எனும் பெரு நதியும், அவரைப் பரப்பிரம்மக் கடலிற்குள்ளேயே மீண்டும் புகுத்திற்று.

கிறிஸ்தவம்

எட்டு ஆண்டுகட்குப் பின் 1874 நவம்பரில் ஒரு சமயம், கிறிஸ்தவ சமயத்தின் உண்மையை அறியும் இச்சை தடுக்கமுடியாதபடி ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றிக்கொண்டது. கல்கத்தாவிலுள்ள ஒரு பிரபுவும், குருதேவரது அடியாருமான சம்புசரண மல்லிக் என்பவர் 'பைபிள்' என்னும் கிறிஸ்தவ வேதத்தின் பகுதிகளை வாசிக்க, அவர் அதை உற்றுக் கேட்கத் தொடங்கினர். இயேசுவின் வாழ்க்கையும் உபதேசங்களும் ஸ்ரீ ராமகிருஷ்ணரது உள்ளத்தைக் கவரலாயின. ஒருநாள் அவர் தக்ஷிணேசுவரத்திலுள்ள ஜதுமல்லிக் என்பவருடைய தோட்ட மாளிகையில் கூடத்தில் உட்கார்ந்திருந்தார்; அப்போது அவருடைய கண்கள் 'கன்னிமேரியாளும் குழந்தையும்' என்னும் சித்திரத்தின்மீது பதிந்தன. அதை ஆவலோடு உற்று நோக்கிக் கொண்டிருந்தபோதே, அவர்

நிரம்பிய தெய்விக உணர்ச்சிக்கு வசப்படலானார். படத்திலுள்ள உருவங்கள் உயிருற்றனவாயின ; அவற்றினின்றும் வீசப்பட்ட ஒளிக் கதிர்கள் அவரது உள்ளத்திற் புகுந்தன. இந்த அனுபவத்தின் பயன் முகம்மது நபியின் தரிசனத்தின் பயனைவிட மிக வலியதாயிற்று. மனங்குழம்பியவராகி, "அம்மே! நீ எனக்கு என்ன செய்கின்றனையோ?" என்று கத்தினார். கொள்கையும் சமயமுமாகிய தடைகளைத் தகர்த்து நீக்கிக் கொண்டவராய், அவர் ஒரு புதிய ஆனந்த உலகிற் புகுந்தார். கிறிஸ்துவின் ஆவேசத்திற்கு உள்ளானார். மூன்று நாள்கள் அவர் காளிகோயிலிற் காலை வைக்கவுமில்லை. நான்காவது நாள் மாலையில், அவர் பஞ்சவடியில் உலாவிக் கொண்டிருக்கும்போது, அழகிய பெரிய கண்களும், அமைதியார்ந்த முகமும், வெண்மையான தோலும் வாய்ந்த ஒருவர் தம்மை நோக்கி வருவதைக் கண்டார். இருவரும் ஒருவர்முன் ஒருவர் நின்று நோக்கியபோது, ஸ்ரீ ராமகிருஷ்ணரது உள்ளத்தின் அடியிலிருந்து ஒரு குரல் கணீர் என்று பின்வருமாறு எழுந்தது: "மக்களின்மீதுள்ள அன்பால் துயர்க்கடலில் உழந்தவரும், உலகத்தாரை உய்வித்தற்காகத் தம் நெஞ்சின் இரத்தத்தைச் சிந்தியவருமான கிறிஸ்து இவரே. இறைவனோடு எப்போதும் ஐக்கியமாயிருக்கும் மாபெரும் யோகி இவரே. அன்பின் உருவமாம் இயேசு இவரே." 'மனிதனின் குமார'ரான கிறிஸ்து தேவியின் குமாரரைத் தழுவி, அவரோடு ஒன்றுயினர். முன்பு காளி, ராமன், அனுமான், ராதை, கிருஷ்ணன், பிரம்மம், முகம்மது என்பவரோடு தாம் ஒன்றுனதை ஸ்ரீ ராமகிருஷ்ணர் உணர்ந்தது போன்றே, கிறிஸ்துவோடு ஒன்றுனதையும் உணர்ந்தார். குருதேவர் சமாதியில் அழுந்தி, ஸகுணப் பிரம்மத்தோடு கலந்திருந்தார். இவ்வாறு கிறிஸ்தவ சமயமும் கடவுளை உணர்வதற்கு ஒரு நெறியே என்னும் உண்மையை அவர் அனுபவத்தில் அறிந்தார். தமது வாழ்வில் இறுதிக் கணம் வரை அவர் கிறிஸ்துவைக் கடவுளின் அவதாரமென நம்பிவந்தார். ஆனால் கிறிஸ்து, அவரது கருத்துப்படி, ஒரே அவதார புருடர் என்பதன்று; பிறரும் உளர்—உதாரணமாக, புத்தரும் கிருஷ்ணரும்.

பற்பல சமயங்களைப் பாவித்த வகை

ஸ்ரீ ராமகிருஷ்ணர் புத்தரது தெய்வத்தன்மையை ஒப்புக்கொள்வார்: அவருடைய போதனைகட்கும் உபநிடதங்களின் போதனைகட்கும் உள்ள ஒப்புமையை அவர் எடுத்துக் காட்டுவர். சமண மதத்தை நிலை நாட்டிய தீர்த்தங்கரரிடத்தும், சீக்கிய மதத்தைச் சார்ந்த பத்துக் குருக்களிடத்தும் அவர் பெரு மதிப்பைக் காட்டுவார். ஆனால் அவர்களைக் கடவுளின் அவதாரங்களென அவர் கூறியதில்லை. சீக்கிய மதக் குருக்கள் பண்டைய இந்தியாவில் வாழ்ந்த ஜனக மன்னரின் மறுபிறப்புகள் என அவர் கூறக் கேட்டதுண்டு. அவர் தக்ஷிணேசுவரத்திலுள்ள தமது அறையில் தீர்த்தங்கர மஹாவீரரது சிலை

யொன்றையும், கிறிஸ்துவின் படமொன்றையும் வைத்திருந்தார்: அவ்விரு வர்க்கும் முன்பு காலையும் மாலையும் தூபங்காட்டுவதும் உண்டு.

இந்து மதம் ஒழிந்த ஏனைய மதங்களின் கொள்கைகளை முறையாகப் பிறரிடமிருந்து கல்லாமலே அவற்றின் இலக்ஷியங்களை ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவ் வண்ணம் உணரலானார். எந்தக் கொள்கையையும் பின்பற்றும் அவசியம் அவர்க்கில்லை. இறைவன்மீது பொங்கியெழும் அன்புணர்ச்சிக்கு அவர் வசப் படுதலினால் எல்லா இடையூறுகளும் தாமே நீங்கிவிடும். ஆதலின் அவர் உலகச் சமயங்கள் பலவற்றின் கொள்கைகளையும் இலக்ஷியங்களையும் பற்றிப் பிரமாணமாகப் பேசுவதில் வல்லவரானார். அவர் கூறியதாவது: "இந்து மதம், இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய எல்லாச் சமயங்களையும் யான் பழகி யுள்ளேன்: பற்பல இந்து மதப் பிரிவுகள் காட்டும் நெறிகளையும் பின்பற்றி யுள்ளேன். வெவ்வேறு பாதைகள் வழியே செல்லினும், அனைவரும் நடந்து செல்வது ஒரே கடவுளை நோக்கியே என்பதை யான் கண்டு கொண்டேன். யான் எங்கே திரும்பினும், இந்துக்கள், மகம்மதியர், பிராம்மோக்கள், வைஷ் ணவர் முதலாய மக்கள் மதத்தின் பெயரால் போர் புரிவதைக் காண்கிறேன். ஆனால் கிருஷ்ணன் எனும் பெயருடைய அவரே சிவன் எனப்படுகின்றனர் என்பதையும், ஆதி சக்தி, இயேசு, அல்லா என்னும் நாமங்களையும் தரித்துள்ள னர் என்பதையும், அவரே ஆயிரந்திருநாமம் பூண்ட ராமர் என்பதையும் ஒருக் காலும் சிந்திப்பதில்லை. ஒரு குளத்திற்குப் பல படித்துறைகள் உள. ஒன்றில் இந்துக்கள் குடங்களில் நீரைமொண்டு, அதனை 'ஜலம்' என்கின்றனர்; இன் னொன்றில் முசல்மான்கள் தோற்பைகளில் நீரை நிரப்பி, அதனைப் 'பாணி' என்று அழைப்பர். மூன்றாவது துறையில் கிறிஸ்தவர் அதற்கு 'வாட்டர்' எனும் பெயர் இடுவர். அது 'ஜலம்' அன்று, 'பாணி'யோ 'வாட்ட'ரோ என்று நாம் கருத முடியுமா? அது எவ்வளவு பொருத்தமற்றது! பெயர்கள் வேறு யினும், பொருள் ஒன்றே; ஒவ்வொருவரும் தேடுவது அதே பொருளையே; அங்கங்குள்ள வேறுபாடுகளை உண்டுபண்ணுவன: வாயுநிலையும், சுபாவமும், பெயருமே. ஒவ்வொருவரும் அவரவரது நெறியையே பின்பற்றட்டும். சிரத்தையோடும் தாகத்தோடும். இறைவனையறிய விரும்புவானையின், அவனுக் குச் சாந்தி உண்டாகுக! அவன் இறைவனைத் தரிசிப்பது உறுதி!"

இங்கே கவனிக்கவேண்டிய ஓர் இனிய உண்மை உள்ளது: ஸ்ரீ ராமகிருஷ் ணர் கிறிஸ்தவம் இஸ்லாம் எனும் இரண்டின் தூல சாதனங்களைப் பழகிய போது, அவர் தினமும் கோயிற்குச் செல்லுதல், பகவானுடைய நாமங்களை ஓதுதல், இன்னும் மற்ற பக்திக்குரிய செயல்கள்போன்ற இந்து சமய அனுஷ்டா னங்களைமுழுதும் விட்டுவிடலானார். அவர் இந்து தேவதேவியர் படங்களைத்தமது அறையினின்றும் நீக்கியிருந்தார். இதனால் அவர் நிலை நாட்டிய உண்மையாவது: பக்தி வாய்ந்த முசல்மானை கிறிஸ்தவனை தனது சமயத்துக்குரிய கடமையை இயற்றுவானையின் இறைவனது தரிசனத்தைப் பெறக்கூடும் என்பதே.

1867-ம் ஆண்டில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது தவத்தினால் உண்டாய கேடுகளினின்றும் விடுபட்டு, உடலை நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்காகக் கமார்ப்புகூர்க்குத் திரும்பினர். அமைதியார்ந்த நாட்டுப்புறமும் எளிய கபட மறியாத இளமைத் தோழர்களின் இணக்கமும், தூய காற்றும் அவர்க்கு நன்மையைப் பெரிதும் விளைத்தன. கிராமத்தார்க்குத் தமது கதாதரரை—விளையாட்டு விருப்பமும், சூதின்மையும், நகைச்சுவை மிக்க பேச்சும், அன்பும் உண்மையும் வாய்ந்திருந்த அந்த நண்பரைத்—திரும்பப் பெறுதலில் மகிழ்ச்சியே உண்டாயிற்று; ஆயினும் அவர் கல்கத்தாவில் வாழ்ந்த காலத்தில் அவரிடம் ஏற்பட்டிருந்த பெரும் மாறுதலையும் அவ்வூரார் கவனிக்காமற் போகவில்லை. இப்போது பதினான்கு வயதுள்ள அவரது மனைவி, சாரதாதேவி, விரைவில் கமார்ப்புகூர்க்கு வந்து சேர்ந்தாள். அவளிடத்து ஞான பக்குவம் அவளது வயதிற்கு மிஞ்சினதாயிருந்தது; அவள் உடனே தனது கணவரின் மனநிலையை அறியும் திறமை பெற்றிருந்தாள். அவரிடமிருந்து இறைவனைப் பற்றித் தெரிந்துகொள்ளவும், அவரது அருகிலிருந்து பணிவிடை செய்யவும் அவள் ஆவலுள்ளவளானாள். குருதேவர் அவளைத் தமது சிஷ்யையாகவும், தமது ஞானத் துணைவியாகவும் அகமகிழ்ந்து ஏற்றுக்கொண்டார். இந்தச் சுருங்கிய காலத்தில் அவள் பெற்ற அனுபவங்களைக் குறித்து ஒருநாள் அவள் கூறியதாவது: "பேரின்பம் நிறைந்த குடமொன்றை என் நெஞ்சில் வைத்திருந்ததுபோல எப்போதும் யான் உணரலானேன்" என்பது. அந்த ஆனந்தம் சொல்லிற்கு எட்டாதது.

யாத்திரை

1868 ஜனவரி 27-ல் மதுர்பாபு சுமார் நூற்றிருபத்தைந்து பேர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தோடு வட இந்தியாவிலுள்ள புண்ணிய க்ஷேத்திரங்கட்கு யாத்திரை புறப்பட்டார். பீஹாரிலுள்ள வைத்தியநாத் என்னும் தலத்தில் கூட்டத்தாருள் ஒருவரான குருதேவர், ஒரு கிராமத்திலுள்ள மக்கள் வறுமையாலும் பட்டினியாலும் வெறும் எலும்புக் கூடுகள்மாதிரி இருந்ததைக் கண்டார்; அக்காட்சியைப் பொருதவராய், தம்மை ஆதரிக்கும் பிரபுவாகிய மதுரை அம்மக்கட்கு உணவளிக்கவும், ஒவ்வொருவர்க்கும் ஒரு துணி கொடுக்கவும் வேண்டினர். ஆனல் மதுர் செலவு அதிகரிப்பதைக் குறித்துத் தயங்கினர். குருதேவர் மனக்கசப்போடு, தாம் காசி செல்ல விரும்பவில்லையென்றும், ஏழைகளோடு வாழ்ந்து அவர்களுடைய துயரங்களைத் தாமும் பங்கிட்டுக்கொள்ளப் போவதாகவும் கூறினர். அவர் மதுர் என்பவரை விட்டுவிட்டு, கிராமத்தாரோடு தாமும் உட்கார்ந்து கொண்டார். உடனே மதுர் அவருடைய வார்த்தைக்கு இணங்க வேண்டியதாயிற்று. இன்னொரு சமயம், இரண்டு ஆண்டுகட்குப் பின், ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஏழைகட்கும் ன்ஒறும் இல்லாதவர்க்கும் அதுபோலக்

கருணையைக் காட்டினார். மதுர் தீர்வை வசூல் சமயத்தில் தமது ஜமீனுக்குப் போனபோது, குருதேவரும் அவருடன் சென்றார். இரண்டு ஆண்டுகளாக, விளைச்சல் இன்றி நிலங்கள் தீய்ந்து போயிருந்தன; குடியானவர்கள் மிக்க வறுமையான நிலையில் இருந்தனர். குருதேவர் அவர்களுடைய தீர்வையைத் தள்ளுபடி செய்யவும், அவர்கட்கு உதவியை வழங்கவும், இன்னும் பட்டினி கிடக்கும் மக்கட்கு நல்லதொரு விருந்தளிக்கவும் மதுரை வேண்டினார். மதுர் முணுமுணுத்தபோது, குருதேவர் அவரிடம் "நீர் தேவியின் காரியஸ்தரே யாவீர். அவர்கள் தேவியின் குடியானவர்கள். நீர் தேவியின் பணத்தைச் செலவு செய்தாகவேண்டும். அவர்கள் வருந்திக் கொண்டிருக்கும்போது, நீர் எவ்வாறு மறுக்க முடியும்? நீர் அவர்கட்கு உதவி செய்வது கட்டாயம்" என்று உரைத்தார். மறுமுறையும் மதுர் இணங்கவேண்டியதாயிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஏழைகள்மீது காட்டிய இரக்கம், படைக்கப்பட்ட எல்லா உயிர்களிலும் பகவானைக் காண்பதிலிருந்து உதயமாயிற்று. அவரது இரக்க உணர்ச்சி (தயை) மக்களின் நலத்திற்கருத்துடையவர்க்கோ பரோபகாரிக்கோ உடைய உணர்ச்சியைப்போன்றதன்று. மனிதனுக்குச் செய்யும் பணி பகவானுக்குச் செய்யும் வழிபாடே யாகும் என்ற அனுபூதியே அதற்கு அடிப்படை.

கூட்டத்தார் கங்கை வழியாகத்தோணியில் தூய காசிக்குச்சென்றார். அங்கே யுகக்கணக்காக எண்ணிறந்த அன்பர்கள் செய்து வந்திருந்த வழி பாட்டில் உள்ள பக்தியும் பேரன்பும் குவிந்திருந்தன. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பார்வை இந்தச் சிவதலத்தின்மீது விழுந்தபோது, சாஸ்திரங்கள் கூறுகிறபடியே, அது பொன்னால் ஆக்கப்பட்டிருப்பதைக் கண்டார். அவரது மனதில் உணர்ச்சி பொங்கிப் புறம் பொசிந்தது. அவர் அத்தலத்தில் இருக்கும்வரை அவர் அந்நிலத்தில் ஒவ்வொரு தூளின்மீதும் மிக உயர்ந்த மதிப்பை வைத்திருந்தார். அத்தலத்திலுள்ள பெரும் மயானமாகிய மணிகர்ணிகா கட்டத்தில் அவர் ஒரு தெய்விகக் காட்சியைக் காணலானார். நீறு பூசிய மேனியும் சிவப்பும் மஞ்சளும் கலந்தவண்ணமுமுள்ள சடைமுடியும் தாங்கிய சிவபெருமான் சாந்தியரும்பிய முகத்தோடு ஒவ்வொரு சிதையினையும் அணுகி, பிணங்களின் காதுகளில் தாரக மந்திரத்தை ஓதுதலையும், பிறகு தேவி இறந்தவர்களின் பந்தங்களை நீக்குவதையும் பார்த்தார். இவ்வாறு, காசியில் இறப்பார் சிவபெருமானது அருளாலே முத்தியடைவர் எனச் சாஸ்திரம் கூறுவதின் உண்மையை அவர் உணரலானார். அவர் புகழ்பெற்ற துறவியாகிய திரைலிங்க சுவாமியை ஓர் உண்மையான பரமஹம்சர் என்றும், சிவபெருமானின் மெய்யான திருவுருவமே என்றும் கூறலானார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் கங்கையும் யமுனையும் ஒன்று கூடும் இடமாகிய அல்லகாபாத் சென்று, பின்பு கிருஷ்ணனையும், கோபிமாரையும் பற்றிய புராணக் கதைகளாலும், பாடல்களாலும், நாடகங்களாலும் புனித மெய்தியுள்ள பிருந்தாவனம் மதுரையாகிய இரு தலங்களையும் தரிசித்தார். அங்கே அவர்க்கு

அநேக காட்சிகள் உண்டாயின. அதாவது நெஞ்சிலே தெய்விகப் பிரேமை பொங்கி வழியலாயிற்று. அவர் கண்ணீர் சொரிந்துகொண்டே, "கிருஷ்ணனே, இங்குள்ள ஒவ்வொன்றும் பண்டைய நாளில் இருந்ததுபோன்றே உள்ளது; நீ மட்டும் இல்லையே" என்று மொழிந்தார். ராதையின் நெருங்கிய தோழியின் அவதாரமென வைஷ்ணவ அடியார்களாற் கொண்டாடப்படும் கங்காமாயி என்னும் அடியாராகிய நங்கையாரையும் கண்டார். அந் நங்கையார் அறுபது வயதினராயிருந்தார். அடிக்கடி சமாதியை அடைவார். ஸ்ரீ ராமகிருஷ்ணரை அவ் அம்மையார் ராதையின் அவதார மெனப் போற்றுவர். அம்மையாரை விட்டு வருமாறு ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தூண்டுவதும் சிரமமாயிற்று.

யாத்திரை முடித்துத் திரும்பிவரும் வழியில் மதுர் கையைத் தரிசிக்க விரும்பினர்; ஆனல் ஸ்ரீ ராமகிருஷ்ணர் போக மறுத்தனர். தாம் பிறக்குமுன் தமது தந்தையார் கையிற் பெற்ற காட்சியை அவர் நினைவூட்டிக்கொண்டார்; அங்கே சென்ருல் விஷ்ணுவின் கோயிலில் பகவானேடு நிலையாக லயமடைந்து விடவேண்டியதாகுமே என்று உணர்ந்தார். மதுர் குருதேவரது விருப்பத்தை மதித்து, கூட்டத்தாரோடு கல்கத்தாவிற்குத் திரும்பினர்.

பிருந்தாவனத்திலிருந்து குருதேவர் ஒரு கைப்பிடி தூளைக் கொணர்ந்தார். இதில் ஒரு பகுதியை அவர் பஞ்சவடியிற் சிதறினர்; மிச்சத்தைத் தாம் தியானம் பழகியிருந்த சிறு குடிசையில் புதைத்தார். "இன்று இவ்விடம் பிருந்தாவனம்போலத் தூயதாய்விட்டது" என்றும் சொன்னர்.

1870-ம் ஆண்டில் குருதேவர் ஸ்ரீ சைதன்யரின் பிறப்பிடமான நதியா என்ற ஊருக்கு யாத்திரை சென்ருர். அவர் ஏறிச்சென்ற தோணி நதியா விற்கு அருகேயுள்ள மணல் திட்டை அணுகியதும் ஸ்ரீ ராமகிருஷ்ணர், "இரு சகோதரர்க"ளாகிய ஸ்ரீ சைதன்யரும், அவரது தோழர் நித்யானந்தரும் 'உருக்கிய தங்கத்தின் ஒளி'யார்ந்த திருமேனியும், சென்னியைச் சூழும் ஒளிவட்டமும் வாய்ந்தவராய், தமக்குக் கூப்பிய கைகளோடு நல்வரவு கூறும்பொருட்டு விரைந்துவரும் காட்சியைப் பெற்ருர். அவர் "அதோ அவர்கள் வருகின்றனர்! அதோ அவர்கள் வருகின்றனர்" என்று கூவினர். அவர்கள் அவரது உடலிற் புகுந்தனர், அவர் சமாதியில் ஆழ்ந்தார்.

அவரது மனைவியாரோடு சம்பந்தம்

1872-ல் சாரதா தேவியார் தக்ஷிணேசுவரத்திலுள்ள தமது கணவரை முதன் முறை போய்ப் பார்த்தார். நான்கு ஆண்டுகட்கு முன்பு தேவியார் கமார்புகூரில் அவரைப் பார்த்திருந்தார், அது முதலே அவர் முன்னினும் மிக்க சாந்தமும் மென்மையும் உள்நாட்டமும் சிரத்தையும் தன்னயமின்மையும் அமையப்பெற்ருர். தமது கணவரின் மூளை பிறழ்ந்து விட்டதாகப் பல செய்திகள் அவருடைய செவிகளை எட்டியிருந்தன. ஜனங்கள் அவருக்கு ஏற்பட்ட துர்ப்

பாக்கியத்தைக் குறித்து அவர்மீது இரக்கமும் காட்டி வந்தனர். அதைப்பற்றி நினைக்க நினைக்க, அவர்க்குத் தம்மால் இயன்றவரை, மனைவி நிலையிற் செய்தற் குரிய அன்புப் பணியை இயற்றிக்கொண்டு அவரோடு இருத்தலே தமது கடமை யாவது என்பதைத் தேவியார் மேலும் மேலும் உணரலானார். தமது தந்தையார் உடன்வர, தேவியார் எண்பதுமைல் தொலையும் காலால் நடந்து தக்ஷிணேசு வரம் வந்து சேர்ந்தார். தேவியார்க்கு வழியிலே சுரம் கண்டது. அவர் கோயிற் பூஞ்சோலையைச் சார்ந்ததும், குருதேவர் துயரத்தோடு, "ஆ! நீ இவ்வளவு காலஞ் சென்று வந்தனையே. எனது மதுர் உன்னைக் கவனிக்க இப்போது இல்லையே" என்று கூறினார். மதுர் அதற்கு முந்திய வருஷமே மரித்திருந்தனர்.

குருதேவர் தமது இளம் மனைவிக்குப் போதிக்கும் கடமையை மேற் கொண்டார்; வீட்டுவேலையைக் கவனித்தல் முதலாக பிரம்மஞானம் வரை அனைத்தையும் இது உள்ளடக்கிக் கொண்டது. விளக்கைக் தூண்டும் வழி யையும், மக்களோடு பழகும்போது அவரவரது வேறுபட்ட இயல்புகட்குத் தக்கவாறு நடந்துகொள்ளும் வகையையும், தம் இல்லத்துக்கு வருவோர்முன்பு ஒழுகும்விதத்தையும் அவர் அம்வையார்க்குக் கற்பித்தார். பிரார்த்தனை, தியா னம், ஜெபம், ஆழ்ந்த தியானம், சமாதியெனும் ஞான வாழ்க்கையைப் பற்றிய இரகசியங்களையும் போதித்தார். சாரதா தேவியார் பெற்ற முதற்பாடமாவது: "சந்திரன் ஒவ்வொரு குழந்தைக்கும் அருமையாயிருப்பதுபோல் ஈசன் ஒவ் வொருவற்கும் அன்புரிமை பெற்றவன். ஒவ்வொருவனுக்கும் அவனிடம் பிரார்த்திக்கச் சம உரிமை உள்ளது, அவன் தனது அருளால் தன்னை அன்போடு அழைப்பார் அனைவர்க்கும் உருக்காட்டுவான். நீயும் அவனிடம் பிரார்த்திப்பாய் ஆயின் அவனைக் காண்பாய்" என்பதே.

குருதேவர்க்கு மணமாயிருந்ததை அறிந்த தோத்தாப்புரி ஒருமுறை அவ ரிடம் "அதனால் வந்த கேடு யாது? எவனொருவன் தன் மனைவியோடு வாழும்போதும் விவேகம் வைராக்கியம் இரண்டையும் நழுவவிடாது பற்று வானே, அவனே பிரம்ம ஞானத்தில் உறுதியாக நிலைத்தவனுவான். ஆணை யும் பெண்ணையும் ஒரேமாதிரி பிரம்மமாக நோக்கும் திறமை பெற்றவனே பரம ஞானத்தை அடைந்தவனுவான். ஆண்-பெண் வேற்றுமையோடு கூடிய ஒருவன் ஒரு நல்ல முமுக்ஷு (முத்தியில் இச்சையுடையவன்) ஆகலாம்; ஆயினும் அவன் குறியினின்றும் தூரத்தில் இருப்பவனே" என்று சொல்லி யிருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவருடைய மனைவியும் தக்ஷிணேசுவரத்திலே ஒன்றுக வாழ்ந்தார்; ஆனால் அவர்களுடைய மனங்கள் உலகியல் வாழ்க்கை நிகழும் பூமிக்கு மேலே உயரத்திலே எப்போதும் பறந்துகொண்டிருந்தது. சாரதா தேவியார் வந்து சேர்ந்த சில மாதங்கட்குப்பின் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு மங்களமான நாளில் காளிக்குச் சிறப்பாகப் பூஜை இயற்ற எற்பாடு செய்திருந்தார். தேவியின் சிலைக்குப் பதிலாக உயிரோடிருந்த சிலையாகிய சாரதா தேவியையே பீடத்தில் அமர்த்தினர். பூஜை செய்தவரும் பூஜை

செய்யப்பட்டவரும் சமாதியில் ஆழ்ந்தனர்; பாரமார்த்திக பூமியிலே அவர்களுடைய ஆன்மாக்கள் ஒன்றுகிவிட்டன. சில மணி நேரங்கட்குப் பின் ஸ்ரீராமகிருஷ்ணர் வியாவகாரிக நிலைக்கு மறுபடியும் கீழே இறங்கினர். தேவியின்மீது தோத்திரம் ஒன்றைப் பாடினர், தாமே தமது ஜெபமாலையையும், தாம் ஆயுள் முழுதும் செய்து வந்த சாதனத்தின் பயனையும் உயிருள்ள சிலையின் திருவடியிலே ஒப்புவித்தார். தந்திர சாஸ்திரத்தில் இதற்குச் 'சோடசி பூஜை' (பெண்ணை வழிபடுதல்) எனப்பெயர். உபநிஷத்தில் "பகவானே, நீரே பெண், நீரே ஆண்; நீரே சிறுவன், நீரே சிறுமி; கோலூன்றித் தள்ளாடி நடக்கும் கிழவனும் நீயே. இப் பிரபஞ்சம் முழுவதும் அதன் பல்வகை வடிவங்களிலும் வியாபித்தவர் நீரே" என்ற பேருண்மை கூறப்பட்டுள்ளது; ஸ்ரீ ராமகிருஷ்ணர் அதனை உணரலானார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர், தமது திருமணத்தால், மனிதனது ஞான மலர்ச்சிக்கு மணம் புரிந்துகொள்ளுதல் பெரிதும் பயன்படுகின்றது என்பதை ஒப்புக் கொள்பவராகின்றார். அவர் தமது துறவு நிலைக்குரிய விரதங்களை விடாது பின்பற்றியதனால், சுசனை உணர்வதற்குத் தன்னடக்கம், தூய்மை, பிரம்மசரியம் என்பவை மிகமிக அவசியம் என்பதைத் தமது வாழ்க்கையில் நிரூபித்தார். மனைவிக்கும் அவர்க்கும் இருந்த இணையற்ற ஞான உறவால், கணவரும் மனைவியும் ஞான வாழ்க்கைத் துணைவர்களாக ஒன்றுகூடி வாழ இயலும் என்பதை அவர் மெய்ப்பிக்கிறார். இவ்வாறு அவரது வாழ்க்கையில் இல்லறத்தான் துறவி எனும் இருவர்க்குரிய வாழ்க்கை முறைகளும் இணைந்து ஒன்றாயிருப்பதைக் காண்கிறோம்.

குருதேவரின் 'அகங்காரம்!'

பிரம்மம் ஒன்றே மெய்ப்பொருள், உலகம் மித்தை என்பதை ஸ்ரீ ராமகிருஷ்ணர் நிர்விகற்ப சமாதி நிலையில் உணர்ந்திருந்தார். அத்வைதப் பிரம்மம் உள்ள பூமியில் தமது மனதை ஆறுமாத காலம் வைத்திருந்தமையால் அவர் விஞ்ஞானியின் நிலையினை அடைந்திருந்தார். விஞ்ஞானி யென்பவன் ஒரு சிறப்பான மிக்க வளமான முறையில் மெய்ப்பொருளை உணர்ந்தவன்; அவன் தன்னிடத்தும், அதீதப் பரம்பொருளினிடத்திலும் அன்றி, உலகிலுள்ள ஒவ்வொன்றிலும் பிரம்மத்தைக் கண்பான். இந்த விஞ்ஞான நிலையில், சில சமயம் உடலுணர்ச்சியற்றிருக்கும்போது, அவர் தம்மைப் பிரம்மத்தோடு ஒன்றுகக் கருதுவர்; சில சமயம் துவித உலக உணர்ச்சியோடிருக்கும்போது, அவர் தம்மைப் பகவானது அடியாளுகவோ, வேலைக்காரனுகவோ, குழந்தையாகவோ கருதுவார். குருதேவர்க்கு மன்னுயிரின் நன்மைக்காகப் பாடுபடும் திறமையை அளிக்கும் பொருட்டு, தேவி அவரிடம் ஒரு துளி அகங்காரத்தை விட்டுவைத்திருந்தார்; அந்த அகங்காரத்தை அவர் அவ்வப்போதுள்ள மன நிலைக்குத்

தக்கபடி "ஞான அகங்காரம்" என்றோ, "பக்தி அகங்காரம்" என்றோ, "குழந்தை அகங்காரம்" என்றோ, "வேலைக்காரனது அகங்காரம்" என்றோ பெயரிட்டழைப்பார், எந்த நிலையிலும் குருதேவரது அகங்காரம், பிரம்மஞ் ஞானம் எனும் நெருப்பிற்கு இரையாகி இருந்தமையின், எரிந்ததொரு கயிறு போலத் தோற்றமாக மட்டும் இருந்தது. இந்த அகங்காரத்தை அவர் "பழுத்த அகங்காரம்" என்றும், அதற்கு மாறுன, அஞ்ஞானியின் அகங்காரத்தைப் "பழுக்காத அகங்காரம்" என்றோ, "பச்சை அகங்காரம்" என்றோ அடிக்கடி குறிப்பதுண்டு. அஞ்ஞானியின் அகங்காரம் தன்னை உடலோடும், உறவின ரோடும், உடைமையோடும், உலகத்தோடும் ஒன்றுபடுத்திக் கொள்கிறது; ஆனால், ஈசனைப்பற்றிய, ஞானவொளிபெற்ற "பழுத்த அகங்காரமோ" உடலை யும் உறவினரையும் உடைகளையும் உலகத்தையும் பொய்ம்மையுடையன வாக அறிந்து, இறைவனோடு மட்டும் அன்பினால் ஓர் உறவை நிலை நாட்டிக் கொள்கிறது. இந்தப் "பழுத்த அகங்காரம்" மூலம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் உல கத்தோடும் தமது மனைவியோடும் பழகி வந்தார். ஒரு நாள் ஸ்ரீ சாரதா தேவி யார் அவருடைய திருவடிகளைப் பிடித்துக்கொண்டிருக்கும்போது, குருதேவ ரைப் பார்த்து, "நீர் என்னை எப்படிக் கருதுகிறீர்?" என்று ஒரு கேள்வி கேட்டார். உடனே விரைவாக வந்த பதிலாவது: "கோயிலிலே வணங்கப் படும் தேவியே இப்போது சங்கீத மண்டபத்தில் வாழும் என்னுடலைப் பெற்ற தாய் ஆவாள்; இன்னும், இச்சமயம் எனது காலைப் பிடிப்பவளும் அத் தேவியே. உண்மையுரைப்பேனையின், ஆனந்தமயியான காளி தேவியின் வடிவமாகவே நான் எப்போதும் உன்னைக் கருதுகிறேன்" என்பதே.

சாரதாதேவியார் தமது கணவரோடிருந்த காலத்தில் அரியஞான அனுப வங்களைப் பெறலானார், அவரே கூறியதாவது: "வெவ்வேறு மனோபாவனை களில் இருந்த அவரை யான் கவனிக்கும்போதே எனது மனம் ஆச்சரியமான உயர்ந்த நிலையினை எய்தும்; அதை வருணிக்க என்னிடம் சொற்கள் இல்லை. தெய்விக பாவனை யொன்றின் வசப்பட்டிருக்கும்போது அவர் சில சமயம் அறி தற்கரிய விஷயங்களைப் பற்றிப் பேசுவார், சில சமயம் சிரிப்பார், சில சமயம் அழுவார், சில சமயம் சமாதி நிலையில் சற்றும் அசைவற்றவராய் இருப்பார். இது இரவு முழுதும் தொடர்ந்து நிகழும். அவரிடம் அசாதாரண தெய்வப் பிரசன்னம் இருக்கும்; அதன் அளவு மிகுதியைக் கண்டு இடையிடையே நான் பயத்தால் நடுங்குவேன், இரவு எப்படிக் கழியுமோ என்று ஆச்சரியப்படுவேன். இவ்வாறே மாதங்கள் செல்லலாயின. பிறகு, எனது தூக்கத்தின் நடுவே அவர் சமாதியில் ஆழ்ந்து விடுவாரோ என்ற அச்சத்தால் இரவு முழுவதும் நான் விழித்திருந்ததை அவர் ஒரு நாள் கண்டுபிடித்துவிட்டார்; எந்த சமயத்தும் அவர்க்குச் சமாதி உண்டாகலாம் என்றே யான் விழித்திருப்பேன், அதன் பின் அவர் என்னைச் சங்கீத மண்டபத்திலே தூங்குமாறு சொன்னார்."

குருதேவருடைய ஞான அனுபூதிகளைப் பற்றிய சுருக்க உரை

ஸ்ரீ ராமகிருஷ்ணரது ஞான சாதன காலத்தின் முடிவிற்கு யாம் வந்துவிட்டோம். அவர் பெற்ற சமாதி யனுபூதிகளின் பயனுக, அவர் தம்மைப் பற்றியும், பொதுவாக ஞான வாழ்வைப் பற்றியும் சில முடிவுகளை அடைந்திருந்தார். தம்மைப் பற்றிய அவருடைய முடிவுகளைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

முதலாவது, அவர் பகவானது அவதாரம்; சிறப்பான திவ்விய அதிகாரம் பெற்றுவந்த ஒரு புருடர்; அவருடைய ஞான அனுபூதிகள் மக்களின் நன்மைக் காகவே அமைந்தன. சாதாரணமான ஒரு மனிதனுக்கு இறைவனின் ஒன்றிரண்டு அம்சங்களை உணர்தற்கே ஆயுள் முழுதும் பாடுபடுவது அவசியமாயிருக்கும்; எனினும் அவர் ஒரு சில ஆண்டுகட்குள் இறைவனின் பலவகை அம்சங்களையும் அனுபூதியால் உணர்ந்திருந்தார்.

இரண்டாவது: தாம் எப்போதும் கட்டற்ற முத்தி நிலையில் இருந்ததையும், தாம் பழகிய பல வகையான ஞான சாதனங்களும் தமது சுயமுத்திக்கு உண்மையாகவே வேண்டாதன என்பதையும், ஆனால் பிறரது நன்மைக் கெனவே பழகப்பட்டன என்பதையும் அவர் அறிந்திருந்தார். தம்மைக் கட்டுற்றவராகக் கருதும் உயிர்கள் இருக்கும்வரை, அவர்களைக் கட்டில் நின்றும் விடுவித்தற்காகப் பகவான் பூவுலகிற்குக் கீழே வந்து தீரவேண்டும்; ஒரு மாஜிஸ்டிரேட் தமது ஜில்லாவில் சங்கடமுள்ள எப்பகுதிக்கும் கட்டாயம் போதல் வேண்டும் என்பது போல அது.

மூன்றாவது; அவர் தமது மரணகாலத்தை முன்னுணரலானார். இது சம்பந்தமான அவருடைய மொழிகள் அவ்வண்ணமே நிறைவேறின.

பொதுவாக, ஞானத்தைப் பற்றி அவர் கண்ட முடிவுகள் பின்வருவன;

முதலாவது, அவர் உறுதியாகக் கண்டறிந்த உண்மைகளாவன: எல்லாச் சமயங்களும் மெய்யானவையே; ஒவ்வொரு கொள்கைத் தொகுதியும் இறைவனை அடைதற்குரிய ஒரு நெறியைக் குறிப்பதாகும். அவரே எல்லா முக்கியமான நெறிகளையும் பின்பற்றியுள்ளார், அவை யனைத்தும் ஒரே முடிவிடத்திற்குக் கொண்டு சேர்ப்பன. சமய சமரசத்தைப் போதித்தற்கெனத் தோன்றியதாக வரலாற்று நூலில் (சரித்திரத்தில்) குறித்துவைக்கப்பட்டுள்ள முதலாவது மதக் குரவர் (மதாசாரியார்) ஆவார்.

இரண்டாவது, துவைதம் விசிஷ்டாத்வைதம் அத்வைதம் எனப்படும் முப்பெரும் சித்தாந்தங்களும் அறுதியானமெய்ப்பொருளினை நோக்கி மனிதன் முன்னேறும்போது காணப்படும் மூன்று படிகளையே குறிப்பனவாம். அவை ஒன்றோடொன்று முரண்பட்டனவல்ல, ஒன்றிற்கொன்று துணையாவன, பற்பல

14911

இயல்புகட்குப் பொருத்தமாவன. இந்திரியங்களிலே பலமாகப் பற்றுக்கொண்டுள்ள சாதாரண மனிதனுக்கு சங்கீதமும் மற்றைய குறிகளும் போன்ற உலகப் பொருள்களின் ஆதாரத்தை ஒளவிற்கு விதிக்கும் துவித சித்தாந்தம் பயனுடையதாகும். கடவுளின் தரிசனம் பெற்றுள்ள ஒரு மனிதன் உலகக் கடமைகளைப் பற்றிய கருத்தைத் தாண்டிச் செல்கிறான்; ஆனால் சாதாரண மனிதனை பற்றற்றிருக்கவும், பயன்களைக் கடவுளிடம் ஒப்புவிக்கவும் முயன்று கொண்டே தனது கடமைகளை இயற்றவேண்டும். நினைவு அனுபவங்களின் எல்லையை மனம் விசிஷ்டாத்வைதம்வரை தான் அறியவும் உரைக்கவும் கூடும்; அதற்கு அப்பாலன்று. ஞான அனுபூதியின் அறுதி நிலையான அத்வைதமோ சமாதியிலே உணரக்கூடிய ஒன்று தான்; ஏனெனில் அது மனவாக்குகட்கு அதீதமானது. மிக உயர்ந்த நிலையினின்று பேசுவோமாயின் (பாரமார்த்திகப் பரம்பொருளாகிய) நித்தியமும் (வியாவகாரிக உலகமாகிய) லீலையும் சமமாக உண்மையாம்—பகவானது நாமமும், அவரது இருப்பிடமும், அவரும் ஒரே சைதன்யத்தையே ஸாரமாகவுடையன. ஒவ்வொன்றும் சைதன்யமே, வேறுபாடு உருவத்தில் மட்டும்தான்.

மூன்றுவது, ஸ்ரீ ராமகிருஷ்ணர் மூலமாகத் தேவி, அவரது வாழ்க்கையில் விளங்கிய உலகப் பொதுவான கொள்கைகளை ஆதரிப்பவரது பரம்பரை ஒன்றைப் புதிதாக நிலை நாட்டவேண்டும் என்று விரும்பியதை அவர் உணர்ந்து நிறைவேற்றினர்.

நான்காவது, இப்புவியில் கடைசிப் பிறப்பை யுடையவரும், தமது வாழ்க்கையில் ஒரு முறையேனும் சிரத்தையோடு பகவானை அழைத்திருப்பவரும் தம்மிடம் வந்து சேர்வது கட்டாயம் என்பதை அவர் தம் ஞான நோக்கினால் அறிந்தார்.

இதே காலத்தில் ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு சிலரின் மரணங்களால் துயருறலானர். முதலாவது, அக்ஷய் என்னும் ஒரு மருமகனது மரணம். இந்த இளைஞனது மரணத்திற்குப்பின் ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியதாவது: "அக்ஷய் எனது கண் முன்னே இறந்தான். ஆனால் அதனால் என உள்ளம் ஒரு சிறிதும் மாறுபடவில்லை. யான் பக்கத்திலிருந்து, அவனது ஆன்மா உடலைவிட்டுச் சென்றதைக் கவனித்தேன், ஒரு வாளை அதன் உறையினின்றும் வெளியே இழுத்தலைப்போன்றது அது. யான் அக்காட்சியால் ஆனந்தம் அடைந்தேன். சிரித்தேன், பாடினேன், ஆடினேன். அவர்கள் உடலை அப்புறப்படுத்தினர், அதனைக் கொளுத்தினர். ஆனால் மறுநாள் அங்கே (தமது அறையின் தென்கிழக்குத் தாழ்வாரத்தைச் சுட்டிக் காட்டி) யான் நின்றபோது, அக்ஷயை இழந்ததற்காகக் கடுந்துயரம் உண்டானதை உணர்ந்தேன், யாரோ ஒருவர் ஈரத் துணியைப் பிழிவதுபோன்று என் நெஞ்சைப் பிழிவதாக உணர்ந்தேன். யானே அதைக்கண்டு ஆச்சரியமடைந்தேன்; தேவி எனக்கு ஒரு பாடம் போதிப்பதாக நினைத்தேன்; என்னுடைய சொந்த உடலையும் யான் பொருளா

கக் கொள்ளாதபோது, ஓர் உறவினன்மீது அதனினும் குறைந்த அளவுதானே எனது கவனம்; ஆனல் ஒரு மருமகனே இழந்த துயரம் எனக்கு இவ்வளவு உண்டாகுமாயின், இல்லறத்தார் தமது நெருங்கிய பிரியமான உறவினரை இழக்கும்போது, அவர்கட்கு எவ்வளவு அதிகமான துயரம் உண்டாதல் வேண்டும்!" 1871-ல் மதுர் இறந்தார்; அதற்கு ஐந்தாண்டுகட்குப்பின், (மதுர்க்குப் பின் குருதேவரது நலத்தைப் பாதுகாத்துவந்தவரான) சம்புமல்லிக் என்பவர் மரித்தார். 1873-ல் அவரது தமையனூர் ராமேசுவரர் மரணமானூர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆன்மாவின் அழிவற்ற தன்மையையும், பிறப்பிறப்புகள் மித்தை யென்பதையும் உணர்ந்திருந்தாரேனும், இந்த மரணங்கள் அவரது மென்மையான மனித நெஞ்சத்துத் தமது முத்திரைகளே விட்டுச்சென்றன.

1875 மார்ச்சில் குருதேவர் தமது அன்னையாரின் மரணத்திற்கு ஏறக் குறைய ஓர் ஆண்டிற்கு முன்பு கேஷப் சந்திரசேன் என்பவரைச் சந்தித்தார். இச் சந்திப்பு ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கும் கேஷப்புக்கும் ஒரு முக்கிய நிகழ்ச்சியாயிற்று. குருதேவர் முதன் முதலாகத் தற்கால இந்தியாவின் மதிப்பார்ந்த ஒரு பிரதிநிதியைச் சந்தித்தது இதில்தான்.

பிராம்மோ சமாஜம்

19-ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் இந்தியாவினது மறுமலர்ச்சி நெறியினே முறைப்படுத்துவதில் முக்கியமான பங்கெடுத்துக்கொண்ட இரு பெரிய இயக்கங்களுள் ஒன்று பிராம்மோ சமாஜம்; அதன் தலைவர் கேஷப், பிராம்மோ இயக்கத்தை நிலை நாட்டியவர் ராஜா ராம்மோஹன்ராய் என்னும் பெரியார். (1774—1883). வைதிக பிராம்மண குடும்பத்திற் பிறந்தவராயினும், ராம் மோஹன் ராய்க்கு இஸ்லாம் கிறிஸ்தவம் எனும் இரு மதங்களிடத்தும், பெரும் பரிவுண்டு. பௌத்தமத இரகசியங்களைத் தேடி அவர் திபெத் சென்றிருந்தார். கிறிஸ்தவ மதத்தினின்றும் அதன் நீதி முறையை வடித்தெடுத்துக்கொண்டார்; ஆனல் இந்துமத அவதாரங்களை அவர் மறுத்ததுபோல, கிறிஸ்துவின் தெய்வத்தன்மையையும் ஒதுக்கிவிட்டார். இஸ்லாம் மதத்திற்கு அவர் பெரிதும் வசப்பட்டமையால், அவர் தமது ஒரே - கடவுட் - கொள்கைகளை வரையறுக்கலானூர், ஆனல் அவர் தமக்கு ஞான ஆவேசம் பெறவேண்டின், எப்போதும் வேதங்கட்கே செல்வார். 1828-ல் அவர் தாபித்த பிராம்மோ சமாஜம், "இப் பிரபஞ்சத்தைப் படைப்பவரும், காப்பவரும் ஆன, நித்திய, தேடவொண்ணுத, விகாரமற்ற வஸ்துவை வழிபடவும் புகழவும்" என்றே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த சமாஜத்தில் அனைவரும் நிறம் கொள்கை ஜாதி தேசம் மதம் என்னும் வேறுபாடின்றிச் சேர்தற்குரியர்.

இந்த சமாஜத்தை உண்மையாக ஒழுங்குபடுத்தி அமைத்தவர், ரவீந்திரநாத் என்னும் கவிஞரின் தந்தையாராகிய தேவேந்திரநாத் தாகூர். அவரது

உடலழகும் ஞான அழகும், தனவந்தர்க்குரிய ஒழுக்கமும், கூரிய அறிவும் கவியின் உணர்வுத்திறனும் அவரைக் கல்வி கற்ற வங்காளிகட்குள் மிக உயர்ந்த தலைவராக்கின. இவர்கள் அவரை 'மஹரிஷி' என்று மரியாதையோடு அழைப்பர். மகரிஷி ஒரு வடமொழிப் பண்டிதர்; ராஜா ராம்மோஹன் ராய் என்பவரைப் போலன்றித் தமது ஞான ஊக்கத்தை உபநிடதங்களினின்றும் முழுதும் பெற்றார். விக்கிரக ஆராதனையின்மீது தணியாத வைரங்கொண்டவர்; கிறிஸ்தவக் கொள்கைகள் சமாஜத்திற் பொதிந்து பரவுவதைத் தடுக்கப் போராடவும் செய்தார். அந்த இயக்கத்திற்கு அதற்கு வேண்டிய கொள்கையையும் கிரியையையும் அளித்தவர் அவரே. அவரது சக்தியின் துணையால் பிராம்மோசமாஜம் பெற்ற கொள்கையாவது: சூனியத்தினின்றும் உலகினைப் படைத்த பரம்பொருள் ஏகம்; தானே தோன்றியுள்ளது; சத்தியம், அளவற்ற ஞானம், மங்களம், சக்தி இவற்றையுடைய கடவுள்; நித்தியம், எல்லாம் வல்லது, இரண்டற்ற ஒன்றுவது—என்னும் கொள்கையே. மனிதன் அவர்மீது அன்பு செலுத்தவும், அவரது ஆணையை இயற்றவும், அவரிடம் நம்பிக்கை வைக்கவும், அவரை வழிபடவும் கடமைப்பபட்டவன்; இவ்வாறே அவன் மறு உலகில் மோக்ஷம் பெறத் தகுதியடையவேண்டும்

பிராம்மோ இயக்கத்தின் மிகமிகத் திறமை வாய்ந்த தலைவராவார் கேஷப் சந்திரசேன் என்பவர் (1838—1884). ராஜா ராம்மோஹன் ராய், தேவேந்திரநாத் தாகூர் இருவரையும் போலன்றி, கேஷப் நடுத்தர வங்காளி குடும்பத்திற் பிறந்தவர், ஆங்கிலப் பள்ளிக்கூடத்திற் கல்வி கற்றவர். அவர் வடமொழி யறியாதவர், விரைவில் வைதிக இந்து மதத்தினின்றும் பிரிந்து விலகினர். இளம் பருவத்திலேயே அவர் கிறிஸ்துவினிடம் மனங் கவரப் பெற்றார்; ஞானஸ்நானம் செய்யவந்த ஜாண், கிறிஸ்து, பால் எனும் போதகர்—இம் மூவரின் விசேஷ கடாக்ஷம் தாம் பெற்றதாகவும் நம்பி வந்தார். பிராம்மோ சமாஜத்திற்குள் கிறிஸ்துவைப் புகுத்த அவர் முயன்றபோது, அவர்க்கும் தேவேந்திரநாத்துக்கும் இடையே ஏற்பட்ட பிளவு தடுக்க முடியாததாயிற்று. 1868-ல் கேசவர் தம்மினும் மூத்த தலைவராய அவரிடமிருந்து விலகி, இந்திய பிராம்மோ சமாஜம் என்னும் சங்கத்தை நிறுவினராக, தேவேந்திரர் ஆதி சமாஜம் என இப்போது பெயர் பெற்ற முதல் பிராம்மோ சமாஜத்திற்குத் தலைமையை முன்போல் வகித்து வரலானர்.

கேஷப்பிடம் பலவகையான இயல்புகள் கலந்த ஒரு தன்மை இருந்தது. ஒழுக்க சம்பந்தமான ஒரு பெரும் முட்டுப்பாட்டுக்கு அவர் ஆளானபோது, அவர் தமது பொழுதில் மிக்க பகுதியைத் தனிமையிலே கழித்தார்; அப்போது இறைவனது திருக்குரலைக் கேட்டதாக உணர்ந்தார். பிராம்மோ சமாஜத்தில் பக்தி சம்பந்தமான பூஜைமுறை ஏற்படுத்தப் பட்டபோது, அவர் தம்மைப் பின்பற்றிய அடியார்களோடு சேர்ந்து மணிக்கணக்காகச் சங்கீர்த்தனம் செய்வார். அவர் 1870 ல் இங்கிலாந்து சென்றார்; அங்கே தமது இனிய குரலாலும்,

தமது எளிய ஆங்கிலமொழி நடையாலும், தமது ஞான ஊக்கத்தாலும் ஆங்கில மக்களின் உள்ளத்தைக் கவரலானார். விக்டோரியா அரசியாரும் அவரை உபசரித்தனர். இந்தியாவிற்குத் திரும்பினதும், நாட்டின் பல பகுதிகளிலும் பிராம்மோ சமாஜ நிலையங்களைத் தாபித்தார். ஐரோப்பிய தேசத்துப் பல்கலைக் கழகம் ஒன்றைச் சார்ந்த மத ஒப்புமை யாராய்ச்சிப் பேராசிரியரைப்போல அவர் ஸ்ரீராம கிருஷ்ணரோடு முதன் முறை இணங்கியபோது சமய சமரசம் என்ற கொள்கையைக் கண்டுபிடிக்கத் தொடங்கினர். இந்துமத தேவர் தேவியர் மீது பரிவு கொண்டவராய், அக்கருத்துகளை உதாரமான முறையிலே விளக்கலானார்: மேலும், இறைவனே புதிதாக வெளியிட்டருளிய ஒழுங்கு என்னும் 'நவ விதான'த்தை உலகத்திற்குப் போதிப்பதற்காக அவர்க்கு ஆணையிட்டுள்ளதாகவும் அவர் நம்பலானார்.

1878-ல் கேஷப்பின் சமாஜத்தில் ஒரு பிளவு ஏற்பட்டது. அவரைப் பின் பற்றியவர்க்குட் சொற்சக்தியுடைய ஒரு சிலர், பிராம்மோ கொள்கைகளை அவர் மீறி, சமாஜம் ஒப்புக்கொண்டுள்ள மணவயதினை அடையுமுன் தமது புதல்வியருள் ஒருத்தியை ஒரு தனவந்தர்க்கு மணம் புரிவித்ததற்காக அவரைக் குற்றஞ் சாட்டலானார். இக் கூட்டத்தார் அவரை விட்டு விலகி, சாதாரண பிராம்மோ சமாஜத்தை நிலை நாட்டினர்; கேசவர் நவவிதான சமாஜத்திற்குத் தலைவராக இருந்து வந்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ணரது சக்திக்கு உட்பட்டதன் பயனாகத் தேவியின்மீது ஆழ்ந்த பக்தி கேசவர்க்கு உண்டாயிற்றெனினும், கிறிஸ்து இலக்ஷியத்தின்மீது இப்போது அவரது மனம் மேலும் மேலும் கவியலாயிற்று. கிறிஸ்துவுக்கும் இந்துமத தேவியம்மைக்கும் இடையே ஊசலாடிக்கொண்டிருந்த அவரது மனம் அமைதியற்றதாயிற்று. வங்காளத்தும், இந்தியாவில் வேறு சில பகுதிகளிலும், பிராம்மோ இயக்கம் கிறிஸ்தவ மத ஏகவாதப் பிரிவின் வடிவங்கொண்டது; இந்துமதக் கிரியைகளை ஏளனம் செய்தது; விக்கிரக ஆராதனையைக் கண்டிக்கத் தொடங்கியது. மேற்றிசையாரது பண்பாட்டுக்கு வசப்பட்டு, அது புத்திக்கே உயர்ந்த பிரமாணத் தன்மையை அளித்தது. பிரெஞ்சுக்காரது புரட்சி இலக்ஷியங்களை ஆதரித்து, அங்கத்தினர்க்குள்ளே ஜாதி வித்தியாசத்தை ஒழித்தது, பெண்களின் விடுதலைக்காகக் கங்கணம் கட்டிக்கொண்டது, சிறு வயதில் மணம் புரிதலை நீக்குதற்காகப் பெருங் கிளர்ச்சியை உண்டுபண்ணிற்று, விதவையரின் மறுமணத்தை ஒப்புக் கொண்டது, கல்வி சம்பந்தமான, சமூகச் சீர்திருத்த சம்பந்தமான பற்பல இயக்கங்களைப் போற்றி வந்தது. வங்காளத்தில் பிராம்மோ இயக்கத்தால் உடனே விளைந்த பயனாவது, கிறிஸ்தவப் பாதிரிமார்களின் மதமாற்ற முயற்சிகள் தடைபட்டதே. அதனால் அதன் ஆங்கில ஏஜமானர்கட்கு இந்தியாவினது பண்பாட்டின்மீதுள்ள மதிப்பு பெருகலாயிற்று. ஆனால் அக்காலத்திற்கு அவசியமான ஒன்றினின்றும் உதித்த மத சம்பந்தமான ஒரு கிளர்ச்சியே அது; அன்றியும் அது அறிவையே பற்றியதாகின்றது, பல பொருள்களினின்றும்

பொறுக்கியெடுத்துத் தொகுத்த ஒன்றுகின்றது. இந்து மதத்திற்கு வேர்போன்ற ரிஷிகளும் தீர்க்கதரிசிகளுமான பெரியார்களின் ஆழ்ந்த உள் அனுபூதிகளே ஆதாரமாக உடையதுமன்று. நாட்டிலுள்ள ஆண்கள் பெண்களிற் சுருங்கிய ஒரு தொகையினர்க்குள் மட்டும் அதன் ஆட்சி பரவலாயிற்று, இந்து பொது மக்களிற் பெருங்கூட்டத்தார் அதற்கு வெளியே இருந்தனர். இந்துக்களின் சநாதன தருமத்திலுள்ள வளமிக்க சுரவரிசைகளுக்குரிய ஒரு சுரத்தை மட்டும் அது அருவருக்கும் வரை எழுப்பிக்கொண்டேயிருக்கும்.

ஆரிய சமாஜம்

இந்தியாவில் 19-ம் நூற்றுண்டில் நிகழ்ந்த சமய மறுமலர்ச்சியில் முக்கியமான உதவி புரிந்த மற்ற இயக்கம் ஆரிய சமாஜமே. பிராம்மோ சமாஜத்தின் சாரத்தை ஆராயும்பேரது, ஐரோப்பியப் பண்பாட்டோடு சமாதானம் பேசும் (ராஜி பேசும்) இயக்கமாகவே முடிகின்றது; அது மேலை நாட்டின் மேன்மையை உள்ளூர ஒப்புக்கொள்கிறது. ஆனால் ஆரிய சமாஜத்தை நிறுவியவரோ (தாபித்தவரோ) போரை விரும்பிய ஓர் இந்து சந்நியாசி; இஸ்லாம் கிறிஸ்தவ மதம் இரண்டும் போர்க்கு அழைக்கும்போது, அதனை ஏற்றுக்கொண்டு, இந்தியாவிற்குள் அன்னியரது அதிகாரத்தை முழுதும் எதிர்த்துப் போராடும் உறுதியுடையராயிருந்தார். சுவாமி தயானந்தனர் (1824—1883) பம்பாயில் இவ்வியக்கத்தை 1875-ல் தொடங்கினர்; விரைவில் அதன் சக்தியை இந்தியாவின் மேற்குப் பக்கம் முழுவதும் உணரலாயிற்று. சுவாமி வேதங்களை நன்கு கற்ற பண்டிதர்; அவை முற்றிலும் ஒரே தெய்வக் கொள்கையை நிலைநாட்டுகின்றன என்று விவரமாக எடுத்துக் காட்டுவர். அவர் விக்கிரக ஆராதனையை எதிர்த்துப் பேசினர்; பழைய வைதிக யக்ஞக்கிரியைகளை மறுபடியும் நிலைநாட்டினர். மத விஷயத்தில் வேதங்களே முடிவான பிரமாணமாகும் என்பதே அவரது கருத்து; வேதத்தின் ஒவ்வொரு மொழியும் உள்ளபடியே உண்மையானது என அவர் ஒப்புக்கொள்வார்.

இஸ்லாமும் கிறிஸ்தவமும் செய்துவந்த அத்து மீறிய செய்கைகட்கு ஆரிய சமாஜம் ஓர் அரண் போன்றதாயிற்று; அதன் வைதிக வாசனை பல இந்துக்களின் உள்ளங்களை ஈர்க்கலாயிற்று. சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் பல வற்றிற்கு அது தலைமை வகித்தது. ஜாதிமுறைமை அதன் சொல்லம்புகட்கு இலக்காயிற்று. சமூக வாழ்க்கையில் பெண்கட்கு ஏற்பட்டிருந்த பலப்பல தடைகளை நீக்கி, அவர்களை விடுவித்தது. கல்வித்துறைக்கு அது பெருந் தூண்டுகோலாக உதவிற்று. இளவயதிலே மணம்புரிதலை எதிர்த்துப் போராட்டம் நடத்தியது, இந்து விதவையர்க்கு மறுமணம் புரிதலை ஆதரித்தது, இந்து மத இஸ்லாமிய மதப் பண்பாடுகள் ஒன்றோடொன்று சண்டை செய்யும் போர்க்களமாகிய பாஞ்சால தேசத்திலே அதன் சக்தி மிகமிக வலுத்திருந்தது. உறக்க

நிலையிலிருந்த இந்து சமூகத்திற்குள் ஒரு புதிய போராடும் இயல்பை அது புகுத்திற்று. பிராம்மோ சமாஜத்து நடந்தது போலன்றி, ஆரியசமாஜத்தின் அதிகாரம் அறிவாளிகளின் எல்லைக்குள் மட்டும் குறுகிவிடவில்லை. அதன் சக்தி பொது மக்களின் வட்டாரத்துள்ளும் பரவிற்று, அது முரட்டுப் பிடிவாதமுள்ள ஓர் இயக்கமாதலின், அதன் கொள்கைகளை ஒப்புக்கொள்ளாதவர்மீது தன் சகிப்பற்ற தன்மையை வெளிக்காட்டிற்று; அது மெய்ப்பொருளை உணர ஆரிய சமாஜ வழியாகிய ஒரே வழியை மட்டும் வற்புறுத்தி வந்தது. சுவாமி தயாநந்தர் வங்காளத்திற்குச் சென்றிருந்தபோது, ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரைச் சந்தித்தார்.

கேஷப் சந்திரசேன்

கேஷப் சந்திரசேனும் ஸ்ரீ ராமகிருஷ்ணரும் முதன் முதலாக ஒருவரை யொருவர் சந்தித்தது, தக்ஷிணேசுவரத்திலிருந்து சில மைல் தூரத்திலுள்ள ஜயகோபால் சேன் என்பவரின் தோட்ட மாளிகையில்தான்; அப்போது பிராம்மோ தலைவராய அப்பெரியார் தமது சீடர்கள் சிலரோடு அங்கே வாசஞ் செய்துகொண்டிருந்தனர். பல விஷயங்களில் இவ் இருவரும் ஒருவர்க் கொருவர் எதிரிடையாகவே இருந்தனர். எனினும், தடுக்க வொண்ணுத உள்ளக் கவர்ச்சியால் இருவரும் நெருங்கிய தோழராகும் தறுவாயில் இருந்தனர். குருதேவர் இறைவனைச் சுத்த சைதன்யமாகவும் ஆன்மா ஆகவும் உணர்ந்திருந்தனர்; ஆயினும் அவர்க்கு இறைவனின் பலவகை வடிவங்களிலும் நம்பிக்கை இருந்தது. அதற்கு மாறுகக் கேஷப்போ திருவுருவ வழிபாட்டை விக்கிரக ஆராதனையாகக் கருதுவார்; இந்து தெய் வங்கட்கு உள்ளுறைப் பொருள்களை எடுத்துக் காட்டுவார். கேஷப் பேச்சாளர்; நூல்களும், பத்திரிகைகட்குக் கட்டுரைகளும் எழுதி வருபவர்; ஸ்ரீராமகிருஷ்ணர்க்கோ பிரசங்கமென்றால் நடுக்கம். தமது சொந்தப் பெயரை யும் எழுத அறியாதவர். கேஷப்பின் புகழ் நெடுந் தொலை பரவி, இங்கிலாந் தின் கரைகளையும் எட்டியிருந்தது. குருதேவரோ தக்ஷிணேசுவரம் எனும் கிராமத்தில் தனிமையான வாழ்க்கையை இதுவரையும் பின்பற்றி வந்திருந்தார். இந்தியா புத்துயிர் பெற்று வாழச் சமூகச் சீர்திருத்தங்கள் அவசியமெனக் கேஷப் வற்புறுத்தினர்; ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கோ கடவுளைத் தரிசித்தலே வாழ்க்கையின் ஒரே இலக்கியமாகும். கேஷப் தம்மைக் கிறிஸ்துவின் சீட ராகக் கருதினர்; கிறிஸ்தவ பக்திக் கிரியைகளையும் தெய்வத்தின் மும்மை யையும் நெகிழ்ந்த முறையிலே ஒப்புக்கொண்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணரோ காளிதேவியின் எளிமையான குழந்தை; எனினும் அவர் வேறொரு வழியிலே கிறிஸ்துவின் தெய்வத்தன்மையை ஒப்புக்கொண்டார். கேஷப் ஓர் இல்லறத் தார்; ஆதலின் தமது மக்களின் நலத்தில் உண்மையான சிரத்தையுடையரா யிருந்தார்; ஆனால் ஸ்ரீ ராமகிருஷ்ணரோ ஒரு பரம ஹம்சராதலின், உலக

வாழ்க்கையிற் சற்றும் கருத்தற்றவரா யிருந்தார். ஆயினும், அவர்களுடைய பழக்கம் முற்றி நட்பானபோது, ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கும் கேஷப்புக்கும் ஒருவர் மீது மற்றொருவர்க்குப் பேரன்பும் மதிப்பும் உண்டாயின. பல ஆண்டுகட்குப் பின், கேஷப்பின் மரணச் செயதி எட்டியதும், தமது உடலிற்பாதி உணர்ச்சி அற்றது போலக் குருதேவர் உணர்ந்தார். சமய சமரசத்தையும், இறைவனின் தாய்மையையும் பற்றிய கேஷப்பின் கருத்துக்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரது இணக்கத்தாலே ஆழமும் வளமும் பெறலாயின.

சிவப்புக் கரைபோட்ட அரையாடையை அணிந்திருந்த ஸ்ரீராமகிருஷ்ணர்—அந்த ஆடையின் தலைப்பைத் தமது இடது தோளின்மீது அஜ்ாக்கிரதையாகப் போட்டுக்கொண்டு—இருதாயோடு ஜெயகோபலரது தோட்ட மாளிகைக்கு ஒரு நாள் சென்ருர். ஆடம்பரமின்றிய இப் புதியாரைக் கவனிப்பதாக எவருமில்லை. முடிவிலே குருதேவர் கேஷப்பிடம், "நீர் கடவுளைத் தரிசித்துள்ளீர் என்று ஜனங்கள் என்னிடம் கூறுகின்றனர், ஆதலால் உம்மிடமிருந்து ஈசனைப்பற்றிக் கேட்பதற்காகவே யான் வந்துள்ளேன்" என்று சொன்னர். ஓர் அழகான சம்பாஷணைபின் நிகழலாயிற்று. குருதேவர் தேவியைப் பற்றிய ஒரு பாடலை உடல் புளகிக்கப் பாடினர். உடனே சமாதியில் ஆழ்ந்தார். இருதாய் தூய பிரணவ மந்திரத்தைக் காதில் ஓதியதும், அவர் மெல்ல மெல்ல உலக உணர்வு பெற்ருர்; அவரது முகம் பின்னும் தெய்விக ஜோதியை வீசிக் கொண்டிருந்தது. இதைக் கண்ட கேஷப்பும், அவரைப் பின்பற்றுவோரும் மயங்கலாயினர். ஸ்ரீராமகிருஷ்ணர்க்கும் பிராம்மோ அடியார்கட்கும் உள்ள வேறுபாடு மிக இனிமையாயிருந்தது. இச் சிறிய மனிதர் மெல்லிய, மிக மிக நுட்பமான உடலினராய் அமர்ந்திருந்தார். அவருடைய கண்களிலே உள் ளொளி விளங்கிற்று. நல்ல இயல்பு அவருடைய கண்களிலே ஜொலித்தது, அவருடைய வாயின் நுனிகளிலே ஒளிந்திருந்தது. அவரது பேச்சு சாதாரண வழக்கிலுள்ள வங்காள பாஷையில் அமைந்ததோடு, மகிழ்ச்சியூட்டும் அற்பமான கொன்னலும் அதில் இருந்தது. அவரது ஞான அனுபூதியின் செல்வத்தாலும், உவமைக்கும் உருவத்திற்கும் வற்ருத களஞ்சியமாக அவர் இருந்தமையாலும், அவரது கூர்ந்து கவனிக்கும் திறமையாலும், அவரது பிரகாசமான சூக்குமமான விளையாட்டு நயமிக்க பேச்சினலும் அவரது ஆச்சரியமான பரந்த மனப்பான்மையாலும், அவரிடமிருந்து இடையருது பெருகும் ஞானத்தாலும், அவரிடமிருந்து வரும் வார்த்தைகள் மக்களை அவர்க்கு அடிமையாக்கின. அவரைச்சுற்றி அங்கு இருந்தவரோ, மேற்றிசைக் கல்வியின் சிறந்த மாதிரிகளாக விளங்கிய, செயற்கை வாழ்வுடைய வங்காள மனிதரும், அவர்கட்கு நடுவே, வங்காள இளைஞர்க்கு வழிபடும் தெய்வம்போன்றிருந்த அவர்களது தலைவராய கேஷப்பும்.

கேஷப்பினது சிரத்தையே ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்குப் போதியதாயிற்று, அதுமுதல் இருவரும் ஒருவரையொருவர் அடிக்கடி தக்ஷிணேசுவரத்திலோ,

பிராம்மோ சமாஜக் கோயிலிலோ காணலாயினர். குருதேவர் கோயிலிலே தெய்வ வழிபாடு நடக்கும் சமயம் குருதேவர் எழுந்தருளியிருந்தபோதெல்லாம், கேஷப் அவரை அங்கே கூடியுள்ளார்க்குப் பேசுமாறு வேண்டுவார். கேஷப் தாமும் மலர்களையும் கனிகளையும் காணிக்கையாகக் கொண்டு குருதேவரைக் காணச் செல்வார்.

வரவர மற்ற பிராம்மோ தலைவர்கள் ஸ்ரீராமகிருஷ்ணரது சக்தியை உணரத் தொடங்கினர், ஆனால் அவர்கள் ஒருவிதத்திலேனும் குருதேவரைக் குறை கூறுது புகழுவோராகவில்லை. அவர்கள் சிறப்பாகக் கண்டித்தவை, அவரது முனிவர்க்குரிய இயல்பையும், பெண்ணையும், பொன்னையும் அவர் பழித்ததை யும். இல்லறத்தார்க்குரிய தமது இலக்கியங்களைக்கொண்டே அவரையும் அள விடலானர். சிலர் அவரது சமாதி நிலையை அறிய இயலாதவராய், அதனை ஒரு நரம்பு நோயெனக் கூறினர். ஆயினும், காந்தமனைய அவரது தோற்றப்பொலி வின் சக்தியை அவர்களால் தடுக்க முடியாது போயிற்று.

பிராம்மோ தலைவர்கள் ஸ்ரீராமகிருஷ்ணரோடு இணங்கியதன் பயனாக மிக்க ஞான ஊக்கத்தைப் பெறலாயினர். அதனால் அவர்களுடைய சமயக் கொள்கைகள் விரிவடைந்தன; அவர்களுடைய நெஞ்சங்களிலே இறைவனைத் தரிசித்தற்காகத் துடிக்கும் அவா எரியலாயிற்று; இந்து சமயத்தின் கிரியைகளை யும் குறிகளையும் அவர்கள் அறியவும் மெச்சவும் தலைப்பட்டார்; இறைவன் பற் பல வடிவங்களோடு வெளிப்படுவதை உறுதியாக உணரலாயினர்; சமய சமரசத் தைப்பற்றிய அவர்களுடைய கருத்துக்கள் ஆழ்ந்து செல்லலாயின. பிராம்மோ அடியார்களிற் பலருடைய சிரத்தையைக் குருதேவரும் போற்றலாயினர். அவர் தமது சுய அனுபூதிகளை அவர்களிடம் எடுத்துக்கூறி, தமது உபதேசங்களின் சாரத்தை விரிவாகச் சொல்லுவார்; அவையாவன: துறவின் அவசியமும், இஷ்ட நிஷ்டையும் (தனக்குரிய சாதனமுறையைச் சிரத்தையோடு பின்பற்று தலும்), ஈசனிடத்து நம்பிக்கையும், பயனைக் கருதாது கடமைகளை இயற்ற லாகிய நிஷ்காம கருமமும்,. நித்திய அநித்தியங்களின் வேறுபாட்டு உணர்வு எனப்படும் விவேகமுமே.

இவ்வாறு கல்வி கற்று, முன்னேறும் இச்சையுடைய வங்காளிகளோடு ஸ்ரீ ராமகிருஷ்ணர் இணங்கியதன் பயனாக, அவர் ஒரு புதிய கருத்துலகத்தைக் காணலானர். ஓர் எளிய வாழ்க்கை நடத்தும் கிராமத்திற் பிறந்தும் வளர்ந்தும் வந்தவர் அவர். இந்தியாவில் வாழ்ந்த வைதிகச் சார்புடைய தூய சாதுக் களிடம் சமய வாழ்க்கையிற் போதனை பெற்றவர்; ஆதலால், தற்கால நாகரிகத் தால் இந்துக்களின் நினைவுகளும் வாழ்க்கைகளும் மாறுபாடடைந்துள்ள விதத்தை அறிய அவர்க்கு யாதொரு சந்தர்ப்பமும் வாய்க்கவில்லை. மேற்றிசைக் கல்வி இந்தியரது பண்பாட்டின்மீது மோதியதனால் விளைந்த பயனை ஒழுங்காக மதிப்பிட்டறிய அவர்க்கு இயலவில்லை. அவர் இந்துக்கட்குள் உயர்ந்த இந்து வானவர்; ஆதலால் இறைவனைத் தரிசிக்க அவர் கண்ட வழி தியாகத்தைத்

தவிர (துறவைத் தவிர) வேறொன்றில்லை. புதிய தலைமுறையைச் சார்ந்த இந்தியர் இறைவனை மட்டும் வேண்டாது, இறைவனையும் உலகத்தையும் சேர்த்து வேண்டுவர் என்பதைப் பிராம்மோக்களிடமிருந்தே அவர் அறிந்தனர். கல்வி கற்ற இளைஞர் தமது சொந்த சமயக் குரவர்களின் சக்திக்கு உட்பட்ட தினும் அதிகமாக, மேற்றிசைத் தத்துவ நூலோரது ஆட்சிக்கே ஆட்பட்டிருந்தனர். ஆனால் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அதனால் தமது மனத்துணிவை இழக்கவுமில்லை, அனைத்தும் ஈசனது செயல் என்றிருந்தமையினால், அவர் பிராம்மோக்களுக்கு, இறைவனைப்பற்றியும் கடுமையான ஞான சாதனங்களைப் பற்றியும் தாம் கொண்ட கருத்துக்களையெல்லாம் விரிவாக விளக்கினார்; எனினும் தமது போதனைகளில் அவர்களுடைய ருசிகட்கும் இயல்புகட்கும் பொருந்துவனவற்றை மட்டும் ஒப்புக்கொள்ளும்படி வேண்டினார்.

கேஷப் சந்திரஸேனைத் தவிர, பிராம்மோ தலைவர்கட்குள் குருதேவரோடு நெருங்கிப் பழகி அவரை அறிந்தவராவார்: பிரதாப் சந்திர மசும்தார், விஜய கிருஷ்ண கோசுவாமி, திரைலோக்யநாத் ஸன்யால், சிவநாத் சாஸ்திரி என்பார்.

குருதேவர் தமது அடியார்கட்காகத் துடித்தல்

ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிராம்மோக்களோடு இணங்கியதன் பயனாக, அவருடைய போதனைகளைக் கலப்பற்ற தூய நிலையிலே பின்பற்றும் திறமை வாய்ந்த சாதகர்களைக் காணும் அவா அவர்க்கு முறுகலாயிற்று. அவரே பின்வருமாறு ஒருநாள் கூறலானார்: "அந் நாளில் யான்பெற்ற அவாவுக்கு எல்லை இல்லை. பகற்காலத்து எனக்கு எவ்வாறே அதை அடக்க முடிந்தது. உலகப் பற்று மிகுந்தாரது உலகப் பேச்சு எனக்கு வேம்பாயிருந்தது; எனது பிரிய துணைவர்கள் வரும் நாள் எந்நாளோ என்று அதை ஆவலோடு எதிர் நோக்கியிருப்பேன். அவர்களோடு பேசியும், அவர்கட்கு என் சொந்த அனுபவங்களை எடுத்துச் சொல்லியும் ஆறுதல் அடையலாம் என நம்பினேன். ஒவ்வொரு சிறிய நிகழ்ச்சியும் எனக்கு அவர்களது நினைவை ஊட்டும்; அவர்களைப்பற்றிய நினைவுகளிலே யான் முற்றும் ஆழ்ந்திருந்தேன். இவனுக்கு இன்னது சொல்லவேண்டும், அவனுக்கு இன்னது சொல்லவேண்டும் என்று என் மனத்திற்குள்ளே ஒழுங்கு படுத்திக்கொண்டிருந்தேன். ஆனால், பகற்பொழுது முடிந்ததும், எனது உணர்ச்சிகளை அடக்க முடியாமற்போகும். 'இன்னொரு நாள் கழிந்ததே! இன்னும் அவர்கள் வரவில்லையே!' என்ற நினைவு என்னை அமுக்கலாயிற்று. மாலைப் பூசைவேளையில் கோவில்களில் மணிகளின் ஒலியும் சங்கொலியும் முழங்கிக்கொண்டிருந்தபோது, தோட்டத்திலுள்ள அரண்மனையின் மச்சில் மீதேறி, நெஞ்சுத் துயரால் துடிதுடித்து, உரத்த குரலில் 'என் குழந்தைகளே, வாருங்கள். ஆ! நீங்கள் அனைவரும் எங்குள்ளீர்கள்? உங்களையன்றி வாழ எனக்கு இயலவில்லையே' என்று கத்துவேன். யான் அவர்கட்

காகத் துடித்தமாதிரி அவ்வளவு தீவிரமாக ஒருதாய்தான்—தனது மதலையைக் காணத் துடித்ததுண்டோ? ஒரு நண்பன் தனது தோழனுக்காகவோ, ஒரு காதலன் தனது ஆசை நாயகிக்காகவோ துடித்ததில்லை. அதனை உரைத்தல் ஒண்ணுதலே! இவ்வாறு துடித்த காலத்துக்குப் பின் சுருங்கிய காலத்துக் குள்ளே அடியார்கள் வரத் தொடங்கினர்.''

1879-ம் ஆண்டில், பிராம்மோக்கள் தமது பிராம்மோ பத்திரிகைகளில் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பற்றி இடையிடையே எழுதிய குறிப்புகள் கல்வி கற்ற நடுத்தர வங்காளிகளின் குடும்பங்களிலிருந்து அவருடைய பிற்கால சீடர்களை இழுக்கத் தொடங்கின; 1884-ம் ஆண்டுவரை அவர்கள் தொடர்ந்து வரலாயினர். ஆனால் அவரது சூக்குமமான கவர்ச்சிச் சக்தியை உணர்ந்த மற்றவரும் வந்தனர். இவர்கள் எல்லா ஜாதிகளையும் கொள்கைகளையும் உடைய மக்களாயிருந்தனர்; இக் கூட்டம் மாறிக்கொண்டே யிருந்தது. இந்துக்கள், பிராம்மோக்கள்,. வைஷ்ணவர், சாக்தர், பல்கலைக் கழகப் பட்டம் பெற்ற கற்றோரும் கல்லாதவரும், முதியோரும் இளைஞரும், அரசரும் ஆண்டிகளும், பத்திரிகைக்காரரும் கலைஞரும், பண்டிதர்களும் அடியாரும், தத்துவ நோக்குடையாரும் உலகப்பற்றுள்ளவரும், ஞானிகளும் யோகிகளும், கரும வீரரும் நம்பிக்கையில் தீரரும், நல்லொழுக்க நங்கையரும் விலைமாதரும், உத்தியோகம் வகிப்போரும் தெருவில் திரிவோரும், பரோபகாரிகளும் தன்னயமுடையாரும், நாடகம் எழுதுவோரும் குடிகாரரும், ஆக்கவேலையில் அமர்ந்தோரும் அழிக்கும் வேலையில் ஈடுபட்டோரும் ஆகிய பலரும் அவரை அடைந்தனர். அனைவர்க்கும் தமது வரம்பற்ற அனுபூதிக் களஞ்சியத்தினின்றும் தாராளமாக வாரி வழங்கினர். எவரும் அவரிடமிருந்து வெறுங் கையொடு நீங்கார். வேதாந்தமாய உயர்ந்த ஞானத்தையும், புராணங்கூறும் உயிருருக்கும் அன்பையும் அவர் கட்குப் போதிப்பார். இருபத்துநான்கு மணி நேரத்தில் இருபது மணி ஓய்வின்றி விடாது அவர் பேசுவார். அனைவர்க்கும் தமது பரிவையும் ஞான விளக்கத்தையும் அளிப்பார். விந்தையான தமது ஆன்ம சக்தியால் அவர்களைத் தீண்டுவார்; அது கன்னெஞ்சத்தையும் கரைப்பதாகும். மக்கள் தமது அறிவுத் திறமைக்குத் தக்கவாறு அவரது உபதேசத்தை உணர்வார்.

குருதேவரது போதனைமுறை

ஆனால் ஸ்ரீ ராமகிருஷ்ணர் எப்போதும்போல், இறைவனது கையில் அமர்ந்த இசைவுற்ற கருவியாகவும், தேவியம்மையின் மதலையாகவும், தம்மை ஒரு குருவாக நினைக்கும் கருத்து முழுதும் அற்றவராகவும் இருந்தார். தம்மைக் குருவென்பதும், தந்தையென்பதும், எஜமானன் என்பதும்—இம் மூன்று கருத்துகளும் தம்மை முட்களைப்போல் சதையிற் குத்தின என்று அவர் கூறுவதுண்டு. ஆயினும் அவர் ஓர் அசாதாரணமான குருவாயிருந்தார்.

அவர் தம் சீடர்களின் நெஞ்சுகளைக் கிளரச்செய்தது, செயலாலோ மொழியாலோ அவ்வளவு இல்லை; ஒரு நுண்ணிய சக்தியினுலேதான் அதிகமாக அது நிகழ்ந்தது. ஆயினும் அவர் ஞானத்துறையில் ஓர் அருவிபோன்றிருந்தார். அவர் எல்லாச் சமயங்களையும் கொள்கைகளையும் மெய்ப்பித்தார். நிபுணனை தோட்டக்காரன் நிலத்தைத் திருத்திக் களைகளைப் பிடுங்கியெறிகிறான்; விதையுள் அடங்கியுள்ள உட்சக்தியால் செடிகள் வளருவன என்பதையும், ஒவ்வொன்றும் அதே காரணத்தால் அதற்குரிய மலர்களையும் காய்களையும் உண்டாக்கும் என்பதையும், அவன் அறிவான்; அதுபோன்றே குருதேவரும். அவர் தமது கருத்துக்களை எவர்மீதும் திணிக்கமாட்டார், அவர் மக்களின் வரையறைகளை உணர்வார்; ஒருவர்க்கு அமுதமாவது வேறொருவர்க்கு நஞ்சாகலாம் என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பார். தம்மைச்சாரும் அடியார்களின் உள்ளங்களையும், உள்ளங்களிலுள்ள மிக ஆழ்ந்த அந்தரங்கங்களையும், முதன் முறை அவர்களைக் காணும்போதே அறியும் அசாதாரணமான திறமையைப் பெற்றிருந்தார். சீடர்களை ஏற்றுக்கொள்ளும்போது, அவர்களுடைய கழிந்த கால இயல்புகளையும், எதிர்காலம் நிகழக்கூடியவற்றையும் முழுதும் அறிந்தே அவ்வாறு செய்வார். வாழ்க்கையில் உள்ள கேடு அவரைப் பயமுறுத்தவுமில்லை. சமய விஷயங்களில் மிதமிஞ்சிய கண்டிப்பினுல் எவரது மதிப்பையும் உயர்த்துவதும் இல்லை. அவர் ஒவ்வொரு செயலிலும் தேவியின் தவருத திருவுள்ளத்தையே காண்பார். ஒருவனை நெறிவிலகச் செய்யும் ஒளியும் இறைவனிடமிருந்து வரும் ஒளியே என்பர் அவர்.

குருதேவர் தமது அந்தரங்க சீடர்களானவர்க்கு ஒரு நண்பராயும், வழித்துணையாயும், விளையாட்டுத் தோழராயும் அமைவார். ஞான சாதனத்தின் கடுமையும் அவரது முன்னிலையில் எளிமையாக மாறிவிடும். அடியார்கள் அவரோடு இணங்கியிருக்கும்போது தூய ஆனந்த வெறிகொள்ளும் காரணத்தால், அவர் அவதார புருடரா, பூரணம் அடைந்த புனிதரா, யோகியா என்று தம்மைத்தானே வினவுவதற்கும் அவர்கட்குப் பொழுது கிடையாதுபோகும். அவரது முன்னிலையில் இருப்பதே பெரும் போதனையாகும்; பேச்சு மிகையாம். அவருடைய சீடர்கள் அவரோடு இருந்தபோது அவரை ஒரு தோழராகக் கருதுவார். ஆனல், பின்பு அத்துணைய (அவ்வளவு) பெரியார் முன் தாம் செய்த அற்பத்தனங்களை நினைத்து நடுங்குவார்—இவ்வாறு சீடர்கள் பிற்காலம் கூறுவர். குருதேவர் தமது இச்சை மாத்திரத்தால் தமது நெஞ்சுகளில் பிரேமையை மூட்டித் தமக்கு இறைவனது தரிசனத்தையும் அளிக்க வல்லவர் என்பதை உறுதியாக ருசுச் செய்வார் (மெய்ப்பிப்பார்) சீடர்கள். இந்த வேடிக்கை விளையாட்டு, இந்தக் கூத்து கும்மாளம்—இவையனைத்துக்கும் நடுவிலும், எப்போதும் அவர்கட்கு முன்னல், ஈசனைப்பற்றிய உணர்வோடிருத்தல் எனும் பிரகாசமான இலட்சியத்தையும் துறவு நெறியையும் நிறுத்திவருவார். ஏறுபவனது திறமைக்குத் தக்கவாறு செங்குத்தான ஏற்றத்தையோ படிப்படி

யாக உயரும் ஏற்றத்தையோ விதிப்பார். தூய்மை என்னும் அடிப்படைக் கொள்கையிற் சிறிது கலப்பையும் அவர் அனுமதியார். சாதகன் தனது உடலை யும் உள்ளத்தையும் இந்திரியங்களையும் உயிரையும் அழுக்குருத நிலையில் வைத்திருக்கவேண்டும்; இறைவனிடத்து மனமார்ந்த அன்பையும், எப்போதும் முறுகி வரும் ஆற்றுமையையும் பெறவேண்டும். மற்றதைக் குருதேவரே செய்துகொள்வார்,

அவருடைய சீடர்கள் இருவகைப்பட்டனர்; இல்லறத்தாரும், இளை ரும்—இவ்விளைஞரிற் சிலர் பிற்காலம் துறவறம் பூணலானர். பெண்ணடி யார்களாய ஒரு சிறு கூட்டத்தாரும் அவர்க்கு இருந்தனர்.

இல்லற அடியார்கள்

இல்லறத்தார்க்கு ஸ்ரீராமகிருஷ்ணர் முழுத்துறவென்னும் கடுமையான நெறியை விதிக்கவில்லை. அவர்கள் தங்களுடைய குடும்பத்தார்க்குரிய கடமை களை இயற்றவேண்டும் என்பதே அவருடைய விருப்பம். அவர்களுடைய துறவு மனத்துறவாகவேண்டும். பொறுப்புகளினின்றும் ஓடிவிடுவதனலே ஞான வாழ்வைப் பெற முடியாது. தம்பதிகள் ஒன்றிரண்டு குழந்தைகளைப் பெற்றபின், தமது பொழுதை ஞான சம்பாஷணையிலும், தியானத்திலும் கழித்து, தமையனும் தங்கையும்போல வாழவேண்டும், இல்லறத்தாரது வாழ்க்கை துறவியின் வாழ்க்கையைவிட ஒரு வழியில் மிக எளியது என்று கூறி, இல்லறத்தார்க்குத் தைரியம் ஊட்டுவார்; எளியதாகும் காரணமாவது: திறந்த வெளியிலிருந்து பகைவனேடு போர் புரிவதைப் பார்க்கிலும் கோட் டைக்குள்ளிருந்து எதிர்த்தல் மிக நன்று என்பதே. ஆயினும் அவர்கள் தமது பக்தியையும் ஈசனிடத்துக்கொண்ட நம்பிக்கையையும் வலுப்படுத்தற்காகப் பிரார்த்தனை, ஜெபம், தியானம் செய்ய இடையிடையே தனியிடம் செல்லுதல் வேண்டும் என வற்புறுத்தினர். சாது சங்கத்தை அவர்கட்கு விதிப்பார். உலகக் கடமைகளை ஒரு கையால் இயற்றும்போதே, மற்றொரு கையால் ஈசன் திருவடிகளைப் பற்றிக்கொள்ளும்படிக்கும், முடிவிலே தாம் இரு கைகளாலும் அவனைப் பிடித்துக்கொள்ளுமாறும் தமது கடமைகளை மேலும் மேலும் சுருக்கி வரும்படி ஈசனைப் பிரார்த்திக்கும்படிக்கும் அவர்கட்குச் சொல்லுவார். இல்லறத்தாராயினும், பிரம்மசரிய விரதம் பூண்ட இளைஞராயினும், ஞானப் போராட்டத்தில் அசிரத்தையை (தீவிர முயற்சியின்மையை)க் கண்டிப்பார். ஆராயாது எதிர்ப்பின்மை யென்னும் இலக்ஷ்யத்தைப் பின்பற்றும்படி அவர்களை வேண்டார்; எனெனில் அது விழிப்பிலாதாரைக் கோழையாக்கு கின்றது.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் இல்லற அடியார்களில் ஒரு சிலரைப் பற்றிய சுருங்கிய வரலாறுகள் கீழே எழுதப்பட்டுள்ளன.

சுரேந்திரர்

சுரேஷ்மித்ரர் என்பவர் ஒரு பிரியமான சீடர்; அவரைக் குருதேவர் பன்முறை 'சுரேந்திரர்' என்று அழைப்பதுண்டு. அவர் ஆங்கிலக் கல்வி பெற்றிருந்தார். ஓர் ஆங்கிலேயரது வியாபாரக் காரியாலயத்தில் ஒரு முக்கியமான அலுவல் பார்த்து வந்தார். அக்காலத்திய கல்வி கற்ற இளைஞர் பலரைப் போன்று அவர் தமது நாத்திகக் கொள்கையிற் பெருமை கொண்டிருந்தார். சமூகக் கட்டுப்பாடுகட்கு அடங்காது தம் இச்சைப் படியே வாழ்ந்துவந்தார். அவர் குடிக்கு ஆளாயிருந்தார். மனிதனது சுயேச்சையின் அளவை அதிகப் படுத்திக் கூறும் பழக்கமுடையராயிருந்தார். மனத் தளர்ச்சிக்கு இரையானபோது, குருதேவரின் சீடர்களுள் ஒருவரான ராம்சந்திர தத்தரால் ஸ்ரீராம கிருஷ்ணரிடம் கொண்டுவரப்பட்டார். குருதேவர் ஓர் அடியாரை, இறைவனிடம் அடைக்கலம் புகும் நெறியைப் பின்பற்றுமாறு வேண்டுவதை அவர் கேட்டதும் அதில் மனங்கவியப்பெற்றார். ஆனால் அதுமுதலே அவ்வாறு செய்யமுயன்றும் தமது பழைய தோழர்களையும் குடியையும்விட இயலாதவராயினர், ஒரு நாள் குருதேவர் அவரது முன்னிலையில், "ஒரு மனிதன் விரும்பத்தகாத ஓரிடம் செல்லும்போது, அவன் தேவியையும் ஏன் உடனழைத்துச் செல்வதில்லை?" என்று கூறினார். சுரேந்திரரிடம் அவர் "மதுவை மதுவென்ற நினைவோடு ஏன் குடிக்கவேண்டும்? அதைக் காளிக்குச் சமர்ப்பித்தபின், அதனைப் பிரசாதமாகக் கருதி உட்கொள்க. ஆனால் நீர் வெறியடையாதவாறு பார்த்துக் கொள்ளும். உமது தலை சுற்றக்கூடாது, உமது நினைவுகளும் அடங்காது திரியக்கூடாது. முதலில் சாதரணமான ஒரு கிளர்ச்சி உண்டாவதை நீர் உணர்வீர்; ஆனால் பின்பு விரைவில் ஞான நிலைக்கு மனம் உயர்வதை அனுபவிப்பீர்" என்று போதித்தார். படிப்படியாகச் சுரேந்திரரது வாழ்க்கை முழுவதும் மாறுதல் அடைந்தது. "எனது செலவிற் பெரும் பகுதியை ஏற்றுக் கொள்ளும்படி தேவியம்மையின் ஆணை பெற்றவருள் இவரும் ஒருவர்" எனக் குருதேவர் அவரைப்பற்றிக் குறிப்பிடுவார். குருதேவரது நலத்திற்காகச் சுரேந்திரர் தமது பணத்தைத் தராளமாகச் செலவிடுவார்.

மகேந்திரர் என்னும் ம—

'ம'—என்னும் பெயராற் பலரும் நன்கறிந்துள்ள மகேந்திரநாத் குப்தா என்பவர் 1882 பெப்ரவரியில் தக்ஷிணேசுவரம் வந்து சேர்ந்தார். அவர் பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தவர், கல்கத்தாவில் சியாம்பாசாரிலுள்ள 'வித்யாசாகர் உயர்தரப் பள்ளிக்கூட'த்தின் தலைமை ஆசிரியர். முதன்முறை அவரைப் பார்த்தபோதே குருதேவர் அவரைத் தமது சீடர்கள் எனக் "குறியிடப்" பெற்றவருள்

ஒருவர் என உணர்ந்து கொண்டார். மகேந்திரர் தம் நாட்குறிப்புப் புத்தகத்துள் ஸ்ரீராமகிருஷ்ணர் அவருடைய அடியார்களோடு நிகழ்த்திய சம்பாஷணைகளைக் குறித்துவைத்தார். உலகத்தின் சமய சரித்திரத்திலே புத்தர், கிறிஸ்து என்பாரது வகுப்பினைச் சார்ந்ததாக ஒப்புக்கொள்ளப்படும் ஒரு பெரியாரின் மொழிகளை நேராக இருந்து எழுதியது இதுவே முதன்முறை, இந்த நூல் அந்த நாட்குறிப்புப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பே. ஞான தாகமுள்ள பல இளைஞரோடு நேரிற் பழகி, அவர்கட்குள் ஸ்ரீ ராமகிருஷ்ணரது உபதேசத்தைப் பரப்புவதற்கு மகேந்திரரே கருவியாவார்.

நாக் மகாசயர்

நாக் மகாசயர் என்று அழைக்கப்படும் துர்க்கா சரண நாக் ஸ்ரீராமகிருஷ்ணருடைய இல்லற அடியார்கட்குள்ளே ஒரு முன்மாதிரிபோல வாழ்ந்தவர். உலகப்பற்றுதலிலை ஒரு சிறிதும் மாசுறாது உலகத்தில் வாழ்தல் எனும் குரு தேவரது இலக்கிய வாழ்க்கையின் வடிவமாயிருந்தார் அவர். அவர்க்குச் சந்நியாசியாகத் தீவிரமான ஆசையிருந்தும், ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு துறவியின் மன நிலையோடு உலகில் வாழுமாறு அவரை வேண்டினர்; சீடரும் உண்மையாகவே அக்கட்டளையை நிறைவேற்றினர். அவர் ஓர் ஏழைக் குடும்பத்திற் பிறந்தவர்; தமது இளம் பருவத்தும் வறியாருடைய துன்பங்களைக் குறைத்தற்காகப் பன்முறை எல்லாவற்றையும் தியாகம் பண்ணுவாராயினர். சிறு வயதிலே அவர்க்கு மணம்புரிய நேர்ந்தது; அம்மனைவியின் மரணத்திற்குப் பின், தமது தந்தையின் கட்டளைக்கு இணங்கி மறுமுறையும் மணம் புரிந்துகொண்டனர். ஆனால், அவர் தமது மனைவியாரிடம் பின்வருமாறு கூறலானர்: "உடல் வாழ்வு சம்பந்தமான உறவு ஒருக்காலும் நிலைப்பதில்லை. எவனொருவனுக்குத் தனது முழு நெஞ்சோடும் அன்பை இறைவன்மீது சொரியக்கூடுமோ அவனே உண்மையிற் பாக்கியவான். உடல்மீது ஒரு சிறிது பற்றுவைப்பினும், அது பல பிறப்புகட்கு நிலைத்து நிற்கும். ஆதலின் இந்த ஊன் கூட்டிலே பற்று வையாதே. தேவியின் திருவடிகளிற் சரணம் புகுக; இவ்வாறு உனது இம்மை மறுமை வாழ்வுகள் மேன்மையுறும்." குரு தேவர் அவரை ஒரு "ஜொலிக்கும் ஒளி" யென்று பேசுவார். அவர் ஸ்ரீராம கிருஷ்ணரது ஒவ்வொரு மொழியையும் மிக்க சிரத்தையோடு ஏற்றுக்கொள்வார். குருதேவர் ஒருநாள் மருத்துவர்க்கும் வழக்கறிஞர்களுக்கும் (வக்கீல்கட்கும்) தரகுக்காரர்களுக்கும் ஞானநெறியில் அதிக முன்னேற்றம் அடைவது அரிது என்று கூறுவதை அவர் கேட்டார். மருத்துவர்களைப்பற்றி அவர் "மனம் சிறிய மருந்துச் சொட்டுக்களைப் பற்றிக்கொண்டிருக்குமாயின், அது அகண்ட பரம்பொருளை எவ்வாறு கருத முடியும்?" என்று சொன்னர். அது துர்க்கா சரணரது மருத்துவத் தொழிலுக்கு முடிவை உண்டுபண்ணிற்று; மருந்துகள்

அடங்கிய தமது பெட்டியைக் கங்கைக்குள் அவர் எறிந்தார். அவர்க்கு எளிய உணவிற்கும் உடைக்கும் குறை ஏற்படாது என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவர்க்கு உறுதி கூறினர். சாதுக்கட்குப் பணிசெய்யுமாறு அவர்க்குக் கட்டளையிட்டனர். உண்மையான சாதுக்களை எங்கே காண்பது என்று கேட்டபோது, குருதேவர் அவரை நாடி சாதுக்கள் வருவர் என்று கூறினர். துக்காசரணரைப் பார்க்கிலும் அதிகக் கடுமையான தவ வாழ்க்கை எந்தத் துறவியும் வாழ்ந்திருக்க முடியாது.

கிரிஷ் கோஷ்

கிரிஷ் சந்திரகோஷ் பிறவியிலே கடவுளை எதிர்த்துப் போராடுபவர். ஐயவாதி, ஒரு கட்டுக்கும் உட்படாதவர், ஒரு குடிகாரர். அவர் அக்காலத்திய வங்காள நாடகம் எழுதுவோருக்குள் அனைவரிலும் பெரியார், தற்கால வங்காள நாடகமேடை நடிப்புக்குத் தந்தையாவார். மற்றைய இளைஞரைப் போன்று மேற்கத்தியார்க்குரிய கெட்ட பழக்கங்களையெல்லாம் பருகியவர். அவர் தீய வாழ்க்கையில் மூழ்கியவர்; சமயம் ஒரு மோசடி யென்பது அவரது உறுதியான முடிபு, வாழ்க்கையிலே ஒரு சிறிது விளையாட்டேனும் கிடைக்க வழியிருப்பதைக் கருதி, அவர் உலகாயதக் கொள்கையையும தாங்கிப் பேசுவார். ஆனல், வரிசையாக நிகழ்ந்த துயரங்கள் அவர்க்கு அதிர்ச்சியை உண்டு பண்ணின; வாழ்க்கைப் புதிரைத் தீர்க்க அவர்க்கு ஆவல் கிளர்ந்தது. ஞான வாழ்வில் குருவின் துணை இன்றியமையாதது என்றும், குருவை இறைவனுகவே கருதவேண்டும் என்றும் மக்கள் சொல்ல அவர் கேட்டிருப்பதுண்டு. ஆனல் கிரிஷ் மனித இயற்கையைப் பழக்கத்தால் நன்கறிந்திருத்தலின், ஒரு மனிதனிடம் பூரணத் தன்மையைக் காண்பது அவர்க்கு இயலாது போயிற்று. அவர் முதன்முறை ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் கண்டபோது அவரது மனம் அப் பெரியாரிடம் சற்றும் கவியவில்லை. ஒரு 'ஸர்க்கஸ்'ஸில் அசாதாரணமான ஒரு வித்தையைப் பார்த்ததாக உணர்ந்தவரைப்போல் அவர் வீடு திரும்பினர்; ஏனெனில் குருதேவர் தமது உணர்வு அரைப்பங்கு உன்முகமான நிலையில் இருந்தபோது விளக்குகள் அறையில் எரிந்துகொண்டிருந்த சமயத்தும், அது மாலை வேளையோ என்று விசாரித்தார். ஆனலும் இருவர் சென்ற பாதைகளும் ஒன்றையொன்று வெட்டுவனவாயின; அதனல் கிரிஷ் பின்னும் அவரைச் சந்தியாமல் விலக, வழியில்லாது போயிற்று. குருதேவர் கிரிஷின் 'நக்ஷத்திர நடன சாலை'யில் ஒரு நாடகத்தைப் பார்க்கலானர், இந்த சந்தர்ப்பத்தும், அவரிடம் தமது மனதைக் கவரக்கூடிய எதையும் கிரிஷ் காணமுடியாதவராயிருந்தார். ஆயினும், குருதேவர் தமது அடியார்களோடு ஆடிக் கொண்டும் பாடிக்கொண்டும் இருந்ததைக் கிரிஷ் காணும்படி நேர்ந்தது. அவரிடமிருந்து தொற்று நோய்போல ஒரு சக்தி தம்மிடம் புகுவதை உணர்ந்தார்;

அவர்களோடு கலந்துகொள்ள விரும்பினர்; பிறர் தம்மை ஏளனம் செய்வார் என்ற அச்சத்தால் தம்மைத் தடுத்துக்கொண்டார். இன்னொருநாள் ஸ்ரீ ராம கிருஷ்ணர் அவர்க்கு ஞானபோதனை வழங்கத் தயாராயிருந்தார்; அப்போது கிரிஷ் அவரிடம், "போதனைகளைக் கேட்க எனக்கு அவசியமில்லை. யானே பல போதனைகளை எழுதியுள்ளேன். அவை எனக்கு எவ்விதத்தும் பயன்படா. தங்களால் இயலுமானால் நன்கு புலப்படக்கூடிய வழியில் எனக்கு உதவி செய்வீர்களாக" என்று வேண்டினர். இதனால் குருதேவர் மனமகிழ்ந்து நம்பிக்கையை வளர்க்குமாறு கிரிஷிடம்சொன்னார்.

காலம் கழியக் கழிய, சீடருடைய அக வாழ்க்கையை மௌனமாக மலரச் செய்பவரே குரு என்பதைக் கிரிஷ் அறியத் தொடங்கினர். அவர் குருதேவரை மாறாது பின்பற்றிய அடியாரானார். அவர் குருதேவர்மீது அவமரியாதையான வார்த்தைகளைச் சொரிவார், அவர் முன்பு குடிப்பார். மற்ற அடியார்கள் கண்டு வியப்பும் அச்சமும் கொள்ளும் அளவிற்குச் சுயேச்சைப்படி அவரிடம் ஒழுகுவார். ஆனால் கிரிஷின் நெஞ்சிலே மென்மையும், நன்றியும், சிரத்தையும் இருந்ததைக் குருதேவர் அறிவார். கிரிஷ் நாடக மேடையை விட்டுவிட அவர் அனுமதிக்கவில்லை. குருதேவரது அடியார் ஒருவர் அவரிடம் 'குடியை விட்டு விடும்படிக் கிரிஷிடம் சொல்லக் கூடாதா?' என்றபோது, அவர் கண்டிப்பான குரலில் "அது உனது காரியமோ? அவருடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டவர் அவரைக் கவனித்துக் கொள்வார். கிரிஷ் வீரத்தன்மை வாய்ந்த ஒரு வகை அடியார். குடி அவரைக் கெடுக்காது என்று நான் சொல்கிறேன்" என்று பதிலளித்தார். வேரூன்றியுள்ள பழக்கங்களைக் களையும்படி ஒரு மனிதனைத் தூண்ட வெறும் வார்த்தைகளால் இயலாது என்பதையும், ஆனால் அன்பு வாயாற் பேசாது தனது சக்தியைச் செலுத்துவதனால் அற்புதங்களையும் இயற்றக்கூடும் என்பதையும் குருதேவர் அறிந்திருந்தார்; இக் காரணத்தால் அவர் சீடரைக் குடியை நிறுத்தும்படிக் கூறவில்லை; ஆயினும் முடிவிலே கிரிஷ் அப் பழக்கத்தை விட்டுவிட்டார், கிரிஷிக்கு முற்றிலும் சுயேச்சை உண்டு என்று உணர இடங்கொடுத்தமையால், அவரது சங்கற்பத்தை ஸ்ரீ ராமகிருஷ்ணர் வலுப்படுத்தினர்.

ஒரு நாள் கிரிஷ் தமக்கு எந்த ஞானசாதனத்தையும் முறைப்படி பழகும் கட்டுப்பாட்டுக்கு அடங்கத் தமக்கு இயலாமை பற்றி மனவாட்டம் அடைந்தார். குருதேவர் உயர்ந்த ஞான நிலை எய்தியவராய் அவரிடம், "சரி, சரி, அப்படியாயின் எனக்கு உனது வக்காலத்தைக் கொடுத்துவிடு. இது முதல் உனது பொறுப்பை யானே ஏற்றுக்கொள்கிறேன். நீ ஒன்றும் செய்ய வேண்டியதில்லை" என்று கூறினர். கிரிஷ் தமது பாரம் நீங்கியதைக் கருதிப் பெருமூச்செறிந்தார். தமது ஞான சம்பந்தமான பொறுப்பை ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஏற்றுக்கொண்டார் என்பதை நினைந்து கிரிஷ் மனமகிழ்ந்தார்; ஆனால் தாமும் தமது சுயேச்சையை விட்டொழித்துத் தம்மை ஸ்ரீராமகிருஷ்ணரது கையில்

உள்ள ஒரு பொம்மை போன்று ஆக்கிக்கொள்ளவேண்டும் என்பதைக் கிரிஷ் அப்போது உணரமற் போயினர். இப்புதிய மனநிலைக்கு ஏற்றவாறு குரு தேவர் அவர்க்குப் பயிற்சி அளிக்கத் தொடங்கினர். ஒருநாள் கிரிஷ் ஓர் அற்பக் காரியத்தைக் குறித்து "சரி, அதை நான் செய்வேன்" என்று கூறினர். குருதேவர் "அவ்வாறு கூறக்கூடாது" என்று அவரைத் திருத்தினர். "நீர் அகங்காரத்தோடு அவ்வாறு பேசக்கூடாது. 'இறைவனுக்குத் திருவுளமானால் அதைச் செய்வேன்' என்று நீர் சொல்லவேண்டும்" என்று போதித்தார். கிரிஷ் அதை உணர்ந்துகொண்டார். அதுமுதல் அவர் தமது சொந்தப் பொறுப்பைப்பற்றிய எண்ணத்தையெலாம் விடவும், இறைவனது இச்சைப்படியே நடக்கட்டும் என்று தம்மை ஒப்புவித்துவிடவும் முயன்று வந்தார். அவரது மனம் ஸ்ரீ ராமகிருஷ்ணரை அடிக்கடி சிந்திக்கத் தொடங்கியது. அறியாமலே செய்த இத்தியானம் அவரது முரட்டு இயல்பைச் செம்மையாக்கியது.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகலிலும் மற்ற விடுமுறை நாட்களிலும் இல்லற அடியார்கள் பொதுவாக ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பார்க்க வருவார்கள். இவ்வாறு அந்தச் சகோதரர்களின் சங்கம் ஒன்று மெல்ல மெல்ல வளரலாயிற்று; குரு தேவரும் அவர்கட்குள் சகோதர மனப்பான்மை உண்டாவதைப் போற்றி வந்தார். இடையிடையே அவரை ஓர் அடியார் தமது வீட்டுக்கு வருமாறு அழைக்க, அதற்கு அவரும் இசைவார். அவ்வீட்டிற்கு மற்றைய அடியார் களையும் அழைப்பார். கீர்த்தனத்திற்கு அப்போது ஏற்பாடு செய்யப்படும்; எல்லோரும் ஆட்டத்திலும் பக்திச் சுவையையுடைய சங்கீதத்திலும் மணிக் கணக்காகப் பொழுது போக்குவார். குருதேவர் ஒரு சமயம் சமாதியில் அழுந்துவர், மற்றொரு சமயம் மத சம்பந்தமான சம்பாஷணைகளிலும், தமது சொந்த ஞான அனுபூதிகளை எடுத்துரைப்பதிலும் நெஞ்சார ஈடுபடுவார். தக்ஷிணேசுவரத்திற்குச் செல்லமுடியாத பல ஜனங்கள் இக்கூட்டங்களிற் கலந்துகொண்டு, தாம் பாக்கியம் பெற்றதாக உணர்வர், அம்மாதிரியான சந் தர்ப்பம் நல்ல விருந்தோடு முடிவுபெறும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரோடு பழகினவர்களுள், பாண்டித்தியத்தாலோ செல்வத் தாலோ எங்கும் மதிப்புப்பெற உரிமை பெற்றிருந்த பலர் இருந்தனர். ஆனால் வெளி ஆடம்பரத்தாலும், பெருமையாலும் நாவன்மையாலும் அவர் மனக் குழப்பம் அடைவதில்லை. விவேகமில்லாத ஒரு பண்டிதரை அவர் வெறுங் தூசிற்குச் சமானமாகக் கருதுவார். அவர் மக்களின் நெஞ்சங்களிலே இறைவனது ஒளி உள்ளதா என்று தேடிப்பார்ப்பார்; அது காணப்படவில்லை யாயின், அம்மக்களோடு ஒரு சம்பந்தமும் வைத்துக் கொள்ளமாட்டார். ஐரோப்பிய மனப்பான்மையுடைய கிறிஸ்து தாச பால் என்பார்க்குக் குரு தேவர் துறவை வற்புறுத்தல் பிடிக்கவில்லை. அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் பின் வருமாறு கூறினர்: "துறவு துறவு என்னும் இப்பல்லவி நமது நாட்டைப் பாழாக்கி விட்டது. இக் காரணத்தினாலே இந்தியர் இன்று அடிமை நாட்டின

ராக வாழ்கின்றனர். பிறர்க்கு நன்மை செய்தலும், அறியாதார் வாசலுக்குக் கல்வியைக் கொண்டு வருதலும், எல்லாவற்றிற்கும் மேலாக, நாட்டின் உலக வாழ்க்கை சம்பந்தமான நிலைமைகளைச் சீராக்குதலும்—இவையே இப்போது நமது கடமைகளாக வேண்டும். சமயமென்றும் துறவென்றும் கத்துதலால், அதற்கு மாறுக நமக்குப் பலவீனம் ஓங்கும். வங்காள தேச இளைஞர் நாட்டை உயர்த்தும் செயல்களில் மட்டும் ஈடுபடுமாறு தாங்கள் அவர் கட்குப் போதிக்கவேண்டும்.'' ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரது உள்ளத்தைத் துளைத்துக் காணும் பார்வையை அவர்மீது செலுத்தினர்; அங்கே தெய்வ ஒளியைக் காணவில்லை. உடனே கடுமையான குரலோடு இவ்வாறு கூற லானர்: ''அற்ப அறிவுள்ள மனிதரே! குணங்கள் அனைத்திலும் மிகச் சிறந்த தென நமது சாஸ்திரங்களால் புகழப்படும் தூய்மையையும் பக்தியையும் நீர் இழி வாகப் பேசத் துணிந்தீர்! இரண்டு பக்கம் ஆங்கிலம் வாசித்தபின் நீர் உலகத்தை அறியப் பெற்றதாக நினைத்துவிட்டீர்! நீர் உம்மை எல்லாம்-அறிந்தவராக நினைப் பதுபோல் தோன்றுகிறீர். சரி, மழை பெய்ய ஆரம்பித்ததும் கங்கையிலே பிறக்கும் அந்தச் சிறிய நண்டுகளை நீர் பார்த்துள்ளீரோ? இப்பெரும் பிரபஞ் சத்திலே நீர் அச் சிறு பிராணிகளில் ஒன்றையும்விட மிக அற்பமானவர். உலகத்திற்கு உதவி செய்வதாகப் பேச நீர் எப்படித் துணிந்தீர்? ஈசன் அக் காரியத்தைப் பார்த்துக்கொள்வார். அதைச் செய்ய உம்மிடத்தில் சக்தி இல்லை.'' சற்று சும்மா இருந்துவிட்டுக் குருதேவர் பின்னும் கூறுவார்: ''நீர் பிறர்க்காக எவ்வாறு வேலை செய்ய முடியும் என்பதை எனக்கு விவரிக்க இயலுமா? பிறர்க்கு உதவி செய்தல் என்பதற்கு நீர் என்ன பொருள் கொள்ளு கிறீர் என்பதை நான் அறிவேன். அநேகம் மக்கட்கு உணவளித்தல், அவர் கட்கு நோய் வரும்போது சிகிச்சை செய்தல், ஒரு சாலையை அமைத்தல், ஒரு கிணறு தோண்டுதல்—இவ்வளவுதான் அல்லவா? இவை நல்ல செயல்கள் என்பதில் ஐயமில்லை; ஆனால் இப்பிரபஞ்சத்தின் விரிந்த தன்மையோடு ஒப் பிடும்போது அவை எவ்வளவு அற்பமாகும்? இந்த வழியில் ஒரு மனிதன் எவ்வளவு தூரம் செல்லமுடியும்? நீர் எத்தனை பேரைப் பஞ்சத்திலிருந்து காப் பாற்றுவீர்? முறைசுரம் ஒரு மாகாணம் முழுவதையும் நாசமாக்கிவிட்டது; அதன் பலமான தாக்குதலைத் தடுக்க உம்மால் யாது செய்யமுடியும்? ஈசனே உலகத்தைப் பார்த்துக்கொள்கிறார். ஒரு மனிதன் அதிகாரம் பெறட்டும், அவ ருடைய சக்தியைப் பெற்றுக்கொள்ளட்டும்; அப்போதே, அப்போதுதான் அவன் பிறர்க்கு நன்மை செய்வதைப் பற்றி நினைக்கலாம். ஒரு மனிதனிட மிருந்து அவனது அகங்காரத்தை முற்றும் பறித்துவிடவேண்டும். அப்போது தான் ஆனந்தமயி ஆன தேவி அவனை உலகத்துக்காக வேலை செய்யும்படிச் சொல்லுவாள்.'' தருமம்போலப் பாவிக்கும் உலக உபகாரச் செயலில் ஸ்ரீராம கிருஷ்ணர் நம்பிக்கை வைக்கமாட்டார். அவர் அதற்கு இடங் கொடாதிருக்கு மாறு மக்களை எச்சரிப்பார். உலக நன்மைக்கெனச் செய்யப்படும் செயல்கள்

பலவற்றுள், அகங்காரமோ, வீண் பெருமையோ, புகழாசையோ, வாழ்க்கையில் உண்டாகும் அலுப்பைக் கொல்லும் பொருட்டு ஏற்படுத்திக்கொள்ளும் ஒரு பயனற்ற உள்ளக்கிளர்ச்சியோ, குற்றமுள்ள நெஞ்சின் குறு குறுப்பைத் தணிக்க ஒரு முயற்சியோ—இவற்றைத் தவிர வேறென்றையும் அவர் பார்த்ததில்லை. உண்மையான தருமம் ஈசன் மீதுள்ள அன்பினால் விளைவது, ஜீவசேவையை ஈசுவர பூஜையாக எண்ணிச் செய்வதே அது" என்று அவர் போதித்தார்,

பிற்காலத் துறவியர்

துறவிகளாகும் விதியுடைய இளைஞர்க்குக் குருதேவர் அகத்தும் புறத்தும் துறத்தல் (உள்துறவும் வெளித்துறவும்) என்னும் செங்குத்தான பாதையை எடுத்துக் காட்டினார். முழுப் பிரம்மசரியம் எனும் விரதத்தை அவர்கள் கைப்பற்றவேண்டும்; பொன்னாசை பெண்ணாசைகளைப் பற்றிய எல்லா நினைவுகளையும் நீக்கவேண்டும். பிரம்மசரியப் பழக்கத்தால் சாதகர்கள் ஒரு நுட்பமான சக்தியை வளர்த்து, அது மூலமாக இறைவனைப்பற்றிய ஆழ்ந்த இரகசியங்களை அறிதல் வேண்டும். அவர்கட்குத் தன்னடக்கம் முடிவானது, கட்டாயமானது, முழுமையாக வேண்டுவது. துறவிகள் மக்கட்குக் குருவாவார்; ஆதலின் அவர்களுடைய வாழ்க்கை முற்றிலும் மாசற்றதாய் இருத்தல் வேண்டும். தமது மிருக இச்சைகளை எழுப்பக் கூடிய ஒரு படத்தைப் பார்த்தலும் அவர்கட்குத்தகாதது. பெண்ணாசையும் பொன்னாசையும் தோயாத உள்ளங்களையுடையவரும், குருதேவர் தாம் கட்டிய ஞானவாழ்க்கைக் கருவில் வார்த்து உருவமைக்கும்படி நெகிழ்ந்த தன்மையுடையவரும் ஆன இளைஞர்க்குள்ளிருந்தே தமது வருங்காலத் துறவியரைப் பொறுக்கி யெடுத்தார். அவர்கட்கு விவேக வைராக்கிய நெறியைப் போதிக்கும்போது, இல்லறத்தார் தம் அருகே எங்கேனும் இருப்பதையும் அனுமதியார். இவர்கட்குள் மிக முக்கியமான இரு சீடர்களாவார் நரேந்திரரும் ராக்கலும்.

ராக்கால்

ராக்கால் தக்ஷிணேசுவரத்திற்கு வருமுன்னேயே, குருதேவர் தமது ஞானக் காட்சியால் அவரைத் தமது ஞான குமரனாகவும், பிருந்தாவனத்தில் கிருஷ்ணனது விளையாட்டுத் தோழனாகவும் தரிசனம் பெற்றிருந்தார். ராக்கால் தனவந்தரான பெற்றோர்க்குப் பிறந்தவர். அவர் தமது குழந்தைப் பருவத்திலே ஆச்சரியமான ஞான இயல்புகளை வளர்த்து வந்தனர்; தேவர்களையும் தேவியரையும் வணங்குதலே அவர்க்கு விளையாட்டாயிற்று. ஏறக்குறைய வயது பதினைந்திருக்கும்போதே அவர் மனமோகன மித்திரரின் தங்கையை மணந்திருந்தனர்;

அம் மைத்துனரிடமிருந்தே குருதேவரைப்பற்றி முதன் முதலாகக் கேள்விப் பட்டார். அவரது தந்தையார் ஸ்ரீ ராமகிருஷ்ணரோடு அவர் பழகுவதைத் தடுத் தார். ஆனல் பிற்பாடு பல பெயர் பெற்ற மக்கள் தக்ஷிணேசுவரத்திற்கு வந்து போவதை அறிந்து சும்மாவிருந்தார். குருதேவர்க்கும் அவரது அருமைச் சீடர்க்கும் உள்ள உறவு தாய்க்கும் சேய்க்கும் உள்ள உறவே. பிறர்க்கு மறுக் கப்பட்ட பல சுதந்திரங்களை ஸ்ரீராமகிருஷ்ணர் ராக்காலுக்கு அளிப்பார். ஆனலும் தகாத செயல்கட்காக அப் பையனைக் கண்டிக்கவும் அவர் தயங்கார். ஒரு சமயம் மற்றைய பையன்களும் குருதேவரது அன்பிற்குப் பாத்திரமான தைக் கண்டதனல், ராக்காலுக்குக் குழந்தைக்குரியதுபோன்ற பொருமையுண் டாயிற்று. அவர் விரைவில் அதை வென்ருர்; தமது குரு உலக முழுவதற்கும் குருவாவதை உணர்ந்தார். குருதேவர் அவரது திருமணத்தைப் பற்றிக் கேள்வியுற்றபோது கவலையுற்ருர்; ஆனல் அவரது மனைவி ஞான இச்சை யுடையவளாயிருந்தமையால் அவரது முன்னேற்றத்திற்கு ஒரு தடையாகாள் என்பதை அறிந்து கவலையொழிந்தார்.

நரேந்திரர்

ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்குத் தமது உபதேசத்தை உலகமெங்கும் நாற்றிசை யிலும் பரப்புவதற்கு ஒரு வலிமையுள்ள கருவி வேண்டியிருந்தது. மெல்லிய உடலும் நுண்ணிய உறுப்புகளும் அமைந்த அவர்க்கு மிகப் பரந்த இடங்கள் வழியாகப் பெரும் பிரயாணங்களைச் செய்வது இயலாததேயாம். ஆதலின் அவர்க்கு வேண்டிய கருவியாக, அவரது அருமை நரேன் என்னும் நரேந்திர நாத் தத்தரே—பிற்காலம் உலகெலாம் சுவாமி விவேகாநந்தர் எனும் பெய ரோடு விளங்கிய அவரே — அமையலானர். நரேந்திரநாத்தைச் சந்திக்கு முன்பே குருதேவர் அவரை பிரம்மத்தியானத்தில் மூழ்கியிருந்த ஒரு ரிஷியாக ஒரு ஞானக் காட்சியில் கண்டிருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இந்தத் திவ்விய அனுபவத்தை வருணிக்கும்போது ஒரு நாள் பின்வருமாறு வருணித்தார்: ஒரு நாள் அவர் தியானத்தில் ஆழ்ந்திருந்தபொழுது அவரது மனம் உடலை விட்டு உயரப் பறந்து மேலே சென்றது. பல தெய்வீக உலகங்களையெல்லாம் தாண்டிச் சென்றது; அத் தெய்வீக உலகங்களில் வாழ்ந்த தேவர்களும் தேவி யரும் கீழே நின்றனர். பிறகு அவர் விவகாரிக உலகம் முழுவதையும் கடந்து சென்று பாரமார்த்திக உலகத்திற் புகுந்தார்; அங்கே ஏழு தூய ரிஷிகள் (சப்த ரிஷிகள்) பிரம்மத் தியானத்தில் முழ்கியிருந்ததைக் கண்டார். இவ்வேழு ரிஷிகளும் தூய்மையில் தேவர்களையும் தேவியரையும் மிஞ்சியிருத்தல்வேண்டும் என்று குருதேவர் உணர்ந்தனர். அவர்களை உற்று நோக்கிக்கொண்டிருக்கும் போதே, பாரமார்த்திகத்தில் ஒரு பகுதி உறைந்ததுபோல ஆகி, ஓர் அழகிய குழந்தையின் வடிவைப் பெற்றது; அந்த ரிஷிகளில் ஒருவரது மடிமீது அக்

குழந்தை தவழ்ந்து ஏறிற்று. அதன் மெல்லிய பரிசத்தால் அத்தூய இருடியார் தமது கண்களைத் திறந்தார்; அக் குழந்தையைப் பேரன்போடு நோக்கினர். அதுதான் மண்ணுலகில் மனித உடலைத் தரித்துக்கொள்ளப் போவதாகக்கூறி, உலக மக்களைக் கடைத்தேற்றும் தனது பணிக்கு உதவி செய்யும் பொருட்டு அத்தூயார் கீழிறங்கிவரமாட்டாரா என்று அவரைக் கேட்டது. தூயார் சம்மதித்தார். நரேந்திரரே அந்த ரிஷி யென்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறினர், மேலும் பிறர் வினவியதற்குப் பதிலாகத் தாமே அத் தெய்வக் குழந்தையென்றும் உரைத்தார்.

நரேந்திரர் ஒரு செல்வமுள்ள காயஸ்தக் குடும்பத்தில் 1863 ஜனவரி 12-ல் கல்கத்தாவிற் பிறந்தார். அவரது தாயார் ஹிந்து மத இதிகாசக் கல்வியில் ஊறியிருந்தவர்; கல்கத்தா உயர்தர நீதி மன்றத்தில் (ஹைகோர்ட்டில்) புகழுற்ற ஒரு வழக்கறிஞராயிருந்த அவரது தந்தையார் மதத்தில் அஞ்ஞேயவாதி. ஏழைமக்கட்கு நண்பர், சமூகக் கட்டுப்பாடுகளைக் கேலி செய்பவர். நரேந்திரர் பையனாயிருந்தபோதும் காளைப் பருவத்தும் அவரிடம் உடலைப்பற்றிய மிக்க தீரமும், சமயோசித புத்தியும், தெளிவான கற்பனைச் சக்தியும், ஆழ்ந்த நினைவு வலிமையும், நுண்ணிய அறிவும், அசாதாரணமான ஞாபகத் திறமையும். உண்மையிற் பிரியமும், தூய்மையில் ஒரு வெறியும், சுதந்திர மனப்பான்மையும், இளகிய நெஞ்சமும் வாய்ந்திருந்தன. சங்கீத நிபுணரான அவர் பௌதிகம், வான நூல், கணிதம், தத்துவம், சரிதம், இலக்கியம் ஆகியவற்றிலும் தேர்ச்சிபெற்றிருந்தார், மிக்க வனப்புடைய இளைஞரானர். குழந்தைப் பருவத்தும் அவர் தியானம் பழகினர், மனதை ஒரு முனைப்படுத்துவதில் மிக்க திறமை பெற்றிருந்தார். சொல்லிலும் செயலிலும் சுயேச்சையையும் ஆத்திரத்தையும் உடையராயினும், கடுமையான, சமய சம்பந்தமான பிரம்மசரிய விரதம் பூண்டவராய், தூய்மையெனும் தீ உடலிலோ உள்ளத்திலோ உள்ள அற்ப மாசினாலும் வாடாதபடி எப்போதும் காத்துவந்தார்.

அவர் கல்லூரியில் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த தத்துவ நூலாரின் தருக்கவாதக் கொள்கைகளைக் கற்கும்போது, இறைவனிடத்தும் சமயத்திலும் இளமையில் அவர்க்கிருந்த நம்பிக்கை குலைவதாயிற்று. மதத்தின் நம்பிக்கையால் மட்டும் ஒப்புக்கொள்ள அவர் விரும்பார்; பகவானது உண்மைக்கும் நிரூபணம் வேண்டும் என்பார். ஆனால் உலகப் பொதுவான தருக்க அறிவு மட்டுமோ சுறுசுறுப்பின்றியும் பலவீனமானயும் உள்ளது என்பதை, உணர்ச்சி பொங்கும் தமது இயல்பாலே விரைவில் அவர் உணர்ந்துகொண்டார். இன்ப துன்பங்கட்கு எளிதே வசப்படும் இயல்புடைய அவர் வெறுங் கருத்தள வாயுள்ள ஓர் இலக்கியத்தில் திருப்தியற்றவராய், மயங்கும் வேளையில் தமக்கு உதவி புரிய ஒரு பிரத்தியக்ஷ ஆதரவை நாடிவந்தார். உடலில் வாழும்போதே பூரண நிலையிலுள்ளமையினால் தமது மனத்தின் கொந்தளிப்பை அமர்த்தவல்ல ஒரு சக்தி வாய்ந்த குருவைப்பெற அவர் விரும்பினர். காந்தம் போன்ற

கேசவரின் தோற்றப் பொலிவாற் கவரப்பட்ட அவர் பிராம்மோ சமாஜத்தைச் சேர்ந்து, அவரது பாடுங்குழுவினரில் (கூட்டத்தாரில்) ஒரு பாடகரானர். ஆனல் சமாஜத்தில் அவர் இறைவனைத் தரிசித்திருப்பதாகக் கூறக்கூடிய ஒரு குருவையும் காணவில்லை.

மனப் போராட்டமும் கடுந்துயரமும் மிக்க நிலையிலே நரேந்திரர் தக்ஷிணேசுவரத்திலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்து சேர்ந்தார், அப்போது அவர்க்கு வயது பதினெட்டு; அவர் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் கற்றிருந்தார். ஞான விஷயத்தில் சிறிதும் சிரத்தையற்ற சில நண்பர்களோடு அவர் குரு தேவரது அறையிற் புகுந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணரது வேண்டுகோளுக்கு இணங்கி, அவர் தமது சக்தியையெல்லாம் பெய்து ஒரு சில பாடல்கள் பாடினர்; அதைக் கேட்ட குருதேவர் சமாதியடைந்தார். சில நிமிஷங்கட்குப் பின் ஸ்ரீ ராமகிருஷ்ணர் திடீரெனத் தமது இருப்பிடத்தைவிட்டு எழுந்து நரேந்திரரது கையைப் பிடித்து, தமது அறையின் வடக்கேயுள்ள, தட்டியால் மறைக்கப்பட்டுள்ள தாழ்வாரத்திற்கு அவரை அழைத்துச் சென்றார். அவர்கள் தனியே இருந்தனர். நரேந்திரர் தம்மோடு பல நாட் பழகிய நண்பராக இருந்தது போல, குருதேவர் அவரை ஆதரம் பெருக அழைத்து, "ஆ! வெகுகாலம் தாமதித்து வந்துள்ளனையே! என்னை இத்தனை நாள் காத்திருக்கச் செய்யும்படி என்மீது அவ்வளவு அன்பற்றவன் ஆனையே! உலகப்பற்றுள்ள மனிதரின் வினை மொழிகளைக் கேட்டுக் கேட்டு என் செவிகள் அலுத்துப்போயின. எனது உபதேசத்தை ஏற்கத் தகுதிபெற்ற யாரேனும் ஒருவரது நெஞ்சிலே எனது சக்தியை ஊற்றுவதற்காக எவ்வளவு ஆசைப்பட்டுள்ளேன்!" என்று சொன்னர். இவ்வாறு பேசும்போதே அவர் விம்மிக்கொண்டிருந்தார். பிறகு நரேந்திரரது முன்பே கைகூப்பி நின்று, மன்னுயிரின் துயரத்தைப் போக்கப் பூமியில் அவதரித்த நாராயணரென்று அவரை அழைத்தார். நரேந்திரரது கையைப் பற்றிக்கொண்டு, மறுபடி விரைவில் தனியே வருமாறு அவரை வேண்டினர். நரேந்திரர் திடுக்கிட்டார். அவர் தமக்குள்ளே, "இதென்ன! இதையா பார்க்க வந்தேன்? அவர் முழுப் பித்தராயிருத்தல் வேண்டும். யான் விசுவநாத தத்தரது குமாரன் அன்றே? இவ்வாறு என்னிடம் பேச அவர் எப்படித் துணிந்தார்?" என்று சொல்லிக்கொண்டார்.

அவர்கள் அறைக்குத் திரும்பியதும், குருதேவர் பிறரிடம் பேசியதை நரேந்திரர் கேட்டபோது, அவருடைய மொழிகளிலே தருக்க முறைக்கு இணங்கிய மனப்பான்மையும், உள்ளும் புறமும் ஒத்த தன்மையும், அவரது ஞான இயல்பை உறுதி பெறத் தெரிவிக்கும் சான்றும் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். நரேந்திரர் அவரிடம் "ஐயன்மீர், இறைவனைத் தாங்கள் கண்டதுண்டா?" என்று கேட்டபோது, அவர் "ஆம், இறைவனை யான் கண்டுளேன். யான் உன்னைக் காண்பதினும் மிகத் தெளிவாக அவரைக் காண்கிறேன். உன்னெடு பேசுவதினும் மிக நெருங்கி அவரிடம் பேசியுள்ளேன்"

என்று பதிலளித்தார். மேலும் அவர் கூறுவார்: ''ஆனல் குழந்தாய், கடவுளைக் காண வேண்டுவார் யாரே? பணத்திற்காகவும் மனைவிமக்கட்காகவும் குடங் குடமாகக் கண்ணீர் சொரிவரே மக்கள்! ஆனல் ஒரு நாளேனும் கடவுளைக் காணக் கசிந்து அழுவராயின், அவர்கள் அவரைக் காண்பது உறுதி.'' நரேந் திரர் பெரு வியப்படைந்தார். இம்மொழிகளை அவர் சந்தேகிக்க வழியில்லை. கடவுளைக் கண்டதாக ஒரு மனிதன் சொல்லக் கேட்ட முதல் தடவை அவர்க்கு அதுவே. ஆனலும் குருதேவர் கூறிய இம்மொழிகளையும், சிறிது நேரத்திற்கு முன்பு தாழ்வாரத்திலே நிகழ்ந்த காட்சியையும் பொருத்திப் பார்க்க அவர்க்கு இயலவில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு துறையில் மட்டும் பித்துப் பிடித்தவர் என்று முடிவு பண்ணி, ஒருவாறு மனங் குழம்பியவராய் வீடு திரும்பினர்.

ஏறக்குறைய ஒரு மாதங் கழிந்தபின் இரண்டாமுறை பார்க்கச் சென்ற போது, திடீரெனக் குருதேவர் நரேந்திரரைத் தொட்டார்; உடனே நரேந்திரர் தடுக்கமுடியாதவாறு தம் வச மிழந்தார்; தம்மைச் சுற்றிலுமுள்ள அறையின் சுவர்களும், மற்றைய ஒவ்வொன்றும் சுழன்று மறைவதைக் கண்டார். நடு நடுங்கியவராய் அவர் ''யாது செய்கிறீர்கள்? இல்லத்திலே எனது தாயும் தந்தையும் உள்ளனரே!'' என்று கத்தினர். அவர் தமது அகங்காரமும் முழுப் பிரபஞ்சமும் மறைந்து, இன்னதென உரைக்க முடியாத ஒரு பாழால் ஏறக் குறைய விழுங்கப்படுவதைக் கண்டார். குருதேவரோ ஒரு சிரிப்போடு அவரைப் பழைய நிலைக்கு எளிதாக மீளச் செய்தனர். நரேந்திரர் தம்மைக் குருதேவர் ஒருவேளை வசியப்படுத்தி விட்டனரோ என்று நினைக்கலானர்; ஆனல் தம்மைப்போன்ற வலிமையுள்ள ஓர் இளைஞரது மனத்தின்மீது சக்தி யைச் செலுத்தி மயக்க ஒரு துறைப்பித்தரான ஒருவர்க்கு எப்படி இயலும் என்பதும் அவர்க்கு விளங்கவில்லை. முன்னிலும் மிக்க மனக்குழப்பத்தோடு வீடு திரும்பினர். அந்தப் புதுமையான மனிதர் முன்பு தாம் இனி ஜாக்கிரதை யாய் இருக்கவேண்டும் எனத் தீர்மானித்தார்.

ஆனல் மூன்றும் முறை சென்றபோதும் அவரது நிலைமை திருந்திய பாடில்லை. இம்முறை குருதேவர் தொட்டதும், அவர் உணர்வை முற்றும் இழந்துவிட்டார். அந்நிலையில் உள்ளபோதே ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவருடைய ஞான விஷயமான முன்னிலைமைகளையும், அவரது இருப்பிடத்தையும், உலகில் அவர் செய்ய நினைத்த பணியையும், அவரது உடல் வாழ்வின் கால எல்லையை யும் பற்றி அவரிடம் கேள்வி கேட்டார். அவர் தந்த விடைகளிலிருந்து குரு தேவர் தாமே ஞானக்காட்சியால் அறிந்தவற்றையும் ஊகித்தவற்றையும் உறுதிப் படுத்திக்கொண்டார். வேறு சங்கதிகளோடு, நரேந்திரர் முன்னமே பூரண நிலையை அடைந்திருந்த ஒரு ரிஷியென்பதையும், அவர் தமது உண்மையான இயல்பை அறிந்த அன்றே தமது உடலைச் சங்கற்ப வலிமையால் யோக நிலையில் வீழ்த்திவிடுவார் என்பதையும் அறியப்பெற்றார்.

இன்னும் சில முறைகள் சந்தித்தபின், ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு துறைப் பித்தரோ, தந்திரமான மனவசிய நிபுணரோ என்ற எண்ணம் இம்மியும் இல்லாது நரேந்திரரது உள்ளத்திலிருந்தும் முற்றும் மறைந்தது. அவரது நேர்மையும் தூய்மையும், துறவும், தன்னயமின்மையும் சந்தேகிக்க இடமின்றி விளங்கின. ஆனால் நரேந்திரர்க்கு ஒரு மனிதனை, பூரணமற்ற தவறக்கூடிய ஒரு மனிதனைத் தமது குருவாக ஒப்புக்கொள்ள முடியவில்லை. பிராம்மோ சமாஜத்தின் அங்கத்தினரான நிலையில், மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே நின்று இருவரையும் சேர்த்துவைக்க ஒரு மனிதனது துணை அவசியம் என்பதை அவர்க்கு நம்ப முடியவில்லை. மேலும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பெற்றிருந்த தரிசனங்களைப் பொய்யான புறக்காட்சிகளென்றே பலரறிய இகழ்ந்து கேலி பண்ணிவந்தார். ஆயினும், தமது அந்தரங்கத்தில் குருதேவர்மீது பேரன்புடையவராயிருந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரோ, தமது அனுபூதிகளைச் சந்தேகிக்கும் ஒருவரைத் தம்மிடம் அனுப்பித்ததற்காகத் தேவியம்மையிடம் நன்றி பரராட்டி வந்தார். காசுக் கடைக்காரர் தாம் பெறும் நாணயங்களைச் சுண்டிப்பார்த்து வாங்குவது போலவே குருதேவர் தம்மைச் சோதித்துப் பார்க்கும்படி நரேந்திரரைப் பன்முறையும் வேண்டினர். தமது ஞான அனுபூதிகளையும் சமாதியையும் பற்றிய நரேந்திரரது தைக்கும் கண்டனத்தையும் கேட்டு இன்பமாக அவர் சிரித்தார். நரேந்திரரின் கூரிய மொழிகள் சில சமயம் அவரைத் துன்புறுத்தும்போது, தேவியே "நீ ஏன் அவன் சொல்வதைக் கவனிக்கின்றாய்? இன்னும் சில நாட்களில் நீ சொல்லும் ஒவ்வொரு மொழியையும் அவன் நம்புவான்" என்று அவர்க்கு ஆறுதல் சொல்வாள். நரேந்திரர் தம்மிடம் வராமலிருப்பதை அவர்க்குப் பொறுக்க முடியாது போகும். அவரைக் காணவில்லையே என்று அடிக்கடி துயரத்தால் அவர் அழுவார். குருதேவரது அன்பு நரேந்திரரைத் திகைக்க வைக்கும்; ஒரு நாள் நரேந்திரர் அவரைக் கடுமையாகக் கண்டித்து, அம்மாதிரியாகத் தம்மீது கொள்ளும் மயக்கத்தால், அவர் தமது நிலைக்கு விரைவில் இறங்கிவிடுவார் என்றும் எச்சரித்தார். குருதேவர் அதனால் பெருந் துன்பத்துக்குள்ளாகித் தேவியிடம் பிரார்த்தித்தார். அதன்பின் அவர் நரேந்திரரைப் பார்த்து, "கெட்ட பையா, இனி யான் உன் பேச்சைக் கவனிக்க மாட்டேன். நான் உன்னிடம் பகவானைக் காண்பது காரணமாகவே, உன் மேல் அன்பாயுள்ளேன் என்றும், உன்னிடம் யான் பகவானைக் காணாத அன்று, உன்னைக் காணவும் பொறுக்கமாட்டேன் என்றும் தேவியே என்னிடம் கூறி விட்டாள்" என்று சொன்னார்.

அத்வைத வேதாந்தத்தின் போதனைகளுக்கு இணங்க நரேந்திரர்க்குப் பயிற்சி அளிக்கக் குருதேவர் விரும்பினர். ஆனால், நரேந்திரரோ, தமது பிராம்மோக் கொள்கைகட்கு ஏற்பப் பயிற்சி பெற்றிருந்தமையால், ஒரு மனிதன் தன்னை ஈசனெனக் கருதுதல் முழுதும் பாதகம் எனக் கருதினர். ஒரு நாள் கோயிற் பூஞ்சோலையிலே அவர் சிரித்துக்கொண்டே ஒரு நண்பரிடம், "என்ன

பேதைமை! இந்த ஜாடியும் ஈசனும்! இக்கிண்ணமும் ஈசனும்! நாம் பார்ப்ப தெல்லாம் ஈசனும்! நாமும் ஈசனும்! இதனினும் மிக்க பொருத்தமற்ற பேச்சு வேறு இருக்க முடியாது" என்று சிரிப்போடே சொல்லிக்கொண்டிருந்தார். ஸ்ரீராமகிருஷ்ணர் தமது அறையைவிட்டு வெளிவந்து மெல்ல அவரைத் தொட் டார். மந்திர வசப்பட்டார்போல, நரேந்திரர் உண்மையாகவே ஒவ்வொன் றும் ஈசனதை உடனே காணலானார். ஒரு புதிய பிரபஞ்சம் அவரது கண்முன் தோன்றியது. மதிமயங்கிய நிலையில் அவர் இல்லந் திரும்பவே, அங்கும் உணவும் தட்டும் உண்போனும் சூழும் மக்களும் எல்லாம் ஈசனதை அவர் கண்டார். அவர் தெரு வழியாக நடந்தபோது, வண்டிகளும் குதிரை களும் ஜனக்கூட்டங்களும் கட்டடங்களும் எல்லாம் பிரம்மமாவதைக் கண்டார். தினசரி வேலையைச் செய்யவும் அவர்க்கு இயலாது போயிற்று. அவருடைய பெற்றோர் அவரைப் பற்றிக் கவலைப்பட்டார். அவர்க்கு நோயோ என்று நினைத்தார். அந்த அனுபூதியின் தீவிரத் தன்மை சிறிது தணியவும், உலகை ஒரு கனவென அவர் கண்டார். பொதுஜனச் சவுக்கத்தில் நடக்கும் போது, அங்குள்ள இரும்பு அழி உண்மைதானா என்று ஆராய்வதற்காகத் தமது தலையை அதன்மீது மோதிப் பார்ப்பார். சாதாரண நிலையை அடைய அவர்க்குப் பல நாள் ஆயின. வருங்காலத்து அவர் பெறவிருக்கும் பெரும் அனுபூதிகளை இவ்வாறு அவர் முன்னாலே சுவைக்கலானார்; வேதாந்த வாக்கி யங்களை உண்மையென உணரலானார்.

1884-ன் தொடக்கத்திலே நரேந்திரரது தந்தையார் திடீரென மாரடைப் பால் மரணமானார்; அதனால் குடும்பம் மிதமிஞ்சிய வறுமைக்கு ஆளாயிற்று. வீட்டிலே உண்ண ஆறு ஏழு பேர் இருந்தனர். கடன்காரர் கதவைத் தட்டிய வண்ணமாயிருந்தார். அவரது தந்தையாரின், கை சுருங்காத உதார குணத் திற்குப் பாத்திரமாயிருந்த உறவினர் இப்போது பகைவரானார்; நரேந்திரரிட மிருந்து அவருடைய முன்னோரது வீட்டைப் பறிப்பதற்காகச் சிலர் வழக்குந் தொடர்ந்தனர். மெய்யாகவே பட்டினியிருந்தும், வெறுங் காலொடு நடந்தும், நரேந்திரர் ஒரு வேலையைத் தேடியலைந்தார்; ஆனால் அது பயன் பெறவில்லை. உலகில் எங்கேனும் சுயநயமற்ற பரிவு என்பது ஒன்று உண்டா என்னும் சந் தேகமும் அவர்க்கு எழுந்தது. இரு பணக்கார மங்கையர் அவரிடம் கெட்ட யோசனைகளைக் கூறி, அவரது துயரத்தை ஒழிப்பதாக வாக்களித்தனர்; ஆனால் இழிவு கருதி அதற்கு அவர் உடன்பட மறுத்தனர்.

இறைவனது உண்மையைப் பற்றிய தமது ஐயத்தை வாய்விட்டுக்கூற நரேந்திரர் தொடங்கினர். அவர் நாஸ்திகராய்விட்டாரென நண்பர்கள் நினைத் தனர்; அவரது அவநம்பிக்கைக்குச் சொல்லத் தகாத நோக்கங்களைத் தாமாக ஏறிட்டு, வம்புப் பேச்சைப் பரப்பினர். அவரது ஒழுக்கத்தையும் பழித்தனர். குருதேவருடைய சீடர்களிற் சிலரும் ஒருவாறு இவ்வீண் வம்பை நம்பினர்; துயரத்தையோ நரகத்தையோ அஞ்சிக் கடவுளிடம் நம்பிக்கை வைப்பவன்

ஒரு கோழையே என்று நரேந்திரர் அவர்கள் முகத்தெதிரே கூறினர். ஆனல் ஸ்ரீராமகிருஷ்ணரும் இப்பொய்யான வதந்திகளை நம்புவரோ என்ற நினைப்பும் அவரைத் துன்புறுத்தியது. அவரது பெருமை எதிர்த்துப் போராடியது. "அதனலும் வந்ததென்! ஒரு மனிதனது புகழ் அவ்வளவு அற்ப ஆதாரங் களைப் பொறுத்திருக்குமாயின், அதைப் பொருட்படுத்தேன்" என்று தமக்குட் சொல்லிக்கொண்டார். ஆனல் குருதேவர் தம்மிடம் வைத்த நம்பிக்கையை ஒருக்காலும் இழக்கவில்லை என்பதை அறிந்து அவர் பின்பு ஆச்சரியப் பட்டார். நரேந்திரர் சீர்கெட்டுவிட்டார் எனப் புகார் கூறிய ஒரு சீடர்க்குக் குருதேவர் கூறிய மறுமொழியாவது: "நிறுத்து, முட்டாளே! ஒருக்காலும் அது அவ்வாறு ஆகாதெனத் தேவியே என்னிடம் கூறியிருக்கிருள். நீ அம்மாதிரி மறுபடியும் பேசுவையாயின் நான் உன்னை ஏறிட்டுப் பார்க்கவும் மாட்டேன்."

நரேந்திரரது துயரம் உச்ச நிலையை எய்திய சமயமும் வந்தது. ஒரு பகல் முழுதும் அவர் உண்ணுதிருந்தார். மாலையில் அவர் வீட்டுக்குத் திரும்பி வரும்போது, களைத்துப்போன உறுப்புக்களைத் தூக்கவும் இயலாது போயிற்று. சோர்வு மிதமிஞ்ச, நினைக்கவும் வலியற்றவராய், ஒரு வீட்டின் முன்பு கீழே அமர்ந்தார். அவரது மனம் அலைய ஆரம்பித்தது. பிறகு திடீரென ஒரு தெய்விக சக்தியால் அவரது மனக்கண் முன்னிருந்த மறைப்பு நீங்கிற்று. தெய்வ நீதியும் துயரமும் ஒருங்கே இருப்பதன் நோக்கத்தை, அதாவது ஆனந்தமயமான இறைவனது படைப்பிலே துக்கம் இருப்பதன் காரணத்தைக் கண்டுகொண்டார். உடல் புதுவலி பெற்றதை உணர்ந்தார்; அவரது ஆன்மா சாந்தியில் மூழ்கிற்று, அவர் அமைதியாக உறங்கினர்.

நரேந்திரர் தாம் உலகிலே நிறைவேற்ற வேண்டிய ஞானப்பணி ஒன்று உண்டு என்பதை இப்போது உணர்ந்தார். தமது பாட்டனர் உலகைத் துறந்தது போன்று தாமும் துறக்கும் உறுதியுடையவராய், ஸ்ரீ ராமகிருஷ்ணரது ஆசியைப் பெறுதற்காக அவரிடம் வந்தார். ஆனல் அவர் தமது வாயைத் திறக்குமுன்பே, குருதேவர் அவரது உள்ளத்தில் இருந்ததை அறிந்து, அவரது பிரிவை நினைந்து அழுதார். "நீ உலகியல் (உலகப் பற்றோடு கூடிய) வாழ்வை நடத்தமாட்டாய் என்பதை யான் அறிவேன்; ஆனல் யான் வாழும் வரை எனக்காக உலகில் வாழ்க" என்று அவர் கூறினர்.

இந்நிகழ்ச்சிக்குச் சற்றேபின் ஒரு நாள் நரேந்திரர் தமது வறுமை நீங்கு மாறு தேவியிடம் பிரார்த்தனை செய்ய ஸ்ரீ ராமகிருஷ்ணரை வேண்டினர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரையே தேவியிடம் பிரார்த்திக்குமாறு கட்டளையிட்டார்; ஏனெனில் அம்மை அவருடைய பிரார்த்தனைக்குச் செவிசாய்ப்பது உறுதி யென்றார். நரேந்திரர் காளி கோயிலுக்குட் புகுந்தார். அவர் தேவியின் திரு வடிவத்தின் முன்பு நின்றபோது, அம்மை தமக்கு ஞானமும் முத்தியும் கொடுக்கத் தயாராயிருந்த ஓர் உயிருள்ள தேவியாக இருப்பதைக் கண்டார். அற்ப உலகப் பொருள்களை அவளிடம் வேண்ட இயலாமல், அவர் ஞானமும்

துறவும், பக்தியும் முக்தியும் மட்டும் வேண்டும் என்றே பிரார்த்தித்தார். வறுமையைப் போக்கப் பிரார்த்தியாது வந்ததற்காகக் குருதேவர் அவரைக் கண்டித்து, மீறுபடியும் கோயிலுக்கு அவரை அனுப்பினர். ஆனால் நரேந்திரர் தேவியின் முன் நின்றதும் மறுபடியும் தாம் வந்த காரியத்தை மறந்தார். குருதேவரது கட்டளைக்கு இணங்கி மும்முறை அவர் கோயிலுக்குச் சென்றார்; தேவியின் முன்னிலையில் குறித்த காரியத்தை மறந்து மும்முறையும் திரும்பினர். அவர் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தார்; அவ்வமயம் ஸ்ரீ ராமகிருஷ்ணரது செயலே அது என்ற நினைவு திடீரென அவரது உள்ளத்தில் ஜொலித்தது; ஆதலின், தமது வறுமையைப் போக்குமாறு குருதேவரையே அவர் வேண்டினர். எளிய உணவிற்கும் உடைக்கும் அவரது குடும்பத்திற்குக் குறைவு வராது எனக் குருதேவர் உறுதி அளித்தார்,

இது நரேந்திரருக்கு ஒரு மேன்மையான முக்கியமான அனுபவமாயிற்று. சக்தியை இவ்வுலகில் பராமுகம் செய்தல் கூடாது என்பதையும், விவகார உலகில் சகுணக் கடவுளை (ஈசனை) வழிபடுதல் கட்டாயம் என்பதையும் அது அவர்க்குப் போதித்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவர்க்கு இம் மனமாற்றம் உண்டானமைபற்றி மிக்க மகிழ்ச்சி யடைந்தார். மறுநாள் கிட்டத்தட்ட நரேந்திரரது மடியிலே அமர்ந்து, குருதேவர் முதலில் தம்மைச் சுட்டியும், பிறகு நரேந்திரரைச் சுட்டியும், ஓர் அடியாரிடம் பின் வருமாறு கூறினர்: "நான் இதுவா யிருப்பதையும், இன்னும் அதுவாய் இருப்பதையும் காண்கிறேன். உண்மையில் இரண்டிற்கும் யாதொரு வேறுபாடும் யான் உணரவில்லை. கங்கையில் மிதக்கும் ஒரு கழி நீரைப் பிரிப்பதாகத் தோன்றுகிறது; ஆனால் உண்மையாக நீர் ஒன்றே. யான் குறிப்பதை அறிகிறாயா? சரி. இருப்பதெல்லாம் தேவியே—இது சரியில்லையா?" பிற்காலம் நரேந்திரர் சொல்வார் இவ்வாறு: "ஸ்ரீ ராம கிருஷ்ணர் ஒருவரே, அவர் என்னைச் சந்தித்தது முதலாக இவ்வளவு காலமும் ஒரே தன்மையாக என்னிடம் நம்பிக்கை வைத்தார். எனது தாயும் சகோதரரும் அவ்வாறு செய்யவில்லை. அவர்க்கு என் மீதிருந்த மாறுத நம்பிக்கையும் அன்புமே என்றைக்கும் என்னை அவர்க்குக் கட்டுப்படுத்தின. அன்பா யிருக்கும் வகையை ஒருவரே அறிவார். உலகப் பற்றில் உழலும் மக்கள் தமது சுயநலங் கருதியே அன்பு செய்வதாக வெளிக் காட்டுவர்."

பெரிய கோபாலர் நீங்கலாக, குருதேவரின் துறவிச் சீடர்கள் அனைவரும் பதின்மூன்று வயது முதல் பத்தொன்பது வயதிற்குட் பட்டவராய் இருந்தனர்; சற்றே அதிக வயதுடையராயும் இருந்திருக்கலாம், அவர்கள் நடுத்தர வங்காளிக் குடும்பங்களிலிருந்து வந்தவர்; அவர்களிற் பலர் பள்ளிக்கூடத்திலோ கல்லூரியிலோ மாணவர்களா யிருந்தவர். அவர்களுடைய பெற்றோரும் உற்றாரும் அவர்கட்குச் சிறப்பு மிக்க உலக பதவிகள் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தனர். அவர்கள் தூய உடல்களோடும், திறமை மிகுந்த உள்ளங்களோடும், மாசுறுத உயிர்களோடும் ஸ்ரீ ராமகிருஷ்ணரைச் சார்ந்தனர், அனைவரும்

பெறற்கரிய ஞானச் செல்வத்தோடு பிறந்தவர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் முதன் முறை கண்டபோதே அவர்களைத் தம் குழந்தைகளாகவும், உறவினராகவும், நண்பராகவும், தோழராகவும் ஏற்றுக்கொண்டனர். அவரது மாய வலிமை படைத்த பரிசமே அவர்களது இயல்பை மலரச் செய்தது. பின்னாளில் ஒவ் வொருவரும் அவரவரது தகுதிக்கேற்ப அவரது உபதேச ஒளியை அண்டை யிலும் தொலையிலும் ஊட்டும் தீபமாயினர்.

அடியாராய மங்கையர்

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது பெண் அடியார்களோடு மிக இனிய ஒரு தொடர்பை நிலை நாட்டினார். அவரிடத்திலேயே ஒரு மங்கையர்க்குரிய மெல்லிய இயல்புகள் குடிகொண்டிருந்தன; ஆண்–பெண் வேற்றுமை இம்மியும் இல் லாத உயர்வற உயர்ந்த மெய்ப்பொருள் உலகிலே அவர் வாழ்ந்திருந்தார்; அவரிடத்து இயல்பாய் அமைந்த தூய்மை ஆடவரிடத்தும் மகளிரிடத்தும் மிக மேன்மையான உணர்ச்சியையே எழுப்புவதாகும். அவருடைய அடியாராய மங்கையர் பன்முறையும் "ஸ்ரீராமகிருஷ்ணரை ஆணென்று யாம் கருதியதே அபூர்வம். அவரை யாம் எம்மவருள் ஒருவராகவே கருதினேம். அடக்கிக் கொள்ளவேண்டுமென்ற உணர்ச்சி அவர் முன்பு எமக்கு யாதொரு வகை யிலும் ஏற்படவில்லை. எங்களுடைய அந்தரங்கங்களையும் அவரிடம் போன்று வேறெவரிடத்தும் நம்பிக்கையோடு ஒப்படைக்கமாட்டோம்" என்று கூறுவர். அவரைத் தமது குழந்தையாகவும், நண்பராகவும், குருவாகவும் கருதி அன்பு செய்வார். ஞான சாதன முறையில் காமத்தையும், பொருளாசையையும் துறக்கும்படி அவர்கட்குப் புத்திமதி கூறுவார். ஆண் மக்களது வலையில் விழாத வண்ணம் அவர்கட்குச் சிறப்பாக எச்சரிப்பார்.

கோபால் மா

குருதேவரின் பெண்ணடியார்கட்குள்ளே தமது பக்தி வளத்தாலும் ஞான அனுபூதியின் வளத்தாலும் இணையற்று விளங்கியவர், ஒரு வைதிக பிராம்மண மங்கையாரான அகோரமணிதேவி யென்பார். இளமையிலே விதவையான அவர் ஞான சாதன முயற்சிகட்கென்றே தம்மை முற்றிலும் ஒப்படைத்துவிட்டார். பால கோபாலனே அவரது இஷ்ட தெய்வம்; அத் தெய்வத்தையே தமது சொந்தக் குழந்தையாகக் கருதி, வைஷ்ணவர்க்குரிய வாத்சல்ய பாவனை முறைப்படி வழிபட்டு வந்தார். அத் தெய்வத்தின் வாயி லாக அம்மையார் தமது தணியப்பெருத தாயன்பைத் திருப்தி செய்யக் கருதிக் கோபாலனுக்கே சமைத்தும், அவனுக்கே உணவூட்டியும், அவனையே நீராட்டியும், அவனையே படுக்கையிற் கிடத்தியும் வருவார். இவ்வாறு

கோபாலனுய தெய்வத்தோடு மிக்க இனிமையாக நெருங்கிப் பழகியமையால் 'கோபாலரது அம்மா' என்னும் புனைபெயரைப் பெறலானுர். நாற்பது ஆண்டு காலம் கங்கைக் கரையிலே ஒரு சிறிய வெறுமையான அறையிலே அம்மையார் வாழ்ந்து வந்தார்; அவர்க்குத் துணையாயிருந்தவை: உருக் குலைந்த இராமாயணப் புத்தகம் ஒன்றும், அவரது ஜெபமாலை யடங்கியிருந்த ஒரு சிறு பையுமே. 1884-ல் அறுபதாவது வயதிலே அம்மையார் ஸ்ரீ ராம கிருஷ்ணரைத் தக்ஷிணேசுவரத்திலே போய்க் கண்டார். இரண்டாம் முறை சென்றபோது, குருதேவர் அம்மையாரைக் கண்டதும், "அம்மா, நீ வந் தனையா? உண்ணுதற்கு யாதேனும் எனக்குக் கொடு" என்று சொன்னுர். மிக்க தயக்கத்தோடு அம்மையார் தாம் வரும் வழியிலே அவர்க்காக வாங்கிய சில சாதாரண தீம்பண்டங்களை அளித்தார், குருதேவர் மிக்க ருசியோடு அவற்றை உண்டு, அம்மையாரே தமது கைகளால் தயாரித்த எளிய கறி களையோ தித்திப்பான பண்டங்களையோ கொண்டுவரும்படி அவரை வேண்டி னர். கோபால் மா அவரை ஒரு விசித்திரமான முனிவராக நினைத்தார்; ஏனெனில், பகவானைப்பற்றிப் பேசுவதற்குப் பதிலாக அவர் உணவு கேட் பதையே தொழிலாக உடையரானுர். ஆதலின் அவரை மறுபடியும் பார்க்க விரும்பவில்லை; ஆனுல் தடுக்க முடியாத ஒரு கவர்ச்சி அம்மையாரை மறுபடியும் கோயிற் பூந்தோட்டத்திற்கு இழுத்துக் கொணர்ந்தது. தாமே சமைத்த சில எளிய கறிகளை அம்மையார் கொண்டு வந்தனர்.

இதற்குச் சற்றேபின் ஒருநாள் அதிகாலையில் கோபால் மா தியானம் செய்துகொண்டிருக்கும்போது, அவர்க்கு அசாதாரண ஓர் அனுபூதி உண்டா டாயிற்று. அவரது இஷ்ட தெய்வமான கோபாலன் அவர்முன்பு தோன்றினுன், அவரது மடியில் உட்கார்ந்தான், சிறிது நேரத்திற்குள் அறை முழுதும் சஞ் சரிக்கத் தொடங்கினுன். இடையிடையே கோபாலன் ஸ்ரீ ராமகிருஷ்ணரது வடிவத்தைத் தரிக்கக் கண்டார் அம்மையார். பொழுது விடிந்ததும், அத் தெய்வக் குழந்தையைத் தன் கைகளில் தூக்கிக்கொண்டே தக்ஷிணேசு வரத்திற்கு விரைந்தனர். குருதேவர் ஆழ்ந்த சமாதியில் இருந்ததையும், கோபாலன் அடிக்கடி அவரது உடலில் புகுவதையும், அதனின்றும் வெளி வருவதையும், அவர் கண்டார். அம்மையார் பேரின்பத்தில் மூழ்கியிருந்தார், மதி மயங்கிய நிலையில் தமது குடிசைக்கு மீண்டனர்.

கோபால் மா தெய்வத்தோடு இடையருது அளவளாவிய நிலையில் ஏறக் குறைய இரண்டு மாதங்களைக் கழித்தனர்; பால கோபாலன் ஒரு கணமேனும் அவரை விட்டுப் பிரிந்ததில்லை. பிறகு அவளது காட்சியின் தீவிரத் தன்மை தணியலாயிற்று; அவ்வாறு தணிந்திராவிடின், அவளது உடலே அழிந் திருக்கும். குருதேவர் அம்மையாரது மேம்பட்ட ஞான நிலையைக் குறித்துப் புகழ்ந்து பேசினர்; அம்மாதிரியான தெய்வக் காட்சி சாதாரண மனிதர்கட்கு மிக அரிதாகும் என்றனர். லீலையாட்டில் விருப்பமுள்ள குருதேவர் ஒரு

நாள், குற்றங்காணும் இயல்புடைய நரேந்திரரையும் இந்த எளிய இயல்புடைய நங்கையாரையும் சந்திக்கச் செய்தனர். வேறிருவர் ஒருவர்க்கொருவர் இவ் வளவு வேறுபட்டவர் இருக்கமாட்டார். ஞானக் காட்சிகளையெல்லாம் மேன்மை யான நிலையிலிருந்து இகழ்ந்து பேசுபவர் நரேந்திரர் என்பதைக் குருதேவர் அறிவார்; ஆதலால் அக்கிழவியாரைத் தமது அனுபவங்களை நரேந்திரரிடம் உரைக்குமாறு அவர் வேண்டினர். மிகவும் தயங்கி அம்மையார் அவரிடம் தமது கதையைச் சொல்லலானார். இடையிடையே தமது தாய்த்தன்மை வாய்ந்த பேச்சை நிறுத்திவிட்டு நரேந்திரரிடம், "எனது மகனே, யான் ஏழை யான அறிவற்ற பேதை. எனக்கு ஒன்றும் தெரிவதில்லை. நீ அவ்வளவு படித்தவன். இப்போது எனக்குச் சொல்லுக, கோபாலனைப்பற்றிய இக் காட்சிகள் எல்லாம் உண்மைதானா என்பதை" என்று கேட்கலானார். நரேந்திரர் இக்கதையைக் கூர்ந்து கேட்டதும், ஆழ்ந்த மனக்கசிவுடைய ரானார். "ஆம், அம்மா, அவை முற்றும் உண்மையே" என்றனர் அவர். நரேந்திரரிடம் இகழ்ச்சியோடு குறைகூறும் இயல்பு வெளியில் இருப்பினும், உள்ளே அன்பும் மென்மையும் நிறைந்த நெஞ்சம் ஒன்றும் வசித்தது.

நிகழ்ச்சிகள் சென்றவாறு

1881-ல் யோசனையின்றிச் செய்த ஒரு செயலுக்காக இருதாய் காளி கோயில் வேலையினின்றும் தள்ளப்பட்டார்; மறுபடியும் கோயிற் பூஞ்சோலைக் குள் என்றும் புகக்கூடாது என்று அதிகாரிகள் அவர்க்கு உத்தரவிட்டிருந் தனர். ஒரு வழியிலே தேவியின் திருவுளம் இச்செயலிலும் காணப்படலா யிற்று. ஞானசாதனப் பெரும்புயல் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் வீசிய காலத்து அவரைப் பாதுகாத்து வந்தமையால், இருதாய் தாம் ஒருவரே அவரது நலத்தை மேற்பார்த்து வருபவர் என இயல்பாகவே கருதலாயினர். தமக்கு அறிவியாமல் எவரும் குருதேவரை அணுகக் கூடாதென்றார்; ஸ்ரீ ராமகிருஷ்ணர் வேறெவர் மீதேனும் கவனம் செலுத்துவாராயின், அவர் மிதமிஞ்சிய பொருமைகொள்வார். இருதாய் அப்புறப்படுத்தப்பட்டமையால், குருதேவரின் மெய்யடியார்க்கு அவ ரைத் தாராளமாக அணுகலும், கோயிற் பூஞ்சோலையில் அவரோடு கூடிவாழ் தலும் இயலுவதாயின.

வாரத்தின் இறுதி நாட்களில் இல்லறத்தார் தமது வேலைகளினின்றும் ஓய்வு பெற்றுக் குருதேவரிடம் வருவார். ஞாயிறு பிற்பகற் கூட்டங்கள் சிறு விழாக்களைப் போன்றிருந்தன. பல நாள் சிற்றுண்டிகள் வழங்கப்படும். பாடுவதைத் தொழிலாகக்கொண்ட சங்கீத நிபுணர் இடையிடையே பக்திரச மிகுந்த பாடல்களைப் பாடுவார். குருதேவரும் அடியார்களும் பாடுவார், ஆடுவார்; ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடிக்கடி ஆவேச நிலையினை அடைவார். அம் மாதிரியான ஒரு ஞாயிற்றுக்கிழமையின் இன்ப நினைவு அடியார்களுடைய

உள்ளங்களில் வெகுநாள் தங்கி நிற்கும். சிலர்க்குச் சிறப்பாகக் குருதேவர் போதனை அளிக்க விரும்புவாராயின், அவர்களைச் செவ்வாய் சனிகளில் தம்மைக் காண வருமாறு சொல்லுவர். இந்நாட்கள் காளி பூஜைக்கு எனக் குறிப்பிடப்பட்டுள்ள மங்கள நாட்கள்.

துறவிகளாகும் விதிபெற்றுள்ள இளைஞரான சீடரை, இல்லறத்தார் வாராத மற்றைய நாட்களில் வரும்படி அழைப்பார். இல்லறத்தாரைப் பயிற்றுதலும், வருங்காலம் துறவியாவாரைப் பயிற்றலும் முற்றிலும் வேறுபட்ட இரு துறைகளில் நிகழவேண்டியிருந்தன. ம—என்பவர் குருதேவரைப் பார்க்கச் சென்றது வாரத்தின் இறுதி நாட்களில் ஆதலால், "ஸ்ரீராமகிருஷ்ணரின் மொழியமுதம்" எனும் இந்நூலில் பிற்காலம் துறவியாகும் சீடர்களைப்பற்றிய பேச்சு அதிகமில்லை.

கடைசியாக, இரவிலே குருதேவரோடு அவரது அறையிலே தங்க அனுமதி பெறும் பாக்கியமுற்ற இல்லறத்தாரும் இளைஞருமான ஒரு சில சீடரும் இருந்தனர். குருதேவர் அதிகாலையில் எழுந்து, அறையிலே அங்கும் இங்கும் உலவிக்கொண்டு, இனிய குரலில் பாடுவதையும் பேரன்போடு தேவியிடம் அளவளாவுவதையும் அவர்கள் காணப்பெற்றனர்.

குருதேவரது கைக்கு நேர்ந்த ஊறு

1884 ஜனவரியில் ஒரு நாள் குருதேவர் 'பைன்'—மரச் சோலைக்குப் போய்க்கொண்டிருக்கும்போது அங்கே சமாதியடைந்தார். அவர் தனியேயிருந்த சமயம் அது. அவரைக் கையால் தாங்கவோ, அவரை வழி நடத்திச் செல்லவோ எவரும் இல்லை, அவர் தரையில் விழுந்து, இடது கையில் ஓர் எலும்பு இடம் பிறழ்ந்துபோக நேரிட்டது. உடலுணர்ச்சியைத் தாண்டி அப்பால் உலவுவதையே இயல்பாகக்கொண்ட அவரது உள்ளத்தின்மீது இவ்விபத்து தன் ஆட்சியை முக்கியமாய்ச் செலுத்தியது. கையில் எற்பட்ட கூரிய வலி அவரது மனத்தை உடலின்மீதும் புற உலகத்தின்மீதும் செல்லும்படிக் கட்டாயப்படுத்திற்று. ஆனால் இச்செயலிலும் தெய்வத்தின் திருக்குறிப்பு ஒன்றை அவர் காணலானார். உடலுணர்ச்சி யுலகிலே வாழும்படி அவரது மனம் பலவந்தமாக வைக்கப்பட்டமையால், தாம் தேவியின் திருக்கரத்து உற்ற ஒரு கருவியே என்பதையும், தமது மனித உடல் வாயிலாகவும் நிறைவேற்றவேண்டிய ஒரு தெய்விகத் திருப்பணி உள்ளது என்பதையும், முன்னிலும் தெளிவாக அவர் உணரலானார். நல்லாரும் பொல்லாருமான பற்பல மனிதர்கள் மூலமாகவும் இறைவன் நம்மால் அறியவொண்ணாத வகையில் தனது திருவுளத்தை விவகார உலகினில் வெளிப்படுத்தியருள்கிறான் என்பதையும் நன்கறிந்தார். ஆக, தீயோர் உருக்கொண்ட கடவுள், இழிந்த ஒழுக்கமுடைய கடவுள் என்றெல்லாம் கடவுளைப்பற்றிப் பேசுவார். விவகார

உலகிலே ஈசனது திருவிளையாடலைக் கூர்ந்து கவனிப்பதில் அவர் ஒரு விசேஷ மகிழ்ச்சியடையவும் தொடங்கினர். இறைவனோடு கொள்ளும் இனிய மனித உறவு சில சமயங்களில் அனேத்தையும் துடைக்கும் பிரம்ம ஞானத்தை விட அதிக உவப்பாக அவர்க்குத் தோன்றும். பலமுறை அவர் பின்வருமாறு பிரார்த்தனை செய்வார்: "பிரம்ம ஞானத்தால் அம்மே, என்னைச் சடமாக்கிவிடாதே. எனக்குப் பிரம்ம ஞானத்தைக் கொடாதே. அம்மே, நான் உன் மதலையன்றே? இயல்பாகவே கோழையன்றே? எனக்கு எனது தாய் வேண்டும். பிரம்ம ஞானத்திற்குக் கோடி நமஸ்காரம். அதை வேண்டுவார்க்குக் கொடு." இன்னும் அவர் "அன்னாய், நான் மனிதரோடு சம்பந்த முடையவனாகட்டும். வறண்ட முனிவனாக என்னை ஆக்காதே. இவ்வுலகிலே நினது லீலையை அனுபவிக்க எனக்கு விருப்பம்" என்று பிரார்த்திப்பார். அவர் இந்த வளமுற்ற திவ்விய அனுபூதியைச் சுவைக்கவும், பக்தியையும் பக்தர்களின் கூட்டத்தையும் அனுபவிக்கவும் திறமை பெற்ற காரணம் யாதெனில், அவரது உள்ளம், கைக்கு ஏற்பட்ட ஊறுபாட்டால், உடலுணர்ச்சி நிலைக்குக் கீழே இழுத்துத் தள்ளப்பட்டதே. மேலும், தம்மை இறைவனது அவதாரமெனப் பறையறைவாரைத் தமது ஒடிந்த கையைக் காட்டிக் கேலி பண்ணுவார். "இறைவன் தனது கையை ஒடித்துக்கொண்டதாக நீர் எப்போதேனும் கேள்விப்பட்டதுண்டா?" என்று அவர் கூறுவார். கை குணமடைய ஐந்து மாத காலம் பிடித்தது.

அவரது நோய்க்கு ஆரம்பம்

1885 ஏப்பிரலில் குருதேவரது தொண்டை புண்ணையிற்று. நீண்ட பேச்சோ, சமாதியில் ஆழ்தலோ, இரத்தத்தைத் தொண்டைப் பக்கம் பாயும் படிச் செய்யுமாதலின், வலியை அதிகமாக்கும். ஆயினும், வருஷாந்தர வைஷ்ணவத் திருவிழா பாணிஹாட்டியில் கொண்டாடப்பட்டபோது, ஸ்ரீ ராமகிருஷ்ணர் டாக்டரது புத்திமதியை மீறியே அதற்குச் சென்றார். சீடர்களின் கூட்டத்தோடு அவர் சங்கீதத்திலும், ஆட்டத்திலும், பரவச நிலையிலும் தம்மைக் கனப்படையச் செய்தார். நோய் முன்னினும் முதிர்ந்தது; "பாதிரிமாரின் தொண்டைப்புண்" என அதனை வரையறுத்து முடிவு கட்டினர். நோயாளிக்குப் பேச்சும் சமாதியும் நீக்கற்குரியன என்று எச்சரித்தனர். மருந்தும் உணவும் சம்பந்தமாக வைத்தியரது கட்டளைகளை அவர் பின்பற்றினரெனினும் தாம் சமாதியடைதலைத் தடுக்கவோ, தமது ஆறுதல் மொழியை நாடி வருவாரிடம் பேசுவதை நிறுத்தவோ அவர்க்கு இயலாது போயிற்று. சில சமயம் கோபவெறிகொண்ட குழந்தைபோல, அவர் அல்லும் பகலும் தமக்கு ஓய்வு கொடாது வரும் மனிதக் கூட்டத்தைப்பற்றித் தேவியம்மையிடம் முறையிடுவார். இவ்வாறு அவர் தேவியிடம் கூறியது செவிப்பட்டது: "உபயோக

மற்ற இம் மக்களையெல்லாம் என்னிடம் நீ ஏன் கொணர்கின்றனை ? இவர்கள் ஐந்து பங்கு நீரோடு கலந்த பால் போன்றிருக்கின்றனரே, நீரை வற்றச் செய்வதற்காக நெருப்பை ஊதி ஊதி என் கண்கள் குருடாயினவே. என் உடல் நலம் கெட்டது. இது என் சக்திக்கு மிஞ்சிய அலுவல். அதைச் செய்யப் பிரியமானால், நீயே செய்க, தாயே. இது (தனது உடலைச் சுட்டி) துளையுண்டான ஒரு கொட்டு, இதை இரவும் பகலும் அடித்துக்கொண்டே நீ இருப்பாயானால், இது எத்தனை காலம் நீடிக்கும்?"

ஆனலும் அவரது உதார நெஞ்சம் என்றைக்கும் எவரையும் துரத்திய தில்லை. அவர் சொல்லுவார்: "ஓர் உயிர்க்கேனும் உதவி புரியக்கூடுமாயின் நாயாகவேனும் பன்முறையும் பிறக்குமாறு எனக்குத் தண்டனை அளிக்கட்டும்" என்று. "உடல் நோயில் ஆழ்ந்து ஈடுபடட்டும்; ஆனல், மனமே, பிரம் மானந்தத்தில் என்றும் நீ குடியாயிரு" என்று மகிழ்ச்சியோடு பாடிக்கொண்டே அவர் வலியைப் பொறுத்துக் கொள்வார்.

ஓர் இரவில் அவர்க்குத் தொண்டையில் இரத்தம் பெருகிற்று. டாக்டர் இப்போது அந்த நோயைக் 'கான்ஸர்' (புற்று நோய்) எனக் கண்டுபிடித் தனர். நெஞ்சை வருத்தக்கூடிய இச் செய்தியைச் சீடர்க்கு முதல் முதலாக அறிவித்தவர் நரேந்திரரே. மூன்று நாளைக்குள் குருதேவரைக் கல்கத்தாவுக்குச் சிறந்த முறையில் சிசிச்சை செய்வதற்காக எடுத்துச் சென்றனர். பலராம் என்பவரது இல்லத்தில் அவர் ஒரு வாரம் தங்கினர்; பின் கல்கத்தாவின் வடபகுதியில் சியாம்புகூரில் ஒரு தக்க இடம் கண்டுபிடிக்கப்பட்டது. இவ் வாரத்தில் தக்ஷிணேசுவரத்தில் தம்மை அடிக்கடி காணவர இயலாத அடியார் கட்கு ஏறக்குறைய ஓய்வில்லாது போதித்தற்கென்றே தம்மை ஒப்படைத்து விட்டார். உபதேசங்கள் அவரது நாவினின்றும் இடைவிடாது பெருகிக் கொண்டிருந்தன; அவர் அடிக்கடி சமாதியில் இருந்தார். கல்கத்தாவிலே புகழ்பெற்ற 'ஹோமியோபதி' மருத்துவரான மகேந்திரலால் சர்க்காரை, அவரது நோய்க்குச் சிகிச்சை செய்யுமாறு அழைத்தனர்.

சியாம்புகூர்

1885 செப்டம்பர் ஆரம்பத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணரை சியாம்புகூருக்கு அழைத்துச் சென்றனர். இங்கே குருதேவரது பக்கத்திலிருந்து இரவும் பகலும் பணிவிடை செய்வதற்காக இளஞ் சீடர்களை நரேந்திரர் ஒழுங்குபடுத்தி ஓர் ஏற்பாடு செய்தனர். முதலில் அவர்கள் தம்மைப் பாதுகாக்கும் பெற்றோர் முதலியோரிடம் குருதேவரது நோயைப்பற்றிக் கூறுது மறைத்து வைத்தனர்; ஆனல் நோய் முறுகியபோது, அவர்கள் தமது உறவினர்களுடைய தடை களை ஒதுக்கிவிட்டு, தமது அருமைக் குருநாதர்க்குச் சிகிச்சை செய்தலிலே தம்மை முழு மனதோடும் ஈடுபடுத்தலானர். இவ்விளஞர் குருதேவரது கவ

னத்தினாலும், நரேந்திரரது தலைமையினாலும், அந்தரங்க பக்தர்களானார்கள். குருதேவரின் திவ்விய சக்திகள் பலமுறை வெளிப்பட்டதை நேரே காணும் பேறு பெற்றனர் இவர். அவரது உபதேசத்தை அவர் மறைந்தபின் நாற் றிசையும் பரப்புவதைப்பற்றிய போதனைகளை நரேந்திரர் பெற்றனர்.

தூய அன்னையார்—ஸ்ரீராமகிருஷ்ணரின் அடியார்கள் ஸ்ரீசாரதா தேவியாரை இவ் அருமைத் திருநாமத்தால் அழைப்பர்—பொதுவாகச் சமையலைக் கவனித் துக்கொள்ளவும், நோயாளிக்குரிய தனி உணவைத் தயாரித்தற்காகவும் தக்ஷி ணேசுவரத்தினின்றும் அழைத்துவரப்பட்டார். குடியிருப்பதற்குரிய இடம் மிக மிகச் சுருங்கியதாயிருந்தமையின், இட நெருக்கடிக்குத் தக்கவாறு தம்மை அன்னையார் அமைத்துக்கொள்ளவேண்டியதாயிற்று. காலை மூன்று மணிக்கு எழுந்திருந்து அவர் கங்கையில் நீராடி, மாடியிலே மேலே மூடப்பட்டுள்ள ஓர் இடத்திலே சமையல் செய்தும் பிரார்த்தனை செய்தும் நாள் முழுதும் கழித்து வந்தார். பார்க்க வந்தவர்கள் சென்றபின், இரவில் பதினெரு மணிக்கு முதல் மாடத்திலிருந்து தமது படுக்கையறைக்குக் கீழே யிறங்கிவந்து, சில மணிநேரம் தூங்குவார். இவ்வாறு கடுமையாக உழைத்தும், சிறிதே உறங்கியும், குரு தேவர் உடல் நலம் மீளுமாறு பிரார்த்தனை செய்தும், மூன்று மாதங்களைக் கழித்தனர்.

சியாம்புகூரில் அடியார்கள் கடுமையாக வாழ்ந்தனர். குருதேவர்க்கு அண்டையிலிருந்து பணி செய்ததே அவர்கட்கு ஒருவகையான ஞான சாதன மாயிற்று. அவரது மனது அடிக்கடி ஒரு மேன்மையான ஞான பூமிக்குப் பறந்துகொண்டேயிருந்தது. இடையிடையே அவரது ஞான ஆவேசம் அவர் களையும் தொற்றிக்கொள்ளும். அவர்களிற் பலரும் பகவானது அவதாரமாக ஒப்புக்கொண்ட குருதேவரது நோயின் உட்கருத்தை இன்னதென அறியப் பெரிதும் முயன்றனர். எல்லாம் நன்ருய் முடியும் என உறுதியாக நம்பும் இயல்பும், கற்பனைத் திறமையும் உடைய கிரிஷின் தலைமை பெற்ற ஒரு வகுப்பினர் இருந்தனர்; குருதேவரது மிக ஆழ்ந்த கருத்து ஒன்றை நிறை வேற்றுதற்காகப் புறத்தே அமைந்த ஒரு போலிக்காரணமே நோய் என்பது இவரது நம்பிக்கை. அடியார்களை ஒன்ருகத் திரட்டுவதற்கும், அவர்கட் குள்ளே ஒற்றுமையை வளர்த்தற்கும் கருதி, இந்நோயைக் குருதேவரே தமக் குச் சங்கற்பித்துக்கொண்டார். அந்நோக்கம் நிறைவேறியதும், அவர் தாமே அந்நோயைப் போக்கிக் கொள்வார். இரண்டாவது வகுப்பினர் நினைத்த தாவது: குருதேவரைத் தனது கையில் ஒரு கருவியாகக் கொண்டு தேவியே தனது சொந்த இரகசியமான நோக்கங்களை நிறைவேற்றும்பொருட்டு இந் நோயை வருவித்தாள் என்பது. ஆனல் நரேந்திரரைத் தலைவராகக்கொண்ட தருக்க அறிவுடையரான இளைஞர்கள் இயற்கையான ஒரு நிகழ்ச்சிக்கு இயற்கையை மீறிய ஒரு காரணத்தைக் கற்பனை செய்ய மறுத்தனர், குரு தேவரது உடலும் ஒரு சடப்பொருளாதலின் ஏனைய சடப்பொருள்களைப்

போன்று தூல உலக நியதிகட்கு உட்பட்டதே என்பது அவர்களது நம்பிக்கை. பிறப்பு வளர்ச்சி முதிர்ச்சி தேய்வு இறப்பு எனும் ஐந்து விகாரங்கட்கு உட்படல் சடப்பொருள்கட்குரிய நியதியாதலின், குருதேவரது உடலும் அந்நியதிக்கு உட்படாதிருக்க முடியாது என்பர் அவ்வகுப்பினர். ஆனால் நோயைப்பற்றிய கருத்துக்கள் இவ்வாறு வேறுபடினும், தமது ஞான இலக்ஷியத்தை அடைய அவருடைய துணையையே எதிர்பார்த்திருக்க வேண்டும் என்பதில் அனைவருக்கும் நம்பிக்கையுண்டு.

மருத்துவரது முயற்சியும், அடியார்களது பிரார்த்தனையும், சிகிச்சைக்கு வேண்டியன செய்தலும் கிடைத்தும், நோய் விரைவில் வளர்ந்து வந்தது. சில சமயம் வலியும் பொறுக்க முடியாததாகத் தோன்றிற்று. குருதேவர் நீருருவமான உணவைக்கொண்டே வாழ்ந்தார்; அவரது பலவீனமான உடல் வெறும் எலும்புக்கூடும் தோலுமாகவே மாறிவந்தது. ஆயினும் அவரது முகம் எப்போதும் ஆனந்த ஜோதியை வீசிக்கொண்டேயிருந்தது; தமது ஆசியைப் பெறுவதற்காக வந்துகொண்டிருந்த மக்கட்கூட்டத்தை வரவேற்க அவர் சலிக்கவேயில்லை. சில ஊக்கமிக்க அடியார்கள் வருபவரைத் தடுக்க முயன்றபோது, கிரிஷ் அவர்களிடம் "உங்களால் அக்காரியத்தில் வெற்றி பெற இயலாது; அவர் பிறந்ததன் நோக்கமே, பிறரைக் கடைத்தேற்றும் பொருட்டுத் தம்மைப் பலிகொடுத்தலன்றே?" என்று கூறினர்.

நோய் உடலைப் பாழாக்கிய அளவிற்கு, உள்ளிருந்த தெய்வத்தன்மை மேலும் மேலும் திகழலாயிற்று. உடல் தூய பளிங்கு போன்ற தன்மையை அடைந்தமையின், தேவர்களும் தேவியரும் அவரிடம் மிகுந்த பிரகாசத்தோடே ஒளிரத் தொடங்கினர். காளி பூஜை தினத்தன்று அடியார்கள் அவரிடம் தேவியின் திவ்விய அருள் வெளிப்படுதலைத் தெளிவாகக் கண்டார்.

காசிப்பூரில் அந்திம நாட்கள்

ஸ்ரீ ராமகிருஷ்ணரது நோய் முதிர்ந்து வருதற்குரிய அறிகுறிகள் தென்பட்டபோது, அடியார்கள் டாக்டர் சர்க்காரது புத்திமதியைப் பின்பற்றி, கல்கத்தாவின் வடபகுதிகளுள் உள்ள காசிப்பூரில் ஒரு விசாலமான தோட்ட மாளிகையை வாடகைக்கு அமர்த்தினர். 1885 டிசம்பர் 11-ல் குருதேவரை அவ்விடத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இக் காசிப்பூரிலேதான் தூல உலகிலே குருதேவர் நடித்த வாழ்க்கை நாடகம் முடிந்து, திரை வீழ்ந்தது. அவரது ஆன்மா இன்னும் எட்டு மாதகாலம் உடலை விட்டுப்போக விரும்பாது தங்கிக்கொண்டிருந்தது. அவர் பெருந்துயர் உழந்ததும், உடல் ஓயாது வதையுண்டதும், ஆன்மா வெற்றிகரமாக வெளியில் துலங்கியதும் இப்பகுதியில்தான். இதில் குருதேவரது மனிதத்தன்மையும் தெய்வத்தன்மையும் ஒரு மெல்லிய இடைவரம்பின் ஊடே

அங்குமிங்குமாக ஊசலாடிக்கொண்டிருந்ததைக் காண்கிறோம். இவ்வெட்டு மாதங்களில் ஒவ்வொரு கணமும் அவரது நெஞ்சத்துக் கனிந்த ஆர்வமும் ஞான உயர்வும் பொங்கி வழிந்துகொண்டிருந்தன. அவர் திருவாய் மலர்ந் தருளிய ஒவ்வொரு மொழியிலும் இரக்கமும் மாட்சியும் ததும்பியிருந்தன.

ஒரு சில நாளுக்குள்ளே அப்புதிய சூழ்நிலைக்கு ஏற்றவாறு அடியார்கள் அனைவரும் அமைந்துகொண்டார். தூய அன்னையார், ஸ்ரீ ராமகிருஷ்ணரது மருமகளான இலக்ஷ்மிதேவியையும் ஒரு சில பெண்ணடியார்களையும் துணைக் கொண்டு, குருதேவர்க்கும் அவரோடு இருப்பவர்க்கும் சமையல் செயயும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். சுரேந்திரர் செலவிற் பெரும்பகுதியை மன முவந்து பொறுத்துக்கொள்ள, மற்ற இல்லற அடியார்களும் தமது சக்திக் கேற்பப் பொருளுதவி புரியலானர். பன்னிரு சீடர்கள் குருதேவரைப் பிரியாத திருமேனி காவலராக அமைந்தனர். அவராவார் : நரேந்திரர், ராக்கால், பாபு ராம், நிரஞ்சன், யோகின், லாட்டு, தாரக், மூத்த கோபால், காளி. சசி, சரத், இளைய கோபால் என்பவர். சாரதா, ஹரிஷ், ஹரி, கங்காதர் நால்வரும் குருதேவரை இடையிடையே பார்க்க வருவார்; அவர்கள் இல்லத்திலே சாதனம் பழகி வந்தார். சட்டப் பரீக்ஷைக்காகத் தயாராகிக்கொண்டிருந்த நரேந் திரர் அரிதாகக் கிடைக்கும் ஓய்வு வேளைகளிற் படிக்கும்பொருட்டு, பூந் தோட்ட மாளிகைக்கும் தமது புத்தகங்களைக் கொணர்ந்தார். தமது சகோதர சீடர் தியானத்திலும், சாஸ்திரக் கல்வியிலும், மற்றைய ஞான சாதனங்களிலும் மூனைந்து ஈடுபடுமாறு, அவர்கட்கு ஊக்கமளித்து வந்தார். அவர்கள் எல் லோரும் உற்ருரையும், உலக வாழ்க்கைக்குரிய கடமைகளையும் மறக்க லாயினர்.

திருமேனி காப்போருக்குள் சசி தொண்டின் வடிவமாய் விளங்கினர். தமது சகோதர அடியார்கள் பழகிவந்த தியானம், ஜெபம் முதலிய சாதனங்கள் ஒன்றையும் அவர் இயற்றவில்லை. குருவுக்குச் செய்யும் பணிவிடையே அவர்க்கு ஞான வாழ்க்கையாகும் எனும் உறுதி பூண்டிருந்தார் அவர். அவர் ஊணையும் ஒய்வையும் மறந்து, குருதேவரது படுக்கையருகே யிருக்க எப் போதும் தயாராயிருந்தார்.

பண்டிதர் சசாதரர் ஒருநாள் குருதேவரை அணுகி, "ஐயன்மீர், யோகிகள் நோயுற்ற இடத்தைத் தியானித்தலால் தமது உடற்பிணியைப் போக்கிக் கொள்வர் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றனவே. தாங்களும் தங்கள் மனதைத் தொண்டையின்மீது ஒருமுகப்படுத்துவதால் பிணியை ஒழிக்க முடியு மன்ரே?" என்று ஒரு யோசனை கூறினர். குருதேவர் பண்டிதரைக் கண் டித்து, "உம்மைப்போன்ற பண்டிதர் இவ்வாறு யோசனை கூறுவதோ! நான மில்லீர், பகவானது திருவடித் தாமரையை விட்டு என் மனதை இழுத்து, ஊனும் இரத்தமும் பொதிந்த உபயோகமற்ற இவ் உடற் கூட்டை நோக்கித் திருப்ப எனக்கு எவ்வாறு இயலும்?" என்று சொன்னர். நரேந்திரரும் மற்றைய

சீடரும் "எங்கட்காகவேனும் செய்தாலோ" என்று கெஞ்சினர். ஸ்ரீ ராமகிருஷ்ணரோ. "ஆனல், இந்தத் துன்பம் எனக்கு இன்பமாயிருப்பதாக நினைக்கிறீர்களோ? எனக்கு உடம்பு சுகமாயிருக்க விருப்பம்; ஆனல் நோய் குணமாவது தேவியைப் பொறுத்து நிற்கின்றதே!" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் மறுமொழி கூறினர்.

நரேந்திரர்: "அப்படியானல் தேவியிடம் பிரார்த்தியுங்கள், அவள் உங்கள் சொல்லுக்குச் செவி சாய்ப்பாள்,"

குருதேவர்: "ஆனல் யான் எனது உடலுக்காகப் பிரார்த்தித்தல் முடியாது."

நரேந்திரர்: "எமக்காகவேனும் நீங்கள் அவ்வாறு செய்யத்தான் வேண்டும்."

குருதேவர்: "சரி, முயற்சி செய்கிறேன்."

சில மணிகட்குப் பின் குருதேவர் நரேந்திரரிடம் "யான் தேவியிடம், 'அம்மே, வலியினல் எனக்கு உணவை விழுங்க முடியவில்லை. ஒரு சிறிது உண்ணுவது எனக்கு இயலுமாறு அருள்க' என்று சொன்னேன். அம்மை உங்களனைவரையும் சுட்டி, 'என்ன? இத்தனை வாய்கள் வழியாகவும் நீ போதிய அளவு உண்கின்றனை அல்லவா?' என்று என்னிடம் கேட்டாள். யான் வெட்கம் அடைந்தேன், பின் ஒரு வார்த்தையும் பேச முடியவில்லை" என்று உரைத்தார். குருதேவர் நோய் தீர்ந்து எழுவர் என்ற அடியார்களது நம்பிக்கையை இது அடியோடு மாய்த்தது.

இதற்குச் சிறிது காலத்துக்கு முன்பு, குருதேவர் "யான் செல்லுமுன் எல்லாவற்றையும் பகிரங்கமாக்குவேன்" என்று கூறியிருந்தார். 1886 ஜனவரி 1-ல் அவர்க்கு உடல் சற்றே நன்றாயிருந்தது; அவர் கீழிறங்கி ஒரு சிறிது உலாவுவதற்காகத் தோட்டத்திற்கு வந்தார். அப்போது பிற்பகல் மூன்று மணி. மடத்தைச் சேர விரும்பாத சீடர் சுமார் முப்பது பேர் மண்டபத்திலோ மரத்தடியிலோ அமர்ந்திருந்தனர். ஸ்ரீராமகிருஷ்ணர் கிரிஷிடம் "சரி, கிரிஷ், ஒவ்வொருவர் முன்னும் என்னை அவதாரமெனப் பறையறைகின்றனையே, என்னிடம் நீ யாது கண்டனை?" என்று கேட்டார். கிரிஷ் எப்போதும் தயாராயுள்ள ஒரு மனிதர்; ஆதலின் அவர் குருதேவர் முன்பு பணிந்து, கை கூப்பிக்கொண்டு, "வியாசரும், வால்மீகியும் போன்ற ரிஷிகளும் தக்கவாறு அளிக்க முடியாத பெருமை வாய்ந்த ஏகப் பரம்பொருளைப்பற்றி அடியேன் போன்ற ஓர் அற்ப மனிதன் யாது உரைக்கக்கூடும்?" என்று பதிலளித்தார். குருதேவர் மிக ஆழ்ந்த அருட்பான்மை தலையெடுத்தவரானர். "அதிகம் என்ன சொல்ல இருக்கின்றது? யான் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிக்கின்றேன். ஞான விளக்கம் பெறுவீராக!" என்று அவர் வாழ்த்தினர். இம்மொழிகளைக் கேட்ட அடியார்கள் அனைவரும் உணர்ச்சிவசப்பட்டனர். அவர்கள் அவரிடம் விரைந்து, அவரது திருவடியின் கீழ் வீழ்ந்தனர். அவர் அவர்களனைவரையும்

கையால் தீண்டினர்; ஒவ்வொருவரும் அவரவர்க்கேற்ற ஆசியினைப்பெற்றனர். அவர்களில் ஒவ்வொருவரும், குருதேவரது பரிசத்தைப் பெற்றதும், உரைக்க முடியாத ஆனந்தத்தைப்பெற்றனர். சிலர் சிரித்தனர், சிலர் அழுதனர், சிலர் தியானிக்க அமர்ந்தனர், சிலர் பிரார்த்திக்க அமர்ந்தனர். சிலர் ஜோதியைத் தரிசித்தனர், சிலர் தம் தம் இஷ்ட தெய்வங்களின் காட்சிகளைப் பெற்றனர், சிலர் தமது உடலிலே ஆத்மிய சக்தி பாய்தலை உணர்ந்தனர்.

நரேந்திரர் மெய்ஞ்ஞானப் பேறடையும் பெருந்தாபமுற்றவராய், குரு தேவரிடம் தாமொழிந்த மற்றவரெல்லாம் சாந்தியடைந்தனரே என்றும், தாம் மட்டும் திருப்தியற்றுத் திரிவதாகவும் முறையிட்டனர். குருதேவர் அவர்க்கு வேண்டியது இன்னது என்பதை அறிவிக்க வேண்டினர். நரேந்திரர் தாம் தொடர்ச்சியாக மூன்று நான்கு நாட்கள் உலகத்தை முற்றிலும் மறந்திருக்கு மாறு, சமாதியில் அழுந்தியிருக்குமாறு, அருள மன்றாடினர். அதைக் கேட்ட குருதேவர் அவரைக் கண்டித்து, "நீ ஒரு பேதை. அதனினும் மேலான ஒரு நிலையும் உண்டு. 'இருப்பதெல்லாம் நீயே' என்று நீ பாடுவதில்லையா? முதன் முதலாக உன் குடும்பக் காரியங்களை ஒழுங்கு பண்ணுக, பின்பு என்னிடம் வருக. நீ சமாதியினும் மிக உயர்ந்த ஒரு நிலையின் அனுபூதியை அடைவாய்" என்று தேற்றினர்.

குருதேவர் நரேந்திரரைத் தமது ஞான சந்ததியாக்க விரும்பினதை மறைக்கவில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் மறைந்தபின் அவரது பணியைத்தொடர்ந்து இயற்றவேண்டியவர் நரேந்திரரே. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரிடம் "இவ்விளை ஞர்களை உனது பொறுப்பில் விடுகிறேன். அவர்கள் தமது ஞானத்தை மலரச் செய்யும்படிக்கும், வீடு திரும்பாதிருக்கும்படிக்கும் பார்த்துக்கொள்க" என்று கட்டளையிட்டனர். ஒருநாள் அவர் துறவு பூணத் தயாராகும் இளை ஞரை, ஜாதியை நினையாது வீடு வீடாகச் சென்று, பிச்சை யேற்குமாறு வேண் டினர். அவர்கள் குருதேவரது கட்டளையைச் சிரமேல் தாங்கி, அவ்வண்ணமே திருவோடுகளை ஏந்தி வெளியிற் சென்றனர். சிலநாட்கள் சென்றபின், துற விக்குரிய காவியாடையை, கிரிஷ் உள்பட ஒவ்வொருவர்க்கும் அவரே அளிக்க லானார்; ஏனெனில் துறவு மனப்பான்மையில் கிரிஷ் மற்றவர்க்கு இளையவரன்று ஆதலின். இவ்வாறு குருதேவரே பிற்கால ராமகிருஷ்ண மடத்துத் துறவி களின் பரம்பரைக்கு அஸ்திவாரத்தை அமைத்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் நாளுக்கு நாள் சோர்வுமிகுந்து வரலாயினர். அவரது உணவு சுருங்கி, மிகக் குறைந்த அளவினதாயிற்று; எதனையும் விழுங்குவது அவர்க்கு ஏறக்குறைய இயலாததாகவே போயிற்று. அவர் மெல்லிய குரலில் ம—விடம் பின்வருமாறு சொன்னார்: "இதையனைத்தையும் யான் மகிழ்ச்சி யோடு சகித்து வருகிறேன்; இல்லாவிடில் நீங்கள் அழுதுகொண்டேயிருப் பீர்கள். இக் கடுந்துயரத்தை அனுபவிப்பதைவிட இவ்வுடலை விட்டுவிடுவது மிக நல்லதென நீங்கள் அனைவரும் கூறுவீராயின் எனக்கும் சம்மதம்." மறு

நாட் காலை அவர் தமது படுக்கையருகே அமர்ந்திருந்த மனத்தளர்வுற்ற சீடர்க்குப் பின்வருமாறு கூறினர்: "யான் காண்பது இன்னது என்பதை நீங்கள் அறிவீரோ? இறைவனே ஒவ்வொன்றும் ஆகியுள்ளான். மனிதர் களும் மிருகங்களும் தோலால் மூடிய சட்டக் கூடுகளே; அவர்களுடைய தலைகள் வாயிலாகவும் அசைபவர் அவரே. கொல்லுபவனும், பலியும், பலி நிகழும் இடமாகிய மரக்கட்டையும்—எல்லாம் ஈசனே ஆகியுள்ளான்." அவர் தம்மிடம் பொங்கிய உணர்ச்சியால் மூர்ச்சையாயினர். பிறகு ஒருவாறு உணர் வைப் பெற்றவராய், "இப்போது எனக்கு வலியில்லை. யான் சுகமாயிருக்கி றேன்" என்றார். லாட்டுவைப் பார்த்து, "அதோ லாட்டு தனது தலையை அங்கையின்மீது தாங்கிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான். எனக்குத் தோன்று வது, அதே நிலையில் ஈசனே அமர்ந்திருக்கிறான் என்பதே" என்று அவர் கூறினர்.

அம்மொழிகளில் அமைந்த அன்பையும் உருக்கத்தையும் என்னென்பது? அவர் தாயன்போடு நரேந்திரர் ராக்கால் இருவரது முகங்களையும் தடவிக் கொண்டு அவர்களிடம் கொஞ்சினர். மெல்லிய குரலில் அவர் ம—விடம் "இவ்வுடல் இன்னுங் கொஞ்சகாலம் நீடித்திருக்க அனுமதி கிடைக்குமாயின், இன்னும் எத்தனையோ பல ஆன்மாக்கள் விழிப்படையலாகும்" என்று கூறினர். ஒரு கணம் தாமதித்துப் பின்னும் அவர் கூறுவார்: "ஆனால் தேவி வேறுவிதமாக விதித்துள்ளனளே. யான் கபடமற்றவனையும் அறிவில் லாதவனையும் இருக்கக் கண்டு மக்கள் என்னைப் பயன்படுத்திக்கொண்டு, அரிய ஞானச் செல்வத்தைத் தங்கட்கு வழங்குமாறு என்னைத் தூண்டு வர்; இதற்கு இடங்கொடாதவாறு தேவி என்னை அழைத்துச் செல்வாள்." சில நிமிடங்கட்குப்பின் அவர் தமது மார்பைத் தொட்டுக்கொண்டு, இங்கே இருவர் உளர். ஒருவர் தேவி, மற்றொருவர் அவளது பக்தர். பின்னவரே தமது கையை ஒடித்துக்கொண்டார். அவரே இப்போது நோயுற்றிருக்கிறார். யான் சொல்வதை நீங்கள் தெரிந்துகொள்கிறீர்களா?" என்றார். சற்று மௌன மாயிருந்து, "அந்தோ! இதையெலாம் யான் எவரிடம் சொல்வேன்? என் உரையை அறிவார் யார்?" என்று கூறிப் பின்னும் "உடல் உள்ளவரை வருத்தம் தடுக்க முடியாததொன்றே யாம். பகவான் தமது அடியார்கட்காகவே உடலைத் தரித்துக்கொள்கிறார்" என்று சொல்லி, மறுபடியும் அவர்கட்கு ஆறுதல் அளித்தார்.

ஆயினும், கூரிய வலியைத்தரும் இந்நோயினால் குருதேவரது உள்ளம் உண்மையாகவே துயருற்றதா அன்று என்பதை நிச்சயமாகக் கூற இயலாது. இப்பூலோக வாழ்வின் அந்திம நாள்களில் அவர் ஏறக்குறைய இடைவிடாது உயர்ந்த ஞான நிலையிலே அமர்ந்திருந்தார்; அவ்வேளைகளிலேனும், உடலையும் நோயையும் துயரத்தையும் பற்றிய உணர்ச்சியை முழுதும் அவர் இழந்தவ ரானார். அவருடன் திருமேனி காப்பாளராயிருந்த ஒருவர் (லாட்டு எனும்

சுவாமி அற்புதாநந்தனர்) பிற்காலம் கூறியதாவது: "ஸ்ரீ ராமகிருஷ்ணர் நோயுடன் படுத்திருந்தபோது, அவர் ஒருக்காலும் மெய்யாகவே துன்புறவே யில்லை. அவர் அடிக்கடி 'மனமே, உடலை மறந்துவிடு, நோயை மறந்துவிடு, பேரின்பத்தில் லயித்திரு' என்று சொல்லுவார். ஆதலின் அவர்க்கு மெய் யாகவே துன்பம் இல்லை. சில சமயம் அவர் இருந்த நன்னிலையில், உள்ளே ஆனந்தம் அலையெறிதல் தெளிவாக அவரது உடலிலே வெளிப்படும். அவராற் பேச முடியாதபோதும், தம்மிடம் வருத்தமில்லை என்பதை ஏதாவது ஒரு வழியில் அவர் எமக்கு அறிவிப்பார்; அவரைக் கூர்ந்து கவனிப்பார்க்கெல் லாம் இவவுண்மை தெளிவாக விளங்கியது. அவரை அறிய முடியாத மக் களோ, அவர் பெரிதும் வருந்தியதாக நினைக்கலானர். அக்காலம் எமக்கு அவர் ஊட்டிய ஞான ஆனந்தத்தை என்னென்பது! அவரது உடல் வருந் திக்கொண்டிருந்ததாயின், ஆனந்தத்தை ஊட்டுதல் எப்படி இயலும்? இக் காலத்தில்தான் அவர் எங்கட்குப் பின்வரும் உண்மைகளைப் போதிக்கலானர்: 'பிரம்மம் எப்போதும் பற்றற்றது. முக்குணங்களும் அதனிடம் உள்ளன; ஆனல் அது அவற்றல் பாதிக்கப்படுவதில்லை; காற்று வாசனையை எடுத்துச் சென்றும் தான் வாசனையற்றதாக உள்ளது போன்றே.' 'பிரம்மம் அகண்ட சத்து, அகண்ட சித்து, அகண்ட ஆனந்தம், அதனிடம் மோகமோ சோகமோ நோயோ, மரணமோ, வளர்ச்சியோ, தேய்வோ இல்லை.' 'பிரம்மமும் ஆத்மா வும் ஒன்றேயாம். சத்துப் பொருள் பிரிக்க முடியாத ஏகமே."

தூய அன்னையார் குருதேவர்க்கு உடல் நலம் மீளவேண்டுமெனப் பிரார்த்திப்பதற்காகக் கங்கையைக் கடந்து ஒரு சிவபெருமானது கோயி லுக்குப் பிறரறியாது சென்றனர். அங்கே கணவரது தடுக்க முடியாத மரணத்திற்காகத் தம்மைத் தயாரித்துக்கொள்ளுமாறு அவர்க்கு அருளால் உணர்த்தப்பட்டது.

ஒரு நாள் நரேந்திரர் கீழ் மாடியில் தியானித்துக்கொண்டிருக்கும்போது, குருதேவர் மேல் மாடியிலே படுக்கையில் விழித்துக்கொண்டே படுத்திருந்தார். தியானம் ஆழ்ந்து செல்லும்போது, நரேந்திரர் தமது தலையின் பின்புறத்தில் ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்ததுபோல உணரலானர். திடீரென அவர் உணர்விழந்தார். அதுதான் அவர் பெறத் தவித்துக்கொண்டிருந்த, அனைத் தையும் ஒழிக்கும் நிர்விகற்ப சமாதி என்னும் அனுபூதி; அதில் ஜீவன் பிரம்ம மும் தானும் ஒன்றே என்பதை உணர்கிறது. நீண்ட நேரத்திற்குப்பின் அவர்க்கு உணர்வு ஒருவாறு மீண்டது; ஆனல் அவர்க்குத் தம் உடலைக் காண முடிய வில்லை. அவர் தமது தலையை மட்டும் கண்டார். "என் உடல் எங்கே?" என்று அவர் கத்தினர். மூத்த கோபால் அறைக்குட் புகுந்து, "ஏன், நரேன், அது இங்கே உள்ளதே" என்று கூறினர். ஆனல் நரேந்திரர் அதைக் காண முடியாதவரானர். கோபால் அஞ்சி நடுங்கி, மேல் மாடிக்கு ஓடிக் குருதேவரை நாடினர். ஸ்ரீ ராமகிருஷ்ணரோ "சிறிது நேரம் அந்நிலையில் அவன் தங்கட்டும்.

அவன் என்னை அதற்காக வெகுநாள் தொந்தரவு படுத்தினன்" என்று மட்டும் கூறினர்.

இன்னும் நீண்ட நேரம் ஆனபின், நரேந்திரர் உணர்வு முழுதும் மீளப் பெற்றார். சாந்தியில் மூழ்கிய அவர் குருதேவரிடம் சென்றார்; அப் பெரியார் அச் சீடரை நோக்கி, "இப்போது தேவி உனக்கு எல்லாவற்றையும் காட்டி விட்டனள். ஆனால் இந்த அருட்காட்சி பெட்டிக்குள் வைத்துப் பூட்டப்படும்; திறவுகோலை யானே வைத்துக்கொள்வேன். தேவியின் திருப்பணியை நீ செய்து முடித்ததும், நீ அந்த நிதியை மீண்டும் பெறுவாய்" என்று கூறினர்.

சில நாள்கட்குப்பின் நரேந்திரர் குருதேவரோடு தனியே இருக்க, ஸ்ரீ ராம கிருஷ்ணர் அவரைப் பார்த்தார்; சமாதியில் ஆழ்ந்தார். நரேந்திரர் ஒரு சூக்ஷ்ம சக்தி தம்முட் புகுவதை உணர்ந்தார்; புற உணர்வை முற்றிலும் இழந்தார். சற்றுப் பின் சாதாரண நிலையை அடைந்ததும், குருதேவர் அழுதுகொண்டிருப் பதை அவர் கண்டார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரிடம் "இன்று என்னிடமுள்ள அனைத்தையும் உனக்கே தானம் பண்ணிவிட்டேன், இப்போது நான் ஒன்றுமற்ற ஏழை ஆண்டியாய்விட்டேன். இந்த சக்தியால் நீ இவ்வுலகிற்குப் பெரு நன்மையைப் புரிவாய்; அக்காரியத்தைச் செய்து முடித்தாலன்றி நீ இங்கிருந்து திரும்பாய்" என்று உரைத்தார். இது முதலே குருதேவர் சீடரிடத்தே வாழலானார்.

ஆனாலும் சந்தேகப்பேய் எளிதாக நீங்குவதில்லை. ஒன்றிரண்டு நாளைக் குப்பின் நரேந்திரர் தமக்குள்ளே "சித்திரவதை போன்ற இவ்வுடல் வேதனைக்கு நடுவிலும் அவர் தம்மைப் பகவான் எனக் கூறுவாராயின், அப்போதுதான் யான் அவரை அவதாரமென ஒப்புக்கொள்வேன்" என்று சொல்லிக் கொண்டார். அவர் மட்டுமே குருதேவரது படுக்கையருகில் இருந்தார். இது மறு கணம் மறையும் நினைவே; ஆனால் குருதேவர் புன்முறுவல் பூத்தார். தம்மிடம் மிஞ்சியிருந்த பலத்தையெல்லாம் திரட்டிக்கொண்டு அவர் மிகத் தெளிவாக "ராமராகவும், கிருஷ்ணராகவும் வந்தவர் எவரோ, அவரே இப் போது இவ்வுடலில் ராமகிருஷ்ணராக உள்ளார்; ஆனால் உனது வேதாந்த முறைப்படியன்று" என்று பதிலளித்தார். நரேந்திரரது நெஞ்சத்தை நாணம் குடைந்தது. [வேதாந்த முறைப்படியன்று என்றது, அத்வைத வேதாந்தம் அவதாரத்தை அறுதியான மெய்ப்பொருளாக ஒப்புக்கொள்ளாமையால் என்க.]

மஹா சமாதி

1886 ஆகஸ்டு 15, ஞாயிற்றுக்கிழமை குருதேவரது நாடி ஒழுங்கற்றதா யிற்று. அடியார்கள் படுக்கையருகே நின்றனர். அந்தி மாலை வேளையில் ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கு மூச்சு விடுதலிலும் கஷ்டம் உண்டாயிற்று. சிறிது நேரத் திற்குப்பின் அவர் பசிப்பதாகக் கூறினர். ஒரு சிறிது நீர் வடிவமான உணவு

அவரது வாய்க்குள் இடப்பட்டது: ஒரு பகுதியை அவர் விழுங்க, மற்றொரு பகுதி மோவாய் வழியாக வழியலாயிற்று. கூட இருந்தவர் இருவர் அவர்க்கு வீசத் தொடங்கினர். திடீரென அவர் வழக்கம்போலிராத சமாதியை அடைந் தார். உடல் விறைத்தது. சசி கண்ணீர் சொரிந்தனர், ஆனல் நடுநிசிக்குப் பின் குருதேவர் உயிர்த்தெழுந்தார். அவர் இப்போது மிக்க பசியுடையரானர்; ஒரு கிண்ணம் கஞ்சியைக் குடித்தார். தாம் பலம் பெற்றிருப்பதாக அவர் கூறினர். அவர்க்கு வீசிக்கொண்டிருந்த சசியின் உடலால் தாங்கப்பட்ட ஐந்து ஆறு தலையணைகளின்மீது சாய்ந்துகொண்டு, அவர் உட்கார்ந்தார். நரேந்திரர் அவரது திருவடிகளைத் தமது மடிமீது வைத்துக்கொண்டு. அவற் றைத் தேய்க்க ஆரம்பித்தார், திரும்பத் திரும்பக் குருதேவர் அவரிடம் " இவ் விளைஞரைப் பாதுகாத்துக்கொள்க " என்று கூறினர். பின் அவர் கீழே படுத் துக்கொள்ளவேண்டும் என்றார். மும்முறை கணீர் என்ற குரலில் அவர் தமது ஆருயிர்க்குப் பிரியமான காளியின் திருப்பெயரைக் கூவினர். உடனே படுத் துக்கொண்டார். ஒரு மணியாகி இரண்டு நிமிஷங்கட்குப்பின், அவரது தொண் டையில் மெதுவான சப்தம் கேட்டது, அவர் ஒரு பக்கமாகச் சிறிது திரும்பிக் கொண்டார், அவரது உடலின்மீது ஓர் உணர்ச்சியின் அலை பரவியது. புளகம் உண்டாயிற்று. அவருடைய பார்வை அவரது நாசி முனையின்மீது நிலைத்து நின்றது. அவரது முகத்திலே ஓர் இளநகை ஒளியை வீசிற்று. இறுதியான பரவச நிலை தொடங்கியது. அதுவே மஹா சமாதியானது. அதனின்றும் அவரது மனம் என்றைக்கும் திரும்பாது போயிற்று. அக்காட்சியைப் பொறுக்க ஆற்றுத நரேந்திரர் கீழ் மாடியை நோக்கி ஓடலானர்.

டாக்டர் சர்க்கார் மறுநாள் உச்சிவேளை வந்தார்; அதற்கு அரைமணி நேரத்திற்கு முன்பே உயிர் ஏகிவிட்டதாக முடிவு கூறினர். ஐந்து மணிக்குக் குருதேவரது உடலைக் கீழ்மாடிக்குக் கொணர்ந்தனர்; ஒரு கட்டிலில் கிடத் தினர். ஒர் ஊர்வலம் அமைக்கப்பட்டது. உடலைக் கங்கைக் கரையில் பராநகோர் 'கட்டத்தி'லுள்ள மயானத்திற்கு எடுத்துச் செல்லும்போதே, அருகே சென்றவர் அழலானர்.

அடியார்கள் புனித நீற்றினை ஏந்திக்கொண்டு பூந்தோட்ட மாளிகைக்குத் திரும்பியபோது, சகிப்பும் அமைதியும் அவர்களுடைய நெஞ்சங்களிற் புகலா யின; அவர்கள் 'குருவுக்கு ஜை!' (வெற்றியுண்டாகுக) என்று உரக்கக் கூவினர்.

தூய அன்னையார் தமது அறையில் அழுதுகொண்டிருந்தார்—கணவரை இழந்ததற்காக அன்று; காளியம்மை தம்மை விட்டுச் சென்றதாக உணர்ந்த காரணத்தினலேதான். இந்து விதவையர்க்குரிய கோலம் புனைய அவர் தொடங்கியதும், ஓர் அருட்பிரகாச நிலையில் நம்பிக்கையை ஊட்டும் பின்வரும் மொழிகள் அவரது செவியில் விழலாயின: " யான் ஓர் அறையிலிருந்து மற்றோர் அறைக்குத்தானே சென்றுள்ளேன்."

1

குருவும் சீடரும்

பிப்ரவரி, 1882

1882-ம் ஆண்டு வசந்த காலத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமையன்றுதான் ஸ்ரீ ராமகிருஷ்ணரை முதன்முதலாக ம— என்பவர் சந்தித்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணரது பிறந்த நாள் கழிந்து சில தினங்கள் ஆகியிருந்தன. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அப்போது தக்ஷிணேசுவரத்தில் கங்கைக் கரையில் (காளிதேவி வாழும் இடமாகிய) காளிபாடியில் வசித்து வந்தார்.

ம— என்பவருக்கு ஞாயிற்றுக்கிழமைதோறும் ஓய்வு உண்டு. அதனால் அவர் தமது நண்பர் சிது என்பவரோடு பராநகோரில் உள்ள பல தோட்டங்களுக்குப் போய்ப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தார். அவர்கள் பிரசன்ன பானர்ஜி என்பவரின் தோட்டத்திலே உலாவிக்கொண்டிருந்தபோது சிது என்பவர், "கங்கைக் கரையிலே ஒரு பரமஹம்சர் வாழ்கின்ற ஓர் அழகிய இடம் உள்ளது. உமக்கு அங்கே போகப் பிரியமா?" என்று கேட்டார். ம— அதற்கு இணங்க, இருவரும் உடனே தக்ஷிணேசுவரக் கோவில் தோட்டத்தை நோக்கிப் புறப்பட்டனர், அந்தி மாலை வேளையில் அவர்கள் பிரதான வாயிலுக்கு வந்து சேர்ந்து, ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அறைக்கு நேரே சென்றனர். அங்கே அவர் ஒரு மரக்கட்டிலில் கிழக்கு முகமாக அமர்ந்திருந்ததை இருவரும் கண்டனர். முகத்திலே புன்சிரிப்போடு அவர் பகவானைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அறை நிறைய ஜனங்கள் இருந்தனர். அனைவரும் தரைமீது உட்கார்ந்தவாறே ஆழ்ந்த மோனத்தோடு அவருடைய மொழியமுதத்தைச் செவியாற் பருகிக்கொண்டிருந்தனர்.

ம—அங்கேயே சற்று நின்று நடப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தார். எல்லாத் தூய தலங்களும் ஒன்று கூடின ஓர் இடத்தில், அவர் நின்றுகொண்டிருந்ததுபோலத் தோன்றிற்று; சுகதேவரே பகவானைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்ததுபோலவோ, ஸ்ரீ சைதன்யர் பூரியிலே தமது அன்பர்களோடு கூடிப் பகவானுடைய நாமங்களையும், புகழையும் பாடிக்கொண்டிருந்தது போலவோ அவருக்குத் தென்பட்டது.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் அப்போது சொன்னதாவது: "ஹரி நாமத்தையோ ராம நாமத்தையோ ஒரு முறை கேட்டதும் உன்னிடம் கண்ணீர் பெருகி மயிர்க்

கூச்சு உண்டாமாயின், அதன்பின் சந்தியாவந்தனம் முதலான கிரியைகளை நீ செய்யவேண்டியதில்லை என்பதை நீ உறுதியாக அறிந்துகொள்ளலாம். அப்போதுதான் கிரியைகளைக் கைவிடுவதற்கு உனக்கு உரிமை உண்டாகும்; அப்போது சடங்குகள் தாமாகவே நழுவிவிடும் என்பதே அதைவிடப் பொருத்த மாகும். அப்போது ராமநாமத்தையோ அல்லது ஹரி நாமத்தையோ மட்டும் ஓதினாலும், ஓம் என்னும் மந்திரத்தை ஜபித்தாலுமே போதும்.''

ம—தம்மைச் சுற்றிலும் நோக்கி ஆச்சரியத்தில் மூழ்கினர். தமக்குள்ளே ''இது எவ்வளவு அழகான இடம்! இம்மனிதர் மனத்தை எப்படிக் கொள்ளை கொள்கின்றனர்! அவருடைய மொழிகளின் அழகை என்னவென்று சொல் வது! இந்த இடத்தைவிட்டு அப்பாற் செல்ல எனக்கு விருப்பமில்லை'' என்று சொல்லிக்கொண்டார். சில நிமிஷங்கள் கழிந்தபின்னர் ''முதலிலே இந்த இடத்தை நான் பார்க்கட்டும், பின்பு இங்கு மறுபடியும் வந்து கீழே உட் காருவேன்'' என்று நினைக்கலானார்.

சிதுவோடு அவர் அந்த அறையைவிட்டு நீங்கியதும், கோவிலிலிருந்து மாலைப்பூஜை சமயத்துக் கிளம்பும் மணி ஒலியும், மத்தள ஒலியும், மேள ஒலி யும், தாளங்களின் ஒலியும் சேர்ந்த இன்னிசை அவரது காதில் விழுந்தது. தோட்டத்தின் தெற்கு மூலையில் உள்ள வாத்திய மண்டபத்திலிருந்து கிளம்பும் சங்கீதத்தையும் கேட்க முடிந்தது. இந்த இன்னிசைலிகள் கங்கைமீது தவழ்ந்து பரவி வெகுதூரம் சென்று மறைந்தன. மெல்லிய தென்றற் காற்று பூக்களின் மணத்தைச் சுமந்து கொணர்ந்து வீசிக்கொண்டிருந்தது. சந்திரன் சற்றுமுன்பு தான் உதயமாயிற்று, இயற்கையும், மனிதனும் ஒன்றுகூடி மாலை வழிபாட் டிற்காகத் தயார் பண்ணிக்கொண்டிருந்ததுபோலத் தோன்றிற்று. ம—வும், சிதுவும் பன்னிரண்டு சிவபெருமானது கோவில்களையும், ராதாகாந்தரது கோவிலையும், 'பவதாரிணி' அம்மையின் கோவிலையும் தெரிசித்தனர். திருவுரு வங்களுக்கு ஆராதனை நடப்பதை ம— கவனித்தபோது அவருடைய நெஞ்சிலே ஆனந்தம் பொங்கி வழியலாயிற்று.

ஸ்ரீ ராமகிருஷ்ணரது அறைக்கு இரு நண்பர்களும் திரும்பிச்செல்லும்போது ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டனர். ராணி ராஸமணியாரால் அக்கோவில் கட்டப்பட்டதென்று சிது ம—வுக்குச் சொன்னர். தினந்தோறும் பகவானை அங்கு காளி வடிவமாகவும், கிருஷ்ணன் வடிவமாகவும், சிவ வடிவமாகவும் வணங்கி வருவதையும், கோவிலின் எல்லைக்குள்ளே அநேக சாதுக்களுக்கும், ஏழைகளுக்கும் உணவளிப்பது உண்டென்பதையும் அவர் கூறினர். அவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரது அறையை நோக்கி மறுபடியும் வந்தபோது அங்கு கதவு மூடப்பட்டிருப்பதையும், வேலைக்காரி பிருந்தை என்பவள் வெளியே நின்று கொண்டிருப்பதையும் கண்டனர். ம—என்பவர் வெள்ளைக்காரரது முறையிலே பழகியவராதலால், தம் வரவை முன்னறிவிக்காமலே ஓர் அறைக்குட் புகமாட் டார். இக் காரணத்தால் பிருந்தையைப் பார்த்து, ''மகான் உள்ளே இருக்

கின்ருரா?'' என்று கேட்டார். பிருந்தை ''ஆம்! அவர் அறைக்குள் இருக்கின்ருர்'' என்று பதில் கூறினுள்.

ம—: ''எவ்வளவு காலமாக அவர் இங்கே வாழ்ந்து வருகின்றனர்?''

பிருந்தை: ''வெகு காலமாக இங்கே இருந்து வருகின்றனர்.''

ம— ''அவர் புத்தகங்களை வாசிக்கின்றனரா?''

பிருந்தை: ''புத்தகமா? ஒருக்காலும் வாசிப்பதில்லை. புத்தகங்களெல்லாம் அவரது நாவில் வீற்றிருக்கின்றன.''

சற்று முன்புதான் ம—வின் கல்லூரிப் படிப்பு முடிந்திருந்தது. ஸ்ரீ ராம கிருஷ்ணர் புத்தகங்களைப் படிப்பதில்லையென்று கேள்விப்பட்டது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

ம—: ''ஒருக்கால் அவர் மாலை சந்தியாவந்தனம் செய்யும் காலமோ இது? நாங்கள் அவர் அறைக்குப் போகலாமா? நாங்கள் அவரைக் காண ஆவலாக இருப்பதாக நீ அவரிடம் சொல்லுவாயா?''

பிருந்தை: ''பிள்ளைகளே! நேரே உள்ளே செல்லுங்கள், உள்ளே சென்று கீழே அமருங்கள்.''

அறைக்குள்ளே புகுந்ததும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தனியே ஒரு மரக்கட்டிலில் அமர்ந்திருந்ததைக் கண்டனர். அப்போதுதான் அறையில் தூபம் போட்டிருந்தனர், அதனல் கதவுகளெல்லாம் மூடப்பட்டிருந்தன. ம—உள்ளே புகும் போதே குருதேவரைக் கைகூப்பி வணங்கினர். பிறகு குருதேவரது கட்டளைப் படி அவரும் சிதுவும் தரைமீது அமர்ந்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவர்களை நோக்கி ''நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள்? உங்களுடைய தொழில் என்ன? நீங்கள் பரமஹம்சருக்கு வந்த காரணமென்ன?'' என்று கேள்வி கேட்டார். ம—அவற்றிற்குப் பதில் கூறினர்; ஆனல் இடையிடையே குருதேவர் வேறு நினைவில் ஆழ்ந்திருப்பதுபோலத் தோன்றுவதையும் கவனித்தார். பின்னுளில் இந்நிலைக்குப் 'பாவ(க) சமாதி' 'ஆனந்த பரவசம்' என்னும் பெயர் இடுவர் என்பதைத் தெரிந்துகொண்டார். தூண்டிற்காரன் ஒருவன் தூண்டிலோடு உட்கார்ந்திருக்கும்போது அதில் கண்ணுங் கருத்துமாய் இருப்பது போல அது. மீன் வந்து தூண்டிலின் அடியில் உள்ள இரையை விழுங்குகிறது; அப்போது மிதப்பு நடுங்க ஆரம்பிக்கிறது; தூண்டிற்காரன் மிக விழிப்பா யிருக்கிருன்; அவன் தூண்டிலை இறுகப்பிடித்துக்கொண்டு மிதப்பை நிலையாகவும், ஆவலோடும் உற்று நோக்குகிருன்; அப்போது அவன் ஒருவரிடத்தும் பேசமாட்டான். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய மனமும் அதே மாதிரி இருந்தது. ஸ்ரீ ராம கிருஷ்ணர் அடிக்கடி அந்தி மாலை வேளையில் இந்த நிலையில் இருப்பாரென்றும், சில சமயம் வெளி உலகத்தை முழுதும் மறந்திருப்பாரென்றும், பிற்காலம் ம— கேட்டறியலானர், தாமும் நேரில் கவனித்தார்.

ம—: ''ஒருக்கால் தாங்கள் மாலை சந்தியாவந்தனம் பண்ண விரும்புகிறீர்களோ? அப்படியானல் நாங்கள் விடைபெற்றுக் கொள்ளலாமா?''

ஸ்ரீராமகிருஷ்ணர் (ஆனந்தபரவசத்தில் ஆழ்ந்தவராய்): "இல்லே. மாலே சந்தியா வந்தனமா? அப்படிச் சொல்வது அவ்வளவு சரியானதன்று"

சிறிது சம்பாஷணை நிகழ்ந்த பின்னர் ம—குருதேவரை வணங்கிவிட்டு விடைபெற்றுக்கொண்டார். "மீண்டும் வா" என்றனர் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

வீட்டிற்குப்போகும் வழியில் ம—பின் வருமாறு தமக்குள் ஆச்சரியப்படத் தொடங்கினர்: "என்னைத் தம்மிடம் மீண்டும் இழுக்கின்றனரே இவர்! சாந்தியின் உருவேயான இம் மனிதர் யார்? ஒரு பண்டிதராயிராமல் மகானுவது ஒரு மனிதனுக்கு முடியுமா? இது என்ன ஆச்சரியம்! மீண்டும் அவரைக் காண எனக்கு ஆசை உண்டாகிறதே. அவரே என்னிடம் 'மீண்டும் வா' என்றனரே. நானோ அதற்கடுத்த நாளோ நான் அவரிடம் போவேன்."

ம— இரண்டாம் முறை ஸ்ரீ ராமகிருஷ்ணரைச் சந்திக்க நேர்ந்தது. தென்கிழக்குத் தாழ்வாரத்தில் காலே 8 மணிக்கு குருதேவர் க்ஷவரம் செய்து கொள்ளத் தயாராய் இருந்தார்; நாவிதனும் சற்று முன்புதான் வந்திருந்தான். குளிர்காலம் அதுவரை நீங்கவில்லையாதலால், அவர் சிவப்புக் கரையுடைய ஒரு சால்வையை உடலின்மீது போர்த்துக்கொண்டிருந்தார். அவரைக் கண்டதும் குருதேவர் "ஆ! நீ வந்துவிட்டாயா? அது நன்று. இங்கே அமருக" என்று சொன்னர். அவர் புன்சிரிப்போடு இருந்தார். பேசும்போது அவரது வார்த்தையில் ஒரு சிறிது திக்கல் இருந்தது.

ஸ்ரீராமகிருஷ்ணர் (ம—வை நோக்கி): "நீ எங்கு வாழ்கின்றனை?"

ம—: "கல்கத்தாவில், ஐய."

ஸ்ரீ ராமகிருஷ்ணர்: "இங்கு நீ எங்கே தங்குகின்றனை?"

ம—: "எனது அக்காளுடைய வீட்டில்—அதாவது ஈசான கவிராஜரின் வீட்டில்—பராநகோரில் இருக்கிறேன்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர்: "ஆ! ஈசானரது வீட்டிலா? சரி, கேசவர் எப்படி இருக்கிறார்? அவர் அதிக நோயுற்றிருந்தாரே."

ம—: "உண்மைதான். நானும் அப்படிக் கேள்விப்பட்டதுண்டு. ஆனால் இப்போது அவர் அதிக சுகமாயிருக்கிறரென்று நம்புகிறேன்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர்: "கேசவர் சுகமடைந்தால் இளநீரும், சர்க்கரையும் கொண்டு தேவியை வணங்குவதாக நான் பிரார்த்தனை நேர்ந்து கொண்டேன். சில சமயங்களில் அதிகாலைவேளையில் நான் விழித்தெழுந்து தேவியிடம் 'தாயே, கேசவர் மீண்டும் சுகமடையுமாறு செய்தருள்க. கேசவர் உயிரோடு இராவிடில் நான் கல்கத்தாவுக்குப் போகும்போது யாரிடம் பேசுவேன்?' என்று வேண்டிக்கொள்வேன். இதனால்தான் தேவிக்கு இளநீரும், சர்க்கரையும் நைவேத்தியம் செய்வதாக உறுதி செய்துகொண்டேன்.

"இதைச் சொல்லு: கல்கத்தாவுக்கு வந்துள்ள கூக் என்ற ஒருவரைப் பற்றி உனக்குத் தெரியுமா? அவர் பிரசங்கம் செய்து வருவது உண்மையா?

ஒரு தடவை கேசவர் என்னைக் கப்பலில் ஏற்றிக்கொண்டு சென்றார்; அப்போது இந்த கூக் என்பவரும் எங்கள் கூட்டத்தில் இருந்தனர்."

ம—: "ஆம் ஐய, அம்மாதிரி யானும் ஏதோ கேள்விப்பட்டுள்ளேன்; ஆனால் அவருடைய பிரசங்கத்துக்கு நான் ஒருக்காலும் போனதில்லை. அவரைப்பற்றி அதிகம் எனக்குத் தெரியாது,"

ஸ்ரீ ராமகிருஷ்ணர்: "பிரதாப் என்பவரின் சகோதரர் இங்கே வந்தார். அவர் சில நாள் தங்கினர், அவருக்கு ஒரு வேலையுமில்லையாதலால் இங்கே வாழ விரும்புவதாகச் சொன்னர். அவர் தமது மனைவியையும், மக்களையும் தம் மாமனரிடம் விட்டு வைத்திருப்பதாக நான் அறிந்துகொண்டேன். அவருக்கு எத்தனையோ குழந்தைகள் உள்ளன! ஆதலால் யான் அவரைக் கண்டித்தேன். சற்றே பாரும்! அவர் எத்தனை குழந்தைகளைப் பெற்றவர்! அண்டையில் உள்ள ஜனங்கள் அக்குழந்தைகளுக்கு உணவளித்து வளர்த்து வருவார்களா? வேறு ஒருவர் தமது மனைவிக்கும் குழந்தைகளுக்கும் உணவூட்டுவதுபற்றியும், தமது மாமனருடைய வீட்டிலே அவர்களை விட்டு வைத்திருப்பது பற்றியும் அவர் நாணம் கூட அடையவில்லையே. நான் அவரை மிகக் கடுமையாகக் கண்டித்தேன், ஒரு வேலையைத் தேடிக் கொள்ளும்படி சொன்னேன். அதன் பின் இவ்விடம் விட்டுச் செல்ல அவர் சம்மதித்தார்.

"உனக்குக் கல்யாணமாகியிருக்கிறதா?"

ம—: "ஆம், ஐய."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் (நடுக்கமுற்று): "ஏ ராம்லால்! என்ன பரிதாபம்! அவனுக்குக் கல்யாணமாகிவிட்டதாம்."

ஒரு பெருந் தவறு செய்ததாகத் குற்றம் சாட்டப்பட்டவனைப் போல் ம— அசைவற்று, கண்கள் தரையை உற்று நோக்கிய வண்ணமாக உட்கார்ந்திருந்தார். "கல்யாணம் பண்ணிக்கொள்ளுதல் அவ்வளவு கெட்ட காரியமா?" என்று அவர் தமக்குள்ளே நினைத்துக் கொள்வாராயினர். (ராம்லால் என்பவர் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு மருமகர், காளி கோவிலில் பூசாரி.)

குருதேவர் பின்னும் அவரைப் பார்த்து "உனக்குக் குழந்தைகள் உண்டா?" என்று கேட்டார்.

இந்தத் தடவை தமது மார்பு படபடவென்று அடிப்பது ம—வுக்குக் காது கேட்டது. நடுங்கிய குரலில் அவர் "ஆம், ஐய, குழந்தைகள் உண்டு" என்று மெல்லிய குரலில் பதிலுரைத்தார்.

மிக்க துயரத்தோடு ஸ்ரீ ராமகிருஷ்ணரும் "என்ன பரிதாபம்! அவனுக்குக் குழந்தைகளும் உள்ளனவாம்" என்று கூறினர்.

இவ்வாறு கண்டிக்கப்பட்டதும் ம—மௌனமாய் இருந்தார். அவருடைய கர்வத்திற்கு ஓர் அடி கிடைத்தது. சில நிமிஷங்கள் சென்றபின் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரை அன்போடு நோக்கிச் சொன்னதாவது: "இதைக் கேள்.

உன்னிடம் சில நல்ல அறிகுறிகள் காணப்படுகின்றன. ஒரு மனிதனது முகத்தையும், கண்களையும் பிறவற்றையும் பார்த்து அக்குறிகளை நான் அறிந்து கொள்வேன். சரி, எனக்கொன்று சொல்லு, உன் மனைவி என்ன தன்மை யுடையவள்? அவளிடத்தில் தெய்விகக் குணங்கள் இருக்கின்றனவா? அவள் அறியாமை மிக்கவளா?"

ம—: "அவள் முற்றிலும் சரியாகத்தான் இருக்கிறாள். ஆனால் அவள் அறிவில்லாதவளே என்றுதான் பயப்படுகிறேன்."

குருதேவர்: (அருவருப்புத்தோன்ற) "நீ அறிவாளியோ?"

அறிவு, அறிவின்மை இரண்டிற்குமுள்ள வேறுபாட்டைக் கற்கவேண்டிய நிலையில் ம— இன்னும் இருந்தார். இதுவரை புத்தகங்களிலிருந்தும், பள்ளிக் கூடங்களிலிருந்தும் ஒருவருக்கு அறிவு வருகிறதென்று அவர் எண்ணியிருந்தார். பிற்காலத்தில் இத் தவறான கருத்தை விட்டுவிட்டார். கடவுளை அறிதலே அறிவு என்பதையும் அவரை அறியாதிருத்தலே அறியாமை என்பதையும் அவர் கற்றுக்கொண்டார். "நீ அறிவாளியோ?" என்று ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன போது ம—வுக்கு இருந்த அகங்காரத்திற்கு மறுபடியும் பெருத்த அடி ஒன்று விழலாயிற்று.

குருதேவர்: "சரி, உனக்கு நம்பிக்கை உருவக் கடவுளிடத்திலா? அருவக் கடவுளிடத்திலா?"

ம— ஒருவாறு ஆச்சரியப்பட்டுத் தமக்குள்ளே சொல்லிக்கொள்வார்: "உருவக் கடவுளிடத்து நம்பிக்கையிருக்கும்போது ஒருவனுக்கு அருவக் கடவுளின்மீது எப்படி நம்பிக்கை உண்டாக முடியும்? அருவக் கடவுளிடத்து ஒருவனுக்கு நம்பிக்கை இருக்குமானால் உருவக் கடவுளிடத்து அவனுக்கு எப்படி நம்பிக்கை ஏற்படமுடியும்? ஒன்றுக்கொன்று விரோதமான இவ்விரண்டு கருத்துக்களும் ஒரே சமயத்தில் உண்மையாயிருத்தல் இயலுமா? பால் போன்ற ஒரு வெண்மையான நீர்ப்பொருள் கடினமாயிருத்தலும் கூடுமா?"

ம—: "ஐய, கடவுளை அருவமாக நினைப்பது எனக்குப் பிரியம்."

குருதேவர்: "மிக நல்லது. இரண்டில் ஒன்றினிடத்து நம்பிக்கையிருப்பது போதும். உனக்கு அருவக் கடவுளில் நம்பிக்கை; அது மிகவும் நல்லதே. ஆனால் அது ஒன்றுதான் உண்மையென்றும், மற்றவையெல்லாம் பொய்யென்றும் ஒரு கணமும் நினையாதே. அருவக் கடவுளைப்போல உருவக் கடவுளும் அதே அளவு உண்மையென்பதை நினைவில் வைத்துக்கொள். ஆனால் உனது சொந்த முடிபையே நீ உறுதியாகப் பற்றிக்கொள்க."

இரண்டும் சம அளவு உண்மையென்று அவர் வற்புறுத்தியது ம—வுக்கு ஆச்சரியமாக இருந்தது; தமது புத்தகங்களிலிருந்து இதை அவர் இதுவரை கற்றுக்கொண்டதில்லை. ஆக அவரது அகங்காரத்துக்கு மூன்றும் முறையும் அடி கிடைத்தது; ஆனால் அது முழுதும் நசுங்கிவிடவில்லையாதலால் குருதேவரோடு இன்னும் கொஞ்சம் வழக்காட அவர் முன்வந்தார்.

ம—: "ஐய, ஒருவன் உருவக் கடவுளையே நம்புவதாக வைத்துக் கொள்வோம். கடவுள் களிமண்ணாலான உருவம் அல்ல என்பது உண்மை தானே?"

குருதேவர் (தடுத்து): "அப்படியா? ஏன் களிமண்ணாலான வடிவ மென்கிறாய்? அது சைதன்ய வடிவமே. (ஞானமயமே)"

"சைதன்ய வடிவம்" என்பதின் பொருள் ம—வுக்கு நன்றாக விளங்க முடியாது போயிற்று. அவர் குருதேவரைப் பார்த்து "ஆனால் ஐய, களிமண் ணாலான உருவத்தை வணங்குபவருக்கு அது கடவுள் அல்லவென்றும், அதை வணங்கும்போது கடவுளைக் கருத்தில் கொள்ளவேண்டுமேயன்றி, களிமண்ணா லான உருவத்தைக் கருத்தில் வைக்கக்கூடாது என்பதையும் விளக்குவது கடமையல்லவா? களிமண்ணை வணங்குதல் கூடாததன்றோ?" என்று வாதாடினர்.

குருதேவர் (கடுத்தகுரலில்): "கல்கத்தா ஜனங்களாகிய உங்களுக்கு இது ஒரு பிரியமான விளையாட்டு. எதுவென்றால், பிரசங்கங்கள் செய்வதால் பிறருக்கு ஞான ஒளியை ஊட்டுவது என்பதே. தனக்கு ஞான ஒளியை ஊட் டிக்கொள்ளும் வகையைப்பற்றி எவனும் ஒருபோதும் சிந்திப்பதிப்பதில்லை. பிறருக்குப் போதிக்க நீ யார்?

"உலக முதல்வனான ஈசன் எவனை அவன் ஒவ்வொருவருக்கும் போதிப் பான். உலகம் யாவையும் படைத்தவனும், சூரிய சந்திரர்களையும், மக்களையும் மிருகங்களையும், இன்னும் மற்றெல்லா உயிர்களையும் உண்டாக்கியவனும்; இவ் வுயிர்களின் பிழைப்புக்கு வேண்டிய சாதனங்களை அளித்திருப்பவனும்; குழந் தைகளுக்குப் பெற்றோரையும் படைத்து அவற்றை வளர்த்துவர அவர்களுக்கு அன்பை ஊட்டியவனும் எவனை அவனே நமக்குப் போதிப்பான். ஈசன் இத்தனை காரியங்கள் செய்துள்ளான்—அந்த ஈசன் தன்னை வணங்கும் வழியை மக்கட்குக் காட்டானா? அவர்கட்குப் போதனை வேண்டியிருந்தால் அவனே குருவாவான்! உள்ளிருந்து நம்மை நடத்துபவன் அவனே.

"களிமண்ணாலான உருவத்தை வழிபடுவதில் பிழை இருப்பதாகவே வைத்துக்கொள்ளுவோம். அவ்வுருவம் மூலமாக மக்கள் தன்னையே எழுந் தருளச் செய்கின்றனர் என்பதை ஈசன் அறியானா? அதே பூசையினாலும் ஈசன் மனமகிழ்வான். உனக்கு ஏன் அதற்காகத் தலைவலி வரவேண்டும்? ஞானமும், பக்தியும் உனக்கு உண்டாவதற்காக நீ முயற்சி செய்வது நல்லது."

இந்தத்தடவை ம— தனது அகங்காரம் முழுவதும் நசுங்கிவிட்டதை உணரலானார். இப்போது அவர் தமக்குள்ளே சொல்லிக்கொள்வார்: "சரி, அவர் கூறியதும் உண்மையே. பிறர்க்குப் போதித்தல் எனக்கு எப்படி அவ சியமாகும்? நான் கடவுளை அறிந்துவிட்டேனா? எனக்கு அவரிடத்தில் உண்மையான பக்தி உண்டா? எனக்கே என் படுக்கையில் இடமில்லாத

போது ஒரு தோழரை என்னோடு நான் படுத்துக்கொள்ள அழைப்பதுபோல!— என்று ஒரு பழமொழி உண்டே, அது எவ்வளவு உண்மை! எனக்குக் கடவுளைப் பற்றி ஒன்றும் தெரியாது, ஆயினும் பிறர்க்குப் போதிக்க நான் முயல்கிறேன். என்ன வெட்கக்கேடு! எவ்வளவு மூடத்தன்மை என்னிடம் உள்ளது! கணக்குப் பாடமோ, சரித்திரமோ, இலக்கியமோ ஒருவன் பிறர்க்குப் போதிக்க முடியும்; ஆனால் இது அம்மாதிரியான பாடமா? அன்று. பரம இரகசியமான தத்துவம் இது, ஈசனைப்பற்றியது. இப் பெரியார் சொல்வது எனக்குப் பிடித்த மாயிருக்கிறது.''

ம— முதன் முதலாகக் குருதேவரோடு வழக்காடியது இப்போதுதான்; இதுவே அவரது பிற்காலத்தில் கடைசி முறையுமாயிற்று.

குருதேவர்: ''களிமண்ணாலான உருவத்தை வணங்குவதாகப் பேசி வந்தாயே. உருவம் களிமண்ணால் ஆக்கப்பட்டிருந்தாலும், அம்மாதிரி வணங்குவதற்கும் அவசியம் உள்ளது. ஈசனே தன்னை வணங்கப் பூஜைமுறைகள் பலவற்றைத் தந்திருக்கிறான். உலக முதல்வனை அவனே பல வகைப்பட்ட மக்களுக்கு அவரவர் ஞான நிலையில் அடைந்துள்ள படிகளுக்கு ஏற்பப் பல் வகையான இம் முறைகளை யெல்லாம் ஒழுங்காக அமைத்துள்ளான்.

''ஒரு தாய் தனது குழந்தைகள் பலவற்றுக்கும் அதனதன் ஜீரண சக்திக்குத் தகுந்தவாறு பலவித உணவுகளைப் பக்குவம் செய்கின்றாள். அவருக்கு ஐந்து குழந்தைகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். பக்குவம் பண்ண ஒரு மீனே இருக்குமானால் அதைக் கொண்டு அவள் பல வகைக் கறிகளைச் சமைப்பாள். அக் குழந்தைகளின் பல வகைப்பட்ட ருசிக்கும் ஜீரண சக்திக்கும் தகுந்தபடி அவை தயாரிக்கப்படும்.

''நான் சொல்வது உனக்கு விளங்குகின்றதா?''

ம—(தாழ்மையாக): ''ஆம், ஐய. கடவுளின் மீது நான் எப்படி மனதை நிலை நிறுத்தலாம்?''

குருதேவர்: ''ஈசனது நாமத்தை ஜெபித்து அவனது புகழைப் பாடுக; இடையிடையே பக்தர்களையும், சாதுக்களையும் போய்த் தரிசனம் பண்ணுக. அல்லும் பகலும் மனம் ஆசாபாசங்களிலும், உலகக் கடமைகளிலும் பொறுப்புக்களிலும் அமிழ்ந்திருந்தால் கடவுளிடத்தில் அது நிலையாக நிற்க முடியாது; இடையிடையே தனி இடம் சென்று ஈசனைப்பற்றித் தியானித்தல் மிக அவசியம். ஒருவன் தனிமையில் தியானம் பழகாதபோது, ஆரம்பத்தில் மனதைக் கடவுளிடத்து நிலைநாட்டுதல் மிக்க கஷ்டமாகும். இளம் செடியிருக்கும்போது அதைச் சுற்றி வேலி அமைக்க வேண்டும்; இல்லாவிடில் அதை ஆடுமாடுகள் அழித்துவிடும்.

''தியானம் பண்ண மூன்று முறைகள் உண்டு: உனது கடமைகளைச் செய்து வரும்போதே கடவுளை நினைத்து வருதல் ஒன்று; உனது வீட்டில் ஒரு தனி யிடத்தில் அமர்ந்து ஈசனைத் தியானித்தல் இரண்டாவது; கானகம்

சென்று கடவுளைத் தியானித்தல் மூன்றாவது. நீ எப்போதும் இது நித்திய மானது, இது அநித்தியமானது என்று பாகுபாடு செய்துகொண்டே யிருத்தல் வேண்டும்; இது தான் விவேகம் எனப்படும். ஈசனே உண்மைப் பொருள், நித்தியமான வஸ்து; மற்றவையெல்லாம் பொய்யானவை அதாவது அநித்திய மானவை. இம்மாதிரி விசாரணை செய்துகொண்டே வந்து அநித்தியமான பொருள்களைப் பற்றிய நினைவை மனத்திலிருந்து நீக்கிவிட வேண்டும்."

ம—(தாழ்மையோடு): "நாம் எவ்வாறு உலகில் வாழவேண்டும்?"

குருதேவர்: "உனது கடமைகளையெல்லாம் செய்து வா, ஆனால் உனது மனத்தை ஈசனிடம் வைத்துக்கொள். எல்லோரோடும் வாழ்ந்துவா—மனைவியோடும், குழந்தைகளோடும், தந்தையோடும் தாயோடும் சேர்ந்து வாழ்—அவர்கட்குப் பணிவிடை செய். உனக்கு மிகவும் அருமையானவர் போன்று அவர்களை நடத்திவருக, ஆனால் உனது நெஞ்சுக்குள் அந்தரங்கத்தில் அவர்கள் உனக்குச் சொந்தமானவரல்லர் என்பதை அறிந்துகொள்.

"ஒரு பணக்காரரது வீட்டு வேலைக்காரி வீட்டு வேலைகளையெல்லாம் செய்து வருகிறாள்; ஆனால் அவளது நினைவுகளோ அவளது பிறந்த ஊரிலுள்ள அவளது சொந்த வீட்டின்மீது நிலையாக நிற்கின்றன. தனது எஜமானரின் குழந்தைகளைத் தனது சொந்தக் குழந்தைகள்போல வளர்த்து வருகிறாள். அவர்களைப் பற்றிப் பேசும்போது 'எனது ராமன்' என்றோ 'எனது ஹரி' என்றோ சொல்லவும் செய்கிறாள். ஆனால் அக் குழந்தைகள் தனக்குச் சொந்தமே இல்லை யென்பது அவளது மனதிற்குள்ளே மிக நன்றாகத் தெரியும்.

"பெண் ஆமை தண்ணீரிலே அங்கு மிங்கும் செல்கிறது. ஆனால் அதன் நினைவுகள் எங்கே உள்ளன என்பதை நீ சொல்ல முடியுமா? அதன் முட்டைகள் கிடக்கும் கரையிலேதான் இருக்கும். உலகத்தில் உனக்குள்ள கடமைகளைச் செய். ஆனால் உன் மனதைக் கடவுளிடம் வை.

"முதன் முதலிலேயே ஈசனிடத்து அன்பை வளர்க்காமல் உலகத்துக்குள்ளே நீ புகுந்தால், மென்மேலும் அதன் சிக்கலில் அகப்பட்டுக்கொள்வாய். அதிலுள்ள அபாயத்திலும், துயரத்திலும், துன்பங்களிலும் நீ மூழ்கி விடுவாய். உலகப் பொருள்களைப் பற்றி நீ நினைக்கும் அளவுக்கு அவற்றின் மீதுள்ள பற்றும் உனக்கு அதிகமாகும்.

"முதலில் உனது கைகளின்மீது எண்ணெயைப் பூசிக்கொள்; பிறகு பலாப்பழத்தை நீ பிளக்கலாம். அப்படிச் செய்யாவிடில் உன் கைகள்மீது அதன் பாலாகிய பிசின் ஒட்டிக்கொள்ளும். முதலில் ஈசன்மீது பக்தி என்னும் எண்ணெயைப் பெற்றுக்கொள், பிறகு உனது கைகளை உலகக் கடமைகளிற் புகுத்தலாம்.

"ஆனால் ஈசன்மீது இப் பக்தியைப் பெறுவதற்குத் தனியிடம் செல்வது ஒருவருக்குக் கட்டாயமாகும். பாலிலிருந்து வெண்ணெயை எடுக்கவேண்டு

மானுல் ஒதுக்கமான இடத்தில் அது தயிராக உறையும்படி விட்டுவிடவேண்டும். அதை அளவுக்கு மிஞ்சி அசைத்தால் பால் தயிராக உறையாது. அதற்குப் பின் மற்றக் கடமைகளையெல்லாம் ஒரு பக்கம் ஒதுக்கிவிட்டு, அமைதியான ஓர் இடத்தில் அமர்ந்து தயிர் கடையவேண்டும். அப்போதுதான் உனக்கு வெண்ணெய் கிடைக்கும்.

" மேலும் தனியிடத்தில் ஈசனைப்பற்றித் தியானிப்பதினுல் மனம் ஞானத்தையும், வைராக்கியத்தையும், பக்தியையும் அடைகிறது. ஆனுல், அதே மனது உலகத்திலே வசிக்குமாயின் கீழ் நோக்கிச் சென்றுவிடும். உலகத்திலே ஒருவர் நினைப்பது 'காமினி', 'காஞ்சனம்' இரண்டையும் பற்றித்தான்.

['காமினி' (பெண்) 'காஞ்சனம்' (பொன்) என்ற இரண்டு வார்த்தைகளும் அடிக்கடி ஸ்ரீராமகிருஷ்ணருடைய போதனைகளில் வருகின்றன. அவை ஞான முன்னேற்றத்துக்கு முக்கியத் தடைகளையே குறிக்கின்றன. " காமினி, காஞ்சனம் " , என்று குருதேவர் கூறும்போது அவர் கொண்ட கருத்தாவது: 'காமம், பண ஆசை' என்பதே. 'காமினி' என்னும் பதத்தை ஆண் அடியாருடன் பேசும்போது காம இச்சையைக் குறிக்கும் ஒரு பதமாகவே அதை அவர் உபயோகிப்பார். பெண் அடியாருடன் பேசும் போது 'ஆண்களைத்' தவிர்க்குமாறு போதிப்பார். 'காஞ்சனம்' என்னும் பதம் ஞான வாழ்க்கைக்கு மற்றோர் இடையூறான பண ஆசையைக் குறிப்பதாகும். யாரேனும் பெண்ணையோ அல்லது பொதுவாகப் பெண்பாலாரையோ வெறுக்க வேண்டுமென ஒருக்காலும் ஸ்ரீராமகிருஷ்ணர் தம் சீடருக்குப் போதித்ததில்லை. பெண்கள் அனைவரையும் உலக மாதாவாகிய தேவியின் வடிவங்களாகவே கருதி வந்தார். மிக உயர்ந்த தந்திர சாதனங்களைப் பழகி வரும்போது அவர் ஒரு நங்கையையே தமது குருவாக ஏற்றுக்கொண்டார். இதனுல் பெண்பாலாரிடம் அவருக்கு இருந்த உயர்ந்த மதிப்பு நன்கு வெளியாகிறது. 'தூய அம்மையார்' என்று பலரும் பெயரிட்டு வணங்கும் ஸ்ரீராமகிருஷ்ணரது மனைவியார் அவருக்கு விட்டுப் பிரியாத ஒரு தோழியாயும், சிஷ்யையாயும் இருந்தார். தமது ஞானசாதனம் முடிவடையும்போது, ஸ்ரீராமகிருஷ்ணர் தமது மனைவியாரைக் காளிதேவியின் உருவமாகவே வைத்து முறைப்படி பூஜித்தார். அவர் மறைந்ததும், தூய அம்மையாரே இல்லறத்தாருக்கும், ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த அநேக துறவிகட்குங்கூட ஞான குருவாக வாழ்ந்தார்.]

" உலகம் தண்ணீர் போன்றது, மனம் பால் போன்றது. பாலை நீ தண்ணீரில் ஊற்றினுல் இரண்டும் ஒன்றுகிவிடும்; தனிப்பாலை அதன்பின் பிரித்துக்காண முடியாது. ஆனுல் பாலைத் தயிராக்கி அதைக்கடைந்து வெண்ணெயைத் திரட்டுக. அதன்பின் அவ்வெண்ணெயை நீரில் வைத்தால் அது மிதந்துகொண்டிருக்கும். அதுபோல் தனியிடத்திலே ஞானசாதனம் பழகி, ஞானம் பக்தி என்னும் வெண்ணெயைப் பெறுக. அவ்வெண்ணெயை உலகமாகிய தண்ணீரில் வைத்தாலும் இரண்டும் கலக்காதிருக்கும்; வெண்ணெய் மிதக்கும்.

" இதோடுகூட நீ அவசியம் ஞான விசாரணையும் (விவேகமும்) பழக வேண்டும், பெண்ணும் பொன்னும் நிலையற்றன. ஈசன் ஒருவனே அழியாத வஸ்து, பணத்தைக்கொண்டு ஒருவன் என்ன பெறுவான் ? உணவு, ஆடை

இருக்க ஓர் இடம்—இவற்றுக்குமேல் உண்டா? இதன் துணையால் ஈசனை உணர உனக்கு இயலாது. ஆதலால் வாழ்க்கையின் இலக்கியம் ஒருக்காலும் பணம் என்பதாகாது. இதுதான் விசாரணை செய்யும் முறை. உனக்குத் தெரிகின்றதா?"

ம—: "தெரிகின்றது ஐய."

குருதேவர்: "இதை யோசித்துப்பார். பணத்திலோ ஓர் அழகான சரீரத்திலோ யாது உள்ளது? விசாரித்துப்பார்; மிக அழகான மாதின் சரீரமும் எலும்புகளாலும், மாம்சத்தாலும், கொழுப்பாலும், இன்னும் மற்ற மனதுக்குப் பிடிக்காத பொருள்களாலும் ஆக்கப்பட்டுள்ளது என்பதை நீ அறிவாய். ஒரு மனிதன் எதற்காக ஈசனைக் கைவிட்டு அப்பேர்ப்பட்ட அற்பப் பொருள்களின் மீது கவனத்தைச் செலுத்தவேண்டும்? அவற்றிற்காக ஒரு மனிதன் ஈசனை ஏன் மறந்துவிடவேண்டும்?"

ம—: "ஈசனை நேரே காண முடியுமா?"

குருதேவர்: "ஆம், நிச்சயமாக முடியும். இடையிடையே தனியிடத்தில் வாழ்தல், ஈசனது நாமத்தை ஜபித்து அவரது புகழைப் பாடுதல், மெய்யான பொருளுக்கும் பொய்யான பொருளுக்கும் உண்டான வேறுபாட்டை ஆராய்தல்—இவையே ஈசனைக் காண்பதற்கு உபயோகிக்கத்தக்க சாதனங்களாகும்."

ம—: "எந்த நிலைமைகளில் ஒரு மனிதன் ஈசனைக் காண்கிறான்?"

குருதேவர்: "மிக ஆவலோடு அவரைக் காணத் துடிதுடித்து அவருக்காக அழு. நீ அவரைக் காண்பது உறுதி. மனைவி மக்கட்காக ஜனங்கள் குடங் குடமாகக்கண்ணீர் பொழிகின்றனரே; பணத்துக்காகக் கண்ணீர்க் கடலில் நீந்துகின்றனரே, ஆனால் ஈசனுக்காக அழுகின்றவர் யார்? அவரைக் குறித்து மெய்யாக அழு.

"பேரவா அருணோதயத்தைப் போன்றது. அருணோதயத்துக்குப்பின் சூரியன் எழுகின்றான். பேரவா உண்டானபின் ஈசனது காட்சி நிகழ்கின்றது.

"பின்வரும் மூன்றுவித கவர்ச்சிகளும் ஒன்று கூடுவதினால் உண்டாகும் வலிமையோடு, ஈசனிடம் மனம் இழுபட்டுச் செல்லும் ஒரு பக்தனுக்கு, ஈசன் தன்னைத்தானே காட்டி அருளுகிறான். அவையாவன:—உலகப்பற்றுள்ள மனிதனுக்கு உலகச் சொத்துக்களின்மீதுள்ள கவர்ச்சியும், ஒரு தாய்க்குக் குழந்தையின்மீதுள்ள கவர்ச்சியும், கற்புடைய மனைவிக்குக் கணவன்மீதுள்ள கவர்ச்சியும், இம்மூன்று கவர்ச்சிகளும் ஒன்று சேருவதினால் எழும் வலிமையோடு ஒருவனது மனம் ஈசனை நோக்கி இழுக்கப்படுமாயின் அவனுக்கு ஈசனை அடைய முடியும்.

விஷயம் எதுவென்றால், ஒரு தாய் தன் குழந்தையினிடத்தும், கற்புடைய மனைவி கணவனிடத்தும், உலகப்பற்றுள்ளவன் தனது செல்வத்தினிடத்தும் பிரியம் செலுத்துவது போல ஈசனிடத்து அன்பைச் செலுத்த வேண்டும் என்

பதுதான். இம் மூன்று விதப் பிரியங்களின் சக்திகளையும், இம் மூன்று விதக் கவர்ச்சிகளின் வலிமைகளையும் ஒன்று சேர்த்து, முழுவதையும் கடவுளிடம் செலுத்து. அப்போது ஈசனைக் காண்பது உறுதி.

"ஆதரம் (அன்பு) பெருக ஈசனிடம் பிரார்த்தித்தல் அவசியம். பூனைக் குட்டிக்கு "மியா மியா" என்று கத்திக்கொண்டே தன் தாயை அழைப்பது மட்டும்தான் தெரியும். அதன் தாய் அதனை எங்கே வைத்தாலும் அது திருப்தியடைகிறது. தாய்ப்பூனை, தன் குட்டியை ஒரு சமயம் சமையல் அறையிலும் இன்னொரு சமயம் தரை மீதும், வேறு ஒரு சமயம் படுக்கை மீதும் வைக்கிறது. அது வருந்தும்போது மியா மியா என்றுதான் கத்துகிறது. அதற்குத் தெரிந்தது அவ்வளவுதான். ஆனால் இந்தக் குரலைத் தாய் கேட்டவுடனே எங்கிருந்தாலும் பூனைக்குட்டி இருக்குமிடத்துக்குத் தாய்ப்பூனை ஓடிவந்து விடுகிறது."

ம—மூன்றாம் முறை குருதேவரைக் காணவந்தது ஒரு ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில். இந்த ஆச்சரியமான மனிதரை முதல் இரண்டு முறைகள் தரிசித்த பிறகு அவரது பெருமையைப் பற்றிய உணர்ச்சி ம—வின் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்துவிட்டது. அவர் குருதேவரை சதா நினைத்துக்கொண்டே இருந்தார்; ஞான வாழ்க்கையைப்பற்றிய ஆழ்ந்த உண்மைகளை அவர் மிக எளிய முறையில் விளக்கி வந்ததையும் அடிக்கடி சிந்தித்துக் கொண்டிருந்தார். இப்பேர்ப்பட்ட மனிதரை இதற்கு முன் அவர் சந்தித்ததே யில்லை.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிறிய கட்டிலின் மீது அமர்ந்திருந்தார். அந்த அறையில் அடியார்கள் நிரம்பியிருந்தனர். அன்று விடுமுறை நாளாயிருந்தமையாலே அவர்கள் குருதேவரைக் காண வந்திருந்தனர். அவர்களில் எவரோடும் ம—இன்னும் பழகிக் கொள்ளவில்லை; ஆதலால் அவர் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டார். குருதேவர் புன்சிரிப்போடு அடியார்களிடம் பேசிக்கொண்டிருந்தார்.

நரேந்திரநாத் (பிற்காலத்தில் இவரே சுவாமி விவேகாநந்தர் ஆனார்) என்ற பத்தொன்பது வயதுள்ள ஒரு சிறுவனிடமே குருதேவர் மிகுதியாகப் பேசிக்கொண்டிருந்தார். அச் சிறுவன் ஒரு கல்லூரி மாணவன்; அடிக்கடி பிராம்மோ சமாஜம் என்னும் சங்கத்துக்குப் போய்க்கொண்டிருந்தான். அவனுடைய கண்கள் ஒளி வீசின. அவனுடைய மொழிகள் ஊக்கத்தைக் கக்கின. ஈசனின் அடியார்க்குரிய பார்வை அவனிடமிருந்தது.

ஞான காரியங்களில் ஈடுபட்டுள்ளவரை இகழ்ந்து பேசும் உலகப்பற்றுள்ள மனிதரைப் பற்றிய சம்பாஷணை நிகழ்ந்து வந்ததாக ம—ஊகித்தார். உலகத்திலே அந்த மாதிரியான மனிதர் ஏராளமாயிருப்பதைப்பற்றியும் அவர்களோடு இன்னவாறு பழக வேண்டும் என்பதைப்பற்றியும் குருதேவர் பேசிக்கொண்டிருந்தார்.

குருதேவர் (நரேந்திரரை நோக்கி): "நான் சொல்லப்போவதைப் பற்றி உனக்கு எப்படித் தோன்றுகிறது? ஞான இச்சையுடையவர்களைப்பற்றி

உலகப்பற்றுள்ள மனிதர்கள் கண்டவாறெல்லாம் பேசுவர். ஆனால் இதைக் கவனி. ஒரு யானை தெரு வழியே நடந்து செல்லும்போது எத்தனையோ நாய்களும் வேறு சிறு பிராணிகளும் குரைத்துக்கொண்டும், கத்திக்கொண்டும் பின்வரலாம். ஆனால், யானையோ அவற்றைத் திரும்பிப் பார்ப்பதும் இல்லை. ஜனங்கள் உன்னைப்பற்றி நிந்தித்தால் நீ அவர்களைப்பற்றி என்ன நினைப்பாய்?"

நரேந்திரன்: "நாய்கள் என்னைப் பார்த்துக் குரைப்பதாக நினைப்பேன்."

குருதேவர் (புன் சிரிப்போடு): "அப்படியா? அது கூடாது; குழந்தாய் அவ்வளவு தூரம் நீ செல்லக்கூடாது (சிரித்தல்). ஈசன் எல்லா உயிர்களிடத்தும் குடிகொண்டுள்ளனன். ஆனாலும் நல்லவரோடு மட்டும் நீ நெருங்கிப் பழகலாம். பொல்லாதவரிடமிருந்து நீ விலகவேண்டும். ஈசன் புலியினிடத்தும் உள்ளான். ஆனால் அக்காரணம்பற்றி நீ புலியைத் தழுவலாகாது. (சிரித்தல்) 'புலியும் ஈசனின் அம்சந்தானே, எதற்காக அதனிடமிருந்து விலகி ஓடவேண்டும்?' என்று நீ கேட்கலாம். அதற்கு மறுமொழி இது: உன்னை விலகும்படி சொல்லுகிறவர்களும் ஈசனின் அம்சங்களேயல்லவா? அவர்களுடைய சொற்படி நீ ஏன் நடக்கக்கூடாது?

"நான் ஒரு கதை சொல்லுகிறேன், ஒரு காட்டிலே சாது ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்குப் பல சீடர்களுண்டு. ஒரு நாள் அவர், எல்லா உயிர்களிடத்தும் ஈசனைக் காணவேண்டுமென்றும், அதனால் அவையெல்லாவற்றுக்கும் முன்னே வீழ்ந்து வணங்கவேண்டுமென்றும், அவர்கட்குப் போதித்தார். ஒரு சீடன் ஹோமத்திற்கு விறகு கொண்டுவருவதற்காகக் காட்டிற்குச் சென்றான். திடீரென்று 'வழியை விட்டு விலகு! மதம் பிடித்த ஒரு யானை வருகிறது!' என்ற கூக்குரல் அவன் காதில் விழுந்தது. அந்த சாதுவின் சிஷ்யரைத் தவிர மற்ற எல்லோரும் உடனே ஓட்டம் பிடித்தனர். அந்த சீடனோ 'யானையும் ஈசனின் வடிவந்தானே' என்று தனக்குள்ளே வழக்காடிக் கொண்டு, அக்காரணத்தால் வழியைவிட்டு விலகவேண்டாம் என்றிருந்தான். வழியிலே அவன் அசையாது நின்றான். யானையின் முன்பு விழுந்து வணங்கி அதன் புகழைப் பாடத்தொடங்கினன். யானைமீதிருந்த மாவுத்தன் "ஓடிப்போ! ஓடிப்போ!" என்று கத்தினன். அந்த சீடனோ நகரவேயில்லை. ஆனால் யானை அவனைத் தனது துதிக்கையால் பற்றி ஒரு பக்கம் வீசி எறிந்துவிட்டுத் தன் வழியே போயிற்று. அடியும், காயமும் பட்ட சீடன் தரைமீது நீனவற்றுக் கிடந்தான். நடந்ததைக் கேள்விப்பட்ட அவனது குருவும், சகோதர சீடர்களும், அவன் இருக்குமிடம் வந்து அவனை ஆசிரமத்துக்குத் தூக்கிச் சென்றனர். ஏதோ ஒரு மருந்தின் துணையால் அவனுக்கு மீண்டும் நினைவு வந்தது. யாரோ ஒருவர் அவனைப் பார்த்து 'யானை வந்துகொண்டிருந்தது உனக்குத் தெரியுமே, நீ ஏன் இடத்தைவிட்டு விலகவில்லை?' என்று கேட்டார். அதற்குப் பதிலாக அவன் 'அது சரி. ஈசனே மிருகங்களும், மனிதர்களுமான இவ்வெல்லா வடி

வங்களாகவும் உள்ளானென்று எமது குருநாதர் எங்கட்குச் சொல்லியுள்ளாரே. ஆதலால் யானை வடிவில் உள்ள ஈசன்தானே வருகின்றான் என்று எண்ணி நான் ஓடவில்லை' என்று சொன்னான். இதைக்கேட்ட குருநாதர் சொன்னதாவது: "சரி, குழந்தாய், யானை வடிவமான ஈசன் வந்துகொண்டிருந்தது உண்மைதான். ஆனால் மாவுத்தன் வடிவான ஈசன் அங்கே நிற்கவேண்டாமென்று உன்னைத் தடுத்தான் அன்றோ? எல்லாம் ஈசனது வடிவமானால் மாவுத்தனின் வார்த்தையில் உனக்கு ஏன் நம்பிக்கையில்லாது போயிற்று? மாவுத்தன் வடிவான ஈசன் சொற்படி நீ நடந்திருக்கவேண்டுமன்றோ?' (சிரிப்பு)

"தண்ணீரும் ஈசனின் ஒரு வடிவம் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. ஆனால் ஒருவகை நீர் பூஜைக்கும், இன்னொருவகை நீர் முகங்கழுவவும், மற்றொரு வகை நீர் பாத்திரங்கள் துலக்கவும் துணி தோய்க்கவும் பயன்படத் தக்கதாயுள்ளன. இந்தக் கடைசி வகை நீர் குடிக்கவோ பூஜைக்கோ உதவாது. அதுபோல, தூய்மையுள்ளவர்-தூய்மையற்றவர், நேர்மையுடையவர்-நேர்மையற்றவர் ஆகிய எல்லோருடைய நெஞ்சங்களிலும் ஈசன் வசிப்பதில் சந்தேகமில்லை; ஆனாலும் தூய்மையற்றவரோடும், கெட்டவரோடும், அழுக்கு மனத்தவரோடும் ஒருவன் பழக்கம் வைத்துக்கொள்ளக் கூடாது. அவர்களோடு ஒருவன் நெருங்கிப் பழகக்கூடாது. அவர்களில் சிலரோடு பேச்சு வைத்துக்கொள்ளலாம்; ஆனால் பிறரோடு அவ்வளவு செய்வதும் சரியன்று. அம்மாதிரி மக்களிடமிருந்து அவன் விலகவேண்டும்."

ஓர் அன்பர்: "ஐய, ஒரு கெட்ட மனிதன் தீங்கு செய்யப்போகும் நிலைமையில் இருந்தாலோ, உண்மையாகவே தீங்கு செய்தாலோ நாம் சும்மா இருக்க வேண்டியதுதானா?"

குருதேவர்: "மக்களுக்கு நடுவே வாழ்பவன் கெட்ட மனமுடையாரிடமிருந்து தன்னைக் காத்துக்கொள்வதற்காக வெளியிற் கோபங் காட்டவேண்டும். ஆனால் தனக்குக் கேடு செய்யலாம் என்று எதிர்பார்த்து எவனுக்கும் கேடு செய்யக்கூடாது.

"ஒரு கதையைக் கேள். சில இடைப்பிள்ளைகள் ஒரு புல்லுத் தரையிலே தமது பசுக்களை மேய்ப்பது வழக்கம், அத் தரையிலே ஒரு கொடிய விஷப் பாம்பு வாழ்ந்து வந்தது. அதற்கு அஞ்சி ஒவ்வொருவரும் விழிப்பாயிருந்தனர். ஒரு நாள் ஒரு பிரம்மசாரி அப் புல்லுத் தரை வழியாக போய்க்கொண்டிருந்தான். பிள்ளைகள் அவனிடம் ஓடி 'சுவாமிகளே, அவ் வழி போகாதீர்கள். ஒரு கொடிய விஷப் பாம்பு அங்கே வசிக்கின்றது' என்று சொன்னார்கள். அதற்குப் பிரம்மசாரி 'குழந்தைகளே! அதனால் என்ன? நான் அப்பாம்புக்குப் பயப்படேன். எனக்குச் சில மந்திரங்கள் தெரியும்" என்றனர். அப்படிச் சொல்லிக்கொண்டே அத் தரை வழியே அவர் நடந்துகொண்டிருந்தார். ஆனால் இடைப்பிள்ளைகளோ பயந்தவராதலின் அவரோடுகூடச் செல்லவில்லை. இதற் கிடையில் பாம்பு படத்தை உயர்த்திக்கொண்டு அவரை நோக்கி விரைந்து வந்தது.

அவர் ஒரு மந்திரத்தை உச்சரித்தார். பாம்பும் ஒரு நாங்கூழ்ப் புழுவைப்போல (மண்ணைக் குடைந்து கொண்டு உள்ளே செல்லும் ஒரு வகை நீண்ட புழு) அவரது காலடியில் கிடந்தது. அப்போது பிரம்மசாரி அதனிடம் கூறினதாவது: 'இதைக் கவனி. நீ ஏன் தீங்கு செய்துகொண்டிருக்கிறாய்? வா, நான் ஒரு மந்திரம் உனக்கு உபதேசிக்கிறேன். அதை ஜெபிப்பதினால் உனக்கு ஈசன்மீது பக்தி உண்டாகும். இவ்வழியால் உனது இம்சைக் குணமும் உன்னை விட்டு நீங்கும். முடிவில் ஈசனையும் தரிசிப்பாய்.' இப்படிச் சொல்லிக்கொண்டே அவர் அப்பாம்பிற்கு ஞான வாழ்க்கைக்குரிய தீக்ஷை அருளினார். பாம்பும் குருவைப் பணிந்து 'ஐயனே, நான் எப்படி ஞான சாதனம் பழகுவது?' என்று கேட்டது. குருவும் அதற்குப் பதிலாக 'மந்திரத்தை ஜபி; ஒருவரையும் இம்சிக்காதே' என்று சொன்னார். பிரம்மசாரி பிரியும் சமயத்தில் அதனிடம் 'நான் உன்னை மறுபடியும் பார்ப்பேன்' என்றனர்.

"சில நாட்கள் கழிந்தன. பாம்பு ஒருவரையும் கடிப்பதில்லை யென்பதை இடைப்பையன்கள் கவனித்துக்கொண்டனர். அவர்கள் அதன்மீது கல்லை எறிந்தனர். அப்போதும் அது சிறிதும் கோபமில்லாமல் ஒரு நாங்கூழ்ப் புழுவைப் போல இருந்தது. ஒரு நாள் பிள்ளைகளில் ஒருவன் அதன் அருகே வந்து அதன் வாலைப் பிடித்து மேலே அதைப் பல முறை சுழற்றித் தரைமீது திரும்பத் திரும்ப அறைந்து பின் அதை எறிந்துவிட்டான். பாம்பு இரத்தத்தைக் கக்கி மூர்ச்சையாயிற்று. அது அசையாது கிடந்தது. ஆதலால் அது இறந்துவிட்டதென்று கருதிப் பையன்கள் தம் வழியே போயினர்.

"இரவு நெடுநேரம் கழிந்தபின் பாம்புக்கு உணர்ச்சி வந்தது. மெதுவாகவும், மிகச் சிரமப் பட்டும் நகர்ந்து நகர்ந்து தன் வளைக்குள் சென்றது. அதன் எலும்புகள் நொறுங்கி யிருந்தன. அதனால் அதற்கு நகரவும் முடியவில்லை. பல நாள்கள் கழிந்தன. பாம்பு எலும்புந் தோலுமான வடிவம் அடைந்தது. இடையிடையே இரவில் இரை தேடுவதற்காக அது வெளியில் வரும். பையன்களுக்குப் பயந்து பகல் வேளையில் அது தன் பொந்தை விட்டு வெளியே வராதிருந்தது. குருவினிடமிருந்து மந்திரம் பெற்ற நாள் முதலாக அது பிறர்க்குத் தீங்கு செய்தலை விட்டு விட்டது. அது கிழங்கையோ, இலைகளையோ, மரத்திலிருந்து வீழ்ந்த பழத்தையோ உண்டு வாழ்ந்தது.

"சுமார் ஓர் ஆண்டு கழிந்தபின் பிரம்மசாரி மறுபடியும் அவ்வழியே வந்து பாம்பைப்பற்றி விசாரித்தார். அது இறந்துவிட்டதாக இடைப்பையன்கள் அவரிடம் சொன்னார்கள். ஆனால் அவர்க்கு அதை நம்ப முடியவில்லை. தாம் உபதேசித்த மந்திரத்தின் பலனையடையுமுன்னர் பாம்பு இறந்திருக்காது என்பது அவருக்குத் தெரியும். அவர் அதன் இருப்பிடத்தை நாடிச் சென்றார். இங்கு மங்கும் தேடியபின் தான் கொடுத்த தாஸ நாமத்தை (தீக்ஷை கொடுக்கும் போது சிஷ்யனுக்குக் குரு வைக்கும் புதுப் பெயரை)க்கொண்டு அழைத்தார். குருவின் குரலைக் கேட்டதும் அது தன் பொந்தைவிட்டு வெளியில் வந்தது.

மிக்க பயபக்தியோடு அவரை வணங்கியது. பிரம்மசாரி அதனிடம் 'சௌக்கியமா?' என்று விசாரித்தார். அதற்குப் பாம்பு 'நிரம்ப சௌக்கியம், ஐயனே, என்று பதிலளித்தது. அப்போது குரு அதைப் பார்த்து "ஆனால் நீ அவ்வளவு மெலிந்திருக்கக் காரணம் யாது?" என்று வினவினர். அதற்கு மறுமொழியாக "சுவாமி, தாங்கள் எனக்கு ஒருவரையும் இம்சியாதே என்று கட்டளையிட்டீர்கள். நான் அதன்படிக்கு இலையையும், பழத்தையும் மட்டும் தின்று உயிர் வாழ்ந்து வருகிறேன். ஒருக்கால் அதனால் நான் முன்னிலும் மெலிந்திருக்கலாம்' என்று சொன்னது.

"பாம்பு நற்குண முள்ளதாக மாறிவிட்டது. அது ஒருவரிடமும் கோபங் கொள்ள முடியாத நிலையை அடைந்தது. இடைப் பிள்ளைகள் அப்பாம்பை ஏறக்குறைய ஒரு நாள் கொன்றுவிட்டதை அது முழுதும் மறந்துவிட்டது.

"பிரம்மசாரி அதைப் பார்த்து 'வெறும் பட்டினியால் நீ இந்தக் கேவலமான நிலையை அடைந்திருக்க முடியாது. வேறு ஒரு காரணம் இருந்தேயாக வேண்டும். சற்றே நிதானித்துப்பார்" என்று சொன்னர். அப்போதுதான் பிள்ளைகள் தன்னைத் தரைமீது அறைந்தது பாம்பிற்கு நினைவில் வந்தது. 'சுவாமி, இப்போது எனக்கு ஞாபகம் வருகின்றது. பிள்ளைகள் ஒரு நாள் என்னைப் பிடித்து முரட்டுத்தனமாகத் தரைமீது அறைந்தனர். அவர்கள் அறியாத பிள்ளைகள்தானே. என் மனம் எவ்வளவு பெரிய மாறுதல் அடைந்து விட்டதென்பதை அவர்கள் உணரவில்லை. நான் ஒருவரையும் கடிக்கவோ, யார்க்கும் தீங்கு செய்யவோ, பிரியப்படமாட்டேன் என்பதை எப்படி அவர்கள் அறியக் கூடும்?' என்று சொன்னது.

"பிரம்மசாரி அதைக் கேட்டதும் 'என்ன வெட்கக்கேடு! நீ அவ்வளவு மூட்டாளாயினை. உன்னைக் காப்பாற்றிக்கொள்ளவும் உனக்குத் தெரியவில்லை. நான் உன்னிடம் சொன்னது "கடியாதே" என்றுதான். நீ சீறுவதை நான் தடுக்கவில்லையே. அவர்களைப் பயமுறுத்துவதற்காக நீ ஏன் சீறவில்லை?' என்று கண்டித்தார்.

"ஆதலால் கெட்டவர்மீது நீ சீறத்தான் வேண்டும். உனக்கு அவர்கள் தீங்கு செய்யாமல் இருக்கும் பொருட்டு நீ அவர்களை அவசியம் பயமுறுத்த வேண்டும். ஆனால் ஒரு நாளும் உன் விஷத்தை அவர்களிடம் செலுத்தி விடாதே. பிறர்க்குத் தீங்கு செய்தல் கூடாது.

"ஈசன் படைத்த இவ்வுலகில் மனிதன், மிருகங்கள், மரங்கள், செடிகள் என்னும் பலவிதப் பொருள்கள் இருக்கின்றன. மிருகங்களுக்குள்ளே சில நல்லவை, சில கெட்டவை. புலியைப்போன்று மூர்க்கமுள்ள மிருகங்களும் உள. சில மரங்கள் அமுதம் போன்ற இனிய கனிகளைத் தருகின்றன; மற்ற வையோ விஷம் நிறைந்த பழங்களைத் தருகின்றன. அதுபோன்று மனிதர்க்குள்ளும் நல்லவரும் கெட்டவரும், தூய்மையுள்ளவரும் தூய்மையற்றவரும் உளர். சிலர் ஈசனிடத்து ஈடுபட்டுள்ளனர், மற்றவரோ உலகின்மீது பற்றுள்ளவர்.

"மனிதரை நான்கு வகுப்பினராய்ப் பிரிக்கலாம்; அவராவார்: கண்டுண்டவர் (உலக மாயையினால் கட்டுப்பட்டவர்), முமுக்ஷுக்கள் (மோக்ஷத்தில் இச்சையுடையவர்கள்), முக்தர்கள் (உலக மாயையினின்று விடுபட்டவர்கள்), நித்தியர்கள். (ஒருபோதும் உலக மாயையில் அகப்படாதவர்கள்.)

"நித்யர்களுக்குள் நாரதரைப்போன்ற முனிவரைச் சேர்த்துக்கொள்ளலாம். அவர்கள் உலகில் வாழ்வது பிறரது நன்மைக்காகவும், மனிதர்க்கு ஞானம் போதிப்பதற்காகவும்.

"கட்டுண்டவர்கள் உலகப்பற்றில் அழுந்தியவராய்க் கடவுளை மறந்து இருப்பவர். தவறியும் அவர்கள் கடவுளைப்பற்றி நினையார்.

"முமுக்ஷுக்கள் உலகப் பற்றினின்றும் தங்களை விடுவித்துக்கொள்ள விரும்புபவர்கள். அவர்களில் சிலர் வெற்றியும் அடைவர்.

"சாதுக்களையும், மகாத்மாக்களையும் போன்ற முக்தர்கள் உலக மாயையில்—அதாவது பெண்ணைசை பொன்னாசைகளில் (காமம், காஞ்சனம் இரண்டிலும்)—சிக்கிக்கொள்ளார்கள். அவர்களுடைய உள்ளங்கள் உலகப்பற்றினின்று நீங்கியிருக்கும். மேலும் அவர்கள் எப்போதும் ஈசனின் கமல பாதங்களையே சிந்தித்து வருவர்.

"மீன் பிடிப்பதற்கு ஒரு குளத்தில் ஒரு வலையை விசியிருப்பதாக வைத்துக் கொள்வோம். மிக்க சாமர்த்திய முள்ள சில மீன்கள் ஒரு நாளும் வலையில் அகப்படமாட்டா, அவை நித்தியர்களைப் போன்றன. ஆனால் பெரும்பாலான மீன்கள் வலையில் அகப்பட்டுக்கொள்ளும். அவற்றில் சில அதனின்றும் தம்மை விடுவித்துக்கொள்ள முயல்வதுண்டு; இவை முமுக்ஷுக்களைப் போன்றன. ஆனால் முயற்சி செய்யும் மீன்களெல்லாம் வெற்றி யடைவதில்லை. ஏதோ ஒரு சில மீன்கள் வலையை விட்டுத் துள்ளிக் குதித்து நீரை வெகு தூரம் வாரி இறைக்கும். அப்போது மீன் பிடிப்போர் ஆச்சர்யத்தோடு 'அதோ பார்! ஒரு பெரும் மீன் போகிறது' என்று கூக்குரல் போடுவார்கள். ஆனால் வலையில் பிடிப்பட்ட பெரும்பாலானவைக்கோ தப்பிக்க முடியாது. வெளியேற அவை முயற்சியும் செய்யா; அதற்கு மாறாக மண்ணைக் குடைந்துகொண்டு உட்சென்று அசையாது அங்கே கிடந்துகொண்டு 'இனி எனக்குப் பயமில்லை. இங்கு நமக்குச் சற்றும் ஆபத்தில்லை' என்று நினைத்துக்கொள்ளும். ஆனால் மீன்பிடிப்போர் வலையோடு தம்மை வெளியிலே இழுப்பார்கள் என்பதை இந்த அறிவற்ற மீன்கள் உணரமாட்டா. இவை கட்டுண்டவரைப் போன்றன.

"கட்டுண்ட ஆன்மாக்கள் காமம், பணத்தாசை என்னும் விலங்குகளால் உலகத்தோடு கட்டப்பட்டுள்ளனர். அவர்கள் கையும், காலும் கட்டுண்டவர். காமமும் பொன்னும் தமக்கு இன்பம் தரும் என்றும், தமக்கு ஆபத்து வராமல் காக்குமென்றும் அவர்கள் நினைக்கின்றனர். அவை தம்மைச் சாவிலே தள்ளும் என்பதை உணர்வதில்லை. இவ்வாறு உலகத்தில் கட்டுப்பட்டவன் இறக்கும் தருணத்தில் உள்ளபோது, அவனது மனைவி அவனைப் பார்த்து 'நீர் போகப்

போகிறீரே, ஆனால் எனக்கு என்ன வழி செய்திருக்கிறீர்?' என்று கேட்பாள். அப்போதும் அவனுக்கு உலகப் பொருள்கள் மீதுள்ள பற்றை என்னவென்று சொல்வது! விளக்கு பிரகாசமாக எரிவதை அவன் காணும்போது 'விளக்கைத் தணி; அதிக எண்ணெய் செலவாகின்றது' என்று சொல்வான். அவனே மரணத் தருவாயில் இருக்கிறான்! கட்டுண்டவர் ஈசனை ஒரு போதும் நினையார். அவருக்கு ஓய்வுநேரம் கிடைத்தால் வீண் வம்பிலும், அறிவிலாத பேச்சிலும், பொழுது போக்குவர்; பயனற்ற வேலையிலே காலத்தைக் கழிக்கவும் செய்வர். அவர்களில் ஒருவரிடம் அவ்வாறு செய்யும் காரணத்தைக் கேட்டால் 'என்னால் சும்மா இருக்க முடியாதே; அதனால் ஒரு வேலி கட்டிக்கொண்டிருக்கிறேன்' என்பர். பொழுது போகாத காலத்தில் அவர்கள் ஒருக்கால் சீட்டாடவும் ஆரம்பிப்பார்."

அறையில் ஆழ்ந்த மௌனம் குடிகொண்டிருந்தது.

ஓர் அன்பர்: "ஐய, அவ்வளவு உலகப்பற்றுள்ள ஒரு மனிதனுக்கு நற்கதி யடைய ஒரு வழி இல்லையா?"

குருதேவர்: "இருக்கத்தான் செய்கிறது. இடையிடையே அவன் சாதுக்களுக்கு மத்தியில் அவர்களோடு சேர்ந்து வாழவேண்டும். மேலும் தனியிடம் சென்று ஈசன் மீது தியானம் செய்யவேண்டும். இன்னும் அவன் விவேகம் (நித்தியமான வஸ்துவுக்கும், அநித்தியமான வஸ்துவுக்கும் உள்ள வேறுபாட்டை உணர்தல்) பழகுதல் வேண்டும். நம்பிக்கையும், பக்தியும் வேண்டுமென ஈசனிடம் பிரார்த்திக்கவேண்டும். ஒருவனுக்கு நம்பிக்கை மட்டும் இருக்குமானால் அவன் எல்லாவற்றையும் அடைந்தவனாவான். நம்பிக்கையினும் பெரியது யாது?

(கேதாரை நோக்கி) "நம்பிக்கையின் ஏராளமான வலிமையைப் பற்றி நீர் கேள்விப்பட்டிருக்கவேண்டும். புராணம் இதைப் பற்றிச் சொல்லுவதாவது: (பரப்பிரம்மத்தின் வடிவமான) பகவானது அவதாரமான ஸ்ரீ ராமபிரான் கடலைக் கடந்து இலங்கை செல்வதற்காக ஓர் அணை கட்டவேண்டியதாயிற்று. ஆனால் அவரது அடியாரான அனுமார் ஸ்ரீ ராம நாமத்தில் நம்பிக்கை கொண்டு ஒரே குதியில் கடலைத் தாண்டி மறு கரை சேர்ந்தார். அவருக்கு அணை தேவையில்லை. (எல்லோரும் சிரிக்கின்றனர்)

"ஒரு காலத்தில் ஒரு மனிதற்குக் கடலைக் கடக்கவேண்டியதாயிருந்தது. ராமநாமத்தை விபீஷணர் ஓர் இலையின்மீது எழுதி அம்மனிதனது அரை ஆடையின் ஒரு மூலையில் அதை முடிந்துவிட்டு, அவனை நோக்கி, 'பயப்படாதே! நம்பிக்கையைத் துணைக்கொண்டு இந்த நீரின் மீது நடந்து செல்க; ஆனால் ஒன்று கவனி. நீ நம்பிக்கையை இழக்கும் அக்கணமே நீரில் மூழ்கிவிடுவாய்' என்று சொன்னார். அம்மனிதன் நீரின்மீது எளிதாக நடந்து சென்று கொண்டிருந்தான். திடீரென்று அவன் மனத்தில் ஆடையில் முடிந்துள்ள பொருளைக்காண ஒரு பெரும் ஆத்திரம் உண்டாயிற்று. அவன் அதை அவிழ்த்

தான்; ராம நாமம் எழுதப்பட்டிருந்த ஓர் இலையை மாத்திரம் உள்ளே கண்டான். அப்போது அவன் தனக்குள்ளே 'இதென்ன! ராம நாமமேதானே!' என்று சொல்லிக்கொண்டான். சந்தேகம் அவன் மனதிற்குள் இவ்வாறு புகுந்ததும் அவன் நீர்க்குள் அமிழலானான். ஒரு மனிதனுக்கு ஈசனிடம் நம்பிக்கை இருக்குமாயின் மிகமிகக் கொடிய பாவங்கள் பண்ணியிருந்தாலும்—உதாரணமாக, பசுவையோ, பிராம்மணனையோ, பெண்ணையோ கொன்றிருந்தாலும் சரி—அவனது நம்பிக்கை காரணமாகக் கடைத்தேறுவது உறுதி. "ஈசனே, அச்செயலை இனி நான் திரும்பச் செய்யேன்" என்று மட்டும் கடவுளிடம் கூறுவது போதும். அவன் அதன்பின் எதற்கும் அஞ்சவேண்டுவதில்லை."

இதைச்சொல்லி முடித்ததும் குருதேவர் பின்வருமாறு பாடலானார்:

துர்க்கையின் நாமம் ஓதிக்கொண்டே
என்னுயிர் தனையான் விடுவேனுகில்
எத்துணைப் பாவம் யான்செய் திருப்பினும்
புண்ணிய மூர்த்தி எங்ஙனம் என்னை
உய்விக்காது தடைசெயக் கூடும்?

ஒருவாய் மதுவினைத் திருடி யிருப்பினும்
பிறக்குமுன் குழந்தையைக் கருவழித் திருப்பினும்
பசுவையோ பெண்ணையோ நசிப்பித் திருப்பினும்
நல்லஅந் தணனைநான் கொல்வித் திருப்பினும்
அனைத்துமெய் யாயினும் தினையள வச்சமும்
எனைக்கொளச் செய்ய எதற்கும் இயலுமோ?

என்னெனில் அன்னைய் நின்நா மத்தின்
சக்தியைக் கொண்டு மெத்தப் பாவியேன்
பிரம்ம பதத்தையும் பெறுதலும் இயலுமால்.

நரேந்திரனைச் சுட்டிக் குருதேவர் கூறியதாவது: "நீங்கள் எல்லோரும் இப்பையனைக் காண்கிறீர்கள். அவன் அவ்வாறு நடப்பது இங்கேதான். ஆனால் முற்றத்தில் விளையாடும்போது அவன் முற்றிலும் வேறோர் ஆளாவான். ஒரு முரட்டுப் பையனும் தந்தையோடு இருக்கும்போது மிகச் சாந்தமாகிறான். நரேந்திரனும், அவனைப்போன்ற மக்களும் நித்தியர்கள் என்னும் வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் ஒருக்காலும் உலக வலையில் சிக்கிக் கொள்வதில்லை. அவர்கட்குச் சற்றே வயது முதிர்ந்ததும் உள்ளே போதம் உதயமாவதை உணர்ந்து, நேரே இறைவனை நோக்கிச் செல்லுவர். அவர்கள் உலகிற்கு வருவது பிறர்க்குப் போதித்தற்கென்றே யாம். இவ்வுலகில் உள்ள எதனையும் அவர்கள் ஒருக்காலும் பொருட்படுத்தார். காமமும், பொன்னும் சம்பந்தமான பற்றுக்கள் அவர்களிடம் ஒருபோதும் எழுவதில்லை.

"ஹோமா என்னும் பறவையைப்பற்றி வேதங்கள் கூறுகின்றன. அது ஆகாயத்திலே உயரே வாழும். அங்கேயே அது முட்டையிடும். முட்டை

வெளிவந்ததும் கீழே விழத் தொடங்குகிறது. ஆனல் மிக உயரத்திலே இருப் பதினலே பல நாளாக அது கீழே விழுந்துகொண்டே வருகிறது. விழும்போதே அதன் கண்கள் திறக்கின்றன, அதன் சிறகுகளும் முளைக்கின்றன. அதன் கண்கள் திறந்ததும் தான் விழுந்துகொண்டிருப்பதையும், நிலத்திற் படும்போது (வேகத்தால்) தன்னுடல் தூளாகிவிடுமென்பதையும் உணர்கிறது. அப்பொழுதே ஆகாயத்திலே உயரப் பறக்கும் தன் தாய்ப் பறவையின் இடத்திற்கு உடனே மேல் நோக்கிப் பாய்கிறது.''

இந்நிலையில் நரேந்திரன் அறையைவிட்டுச் சென்ருன். கேதார், பிராண கிருஷ்ணர், ம— முதலிய பலரும் இருந்தனர்.

குருதேவர்: ''பாருங்கள், நரேந்திரன் பாடுவதிலும், வாத்தியம் வாசிப் பதிலும், படிப்பிலும் ஒவ்வொன்றிலும் எவரையும் மிஞ்சி விடுகிருன். அன் ருெரு நாள் அவன் கேதார் என்பவரோடு வாதாடி, அவருடைய வழக்குகளைப் பிய்த்தெறிந்தான். (எல்லோரும் சிரிக்கின்றனர்)

(ம—வை நோக்கி) வாதம் பண்ணுவதைப்பற்றி ஆங்கிலத்தில் புத்தகம் உண்டோ?''

ம—: ''ஆம் ஐய, ஒன்று உண்டு. அதற்குத் 'தருக்கம்' என்று பெயர்.''

குருதேவர்: ''அது சொல்லுவதை எனக்குத் தெரிவி,''

ம— ஒரு சிறிது மனம் குழம்பினர். பின் அவர் கூறியதாவது: ''அப் புத்தகத்தில் ஒரு பகுதி பொதுவுரையிலிருந்து சிறப்புரையைப் பெறும் வகை முறைத் தருக்கத்தினைப்பற்றிக் கூறுகின்றது. உதாரணமாக, எல்லா மனிதரும் இறப்பர்; பண்டிதரும் மனிதர்; ஆதலால் பண்டிதரும் இறப்பர். இன்னெரு பகுதி சிறப்புரையினின்றும் பொதுவுரையைப் பெறும் தொகைமுறைத் தருக் கத்தினைப்பற்றிக் கூறுகின்றது. உதாரணமாக: இக் காக்கையும் கருப்பு; அக் காக்கையும் கருப்பு; நாம் எங்கும் காணும் காக்கைகளும் கருப்பு. ஆகையால் எல்லாக் காக்கைகளும் கருப்பு. ஆனல் இம்முறைப்படி அமை யும் ஒரு முடிவிலே குற்றமும் இருக்கலாம். விசாரிக்கும்போது எதோ ஒரு தேசத்தில் ஒரு வெள்ளைக் காக்கையையும் ஒருவன் காணலாம். இன்னெரு உதாரணம்; மழை உள்ளதனல் ஒரு மேகம் உள்ளது; இல்லையேல் இருந் திருக்கின்றது. ஆதலால் மழை மேகத்தினின்றும் வருகிறது. இன்னும் ஓர் உதாரணம்: இம் மனிதனுக்கும் பற்கள் முப்பத்திரண்டு; அம்மனிதனுக்கும் பற்கள் முப்பத்திரண்டு. நாம் காணும் மனிதர்க்கெல்லாம் பற்கள் முப் பத்திரண்டு. ஆதலால் மனிதருக்குப் பற்கள் முப்பத்திரண்டு. ஆங்கிலத் தருக்கம் இம்மாதிரி வகைமுறை, தொகைமுறை அனுமானங்களைப்பற்றிக் கூறுகின்றது.''

ஸ்ரீ ராமகிருஷ்ணரது செவியில் இம் மொழிகள் விழவும் இல்லை. கவனித் துக்கொண்டிருக்கும்போதே அவர் நினைவு மறந்தவரானர். ஆதலால் சம் பாஷணை வெகு தூரம் செல்லவில்லை.

கூட்டம் கலைந்தது, அடியார்கள் கோவில் தோட்டத்திலே உலாவினர். ம— பஞ்சவடியை நோக்கிச்சென்றார். அப்போது பிற்பகலில் ஏறக்குறைய ஐந்து மணி. சிறிது நேரம் சென்றதும் அவர் குருதேவரது அறைக்குச் சென்றார். அங்கே சிறிய வடவண்டைத் தாழ்வாரத்தில் ஓர் ஆச்சரியமான காட்சியைக் கண்டார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சில அடியார்கள் சூழ அமைதியாக நின்றுகொண்டிருந்தார். நரேந்திரர் பாடிக்கொண்டிருந்தார். குரு தேவரைத் தவிர வேறு எவரும் அவ்வளவு இனிமையாகப் பாடுவதை ம— அதுவரை கேட்டதில்லை, அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பார்த்தபோது ஆச்சரியத்தில் மூழ்கினர்; ஏனெனில் குருதேவர் அசையாது, வைத்த கண் வாங்காது நின்றனர். அவர் மூச்சுவிடாத வர்போலத் தோன்றிற்று. குருதேவர் சமாதியில் இருப்பதாக ஓர் அன்பர் ம—விடம் சொன்னர். ம—அதற்கு முன் அம்மாதிரியான ஒன்றைக் கண்டதோ கேட்டதோ இல்லை. ஆச்சரியம்மாகி அவர் தமக்குள்ளே பின்வருமாறு நினைக்கலானர்:—"ஈசன்—உணர்வு தலையெடுப்பதால் வெளி உலக உணர்ச்சி இவ்வளவு தோன்றுமல் போவது ஒரு மனிதனுக்கு இயலுமா? இம்மாதிரியான நிலை உண்டா? அவரது நம்பிக்கையும், பக்தியும் எவ்வளவு ஆழம் வாய்ந்ததாயிருக்கவேண்டும்!"

நரேந்திரர் பின்வருமாறு பாடிக்கொண்டிருந்தார் :

நினைந்திடு மனமே நினைந்திடு ஹரியை
மாசிலாப் பொருளை சைதன்ய மயத்தை
நினைந்திடு மனமே நினைந்திடு ஹரியை.
அவரிடத் தொளிரும் சோதிக் கீடில்லை.
மனத்தைக் கவரும்அம் மாயவடிவம்.
அடியாரிடத்தவர் அன்பையென் னென்பேன்!
ஆயிரம் மதிகளும் தண்மையில் நாணுறும்.
மலரும்அவ் அன்பினில் புத்தழகு அவிரும்.
அவன்வடி வின்புகழ் மின்னென வயங்கும்.
இன்பத் தாலுடல் புளகம் கொள்ளும்.

கடைசி அடியைப் பாடியபொழுது குருதேவர் உடல் நடுங்கினர். அவர்க்கு மயிர்க் கூச்செறிதல் உண்டாயிற்று; ஆனந்தக் கண்ணீர் கன்னங்களின் வழியாகப் பெருகிற்று. இடையிடையே அவருடைய உதடுகளிலே புன்முறுவல் பூத்தது. "ஆயிரம் மதிகளும் தண்மையில் நாணுறும்"படியான பகவானது ஈடற்ற அழகை அவர் தரிசித்துக்கொண்டிருந்தாரா? இதுதான் சைதன்ய மயமான கடவுளின் காட்சியோ? இம்மாதிரியான காட்சியைப் பெறுவதற்கு எவ்வளவு தவமும் அடக்கமும், எவ்வளவு நம்பிக்கையும் பக்தியும் அவசியமாகும்!

நரேந்திரர் தொடர்ந்து பாடலானர் :

அவன்கழல் வணங்குமின் நின்னுள மரையினில்
அமைதியார் மனத்தொடும் தெய்வீக அன்பு

ஜொலிக்கும் கண்ணெடும் இணையிலாக் காட்சியைக்
கண்ணுற் பருகுமின் மண்ணுல கீரே.

[கழல் - திருவடி; உளமரை - நெஞ்சமாகிய தாமரை.]

மறுபடியும் மனதை மயக்கும் அப்புன்னகை குருதேவரது முகத்திலே திகழ்ந்தது. அவரது உடல் முன்போல் அசைவற்றிருந்தது; உட்கண்ணுல் எதோ புதிய காட்சியைக் காண்பவர்போல அரைக்கண் பார்வையிலிருந்தார்.

பாட்டு முடிந்தது. நரேந்திரர் கடைசி அடிகளைப் பாடலானர்:

பரனின் அன்புப் பரவச மயலெனும்
வலைப்பட்டு இயலறி வின்ப வடிவினன்
அவன்பால் மூழ்குக யாண்டும் மனமே.

[மயல் - மயக்கம்; இயல் - சுத்தமான.]

சமாதியின் காட்சியும் ம—கண்ட திவ்ய இன்பமும் அவரது மனத்தில் அழிக்க வொண்ணுதபடி பதிந்தன. ஆழ்ந்த உணர்ச்சியோடு அவர் இல்லம் மீண்டனர், உயிரிற்கு வெறியூட்டும் அக் கடைசி அடிகளின் எதிரொலியைத் தமக்குள்ளே இடையிடையே கேட்கலானர்.

"இயலறி லின்ப வடிவினன்
அவன்பால் மூழ்குக யாண்டும் மனமே"

ம—அறைக்குள் புகுந்ததும், குருதேவர் உரக்கச் சிரித்தார். பக்கத்திலிருந்த பையன்களைப் பார்த்து "அதோ அவன் மறுபடியும் வருகிருன் பார்" என்றனர். அவர்களனைவரும் சிரிப்பிற் கலந்துகொண்டனர். ம—அவர் முன் வீழ்ந்து பணிந்து ஓர் இடத்தில் அமர்ந்தார். இதற்கு முன்பு அவர் ஆங்கிலக் கல்வி கற்றவரைப் போலக் குருதேவரைக் கைகூப்பி வணங்கிக்கொண்டிருந்தார். ஆனல் இப்போது ஹிந்து வைதிக முறைப்படி நிலத்தில் வீழ்ந்து குருதேவரின் திருவடிகளை வணங்கக் கற்றுக்கொண்டார்.

உடனே குருதேவர் தாம் சிரித்த காரணத்தை அடியார்களுக்கு விளக்கலானர். அவர் சொன்னதாவது:—"ஒரு காலத்திலே ஒரு மயிலுக்கு ஒருவன் பிற்பகல் நான்கு மணிக்கு ஒரு அபின் உருண்டையை ஊட்டினன். மறுநாள் அதே பொழுதிற்குத் தவருமல் அம் மயில் மறுபடியும் வரலாயிற்று. அந்த உருண்டையினல் உண்டான வெறியினை அது உணர்ந்திருந்தது; காலந்தவருமல் மறுமுறை அதைப் பெறுவதற்காக வந்து சேர்ந்தது." (எல்லோரும் சிரிக்கின்றனர்)

இதை ஒரு பொருத்தமான உபமானமாக ம—கருதினர். வீட்டிலும் கூட ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய நினைவை ஒரு கணமேனும் மறக்க அவர்க்கு இயலாது போயிற்று. அவருடைய மனம் சதா தக்ஷிணேஸ்வரத்திலே குடிகொண்டிருந்தது. அங்கே அவர் திரும்பிப் போகும்வரை நாழிகையை ஒவ்வொன்றுக எண்ணிக்கொண்டே வந்தார்.

இதற்கிடையில் குருதேவர் பையன்களோடு பெரும் வேடிக்கை பண்ணிக் கொண்டிருந்தார்; தமக்கு மிக நெருங்கிய தோழர்களைப் போல அவர்களைக் கருதி நடந்து வந்தார். ஆனந்தம் எனும் சரக்கினை விற்கும் சந்தை போல அறை முழுவதும் இடி இடி யென்று விலாப் புடைக்கச் சிரித்த சிரிப்புகளே நிரம்பின. எல்லாம் ம—வுக்கு அதுவரை காணுத பெருங் காட்சியாக இருந்தது. அவர் தமக்குள்ளே பின் வருமாறு நினைப்பாராயினர்: "அவர் கடவுள் வெறியில் மூழ்கி யிருந்ததை நேற்று நான் கண்டேனன்றே? பிரேமைக் கடலில் நேற்று அவர் நீந்திக்கொண்டிருந்தார் அல்லவா? அக் காட்சியை முன்பு நான் பார்த்திருந்ததில்லையே? அதே மனிதரது நடத்தை இன்று ஒரு சாதாரண மனிதருடையது போல் இருக்கின்றதே. நான் இங்கு முதல் நாள் வந்தபோது என்னைக் கண்டித்தவர் அவர்தானே? 'நீ ஒரு ஞானியோ' என்று எனக்குப் புத்திமதி கூறினரன்றே? உருவக் கடவுள் அருவக் கடவுளைப் போல அவ்வளவு உண்மையானதென்று என்னிடம் சொன்னவர் அவரே யன்றே? ஈசன் ஒருவனே மெய் (சத்தியம்); மற்றவை யெல்லாம் பொய் (மித்தை) என்று அவர் எனக்குச் சொல்லவில்லையா? ஒரு பணக்காராது வீட்டில் உள்ள வேலைக்காரியைப்போல் பற்றில்லாமல் உலகில் வாழும்படி எனக்குப் புத்தி சொன்னவர் அவரே யன்றே?"

ஸ்ரீ ராமகிருஷ்ணர் இளம் வயதுள்ள அடியார்களின் சகவாசத்தை அனுபவித்துக்கொண்டிருந்தார்; இடையிடையே ம— மீதும் அவரது பார்வை விழுந்தது. ம— மௌனமாயிருந்ததை அவர் கவனித்தார். குருதேவர் ராம்லாலைப் பார்த்து "பார்த்தாயா? அவர் சற்றே வயது முதிர்ந்தவர்; அதனால்தான் அவர் சிரிப்பற்ற முகத்தோடு இருக்கிறார். இளைஞர்கள் கும்மாளி யடிக்கும் போது அவர் சாந்தமாக இருக்கிறார்." ம—வுக்கு அப்போது வயது இருபத்தெட்டு.

குருதேவர் நரேந்திரரையும், ம—வையும் பார்த்து "நீங்களிருவரும் ஆங்கிலத்தில் பேசுவதையும் வாதாடுவதையும் கேட்க எனக்கு விருப்பம்" என்றார். அவர்கள் இருவரும் சிரிக்கலானர். ஆனால் தமது தாய்மொழியிலேயே தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். குருதேவர்க்கு முன்னர் வழக்காடுவது ம—வுக்கு முடியாத காரியமாயிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ணர் வற்புறுத்திய போதிலும் அவர்கள் ஆங்கிலத்தில் பேசவில்லை.

பிற்பகல் ஐந்து மணிக்கு நரேந்திரரையும், ம—வையும் தவிர்த்து மற்ற அடியார்களெல்லோரும் குருதேவரிடம் விடை பெற்றுக்கொண்டனர். கோவில் தோட்டத்திலே ம— உலாவிக்கொண்டிருக்கும்போது குருதேவர் நரேந்திரரோடு ஒரு குட்டையின் கரை யருகே பேசிக்கொண்டிருந்த இடத்திற்குத் திடீரென்று ம— வந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரைப் பார்த்து "இதைக் கேள். முன்னினும் அடிக்கடி வா. நீ புதிதாக வந்தவன். முதன் முதலாகப் பழகும் போது ஜனங்கள் ஒருவரையொருவர் அடிக்கடி பார்க்க வருவார்; ஒரு

காதலனும், அவனது காதலியும் செய்வது போல அன்றே இது? (நரேந்திரரும் ம-வும் சிரிக்கின்றனர்) ஆதலால் தயவுசெய்து வா; வருவாயா?" என்று கேட்டனர்.

பிரம்ம சமாஜத்தின் அங்கத்தினராகிய நரேந்திரர் வாக்களிப்பதில் மிகவும் ஜாக்ரதையாக இருப்பார். புன்சிரிப்போடு அவர் "அவ்வாறே முயல்கிறேன்" என்றனர்.

அவர்கள் குருதேவரது அறைக்குத் திரும்பிவரும்போது ஸ்ரீ ராமகிருஷ்ணர் ம— விடம் சொன்னதாவது: "குடியானவர் உழவுக்கு மாடு வாங்கச் சந்தைக்குப் போகும்போது வாலைப் பிடித்துப் பார்த்து நல்லதையும் கெட்டதையும் எளிதாகக் கண்டு பிடித்து விடுவர். வாலைத் தொடும்போது சில காளைகள் சாந்தமாகத் தரை மீது படுத்துக் கிடக்கும் அவை மிடுக்கில்லாதவை என்பதை உடனே அறிந்து குடியானவர் அவற்றைத் தள்ளி விடுவர். வாலைத் தொட்டதும் துள்ளிக் குதித்துத் துடியா யிருக்கும் காளைகளையே அவர்கள் பொறுக்குவர். பின் வகுப்பினைச் சேர்ந்த காளையைப் போன்றவன் நரேந்திரன். அவனிடம் உள்ளே மிடுக்கு நிரம்ப உண்டு.

இதைச் சொல்லும்போதே குருதேவர் சிரித்தார். பின்னும் சொல்லுவார்: "மிடுக்கே இல்லாத சிலர் உளர். அவர்கள் பாலில் ஊறிய அவலைப் போன்று இருப்பார்கள். அவ்வளவு மிருதுவாய் விறைப்பின்றி இருக்கின்றனர். உள் வலிமை அவர்களிடம் இல்லை."

அந்திப் பொழுது வந்தது. குருதேவர் ஈசனைத் தியானித்துக் கொண்டிருந்தார். அவர் ம—வைப் பார்த்து "நீ போய் நரேந்திரரிடம் பேசு. பின் அவனைப் பற்றி என்ன நினைக்கிறாய் என்பதை என்னிடம் சொல்லு" என்றார்.

கோவில்களில் மாலைப் பூஜை முடிந்தது. ம— நரேந்திரரைக் கங்கைக் கரையில் கண்டார். இருவரும் சம்பாஷிக்கத் தொடங்கினர். அப்போது நரேந்திரர் தாம் கல்லூரியில் வாசிப்பதைப் பற்றியும், பிரம்ம சமாஜத்தின் அங்கத்தினராக இருப்பது பற்றியும் பிறவற்றையும் ம—விடம் சொன்னார்.

பொழுது அடைந்து வெகு நேரமாகிவிட்டது. ம— வீடு திரும்புவதற்குரிய வேளை வந்தது; ஆனால் அவர் போக மனமில்லாதவராய், வீடு செல்வதற்குப் பதில் ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தேடிச் சென்றார். குருதேவரது பாட்டு அவரது மனதைக் கவர்ந்து விட்டது. ஆதலால் பின்னும் கேட்க விரும்பினர். கடைசியாகக் காளி கோவிலுக்கு முன்னால் வாத்திய மண்டபத்தில் தனியே குருதேவர் உலாவிக் கொண்டிருப்பதை அவர் கண்டார். கோயிலிலே தேவியம்மையின் இரு பக்கத்திலும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. மிக விசாலமான வாத்திய மண்டபத்திலே இருந்த ஒற்றை விளக்னால் ஒளியும் இருளும் கலந்த ஒருவித மங்கலான வெளிச்சம் இருந்தது. அதில் குருதேவரது உருவத்தைத் தெளிவாகக் காண இயலாது போயிற்று.

குருதேவரது இனிய கீதத்தால் ம— மயங்கிப் போயிருந்தார். சிறிது கூச்சத்தோடு அவர் குருதேவரைப் பார்த்து அன்றிரவு பின்னும் ஏதாவது பாடநேருமோ

என்று கேட்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் சற்றே! சிந்தித்து "நேராது. இன்றிரவு இனிப் பாடல் இராது" என்று சொன்னர். அதன் பின்னர் யாதோ ஒன்று நினைவுக்கு வந்தவர் போல் பின்னும் கூறுவார்: "ஆனல் கல்கத்தாவில் உள்ள பலராம் போசின் வீட்டிற்கு நான் சீக்கிரம் போகிறேன். அங்கே வா. என் பாடலை நீ கேட்கலாம்" என்ருர். ம— அங்குப் போக சம்மதித்தார்.

குருதேவர்: "பலராம் போசை உனக்குத் தெரியுமா?"

ம—: "தெரியாது, ஐய."

குருதேவர்: "அவர் போஸ்பாராவில் வசிக்கிறர்."

ம—: "சரி, அவரை நான் அங்கு கண்டு கொள்கிறேன்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ம—வோடு மண்டபத்தில் அங்கு மிங்குமாக உலாவிக் கொண்டிருந்தபோது ம—விடம் அவர் "நான் உன்னிடம் ஒன்று கேட்கிறேன். என்னைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டார்.

ம— மௌனமா யிருந்தார். மறுபடியும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரிடம் "என்னைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? ஈசனைப் பற்றிய அறிவு என்னிடம் எவ்வளவு சதவிகிதம் உள்ளது?" என்று கேட்டார்.

ம—: "சதவிகிதம் என்றால் இன்னது என்பதை யான் அறியேன். ஆனல் ஒன்று மட்டும் நான் உறுதியாய்ச்சொல்வேன். இம்மாதிரியான அறிவையும், பரவசப்படுத்தும் பிரேமையையும், ஈசனிடத்து நம்பிக்கையையும், துறவையும் வேறெங்கும் நான் கண்டதில்லை.

குருதேவர் சிரித்தார். ம— அவர் முன் வீழ்ந்து வணங்கி விடை பெற்றுக் கொண்டார். கோயில் தோட்டத்தின் பிரதான வாயில் வரை அவர் சென்றதும் திடீரென்று எதோ ஒன்றை நினைத்துக் கொண்டு ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் திரும்பி வந்தார். அப்போதும் வாத்திய மண்டப்பத்தில் அவர் இருந்தார். மங்கலான வெளிச்சத்தில் குருதேவர் தன்னந்தனியராய், பிரம்மானந்தத்தில் முழ்கியவராய், —கானகத்தே சிம்மம் தனியே வாழ்ந்தும் திரிந்தும் வருவதுபோல—மண்டபத்தில் அங்குமிங்கும் உலாவி வந்தார்.

ஆச்சரியத்தால் மௌனமாகி அப் பெரியாரை ம— உற்று நோக்கினர்.

குருதேவர் (ம—விடம்): "உன்னைத் திரும்ப வரச் செய்தது யாது?"

ம—: "தாங்கள் என்னிடம் போகும்படி சொன்ன அந்த வீடு பணக்காரருக்குரியதே. அவர்கள் என்னை உள்ளே விடாமற் போகலாம். நான் போகாதிருப்பதே நல்லது என நினைக்கிறேன். தங்களை இங்கேயே பார்ப்பது நலம்."

குருதேவர்: "அப்படி நினையாதே. நீ யேன் அப்படி நினைக்கவேண்டும்? என்னுடைய பெயரை மட்டும் சொல்லு. என்னைப் பார்க்க விரும்புவதாகச் சொல்லு; அப்போது யாரேனும் ஒருவர் உன்னை என்னிடம் அழைத்துச்செல்வர்."

ம— தனது சம்மதத்தைத் தெரிவிக்கத் தலையை அசைத்துப் பின் குருதேவரை வணங்கி விடை பெற்றுக் கொண்டார்.

2

வித்யாசாகரைப் போய்ப் பார்த்தல்

பண்டிதர் ஈசுவரசந்திர வித்யாசாகர் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பிறப்பிட மாகிய கமார்ப்புகூரிலிருந்து தூரத்திலில்லாத பீர்சிங்க் என்னும் கிராமத்திற் பிறந்தவர். அவரை ஒரு பெரும் பண்டிதராகவும், கல்வி கற்பிப்போராகவும், எழுத்தாளராகவும், உலகத்தாரது நன்மைக்காகப் பாடுபடுபவராகவும் உலகம் அறியும். தற்கால வங்காள மொழியைப் படைத்தவருள் ஒருவராய அவர் வடமொழி இலக்கணத்திலும் கவிதையிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார். அவரது வருமானத்திற் பெரும்பாகம் விதவையர்க்கும், அனுதையர்க்கும், ஏழை மாணவர்க்கும், மற்ற இல்லாமைப்பட்டோர்க்கும் தருமமாகச் செலவாகும்; அந்த உதார குணத்தால் நாடெங்கும் அவரது பெயரை அறியாதார் இல்லாது போனர். அவரது தயை மனிதர்களிடத்து மட்டும் செலுத்தப்பட்டது என்ப தில்லை; கன்றுகட்குப் பால் இல்லாதுபோவதைக்கருதி அவர் பல ஆண்டுகள் பால் குடிப்பதை நிறுத்திவிட்டார்; குதிரைகட்கு வருத்தங் கொடுக்கும் அச் சத்தால் அவர் குதிரை வண்டியில் ஏறிச் சவாரி செய்யமாட்டார். தாம் கருத் திற்கொண்டதை விடாது பிடிவாதம் செய்யும் இயல்பினர்; அவர்க்கும் அதி காரிகட்கும் உள்ள அபிப்பிராய வேற்றுமை காரணமாகக் கல்கத்தா வட மொழிக் கல்லூரித் தலைவர் பதவிக்குரிய தமது நல்ல வருமானத்தையும் அவர் துறந்ததனால் அவ்வியல்பு விளங்குகிறது. அவர்க்குத் தமது அன்னையார் மீதுள்ள அன்பு சிறப்பாக ஆழ்ந்திருந்தது. ஒருநாள் அவரது அன்னையார் அவரது சகோதரரது விவாகத்திற்கு வரவேண்டுமென விரும்பியதற்காக, அதை நிறைவேற்றும் பொருட்டு, தோணியில்லாத சமயத்தும், தமது உயிர்க்கு வரும் ஆபத்தையும் கவனியாது, ஆரவாரத்தோடு விரைந்தோடும் நதியையும் நீந்திக் கடந்தார். அவரது வாழ்க்கை முழுவதிலும் தனி எளிமையே குடி கொண்டிருந்தது. அவரது பரந்த புலமைக்கு அறிகுறியாக அவர்க்கு 'வித்யா சாகர்' (கலைக்கடல்) என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கு ஈசுவரசந்திர வித்யாசாகரைப் போய்க்காண வெகு நாளாக விருப்பம் உண்டு, 'வித்யாசாகர் பள்ளிக்கூட'த்தில் ம—ஓர் ஆசிரியர் என்பதை அவடமிருந்து அறிந்துகொண்ட குருதேவர் "நீர் என்னை வித்யா சாகரிடம் அழைத்துப் போவீரா? எனக்கு அவரைக் காணப் பெருவிருப்பம்" என்று ம—வைக் கேட்டார். ம— ஸ்ரீ ராமகிருஷ்ணரது விருப்பத்தை ஈசுவர

சந்திரரிடம் கூறினர்; பண்டிதரும் மனமகிழ்ச்சியோடு இசைந்தனர்; சனிக் கிழமை பிற்பகல் நான்கு மணிக்குக் குருதேவரை அழைத்து வருமாறு ம—விடம் கூறினர். குருதேவர் எம்மாதிரியான பரமஹம்சராயிருப்பாரோ என்பதை அறிய விரும்பிய பண்டிதர் "அவர் காவியாடை அணிந்தவரா?" என்று ம—வைக் கேட்டார். ம—பின் வருமாறு பதிலுரைத்தார்: "அன்று ஐய, அவர் அசாதாரணமான ஒரு மனிதர். அவர் சிவப்புக்கரை ஆடையையும், பளபளப்பான செருப்புகளையும் அணிபவர். அவர் ராணி ராசமணி அம்மையாரின் கோயிற் பூஞ்சோலையில் ஓர் அறையில் வாழ்பவர். அவரது அறையில் மெத்தையும் கொசு வலையும் உள்ள ஒரு கட்டில் உள்ளது. அவரது உள்ளத் தூய்மைக்கு வெளியே அறிகுறி ஒன்றுமில்லை. ஆனல் இறைவனைத் தவிர வேருென்றையும் அவர் அறியார். அல்லும் பகலும் இறைவனைப்பற்றியே அவர் நினைத்துக்கொண்டிருக்கிறார்."

ஆகஸ்டு 5-ம் தேதியன்று குருதேவர் தக்ஷிணேசுவரத்தைவிட்டு ஒரு குதிரை வண்டியிற் புறப்பட்டார்; பவநாத், ம—, ஹாஸ்ரா என்பவர் உடன் சென்றார். வித்யாசாகர் தக்ஷிணேசுவரத்திலிருந்து, ஏறக்குறைய ஆறு மைல் தூரத்தில், மத்திய கல்கத்தாவில் பாதுர்பாகன் எனும் இடத்தில் வசித்து வந்தார். வழியில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது தோழர்களோடு பேசிக்கொண்டிருந்தார்; ஆனல், வண்டி வித்யாசாகரது இல்லத்தைச் சமீபித்ததும் அவரது மன நிலை திடீரென மாறியது. அவர் ஈசுவர ஆவேசத்திற்கு ஆட்பட்டார். ம—இதைக் கவனியாமலே, ராஜா ராம்மோஹன் ராய் வாழ்ந்து வந்த தோட்ட மாளிகையைச் சுட்டிக்காட்டினர். குருதேவர் சினந்து, "இப்போது இவற்றைப்பற்றி யான் கவனியேன்" என்று கூறினர். அவர் ஆவேச நிலையிற் புகுந்துகொண்டிருந்தார்.

வண்டி வித்யாசாகரது வீட்டின்முன் நின்றது. ம—தாங்க, குருதேவர் கீழிறங்கினர்; அவரே வழி நடத்தி வந்தனர். முற்றத்தில் பல பூச்செடிகள் இருந்தன. குருதேவர் வீட்டுக்குட் செல்லும்போது, அவர் ம—விடம் குழந்தைபோலத் தமது மேற்சட்டைப் பொத்தான்களைச் சுட்டி, "எனது மேற்சட்டையில் பொத்தான்கள் மாட்டப்படவில்லையே. அதனல் வித்யாசாகர்க்கு மனவருத்தம் உண்டாமோ?" என்று கேட்டார். அதற்குப் பதிலாக ம—"அதைப்பற்றிக் கவலைகொள்ளவேண்டாம். தங்களைப் பற்றிய எதுவும் மனவருத்தத்தை உண்டுபண்ணுவதாகாது. தாங்கள் பொத்தான்களை மாட்டிக் கொள்ள வேண்டாம்" என்று சொன்னர். அவரும் இவ்வுறுதி மொழியைக் குழந்தையைப்போல் ஒப்புக்கொண்டார்.

வித்யாசாகர் ஏறக்குறைய அறுபத்திரண்டு வயதினர். குருதேவரினும் பதினறு பதினேழு வயது மூத்தவர். ஆங்கில முறைப்படிக் கட்டப்பட்ட இருமாடி வீட்டில் அவர் வாழ்ந்தார்; ஆதலின் நான்கு பக்கங்களிலும் புல் தரைகளும், சுற்றியும் ஓர் உயர்ந்த சுவரும் இருந்தன. படிக்கட்டு வழியாகக்

குருதேவரும் அவருடைய அடியார்களும் ஓர் அறைக்குட் புகுந்தனர்; அதில் தூரத்திலிருந்த பக்கத்தில் வித்யாசாகர் முன்னால் ஒரு மேஜையோடு அவர்களை நோக்கி அமர்ந்திருந்தார். மேஜைக்கு வலப்பக்கம் ஒரு 'பெஞ்சு' இருந்தது. சில நண்பர்கள் மற்ற இரு பக்கங்களிலும் உள்ள நாற்காலிகளில் அமர்ந்திருந்தனர்.

வித்யாசாகர் குருதேவரை வரவேற்க எழுந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பெஞ்சுக்கு முன்னால், ஒரு கையை மேஜையின்மீது வைத்துக்கொண்டு நின்றார். இருவரும் ஒருவரையொருவர் அறிந்திருந்ததுபோல அவர் வித்யாசாகரை உற்று நோக்கினார்; பின்பு ஆவேச நிலையில் புன்சிரிப்பேரடு பார்த்தார். அதே நிலையில் சில நிமிஷங்கள் நின்றுகொண்டேயிருந்தார். இடையிடையே, அவரதுமனதைச் சாதாரண நிலைக்குத் திருப்ப அவர் "யான் சிறிது நீர் குடிப்பேன்" என்றார்.

இதற்கிடையில் வீட்டைச் சார்ந்த இளையோரும், வித்யாசாகரின் ஒரு சில நண்பரும் உறவினரும் சூழ்ந்துகொண்டனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இன்னும் ஆவேச நிலையில் இருந்தபடியே 'பெஞ்சி'ல் உட்கார்ந்தார். பதினேழு பதினெட்டு வயதுள்ள இளைஞன் ஒருவன், தனது கல்விக்காகப் பொருளுதவியை நாடி வித்யாசாகரிடம் வந்திருந்தவன்—அவனும் அங்கே அமர்ந்திருந்தான். குருதேவர் அப்பையனிடமிருந்து சிறிது தொலையில் அமர்ந்து, உண்முகப்பட்ட நிலையில் "தேவீ, இப்பையன் உலகிற் பெரிதும் பற்றுள்ளவன். அவன் உனது அறியாமை (அவித்யா) - உலகிற்கு உரியவன்" என்று சொல்லிக்கொண்டிருந்தார்.

வித்யாசாகர் ஒருவரை நீர் கொண்டுவரச்சொன்னார்; இனிப்புப் பண்டங்களையும் விரும்புவாரோ என்று ம—வைக் கேட்டார். ம—அதற்குத் தடை சொல்லாமையாலே, வித்யாசாகரே ஆவலோடு உள்ளறைகட்குச் சென்று, இனிப்புப் பண்டங்களைக் கொணர்ந்தார். அவற்றைக் குருதேவர் முன்பு வைத்தார். பவநாத் ஹாஸ்ரா இருவர்க்கும் அவரவர்க்குரிய பங்கு கிடைத்தது. அவற்றை ம—வீடமும் கொடுத்தபோது வித்யாசாகர், "அவர் எங்கள் குடும்பத்தில் ஒருவரே. நாங்கள் அவரைப்பற்றிக் கவலைப்படவேண்டாம்" என்றார். ஒரு சிறிய அடியாரைக்குறித்துக் குருதேவர் வித்யாசாகரிடம் "அவன் ஒரு நல்ல இளைஞன், அவனது மனம் சரியாயுள்ளது. அவன் பல்கு நதியைப் போன்றவன். மேல் பக்கம் மணல் மூடியிருக்கும்; ஆனால் ஒரு சிறிது தோண்டினால், நீர் கீழே ஓடிக்கொண்டிருப்பதைக் காணலாம்" என்று உரைத்தார்.

சிறிதே இனிப்புப் பண்டங்களை உட்கொண்டபின், குருதேவர் புன்சிரிப்போடு வித்யாசாகரிடம் பேசத் தொடங்கினார். இதற்கிடையில் அறையில் ஜனங்கள் நிறைந்துவிட்டனர்; சிலர் நிற்க, பிறர் உட்கார்ந்திருந்தனர்.

குருதேவர்: "ஆ! இன்று நான் கடைசியாக 'சாகரம்' (கடல்) வந்து சேர்ந்தேன். (வீட்டுக்காரரின் பெயரைக் குறித்துச் சொன்னது.) இது

வரை வாய்க்கால்களோ, சதுப்பு நிலங்களோ, மிஞ்சினால் ஒரு நதியையோ யான் பார்த்துளேன். ஆனால் இன்றோ 'சாகர'த்திற்கு, கடலுக்கு எதிரே உள்ளேன்," (அனைவரும் சிரித்தல்)

வித்யாசாகர்: (புன்சிரிப்போடு) "அப்படியானால் சிறிது உப்பு நீரைப் பெற்றுக்கொள்ளுங்கள்." (சிரிப்பு)

குருதேவர்: "அப்படியன்று. உப்பு நீர் ஏன்? நீங்கள் அவித்தைக் கடலல்லவே, நீங்கள் வித்தைக்கடல். நீங்கள் இறுகியபாற்கடல். (எல்லோரும் சிரித்தல்)

வித்யாசாகர்: "சரி, தேவரீர் அப்படிச் சொல்லலாம்."

பண்டிதர் மௌனமானார். ஸ்ரீராமகிருஷ்ணர் பின்னும் கூறுவாராயினர்: "தங்களுடைய அலுவல்கள் சத்துவத்தினின்றும் ஊக்கம் பெறுவன. தயை சத்துவத்தினின்றும் உதிப்பது. பிறரது நன்மைக்கெனச் செய்யப்படும் கருமம் ராஜஸ குணத்தைச் சார்ந்ததாயினும், இந்த ராஜஸ குணத்திற்குச் சத்வதுமே ஆதாரம் ஆதலின், அது கெடுக்காது. மக்கட்கு மத போதனை அருளுவதற்காகவும், அவர்கட்கு ஈசனைப்பற்றிப் பேசுவதற்காகவும், சுகரும் மற்றைய முனிவரும் தங்கள் உள்ளத்திலே தயையை வளர்த்து வந்தார். தாங்கள் உணவும் உடையும் வழங்குகிறீர்கள். அதுவும் நன்றே. இக்கருமங்களைத் தன்னலமற்ற தன்மையோடு செய்யின், அவை ஈசனிடம் செலுத்தும். ஆனால் மக்களிற் பெரும்பாலார் புகழுக்காகவோ புண்ணியத்துக்காகவோ கருமம் புரிகின்றனர். அவர்களுடைய கருமங்கள் தன்னலமற்றவையாகா.

"வெறும் பண்டிதர்கள் நோயுற்ற கனிகளை ஒப்பவர்; அவை இறுகிவிடும், பழுக்கமாட்டா. கழுகுகள் ஆகாயத்தில் வெகு உயரம் பறக்கும்; ஆனால் அவற்றின் கண்கள் தரைமீதுள்ள அழுகின மாமிசத்திலே பதிந்துகிடக்கும். புத்தகம் படித்தவர் ஞானமுடையரெனப் புகழ் பெறுவர்; ஆனால் அவர்கள் காமத்தின்மீதும் பொன்னின்மீதும் பற்றுடையவர். கழுகுகளைப்போல அவர்கள் அழுகிய மாமிசத்தையே தேடிக்கொண்டிருப்பவர், அவித்தையுலகில் பற்றுக்கொள்வர். தயையும், பக்தியும் துறவும் மெய்ஞ்ஞானத்தால் வரும் மேன்மைகளேயாம்."

வித்யாசாகர் இம்மொழிகளை மௌனமாகக் கவனித்தார். பிறரும் குருதேவரை உற்றுப்பார்த்துக்கொண்டும், அவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்துக்கொண்டும் இருந்தனர்.

பிறர்க்கு ஞானபோதனை கொடுப்பதைப்பற்றி வித்யாசாகர் ஒன்றும் கூறுமல் மௌனமாக இருப்பார். அவர் இந்து தத்துவ சாஸ்திரத்தைக் கற்றிருந்தார். ஒரு சமயம் ம—அதைப்பற்றிய அவரது அபிப்பிராயத்தை அறிய விரும்பினார்; அப்போது வித்யாசாகர் "அறிஞர்கள் தங்கள் உள்ளத்தில் இருந்ததை விவரிக்கத் தவறிவிட்டார்கள் என்று நினைக்கிறேன்" என்றனர். ஆனால் அவர் தமது தினசரி வாழ்க்கையில் இந்துமதக் கிரியைகள் அனைத்தை

யும் பின்பற்றினர். பிராம்மணனுக்குரிய பூணூலையும் அணிந்திருந்தார். ஈசனைப் பற்றி அவர் ஒருநாள் கூறியதாவது: "ஈசனை அறிதல் இயலாதது. அப்படியாயின், நமது கடமை எதுவாகவேண்டும்? பிறர் நம்மைப் பின்பற்றி வாழ்வாராயின், இப் பூவுலகமே சுவர்க்கலோகமாகுமாறு, நாம் வாழ்தல் வேண்டும் என்றே எனக்குத் தோன்றுகிறது."

ஸ்ரீ ராமகிருஷ்ணரது சம்பாஷணை இப்போது பிரம்ம ஞானத்தைப் பற்றிய தாயிற்று.

குருதேவர்: "வித்தை (ஞானம்) அவித்தை (அஞ்ஞானம்) இரண்டிற்கும் பிரம்மன் அப்பாலானது. அது துவிதம் என்னும் மித்தையாகிய மாயைக்கு அப்பாலானது.

"உலகத்தில் வித்தை அவித்தை யெனும் மித்தையான துவிதமே அடங்கியிருக்கிறது. அதில் ஞானபக்திகளும், காம காஞ்சனப் பற்றும் உள்ளன; நீதியும் அநீதியும், நன்மையும் தீமையும் அடங்கியுள்ளன. ஆனால் பிரம்மம் இவற்றோடு ஒட்டுவதில்லை. நன்மையும் தீமையும் ஜீவனுக்கே உரியன; நீதியும் அநீதியும் அப்படியே; ஆனால் பிரம்மமோ இவற்றால் பாதிக்கப்படுவதில்லை.

"ஒரு மனிதன் விளக்கொளியில் பாகவத நூலை வாசிக்கலாம், மற்றொருவன் அவ்வொளியைக் கொண்டே கள்ளக் கையெழுத்துப் போடலாம்; ஆனால் விளக்கு அவற்றால் மாறுபடுவதில்லை. தீயோர்மீதும் நல்லோர்மீதும் சூரியன் தனது ஒளியைச் சிந்துகிறான்.

"நீங்கள் கேட்கலாம், 'அவ்வாறாயின், துயரம் பாவம் துக்கம் இவற்றைக் காரணங் காட்டி விளக்குவது எப்படி?' என்று. இதற்கு மறுமொழியாவது: இவை ஜீவனுக்கே உரியன. பிரம்மம் அவற்றால் மாறுபடுவதில்லை. ஒரு பாம்பினிடத்தில் விஷம் உள்ளது; ஆனால் அதன் கடியால் பிறர் இறக்கினும், பாம்பு அவ்விஷத்தால் தாக்கப்படுவதில்லை யன்றோ?

"பிரம்மம் இன்னது என்பதை வருணிக்க முடியாது. இவ்வுலகில் உள்ள பொருள்கள் யாவும்—வேதங்களும், புராணங்களும், தந்திரங்களும், ஆறு தரிசனங்களும்—நாக்கிற்பட்ட உணவுபோல எச்சிலாக்கப்பட்டுள்ளன; ஏனெனில் அவை நாவினால் வாசிக்கப்படுகின்றன, சொல்லப்படுகின்றன. இவ்வாறு எச்சிற்படாதது ஒரு பொருளே; அது பிரம்மமே. பிரம்மம் இன்னது என்பதை எவராலும் என்றுமினும் சொல்ல முடியவில்லை."

வித்யாசாகர்: (தமது நண்பர்களிடம்) "இது ஓர் அரிய உரை. இன்று புதிதான ஒன்றைக் கற்றேன்."

குருதேவர்: "ஒருவர்க்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். அப்பிள்ளைகளைத் தந்தையார் பிரம்மஞானம் கற்பதற்காக ஒரு குருவினிடம் அனுப்பினர். சில ஆண்டுகட்குப்பின் அவர்கள் குருவின் இல்லத்திலிருந்து மீண்டனர்; தந்தையாரை வீழ்ந்து வணங்கினர். அவர்கள் பெற்ற பிரம்ம ஞானத்தின் ஆழத்தை அளக்க விரும்பிய அவர் முதலாவதாக மூத்தபிள்ளையிடம் ஒரு

கேள்வி கேட்கலானுர். ''பையனே, நீ சாஸ்திரங்களெல்லாம் கற்றிருக்கின்ருய். பிரம்மத்தின் சொரூபம் இன்னதென இப்போது எனக்குக் கூறுக'' என்ருர். அப்பையன் வேதங்களிலிருந்து பற்பல பாகங்களை ஒப்பித்துப் பிரம்மத்தை விவரிக்க தொடங்கினன். தந்தையார் ஒன்றும் கூருதிருந்தார். பிறகு அவர் அதே கேள்வியை இளைய குமாரனிடமும் கேட்டார். ஆனல் அவன் மௌனமாயிருந்தான், கண்கள் கீழ் நோக்க நின்ருன். ஒரு வார்த்தையும் வெளி வரவில்லை. தந்தையார் மனமகிழ்ந்து, அவனிடம் 'குழந்தாய், பிரம்மத்தை ஒரு சிறிது நீ அறிந்துள்ளனை. அது இன்னது என்பதைச் சொற்களால் உணர்த்த முடியாது' என்றனர்.

''பிரம்மத்தை முழுதும் அறிந்துவிட்டதாகப் பல முறை மனிதர்கள் நினைக்கிருர்கள். ஒரு நாள் ஓர் எறும்பு ஒரு சருக்கரைக் குன்றினிடம் சென்றது. ஒரு தூள் அதன் வயிற்றை நிரப்பியது. இன்னெரு தூளை வாயிற் கவ்விக் கொண்டு அது வீடு நோக்கித் திரும்பியது. போகும் வழியில் அது 'அடுத்த தடவை முழுக்குன்றையும் வீட்டுக்கு எடுத்துச்செல்வேன்' என்று நினைத்தது. ஆழமற்ற மனங்கள் இவ்வாறுதான் நினைக்கும். பிரம்மம் ஒருவனது மனத்திற்கும் வாக்குக்கும் எட்டாதது என்பதை அவர்கள் அறிவதில்லை. ஒரு மனிதன் எவ்வளவு பெரியவனுயிருந்தும், பிரம்மத்தைப் பற்றி அவன் அறியக் கூடியது எவ்வளவு? சுகதேவரும், அவரைப் போன்ற ரிஷிகளும் பெரிய எறும்புகளாயிருந்திருக்கலாம்; ஆனல் அவர்களும் மிஞ்சினல் எட்டு பத்து சருக்கரைத் தூள்களைத்தான் கொண்டு செல்ல முடியும்!

''வேதங்களிலும் புராணங்களிலும் சொல்லப்பட்டுள்ளது எதுவோ என்ருல், அது எதைப்போன்றது தெரியுமா? ஒருவன் கடலைப் பார்த்திருப்பதாக வைத்துக்கொள்வோம். எவனே ஒருவன் அவனிடம் 'சரி, கடல் எதைப் போன்றது?' என்று கேட்கிருன். முதல் மனிதன் தன்னல் இயன்ற அளவு வாயைத் திறந்து, 'அக்காட்சியை என்ன என்பது! எவ்வளவு பெரிய அலைகளும் ஒலிகளும்!' என்ருன். சாஸ்திரங்கள் பிரம்மத்தைப்பற்றி வருணிப்பதும் அதுபோன்றதே. பிரம்மம் ஆனந்த சொரூபம் என்று வேதங்கள் சொல்லுகின்றன; அது சச்சிதானந்தம்.

''சுகரும் மற்ற ரிஷிகளும் பிரம்மமெனும் கடலின் கரையினில் நின்றனர், கண்டனர், நீரைத் தொட்டனர். ஒரு சித்தாந்தப்படி அவர்கள் அதற்குள் ஒருக்காலும் மூழ்கவில்லை. மூழ்குபவர் மறுபடியும் உலகிற்குத் திரும்ப வர இயலாதவராவார்.

''சமாதியில் ஒருவன் பிரம்ம ஞானம் அடைகிருன்—பிரம்மத்தை உணர்கிருன். அந்நிலையில் யுக்தி முற்றும் நின்றுவிடுகிறது, மனிதன் மௌனமாகிருன். பிரம்மத்தின் இயல்பை வருணிக்க அவனுக்குச் சக்தியில்லை.

''ஒரு சமயம் உப்புப் பொம்மையொன்று கடலின் ஆழத்தை அளக்கச் சென்றது. (எல்லோரும் சிரித்தல்) நீரின் ஆழம் இவ்வளவு என்று பிறர்க்குச்

சொல்ல அது விரும்பிற்று. ஆனால் அது ஒருக்காலும் இதைச் செய்ய முடியாது; ஏனெனில், நீருக்குள் இறங்கியதும், அது கரைந்துவிடுமன்றே? அப்போது ஆழத்தைப்பற்றிப் பேச யார் இருப்பார்?''

ஓர் அடியார்: சமாதியில் ஒருவன் பிரம்ம ஞானம் பெற்றதாக வைத்துக்கொள்ளுவோம். அதன்பின் அவன் பேசுவதில்லையா?''

குருதேவர்: ''சங்கராசாரியார் பிறர்க்குப் போதிப்பதற்காக 'ஞான-அஹங்கார'த்தை வைத்துக்கொண்டார். பிரம்ம தரிசனத்திற்குப்பின் ஒருவன் மௌனமாகிறான். அவன் அதை உணராதவரை அதைப்பற்றி வாதம் பண்ணுகிறான். அடுப்பின்மீது ஒரு தட்டில் வெண்ணெயைக் காய்ச்சினால், அதனிடத்துள்ள நீர் சுண்டும்வரை அது 'சுரு சுரு' என்று ஒலிக்கின்றது. ஆனால் நீர் சுண்டிய பின்போ, தெளிவான நெய்யில் ஒலி உண்டாவதில்லை. பச்சையான ஒரு மாப்பண்டத்தை அந்நெய்யிற் போட்டால், அது மறுபடியும் 'சுரு சுரு' என்கிறது. ஆனால் பண்டம் வெந்த பிறகு, ஒலி நின்றுவிடுகிறது. அதுபோல, சமாதியில் நிலைத்தவன் பிறர்க்குப் போதித்தற்காக விவகார உலகினுக்குக் கீழ் இறங்குகிறான், பிறகு அவன் ஈசனைப்பற்றிப் பேசுகிறான்.

''தேனீ பூவில் உட்காராதவரை இரைகிறது. தேனைக் குடிக்கத் தொடங்கியதும் அது அமைதியாயிருக்கிறது. ஆனால் சில சமயம், தேன் குடித்த வெறியினால் அது இரைகிறது.

''ஒரு வெறுங்குடத்தை நீருக்குள் அமிழ்த்தும்போது, களகள என்னும் ஒலி உண்டாகிறது. (எல்லோரும் சிரித்தல்) ஆனால் அதிலிருந்து இன்னொரு வெறுங் குடத்தில் நீரை ஊற்றினால் அப்போது ஒலி மறுபடியும் கேட்கும்.

''முற்கால ரிஷிகள் பிரம்ம ஞானம் பெற்றனர். உலகப்பற்று ஓர் இம்மியேனும் இருக்கும்வரை, இதைப்பெற முடியாது. ரிஷிகள் எவ்வளவு கடுமையாக உழைத்தனர்! அதிகாலையில் அவர்கள் ஆசிரமத்தை விட்டுக் கிளம்பி, பகல் முழுதும் தனியிடத்தே அமர்ந்து, பிரம்மத் தியானத்திற் பொழுது போக்குவர். இரவில் ஆசிரமத்திற்குத் திரும்பிச் சிறிது கனியோ கிழங்குகளோ உண்பர். அவர்கள் தங்கள் மனங்களைக் கண்டு கேட்டுத் தொட்டு அறியும் பொருள்களிடமிருந்தும், உலகப்பற்றை விளைக்கும் மற்றைய பொருள்களிடமிருந்தும் விலக்கி வைத்திருப்பார். இவ்வாறு செய்தே பிரம்மமும் தமது ஆன்மாவும் ஒன்றென அவர்கள் உணரலானார்.

''ஆனால் கலியுகத்திலோ, மனிதன் உணவை முற்றிலும் பொறுத்தே உயிர் வாழவேண்டியிருத்தலின் தான் உடல் என்ற எண்ணத்தை முழுதும் உதறிவிட இயலாதவனாகிறான். இம் மனநிலையில் 'நான் பிரம்மம்' என்று சொல்வது அவனுக்குத் தகாது. எல்லாவித உலக காரியங்களையும் ஒருவன் செய்துகொண்டிருக்கும்போது, 'நான் பிரம்மம்' என்று சொல்லுதல் பொருந்தாது. உலகப் பொருள்களின் மீதுள்ள பற்றை விட்டுவிட இயலாதவரும், 'நான்' என்ற உணர்ச்சியை அசைத்துத் தள்ள வகையற்றவரும் 'யான் ஈசனின் அடியான்;

யான் ஈசனின் பக்தன்' என்ற கருத்தையே போற்றி வருதல் நன்று. பக்தி மார்க்கத்தாலும் ஈசனை உணர்தல் இயலும்.

"ஞானி 'நேதி, நேதி' (இதுவன்று, இதுவன்று) என்னும் விசாரணையினால் உலகப் பொருள்களோடு தன்னை ஒன்றுக்க் கருதும் பாவனையை விட்டொழிக்கிறான். அப்போதுதான் அவன் பிரம்ம தரிசனம் பெறுவான், ஒரு வீட்டின் மாடியேற விரும்பியவன் படிகளை ஒவ்வொன்றாக விட்டு அதை அடைவதுபோல. ஆனால் பிரம்மத்தோடு மிக நெருங்கிப் பழகும் விஞ்ஞானியோ இன்னும் அதிகமாக உணர்கிறான். படிகளும் மாடியைப்போன்று செங்கல், சுண்ணாம்பு, செங்கல் தூள் என்ற பொருள்களாலே ஆக்கப்பட்டிருப்பதை அவன் உணர்கிறான். 'நேதி, நேதி' என்ற முறையிலே ஒவ்வொன்றையும் ஒழிப்பதால் ஞானக் காட்சிக்குப் பிரம்மமாக உணரப்படுவது எதுவோ, அதுவே பிரபஞ்சமாகவும், அதனிடத்துள்ள உயிர்கள் எல்லாமுமாய் ஆகியுள்ளதாக அப்போது காணப்படுகிறது. நிர்க்குணமான மெய்ப்பொருளே சகுணமாயும் இருப்பதை விஞ்ஞானி காண்கிறான்.

"ஒரு மனிதன் நீண்ட நேரம் மாடியில் வாழ முடியாது. அவன் அதனால் கீழிறங்குகிறான். சமாதியில் பிரம்மத்தை உணர்பவரும் கீழிறங்குகின்றனர்; பிரம்மமே பிரபஞ்சமாகவும், அதிலுள்ள உயிர்களாகவும் ஆகியிருப்பதைக் காண்கின்றனர். சரளி வரிசையில் ஸ ரி க ம ப த நி என்னும் சுரங்கள் உள்ளன. ஆனால் வெகு நேரம் 'நி' என்ற சுரத்திலே குரலை வைத்திருக்க ஒருவர்க்கு முடியாது. அகங்காரம் முற்றும் மறைவதில்லை. சமாதியிலிருந்து கீழே இறங்கும் மனிதன், பிரம்மமே அகங்காரமாயும், பிரபஞ்சமாயும், அதன் உயிர்களாயும் ஆகியிருப்பதைக் காண்கிறான். இது விஞ்ஞானம் எனப்படும்.

"ஞானநெறி பரம்பொருளிடத்தே ஒருவனைக் கொண்டு சேர்க்கும், ஞான பக்திக் கலப்புள்ள நெறியும் அப்படியே. பக்தி நெறியும் அதே முடிவான இடத்திற் கொண்டுவிடும். பக்தி நெறி ஞான நெறியைப்போன்று நல்லதே. எல்லா நெறிகளும் முடிவில் ஒரே உண்மைப் பொருளைச் சார்கின்றன. ஆனால் பகவான் நம்மிடம் அகங்கார உணர்ச்சியை வைத்திருக்கும் வரை, பக்தி நெறியைப் பின்பற்றுவது மிக எளிது.

"சுமேரு மலையைப்போல் பிரம்மம் அசைவற்றது, செயலற்றது என்பதை விஞ்ஞானி காண்கிறான். இப் பிரபஞ்சத்தில் சத்துவம் ரஜஸ் தமஸ் என்னும் முக்குணங்கள் அடங்கியுள்ளன. அவை பிரம்மத்தினிடம் உள்ளன. ஆனால் பிரம்மம் ஒன்றிலும் ஒட்டாதது.

"மேலும், பிரம்மமே பகவானுவதையும் விஞ்ஞானி காண்கிறான். முக்குணங்கட்கும் அப்பால் உள்ளவர் பகவான் (ஆறு தெய்விக சக்திகளோடு கூடியவர்). உயிர்கள், பிரபஞ்சம், மனம், புத்தி, அன்பு, வைராக்கியம்— இவையெலாம் அவரது சக்தியின் அம்சங்களே. (சிரிப்போடு) ஒரு பணக்காரரிடம் வீடோ சொத்தோ இல்லையாயின், அவற்றை விலை பேசும் கட்டாயம்

அவருக்கு ஏற்பட்டின், அவரைப் பணக்காரரெனப் பின்பு யார் கூறுவார்? (அனைவரும் சிரித்தல்) பகவானிடம் ஆறு திவ்விய சக்திகள் அமைந்துள்ளன. அவரிடம் அவை இல்லையாயின் யார் அவர்க்குக் கீழ்ப்படிவார்? (எல்லோரும் சிரித்தல்)

"இப் பிரபஞ்சம் எவ்வளவு அலங்காரமாக உள்ளது! எத்தனை பொருள்கள் அதில் உள்ளன! சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள். உயிர்களில் எத்தனை வகைகள்! பெரியவையும் சிறியவையும், நல்லவையும் கெட்டவையும், பலமுள்ளவையும் பலமற்றவையும்—சில அதிக சக்தி பெற்றவை, சில குறைந்த சக்தி வாய்ந்தவை."

வித்யாசாகர்: "சிலர்க்கு அதிகச் சக்தியையும், பிறர்க்குக் குறைந்த சக்தியையும் பகவானே கொடுத்துள்ளனரா?"

குருதேவர்: "அந்தர்யாமி நிலையில் பகவான் உயிர்களிடத்தும், எறும்பினிடத்தும்தான் இருக்கின்றார். ஆனால், அவரது சக்தியின் பிரகாசம் பற்பல உயிர்களிடத்துப் பற்பலவிதமாக (பற்பல அளவிற்கு) உள்ளன, இல்லாவிடில் ஒரு மனிதன் பத்துப்பேரை எதிர்த்து ஓடச்செய்யும் திறமையோடிருப்பதும், இன்னொருவன் ஒருவனைக்கூட எதிர்த்து நிற்க இயலாமற்போவதும் எவ்வாறு? உங்களை ஏன் எல்லோரும் மதிக்கின்றனர்? உங்கட்கு இரு கொம்புகள் முளைத்திருக்கின்றனவா? (சிரிப்பு) உங்களிடம் அதிக தயையும் படிப்பும் உள்ளன; ஆதலால் ஜனங்கள் உங்களை மதிக்கின்றனர். உங்கட்குத் தமது மரியாதையைச் செலுத்த வருகின்றனர். நீங்கள் எனது வார்த்தையை ஒப்புக்கொள்ளவில்லையா?"

வித்யாசாகர் சிறிதே சிரித்தார்.

குருதேவர் பின்னும் தொடர்ந்து கூறுவார்; "வெறும் பாண்டித்தியத்தில் ஒன்றும் இல்லை. கல்வியின் நோக்கம் பகவானை அறியும் வழிகளைக் காண்பதும், அவரைத் தரிசிப்பதுமட்டுமே. ஒரு சாது ஒரு புத்தகத்தைப் பொன்போற் போற்றி வந்தார். அதனிடம் யாது உள்ளது என்று கேட்டபோது அவர் அதைத் திறந்து காட்டினார்; அதில் எல்லாப் பக்கங்களிலும் 'ஓம் ராம்' என்ற வார்த்தைகளே எழுதப்பட்டிருந்தன; வேறொன்றும் இல்லை.

"'கீதை'யின் உட்கருத்து யாது? 'கீதா' என்பதைப் பத்துமுறை தொடர்ந்து கூறுவதால் வருவதே. அப்போது 'தாகி' என மாறி வருகிறது; அதன் பொருள், அனைத்தையும் ஈசனுக்காகத் துறந்தவன் என்பது. கீதையின் படிப்பினையாவது: "மனிதனே, அனைத்தையும் துறந்துவிடு, பகவானையே நாடு" என்பதே. ஒரு மனிதன் இல்லறத்தில் இருப்பினும், அவன் தனது உள்ளத்தினின்றும் எல்லாப்பற்றையும் உதிர்த்துவிடல்வேண்டும்.

"சைதன்யதேவர் தென்னிந்தியாவிற்கு யாத்திரை புறப்பட்டார். ஒருநாள் ஒருவர் கீதை வாசிப்பதை அவர் கண்டார். தொலையில் அமர்ந்திருந்த ஒருவர் கவனித்துக் கேட்டுக்கொண்டும், கண்ணீர் சொரிந்துகொண்டும் இருந்தார்.

அவருடைய விழிகள் கண்ணீரில் நீந்திக்கொண்டிருந்தன. சைதன்ய தேவர் அவரிடம் 'இதையெல்லாம் நீர் அறிகிறீரா?' என்று கேட்டார், அம்மனிதர், 'பெரியாரே, அறியேன். கீதையில் ஒரு மொழியையும் யான் அறியேன்' என்று பதில் அளித்தார். 'அப்படியானால், நீர் அழுவதேன்?' என்று கேட்டார் சைதன்யர். அந்த பக்தர் 'அப் புத்தகத்தை வாசிக்கக் கேட்டலும், என்முன் அருச்சுனனது தேரைக் காண்கிறேன். பகவான் கிருஷ்ணரும் அருச்சுனனும் அதில் அமர்ந்து பேசிக்கொண்டிருப்பதைக் காண்கிறேன். இதையெல்லாம் கண்டதும் அழுகிறேன்' என்று மறுமொழி கூறினர்.

"விஞ்ஞானி பகவானிடம் பக்தி பூண்ட மன நிலையைக் கொள்வானேன்? இதற்கு மறுமொழியாவது: 'நான்' எனும் உணர்ச்சி மறையாதிருப்பதே. சமாதி நிலையில் அது மறைவதில் ஐயமில்லை; ஆனால் அது திரும்ப வருகின்றது. சாதாரண மக்கள் விஷயத்தில் 'நான்' ஒருநாளும் மறைவதில்லை. நீர் அரசமரத்தை வெட்டியெறியலாம்; ஆனால் மறுநாள் புதுக் குருத்துக்கள் கிளம்புகின்றன. (எல்லோரும் சிரிக்கின்றனர்)

"ஞானம் பெற்றபின்பும், இந்த 'அஹம்' எனும் உணர்ச்சி கிளம்புகிறது; எங்கிருந்தோ, அதனை யார் அறிவார். நீர் ஒரு புலியைப் பற்றிக் கனாக்காண்கிறீர். பின் நீர் விழிக்கிறீர். ஆனால் உமது நெஞ்சு படபட வென்று அடித்துக் கொண்டே யிருக்கிறது! நமது துயரத்திற்கெல்லாம் 'நான்' என்பதே காரணம்.

"ஒரு நாள் ராமர் அனுமாரைப் பார்த்து, 'என்னை நீ எவ்வாறு கருதுகிறாய்?' என்று கேட்டார். அதற்கு அனுமார் 'ராமபிரானே, "நான்" எனும் உணர்ச்சி என்னிடம் இருக்கும் வரை, நீர் முழுமை, நான் அதில் ஒரு பகுதி என அறிகிறேன். நீர் எஜமானர், நான் உமது வேலைக்காரன். ஆனால் மெய்ஞ் ஞானம் அடையும்போது, நீரே நான், நானே நீர் என உணர்கிறேன்.

"ஆண்டான்—அடிமை (எஜமானன்—வேலைக்காரன்) என்ற உறவு சரியானது. இந்த "நான்" இருப்பது கட்டாய மாதலின், அந்தத் தீயோன் பகவானது அடியானாக இருக்கட்டும்.

"'நான்' 'எனது'—இவையே அவித்தை யாகும். 'எனது வீடு,' 'எனது செல்வம்,' 'எனது கல்வி' 'எனது உடைமை'—ஒருவனை இம்மாதிரிச் சொல்லும்படித் தூண்டும் மனநிலை அவித்தையால் விளைவது. அதற்கு மாறாக, ஞானத்தால் விளையும் மனநிலையாவது: 'பகவானே, நீரே எஜமானர், இப் பொருள்களெல்லாம் உமக்கே சொந்தம், வீடு, குடும்பம், குழந்தைகள், காவலர், நண்பர்—எல்லாம் உன் உடைமையே.'

"அடிக்கடி மரணத்தை நினைத்தல் வேண்டும். மரணத்தி னின்றும் யாரும் தப்புவதில்லை. சில சில கடமைகளை இயற்றுவதற்காகவே நாம் இவ்வுலகிலே பிறக்கிறோம்; கிராமத்திலிருந்து கல்கத்தாவுக்கு அலுவலாக வரும் மக்களைப் போலே ஒரு பணக்காரரது தோட்டத்தைப் பார்க்க ஒருவர் சென்றால், தோட்

டத்தை மேற்பார்ப்பவர் அவரிடம் 'இது நமது தோட்டம்' 'இது நமது ஏரி' என்றும், இன்னும் பிறவும் சொல்வார். ஆனால் ஒரு தவறான காரியத்திற்காக மேற்பார்ப்பவரை வேலையினின்றும் தள்ளிவிட்டாலோ அவர் தமது உபயோக மற்ற மாம்பலகைப் பெட்டியைக்கூட எடுத்துச் செல்லமுடியாது. அவர் இரகசியமாக அதை வாசல் காப்பான் மூலமாக அனுப்பிவிடுகிறார். (சிரிப்பு)

"யுக்தியினாலே பகவானை அறிய இயலுமா? அவருடைய வேலைக்காரராயிரும், உம்மை அவரிடம் ஒப்புவித்துவிடும், பின் அவரிடம் பிரார்த்தனை செய்யும்.

(வித்யாசாகரிடம் ஒரு புன்சிரிப்போடு) "சரி, உமது பாவனை யாதோ?"

வித்யாசாகர் (புன்சிரிப்போடு): ஏதேனும் ஒரு நாள் தங்களிடம் அந்த இரகசியத்தைச் சொல்லுகிறேன்."

குருதேவர் (சிரித்துக்கொண்டே): பாண்டித்தியம் நிரம்பிய தருக்கத்தாலே பகவானைத் தரிசிக்க முடியாது.';

பக்தி வெறியோடு குருதேவர் பின்வருமாறு பாடினார்:

அம்மைகாளி இன்னாரென் றறியவல்லார் எவரேதான்? அவளைக் காட்டச்
செம்மையுறு தரிசனங்கள் திறனிலவாம் ஓராறும்; திகழும் யோகி
விம்முமுளத் தின்பமெலாம் விளைவிக்கும்ஆன்மாவாய் வீற்றிருப்பாள்;
இம்மகியில் உயிர்தோறும் இச்சையினுல்உறைந்திடுவாள் என்னும் நூலே

[மகி - பூமி; யோகி - யோகியின்]

தொடர்ந்து குருதேவர் பின்னும் கூறுவார்: "பாட்டில், 'அவளைக் காட்டச் செம்மையுறு தரிசனங்கள் திறனிலவாம் ஓராறும்' என்ற பகுதியைக் கவனித்தீரா? வெறும் பாண்டித்தியத்தால் அம்மையைத் தரிசித்தல் இயலாது, விசுவாசமும் (நம்பிக்கையும்) பக்தியும் கட்டாயம் வேண்டும். பகவானிடம் விசுவாசம், ஒருவர்க்கு இருக்குமாயின், அவர் பாவமே புரிந்திருப்பினும், அம்மட்டோ மிகக்கெட்ட பாவியாயினும் அஞ்சவேண்டிய அவசியம் இல்லை.

"விசுவாசமும் பக்தியும். பக்தியால் ஒருவன் ஈசனை எளிதாக உணர்கிறான். பக்தி பரவசத்தால் இறைவனைப் பற்றலாகும்."

இவ்வாறு கூறியதும், குருதேவர் மீண்டும் இவ்வாறு பாடலானார்:

இறையியல்பை அறிவதற்கா என்நெஞ்சே
எங்ஙனம்நீ முயலு கின்றாய்?
நிறையிருள்சேர் ஓரறையிற் சிறைப்பட்ட
பித்தனென நேடு கின்றாய்;
உறையன்பின் பரவசத்தால் ஓர்ந்திடலாம்,
அதுவின்றி ஒண்ணு மோதான்?
அறை 'இதி 'யென் நெறியொன்றால் அறியலாம்
நேதியினுல் ஆகா தன்றே.
நான்மறையால் தந்திரத்தால் நாலிரண்டு
தரிசனத்தால் ஞான மேது?
மான்மருவும் அன்பமுதால் மகிழுமிறை
தனையடைய மற்றொன் றின்றால்;

ஊன்மிசையுள் நெஞ்சத்தே உலவாத
பேரின்பத் துறைவான் ஈசன் ;
கான்மருங்கே யுகந்தோறும் கணமுனிவர்
யோகுபயில் கருத்தும் அன்பே.
அன்புதிக்கின் உயிரைஇறை அருங்காந்தம்
போலிழுப்பான் அகத்திற் சேர்ப்பான் ;
என்புருகி ராம்பிரசாத் எமதன்னை
யென்றணுகும் ஈசன் அன்னேன் ;
வன்புமிகும் சந்தையிதில் மறைபொருளை
யான்வழங்கல் மரபு மன்றே ;
முன்புமொழி குறிப்புகளால் முன்னியுணர்ந்
திடுக அந்த முதலை நெஞ்சே.

[இறை - கடவுள் ; நேடுதல் - தேடுதல் ; ஓர்ந்திடல் - அறிதல் ; இதி - இதுவே ; நேதி - இதுவன்று ; நான்மறை - நாலுவேதம் ; நாலிரண்டு - ஆறு ; மால் (மருவும்) - ஆசை மயக்கம் (பொருந்தும்) ; ஊன் - உடல் ; யோகு - யோகம் ; அன்னேன் - அத்தன்மையன் ; மறைபொருள் - இரகசியம் ; முதலை - முதற்பொருளாகிய ஈசனை]

பாடிக்கொண்டிருக்கும்போதே குருதேவர் சமாதியை அடைந்தார். அவர் மேற்கு நோக்கிப் 'பெஞ்'சின்மீது அமர்ந்திருந்தார்; உள்ளங்கைகள் இரண்டும் சேர்ந்திருந்தன; அவரது உடல் நிமிர்ந்து அசைவின்றி இருந்தது. ஒவ்வொரு வரும் அவரை உற்று நோக்கிக்கொண்டு நடக்கப்போவதை எதிர்பார்த்தவரா யிருந்தனர். வித்யாசாகரும் பேச்சற்றிருந்தார். குருதேவரிடமிருந்து தமது கண்களைத் திருப்பாதிருந்தார்,

சிறிது நேரஞ்சென்றபின், ஸ்ரீராமகிருஷ்ணரிடம் சாதாரண நிலைக்குத் திரும்பும் அடையாளங்கள் காணப்பட்டன. அவர் நீண்ட மூச்சை இழுத்துப் புன்சிரிப்போடு பின்வருமாறு பேசலானார் : "இறைவனது தரிசனத்தைப் பெறும் வழிகளாவன : அன்பினால் வரும் பரவசமும் பக்தியும்—அதாவது, ஈசனிடம் பக்திவேண்டும், பிரம்மமே தேவியென அழைக்கப்படுகிறது.

என்புருகி ராம்பிரசாத் எமதன்னை என்றணுகும் ஈசன் அன்னேன்
வன்புமிகும் சந்தையிதில் மறைபொருளை யான்வழங்கல் மரபு மன்றே
முன்புமொழி குறிப்புகளால் முன்னியுணர்ந் திடுக அந்த முதலை நெஞ்சே !

"ராம்பிரசாத் ஈசனை இன்னரென ஊகித்தறிய மட்டும் மனதை வேண்டு கிறார். வேதங்களிற் 'பிரம்மம்' எனப் பெயர்பெற்றுள்ள பொருளையே தாம் 'தேவி'யென அழைப்பதாக அறிந்துகொள்க என்று மனதிற்குச் சொல்கிறார். நிர்க்குணமான பரம்பொருளே சகுணமாயுள்ளது. பிரம்மமாயிருக்கும் பொருளே சக்தியாயும் உள்ளது. கிரியையற்றதாகக் கருதும்பேரது அது பிரம் மம் எனப்படும், படைத்துக் காத்து அழிக்கும் ஈசனைக் கருதப்படும்போது அப்பொருள் ஆதிசக்தியாகிய காளியெனும் பெயரைப் பெறுகிறது.

"பிரம்மமும் சக்தியும், நெருப்பையும் அதன் எரிக்கும் சக்தியையும்போல ஒன்றேயாம். நாம் நெருப்பைப் பற்றிப் பேசும்போது, அதன் எரிக்கும் சக்தியை யும் இயல்பாகவே குறிக்கிறோம். நெருப்பின் எரிக்கும் சக்தி நெருப்பையும்

குறிக்கிறது. ஒன்றை ஒப்புக்கொள்பவன் மற்றொன்றையும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

" பிரம்மமே தேவியென அழைக்கப்படுகிறது. இதன் காரணம், தாய் பேரன்பிற்குரிய ஒரு பொருளாதலேயாம். அன்பினாலேயே ஈசனைக் காண இயலும். உணர்ச்சியால் விளையும் பரவசம், பக்தி, அன்பு, விசுவாசம்—இவையே வழிகள். ஒரு பாட்டைக் கவனியுங்கள் :

எத்துணைத் தியானம் அத்துணைப் பக்தி ;
எத்துணைப் பக்தி அத்துணை இலாபம் ;
அனைத்துக்கும்வேர் நினைத்திடில் சிரத்தை.
காளி யம்மையின் கழலமு தேரியில்
நாளுமென் நெஞ்சம் நன்கமிழ்ந் திடுமேல்
வணக்கமும் அன்புடன் வழங்குகா னிக்கையும்
இணக்கப் பலியும் எதற்கோ எனக்கே ?

[எத்துணை - எவ்வளவு; கழல் அமுது - திருவடியாகிய அமுதம் நிறைந்த (ஏரி) ; இணக்கம் - நேசம்.]

" அவசியமாவது இறைவனிடம் ஆழ்ந்த சிந்தனையிலிருத்தலே, பகவானிடம் பிரேமை கொள்ளலே, 'அமுத ஏரி'யென்பது சாவாமையாகிய ஏரியே. அதில் முழ்கும் மனிதன் இறப்பதில்லை, அழியா நிலையை அடைகிறான்.

(வித்யாசாகரிடம்) " நீர் செய்யும் கருமங்கள் நல்லவையே. அவற்றைத் தானற்ற நிலையில் அகங்காரத்தை விட்டொழித்து, நீரே கருத்தா என்னும் கருத்தையும் துறந்து செய்வீராயின், அது மிக நன்றே. அவ்விதக் கருமத்தால் ஈசனிடத்துப் பக்தி உண்டாகும், முடிவில் ஈசுவர தரிசனமும் கிட்டும்.

" ஈசனிடத்து அன்பு முதிர முதிர, கருமம் செய்யும் பிரியம் வரவரக் குறையும். ஒரு மருமகள் கர்ப்பமாயிருக்கும்போது, அவளது மாமியார் அவளது வேலையைக் குறைக்கிறாள். காலம் ஆக ஆக, அவட்கு வேலையைக் குறைவாகக் கொடுக்கிறாள். பிள்ளை பெறுங்காலம் சமீபிக்கும்போது, குழந்தைக்குக் கேடு வாராதிருக்கவும், பிரசவ காலத்தில் வருத்தம் உண்டாகாதிருக்கவும், அவளை யாதொரு வேலையும் செய்ய அனுமதிப்பதில்லை.

" இம்மாதிரியான உலக நன்மைக்கான செயல்களால், நீர் உண்மையாக உமக்கே நன்மை செய்து வருகிறீர். பற்றின்றி அக்கருமங்களை உம்மாற் செய்ய இயலுமாயின், உமது மனம் தூயதாகும், உமக்கு ஈசுவர பக்தி வளரும். பக்தியைப் பெற்றதும், நீர் ஈசுவர தரிசனம் பெறுவீர். " உலகத்திற்கு நன்மை செய்ய மனிதனால் உண்மையாக இயலாது. ஈசன் ஒருவனே அவ்வாறு செய்பவன்—சூரிய சந்திரர்களைப் படைத்துள்ளவனும், பெற்றோருடைய இதயங்களில் பிள்ளைகள் மீதுள்ள அன்பை வைத்தவனும், மேலோருடைய உள்ளங்களில் கருணையை அளித்தவனும், சாதுக்கட்கும் அடியார்கட்கும் பக்தியை ஊட்டியவனும் ஆன அவனே அதைச் செய்வான். தன்னலமின்றிப் பிறர்க்கெனப் பாடுபடும் மனிதன் மெய்யாகவே தனக்கு நன்மை செய்துகொள்கிறான்.

"உமது நெஞ்சுளே பொன் புதைக்கப்பட்டுள்ளது; ஆனல் நீர் அதை அறியீர். அதை மூடி யிருப்பது மெல்லிய ஓர் அடுக்கு மண். நீர் இதை அறிந்ததும், உமது கருமங்களாகிய இவை யாவும் குறையும். குடும்பத்திலுள்ள மருமகள், குழந்தையைப் பெற்றதும், அது சம்பந்தமான முயற்சிகளேயே செய்கிருள். அவள் செய்யும் ஒவ்வொன்றும் குழந்தைக்காகவே. அவளுடைய மாமியார் அவளே வீட்டு வேலே எதுவும் செய்ய இடங்கொடாள்.

"தன்னலமற்ற கருமத்தால் பக்தி நெஞ்சில் தழைக்கிறது. பின்பு பகவானது கருணையால் அவரை நாளடைவில் ஒருவன் தரிசிக்கிருன். ஈசனேக்காணக்கூடும். நான் உங்களோடு பேசிக்கொண்டிருப்பதுபோல் அவரோடு பேசக்கூடும்."

ஆச்சரியத்தால் மௌனமாகி அனேவரும் குருதேவருடைய மொழிகளேக் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்தனர். சரஸ்வதி தேவியே ஸ்ரீ ராமகிருஷ்ணரது நாவில் அமர்ந்து இம்மொழிகளே வித்யாசாகர்க்கு மட்டுமன்றி, மன்னுயிர்க் கெல்லாம் அதன் நலங் கருதிக் கூறிக்கொண்டிருப்பதாகத் தோன்றிற்று.

மாலே சுமார் ஒன்பது மணியாயிற்று. குருதேவர் புறப்படத் தயாராயிருந்தார்.

குருதேவர் (வித்யாசாகரிடம் புன்சிரிப்போடு); "நான் சொல்லிய வார்த்தைகள் உண்மையாகவே அவசியமற்றன. நீர்இதெல்லாம் அறிவீர். அறிந்ததாக உணர்ச்சி மட்டும் உம்மிடம் இல்லே என்பதே. வருணனது பொக்கிஷத்தில் எண்ணிறந்த மணிகள் உள்ளன. ஆனல் அவரே அவற்றை அறியாதவராவர்."

வித்யாசாகர் (புன்கிரிப்போடு): "தேவரீர் இஷ்டப்படி பேசலாம்."

குருதேவர் (மெல்லச் சிரித்துக்கொண்டு): ஆம் பல பணக்காரர் தமது வேலேக்காரராகிய எல்லாருடைய பெயர்களேயும் அறியாதவராயும், தம் வீட்டில் பல விலே யுயர்ந்த பொருள்கள் இருப்பதை உணராதவராயும் இருக்கின்றனர்." (அனேவரும் சிரிக்கின்றனர்)

ஒவ்வொருவரும் குருதேவருடைய சம்பாஷணேயால் மகிழ்ச்சி யுற்றனர், மறுபடியும் வித்யாசாகரைப் பார்த்துப் புன்சிரிப்போடு "எப்போதாவது கோயிற் பூஞ்சோலேயை—அதாவது, ராசமணியாரது தோட்டத்தை—வந்து பாரும். அது மனதைக் கவரும் ஓர் இடம்."

வித்யாசாகர்: "நான் போய்ப் பார்ப்பதிற் சந்தேகம் இல்லே. தேவரீர் என்னேப் பார்க்க இவ்வளவு அன்போடு வந்துள்ளீர்கள்; யானும் தேவரீரைப் பார்க்கவர வேண்டுமன்ருே?"

குருதேவர்: "என்னேப் பார்க்கவா? அதைப் பற்றி ஒருக்காலும் நினேக்கவேண்டாம்."

வித்யாசாகர்: "ஏன்? அவ்வாறு சொல்வது ஏனே? தேவரீரை விளங்கக் கூறுமாறு வேண்டலாமோ?"

குருதேவர் (சிரிப்போடு): "பார்த்தீரா? நாங்கள் சிறு மீன் பிடிக்கும் படகுகள் போன்றவர் (அனேவரும் சிரித்தல்). நாங்கள் சிறு கால்வாய்களிலும்

ஆழமற்ற நீர் நிலைகளிலும், பெரிய நதிகளிலும் சஞ்சரிக்கலாகும். ஆனால் நீர் ஒரு கப்பல். நீர் உமது வழியிலே தரை தட்டி நின்றுவிடுவீர்! (அனைவரும் சிரித்தல்)

வித்யாசாகர் பேசாதிருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிரித்துக்கொண்டே "ஆனால் இப்பருவ காலத்தில் ஒரு கப்பலும் அங்கே செல்லலாம்."

வித்யாசாகர் (சிரிப்போடு): "ஆம், இது பருவ மழை பெய்யும் கால மன்றே?" (எல்லோரும் சிரிக்கின்றனர்)

ம—தமக்குள்ளே "புதிதாக எழுந்த அன்பிற்கு இது உண்மையாகவே பொழியுங் காலமாகும். இம்மாதிரியான சமயங்களில் மதிப்பையோ மரியாதையையோ எவரும் பாரார்" என்று சொல்லிக்கொண்டார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் பின்பு வித்யாசாகரிடம் விடைபெற்றார்; தமது நண்பர்களோடு அப்பண்டிதர், ஏற்றிய மெழுகு வத்தியைக் கைக்கொண்டு வழி காட்டி, குருதேவருடன் முக்கியமான வாசல்வரை கூட வந்தார். அறையைவிட்டு வரு முன் குருதேவர் குடும்பத்தாரது நலனிற்காகப் பிரார்த்தனை பண்ண, அதே சமயம் ஆவேச நிலையினை அடைந்தார்.

குருதேவரும் அடியார்களும் வாயிலை அடைந்ததும், அவர்கள் எதிர்பாராத ஒரு காட்சியைக் கண்டு அமைதியாக நின்றனர். அவர்கட்கு முன்னால் நல்ல நிறமும் தாடியும் அமைந்த ஏறத்தாழ முப்பத்தாறு வயதினர் ஒருவர் நின்றார். அவர் ஒரு வங்காளியைப்போல உடையணிந்திருந்தார்; ஆனால் அவரது தலை மீது சீக்கியரது முறைப்படிக் கட்டப்பட்ட ஒரு வெண்மையான தலைப்பாகை இருந்தது. அவர் குருதேவரை நோக்கியதும், அவர் முன்பு தலைப்பாகை முதலிய வற்றோடு வீழ்ந்து வணங்கினர்.

அவர் எழுந்ததும், குருதேவர் "இது யார்? பலராம்தானா? இரவில் இவ்வளவு பொழுதாவானேன்?" என்று விசாரித்தார்.

பலராம்: "நீண்ட நேரம் இங்கே காத்திருந்தேன், ஐயன்மீர்."

குருதேவர்: "நீர் ஏன் உள்ளே வரவில்லை?"

பலராம்: "எல்லோரும் தேவரீரது உபதேசத்தை உற்றுக்கேட்டுக் கொண்டிருந்தனர். யான் அவர்கட்குத் தொந்தரவு கொடுக்க விரும்பவில்லை."

குருதேவர் தம்மொடு வந்தவர்களுடன் வண்டியில் ஏறினர்.

வித்யாசாகர் (மௌனமாக ம—விடம்): வண்டி வாடகையைக் கொடுக் கட்டுமா?"

ம—: "அந்த சிரமம் தங்களுக்கு வேண்டாம். அதற்கு ஏற்பாடு செய் தாயிற்று."

வித்யாசாகரும், அவருடைய நண்பர்களும் ஸ்ரீ ராமகிருஷ்ணரை வணங் கினர்; வண்டி தக்ஷிணேசுவரம் நோக்கிப் புறப்பட்டது. ஆனால், ஏற்றிய மெழுகு வத்தியைக்கொண்ட வித்யாசாகரது தலைமையில் இருந்த அச்சிறு கூட்டத்தார் வாசலிலே நின்றுகொண்டு, குருதேவர் மறையும்வரை அவரை உற்று நோக்கிக் கொண்டேயிருந்தார்.

3

இல்லறத்தார்க்குப் புத்திமதி

வியாழன், ஆகஸ்டு 24, 1882

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது அறையின் நீண்ட வடகிழக்குத் தாழ்வாரத்தில் ஹாஸ்ராவோடு பேசிக்கொண்டிருந்தார். அப்போது ம— வந்தார்; குருதேவரைப் பணிவோடு வணங்கினர்.

குருதேவர்: "இன்னும் சில தடவைகள் ஈசுவரசந்திர வித்யாசாகரரைப் போய்ப் பார்க்க எனக்குப் பிரியம் உள்ளது. சித்திரக்காரன் மொத்த வடிவைக் குறிக்கும் கோடுகளை முதலில் வரைகிறான்; அவகாசம் நேரும் போது வண்ணம் தீட்டுகிறான் (நிறம் பூசுகிறான்). பொம்மை செய்வோன் முதலில் ஒரு வடிவத்தைக் களிமண்ணால் அமைத்துக்கொள்ளுகிறான்; பிறகு சாந்து பூசுகிறான்; பின்பு அதன்மீது வெள்ளையடிக்கிறான்; கடைசியாக ஓர் எழுது கோலால் அதற்கு வண்ணம் தீட்டுகிறான். இவற்றையெல்லாம் படிப்படியாகத் தொடர்ந்து செயயவேண்டும். வித்யாசாகர் முற்றிலும் தயாராயுள்ளார். ஆனால் அவரது உள்ளத்திலிருப்பதை ஒரு மெல்லிய ஏடு மூடிக்கொண்டுள்ளது. அவர் இப்போது நற்கருமங்களைச் செய்தலில் ஈடுபட்டு வருகிறார். ஆனால் தம்முள் இருப்பதை இன்னதென அறியார். அவர்க்குள்ளே தங்கம் மறைந்து கிடக்கிறது. பகவான் நமக்குள் வசிக்கிறார். இதை ஒருவன் அறிந்தால் எல்லா முயற்சிகளையும் கைவிட்டு, 'ஈசனிடம் நெஞ்சு பரிதவிக்கப் பிரார்த்தனை செய்யலாமா' என்ற நிலை அவனுக்கு உண்டாகும்.

இவ்வாறு குருதேவர் ம—விடம் பேசினார்; ஒரு சமயம் அவர் நின்று கொண்டும், ஒரு சமயம் நீண்ட தாழ்வாரத்தில் அங்கும் இங்கும் உலவிக் கொண்டும் பேசினார்.

குருதேவர்: "உள்ளே இருப்பதை அறிவதற்கு ஒரு சிறிது ஞான சாதனம் பழகல் அவசியமாகும்."

ம—: "வாழ்வு முழுவதும் சாதனம் பழகுதல் அவசியமா?"

குருதேவர்: "இல்லை. ஆனால் ஆரம்பத்தில் ஒருவன் கடுமையாக உழைக்கத்தான் வேண்டும். அதன்பின் அவ்வளவு கடுமையான முயற்சி வேண்டாம். தோணி அலைகட்கும் புயலுக்கும் பெருங்காற்றுக்கும் இடையேயும், ஓர் ஆற்றின் வளைவிலேயும் சென்றுகொண்டிருக்கும்வரை, சுக்கான்

பிடிப்பவன் எழுந்து நின்று, சுக்கானைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறான்; ஆனால் அவற்றைக் கடந்து சென்றதும் தளர்த்திக்கொள்கிறான். தோணி வளைவுகளைத் தாண்டியதும், சுக்கான்காரன் காற்று அனுகூலமாயிருப்பதை உணர்ந்ததும், அவன் சௌக்கியமாக உட்கார்ந்துகொண்டு, சுக்கான்மீது கைவைத்துக்கொண்டிருக்கிறான். பிறகு பாய்மரத்திலுள்ள பாயை அவிழ்த்து விரிக்கத் தயாராகிறான். பின் புகை குடிக்க எத்தனிக்கிறான். அதுபோல, ஞான இச்சையுடையோனும், 'காமம்' 'காஞ்சனம்' என்னும் அலைகளையும் புயல்களையும் கடந்து சென்றபின், சாந்தியையும் அமைதியையும் அனுபவிக்கிறான்.

"சிலர் யோகியின் இலக்ஷணங்களோடு பிறக்கின்றனர்; ஆனால், அவர்களும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். 'காமம்' 'காஞ்சனமு'மே இடையூறுகள்; அவை மனிதரை யோக மார்க்கத்தினின்றும் விலகச் செய்து உலகச் சேற்றில் தள்ளுகின்றன. ஒருக்கால் அவர்களிடத்தும் சிறிது சிற்றின்ப ஆசை உள்ளது போலும். தமது ஆசையைத் தீர்த்த பின்பு அவர்கள் மறுபடியும் தமது உள்ளங்களை ஈசனிடத்துச் செலுத்துகின்றனர்; இவ்வாறு அவர்கள் யோகம் பழகுவதற்கு ஏற்ற பழைய மனநிலையை மீண்டும் பெறுகின்றனர்.

"மனம் நிலையாயிருந்தாலன்றி யோகம் பழக இயலாது. உலகப் பற்றெனும் காற்றே எப்போதும் மனத்தைச் சலிக்கச் செய்கிறது. மனத்தை ஒருவத்திச் சுடருக்கு ஒப்பிடலாம். சுடர் சற்றும் அசைவற்று நிற்குமானால், அப்போது ஒருவன் யோக நிலையை அடைந்துவிட்டதாகச் சொல்லலாம்.

"சில சமயங்களில் வைராக்கியம் பழகுவதற்காக யான் ரஜோகுண நிலையை வருவித்துக்கொள்வதும் உண்டு. ஒருநாள் எனக்குத் தங்கச் சரிகைக் கரை போட்ட அங்கியைத் தரிக்கவும், எனது விரலில் ஒரு மோதிரம் அணியவும், நீண்ட குழாயினையுடைய ஹுக்கா மூலம் புகை குடிக்கவும் ஆசை உண்டாயிற்று. மதுர பாபு இவற்றையெல்லாம் எனக்கு வாங்கிக் கொடுத்தனர். யான் தங்கச் சரிகை அங்கியைத் தரித்துக்கொண்டு, சிறிது நேரத்துக்குப் பின் எனக்குள்ளே 'மனமே! இதுதான் தங்கச் சரிகை அங்கி எனப்படுவது' என்று சொல்லிக்கொண்டேன். பிறகு யான் அதைக் கழற்றித் தூர எறிந்தேன். பின் ஒரு கணமும் அதைத் தரித்திருக்கப் பொறுதவனானேன். மறுபடியும் யான் எனக்குள்ளே 'இது சால்வை எனப்படும்; இது மோதிரம் எனப்படும்; இது நீண்ட குழாயையுடைய ஹுக்கா மூலம் புகை குடிப்பது எனப்படும்' என்று சொல்லிக்கொண்டேன். இப் பொருள்களைக் கடைசியாகத் தூர எறிந்துவிட்டேன்; அவற்றை அனுபவிக்கும் ஆசை மறுபடியும் என் உள்ளத்து ஒருக்காலும் எழுந்ததே யில்லை."

அப்போது ஏறக்குறைய இருட்டும் பொழுதாயிற்று. குருதேவரும் மற்றவரும் தென் கிழக்குத் தாழ்வாரத்தில் கதவருகே தனியே நின்று பேசிக்கொண்டிருந்தார்.

குருதேவர்: (ம—விடம்) "யோகியின் மனம் எப்போதும் ஈசன்மீது நிலைத்திருக்கும், எப்போதும் பரம்பொருளிலே மூழ்கியிருக்கும். ஒருவன் அம் மாதிரியான மனிதனென அறிவதற்கு அவனைப் பார்ப்பதொன்றே போதும். அவன் கண்கள் முற்றும் திறந்தனவாயும், முட்டைகளின்மீது அமர்ந்து அடை காக்கும் தாய்ப்பறவைபோல யாதொரு குறிப்புமில்லாப் பார்வையோடும் இருக்கும். அப் பறவையின் முழுமனதும் முட்டைகளின்மீது நிலைத்திருக்கும். அதன் கண்களில் யாதொரு கருத்தும் இல்லாத பார்வை அமைந்திருக்கும், அம்மாதிரியான படத்தை நீ எனக்குக் காட்டுவாயா?"

ம—: "ஒரு படத்தைப்பெற முயலுவேன்."

மாலைப்பொழுது வரவும், கோயில்களில் தீபங்கள் ஏற்றப்பட்டன. ஸ்ரீராம கிருஷ்ணர் தேவியைத் தியானித்துக்கொண்டு தமது சிறு கட்டிலின்மீது அமர்ந் திருந்தார். பின்பு ஈசனின் நாமங்களை அவர் பாடினர். அறையில் தூபம் இட்டனர்; அங்கே ஓர் எண்ணெய் விளக்கு ஏற்றப்பட்டிருந்தது. காளி கோயிலில் இரவுப் பூஜை தொடங்கியதும், சங்கங்களின் தொனியும் தாளங் களின் ஒலியும் காற்றிலே மிதந்துகொண்டு வந்தன. சந்திரனது ஒளி எல்லாத் திசைகளிலும் வெள்ளம்போல் பெருகியிருந்தது. குருதேவர் மறுபடியும் ம— விடம் பேசலானர்.

குருதேவர்: "உனது கடமைகளைத் தன்னயமற்ற நிலையிலே இயற்றுக. வித்யாசாகர் ஈடுபட்டுள்ள கருமம் மிக நல்லது. யாதொரு பயனையும் கோரா மல் உனது கடமைகளைச் செய்ய எப்போதும் முயலுக."

ம—: "அப்படியே செய்கிறேன்; சுவாமி, ஒருவன் தனது கடமை களைச் செய்துகொண்டிருக்கும்போதே ஈசனை உணரல் இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்."

குருதேவர்: "ஒருவரும் விலக்காகாமல் எல்லோரும் கருமம் செய்கின் றனர். ஈசனின் நாமங்களையும் புகழையும் பாடுவதும் கருமமே; அத்வைதி 'நானே பிரம்மம்' என்று தியானிப்பதும் அதுபோலக் கருமந்தான். மூச்சு விடு தலும் ஒரு கருமமே, கருமத்தை முற்றிலும் துறக்க வழியில்லை. ஆதலின், உனது கடமையை இயற்றுக; ஆனால் பயனை ஈசனிடம் ஒப்புவித்து விடுக."

ம—: "அதிகப் பணம் சம்பாதிக்க யான் முயற்சி செய்யலாமா?"

குருதேவர்: "தருமமாக வாழும் ஒரு குடும்பத்தைக் காப்பாற்றுவதற் காக அவ்வாறு செய்ய அனுமதி உள்ளது. நீ உனது வருமானத்தை நேர்மை யான முறையிலே அதிகப்படுத்த முயலலாம். வாழ்க்கையின் இலட்சியம் பணம் சம்பாதித்தலன்று, ஈசனுக்குப் பணி செய்தலே. பணம் ஈசனது பணிக்காகப் பயன்படுமாயின், அதனைக் கேடு விளையாது."

ம—: "மனைவி மக்கட்குக் கடமையைச் செய்யும் கட்டாயம் எதுவரை ஒருவனுக்கு உண்டு?"

குருதேவர் : "உணவுக்கும் உடைக்கும் அவர்கட்குச் சங்கடம் நேரும் வரைதான். ஆனால் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளும் திறமையை அடைந்த ஒரு மகனது பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் அவசியம் இல்லை. சிறு குஞ்சு தனக்குரிய இரையைக் கொத்தக் கற்றுக்கொண்டதும், தாய்ப் பறவை இரைக்காகத் தன்னிடம் ஓடிவரும் அக்குஞ்சையும் கொத்துகிறது."

ம—: "கடமையை ஒருவன் எதுவரை இயற்றவேண்டும் ?"

குருதேவர் : "காய் உண்டானதும் பூ உதிர்ந்துவிடுகின்றது. ஈசனை அடைந்தபின் ஒருவன் கடமையைச் செய்யவேண்டியதில்லை ; அந்நிலையிலே அதைச் செய்ய மனதிற்குப் பிடிப்பதும் இல்லை.

"ஒரு குடிகாரன் மிதமிஞ்சிச் சாராயம் குடிப்பானுயின், தன்னினைவைப் பிறழாது வைத்திருக்க அவனுக்கு இயலாது. இரண்டு மூன்று கிண்ணம் மட்டும் குடிப்பானுயின் அவன் தனது வேலையைப் பின்னும் செய்துவர முடியும். நீ ஈசனை அணுகும் அளவுக்கு அவன் சிறிது சிறிதாக உனது வேலைகளைக் குறைத்து வருவான். பயப்படாதே.

"உனது கையிலுள்ள ஒரு சில கடமைகளை முடித்துவிடு, பின் உனக்கு சமாதானம் உண்டாகும். வீட்டு எஜமானி தனது சமையலையும் மற்ற வீட்டு அலுவல்களையும் முடித்துவிட்டுக் குளிக்கப் போம்போது, நீ அவளைப் பின் தொடர்ந்து எவ்வளவு உரக்க அழைத்தாலும், அவள் திரும்பி வரமாட்டாள்."

ம—: "சுவாமி, 'ஈசனை யடைதல்' என்றால் என்ன ? 'ஈசன் காட்சி' என்பதற்குப் பொருள் (அர்த்தம்) யாது ? அதை எப்படி அடைவது ?"

குருதேவர் : "வைணவர்கள் சாதகர்களையும் சித்தர்களையும் நான்கு வகையாகப் பாகுபாடு பண்ணுவது உண்டு; பிரவர்த்தகன், சாதகன், சித்தன், சித்தர் சித்தன். மார்க்கத்திலே அப்போதுதான் காலடி எடுத்து வைத்தவன் பிரவர்த்தகன் (ஆரம்ப நிலையிலுள்ளவன்) எனப்படுவான். பூஜை ஜெபம் தியானம் சங்கீர்த்தனம் (ஈசனது நாமத்தையும் புகழையும் பாடுதல்) என்னும் ஞான சாதனங்களைச் சிறிது காலமாகப் பழகிவருபவன் சாதகன் (முயலுபவன்) எனப்படுவான். ஈசன் இருப்பதைத் தனது உள் அனுபவத்தால் உணர்ந்துள்ளவன் சித்தன் (ஞானம் அடைந்தவன்) எனப்படுவான். இதை விளக்க வேதாந்தத்திலே ஓர் உதாரணம் கூறுவதுண்டு. வீட்டு எஜமானன் ஓர் இருட்டறையில் உறங்கிக்கொண்டிருக்கிறான். ஒருவன் அவனைக் கண்டு பிடித்தற்காக இருளிலே தடவிப்பார்க்கிறான். உறங்குபவனது கட்டிலைத் தொடுகிறான், 'இது அவனன்று' என்கிறான். அவன் பின் ஜன்னலைத் தொடுகிறான்; 'இது அவனன்று' என்கிறான். கடைசியாக அவன் எஜமானது உடலைத் தொடுகிறான் ; உடனே 'இங்கே அவன் உளன்' என்று கூச்சலிடுகிறான். வேறு வகையிற் சொல்லுவோமானால், எஜமானனின் இருப்பை அவன் இப்போது அறிந்துள்ளான். அவனை இவன் கண்டுபிடித்துவிட்டான்; ஆயினும் அவனோடு இன்னும் நெருங்கிப் பழகவில்லை.

"சித்தர் சித்தன் எனும் இன்னொருவகை உளது. ஒருவன் தனது எஜமானனிடம் நெருங்கிப் பேசும்போதும், அன்பினாலும் பக்தியினாலும் ஒருவன் ஈசனை மிக நெருங்கி அறியும்போதும், அது முற்றிலும் வேறான ஒரு விஷயம். ஒரு சித்தன் சந்தேகமின்றி ஈசனை அடைந்தவன்; ஆனால், சித்தர் சித்தன் ஈசனை மிக நெருங்கி அறிந்துள்ளவன்."

ம—: "ஈசனை ஒருவன் காணும்போது அவன் ஈசனை இக்கண்களாற் காண்கின்றானா?"

குருதேவர்: "ஈசனை இத் தூலக் கண்களாற் காண முடியாது. ஞான சாதனம் பழகும்போது ஒருவன், 'பிரேமையுடலை'ப் பெறுகிறான்; அதில் 'பிரேமைக் கண்கள்' 'பிரேமைக் காதுகள்' முதலியன அமைந்துள்ளன. அந்தப் 'பிரேமைக் கண்களா'க் கொண்டு அவன் ஈசனைக் காண்கிறான். அந்தப் 'பிரேமைக் காதுகளா'க்கொண்டு அவன் ஈசனது குரலைக் கேட்கிறான்,

"ஆனால் ஈசன்மீது மிகுந்த பிரேமை இருந்தாலன்றி இது இயலாது. மிக தீவிரமாக ஒருவன் ஈசன்மீது பிரேமை கொள்ளும்போது, அவன் ஈசன் ஒருவனையே எங்கும் காண்கிறான். அது காமாலை நோய் கொண்டவனைப் போன்றது; அவனுக்கு எதுவும் மஞ்சளாகவே தோன்றும். அப்போது அவன் 'நான் உண்மையில் அவனே' என்று உணர்கிறான்.

"அல்லும் பகலும் ஈசனையே நினைந்துவரும் ஒருவன் எங்கும் அவ்வீசனையே காண்கிறான். சிறிது நேரம் நிலையாக ஒரு சுடரை உற்றுநோக்கியவன் பின் எல்லாப் பக்கங்களிலும் சுடர்களையே காண்பது போன்றது அது."

"ஆனால் அது உண்மையான சுடர் அன்றே" என்ற நினைவு ம—வின் மனதில் பளீரெனத் தோன்றிற்று.

ஒரு மனிதனது மிக ஆழ்ந்த நினைவையும் அறியக்கூடிய ஸ்ரீராமகிருஷ்ணர் பின்வருமாறு பதிலுரைத்தார்; "ஆத்ம மயமாய் சின்மயமாய் உள்ள ஈசனை நினைப்பதனால் ஒருவன் உணர்வை இழந்துவிடுவதில்லை. ஈசனைப்பற்றி மிதமிஞ்சி நினைப்பதினால் மூளை குழம்பிவிடுகின்றது என்று சிவநாதர் ஒரு சமயம் குறிப்பிட்டார். உடனே நான் அவரிடம் சின்மயத்தையே (அறிவையே) நினைப்பதினால் ஒருவன் எப்படி அறிவை இழந்துவிடக்கூடும்?" என்றேன்,

ம—: "ஆம் சுவாமி, நான் அதை உணர்ந்தேன். பொய்யான பொருள் ஒன்றை நினைப்பதுபோல் அன்று அது. எவன் இயல்பாகவே நிலையான உன்னதமான வடிவமாய் இருப்பானோ, அவன்மீது தனது மனதை எப்போதும் நிலை நாட்டும் ஒரு மனிதன் தனது உணர்வை எப்படி இழக்க முடியும்?"

குருதேவர்: (மகிழ்ச்சியோடு) "ஈசனது அருளாலே நீ அதனை அறிந்து கொண்டனை. ஈசனது அருளாலன்றி மனத்திலுள்ள சந்தேகங்கள் மறையா. ஆத்மானுபூதியின்றிச் சந்தேகங்கள் நீங்குவதில்லை,

"ஆனால் ஒருவன் ஈசனது அருளைப் பெற்றுவிட்டானாகில், அவன் எதற்கும் அஞ்சவேண்டாம். ஒரு குழந்தை தானே தனது தந்தையின் கையைப்

பிடித்துக்கொள்ளுமாயின், அதற்கு அடி தவறி விழுவது ஒருவாறு எளிதே. ஆனால் தந்தை குழந்தையினது கையைப் பற்றிக்கொள்வாராயின் அம்மாதிரி யான பயத்திற்கு வழியில்லை. ஈசனே தனது அருளால் ஒரு மனிதனது சந் தேகங்களை நீக்கித் தன்னை அவனுக்குக் காட்டுவானுயின், அவன் அதன்பின் துன்பப்படவேண்டிய அவசியம் இல்லை; ஆனால் அவன் மிக்க நெஞ்சுத்துடிப் போடு பிரார்த்தித்த பின்பும், ஞான சாதனம் பழகிய பின்பும்தான் இந்த அருள் அவன்மீது இறங்குகிறது. தாய் தன் குழந்தை மூச்சடங்க அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருப்பதைக் காணும்போதே அதன்மீது இரக்கங்கொள்கிருள். முன்பு தன்னை ஒளித்துக்கொண்டிருந்தவள் அப்போது குழந்தை முன் தோன்றுகிருள்."

"ஆனால் ஈசன் நம்மை ஏன் அங்குமிங்கும் ஓடச்செய்யவேண்டும்?" என்று ம— நினைக்கலானர்.

உடனே ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்லுவார்: "ஒரு சிறிது நாம் அங்கு மிங்கும் ஓடவேண்டும் என்பது ஈசனுடைய திருவுள்ளம். அது பெரும் விளை யாட்டு. ஈசன் உலகத்தை விளையாட்டாகவே படைத்துள்ளான் போலும். இதுதான் 'மஹாமாயை' என்ப்படும். ஆதலால் பிரபஞ்ச சக்தியின் வடிவமே யான தேவியிடம் நாம் சரணம் புகல் வேண்டும். நமக்கு மித்தையெனும் விலங்கிட்டு வைத்திருப்பவள் அத்தேவியே. அவ்விலங்கை நீக்கும்போது தான் ஈசனது தரிசனம் கைகூடும்."

அக்டோபர் 17, 1882

தேவியின் திருவிழாவாகிய துர்க்க பூஜைக்குச் சில நாளைக்கு முன்பு ஒரு திங்கட்கிழமை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் மிக சந்தோஷமான நிலையில் இருந்தார்; காரணம், நரேந்திரர் அவரோடு இருந்ததே. நரேந்திரர் பிரம்ம சமாஜ அங்கத் தினரான இரண்டு மூன்று இளைஞரைக் கோயில் தோட்டத்திற்கு அழைத்து வந்திருந்தனர். அவர்களோடுகூட இராக்கால் ராம்லால் ஹாஸ்ரா ம—என்பவர் களும் குருதேவருடன் இருந்தனர்.

நரேந்திரர் தமது நடுப்பகல் உணவை ஸ்ரீராமகிருஷ்ணரோடு உண்டார். பிற்பாடு சீடர்கள் ஒரு சிறிது படுத்துக்கொண்டிருப்பதற்காக, குருதேவரது அறையில் தரையிலே அச்சமயத்துக்கு உதவும் ஒரு படுக்கை அமைக்கப் பட்டது. ஒரு பாயை விரித்து, அதன்மீது ஒரு மெத்தையையும் அதன்மீது ஒரு வெண்மையான துணியையும் அமைத்திருந்தனர். ஒரு சில திண்டுகளும் தலையணைகளும் சேர்ந்து எளியதொரு முழுப்படுக்கையாயின. குழந்தையைப் போல் குருதேவர் நரேந்திரநாத்துக்கருகே படுக்கைமீது அமர்ந்தனர். அவர் அன்பர்களோடு மகிழ்ச்சி பொங்க வார்த்தையாடினர். முகத்திலே புன்னகை யின் ஜோதிவீச கண்கள் நரேந்திரர்மீது பதிந்தவண்ணமாய், அவர் அனைவர்க் கும் பற்பல ஞான போதனைகளை வழங்கி வந்தனர். இடையிடையே தமது சொந்த வாழ்க்கையின் நிகழ்ச்சிகளையும் கலந்து பரிமாறினர்.

குருதேவர்: "நான் சமாதியனுபவம் பெற்றபின், எனது மனத்தில் ஈசனைப்பற்றிய பேச்சை மட்டும் கேட்கும் ஆசை முறுகிவந்தது. சாஸ்திர பாராயணமோ பிரசங்கமோ நடக்கும் இடங்களை நான் எப்போதும் தேடியலைந் தேன். 'அத்யாத்ம ராமாயணம்' வாசிப்பதைக் கேட்பதற்காக நான் கிருஷ்ண கிஷோரிடம் செல்வதுண்டு.

"கிருஷ்ணகிஷோரிடம் எவ்வளவு மிகப்பெரும் விசுவாசம் (நம்பிக்கை) இருந்தது! ஒருநாள் பிருந்தாவனத்திலே அவர்க்குத் தாகம் உண்டாகலும், அவர் ஒரு கிணற்றுக்குச் சென்றார். அதன் அருகே ஒரு மனிதன் நிற்பதைக் கண்டார். தமக்கு ஒரு சிறிது தண்ணீரைத் தூக்கிக் கொடுக்குமாறு அவனை வேண்டினார்; அவனை, "ஐய, நான் ஒரு தாழ்ந்த ஜாதிக்காரன், நீர் ஒரு பிராம்மணர். நான் உமக்காக எப்படித் தண்ணீர் தூக்கித்தரக் கூடும்?' என்றான். கிருஷ்ணகிஷோர் அதற்குப் பதிலாக. 'சிவநாமஞ் சொல்லு, அவரது தூய நாமத்தை ஓதுவதனால் நீ சுத்தமாவாய்' என்றார். அத் தாழ்ந்த ஜாதிக் காரன் சொன்னபடியே செய்தான்; கிருஷ்ணகிஷோர் வைதிக பிராம்மணராக இருந்தும், அந்நீரைக் குடித்தார். எவ்வளவு மகா விசுவாசம்!

"ஒரு சமயம் ஒரு சாது கங்கைக் கரைக்குவந்து, தக்ஷிணேசுவரத்திற்குச் சற்று தொலையிலுள்ள 'ஆரியாதக' என்னும் இடத்திலுள்ள படித்துறைக்கு அருகே வாழ்ந்தார். நாங்கள் அவரைத் தரிசித்துவர நினைத்தோம். ஹலதாரி யிடம் நான் 'கிருஷ்ணகிஷோரும் நானும் ஒரு சாதுவைக்காணச் செல்கிறோம். நீரும் எம்முடன் வருவிரோ?' என்றேன். அதற்கு ஹலதாரி 'ஒரு களி மண் கூட்டைவிடச் சற்றும் மேலாகாத வெறும் மனித உடலைக் காண்பதினால் என்ன பயன்?' என்று மறுமொழி கூறினர். யான் கிருஷ்ணகிஷோரிடம் அதைத் திரும்ப உரைத்தேன். பெருங்கோபத்தோடு அவர்: 'அவ்வாறு குறை கூற ஹலதாரிக்கு வெட்கமில்லையா? ஈசனை ஒயாது நினைத்துக்கொண்டும், ராம ரைத் தியானம் பண்ணிக்கொண்டும், ஈசனுக்காக அனைத்தையும் துறந்து விட்டும் வாழும் ஒரு மனிதரது உடலை ஒரு 'களிமண் கூடு' என்று அவர் எப் படிக் கேலிசெய்ய முடியும்? அம்மாதிரியான மனிதர் சின்மய வடிவம் என் பதை அவர் அறியாரா?' என்று கேட்டார். ஹலதாரி கூறிய அம்மொழி களால் அவர் மன அமைதி குலைந்தவராய், கோயில் தோட்டத்திலே அவரைக் கண்டபோதெல்லாம் தமது முகத்தைத் திரும்பி வைத்துக்கொண்டார்; அவ ரோடு பேசுவதையும் நிறுத்திவிட்டார்.

"ஒருமுறை கிருஷ்ணகிஷோர் என்னிடம் 'பூனூலை ஏன் எறிந்துவிட்டீர்?' என்று கேட்டார். ஈசனது தரிசனம் பெற்ற அந்நாளிலே ஒரு பெரும் புயல் என்மீது வீசியதுபோல யான் உணரலானேன். என்னிடமிருந்த அனைத்தை யும் அது அடித்துக்கொண்டு போயிற்று. என்னுடைய பழைய நிலைமைக் குரிய அடையாளம் யாதும் மிஞ்சவில்லை. உலக உணர்ச்சியை முற்றும் இழந்துவிட்டேன். என் உடல்மீது என் ஆடையை வைத்திருத்தலே இய

லாது போயிற்று, என் பூணூலைப்பற்றிச் சொல்வானேன்! கிருஷ்ணகிஷோரிடம் யான் 'என்னைப்போல உமக்கும் கடவுட் பைத்தியங்கொள்ளும் சமயம் எப்போதாவது நேருமாயின், அப்போது உமக்கு விளங்கும்' என்றேன்.

"உண்மையாகவே அப்படி நிகழலாயிற்று. அவரும் கடவுட் பைத்தியங் கொண்ட நிலை வழியாகச் செல்லலானார்; அப்போது அவர் 'ஓம்' என்பதையே ஜெபித்துக்கொண்டு தனியே அமர்ந்துவிடுவார்; அவரது உறவினர் அவர்க்கு மெய்யாகவே பைத்தியம் பிடித்துவிட்டதாக நினைத்தனர்; ஒரு மருத்துவரையும் அழைத்துக்காட்டினர். கிருஷ்ணகிஷோர் அம்மருத்துவரிடம் 'எல்லா வழியாலும் என்னிடமுள்ள நோயைத் தீர்த்துவிடும்; ஆனால் எனது 'ஓம்' ஜெபத்தைத் தீர்த்துவிடாதீர்' என்றார். (அனைவரும் சிரித்தல்)

"ஒரு நாள் நான் அவரைப் பார்க்கச் சென்றேன்; அவர் கவலை தேங்கிய முகத்தோடிருக்கக் கண்டேன். அதன் காரணத்தை விசாரித்தபோது, அவர் 'தீர்வை வாங்குபவன் இங்கு வந்திருந்தான். நான் தீர்வை செலுத்தாவிடில், எனது பித்தளைப் பானைகளையும் கிண்ணங்களையும் சொற்பப் பாத்திரங்களையும் ஏலம் போட்டுவிடுவதாகப் பயமுறுத்தினான்; அதனால் எனது மனக் கவலை' என்றார். அதற்கு நான் 'சரி, அதனால் உமக்கென்ன கவலை? உமது பானைகளையும் தட்டுக்களையும் அவன் எடுத்துக்கொள்ளட்டுமே. உமது உடலையும் அவன் கைதியாக்கட்டுமே. அதனால் உமக்கென்ன? ஏன், உமது இயல்பு 'கம்'மின் இயல்புதானே!' என்று சொன்னேன். (நரேந்திரரும் பிறரும் சிரித்தல்). அவர் தாம் 'கம்' அல்லது ஆகாயம் போலே எங்கும் பரந்த ஆன்மா என்று தம்மைப்பற்றி என்னிடம் சொல்வதுண்டு. அவர்க்கு அந்தக் கருத்து 'அத்யாத்ம இராமாயணத்'தினின்றும் உண்டாயிற்று. நான் அவரைக் 'கம்' 'கம்' என்று கூப்பிட்டு, இடையிடையே வேதனைப்படுத்துவதுண்டு. அக்காரணத்தால் அன்று புன்சிரிப்போடே அவரிடம், 'நீர் 'கம்' ஆயிற்றே. தீர்வையைப் பற்றிக் கலங்கலாகாது!' என்று சொன்னேன்,

"அந்தக் கடவுட் பைத்திய நிலையில் என் மனதில் உள்ளதை எல்லாரிடமும் சொல்வது வழக்கம். நான் ஆட்களை மதித்துப் பேசுவது கிடையாது, பதவியிலுள்ள மனிதரிடத்தும் உண்மையைச் சொல்ல அஞ்சமாட்டேன்.

"ஒரு நாள், கடவுள்–வெறிகொண்ட அந்நிலையிலே, பராநகோரில் கங்கையிலுள்ள ஸ்நான கட்டத்துக்கு (நீராடும் துறைக்கு)ச் சென்றேன். அங்கே ஜயமுகர்ஜி என்பார் பகவானது நாமத்தை ஜெபித்துக்கொண்டிருப்பதைக் கண்ணுற்றேன்; ஆனால் அவரது மனம் வேறொன்றில் சென்றுகொண்டிருந்தது. நான் அவரிடம்போய் அவரது கன்னத்தில் இருமுறை தட்டினேன்.

"ஒரு சமயம் ராணி ராஸமணியார் கோயிற் பூஞ்சோலையிலே தங்கிக் கொண்டிருந்தார். அவர் தேவியம்மையின் கோயிலுக்கு வந்தார்; நான் காளி தேவியை வணங்கும்போது அவர் அடிக்கடி வருவது வழக்கம்; அன்று வந்ததும் என்னைப் பாடச்சொன்னார். நான் பாடிக்கொண்டிருந்தபோது, அவரது

மனம் வேறொன்றைப் பற்றிக்கிடந்ததைக் கவனித்தேன். உடனே அவரது கன்னத்தில் தட்டினேன். ராணியார் முழுதும் மனங்கலங்கியவராய், கையைக் கட்டிக்கொண்டு அங்கே அமர்ந்திருந்தார்.

"எனது மனநிலையைக் கண்டு நான் நடுக்கமடைந்து, எனது உறவின ராகிய ஹலதாரியிடம் 'எனது இயல்பைப் பாரும்! அதை எப்படி யான் போக் கக்கூடும்?" என்று கேட்டேன். பெருந் துடிப்போடு சிறிது காலம் தேவி யம்மையிடம் பிரார்த்தித்தபின், அந்தப் பழக்கத்தை உதறித்தள்ள எனக்கு முடிந்தது.

"அம்மாதிரியான மனநிலையைப் பெறுபவன் ஈசனைப்பற்றிய பேச்சை யன்றி வேறெதனையும் இன்பமாகக் கருதான். மக்கள் உலக விஷயங்களைப் பற்றிப் பேசக்கேட்டபோது யான் அழுததுண்டு. யான் மதுரபாபுவோடு யாத் திரைபோனபோது, காசியிலே ராஜ பாபுவின் விட்டிலே சில நாளைக் கழித் தோம். ஒரு நாள் மதுரபாபு ராஜபாபு முதலானவரோடு யான் கூடத்திலே அமர்ந்திருந்தேன். அவர்கள் தமது வியாபார நஷ்டங்களும் பிறவும் போன்ற உலக விஷயங்கள் பலவற்றைப் பற்றிப் பேசக் கேட்டேன். அதைக் கேட்ட தும், யான் உருகியழுது தேவியம்மையை நோக்கி, "அம்மே! என்னை நீ எங்கே இழுத்து வந்தனை? தக்ஷிணேசுவரத்தில் கோயிற் சோலையிலே நான் எவ்வளவோ மிக நன்றாக வாழ்ந்தேனே. இங்கேயோ 'காமம்' 'காஞ்சனம்' இரண்டையும் பற்றிய பேச்சைக் கேட்டுத் தீரவேண்டிய இடத்தில் உள்ளேன். ஆனால் தக்ஷிணேசுவரத்திலோ அதை என்னால் விலக்க முடிந்தது" என்றேன்.

குருதேவர் தமது அடியார்கள் அனைவரையும், சிறப்பாக நரேந்திரரையும் சற்றே இளைப்பாறுமாறு வேண்டினர்; தாமும் சிறிய கட்டிலின்மீது படுத்துக் கொண்டார்.

பிற்பகலில் நேரம் சென்றபின் நரேந்திரர் பாடினார். ராக்கால், லாட்டு, ம, ஹாஸ்ரா, நரேந்திரரின் 'பிராம்மோ' நண்பராகிய பிரியர்—இவர் அங்கிருந்தனர். பாட்டோடு மிருதங்கமும் வாசித்தனர்.

மலர்ந்தமுகத் தொடும்ஈசன் மதுரமிகும் நாமம்
வாயினில்தீ ஒதிவர வழியும்உளத் தமுதம்.
அவ்வமுத வெள்ளத்தை அனைவரொடுங் கலந்து
அள்ளியள்ளிக் குடித்திடுக அனவரதம் நீயே.
உலகமயல் எனுந்தீயால் உளம்வறண்டு போயின்
ஒதிடுக அவன்நாமம் ஓயாது மீண்டும்.
வறண்டுளநின் நெஞ்சமதை மழையெனவே வீழும்
வான்தெய்வ அன்புமிக மகிழ்வுறவே நனைக்கும்.
ஒருக்காலும் அவன்நாமம் ஓதமற வாதே
உறுதியிதிற் கொண்டிடுக உத்தமநன் னெஞ்சே.
பெருவிபத்தே எதிர்வரினும் பெருங்கருணை ஐயன்
பெயர்துணையா மனதாரப் பேணியழைத் திடுமின்.
இடியனைய திருப்பெயரால் இரும்பாவத் தனையை
எளிதாக நொறுக்கிடுக, இன்புறவே வாழ்க:

அந்தமிலா இன்பமதில் ஆழ்ந்துநனி பருகி
அன்புவீசு பரவசத்தில் ஐக்கியமும் எய்தி
நெஞ்சிலெழும் ஆசைகளை நிறைவேற்றி வாழ்வோம்,
நீணிலத்தே இனிதிருப்போம் நெடுங்காலம், வம்மின்!

[பருகி-குடித்து ; வம்மின்-வாருங்கள்,]

பாட்டு முடிந்ததும், ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரை நெடுநேரம் தமது கைகளிலே ஏந்திக்கொண்டு, "நீ இன்று எங்கட்கு இவ்வளவு மகிழ்ச்சியை அளித்தனையே!" என்று புகழ்ந்தார். குருதேவரது நெஞ்சமெனும் வெள்ள மடை அன்றிரவு மிகுதியாகத் திறக்கப்பட்டிருந்ததாதலின், அதன்வழியாகப் பெருகிய ஆனந்தம் கரை புரண்டோட, அவர்க்குத் தம்மை அடக்கி யாள்வதே இயலாதுபோயிற்று. அன்றிரவு அப்போது மணி எட்டு. தெய்விக அன்பு வெறியில் மூழ்கியவராய், அவர் தமது அறையின் வடக்கிலுள்ள நீண்ட தாழ் வாரத்தே அங்குமிங்கும் உலவினர். இடையிடையே தேவியம்மையோடு அவர் பேசிக்கொண்டிருந்ததும் காதில் விழலாயிற்று.

நரேந்திரரும் ம—வும் பிரியரும் இரவைக் கோயிற் சோலையிலே கழிப்ப தாகத் தீர்மானித்தனர். இதனாற் பெரிதும் குருதேவர் மகிழ்ச்சியடைந்தார்; நரேந்திரர் அவரோடு இருப்பார் என்பதே அதற்கு முக்கிய காரணமாயிற்று. தூய அம்மையார் (ஸ்ரீ ராமகிருஷ்ணரது பத்தினியாரை அன்பர்கள் இப்பெயர் கொண்டு அழைப்பது வழக்கம்.) 'நகபத்'தில் (பாடகர் மண்டபத்தில்) வாழ்ந்துவந்தனராதலின், அனைவர்க்கும் சாப்பாடு தயாரித்து வைத்திருந்தார். சுரேந்திரர் (ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பிரிய இல்லைச் சீடராகிய சுரேசமித்திரர் என் பார்) குருதேவரது செலவிற் பெரும் பகுதியை ஏற்றுவந்தார். குருதேவரது அறையின் தென்கிழக்குத் தாழ்வாரத்தில் இலைகள் போடப்பட்டன.

அடியார்கள் களிப்போடு உணவருந்திக்கொண்டிருக்க, ஸ்ரீ ராமகிருஷ்ணர் அருகே நின்று, மகிழ்ச்சி கூர அவர்களைக் கவனித்துவந்தனர். அன்றிரவு குருதேவர்க்கு ஆனந்தம் பொங்குவதாயிற்று.

சாப்பாட்டுக்குப் பின் அடியார்கள் குருதேவரது அறையில் தரைமீது விரிக்கப்பட்டிருந்த பாய்மீது அமர்ந்தனர். அவர்கள் அவரோடு பேசத் தொடங் கினர். அது மெய்யாகவே பேரின்ப விருந்தாயிற்று, குருதேவர் நரேந்திரரை 'ஞானவானிற் பிரேமை யெனும் நளிர்வெண் முழுமதி தோன்றிடுமால்" என்று தொடங்கும் பாடலைப் பாடும்படி வேண்டினர்.

நரேந்திரர் பாட, மற்ற அடியார்கள் மிருதங்கம் வாசித்தும் தாளங்களை ஒலிக்கச் செய்தும் வந்தனர்.

ஞான வானிற் பிரேமையெனும் நளிர்வெண் முழுமதி தோன்றிடுமால்,
ஆனு அன்பிற் பொங்கியெழும் அலைகள் எங்கும் பரந்திடுமால்,
மோன இன்ப வாரியியில் மூழ்கித் திளைக்கும் முதற் பொருளே,
யானவ் வகையை என்னென்பேன்! என்றும் வெல்கநின் இணையடியே!

இந்துவைச் சூழும் தாரகைபோல் எங்கும் விளங்குவர் அடியார்கள்.
எந்தை இறைவன் அருட்கடலான் இன்புற லீலை புரிந்திடுவான்.
காணுய் இன்று சுவர்க்கத்தின் கதவு விரிவாத் திறந்துளதை.
பூணும் வேனில் இளங்காற்று புதிய இன்ப அலையெழுப்பி
மெல்லப் பிரேமை நறுமணத்தை மேதினியோர்க்கு வழங்கிடுமால்.
வல்யோ கியர்யா வருமின்ப மாந்தி வெறியால் வசமிழப்பர்.
பூமி யென்னும் சாகரத்திற் புது நாட் கமலம் விரிந்திடுமால்.
ஏமஞ் சான்ற மாண்பினெடும் இவர்வாள் அன்னை அதன்மீதே
ஆங்கே பெருகும் இன்பமது அருந்திச் சுரும்பு வெறிகொள்ளும்,
ஓங்கும் அன்னை முகத்தொளிகாண்! உலக முழுதும் கவர்ந்திடுமால்
அவள்தாள் சுற்றி அன்பர்கணம் ஆடுவர் தாண்டவம் இன்பத்தால்;
அவளழ குக்கிணை ஏதுஅவள்தான் அருளால் தரிசனம் அளித்திடுங்கால்;
அளவறுந் திருத்தி நிறைந்திடுமால், அன்பீர், பிரேம்தாஸ், கெஞ்சுகின்றேன்;
உளநாள் நீவிர் அன்னவருமே உரைப்பீர் அம்மை திருப்புகழை.

[நளிர் - குளிர்ந்த. ஆனை - அடங்காத. வாரிதி - கடல். தினைக்கும் - முழ்கும். முதற் பொருளே - ஈசனே. மாந்தி - குடித்து. ஏமம் சான்ற - இன்பம் நிறைந்த. இவர்வாள் - ஜொலிப்பாள். இன்ப மது - இன்பமாகிய தேன். சுரும்பு - வண்டு. தாள் - பாதம். அள வறும் திருத்தி - அளவில்லாத் திருப்தி.]

ஸ்ரீ ராமகிருஷ்ணர் பாடினார், ஆடினார்; அடியார்களும் அவரைச் சுற்றி ஆடினர்.

நடு இரவிற்குச் சற்றுப் பின்பு நரேந்திரரும் மற்ற அடியார்களும் குருதேவ ரது அறையில் தரைமீது அமர்த்திய படுக்கையின்மீது படுத்துக்கொண்டனர்.

பொழுது விடிந்ததும் சில அடியார் விழித்தெழுந்தனர். குருதேவர் ஒரு குழந்தைபோல் ஆடையின்றி அங்கு மிங்கும் அறையில் உலாவிக்கொண்டு, பற்பல தேவர் தேவியர்களின் பெயர்களை ஓதிவந்தனர். அவரது குரல் அமுதம் போல் இனிதாயிற்று. ஒரு கணம் அவர் கங்கையை நோக்குவர், மறுகணம் சுவர்களின் மீது தொங்கும் படங்களின் முன்பே நிற்பார்; எப்போதும் திருப் பெயர்களைத் தம் இனிய குரலிலே இசைத்துக்கொண்டே யிருப்பார். இடை யிடையே அவர் "அம்மே! நீயே உண்மையாகப் பிரம்மன் ஆவாய். நீயே உண்மையாகச் சக்தி ஆவாய், நீயே புருஷன், நீயே பிரகிருதி, நீயே விராட், நியே பாரமார்த்திகப் பரம்பொருள், நீயே உன்னை வியாவகாரிகமாகவும் தோற்று விக்கின்றாய். நீயே உண்மையாக இருபத்து நான்கு (பிரகிருதியின்) தத்துவங் களும் ஆவாய்" என்று கூறினர்.

இதற்கிடையில் காலை வழிபாடு (பூஜை) காளிகோயிலிலும் இராதாகாந்தர் கோவிலிலும் தொடங்கிவிட்டது. சங்கின் ஒலியும் தாளங்களின் ஒலியும் காற்றில் மிதந்து சென்றன. அடியார்கள் அறையை விட்டு வெளியே வந்தனர்; கோயில்களில் பூஜை செய்வதற்காகப் பூஜாரிகளும் வேலைக்காரர்களும் தோட்டத்திலே பூக்களைச் சேகரித்துக் கொண்டிருப்பதைக் கண்டனர். 'நக பத்'தி லிருந்து காலை வேளைக்கேற்ற வாத்திய இன்னிசை மிதந்து வந்தது.

நரேந்திரரும் மற்ற அடியார்களும் காலைக்கடன்களை முடித்துவிட்டுக் குருதேவரிடம் வந்தனர். முகத்திலே இனிய புன்னகை தவழ, ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது சொந்த அறைக்கு அருகே வடகிழக்குத் தாழ்வாரத்திலே நின்றுகொண்டிருந்தனர்.

நரேந்திரர்: "பஞ்சவடியிலே நாகக் சம்பிரதாயத்தைச் சேர்ந்த சில சன்னியாசிகளை நாங்கள் பார்த்தோம்."

குருதேவர்: "ஆம், அவர்கள் நேற்று வந்தனர். (நரேந்திரரை நோக்கி) நீங்கள் எல்லோரும் பாயிலே ஒன்றுக உட்கார்ந்திருப்பதைக் காண எனக்கு விருப்பம்."

அவர்கள் அங்கே உட்கார்ந்ததும் குருதேவர் மகிழ்ச்சி தோன்ற அவர்களை நோக்கினர். பின் அவர்களோடு பேசத் தொடங்கினர். நரேந்திரர் ஞான சாதனத்தைப் பற்றிக் கேட்டனர்.

குருதேவர்: "பக்தியே—ஈசன் மீதுள்ள அன்பே—எல்லா ஞான சாதனத்தின் ஸாரமும். பக்தியின் மூலம் ஒருவன் துறவையும் வைராக்கியத்தையும் இயல்பாகப் பெறுகிறான்."

நாகக் சம்பிரதாயத்தைச் சார்ந்த சன்னியாசிகள் அறைக்குட் புகுந்து, 'நமோ நாராயணாய' என்று சொல்லி, (சாதுக்கள் ஒருவரை யொருவர் வணங்குகிற முறைப்படி 'நாராயணனுக்கு வணக்கம்' என்ற பொருளில்) குருதேவரை வணங்கினர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவர்களை அமரும்படி வேண்டினர்.

குருதேவர்: "ஈசனுக்கு இயலாதது ஒன்றும் இல்லை. அவரது இயல்பை எவனும் வாக்கினால் கூறமுடியாது. எதுவும் அவர்க்கு இயலும். இரு யோகியர் ஓரிடத்திலே வாழ்ந்து, ஞான சாதனம் பழகிக்கொண்டிருந்தனர். ஒரு நாள் அவ்வழியாக நாரத ரிஷி சென்றுகொண்டிருந்தனர். அந்த யோகியரில் ஒருவர் அவரை இன்னாரென்று அறிந்து, அவரை நோக்கி, 'தேவரீர் பகவானிடமிருந்தே இப்போது வந்திருக்கிறீர். அவர் என்ன செய்துகொண்டிருக்கிறார்?' என்று வினவினர். நாரதர் அதற்கு 'ஏன், அவர் ஒட்டகைகளையும் யானைகளையும் ஓர் ஊசியின் காது வழியாகப் போய்த்திரும்பி வரும்படிச் செய்துகொண்டிருந்ததைக் கண்டேன்' என்று விடையளித்தார். அதைக் கேட்டதும் அந்த யோகி; 'அதில் ஆச்சரியமடைய யாது உள்ளது? எல்லாம் ஈசனுக்கு இயலும்' என்றனர். ஆனால் மற்றொரு யோகியோ, 'என்ன? யானைகளை ஊசியின் காதுவழியாகச் செல்லும்படிச் செய்தலா! அது என்றைக்கேனும் செய்யக் கூடுமா? பகவானது இருப்பிடத்திற்கு நீர் ஒருக்காலும் சென்றிராதவர்' என்று உரைத்தார்."

நரேந்திரரும் அவரது நண்பர்களும் கங்கையில் நீராடி முடிந்ததும், குருதேவர் சிரத்தையோடு அவர்களை நோக்கி, "பஞ்சவடிக்குச் சென்று, ஆலமரத்தடியில் அங்கே தியானம் பண்ணுங்கள். உங்கட்கு உட்கார ஏதேனும் கொடுக்கட்டுமா?" என்று கேட்டார்.

சுமார் பத்தரை மணிக்கு நரேந்திரரும் அவரது பிராம்மோ நண்பர்களும் பஞ்சவடியில் தியானித்துக்கொண்டிருந்தனர். சிறிது நேரம் சென்றபின் ஸ்ரீராம கிருஷ்ணர் அங்கே வந்தனர். ம—வும் கூட இருந்தனர்.

குருதேவர் பிராம்மோ அடியார்களிடம் "தியானிக்கும்போது பகவானிடத்தில் மனம் மூழ்கிவிடல் வேண்டும். மேற்பரப்பிலே மிதப்பதனல் மட்டும், கடலின் அடியிலே கிடக்கும் மணிகளைப்பெற உங்கட்கு இயலுமா?" என்று கேட்டார்.

பின்பு அவர் பாடலானர்:

மூழ்குக நெஞ்சே, ஆழ்ந்து செல்லுக,
அன்னை காளியின் அரும்பெயர் ஓதியே,
அளப்பரும் ஆழத்து அடிவரை; ஆங்கே
மறைந்தொளிர் விலையுயர் மணிபல காண்பாய்.

சில முறை மூழ்கியும் பலன்பெரு தொழியின்
அலைகடல் அடித்தலத்[து] இலைமணி யென்றிடேல்.
தளரா உறுதியும் அடக்கமும் வளர
ஆழ்ந்து மூழ்குக அன்னை காளியின்
உறைவிடம் வரும்வரை நெறியே செல்க.

[இலை - இல்லை]

ஞானமெனும் கடலினிடை நனியாழத் துள்ளனவால் நலனுர் முத்தம்
ஊனமிலா அன்புடனே உயர்நூலின் விதிபற்றி ஒழுகு வீரேல்
நூன மவை நும்வசமாம் எனினுமவண் காமமுதல் நுவலும் ஓரா[று]
ஆனபகைக் காத்தப்ப அணிந்திடுவீர் விவேகமெனும் மஞ்சட் பூச்சே.

கடலின் அடியிற் கிடப்பன எண்ணிலா
முத்தும் பலப்பல நத்துமா மணிகளும்;
இராமப் பிரசாத் இயம்புவன்
கொணர்க கைந்நிறை மணிகளை மூழ்கியே,

[நலனுர் முத்தம் - நன்மை மிகுந்த முத்துக்கள், நூனம் - நிச்சயம், அவண் - அவ்விடத்து, காத்தப்ப - முதலைகளினின்றும் தப்பிக்க, நத்தும் - விரும்பும்]

நரேந்திரரும் அவரது நண்பர்களும் பஞ்சவடியின் உயர்ந்த மேடையில் தாம் அமர்ந்திருந்த இடங்களினின்றும் கீழிறங்கி, குருதேவரது அருகே நின்றனர். அவர் அவர்களோடு தமது அறைக்குத் திரும்பினர். குருதேவர் பின்னும் தொடர்ந்து கூறியதாவது: "கடல் நீருக்குள்ளே நீ மூழ்கும்போது, முதலைகள் உன்னை வந்து தாக்கலாம். ஆனல் உனது உடல்மீது மஞ்சட் பூச்சு இருக்குமானல், அவை உன்னைத் தொடமாட்டா. உனக்குள்ளே உனது நெஞ்சில் அளக்க அரிதான ஆழத்திலே, காமம் குரோதம் முதலிய ஆறு முதலைகள் உள என்பதில் ஐயமில்லை. ஆனல், விவேகம் வைராக்கியம் எனும் மஞ்சளைப் பூசிக்கொண்டு, நின்னைக் காப்பாற்றிக்கொள்; அவை உன்னைத் தொடமாட்டா.

"விவேகமும் வைராக்கியமும் இல்லாது வெறும் பிரசங்கங்களாலும் பாண்டித்தியத்தாலும் உன்னால் என்ன அடைய முடியும்? ஈசன் ஒருவனே மெய்யானவன், மற்றவை யாவும் பொய்யே. ஈசன் ஒருவனே பொருளாவான். மற்றவை பொருளல்ல. இதுவே விவேகம்.

"முதலாக, உங்களது நெஞ்சமெனும் கோயிலிலே ஈசனை எழுந்தருளப் பண்ணுங்கள். பின் பிரியப்படும் அளவிற்குப் பிரசங்கங்களைச் செய்யலாம். விவேகமும் வைராக்கியமும் நிரம்பாதபோது 'பிரம்மம்' என்னும் மொழியை வாயால் திரும்பத் திரும்பச் சொல்லியும் யாது பயன்? அது வறிய சங்கு ஊத்தமே.

"ஓர் ஊரிலே பத்மலோசன் எனும் பெயர்கொண்ட சிறுவன் ஒருவன் வாழ்ந்தான். ஜனங்கள் அவனை 'போடோ' என்னும் சிறு பெயரால் அழைப்பது வழக்கம். இவ்வூரில் மிகப் பாழடைந்த ஒரு கோயில் இருந்தது. அதில் ஈசனது விக்கிரகம் இல்லாது போயிற்று. இடிந்துகிடந்த அதன் சுவர்களில் அரச மரங்களும் வேறு மரங்களும் முளைக்கலாயின. வௌவால்கள் உள்ளே வாழ்ந்தன; தூசியும் வௌவால்களின் பிழுக்கையும் தரையை மூடியிருந்தன. ஊரார் கோயிலுக்குச் செல்வதை நிறுத்திவிட்டனர். ஒரு நாள் இருட்டிய பின்பு கோயிற் பக்கத்தில் சங்கின் முழக்கத்தை ஊரார் கேட்டனர். ஒருக்கால் யாரேனும் ஒருவர் கோயிலில் விக்கிரகத்தை எழுந்தருளப்பண்ணி மாலைப் பூஜையைச் செய்து வருகின்றனரோ என்று அவர்கள் எண்ணினர். ஒருவன் மெல்லக் கதவைத் திறந்து பார்த்தான்; ஒரு மூலையிலே பத்மலோசன் நின்று கொண்டு சங்கூதுவதைக் கண்டான். விக்கிரகம் ஒன்றும் வைக்கப்படவில்லை. கோயிலில் குப்பை நீக்கப்படவும் இல்லை; அங்கே கழுவவும் இல்லை. மலமும் குப்பையும் எங்கும் கிடந்தன. அப்போது அவன் போடோவை நோக்கி,

"சங்கூதினீ கலக்கமெழச் சாமியில்லை கோயிலிலே
எங்கும் ஓயாதிரவுபகல் இரையும் வாவல் பதினென்றே."

[வாவல் - வௌவால்]

என்று கத்தினன்.

"உங்களது நெஞ்சக் கோயிலிலே ஈசனை நிலையாக வீற்றிருக்கச் செய்ய விருப்பமாயின், உங்கட்குப் பகவானை அடையவேண்டின், வெறுங் கூச்சல் போடுவதால் பயனில்லை. முதன் முதலாக மனதைச் சுத்தமாக்கு. சுத்தமான நெஞ்சில் பகவான் வந்து அமர்ந்தருளுகிறார். வௌவால்களின் பிழுக்கை எங்கும் சூழ்ந்திருக்கும்போது, கோயிலில் தூய பிரதிமையை எழுந்தருளப் பண்ண முடியாது. பதினெரு வௌவால்களாவன: கருமேந்திரியங்கள் ஐந்தும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் மனமும் ஆகிய பதினெரு இந்திரியங்களுமே.

"முதன் முதலாக. ஈசனை எழுந்தளப் பண்ணிக்கொள்க; பின்பு ஆசை தீரும்வரை பிரசங்கங்களைச் செய்யுங்கள். முதன் முதலாக, ஆழ்ந்து மூழ்குங்கள். அடிவரை மூழ்கி, மணிகளைச் சேகரியுங்கள், பின் மற்ற அலுவல்களைப்

பார்க்கலாம். ஆனல் மூழ்கப் பிரியப்படுவார் எவருமில்லை. ஞான சாதனையோ பிரார்த்தனையோ பழகாதவராய், துறவும் வைராக்கியமும் அற்றவராய் மக்கள் உள்ளனர். அவர்கள் சில வார்த்தைகளைக் கற்றுக்கொண்டதும், உடனே பிரசங்கம் செய்யத் தொடங்குகின்றனரே. பிறர்க்குப் போதிப்பது சிரமமன்றே? ஈசனது தரிசனம் பெற்றபின் அவரிடமிருந்து ஆணையைப் பெறும் மனிதனே போதிக்க உரிமையுடையவனுவான்."

இவ்வாறு பேசிக்கொண்டே, குருதேவர் தாழ்வாரத்தின் மேற்குக் கோடிக்கு வந்தார். ம— என்பவர் அவரருகே நின்றார், விவேகமும் வைராக்கியமும் இல்லாது ஈசனைக் காணவொண்ணுது என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் திரும்பத் திரும்பக் கூறிவந்திருந்தனர், இது ம—வுக்குப் பெருங் கவலையை உண்டாக்கிற்று. அவர் மணம் புரிந்திருந்தவர், இருபத்தெட்டு வயதான ஓர் இளைஞர் மேலை நாட்டு முறைப்படி கல்லூரிக் கல்வி கற்றிருந்தவர். கடமையைச் செய்யும் உணர்ச்சி பெற்றிருந்தமையால் அவர் தமக்குத் தாமே "விவேகம்—வைராக்கியம் என்பதன் பொருள் பெண்ணையும் பொன்னையும் துறத்தல் தானே?" என்று கேட்பாராயினர். அவர் உண்மையாகவே இன்ன செய்வதென அறியாதிருந்தார்.

ம— (குருதேவரை நோக்கி): ஒருவரது மனைவி அவரிடம் 'நீர் என்மீது பராமுகமா யிருக்கிறீர். நான் தற்கொலை செய்துகொள்வேன்' என்று சொல்வதானல், அவர் செய்யவேண்டியது என்ன?"

குருதேவர் (கண்டிப்பான தொனியில்): "ஞான வாழ்விற்கு அவள் இடையூருவாளாகில், அம்மாதிரி மனைவியைக் கைவிடு. அவள் தற்கொலையோ வேறெது பிரியமோ செய்துகொள்ளட்டும். தனது கணவனது ஞானவாழ்விற்கு இடையூருகும் மனைவி ஞானமற்ற மனைவியாவாள்."

ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவராய் ம— சுவரில் சாய்ந்துகொண்டே நின்றனர். நரேந்திரரும் மற்ற அடியார்களும் சில நிமிடங்கள் மௌனமா யிருந்தனர். குருதேவரும் அவர்களும் ஒருவரோடொருவர் பல வார்த்தைகள் பேசிக்கொண்டிருந்தனர். பிறகு திடீரென அவர் ம— அண்டை சென்று அவரது காதிலே பின் வருமாறு மெல்லிய குரலிற் சொன்னர்: "ஆனல் ஈசனிடத்து ஒருவனுக்கு உண்மையான பக்தி இருக்குமாயின், அப்போது எல்லோரும்—அரசனும், தீயாரும், அவனது மனைவியும்—அவனுக்கு அடங்கி விடுவார்கள். கணவனிடம் உள்ள மனப்பூர்வமான பக்தியே முடிவிலே மனைவியையும் ஞான வாழ்வைப் பின்பற்றும்படி செய்யத் துணையாகும். கணவன் நல்லவனுயின், ப்கவானது கிருபையால் மனைவியும் அவனது வழியைப் பின்பற்ற நேரலாகும்."

இவ்வார்த்தைகள் ம—வின் கவலையுற்ற நெஞ்சத்திற்கு மிக்க ஆறுதலை அளித்தன. அவ்வளவு நேரமும் அவர் "அவள் தற்கொலை செய்துகொள்ளட்டும். அதற்கு யான் என்ன செய்ய முடியும்?" என்று நினைத்துக்கொண்டே யிருந்தார்.

ம— (குருதேவரிடம்): "இவ்வுலகம் உண்மையாகவே பயங்கரமான ஓரிடம்தான்."

குருதேவர் (அடியார்களை நோக்கி): "இக்காரணம் பற்றியே சைதன்யர் தமது தோழராகிய நித்தியானந்தரிடம் 'கவனமாகக் கேள், தம்பி, உலக இச்சையுடையார்க்கு முக்தியடையும் நம்பிக்கையே இல்லை' என்று சொன்னார்."

மற்றொரு சமயம் குருதேவர் ம—வினிடம் அந்தரங்கமாகக் கூறியதாவது: "அது சரிதான், உலக இச்சையுடையவன் முழுமனதோடு ஈசனிடத்து ஈடுபடாவிடில், அவனுக்கு நம்பிக்கையில்லைதான். ஆனால் ஈசனது காட்சியைப் பெற்றபின் உலகில் இருப்பானுயின், அவனுக்கு அஞ்சவேண்டியது ஒன்றும் இராதுபோம். அதுபோல, இடையிடையே தனி யிடத்து அமர்ந்து ஞான சாதனை பழகுவதின் பலனுக உண்மையான பக்தியைப் பெற்றுவிடுவானுயின், அப்போதும் அவன் உலகத்தைப் பற்றி யாதும் அஞ்சவேண்டியது இல்லை. சைதன்யரின் அடியார்கட்குள்ளே இல்லறத்தார் பலர் இருந்தனர்; ஆனால் அவர்கள் பெயரளவிலே இல்லறத்தாராயினர், ஏனெனில் அவர்கள் உலகப் பற்றற்று வாழ்ந்தவர்."

உச்சிப்பொழுது ஆயிற்று. பூஜை முடிந்தது, கோயிலிலே நைவேத்தியம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கோயிற் கதவுகள் மூடப்பட்டிருந்தன, ஸ்ரீ ராம கிருஷ்ணர் உண்ண அமர்ந்தார்; நரேந்திரரும் மற்ற அடியார்களும் கோயிற் பிரசாதத்தை உண்டனர்.

ஞாயிறு, அக்டோபர் 22, 1882

இன்று விஜய தசமி, துர்க்க பூஜை விழாவின் கடைசி நாள், இன்று களிமண் பிரதிமை குளத்திலோ ஆற்றிலோ நீரில் அமிழ்த்தப்படும்.

காலையில் ஏறக்குறைய ஒன்பது மணிக்கு தக்ஷிணேசுவரத்திலுள்ள குருதேவரது அறையில் ம— ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கு அருகே அமர்ந்திருந்தார்; ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிறிய படுக்கையின் மீது சாய்ந்துகொண்டிருந்தார். இராக்கால் அப்போது குருதேவரோடு வசித்து வந்தார், நரேந்திரரும் பவநாதரும் அடிக்கடி அவரைப் பார்க்க வந்தனர். பாபுராம் அவரை ஒரு முறையோ இரு முறையோ பார்த்திருந்தனர்.

குருதேவர் (ம—விடம்): "இப்போது உனது தியானம் எந்த நிலையில் இருந்து வருகிறது? ஈசனது நிலைகளாகிய உருவம் அருவம் இரண்டில் எது உனது மனதிற்கு ருசிக்கின்றது?"

ம—: "ஐயன்மீர், தற்சமயம் ஈசனது உருவ நிலையில் மனதை நிறுத்த எனக்கு இயலவில்லை. மற்றொரு பக்கத்தில், ஈசனது அருவ நிலையிலும் ஒழுங்காக மனதை ஒருமுகப்படுத்த எனக்கு இயலவில்லை."

குருதேவர்: "திடீரென மனதை ஈசனது அருவ நிலையில் நிறுத்த முடியாது என்பதையும் தெரிந்துகொள். ஆரம்பத்திலே ஈசனது உருவ நிலையினைப் பற்றி எண்ணுவது தான் அறிவுடைமையாகும்."

ம— : "களிமண் உருவங்களின் மீது தியானிக்கவேண்டும் என்பது தேவரீரது கருத்தாகுமா?"

குருதேவர் : "களிமண் என்பானேன்? இப்பிரதிமைகள் சைதன்யத்தின் (மெய்யறிவின்) வடிவங்களே யாகும்."

ம— : "அப்படி வைத்துக்கொண்டாலும், கைகளையும் கால்களையும் உடலின் மற்ற அங்கங்களையும் பற்றி நினைப்பது கட்டாயம்தான். ஆனால் இன்னொன்று, ஆரம்பத்தில் ஈசனது உருவ நிலையினைத் தியானித்தாலன்றி, மனதை ஒரு நிலைப்படுத்த முடியாது என்பதை யான் உணர்ந்து கொண்டேன். தேவரீரே அவ்வாறு எனக்கு உரைத்தருளினீர். சரி, ஈசன் எளிதாகப் பலவகையான வடிவங்களையும் எடுத்துக்கொள்ளக் கூடியவராயிற்றே. ஒருவன் தனது சொந்தத் தாயின் வடிவத்தைத் தியானிக்கலாமா?"

குருதேவர் : "சரி, தாயை வணங்கவேண்டிதுதான். அவள் பிரம்மனின் வடிவந்தான் உண்மையிலே."

ம— மௌனமாக உட்கார்ந்திருந்தார். சிறிது நேரம் சென்றபின், அவர் குருதேவரைப் பார்த்து, "ஈசனது அருவநிலையினைப் பற்றி நினைக்கும்போது ஒருவனுக்கு என்ன உணர்ச்சி இருக்கும்? அதை இன்னபடி யென்று சொல்ல முடியாதா?" என்று கேட்டார். சிறிது சிந்தித்தபின் குருதேவர் "அது எதைப் போன்றது தெரியுமா?" என்றார். அவர் ஒரு கணம் மௌனமானார்; பின் ஈசனது உருவ நிலையையும் அருவ நிலையையும் தரிசிக்கும்போது உண்டாகும் அனுபவங்களைப் பற்றிச் சில வார்தைகள் ம—விடம் கூறினர்.

குருதேவர் : "தெரிந்ததா? இதைச் சரியாக அறிவதற்கு ஞான சாதனம் பழகுதல் அவசியம். ஓர் அறையிலே நிதிகள் குவிந்துகிடப்பதாக வைத்துக் கொள். உனக்கு அதைக் கண்டு கைப்பற்றப் பிரியமானால், திறவுகோலைப் பெற்றுக் கதவைத் திறக்கும் சிரமத்தை நீ ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதன் பிறகு நீ நிதிகளை வெளியே கொண்டு வரவேண்டும். ஆனால் அறை பூட்டப்பட்டிருப்பதாகவும், கதவுக்கு வெளியே நின்றுகொண்டு உனக்குள்ளே 'இதோ பார், நான் கதவைத் திறந்துவிட்டேன். இதோ நான் இரும்புப் பெட்டியின் பூட்டை உடைத்து விட்டேன். இதோ நிதியை யான் வெளியிற் கொண்டு வந்துவிட்டேன்' என்று சொல்வதாகவும் வைத்துக்கொள். கதவண்டையில் இம்மாதிரியாகப் பாவனை செய்வதால் எதையேனும் அடையும் திறமை உனக்கு உண்டாகுமா?

"நீ சாதனம் பழகத்தான்வேண்டும்.

"ஞானிகள் ஈசனது அருவ நிலையினைச் சிந்திக்கின்றனர். அவர்கள் பகவானது அவதார நிலையை ஒப்புக்கொள்வதில்லை. அருச்சுனன் ஸ்ரீ கிருஷ்ணரைப்புகழ நினைத்து, 'நீர் நிர்க்குணப் பிரம்மனே' என்று சொன்னார். ஸ்ரீகிருஷ்ணர் அதற்குப் பதிலாக 'என்னைத் தொடர்ந்து வா, நான் நிர்க்குணப் பிரம்மனை இல்லையோ என்பதை அறிவாய்' என்று கூறினர். இவ்வாறு கூறிக்

கொண்டே ஸ்ரீ கிருஷ்ணர் அர்ச்சுனரை ஓரிடத்திற்கு அழைத்துச் சென்று 'அங்கே உனக்குத் தெரிவது யாது?' என்று கேட்டார். அருச்சனன் உடனே 'ஒரு பெரிய மரத்தை யான் காண்கின்றேன்; அதன்மீதே களாம் பழம்போன்று கொத்துக்கொத்தாகப் பழங்கள் தொங்குவதையும் காண்கின்றேன்' என்று விடையளித்தான். அப்போது கிருஷ்ணர் அருச்சுனனை நோக்கி, 'இன்னும் மிக அருகே செல், இவை களாம்பழக் கொத்துக்களல்ல என்பதையும், என்னைப்போன்ற எண்ணிறந்த கிருஷ்ணக் கொத்துக்கள் மரத்திலிருந்து தொங்குகின்றன என்பதையும் நீ காண்பாய்' என்று கூறினர். இதன் கருத்தாவது: எண்ணிறந்த (பகவத்) அவதாரங்கள் நிர்க்குணப் பிரம்மன் எனும் மரத்தின்மீது தோன்றி மறைகின்றன.

"ஈசனது உருவ நிலையில் நம்பிக்கை யுடையாரோடு நான் கூடியிருக்கும் போது, அந்த இலக்ஷியத்தை ஒப்புக்கொள்கிறேன்; ஈசனது அருவ நிலையில் நம்பிக்கையுடையாரது கருத்தையும் நான் ஒப்புக்கொள்கிறேன்."

ம— (புன்சிரிப்போடு): "யாம் எவரைப்பற்றிப் பேசிவந்தோமோ அப்பரம் பொருளைப்போல் தேவரீரும் எல்லையற்றவர். மெய்யாகவே, எவராலும் உமது ஆழத்தைக் காணமுடியாது."

குருதேவர் (புன்சிரிப்போடு): "அப்படியா! நீ அதைக் கண்டுகொண்டனை என்பதை யான் அறிகிறேன். உனக்கு ஒன்று சொல்லுகிறேன். பல நெறிகளையும் ஒருவன் பின்பற்றவேண்டும். ஒவ்வொரு கொள்கையையும் சிறிது காலம் பழகவேண்டும்.

"யோகிகள் இருவகையினர் உளர். ஒரு சிலர் பலப்பல புண்ணிய தலங்களைத் தரிசித்துக்கொண்டே அலைகின்றனர்; ஆயினும் மனம் சாந்தியடையப் பெறுவதில்லை. ஆனால், வேறுசிலர் எல்லாப் புண்ணிய தலங்களையும் தரிசித்துவிட்டு, மன அமைதியைப்பெற்றுவிடுகின்றனர். மனம் அடங்கி அமைதியுற்றதை உணர்ந்து, அவர்கள் ஓரிடத்திலே நிலையாக அமர்ந்துவிடுகின்றனர், அதன்பின் திரிவதில்லை. அந்த ஒரே இடத்தில் அவர்கள்மிக ஆனந்தமாயிருக்கின்றனர்; எந்தப் புண்ணிய தலத்திற்கும் போகும் அவசியத்தை அவர்கள் உணர்வதில்லை. அவர்களில் ஒருவர் எப்போதாவது யாத்திரையாக ஒரு தலத்திற்குப் போவாராயின், புதிய ஞானக் சிளர்ச்சியைப் பெறும் பொருட்டேதான்.

"புண்ணிய தலத்திலே ஞானக் கிளர்ச்சி ஒருவனுக்கு உண்டாவதில் ஐயமில்லை. பிருந்தாவனத்திற்கு யான் மதுரபாபுவோடு சென்றேன். இருதயரும் மதுரரது குடும்ப மாதரும் எங்கள் கூட்டத்தில் இருந்தனர். 'காளிய தமன கட்டத்'தைக் கண்டதும், தெய்விக உணர்ச்சி என்னுள்ளே பொங்கி எழலாயிற்று. நான் முற்றும் தன்வசம் இழந்தேன். இருதயர், ஒரு சிறு குழந்தைக்குச் செய்வதுபோன்று என்னை நீராட்டி வைப்பதுண்டு,

"அந்தி மாலையில், 'பசுப்புழுதி எழும் வேளை'யில் யமுனை யாற்றின் கரையில் யான் உலாவுவேன்; அப்போது மாடுகள் மேய்ச்சல் நிலங்களினின்

றும் மணற்கரை வழியாகத் திரும்பிவரும். அப்பசுக்களைக் காணும்போதே, கிருஷ்ணனது நினைவு என் உள்ளத்து மூண்டெழும். நான் 'ஆ! கிருஷ்ணன் எங்கே? எனது கிருஷ்ணன் எங்கே?' என்று கத்திக்கொண்டே, பைத்தியக் காரனைப்போல ஓடுவேன்.

"நான் சியாம குண்டத்திற்கும் ராதா குண்டத்திற்கும் ஒரு பல்லக்கில் சென்றேன். தூய கோவர்த்தன கிரியைப் பார்ப்பதற்காக அதினின்றும் இறங் கினேன். மலையைக் கண்டதும் தெய்வ உணர்ச்சியில் மூழ்கிவிட்டேன், உச் சிக்கு ஓடினேன். என்னைச் சுற்றிலும் இருந்த உலகத்தைப் பற்றிய உணர்ச் சியை இழந்தேன். அவ்வூர் வாசிகள் எனக்குக் கீழிறங்க உதவி புரிந்தனர். சியாமகுண்டம் இராதா குண்டம் எனும் இரண்டு புண்ணிய தீர்த்தங்கட்கும் போகும் வழியில் யான் பசும்புல் தரைகளையும், மரங்களையும், செடிகளையும், பறவைகளையும், மான்களையும் பார்த்தபோது, பேரின்பத்தாற் பரவசமடைந் தேன். என் உடைகள் கண்ணீரால் ஈரமாயின. "ஏ கிருஷ்ணு! இங்குள்ள ஒவ்வொன்றும் பண்டை நாளில் இருந்ததுபோன்றே உள்ளது. உன்னை மட்டும் காணேனே' என்றேன். பல்லக்கில் உள்ளே இருந்தவாறே யான் பேச முடி யாதவனானேன். இருதயரும் பல்லக்கைப் பின்தொடர்ந்தார். என்னைப் பற்றியவரை விழிப்பாயிருக்கும்படி அவர் பல்லக்குச் சுமப்பவர்கட்கு எச்சரித் திருந்தார்.

"கங்காமாயி பிருந்தாவனத்தில் என்மீது மிகப் பிரியமுடையவரானர். அந்தக் கிழவியார் நிதுவனத்தின் அருகே ஒரு குடிசையில் தன்னந் தனியாய் வாழ்ந்து வந்தார். எனது ஞான நிலையையும் ஆனந்த பரவசத்தையும் குறித்து அவ்வம்மையார் என்னைத் 'துலாலி' (செல்வப் பிள்ளை) என்று அழைப்பார். அம்மையாரோடு இருக்கும்போது யான் உண்ணவும் நீரருந்தவும் குளிக்கவும் வீடு செல்ல நினைக்கவும் மறப்பதுண்டு. சில நாள் இருதயர் வீட்டிலிருந்து உணவு கொண்டுவந்து எனக்கு உணவூட்டுவது வழக்கம். கங்காமாயியும் தமது கைகளால் சமைத்த உணவை எனக்கு அளிப்பாள்.

"கங்காமாயி சமாதி நிலையை அடைவதுண்டு. அக்காலங்களில் பெருங் கூட்டம் ஒன்று அவரைக் காணவரும். ஒரு நாள் ஆனந்தபரவச நிலையில் இருக் கும்போது, அம்மையார் இருதயரது தோளின்மீது ஏறினர்.

"அம்மையாரை விட்டுவிட்டுக் கல்கத்தா திரும்ப எனக்குப் பிரியமில்லை. யான் அவரோடு தங்குவதற்காக எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. யான் புழுங்கலரிசியைச் சாப்பிடவேண்டும் என்றும், எங்களுடைய படுக்கைகள் குடிசையின் இரு பக்கங்களில் வெவ்வேறுக அமைக்கப்படவேண்டும் என்றும் தீர்மானமாயிற்று, எல்லா ஏற்பாடுகளும் செய்து முடிந்ததும், இருதயர் என் னிடம், 'உமது ஜீரண சக்தியோ மிகக் குறைவாயிற்றே. உம்மைக் கவனித் துக்கொள்வார் யார் உளர்?' என்று கேட்டார். கங்காமாயியும் 'ஏன், யானே அவரைக் கவனித்துக்கொள்வேன். யான் அவருக்கு வேண்டிய சிகிச்சையைச்

செய்வேன்' என்று விடையளித்தார். இருதயர் எனது ஒரு கையைப் பிடித்திழுக்க, அம்மையார் மற்றொரு கையைப் பிடித்திழுக்க, எனக்கு எனது தாயாரின் நினைவுவந்தது; கோயிற்பூஞ்சோலையிலே 'நகபத்தி'லே (பாடகர் அறையிலே) இங்கே தனியாக அவர் அப்போது வாழ்ந்து வந்தார், தாயாரை விட்டு விலகியிருக்கமுடியாது என்பதை யான் உணர்ந்தேன்; கங்காமாயியைப் பார்த்து 'இல்லை, நான் போகத்தான் வேண்டும்' என்றேன். பிருந்தாவனத்தின் தூய்மையை யான் விரும்பினேன்."

சுமார் பதினெரு மணிக்குக் குருதேவர் காளிகோயிற் பிரசாதத்தை உணவாகக் கொண்டார். நடுப்பகலில் இளைப்பாறிய பின்பு அவர் தமது அடியார்களோடு மறுபடியும் பேசத் தொடங்கினர். இடையிடையே அவர் "ஓம்" எனும் மந்திரத்தை உச்சரித்துக்கொண்டோ, தெய்வங்களின் தூய நாமங்களை ஓதிக்கொண்டோ இருந்தார்.

சூரியாஸ்தமனத்தின் பின் மாலைப் பூஜை கோயில்களில் நடந்தது. அன்று 'விஜயதசமி' நாளாதலின், அடியார்கள் முதலில் தேவியை வணங்கிவிட்டுப் பின் குருதேவரது திருவடிகளில் தலையால் வணங்கினர்.

4

குருதேவரும் கேசவரும்

27 அக்டோபர், 1882

இன்று வெள்ளிக்கிழமை, இலக்ஷ்மி பூஜை நாள். கேசவ சந்திரசேனர் ஸ்ரீராமகிருஷ்ணர்க்காகக் கங்கையில் உல்லாசமான ஒரு தோணிப் பிரயாணத் திற்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

பின் மாலை ஏறக்குறைய 4 மணிக்குக் கேசவரும் அவரது பிராம்மோ அடி யார்களும் ஏறிவந்த ஒரு நீராவிப் படகு தக்ஷிணேசுவரத்திலே காளி கோயிலுக் குப் பக்கமாகக் கங்கையில் நங்கூரம் போட்டு நின்றது. அதிலிருந்த பிரயாணி கள் தமக்கு முன்னே குளிக்கும் துறையையும், படிக்கட்டுகளையும், அடுத்த முற்றத்தையும் கண்டனர். அவர்கட்கு இடப்பக்கம் கோயிலுக்குள்ளே ஆறு சிவன் கோயில்களும், வலப்பக்கம் வேறு ஆறு சிவன்கோயில்களும் இருந்தன. காளி கோயிலின் வெள்ளைக் கோபுரமும், பஞ்சவடியிலுள்ள மரங்களின் உச்சி களும், 'பைன்' மரங்களின் விளிம்புகளும் சரத்கால நீல வானிற்கு எதிரே உயர்ந்து நின்றன. இரண்டு 'நகபத்'களுக்கும் இடையிலுள்ள தோட்டங் களில் நறுமணமிக்க பூக்கள் நிறைந்திருந்தன. கங்கையின் கரையையொட்டி வரிசை வரிசையாகப் பூச்செடிகள் இருந்தன. ஆரிய நாகரிகத்தோடும் நமது பழமையான சம்பிரதாயங்களோடும் தொடர்பு கொண்ட புனிதமான கங்கை மாநதியின் கலங்கிய நீரிலே நீல வானத்தின் பிரதிபிம்பம் விளங்கிற்று. புற உலகத்து மென்மையும் சாந்தியும் அரும்ப, 'பிராம்மோ' அடியார்களின் நெஞ் சத்தே அமைதி நிரம்பியது.

ஸ்ரீராமகிருஷ்ணர் தமது அறையிலே விஜயரோடும் ஹாஸ்ராவோடும் பேசிக் கொண்டிருந்தார். கேசவரின் சீடர்களிற் பலர் உட்புகுந்தனர். குருதேவரை அவர்கள் வணங்கி, அவரிடம் "ஐயன்மீர், நீராவிக் கப்பல் வந்து சேர்ந்து விட்டது. கேசவ பாபு தங்களை அங்கே அழைத்து வரும்படி எங்களை வேண்டினர்" என்று சொல்லினர். ஒரு சிறு தோணி குருதேவரை நீராவிப் படகுக்கு அழைத்துச்செல்வதாயிருந்தது. அவர் தோணியில் ஏறியதும் அவரது மனம் அகமுகப்பட்டு சமாதியில் நின்றது. விஜயர் அவரோடு இருந்தனர்.

ம—வும் தோணியில் ஏறியிருந்தவர்களில் ஒருவர். தோணி நீராவிப் படகின் பக்கத்திற்கு வந்ததும், ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் காணும் பொருட்டு

அனைவரும் அழியை (கிராதியை) நோக்கி ஓடினர். அப் பெரியாரைப் பத்திர மாகப் படகில் ஏற்றுவதைப் பற்றிக் கேசவர் கவலை கொண்டனர். மிக்க சிரமப்பட்டுக் குருதேவரை உலக நினைவு நிலைக்குக் கொண்டுவந்து, கப்பலில் ஓர் அறைக்கு அழைத்துச் சென்றனர். பின்னும் மனம் உண்முகமான நிலையில் இருந்தவராய், ஓர் அடியார்மீது சாய்ந்துகொண்டு, யந்திரம்போல நடந்தார். கேசவரும் பிறரும் அவர்முன் வணங்கினர்; ஆனால் அவர் அவர்களை அறி யாத நிலையில் இருந்தனர். படகிலிருந்த அறைக்குள் சில நாற்காலிகளும் ஒரு மேசையும் இருந்தன. அவரை இரு நாற்காலிகளுள் ஒன்றின்மீது அமரச்செய்ய, கேசவரும் விஜயரும் வேறிரண்டு நாற்காலிகளில் உட்கார்ந்தனர். சில அடி யார்களும் ஆசனங்களில் அமர்ந்தனர்; எனினும் பெரும்பாலோர் தரைமீதிருந் தனர்; இன்னும் பலர் வெளியே நின்றுகொண்டிருக்க நேர்ந்தது. அவர்கள் கதவு ஜன்னல்களின் வழியாக ஆவலோடு உற்று நோக்கிக்கொண்டிருந்தனர். ஸ்ரீராமகிருஷ்ணர் மீண்டும் சமாதியில் ஆழ்ந்துவிட, புற உலகை முற்றும் மறந்தவரானார்.

மக்களின் கூட்டத்தினால் அறைக்குள் காற்று அடைபட்டுக் கிடந்தது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று; இது கருதிக் கேசவர் ஜன்னல்களைத் திறந்தார். விஜயரை அங்கே காணலும் மனங்குழம்பினர்; ஏனெனில், பிரம்ம சமாஜக் கொள்கைகளிற் சிலவற்றைப்பற்றி இருவருக்குள்ளும் வேறுபாடு உண்டாக அக்காரணத்தால் விஜயர் கேசவருடைய சங்கத்தைவிட்டு விலகிப் புதியதொரு சங்கத்தை நிலைநாட்டியிருந்தார்.

பிராம்மோ அடியார்கள் குருதேவரை ஆசையோடு நோக்கிக்கொண்டிருந் தனர். மெல்ல மெல்ல அவர் புறஉலக நினைவைப் பெறலானார்; ஆயினும் ஞானவெறி முற்றிலும் நீங்கவுமில்லை. அவர் தமக்குள்ளே மெல்லிய குரலில் "அன்னையே, நீ ஏன் என்னை இங்கு கொணர்ந்துள்ளனை? அவர்களைச் சுற்றி வேலியுள்ளதே, அவர்கட்குச் சுதந்திரம் இல்லையே. யான் அவர்களை விடுவிக் கட்டுமா?" என்று சொல்லிக்கொண்டார். அங்கே கூடியிருந்தோர் உலக மாகிய சிறைக்குள் அடைபட்டிருந்ததாகக் குருதேவர் கண்டாரா? அவர் களுடைய கதியற்ற நிலைமையைக் கருதியே குருதேவர் தேவியை நோக்கி இம்மொழிகளைக் கூறினரா?

ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கு மெல்ல மெல்லப் புற உலக நினைவு வந்துகொண் டிருந்தது. காலிபூர் நீல மாதவரும் ஒரு பிராம்மோ அடியாரும் பவாஹாரி பாபா வைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். இன்னொரு பிராம்மோ அடியார் குரு தேவரிடம் "ஐயன்மீர், இக் கனவான்கள் பவாஹாரி பாபாவைத் தெரிசித்து வந்தனர். அம்மஹான் காலிபூரில் வாழ்கின்றனர். அவர் தேவரீரைப்போல ஒரு மகா புருஷர்" என்றனர். குருதேவர் அப்போது பேச இயலாத நிலையி லிருந்தனர்; அவர் புன்சிரிப்பை மட்டும் வெளிக்காட்டினர். அடியார் பின்னும் தொடர்பாக, "தேவரீரது பட வடிவை அவர் தமது அறையில் வைத்திருக்

கிறார்'' என்றனர். குருதேவர் தம் உடலைச் சுட்டிக் காட்டிப் புன்சிரிப்போடு ''தலையீன உறையேதான்'' என்று சொன்னார்.

குருதேவர் பின்னும் கூறுவார்: ''ஓர் அடியாரின் நெஞ்சு ஈசனுடைய உறைவிடம் ஆகும். அவர் எல்லா உயிர்களிடத்தும் வாழ்கிறார் என்பதில் ஐயமில்லை; ஆனாலும் அடியாரது நெஞ்சத்தில் தம்மைச் சிறப்பாக வெளிப் படுத்துகிறார். ஒரு சொத்துக்காரர் எப்போதாவது ஒரு சமயம் தமது சொத் துக்கள் இருக்கும் இடங்களில் ஒவ்வொன்றையும் போய்ப்பார்க்கலாம்; ஆயி னும் பொதுவாக அவரைக் காண்பது ஒரு குறிப்பிட்ட கூடத்தில்தான் என்று ஜனங்கள் சொல்லுவர். அடியாரது நெஞ்சு, ஈசன் எழுந்தருளியிருக்கும் கூடமே.

''ஞானிகள் 'பிரம்ம'னெனும் பெயரால் அழைக்கும் அவரே யோகிகளால் 'ஆத்ம'னெனப் படுவார், பக்தர்களால் 'பகவான்' எனப்படுவார். ஒரே பிராமணனே, கோயிற் பூஜை செய்யும்போது 'பூசாரி' யென்றும், சமையலறை யில் உணவு தயாரிக்கும்போது, 'சமையற்காரன்' என்றும் அழைக்கின்றனர். ஞான மார்க்கத்தைப் பின்பற்றும் ஞானி 'நேதி, நேதி' (இதுவன்று, இதுவன்று) என்று சொல்லிக்கொண்டே, மெய்ப்பொருளைப்பற்றிச் சதா ஆராய்ச்சி செய் கிறான். பிரம்மன் 'இது'வுமன்று 'அது'வுமன்று; அது உலகமுமன்று, அதில் வாழும் உயிர்களுமன்று. இவ்வாறு விசாரணை செய்வதால், மனம் நிலைப்படு கிறது. முடிவில் அது மறைந்துவிடுகிறது, சாதகன் சமாதியடைகிறான். பிரம் மமே சத்தியம், ஜகம் மித்யை என்பது ஞானியின் மாறுத உறுதி முடிபு, இந்த நாமங்களும் ரூபங்களும் யாவும் கனவைப்போல் மித்தையே. பிரம்மன் இன்ன தென எவராலும் எடுத்துரைக்க ஒண்ணாது. பிரம்மத்தை ஒரு புருஷனாகவும் கூற இயலாது. இதுவே வேதாந்த மதத்தைப் பின்பற்றும் ஞானியின்கொள்கை.

''ஆனால் பக்தர்களோ எல்லா உணர்வு நிலைகளையும் (அவஸ்தாத் திரயங் களையும்) ஒப்புக்கொள்கின்றனர். அவர்கள் விழிப்பு நிலையையும் மெய்யெனக் கொள்ளுகின்றனர். அவர்கள் உலகை மித்தையென்றும், கனவைப்போன்ற தென்றும் நினைப்பதில்லை. ஈசனது சக்தியும் மகிமையும் ஆகிய இரண்டையும் வெளிப்படுத்துகின்றது உலகம் என்பர். வானம் நக்ஷத்திரங்கள் சந்திரன் சூரியன் மலைகள் கடல் மனிதர் விலங்குகள்—இவையனைத்தையும் ஈசன் படைத்துள்ளார். இவை அவரது மகிமையாகும். அவர் நமக்குள்ளே நெஞ் சிற்குள் இருக்கின்றார். இன்னும் அவர் வெளியிலும் உள்ளார். அவர் தாமே இருபத்து நான்கு தத்துவங்களாகவும், உலகமாகவும் எல்லா உயிர்களாகவும்— இவை யாவுமாய் உள்ளார் என்று மிக முதிர்ந்த பக்தர் கூறுவர். ஈசன்து அடியான் சருக்கரையைத் தின்ன விரும்புவானேயன்றி சருக்கரையாக விரும்ப மாட்டான். (அனைவரும் சிரிக்கின்றனர்)

''ஈசனது அன்பன் ஒருவன் எவ்வாறு உணர்வான் என்பதை நீர் அறி வீரோ? அவனது பாவனையாவது: 'ஈசா, நீர் ஆண்டான், நான் நுமது அடிமை.

நீர் எனது தாய், நான் நுமது சேய் (குழந்தை) என்பது. அன்றேல், 'நீர் எனது தாயும் தந்தையும். நீர் முழுமையாவீர். நான் அதில் ஒரு பகுதி' என்பதாம். 'நான் பிரம்மன்' என்று சொல்ல அவர்க்கு விருப்பமிராது.

"யோகி பரமாத்மனை உணர முயல்கிறான். அவரது இலக்ஷியமாவது, ஜீவ ஈசுவர ஐக்கியமே. அவன் தனது உள்ளத்தை விஷயங்களினின்றும் (புறப்பொருள்களினின்றும்) உள்ளிழுத்து, பரமாத்மனிடத்து அதை ஒருநிலைப் படுத்த முயல்கிறான். ஆதலால் அவன் ஞான சாதன வாழ்க்கையின் முதற் படியில் தனியிடத்து ஒதுங்கியிருந்து, ஒருமுகமான கவனத்தோடு ஓர் ஆசனத் தில் அமர்ந்து தியானம் பழகுகிறான்.

"ஆனல் மெய்பொருள் ஒன்றேதான். பெயரளவிலேதான் வேறுபாடு. பிரம்மன் எவனை அவனே ஆத்மன், இன்னும் அவனே பகவானும். ஞான நெறியைப் பின்பற்றுவார்க்கு அவன் பிரம்மனாகிறான், யோகியர்க்குப் பரமாத்ம னாகிறான், அன்பர்கட்குப் பகவானாகிறான்."

படகு கல்கத்தாவை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது; ஆனல் பிர யாணிகளோ தம் கண்களைக் குருதேவர்மீதும் காதுகளை அவரது அமுதம் போன்ற மொழிகள்மீதும் பதித்து வைத்திருந்தவராதலின், அதன் கதியை மறந் திருந்தனர். தக்ஷிணேசுவரத்துக் கோவில்களையும் படகு கடந்து சென்றது. கங்கை நீரைப் படகின் சுழல் துடுப்புகள் கடையும்போது, முனக்கம் போன்ற ஓர் ஒலி எழுந்தது. ஆயினும் அடியார்கள் இவையனைத்திலும் கவனமற்றிருந் தனர். மந்திரத்தாற் கட்டுண்டவர் போன்று அவர்கள் ஒரு பரம யோகியைப் பார்த்தவண்ணமாயிருந்தனர்; அந்த யோகியின் முகத்தே ஒரு தெய்விகப் புன்சிரிப்பு தவழ்ந்தது. அவரது வதனம் அன்பு வீசிக்கொண்டிருந்தது, அவரது கண்கள் ஆனந்தத்தால் ஜொலிக்கலாயின. அம்மனிதர் ஈசனுக்காக அனைத்தை யும் துறந்திருந்தார், ஈசனையன்றி வேறெதனையும் அறியாதவரானர். அவரது திருவாயினின்றும் ஞானமொழிகள் இடைவிடாது பெருகிக்கொண்டிருந்தன.

குருதேவர்: "அத்வைத வேதாந்தத்தைப் பின்பற்றும் ஞானிகள் சொல்லுகிறபடி, படைப்பு காப்பு அழிப்பு என்னும் தொழில்களும், உலகமும், அதில் உள்ள எல்லா உயிர்களும்,—யாவும் சக்தி தேவியின் பிரகாசங்கள். இதை நீ தருக்கத்தால் ஆராய்ந்து பார்ப்பாயாகில், இவையனைத்தும் கனவு போல மித்தையாம் என்பதை உணர்வாய். பிரம்மன் மட்டுமே சத்தியமாம், மற்றவை மித்தையாம், இந்த சக்தியும் கூட ஒரு கனவைப்போல, ஸத்தை யற்றதாகும்.

"ஆனல், நீ உன் ஆயுள் முழுவதும் தருக்கம் பண்ணினாலும், சமாதியில் நிலைக்கும்வரை, சக்தியின் எல்லைக்கு அப்பாற் செல்ல உனக்கு இயலாது. 'நான் தியானித்துக்கொண்டிருக்கிறேன்' என்றோ, 'நான் ஆழ்ந்த சிந்தனையி லிருக்கிறேன்' என்றோ நீ சொல்லும்போதும், நீ சக்திதேவியின் எல்லைக்குள்ளே, அவளது ஆட்சிக்குள்ளே சஞ்சரித்துக்கொண்டிருக்கிறாய்.

"ஆதிசக்தியின் லீலை எப்போதும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. அது படைப்பதும் காப்பதும் அழிப்பதும் லீலை போன்றதே, இச்சக்தியே 'காளி' என்று அழைக்கப்படுகின்றது. காளி பிரம்மனே யாவாள், பிரம்மனும் காளியே தான், இரண்டும் ஒரே (மெய்ப் பொருளே) சத்திய வஸ்துவே. அவ்வஸ்துவின் செயலற்ற நிலையைக் கருதும்போது,—அதாவது, படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் தொழில்களில் ஈடுபடாத தன்மையை நினைக்கும்போது—நாம் அதைப் பிரம்மன் என அழைக்கிறோம். ஆனால் இம் மூன்றுதொழில்களையும் இயற்றும்போது, அதை நாம் காளியென்றே சக்திதேவியென்றே அழைக்கிறோம். வஸ்து (பொருள்) ஒன்றேதான்; நாமத்திலும் ரூபத்திலும் (பெயரிலும் வடிவிலும்) தான் வேறுபாடு;

"பெரும் பிரளய முடிவில் உலகங்கள் அழிந்த பின்பு, தேவியம்மை அடுத்த படைப்புக்கு வேண்டிய விதைகளைச் சேர்த்து வைக்கிறாள். வயது முதிர்ந்த (வீட்டு) எஜமானி வீட்டிற்கு உபயோகப்படக்கூடிய பலவிதப் பொருள்களையும் ஒன்றாக ஒரு பானையில் போட்டு வைப்பதுண்டன்றோ? தேவியும் அந்த எஜமானிபோன்றவள். (அனைவரும் சிரித்தல்,)

"ஆம், ஆம், வீட்டுக்காரிகள் அதுபோன்ற பானைகளில் (இறுகிய) கடல் நுரையையும், நீல மாத்திரைகளையும், வெள்ளரிவிதை பூசணிவிதை புடல்விதை முதலியவை யடங்கிய சிறு பொட்டலங்களையும் வைத்திருப்பதுண்டு. அவர்கள் வேண்டும்போது அவற்றை வெளியே எடுப்பார்கள். அதுபோலவே உலகங்களை அழித்த பின்பு, பிரம்ம வடிவமான எனது தேவியும் அடுத்த படைப்புக்கு வேண்டிய விதைகளைச் சேர்த்து வைக்கிறாள். படைப்புக்குப் பின் ஆதிசக்தி உலகிலேயே உறைகின்றது. தேவி இந்த வியாவகாரிக உலகினை உண்டாக்கி, அதன்பின் அதனிடத்து வியாபிக்கிறாள். வேதங்களில் படைப்பு சிலந்தியின் வலைக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. சிலந்தி தன்னிடமிருந்தே வலையை நூற்கிறது. பின் அதிலே வாழ்கின்றது. அதுபோல் ஈசன் தன்னுள் உலகினை வைத்திருக்கிறான், உலகிற்குள் உள்ள பொருளும் தானே ஆகிறான்.

"எனது தேவியம்மையாகிய காளி கரு நிறத்தவளா? தொலையிலிருந்து அவளை நோக்குவதினால் அவள் கருப்பாகத் தோன்றுகிறாள்; ஆனால் அவளை நெருங்கியிருந்து அறியும்போது அவள் அவ்வாறு தோன்றுவதில்லை. தொலையில் உள்ள ஆகாசம் நீலமாகத் தெரிகின்றது; ஆனால் அண்டையிலிருந்து அதனைப் பார், அதற்கு நிறமில்லை என்பதை அறிவாய். கடலின் நீர் தொலையிலிருக்கும்போது நீலமாகத் தெரிகிறது; ஆனால் நீ அருகே சென்று உன்கையில் அதனை எடுப்பாயானால், அதற்கு நிறமில்லை என்பதைத் காண்பாய்.

"பந்தமும் மோக்ஷமும் இரண்டும் அவளது செயலேயாம். அவளுடைய மாயையால் உலகப்பற்றுடையவர் காமத்திலும் காஞ்சனத்திலும் சிக்கிக் கொள்கின்றனர்; இன்னும், அவளுடைய கிருபையால் அவர்கள் மோக்ஷ

மடைகின்றனர். அவளுக்கு 'உய்விப்பவள்' என்றும், 'உலக பந்தத்தை அறுப்பவள்' என்றும் பெயருண்டு.

"தேவியம்மை எப்போதும் விளையாட்டிலும் வேடிக்கையிலும் விருப்பமுள்ளவள், இவ்வுலகம் அவளது லீலை (விளையாட்டு). அவள் தன்னிச்சைப்படி நடப்பவள், எப்போதும் தான் நினைத்த வழியிலே செல்லவேண்டும். அவள் ஆனந்தமயம். இலக்ஷத்தில் ஒருவர்க்கு அவள் விடுதலை அளிப்பாள்."

ஒரு பிராம்மோ அடியார்: "அப்படியாயின், அவட்குப் பிரியமானால் தேவி அனைவர்க்கும் விடுதலை அளிக்க முடியுமே. ஏன் நம்மை உலகப் பந்தங்கட்கு உள்ளாக்கியிருக்கிறாள்?"

குருதேவர்: "அது அவளுடைய திருவுள்ளம், தான் படைத்த உயிர்களோடு தொடர்ந்து விளையாடிக் கொண்டிருப்பதே அவளுடைய பிரியம். கண்ணாம்பூச்சி விளையாட்டில் விளையாடுவோர் எல்லோரும் ஆரம்பத்திலேயே 'தாய்ச்சி'யைத் தொட்டுவிடுவாராயின், ஓட்டமும் சாட்டமும் விரைவில் நின்று விடுமல்லவா? எல்லாரும் அவளைத் தொடுவாராயின் விளையாட்டு எப்படி நடக்கும்? அது அவட்கு அதிருப்தியை உண்டாக்குகின்றது விளையாடிக் கொண்டேயிருத்தலில் தான் அவட்கு இன்பம்."

பிராம்மோ அடியார்: "ஐயன்மீர், முழுத்துறவு இல்லாமலே நம்மால் ஈசனை உணரமுடியாதா?"

குருதேவர் (சிரிப்போடு): "உமக்கு முடியும்; சந்தேகம் ஏன்? எல்லாவற்றையும் நீர் துறப்பானேன்? உமது நிலையிலே நீர் நடுவழியைப் பின்பற்றுவது சரிதான்.

"நான் உமக்கு உண்மையைச் சொல்லிவிடுகிறேன்: உலகத்தில் நீர் இருப்பதில் யாதொரு தவறும் இல்லை. ஆனால் நீர் ஈசனை நோக்கி உமது மனதைச் செலுத்தவேண்டும்: செலுத்தாவிடில், உமக்கு வெற்றி கிடையாது. உமது கடமையை ஒரு கையாற் செய்யும், மற்றொரு கையால் ஈசனைப் பிடித்துக் கொள்ளும். கடமை முடிந்தபின், இரு கைகளாலும் ஈசனைப் பிடித்துக் கொள்ளும்.

"இவையெலாம் மனதைப் பொறுத்துள்ளன. பந்தமும் முத்தியும் மனத்தையே பற்றியன. நீர் ஊட்டும் சாயத்தை மனம் ஏற்றுக் கொள்ளும். இப்பொழுது தான் வண்ணனிடமிருந்து பெற்ற வெளுத்த ஆடைகளைப் போன்றது அது. சிவப்புச் சாயத்தில் நீர் அவற்றை அமிழ்த்தினால், அவை சிவப்பாகும். நீலத்திலோ பச்சையிலோ அமிழ்த்தினால், அவை நீலமோ பச்சையோ ஆகும். நீர் எந்தச் சாயத்தில் அவற்றை அமிழ்த்துவீரோ, அது எதுவாயினும்சரி, அந்த நிறந்தான் அவற்றில் ஏறும். ஒரு சிறிது ஆங்கிலம் படிப்பீரானால், உடனே ஆங்கில வார்த்தைகளைச் சொல்லத் தொடங்குவதை நீர் கவனித்ததில்லையா? பின் நீர் 'பூட்சு' (ஆங்கிலேயர் காலில் அணியும் செருப்பு) போட்டுக்கொண்டு, சீட்டியிலே ராகம் பாடுகிறீர், மற்றவையும் செய்கிறீர்,

இவையெல்லாம் ஒன்றுகவே செல்கின்றன. ஒரு பண்டிதர் வடமொழி கற்று வருவாராஞல், வடமொழிப்பாக்களே உடனே கட கட வென்று சொல்லுவார். நீர் தீயாரோடு சேர்ந்திருப்பின், நீர் உமது கூட்டாளிகளைப் போலவே நினைப்பீர், பேசுவீர். அதற்கு மாருக நீர் அடியார்களோடு கூடியிருப்பீராயின், நீர் நினைப்பதும் பேசுவதும் ஈசனைப் பற்றியேதான்.

"மனமே யாவும். ஒரு மனிதனுக்கு ஒரு பக்கத்தில் மனைவியும் மற்றொரு பக்கம் மகளும் இருப்பார். அவன் அவர்களிடம் வெவ்வேறு வழியில் பிரியத்தைக் காட்டுகிறுன். ஆனல் அவனுடைய மனம் ஒன்றே தான்.

"பந்தம் மனதைப் பற்றியது, முத்தியும் மனதைப் பற்றியதே. ஒருவன் ஓயாது 'நான் முக்தனே. நான் வீட்டிலிருந்தாலும் காட்டிலிருந்தாலும் எனக்குப் பந்தம் எப்படி உண்டு? நான் மன்னர்க்கு மன்னனை ஈசனது குழந்தை, என்னைக் கட்டுப்படுத்த யார்க்கு முடியும்?' என்று நினைப்பானுகில் அவன் முக்தனேயாவான். ஒரு பாம்பு கடித்தபோதும், 'என்னிடத்து விஷம் இல்லை' என்று அழுத்தமாகக் கூறுவானுயின், அதை நீக்கிவிடலாகும். அம்மாதிரியே, அழுத்தமாகவும் மன உறுதியோடும் 'நான் கட்டுப்பட்டவனன்று, முக்தனே' என்று திரும்பத் திரும்பக் கூறிவருவதால் ஒருவன் உண்மையாகவே அப்படி ஆகிவிடுகிறுன். அவன் மெய்யாகவே முக்தனுகிறுன்.

"ஒரு காலத்தில் யாரோ ஒருவர் கிறிஸ்தவரது புத்தகமொன்றை எனக்குக் கொடுத்தார், எனக்கு அதை வாசித்துக் காட்டும்படி அவரை வேண்டினேன். அதில் பாவத்தைப் பற்றிய பேச்சு தவிர வேருென்றும் இல்லை. (கேசவரைப் பார்த்து) நும் பிராம்மோ சமாஜத்தும் ஜனங்கள் கேட்கும் ஒரே பேச்சு பாவத்தைப் பற்றியதே. 'நான் கட்டுப்பட்டவன், நான் கட்டுப்பட்டவன்' என்று உருப்போடும் பேதைக்கு, கட்டுப்பட்ட நிலையே முடிவாகும், 'யான் பாவி, யான் பாவி' என அல்லும் பகலும் சொல்லுபவன் உண்மையாகவே பாவியாய் விடுகிறுன்.

"ஈசனிடத்துள்ள நம்பிக்கை சதா எரிந்து கொண்டேயிருக்கவேண்டும்; அப்போது அவன் இவ்வாறு சொல்லிக் கொள்வான்; 'என்ன? யான் ஈசனது திருப்பெயரை ஓதிவந்துள்ளேன். இன்னும் என்னிடம் பாவம் ஒட்டிக் கொண்டிருக்க எவ்வாறு இயலும்? இனி எவ்வாறு யான் பாவியாதல் கூடும்? இனி பந்தத்திற்கு யான் உள்ளாதல் எப்படி இயலும்?'

"ஒருவன் ஈசனது பெயரை ஜெபிப்பானுயின் அவனது உடலும் உள்ளமும் யாவும் தூயனவாம். பாவம் நரகம் முதலிய பேச்சுக்களை அவன் ஏன் பேசல் வேண்டும்? 'ஈசா, யான் தீய செயல்கள் செய்திருப்பதில் ஐயமில்லை, ஆனல் இனி என்றும் திரும்பச் செய்யேன்' என்று ஒருமுறை கூறிவிட்டு ஈசனது நாமத்தில் நம்பிக்கை கொள்க.

"எனது தேவியம்மையினிடத்து நான் சுத்த பக்தி (தூய அன்பு) ஒன்றையே வேண்டினேன். நான் அம்மையின் தாமரைப் பாதங்களில் மலர்களை

இட்டு 'அம்மே, இதோ உனது புண்யமும், இதோ உனது பாவமும்; இவ்விரண்டையும் நீயே பெற்றுக்கொண்டு, உன்மீது சுத்த பக்தியை மட்டும் எனக்கு அருளுக. இதோ உனது ஞானமும், இதோ உனது அஞ்ஞானமும்; இவ்விரண்டையும் நீயே பெற்றுக்கொண்டு, உன்மீது சுத்த பக்தியை மட்டும் எனக்கு அருளுக. இதோ உனது சுத்தமும், இதோ உனது அசுத்தமும்; அம்மே இவ்விரண்டையும் நீயே பெற்றுக்கொண்டு, உன்மீது சுத்த பக்தியை மட்டும் எனக்கு அருளுக. இதோ உனது தருமமும், இதோ உனது அதருமமும்; அம்மே, இவ்விரண்டையும் நீயே பெற்றுக்கொண்டு, உன்மீது சுத்த பக்தியை மட்டும் எனக்கு அருளுக' என்று பிரார்த்தித்தேன்.

"இவ்வுலகில் இருந்துகொண்டே ஈசனை உணர ஏன் முடியாது? ஆனால் உலகில் ஒருவன் வாழ்வானையின், இடையிடையே அவன் தனியிடம் புகுதல் வேண்டும். அவன் குடும்பத்தினின்றும் விலகித் தனியாக வாழ்ந்து, மூன்று நாளைக்கேனும் ஈசனைக் காணவேண்டும் என்று அழுவானையின், அது அவனுக்குப் பேருதவி புரியும். அவகாசம் நேரும்போது அவன் தனியிடத்தில் ஒரு நாளேனும் ஈசனைப்பற்றி நினைப்பானையின், அதுவும் அவனுக்கு நன்மையளிக்கும்.

"உலகப்பற்று என்னும் நோயோ விஷ சுரம் போன்றது; ஒரு பெரிய ஜாடியில் நீரும் இன்னொரு ஜாடியில் ருசியான ஊறுகாயும் அவ்விஷ சுர நோயாளியின் அறையில் உள்ளன. அவனது நோயைத் தீர்க்க உமக்குப் பிரியமானால், அவனை அந்த அறையினின்றும் நீ வெளியேற்றவேண்டும். உலகப்பற்றுள்ள மனிதன் விஷசுர நோயாளி போன்றவன். சுகங்கொடுக்கும் பொருள்கள் பலவும் அப்பெரிய நீர் ஜாடியாகும், அவற்றை அனுபவிக்கும் ஆசை அவனது தாகமாகும். ஊறுகாயைப்பற்றிய நினைவே வாயில் நீரூறச் செய்யும்; அவற்றை அருகே கொண்டு வரவும் வேண்டாம். அவை அவனைச் சூழ்ந்துகொண்டுள்ளன. பெண்களொடு நட்பே ஊறுகாயாகும். ஆதலால், தனியிடத்தே சிகிச்சை செய்தல் அவசியம். விவேகமும் வைராக்கியமும் பெற்றபின் ஒருவன் உலகிற்குள் புகலாம்."

மெல்ல மெல்லக் கடல் வடியத் தொடங்கிற்று. நீராவிப் படகு கல்கத்தாவை நோக்கி விரைந்து செல்வதாயிற்று. அது ஹௌரா பாலத்தின் அடியே சென்று, 'தாவர நூல் தோட்டம்' தெரியும் அளவிற்கு வந்தது. படகோட்டியை ஆறு ஓடும் முகமாக இன்னும் சிறிது தொலை செல்லும்படி வேண்டினர். பிரயாணிகள் குருதேவரின் மொழிகளால் மயங்கியிருந்தனர்; அவர்களிற் பெரும்பாலார்க்குச் சென்ற பொழுதைப் பற்றியோ தொலையைப் பற்றியோ நினைவு இல்லாது போயிற்று.

கேசவர் சிறிது பொரியும் தேங்காய்த் துருவலும் வழங்கத் தொடங்கினர். விருந்தினர் அவற்றைத் தமது ஆடைகளின் மடிப்புகட்கிடையே வைத்துக்கொண்டு, உடனே உண்ண ஆரம்பித்தனர். அனைவரும் ஆனந்தமா

யிருந்தனர். ஆயினும், கேசவரும், விஜயரும் ஒருவரையொருவர் அணுகக் கூசி விலகினதையும் குருதேவர் கவனித்தார்; இருவர்க்கும் சமாதானம் உண்டு பண்ணுவதில் அவர் ஆத்திரம் கொண்டார்.

குருதேவர் (கேசவரை நோக்கி): "பாருங்கள். இதோ விஜயர் உள்ளனர். உங்களது சண்டை சிவபெருமானுக்கும் இராமபிரானுக்கும் நேர்ந்த போரைப் போன்றதாகத் தோன்றுகிறது. சிவபெருமான் இராமபிரானது குரு. இருவரும் ஒருவரோடொருவர் போர்புரிந்தனர் எனினும், விரைவில் சமாதான மாயிருந்தனர். ஆனால் சிவபெருமானைச் சார்ந்த பேய்களின் வலிப்புகளும், இராமபிரானைச் சார்ந்த குரங்குகளின் கூச்சலும் ஓய்ந்தபாடில்லை. (உரக்கச் சிரித்தல்) உற்றார் உறவினர்க்குள்ளும் இம்மாதிரியான சண்டை நிகழ்வதுண்டு. இராமானுஜாசாரியார் விசிஷ்டாத்வைதத்தை நிலைநாட்டினர். ஆனால் அவரது குருவோ சுத்த அத்வைதி. இருவர்க்கும் அபிப்பிராயபேதம் உண்டாக, ஒருவரது வழக்குகளை மற்றொருவர் கண்டித்தனர். இது எப்போதும் நடப்பதுதான். ஆனாலும் குருவுக்குச் சீடன் சொந்தமானவனே."

எல்லோரும் குருதேவரது சேர்க்கையாலும் மொழிகளாலும் மகிழ்ச்சியடைந்தனர்.

குருதேவர் (கேசவரிடம்): "மக்களை உமது சீடராக ஆக்குமுன் அவர்களுடைய சுபாவங்களை நீர் ஆராய்வதில்லை; இக்காரணத்தால் அவர்கள் உம்மைவிட்டு விலகுகின்றனர்.

"எல்லா மனிதரும் நிச்சயமாகவே பார்வைக்கு ஒன்றுபோலிருக்கின்றனர். ஆனால் அவர்களுடைய சுபாவங்கள் வேறுபட்டுள்ளன. சிலரிடம் சத்துவகுணம் அதிகமாகவும், பிறரிடம் இரஜோகுணம் அதிகமாகவும், இன்னும் சிலரிடம் தமோகுணம் அதிகமாகவும் இருக்கின்றன. 'பூலி' என்னும் பெயருள்ள அடைகள் யாவும் பார்வைக்கு ஒன்றுகத் தோன்றுகின்றன என்பதை நீர் கவனித்திருப்பீர், ஆனால் அவற்றிலுள்ள உட்பொருள்கள் பலவிதமாயிருப்பன. சிலவற்றில் உள்ளே பாற்கட்டியும் சிலவற்றில் தேங்காயும், பிறவற்றில் அவித்த வெறும் பயிறு மாவும் அமைந்துள்ளன. (எல்லோரும் சிரித்தல்)

"நீர் எனது மன நிலையை அறிவீரோ? நான் சம்பந்தப்பட்டவரை உண்டும் குடித்தும் இன்பமாக வாழ்ந்தும் வருகிறேன். மற்றதைத் தேவியம்மையே அறிவாள். உண்மையாகவே என் சதையைக் குத்தும் வார்த்தை மூன்று உள்ளன; அவையாவன: 'குரு' 'எஜமானன்' 'தந்தை' என்பன.

"குரு ஒருவரேதான்; சச்சிதானந்தப் பரம்பொருளே அக்குரு. அவரே குருவாவார். எனக்கும் ஈசனுக்கும் உள்ள உறவு குழந்தைக்கும் தாய்க்கும் உள்ள உறவே, மனித குருக்களை இலக்ஷக்காணக்காக ஒருவர் பெறலாம். எல்லோரும் குருக்களாக விரும்புகின்றனர். ஆனால் சீடனாவதைப் பற்றி யார்க்குக் கவலை?

"பிறர்க்குப் போதிப்பது மிகமிகச் சிரமமானது. ஈசனே தானே தன்னை ஒரு மனிதனுக்குக் காட்டி யருளி, ஆணையும் அளிக்கும்போதுதான் அவன்

போதிக்க வல்லவனுவான். ஈசனிடமிருந்து உமக்குக் கட்டளை பிறக்காவிடில், உமது வார்த்தைகட்கு யார் செவி சாய்ப்பார்?

"கல்கத்தா ஜனங்கள் எவ்வளவு எளிதாகப் பரபரப் படைகின்றனர் என் பதை நீர் அறியீரா? செம்பிலுள்ள பால், அடியில் நெருப்பு எரியும்வரை, கொதித்துப் பொங்குகிறது. விறகை எடுத்துவிட்டால் எல்லாம் உடனே அடங்கிவிடுகிறது. கல்கத்தா ஜனங்கட்கு மனக்கிளர்ச்சிகளிற் பிரியம். அவர்கள் ஓரிடத்திலே ஒரு கிணறு தோண்டுவதை நீங்கள் காணலாம். தண்ணீர் தமக்கு வேண்டும் என்பார். ஆனால் ஒரு பாறையைக் காண்பராகில் அவ்விடத்தை விட்டுவிடுவார்கள்; வேறேரிடத்தில் அவர்கள் வேலை தொடங்குவார். ஒரு வேளை அங்கும் மணலைக் கண்டால், இரண்டாவது இடத்தையும் விட்டுவிடு வார்கள். பின் மூன்றுவது இடத்தில் தோண்ட ஆரம்பிப்பார். இவ்வாறே நடந்துகொண்டுவரும். ஆனால் மனிதன் தனக்கு ஈசனது கட்டளை கிடைத்து விட்டதாகப் பாவிக்கமட்டும் செய்வானுயின், அது போதாது.

"ஈசன் மனிதனுக்குத் தன்னைத் தானே காட்டியருள்வதும், அவனோடு பேசுவதும் உண்டு. அப்போதுதான் ஒருவற்கு ஈசனது கட்டளை பெறக்கூடும். அம்மாதிரியான குருவின் மொழிகளில் எவ்வளவு சக்தி வாய்ந்துள்ளது! அவை மலைகளையும் நகர்த்த வல்லவனவாகும். ஆனால் வெறும் பிரசங்கங்களோ? ஜனங்கள் சில நாளைக்கு அவற்றிற்குச் செவி சாய்ப்பர், பிறகு அவற்றை மறந்துவிடுவர். வெறும் வார்த்தைகளைக் கேட்டு ஒருக்காலும் அவர்கள் செயலில் இறங்கிவிடமாட்டார்.

"கமார்ப்புகூரில் ஹாலீதார்புகூர் எனும் ஒரு சிறு குளம் உள்ளது. சிலர் அதன் கரைகளில் அசுத்தம் செய்வது வழக்கமாயிருந்தது. அங்கே குளிக்க வருவார் பலர் தவறு செய்பவர்களை உரத்த குரலில் திட்டுவதுண்டு. ஆனால் மறுநாட் காலையும் அதுவேதான் நடக்கும். அசுத்தமாக்குதல் நிற்கவில்லை. (எல்லோரும் சிரித்தல்) கடைசியாக கிராமத்தார் அதைப்பற்றி அதிகாரிகளிடம் முறையிட்டனர். அவர்கள் ஒரு 'போலீசு'க்காரனை அனுப்பினர். அவனும் 'அசுத்தம் செய்யாதே' என்று எழுதியிருந்த ஓர் எச்சரிக்கையைக் கரையில் தொங்கவிட்டனன். இது தீங்கு செய்பவரை உடனே தடுத்துவிட்டது. (எல்லோரும் சிரித்தல்)

"பிறர்க்குப் போதிக்கும் ஒருவன் அதிகாரத்திற்குரிய அடையாளம் பெற் றிருக்கவேண்டும்; இல்லாவிடில் போதனை ஒரு கேலியாகும். தன்னிடத்து அறியாமையுள்ள ஒருவன் பிறர்க்கு அறிவையூட்டத் தொடங்குகிறன்—இது குருடன் குருடனுக்கு வழிகாட்டுவது போன்றது. அப்போதனை நன்மை யளிப்பதற்குப் பதிலாகக் கேடு விளைக்கின்றது. ஈசனைத் தரிசித்த பின்பு ஒருவனுக்கு உட்புகுந்தறியும் காட்சி உண்டாகின்றது. அப்போதுதான் ஒருவன் பிற மனிதனது ஞான நோய் இன்னதென அறிந்து போதனை அளிக்கக்கூடும்.

"ஈசனிடமிருந்து அதிகாரம் பெறுதவன் தற்பெருமை கொள்வான். 'யான் ஜனங்கட்கு உபதேசம் செய்கிறேன்' என்று அவன் தனக்குள் சொல்லிக் கொள்கிறான். இப்பெருமை அறியாமையினின்றும் உதிக்கின்றது; ஏனெனில் அஞ்ஞானி ஒருவனே தன்னைக் கருத்தாவாக உணர்வான். 'ஈசனே கருத்தா, அவனே அனைத்தையும் செய்து வருகிறான். யான் ஒன்றும் செய்வதில்லை' என்று ஒரு மனிதன் உணர்வானுயின், அவன் உண்மையாகவே ஜீவன்முத்தனாகிறான். மனிதனது துயரங்கட்கும் கவலைகட்கும் மூலமாயிருப்பது, தானே கருத்தா என்ற பிடிவாத நினைவே.

"உலகிற்கு நன்மை செய்வதைப்பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். நான் ஒன்று கேட்கிறேன்—உலகிற்கு நன்மை செய்ய நீங்கள் யார்? முதலில் ஈசனைத் தரிசியுங்கள். ஞான சாதனம் பழகுவதால் அவரது காட்சியைப் பெறுங்கள். அவர் அதிகாரத்தை உங்கட்கு அளிப்பாராயின் அப்போதுதான் உங்களால் பிறர்க்கு நன்மை செய்ய இயலும். அளிக்காவிடில் இயலாது."

ஒரு பிராம்மோ அடியார்: "அவ்வாறுயின் நாம் ஈசனைத் தரிசிக்கும் வரை நமது முயற்சிகளை விட்டுவிடுதல் கட்டாயமோ?"

குருதேவர்: "அன்று. ஏன் நீர் அவ்வாறு செய்யவேண்டும்? தியானம் தோத்திரம், மற்ற நித்திய வழிபாடு ஆகிய முயற்சிகளில் நீர் ஈடுபடுதல் அவசியமே."

பிராம்மோ: "ஆனால் எங்களது தினசரி கடமைகளைப்பற்றி—அதாவது புணம் சம்பாதித்தல் முதலியவற்றோடு சம்பந்தப்பட்ட கடமைகளைப் பற்றி—தாங்கள் கூறுவது யாதோ?"

குருதேவர்: "சரி, அவற்றையும் நீங்கள் செய்யலாம்; ஆனால் வயிற்றுப் பிழைப்புக்கு வேண்டிய அளவு மட்டுமே. அதே சமயம் அக்கடமைகளையும் தன்னயமின்றி இயற்றும் திறமையைப்பெறுதற்காகத் தனியிடத்து அமர்ந்து கண்ணீர் பெருக ஈசனிடம் நீர் பிரார்த்தித்தல் வேண்டும். 'ஈசா, எனது உலகக் கடமைகளை வரவரச் சுருக்கி வருக: வராவிடில் ஆண்டவனே! அளவுக்கு மிஞ்சிப் பல முயற்சிகளில் தலையிடும்போது உம்மை யான் மறந்துவிடுவதைக் காண்கிறேன். நான் பயன் கருதாது கருமம் புரிவதாக நினைத்துக்கொள்ளலாம். ஆனால் அது பயனைக் கருதியதாகவே முடிகின்றது' என்று நீர் ஈசனிடம் சொல்லவேண்டும். பிச்சை யிடுவதையோ ஏழைகட்கு அன்னம் வழங்குதலையோ மிதமிஞ்சிச் செய்பவர் பெயரையும் புகழையும் தேடும் ஆசைக்கு ஆளாகின்றனர்.

"சம்புமல்லிக் என்பவர் ஒருநாள் ஆஸ்பத்திரிகளையும் மருத்துவச் சாலைகளையும் ஏற்படுத்துதலைப்பற்றியும், சாலைகள் அமைப்பதைப்பற்றியும், பொதுவான குளங்கள் தோண்டுவதைப்பற்றியும், பிறவற்றையும் என்னிடம் பேசினார். நான் அவரிடம் சொன்னதாவது: 'இம்மாதிரியான வேலைகளை நாடுவதற்காக உமது வழியைவிட்டு நீர் விலகவேண்டாம். உமக்குமுன் தாமாக நேரும் அலு

வல்களையும் மிக்க அவசியமானவற்றையும் மட்டும் ஏற்றுக்கொள்ளும்; அவற்றையும் பற்றின்றிச் செய்யும். பல தொழில்களிற் சிக்கிக்கொள்வது நன்றன்று, ஈசனை நாம் மறப்பதற்கு அது ஏதுவாகும். சிலர் காளிகட்டக் கோயிலுக்கு வந்தபின் ஒருவேளை தம் முழுப்பொழுதையும் ஏழைகட்குப் பிச்சையிடுவதிலே கழித்துவிடுகின்றனர். கோயிலில் உட்பக்கத்தே எழுந்தருளியிருக்கும் தேவியைத் தரிசிக்க அவர்கட்குப்பொழுது கிடைப்பதில்லை! (சிரிப்பு) முதன்முதலாக, கூட்டத்தின் நடுவே இடித்துப் புகுந்தாவது, தேவியின் திருவடியைத் தரிசிக்க எப்படியாவது வழிதேடிக்கொள்ளும். பிறகு உமது பிரியப்படியே பிச்சையிடவோ இடாதிருக்கவோ செய்யலாம். உமக்கு அவ்வாறு தோன்றுமானால், உமது மனம் திருப்தியடையும்வரை ஏழைகட்கு நீர் தானம் பண்ணலாம். ஈசனது தரிசனம் பெறக் கருமம் ஒரு சாதனம் மட்டுமே. பக்தனுயிருப்பவன், 'ஈசா, உனது திருவடித் தாமரையில் எனக்கு ஓர் இடம் கொடு. என்னை உனது சந்நிதியிலேயே இருத்திவை. உன்மீது உண்மையான தூய பக்தியை எனக்குத் தந்தருள்க' என்பான்.

"கருமயோகம் மெய்யாகவே மிகக் கடினமானது. கலியுகத்திலே, சாஸ்திரங்கள் விதித்துள்ள கிரியைகளை இயற்றுதல் மிகமிகக் கஷ்டமானது. இந்நாளில் மனிதனது உயிர் உணவையே ஆதாரமாகக் கொண்டது. சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டுள்ள கிரியைகள் பலவற்றை அவனுல் இயற்ற முடியாது. ஒரு மனிதன் சுரத்தால் படுத்துக்கொண்டிருப்பதாக வைத்துக்கொள்வோம். பண்டைய நாட்டு மருந்துகளைக்கொண்டு அவனது நோயைத் தீர்க்க நீர் முயல்வீரானுல், நாள் பல கழியுமுன் அவனது உயிர் முடிந்துவிடலாம். பல நாள் தாமதத்தை அவனுல் தாங்க இயலாது. தற்காலத்துக்குக் கடுமையான 'டி. குப்தா கலவை மருந்தே' (காரமாகக் கொயினு சேர்த்துள்ள ஒரு சுர மருந்து) ஏற்றதாகும். கலியுகத்திலே மிகச் சிறந்த சாதனமாவது பக்தியோகமே—ஈசனது தோத்திரப் பாக்களைப் பாடுதலும், பிரார்த்தனையுமே. பக்திமார்க்க மொன்றே இக்காலத்திற்குரிய மதநெறியாம். (பிராம்மோ அடியார்களைப் பார்த்து) உங்கட்குரிய நெறியும் பக்திமார்க்கந்தான். நீங்கள் ஹரிநாம சங்கீர்த்தனம் செய்வதாலும் தேவியம்மையின் திருப்புகழைப் பாடுவதாலும் மெய்யாகவே நீங்கள் பாக்கியம் பெற்றவர்களே, உங்களது மனே பாவனையில் எனக்குப் பிரியம் உண்டு. நீங்கள் அத்வைதிகளைப்போல இவ்வுலகைக் கனவென்பதில்லை. நீங்கள் அவர்களைப்போல் பிரம்ம ஞானிகள் அல்ல; நீங்கள் பக்தர்கள். ஈசனை வடிவுள்ளவனுக நீங்கள் பேசுவதும் நன்றே. நீங்கள் பக்தர்கள். சிரத்தையோடும் முழுமனதோடும் நீங்கள் ஈசனைப் பிரார்த்திப்பீர்களாயின் நீங்கள் அவரைத் தரிசிப்பது நிச்சயமே."

படகு காயலா கட்டத்தில் வந்து நின்றது; பிரயாணிகள் இறங்கத் தயாரானர். வெளியேறியதும், பூரண சந்திரன் உயரக் கிளம்பியிருந்ததை அவர்கள் கவனித்தனர். மரங்களும் கட்டடங்களும் கங்கைமீதிருந்த தோணிகளும்

வெண்ணிலவிலே மூழ்கியிருந்தன. குருதேவர்க்காக ஒரு வண்டியை அமர்த்தினர்; ம—வும் ஒரு சில அடியார்களும் அவரோடு கூட ஏறினர். குருதேவர் கேசவரைப்பற்றி விசாரித்தார். உடனே அவர் வந்து சேர்ந்து, குருதேவர் தக்ஷிணேசுவரத்திற்குத் திரும்ப இன்னின்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன என்பதைப்பற்றி அறிந்தார். பின்பு அவர் ஸ்ரீராமகிருஷ்ணரைத் தாழ்ந்து பணிந்து, அவரிடம் விடைபெற்றனர்.

வண்டி நகரத்தில் ஐரோப்பியர்கள் வாழ்ந்த இடத்தின் வழியாகச் சென்றது. நன்கு விளக்கேற்றப் பெற்றுள்ள வீதிகளின் இருபக்கங்களிலும் இருந்த அழகிய மாளிகைகளின் காட்சியைக் குருதேவர் அனுபவித்தார். திடீரென அவர் "எனக்குத் தாகம் உண்டாகிறதே. யாது செய்வது?" என்று கேட்டார். கேசவரின் மருமகரான நந்தலால் வண்டியை 'இந்திய சங்கக்' கட்டடத்தின் முன்பு நிறுத்தி, சிறிது நீர் பெறுவதற்காக அதன் மாடிக்குச் சென்றார். நீர்க்கலம் நன்கு கழுவப்பட்டுள்ளதா என்று குருதேவர் விசாரித்தார். உள்ளது என்ற உறுதி பெற்றதும், அவர் நீரைக்குடித்தனர்.

வண்டி போய்க்கொண்டிருக்கும்போதே, குருதேவர் தமது தலையை ஜன்னலுக்கு வெளியே நீட்டி, ஜனங்களும் வண்டிகளும் குதிரைகளும் வீதிகளும் யாவும் நிலவு வெள்ளத்தில் அமிழ்ந்திருந்த காட்சியைக் குழந்தை போன்று ஆனந்தமாக நோக்கிச் சென்றார், இடையிடையே ஐரோப்பிய மாதர் 'பீயானோ'வோடு பாடிக்கொண்டிருத்தலையும் கேட்டார். அவர் மிக்க ஆனந்தமான நிலையிலே இருந்தனர்.

அக்டோபர் 28, 1882

இன்று சனிக்கிழமை. வருடத்திற்கு இருமுறை கார்காலத்தும் வசந்த காலத்தும் நடத்தும் பிராம்மோ விழாவை, கல்கத்தாவிற்கு வடக்கே ஏறத் தாழ மூன்று மைல் தொலையில் உள்ள சிந்தி எனும் ஊரில் வேணிமாதவ பால் என்பராது அழகிய பூஞ்சோலை மாளிகையிலே கொண்டாடி வரலாயினர். தியானத்திற்கு ஏற்ற ஒரு தனிமையான இடத்தில் இந்த இல்லம் அமைந்திருந்தது. மலர்ப்பாரம் சுமந்த மரங்களும், பசும்புல்வளர்ந்த கரைகளையுடைய செயற்கை ஏரிகளும், பச்சை இலை வேய்ந்த குடில்களும் நிலத்தின் அழகை மிகுதியாக்கின. அந்தி மாலைவேளையில் சூரியனது ஒளியால் பஞ்சு மேகங்கள் பொன்னுக மாறிவரும் சமயம் குருதேவர் வந்து சேர்ந்தனர்.

பல அடியார்கள் காலை வழிபாட்டிற்கு வந்திருந்தனர்; பிற்பகலில் கல்கத்தாவிலிருந்தும் அக்கம் பக்கத்துக் கிராமங்களிலிருந்தும் வந்தவர் சேர்ந்து கொண்டனர். ஸ்ரீ ராமகிருஷ்ணரது வரவை பிராம்மோ சமாஜ அங்கத்தினரின் பெருந்திரள் ஒன்று எதிர் பார்த்து நின்றது; அவர்களுள் ஒருவர் பெருமையுற்ற பிராம்மோ அடியாரான சிவநாதர் என்பார்—இவரிடம் குருதேவர் மிக்க நேசம் வைத்திருந்தார்.

குருதேவரும் ஒருசில அடியார்களும் ஏறிவந்த வண்டி பூஞ்சோலை மாளிகையைச் சார்ந்ததும், கூட்டத்தினர் அவரை வரவேற்கும் பொருட்டு மரியாதையாக எழுந்துநின்றனர். நாடக மேடையிலே திரையை உயர்த்தியதும் எழுவது போன்ற அமைதி திடீரென உண்டாயிற்று. ஒருவரோடு ஒருவர் அதுவரை பேசிக்கொண்டிருந்த ஜனங்கள் இப்போது தங்கள் கவனத்தைக் குருதேவரது சாந்த முகத்தின்மீது நிலைநாட்டினர்; அவரது திருவாயினின்று வரும் மொழிகளில் ஒன்றையேனும் இழக்க அவர் மனமில்லாதவராயினர்.

சிவநாதரைக் கண்டதும், குருதேவர் மகிழ்ச்சி பொங்கியவராய், "ஓ! சிவநாதர் இங்கு உள்ளனரா! பாரும், நீர் பக்தரானீர். அதனால் உம்மைக் காண்பதினாலே என் உள்ளத்து மகிழ்ச்சி பெருகுகின்றது. கஞ்சாப் புகை குடிப்போன் ஒருவனுக்குத் தன்னினத்தான் இன்னொருவனைக் காணும்போது மகிழ்ச்சி உண்டாகும், ஆனந்தம் பொங்குவதனால் அவர்கள் பல முறையும் ஒருவரையொருவர் தழுவிக்கொள்வார்" என்று உரக்கக் கூறினர்.

அடியார்கள் சிரிக்கலாயினர்.

குருதேவர்: "தக்ஷிணேசுவரத்துக் கோயிற் பூஞ்சோலையைப் பார்க்க மக்கள் பலர் வருகின்றனர். அவர்களிற் சிலர் கடவுள் விஷயத்தில் அலக்ஷிய முடையராயிருப்பதை யான் காணின், அவர்களிடம் 'நீங்கள் அவ்விடத்திலே உட்கார்ந்திருப்பது நன்று' என்று கூறிவிடுவேன். சில சமயம் "நீங்கள் சென்று, அழகான கட்டடங்களைப் பாருங்கள்' என்று சொல்வேன். (சிரித்தல்.)

"சில சமயம் பக்தர்களோடு மக்கட்பதர் கூட வருவதையும் யான் காண்பேன். இத்தோழர்கள் உலகச் சேற்றில் நன்கு அமிழ்ந்திருப்பவர், ஞானப் பேச்சு அவர்கட்கு இம்மியும் பிடிப்பதில்லை. பக்தர்கள் ஈசனைப் பற்றி என்னுடன் பேசிக்கொண்டே வெகு நேரம் இருந்து வருவாராதலின், பிறர்க்கு அது பொறுக்க முடியாததாகும். சற்றும் தாமதிக்க முடியாத நிலை வரவும், அவர்கள் தமது பக்த நண்பர்களிடத்து மெல்லிய குரலில் 'நாம் எப்போது செல்வோம்? நீங்கள் எவ்வளவு நேரம் இங்கு தங்குவீர்கள்?' என்று கேட்பர். பக்தர்கள் 'சற்றே பொறுங்கள், சிறிது நேரம் சென்றபின் போவோம்" என்று சொல்வர். அப்போது உலகப்பற்றுடைய அம்மக்கள் அருவருப்போடு 'நல்லது, நீங்கள் பேசிக்கொண்டிருங்கள். நாங்கள் படகில் உங்கட்காகக் காத்திருப்போம்" என்று சொல்வர். (எல்லோரும் சிரித்தல்.) உலகப் பற்றுடையவரிடம் நீர் 'அனைத்தையும் துறந்து முழுமனதோடு ஈசனிடம் ஈடுபடுங்கள்' என்று சொல்வீராயின், அவர்கள் நீர் சொல்வதை ஒரு போதும் கேட்கமாட்டார். உலகப் பற்றுடையவர் முக்குணங்களாகிய சத்வம் ரஜஸ் சமஸ் என்பவற்றைப் பெற்றிருத்தல்போல, பக்தியும் முக்குணங்கட்குத் தக்கவாறு மூன்று வகைப்படும்.

"சத்வகுணம் பெற்ற ஓர் இலௌகிகன் (உலகப் பாசமுடையவன்) எப்படி இருப்பான் என்பதை நீர் அறிவீரா? ஒருக்கால் அவனது வீடு சில இடங்களில் இடிந்து பாழாகக் கிடக்கும். அதைப் பழுது பார்க்கும் சிரத்தை

அவனிடம் இராது. பூஜை யறையில் புரூவின் எச்சம் சிதறிக் கிடக்கும். முற்றத்தே பாசி படர்ந்திருக்கும்; ஆனால் இவற்றை அவன் சிறிதும் கவனிக்க மாட்டான். வீட்டுச் சாமான்கள் பழமையாகி அழுக்கேறலாம்; அவன் அவற்றைத் துலக்கிப் பார்வைக்குத் துப்புரவாக்கமாட்டான். உடையைப் பற்றியோ கொஞ்சமும் கவனிக்கமாட்டான்; எது கிடைத்தாலும் போதும் என்றிருப்பான். ஆனால் மனிதன் மட்டும் மிக மென்மையாய், அமைதியாய், அன்பாய், பணிவாய் இருப்பான்; அவன் எவர்க்கும் தீங்கு செய்யான்.

"இன்னும், இலௌகிகர்க்குள் இரஜோ குணமுடைய மக்கள் உளர். இக் குணமுடையவன் கடிகாரமும் சங்கிலியும் உடையனாய், விரல்களில் இரண்டு மூன்று மோதிரங்கள் அணிந்திருப்பான். இவன் வீட்டுச் சாமான்கள் யாவும் பளபள வென்று புதியவாய் இருக்கும். சுவர்களிலே அரசியார் வேல்ஸ் இள வரசர் முதலான பிரமுகர்களின் படங்கள் தொங்கும்; கட்டடம் வெள்ளை யடிக்கப்பட்டு, மாசு மறுவின்றிப் பொலியும். அவனுடைய துணிப் பெட்டியில் பல வகைப்பட்ட ஆடைகள் நிறைந்திருக்கும்; வேலைக்காரர்க்கும் அவனுடைய மதிப்புக்கேற்ற உடையும் பிறவும் இருக்கும்.

"தமோ குணமுடைய ஓர் இலௌகிகனின் இயல்புகளாவன: உறக்கமும் காமமும் கோபமும் ஆணவமும், இவை போன்ற பிறவும்.

"இது போன்றே பக்தியிலும் சாத்விக பக்தி உண்டு. இம்மாதிரியான பக்தன் முற்றிலும் இரகசியமாக ஈசனைப் பற்றித் தியானிப்பான், ஒருக்கால் கொசுவலைக்குள்ளே தியானிப்பான். அவனைத் தூங்குவதாகப் பிறர் நினைப் பார். காலையில் விழித்தெழ அவனுக்கு நேரமாகு மாதலின் இரவில் அவன் ஒருக்கால் நன்கு தூங்கவில்லையோ என்று அவர்கள் கருதுவார்கள். அவனுக்கு உடல் மீதுள்ள பற்று பசியைத் தணிக்கும் அளவிற்கே செல்லும்; அதுவும் அரிசியையும் சாதாரணக் காய்கறிகளையும் கொள்ளுவதோடு நிற்கும். அவனது உணவுக்காக விவரமான ஏற்பாடோ, உடைகளில் பகட்டோ, வீட்டு சாமான் களில் ஆடம்பரமோ இராது. இன்னும் அவ்வகையான பக்தன் எவனையும் பணத்திற்காகப் புகழமாட்டான்.

"இராஜச பக்தியுடையோன் நெற்றியில் திலகத்தையும், கழுத்திலே தங்க மணிகள் இடை யிட்ட உருத்திராக்க மாலையையும் அணிவான். (அனைவரும் சிரித்தல்). பூஜை சமயம் அவன் பட்டாடை உடுத்திக்கொள்வான். அவனுக்கு வெளி ஆடம்பரத்தில் பிரியம்.

"தாமச பக்தி வாய்ந்தவனிடம் விசுவாசம் கொழுந்து விட்டெரியும். இவ்வித பக்தன் ஈசனிடமிருந்து வரங்களை வற்புறுத்தியே பெறுவான்; ஒரு கள்வன் ஒருமனிதனைத் தாக்கி, அவனது பொருளைப் பறித்துச் செல்வது போல அது. 'கட்டிவை! உதை! கொல்லு!'—இதுவே அவனது வழி, கொள்ளைக்காரரது வழி."

இவ்வாறு பேசிக்கொண்டே, குருதேவர் ஆனந்தவசப்படுத்தும் அன்பு பெருகிய இனிய குரலில், மேல் நோக்கிய கண்களையுடையவராய்ப் பின்வருமாறு பாடத் தொடங்கினர்:

அன்னைபெயர் நா ஒத அந்திமத்தில் என்னுயிர்தான் அகலுமாயின்
சின்மயஞ்சார் கங்கைகையை கச்சிகாசி பிரபாசஞ் செல்வ தேனே?
நன்மைமிகும் முப்போதும் நாமஜெபம் முறையாக நடக்கு மாகில்
பன்மைபெறுங் கிரியைகளால் பணிவொடுசெய் பூசையினல் பயனும் யாதோ?
விரைந்தனுகும் கிரியைகள் அம் மேலோனை ஒருக்காலும் மேவ மாட்டா;
வரைந்தபல விரதமோடு மாதரும தானமுமே மதனன் ஒப்பான்;
திருந்துபலி பிரார்த்தனையும் திருவடியாம்; நாமவலி தெரிவார் யாரே?
இருந்தேவர்க் கிறைசிவனின் முகமைந்தும் அன்னைபுகழ் இயம்பு மாதோ!

[மதனன் என்பார் இப்பாட்டைப் பாடியவர். மாதரும-பெரிய தருமமும். வலி-வலிமை. இரும் - பெரிய,]

குருதேவர் தேவியின் மீதுள்ள பிரேமையால் தம்மை மறந்தவரானர். அவர் சொல்லுவார்: "பக்தன் 'என்ன? நான் தேவியின் திருப்பெயரை ஓதி வந்துள்ளேன், இனி நான் எவ்வாறு பாவியாவேன்? யான் தேவியம்மையின் குழந்தை, அவளுடைய சக்திகட்கும் புகழுக்கும் உரிமை பெற்றவன்' என்று கூறும் மன உறுதியுடையனகவேண்டும்.

"உம்முடைய தாமச குணத்தையும் ஞான வழியில் திருப்பக் கூடுமாயின், அதன் துணையால் நீர் ஈசனை உணரக்கூடும். ஈசனிடம் உமது தேவைகளை வற்புறுத்திக் கேளும். ஈசன் உமக்கு ஒருவிதத்திலும் அன்னியனகான்; உண்மையாக உமக்குச் சொந்தமானவனே.

"மேலும், இதைக் கவனியும். தமோ குணத்தையும் பிறரது நன்மைக் கெனப் பயன்படுத்தலாகும். மூன்று வகுப்பினர் மருத்துவரில் உளர்; உத்தமர் மத்திமர் அதமர். நோயாளியின் நாடியைப் பார்த்தபின், அவனிடம் 'மருந்தை முறை தவருது உட்கொண்டுவா' என்று மட்டும் சொல்லுபவர் அதமர்; நோயாளி மருந்தினை உண்மையாகவே உட்கொண்டானு இல்லையா என்பதையும் அவர் கவனியார். மத்திம வகுப்பினர் மருந்தை உட்கொள்ளுமாறு நோயாளியைக் தூண்டியும் வேண்டியும், 'அப்பா, நீ மருந்து சாப்பிடாவிடில் எப்படி நோய் தீரும்? இம்மருந்தைச் சாப்பிடு. நானே இதை உனக்காகத் தயாரித்தேன்' என்று இனிமையாக அவனிடம் பேசுவார். ஆனல் நோயாளி மருந்துண்ணமாட்டேனென்று பிடிவாதம் பண்ணுவதைக் கண்டு, அவன் மார்பின்மீது தமது முட்டையூன்றி அமுக்கி, மருந்தை அவனது தொண்டைக் குள் திணிக்கும் மருத்துவர் உததம வகுப்பினர். இது மருத்துவரது தமோ குணத்தை வெளிப்படுத்தும் செயலாகும். அது நோயாளிக்குத் தீங்கு செய்வ தில்லை; அதற்கு மாருக. அவனுக்கு நன்மையும் செய்கின்றது.

"மருத்துவரைப்போல் மூன்று வகை ஞான குருக்கள் உளர். அதமரான குரு மாணவனுக்குப் போதனையை மட்டும் புகட்டுவார், ஆனல் பின் அவனது

முன்னேற்றத்தைப்பற்றி விசாரிக்கமாட்டார். மத்திம குரு மாணவனது நன்மையைக் கருதி, போதனையை அவனது உள்ளத்தில் பதியவைக்குமாறு அடுத்தடுத்து முயன்றுவருவார்; போதனையை ஒழுக்கமாக மாற்றுமாறு அவனைக் கெஞ்சுவார், இன்னும் பலவழிகளிலும் அவன்மீது அன்பு காட்டுவார். ஆனால் மாணவன் பிடிவாதமாக இணங்க மறுப்பதைக் காணும் ஒருவகைக் குரு அவனைத் தமது பலவந்தத்தால் அடக்கும் அளவிற்கும் செல்வார். அவரையே நான் உத்தம குருவென்பேன்."

பிராம்மோ அடியார் ஒருவர்: "ஐய, ஈசனுக்கு உருவங்கள் உண்டா? இல்லையேல், ஈசன் உருவமற்றவனா?"

குருதேவர்: "ஈசன் இத்தன்மையை மட்டும் உடையவன், வேறு தன்மைகளை உடையவனல்லன் என்று முடிபுகட்டி எவனும் சொல்லவொண்ணாது. ஈசன் அருவமானவன், இன்னும் உருவங்களை உடையவன். பக்தனுக்காக ஈசன் உருவங்களைக் கொள்கின்றான். ஆனால் ஞானிக்கோ—அதாவது, உலகை வெறுங்கனவாகக் கருதுபவனுக்கோ—ஈசன் உருவமற்றவனுவான். ஈசனை ஒரு தத்துவமாகவும், உலகை வேறொரு தத்துவமாகவும், பக்தன் உணர்கிறான். இதனால் ஈசன் தன்னை அவனுக்கு உருவினனுகக் காட்டியருள்கிறான். ஆனால் வேதாந்தியாகிய ஞானியோ 'நேதி, நேதி' (இதுவன்று, இதுவன்று) என்றும் முறையைப் பின்பற்றி, எப்போதும் ஆன்ம விசாரணை செய்கிறான். இவ் விவேகத்தை(ஆத்ம—அனாத்ம விவேகத்தை)த் துணைக்கொண்டுஅவன் தனது உட்கண்ணால் அகங்காரமும் உலகமும் கனவைப்போல் மித்தையாவதை உணர்கின்றான். பிறகு ஞானி தனது ஆன்மாவே பிரம்மனுவதை உணர்கிறான்.

"யான் கருதுவதை அறிகிறீரா? அதீத ஸச்சிதானந்த வடிவமாகிய பிரம்மனைக் கரையற்ற கடலாக நினையும், பக்தனது அன்பெனும் குளிர்ச்சி போன்ற ஒன்றினால் கடல் நீர் பனிக்கட்டிகளாகச் சில இடங்களில் உறைந்து விடுகிறது. வேறு வழியாகச் சொல்லின், ஈசன் இடையிடையே தனது அன்பர்கட்காகப் பற்பல வடிவங்களைத் தாங்கிக் கொண்டு, உருவுடையவனுகத் தன்னை அவர்கட்குக் காட்டியருள்கிறான். ஆனால் ஞான சூரியன் உயரக் கிளம்பியதும், பனிக்கட்டிகள் உருகுகின்றன. அப்போது ஈசனை உருவுடையவனுக எவனும் காணான், ஈசனது வடிவங்களையும் காணான். ஈசன் இன்னதன்மையன் என உரைப்பது அப்போது இயலாது. அவனை வருணிப்பார் யார்? அவ்வாறு செய்ய விரும்புவனே மறைகின்றான். அவன் 'நான்' என்பதை அதன்பின் காண முடியாது.

"ஒருவன் தான் யார் என்று பிரித்து ஆராய்வானால் 'நான்' என்ற ஒரு பொருளையே காணமற் போகின்றான். உதாரணமாக வெங்காயத்தை எடுத்துக் கொள்வோம். முதன்முதலாக, சிவந்த வெளித்தோலை உரிக்கிறீர்; அப்போது கனத்த வெண்மையான தோல்களைக் காண்கிறீர். இவற்றை ஒவ்வொன்றுக உரித்துவிடும், உள்ளே எதனையும் காணமாட்டீர்.

"அந்த நிலையில் ஒரு மனிதன் தனது அஹங்காரத்தின் இருப்பையும் காண்பதில்லை. அதைத் தேட, மிஞ்சியிருப்பவர் யார் உளர்? சுத்த சைதன்ய மாக விளங்கும் அந்நிலையில் பிரம்மனின் உண்மையியல்பை அவன் அனுபவிப் பது இவ்வாறு என்று யாராற் பேச முடியும்?

"பூரண ஞானத்திற்கு ஓர் அடையாளம் உள்ளது. அதை அடைந்ததும் மனிதன் மௌனமாகி விடுகிறான். அப்போது உப்புப் பொம்மை போன்ற அந்த 'நான்' சச்சிதானந்தப் பரம் பொருளாகிய கடலில் கரைந்துவிடுகிறது. வேறுபாடு இம்மியளவும் மிஞ்சுவதில்லை.

"தான் யார் என்ற ஆராய்ச்சி முடிவு பெறுதவரை, மனிதன் மிக்க சிரமத் தோடு வழக்காடுகிறான். ஆனால் அது முடிவு பெற்றதும், அவன் மௌனி யாகிறான். வெறுங் குடத்தை நீரில் அமிழ்த்தி நீரால் நிரப்பியதும், குடத்துக்கு உள்ளே இருக்கும் நீர் வெளியே யுள்ள குளத்து நீரோடு ஒன்றுகி விட்டதும், ஒலி கேட்பதில்லை. குடத்தில் நீர் நிரம்பாதவரை குடத்தினின்றும் ஒலி கிளம்பு கின்றது.

"எல்லாத் துன்பமும் தொந்தரவும், 'நான்' சாகும்போது, முடிந்துவிடும். நீர் ஆயிரக் கணக்காக வழக்குகளை அடுக்கிக்கொண்டே போகலாம், ஆனாலும் 'நான்' மறைவதில்லை. உம்மையும் என்னையும் போன்ற மக்களுக்கு 'நான் ஈசனின் பக்தன்' என்று பாவித்து வருவது நன்று.

"சகுணப் பிரம்மன் பக்தர்களுக்காகவே அமைந்துள்ளது. வேறு வழி யாகவும் சொல்லலாம். கடவுள் குணங்களோடு கூடியவர் என்றும், வடிவங் களைத் தரித்துக்கொண்டு ஒரு பரம புருடராகத் தம்மை மனிதர்க்குக் காட்டி யருள்கிறார் என்றும் ஒரு பக்தன் நம்புகிறான். நமது பிரார்த்தனைகளைக் கவ னித்துக் கேட்பவர் அவரே. நீர் சொல்லும் பிரார்த்தனைகள் அவரையே நோக் கிச் செலுத்தப்படுகின்றன. கடவுள் உருவ முடையவர் என்பதை நம்பினாலும் நம்பாவிட்டாலும் சரி. கடவுள் நமது பிரார்த்தனைகட்குச் செவிசாய்க்கும் ஒரு பரம புருடர் என்றும், இந்த உலகத்தை ஆக்கியும் காத்தும் அழித்தும் வருபவர் என்றும், வரம்பிலாத சக்தி வாய்ந்தவர் என்றும் பாவித்தலே போதும்.

"பக்தி நெறியைப் பின்பற்றிக் கடவுளை அடைதல் எளிதானது."

பிராம்மோ அடியார்: "ஐயன்மீர்! ஈசனைக் காணல் ஒருவற்கு இயலுமா? அப்படியாயின், எங்கட்கு ஏன் ஈசனைக் காண முடியவில்லை?"

குருதேவர்: "அவரைக் காணக்கூடும் என்பது உறுதியே. அவரது உருவங்களையும் அவரது அருவ நிலையையும் ஒருவர் பார்க்கக்கட்டும். அதை நான் உமக்கு எவ்வாறு விரித்துரைக்க முடியும்?"

பிராம்மோ அடியார்: அவரைக் காணும் ஆசையால் துடித்து நீர் அழ முடியுமா? மனிதர் தம் குழந்தைகட்காகவோ மனைவியர்க்காகவோ பணத்திற் காகவோ குடங் கண்ணீர் கொட்டுகின்றாரே; ஆனால் ஈசனுக்காக அழுவார் யார்? குழந்தை தனது பொம்மைகளைப் பற்றிய நினைவில் அழுந்தி யிருக்கும்

வரை, தாய் தன்து சமையலையும் மற்ற வீட்டுக் காரியங்களையும் கவனித்து வருகிறாள். ஆனால் குழந்தைக்குப் பொம்மைகளில் உள்ள ருசி தீர்ந்ததும், அது அவற்றை ஒரு பக்கம் எறிந்துவிட்டு, தாயை நினைந்து கதறுகிறது. அப்போது தாய் சாதப்பானையை அடுப்பிலிருந்து கீழே யிறக்கி, அவசரமாக ஓடிவந்து, குழந்தையைத் தனது கைகளில் தூக்கிக்கொள்கிறாள்.''

பிராம்மோ அடியார்: ''ஐய, கடவுளது இயல்பைப் பற்றி அத்தனை வெவ்வேறு அபிப்பிராயங்கள் இருப்பதேன்? சிலர் கடவுளுக்கு உருவம் உண்டு என்பர்; ஆனால் பிறரோ அவரை அருவம் என்கின்றனர். இன்னும், உருவக் கடவுளைப் பற்றிப் பேசுபவர் அவரது பற்பல வடிவங்களையும் பற்றிப் பேசுகின்றனர். இந்த விவாதம் எல்லாம் எதற்காக?''

குருதேவர்: ''ஒரு பக்தன்தான் ஈசனைக் காண்கின்றபடியே அவரைப் பற்றி நினைக்கிறான். உண்மையில் ஈசனைப்பற்றிய மனக்குழப்பம் யாதும் இல்லை. பக்தன் மட்டும் எப்படியோ ஈசனைத் தரிசித்து விடுவானாயின் இதையெல்லாம் அவரே அவனுக்கு விரிவாயுரைப்பார். நீர் அந்தத் திசையை நோக்கி இன்னும் காலடியெடுத்துவைக்கவில்லை; ஈசனைப்பற்றிய யாவற்றையும் அறிய வேண்டுமென நீர் எவ்வாறு எதிர்பார்க்கக் கூடும்?

''ஒரு கதையைக் கவனியும். ஒரு காலத்தில் ஒரு மனிதன் ஒரு காட்டுக்குட் புகுந்தான்; அங்கே ஒரு மரத்தின்மீது ஒரு சிறு பிராணியைக் கண்டான். அவன் திரும்பிவந்து, வேறொருவனிடம் தான் ஒரு மரத்தில் ஓர் அழகிய சிவந்த நிறமுடைய பிராணியைப் பார்த்ததாகச் சொன்னான். இரண்டாவது மனிதன் அதற்கு மறுமொழியாக 'நான் காட்டுக்குச் சென்றபோது நானும் அப்பிராணியைக் கண்டேன். ஆனால் நீர் ஏன் அதனைச் சிவப்பானது என்கிறீர்?' என்று கூறினார். அங்கிருந்த வேறொரு மனிதன் அவர்கள் இருவரையும் மறுத்து, 'அது மஞ்சளாயுள்ளது' என்று வற்புறுத்தினான். உடனே மற்றவரும் வந்து வந்து சேர்ந்து, அப்பிராணி சாம்பல் நிறமாயும் ஊதாவாயும் நீலமாயும் இன்னும் பலபலவிதமாயும் இருந்ததாக வழக்காடினர். கடைசியாக அவர்கள் ஒருவரோடொருவர் சண்டையிடத் தொடங்கினர். வழக்கைத் தீர்ப்பதற்காக அவர்கள் எல்லோரும் மரத்தண்டை சென்றார். அதன்கீழ் ஒரு மனிதர் உட்கார்ந்திருப்பதை அவர்கள் கண்டனர். அவரைக் கேட்டதும், அவர் பின்வருமாறு பதிலுரைத்தார்: 'ஆம், நான் இம்மரத்தடியில் வாழ்பவன்தான். எனக்கு அப்பிராணியை மிக நன்றாகத் தெரியும். நீங்கள் சொன்ன நிறங்களெல்லாம் உண்மைதான். சில சமயம் அது சிவப்பாகவும், சில சமயம் மஞ்சளாகவும், வேறு சமயங்களில் நீலமாகவும், ஊதாவாகவும், சாம்பல் நிறமாயும், வேறு நிறங்கள் உளதாகவும் தோன்றுகிறது, அது ஓர் பச்சோந்தியே. சில சமயம் அதற்கு நிறமிருக்கும், மறு சமயம் அதற்கு நிறமிராது,'

''அதேமாதிரி, சதா ஈசனை நினைப்பவன் அவரது உண்மையான இயல்பை அறிய முடியும்; ஈசர் தம்மை நாடுவார்க்கு வெவ்வேறு வடிவங்களோடும்

நிலையிலும் தம்மைக் காட்டியருள்கிறார் என்பதை அவனொருவனே அறிகிறான். ஈசருக்குக் குணங்கள் உண்டு; இன்னும் அவர்க்குக் குணங்கள் இல்லை என்பதும் சரி. பச்சோந்தி வெவ்வேறு நிறங்களோடு தோன்றக்கூடும் என்பதை மரத்தடியில் வாழும் மனிதனே அறிவான்; இன்னும், சில சமயம் அதற்கு நிறமே இல்லை என்பதையும் அவன் அறிவான். மற்றவர்களே வீண் வாதத்தால் துயருறுவார்.

"கபீர்தாஸ் 'அருவமான நிர்க்குணப் பிரம்மன் எனது தந்தை, உருவமுடைய ஸகுணப்பிரம்மன் எனது தாய்' என்று சொல்வது வழக்கம். ஈசர் தமது அடியார்கட்கு மிகவும் பிரியமான வடிவோடு தம்மைக் காட்டியருள்கிறார். அடியார்மீது அவர்க்கு உள்ள அன்பிற்கு எல்லையில்லை.

"பக்தி நெறியே உமக்குரியது. அது மிக நல்லதே, அது ஓர் எளிய நெறியாகும். எல்லையற்ற (அகண்ட) பிரம்மனை அறியும் அவசியம்தான் யாது? இந்த அரிய மனிதப் பிறவியைப் பெற்றபின், ஈசனுடைய திருவடித் தாமரைகளின்மீது பக்தியை வளர்த்தலே எனது உயர்ந்த தேவையாம்.

"எனது தாகத்தைப்போக்க ஒரு குடம் நீர் போதுமாயின், ஓர் ஏரியில் உள்ள நீரை இவ்வளவு என்று அளவிடல் எனக்கு எதற்காக? ஒருவனுக்கு வெறியை உண்டாக்க அரைக் குப்பி சாராயம் போதும் என்று வைத்துக் கொள்ளும். சாராயக் கடையில் உள்ள சாராயத்தின் அளவைக் கணக்கிடுவதால் யாது பயன்? அகண்டமான பிரம்மத்தினை அறியும் அவசியம் என்ன?

"பிரம்மஞ்ஞானியின் மனத்தினுடைய பலவகை நிலைகளும் வேதங்களில் வருணிக்கப்பட்டுள்ளன. ஞான மார்க்கம் மிக மிகக் கடுமையானது. இம்மியளவு உலகப்பற்றும் காம காஞ்சனங்களில் எள்ளளவு பிரியமும் ஒருவனிடம் இருக்குமாயின், அவனுக்கு ஞானத்தை அடைதல் இயலாததாகும். இது கலியுகத்திற்குரிய பாதையன்று.

"வேதங்களில் மனம் வாழ்தற்குரிய ஏழு பூமிகள் கூறப்பட்டுள்ளன, மனம் உலகப்பற்றில் மூழ்கியுள்ளபோது, நாபி ஜனனேந்திரியம் மூலம் எனும் மூன்று கீழ்ப்பூமிகளிலும் அது வாழ்கிறது. அந்நிலையில் மனம் அதன் உயர்ந்த காட்சிகளையெல்லாம் இழந்துவிடுகிறது; அது காமம் காஞ்சனம் இரண்டையுமே சிந்தித்துக்கொண்டிருக்கிறது. மனத்தின் நான்காவது பூமி நெஞ்சில்உள்ளது. மனம் அங்கே வாழும்போது, ஞான ஜோதியின் காட்சியை ஒரு கணம் ஒருவன் முதலிற் பெறுகின்றான். தன்னைச் சுற்றி எங்கும் ஜோதியைக் காண்கிறான். அம்மாதிரி மனிதன் தெய்வ ஜோதியைக் கண்டதும் ஆச்சரியத்தால் பேச்சற்றவனாகிறான்; 'ஆ! இதென்ன? இதென்ன?' என்கிறான். அவனது மனம் உலகப் பொருள்களை நோக்கிக் கிழிறங்குவதில்லை.

மனத்தின் ஐந்தாம் பூமி கண்டத்தில் உள்ளது. மனம் இதை அடைந்ததும் சாதகன் அறியாமையினின்றும் மித்தையினின்றும் முற்றும் விடுபடுகிறான். இறைவனைத் தவிர்த்து வேறெதனையும் பற்றிப் பேசுவதையோ கேட்பதையோ

அவன் விரும்பான். உலகப் பொருள்களைப்பற்றி மக்கள் பேசுவாராயின், உடனே அவ்விடத்தைவிட்டு நீங்குவான்.

"ஆருவது பூமி நெற்றியிலுள்ளது. மனம் அங்கே வாழும்போது சாதகன் ஈசனின் உருவத்தை அல்லும் பகலும் காண்கிருன். ஆனல் அப்போதும் ஒரு சிறிது அகங்காரம் மிஞ்சுகிறது. ஈசனது வடிவத்தின் இணையற்ற அழகைக் கண்டதும், ஒருவன் வெறிபிடித்தவனுகி, அதைத் தொடவும் தழுவவும் விரைகிருன். ஆனல் அவன் வெற்றியடையாமற் போகிருன். அது கண்ணுடி விளக்கினுள் இருக்கும் ஒளியைப் போன்றது. விளக்கைத் தொடமுடியும்போல் தோன்றும்; ஆயினும் கண்ணுடியிருப்பதனல் அது முடியாது போகிறது.

"தலையின் உச்சியில் ஏழாவது பூமியுள்ளது. மனம் அங்கே கிளம்பும் போது, சாதகன் சமாதியடைகிருன். அப்போது பிரம்ம ஞானி நேரே பிரம்மனைக் காண்கிருன். ஆனல் அந்நிலையில் அவனது உடல் பலநாள் நிலைத்திருப்பதில்லை. அவன் புறவுலகை மறந்தவனுயிருக்கிருன். பாலை அவனது வாயில் ஊற்றினல், அது வெளியே வழிகிறது. இந்த ஞான பூமியில் வாழ்ந்த வண்ணமே அவன் இருபத்தொரு நாளில் உடலை விட்டுவிடுகிருன். அது பிரம்மஞானியின் நிலை. ஆனல் உனது நெறியோ அன்பு நெறி. அது மிக நல்ல எளிய நெறி.

"ஒரு சமயம் ஒரு மனிதன் என்னிடம் 'ஐய, நீர் சமாதி என்று அழைப்பதை எனக்குச் சீக்கிரம் போதிக்கக் கூடுமா?' என்ருர். (அனைவரும் சிரித்தல்)

"ஒரு மனிதன் சமாதி நிலையை அடைந்தபின், அவனுடைய செயல்கள் யாவும் நழுவிவிடுகின்றன. பூஜை ஜெபம்போன்ற பக்தி சம்பந்தமான முயற்சிகள் யாவும், எல்லா உலக சம்பந்தமான கடமைகளும் அந்நிலையிலுள்ள மனிதனுக்கு இல்லாது போகின்றன. ஆரம்பத்தில் கருமத்தைப்பற்றி அளவு மிக்க பேச்சு நடக்கின்றது. மனிதன் ஈசனை நோக்கி முன்னேறும்போது, அவனது கருமத்தைப்பற்றிய வெளி ஆடம்பரம் வரவரக் குறைகின்றது; ஈசனது பெயரையும் புகழையும் பாட முடியாத அளவிற்கும் வருகிருன். (சிவநாதரைப் பார்த்து) நீர் இக் கூட்டத்திற்கு வராதிருந்தவரைக்கும் மக்கள் உம்மையும் உமது குணங்களையும் பற்றி மிகுதியாகப் பேசி வந்தனர். ஆனல் நீர் வந்து சேர்ந்ததும் அதெல்லாம் நின்றுவிட்டன. இப்போது உமது காட்சியொன்றே ஒவ்வொருவர்க்கும் ஆனந்தத்தை உண்டாக்குகின்றது. இப்போது மக்கள் 'இதோ சிவநாத பாபு உள்ளனர்!' என்று மட்டும் சொல்லுகின்றனர். உம்மைப் பற்றிய வேறு பேச்சு யாவும் நின்றுவிட்டன.

"இக் காரணத்தால் யான் சொல்லுவதாவது: ஞான வாழ்க்கையின் ஆரம்பத்தில் ஒரு மனிதன் கருமத்தைப்பற்றி மிகுதியாகப் பேசுகிருன்; ஆனல் அவனது மனம் ஈசனிடம் ஆழ்ந்து செல்லும்போது அவனது கருமம் முன்னிலும் குறைகிறது. முடிவிலே வருவது கருமத் தியாகம். அதையடுத்து சமாதி உண்டாகும்.

"பொதுவாக சமாதியை அடைந்தபின்பு உடல் உயிரோடு நிலைத்திருப்பதில்லை. இவ்விதிக்கு விலக்காவார் நாரதரைப்போன்ற ரிஷிகளே; இவர்கள் வாழ்வதும் பிறர்க்கு ஞான ஒளியைச் சொரிதற்காகவே, ஸ்ரீசைதன்யர் போன்ற அவதார புருடர்களைப்பற்றிய உண்மையும் இதுவே. கிணறு தோண்டியபின்பு ஒருவன் பொதுவாக மண்வெட்டியையும் கூடையையும் தூர எறிந்துவிடுகிறான். ஆனால் அண்டையிலிருப்பார்க்கு அவை உதவுமே என்னும் கருத்தால் சிலர் அவற்றை வைத்திருப்பதும் உண்டு. சமாதிக்குப் பின் தமது உடல்களை வைத்திருக்கும் பெரியோர் பிறரது துயரங்களைப் பொறுது இரங்குகின்றனர். தாம் ஞான ஒளி பெற்றதோடு திருப்தியடையும் சுயநயம் அவர்களிடத்து இல்லை.

(சிவநாதரிடமும் மற்ற பிராம்மோ அடியார்களிடமும்) "ஈசனது சக்தியையும் புகழையும் நீங்கள் அவ்வளவு வற்புறுத்தும் காரணத்தை எனக்குச் சொல்வீர்களா? கேசவ சந்திரசேனரிடமும் இதையே கேட்டேன். ஒரு நாள் கேசவரும் அவரது கூட்டத்தாரும் தக்ஷிணேசுவரத்துக் கோயிற் பூஞ்சோலைக்கு வந்தனர். அவர்களுடைய பிரசங்கத்தைக் கேட்க விரும்பினேன். கங்கையின் படித்துறைக்கு மேலேயுள்ள தளவரிசை முற்றத்திலே ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது; அங்கே கேசவர் பிரசங்கம் செய்தனர். அவர் மிக நன்றாகப் பேசினர். நான் அப்போது சமாதியடைந்தேன். பிரசங்கம் முடிந்ததும் யான் கேசவரை நோக்கி, 'ஈசரே! எவ்வளவு அழகான மலர்களை நீர் படைத்துள்ளீர்! ஈசரே! வான உலகத்தையும் நக்ஷத்திரங்களையும் கடலையும் பிறவற்றையும் நீரே படைத்தீர்!" என்பது போன்றவற்றைப் பலமுறை நீர் சொல்வதேன்? பெருமையில் தாம் ஆசையுடையோரே ஈசனது பெருமையைப்பற்றி நீளப் பேச விரும்புவர்.

"ஒருநாள் இராதாகாந்தரது கோயிலிலுள்ள விக்கிரகங்களிலிருந்து நகைகளை ஒரு கள்வன் திருடிச் சென்றான். மதுரபாபு கோயிற்குட் புகுந்து, தெய்வத்தினிடத்து, 'ஈசா! இதென்ன அவமானம்! உமது சொந்த நகைகளையே உம்மாற் காப்பாற்ற முடியவில்லையே!' என்று சொன்னர். நான் மதுரரிடம் கூறினேன்: 'நன்று! நன்று! செல்வத்திற்கு அதிதேவதையான இலக்ஷ்மி தேவியைத் தம்முடன் வாழும் வேலைக்காரியாகப்பெற்றுள்ள அவர்க்கு எப்போதாயினும் பெருமையிற் குறைவுண்டா? இந்நகைகள் உமக்கு அருமையாகலாம்; ஆனால் ஈசற்கோ அவை களிமண் கட்டிக்கு மேலில்லை. நீர் இவ்வளவு இழிவாகப் பேசியதற்காக உமக்கு வெட்கம் இல்லையே! ஈசனது பெருமையை உயர்த்தும்படி அவர்க்கு என்ன செல்வம் உம்மாற் கொடுக்க முடியும்?

"ஆதலால், ஒருவற்கு எவரிடத்தில் ஆனந்தம் உண்டாகுமோ அவரையே அவன் நாடுகிறான் என்பேன். அவர் வாழும் இடத்தையும், வீடுகள் அவர்க்கு இத்தனை என்பதையும், தோட்டங்களையும், உறவினரையும், செல்வத்தின்

அளவையும் பற்றிக் கேட்கும் அவசியம் அவனுக்கு யாது? நான் நரேந்திரனைக் காணும்போது எல்லாவற்றையும் மறந்துவிடுகிறேன்.

"ஈசனது ஆனந்தத்தின் இனிமையில் ஆழ்ந்து மூழ்குக. அவரது வரம் பிலாப் படைப்பும் எவ்லையற்ற புகழும் நமக்கு எவ்வாறு அவசியம்?"

குருதேவர் பின்வருமாறு பாடலானார்:

ஆழ்ந்து மூழ்குக அருமை நெஞ்சே
ஆழ்ந்துநீ ஈசன் அழகெனும் கடலிடை
அடிவரை சென்றிடில் அன்பெனும் மணியைக்
கடிதினில் ஆங்கே காணுவை மனமே.

[கடிதினில் - விரைவில்]

நாடுக மனமே நாடுக நெஞ்சுளே
பிருந்தா வனத்தை; விமலன் கண்ணன்
அரும்பெறல் அடியா ரொடும்சதா ஆடல்
புரியுமோர் இடத்தைப் பரிவுடன் நாடுக.
ஏற்றுக மனமே ஏற்றுக ஞானச்
சுடர்விளக் கதனைத் தூய நெஞ்சினில்
தொடர்ந்தெந் நாளும் துளங்கா தொளிரவே.

[அரும்பெறல் - பெறற்கு அரிய]

குருதேவர்: (சிவநாதரிடம்) "உம்மைப் பார்க்கவே எனக்கு விருப்பம். தூய மனமுடைய அன்பர்களை யான் பார்த்தாலன்றி நான் எவ்வாறு வாழ முடியும்? அவர்கள் முந்தின அவதாரமொன்றில் எனது நண்பர்களாக இருந்தது போல நான் உணர்கின்றேன்."

ஒரு பிராம்மோ அடியார்: "ஐயன்மீர்! ஆன்மாவின் மறுபிறவியைத் தேவரீர் நம்புகிறீரா?"

குருதேவர்: "ஆம், அதுபோன்ற எதோ ஒன்று உள்ளதெனச் சொல்லுகின்றனர். நமது எல்லைக்குட்பட்ட மனங்களைக்கொண்டு ஈசனின் வழிகளை நாம் எவ்வாறு அறிய முடியும்? பலர் மறுபிறவியைப் பற்றிப் பேசியுள்ளனர்; ஆதலின் யான் அதை நம்பாதிருக்க முடியாது."

அப்போது ஏறக்குறைய எட்டரை மணியாயிற்று; பிரார்த்தனை மண்டபத்தே மாலைப் பூஜை தொடங்கிற்று. பின்பு அடியார்கள் பாட ஆரம்பித்தார்கள். ஸ்ரீராமகிருஷ்ணர் பக்தி வெறிகொண்டவராய் நடனமாடிக்கொண்டிருந்தார். பிராம்மோ அடியார்கள் மத்தளமும் தாளக் கருவிகளும் ஒலிக்க அவரைச் சுற்றி நடனமாடினர். எல்லோரும் மிக ஆனந்தமாக இருப்பதுபோல் தோன்றினர்.

பிறகு குருதேவரும் அடியார்களும் சுவையுள்ள உணவுகளை உண்டு களித்தனர்; வேணி மாதவர் விருந்தளிப்போராகி, அவர்கட்கும் அவற்றை அளித்தனர்.

டிசம்பர், 1882

பிற்பகலில் ஸ்ரீராமகிருஷ்ணர் தக்ஷிணேசுவரத்துக் கோயிற் பூஞ்சோலையி லுள்ள தமது அறையின் மேற்கு முகப்பில் அமர்ந்திருந்தார். மற்றவரோடு பாபுராமும் ராமதயாளும் ம—வும் இருந்தனர். இம்மூவரும் குருதேவரோடு இரவுப் பொழுதைக் கழிப்பதாக இருந்தனர். ம— அடுத்த நாளும் அங்கே தங்க நினைத்தனர். ஏனெனில் அவர்க்குக் கிறிஸ்து—பிறப்புக் கொண்டாட்ட விடுமுறைக் காலமாயிருந்தது. பாபுராம் சில நாளைக்கு முன்புதான் குருதேவ ரிடம் வரத் தொடங்கினர்.

குருதேவர்: (அடியார்களிடம்) "ஈசனே எல்லாச் செயல்கட்கும் கருத்தா என்பதை அறியும் மனிதன் இப்பிறவியிலேயே முக்தியடைகிறான். ஒருநாள் கேசவர் சம்புமல்லிக்கோடு இங்கு வந்தனர். நான் அவரைப் பார்த்து 'ஈசனது ஆணையாலன்றி ஓர் இலையும் அசையாது' என்றேன். மனிதனது சுயேச்சை எங்குள்ளது? அனைவரும் ஈசனது இச்சைக்கு அடங்கியவரே. ஆதலால் 'அம்மே! யான் யந்திரம், நீ யந்திரி (யந்திரத்தை ஆட்டுவிப்பவள்); யான் ரதம் நீ சாரதி, நீ ஆட்டிவைக்கின்றபடி யான் ஆடுகின்றேன், நீ என்னைச் செய் விக்கின்றபடி யான் செய்கின்றேன்' என்று யான் கூறுகிறேன்."

அடியார்கள் குருதேவரது அறையில் கீர்த்தனம் தொடங்கினர்.

என்நெஞ்சில் ஆழ்ந்துறையும் இன்குயிலே பாடுகநீ
மன்னு பிரம்மமெனும் வான்தருவார்—இன்குயிலே
பாடுகநீ ஈசன் நிலைபுகழைப் பாரதிய;
நாடிநீ அத்தருவில் நாற்கனிகள்—வீடுமுதல்
இன்பம் பொருளறமும் என்ப சுவைத்திடுக
மன்னுவியப் பென்வாழ்வாம் மாபுள்ளே—என்பரன்
ஆறுதலை ஈவான் அவனேயென் ஆருயிர்க்கு
மாருத ஆனந்த வாரிதியும்—வீறுறவே
நீயுரக்கப் பாடுகவென் நெஞ்சில் ஒழிவறவே
ஏயும்காலமெல்லாம் என்றென்றும்—நேயமிக
மேகத் துளியை விழையும் சாதகம்போல்
தாகத்தைப் பாட்டைத் தணி.

[வான் தரு - கற்பக விருக்ஷம். மன்னுவியப்பு என்வாழ்வாம் மாபுள்ளே - ஆச்சரியம் பொருந்திய எனது வாழ்வென்னும் பெருமை தங்கிய பக்ஷியே பரன் - கடவுள். வாரிதி - கடல். வீறுற - பெருமையோடு.]

மாலைப் பூஜை கோயிலில் தொடங்கிற்று. குருதேவர் தமது அறையி லுள்ள சிறு கட்டிலில் அமர்ந்திருந்தார், தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அவர் பரவசப்பட்ட நிலையினை அடைந்து, சிறிது நேரம் கழிந்தபின் "அம்மே, அவனை நின்னிடம் இழுத்தருள்க. அவனிடத்து எவ்வளவு ஞானமும் பணிவும் உள்ளன! அவன் உன்னைப் பார்க்க வந்துகொண்டிருக்கின்றான்" என்றார் குரு தேவர். பாபுராமைப்பற்றி இவ்வாறு கூறுகின்றனரோ? பாபுராம் பிற்காலம் அவரது முதன்மையான சீடர்களுள் ஒருவரானார்.

குருதேவர் அடியார்கட்குப் பலவகைப்பட்ட சமாதிகளைப்பற்றி விளக்கமாகக் கூறினர். பின்பு இல்வாழ்வின் சுகதுக்கங்களைப்பற்றிய சம்பாஷணை நிகழ்ந்தது. இவ்வளவு துயரத்தைக் கடவுள் படைத்தது ஏன்?

ம—: "ஒரு நாள் வித்யாஸாகரர் மனம் புண்பட்ட நிலையில் பின்வருமாறு கூறலானார்: 'கடவுளிடம் முறையிடுவதில் யாது பயன்? இந்த ஒரு நிகழ்ச்சியைமட்டும் நினைத்துப் பாருங்கள்: ஒரு காலத்தில் சிங்கிஸ்கான் நாட்டைக் கொள்ளையடித்துவிட்டுப் பல மக்களைச் சிறையில் வைத்தான். சிறையில் அடைபட்டவர்களின் தொகை ஏறக்குறைய ஓர் இலக்ஷம் ஆயிற்று. அவருடைய சேனைத் தலைவன் அவரிடம் "அரசே, இவர்கட்கு யார் உணவளிப்பார்? நம்மோடு அவர்களை வைத்திருப்பது ஆபத்து. அவர்களை விடுவிப்பதும் அதேயளவு அபாயமாகும். நான் என் செய்வது?" என்று கேட்டார். சிங்கிஸ்கான் "அது உண்மையே. என்ன செய்யக்கூடும்? சரி, அவர்களையெல்லாம் கொன்றுவிடுக" என்றான். அவ்வாறே அவர்களைக் கண்டதுண்டங்களாக்க உத்தரவு இடப்பட்டது. சரி, கடவுள் இப்படுகொலையைப் பார்த்திருந்தார் அல்லவா? அவர் அதை எவ்வழியிலாவது தடுக்கவில்லை. ஆதலால், கடவுள் இருந்தாலும் சரி, இல்லையானாலும் சரி, எனக்கு அவர் தேவையில்லை, யான் அவரிடம் அடையும் நன்மை யாதொன்றும் இல்லை!"

குருதேவர்: "பகவானது செயலையும், அவரது நோக்கத்தையும் அறிய இயலுமா? அவர் படைக்கிறார், பாதுகாக்கிறார், அவரே அழிக்கிறார். அவர் ஏன் அழிக்கிறார் என்பதை நமக்கு என்றைக்கேனும் அறிய இயலுமா? தேவியிடம் நான் 'அம்மே, எனக்கு அறியவும் வேண்டாம். உனது கமல பாதங்கள்மீது பக்தியை எனக்குக்கொடுத்தருள்க' என்று சொல்கிறேன். மனித வாழ்வின் நோக்கம் பக்தியைப் பெறுவதே. மற்றவற்றைப்பற்றித் தேவியே நன்கு அறிவாள். யான் தோட்டத்திற்கு வந்தது மாங்கனிகளை உண்ணவே. மரங்களையும் கிளைகளையும் இலைகளையும் கணக்கிடுவதில் பயன் யாது? மாங்கனிகளை உண்ணுதல்தான் எனது தொழில், மரங்கள் இத்தனை, இலைகள் இத்தனை என்பதை அறியும் அவசியம் எனக்கு இல்லை."

பாபுராம், ம—, ராம்தயாள் இம்மூவரும் அன்றிரவு குருதேவரது அறையில் தரையின்மீது உறங்கினர்.

அதிகாலையில் சுமார் இரண்டு மூன்று மணி இருக்கும். அறை இருட்டாக இருந்தது. ஸ்ரீராமகிருஷ்ணர் தமது படுக்கையில் உட்கார்ந்திருந்தார். இடை இடையே அடியார்களோடு பேசிக்கொண்டிருந்தார்.

குருதேவர்: "தயையென்னும் இரக்கமும் மாயை என்னும் பற்றும் வெவ்வேறான இருபொருள்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். ஒருவன் தனது உறவினர்களை 'என்னவர்' எனப் பாவித்தலே பற்று என்பது. ஒருவனுக்குத் தன்து பெற்றோர்மீதும் கூடப் பிறந்த ஆண்கள் பெண்கள் மீதும், மனைவி மக்களின்மீதும் எழும் பிரியமே அது. இரக்கம் என்பது, உல

கத்துள்ள எல்லா உயிர்கள்மீதும் ஒருவற்கு உண்டாகும் பிரியமாகும். இது ஸமதரிசன நிலை. (அனைவரையும் ஒன்றுபோலப் பார்க்கும் நிலை). வித்யாஸாகரிடம் காண்பதுபோல், வேறெங்கேயாவது தயைக்கு ஓர் உதாரணம் காண்பீராயின், அது பகவானது அருளால் உண்டாவது என அறிக. தயையினால் ஒருவன் எல்லா உயிர்கட்கும் தொண்டு செய்வான். மாயையும் பகவானிடமிருந்தே வருகிறது. மாயையின் மூலம் பகவான் ஒருவனைத் தனது உறவினர்க்குப் பணிபுரியும்படி செய்கிறார். ஆனால் ஒன்று ஞாபகம் வைத்துக் கொள்ளற்குரியது: மாயை நம்மை அஞ்ஞானத்தில் ஆழ்த்திவைத்து, உலக வலையில் விழச் செய்கிறது; ஆனால், தயை நமது நெஞ்சைத் தூய்மையாக்கி, மெல்ல மெல்ல நமது கட்டுகளை அவிழ்த்து விடுகின்றது.

"நெஞ்சத் தூய்மையின்றிப் பகவானைக் காண இயலாது. காமம் குரோதம் லோபம் என்னும் பகைகளை அடக்குவதனால் ஒருவன் பகவானது அருளைப் பெறுகிறான். காமத்தை வெல்லுதற்காக நான் பலமுறைகளைப் பயின்று பார்த்தேன்.

"எனக்குப் பத்துப் பதினெரு வயதானபோது, நான் கமார்புகூரில் வாழ்ந்த காலத்தில், நான் முதன் முதலாக சமாதியை அனுபவித்தேன், பகவானது தரிசனம் பெறுவதற்குச் சில அடையாளங்கள் உள. பெறுபவன் சோதியைக் காண்பான்; ஆனந்தத்தை அனுபவிப்பான்; ஆகாச வாணம் வெடித்தாற் போல ஒருபெருஞ் சக்தி தன் நெஞ்சிலே மேல் நோக்கி அலையெறிவதை உணர்வான்.

மறுநாள் பாபுராமும் ராம்தயாளும் கல்கத்தாவிற்கு மீண்டனர். ம— பகலையும் இரவையும் குருதேவரோடு கழித்தார்.

5

குருதேவரும் விஜய கோசுவாமியும்

வியாழன், டிசம்பர் 14, 1882—

பிற்பகல் வேளை. உச்சி வேளையில் சிறிது இளைப்பாறிய பின்பு ஸ்ரீராம கிருஷ்ணர் தமது படுக்கையில் உட்கார்ந்திருந்தார். விஜயர், பலராம், ம—, இன்னும் வேறு சில அடியார்களும் குருதேவரை நோக்கிய முகத்தினராய், தரை மீது அமர்ந்திருந்தனர். வாசல்வழியாக அவர்கட்குப் புண்ணிய நதியாகிய கங்கை தெரிந்தது. அப்போது குளிர்காலமாதலால், அனைவரும் சூடுதரும் உடைகளால் தம் உடலைப் போர்த்திக்கொண்டிருந்தனர். விஜயர் வயிற்று வலியால் வருந்திக்கொண்டிருந்தார். தம்மோடு ஏதோ மருந்தும் கொண்டுவந்திருந்தார்.

விஜயர் 'சாதாரண பிரம்ம சமாஜ'த்தில் சம்பளம் பெறும் போதகர்களுள் ஒருவர்; ஆனால் பல விஷயங்களைப்பற்றி அவருக்கும் சமாஜ அதிகாரிகட்கும் அபிப்பிராயபேதம் (கருத்து வேறுபாடு) உண்டு. வங்காளத்தைச் சேர்ந்த மிக்க மேன்மையுற்ற ஒரு குடும்பத்தில் அவர் பிறந்தவர்; அக் குடும்பத்தார் பக்திக்கும் மற்ற ஞான வாழ்வுக்குரிய குணங்கட்கும் பெயர்பெற்றிருந்தவர். அவருடைய வெகுதொலை முன்னோர்களில் ஒருவரான அத்வைத கோசுவாமி ஸ்ரீசைதன்யர்க்கு நெருங்கிய தோழரானவர். ஆக விஜயரது உடலிலே பகவானின் பிரேம பக்தர் ஒருவரது இரத்தம் ஓடிக்கொண்டிருந்தது. பிரம்ம சமாஜத்தைச் சார்ந்தவராதலின், அவர் அருவப் பிரம்மத்தை தியானித்து வந்தார் என்பதில் ஐயமில்லை; ஆனால் அவருடைய புகழ்பெற்ற முன்னோர்களிடமிருந்து அவர்க்குப் பிறவியால் வந்த தெய்வ பக்தி உள்ளடங்கியே இருந்தது; அது தனக்குரிய முழு இனிமையோடு வெளித் தோன்றத் தக்க காலத்தையே எதிர்பார்த்திருந்தது. இக்காரணத்தினால்தான் ஸ்ரீராம கிருஷ்ணரது தெய்வவெறி கொள்ளும் நிலை விஜயரது நெஞ்சைத் தடுக்க முடியாதபடி கவரலாயிற்று; அடிக்கடி அவரோடு சேர்ந்திருக்க விஜயர் விரும்பிய காரணமும் அதுவே. அவர் குருதேவரது வார்த்தைகளை மிக்க மரியாதையோடு கவனித்துக் கேட்பார்; பிரேமையால் ஆனந்த பரவசப்பட்டு இருவரும் சேர்ந்து ஆடுவார்.

பொதுவாக ஞாயிற்றுக் கிழமைகளில்தான் குருதேவரிடம் அடியார்கள் ஏராளமாக வருவார்; இதனால் அவரோடு நெருங்கிப் பேச விரும்புவார் மற்றக்

கிழமைகளில் அவரைக் காண வருவார். அன்று ஞாயிற்றுக்கிழமையல்லாத ஒரு நாள்.

ஆரியாதக என்னும் ஊரில் வாழ்ந்த விஷ்ணு என்னும் ஒரு பையன் சொற்ப காலத்துக்கு முன்புதான் ஒரு கூரிய கத்தியால் தனது கழுத்தை அறுத்துக்கொண்டு தற்கொலை செய்திருந்தான். அவனைப் பற்றிய பேச்சு வந்தது.

குருதேவர்: "அப் பையன் இறந்ததைக் கேட்டபோது நான் மிக வருந்தினேன். அவன் ஒரு பள்ளிக்கூடத்துப் பையன், இங்கே வருவதுண்டு. உலக வாழ்க்கையை அனுபவிக்கத் தனக்கு இயலவில்லையே என்று அவன் அடிக்கடி என்னிடம் சொன்னதுண்டு, மேற்கத்திய மாகாணங்களில் அவன் சில உறவினரோடு வாழ்ந்து வந்தான்; அந்நாளில் அவன் புல்வெளிகளிலும், மலைகளிலும், காடுகளிலும் தனியிடத்தே தியானம் பண்ணுவதுண்டு. பல வடிவங்களில் தெய்வக் காட்சி பெற்றதாக அவன் என்னிடம் சொன்னான்.

"ஒருக்கால் இதுவே அவனது கடைசிப் பிறவி போலும். முந்திய பிறவியிலே அவன் தனது கடமைகளிற் பெரும்பாகத்தை முடித்திருக்கவேண்டும் செய்யாது மிஞ்சிய கொஞ்சமும் இப்பிறவியில் ஒருக்கால் முடிவடைந்தது போலும்."

ஓர் அடியார்: "தற்கொலையைப் பற்றிக் கேட்கும்போது எனக்கு நடுக்கம் உண்டாகிறது."

குருதேவர்: "தற்கொலை கொடும்பாவம் என்பதில் ஐயமில்லை. தற்கொலை செய்பவன் கட்டாயம் திரும்பத் திரும்ப இவ்வுலகிற்கு வந்து துயரத்தை அனுபவித்தாகவேண்டும்.

"ஆனால் தெய்வக் காட்சி பெற்றபின் ஒருவன் தன் உடலை விடுவானேயின், அதை யான் தற்கொலை என்னமாட்டேன். அம்மாதிரி உடலை விடுவதில் கேடு இல்லை; ஞானம் பெற்றபின் சிலர் தமது உடல்களை விட்டுவிடுவார், களிமண்ணைக் கட்டிய கருவில் தங்கச் சிலையை வார்த்த பின்பு, கருவை நீர்பத்திரமாக வைக்கவோ உடைக்கவோ செய்யலாம்.

"பல ஆண்டுகட்கு முன்பு ஏறக்குறைய இருபது வயதுள்ள ஒரு சிறுவன் பராநகோரிலிருந்து கோயில் தோட்டத்திற்கு வருவதுண்டு; அவனது பெயர் கோபால சேன். என் முன்னிலையில் அவன் பக்தி பரவச நிலையை அடைவதுண்டு; அதன் தீவிரத்தன்மையினால் அவன் ஒருக்கால் கீழே விழுந்து, கைகால்களை முறித்துக்கொள்வானே என்று அஞ்சி, இருதயர் அவனைத் தாங்கிக்கொள்ளவேண்டியிருந்தது. அச்சிறுவன் ஒருநாள் எனது காலைத் தொட்டுக்கொண்டு, 'இனி யான் தேவீரைக் காணமுடியாதவனாவேன். நான் உம்மிடம் விடைபெற்றுக்கொள்ளட்டும்' என்று சொன்னான். சில நாள் கட்குப் பின்பு, அவன் இறந்துவிட்டதாக அறிந்தேன்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் உலகப்பற்றுடைய மக்களை வருணிக்கத் தொடங்கினார்.

குருதேவர்: "பந்தத்திற்கு உட்பட்ட மக்கள் உலகப் பற்றுகளில் சிக்கிக்கொண்டவர்களாகி, நல்லறிவு பெருமலே போவார், அவர்கள் எவ் வளவோ துயரப்படுவார், துடிப்பார்; எத்தனையோ ஆபத்துகட்கு உட்படுவார், ஆயினும் அவர்கள் கண் விழிக்கமாட்டார்.

"ஒட்டகம் முட்செடிகளைத் தின்னப் பிரியப்படுகிறது. முட்களைத் தின்னத் தின்ன இரத்தமும் அதேயளவு வாயினின்றும் பெருகியோடுகிறது. என்றாலும் அது முட்செடிகளையே உண்டு தீரும்; அவற்றை அதனால் விடமுடியாது. உலக இயல்புள்ள மனிதனும் எவ்வளவோ துக்கமும் துயரமும் அனுபவிக்கி றான். ஆனால் அனைத்தையும் அவன் சில நாளில் மறந்துவிட்டு மறுபடியும் தனது பழைய வாழ்வையே தொடங்குகிறான். ஒருவன் தனது மனைவியை இழந்ததாகவோ, அவள் நெறி தவறிப் போய்விட்டதாகவோ வைத்துக்கொள் வோம். அவன் மறுபடியும் மணம் புரிந்துகொள்கிறானன்றே!

"வேறோர் உதாரணம் எடுத்துக்கொள்வோம். ஒரு தாய் இருக்கிறாள். அவள் மகனை இழந்து பரிதவிக்கிறாள்; ஆனால் சில நாளைக்குப்பின் அதை முற்றும் மறந்துவிடுகிறாள். சில நாளைக்கு முன்பு சோகத்தில் அவ்வளவு மூழ்கியிருந்த அதே தாய் இப்போது உடலை அலங்கரித்துக்கொள்கிறாள், தனது நகைகளை மீண்டும் அணிந்துகொள்கிறாள். ஒரு தந்தை தனது பெண்களின் கலியாணச் செலவால் மீளாக் கடனாளியாகிறான்; ஆயினும் ஆண்டுதோறும் குழந்தைகளைப் பெற்றுக்கொண்டே போகிறான். மக்கள் வழக்காடி மிகக் கெட்டழிகின்றனர்; ஆயினும் நியாயஸ்தலத்திற்குப் போவதை நிறுத்துவ தில்லை. தாம் பெற்றுள்ள குழந்தைகட்கு உணவும், உடையும் இருக்க வசதி யான இடமும் அளிக்க இயலாத மனிதர் உளர்; ஆனாலும் ஆண்டுதோறும் தம் குழந்தைகளின் தொகையை அதிகமாக்கி வருகின்றனர்.

"இன்னும், ஒரு பெரிய எலியை விழுங்க முயலும் ஒரு பாம்பிற்கு உலகப் பற்றுள்ளவனை உவமை கூறலாம். பாம்பு அந்த எலியை விழுங்கவும் முடி யாது, விட்டுவிடவும் முடியாது. பந்தத்திற்கு உள்ளானவன் உலகிலே சத் தில்லை என்பதையும், உலகம் மரிமாங்காய் (புளிமாங்காய்) போன்று கொட் டையும் தோலும் மட்டும் உடையது என்பதையும் உணர்கிறான்; ஆயினும் அவனால் அதைவிட்டு, மனதைக் கடவுளிடம் திருப்ப இயலாது போகிறது.

"கேசவ சந்திரசேனரின் உறவினர் ஒருவர் ஐம்பது வயதுக் கிழவரை நான் ஒருக்கால் சந்தித்தேன், அவர் சீட்டாடிக்கொண்டிருந்தார். கடவுளை நினைக்கும் காலம் அவர்க்கு அப்போது வரவில்லைபோலும்!

"பந்தத்துக்கு உள்ளானவனிடம் இன்னொரு குணம் உள்ளது, அவனை வழக்கமாக வாழும் மக்கட்கு மத்தியிலிருந்து சாதுக்கள் குடியிருக்கும் இடத் திற்கு அப்புறப்படுத்தினால், அவன் ஏங்கி யேங்கி அழிவான். சாணத்தில் வளரும் புழு அங்கே சுகமாயிருப்பதாக உணர்கிறது. அது சாணத்தில் கொழிக்கும். அரிசிப் பானையில் அப்புழுவைப்போட்டால் அது சாகும்."

எல்லோரும் மௌனமாய் இருந்தனர்.

விஜயர் : "பந்தத்திற்கு உள்ளானவனது மன நிலை எப்படியிருந்தால் அவன் மோக்ஷத்தை அடையக்கூடும் ?"

குருதேவர் : "பகவானது கிருபையால் தீவிர வைராக்கியத்தை வளர்த்து வருவானேயானால், காம காஞ்சன ஆசைகளினின்றும் அவன் தன்னை விடுவித்துக்கொள்ளலாகும். இந்தத் தீவிர வைராக்கியம் மட்டும் உள்ளவன் சொல்லுவான்: 'சரி; எல்லாம் காலக்கிரமத்தில் நடக்கும்; பகவானது நாமத்தை மட்டும் நான் ஜெபிக்கிறேன்.' ஆனால் தீவிர வைராக்கியமுடைய மனிதனை பகவானைக் காணத் துடிக்கிறான், தாய் தனது குழந்தைக்காகத் துடிப்பதுபோன்றே. அவன் இவ்வுலகத்தை ஓர் ஆழமான கிணறுகக் கருதுகிறான். அதில் வீழ்ந்து மூழ்கிவிடப்போகிறதாக உணர்கிறான், தனது உறவினர்களை விஷப் பாம்புகளாக நினைக்கிறான்; அவர்களைவிட்டு விலகியோட விரும்புகிறான். அவன் ஓடியேவிடுகிறான். 'எனது குடும்பத்திற்காக முதலில் ஏதோ ஏற்பாடு செய்துவிட்டு, பின் பகவானைப்பற்றி நினைப்பேன்' என்று ஒருக்காலும் தனக்குட் சொல்லிக்கொள்ளமாட்டான், அவனிடம் உள்ளூரப் பெரும் மன உறுதி உண்டு.

"தீவிர வைராக்கியத்தைப்பற்றி உங்கட்கு ஒரு கதை சொல்லுகிறேன். ஒரு காலத்தில் தேசத்தின் ஒரு பகுதியிலே பஞ்சம் உண்டாயிற்று. குடியானவர்கள் தமது வயல்கட்கு நீர் பாய்ச்ச நீண்ட வாய்க்கால்களை வெட்டத் தொடங்கினர். ஒரு குடியானவன் உறுதியான தீர்மானமுடையவன். ஆற்றையும் தனது வயலையும் ஒரு வாய்க்காலால் இணைக்கும்வரை, தான் வெட்டுதலை நிறுத்தக் கூடாது என்று ஒரு சபதம் செய்துகொண்டான். அவன் வேலையைத் தொடங்கினான். குளிக்கும் நேரம் வந்தது; அவனது மனைவி மகளை எண்ணெயோடு அனுப்பினாள். மகள் தந்தையிடம், 'அப்பா, முன்னமே பொழுது கடந்துவிட்டது. எண்ணெய் தேய்த்துக்கொண்டு குளியும்' என்று சொன்னாள். குடியானவன் 'போ, போ. இப்போது செய்யவேண்டியது எனக்கு எவ்வளவோ உள்ளது' என்று இடித்தாற்போல் பேசினான். உச்சி வேளையும் கழிந்தாய் விட்டது : அப்போதும் குடியானவன் வயலில் வேலை செய்துகொண்டிருந்தான். அவனுக்குக் குளிக்கும் நினைவே எழவில்லை. அப்போது அவனது மனைவி வந்து, 'நீங்கள் ஏன் இன்னும் குளிக்கவில்லை ? சாதம் குளிர்ந்துவிட்டது. நீங்கள் எதையும் அளவிற்கு மிஞ்சியே செய்கிறீர்கள். மிச்ச வேலையை நாளைக்கு முடித்துக்கொள்ளலாகும். வேண்டுமாயின், இன்றைக்கே சாப்பாட்டுக்குப்பின் முடிக்கலாமே' என்றாள். குடியானவன் பெருங் கோபத்தோடு அவளைத் திட்டி, கையும் மண்வெட்டியுமாய் அவளிடம் ஓடி, 'என்ன ? உனக்கு அறிவில்லையா ? மழையோ இல்லை, பயிர்கள் செத்துக்கொண்டிருக்கின்றன. குழந்தைகள் எதைச் சாப்பிடும் ? நீங்கள் அனைவரும் பட்டினிகிடந்து சாவீர்கள். என் வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சும்வரை குளிப்பதையோ உண்பதையோ

பற்றி நினைப்பதில்லை யென்று நான் சபதம் செய்துள்ளேன்' என்று உரக்கக் கூறினான், மனைவி அவனது மனை நிலையைக்கண்டு, பயந்து ஓடிவிட்டாள். ஒருநாள் முழுதும் முதுகு வலி யெடுக்கப் பாடுபட்டு, குடியானவன் பொழுதடையுமுன் ஆற்றிலிருந்து தன் வயலுக்கு ஒரு கால்வாய் வெட்டிவிட்டான். பின் அவன் கீழே உட்கார்ந்து நீர் வயலுக்குள்ளே சளசளவென்று பாய்வதைக் கவனித்தான். அமைதியும் ஆனந்தமும் அவனது உள்ளத்தில் நிறைந்தன. அவன் வீடு சென்று மனைவியை அழைத்து அவளிடம் 'இப்போது நீ எனக்குக் கொஞ்சம் எண்ணெய் கொடு, எனக்குப் புகை குடிக்கவும் தயார் செய்' என்றான். அமைதியுற்ற மனத்தோடு அவன் குளித்தான், உண்டான், படுக்கச் சென்றான். திருப்தியாகக் குறட்டைவிட்டு உறங்கினான். இவன் காட்டிய உறுதியே தீவிர வைராக்கியத்திற்கு ஓர் உதாரணம்.

"இனி, வேறொரு குடியானவனும் இருந்தான்; அவனும் தனது வயலுக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்காக ஒரு வாய்க்காலைத் தோண்டிக்கொண்டிருந்தான். அவனது மனைவியும் வயலுக்கு வந்து, அவனிடம் 'அதிகப் பொழுதாய்விட்டதே. வீட்டுக்கு வாருங்கள். காரியங்களை அளவுக்கு மிஞ்சிச் செய்வது அவசியமில்லை' என்றாள். குடியானவன் அதிகமாக எதிர்த்துச் சொல்லாமல், தனது மண் வெட்டியை ஒரு பக்கம் வைத்துவிட்டு, தன் மனைவியிடம், 'சரி, நீ வீட்டுக்கு வரும்படி வேண்டுகிறாயே, நான் வருகிறேன்' என்றான். (எல்லோரும் சிரித்தல்) இந்த மனிதன் தன் வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சாமலே போனான். இது மந்த மந்த வைராக்கியத்திற்கு உதாரணம்.

"பலமான மன உறுதியின்றிக் குடியானவன் தனது வயலுக்குத் தண்ணீர் கொண்டுவர முடியாது; அதுபோல், தீவிரமான துடிதுடிப்பின்றி ஒரு மனிதனால் பகவானைக் காண இயலாது. (விஜயரிடம்) முன்போல இப்போது அவ்வளவு அடிக்கடி நீர் வாராத காரணம் யாது?"

விஜயர்: "எனக்கு வர மிக்க பிரியம்தான். ஆனால் எனக்கு சுவாதீனம் இல்லை. பிராம்மோ ஸமாஜத்தில் யான் வேலை ஏற்றுக்கொண்டுள்ளேன்."

குருதேவர்: "காமமும் காஞ்சனமுமே மனிதனைக் கட்டுக்குள்ளாக்கி, அவனது சுதந்திரத்தை அவனிடமிருந்து பறித்துவிடுகின்றன. பெண்ணைசையே பணத் தேவையை உண்டாக்குகிறது. பெண்ணிற்காகவே ஒருவன் இன்னொருவனுக்கு அடிமையாகித் தனது சுவாதீனத்தை இழக்கிறான். அப்போது அவன் தன் பிரியப்படி நடக்க இயலாது.

"ஜெய்பூரிலுள்ள கோவிந்தரது கோயிற் பூசாரிகள் முதலில் பிரம்மசாரிகளாயிருந்தனர்; அக்காலத்து அவர்கள் உக்கிரமான குணமுடையரானர். ஒரு நாள் ஜெய்பூர் அரசர் அவர்களைத் தம்மிடம் வரச்சொல்ல, அவர்கள் அவர்க்குக் கீழ்ப்படியவில்லை. அவர்கள் வந்த தூதனிடம். 'அரசரை இங்கு வந்து, எம்மைப் பார்க்கச் சொல்லு' என்றனர். அரசரும் அவரது மந்திரிகளும் கலந்து யோசித்து, அவர்கட்குக் கலியாணத்திற்கு ஏற்பாடு செய்தனர். அதன்

பின் அரசர்க்கு அவர்களை வரச்சொல்லும் அவசியம் நேரவில்லை, அவர்கள் தாமாகவே அவரிடம் வந்து, 'மாட்சியுற்ற அரசர் பெருமானே, நாங்கள் எமது ஆசீர்வாதங்களைக் கொண்டுவந்துள்ளோம். கோவிலில் இறைவனுக்குச் சூட்டிய தூய மலர்கள் இதோ உள்ளன; இவற்றைத் தயவு கூர்ந்து ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று சொல்லுவார்கள். அவர்கள் அரண்மனைக்கு அடிக்கடி வரவேண்டிய காரணம் யாதெனில், ஏதாவது ஒரு காரியத்திற்குப் பணத் தேவை அவர்கட்கு இருந்துவரலாயிற்று. வீடு கட்டவோ, குழந்தைகட்கு அன்னப் பிராசனம் நடத்தவோ, வித்தியாரம்பக் கிரியைக்காகவோ வேறொன் றுக்கோ பணம் எப்போதும் வேண்டியிருந்தது.

(விஜயரை நோக்கி): "பிறர்க்குக் கீழ் வேலைபார்ப்பதனால் நீர் எவ்வளவு தாழ்வடைந்துள்ளீர் என்பதை நீரே காண்கிறீர். மேலும், பற்பல பல்கலைக் கழகப் பட்டங்களைப் பெற்ற மக்களும், பரந்த ஆங்கிலப் படிப்புடைய கல்வி மான்களும் ஆங்கில எஜமானர்களின் கீழ் வேலைக்கு அமர்ந்து, தினமும் அவர் களுடைய செருப்புக் ('பூட்ஸ்') கால்களால் மிதிக்கப்படுவதையும் காண் கிறோம். இதற்கெல்லாம் ஒரே காரணம் பெண்ணே. அவர்கள் மணம் புரிந்து கொண்டு, தமது மனைவியரோடும் குழந்தைகளோடும் ஆடம்பர வாழ்க்கை யைத் தொடங்கிவிட்டார்கள். இப்போது, அவர்கட்கு எவ்வளவு விருப்பம் இருப்பினும், பழைய மாதிரி வாழ முடியாது போகிறது. இதனால் விளைவன, இவ்விதமான எல்லா அவமதிப்புகளும், அவமானங்களும், அடிமைத்தனத்தால் வரும் எல்லாத்துயரமும்.

"தீவிர வைராக்கியத்தால் ஒருமுறை ஒருவன் பகவானைத் தரிசித்து விட்டால், அவன் அதன்பின் மாதர்மீது பற்று அடையான். அவனுக்கு இல் லறத்து வாழும் கட்டாயம் ஏற்படினும், மனைவியைப் பற்றிய அச்சமும் அவள் மீது பற்றும் நீங்கிவிடும். இரு காந்தங்கள், ஒன்று பெரிதும் மற்றொன்று சிறி யதும், இருப்பதாக வைத்துக் கொள்வோம். இரண்டில் எது இரும்பை இழுக்கும்? பெரியதே என்பதில் தடையில்லை. பகவான் பெரிய காந்தம். அவரோடு ஒப்பிடில் பெண் சிறிய காந்தமே. பெண்ணால் என்ன செய்ய முடியும்?

ஓர் அடியார்: "அப்படியானால் நாம் பெண்களை வெறுக்கவா?"

குருதேவர்: "பகவானை உணர்ந்தவன் ஒரு பெண்ணைக் காமப்பார்வை யோடு நோக்கமாட்டான், ஆதலால் அவன் அவளுக்கு அஞ்சான். மாதர் தேவியம்மையின் பற்பல வடிவங்களே என்பதை அவன் தெளிவாகக் காண் கிறான். அவர்களனைவரையும் தேவியாகவே வணங்குகிறான்.

(விஜயரை நோக்கி): இடையிடையே இங்கு வந்து கொண்டிரும். நான் உம்மைக் காணப் பெரிதும் விரும்புகிறேன்."

விஜயர்: "பிரம்ம சமாஜத்திலே எனக்குரிய பல கடமைகளையும் செய்ய வேண்டியிருக்கிறது. இக்காரணம் பற்றியே எனக்கு எப்போதும் இங்குவர

இயலவில்லை. ஆனால் எனக்கு இயலும் போதெல்லாம் தேவரீரைப் பார்க்க வருகிறேன்."

குருதேவர்: (விஜயரிடம்) "ஒரு மதகுருவின் வேலை உண்மையாகவே கடினமானது. இறைவனிடமிருந்து நேராக ஆணையைப் பெறுமல் எவனும் மக்கட்குப் போதிக்க இயலாது. அவ்வாறு அதிகாரம் பெறுது நீர் போதிப்பீ ராஞல், மக்கள் உமது வார்த்தைக்குச் செவிகொடார். அம்மாதிரியான போதனையின் பின்னே சக்தி இருப்பதில்லை. ஞான சாதனங்கள் மூலமாகவோ வேறு ஓர் உபாயத்தாலோ முதன்முதலாகப் பகவானைக் கட்டாயம் அடைய வேண்டும். இவ்வாறு பகவானிடமிருந்து அதிகாரம் பெற்றபின் ஒருவன் பிரசங்கம் செய்யலாம்."

விஜயர்: "பிரம்ம சமாஜ உபதேசங்கள் மனிதர்க்கு மோக்ஷத்தைக் கொடுக்க மாட்டாதனவா?"

குருதேவர்: "ஒரு மனிதனுக்கு இன்னொருவனை உலக பந்தத்தினின் றும் விடுவிக்க எப்போதாயினும் இயலுமா? உலகை மயக்கும் மாயையைப் படைத்த பகவான் ஒருவரே மக்களை மாயையினின்றும் காப்பாற்ற இயலும். சச்சிதானந்தப் பொருளான பரம குருவைத் தவிர வேறு புகல் இல்லை. பக வானைத் தரிசியாதவரோ, அவரது ஆணையைப் பெறுதவரோ, தெய்வ வலிமை யற்ற நிலையில், உலகச் சிறையினின்றும் பிறரை எவ்வாறு விடுவிக்க இயலும்?

"ஒருநாள் யான் 'பைன்'மரச் சோலைக்குச் செல்லும் வழியில் பஞ்சவடி யைத் தாண்டிக்கொண்டிருந்தபோது, ஒரு தவளையின் ஆபத்துக் குரல் என் காதில் விழலாயிற்று. அதை ஒரு பாம்பு பற்றிக்கொண்டிருக்கவேண்டும் என்று நினைத்தேன், சிறிது நேரத்திற்குபின், நான் திரும்பிவரும்போதும், அதன் நடுக்கக் குரல் என் காதில் வீழ்ந்தது. நடப்பது யாது என்பதை அறி வதற்காக உற்று நோக்கினேன்; ஒரு தண்ணீர்ப்பாம்பு அதனைப் பற்றிக் கொண்டிருப்பதைக் கண்டேன். அப்பாம்புக்கு அதனை விழுங்கவோ விட்டு விடவோ இயலவில்லை. ஆதலின் தவளையின் துன்பத்திற்கு முடிவேயில்லை. அதை ஒரு நல்ல பாம்பு பிடித்திருக்குமானால். மிஞ்சினால் மூன்றே கத்துதலோடு குரல் ஓய்ந்திருக்குமே என்று எண்ணினேன். அது நீர்ப்பாம்பேயாதலின், அவ்விரண்டுக்கும் அந்தத் துடிப்பை அடையவேண்டியதாயிற்று. ஒரு மனிதன் ஓர் உண்மையான குருவின் கையிற் படுவானையின், அவனது அகங்காரம் மூன்று குரல்கட்குப்பின் அழிந்துவிடும். ஆனால் குரு பக்குவம் அற்றவராய் இருப்பின், குருவும் சீடனும் முடிவற்ற துயரத்தை அனுபவிப்பர். சீடன் தனது அகங்கரத்தையோ உலக விலங்குகளையோ ஒழிக்க இயலாதவனுவான். ஒரு சீடன் தகுதியற்ற ஒரு குருவின் பிடிக்குள் அகப்படுவானையின் அவன் முத்தி யடையாது போவான்."

விஜயர்: "ஐயன்மீர், நாம் இவ்வாறு பந்தத்திற்கு உட்பட்டிருக்கும் காரணம் யாது? நாம் பகவானைக் காணுதேன்?"

குருதேவர் : "மாயை யென்பது ஜீவனின் அகங்காரமேயன்றி வேறில்லை. இவ் அகங்காரம் ஒருபோர்வையைப் போன்று எல்லாவற்றையும் மூடிக் கொண் டிருக்கின்றது. 'அகங்காரம் சாகும்போது எல்லாத்துயரங்களும் முடிவடை கின்றன. பகவானது அருளால் ஒருவன் தான் கருத்தாவல்லன் என்பதை ஒரு முறைமட்டும் உணர்வானுயின், அவன் அப்போதே ஜீவன் முக்தனுகிருன்; அதாவது, உடலில் வாழும்போதே அவன் முக்தனுகிருன். அவனுக்கு அஞ்சு வது வேருென்றும் இல்லை.

"இம்மாயையாகிய அகங்காரம் ஒரு மேகம் போன்றது. ஒரு மெல்லிய படலம் போன்ற மேகம் சூரியனை மறைக்கக் காரணமாகின்றது; அது நீங்கும் போது சூரியன் தென்படுகின்றது. குருவின் கிருபையால் ஒருவனது அகங் காரம் மறையுமாயின், அவன் பகவானைக் காண்பான்.

"ஜீவன் சச்சிதானந்தத்தின் வடிவமேயன்றி வேறில்லை. ஆனுல் மாயை யெனும் அகங்காரம் பற்பல உபாதிகளைப் படைத்திருத்தலின், ஜீவன் தனது உண்மை வடிவத்தை மறந்துவிடுகிறது.

"ஒவ்வோர் உபாதியும் மனிதனது இயல்பை மாற்றிவிடுகிறது. ஒரு நோயாளியும் உயர்ந்த 'பூட்ஸ்' (காற் செருப்பு) அணிந்து கொள்வானுயின், ஓர் ஆங்கிலேயனைப் போன்று சீட்டியடிக்கவும், படிக்குப்படி குதித்துக் கொண்டே படிக்கட்டின் மீதேறவும் தொடங்குகிருன். ஒரு மனிதனது கையில் ஒரு 'பேனு' மட்டும் இருக்குமாயின், தன் கைக்கு அகப்படும் எக் காகிதத்தின் மீதும் கிறுக்கிக் கொண்டிருப்பான்—ஒரு 'பேனு'வின் சக்தி இவ்வாறுள்ளது!

"பணமும் ஒரு பெரிய உபாதியே. பணத்தைப் பெறுவதனுல் ஒரு மனிதனிடம் எவ்வளவு மாறுபாடு உண்டாகிறது! அவன் அதற்கு முன்னிருந்தது போல் இரான். ஒரு பிராம்மணன் கோயில் தோட்டத்திற்கு அடிக்கடி வருவ துண்டு, வெளிப்பார்வைக்கு அவன் மிகப் பணிவுடையவனுயிருந்தான். ஒரு நாள் நான் இருதயரோடு கொன்னகர் எனும் ஊர்க்குச் சென்றேன், நாங்கள் தோணியைவிட்டுக் கீழே இறங்கியதும், அந்தப் பிராம்மணன் கங்கைக் கரையில் உட்கார்ந்திருப்பதைக் கவனித்தோம். அவன் காற்று வாங்கிக் கொண்டு சுகமாயிருப்பதாக நாங்கள் எண்ணினேம். எங்களைக் கண்டதும், அவன் 'இதோ பாரும் பூசாரியாரே! நீர் எப்படி இருக்கிறீர்? சுகமா?' என்று கேட்டான். நான் அவனது தொனியைக் கவனித்துவிட்டு, இருதயரிடம் 'அந்த மனிதனுக்குப் புதிதாகக் கொஞ்சம் பணம் வந்திருக்கவேண்டும். அதனுல் தான் அவன் அவ்வாறு பேசுகிருன்' என்றேன். இருதயர் சிரித்தார்.

"ஞானம் பெற்றபின்பே ஒருவன் தனது அகங்காரத்தை நீக்கமுடியும். ஞானம் பெற்றபின் அவன் சமாதியை அடைகிருன், அகங்காரம் மறைந்து விடுகிறது. ஆனுல் அம்மாதிரியான ஞானத்தை அடைதல் மிக அரிது.

"ஒருவனை லௌகிகனுக்கி (உலகப் பற்றுள்ளவனுக்கி), காமம் காஞ் சனம் இரண்டிலும் பற்றுக் கொள்ளச் செய்யும் 'நான்' 'தீய நான்' ஆகும்.

இந்த அகங்காரம் இடையே குறுக்கிடுவதினால் தான் ஜீவனுக்கும் ஆத்மனுக்கும் வேறுபாடு உண்டாகிறது. தண்ணீரின்மீது ஒரு கம்பைக் குறுக்காகப் போட்டால், தண்ணீர் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதுபோல் தோன்றுகிறது. ஆனால் உண்மையாக நீர் ஒன்றேதான். கம்பு இருப்பதால் அது இரண்டாகத் தோன்றுகிறது. இந்த 'நான்' அந்தக் கம்பே. கம்பை எடுத்து விடு, நீர் முன்போல் ஒன்றுகவே உள்ளது.

"சரி, இத் 'தீய நான்' என்பது யாது? 'என்ன? அவர்கட்கு என்னைத் தெரியாதா? என்னிடம் எவ்வளவு பணம் உள்ளது? என்னைவிடப் பணக்காரர் யார்?' என்று சொல்லும் அகங்காரம்தான். அம்மாதிரி மனிதனிடமிருந்து ஒரு திருடன் பத்து ரூபாயைத் திருடிக்கொண்டு போவானுயின், முதன் முதலாக அவன் அத்திருடனிடமிருந்து பணத்தைப் பறித்துக் கொள்கிறான், பின் அவனுக்கு நல்ல உதை கொடுக்கிறான். ஆனால் அதோடு நின்றுவிடுவதில்லை. அத்திருடனைப் போலீஸாரிடம் ஒப்பித்து, முடிவில் அவனைச் சிறைச் சாலைக்கு அனுப்புகின்றனன். 'தீய நான்' சொல்லுவதாவது: 'என்ன? யாரிடமிருந்து திருடினன் என்பது இப்போக்கிரிக்குத் தெரியாதா? எனது பத்து ரூபாயைத் திருடவா! அவன் எப்படித் துணிந்தான்?'"

விஜயர்: "ஒருவன் 'நான்' என்பதை அழியாமல், உலகத்தின் மீதுள்ள பற்றை நீக்கவும், அதன் பயனுக சமாதி யடையவும் இயலாது எனில், சமாதியை அடையும் பொருட்டு பிரம்மஞ்ஞான நெறியைப் பின்பற்றுதலே அறிவுடைமையாகும் அன்றே? பக்தி மார்க்கத்தில் 'நான்' ஒழியாது போமாயின், ஞான நெறியை மேலானதாகக்கொள்ளவேண்டும் என்பதாகும்."

குருதேவர்: "சமாதியின் மூலம் ஒருவரோ இருவரோ 'நான்' என்பதை ஒழித்துவிடலாகும்; ஆனால் இம்மாதிரி மனிதரைக் காணல் மிக அரிது. நீர் ஆயிரக்கணக்கான யுக்திகளைக் கொட்டினாலும், அந்த 'நான்' மீண்டும் முளைக்கிறது. நீர் அரச மரத்தை இன்று வேர்வரை வெட்டிவிடலாம், ஆயினும் நாளை ஒரு குருத்து வெளிக் கிளம்புவதைக் கவனிப்பீர். ஆதலின், 'நான்' இருந்துதான் தீரவேண்டுமாயின், அந்தப் போக்கிரி 'வேலைக்கார நான்' ஆக இருக்கட்டும். நீர் உயிரோடிருக்கும் வரை 'ஈசனே, நீ ஆண்டான், நான் உனது அடிமை' என்று நீர் சொல்லவேண்டும். 'நான் பகவானுடைய அடிமை,' 'நான் பகவானுடைய பக்தன்' என்று உணரும் 'நான்' ஒருவனுக்கும் தீங்கு செய்யாது."

விஜயர் (குருதேவரிடம்): "தேவரீர் என்னை 'போக்கிரி நான்' என்பதை விட்டுவிடும்படிச் சொல்லுகிறீர். 'வேலைக்கார நான்' தீங்கு இல்லையா?"

குருதேவர்: "இந்த 'வேலைக்கார நான்'—அதாவது, 'நான்' பகவானுடைய அடிமை, நான் பகவானுடைய பக்தன்' என்ற உணர்ச்சி—ஒருவனுக்கும் தீங்கு செய்யாது. அதற்கு மாறுக, பகவானை அடைய அது துணை செய்யும்."

விஜயர் : "இந்த 'வேலைக்கார நான்' எனும் உணர்ச்சியை வைத்திருப்பவனது காமம் குரோதம் முதலியவைகட்கு என்ன ஆகும் ?"

குருதேவர் : "ஒருவன் உண்மையாகவே இவ்வாறு உணர்வானுயின் அவனுக்குக் காமம் குரோதம் முதலியவை தோற்றத்தில் மட்டும் இருக்கும். பகவானை அடைந்தபின் அவன் தன்னைப் பகவானது வேலைக்காரனுகவோ பக்தனுகவோ பாவிப்பானுயின், அவன் எவனுக்கும் தீங்கு செய்ய முடியாது. பரிச வேதியைத் தொட்ட மாத்திரத்தில் ஒரு வாள் தங்கமாக மாறுகின்றது. அப்போது அதன் வாள் வடிவம் மாறுது; ஆனல் அது தீங்கு செய்ய இயலாது.

"ஒரு தென்னை மரத்தின் உலர்ந்த மட்டை தரையில் விழும்போது, மரத்தின் மீது ஒரு தழும்பு மட்டும் மிஞ்சுகிறது; அந்த இடத்தில் ஒரு மட்டை ஒரு காலத்து இருந்தது என்பதற்கு அத்தழும்பு ஓர் அறிகுறியாகின்றது. அம்மாதிரியே பகவானை அடைந்தவன் அகங்காரத்தைத் தோற்றத்தில் மட்டும் வைத்துக்கொள்கிருன்; காம குரோதங்களின் வெளித்தோற்றம் மட்டும் அவனிடத்தில் இருக்கும். அவன் ஒரு குழந்தைபோல் ஆகிவிடுகிருன். ஒரு குழந்தைக்கு ஸத்துவம் இரஜஸ் தமஸ் என்னும் முக்குணங்களின் மீது பற்று இருப்பதில்லை. அதற்கு ஒன்றின் மீது எவ்வளவு விரைவாகப் பற்று உண்டாகுமோ, அதே விரைவில் பற்றின்மையும் அதற்கு ஏற்படும். ஓர் அணு பொம்மையை அதனிடம் கொடுத்து, அதனிடமிருந்து ஐந்து ரூபாய் பெறும் ஒரு துணியை ஏமாற்றிப் பெறக்கூடும்; என்ருலும் அக்குழந்தை முதலில் மிக்க உறுதியோடு 'மாட்டேன், நான் அதை உனக்குக் கொடுக்கமாட்டேன். என் அப்பா எனக்கு அதை வாங்கித் தந்தார்' என்று சொல்லலாம். இன்னும், எல்லா ஆட்களும் ஒரு குழந்தைக்கு ஒரே மாதிரிதான். அதற்கு ஆட்கள் சம்பந்தப்பட்ட மட்டில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற உணர்ச்சி இல்லை. அது ஜாதியைப் பற்றி ஆராயாது. அதற்குப் பகையும் தெரியாது, எது சுத்தம் எது அசுத்தம் என்பதும் தெரியாது.

"சமாதியை அடைந்த பின்னும் சிலர் 'அடிமை நான்' என்பதையோ, 'பக்தன் நான்' என்பதையோ வைத்திருப்பார். பக்தன் 'நான்' எனும் பாவனையை இழக்கமாட்டான். ஈசனே, நீ ஆண்டான், நான் உனது அடிமை. நீ ஈசன், நான் உனது பக்தன்' என்று அவன் சொல்லுவான். ஈசனைக் கண்ட பின்பும் அவனது பாவனை அவ்வாறே இருக்கும். அவனது 'நான்' முழுதும் துடைக்கப்படுவதில்லை. மேலும், இம்மாதிரியான 'நான்' எனும் பாவனையை இடை விடாது பழகி வருவதனல், ஒருவன் முடிவில் ஈசனது காட்சியைப் பெறுகிருன். இதற்கு 'பக்தி யோகம்' என்று பெயர்.

"பக்தி நெறியைப் பின்பற்றி ஒருவன் பிரம்மஞ்ஞானத்தையும் அடையலாகும். ஈசன் எல்லாம் வல்லவன். ஈசனுக்குத் திருவுள்ளம் ஆயின், அவன் தனது பக்தனுக்குப் பிரம்மஞ்ஞானத்தையும் அருள்வான். ஆனல் பக்தன் பொதுவாகப் பிரம்மஞ்ஞானத்தை நாடான். 'ஈசன் எஜமானன், தான் அடிமை

என்ற பாவனையையோ, 'ஈசன் தேவியம்மை, தான் குழந்தை, என்ற பாவனையையோ வைத்திருக்க அவன் விரும்புவான்."

விஜயர்: ஆனால் வேதாந்த முறைப்படி நித்ய அநித்ய வஸ்து விசாரணை செய்வோரும் ஈசனை அடைகின்றனர் அன்றே?"

குருதேவர்: "ஆம்; வேதாந்த விசாரணையெனும் நெறியைப் பின் பற்றுவதினாலும் அவரை அடையலாகும்; அது ஞானயோகம் எனப்படும். ஆனால் அது மிக வருத்தமான பாதை. 'பிரம்மனே ஸத்யம், ஜெகமோ மித்யை' எனும் ஞானத்தை ஒரு மனிதன் உறுதியாகப் பெறுவானுயின், அவனது மனம் சமாதியில் ஒடுங்கிவிடும். ஆனால், நான் முன்பு சொன்னபடியே கலியுகத்தில் ஒரு மனிதனின் ஆயுள் அன்னத்தையே முழுதும் பொறுத்துள்ளது. 'பிரம்மனே ஸத்யம் ஜெகமோ மித்யை' (பிரம்மனே மெய்ப்பொருள், உலகம் மெய்ப்பொருள்) என்ற உணர்வு அவனுக்கு எவ்வாறு வரும்? 'நான் உடல் அன்று, மனதன்று, இருபத்துநான்கு உலகத் தத்துவங்களும் அன்று, நான் சுக துக்கங்கட்கு அதீதமானவன், மூப்புக்கும் மரணத்திற்கும் எட்டாதவன்' என்ற பாவனையைப் பெறுவது கலியுகத்தில் மிக அரிது. நீர் எவ்வளவோ யுக்தி சொன்னாலும், உடலை ஆன்மாவோடு ஒன்றுனதாகக் கருதும் பாவனை எவ்வாறே எதிர்பாராத ஓர் இடத்திலிருந்து முளைத்துவிடும். உடலோடு ஒன்று படுத்திக்கொள்ளும் செயலை ஒழித்தல் முடியாத காரியமாகும்; ஆதலின் கலியுக மக்கட்குப் பக்தியோகமே மிகச் சிறந்ததாகும், இது ஓர் எளிய பாதை,

"மேலும் 'எனக்குச் சருக்கரையாயிருக்கப் பிரியமில்லை; எனக்கு அதை உண்ணப் பிரியம்' 'நான் பிரம்மன்' என்று சொல்ல, எனக்கு ஒருக்காலும் தோன்றுவதில்லை, 'நீ எனது ஆண்டான், நான் உனது அடிமை' என்றே நான் சொல்லுகிறேன். ஈசனது நாமத்தையும் புகழையும் பாடுவதே எனது விருப்பம், ஈசனை ஒருவன் எஜமானனுகவும் தன்னை அவனது வேலைக்காரனுகவும் கருதுவது மிக நன்று. இன்னும் பாரும், அலைகளை கங்கைக்குச் சொந்தமானவை யென்று மக்கள் சொல்வர்; ஆனால் கங்கை அலைகட்குச் சொந்தமென எவரும் சொல்லார். 'நான் அவனே' என்ற பாவனை நன்மையானதன்று. அம்மாதிரியான கருத்தைக்கொள்ளும் மனிதன், தனது உடலையே பிரம்மனுகக் கருதும்போது, தனக்குப் பெருங்கேட்டையே விளைவித்துக் கொள்கிறான். அவனுக்கு ஞான வாழ்க்கையில் முன்னேறுவது இயலாது; அவன் தன்னையும் பிறரையும் ஏமாற்றிக்கொள்கிறான், அவன் தனது சொந்த நிலையை உணர முடியாதவனுகிறான்.

"ஆனால், எந்தவிதமான ஒரு பக்தியைக் கொண்டேனும் ஈசனைக் காண இயலாது. பிரேம பக்திக்கு மற்றொரு பெயர் ராக பக்தி (ஈசனிடத்து மட்டும் ஒருவனைப் பற்றுக்கொள்ளச் செய்யும் உயர்ந்த அன்பு). அன்பும் பிரேமையும் இல்லாது ஈசனைக் காண முடியாது. ஈசன்மீது அன்பு செலுத்தக் கற்றுக் கற்றுக்கொண்டாலன்றி ஈசனது காட்சியைப் பெற முடியாது.

"வைதி பக்தியெனப்படும் இன்னொரு வகை பக்தியும் உள்ளது; இதன் படி, ஒருவன் ஈசனது நாமத்தை இத்தனைமுறை ஓதவேண்டும், பட்டினி கிடக்க வேண்டும், யாத்திரை செல்லவேண்டும், குறிப்பிட்ட நைவேத்தியங்களோடு ஈசனை வணங்கவேண்டும், இத்தனை யாகங்கள் இயற்றவேண்டும் என்பனவும் பிறவும் விதிகளாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. நீண்ட காலம் அந்த சாதனங் களைத் தொடர்ந்து பழகுவதினால், நாளடைவில் ஒருவன் ராக பக்தியைப் பெறுகிறான். ராக பக்தியைப் பெறும்வரை ஈசனைக் காண முடியாது. ஈச னிடத்து அன்பு செய்தல் கட்டாயமே. ஈசனைக் காணும் பொருட்டு, ஒருவன் உலக வாஞ்சையினின்றும் முற்றும் விடுபட்டுத் தன் முழுமனத்தையும் ஈச னிடம் செலுத்தவேண்டும்,

"ஆனால் சிலர் ராக பக்தியை நேரே பெறுகிறார், அது அவரிடம் உள் ளடங்கியிருக்கிறது. குழந்தைப் பருவ முதலே அவரிடம் அது உள்ளது. சிறு வயதிலேயே அவர்கள் ஈசனைக் காணுதற்காகக் கண்ணீர் வடிக்கின்றனர் வைதி பக்தி யென்பது, காற்றை உண்டுபண்ண ஒரு விசிறியால் வீசிக்கொள் வது போன்றது, காற்றை உண்டுபண்ண விசிறி அவசியமாகின்றது.

"அதுபோல், பக்தியை அடைதற்காக ஒருவன் ஜபமும் தவமும் விரதமும் பழகுகிறான். ஆனால் மலய மாருதம் தானாக வீசும்போது, விசிறியை எவரும் கீழே வைத்துவிடுவர். பக்தியும் பிரேமையும் தாமாக எழுவதை ஒருவன் உணரும்போது, ஜபம், தவம் போன்ற செயல்கள் அவனிடமிருந்து நழுவி விடு கின்றன. பக்தி வெறி கொள்ளும்போது, சாஸ்திரங்களில் விதித்துள்ள கிரியை களை யாரே இயற்றுவார்?

பக்தி பிரேமையாக மாறுதவரை, 'காயா'யிருப்பதெனச் சொல்லுவர்; ஆனால் அது அம்மாதிரிப் பிரேமையாக வளர்ந்த பின்பு 'பழுத்துள்ள'தாகும்.

காயான பக்தியொடு கூடிய ஒரு மனிதனுக்கு ஞான சம்பாஷணையையும் போதனையையும் ஏற்று வளர முடியாது; ஆனால் பழுத்த பக்தியுடையவ னுக்கோ அது முடியும். படம் பிடிக்க உதவும் கண்ணாடியின்மீது விழும் படம் அதில் பதிந்து விடுகிறது. அதற்கு மாறாக, ஒரு வெறும் கண்ணாடித் தகட்டில் ஆயிரக்கணக்கான பிம்பங்கள் வீழ்ந்து பிரதிபலிக்கப்படலாம்; ஆயினும் அவற்றில் ஒன்றேனும் அதிற் பதிவதில்லை. பொருள் விலகும்போது கண்ணாடி முன் இருந்ததுபோல் ஆகிவிடுகிறது. முன்னமே ஒருவனிடம் பக்தி உண்டாகியிருந்தாலன்றி, அவனுக்கு ஞான போதனையை ஏற்று வளர முடியாது."

விஜயர்: "ஈசனை அடைவதற்கு, அவனைக் காண்பதற்கு, பக்தி மட்டும் போதுமா?"

குருதேவர்: "ஆம், பக்தியொன்றினாலேயே ஈசனைக் காணமுடியும்; ஆனால் அது 'பழுத்த பக்தி' 'பிரேம பக்தி' 'ராக பக்தி' என்பதாகக் கட்டாயம் மாறவேண்டும், இந்த பக்தி ஒருவனிடம் இருக்கும்போது, தாய்க்குக் குழந்தை

யிடத்தும், குழந்தைக்குத் தாயிடத்தும், மனைவிக்குக் கணவனிடத்தும் உள்ளது போன்ற அன்பு அவனுக்கு ஈசனிடம் உண்டாகிறது.

"அம்மாதிரியான அன்பு ஈசனிடம் ஒருவற்கு உண்டாகும்போது, அவனுக்கு மனைவி மக்கள் உறவினர் நண்பர்மீது உடலைப்பற்றிய கவர்ச்சி சிறிதும் ஏற்படுவதில்லை. அவர்கள்மீது தயைமட்டும் மிஞ்சுகிறது. அம்மாதிரி மனிதனுக்கு உலகம் ஒரு பதுமையான நாடு போலவும், தனது கடமைகளைச் செய்தற்கு மட்டும் உரிய ஓர் இடம் போலவும் தோன்றுகிறது. கிராமத்திலே சொந்த வீடுடைய ஒரு மனிதன் ஓர் அலுவலுக்காகக் கல்கத்தா வருவதைப்போன்றது அது, அவனுக்குத் தனது அலுவல்களை முடித்தற்காகக் கல்கத்தாவில் ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தவேண்டியிருக்கிறது. ஒருவனுக்குப் பக்தி உண்டாகும்போது, உலகத்தின்மீதும் இலௌகிக அறிவின்மீதும் உள்ள பற்று அவனுக்கு முற்றும் நீங்கிவிடுகிறது.

"உலகப் பற்று ஓர் இம்மியும் இருக்குமாயின், மனிதன் ஈசனைக் காணமாட்டான். தீக்குச்சிகள் ஈரமாயிருப்பின், தீப்பெட்டியின்மீது ஓராயிரங் குச்சிகளைத் தேய்த்தாலும் நெருப்புப் பற்றாது. ஒரு குவியல் குச்சிகளும் வீணவதே மிச்சம். உலகப் பற்றில் நனைந்திருக்கும் மனம் ஈரத் தீக்குச்சி போன்றது.

"ஒருமுறை மட்டும் பக்தனிடத்து இந்த பக்தியும் பிரேமையும் ஈசன்மீது எழுமாயின், இம்முதிர்ந்த பக்தியும் அவாவும் தோன்றுமாயின், அவன் ஈசனை ஸாகாரம் (உருவம்) நிராகாரம் (அருவம்) எனும் இரு நிலைகளிலும் தரிசிப்பான்."

விஜயர்: "எவ்வாறு ஒருவன் ஈசனைக் காணலாம்?"

குருதேவர்: "மனத்தூய்மை (சித்த சுத்தி) யின்றி ஈசனைக் காண முடியாது. காம காஞ்சனப் பற்றுகளால் மனம் மாசடைந்துள்ளது, அழுக்கு மூடியுள்ளது என்போம். ஓர் ஊசி மண்ணைப் பூசப்பட்டிருக்குமாயின் காந்தம் அதனை இழுக்கமாட்டாது. அந்த மண்ணைக் கழுவியதும், காந்தம் அதனை இழுக்கும். அதுபோல், மன அழுக்கை நமது கண்ணீரால் கழுவக்கூடும். பழைய செயலை நினைத்துக் கண்ணீர் வடித்து, 'இனி யான் ஒருக்காலும் தீச்செயல் செய்யேன், ஈசா' என்பானுயின், அம்மாசு நீங்கும். அப்போது காந்தம் போன்ற ஈசன் ஊசி போன்ற மனதைத் தன்பால் இழுத்துக்கொள்கிறான். அப்போது பக்தன் சமாதியிற் புகுந்து, ஈசனது காட்சியைப் பெறுகிறான்.

"நீர் ஆயிரந் தடவை முயலலாம், ஆனால் ஈசனது அருளின்றி ஒன்றையும் பெற முடியாது. ஈசனை அவனது கருணையின்றி எவனும் காண முடியாது. கருணையைப் பெறுதல் எளிதா? அதற்கு அகங்காரத்தை முற்றும் ஒழித்தல் வேண்டும்; 'நான் கருத்தா' என்ற உணர்ச்சி உள்ளவரை ஈசனைக் காண முடியாது.

"தனக்குத்தானே எஜமானன் என உணருபவனது நெஞ்சில் ஈசன் எளிதாகத் தோன்றுவதில்லை, ஈசனது அருள் இறங்கும் கணமே அவனைக் காண முடியும். அவன் ஞான சூரியன். அவனது ஒற்றைக் கதிரே இவ்வுலகிற்கு

அறிவொளியை ஊட்டி வெளிச்சம் தந்துள்ளது. நமக்கு ஒருவரை ஒருவர் காண முடிவதும், பலவகையான அறிவைப்பெற முடிவதும் இவ்வாறேயாகும், ஈசன் தனது ஒளியைத் தனது முகத்தின்மீது திருப்பினால் மட்டும் ஈசனை ஒருவன் காண முடியும்.

" போலீஸ் அதிகாரி (ஸார்ஜண்ட்) இரவில் இருளில் தன் கையில் (ஒரு பக்கத்து வழியாக மட்டும் வெளிச்சம் வரும்) ஓர் இராந்தலைக்கொண்டு வெளியே சுற்றப் போகிறான், அவனது முகத்தை எவனும் பார்ப்பதில்லை; ஆனால் அவ்வெளிச்சத்தின் உதவியால் அந்த அதிகாரி ஒவ்வொருவனுடைய முகத்தையும் பார்த்துக்கொள்ளுகிறான். பிறரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கின்றனர். உமக்கு ஸார்ஜண்டைப் பார்க்கப் பிரியமாயின் நீர் அவரிடம் 'ஐய, வெளிச்சத்தை உமது முகத்தின்மேல் திருப்பும்; நான் உம்மைப் பார்க்கட்டும்' என்று வேண்டிக்கெரள்ளவேண்டும், அம்மாதிரியே ஈசனிடத்தும் 'ஈசா, நான் உமது முகத்தைக் காணும்படி கருணையால் ஞான வொளியை உம்மீதே திருப்பியருளும்' என்று பிரார்த்தித்தல் அவசியம். வெளிச்சம் இல்லாத வீடு தரித்திரத்தைக் குறிக்கிறது. ஆதலின் ஞான விளக்கை ஒவ்வொருவனும் தனது நெஞ்சில் ஏற்றிக்கொள்ளவேண்டும்."

விஜயர் மருந்துகொண்டு வந்திருந்தாராதலின் குருதேவர் ஓர் அடியாரை அவர்க்குத் தண்ணீர் கொடுக்குமாறு வேண்டினர். குருதேவர் உண்மையாகவே இரக்கத்திற்கு ஓர் ஊற்றாய் இருந்தார். தோணிக்குக் கூலி கொடுக்க முடியாதபடி விஜயர் ஏழையாய் இருந்ததினால், அவர்க்கு அதைக் கொடுப்பதற்கும் குருதேவர் ஏற்பாடு செய்திருந்தார். விஜயர், ம—, பலராம் மூவரும் அடியார்களோடு ஒரு நாட்டுப்புறத் தோணியில் கல்கத்தாவுக்குச் சென்றனர்.

வெள்ளி, மார்ச்சு 9, 1883

காலையில் ஏறக்குறைய ஒன்பது மணிக்குக் குருதேவர் தமது அறையில் ராக்கால் ம— முதலிய இன்னும் சில அடியார்களோடு உட்கார்ந்திருந்தார். அன்று அமாவாசை நாள். அந் நாளில் அவருடைய வழக்கம்போல, ஸ்ரீ ராம கிருஷ்ணர் தேவியோடு நெருங்கி யளவளாவும் சமாதி நிலைக்குள் மீண்டும் மீண்டும் புகலானர்.

உலகிலே இல்லறத்தானது வாழ்வைப் பற்றிய பேச்சு எழுந்தது.

குருதேவர்: " இவ்வுலகம் கரும பூமி, கருமத்தால் ஒருவன் ஞானம் பெறுகிறான். குரு தமது சீடனுக்குச் சில கருமங்களைச் செய்யவேண்டும் என்றும், மற்றையவற்றை விலக்கவேண்டும் என்றும் போதிக்கிறார், இன்னும் பயனை விரும்பாது கருமம் புரியும்படி சீடனுக்கும் புத்திமதி கூறுகிறார், கடமையைச் செய்வதின் மூலம் மனத்தின் அழுக்கு அழிவடைகிறது. தக்கதொரு வைத்தியன் சொன்னபடி மருந்து சாப்பிட்டு ஒரு நோயைப் போக்கிக் கொள்வது போன்றது அது.

"ஈசன் நம்மை இவ்வுலகினின்றும் விடுவியாததேன்? நோய் குணமானதும் அவர் நம்மை விடுவிப்பார். காம காஞ்சன சுகங்களை நாம் அனுபவித்து முடிந்ததும் அவர் நம்மை இவ்வுலகினின்றும் வெளியேற்றி விடுவார்."

இந்நாளில் ஸ்ரீ ராமகிருஷ்ணரது நெஞ்சத்தில் தாயன்பு பொங்கி வழியலாயிற்று. ஆதலால் அவர் ராக்காலைத் தம்மோடு வைத்திருந்தார். குழந்தைக்குத் தாயிடம் இருக்கும் பாவனை ராக்காலுக்குக் குருதேவரிடம் இருந்தது. ஒரு சிறு குழந்தை பால் குடிக்கும்போது தாய்மீது சாய்ந்துகொண்டிருப்பது போல அவர் குருதேவரது மடிமீது சாய்ந்துகொண்டு உட்கார்ந்திருப்பார்.

ராக்கால் இம்மாதிரி குருதேவரது அருகே அமர்ந்திருந்தபோது, ஒரு மனிதன் அறைக்குட் புகுந்து, கங்கையிலே பொங்கு கடலின் அலை வந்து கொண்டிருப்பதாகச் சொன்னன். குருதேவரும் அடியார்களும் அதைப் பார்ப்பதற்காகப் பஞ்சவடிக்கு ஓடினர்கள். ஒரு தோணி அந்த அலையால் அங்குமிங்கும் தள்ளப்படுவதைக் கண்ட ஸ்ரீராமகிருஷ்ணர் "பாருங்கள்! பாருங்கள்! அதற்கு ஆபத்து வராதென்று நம்புகிறேன்" என்று கூறினர்.

அவர்கள் எல்லோரும் பஞ்சவடியில் அமர்ந்தனர். குருதேவர் ம—விடம் பொங்கு கடலின் அலை எழும் காரணத்தை விளக்குமாறு வேண்டினர். ம—தரையில் சூரியன், சந்திரன், பூமி இவற்றின் படங்களை வரைந்து, பொருட் கவர்ச்சி, பொங்கு கடலின் அலை, வடி கடலின் அலை, அமாவாசை, பௌர்ணமி, கிரகணம் முதலியவற்றை விளக்க முயன்றனர்.

குருதேவர் (ம—விடம்): "அதை நிறுத்து! நீ சொல்வது எனக்கு விளங்கவில்லை. அதனால் எனக்குத் தலை சுற்றுகிறது; எனக்கு மூளை வலிக்கின்றது! சரி, அவ்வளவு தூரத்திலுள்ளவைகளைப் பற்றி அவர்கட்கு எப்படி அறிய முடியும்?

"என் குழந்தைப் பருவத்தில் நான் நன்றாகச் சித்திரம் எழுதுவேன்; ஆனால் கணக்கோ என் தலையைச் சுற்றச் செய்யும். எளிதான கணக்குக்கூட என்னால் கற்றுக்கொள்ள முடியவில்லை."

குருதேவர் பகற் சாப்பாட்டுக்குப் பின் சுகமாகச் சிறிது நேரம் உறங்கினர். ஆதரும் மற்ற அடியார்களும் வரவரச் சேர்ந்துகொண்டனர். இதுதான் ஆதர் இங்கு வந்த முதல் முறை. அவர் ஒரு 'டெபுடி மாஜிஸ்திரேட்' (தண்டனை விதிக்கும் அதிகாரி), ஏறக்குறைய முப்பது வயதானவர்.

குருதேவர்: "அதிகமாக ஒருவர் விசாரணை செய்யக்கூடாது; தேவியின் பாத கமலங்களிடத்துப் பக்தி இருந்தால் போதும். அளவிற்கு மிஞ்சிய விசாரம் மனதிற்குக் குழப்பத்தை உண்டாக்கும். ஒரு சிறு குளத்தில் மேலாக நீரைக் குடித்தால் உமக்குத் தெளிவான நீர் கிடைக்கும். உமது கையை ஆழத்தில் விட்டு நீரைக் கலக்குவீரானால், அது கலங்கிவிடும். ஆதலின் பக்தி வேண்டுமென ஈசனிடம் பிரார்த்தியும்."

அடியார்: "ஈசனைக் காண முடியுமா?"

குருதேவர்: "ஆம் நிச்சயமாக முடியும். ஈசனுடைய ஸாகார (உருவ) நிராகார (அருவ) நிலைகள் இரண்டையும் காண முடியும். ஈசனை ஸாகார வடிவத்தில் சின்மய ரூபத்தில் தரிசிக்கலாகும்; இன்னும் ஒரு மனிதனிடம் தூல வடிவோடு ஈசன் விளங்குவதையும் நேரிற் காணலாகும். ஈசனது அவதாரத்தைக் காணல் ஈசனைக் காணுதலே யாகும். ஈசன் ஒவ்வொரு யுகத்திலும் பூமியில் மனிதனைப் பிறக்கிறான்."

ஞாயிறு, மார்ச்சு 11, 1883

இன்று ஸ்ரீராமகிருஷ்ணரது ஜென்ம திதி (பிறந்த நாள்). அவரது சீடர்களும் அடியார்களும் ஆன பலர் தக்ஷிணேசுவரத்துக் கோயிற் பூஞ்சோலையிலே அந்த இன்பமான நாளைக் கொண்டாட விரும்பினர்.

அதி காலையிலிருந்தே அன்பர்கள் தனியாகவோ கூட்டங் கூட்டமாகவோ பெருகலாயினர். கோயிலிற் காலைப் பூஜை முடிந்ததும், இனிய சங்கீதம் பானர் மண்டபத்தே நிகழ்ந்தது. அப்போது வசந்தகாலம். மரங்களும் கொடிகளும் செடிகளும் புதிய இலைகளாலும் மலர்களாலும் மூடப்பட்டிருந்தன. சூழ இருந்த காற்றும் ஆனந்தத்தைச் சுமந்து நின்றதுபோல் தோன்றிற்று. அடியார்களின் நெஞ்சங்களில் அம்மங்கள நாளில் ஆனந்த பூரிப்பு இருந்தது.

ம— அதிகாலையிலே வந்து சேர்ந்தார்; குருதேவர் புன்சிரிப்போடு பவநாத் ராக்கால் காளிகிருஷ்ணர் இம்மூவரோடும் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டார்.

குருதேவர் (ம—விடம்): "நீ வந்தது பற்றி எனக்கு மகிழ்ச்சி.

(அடியார்களை நோக்கி): "ஞானமோ பகையோ பயமோ ஒருவனிடம் இருக்கும்வரை அவன் ஞானம் பெற இயலாது. இன்று ஆனந்தம் பெருகியோடும். ஆனால் பகவானது நாம வெறிகொண்டு பாடவோ ஆடவோ மாட்டாத மூடர் ஒருக்காலும் ஈசனை அடையார். பகவானுடைய நாமங்களைப் பாடும்போது ஞானமோ பயமோ எப்படி ஒருவர்க்கு உண்டாக முடியும்? இப்போது நீங்கள் எல்லோரும் பாடுங்கள்."

பவநாத்தும் அவரது நண்பர் காளிகிருஷ்ணரும் பாடினர். ஸ்ரீராமகிருஷ்ணர் அப்பாட்டைக் கூர்ந்து கேட்டதும், அவர் தியானத்தில் முழ்கிவிட்டார். சிறிது நேரம் சென்றபின், காளிகிருஷ்ணர் பவநாத்திடம் ஏதோ காதுக்குள் மெதுவாகப் பேசினர். பின்பு அவர் குருதேவர் முன்பு பணிந்து எழுந்தார். ஸ்ரீராமகிருஷ்ணர் ஆச்சரியப்பட்டார், "நீ எங்கே போகிறாய்?" என்று அவரிடம் கேட்டார்.

பவநாத்: "அற்ப அலுவல் காரணமாக அவர் போகிறார்."

குருதேவர்: "என்ன காரியமாக?"

பவநாத்: "அவர் 'பராநகோர் வேலையாளர் கல்வி நிலைய'த்திற்குச் செல்கிறார்."

குருதேவர்: "அது அவரது துரதிர்ஷ்டமே. இன்று இங்கு ஆனந்தம் பெருகியோடும். அவர் அதை அனுபவிக்கக் கூடுமன்றே? ஆனால் என்ன துர்ப்பாக்கியம்!"

ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கு உடம்பு நன்றாயில்லை. ஆதலின் அவர் கங்கையில் குளிக்கவேண்டாம் என்று தீர்மானித்தார். ஏறக்குறைய மணி ஒன்பதிற்குக் கங்கை நீரைச் சில குடங்களிற் கொணர்ந்தனர்; சில அடியார்களின் உதவியால் அவர் தமது அறைக்குக் கீழேயுள்ள தாழ்வாரத்தில் நீராட்டத்தை முடித்துக்கொண்டார். குருதேவர் ஈசனது நாமத்தை ஓதிக்கொண்டே ஒரு புதிய ஆடையை அணிந்துகொண்டார். ஒன்றிரண்டு சீடர்கள் உடன் செல்ல அவர் முற்றத்தின் வழியாகக் காளி கோயிலை நோக்கி நடந்துகொண்டிருந்தார். அப்போது தேவியின் திருநாமத்தை ஜெபித்துக்கொண்டிருந்தார். அவரது கண்களிலே மனம் அகமுகமான பார்வை இருந்தது. அடைகாக்கும்போது உள்ள ஒரு பறவையின் பார்வையை அது ஒத்திருந்தது.

கோயிலுக்குள் புகுந்ததும், அவர் திருவுருவத்தின் முன்பு வணங்கி, பின் தேவியைப் பூஜித்தார். ஆனால் பூஜைக்குரிய கிரியைகளில் ஒன்றையும் இயற்றவில்லை. ஒருமுறை அவர் திருவடிவத்தின் பாதங்களில் மலரையும் சந்தனத்தையும் இடுவார்; ஒருமுறை அவற்றைத் தமது முறைப்படி பூஜையை முடித்த பின் அவர் தேவிக்கு இட்ட இளநீரை எடுத்துச் செல்லும்படி பவநாதரிடம் சொன்னார். விஷ்ணுகோயிலிலுள்ள இராதை கிருஷ்ணன் இருவரது திருவுருவங்களையும் தரிசித்தார்.

குருதேவர் தமது அறைக்குத் திரும்பியதும், மற்ற அடியார்கள் அங்கு வந்திருந்ததைக் கண்டார்! அவர்களுள் ராம் நித்யகோபால் கேதார் மூவரும் இருந்தனர். அவர்கள் குருதேவரை வணங்க, அப்பெரியார் அன்போடு வரவேற்கப்பட்டார்.

குருதேவர் (அடியார்களை நோக்கி): "சாதாரண மக்கள் பகவானது அவதார நிகழ்ச்சியை உணரமாட்டார்; அவர் இரகசியமாகவே வருகிறார். அவரது அந்தரங்க சீடர்களில் ஒரு சிலர்க்கு மட்டும் அவரை உணரலாகும். ராம பிரான் பூரணப் பிரம்மமாயும், மனித வடிவந்தரித்த பூரண அவதாரமாயும் இருந்ததைப் பன்னிரண்டு ரிஷிகளே அறிந்திருந்தனர். மற்றைய ரிஷிகள் அவரிடம், "ராமா, உம்மைத் தசரத குமாரராகவே அறிவோம்' என்றனர்."

சிறிது நேரத்தில் கொன்னகரிலிருந்து சில அடியார்கள், மத்தளம் தாளம் எனும் பக்க வாத்தியங்களோடு கீர்த்தனம் பாடிக்கொண்டே வந்தனர். அவர்கள் ஸ்ரீராமகிருஷ்ணரது அறையின் வடகிழக்குத் தாழ்வாரத்தை அடைந்ததும், குருதேவர் கீர்த்தனத்திற் கலந்து தெய்வீக ஆனந்த வெறிகொண்டு, அவர்களோடு கூத்தாடினர். இடையிடையே அவர் சமாதியடைந்து, சிலையைப்போல் அசையாது நின்றனர்; பரவசப்பட்டுத் தம்மை மறந்திருக்கும் இந்நிலைகள் ஒன்றினில் அவர் இருந்தபொழுது, அடியார்கள் அவரது கழுத்தைச் சுற்றிக்

கனத்த மல்லிகை மாலைகளை அணிந்தனர். குருதேவரின் மோஹன வடிவம் இன்னொரு அவதாரமாகிய சைதன்யரை அவர்கட்கு நினைவூட்டியது. குருதேவர் (பக்தி பரவசத்தால் விளையும்) பாவக சமாதி நிலைகள் மூன்றின் வழியாகவும் மாறி மாறிச் சென்றனர்; அவையாவன: புற உலக உணர்ச்சியை முற்றும் இழந்திருக்கும் உன்முக நிலையும், பக்தி பரவசத்தால் அடியார்களோடு ஆடும் அரையுணர்வு நிலையும், அவர்களோடு கூடி உரத்த குரலிற் பாடும் புற உணர்வு நிலையும். குருதேவரது கழுத்திலிருந்து நறுமணம் வீசும் மாலைகள் தொங்க அவரது திருமுகத்தே பக்தி ஒளிவீச, அடியார்கள் அவரைச் சுற்றிப் பாடியும் ஆடியும் வர, அவர் சமாதி நிலையில் அசைவற்று நிற்கும் காட்சி உண்மையில் அமரர்க்கும் கண் கொள்ளாக் காட்சியாகும்.

மத்தியான உணவு வேளை வந்ததும், ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு புதிய மஞ்சள் ஆடையை அணிந்து. சிறிய கட்டிலில் அமர்ந்திருந்தனர், அவரது பொன்னிறம் அவரது மஞ்சளாடையின் நிறத்தோடு மருவியொன்றுன மாட்சி அடியார்களின் கண்களைக் கவர்ந்தது.

உண்டபின் ஸ்ரீராமகிருஷ்ணர் சிறிய கட்டிலின்மீது சற்றுப் படுத்தனர். அவரது அறைக்கு உள்ளேயும் வெளியிலும் அடியார்கள் கூட்டமாகத் திரண்டிருந்தனர்: அவர்கட்குள்ளே கேதார் சுரேஷ் ராம் மனமோஹன் கிரீந்திரா ராக்கால் பவநாத் ம— என்பாரும் இருந்தனர். ராக்காலின் தந்தையாரும் வந்திருந்தனர்.

ஒரு வைணவ கோசுவாமி அறையில் உட்கார்ந்திருந்தனர். குருதேவர் அவரிடம், 'நீர் என்ன சொல்கிறீர்? எது பாதை?' என்று கேட்டார்.

கோசுவாமி: "ஐயன்மீர், பகவானது நாம் ஸங்கீர்த்தனமே போதும். கலியுகத்திற்குப் பகவானது நாமமே புனிதமானது எனச் சாஸ்திரங்கள் வற்புறுத்தி உரைக்கின்றன."

குருதேவர்: "பகவானது நாமத்தின் புனிதத் தன்மையைப் பற்றி யாதொரு ஐயமும் இல்லை. ஆனால் நாம மட்டும் போதுமா? அதனோடு பக்தர்க்குரிய அன்பும், துயரத்தால் ஏக்கமும் இல்லாதபோது, அது என்ன பயனைத் தரும்? இறைவனைக் காணுது ஆற்றுமையால் பெருந் துடிப்புக்கொள்ளவேண்டும். ஒருவன் பகவானது நாமத்தை நாவால் மட்டும் உரைத்துக்கொண்டிருப்பதாக வைத்துக்கொள்வோம்; அவனது மனம் காம காஞ்சனங்களில் மூழ்கியிருக்குமாயின், அவனால் யாதேனும் பெறக்கூடுமா? பகவானது புனித நாமத்தை ஓதி ஒரு மனிதன் தூய்மை யடைந்ததாகவும், ஆனால் உடனே பின்பு பல பாவங்களைச் செய்வதாகவும் வைத்துகொள்வோம். அப்போது அவனிடம் மனவலிமை ஏது? தனது பாவங்களை மீண்டும் செய்வதில்லை யென்று அவன் சபதம் செய்துகொள்வதில்லையே. கங்கையில் குளிப்பதனால் ஒருவனுக்கு எல்லாப் பாவங்களும் போய்விடும் என்பதில் சந்தேகம் இல்லை: ஆனால் அதனால் என்ன லாபம்? கங்கைக் கரையிலுள்ள மரங்களின் மீது அப்பாவங்கள்

உட்கார்ந்திருக்கின்றன என்று சொல்கின்றனர். அம்மனிதன் திரும்ப வந்ததும் பழைய பாவங்கள் மரங்களிலிருந்து அவனுடைய தோள்களின் மீது குதிக்கின்றன. (எல்லோரும் சிரித்தல்) அதே பழைய பாவங்கள் மறுபடியும் அவனைப் பற்றிக்கொள்கின்றன. அவன் தண்ணீரை விட்டு வெளி யேறியதும், அவை அவனைப் பிடித்துக்கொள்கின்றன.

"ஆதலால் நான் சொல்வதாவது: ஈசனது நாமத்தைப் பாடுங்கள்; அதோடு அவர் மீது பக்தி உண்டாகவேண்டும் என்று அவரிடம் பிரார்த்தியுங்கள். செல்வம் புகழ் வாழ்க்கைக்குரிய சுகங்கள் போன்ற அநித்தியமான பொருள்களின் மீது உங்கட்குப் பற்று நாளுக்கு நாள் குறைந்து வரவேண்டும் என்று ஈசனிடம் பிரார்த்தியுங்கள்.

(கோசுவாமியிடம்): "அந்தரங்க சிரத்தை இருக்குமாயின் எல்லா மதங்கள் மூலமாகவும் ஈசனை அடையலாம். வைணவர்களும் பகவானை அடைவார்கள்; அதைப் போலவே சாக்தர்களும், வேதாந்திகளும், பிராம்மோக்களும், முசல்மான்களும், கிறிஸ்தவர்களும் அவரைப் பெறுவார்கள். அந்தரங்க சிரத்தை இருக்குமானால் எல்லோரும் ஈசனை அடைவது நிச்சயம்.

"சில ஜனங்கள் 'எமது கிருஷ்ணனை வணங்கினாலன்றி ஒருவனுக்கு எதுவும் பெற முடியாது' என்றும், 'எமது தெய்விக அன்னை யாகிய காளியை வணங்காமல் எதையும் அடைய முடியாது' என்றும், 'கிறிஸ்தவ மதத்தை ஒப்புக் கொள்ளாமல் எவனும் கடைத்தேற முடியாது' என்றும் சொல்லிக்கொண்டு, சண்டை செய்கின்றனர். இது வெறும் மத வெறியே. 'என் மதமட்டும் உண்மை, மற்றவருடைய மதங்கள் பொய்யானவை' என்று மதவெறியன் சொல்வான். இது கெட்ட மன நிலை. ஈசனைப் பல வெவ்வேறு பாதைகளால் அடைய முடியும்.

"மேலும், பகவான் உருவமுள்ளவர் என்றும் உருவமற்றவர் என்றும் சிலர் சொல்கின்றனர். இவ்வாறு அவர்கள் சண்டையை ஆரம்பிக்கின்றனர். ஒரு வைணவர் ஒரு வேதாந்தியோடு சண்டை யிடுகின்றனர்.

"ஒருவன் ஈசனைக் கண்ட பின்பே அவனைப் பற்றிச் சரியாகப் பேசமுடியும். ஈசனைக் கண்டவனுக்கு, ஈசனுக்கு உருவ முண்டு என்பதும், ஈசன் அருவமாயு மிருப்பவன் என்பதும் உண்மையாகத் தெரியும். வருணிக்க முடியாத வேறு பல நிலைகளும் அவர்க்கு உள்ளன.

"ஒரு நாள் சில குருடர்கட்கு ஒரு மிருகத்தின் அண்டையில் வரும் சந்தர்ப்பம் வாய்ந்தது; யாரோ ஒருவர் அதை யானை என்றனர். யானை எப்படி உள்ளது என்று குருடர்களைக் கேட்டனர். குருடர்கள் அதன் உடலைத் தொட்டுப் பார்க்க ஆரம்பித்தனர். அவர்களில் ஒருவன், யானை ஒரு தூணைப்போல் உள்ளது என்றான்; அவன் அதன் காலை மட்டும் தொட்டவன். இன்னொருவன் அது முறம் போன்றது என்றான்; அவன் அதன் காதைமட்டும் தொட்டவன். இம்மாதிரியே மற்றோரும் அதன் வாலையோ வயிற்றையோ தொட்டுப் பார்த்து

விட்டு, யானையைப் பற்றித் தாம் அறிந்தவாறே பல விதமாகப் பேசினர். அது போலவே பகவானின் ஒரு பகுதியை மட்டும் கண்டவனுக்கு அதுதான் பகவான், வேறெதாகவும் இருக்க முடியாது என்ற நிச்சய புத்தி உண்டாகிறது.

(கோசுவாமியிடம்): "ஈசர் உருவமுற்றவர் என்பதே அவரைப் பற்றிய ஒரே உண்மை என்று நீர் எப்படிச் சொல்லமுடியும்? ஈசன் கிருஷ்ணவதாரம் போல மனிதவடிவத்தோடு இவ்வுலகிற்கு இறங்குகிறார் என்பது சந்தேக மற்ற உண்மைதான். அவர் தமது அடியார்கட்குப் பற்பல உருவங்களோடு தம்மைக் காட்டி யருள்கிறார் என்பதும் உண்மைதான். ஆனால் ஈசர் உருவமற்றவர் (நிராகாரம்) என்பதும் உண்மையே. அவர் அகண்ட சச்சிதானந்தப் பரம் பொருளும் ஆவார். வேதங்கள் அவரை உருவ மற்றவராகவும் உருவ முள்ளவராகவும் கூறியுள்ளன. ஸகுணமாகவும் நிர்க்குணமாகவும் அவர் இருப்பதாக அவை பேசுகின்றன."

கேதார்: "வியாசர் தம்மிட மிருந்த மூன்று தோஷங்கட்காகப் பகவானிடம் மன்னிப்புக் கேட்டதாகப் பாகவதம் கூறுகிறது. அவரது பிரார்த்தனை யாவது: 'பிரபுவே, நீர் உருவமில்லாதவர், ஆனால் எனது தியானத்தில் உம்மை உருவத்தோடு கூடியவராகப் பாவித்துளேன்; நீர் வாக்குக்கு எட்டாதவர், ஆனால் நானே உம்மீது தோத்திரங்கள் பாடியுள்ளேன்; நீர் எங்கும் பரந்து வாழும் உயிர், ஆனால் நானே பல தலங்கட்கும் யாத்திரை செய்துளேன். என் மீது நீர் கருணையைச் சொரிந்து, எனது தோஷங்களாகிய இம் மூன்றையும் மன்னித்தருள்வீராக!'"

குருதேவர்: "ஆம், ஈசர் உருவமுடையார், அருவமுமாவார். இன்னும், உருவம் அருவம் இரண்டையும் கடந்தவர். எவனும் அவர்க்கு எல்லை கட்ட முடியாது."

பிற்பகலில் அடியார்கள் பஞ்சவடியில் பாடினர்; அப்போது குருதேவரும் சேர்ந்துகொண்டனர். அன்று எல்லோர்க்கும் மிக்க ஆனந்தமான ஒரு நாளாயிற்று.

மாலையில் ஏறக்குறைய ஆறு மணிக்குக் குருதேவர் தமது அறையின் தென்கிழக்குத் தாழ்வாரத்தில் அடியார்களோடு அமர்ந்திருந்தார்.

குருதேவர்: "உலக வாழ்வைத் துறந்துவிட்ட ஒரு சாது பகவானது நாமத்தைப் பாடத்தான் செய்வார். அது அவருக்கு இயல்புதானே. அவருக்கு வேறு என்ன கடமைகள் செய்வதற்கு உள்ளன? அவர் பகவானைத் தியானம் பண்ணினால், அதனால் எவரும் ஆச்சரிய மடைய வேண்டியதில்லை. அதற்கு மாறாக அவர் பகவானைப் பற்றி நினைக்கவோ, அவரது தூய நாமத்தைப் பாடவோ தவறினால், அப்போது ஜனங்கள் அவரைப் பற்றிக் கேவலமாக நினைப்பர்.

"ஆனால் இல்லறத்தான் (கிரகஸ்தன்) ஒருவன் ஈசனது நாமத்தைச் சொல்வானாயின், அது அவனுக்கு மிக்க பெருமையானதாகும். ஜனக மன்னரை நினையும். உண்மையாகவே அவரிடம் எவ்வளவு துனிவு இருந்தது!

ஞான மெனும் வாளொன்று, கருமம் எனும் வாள் ஒன்று—இவ்விரண்டு வாள் களையும் அவர் சுழற்றிக்கொண்டிருந்தார். அவரிடம் பூரணப் பிரம்ம ஞானம் இருந்தது: அதோடு உலகக் கருமங்களிடத்தும் ஈடுபட்டிருந்தார் அவர். கற்பை இழந்த ஒரு பெண் உலகக் காரியங்களில் மிக நுணுக்கமானவற்றையும் கவனிக்கிறாள்; ஆனால் அவளுடைய மனம் அவளுடைய ஆசைநாயகன்மீது எப்போதும் குடிகொண்டிருக்கின்றது.

"ஸாது ஸங்கம் (நல்லாரோடு சேர்ந்திருத்தல்) எப்போதும் அவசியம். ஸாது ஒருவனை இறைவனோடு பழக்கம் பண்ணி வைப்பார்."

அடியார்கள் வீடு திரும்பத் தயாராயினர். ஒவ்வொருவராக அவர்கள் குருதேவரை வணங்கினர். பவநாத்தைக் கண்டதும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் "இன்று நீ போகாதே. உன்னைக் கண்டதுமே எனக்கு ஞான ஊக்கம் கிளம்புகிறது" என்றனர். பவநாத் இதுவரை உலக வாழ்க்கையில் (ஸம்ஸாரத்தில்) இறங்கி விடவில்லை. இருபது வயதுடைய இளைஞரான இவர் நல்ல நிறமும் மேனியழகும் வாய்ந்திருந்தார். பகவானது பெயரைக் கேட்ட மாத்திரத்தில் அவர் ஆனந்தக் கண்ணீர் பொழிவார். குருதேவர் அவரை நாராயணரது வடிவமாகவே கருதி வந்தார்.

6

அடியார் கூட்டத்தின் நடுவே

ஞாயிறு, ஏப்ரல் 8, 1883

அன்று ஞாயிற்றுக்கிழமை காலை. குருதேவர் ஒரு பையனைப் போலத் தோன்றினர், தமது அறையில் உட்கார்ந்திருந்தார்; அவரருகே அவரது அருமைச் சீடர் ராக்கால் என்னும் இன்னொரு பையனும் இருந்தான். ம— உள்ளே வந்து குருதேவரை வணங்கினர். ராம்லாலும் கிஷோரியும் மணிலால் மல்லிக்கும் அவ்வறையில் இருந்தனர், மற்ற அடியார்கள் பலர், பொழுதாக ஆக, கூடினர்.

மணிலால் மல்லிக் என்னும் ஒரு வியாபாரி சிறிது காலத்திற்கு முன்பு காசிக்குப் போயிருந்தார்; அங்கே அவருக்கு ஒரு பங்களா சொந்தமாயிருந்தது.

குருதேவர்: "ஆக, நீர் காசிக்குப் போயிருந்தீர். அங்கே மகான் யாரையாவது கண்டீரா?"

மணிலால்: "ஆம் ஐய. திரைலிங்க சுவாமி, பாஸ்கரானந்தர் முதலான வரை யான் வணங்கினேன். திரைலிங்க சுவாமி கண்டிப்பான மௌனவிரதம் கொண்டுள்ளனர். அவரைப் போலாகாது, பாஸ்கரானந்தர் எல்லோருடனும் பிரியமாயிருக்கிறார்."

குருதேவர்: "நீர் பாஸ்கரானந்தரோடு ஏதாவது பேசினீரா?"

மணிலால்: "ஆம், ஐய. நாங்கள் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தோம். பல விஷயங்களைப்பற்றிப் பேசியபோது, பாவ புண்ணியங்களைப் பற்றியும் நாங்கள் வழக்காடினோம். அவர் என்னிடம் "பாவ வழியிலே செல்லாதே. பாவ நினைவுகளை விட்டு ஒழி. அம்மாதிரி நடக்கவேண்டும் என்பது தான் ஈசனின் விருப்பம். புண்ணியமான கடமைகளை மட்டும் செய்" என்றார்.

குருதேவர்: "ஆம். அதுவும் ஒரு பாதைதான். அது உலகப் பற்றில் மூழ்கியுள்ள மக்கட்கு ஏற்றது. ஆனால் மெய்ஞ்ஞானம் பெற்றவர்களோ—அதாவது, பிரம்மனே ஸத்யம், மற்றவை யாவும் மித்யை என்பதை உணர்ந்தவர்களோ—வேறேர் இலட்சியத்தைப் போற்றுவார்கள். ஈசனே கருத்தா, மற்றவர்கள் அவரது கருவிகளாவார் என்பதை அவர்கள் அறிவார்கள்.

"மெய்ஞ்ஞானம் பெற்றவர்கள் ஒருக்காலும் தவருக ஓர் அடி எடுத்து வைக்கமாட்டார். பாவச் செயலைத் தள்ளுவதற்காக அவர்கள் புத்தியால்

ஆராயவேண்டுவதில்லை. அவர்களுடைய நெஞ்சில் பக்தி நிறைந்திருப்பதால், அவர்கள் எந்தச் செயலைக் கைக் கொண்டாலும் அது நல்ல செயலேயாகும். தாங்கள் அச் செயலைச் செய்தவரல்லர் என்பதும் ஈசனுடைய வேலைக்காரர்க ளாகவே இருந்தனர் என்பதும் அவர்கள் முழுதும் அறிந்தவையாம்.

"முழு ஞானம் பெற்றவர் புண்ணிய பாவங்களைக் கடந்தவர். ஈசரே எல்லாவற்றையும் செய்கின்றார் என்பதை அவர்கள் உணர்வார்.

"ஓரிடத்தில் ஒரு மடம் இருந்தது. அங்கே வாழ்ந்த துறவிகள் தினமும் பிச்சையெடுப்பதற்காக வெளியேறுவர். ஒரு நாள் ஒரு துறவி பிச்சைக்காக வெளியே சென்றிருந்தபோது, ஒரு பிரபு ஒரு மனிதனை இரக்கமின்றி அடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார். கருணை வாய்ந்த அத்துறவி அவ்விடம் சென்று, பிரபுவை நிறுத்தச் சொன்னர். ஆனால் பிரபுவுக்குக் கோபம் பொங் கிக்கொண்டிருந்தது; அவர் அதனால் தமது கோபத்தைக் குற்றமில்லாத அத் துறவியின்மீது செலுத்தினர். துறவி மெய்ம்மறந்து தரையில் விழும்வரை பிரபு அவரை அடித்தார். யாரோ ஒருவர் நடந்த செய்தியை மடத்திற்குத் தெரிவித் தார். துறவிகள் அவ்விடத்திற்கு ஓடினர்; தமது சகோதரர் அங்கே கிடப்ப தைக் கண்டனர். அவர்களில் நாலைந்து பேர் அவரைத் தூக்கிக்கொண்டு போய், ஒரு படுக்கையின்மீது கிடத்தினர். அவர்க்கு அப்போதும் அறிவு உண்டாகவில்லை. மற்றைய துறவிகள் அவரைச் சுற்றி வருத்தத்தோடு உட் கார்ந்திருந்தனர்; சிலர் அவர்க்குக் குடிக்க ஒரு சிறிது பால் கொடுக்கலாம் என்று யோசனை சொன்னர். பாலை அவரது வாயில் ஊற்றியதும், அவர்க்கு உணர்ச்சி திரும்பிற்று. அவர் தமது கண்களைத் திறந்து, சுற்றிப் பார்த்தார். துறவிகளில் ஒருவர் 'அவர்க்கு முழுதும் உணர்ச்சி வந்துவிட்டதா என்பதை யும் பார்ப்போம்' என்றார். அவரது காதிற்குள் உரத்த குரலில் "சுவாமி, தங் கட்குப் பாலை யார் இப்போது கொடுக்கின்றனர்?' என்று கேட்க, அப்பெரியார் மெல்லிய குரலில் 'என்னை அடித்தவன் இப்போது எனக்குப் பால் கொடுக்கின் றனன்' என்று பதிலளித்தார்.

"ஆனால் ஈசனது தரிசனம் பெருமல் அம்மாதிரியான மன நிலையை எவ னும் அடைவதில்லை."

மணிலால்: "ஐயன்மீர், தாங்கள் இப்போது கூறியது மிகவுயர்ந்த ஞான நிலையிலுள்ள ஒரு மனிதனுக்கே பொருந்தும். அம்மாதிரி விஷயங் களையே பொதுவாகப் பாஸ்கராநந்தரோடு பேசினேன்."

கோயிலிலே பூஜை முடிந்துவிட்டது. தெய்வங்கட்கு நைவேத்தியம் சமர்ப்பிப்பதற்காக மணிகள் அடிக்கப்பட்டன. அன்று கோடைகாலப் பக லாகையால், வெயில் மிகக் கடுமையாயிருந்தது. கடல் பொங்குவதால் கங்கை யிலே நீர் உயர்ந்து வந்தது. தெற்கேயிருந்து இளங்காற்று வீசியது. ஸ்ரீராம கிருஷ்ணர் உணவுண்டபின் தமது அறையில் இளைப்பாறிக்கொண்டிருந்தார்.

சற்று நேரத்தில் பிராம்மோ ஸமாஜத்தைச்சேர்ந்த ஒரு சில வயது முதிர்ந்த அங்கத்தினர் வந்தனர். அறை நிறைய அடியார்கள் கூடியிருந்தனர். ஸ்ரீராம கிருஷ்ணர் வடக்கு முகமாகத் திரும்பிக்கொண்டு, படுக்கையில் உட்கார்ந் திருந்தார், அவர் புன்னகை புரிந்துகொண்டே, பிராம்மோ அடியார்களோடு ஆனந்தமாகப் பேசினர்.

குருதேவர்: "நீங்கள் பிரேமையைப்பற்றி எளிதாகப் பேசுகின்றீர். அது அவ்வளவு சாதாரணமான பொருளா? பிரேமைக்கு இரண்டு இலக்ஷணங் கள் உண்டு. முதலாவது, ஒரு மனிதனை அது உலகத்தை மறக்கும்படி செய் யும். ஈசனிடத்து அவனுக்குள்ள பிரேமை அவ்வளவு தீவிரமாயிருத்தலின், வெளியுலகப் பொருள்களை அவன் உணராதுபோகிறான். இரண்டாவது, எல்லார்க்கும் மிகப் பிரியமான உடலின்மீது 'தன்னுடையது' என்னும் உணர்ச்சி அவனுக்கு இருப்பதில்லை. தேகமே ஆத்மா என்ற புத்தியை அவன் முழுதும் விட்டு நீங்குகிறான்.

"ஈசனை அடைந்துவிட்டதற்குச் சில குறிகள் உள. இறைவன்மீது பேரன்பு தலையெடுத்தவனுக்கு இறைவனைப் பெறுங் காலம் சமீபிக்கும். அம் மாதிரியான பேரன்பை வெளிப்படுத்தும் புறக்குறிகளாவன: விவேகம், வைராக்கியம், உயிர்களிடத்துத் தயை, ஸாது ஸேவை, ஸாது ஸங்க விருப்பம், ஈசனது நாமத்தையும் குணங்களையும் பாடுதல், உண்மை பேசல் முதலியன. இம்மாதிரியான அடையாளங்களை ஒரு சாதகனிடம் காணும்போது, அவனுக்கு ஈசனது காட்சி வெகு தொலையில் இருப்பதன்று என நீர் நியாயமாகக் கூறலாகும்.

"ஒரு வேலைக்காரனது வீட்டின் நிலையிலிருந்தே, அவனது எஜமானர் அதைப் பார்க்க வருவதாகத் தீர்மானித்துள்ளனரா என்பதைத் தவறுமல் அறியலாகும். முதல் முதலாக, வீட்டைச் சுற்றியுள்ள குப்பையும் புதர்களும் நீக்கப்பட்டிருக்கும். இரண்டாவதாக, அறைகளில் உள்ள புகைக்கரியும் அழுக்கும் அப்புறப்படுத்தப்பட்டிருக்கும். மூன்றுவதாக, முற்றமும் தரையும் மற்ற இடங்களும் துப்புரவாகப் பெருக்கப்பட்டிருக்கும் (கூட்டப்பட்டிருக்கும்), கடைசியாக, எஜமானரே அவ்வீட்டிற்குக் கம்பளம், புகை குடிக்கும் கலம் போன்ற பல பொருள்களை அனுப்பிவைப்பார். இவை வந்து சேர்வதைக் காணும்போது, எஜமானர் விரைவில் வந்துவிடுவார் என்பதை நீங்களே முடி வாகக் கூறிவிடலாம்."

ஓர் அடியார்: "சுவாமீ, தன்னடக்கம் பெறுவதற்கு முதலாவது ஒரு வன் விவேகம் பழகல் வேண்டுமா?"

குருதேவர்: "இதுவும் ஒரு பாதைதான். இதற்கு விசாரணை செய் யும் நெறி என்று பெயர். ஆனால் அந்தக்காரணங்களை (மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்பவை) பக்தி மார்க்கத்தாலும் அடக்கிவிடலாம், அவ்வழி யாகச் செய்வது எளிது எனல்வேண்டும். ஈசனிடத்து அன்பு தழைப்பதற்கு

ஏற்ப, ஐம்புல இன்பங்கள் (விஷய சுகங்கள்) மேலும் மேலும் ருசியற்றனவாகத் தோன்றும்."

அடியார்: "ஈசன்மீது அன்பை வளர்ப்பது எப்படி?"

குருதேவர்: "அவனது நாமத்தை ஓதும், பாவங்கள் ஒழியும். இவ்வாறு நீர் காமக் குரோதங்களையும், உடற் சுகங்களின் மீதுள்ள இச்சையையும் பிறவற்றையும் அழிப்பவராவீர்."

அடியார்: "ஈசனது நாமத்தில் ருசியை நான் எப்படிப் பெறலாகும்?"

குருதேவர்: "உமக்கு ஈசனது நாமத்தில் ருசி உண்டாகவேண்டும் என்று, மனத் துடிப்போடு அவரிடம் பிரார்த்தனை செய்யும். அவர் உமது மன வாஞ்சையை நிறைவேற்றுவார்.

"ஒரு மனிதனது மனோபாவத்திற்குத் தக்கபடி அவனது லாபம் அமையும். ஒருநாள் இரு நண்பர்கள் தெருவழியாகப் போய்க்கொண்டிருக்கும்போது, சில ஜனங்கள் பாகவதம் வாசிப்பதைக் கவனித்துக்கொண்டிருக்கக் கண்டனர். ஒருவன் மற்றொருவனைப் பார்த்து, 'நண்ப, வா! நாம் அந்த சாஸ்திரத்தைக் கேட்போம்' என்றான். இவ்வாறு சொல்லிக்கொண்டே அவன் அங்கே புகுந்து உட்கார்ந்திருந்தான். இரண்டாவது மனிதன் எட்டிப் பார்த்துவிட்டு வெளியேறினான். ஒரு தாசி வீட்டுக்குள் நுழைந்தான். ஆனால் விரைவில் அவனுக்கு அந்த இடத்தின்மீது அருவருப்பு உண்டாயிற்று. அவன் தனக்குள்ளே 'என்ன வெட்கக்கேடு எனக்கு! எனது நண்பன் விஷ்ணு பகவானின் பரிசுத்த மொழிகளைக் கவனித்துக்கொண்டிருக்கிறான்; நானோ இங்குளேன்' என்று சொல்லிக்கொண்டான். ஆனால் பாகவதம் வாசிப்பதைக் கேட்டுக்கொண்டிருந்த நண்பனும் அதில் அருவருப்புக்கொண்டான். அவனும் தனக்குள் 'யான் எவ்வளவு முட்டாள் ஆனேன்! இங்கொருவன் ஏதோ சொல்வதைக் கவனித்துக்கொண்டிருந்துவிட்டேன்; எனது நண்பனோ எவ்வளவு சுகமாகக் காலங்கழிக்கிறான்!' என்று சொல்லிக்கொண்டான். கால கதியில் அவர்கள் இருவரும் இறந்தனர். பாகவதம் கேட்டுக்கொண்டிருந்தவனது உயிரைக் கொண்டுபோக யமதூதன் வந்து, அதை நரகத்திற்கு இழுத்துச்சென்றான். தாசி வீட்டுக்குச் சென்றிருந்த மற்றவனது உயிரைக் கொண்டுபோகப் பகவானது தூதன் வந்து, அதை விஷ்ணுலோகத்திற்கு அழைத்துச் சென்றான்.

"உண்மையாகவே பகவான் ஒரு மனிதனது நெஞ்சிற்குள் இருப்பதைக் காண்கிறார்; அவன் இன்னது செய்கிறான், இங்கே வாழ்கிறான் என்பதைக் கொண்டு அவனை மதிப்பிடுவதில்லை.

"ஒவ்வொருவரும் ஞானம் பெறலாம். ஜீவான்மா பரமான்மா என இரு தத்துவங்கள் உள்ளன. பிரார்த்தனையின் மூலம் எல்லா ஜீவான்மாக்களும் பரமான்மாவோடு இணைந்திருக்கக் கூடும். ஒவ்வொரு வீட்டுக்கும் (விளக்கு எரிதற்கு வேண்டிய) ஆவி வரும் குழாய் ஒன்று உண்டு; அதன் மூலமாக அந்த ஆவியைத் தயார் செய்யும் சங்கத்தார்க்குரிய முக்கியமான ஆவி–தொகுப்பு

நிலையத்திலிருந்து ஆவியைப் பெற்றுக்கொள்ளலாகும். அந்நிலையத்திற்கு மனுச் செய்தால், உமக்கு வேண்டிய ஆவியை அனுப்பிக்க அங்குள்ளார் ஏற்பாடு செய்வார். அப்போது உமது வீட்டுக்கும் ஒளி பெறலாம்.

"சிலரிடத்துச் சைதன்யம் முன்னமே உதித்திருப்பதுண்டு; ஆனல் அவர்களிடத்து விசேஷ அடையாளங்கள் காணப்படும். அவர்கட்கு ஈசனைத் தவிர வேறு எதையும் பற்றிக் கேட்பதோ பேசுவதோ ருசிப்பதில்லை. அவர்கள் சாதகப் பறவையைப் போன்றவர்; அது தன்னருகே ஏழு கடல்களும் கங்கை யும் யமுனையும் மற்ற நதிகளும் நீர் நிரம்பி யிருக்கக் காணினும், மழை நீரையே பிரார்த்தித்து வேண்டும். அதன் தொண்டை தாகத்தால் எரிந்துகொண்டிருப் பினும் அது மழை நீரைத் தவிர வேறெதையும் குடியாது.

"பந்தத்திற்கு உட்பட்ட ஜீவர்கள், உலகப்பற்று நிறைந்த மக்கள், பட்டுப் பூச்சியைப் போன்றவர். பட்டுநூற் புழுக்கள் பிரிய மிருந்தால் தாம் பின்னும் உறையைக் கிழித்துக்கொண்டு வெளியேறக் கூடும். ஆனல் தாமே பின்னிய உறையாதலின் அதன்மீது அளவிற்கு மிஞ்சிய பற்றுக்கொண்டு, அதை விட்டு வருவதில்லை. ஆதலால் அவை அங்கே சாகின்றன.

"முக்த ஜீவர்கள் காமகாஞ்சனப் பற்றுகட்கு வசப்பட்டிருக்க மாட்டார் கள். சில பட்டுநூற் புழுக்கள் எவ்வளவோ மிக்க சிரத்தையோடு தாமே செய்த உறையைத் துளைத்துக்கொண்டு வந்துவிடுகின்றன. ஆனல் அவை இடை யிடையே ஒவ்வொன்றுதான் இருக்கும்.

"மாயைதான் மக்களை மயக்குகின்றது. ஒரு சிலர்தான் ஞான விழிப்புப் பெற்று, மாயையின் மயக்கத்தால் மோக மடையாதவராகின்றனர். அவர்கள் காம காஞ்சனங்கட்கு வசப்படுவதில்லை.

சித்தர்களில் இருவகையினர் உளர். அவராவார்; சாதன சித்தர்களும் (ஞான சாதனங்களைப் பழகுவதினல் பூரண மடைபவரும்) கிருபாசித்தர்களும் (ஈசன்து அருளால் பூரண மடைபவரும்). சில குடியானவர்கள் மிக்க பாடு பட்டுத் தம் வயல்கட்கு நீர் பாய்ச்சுவர். அப்போது தான் அவர்கட்குப் பயிர் கள் விளையும். ஆனல் வேறு சிலர்க்கோ நீர் பாய்ச்சும் தேவையே உண்டாவ தில்லை; அவர்களுடைய வயல்கள் மழையால் நீர்ப்பெருக்கைப் பெறுகின்றன. அவர்கட்கு நீர் இறைக்கவேண்டிய தொந்தரவு இல்லை. மாயையின் பிடியி லிருந்து தப்ப ஒருவன் பாடு பட்டு ஞான சாதனம் பழக்கவேண்டியது கட்டாய மாகிறது. ஈசனது அருளால் முக்தி யடைபவர்க்கு உழைப்பு அவசியமில்லை. ஆனல் அவர்கள் உண்மையாகவே மிகச் சிலர்தான்.

இன்னும், நித்திய முக்தர் (நித்திய சித்தர்) எனும் வகையினரும் உளர். அவர்கள் ஒவ்வொரு பிறவியிலும் பிறக்கும்பொழுதே ஞானம் உதிக்கப் பெற்றவ ராய் விளங்குகின்றனர். ஒரு நீரூற்றில் கண் அடைபட்டிருப்பதாக நினைத்துக் கொள்வோம். தோட்டத்திலுள்ள பல காரியங்களையும் கவனித்துவரும்போது, ஒரு வேலைக்காரன் தற்செயலாக அதைத் துப்புரவாக்குகிறன், நீர் கள கள

வென்று வெளியே பாய்கிறது. ஒரு நித்திய சித்தர்க்கு முதல் முறை ஈசன் மீது ஏற்படும் (அனுராகத்தின்) பேரன்பின் தீவிரத்தைக் காணும்போதே ஜனங்கள் ஆச்சரிய மடைகிறார்கள். 'இவ்வளவு பக்தியும் வைராக்கியமும் பிரேமையும் எங்கே யிருந்தன?' என்று அவர்கள் சொல்லுகிறார்கள்."

பேச்சு அடியார்களின் அனுராகத்தை (அன்பை)ப் பற்றி எழுந்தது; உதாரணமாகப் பிருந்தாவனத்துக் கோபியரைக் கூற, ராம்லால் பின்வரும் பாடலைப் பாடினர்:

என்பரம! எனக்கெல்லாச் செல்வ மும் நீ,
இன்னுயிர்க்கும் உயிராவாய் உள்ளுக் குள்ளே,
மன்னுலக மூன்றினிலும் நின்னை யல்லால்
மனமார எனக்குரியார் யாரு மில்லை;
பன்னுமொரு சாந்தியும் நீ, இன்பம் ஆசை
பலவும் நீ எனக்காவாய், செல்வம் சீரும்
துன்னருநல் லாதரவும் நீயே அன்றே?
தூமறையின் ஞானமும் நீ, சக்தி நீயே.

நீயேயென் ஒய்வீடமால், இல்லம் நீயே,
நேசமிகும் நண்பனும் நீ, உற்றார் நீயே,
ஏயுமிந்த நிகழ்காலம், சேரும் காலம்
இருஞ்சொர்க்கம், பேசருநல் முத்தி நீயே,
தூயமறை யாதியநூல் யாவும் நீயே,
தொடக்கறுக்கும் கட்டளைகள் எற்கு நீயே,
வாயும்நல அருள்முகிலாம் ஆசான் நீயே
வாழ்விவா இன்பஇள வேனில் நீயே.

நன்னெறியும் கொள்குறியும் நீயே யாவாய்,
நான்வணங்கற் குரியபர தெய்வம் நீயே,
மென்னெஞ்சம் கனிவுற்ற அன்னை நீயே,
வேண்டுங்காற் கண்டிக்கும் தந்தையும் நீ.
மன்னுலகம் படைப்பானும் காப்பா னும் நீ.
வாழ்க்கையெனும் பெருங்கடலைத் தாண்டி யப்பால்
என்னுடைய படகினையே உய்க்க வல்லாய்
எல்லாமும் எனக்காவாய் எந்தாய் கோவே.

குருதேவர் (அடியார்களிடம்): "என்ன நேர்த்தியான பாடல்!—'எனக் கெல்லாச் செல்வமும் நீ."

ராம்லால் மறுபடியும் பாடினர்; இம்முறை கோபிமார் தமது காதற் கண்ணனைப் பிரிந்திருந்தபோது அடைந்த விரக வேதனையை வருணிக்கும் பாடலைப் பாடினர். குருதேவர் ஆழ்ந்த சமாதியில் மூழ்கினர். அவரது உடல் அசையாதிருந்தது; படத்திற் காண்பதுபோலக் கைகளை அவர் இணைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அவரது கடைக்கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர்

பெருகிற்று. வெகு நேரம் சென்றபின் அவரது மனம் சாதாரண நிலைக்கு இறங்கியது. அவர் ஏதோ முணுமுணுத்துக்கொண்டிருந்தார். அதில் ஒரு வார்த்தைமட்டும் இடையிடையே அறையிலுள்ள அடியார்கள் காதில் விழுந்து வந்தது.

தொடர்ந்து குருதேவர் பின்னும் பேசலானார்: "காமாலைக் கண்ணுடைய ஒருவனைப்போல நான் ஒவ்வொன்றையும் காண்கின்றேன். கண்ணே! எளியோர்க்குத் தோழா! என் பிராண நாயகா! கோவிந்தா! உன்னையே யான் எங்கும் காண்கிறேன்."

'என் பிராண நாயகா! கோவிந்தா' என்று சொல்லிக்கொண்டே குருதேவர் மறுபடியும் சமாதியடைந்தார். அறையிலே முழு மௌனம் குடிகொண்டிருந்தது. அடியார்களின் கண்கள் ஆவலோடும் திருப்தி பெருமலும் எல்லையற்ற மஹாபாவனுமயமான திவ்விய புருடரான குருதேவரின்மீது பதிந்து கிடப்பன வாயின.

ஆதர்சேன் தமது நண்பர்கள் பலரோடு வந்தனர். அவர் குருதேவரிடம் வந்தது அன்றே இரண்டாமுறை. சாரதா சரணர் என்ற நண்பர் அவரோடு வந்திருந்தார். அந்த நண்பர் தமது மூத்த மகனை இழந்துவிட்டமையால் அளவு கடந்த துயரத்திற்கு ஆளாயிருந்தார். 'பள்ளிக்கூட உதவி மேற்பார்வையாளர்' அலுவலிலிருந்து ஓய்வுபெற்றிருந்த சாரதா சரணர் தியானத்திலும் பிரார்த்தனையிலும் ஈடுபட்டிருந்தார். ஆதர் தமது நண்பரைக் குருதேவரிடம் அழைத்து வந்தது, அவரது துயருற்ற மனத்திற்கு ஆறுதலை ஊட்டுதற்காகவே.

சமாதியினின்றும் கீழிறங்கியதும், குருதேவர் தம்மீது அடியார்களின் கண்கள் பதிந்த வண்ணமாய் இருந்ததைக் கண்டார். இன்னும் மனம் உண்முகமான நிலையிலே அவர் தமக்குள்ளே பேசிக்கொண்டிருந்தார். பின்பு அடியார்களை நோக்கி, அவர் கூறியதாவது: "உலகப்பற்றுள்ள மக்களிடத்து அபூர்வமாகச் சில வேலைகளில் மட்டும் ஞானம் காணப்படும், அது ஒரு தீபத்தின் சுவாலையைப் போன்றது. அதுவன்று, சுவரில் ஒரு சிறு துளை வழியாகச் செல்லும் சூரியனது ஒரே கதிரைப் போன்றது என்னவேண்டும். உலகப் பற்றுள்ளவர் ஈசனது நாமத்தை ஓதுகின்றனர், ஆனால் அதில் அன்பின் மணம் கமழ்வதில்லை. குழந்தைகள் தம் அத்தைமார் சண்டையிடுவதைக் கவனித்துச் சில வார்த்தைகளைக் கற்றுக்கொண்டு கடவுள்மீது ஆணையிடுவதைப்போல அது, உலக ஆசையுள்ள மக்களிடத்து உறுதி கிடையாது. ஒரு காரியத்தில் அவர்கட்கு வெற்றி கிடைத்தால், மிகவும் சரி; வெற்றியில்லாவிடில் சிறிதுகூட அவர்கள் வருத்தமடைவதில்லை."

இதற்குள் ஸ்ரீராமகிருஷ்ணர் ஆதர் என்பவரோடு அதிகமாகப் பழகிவிட்டார்; அவர் தமது நண்பருடைய துயரத்தின் காரணத்தை எடுத்துரைத்தார். குருதேவர் கூறியதாவது: "உம்மால் என்ன செய்ய முடியும்? மரணத்திற்குத் தயாராய் இரும். யமன் வீட்டிற்குட்புகுந்துவிட்டான். ஈசனது தூய நாமம்

எனும் ஆயுதத்தைக்கொண்டு அவனோடு நீர் போராடவேண்டும். ஈசனே கருத்தா ஆவான். 'ஈசா நீ என் மூலம் செய்கிறபடியே நான் செய்கிறேன்; நீ என் மூலம் பேசுகிறபடியே நான் பேசுகிறேன்' என்று நான் சொல்லுகி றேன். ஈசனுக்கு உமது வக்காலத்தைக் கொடுத்துவிடும். ஒருவரது பொறுப் புக்களை நல்லவர் ஒருவர் ஏற்றுக்கொள்ளும்படி இடங்கொடுப்பதால் துயரம் விளையாது. ஈசனது திருவுள்ளப்படியே நடக்கட்டும்.

"வீடு மனைவி மக்கள்—யாவும் சதமில்லை (நிலையற்றன); கணப்பொழுது மட்டும் வாழ்வன. பனைமரம் மட்டுமே உண்மை. ஒன்றோ இரண்டோ காய் கள் உதிர்ந்துவிட்டன. துயரம் என்?

ஈசன் படைத்தல் காத்தல் அழித்தல் எனும் முத்தொழில்களைச் செய்து வருகிறான். மரணத்தைத் தடுக்க முடியாது. பிரளய சமயத்தில் எல்லாம் அழிந்துவிடும். ஒன்றும் மிஞ்சாது. அச்சமயம் அம்பிகை புதிய படைப்பிற் காக விதைகளைச் சேகரித்து வைப்பாள். படைப்பு புதிதாகத் தொடங்கும் காலத்து அவள் மறுபடியும் அவற்றைப் பயன்படுத்துவாள்."

ஞாயிறு, ஏப்பிரல் 22, 1883.

ஸ்ரீராமகிருஷ்ணர் பிராம்மோ சமாஜத்தின் அரை வருட விழாச் சமயத்தில் கல்கத்தாவுக்கு அருகாமையில் சிந்தியெனும் ஊரிலுள்ள வேணிமாதவ பாலரது பூஞ்சோலை மாளிகைக்குப் போயிருந்தார். சமாஜத்தைச் சேர்ந்த பல அடி யார்கள் வந்திருந்தனர்; அவர்கள் குருதேவரைச் சுற்றி உட்கார்ந்திருந்தனர். இடையிடையே அவர்களிற் சிலர் அவரைக் கேள்விகள் கேட்டனர்.

ஒரு பிராம்மோ அடியார்: "ஐயன்மீர், எது உபாயம்?"

குருதேவர்: "ஈசன்மீது பற்று. அதாவது, அவர்மீது அன்பு; இரண் டாவதாக, பிரார்த்தனை."

பிராம்மோ அடியார்: "எந்த ஒன்று உபாயம்? அன்பா? பிரார்த் தனையா?"

குருதேவர்: "முதலில் அன்பும், பின்பு பிரார்த்தனையும்"

தொடர்ந்து பின்னும் குருதேவர் கூறியதாவது: "எப்போதும் ஈசனது நாமத்தையும் குணங்களையும் பாடவேண்டும், அவரிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும். ஒரு பழைய செப்புப் பானையை ஒவ்வொரு நாளும் தேய்த்தல் வேண்டும். ஒருமுறை மட்டும் அதைச் சுத்தம் செய்வதால் யாது பயன்? இன்னும் விவேகமும் வைராக்கியமும் பழகவேண்டும்; உலகத்தின் நிலையற்ற தன்மையையும் உணரவேண்டும்."

பிராம்மோ: "உலக வாழ்வைத் துறத்தல் நல்லதா?"

குருதேவர்: "எல்லார்க்கும் நல்லதாகாது, தமது போகம் முடிவுக்கு வரப்பெறுதிருப்பவர்கள் உலக வாழ்வைத் துறத்தல் கூடாது."

பிராம்மோ: "போகத்தின் முடிவு என்பதன் பொருள் யாது?"

குருதேவர்: "காம காஞ்சனங்களின் போகம் என்பதே நான் கொள்ளும் பொருள். மக்களிற் பெரும்பாலார்க்குச் சொத்து பெயர் புகழ் சரீர சுகங்கள் முதலிய அனுபவத்தின் வழியாகச் செல்லும்வரை, அதாவது, அந்த சுகங்களைப் பெற்று ஒயும் நிலை வரும்வரை, ஈசனிடத்துப் பற்று உண்டாவதில்லை."

பிராம்மோ: "யார் உண்மையாகக் கெட்டவர்? ஆண? பெண்ணா?"

குருதேவர்: "ஆத்ம ஞானம் வாய்ந்த பெண்கள் இருப்பதுபோல, அறியாமையோடுள்ள பெண்களும் உளர். வித்தையின் வடிவமாயிருக்கும் பெண் ஓர் ஆண ஈசனிடம் செலுத்துவாள்; ஆனால் அவித்தையின் வடிவமாயிருக்கும் பெண் 'ஈசன மறக்கும்படி அவனைச் செய்து பிறவிக் கடலில் அவன மூழ்கச் செய்கிறாள்.

"இப் பிரபஞ்சம் ஈசனின் மஹாமாயையால் (அறிய முடியாத மாயா சக்தியால்) படைக்கப்படுகிறது, இம் மஹா மாயையில் வித்தை மாயை அவித்தை மாயை எனும் இரண்டும் அடங்கியுள்ளன. வித்தை மாயையின் உதவியால் ஸாது சங்கத்தில் ருசி, ஞானம், பக்தி, பிரேமை, வைராக்கியம் முதலான நல்ல குணங்களை ஒருவன் உண்டாக்கிக் கொள்கிறான். அவித்தை மாயையில் பஞ்ச பூதங்களும், ஐம்பொறிகட்கும் உரிய விஷயங்களாகிய உருவம் சுவை மணம் தொடுகை ஓசை எனும் ஐந்தும் அடங்கியுள்ளன. இவை ஈசன மறக்கும்படி ஒருவனைச் செய்யும்."

பிராம்மோ: "அவித்தையின் சக்தியே அறியாமைக்குக் காரணமாயின் ஈசன் அதை ஏன் படைத்தான்?"

குருதேவர்: "அது அவரது திருவிளையாடல் (லீலை). ஒளியின் பெருமையை இருளாலன்றி அறிய முடியாது. துன்பமின்றி இன்பத்தை உணர முடியாது. நன்மையைப் பற்றிய அறிவு உண்டாதல் தீமையைப் பற்றிய அறிவு காரணமாகவே இயலுகின்றது.

"மேலும், மாங்காய் வளர்வதும் பழுப்பதும், மேலேயுள்ள தோலினால் தான், மாங்காய் முழுதும் பழுத்து உண்ணுவதற்கு ஏற்றதாய் இருக்கும் போது, நீர் தோலை எறிந்துவிடுகிறீர். ஒரு மனிதனுக்குப் பிரம்ம ஞானத்தைப் படிப்படியாக அடைய இயலுவது, மாயையெனும் தோல் அதை மூடிக்கொண்டிருப்பதனால்தான். வித்யா மாயை அவித்யா மாயை இரண்டும் மாங்காயின் தோலுக்கு ஒப்பாகும். இரண்டும் அவசியமே."

பிராம்மோ: "வைராக்கியத்தை உண்டாக்குவது எப்படி? எல்லோருக்கும் அது ஏன் கிட்டுவதில்லை?"

குருதேவர்: "சுகங்களை வேண்டிய மட்டும் அனுபவித்து, அதனால் தெவிட்டும்வரை வைராக்கியம் உண்டாகமாட்டாது. ஒரு சிறு குழந்தையைக் கற்கண்டையோ பொம்மைகளையோ கொடுத்து எளிதாக ஏமாற்றிவிடலாம். ஆனால், கற்கண்டைச் சாப்பிட்டபின்னும் பொம்மை விளையாட்டு முடிந்த பின்

னும், அது 'எனக்கு:என் அம்மாவிடம் போகவேண்டும்' என்று கத்துகிறது. குழந்தையை அதன் அம்மாவிடம் கொண்டுவிட்டாலொழிய அது பொம்மையைத் தூர எறிந்துவிட்டு உச்சத் தொனியில் கத்தும்."

பிராம்மோ ஸமாஜத்தின் அங்கத்தினர்கள் வைதிக இந்து மதத்திற்குரிய குரு பரம்பரை முறையை எதிர்ப்பவர். அக்காரணத்தால் பிராம்மோ அடியார் அதைப்பற்றிக் குருதேவரிடம் கேட்டார்.

பிராம்மோ: "குருவில்லாமல் ஞானம் பெற முடியுமா?"

குருதேவர்: "ஸச்சிதாநந்தப் பொருளே குரு. குரு வடிவத்தில் ஒரு மனிதன் உம்மிடம் ஞானத்தை எழுப்பிவிடுவானுயின் ஸச்சிதாநந்தப் பரம் பொருளே உமக்காக அம்மனித வடிவொடு வந்ததென உறுதியாக நீர் அறிந்து கொள்ளும். உமது கையைப் பிடித்து வழி நடத்திச் செல்லும் ஒரு தோழரைப் போன்றவர் குரு. ஈசனை உணர்ந்த பின்பு குருவுக்கும் சீடனுக்கும் உள்ள வேறுபாடு ஒருவனுக்குத் தோன்றாது போகும், சீடன் ஈசனைக் காணுதவரை இருவர்க்கும் உள்ள சம்பந்தம் இருப்பதுண்டு."

அந்தி வேளைக்குப்பின் பிராம்மோ ஸமாஜ ஆசாரியர் பீடத்திலிருந்து பிரார்த்தனையை நடத்தினர். அதன் நடுவே இடையிடையே உபநிஷத மந்திரங் களை ஒதுதலும், பிராம்மோ சங்கீதமும் நிகழ்ந்தன.

பிரார்த்தனை (உபாசனை) முடிந்ததும், குருதேவரும் ஆசாரியரும் பேசிக் கொண்டிருந்தனர்.

குருதேவர்: "நிராகார ஈசனும் (அருவக் கடவுளும்) ஸாகார ஈசனும் (உருவக் கடவுளும்) ஸத்தியம் என்றே எனக்குத் தோன்றுகின்றது. நீர் என்ன சொல்கிறீர்?"

ஆசாரியர்: "ஐயன்மீர், மின்சார ஓட்டத்தைக் கண்ணுற் காண முடியாது; ஆனல் உணர முடியும். அருவக் கடவுளை அம்மின்சார ஓட்டத் திற்கு ஒப்பிடுகிறேன்."

குருதேவர்: "ஆம், இரண்டும் ஸத்தியமே, அருவக் கடவுள் எவ்வளவு ஸத்தியமோ, அவ்வளவு உருவக் கடவுளும். ஈசனை அருவமென்று மட்டும் கூறு வது எதைப் போன்றது தெரியுமா? ஒரு புல்லாங்குழலில் எழு துளைகள் இருப்பினும், ஒருவன் ஒரு துளை வழியே ஊதிக்கொண்டிருப்பது போன்றது அது, ஆனல் அதே கருவியில் இன்னெருவன் பற்பல ஸ்வரங்களை நன்கு வாசிக்கிருன். அதுபோல, ஸாகாரவாதியர் (உருவக் கடவுளிடம் நம்பிக்கை யுடையோர்) எத்தனை வகையாக ஈசனை அனுபவிக்கிறர்! அவரைப் பலவித பாவனை வழியாக அனுபவிக்கின்றனர்: சாந்த பாவனை, தாஸ்ய (அடிமை) பாவனை, ஸக்ய (தோழ) பாவனை, வாத்ஸல்ய (தாய்) பாவனை, மதுர (கணவ னுகவோ, காதலனுகவோ) பாவனை.

"பிரம்மத்தின் இயல்பு (ஸ்வரூபம்) வருணிக்க முடியாது. அதைப்பற்றி மௌனமாயே எவனும் இருப்பான். அனந்தமான பொருளை வார்த்தைகளால்

விரித்துரைக்க யார்க்கு இயலும்? ஒரு பறவை எவ்வளவு உயரே பறந்தாலும், அதனினும் உயர்ந்த இடங்கள் உள்ளன அன்றே?

"ஈசனது காட்சியைப் பெற்றபின், மனிதன் பேரின்பப் பரவசம் அடைகிறான், யார் பேசுவார்? யார் விவரிப்பார்?"

ஆசாரியர்: "ஆம், அப்படியே வேதாந்தம் உரைக்கின்றது."

குருதேவர்: "ஈசனது மாயையால் வந்த மயக்கத்தால் மனிதன் தனது சுய சொரூபத்தை மறக்கிறான். தனது தந்தையின் அனந்தமான ஐசுவரியத்திற்குத் தானே அதிகாரி என்பதை அவன் மறக்கிறான். இந்தத் தெய்விக மாயை முக்குணங்களால் ஆயது. அம் மூன்றும் திருடர்களே; ஏனெனில் அவை மனிதனிடமிருந்து அவனது செல்வத்தையெல்லாம் பறித்துவிட்டு, தனது சுயசொரூபத்தை மறக்கும்படி அவனைச் செய்கின்றன. முக்குணங்களாவன: ஸத்வம், ரஜஸ், தமஸ் என்பன. ஸத்வம் ஒன்றே ஈசனையடையும் வழியைக் காட்டுகிறது. ஆனால் ஸத்வமும் ஒரு மனிதனை ஈசனிடம் அழைத்துச் செல்லமாட்டாது.

"நான் உங்கட்கு ஒரு கதை சொல்கிறேன். ஒரு நாள் ஒரு பணக்காரன் காட்டு வழியாகச் சென்றுகொண்டிருந்தான்; மூன்று திருடர்கள் அவனைச் சூழ்ந்து, அவனிடம் உள்ள சொத்தை யெல்லாம் பறித்தனர். அப்போது அத் திருடர்களில் ஒருவன் 'இவனை உயிரோடு வைத்திருப்பதனால் யாது நன்மை? அவனைக் கொல்லு' என்றான். அவன் அம்மனிதனை வாளால் வெட்டத் தொடங்கினான்; அச்சமயம் இரண்டாவது திருடன் தடுத்து, 'இவனைக் கொல்வதனால் பயனில்லை. அவனை இறுகக் கயிற்றால் கட்டி, இங்கே விட்டு விடுவோம். அவனால் போலீஸாரிடம் அப்போது ஒன்றும் சொல்ல முடியாது" என்றான். அதன்படியே திருடர்கள் அவனை ஒரு கயிற்றால் கட்டி வைத்துவிட்டுப் போயினர்.

"சிறிது நேரம் சென்றபின், மூன்றாவது திருடன் பணக்காரரிடம் திரும்பி வந்து, 'நீ மிகவும் புண்பட்டனை அல்லவா? வா, நான் உன்னை அவிழ்த்துவிடப் போகிறேன்' என்று சொன்னான். அத்திருடன் அம்மனிதனைக் கட்டவிழ்த்து விட்டு, காட்டை விட்டு வெளியேறும் வழியில் அவனை நடத்திவந்தான். அவர்கள் சாலைக்கு அருகே வந்ததும், திருடன் 'இச்சாலை வழியே செல், நீ வருத்தமின்றி வீடு செல்வாய்' என்றான். அம்மனிதனோ 'ஆனால் நீ கட்டாயம் என்னுடன் வரவேண்டும். நீ எனக்கு எவ்வளவு உதவி செய்துள்ளனை? எங்கள் வீட்டில் உன்னைக் காண நாங்கள் யாவரும் மகிழ்வோம்' என்று சொன்னான். அதற்குத் திருடன் 'அது மாட்டேன். எனக்கு அங்கு வர முடியாது, போலீஸார் என்னைத் கைதியாக்குவர்' என்று பதிலுரைத்தான். அப்படிச் சொல்லிக் கொண்டே பணக்காரனுக்கு வழியைக்காட்டியபின், அவனை விட்டுச் சென்றான்.

"இக்கதையில், 'இம் மனிதனை உயிரோடு வைத்திருப்பதனால் யாது நன்மை? அவனைக் கொல்லு' என்ற முதல் திருடன் தமோகுணம். அது

அழிக்கிறது. இரண்டாவது திருடன் ரஜோகுணம்; அது ஒரு மனிதனை உலகத்தோடு பிணைத்து, அவனைப் பலவித முயற்சிகளில் சிக்கவைக்கிறது. ரஜஸ் ஈசனை மறக்கும்படி அவனைச் செய்கிறது, ஸத்வம் மட்டும் ஈசனிடம் செல்லும் வழியைக் காட்டுகிறது. தயை நேர்மை பக்தி போன்ற குணங்களை அது உண்டாக்குகிறது. இன்னும், ஸத்வம் என்பது ஒரு படிக்கட்டின் கடைசிப் படி போன்றது. அதை அடுத்திருப்பது மச்சுதான். பரப்பிரம்மமே மனிதனது சுய இருப்பிடம். முக்குணங்களையும் தாண்டும்வரை பிரம்மஞ் ஞானத்தை அடைய முடியாது.''

ஆசாரியர்: ''இன்று தாங்கள் அருளிய சம்பாஷணை சிறந்ததாயிருந்தது.''

குருதேவர் (புன்சிரிப்போடு): ''நீர் ஓர் ஆசாரியர், பல ஜனங்கட்குப் போதிக்கிறீர்! நீர் ஒரு கப்பல், நான் ஒரு மீன் பிடிக்கும் தோணிதான்'' (எல்லோரும் சிரித்தல்)

திங்கள், ஜூன் 4, 1883.

காலை ஏறக்குறைய ஒன்பது மணி இருக்கும்; அடியார்கள் பூஞ்சோலைக்கு வரத் தொடங்கினர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது அறையில், கங்கையைப் பார்த்து நிற்கும் வட்டத் தாழ்வாரத்தில் அமர்ந்திருந்தார். முன்னாள் இரவைக் குருதேவரொடு கழித்த ம— அவரருகே உட்கார்ந்தார். பலராமும் மற்ற பல அடியார்களும்கூட இருந்தனர். ராக்கால் தமது தலையைக் குருதேவரது மடிமீதுவைத்துத் தரையிற் படுத்திருந்தார். பலராமை அங்கே தங்கி நடுப்பகல் உணவை அருந்தும்படி குருதேவர் வேண்டிக்கொண்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தாம் கடவுள் வெறிகொண்ட நாள்களைப் பற்றி அடியார்களிடம் கூறிவந்தார்.

குருதேவர்: ''என் மனம் என்ன நிலை வழியாகச் சென்றது என்பது! எனக்கு முதல்முதலாக அந்த அனுபவம் ஏற்பட்டபோது, பகலோ இரவோ வந்ததும் போனதும் எனக்குத் தெரியாதுபோயின, எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதென ஜனங்கள் கூறலானார். அவர்களால் வேறு யாது சொல்லக் கூடும்? அவர்கள் என்னை மணம் புரியச் செய்தனர். நான் அப்போது கடவுள் வெறி கொண்ட நிலையில் இருந்தேன். முதலில் எனது மனைவியைப் பற்றியான் கவலை கொண்டேன். பின்பு அவளும் என்னைப்போல வாழ்வாள் என்று நான் எண்ணினேன்.

''நான் எனது மாமனார் வீட்டுக்குச் சென்றேன், அவர்கள் ஒரு 'கீர்த்தன'த்திற்கு (பக்தி பரமான ஸங்கீதத்தோடு பல முறையும் ஆடலும் சேர்ந்த ஒன்றுக்கு) ஏற்பாடு செய்தனர். அது ஒரு பெரிய திருவிழாவாயிற்று; பகவானது நாம ஸங்கீர்த்தனம் மிகுதியாயிருந்தது, இடையிடையே எனது பிற்காலம் என்ன ஆகுமோ என்று ஆச்சரியப்படுவேன். 'அம்மே, இவ்வூர்ப் பிரபுக்கள் எனக்கு மரியாதை காட்டுவாரானால் எனது ஞான அனுபவங்களை

உண்மையாகக் கொள்வேன்' என்று நான் தேவியிடம் சொல்லுவேன். அவர்களும் தாமாக வந்தார், என்னிடம் பேசினர்.

"அந்த ஆனந்த பரவச அவஸ்தையை என்னென்பது! மிகச் சிறிய தூண்டுதலும் எனது ஞான உணர்வை எழுப்பி விடும். ஒரு பதினான்கு வயதுப் பெண்ணைத் தேவியாக வழிபட்டேன். அவளை யான் தேவியின் வடிவமாகவே கண்டேன்.

"அந்நாளில் யான் இங்கே கன்னிப் பெண்களை அழைத்துப் பூஜை செய்வதுண்டு. அவர்களை ஸாக்ஷாத் தேவியாகவே கண்டேன்.

"ஒரு நாள் யான் கல்கத்தாவிலுள்ள மைதானத்திற்கு நல்ல காற்று வாங்கச் சென்றிருந்தேன். ஒரு புகைக் கூண்டு மேலே கிளம்புவதைப் பார்க்க அங்கே ஒரு பெருங் கூட்டம் கூடி யிருந்தது. திடீரென ஓர் ஆங்கிலப் பையன் மரத்தின்மீது சாய்ந்துகொண்டிருந்ததைக் கண்டேன். அவன் அங்கு நின்ற நிலையில் அவனது உடல் மூன்றிடங்களில் வளைந்திருந்தது. (கிருஷ்ண பகவானது திருவுருவத்திலே அவரது உடல் மூன்றிடங்களில் வளைந்திருப்பதைக் காணலாம்.)மின்னினுற்போல் கிருஷ்ண தரிசனம் எனக்கு உண்டாயிற்று. யான் சமாதி யடைந்தேன்.

"அக்காலத்தில் நான் வெளி யுலகத்தை முழுதும் மறவாது சற்றே குறைய மறந்தவனானேன். மதுரபாபு என்னை அவரது ஜான்பசார் மாளிகையில் சில நாள் வைத்திருந்தார். அங்கே இருக்கும்போது, என்னை தேவியின் தோழியாகக் கருதினேன். அவ்வீட்டுப் பெண் பிள்ளைகள் என் முன் ஒரு சிறிதும் கூச்சப்படவில்லை. ஒரு சிறுவன் முன்போ சிறுமி முன்போ மாதர் எப்படி இருப்பாரோ, அம்மாதிரியே என்முன்னும் அடக்கமின்றி இருப்பதாக அவர்கள் உணர்ந்தனர்.

"இப்போதும் மிக அற்பமான பொருளும் என்னிடம் ஈசுவர உணர்வை எழுப்பிவிடுகின்றது. ராக்கால் பகவானது நாமத்தைப் பாதி யுரத்த குரலில் ஜெபிப்பதுண்டு. அச்சமயங்களில் என்னை எனக்கு அடக்க முடியாது. அது எனது ஞான உணர்வை எழுப்பிப் பரவசப்படுத்தும்."

குருதேவர் மத்தியான உணவை அருந்தியபின் சிறிது நேரம் இளைப்பாறினர். பிரம்ம சமாஜத்தின் பழைய அங்கத்தினரான மணிலால் மல்லிக் அறைக்குட் புகுந்து, குருதேவரை வணங்கிவிட்டுக் கீழே உட்கார்ந்தார். குருதேவர் அப்போதும் படுக்கைமீது படுத்துக்கொண்டிருந்தார். மணிலால் அவரிடம் இடையிடையே கேள்விகள் கேட்டார்; குருதேவரும் அரை உறக்கத்தோடு ஒன்றிரண்டு வார்த்தைகள் பதில் உரைத்தார். பின்பு ஸ்ரீ ராமகிருஷ்ணர் எழுந்து உட்கார்ந்தார். அவர் அடியார்களிடம் பின் வரும் மொழிகளை உறுதி பிறக்குமாறு பேசினர்.

குருதேவர் (ம—இடம்): "சிலர் 'நான் பந்தத்திற்கு உட்பட்டவனானேன். நான் ஒரு நாளும் ஞானமும் பக்தியும் அடையப் போவதில்லை' என்று நினைக்

கின்றனர். ஆனல் ஒருவனுக்குக் குருவின் அருள் கிட்டுமாயின், அவன் அஞ்ச வேண்டியது யாது மில்லே. ஒரு காலம் ஒரு பெண் புலி ஓர் ஆட்டு மந்தையை எதிர்த்தது. அது ஓர் ஆட்டின்மீது பாய்ந்தபோது, அது ஒரு குட்டியை ஈன்று விட்டு இறந்தது. அக்குட்டி ஆடுகளோடு சேர்ந்து வளரலாயிற்று. ஆடுகள் புல்லேத் தின்றன, குட்டியும் அவ்வாறே செய்தது. ஆடுகள் கத்தின; குட்டி யும் கத்தினது, நாளடைவில் அது ஒரு பெரிய புலியாக வளர்ந்தது. ஒரு நாள் இன்னெரு புலி அதே மந்தையை எதிர்க்கலாயிற்று. புல்லேத் தின்ற புலியைப் பார்த்து அது ஆச்சரியப்பட்டது. காட்டுப் புலி அப்புலியைத் தொடர்ந்து ஓடி, கடைசியாக அதைப் பிடித்தது; அப்போது புல் தின்று வந்த புலி 'மே' என்று கத்த ஆரம்பித்தது. காட்டுப்புலி அதை நீருக்கு இழுத்துச் சென்று, அதனிடம் 'நீருக்குள் உன் முகத்தைப் பார். அது என் முகம் போன் றது. இதோ ஒரு சிறிது இறைச்சி உள்ளது. இதைத் தின்னு' என்றது. இவ்வாறு சொல்லிக்கொண்டே அதன் வாய்க்குள் சிறிது இறைச்சியைத் திணித்தது. ஆனல் புல் தின்னும் புலி அதை விழுங்க விரும்பாது, மறுபடியும் 'மே' என்று கத்தத் தொடங்கிற்று. மெல்ல மெல்ல அது இரத்தத்தின் ருசியைக் கண்டது, இறைச்சியின் சுவையையும் அறியலாயிற்று. அப்போது காட்டுப் புலி சொல்லியதாவது: 'இப்போது உனக்குத்தெரிகிறதா? உனக்கும் எனக்கும் வேறுபாடு இல்லே. இனி வந்துவிடு, என்னேடு காட்டுக்குள் வா.'

"ஆதலால், குருவின் அருள் உனக்குக் கிடைக்குமாயின், உனக்கு அச்சம் இருக்க முடியாது. நீ இன்னர் என்பதையும், உனது உண்மை இயல்பு இன்னது என்பதையும் அவரே உனக்கு அறிவிப்பார்.

"சீடன் ஒரு சிறு ஞான சாதனம் பழகுவானுலல் குரு அவனுக்கு ஒவ் வொன்றையும் விளக்குவார். அப்போது சீடன் எது ஸத் என்பதையும் எது அஸத் என்பதையும் தானே அறிந்துகொள்கிருன்."

அடியார்களில் ஒருவர் தமக்குள்ளே "அப்படியானுல் உலகம் அஸத்தா (அநித்தியமா)? அப்படியானுல் உலகத்தில் வாழ்பவரது கதி என்னவாகும்? அவர்களும் உலகைத் துறக்கவேண்டியது கட்டாயமா?" என்று சொல்லிக் கொண்டார். ஸ்ரீராமகிருஷ்ணர்க்கு ஒருவனது அந்தரங்கமான எண்ணத்தையும் புகுந்து பார்க்கும் திறமை உண்டாதலின், அவர் மிக்க ஆதரத்தோடு "ஒரு குமாஸ்தாவைச் சிறைச்சாலேக்கு அனுப்பிவைத்திருப்பதாக வைத்துக்கொள் வோம், அவன் அங்கே ஒரு கைதியாக வாழ்வதில் சந்தேகம் இல்லே. ஆனல் சிறைச்சாலேயிலிருந்து அவன் வெளிவந்ததும், அவன் துள்ளிக் குதிப்பானு? மாட்டவே மாட்டான். அவன் மறுபடியும் குமாஸ்தா வேலே செய்கிருன். முன் போல் வேலே பார்த்துக்கொண்டே இருக்கிருன். குருவருளால் மெய்ஞ் ஞானம் பெற்ற பின்பும், ஒருவன் உலகத்தில் ஜீவன் முக்தனக நன்கு வாழ முடியும்" என்று கூறினர். இவ்வாறு ஸ்ரீராமகிருஷ்ணர் இல்லத்தில் வாழ் வார்க்கும் உறுதி கூறிவந்தார்.

1883 ஜூன் மாதத்தில் வெயில் கடுமையான ஒரு நாள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் கோயிற் பூஞ்சோலையிலே சிவபிரான் கோயில்களின் படிமீது அமர்ந்திருந்தார். ம— பனிக்கட்டி முதலிய காணிக்கைகளோடு அங்குவந்து குருதேவரை வணங்கியபின் படிகளின்மீது உட்கார்ந்திருந்தார்.

குருதேவர் (ம—விடம்): "மணி மல்லிக் என்பவரின் பேரத்தியின் கணவர் இங்கே இருந்தார். ஈசன் முற்றிலும் புத்திசாலியாயும் எல்லாம் அறிந்தவராயும் இருப்பதாகச் சொல்லக் கூடாது என்றும், அதுவன்றியின் உலகிலே இவ்வளவு துயரம் இருப்பதேன் என்றும் அவர் ஒரு புத்தகத்தில் (ஜான் ஸ்டுவர்ட் மில் என்பாரது சுயசரிதையில்) படித்தாராம். மேலும், மரணம் சம்பந்தப்பட்டமட்டிலும், ஒரு மனிதனை நெடுங்காலம் சித்திரவதை செய்வதைவிட ஒரே யடியாய்க் கொல்வது மிகவும் மேலானதாம். இன்னும் அந் நூலாசிரியர் தாமே பிரம்மாவாயிருந்தாராயின், இதனினும் மேலான உலகைப் படைத்திருப்பார் என்றும் எழுதுகிறார்."

ம— இவ்வார்த்தைகளைக் கேட்டு ஆச்சரியப்பட்டார். ஆனால் ஒன்றும் அவற்றைப்பற்றிக் கூறவில்லை.

குருதேவர் (ம—விடம்): "ஈசனின் வழிகளை ஒரு மனிதனுக்கு எப்போதாவது அறிய முடியுமா? நானும் பகவானைச் சில சமயம் நல்லவராகவும் சில சமயம் கெட்டவராகவும் நினைக்கிறேன். அவர் தமது மஹாமாயையால் நம்மை மயக்கி வைத்துள்ளார். சில சமயம் அவர் நம்மை விழிக்கச் செய்கிறார். சில சமயம் அவர் நம்மை அறியாத நிலையிலே வைத்து விடுகிறார். ஒரு கணம் அவித்தை மறைகிறது. அடுத்த கணம் அது நமது மனத்தை மூடிக்கொள்கிறது. பாசி மூடிய ஒரு குளத்திலே ஒரு செங்கல் துண்டை எறிவீரானால், உமக்குத் தண்ணீர் திடீரெனக் காட்சிதரும். ஆனால் சிறிது நேரம் செல்லுமுன் பாசி ஆடிக்கொண்டே மறுபடியும் வந்து, நீரை மூடிக்கொள்கிறது.

"ஒருவன் தன்னை உடலாக நினைக்கும்வரை சுகமும் துக்கமும், பிறப்பும் இறப்பும், நோயும் துயரமும் உண்டாவதை அறிவான். இவையெல்லாம் உடலுக்கு மட்டும் சொந்தமாம், ஆன்மாவுக்கல்ல. உடல் விழுந்தபின் ஒருக்கால் ஈசன் அதை முன்னிலும் நல்லதோர் இடத்திற்குக் கொண்டுபோவான். பிரசவ வேதனைக்குப்பின் குழந்தை பிறப்பதுபோல அது. ஆன்ம ஞானம் பெற்றபின் ஒருவனுக்குச் சுகமும் துக்கமும், பிறப்பும் இறப்பும் ஒரு கனவு போலத் தோன்றும். நாம் அறிவது எவ்வளவு அற்பம்! ஒரு படிப் பாத்திரத்தில் பத்துப்படி பாலை ஊற்ற முடியுமா?"

அந்தி வேளையில் மாலைத் தீபாராதனை பல கோயில்களிலும் ஆரம்பமாயிற்று. குருதேவர் தமது அறையில் சிறிய கட்டிலில் அமர்ந்து, தேவியைப் பற்றிய தியானத்தில் ஆழ்ந்திருந்தார், பல அடியார்களும் அங்கே இருந்தனர், ம— அவ்விரவைக் குருதேவரோடு கழிக்க எண்ணினர்.

சிறிது நேரம் கழிந்ததும் ஸ்ரீராமகிருஷ்ணர் தமது அறைக்கு வடக்கேயுள்ள தாழ்வாரத்தில் ஓரடியாரோடு பேசத் தொடங்கினர். "அதிகாலையிலும் பொழுது விடியும் சமயமும் தியானித்தல் நல்லது. நிதமும் அந்தி மாலைக்குப் பின்னும் தியானிக்கவேண்டும்" என்று அவர் கூறினர். ஸகுணமான ஈசனின் வடிவத்தையும் நிர்க்குணப் பிரம்மத்தையும் தியானிக்கும் வகையைப்பற்றி அடியார்க்கு அவர் போதித்தார்.

பொழுது சற்று கழிந்தபின் அவர் தம் அறைக்கு மேற்கேயுள்ள அரை வட்டம்போன்ற தாழ்வாரத்தில் உட்கார்ந்தார். அப்போது எறக்குறைய ஒன்பது மணி.

குருதேவர்: "இங்கு வருபவர் தமது சந்தேகங்களெல்லாம் நீங்கப் பெறுவது நிச்சயம். நீ என்ன நினைக்கின்றாய்?"

ம—: "அது உண்மையே."

ஒரு தோணி கங்கையில் கரைக்கு வெகு தூரத்தில் போய்க்கொண்டிருந்தது. தோணிக்காரன் பாட ஆரம்பித்தான். அவனது குரலின் ஒலி நீர் மேலே மிதந்து வந்து, குருதேவரது காதில் விழுந்தது, அவர் ஆவேச நிலையினை அடைந்தார். அவரது உடல் சிலிர்த்தது. அவர் ம—விடம் "எனது உடலைத் தொட்டுப்பார்" என்றார். ம— பெரிதும் ஆச்சரியமடைந்தார்.

கொஞ்சம் பொழுதானதும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் மறுபடியும் பேசத் தொடங்கினர்.

குருதேவர்: "இங்கே வருபவர் நல்ல பூர்வ வாசனைகளோடு பிறந்திருக்கவேண்டும். இது உண்மையன்றோ?"

ம—: "அது உண்மையே."

குருதேவர்: "கபடமற்றவன் எளிதாக ஈசுவர தரிசனம் பெறுகிறான். இரண்டு நெறிகள் உள்ளன; தருமநெறி (அறநெறி), அதருமநெறி (மறநெறி) என்பன. தரும நெறியையே ஒருவன் பின்பற்றவேண்டும்."

சனிக்கிழமை, ஜூலை 21, 1883.

அப்போது பின் மாலை நாலு மணி இருக்கும். ரரம்லால் முதலிய ஒன்றிரண்டு அன்பர்களோடு ஸ்ரீ ராமகிருஷ்ணர் தக்ஷிணேசுவரத்தை விட்டுக் கல்கத்தாவிற்கு ஒரு வண்டியிற் புறப்பட்டனர். வண்டி காளி கோயிலின் வாயிற் கதவைத் தாண்டியதும், ம— கையில் நான்கு பழங்களைக் கொண்டு நடந்து வருவதைக் கண்டனர். வண்டி நின்றது, ம— குருதேவரை வணங்கினர்.

குருதேவர் (ம—விடம் சிரிப்போடு): "எங்களோடு வா. நாங்கள் ஆதர் வீட்டுக்குச் செல்லுகிறோம்."

ம— ஆனந்தமாக வண்டியில் ஏறினர். ஆங்கிலக் கல்வி பெற்றிருந்ததனால், முற் பிறவிகளிலிருந்து வந்தடையும் பூர்வ வாசனைகளில் அவர்க்கு நம்பிக்கையில்லை. ஆனால் சில நாளைக்கு முன்பு அவர், குருதேவரிடத்து ஆதர்

அவ்வளவு பக்தி பூண்டமைக்குக் காரணம் அவரது பழம் பிறப்புக்களிலிருந்து வந்திருந்த நல்ல வாசனைகளே என்பதை ஒப்புக்கொண்டிருந்தார். பின்பு அவர் அவ் விஷயத்தைப்பற்றிச் சிந்தித்தபோது, பூர்வ வாசனைகள் ஒரு வனைத் தொடர்வது பற்றி முழுதும் நிச்சயமுண்டாகவில்லை என்பதைக் கண்டு கொண்டார். அவர் அன்று தக்ஷிணேசுவரம் வந்தது, அந்த விஷயத்தை ஸ்ரீராம கிருஷ்ணரோடு ஆராய்ச்சி செய்யத்தான். (பூர்வ வாசனை–ஸம்ஸ்காரம்)

குருதேவர்: "சரி, நீ ஆதரைப்பற்றி என்ன நினைக்கிறாய்?"

ம—: "அவர்க்கு ஈசன்மீது பேரன்பு உள்ளது."

குருதேவர்: "ஆதரும் உன்னை மெச்சிப் பேசுகிறார்."

ம— சிறிது மௌனமாயிருந்துவிட்டுப் பின் பூர்வ வாசனைகளைப்பற்றிப் பேசத் தொடங்கினர்.

ம—: "எனக்கு மறு பிறப்பிலும் பூர்வ வாசனைகளிலும் அதிக நம்பிக்கை இல்லை. அதனால் எனது பக்திக்கு ஏதேனும் கேடு விளையுமோ?"

குருதேவர்: "ஈசனது படைப்பில் எல்லாம் நடக்கக் கூடும் என்று நம்புவதே போதும். உன்னுடைய கருத்துக்களே (அபிப்பிராயங்களே) உண்மையானவை, மற்றவர்களுடையவை தப்பானவை என்ற எண்ணம் மனதில் எழ ஒருக்காலும் இடங்கொடுக்காதே. அப்படியானால், ஈசனே எல்லாவற்றையும் விளக்குவார்.

"ஈசனுடைய செயல்களைப்பற்றி ஒரு மனிதன் எவ்வளவு அறிய முடியும்? ஈசனது படைப்பின் முகங்கள் அனந்தம். ஈசனது செயல்களை அறியயான் முயல்வதே இல்லை. ஈசனது படைப்பில் எதுவும் நடக்கக்கூடும் என்று சொல்லக்கேட்டுள்ளேன். அதை நான் எப்போதும் ஞாபகத்தில் வைத்திருக்கிறேன், ஆதலால் உலகத்தைப்பற்றி ஒன்றும் நினைப்பதில்லை; ஈசனைப் பற்றி மட்டும் சிந்திப்பேன்.

"ஈசனது செயலை யாரேனும் அறிய முடியுமா? அவர் எவ்வளவு சமீபத்தில் உள்ளார்! ஆயினும் நமக்கு அவரை அறிய இயலாது போகிறது."

ம—: "அது உண்மையே."

குருதேவர்: "ஈசன் எல்லாவற்றையும் தமது மாயையால் மறைத்துள்ளார். ஒன்றையும் நாம் அறிய அவர் இடங்கொடுப்பதில்லை. மாயையாவது காம காஞ்சனமே. ஈசனைக் காணுதற்காக மாயையை ஒருபுறம் ஒதுக்குபவனுக்கு அவரைக் காண முடியும். ஒரு நாள் ஈசனுடைய செயலைப்பற்றி யாரோ ஒருவரிடம் விளக்கிக்கொண்டிருக்கும்போது, ஈசன் எனக்குக் கமார்ப்புகூரில் உள்ள ஏரியைத் திடீரெனக் காட்டினர். ஒரு மனிதன் பச்சையான பாசியை ஒதுக்குவதையும் நீர் குடிப்பதையும் நான் கண்டேன். தண்ணீர் படிகம்போலத் தெளிவாயிருந்தது. ஸச்சிதானந்தப் பொருள் மாயை யெனும் பாசியால் மூடப்பட்டிருப்பதை ஈசர் எனக்கு அறிவித்தார். பாசியை ஒரு பக்கம் ஒதுக்குபவனுக்கு நீரைக் குடிக்க முடியும்.

"ஈசனுடைய சைதன்யத்தால் உலகமும் சைதன்யம் (உணர்வு) உடைய தாகிறது. சில சமயம் இச்சைதன்யம் சிறு மீன்களிலும் நெளிந்துகொண்டிருப் பதைக் காண்கிறேன்."

வண்டி கல்கத்தாவில் ஷோலாபசாரிலே இரு பாதைகள் ஒன்றையொன்று வெட்டிச் செல்லும் இடத்திற்கு வந்தது. குருதேவர் பின்னும் தொடர்ந்து, "மழைக்காலத்துப் பூமியில் நீர் ஊறியிருப்பதுபோல, உல்கத்தில் ஈசனது சைதன்யம் ஊறியிருப்பதாகக் காண்கிறேன்" என்று சொன்னார்.

"நான் எத்தனையோ பல காட்சிகளைக் காண்கிறேன், ஆனால் அது பற்றி ஒருக்காலும் பெருமைப்படுவதில்லை."

ம— (புன்சிரிப்போடு): "தேவரீரும் பெருமை கொள்வதாகப் பேசுவதா?"

குருதேவர்: "உண்மையாகவே கூறுகிறேன்; யான் இம்மியளவும் பெருமை கொள்வதில்லை."

ம—: "ஒரு காலத்தில் ஸாக்கிரடீஸ் என்னும் பெயருடைய ஒரு மனி தர் கிரேக்க நாட்டில் வாழ்ந்தார், அவர் மனிதர்க்குள்ளே ஞானியாவார் என்று தேவ வாக்கு கூறிற்று. ஸாக்கிரடீஸ் அத்தேவ வாக்கைக்கேட்டு ஆச்சரியங் கொண்டார், அவர் அதைப்பற்றித் தனியிடத்திலே வெகு நேரம் தியானித் தார். பிறகு அதன் உட்பொருளை உணரலானார். அவர் தமது நண்பர்களிடம் கூறியதாவது: 'எல்லா மனிதர்க்குள்ளும் நான் ஒருவனே ஒன்றுமறியேன் என்பதை உணர்ந்துளேன், ஆனால் ஒவ்வொருவனும் தன்னை ஞானியென நம்புகிறான். உண்மை யாதெனில் அனைவரும் அறியாதவரே."

குருதேவர்: "இடையிடையே யான் எனக்குள்ளே 'இத்தனைபேர் என் னிடம் வருதற்கு நான் அறிந்தது யாது?' என்று சொல்லிக்கொள்கிறேன்; வைணவ சரணர் ஒருபெரும் பண்டிதராவார். அவர் என்னிடம் 'நீர் பேசு கின்ற விஷயங்கள் எல்லாவற்றையும் யான் சாஸ்திரங்களில் காணக்கூடும். ஆனால் நான் உம்மிடம் வருவதேன் எனபதை அறிவீரோ? உமது வாயால் அவற்றைக் கேட்கவே நான் வருகிறேன்' என்று சொல்வதுண்டு."

ம—: "உமது வார்த்தைகள் யாவும் சாஸ்திரங்கட்கு ஒத்துள்ளன."

குருதேவர்: "என்னைப்போன்றுள்ள வேறெருவரையாவது — ஒரு பண்டிதரையோ சாதுவையோ—நீ கண்டுள்ளாயா?"

ம—: "ஈசன் உம்மைத் தமது கைகளாலே (சுயமாக) படைத்தார்; ஆனால் மற்றவரை யந்திரத்தைக்கொண்டு படைத்தார். மற்ற அனைவரையும் அவர் சட்டப்படி படைத்துள்ளார்."

குருதேவர் (சிரித்துக்கொண்டே, ராம்லாலிடமும் பிற அடியார்களிடமும்): "அவன் கூறியது உங்கள் காதில் விழுந்ததா?"

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிறிது நேரம் சிரித்துவிட்டுக் கடைசியாக, "உண் மையாகவே என்னிடம் கருவம் இல்லை; எள்ளளவும் இல்லை" என்று சொன்னார்.

ம—: "தயையும் ஒரு பந்தமோ ?"

குருதேவர்: "ஆம், அது பந்தமே. ஆனால் அக்கருத்து சாதாரண மனிதனுக்கு எட்டாத தூரத்தில் உள்ளதொன்று. தயை ஸத்துவத்தினின்றும் கிளம்புகிறது. ஸத்துவம் காப்பாற்றுகிறது, ரஜஸ் உண்டாக்குகிறது, தமஸ் அழிக்கிறது. ஆனால் பிரம்மனே முக்குணங்கட்கும் அப்பாலானது. அது பிரகிருதிக்கும் அப்பாலானது. பிரம்மனே இன்னதென்று சொல்ல முடியாது. அதை அறிந்தவனும் அதைப்பற்றிப் பேச முடியாது.

"ஒரு நாள் நான்கு தோழர்கள் உலாவப்போயிருந்தபோது, சுவரால் சூழப்பட்ட ஒரிடத்தைக் கண்டனர். சுவர் மிக உயரமாயிருந்தது. உள்ளே இருப்பதை இன்னதென்றறிய அவர்கள் அனைவரும் அதிக ஆவலானர். அவர்களில் ஒருவர் சுவரின் உச்சியில் ஏறினர். உள்ளே நோக்கியபோது அவர் கண்டது அவரை ஆச்சரியத்தால் மௌனமாக்கிற்று. அவர் 'ஓ' என்று மட்டும் கத்திவிட்டு உள்ளே குதித்தனர். தாம் கண்டதைப்பற்றி ஒரு சமாசாரமும் அவராற் சொல்ல முடியவில்லை. மற்றவரும் சுவர்மீது ஏறினர். அதே மாதிரி 'ஓ! ஓ!' என்று கத்தினர், உள்ளே குதித்தனர். உள்ளே இருந்தது இன்னது என்று அப்போது யாராற் கூறமுடியும் ?"

அடியார்: "பிரம்ம ஞானம் அடைந்தபின் ஒருவன் ஒரு சங்கத்தை நடத்திக்கொண்டிருக்க முடியுமா ?"

குருதேவர்: "பிரம்ம ஞானத்தைப்பற்றி ஒருநாள் கேசவ சேனரிடம் பேசினேன். அவர் என்னை மேலும் விரித்துக் கூறும்படி வேண்டினர். 'இன்னும் சொல்லிக்கொண்டே போவேனையின், உம்மால் உமது சங்கத்தையும் உம்மைப் பின்பற்றுவோரையும் காப்பாற்ற முடியாது போய்விடும்' என்று யான் சொன்னேன். அப்போது கேசவர் 'அப்படியானால் இதோடு நிறுத்திவிடுங்கள்' என்று கேசவர் மறுமொழி கூறினர். (அனைவரும் சிரித்தல்) ஆனால் நான் பின்னும் கேசவரிடம், "'நான்" "எனது" என்பவை அறியாமையைக் குறிக்கின்றன. அறியாமை இல்லாதபோது "நான் கருத்தா; இவர்கள் எனது மனைவிமக்கள், இவை எனது உடைமைகள்" என்பது போன்ற உணர்ச்சி ஒருவனுக்கு இருக்க முடியாது' என்று கூறினேன். அதைக்கேட்டதும், கேசவர் 'சுவாமி, "நான்"என்பதை ஒருவன் விட்டுவிடுவானையின், ஒன்றுமே மிஞ்சாதே' என்றார். நான் அவர்க்கு மறுபடியும் உறுதி கூறி, 'உம்மை "நான்" என்பதை முழுவதும் விட்டுவிடும்படிச் சொல்லவில்லை. நீர் "பழுக்காத நான்" என்பதை மட்டும் விட்டுவிடல்வேண்டும். "பழுக்காத நான்" என்பது இருப்பதனால் ஒருவன் "நானே கருத்தா. இவர்கள் எனது மனைவியும் மக்களும், நான் ஓர் ஆசிரியன்" என்ற உணர்ச்சியுடையவன் ஆகிறான். இந்தப் "பழுக்காத நான்" என்பதைத் துறந்துவிட்டு, "பழுத்த நான்" என்பதை வைத்துக்கொள்ளும். நீர் ஈசனது வேலைக்காரர்என்பதையும், அவரது அடியார்என்பதையும், ஈசனே கருத்தா, நீர் அவரது கருவிஎன்பதையும் உணரும்படி இந்தப் "பழுத்த நான்" உம்மைச் செய்யும்' என்றேன்,

"இந்தப் 'பழுக்காத நான்' என்பதை விட்டுவிடும்படி நான் கேசவரிடம் சொன்னேன். 'நான் ஈசனது வேலைக்காரன், ஈசனது அன்பன்' என்று உணரும் அகங்காரம் ஒருவரைக் கெடுக்காது. அவரிடம் நான் 'நீர் உமது சங்கத்தையும் உம்மைப் பின்பற்றுவோரையும் பற்றி அடிக்கடி பேசிக்கொண்டு வருகிறீர். ஆனால் ஜனங்கள் உமது சங்கத்தைவிட்டு வெளியேறவும் செய்கின்றனர்' என்று சொன்னேன். கேசவர் 'அது உண்மைதான். பல ஆண்டுகள் அதில் சேர்ந்து இருந்தபின் ஜனங்கள் வேறொரு சங்கத்திற்குப் போகிறார்கள். அதனினும் கேடானது யாதெனில், என்னைக் கைவிட்டபின், அவர்கள் என்னை எங்கும் திட்டுகின்றனர்' என்று பதிலுரைத்தார், 'நீர் ஏன் அவர்களது சுபாவத்தை ஆராய்ந்தறியவில்லை? கண்டவரை எல்லாம் சீடனாக்குவதில் ஏதேனும் நன்மை உண்டாகுமா?' என்று அவரைக் கேட்டேன்.

"முக்குணங்களையும் தாண்டிச் செல்வது மிகமிகக் கடினம். ஈசனைக் காணுமல் அந்நிலையை அடைதல் இயலாது. மனிதன் மாயையின் எல்லைக்குள் வாழ்கிறான். மாயை அவனுக்கு ஈசனைத் தரிசிக்க இடம் கொடுப்பதில்லை. அது அவனை அறியாமைக்கு இரையாக்கிவிட்டது.

"ஒரு நாள் இருதயன் என்பான் இங்கே ஒரு காளைக் கன்றைக் கொண்டு வந்தான், ஒரு சமயம் அவன் அதை ஒரு கயிற்றிற் கட்டித் தோட்டத்தில் மேயும்படி விட்டிருந்ததைக் கண்டேன். நான் அவனிடம் 'இருதய, கன்றை அங்கே ஒவ்வொரு நாளும் கட்டுவதேன்?' என்று கேட்டேன். அதற்குப் பதிலாக அவன் 'மாமா, இக்கன்றை நமது கிராமத்திற்கு அனுப்பப் போகிறேன். அது பலமுடையதாகும்போது நான் ஏரில் அதை மாட்டுவேன்' என்றான். இம்மொழிகளைக் கேட்டதும், 'தெய்விக மாயையின் திருவிளையாடலை யார் அறிவார்! கமார்புகூரும் சிக்கோரும் (இருதயனது கிராமம்) கல்கத்தாவினின்றும் வெகுதூரம் உள்ளன! இந்த ஏழைக்கன்று அவ்வளவு வழியும் நடந்து செல்லவேண்டும். பின் அது வளருமாம், கடைசியாக அதை ஏரிற் பூட்டுவானாம்! இதுதான் உண்மையில் உலகம்! உண்மையாக இதுவே மாயை!' என்று நினைத்தேன், திகைத்தேன், அறிவற்றுக் கீழே வீழ்ந்தேன். வெகு நேரத்திற்குப் பின்புதான் தெளிந்து எழுந்தேன்."

புதன், செப்டம்பர் 26, 1883

ம— மாலையில் வந்து சேர்ந்தார், குருதேவர் சிறு கட்டிலில் அமர்ந்திருப்பதைக் கண்டார்.

குருதேவர் (ம—விடம்): "நீ இன்று இங்கே இருப்பது என்ன காரணம்? உனக்குப் பள்ளிக்கூடம் இல்லையா?"

ம—: "இன்று எமது பள்ளிக்கூடம் ஒன்றரை மணிக்கு மூடப்பட்டது."

குருதேவர்: "ஏன் அவ்வளவு சீக்கிரம்?"

ம—: "வித்யாசாகர் பள்ளிக்கூடத்தைப் பார்க்க வந்தார். அவர்க்குப் பள்ளிக்கூடம் சொந்தம். அதனால் பையன்கட்கு அவர் வரும்போதெல்லாம் அரை நாள் விடுமுறை கிடைக்கிறது."

குருதேவர்: "வித்யாசாகர் தமது வார்த்தையை ஏன் காப்பாற்ற வில்லை? அன்று அவர் இங்கு வந்து என்னைப் பார்ப்பதாகச் சொன்னார். ஆனால் அவ்வார்த்தையைக் காப்பாற்ற வில்லையே.

"ஒரு பண்டிதருக்கும் ஒரு சாதுவுக்கும் பெரும் வேறுபாடு உள்ளது. ஒரு வெறும் பண்டிதரின் மனம் காம காஞ்சனங்களின்மீது நிலையாயிருக்கும்; ஆனால் சாதுவின் மனமோ ஹரியின் பாத தாமரைகளில் நிலைத்திருக்கும். ஒரு பண்டிதர் ஒன்று சொல்வார், இன்னொன்று செய்வார். ஆனால் ஒரு சாதுவோ முற்றிலும் வேறுவிதமாய் இருப்பார். தனது மனதை ஈசனுக்கே கொடுத்துவிடும் ஒருவனின் வார்த்தைகளும் செயலும் முழுதும் வேறுவிதமாயிருக்கும்.

"ஒரு நாள் ஒரு வேதாந்த முனிவர் இங்கு வந்தார், மேகத்தைக் கண்டதும் அவர் கூத்தாடுவார்; மழைக் காற்றைக் கண்டதும் அவர் ஆனந்த பரவசம் அடைவார். அவர் தியானம் பண்ணும்போது எவரேனும் அருகே சென்றால், அவர் மிக்க கோபங்கொள்வார். ஒரு நாள் அவர் தியானித்துக்கொண்டிருக்கும்போது யான் அவரிடம் சென்றேன். அதனால் அவர் சினந்தார். அவர் எப்போதும் 'பிரம்மமே சத்தியம்; உலகம் மித்யை' என்று விசாரணை செய்துகொண்டிருந்தார். பலவகையான தோற்றத்திற்கு மாயையே காரணமாதலின், அவர் தமது கையில் ஒரு சரலாந்தலில் உள்ள முப்பட்டைக் கண்ணாடியை வைத்துக்கொண்டே உலாவுவார். முப்பட்டைக் கண்ணாடி வழியாகப் பார்க்கும்போது பல நிறங்கள் தோன்றுகின்றன. உண்மையில் நிறம் எனப்படும் ஒரு பொருளே இல்லை. அதுபோன்றே உண்மையில் பிரம்மனைத் தவிர வேறென்றும் இல்லை. ஆனால் மாயையால், அகங்காரத்தால், பலவகைப் பொருள்கள் இருப்பதான தோற்றம் உண்டாகிறது. அவர் ஒரு பொருளை ஒரு முறைக்குமேல் பார்க்கமாட்டார்; மாயையாலும் பற்றுதலாலும் மயங்கக் கூடாதென்றே அப்படிச் செய்வார். அவர் மூன்று நாள் இங்கு தங்கினார். ஒரு நாள் அவர் கரையருகே வீணையின் ஒலியைக் கேட்டார்; பிரம்மனை உணர்ந்த ஒருவர் அதனைக் கேட்டதும் சமாதியில் மூழ்கிவிடுவார் என்று அவர் சொன்னார்."

அம்முனிவரைப்பற்றிப் பேசும்போது, குருதேவர் தமது அடியார்கட்கு ஒரு பரமஹம்சரின் நடையுடைபாவனைகளை நடித்துக் காட்டினார். ஒரு குழந்தையின் நடை, சிரிப்பு ஜொலித்துக்கொண்டிருக்கும் முகம், ஆனந்தத்தில் நீந்தும் கண்கள், ஆடையொன்றுமற்ற உடல்—இவற்றை விளக்கிவிட்டு அவர் மறுபடியும் சிறு கட்டிலில் அமர்ந்து, உயிரை வசப்படுத்தும் தம் மொழிகளைப் பொழிந்தார்.

குருதேவர் (ம—விடம்): "யான் நங்தா (நிர்வாணியான தோத்தாப்புரி) என்பவரிடமிருந்து வேதாந்தம் கற்றேன்; அதாவது: 'பிரம்மமே சத்தியம்; ஜகம் மித்யை' என்பதை. மந்திரவாதி தனது மந்திரவித்தை செய்கிறான். அவன் ஒரு மாமரத்தை உண்டாக்குகிறான்; அது காய்க்கவும் செய்கிறது. ஆனால் இதெல்லாம் கைத்தந்திரம். மந்திரவாதியே உண்மையாவான்."

ம: "வாழ்க்கை முழுவதும் ஒரு நீண்ட தூக்கம்போல் தோன்றுகிறது. நாம் பொருள்களைச் சரியானபடி காண்பதில்லை என்பதை மட்டும் நான் அறிகிறேன். நாம் இவ்வுலகத்தைக் காண்பது மனதினாலே; அம்மனத்தால் ஆகாயத்தின் இயல்பையும் நாம் அறிய முடியவில்லை. இந்நிலையில் நமது காட்சிகள் எப்படி சரியாயிருக்கமுடியும்?"

குருதேவர்: "ஒரு மனிதன் எப்படி சரியாகப் பார்க்கக் கூடும்? அவனது மனம் சன்னிபாத சுரத்தால் வருந்தும் நோயாளியின் மனம்போல் புலப்ப நிலையில் உள்ளது."

குருதேவர் தமது இனிய குரலில் பின்வருமாறு பாடினார்;

எனைவருத்தும் விஷசுரமாம் இதுயாதோ சொல்லாய்,
உனதருளே இதைத்தீர்க்கும் ஒருமருந்தாம் அன்னாய்

.....

தொடர்ச்சியாகப் பின்னும் குருதேவர் சொல்வார்: "உண்மையாக அது (விஷசுரத்தால் வரும்) புலப்ப நிலை. உலகப்பற்றுள்ள மக்கள் எப்படித் தமக்குள் சண்டையிடுகின்றனர் என்பதைப் பாராய். எதற்காக அவர்கள் சண்டையிடுகின்றனர் என்பதை எவரும் அறியார்? ஆனால் அவர்கள் சண்டையிடுவதை எப்படி என்பது! எவ்வளவு கூக்குரல்! எவ்வளவு வசவு!"

குருதேவரும் ம—வும் காளிகோயிலை நோக்கிச் சென்றனர்.

குருதேவர்: "இவ்வுலகம் 'மித்தையாலாய ஒரு கூடு' ஆகலாம்; ஆனால் இது 'ஒரு களியாட்ட மாளிகை'யென்றும் சொல்லப்படுவதுண்டு. இவ்வுலகத்தை ஒருவன் ஒரு களியாட்ட மாளிகையாகவும் ஆக்கக்கூடும்."

ம—: "ஆனால் தொடர்ச்சியான ஆனந்தம் இவ்வுலகில் எங்குள்ளது?"

குருதேவர்: "சரி, எங்கே அது?"

ஸ்ரீ ராமகிருஷ்ணர் காளி கோயிலின் முன்னால் நின்றார், தேவியின் முன்பு வீழ்ந்து வணங்கினார். ம—அவரைப் பின் தொடர்ந்தார். பின்பு குருதேவர் கோயிலுக்கு முன்னால் தணிந்ததான தரைமீது ஆனந்த வடிவமான திருவுருவத்தை நோக்கியவண்ணமாய் உட்கார்ந்தார், அவர் ஒரு சிவப்புக் கரையுள்ள ஒரு துணியை உடுத்திருந்தார்; அதில் ஒரு பகுதி அவரது தோளின்மீதும் முதுகின்மீதும் கிடந்தது. ம— அவரது பக்கத்தில் உட்கார்ந்தார்,

ம—: "இவ்வுலகிலே தொடர்ச்சியான ஆனந்தம் இல்லையே; பின்னே ஏன் ஒருவன் ஓருடலைத் தரித்துக்கொள்கிறான்? சென்ற கருமங்களின் பயனை அனுபவித்தற்காக மட்டும் உடல் ஏற்பட்டுள்ளது என்பதை யான் அறிகிறேன்.

ஆனால் அது இப்போது எம்மாதிரியான கருமத்தைச் செய்து வருகின்றது என்பதை யார் அறிவார்? நாம் நசுக்கப்பட்டு வருகிறோம் என்னும் துர்ப்பாக்கியமே மிச்சம். அஷ்ட பந்தங்கள் (எட்டுவிதக் கட்டுகள்) உள்ளனவே."

குருதேவர்: "அவை எட்டுப் பந்தங்களல்ல, எட்டுத்தளைகள் (விலங்குகள்). ஆனாலும் அவை இருந்தால் என்ன? இவ்விலங்குகள் ஈசனருளால் ஒரு கணத்தில் நொறுங்கிவிடுகின்றன. அது எதைப்போன்றது தெரியுமா? ஓர் அறை ஆயிரம் வருடங்களாக இருட்டாகவே வைக்கப்பட்டிருப்பதாக நினைத்துக்கொள்வோம். அதற்குள் ஒரு மனிதன் ஒரு வெளிச்சத்தைக் கொணர்ந்ததும், இருள் மறைகின்றது. கொஞ்சங் கொஞ்சமாக அன்று. ஜாலவித்தைக்காரனது வித்தையை நீ பார்த்ததில்லையா? பல முடிச்சுகளைக் கொண்ட ஒரு கயிற்றை அவன் எடுத்துக்கொள்கிறான்; அதன் ஒரு நுனியை ஏதாவதொன்றில் கட்டிவிட்டு, மற்றொரு நுனியைக் கையில் வைத்துக்கொள்கிறான். பிறகு ஒன்றிரண்டு தடவைகள் கயிற்றை அசைக்கிறான். உடனே எல்லா முடிச்சுகளும் அவிழ்ந்துவிடுகின்றன. ஆனால் மற்றொரு மனிதன் எவ்வளவு முயன்றாலும் அவற்றை அவிழ்க்க முடியாது போகிறது. குருவின் கிருபையால், கண்ணை மூடித் திறக்குமுன் அறியாமையின் முடிச்சுகள் யாவும் அவிழ்ந்து போகின்றன.

"தருக்கம் பண்ணாதே. எவர்க்கு என்றேனும் ஈசனை அறிய முடியும்? இப் பிரபஞ்ச முழுதும் பிரம்மனின் ஒரு சிறு அம்சம் மாத்திரமே என்பதை யான் நந்தாவினிடமிருந்து (தோத்தாப்புரியினிடமிருந்து) முடிவாகக் கேட்டுளேன்.

"ஹாஸ்ரா அளவிற்கு மிஞ்சிக் கணக்குப் பார்க்கும் வழக்கமுடையவன். அவர் 'ஈசனின் இவ்வளவு பங்கு பிரபஞ்சமாகியுள்ளது; இவ்வளவு மிச்சம்' என்று சொல்லுகிறார். அவர் கணக்குப் பண்ணுவதைக் கேட்கும்போது, என் தலை வலிக்கிறது. எனக்கு ஒன்றும் தெரியாது என்பது எனக்குத் தெரியும். ஒரு சமயம் நான் ஈசனை நல்லவராகவும், மற்றொரு சமயம் கெட்டவராகவும் நினைக்கிறேன். அவரைப்பற்றி என்னால் யாது அறிய முடியும்?"

ம—: "அது உண்மையே. எவராலும் என்றைக்கேனும் ஈசனை அறிய முடியுமா? ஒவ்வொருவரும் தமது அற்ப அறிவைக்கொண்டு ஈசனைப்பற்றிய அனைத்தையும் அறிந்துவிட்டதாக நினைக்கிறார்."

குருதேவர்: "எப்போதாவது யாராவது ஈசனை அறிய முடியுமா? நான் அதற்காக முயற்சி செய்வதும் இல்லை. யான் அவரைத் தாயாகக் கருதித் தான் பிரார்த்திப்பேன். தாயாகிய அவள் தன் பிரியப்படியே செய்யட்டும். அம்மையின் திருவுளம் அதுவாயின் நான் அம்மையை அறிவேன்; ஆனால் அம்மையின் திருவுளம் வேறுவிதமாயிருப்பின், அறியாமையோடு யான் இருப்பதே எனக்கும் சந்தோஷமாகும். சிறு குழந்தைக்குத் தன் அம்மை மட்டுமே வேண்டும். தன் அம்மை எவ்வளவு பணக்காரி என்பதை அது அறியாது,

வது அவர்க்குக் கேட்கிறது; அவர் சிரிக்கிறார், அழுகிறார்" என்று அவர் கூறினர்,

கேசவர் தேவியோடு பேசினர், சிரித்தார், அழுதார் என்றதைச் சொன்னதும், குருதேவர் ஆனந்த பரவச நிலை அடைந்தார். உடனே அவர் சமாதி நிலையிற் புகுந்தார்.

அப்போது பனிக்காலம்; குருதேவர் பச்சை நிறமான மெல்லிய 'பிளானல்' (கம்பளிச்)சட்டையை அணிந்து, அதன்மீது ஒரு சால்வையைச் சாத்திக்கொண்டிருந்தார். அவர் நிமிர்ந்த நிலையிலேயே கண்கள் நிலைத்தவராய், ஆனந்தத்தில் முழ்கினர், இவ்வாறு நீண்ட நேரம் கழிந்தது. அவரிடம் சாதாரண விழிப்பு நிலைக்கு வருவதற்குரிய அறிகுறியொன்றும் காணப்படவில்லை.

வரவர் இருட்டாயிற்று. கூடத்திலே விளக்கேற்றினர்; குருதேவரை அங்கே அழைத்துச் செல்ல நினைத்தனர். சாதாரண நிலைக்கு அவர் மெதுவாகக் கீழிறங்கி வரும்போது, மிக்க வருத்தத்தோடு அவரைக் கூடத்திற்கு அழைத்துச் சென்றனர். அறையிலே நாற்காலிகள் மேஜை முதலிய சாமான்கள் போதிய அளவு இருந்தன. சாமான்களைக் கண்டதும் குருதேவர் தமக்குள்ளே "இவையெல்லாம் முன்பு அவசியமாயிருந்தன; இப்போது அவற்றால் யாது பயன்?" என்று முணுமுணுத்துக்கொண்டிருந்தார்.

குருதேவர் தீவிர தெய்வீக ஆவேச நிலையிலிருந்தார், நல்ல வெளிச்சம் இருந்த அவ்வறையில் பிராம்மோ அடியார்கள் குருதேவரைச் சூழ்ந்து உட்கார்ந்திருந்தனர்; லாட்டு ராக்கால் ம—இம் மூவரும் அவரருகே உட்கார்ந்திருந்தனர். அவர் இன்னும் தெய்வீக ஊக்கம் நிரம்பியவராய் தமக்குள்ளே பின்வருமாறு சொல்லிக்கொண்டிருந்தார்: "உடலும் ஆன்மாவும்! உடல் பிறந்தது, அது இறக்கும். ஆனல், ஆன்மாவுக்கோ சாவு இல்லை. அது கொட்டைப் பாக்கைப் போன்றுள்ளது. பாக்கு பழுக்கும்போது, அது தோட்டில் ஒட்டிக்கொள்வதில்லை. ஆனல் அது பச்சையாயுள்ளபோது, அதைத் தோட்டினின்றும் பிரித்தல் கஷ்டமாகிறது. ஈசனைத் தரிசித்த பின் உடலோடு ஒருவன் தன்னை ஒன்றுகக் கருதமாட்டான். அப்போது உடலும் ஆன்மாவும் இரு வெவ்வேறு பொருள்கள் என்பதை அவன் அறிகிறன்."

இச்சமயம் கேசவர் அறைக்குட் புகுந்தனர். அவர் கிழக்கேயுள்ள கதவு வழியாக வந்தனர். நகரப் பொது மண்டபத்திலோ பிரம்ம சமாஜக் கோவிலிலோ பிரசங்கஞ் செய்தபோது அவரைப் பார்த்த ஞாபகம் உடையவர், இப்போது எலும்புந்தோலுமாய் அவர் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். அவரால் நிற்கவும் முடியவில்லை. சுவரை ஆதாரமாகப் பற்றிக்கொண்டே அவர் நடந்தார். மிக்க சிரமத்தோடு அவர் கட்டிலின் முன்பு கீழே உட்கார்ந்தார். இதற்கிடையில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கட்டிலிலிருந்து கீழே இறங்கி, தரையிலே உட்கார்ந்துகொண்டிருந்தார், கேசவர் குருதேவர் முன்பு தாழ்ந்து வணங்கி. அவரது திருவடியைத் தமது தலையால் தொட்டுக்கொண்டு, வெகு

நேரம் அந்நிலையிலே இருந்தார். பிறகு ஆதர் நிமிர்ந்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இன்னும் ஆனந்த பரவச நிலையில் இருந்தார். அவர் தமக்குள்ளே முணுமுணுத்துக்கொண்டிருந்தார்.

கேசவர் தமது குரலை உயர்த்தியவராய், "யான் இங்குளேன். யான் இங்குளேன்" என்று கூறினர். அவர் ஸ்ரீராமகிருஷ்ணரது இடது கையைப் பிடித்துக்கொண்டு அதை மெல்லத் தடவினர். ஆனால் குருதேவர் ஆழ்ந்த சமாதியிலிருந்தார்; முழுப்பிரேமை வெறிகொண்டிருந்தார். அவர் தமக்குள்ளே பேசிக்கொண்டிருந்தபோதே, அவரது வாயினின்றும் வார்த்தைகள் தாரை போலப் பெருகின ; அடியார்கள் மந்திரவசப்பட்டார் போன்று அவரது பேச்சைக் கூர்ந்து கேட்டனர்.

குருதேவர்: "ஒரு மனிதன் உபாதிகளோடு சம்பந்தப்பட்டிருக்கும் வரை, அவன் பலவற்றைக் காண்பான்; இவர் கேசவர், அவர் பிரசன்னர். அவர் அமிருதர் என்றெல்லாம் பலவாருகக் காண்பர்; ஆனால் பூரண ஞானம் பெற்ற பின்போ, அவர் ஒரே சைதன்யத்தையே எங்கும் காண்பர். அதே பூரண ஞானம் மேலும் அவரை இன்னென்றையும் உணரச் செய்கிறது; அதாவது, அந்த ஒரே சைதன்யமே ஜகத்தாகவும், ஜீவர்களாகவும், இருபத்து நான்கு தத்துவங்களாகவும் ஆகியுள்ளது என்பதை. ஆனால் தெய்வசக்தியின் பிரகாசம் பல்வேறு ஜீவர்களிடத்துப் பலவிதமாயுள்ளது. அவரே (பகவானே) எல்லாமாகியுள்ளார் என்பதில் ஐயமில்லை; ஆனால் சிலவற்றில் மற்றப் பொருள்களில் இருப்பதைவிட அதிகப் பிரகாசம் வெளிப்படுகின்றது.

"ஈசனது லீலைக்கு ஆதாரமாயிருக்கும் ஜீவன் அவரது விசேஷ சக்தியைப் பெற்றுள்ளவனாகிறான். முதலாளி தனது சொத்தின் எந்தப் பகுதியிலும் வாசம் பண்ணலாம். ஆனாலும் ஒரு குறிப்பிட்ட கூடத்தில் பொதுவாக அவரைக் காணலாகும். பக்தனே ஈசனது கூடமாவான். ஈசனுக்குத் தமது அடியாரது நெஞ்சத்தில் லீலை புரிய விருப்பம் எழும். அங்கேதான் அவரது விசேஷ சக்தியின் பிரகாசம் விளங்குகிறது. அம்மாதிரியான பக்தனின் அடையாளம் யாது? ஒருவன் பெரும் வேலைகள் செயவதைக் காணும்போது, ஈசனது விசேஷ சக்தி அவனிடம் பிரகாசிக்கின்றது என்று நீர் அறிந்து கொள்ளும்.

"ஈசனைத் தரிசித்தபின்பு, அவரை எல்லா உயிர்களிலும் காணலாம். ஆயினும் அவரது பிரகாசம் அதிகமாயுள்ளது மனிதனிடத்தேதான். இன்னும் மனிதர்க்குள்ளும், சாத்துவிக குணமுள்ள அடியார்களிடத்தில், அதாவது காம காஞ்சனங்களை அனுபவிக்கும் இச்சை சற்றும் இல்லாதவரிடத்தில், ஈசனது பிரகாசம் அதிகத் தெளிவாக இருக்கும். சமாதியடைந்த ஒருவனது மனம் சமாதி நிலையிலிருந்து கீழிறங்கியபின் எங்கே தங்கி நிற்கும்? இக் காரணத்தினால்தான், சாத்துவிக குணம் பெற்றவரும் காம காஞ்சனப் பற்று நீங்கினவருமான தூய நெஞ்சுடைய அடியார்களது சேர்க்கையை நாடும்

அவசியத்தை அவன் உணர்கிறான். அம்மாதிரியான மனிதன் வியாவகாரிக நிலையில் வேறு எவ்வாறு பொழுதுபோக்க முடியும்?

"எனது அம்மை! யார் எனது அம்மை? அவள் ஜெகத்திற்கு அம்மை யாவாள். உலகத்தைப் படைப்பவளும், காப்பவளும், தனது குழந்தைகளை எப்போதும் காப்பாற்றுபவளும், அவர்கள் விரும்புவது தர்ம அர்த்த காம மோக்ஷங்களில் எதுவாயினும் அதனைக் கொடுப்பவளும் அவளே. உண்மை யான மகன் ஒருவன் தனது தாயைவிட்டுப் பிரிந்து வாழமாட்டான். தாய் அனைத்தையும் அறிவாள். குழந்தை செய்வதெல்லாம், உண்பதும் குடிப்பதும் உல்லாசமாயிருப்பதும்தான்; உலகப்பொருள்களைப்பற்றி அவன் கவலைப்படுவ தில்லை."

கேசவர்: "ஆம், ஐயன்மீர், அது முற்றிலும் உண்மையே."

பேசிக்கொண்டிருக்கும்போதே, ஸ்ரீராமகிருஷ்ணர் சாதாரண நிலைக்குத் திரும்பிவிட்டனர். முகத்தில் புன்சிரிப்போடே அவர் கேசவரோடு பேசினர். அறை நிறைய இருந்த மனிதர் அவர்களை ஆவலோடு உற்று நோக்கிக் கொண்டும், அவர்களுடைய மொழிகளைக் கவனமாகக் கேட்டுக்கொண்டும் இருந்தனர். கேசவரோ குருதேவரோ ஒருவருக்கொருவர் உடல் நலத்தைப் பற்றி விசாரியாததைக் கண்டு எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். அவர்கள் ஈசனைப்பற்றியே பேசினர்.

குருதேவர் (கேசவரிடத்து): "பிராம்மோ சமாஜத்தின் அங்கத்தினர்கள் ஈசனுடைய பெருமைகளைப்பற்றி அவ்வளவு விரிவாகப்பேசுவதேன்? 'ஈசனே, நீ சந்திரனையும் சூரியனையும் நக்ஷத்திரங்களையும் படைத்துள்ளனை' என்பது போன்றவைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லும் அவசியம் யாது? ஜனங் களில் அநேகர் தோட்டத்தை மட்டும் கண்டதும் அதன் புகழில் மூழ்கிவிடுகின் றனர். அதன் சொந்தக்காரனைக் காண ஆசைப்படுபவர் எவ்வளவு சுருங்கிய தொகையினர்! பெரியது தோட்டமா? அதன் சொந்தக்காரனா?

"நான் உண்மையைச் சொல்லட்டுமா? மனிதனுக்குத் தன் செல்வத்தின் மீது பிரியம்; ஆதலால் ஈசனுக்கும் தமது சொத்தின்மீது பிரியமிருக்குமென அவன் நினைக்கிறான். நாம் அவரது சொத்தைப் புகழ்ந்தால் அவர்க்குப் பிரிய மாயிருக்கும் என்று மனிதன் நினைக்கிறான்.

"எவனையினும் செல்வத்தால் ஈசரை என்றைக்காயினும் அடக்க முடி யுமா? அன்பினால் மட்டும் அவரை வசப்படுத்திக் கொள்ளலாகும். அவர்க்கு வேண்டுவது யாது? செல்வமன்று என்பது நிச்சயமன்றோ? அவர் தமது அடியார்களிடம் எதிர்பார்ப்பது அன்பையும் பக்தியையும் உணர்ச்சியையும் விவேகத்தையும் வைராக்கியத்தையுமே.

(புன்சிரிப்போடு கேசவரிடம்): "நீர் நோயால் வருந்துவதேன்? அதற் கொரு காரணம் உள்ளது. பல பாவக (பக்தியால் விளையும்) உணர்ச்சிகள் உமது உடல் வழியாகச் சென்றுள்ளன; இதனால் அது நோய்க்கு உள்ளா

யிற்று. (பக்தியாற் பொங்கும்) ஓர் உணர்ச்சி எழுங்காலத்து, அதைப்பற்றி வெகு சிறியதே அறியப்படுகிறது. அதனல் உடல் அடிபடுதல் நீண்ட நேரத் திற்குப் பின்பே உணரப்படுகிறது. பெரிய நீராவிக் கப்பல்கள் பக்கத்திலே கங்கையிற் செல்வதைப் பார்த்துளேன்; அவை செல்லும்போது எனக்கு அது தெரியாமலும் இருக்கலாம். ஆனல் சிறிது பொழுது கழிந்தபின் அலைகள் கரைகளின்மீது மோதும்போது எவ்வளவு பயங்கரமான ஓசை கேட்கிறது! சில சமயம் கரையில் ஒரு பாகம் இடிந்து நீரில் விழுவது முண்டு.

"ஒரு குடிசைக்குட் புகுகின்ற யானை உள்ளுக்குள்ளே நாசம் பண்ணி விட்டு, முடிவில் அதை அசைத்துக் கீழே தள்ளிவிடுகிறது. தெய்விக உணர்ச்சி (பாவக உணர்ச்சி) யென்னும் யானை உடலெனும் குடிசைக்குட் புகுந்து, அதைத் துண்டந் துண்டமாக நொறுக்குகிறது.

"உண்மையாகவே நடப்பது யாதென்று தெரியுமா? வீடு தீப்பற்றும் போது, முதலில் உள்ளேயிருக்கும் ஒரு சில பொருள்கள் எரிகின்றன. பிறகு பெருங்குழப்பம் ஏற்படுகிறது. அதுபோல, ஞானத் தீயும் முதலில் ஞான வாழ்விற்கு எதிரிகளான காமம் குரோதம் முதலியவற்றை முதன் முதலாக அழிக்கின்றது. பின்பு ஆணவமும் நாசமாகிறது. கடைசியாக உடலில் ஓர் உக்கிரமான குழப்பம் காணப்படுகிறது.

"எல்லாம் முடியப் போகின்றது என்று நீர் நினைக்கிறீர். ஆனல் உமது நோயில் இம்மியளவு மிச்சம் உள்ளவரை ஈசர் உமக்கு விடுதலை அளிக்க மாட்டார். வைத்திய சாலையில் (ஆஸ்பத்திரியில்) உமது பெயர் பதிவு செய் யப்பட்டால் நீர் நினைத்தபோது அதைவிட்டு வெளியேற முடியாது. நோய் முழுவதும் குணமாகும்வரை, வைத்தியர் உமக்கு வெளியேற அனுமதிச்சீட்டுத் தரமாட்டார். நீர் ஏன் உமது பெயரை வைத்திய சாலையிற் பதிவு செய்தீர்?" (எல்லோரும் சிரித்தல்)

குருதேவர் வைத்தியசாலையை உதாரணமாகக் கூறியது பற்றிக் கேசவர் திரும்பத் திரும்பச் சிரிக்கலானர். பிறகு ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது சொந்த நோயைப்பற்றிக் கூறலானர்.

குருதேவர் (கேசவரிடம்): "இருதயர் கூறுவதுண்டு, 'இதற்கு முன்பு எந்நாளும் ஈசன்மீது இவ்வளவு பாவக உணர்ச்சி கொண்டதை யான் கண்ட தில்லை; இவ்வளவு நோயையும் இதற்கு முன்பு என்றும் கண்டதில்லை' என்று. தீராத வயிற்றுக் கழிச்சல் நோய் அப்போது என்னைக் கடுமை யாகத் தாக்கிற்று. கோடிக்கணக்கான எறும்புகள் எனது மூளையைக்கடித்துத் தின்றுகொண்டிருந்தது போலாயிற்று. ஆனலும் ஞானப்பேச்சு அல்லும் பகலும் நடந்துகொண்டே இருந்தது. நாட்டாகோர் எனும் ஊரிலுள்ள வைத் தியரை அழைத்து என்னைக் காட்டினர்கள். யான் ஞான விஷயமான ஆராய்ச்சி யில் ஈடுபட்டிருந்ததை அவர் கண்டார். கண்டதும் 'இதென்ன பைத்தியம்!

ஒரு சில எலும்புக்களைத் தவிர வேறென்றும் அவரது உடலில் இல்லை; அந்நிலையிலும் அவர் அவ்வாறு தருக்கம் பண்ணிக்கொண்டிருக்கிறரே!" என்று அவர் சொன்னர்.

"பனியின் முழுப் பயனையும் பெறுவதற்காகத் தோட்டக்காரன் பாஸ்ரா ரோஜாச் செடியின் அடியிலுள்ள மண்ணை வேர்வரை தோண்டி எடுப்பான். ஈரம் பெறுவதினாலே செடி முன்னினும் நன்றாகச் செழித்து வளர்கிறது. ஒருக்கால் உம்மையும் வேர்வரை அசைப்பதன் காரணமும் அதுபோலும். (கேசவரும் குருதேவரும் சிரிக்கின்றனர்) நீர் திரும்பி வரும்போது மிகப் பெருங்காரியங்களைச் செய்பவராகலாம்.

"நீர் நோயாயிருப்பதாக யான் கேட்டபோதெல்லாம், மிக்க பரபரப்புடையவனானேன். உமது கடைசி நோயைப்பற்றிக் கேள்விப்பட்டபின், அதிகாலையில் தேவி முன், யான் அழுவதுண்டு, உமது உடல் சுகமடைய வேண்டும் என்ற பிரார்த்தனையோடு தேவிக்குப் பழங்களும் தின்பண்டங்களும் சமர்ப்பித்தேன்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்குக் கேசவர் மீதிருந்த அன்பையும், அந்த பிராம்மோ தலைவர்க்காகப் பட்ட துயரத்தையும் கேட்ட அடியார்கள் மனமுருகினர்.

குருதேவர்: "ஆனால், இம்முறை நான் அவ்வளவு கவலைப்பட வில்லையென்பதே உண்மை, இரண்டு மூன்று நாள் மட்டும் ஒரு சிறிது கவலைப்பட்டேன்."

கேசவரது அன்னையாராகிய கிழவியார், கேசவர் உள்ளே புகுந்த கிழக்கு வாயிலில் வந்தார். உமாநாதர் என்பார் குருதேவரிடம் உரத்த குரலில் "ஐயன்மீர், இங்கே அன்னையார் தங்களை வணங்குகின்றனர்" என்றனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் புன்சிரிப்பு அரும்பினர், உமாநாதர் மறுபடியும் "கேசவரது நோய் தீருமாறு அவரை ஆசீர்வதிக்கும்படி அன்னையார் தங்களைவேண்டுகின்றனர்" என்று சொன்னர்.

குருதேவர் (கேசவரின் அன்னையாரைப் பார்த்து): "எல்லா இன்பங்களையும் அருளுபவராகிற (ஆனந்தமயி ஆகிற) தேவியிடம் நீர் பிரார்த்தியும். உமது துன்பங்களை அவள் போக்கியருளுவாள்."

(கேசவரிடம்): "உட்பக்க அறைகளில் நீண்ட பொழுதைக் கழிக்க வேண்டாம். மாதரது சேர்க்கையால் நீர் மென்மேலும் கீழே அமிழ்ந்துவிடுவீர் ஈசனைப்பற்றிய பேச்சை மட்டும் கேட்பீரானால் நீர் முன்னினும் நலம் மிகுந்து வருவதை உணர்வீர்."

குருதேவர் இவ்வார்த்தைகளைக் கண்டிப்பான குரலிற் கூறிவிட்டுப் பின் ஒரு பையனைப்போலச் சிரிக்கத் தொடங்கினர். அவர் கேசவரைப் பார்த்து, 'உமது கையை யான் பார்க்கட்டும்' என்றார். அவர் அதை விளையாட்டாகக் குழந்தைபோல நிறுத்துப் பார்த்தார். கடைசியாக, "உமது கை இலேசாகத்

தான் உள்ளது. வஞ்சகமுடையார்க்குக் கை கனமாக இருக்கும்" என்ரூர். (எல்லோரும் சிரிக்கின்றனர்)

உமாநாதர் கதவண்டையிலிருந்து குருதேவரிடம் மறுபடியும் "அன்னையார் கேசவரை ஆசீர்வதிக்குமாறு தங்களை வேண்டுகின்றனர்" என்று உரைத்தார்.

குருதேவர் (கண்டிப்போடு): "என்னால் யாது செய்ய முடியும்? ஈசனே அனைவரையும் ஆசீர்வதிக்கிறார். அம்மே, நீ உனது சொந்த வேலையைச் செய்கின்றனை; மக்கள் அதைத் தம்மதென்கின்றனர்.

"ஈசன் இரு சமயம் சிரிக்கிறார். இரு சகோதரர் தமக்குள்ளே நிலத்தைப் பிரித்துக்கொள்ளும்போது அவர் சிரிக்கிறார். நிலத்தின் குறுக்கே அவர்கள் ஒரு கயிற்றைப் போட்டு. ஒருவர்க்கொருவர் 'இந்தப் பக்கம் என்னது, அந்தப் பக்கம் உன்னது' என்கின்றனர். ஈசன் சிரித்துக்கொண்டே தமக்குள்ளே 'இதென்ன! இப் பிரபஞ்ச மூழுவதும் என்னதாயிருக்க, ஒரு சிறு மண் கட்டியைப்பற்றி "இப்பக்கம் என்னது, அப்பக்கம் உன்னது என்கின்றார்களே!" என்று சொல்லிக்கொள்ளுகிறார்.

"தனது குழந்தையின் தீர்க்க முடியாத நோயைக் குறித்துத் தாய் உருகியழுதுகொண்டிருக்கும்போது, வைத்தியன் அத்தாயிடம் 'அம்மா, பயப்படாதே. நான் உன் குழந்தையைக் குணப்படுத்துகிறேன்' ஏன்னும்போது, ஈசர் மறுபடியும் சிரிக்கிறார். குழந்தை சாகவேண்டும் என்பது ஈசரது சங்கற்பமானால், எவனும் அதைக் காக்க முடியாது என்பதை வைத்தியன் அறிவதில்லை." (எல்லோரும் மௌனமாதல்)

அப்போதுதான் கேசவர் நெடுநேரம் தொடர்ந்து நிகழ்ந்த இருமலுக்கு உள்ளானார். அவரது துயரத்தைக் கண்ட அனைவரும் வருத்தப்பட்டனர். அவர் களைப்புற்றார், பின்னும் அங்கிருக்க இயலாதவரானார். அவர் குருதேவர் முன்பு தாழ்ந்து வணங்கிவிட்டு, முன்போல் சுவரைப் பிடிததுக்கொண்டே அறையினின்றும் வெளியேறினர்.

குருதேவர்க்குச் சிற்றுண்டியளிக்க ஏற்பாடு செய்திருந்தனர், கேசவரது மூத்த குமாரன் அவரது அண்டையில் அமர்ந்திருந்தான். அமிருதர் அப்பையனை அறிமுகப்படுத்தி, அவனை ஆசீர்வதிக்குமாறு ஸ்ரீராமகிருஷ்ணரை வேண்டினர். குருதேவர் 'எவரையும் ஆசீர்வதிக்க எனக்கு இயலாதே' என்றனர். இனிய புன்சிரிப்போடு அவர் பையனது உடலை மென்மையாகத் தடவினர்.

அமிருதர் (புன்சிரிப்போடு): "சரி, அப்படியாயின் உமது பிரியப்படியே செய்வீராக."

குருதேவர் (அடியார்களிடம்): "என்னால் 'நீ குணமடைவாயாக' என்பதுபோன்ற ஒன்றைச் சொல்ல முடியாது, எனக்கு நோயைத் தீர்க்கும் சக்தியை எனக்கு அருளுமாறு யான் ஒருக்காலும் தேவியிடம் கேட்பதில்லை, சுத்த பக்தியையே யான் அவளிடம் பிரார்த்திக்கிறேன்."

சிற்றுண்டியை அருந்திய பின்பு குருதேவர் புறப்படத் தயாராயினர். பிராம்மோ அடியார்கள் தெருவில் நின்றுகொண்டிருந்த வண்டிவரை அவருடன் சென்றனர். படிக்கட்டு வழியாகக் கீழிறங்கும்போது, கீழே விளக்கில்லாததைக் குருதேவர் கவனித்தார். அவர் அமிருதரிடத்தும், கேசவரது இதர அடியார்க ளிடத்தும் "இவ்விடங்களில் நல்ல வெளிச்சம் இருத்தல்வேண்டும். விளக்கற்ற வீடு இல்லாமைக்கு இடமாகிறது. இனி இவ்வாறு நடக்காதபடிப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று உரைத்தார்.

பின்பு ஸ்ரீராமகிருஷ்ணர் ஒன்றிரண்டு அடியார்களோடு தக்ஷிணேசுவரம் சென்றார்.

7

பண்டிதர் சசதர்

சனி, பெப்ரவரி 2, 1884

மாலையில் மணி மூன்றுயிருந்தது. ராக்கால், மஹிமாசாரன், ஹாஸ்ரா முதலிய அடியார்களோடு ஸ்ரீராமகிருஷ்ணர் பேசிக்கொண்டிருந்தார்; அப்போது ம— அறைக்குட் புகுந்து, அவரை வணங்கினர். குருதேவரது கைக்கு மட்டை வைத்துக் கட்டுதற்கு வேண்டிய மரச்சிம்பு பஞ்சு முதலிய சாமான்களோடு அவர் வந்தார்.

சில நாளைக்கு முன்பு ஸ்ரீராமகிருஷ்ணர் 'பைன்' மரச்சோலைக்குப்போகும் போது அழிக்கு அருகே விழுந்துவிட்டார், அவரது இடது கையில் ஓர் எலும்பு இடம் பெயர்ந்துவிட்டது. அவர் அச்சமயம் ஆனந்த பரவச நிலையில் இருந்தனர். அவரோடு ஒருவரும் செல்லவில்லை.

குருதேவர் (மஹிமாவிடம்): "சரி, நான் கருவியாயிருந்து, ஈசரும் அதை உபயோகிக்கும் கருத்தாவாயிருந்தாரானால், இது எனக்கு எதற்காக நேர வேண்டும்?"

குழந்தைமாதிரி அழுதுகொண்டே அவர் தேவியை நோக்கி, "ஓ பிரம்ம மயீ, தாயே, நீ எதற்காக எனக்கு இப்படிச் செய்தனை? எனது கை அதிகமாகப் புண்பட்டுவிட்டதே!" என்று சொல்லிவிட்டு, அடியார்களை நோக்கி, "எனக்கு முழுதும் முன்போல் சரியாகிவிடுமா?" என்று கேட்டார். அவர்கள் ஒரு குழந்தைக்குச் சொல்வதுபோல ஆறுதல் கூறிவிட்டு, "நிச்சயமாகவே தாங்கள் முற்றிலும் சுகமடைவீர்கள்" என்றனர்.

குருதேவர் (ராக்காலை நோக்கி): "நீ இங்கு வாழ்ந்து வருவது என்னைக் கவனிப்பதற்காகவே; என்றுலும் அதற்காக உன்னைக்குற்றஞ் சாட்டக்கூடாது; ஏனெனில், நீ என்னுடன் வந்திருந்தாலும், நீ அழிவரை சென்றிருக்க மாட்டாய்."

குருதேவர் மறுபடியும் சமாதி நிலையை அடைந்து பின்வருமாறு கூறலானார்: "ஓம்! ஓம்! ஓம்! தாயே, நான் என்ன சொல்லிக்கொண்டிருக்கிறேன்? பிரம்ம ஞானத்தை எனக்குக் கொடுத்து, என்னைச் சடமாக்காதே. பிரம்ம ஞானத்தை எனக்குக் கொடாதே. நான் உனது குழந்தையே ஆவேன். எனக்கு எளிதாகக் கவலையும் பயமும் உண்டாகின்றன. எனக்கு ஒரு தாய்

வேண்டும். பிரம்ம ஞானத்துக்கு ஒருகோடி நமஸ்காரம்! அதை நாடுவார்க்கு அதைக் கொடு. ஏ, ஆனந்தமயீ!"

"ஆனந்தமயீ" என்ற வார்த்தையை உரக்கச் சொல்லிக்கொண்டே அவர் கண்ணீர் சொரிய ஆரம்பித்துப் பின்வருமாறு பாடினர்:

அன்னுய் இத்துயர் அடியேன் நெஞ்சினில்
மன்னிக் குடையும்; மாதா நீயாய்
யானும் விழித்தே இருப்பினும்
ஏனே நிகழுமென் இல்லிற் களவே ?

மறுபடியும் அவர் தேவியை நோக்கி, "அம்மே, யான் என்ன தவறு செய்துளேன்? நான் எதையேனும் எப்போதாவது செய்வதுண்டா? தாயே. நீயே ஒவ்வொன்றையும் செய்கின்றனை. யான் கருவி. நீ அதற்குக் கருத்தா" என்று கூறினர்.

ஒரு குழந்தை நோயால் வருந்தும்போதும் சில சமயம் தனது நோயை மறந்து சிரித்தும் விளையாடியும் திரியும்; அதுபோலக் குருதேவர் மறுபடியும் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் இருந்தார்.

குருதேவர் (அடியார்களை நோக்கி): "நீங்கள் சச்சிதானந்தப் பரம் பொருளை உணர்ந்தாலன்றி, உங்கட்கு என்ன பலன் உண்டாகும்? விவேகத் திற்கும் வைராக்கியத்திற்கும் இணை யாவை? உலகப்பற்றுள்ள மனிதனது பக்தி ஒரு கணப்பொழுதுதான் இருக்கும்; செந்தழலான ஒரு கரண்டியின் மீதுள்ள ஒரு துளி நீரைப்போன்றது அது. ஏதோ ஒரு சமயம் அவன் ஒரு பூவைப் பார்த்துவிட்டு 'ஈசனது விசித்திரமான சிருஷ்டியை என்னதென்று சொல்வது!' என்பான்!

"நீங்கள் ஈசனுக்காகத் துடிக்கவேண்டும், நீங்கள் அவருக்காகத் துடிப் பீர்களானால், உங்களுடைய பிரார்த்தனைகள் அவரது காதில் விழுவது நிச் சயம். அவரே நம்மைப் பெற்றவராதலின், அவரிடமிருந்து நாம் உரிமையோடு நமது காணியைப்பெற முடியும். அவர் நமக்குச் சொந்தமான தந்தை, நமக்குச் சொந்தமான தாய். நாம் நமது தேவையைப்பெற அவரை வற்புறுத்தலாம். அவரிடம் 'உம்மை எனக்குக் காட்டியருளும்; இல்லையாயின் ஒரு கத்தியால் எனது கழுத்தை வெட்டிக்கொள்வேன்!' என்று நாம் சொல்லலாகும்."

ஸ்ரீராமகிருஷ்ணர் தேவியிடம் இன்னவாறு பிரார்த்திக்க வேண்டும் என்று அடியார்கட்குப் போதித்தார்.

குருதேவர்: "யான் இவ்வாறு அம்பாளிடம் பிரார்த்திப்பதுண்டு: 'அம்மே! ஆனந்தமயீ! உன்னை எனக்குக் காட்டியருள்க. நீ கட்டாயம் அருளவேண்டும்!' இன்னும் யான் அவளிடம் 'தீனர்கட்குத் தலைவியே! ஜக தீஸ்வரி! யான் உனது ஜகத்திற்கு வெளியே யிருப்பவனல்லேன். என்னிடம் ஞானமும் இல்லை, முறையான கருமமும் இல்லை, பக்தியும் இல்லை. யான்

ஒன்றையும் அறியேன். நீ கட்டாயமாக என்மீது கருணை கூர்ந்து, உன்னை எனக்குக் காட்டியருளவேண்டும்' என்று சொல்வேன்."

இவ்வாறு குருதேவர் அடியார்கட்குப் பிரார்த்திக்கும் வழியைக் கற்பித்தார். அவர்களுடைய மனம் உருகிற்று. மஹிமாசரணின் விழிகளில் கண்ணீர் நிரம்பிற்று,

பல அடியார்கள் சிவபுரத்தினின்றும் வந்து சேர்ந்தனர். அவர்கள் வெகு தொலையிலிருந்து வந்திருந்தனராதலின் அவர்கள் எதிர்பார்த்தபடியே குருதேவர் அவர்கட்கு ஞானவாழ்விற்கு இன்றியமையாத சிலவற்றைப்பற்றிக் கூறினர்.

மாலை ஐந்து மணிக்கு மருத்துவர் மதுசூதனர் வந்தனர். குருதேவரது கைக்குக் கட்டுப்போடுவதற்கு அவர் தயாராக இருந்தார். ஒரு படுக்கை தரை மீது விரிக்கப்பட்டது; குருதேவர் சிரித்துக்கொண்டே அதன்மீது படுத்துக் கொண்டார். அவரது கைக்குக் கட்டுப்போடுவது முடிந்ததும், அவர் "உங்கள் கல்கத்தா வைத்தியர்களிடத்து எனக்கு மிக்க நம்பிக்கை இல்லை. சம்பு என்பவர் பிதற்ற ஆரம்பித்தபோது, டாக்டர் சர்வாதிகாரி 'ஆ, அது ஒன்றுமில்லை. மருந்தினால் ஏற்பட்ட மாறுட்டமே அது' என்றார். சிறிது நேரத்துக்குப்பின் சம்பு மரணமடைந்தார்" என்றார்.

மாலை வேளையாயிற்று; கோயில்களில் பூஜை முடிந்தாயிற்று. சில நிமிடங்கள் கழிந்தபின் ஆதர் என்பார் குருதேவரைக் காணுதற்காகக் கல்கத்தாவிலிருந்துவந்தார். மஹிமாசரண், இராக்கால், ம— அறையில் இருந்தனர்.

ஆதர்: "தாங்கள் சௌக்கியமா ?"

குருதேவர் (அன்பு ததும்ப): "இதோ பாரும்! எனது கை எவ்வளவு வேதனை தருகிறது! (சிரித்துக்கொண்டே) என் சௌக்கியம் எவ்வாறு உள்ளது என்பதைக் கேட்கும் அவசியம் உமக்கு இல்லையே!"

ஆதர் அன்பர்களோடு தரையில் அமர்ந்தனர். குருதேவர் அவரிடம் "இங்கே மெதுவாக நீர் தடவும்" என்றனர். ஆதர் கட்டிலின் நுனியில் உட்கார்ந்துகொண்டு, ஸ்ரீராமகிருஷ்ணரது திருவடிகளை மெதுவாகத் தடவினர்.

குருதேவர் மஹிமாசரணோடு பேசலானார்.

குருதேவர்: "ஈசனிடத்து நீர் சுத்த பக்தியை (தன்னயமற்ற அன்பை)ச் செலுத்தப் பழகுவீராயின், அது மிக நன்றாகும், அம்மாதிரியான பக்தியைப்பெற்ற ஒருவன் சொல்வான்: "ஈசனே! எனக்கு மோக்ஷமோ புகழோ செல்வமோ நோய் தீர்தலோ வேண்டாம். இவற்றில் ஒன்றையும் நான் நாடவில்லை. நின்னையே வேண்டுகிறேன்' என்று. பலவித ஆசைகளோடு ஒரு பணக்காரரை நாடிவரும் மக்கள் பலராவர், ஆனால் எவரேனும் ஒருவன் எந்த உபகாரமும் பெற விரும்பாது, அன்புக்காக மட்டும் அவரை நாடி வருவாராயின், அப் பணக்காரரது மனம் அவனை நோக்கி இழுக்கப்படும்."

மஹிமாசரண் மௌனமாய் இருந்தார். குருதேவர் அவரை நோக்கித் திரும்பினர்.

குருதேவர்: "உமது மன நிலைக்கு ஏற்றவாறு ஏதோ ஒன்று உமக்குச் சொல்கிறேன். வேதாந்தத்தின்படி ஒரு மனிதன் தனது சொந்த ஆன்மாவின் உண்மையான இயல்பை அறியவேண்டியவனாகிறான். ஆனால் அகங்காரத்தை ஒழியாமல் அந்த ஞானத்தைப் பெறல் இயலாது. நீரை இரண்டாகப் பிரிப்பது போலத் தோன்றும் ஒரு கழியைப் போன்றது அகங்காரம். அகங்காரம் சமாதியிலே மறையும்போது, பிரம்மமே நமது ஆத்ம சோதியாவதை நாம் அறிகிறோம்.

"ஒருவன் பெண்கள் சம்பந்தப்பட்டமட்டில் மிக மிக ஜாக்கிரதையாய் இருந்தாலன்றி, பிரம்ம ஞானத்தைப் பெறல் இயலாது போகும். ஆதலால் உலகிலே வாழ்பவர்க்கு அந்த ஞானத்தை அடைதல் மிக அரிதாகும். நீர் எவ்வளவு சமார்த்தியமுடையவராயினும் என்? புகையறையிலே நீர் வாழ்வீராயின் உமது உடலும் கரியாகத்தான் செய்யும். இளம் பெண் ஒருத்தி கூட இருப்பாளாயின், காமமற்ற மனிதனிடத்தும் அது காமத்தைத் தூண்டும்.

"ஒரு சன்னியாசி 'காமினி' (பெண்) 'காஞ்சனம்' (பொன்) இரண்டையும் கட்டாயம் துறக்கவேண்டும். ஒரு பெண்ணின் படத்தையும்கூட அவன் பார்க்கக் கூடாது என்பதுபோல, அவன் பொன்னையும்—காசையும்—கையால் தொடுதல் கூடாது. அவன் தன்னருகே பணத்தை வைத்திருத்தலும் தீதாகும். ஏனெனில் அதனால்முன் யோசனை, கவலை, அகந்தை, கோபம், இன்னும் இவை போன்ற கேடுகள் தொடர்ந்துவரும். சூரியனை உதாரணமாகக் கொள்ளலாம். அது பிரகாசமாக இருக்கிறது; திடீரென ஒரு மேகம் தோன்றி, அதனை மறைக்கின்றது.

"ஒரு சன்னியாசிக்கு இவ்வளவு கடுமையான விதிகள் எதற்காக? மனிதவர்க்கத்தின் நன்மைக்காகவும், அவனது சொந்த நன்மைக்காகவும்தான். ஒரு சன்னியாசி தானாகப் பற்றற்று வாழலாம், தனது ஆசையை அடக்கியிருக்கலாம்; ஆனாலும் உலகத்தார்க்கு ஓர் உதாரணம் ஆவதற்காக, அவன் முற்றிலும் காமினி காஞ்சனங்களை விடல்வேண்டும்.

"ஒரு சன்னியாசியிடம் நூற்றுக்கு நூறு பங்கு வைராக்கியத்தை ஒருவன் காண்பானாயின், வைராக்கியம் பழகும் துணிவு அவனுக்கும் பிறக்கும். அப்போதுதான் அவனும் காமத்தையும் காஞ்சனத்தையும்விட முயல்வான். ஒரு சன்னியாசி இம்மாதிரி நடந்து காட்டாவிடில், பின் யார் அவ்வாறு செய்வார்?"

இரவில் ஏறக்குறைய மணி எட்டு ஆயிற்று. ஸ்ரீராமகிருஷ்ணர் மஹிமா சரணைச் சாஸ்திரங்களிலிருந்து ஒரு சில பாடல்களை எடுத்துரைக்கும்படி வேண்டினர். மகிமர் 'உத்தர கீதை'யின் முதற்பாடலைப் படித்தார்; அது பரப் பிரம்மத்தின் இயல்பினைப்பற்றிப் பின்வருமாறு கூறிற்று:

பிரம்மமது ஒன்றேயாம் பிரிப்பரிது களங்கம்
பெறஇயலாப் பெற்றியது வானினையும் கடந்த
பரம்பொருளாம்; ஆதியந்தம் பார்த்தவரார் அதற்கே;
பாய்மனமும் அறிவுமெட்டாப் பான்மையது கண்டாய்,

முடிவாக அவர் மூன்றும் அத்தியாயம் ஏழாவது பாடற்கு வந்தார்; அதன் கருத்தாவது:

மறையோர் வழிபடுவர் வன்னியினில் யோகர்
இறையைத் தொழுவர் இதயத்து;—உறையும்
பதிமை தனில்அறிவு பண்படாதார்; எங்கும்
மதிசமநோக் கெய்தினர் மாண்பு.

[வன்னி - தீ; பதிமை - விக்கிரகம்; மதி - புத்தி. பதிமைகளில் தொழுவர், எங்கும் தொழுவர் எனக் கூட்டுக.]

குருதேவர் 'மதி சம நோக்கு எய்தினர்' என்னும் மொழிகளைக் கேட்டதும் அவர் எழுந்து நின்று சமாதியிற் புகுந்தார்; அவரது கையை மரச்சிம்பும் கட்டும் தாங்கி நின்றன; அடியார்களும் பேச்சற்றவராய், சமதரிசன நிலையைப் பெற்றிருந்த இந்த யோகியை உற்று நோக்கினர்.

நீண்ட நேரம் கழிந்தபின், குருதேவர்க்கு வெளி யுலக உணர்ச்சி மீண்டது; அவர் ஆசனத்தில் அமர்ந்தார். மகிமா 'யதிபஞ்சக'த்தினின்றும் பின் வருவதை வாசித்தார்:

'எந்த தேவியன்னையினிடத்துச் சரமும் அசரமுமான இப்பிரபஞ்ச மித்தை ஜாலத்திற் போலக் காணப்படுகிறதோ, எவளிடத்துத் தனது மனை விசாலத்தால், இப்பிரபஞ்சம் விளங்குகிறதோ, அவளே நான். இப் பிரபஞ்சத்திற்கு ஆன்மாவாயும் ஏக சச்சிதானந்தமாயும் உள்ள மெய்ப்போத வடிவமாகிய அவளே யான்!'

அதிலுள்ள "மெய்ப்போத வடிவமாகிய அவளே நான்" எனும் வரி குருதேவரது செவியிற் பட்டதும், அவர் புன்சிரிப்போடு "பிண்டத்தில் உள்ளதெல்லாம் அண்டத்திலும் உண்டு." என்று உரைத்தார்.

மகிமா பிரணவத்தின் வருணனையை ஒப்பித்தார்: "இடையருது (விள்ளாது) ஓடும் தைலதாரை போன்றது அது, தொடர்ந்து நெடுநேரம் அடித்துக் கொண்டிருக்கும் மணியின் ஓசை போன்றது அது."

சமாதியின் அறிகுறிகளைப்பற்றி அவர் வாசித்ததாவது: "சமாதியில் நிலைத்தவன், ஆத்மாவால் சுவர்க்கலோகம் நிரப்பப்பட்டிருப்பதையும், பாதாளமும் ஆத்மாவால் நிரப்பப்பட்டிருப்பதையும், மத்திய உலகமும் ஆத்மாவால் நிரப்பப்பட்டிருப்பதையும் காண்கிறான். யாவும் ஆத்மாவால் நிரப்பப்பட்டிருப்பதை அவன் காண்கிறான்."

ஆதரும் மகிமாவும் குருதேவரை வணங்கிவிட்டு வெளியேறினர்.

ஞாயிறு, பெப்ரவரி 24, 1884

ஸ்ரீராமகிருஷ்ணர் தமது மத்தியான உணவை முடித்தபின், தமது அறையில் உட்கார்ந்திருந்தார்; அவர்க்குப் பக்கத்திலே மணிமல்லிக் தரைமீது அமர்ந்திருந்தார்; அப்போது ம— வந்தனர். ம— குருதேவரை வணங்கி விட்டு, மணிக்கு அருகே உட்கார்ந்தனர். குருதேவரின் ஒடிந்திருந்த கைக்குக் கட்டு போடப்பட்டது.

குருதேவர் (ம—இடம்): "நீர் எப்படி வந்தீர்?"

ம—: ஆலம்பசார்வரை வண்டியில் வந்து அங்கிருந்து நடந்தேன்."

மணிலால்: "அவர்க்கு நடந்துவந்த சூடு தனியவில்லை!"

குருதேவர் (சிரித்துக்கொண்டே): "இவையெலாம் எனது மூளையினின்றும் எழுந்த வெறுங் கற்பனைகளல்ல என்ற நினைவு எனக்கு இதனால் உண்டாகிறது. அல்லாவிடில், இந்த 'ஆங்கிலேயர்கள்' இவ்வளவு சிரமப்பட்டு இங்கு வருவதேன்?"

[பொதுவாக ஐரோப்பியர்களையும், அவர்களுடைய கருத்துக்கட்கு வசப்பட்டு நடக்கும் இந்தியரையும் குருதேவர் 'ஆங்கிலேயர்' என்று அழைப்பதுண்டு]

ஸ்ரீராமகிருஷ்ணர் அவர்களிடம் தமது உடல் நலத்தைப்பற்றியும், தமது ஒடிந்த கையைப் பற்றியும் பேசத் தொடங்கினர்.

குருதேவர்: "இடையிடையே எனது கை காரணமாக அதைரியமுள்ளவனாகிறேன், இவனிடமும் அவனிடமும் எனது கையைக் காட்டி, அது எனக்கு நேராகுமா என்று கேட்கிறேன். அதனால் இராக்காலுக்குக் கோபம் வருகிறது. அவனுக்கு எனது மன நிலை விளங்காது போகிறது. இடையிடையே நானும் 'அவன் போகட்டுமே' என்று எனக்குள் சொல்லிக் கொள்கிறேன். மறுமடியும் நான் தேவியிடம்: 'அம்மே, அவன் எங்கே போவான்? உலகமாகிய தீச்சட்டியிலே அவன் ஏன் வறுபடவேண்டும்?' என்று சொல்கிறேன்.

"குழந்தைக்குள்ளதுபோன்ற இந்த எனது தைரியமின்மை புதிதான தொன்றன்று. எனது கை நாடியைப் பார்த்து, எனக்குச் சீக்கு உளதா என்று சொல்லும்படி யான் மதுர பாபுவை வேண்டுவதுண்டு.

(ம—வை நோக்கி) "எனக்கு ஏன் இவ்வளவு அதைரியம் என்று நீர்சொல்லுவீரா?"

ம: "ஐய, உமது மனம் எப்போதும் சமாதியில் மூழ்கியிருக்கிறது. அதின் ஒரு சிறு பகுதியை நீர் அடியார்களின் நன்மைக்காக உமது உடலின் மீது விட்டிருக்கிறீர். இதனால் உமது உடலிற்கு என்ன ஆகுமோ என்று இடையிடையே பரபரப்படைகின்றீர்."

குருதேவர்: "அது உண்மையே, மனத்தில் ஒரு சிறிது உடலைப் பற்றிக்கொண்டிருக்கிறது. பக்தியையும் சாது சங்கத்தையும் பெற்று ஆனந்திக்க அது விரும்புகிறது."

மணிமல்லிக் குருதேவரிடம் கல்கத்தாவில் அப்போது நடைபெற்று வந்த ஒரு பொருட் காட்சியைப்பற்றிக் கூறினர்.

மணிலால்: "தாங்கள் நோயுள்ளவராயில்லாவிட்டால், மைதானத்தில் நடக்கும் பொருட்காட்சியைப் பார்க்கக் கூடும்."

குருதேவர்(ம—முதலியோரை நோக்கி): "நான் அங்கே சென்றாலும், ஒவ்வொன்றையும் பார்க்க என்னால் இயலாது. ஒருக்கால் என் பார்வை ஏதேனும் ஒரு பொருளின்மீது செல்லும்; அதனால் யான் மெய்ம்மறந்துவிடுவேன். அப்போது மற்றதைக் காண முடியாது போகும். என்னை மிருகக் காட்சிச் சாலைக்கு அழைத்துச் சென்றனர். நான் சிம்மத்தைக் கண்டதும் சமாதியில் ஆழ்ந்தேன்; ஏனெனில் தேவியின் வாகனமாகிய அது என் உள்ளத்தே தேவியின் உணர்வை எழுப்பிற்று. அந்நிலையில் மற்ற மிருகங்களை யாராற் பார்க்க இயலும்? சிம்மத்தை மட்டும் பார்த்துவிட்டு யான் வீடு திரும்பவேண்டியதாயிற்று. இத்தனை யதுமல்லிக் என்பவரின் அன்னையார் யான் பொருட்காட்சிச் சாலைக்குச் செல்லவேண்டும் என்று முதலிலே சொல்லிவிட்டு, பின் செல்லக் கூடாதென்றனர்."

மணிமல்லிக் ஏறக்குறைய அறுபத்தைந்து வயதானவர், பல ஆண்டுகளாக பிராம்மோ சமாஜத்தின் அங்கத்தினராக இருந்தார். ஸ்ரீ ராம கிருஷ்ணர் அவரது மனை பாவனைக்குத் தக்கபடி அவர்க்குப் போதனை அளித்தார்.

குருதேவர்: "பண்டிதர் ஜெயநாராயணர் மிகப் பரந்த கொள்கைகளை உடையவராயிருந்தார். யான் அவரை ஒருமுறை போய்ப்பார்த்தேன், அவரது மனநிலையை யான் விரும்பினேன். அவர் தாம் காசிக்குப்போய் அங்கே வாழ நினைத்ததாகக் கூறினர்; இறுதியில் அவர் தமது தீர்மானத்தை நிறைவேற்றினர். பிற்காலம் அவர் காசியிலே வாழத்தான் செய்தார். அங்கே தான் மரித்தார். ஒருவர் கிழப்பருவம் அடையும்போது, ஜயநாராயணரைப் போல் ஓய்வுபெற்று, ஈசனைப்பற்றிய நினைவில் ஈடுபடவேண்டும். நீர் என்ன சொல்கிறீர்?"

மணிலால்: "அது உண்மையே. இவ்வுலகக் கவலைகளும் தொந்தரவுகளும் எனக்கு ருசிப்பதேயில்லை."

குருதேவர் (மணிலாலை நோக்கி): "உமது அந்தச் சிறுகதையை அவர்கட்குச் சொல்லும்."

மணிலால் (சிரித்துக்கொண்டே): "ஒரு நாள் பலர் ஒரு தோணியில் கங்கையைக் கடந்து கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவர், ஒரு பண்டிதர், தமது புலமையைப்பற்றிப் பெரிதாகப் பாராட்டிக்கொண்டார்; வேதங்கள், வேதாந்தம், ஆறு தரிசனங்கள் ஆகிய பல நூல்களைக் கற்றிருப்பதாகக் கூறினர். அவர் தம்முடன் இருந்த ஒருவரைப் பார்த்து 'உமக்கு வேதாந்தம் தெரியுமோ?' என்று கேட்டார். 'பெரியீரே, தெரியாது' என்றார். 'சாங்கியம்'

பாதஞ்சலம் தெரியுமா?' 'பெரியோரே, தெரியாது.' 'நீர் ஒரு தத்துவ நூலும் வாசித்திருக்கவில்லையா?' 'பெரியோரே, வாசிக்கவில்லை.' பண்டிதர் இவ்வாறு தற்பெருமையாகப் பேசிக்கொண்டிருந்தார்; அந்தப் பிரயாணியும் மௌனமாக அமர்ந்திருந்தார். இச்சமயம் ஒரு பெரும் புயல் கிளம்பிற்று, தோணியும் மூழ்கிவிடும்போல் இருந்தது. அப்பிரயாணி பண்டிதரைப் பார்த்து, 'ஐயன்மீர், தங்கட்கு நீந்தத்தெரியுமா?' என்று கேள்வி போட்டார். பண்டிதர் 'தெரியாதே' என்றார். அப்பிரயாணியோ 'எனக்குச் சாங்கியமோ பாதஞ்சலமோ தெரியாது. ஆனல் எனக்கு நீந்த முடியும்' என்று பதிலுரைத்தார்."

குருதேவர் (சிரிப்போடு): "பல சாஸ்திரங்களை அறிவதால் ஒரு மனிதன் அடையும் இலாபம் யாது? நமக்கு அவசியமான ஒன்றுவது, இவ்வுலக வாழ்வெனும் நதியைக் கடக்கும் வழியை அறிதலே. ஈசன் ஒருவனே மெய். மற்றவை யாவும் பொய்யே.

"அருச்சுனன் தனது அம்பிற்குப் பறவையின் கண்ணைக் குறியாக வைக்கும்போது, துரோணர் அவரிடம் 'நீ காண்பது யாது? இம் மன்னர்களைக் காண்கின்றாயா?' என்று வினவினர். 'இல்லை' என்று பதிலளித்தான் அருச்சுனன். 'நீ என்னைக் காண்கின்றாயா?' 'இல்லை.' 'மரத்தை?' 'இல்லை.' 'மரத்தின் மீதுள்ள பறவையை?' 'இல்லை.' 'பின்னை நீ பார்ப்பதுதான் யாது?' 'பறவையின் கண் மட்டும்.'

"பறவையின் கண்ணைமட்டும் காண்கிறவன் குறியிலே எய்வான். ஈசனே மெய், மற்றவையெல்லாம் பொய் எனக் காண்கின்றவனே புத்திமான். மற்றதை அறிதல் எனக்கு எப்படி அவசியம்?"

(ம—இடம்) "எனது கை ஒடிந்ததுமுதல் ஓர் ஆழ்ந்த மாறுதல் என்னிடத்து உண்டாகியுள்ளது. இப்போது எனக்கு நரலீலையில்தான்—அதாவது, ஈசன் தரிக்கின்ற மனித வடிவத்தில்தான்—ஆனந்தம். சத்தியத்திற்கு இருவடிவங்கள் உண்டு: நித்தியம், லீலை யென்பன. நித்தியம்—அதாவது, பரம்பொருள்—அகண்ட சச்சிதாநந்தமாவது; லீலை பலவகைப்பட்ட வடிவங்களை உடையது: உதாரணமாக, ஈச வடிவலீலை, தெய்வங்களின் வடிவலீலை, நரலீலை, பிரபஞ்ச லீலை என்பன.

"வைணவ சரணர் பின்வருமாறு சொல்வதுண்டு: ஈசனே மனிதனுக லீலை புரிவதை ஒருவன் நம்புவானுயின், அவன் பூரண ஞானம் பெற்றவனே யாவான் என்று. யான் அதை அப்போது ஒப்புக்கொள்ள மாட்டேன். ஆனல் இப்போதோ, அவர் சொன்னது சரி என்பதை உணர்கிறேன். மென்மையையும் அன்பையும் வெளிப்படுத்தும் மனிதப் படங்களில் வைணவ சரணர்க்குப் பிரியம் உண்டு.

(மணிலால் இடம்) "ஈசனே மனித வடிவத்தில் லீலை புரிந்தருளுகின்றன. ஈசரே மணி மல்லிக் ஆகியுள்ளார். சீக்கியர் 'நீயே ஸச்சிதாநந்தம்' என்று போதிக்கின்றனர்.

"இடையிடையே மனிதனுக்குத் தனது மெய்யான ஆத்மாவின் காட்சி திடீரெனக் கிடைக்கின்றது; அவன் ஆச்சரியத்தில் மூழ்கி மௌனமாகிறான். அம்மாதிரி சமயங்களில் அவன் ஆனந்தக் கடலில் நீந்துகின்றான். திடீரென ஒரு பிரியமான உறவினரைச் சந்திப்பதுபோன்றது அது.

"ஜனங்கள் குமரிகளை வணங்குவானேன்? எல்லா மாதரும் தேவியின் அத்தனை வடிவங்களே. ஆனால் தூய மனமுடைய குமரிகளிடத்துத் தேவியின் சக்திப்பிரகாசம் எல்லாவற்றிலும் மிகுதியாயுள்ளது.

(ம—வை நோக்கி) "எனக்கு நோய் வரும்போது எனது தைரியத்தை ஏன் இழக்கிறேன்? காரணம் தேவி என்னைக் குழந்தை நிலையிலே வைத்திருப்பதேதான். குழந்தை அதன் தாயையே முழுவதும் சார்ந்து வாழ்கிறது.

"என்னைப் படம் பிடிப்பதற்காக ராதா பஸாருக்கு அழைத்துச்சென்றனர். அன்று நான் ராஜேந்திரமித்திரரது வீட்டுக்குப் போகவேண்டும் என்று ஏற்பாடாயிருந்தது. கேசவரும் அங்கு வருவார் என்று கேள்விப்பட்டேன். அவர்கட்குச் சில சொல்லவேண்டும் என்று திட்டம் போட்டிருந்தேன். ஆனால் நான் ராதாபஸாருக்குப் போனதும் அதையெல்லாம் மறந்துவிட்டேன். 'அம்மே, நீயே பேசுக. நான் என்ன சொல்வது?' என்று சொன்னேன்.

"என்னிடம் ஞானியின் சுபாவம் இல்லை. அவன் தன்னைப் பெரியோனாக மதிக்கின்றான். 'என்ன? நான் எப்படி நோயாளியாக முடியும்?' என்கிறான் அவன்.

"கோர்சிங் என்னிடம் ஒரு சமயம் 'நீங்கள் இன்னமும் உங்கள் உடலைப் பற்றிக் கவலைப்படுகிறீர்களே' என்றார். ஆனால் எனது தேவிக்கு எல்லாம் தெரியும் என நம்புவதே எனது இயல்பு. ராஜேந்திர மித்திரரது வீட்டில் அவள்தான் பேசுவாள். அவளுடைய மொழிகளே பயன்தரக் கூடியவையாம். ஞானேசுவரியான தேவியினிடமிருந்து வரும் ஓர் ஒளிக்கதிர் ஆயிரம் பண்டிதர்களைத் திகிலடையச் செய்யும்.

"தேவி என்னை ஒரு பக்தனது நிலையில், ஒரு விஞ்ஞானியின் நிலையில் வைத்திருக்கிறாள். இக்காரணத்தினால் யான் இராக்காலோடும் பிறரோடும் கேலி பேசுகிறேன். யான் ஒரு ஞானியின் நிலையில் இருந்திருப்பேனாயின் எனக்கு அது செய்ய முடியாமற்போகும்.

"தேவியே எல்லாமாய் இருக்கிறாள் என்பதை இப்போதுள்ள நிலையில் யான் உணர்கிறேன். நான் தேவியை எங்கும் காண்கிறேன். தேவியே துஷ்டர்கள் உள்பட எல்லாப் பொருள்களாகவும் இருப்பதைக் காளி கோயிலில் நான் கண்டேன்.

"ஒரு சமயம் நான் இராமலாலின் அன்னையைத் திட்டும் தருணத்தில் இருந்தேன்; ஆனால் என்னையே அடக்கிக்கொள்ள வேண்டியிருந்தது. அவளையும் தேவியின் வடிவமாகவே கண்டேன். குமரிகளிடம் தேவியையே காணுதலால் அவர்களை வணங்குகிறேன்."

ஞாயிறு, மார்ச்சு 2, 1884

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது அறையிலுள்ள சிறு கட்டிலில் அமர்ந்திருந்தார்; பிராம்மோ சமாஜத்தைச் சார்ந்த திரைலோக்கிய ஸன்யால் பக்திரஸமான பாடல் களைப் பாடிக்கொண்டிருந்ததைக் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்தார். அவரது கை ஒடிந்திருந்ததினுல் உண்டான புண் ஆறி முழுதும் குணமடைய வில்லை. இன்னும் கையில் மட்டை வைத்துக் கட்டியிருந்தது; நரேந்திரர் சுரேந் திரர் ம— முதலான பல அடியார்கள் தரைமீது உட்கார்ந்திருந்தனர்.

கல்கத்தாவில் உயர்தர நீதி மன்றத்தில் வக்கீலாயிருந்தவர் நரேந்திரரது தந்தையார். அவர் திடீரென மரணமடைந்தார். குடும்பத்தாரைப் பாதுகாப் பதற்காக யாதொரு ஏற்பாடும் செய்ய அவர்க்கு இயலாது போயிற்று. அதனுல் அக்குடும்பத்திற்குப் பணக்கஷ்டம் ஆபத்தான நிலைக்கு ஏறிவிட்டது. சில சம யங்களில் குடும்பத்தினர் பட்டினியாயிருக்க நேர்ந்தது. இதனுல் நரேந்திரரின் வாழ்நாள் பெருங்கவலைக்கிடையே கழிவதாயிற்று.

திரைலோக்கியர் இவ்வாறு பாடலானர்:

நின்னடியின் நிழல்நாடி நிரந்தரமா ஒழித்திட்டேன்
என்சாதி குலச்செருக்கை; ஈசாவென் நாணமச்சம்
பின்னிடுமா ருக்கினேன்; பிறவிநெறி தனிநடப்பேன்
இன்னுதவி யளிப்பார்க்கா எங்கினியான் செல்லுவெனே ?

மனிதர்பழி பொறுப்பன்யான் மாதேவ நினக்கெனவே;
துனிதருந்தீச் சொற்களையே சொரிந்திடுவர் என்மீதே.
புனிதநினை அன்புடனே போற்றுதலால் எனைவெறுப்பர்;
இனியஉயிர்த் தோழர்களும் அயலாரும் இகழ்ந்திடுவர்.

என்னும தேவதைநீ எனைக்கொல்க, காத்திடுக;
நின்னடியார் புகழன்றே நின்பெயரைத் தாங்குவது ?
என்னுயிரின் சாரதிநீ, என்நெஞ்சில் ஒளிர்அன்பு
நின்னுளச்சம் மதப்படியே நிகழ்ந்திடுக எனக்கெதையும்

[துனி - வருத்தம். நின் உளச் சம்மதப்படி.]

திரைலோக்யரைப் பார்த்துக் குருதேவர் "நினது பாட்டுகள் எவ்வளவு உருக்கமாயுள்ளன! அவை உண்மையான பாடல்கள். கடலுக்குச் சென்ற வன்தான் அதன் தண்ணீரைக் கொண்டுவரக்கூடும்" என்றார்.

திரைலோக்யர் மீண்டும் பாடலானர்:

ஆடுவதும் ஈசா அகமகிழ்ந்து கீதங்கள்
பாடுவதும் கைத்தாளம் பண்பாகப்—போடுவதும்
நின்செயலே யாக நினைப்பதென்னே பேதமையால்
தன்செயலாச் சாக்ஷிமனி தன்,

சுதந்திரனு யெண்ணித் துயர்சுமப்ப தேனே ?
இதந்தருநின் ஆட்டுக் கிசையின்—நிதந்தெய்வம்
ஆவான் மனிதன்; நீ ஆட்டுவிப்பாய் சாரதியாய்
ஓவாதுள் ஓட்டுவையன் ரே.

நீயனைத் திற்கும்வேர் நீயுயிர்கட் காருயிரே
ஏயுமெம் நெஞ்சிற் கெசமான்நீ—ஓயா
அருளால்நீ தீய அதமனையும் ஓங்கும்
தெருள்ஞானி யாக்குவைநின் சீர்,

[தெருள் ஞானி - தெளிந்த ஞானி]

பாடல் முடிந்தது. குருதேவர் அடியார்களோடு பேசலானார்.

குருதேவர்: "மூன்றுவகை அடியார்கள் உள்ளனர். கடைசித் தர அடியான் 'ஈசன் உயரே அங்குள்ளான்' என்பான்; அதாவது, அவன் ஆகாசத்தை நோக்கிக் காட்டுவான். நடுத்தர அடியான் 'ஈசன் நெஞ்சிலே அந்தர்யாமியாக வசிக்கிறான்' என்பான். ஆனால் முதல்தர அடியானே 'ஈசனே எல்லாமாயுள்ளனன். நாம் காணும் பொருள்களெல்லாம் ஈசனின் அத்தனை வடிவங்களேயாம்' என்பான். நரேந்திரன் என்னைக் கேலிபண்ணுவது வழக்கம், அவன் சொல்லுவான்; 'ஆம், ஈசனே எல்லாமாயுள்ளான்! அப்படியானால், ஒரு பானையும், ஒரு கிண்ணமும் ஈசன்!' என்று. (சிரித்தல்)

"ஒருவன் ஈசனைக் காணும்போது எல்லா சந்தேகங்களும் அவனுக்கு மறையும். ஈசனைப்பற்றிக் கேட்பது ஒன்று, அவனைக் காண்பதோ முற்றிலும் வேறுனதொன்று. வெறுங் கேள்வியால் மட்டும் ஒரு மனிதனுக்கு நூற்றுக்கு நூறு பங்கு உறுதி (முழு உறுதி) ஏற்பட முடியாது, ஆனால் அவன் ஈசனை நேரிற் காண்பானையின், அப்போது அவனுக்கு முழு உறுதி ஏற்பட்டுவிடும்.

"ஈசனது காட்சிக்குப்பின் பூஜை நழுவிவிடும், நான் கோயிலில் பூஜை பண்ணிக்கொண்டிருந்தது இப்படியே முடிவு பெற்றது. காளி கோயிலில் உள்ள தெய்வத்திற்கு பூஜை செய்வது என் வழக்கம். எல்லாம் சுத்த சைதன்யம் ஆக விளங்கும் காட்சியைத் திடீரென யான் பெற்றேன். பூஜா பாத்திரங்களும், பீடமும், கதவு நிலையும்—எல்லாம் சைதன்யமயமாயின. மனிதர், மிருகங்கள், வேறு உயிர்ப்பிராணிகள்—எல்லாம் சைதன்யமயமாயின. அப்போது பைத்தியக்காரனைப்போல எல்லாத் திசைகளிலும் பூக்களைச் சொரியத்தொடங்கினேன். நான் கண்டதை யெல்லாம் வணங்கினேன்

"ஒருநாள் சிவபெருமானை வழிபட்டுக் கொண்டிருக்கும்போது, ஒரு வில்வ தளத்தைத் திருவுருவத்தின்மீது சாத்தப்போனேன்; அப்போது இந்த விராட் சொரூபம் ஆகிய பிரபஞ்சமே சிவபெருமானுவதைத் தரிசித்தேன். அதன்பின் சிவபெருமானை விக்கிரகத்தின் மூலமாக வழிபடுவது எனக்கு முடிந்தது. இன்னொரு நாள் நான் மலர் கொய்துகொண்டிருந்தேன். அப்போது பூச்செடிகள் எல்லாம் அத்தனை பூச்செண்டுகளான தரிசனத்தைப் பெற்றேன்."

திரைலோக்கியர்: "ஆ! ஈசனின் படைப்பு (ஈசுவர சிருஷ்டி) எவ் வளவு அழகாயிருக்கின்றது!"

குருதேவர்: "அப்படியில்லை, அதுவல்ல; எனக்கு ஒரு கணப்பொழு தில் அது திடீரென விளக்கப்பட்டது. ஒவ்வொரு செடியும் ஈசனின் விசுவ ரூபத்தை அலங்கரிக்கும் ஒரு பூச்செண்டாகும் காட்சி எனக்கு அளிக்கப் பட்டது. அதோடு நான் பூக்கொய்தல் முடிவு பெற்றது. நான் மனிதனையும் அதேமாதிரி நோக்குகிறேன். நான் ஒரு மனிதனைக் காணும்போது. ஈசனே பூலோகத்தில் நடப்பதாகவும், அலைகளின்மீது மிதக்கும் ஒரு தலையணையைப் போன்று அங்குமிங்கும் அசைவது போலேயும் நான் காண்கிறேன். அலைக ளோடு சேர்ந்து தலையணையும் அசைகிறது. அது மேலும் கீழும் குதிக்கிறது.

"உண்மையாகவே இவ்வுடல் ஒரு கணப்பொழுது வாழ்வது. ஈசனே மெய், இப்போது உடல் உள்ளது. இன்னொரு சமயம் அது இல்லை. பல ஆண்டுகட்கு முன்பு, அஜீரணத்தால் நான் கடுமையாக வருந்திக்கொண்டிருந் தேன்; அப்போது இருதயன் என்னிடம், "உமது நோயைத் தீர்க்கும்படி தேவியிடம் கேளும்' என்று சொன்னான். எனக்கு அம்மையிடம் எனது நோயைப் பற்றிப் பேசுவது நாணமாயிருந்தது. நான் அவளிடம் 'அம்மே! ஆசிய சங்கப் பொருட் காட்சிச் சாலையிலே ஓர் எலும்புக்கூட்டைக் கண்டேன். எலும்புகளைக் கம்பிகளால் ஒன்றுகக் கூட்டி ஒரு மனித வடிவமாக அது அமைக்கப்பட்டிருந் தது. அம்மே! என் உடலை அதைப்போல ஒரு சிறிது ஒன்றுகச் சேர்த்து வை, உனது நாமத்தையும் புகழையும் யான் பாடப் பெறுவேனுக' என்று சொன் னேன்.

ஆசைகள் இன்றி உடல் வாழ முடியாது. (சிரித்துக்கொண்டே) என்னிடம் ஒன்றிரண்டு ஆசைகள் இருந்தன. 'தாயே, காமத்தையும் காஞ்சனத்தையும் (பெண்ணையும் பொன்னையும்) துறந்தவர்களோடு சேர்ந்து வாழும்படி என்னக்கு அருள்க' என்று தாயிடம் பிரார்த்தித்தேன். மேலும் நான் 'உன்னுடைய ஞானி யர், பக்தர்கள்—இருவருடைய இணக்கத்தையும் (கூட்டுறவையும்)அனுபவிக்க எனக்கு விருப்பம். ஆதலின் நான் இங்கும் அங்கும் நடமாடி, அம்மக்களைப் போய்ப் பார்க்கும்படி ஒரு சிறிது பலத்தை எனக்குக் கொடு' என்று சொன் னேன். ஆனால் எனக்கு நடக்கும் சக்தியை அவள் கொடுக்கவில்லை.

திரைலோக்யர் (சிரிப்போடு): "எல்லா ஆசைகளும் நிறைவேறிவிட் டனவா?"

குருதேவர் (சிரிப்போடு): "இல்லை, இன்னும் மிச்சம் சில உள்ளன.' (எல்லோரும் சிரித்தல்)

"உடல் உண்மையிலே நிலையற்றது. எனது கை ஒடிந்தபோது, நான் தேவியிடம் 'அம்மே, அது எனக்கு மிக்க வருத்தம் தருகிறது' என்று சொன் னேன். உடனே அவள் ஒரு வண்டியையும் அதை ஓட்டுபவனையும் பற்றிய ஒரு காட்சியை எனக்குத் தந்தாள். சில இடங்களில் வண்டியில் ஒரு சில

திருகாணிகள் கழன்றிருந்தன. ஓட்டுபவன் அதைச் செலுத்துகிறபடியே அவ் வண்டி சென்றது. அதற்குச் சொந்த சக்தியொன்றும் இல்லாது போயிற்று.

"பின்னேயேன் நான் உடலைப்பற்றிக் கவனம் செலுத்துகிறேன்? பக வானை அனுபவிக்கவும், அவரது நாமத்தையும் குணங்களையும் பாடவும், அவ ருடைய ஞானிகளையும் பக்தர்களையும் பார்ப்பதற்காகச் சுற்றவும்தான்."

நரேந்திரர் குருதேவர்முன் தரைமீது உட்கார்ந்திருந்தார்.

குருதேவர் (திரைலோக்யர்க்கும் மற்ற அடியார்கட்கும்): "உடலைப் பற்றிய சுகதுக்கங்கள் தடுக்க இயலாதன. நரேந்திரனைப் பாரும். அவனது தந்தை யார் இறந்து போனார். அவரது குடும்பத்தார் அளவுமிக்க துயரத்திற்கு ஆளாகி விட்டனர். அவர்க்கு அதைவிட்டு வெளிவர வழி யாதொன்றும் இல்லை. ஈசன் ஒருவரைச் சிலவேளை சுகத்திலும், சிலவேளை துயரத்திலும் வைக்கிறான்."

திரைலோக்யர்: "சுவாமிகள், பகவான் நரேந்திரர்க்குக் கருணை புரிவான்."

குருதேவர் (சிரிப்போடு): "ஆனால் அது எப்போதோ? ஒரு சமயம் இருதயன் சம்புமல்லிக் என்பவரிடம் கொஞ்சம் பணம் கேட்டான். அம் மாதிரிக் காரியங்களில் 'ஆங்கிலேயர்' கொள்ளும் கருத்துக்களையே சம்புவும் கொண்டிருந்தார். அவர் இருதயனிடம் 'உமக்கு நான் பணம் ஏன் கொடுக்க வேண்டும்? வேலை செய்து உமது பிழைப்பைத் தேடிக்கொள்ள உமக்கு முடியும். இப்போதும் நீர் சிறிது சம்பாதித்து வருகிறீர். மிக ஏழையான ஒரு வனது விஷயமோ வேறு. குருடர்க்கோ முடவர்க்கோ பணம் கொடுத்தால் தருமத்தின் நோக்கம் நிறைவேறும்' என்றார். அப்போது இருதயன் 'ஐய, நீர் அது சொல்லாதேயும், எனக்கு உமது பணம் வேண்டாம். குருடாகவோ முடமாகவோ மிதமிஞ்சிய ஏழையாகவோ ஆகாதபடி ஈசன் எனக்குத் துணை செய்வானாக! நீர் எனக்குக் கொடுக்கவும் வேண்டாம், நான் வாங்கவும் வேண்டாம்' என்றான்."

நரேந்திரர்க்கு ஈசன் அதுவரையும் அருள்புரியவில்லையே என்றதனால் குரு தேவர் பிணங்கியதுபோலப் பேசினார். இடையிடையே தமது அருமைச் சீடர் மீது தமது அன்பார்ந்த பார்வையை அவர் செலுத்தி வந்தார்.

நரேந்திரர்: "நாஸ்திகர்களின் கொள்கைகளை யான் இப்போது கற்று வருகிறேன்."

குருதேவர்: "ஆஸ்திகம் நாஸ்திகம் (கடவுள் உண்டு. கடவுள் இல்லை) என இரு கொள்கைகள் உள. நீ ஏன் முதற் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை?"

நரேந்திரர்: "ஈசன் நீதிமான். அவன் அடியார்களது நன்மையை நாடவேண்டும்."

குருதேவர்: "முற்பிறவிகளில் கருமம் செய்தவர் மட்டுமே இப்பிறப் பிற் செல்வம் பெறுவர் எனச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆனால் உள்

ளதை உரைப்போமானால், இவ்வுலகம் ஈசனது மாயையாம்! மாயையின் மண்டலத்திற்குள் மனதைக் கலக்கும் செயல்கள் பல உள. அவற்றை நம்மால் அறிய இயலாது.

"சுத்த ஆத்மா என வேதங்கள் கூறும் பரமாத்மா ஒன்றுதான் சுமேரு மலையைப்போல் மாறுததும், பற்றற்றதும், இன்ப துன்பங்கட்கு அப்பாற்பட்டதும் ஆகும் என்பதை ஈசன் எனக்கு அருளாற் காட்டியுள்ளான், அவனது மாயா உலகமாகிய இதில் குழப்பம் மிக உள்ளது. 'அதற்குப்'பின் 'இது' வரும் என்றே. 'இது' 'அதனை' உண்டு பண்ணுமென்றே எவனும் எக்காரணத்தானும் சொல்ல முடியாது."

சனி, ஏப்ரல் 5, 1884

அப்போது காலையில் ஏறக்குறைய எட்டு மணி; கோயிற் பூஞ்சோலைக்கு மா— வந்து சேர்ந்தார், ஸ்ரீராமகிருஷ்ணர் தமது அறையில் சிறிய கட்டிலில் அமர்ந்திருப்பதைக் கண்டார். ஒரு சில அடியார்கள் தரைமீது உட்கார்ந்திருந்தனர். குருதேவர் அவர்களோடு பேசிக்கொண்டிருந்தார். பிராணகிருஷ்ண முகர்ஜி அங்கிருந்தார்.

பிராணகிருஷ்ணர் ஒரு பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர், கல்கத்தாவின் வடபகுதியில் வாழ்ந்தவர். ஓர் ஆங்கில வர்த்தகச் சங்கத்தார்க்குக் கீழே ஒரு பெரிய உத்தியோகம் பெற்றிருந்தார். அவர் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் மிக்க பக்தி பூண்டவர்; இல்லறத்தில் இருந்தாரேனும், வேதாந்தங் கற்பதனால் மிக்க இன்பம் அடைந்து வந்தார். அவர் கோயிற் பூஞ்சோலைக்கு அடிக்கடி வந்துபோவார். ஒருமுறை அவர் குருதேவரைக் சுல்கத்தாவில் உள்ள தம் வீட்டிற்கு வரவழைத்து, ஒரு விழா நடத்தினர். தினமும் அவர் அதிகாலையில் தூய கங்கையில் நீராடுவார். சௌகரியம் நேரும்போதெல்லாம் அவர் வாடகைக்கு அமர்த்திய ஒரு நாட்டுத் தோணியில் தக்ஷிணேசுவரத்திற்கு வருவார்.

பிராணகிருஷ்ணர்: "ஐயன்மீர், மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்வின் தன்மை யாது?"

குருதேவர்: "கேசவ சேனரும் அக்கேள்வி கேட்டார். ஒரு மனிதனிடம் அஞ்ஞானம் இருக்கும்வரை, அவன் ஞானம் அடையாவரை, அதாவது, அவன் ஈசனது தரிசனம் பெருதவரை, பிறவி அவனுக்கு உண்டு. ஆனால் ஞானம் பெற்றபின் அவனுக்கு இவ்வுலகத்திற்குத் திரும்பிவரும் அவசியமோ, வேறு உலகத்திற்குச் செல்லும் அவசியமோ ஏற்படாது.

"குயவன் தனது பானைகளை உலர்வதற்காக வெயிலில் வைக்கிறான். அவற்றுக்குள்ளே சுட்டவை சுடாதவை என்னும் இரண்டும் உள்ளதை நீர் கவனித்திருக்கவில்லையா? ஒரு பசு அவற்றின்மீது நடக்கும்படி நேருமானால், பானைகளிற் சில நொறுங்கிப் போகின்றன. முன்னரே சுடப்பட்டுள்ள உடைந்த பானைகளைக் குயவன் தூர எறிந்துவிடுகிறான்; ஏனெனில் அவற்றால் இனி

அவனுக்கு யாது பயனும் இல்லை, ஆனால் மென்மையாய் உள்ளவற்றையோ உடைந்திருந்த போதிலும், அவன் சேகரிக்கிறான். அவற்றை ஒன்று சேர்த்துத் திரளாக்கி, அதினின்றும் புதுப்பானைகள் உண்டாக்குகிறான். அம்மாதிரியே ஒரு மனிதன் ஈசனது தரிசனத்தைப் பெறும்வரைக்கும், அவன் குயவனுகிய ஈசனது கைக்குத் திரும்பவும் வரவேண்டியவனேயாவான்; அதாவது, மறுபடியும் மறுபடியும் அவன் பிறக்கவேண்டியவனுவான்.

"அவித்த நெல்லை விதைப்பதனுல் யாது பயன்? அது ஒருக்காலும் முளையாது. அதுபோல் ஒரு மனிதன் ஞானத் தீயால் வறுக்கப்படுவானுயின் அவன் புதிய சிருஷ்டிக்கு (படைப்புக்கு) ஆளாகமாட்டான். அவன் விடுபட்ட வனுகிறான்.

"புராணங்களின்படி, பக்தனும், பகவானும் இரு வெவ்வேறுன தத்துவங்கள் (உண்மைப் பொருள்கள்). 'நான்' ஒருவன், 'நீ' வேறொருவன், உடல் ஒரு தட்டைப்போலவே; அதில் புத்தி அகங்காரம் எனும் நீர் உள்ளது. பிரம்மம் சூரியனைப்போல. அது நீரிற் பிரதிபலிக்கின்றது. ஆதலின் பக்தன் தெய்விக (திவ்விய) வடிவைக் காண்கிறான்,

"வேதாந்தத்தின்படி, பிரம்மமே சத்தியம், மற்றவை யாவும் மித்தையாம், கனவு போன்றன, உண்மைப் பொருள்களல்ல, அகங்காரம் ஒரு மரக்குச்சியைப்போல் சச்சிதாநந்தக் கடலில் குறுக்கே கிடக்கின்றது. (ம—வை நோக்கி) நான் சொல்வதைக் கவனி. இந்த அகங்காரத்தை நீக்கும்போது, ஏகமாய் அகண்டமாயுள்ள சச்சிதாநந்தக் கடலே உள்ளது. ஆனுல் அகங்காரம் எனும் மரக்குச்சி இருக்கும்வரை, இரண்டு இருப்பதான தோற்றம் உண்டு; இங்கே நீரின் ஒரு பாகமும், அங்கே இன்னொரு பாகமும் உள்ளன. பிரம்ம ஞானம் பெற்றதும், ஒருவன் சமாதியில் நிலைக்கிறான். அப்போது அகங்காரம் அழிக்கப்படுகிறது.

"ஆனுல் சங்கராசாரியார் மக்கட்குப் போதிக்கும்பொருட்டு 'ஞானி அகங்கார'த்தை வைத்துக்கொண்டார்.

['ஞானி அகங்காரம்' என்பது பிரம்ம ஞானத்தால் தூய்மையாக்கப்பட்டதும் விளக்கம் பெற்றதும் ஆன 'நான்' எனும் உணர்ச்சி. நித்யா நித்திய வஸ்து விவேக முறையைப் பின்பற்றிவரும் ஞானி சமாதியடையும்போது, அகங்காரத்தை பிரம்மத்தில் இலயமடையச் செய்கிறான். அதன்பின் அவன் வியவகார நிலைக்கு இறங்கும்போது அகங்காரத்தோற்றம் ஒன்று அவனிடம் உள்ளது; ஆனுல் அந்நிலையிலும் அவன் எப்போதும் பிரம்மத்தோடு தான் ஐக்கியமாயுள்ள உணர்ச்சியை இழக்காதிருப்பான். இந்தப் போலி அகங்காரம் 'ஞானி அகங்காரம்' எனப்படும். அன்பு நெறியைப் பின்பற்றும் ஒரு பக்தனே பகவானுக்கும் தனக்கும் உள்ள நித்திய சம்பந்தத்தை உணர்கிறான். அவனும் வியவகார நிலையில் ஒரு போலி அகங்காரத்தை வைத்துக்கொள்கிறான். இந்த அகங்காரத்தில் அஞ்ஞான அகங்காரத்திற்குரிய தன்மைகள் ஒன்றேனும் இரா; இது 'பக்த அகங்காரம்' எனப்படும். இங்கே கூறப்பட்டுள்ள இரு வகை அகங்காரங்களும்!ஒரே அனுபூதி நிலையினைக் குறிப்பன.]

(பிராண கிருஷ்ணனை நோக்கி) "ஞானியை இன்னான் என்று குறித்துக் காட்டும் அடையாளங்கள் உள. தமக்கு ஞானம் இருப்பதாகச் சிலர் நினைக்கின்றனர். ஞானத்திற்கு அறிகுறிகள் எவை? ஒரு ஞானி எவனுக்கும் தீங்கு (இம்சை) செய்ய முடியாதவனுவான். அவன் ஒரு குழந்தைபோல் இருப்பான்.

"தூரத்திலிருந்து பார்க்கும்போது, தரைமீது கிடக்கும் ஓர் எரிந்த கயிறு உண்மையான கயிற்றைப்போல் தோன்றலாம்; ஆனல், நீ அருகே வந்து அதன்மீது ஊதினல் அது முற்றிலும் மறைந்துவிடுகிறது. ஒரு ஞானியின் கோபமும் அகங்காரமும் வெறுந்தோற்றங்களே, அவை உண்மையல்ல.

"ஒரு குழந்தையிடம் பற்று இல்லை. அவன் விளையாட்டுக்காக ஒரு வீடு கட்டுகிறுன்; எவனேனும் அவ்வீட்டைத் தொடுவானுயின், அவன் குதிப்பான், கத்துவான். மறுகணம் அவனே அழிக்கிறுன், இந்தக் கணத்தில் அவன் தனது துணியின்மீது மிக்க பற்றுவைத்திருப்பான். அவன் சொல்லுகிறுன்: 'என் அப்பா எனக்கு அதைத் தந்துள்ளார். நான் அதைக் கொடுக்கமாட்டேன்' என்று. ஆனல் மறுகணம் நீ பொம்மையைக் கொடுத்து அவனிடமிருந்து அதை எத்தி வாங்கிக்கொள்ள முடியும். துணியை விட்டு விட்டு அவன் உன்னேடு வருவான்.

"இவையெலாம் ஒரு ஞானியின் அறிகுறிகள். ஒருக்கால் அவனது வீட்டில் போகத்துக்குரிய பல பொருள்கள்—கட்டில் நாற்காலி சித்திரங்கள் வாகனங்கள்—இருக்கலாம், ஆனல் எந்த நாளும் அவன் இவையனைத்தையும் விட்டுவிட்டுக் காசிக்குப் போகலாம்."

பிராணகிருஷ்ணர் குருதேவரிடம் விடைபெற்றுச் சென்ருர். ம—நதியில் நீராடினர். பிறகு அவர் இராதாகாந்தன் காளி இருவருடைய கோயிலுக்கும் சென்று, திருவுருவங்களின் முன் வீழ்ந்து வணங்கினர். அவர் தமக்குள்ளே சொல்லிக்கொண்டதாவது: 'ஈசனுக்கு வடிவமில்லை என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்படியாயின் இவ்விக்கிரகங்களின்முன் நான் பணிவதேன்? ஸ்ரீராமகிருஷ்ணர்க்கு உருவங்கொண்ட தேவர்களிடத்தும் தேவிகளிடத்தும் நம்பிக்கையுள்ள காரணத்தினுல்தானு? எனக்கு ஈசனைப்பற்றி ஒன்றும் தெரியாது. யான் ஈசனை அறியவுமில்லை. குருதேவர்க்கு விக்கிரகங்களில் நம்பிக்கையுண்டு; அவ்வாருயின், எவ்வளவோ அற்பனை யானும் அவற்றில் நம்பிக்கை வைத்தாலென்ன?"

கோயிலில் பகல் உச்சிவேளைப் பூஜையும் நைவேத்தியமும் முடிந்தன. கை மணிகளும் கண்டாமணிகளும் தாளங்களும் ஒலிக்க, தீபாராதனை நடந்தது. கோயிற் சோலையில் குதூகலத்தோடு சுறுசுறுப்பாய்த் திரிந்த மனிதர் நிறைந்தனர். ஏழைகளும் சாதுக்களும் விருந்தினரும் தம் கைகளில் இலைகளையோ தாலங்களையோ எடுத்துக்கொண்டு சாப்பாட்டு விடுதிக்கு

விரைந்து சென்றனர். ம—வும் காளிகோயிற் பிரசாதம் சிறிது உட் கொண்டனர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் உண்டபின் சிறிது இளைப்பாறிக்கொண்டிருந்தார்; ராம் கிரீந்திர முதலான அடியார் பலர் வந்தனர், குருதேவரை வணங்கிவிட்டு அவர்கள் கீழே அமர்ந்தனர்.

கிரீந்திர: "பிராம்மோக்கள் தங்கட்கு ஒரு சங்கத்தை உண்டாக்கும் திறமை (இந்நாலு வார்த்தைகளையும் ஆங்கிலத்தில் கூறி) இல்லை என்கின்றனர்.

குருதேவர்: "அதன் பொருள் யாதோ?"

ம—: "ஒரு புது மதப் பிரிவை உண்டாக்கி, அதற்குத் தலைமை வகிக்கத் தங்கட்குத் தெரியாதாம்; தங்களது புத்தி மந்தமாயுள்ளதாம். இம் மாதிரிச் சொல்கின்றனர்." (எல்லோரும் சிரித்தல்)

குருதேவர் (ராமைப் பார்த்து): "எனது கை ஏன் ஒடிந்ததென்பதைப் பற்றி இப்போது எனக்குச் சொல்லுக. எழுந்து நின்று, அதைப்பற்றி ஒரு பிரசங்கம் செய். (சிரிப்பு)

"கடவுள் அருவம் என்று பிராம்மோக்கள் வற்புறுத்துகின்றனர், அப்படி சொல்வதாகவே கொள்வோம். மனப்பூர்வமாக அவரை அழைத்தாலே போதும். அன்பர் முழு மனதுடன் வேண்டுவாராயின், எங்கும் அந்தர்யாமியாயுள்ள பகவான் தமது உண்மையான இயல்பை அன்பர்க்குக் காட்டியருள்வது உறுதியே.

"ஆனால், நாமே ஈசனைப்பற்றி நினைப்பது மட்டும் உண்மை, மற்றவர் நினைப்பது பொய் என்று சொல்வதும்; நாம் ஈசனை அருவமாக நினைப்பதால் அவர் அருவமே, எவ்வடிவமும் அவர்க்கு இருக்க முடியாது என்பதும்; நாம் ஈசனை உருவமுடையவராக நினைப்பதால், அவர்க்கு உருவமுண்டு, அவர் அருவமாகார் என்பதும்—இவை நல்லதல்ல. மனிதன் உண்மையாகவே ஈசனது இயல்பின் ஆழத்தைக் காண முடியுமா?

"சமயத்தைப் பற்றிப் பேசுவோர் அடிக்கடி ஒருவரோடொருவர் சண்டை செய்வதை யான் காண்கிறேன். இந்துக்கள், முசல்மான்கள், பிராம்மோக்கள், சாக்தர், வைணர், சைவர் ஆகிய அனைவரும் ஒருவரோடொருவர் சண்டை யிடுகின்றனர். கிருஷ்ணர் என்று அழைக்கப்படுபவரே சிவபெருமானும் ஆதி சக்தியும் ஆவர் என்பதையும், இன்னும் ஏசுவென்றும் அல்லாவென்றும் அழைக்கப்படுபவர் அவரே என்பதையும் அறியும் புத்தி அவர்கட்கு இல்லை. 'ராமர் ஒருவரே உள்ளார். அவர்க்கு ஆயிர நாமம் உண்டு! உள்ளது ஒன்றே; அதனைப் பலவாறு பெயரிட்டு அழைப்பர். எல்லா மக்களும் நாடும் மெய்ப்பொருள் ஒன்றே; வேறுபாடு வாயு நிலையாலும் சுபாவத்தாலும் பெயராலும் உண்டாகின்றது. ஒவ்வொருவரும் கடவுளை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றனர். முழுமனதும் நெஞ்சத்துடிப்பும் அவர்களிடம் இருக்குமாயின் அனைவரும் கடவுளை உணர்வார்."

சனிக்கிழமை மே 24, 1884

மாலை ஏறக்குறைய ஐந்து மணி இருக்கும். ஸ்ரீராமகிருஷ்ணர் சிவ பெருமான் கோயிற்களின் படிகள்மீது உட்கார்ந்திருந்தார். ஆதர், டாக்டர் கிதாய், ம— இன்னும் சில அடியார் அவருடன் இருந்தனர்.

குருதேவர் (அடியார்களிடம்): "உங்களிடம் ஒன்று சொல்ல எனக்கு விருப்பம். எனது சுபாவத்திலே ஒரு மாறுதல் வந்துகொண்டிருக்கின்றது."

குருதேவர் ஒரு படி கீழே இறங்கி, அடியார்கட்கு அண்டையில் அமர்ந்தார். அவர் தமது மிக அந்தரங்க அனுபவங்களை அவர்களிடம் எடுத்துக் கூற நினைவு கொண்டதாகத் தோன்றிற்று.

குருதேவர்: "நீங்களோ அடியார்கள். உங்களிடம் இதைச் சொல்வதற்குத் தயக்கம் எனக்கு இல்லை. இந்நாட்களிலே ஈசனது சின்மய ரூப தரிசனம் யான் பெறுவதில்லை. நர வடிவத்தில் அவரைத் தரிசிக்கிறேன். ஈசனது வடிவத்தைக் காண்பதும் தொடுவதும் தழுவுவதும் என் இயல்பாகிறது. ஈசன் என்னிடம் 'நீ உடல் பெற்றுள்ளனை; ஆதலால் ஈசனை அவனுடைய நர (மனித) வடிவங்கள் மூலமாக அனுபவிப்பாய்' என்று சொல்லுகிறார்.

ஈசன் எல்லாரிடத்தும் வசிப்பதில் சந்தேகமில்லை; ஆனால் ஈசனது விளக்கம் மற்ற உயிர்களிடம் இருப்பதைவிட அதிகமாக மனிதனிடத்து உள்ளது. மனிதன் ஓர் அற்பப் பொருளா? அவனுக்கு ஈசனைப்பற்றி நினைக்க முடியும், அகண்ட வஸ்துவைப்பற்றி நினைக்க முடியும்; மற்ற உயிர் கட்கோ அது இயலாது. மற்ற உயிர்களிடத்தும்—மிருகங்கள், செடிகள் மட்டுமா? எல்லா உயிர்களிடத்தும்—ஈசன் உள்ளான்; ஆனால் ஈசனது விளக்கம் மனிதனிடத்து இவ்வுயிர்களிடம் இருப்பதைவிட அதிக அளவிற்கு உள்ளது. எல்லா உயிர்களிடத்தும், எல்லாப் பொருள்களிடத்தும் தீ உள்ளது; அதன் இருப்பு மரத்திலே அதிகமாக உணரப்படுகிறது.

"ஆனால் அவதார புருடரிடத்திலே மற்ற மனிதரிடம் இருப்பதினும் அதிகமாக ஈசனது விளக்கம் உள்ளது. ராமர் இலக்ஷ்மணரிடம் 'தம்பீ, மனிதனிடம் உயர்ந்த பக்தியைக் காண்பாயாகில், அவன் சிரிப்பதும் அழுவதும் திவ்விய ஆனந்த பரவசப்பட்டுக் கூத்தாடுவதுமாய் இருப்பின், நான் அவனிடம் வாழ்வதாக நிச்சயங்கொள்க' என்றனர்.

குருதேவர் மௌனமாக இருந்தனர். சில நிமிஷங்கட்குப்பின் மறுபடியும் பேசத் தொடங்கினர்.

குருதேவர்: "கேசவசேனர் இங்கே அடிக்கடி வரத் தொடங்கினர். அதன் பயனாக அவர் மிகவும் மாறினர். சமீபத்தில் அவர் பிறரது மனதைக் கவரக் கூடிய ஒரு புருடரானர். பலமுறை அவர் தமது கூட்டத்தாரோடு இங்கு வந்தார்; ஆனால் அவர் தனியே வரவும் விரும்பினர். தமது வாழ்வில் ஆரம்ப காலத்தில் சாது சங்கம் (நல்லார் இணக்கம்) பெற்று வாழும் சந்தர்ப்பங்கள் கேசவர்க்கு அதிகமாகக் கிடையாது போயின.

"குலுதோலா தெருவிலே அவரை அவரது விட்டிலே ஒருமுறை போய்ப் பார்த்தேன். இருதயன் என்னுடன் இருந்தான். கேசவர் வேலே பார்த்துக் கொண்டிருக்கும் அறைக்கு எங்களே அழைத்துச் சென்றனர். அவர் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். வெகு நேரத்திற்குப்பின் அவர் தமது 'பேனு'வைக் கீழே வைத்தார், தமது நாற்காலியினின்றும் எழுந்து வந்தார். எங்களோடு தரைமீது அமர்ந்தார். ஆனல் அவர் எங்களேக் கும்பிடவுமில்லே, வேது எந்த வழியிலும் எங்கட்கு மரியாதை காட்டவுமில்லே. ஆனல் அவரும் அவரது நண்பர்களும் இங்கு வந்ததும், அவர்கள் என்னே வணங்குமுன் நான் அவர்களேக் கும்பிடுவேன். இவ்வாறு அவர்கள் வர வர ஒரு சாதுவை நெற்றி நிலத்திற் படும்படி வணங்கக் கற்றுக்கொண்டனர்.

"ஒரு நாள் கேசவர் தமது பரிவாரத்தோடு இங்கு வந்தார். அவர்கள் இரவு பத்துமணி வரை தங்கினர். நாங்கள் எல்லோரும் பஞ்சவடியில் அமர்ந்திருந்தோம். பிரதாபரும் இன்னும் சிலரும் தங்கட்கு இரவை இங்கே கழிக்க விருப்பம் உளதாகத் தெரிவித்தார். கேசவர் 'எனக்குக் கட்டாயம் போகவேண்டும். செய்யவேண்டிய அலுவல் எனக்கு உள்ளது' என்ருர். நான் சிரித்துவிட்டு, 'உமது மீன் கூடையின் மணமின்றி உமக்கு உறங்க முடியாதா? ஒரு நாள் ஒரு மீன்காரி பூக்காரன் ஒருவனது வீட்டிலே தங்கலானுள். அவள் சந்தையிலே மீன் விற்றுவிட்டு வெறுங் கூடையோடு அங்கு வந்தாள்; பூக்கள் வைத்திருக்கும் ஓர் அறையிலே தூங்கும்படி அவளிடம் சொன்னர். ஆனல் பூக்களின் மணத்தாலே அவளுக்கு வெகு நேரம் தூக்கம் வரவில்லே. வீட்டுக்காரி அவளது நிலேயைக் கண்டு, "ஏனம்மா! தூக்கமில்லாமல் இங்கும் அங்கும் நீ ஏன் புரண்டுகொண்டிருக் கிருய்?" என்ருள். மீன்காரி, "தோழி, எனக்குக் காரணம் தெரியவில்லே. ஒருக்கால் இப்பூக்களின் மணம் என் தூக்கத்திற்கு இடையூருகிறது போலும். எனது மீன் கூடையை எனக்குத் தருகிருயா? ஒருவேளே அது என்னைத் தூங்கச் செய்யும்" என்ருள். கூடை அவளுக்குக் கொடுக்கப்பட்டது. அவள் அதில் நீரைத் தெளித்துத் தன் மூக்குக்கு அருகே வைத்துக் கொண்டாள். பின்பு அவள் அயர்ந்து தூங்கினுள். இரவெல்லாம் குறட்டை யும் விடலானுள்.

"இக் கதையைக் கேட்டதும் கேசவருடன் வந்திருந்தோர் எல்லோரும் உரக்கச் சிரித்தனர்.

"கேசவர் நதியில் ஸ்நான கட்டத்தில் (குளிக்கும் துறையில்) அன்று மாலேப் பிரார்த்தனேயை நடத்தினர். வழிபாடு முடிந்ததும் நான் அவரிடம் சொன்னதாவது; 'ஒரு நிலேயில் ஈசன் தன்னேச் சாஸ்திரங்களாக விளங்கச் செய்கிருன்; ஆதலின் வேதங்கள் புராணங்கள் தந்திரங்கள் போன்ற சாஸ் திரங்களே வழிபடல் (பூஜித்தல்) வேண்டும். இன்னெரு நிலேயில் ஈசன் பக் தன் வடிவமாக நிற்கிருன். பக்தனது நெஞ்சம், ஈசன் இருக்கும் கூடம்.

எஜமானனை எவனும் கூடத்தில் எளிதாகக் காணலாம். ஆதலின் பக்தனை வணங்குவதனால் ஈசனையே வணங்குவதாகின்றது."

(அடியார்களிடம்) "பாருங்கள், கேசவர் ஒரு பெரும் பண்டிதராயிருந்தார். அவர் ஆங்கிலத்தில் பிரசங்கம் செய்து வந்தார், மக்கள் பலர் அவரை மதித்தனர். விக்டோரியா மகாராணியாரே அவரிடம் பேசினர். ஆனால் கேசவர் இங்கே வந்தபோது, அவர் ஒரு சாதுவைத் தரிசிக்கவரும் முறைப்படி, மேலாடையின்றி வருவார், சிறிது பழம் கொண்டு வருவார். அவர் முற்றிலும் அகங்கார மற்றவராய் இருந்தார்.

புதன், ஜூன் 25, 1884.

அன்று 'ரதயாத்திரை' யென்னும் தேர்த்திருவிழா நாள். ஈஷான் என்பவரது அழைப்பிற்கு இணங்கி ஸ்ரீராமகிருஷ்ணர் கல்கத்தாவிலே அவரது வீட்டிற்குச் சென்றனர். ஈஷானின் அண்டை வீட்டினர் ஒருவரோடு தங்கி வந்த பண்டிதர் சசதர தர்க்க சூடாமணி என்பவரைக் காணும் ஆசை குருதேவர்க்குச் சிறிது காலமாக இருந்து வந்தது.

பிற்பகலில் ஏறக்குறைய நான்குமணிக்குப் பண்டிதர் சசதர் தங்கியிருந்த வீட்டை நோக்கிக் குருதேவர் ஒரு வண்டியிற் புறப்பட்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் வண்டியில் ஏறியதும் சமாதியிற் புகுந்தார். பல ஆண்டுகள் ஞானசாதனம் பழகிவந்தபோது அவர் புரிந்த கடுந்தவத்தின் பயனைகவும், ஈசுவர சிந்தனையில் ஓயாது மூழ்கியிருந்ததன் பயனைகவும் அவரது தூல உடல் மிகமென்மை வாய்ந்திருந்தது. மிகச் சிறிய அளவிற்கு உடலிற்கு உண்டாகும் சௌகரியக் குறைவாலும், அவரைச் சுற்றிலும் எழும் உலக ஆசை தோய்ந்த நினைவுகளின் அதிர்ச்சியாலும்கூட, குருதேவர் வருந்துவதுண்டு. ஸ்ரீராமகிருஷ்ணரும் கிறிஸ்துவும் ஸ்ரீசைதன்யரும் மென்மை வாய்ந்த ஒரு மனித இனத்தைச் சார்ந்தவராதலின், அவ்வினத்தாரை ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்து, தாழ்ந்த மக்களின் சம்பந்தம் ஏற்படாதபடி பாதுகாக்கவேண்டும் என்றும் கேசவ சந்திர சேனர் ஒரு சமயம் கூறியிருந்தனர்.

அப்போது மழைகாலம்; ஒரு சிறிது தூறலால் பாதை ஈரமாயிருந்தது. ஆகாயத்திலே மேக மூட்டமாயிருந்தது. அடியார்கள் வண்டிக்குப் பின் நடந்து வந்தனர். வண்டி வீட்டு வாசலின் முன் நின்றதும், விட்டிற்குரியாரும் அவரது உறவினரும் குருதேவரை வரவேற்று, அவரை மாடியிலே கூடத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கே குருதேவர் பண்டிதரைச் சந்தித்தார்.

பண்டிதர் சசதர் நல்ல நிறமுடைய உடலினர். இளமை கழிந்தவர். தமது கழுத்தைச் சுற்றி உருத்திராக்ஷ மாலையொன்றை அணிந்திருந்தனர். அக்காலத்துப் புகழ்பெற்று விளங்கிய சமஸ்கிருத (வடமொழிப்) பண்டிதருள் அவர் ஒருவர். கிறிஸ்தவ மதமும் மேற்றிசைப் பண்பாடும் தாக்கியதனால் எழுந்த முதல் அலை இந்து சமூகத்தின்மீது பரவியபின் மூண்டு கிளம்பிய

வைதிக இந்து சமயத்திற்கு அவர் ஒரு தூணானார். இந்து சமய சாஸ்திரங்கட்கு அவர் கூறிய தெளிவான விளக்க உரையும், கணீரென்று எழும் சிரத்தையும், கேட்போரது உள்ளத்துக் கிளர்ச்சியை உண்டாக்கும் அவரது பிரசங்கத் திறமையும், கல்விகற்ற வங்காள இந்து இளைஞரிற் பலரை அவர்களின் முன்னோரது மதத்திற்கே திரும்ப இழுத்து வரலாயின.

பண்டிதர் குருதேவரைப் பயபக்தியோடு வணங்கினர். நரேந்திரர், ராக்கால், ராம், ஹாஸ்ரா, ம—ஆகிய நால்வரும்—குருதேவரோடு கூட வந்தவர்—குருதேவரின் வார்த்தைகளில் எதனையும் இழக்க விரும்பாததனால், இயன்ற வரை அவர்க்கு அருகே அறையில் அமர்ந்தனர்.

பண்டிதரைக் கண்டதும் குருதேவர் மறுபடியும் சமாதியடைந்தார். சிறிது நேரம் சென்றதும், அந்நிலையிலிருந்தே அவர் பண்டிதரை நோக்கி, 'மிக நன்று மிக நன்று' என்று சிரிப்போடு சொன்னார். பின்பு பண்டிதரிடம் குருதேவர் "நீர் எவ்வாறு பிரசங்கம் செய்கிறீர் என்பதை எனக்கு உரைப்பீராக" என்றனர்.

பண்டிதர்: "ஐயன்மீர், இந்து சாஸ்திரங்களின் விதிகளை விளக்க முயல்கின்றேன்."

குருதேவர்: "கலியுகத்திற்கு நாரதர் கூறும் பக்தி மார்க்கமே (அன்பு நெறியே) அனைத்தினும் சிறந்ததாகும். சாஸ்திர விதிகளின்படி மக்கட்கு உரிய கடமைகளைச் செய்தற்கு அவர்கட்குப் பொழுது எங்கே கிடைக்க முடியும்? தற்காலத்திலே ஆயுர்வேத இந்து வைத்தியர்கள் வேர்களையும் மூலிகைகளையும் கொண்டு தயாரிக்கும் கஷாயங்களைச் சுரத்தால் வருந்தும் ஒருவனுக்குக் கொடுக்க இயலாது. நோய் தணிக்கும் முறையை அம்மாதிரி மருந்து தாமதமாகத் தொடங்கு முன்பே, நோயாளி இறந்து போவான். ஆகையால் 'அல்லோபதி' முறைப்படி தயாரித்துள்ள 'சுர்க்கலவை' (மிக்ஸ்சர்) போன்ற ஒரு கடுமையான மருந்துமட்டுமே தற்காலம் பலன் தருகின்றது. சாஸ்திரப்படி கிரியைகளையும் சடங்குகளையும் இயற்றும்படி நீர் மக்களை வேண்டலாம்; ஆனால், கிரியைகளை விதிக்கும்போது 'தலையையும் வாலையும்' நீக்கிவிடும். (அதாவது, அவசியமற்ற பாகங்களை ஒழித்துவிடும். ஒரு மீனின் பயனற்ற பகுதிகளாகிய தலையையும் வாலையும் கிள்ளி யெறிவதுபோல.)

"நீர் ஆயிரக்கணக்காகப் பிரசங்கங்கள் செய்யலாம்; ஆனால் உலகப் பற்றுடைய மக்களின் மனதில் அவை சிறிதேனும் பதியாதுபோம். ஓர் ஆணியை ஒரு கற் சுவருக்குள்ளே அடித்துப் புகுத்தலாமா? ஆணியின் முனை ஒடியுமே யொழிய, கல்லிற் சிறிது பள்ளத்தையும் உண்டாக்காது, ஒரு முதலையின் உறுதியான முதுகுத்தோலை ஒரு வாளால் வெட்டுவதனால் உமக்கு யாது பயன்? உமது பிரசங்கங்கள் உலகப் பற்றுள்ளவர்க்கு மிக்க உதவியைப் புரியவில்லை; நீரும் இதை மெல்ல மெல்ல அறிவீர்.

"இவன் பக்தன், இவன் உலகப் பற்றுள்ளவன் என்று பிரித்தறிய உமக்கு முடியாது. அது உமது குற்றமில்லை என்பது சரியே. பெருங் காற்

றின் முதல் தாக்குதலால் மரங்கள் அசையும்போது, ஒரு மரத்தை இன்னொரு மரத்தினின்றும் பிரித்தறிய இயலாது. உதாரணமாக மாமரத்திற்கும் புளிய மரத்திற்கும் உள்ள வேறுபாட்டைக் காண முடியாது."

உடனே குருதேவர் சமாதியடைந்தார். அவரது திருமுகத்திலே ஒரு தெய்விக ஜோதி வீசியது. வெளியுலக உணர்ச்சியற்றிருந்தமையால் அவரால் ஒரு மொழியும் பேச முடியவில்லை. அவரது நிலையான பார்வை உண்முக நோக்கி யிருந்தது. பிரம்மானுபவ ஈடுபாட்டால் வைத்த கண் வாங்காதிருந் தார். நெடுநேரத்திற்குப்பின் குருதேவர் தம்மைச் சுற்றியிருந்த உலகத்தை உணரத் தொடங்கினர்; குழந்தையைப் போன்று, 'நான் தண்ணீர்க் குடிப் பேன்' என்று சொன்னர். சமாதிக்குப்பின் குருதேவர் குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்று கேட்கும்போதெல்லாம், அவர்க்குப் பையப் பைய வெளி யுலக உணர்வு திரும்ப வருகின்றது என்பதை அவருடைய அடியார்கள் தெரிந்துகொள்வர்.

ஆனந்த பரவச நிலையினை விட்டு வெளிவராது தங்கியிருந்தவாறே, அவர் தேவியைப் பார்த்து, "அம்மே, அன்று நீ பண்டிதர் ஈசுவர சந்திர வித்யா சாகரை எனக்குக் காட்டினை. அப்போது இன்னொரு பண்டிதரைக் காண எனக்கு விருப்பம் உள்ளது என்று உன்னிடம் கூறினேன்; அதனால் நீ என்னை இங்கு கொண்டுவந்து விட்டாய்" என்றனர்.

பண்டிதரைப் பார்த்து அவர் சொன்னதாவது: "என் குழந்தாய், உனது பலத்தை இன்னும் சற்று அதிகப்படுத்திக்கொள். இன்னும் சில நாள் ஞான சாதனம் பழகுக. இப்பொழுதுதான் உனது காலைத் தூக்கி மரத்தின்மீது வைத்துள்ளாய்; ஆனாலும் ஒரு பெரும் பழக்குலையைக் கைப்பற்ற நீ ஆசைப் படுகிறாய். ஆனால் பிறரது நன்மையைக் கருதி இதையெலாம் நீ செய்து வருகின்றனை." இவ்வார்த்தை முடிந்ததும் அவர் பண்டிதர்க்கு முன்பு தலை வணங்கினர்.

குருதேவர் பின்னும் தொடர்ந்து பேசலானர்: "நான் உம்மைப்பற்றி முதலில் கேள்விப்பட்டதும், நீர் வெறும் பண்டிதர்தானே, விவேகமும் வைரா கியமும் பெற்றவர்தானே என்று விசாரித்தேன், நித்ய அநித்ய வஸ்து விவேகம் இல்லாத பண்டிதன் ஒருவன் பண்டிதனேயாகான்.

"போதகர்க்கு ஈசனிடத்திருந்து ஆணை (ஆதேசம்) பிறந்திருக்குமாயின் பிறர்க்கு அவர் போதிப்பதில் கேடு இல்லை. ஈசனது ஆணையைப் பெற்று மக்கட்குப் போதிக்கும் ஆசிரியனது மனதை எவனும் கலக்க முடியாது. கலைமகளிடமிருந்து (சரஸ்வதி தேவியிடமிருந்து) ஒளிக்கதிர் ஒன்றைப் பெற்ற தும் ஒருவன் மிக்க வல்லமையுடையவனாவான்; அப்போது அவன்முன் பெரும் பண்டிதரும் வெறும் புழுவைப்போல் தோன்றுவர்.

"விளக்கை ஏற்றியதும் விட்டிற் பூச்சிகள் கூட்டமாக வருகின்றன, அவற்றை வாவென்று அழைக்கும் அவசியமில்லை. அதுபோல, ஈசனிட

மிருந்து ஆணையைப் பெற்றுப் போதிப்பவன், தான் சொல்வதைக் கேட்க வருவதற்காகப் பிறரை அழைக்கவேண்டாம். அவனது பிரசங்க நேரத்தை முன்னுல் அறிவிக்கும் அவசியமும் இல்லை. அவனிடம் எவராலும் தடுக்க முடியாத கவர்ச்சியொன்று இருப்பதனுல், ஜனங்கள் தாமாகவே வருவார். எல்லா வகுப்பினரும், அரசரும் பணக்காரரும், அவனைச் சுற்றிக் கூடுவர்.

"காந்தம் இரும்பை நோக்கி 'என் அருகே வருகிறுயா?' என்று சொல்வ துண்டா? அது அவசியமன்று. காந்தத்திலுள்ள கவர்ச்சியால் இரும்பு அதை நோக்கிப் பாய்கிறது.

"அம்மாதிரியான போதகன் பண்டிதனுயிருக்கவேண்டாம்; ஆனுல் அதி லிருந்து அவனிடம் ஞானம் இல்லையென்ற முடிவுக்கு வாராதீர். புத்தகப் படிப்பால் (ஏட்டுக் கல்வியால்) ஒருவன் ஞானம் பெறுகிறுனு? ஈசனிடமிருந்து ஆணை பெற்றவனுக்கு ஒருக்காலும் ஞானத் தட்டு நேராது. அந்த ஞானம் ஈசனிடமிருந்து வருவது; அது வற்ற முடியாதது. அதற்கு எந்நாளும் ஒரு முடிவு கிடையாது.

"தேவியின் அருள் நோக்கை (கிருபா கடாக்ஷத்தை) ஒருமுறை ஒரு போதகன் பெறுவானுயின், அவனது அறிவிற்குக் குறை உண்டாக முடியுமா? ஆதலால், உமக்கு ஈசனிடமிருந்து ஏதேனும் கட்டளை பிறந்திருக்கிறதா என்று நான் உம்மைக் கேட்கிறேன்."

ஹாஸ்ரா: "ஆம், அவர்க்குக் கட்டாயம் அது கிடைத்திருக்கும். (பண்டிதரிடம்) இது உண்மையன்யரே?"

பண்டிதர்: "ஆணையா? இல்லை, யில்லை. அப்படியொன்றும் நான் பெற்றதில்லை."

வீட்டுக்காரர்: "அவர் ஆணை பெருதிருக்கலாம்; ஆனுல் கடமை யென்னும் உணர்ச்சியால் போதிக்கிறுர்."

குருதேவர்: "ஈசனது ஆணையின்றி வெறும் பிரசங்கங்களால் மனிதன் என்ன செய்ய முடியும்? ஒருமுறை ஒரு பிராம்மோ போதகர் தமது உபதேசப் பிரசங்கத்தின் நடுவே, 'நண்பர்காள்! நான் வழக்கமாக எவ்வளவு மதுவைக் குடித்து வந்தேன்!' என்றும் பிறவும் சொல்லலானுர். இதைக்கேட்ட ஜனங்கள் தமக்குள்ளே 'இந்த முட்டாள் என்ன சொல்லுகிறுன்? அவன் வழக்கமாகக் குடிப்பதுண்டாம்!' என்று மெதுவாகப் பேசத் தொடங்கினர். இவ்வார்த்தைகள் மிகவும் பிரதிகூலமான பயனை உண்டாக்கின. நல்லவரிடமிருந்து போதனை வந்தாலொழிய, அது நல்ல பயனை விளையாது என்பதை இது காட்டுகிறது.

"ஆதலால் யான் சொல்வதாவது: உபயோகமற்ற ஒருவன் பிரசங்கம் பண்ணிக்கொண்டேபோய், சலிப்பையும் உண்டாக்கலாம்; ஆயினும் அதனுற் பயன் ஒன்றும் விளையாது. ஆனுல் ஈசனிடமிருந்து அதிகாரச் சின்னமொன் றைப் பெற்றிருப்பானுயின். ஜனங்கள் அவன் சொல்வதைக் கவனித்துக் கேட்பர். மனிதர்க்குப் போதிக்க வருபவனிடம் மிக்க சக்தி இருக்கவேண்டும்.

ஆதலால் நான் உமக்குச் சொல்கிறேன். சச்சிதானந்தக் கடலிடை மூழ்கும் நீர் ஈசனது தரிசனத்தை மட்டும் பெறுவீராயின், எதனலும் என்றைக்கும் உமக்குக் கவலை இல்லை. அப்போது மக்கட்குப் போதிக்கும்படி ஈசன் உமக்கு ஆணையை அருளுவான்."

பண்டிதர்: "க்ஷேத்திர யாத்திரையில் தாங்கள் எவ்வளவுதூரம் சென்றீர்கள் ?"

குருதேவர்: "சில இடங்கள்தான் சென்றேன். (சிரிப்போடு) ஆனல் ஹாஸ்ரா அதிக தூரம் சென்ருர், அதிக உயரமும் ஏறினர். அவர் ரிஷிகேசம் போயிருக்கிறர், ஆனல் யான் அவ்வளவு தொலையோ அவ்வளவு உயரமோ செல்லவில்லை.

"பருந்துகளும் கழுகுகளும் ஆகாயத்தில் வெகு உயரம் பறப்பதை நீர் பார்த்திருப்பீர்; ஆனல் அவற்றின் கண்களோ எப்போதும் பிணக்குழிகளிலே பதிந்திருக்கும். 'பிணக்குழிகள்' என்பதன் பொருள் உமக்குத் தெரியுமா? அதுதான் காமமும் காஞ்சனமும் (பெண்ணசையும் பொன்னசையும்).

"நீர் இருக்கும் இடத்தில் இருந்துகொண்டே பக்தியைப் பெற முடியுமாயின், யாத்திரை செல்வதனல் பயன் யாது? நான் காசிக்குச் சென்றிருக்கிறேன். இங்குள்ள மரங்களையே அங்கும் கண்டிருக்கிறேன்—அதே பச்சையான புளிய இலைகளைத்தான் பார்த்தேன்!

"யாத்திரை உமக்குப் பக்தியைப் புகட்ட முடியாது போயின், அது பயனற்றதாகிறது. பக்தியொன்றே ஸாரமானது, அவசியமானது. 'பருந்துகளும் கழுகுகளும்' என்பதன் பொருள் உமக்குத் தெரியுமா? பலர் பெரிதாகப் பேசுவர், சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ள கடமைகளைப் பெரும்பாலும் இயற்றிவிட்டதாகக் கூறுவர். பேச்சு எவ்வளவானலும், அவர்களுடைய மனம் உலகப் பற்றிலே மூழ்கி, பணம் சொத்து பேர் புகழ் போக வசதிகள் இவைபோன்ற மற்றவை—இவற்றில் ஆழ்ந்து ஈடுபட்டுக் கிடக்கும்."

குருதேவர் விடை பெற்றுச் செல்லும் தருணம் ஆயிற்று. பண்டிதரும் அவரது நண்பர்களும் குருதேவர் முன்பு தாழ்ந்து வணங்கினர்.

இன்னும் இருட்டும் வேளை யாகவில்லை; ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடியார்களோடு ஈஷானின் வீட்டுக்கு மீண்டனர். குருதேவர் ஈஷானோடும் அவரது குமாரர்களோடும் ஒரு பண்டிதரோடும் ஒரு சில அடியாரோடும் கூடத்தில் அமர்ந்தார்.

குருதேவர் (சிரித்துக்கொண்டே ஈஷானிடம்): "நான் பண்டிதர் சசதரிடம் சொன்னதாவது: 'இப்பொழுதுதான் உனது காலைத் தூக்கி மரத்தின்மீது வைத்துள்ளாய்; ஆனலும் ஒரு பெரும் பழக்குலையைக் கைப்பற்ற ஆசைப்படுகிறுய். முதன்முதலாகச் சிறிது ஞானசாதனம் பழகுக. பின் நீ பிறர்க்குப் போதிக்கலாம்.'"

ஈஷான் : "ஒவ்வொரு போதகனும் தான் பிறர்க்கு ஞான ஒளியைக் கொடுப்பதாக நினைக்கிறான். மின்மினியும் தான் உலகிற்கு ஒளிதருவதாக நினைக்கலாம். மின்மினி இவ்வாறு நினைப்பதாகப் பாவனைசெய்து, யாரோ ஒருவர் அதனிடம் 'மின்மினியே, உலகிற்கு ஒளியைக் கொடுக்க உனக்கு எவ்வாறு இயலும்? இருட்டின் மிகுதியையே நீ எடுத்துக் காட்டுகின்றனை' என்றனர்."

குருதேவர் (சிரித்துக்கொண்டே) : "ஆனால் சசதரர் ஒரு பண்டிதர் மட்டும் அல்லர். அவரிடம் ஒரு சிறிது விவேகமும் வைராக்கியமும் உள்ளன."

குருதேவர் தக்ஷிணேசுவரம் செல்லும் தருணமாயிற்று. ஈஷானும் பிற அடியார்களும் அவரைச் சுற்றி நிற்க, அவர் ஈஷானுக்குப் பலவித புத்திமொழிகளைக் கூறினர்.

குருதேவர் : "இல்லறத்தில் வாழும்போதே ஈசனிடம் பிரார்த்திக்கும் ஒரு பக்தன் உண்மையாகவே ஒரு வீரன். ஈசன் நினைக்கிறான் : "எனக்காக இல்லத்தைத் துறந்துள்ளவன் நிச்சயமாக என்னிடம் பிரார்த்திப்பான். அவன் எனக்குப் பணி செய்வது கட்டாயம். அதில் மிகச் சிறப்பானது யாது உள்ளது? அவ்வாறு செய்ய அவன் தவறுவனையின், மக்கள் அவனைக் கண்டிப்பர். ஆனால் தனது உலகக் கடமைகளை இயற்றும்போதே என்னிடம் பிரார்த்திப்பவன் எவனே அவன் மெய்யாகவே பாக்கியவான் ஆவான். அவன் ஒரு பெருந் தடையினை எதிர்த்து வென்றுகொண்டே—ஒரு டன் நிறையுள்ள மிகப் பெரிய ஒரு கல்லைப் பெயர்த்துத் தள்ளுபவன் போலே—என்னைக் காண முயற்சிக்கிறான். இம்மாதிரி மனிதன் ஒரு வீர புருஷனே.'

"உலகத்திலே ஓர் எறும்பைப்போன்றிரு. உலகத்தில் மெய்யும் பொய்யும், சருக்கரையும் மணலும், சேர்ந்த கலவையே உள்ளது. எறும்பைப் போன்றிரு, சருக்கரையை எடுத்துக்கொள்.

"இன்னும், உலகம் பாலும் நீரும் கலந்த கலவையே, சிதாநந்த ரஸமும் விஷய ரஸமும் (பேரின்பமும் சிற்றின்பமும்) கலந்த கலவையே. அன்னத்தைப் போலிரு, நீரை ஒதுக்கிவிட்டுப் பாலைக் குடி.

"நீர்க்கோழியைப்போல் உலகில் வாழ்க. நீர் அப்பறவையின்மீது ஒட்டிக் கொள்கிறது. ஆனால் பறவை அதனை உதறி எறிந்துவிடுகிறது. மண்ணில் வாழும் மீனைப்போல் உலகில் வாழ்க. மீன் மண்ணில் வாழினும், அதன் தோல் எப்போதும் பிரகாசமாயும் பளபளப்பாயும் உள்ளது.

"உலகம் உண்மையாகவே மெய்யும் போலியும்கொண்ட ஒரு கலவை. போலியைத் தள்ளி மெய்யை எடுத்துக்கொள்"

ஸ்ரீ ராமகிருஷ்ணர் வண்டியில் ஏறித் தக்ஷிணேசுவரம் சென்றார்.

திங்கள், ஜூன் 30, 1884.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது அறையிலே தரைமீது விரித்திருந்த ஒரு பாயிலே உட்கார்ந்திருந்தார். பண்டிதர் சசதரும் ஒரு சில அடியாரும் அவரோடு பாயில்

அமர்ந்திருந்தார். பிறர் வெறுந்தரையில் உட்கார்ந்திருந்தார். சுரேந்திர, பூபு ராம், ம—, ஹரிஷ், ஹாஸ்ரா—இவர்களும் பிறரும் இருந்தனர். அப்போது மாலையில் ஏறக்குறைய மணி நான்கு.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் பண்டிதர் சசதரை ஆறு நாளுக்கு முன்பு கலகத்தா விலே சந்தித்திருந்தார்; இப்போது பண்டிதர் குருதேவரைத் தரிசிப்பதற்காகத் தக்ஷிணேசுவரத்திற்கு வந்திருந்தார். பண்டிதர் வேதங்களையும் மற்ற சாஸ்திரங் களையும் கற்றிருந்தார். அவர் தத்துவ விசாரணையில் விருப்பங்கொண்டிருந் தார். கட்டிலின்மீதிருந்த குருதேவர் தமது அருட் பார்வையைப் பண்டிதரின் மீது செலுத்தி, உவமைக் கதைகள் மூலமாக அவர்க்குப் புத்தி புகட்டலானார்.

குருதேவர் (பண்டிதர்க்கு): "வேதங்களைப்போலப் பல ஞான சாஸ் திரங்கள் உள்ளன. ஆனால் தவமும் ஞான சாதனமும் இன்றி எவனும் ஈசனது காட்சியைப் பெற முடியாது. 'ஆறு தரிசனங்களாலோ வேதங்களாலோ ஈசனைக் காண முடியாது,'

"ஆனால் சாஸ்திரங்களில் உள்ளதை ஒருவன் கற்றுக்கொண்டு, பின்னர் அவை கூறும் விதிகளின்படி நடக்கவேண்டும். ஒரு மனிதன் தனக்கு வந்த காகிதத்தை இழந்துவிட்டான். அதை வைத்த இடம் அவனுக்கு நினைவில் இல்லை. ஒரு விளக்கைக் கொண்டு அதனைத் தேட ஆரம்பித்தான். இரண்டு மூன்று பேர் அதனைத் தேடியபின், கடிதம் கடைசியாகக் கண்டுபிடிக்கப் பட்டது. கடிதத்தில் இருந்த செய்தியாவது: 'ஐந்து சேர்' சாந்தேஷும் ஓர் அரையாடையொன்றும் எங்கட்கு அனுப்ப வேண்டுகிறேன்.' அம்மனிதன் அதை வாசித்தான், பின் கடிதத்தைத் தூர எறிந்துவிட்டான். அதற்குமேல் அது அவசியமில்லை; அப்போது அவன் செய்யவேண்டுவதெல்லாம், ஐந்து சேர் சாந்தேஷும் அவ் ஆடையும் வாங்குவதேதான்.

"கற்றலிற் கேட்டலே நன்று, கேட்டலினும் காணலே நன்று. சாஸ்திரங் களை ஒரு குருவோ சாதுவோ சொல்லக் கேட்பதனால் மிக நன்றாக ஒருவன் அறிவான். அப்போது அவற்றில் சாரமற்ற (முக்கியமில்லாத) பகுதியைப் பற்றிச் சிந்திக்கும் அவசியம் இல்லாது போகும்.

"ஆனால் காணல் கேட்டலினும் மிக நன்று. அப்போது எல்லா சந்தேகங் களும் மறைகின்றன. சாஸ்திரங்களிலே பல பொருள்கள் குறித்துவைக்கப் பட்டுள்ளன என்பது உண்மையே; ஆனால் ஈசனை நேரே தரிசியாதபோதோ, நெஞ்சில் தூய்மை இல்லாதபோதோ இவை யாவும் பயனற்றனவாம். பஞ் சாங்கம் அந்த ஆண்டுக்குரிய மழையின் அளவை முன்னமே தெரிவிக்கிறது. ஆனால் பஞ்சாங்கத்தைப் பிழிந்தாலோ ஒரு சொட்டு நீரும் பெறமாட்டீர். நிச் சயமாக ஒரு துளியும் வாராது."

ஓர் அடியார்: "ஈசனது தரிசனம் பெற்றபின்னும் உடல் இருக்குமா?"

குருதேவர்: "இப்போதுள்ள உடல், அதன் கருமம் ஓயும்வரை உயிரோடிருக்கும்; ஆனால் பிற்காலப் பிறப்புகள் அதன்பின் வரல் இயலாது.

ஒரு சக்கரம் போய்க்கொண்டே யிருப்பது எதுவரை? அதனை ஓடவைத்த சக்தி ஓயும்வரை. அதன்பின் அது நின்று விடுகிறது. அம்மாதிரியான மனிதனிடம் காமம் குரோதம் முதலாயவை எரிந்து போகின்றன. ஒரு சில கருமங்களைச் செய்தற்காக மட்டும் உடல் உயிரோடு தரித்திருக்கிறது."

குருதேவர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்; பின்பு பண்டிதர் சரஸ தரைப் புகை குடிக்கும்படி வேண்டினர். பண்டிதர் குடித்தற்காகத் தென் கிழக்குத் தாழ்வாரத்திற்குச் சென்றார். விரைவில் அவர் அறைக்குத் திரும்பி வந்து, அடியார்களோடு தரைமீது அமர்ந்தார். சிறு கட்டிலில் உட்கார்ந்து கொண்டே குருதேவர் சம்பாஷணையைத் தொடர்ந்து நடத்தினர்.

குருதேவர் (பண்டிதரிடம்): நான் ஒன்று உமக்குச் சொல்லுகிறேன்; மூன்று வகை ஆனந்தங்கள் உள்ளன. அவையாவன: விஷய ஆனந்தம் (சிற்றின்பம்), பஜனானந்தம் (வழிபாட்டில் ஆனந்தம்), பிரம்மானந்தம் (பேரின்பம்) என்பன. விஷயானந்தமாவது, மக்கள் எப்போதும் விரும்பும் காமத்தாலும் காஞ்சனத்தாலும் (பொன்னாலும்) வீணாயும் இன்பம். வழிபாட்டில் ஆனந்தமாவது, ஈசனது நாமத்தையும் புகழையும் பாடும்போது உணரப்படுகிறது. பிரம்மானந்தமாவது ஈசனது தரிசனத்தால் உண்டாகும் ஆனந்தம். ஈசனது தரிசனத்தால் வீணாயும் ஆனந்தத்தைப் பெற்றபின் பழங்கால ரிஷிகள் எல்லா விதிகளையும் வழக்கங்களையும் கடந்தவரானார்கள்.

"சமாதி என்பது யாது? மனதை ஈசனைப்பற்றிய உணர்வில் முழுதும் லயப்படுத்துதலே. ஞானி ஜட சமாதியை அனுபவிக்கிறான்; அதில் 'நான்' என்பது சுவடறப் போய்விடுகின்றது. பக்தி யோகத்தால் வரும் சமாதியோ 'சேதன சமாதி' யெனப்படும். இந்த சமாதியில் 'நான்' என்ற உணர்ச்சி—அதாவது, அடிமை—ஆண்டான் உறவுபற்றியும், காதலி—காதலன் உறவு பற்றியும், உண்பவன்—உணவு பற்றியும் எழும் 'நான்' மிஞ்சுகின்றது. ஈசன் ஆண்டான், பக்தன் அடிமை. ஈசன் காதலன், பக்தன் காதலி. ஈசன் உணவு, பக்தன் உண்பவன். 'எனக்குச் சருக்கரையாகப் பிரியமில்லை. அதனை உண்ணப் பிரியம்.'

"ஈசன் பக்தனுக்குப் பிரம்ம ஞானத்தை அளித்த பின்னும் அவனிடம் ஒரு சிறிது 'அகம்' (நான்) எனும் உணர்ச்சியை விட்டுவைக்கிறான். அந்த 'அகம்' பக்தனின் 'அஹம்', ஞானியின் 'அஹம்.' அந்த 'அகத்'தின் மூலம் பக்தன் பகவானது அனந்த லீலையை அனுபவிக்கிறான்.

"சிந்தனையால் (தியானத்தால்) அகண்ட பிரம்மத்தில் மனை லயம் அடைதல் ஓர் ஆனந்தம். அகண்டத்தில் மனலயம் இல்லாமல் லீலையில் மனதை வைத்தலும் ஓர் ஆனந்தமே.

"ஞானியாக மட்டும் இருப்பவனிடம், திரும்பத் திரும்ப ஒன்றையே சிந்திப்பதால் ரசமற்ற தன்மை உண்டு. அவன் எப்போதும் 'இதுவன்று, இதுவன்று, உலகம் கனவு போன்றது' என விசாரணை செய்வான்."

ஓர் அடியார்: "பக்தனின் 'அகம்' ஒருக்காலும் முற்றிலும் மறைந்து விடாதா?"

குருதேவர்: "ஆம், சில சமயம் அது மறைகின்றது. அப்போது, ஒருவன் பிரம்ம ஞானம்பெற்று சமாதியில் அமர்கிறான். யானும் அதை இழக்கிறேன். ஆனால் எக்காலமும் இழப்பதில்லை. நான் தேவியிடம், 'அம்மே, எனக்குப் பிரம்ம ஞானத்தைக் கொடாதே' என்று பிரார்த்திக்கிறேன். முன்பு உருவமுற்ற ஈசனிடம் நம்பிக்கையுடையோர் என்னைத் திரளாகக் காண வருவதுண்டு. பின்பு தற்காலப் பிரம்ம ஞானிகள் (அருவப் பிரம்மத்தில் நம்பிக்கை கொள்ளும் பிராம்மோக்கள்) வரத் தொடங்கினர், அக்காலத்தில் என் பொழுதிற் பெரும்பகுதி சமாதியில் மெய் மறந்திருப்பதிலே கழிவது வழக்கம். யான், புற நினைவு மீண்டதும் தேவியிடம் 'தாயே, எனக்குப் பிரம்ம ஞானத்தை அருளாதிருப்பாயாக' என்று சொல்வேன்."

பண்டிதர்: "ஈசன் நமது பிரார்த்தனைகட்குச் செவி சாய்ப்பதுண்டா?"

குருதேவர்: "ஈசன் கல்பதரு ஆவான். நீ எதைக் கேட்டாலும் அதை நிச்சயமாகப் பெறுவாய். ஆனால் கல்பதருவின் அருகே நின்று கொண்டு நீ பிரார்த்திக்கவேண்டும், அப்போதுதான் உமது பிரார்த்தனை நிறைவேறும். ஆனால் இன்னொன்றையும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். சாதனம் பழகும்போது ஒருவன் பேணும் ஆசை நிறைவேறப் பெறும். நினைப்பது போலே அவனுக்குக் கிடைக்கின்றது.

"யான் அதுகொண்டே தேவியிடம் 'அன்னாய், என் விசார புத்திமீது இடி விழுந்து அது அழியும்படி செய்' என்று பிரார்த்திப்பதுண்டு."

பண்டிதர்: "அப்படியாயின், தங்களிடமும் ஆராயும் புத்தி இருந்ததோ?"

குருதேவர்: "ஆம், ஒரு காலத்தே."

பண்டிதர்: "எங்கட்கும் விசாரபுத்தி ஒழியும் என்ற உறுதியை அருள்வீராக. தங்கட்கு அது எவ்வாறு ஒழிந்ததோ?"

குருதேவர்: "எப்படியோ ஒரு வழியால்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிறிது மௌனமாயிருந்தார். பின்பு அவர் மறுபடியும் பேசத் தொடங்கினர்.

குருதேவர்: "ஈசன் கற்பகத்தரு. அதன் அருகே நின்றுகொண்டு பிரார்த்திக்கவேண்டும். அப்போது விரும்புவதையெல்லாம் ஒருவன் பெறுவான்.

"எத்தனை பொருள்களை ஈசன் படைத்துள்ளான்! அவனது பிரபஞ்சம் அனந்தம். ஆனால் அவனது அனந்த ஐசுவரியத்தையெல்லாம்பற்றி அறிதல் எனக்கு என்ன அவசியம்? அவற்றை அறிவது அவசியமானால், முதலிலே யான் ஈசனது தரிசனத்தைப் பெறட்டும். அப்போது ஈசனே அவற்றையெல்லாம் பற்றி எனக்குச் சொல்லுவான், யதுமல்லிக் என்பவர்க்கு எத்தனை வீடுகளும் எத்தனை சர்க்கார் பத்திரங்களும் உள்ளன என்பதை அறியும்

அவசியம் எனக்கு யாது? எனக்கு அவசியமாவதெல்லாம் எவ்வாருவது யதுமல்லிக் என்பவரோடு சம்பாஷணை செய்வதே. ஒரு கால்வாயைத் தாண்டியோ, ஒரு மனு எழுதியோ, அவரது வாசற்காப்பவனுல் உள்ளே தள்ளப் பட்டோ அவரை யான் கண்டுவிடலாம். ஒருமுறை அவரோடு பேச எனக்கு சந்தர்ப்பம் வாய்க்குமாயின், அவரைக் கேட்டால் அவரே எனக்குத் தம்முடைய சொத்துக்களையெல்லாம் பற்றிச் சொல்லிவிடுவார். எஜமானரோடு ஒருவனுக்குப் பழக்கம் உண்டாகுமாயின், அவனுக்கு அவருடைய உத்தியோகஸ்தர்களும் மரியாதை செய்வர்." (அனைவரும் சிரித்தல்)

குருதேவர் பண்டிதருடைய பணிவைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். அடியார்கள் முன்பு அவரைப் புகழ்ந்தார்.

குருதேவர்: "அவரிடம் எவ்வளவு நல்ல இயல்பு உள்ளது! மண் சுவரிலே ஆணியை அடித்து இறக்குவதில் உமக்கு வருத்தம் இல்லை. ஆனுல் நீர் ஒரு கல்லிலே ஆணியை அறைய முயன்றால், அதன் முனை ஒடிகின்றது; ஆயினும் அது உள்ளே இறங்காது. சிலர் ஈசனைப்பற்றி ஆயிரம் முறை கேள்விப்படுவராயினும், அவரது ஞானம் ஒரு சிறிதும் விழிப்படைவதில்லை. அவர்கள் ஒரு முதலையைப் போல்வர்; அதன் தோலின்மீது வாளாலும் ஒரு வடுவை உண்டுபண்ண முடியாது."

பண்டிதர்: "ஆனுல் ஓர் ஈட்டியை முதலை வயிற்றில் எறிவதால் அதைப் புண்படுத்தக் கூடுமன்றே?" (அனைவரும் சிரித்தல்)

குருதேவர் (சிரித்துக்கொண்டே): "சாஸ்திரக் குவியல் ஒன்றை முழுதும் கற்றலும், அடையும் நன்மை யாது? தத்துவ நூல்களைக் கற்பதனுல் என்ன நன்மை? பேச்சு பெரிதாயிருப்பதினுல் வரும் பயன் யாது? வில்வித்தை கற்பதற்காக முதலில் ஒரு வாழை மரத்தைக் குறியாகவும், பிறகு ஒரு நாணலையும், அதன்பின் ஒரு திரியையும், கடைசியாகப் பறக்கும் பறவை ஒன்றையும் குறியாகக் கொள்ளவேண்டும். அதுபோல ஆரம்பத்தில் ஈசனது உருவத்தின் மீது மனதை நிலை நிறுத்தவேண்டும்.

"ஈசனையடைய, விவேகமும் வைராக்கியமும் ஈசற்காகத் துடித்தலும் வழியாம், எம்மாதிரியான துடிப்பு? ஒரு தாய்ப்பசு நெஞ்சத் துடிப்போடு தனது கன்றுக்குட்டியை நோக்கி ஓடுவதுபோலே, ஈசனுக்காகத் துடிக்கவேண்டும்."

பண்டிதர்: "வேதங்களிலும் அவ்வாறே சொல்லப்பட்டுள்ளது: 'ஈசா, பசு கன்றை நினைந்து கதறுவதுபோல நாங்கள் உனக்காகக் கதறுகிறோம்' என்று."

குருதேவர்: "உமது துடிப்போடு உமது கண்ணீரையும் சேர்த்துக் கொள்ளும். விவேகத்தாலும் வைராக்கியத்தாலும் உமக்கு எல்லாவற்றையும் துறக்கக் கூடுமானுல், உமக்கு ஈசனைக் காண முடியும். நீர் ஞான மார்க்கத்தில் சென்றாலும் சரி, பக்தி மார்க்கத்தில் சென்றாலும் சரி, அந்தத்துடிப்பால் கடவுள் வெறி உண்டாகும்.

"ஓர் இல்லறத்தானது ஞானத்திற்கும், எல்லாம் துறக்கும் ஒரு சந்நியாசியின் ஞானத்திற்கும் மிக்க வித்தியாசம் உள்ளது. இல்லறத்தானது ஞானம் ஒரு விளக்கின் ஒளியைப்போன்றது; அவ்வொளி ஓர் அறையின் உட்பக்கத்திற்கு மட்டும் பிரகாசம் தரும். அந்த ஞானத்தின் துணையைக்கொண்டு அவன் தனது சொந்த உடலையும் கிட்டிய குடும்பத்தாரையும் தவிர வேறெதனையும் காண முடியாதவனுவான். ஆனல் முற்றுந் துறந்த ஒரு துறவியின் ஞானமோ சூரியனது ஒளியைப் போன்றது. அந்த ஒளியின் உதவியால் அறையின் உட்புறம் வெளிப்புறம் இரண்டையும் அவனுக்குக் காண முடியும். சைதன்யரது ஞானத்திலே சூரியனது பிரகாசம் இருந்தது; அது ஞான சூரியனே. மேலும் பக்தியாகிய சந்திரனின் தண்ணெளியையும் (குளிர்ந்த ஒளியையும்) அவர் வீசலானர். அவரிடம் பிரம்ம ஞானமும் பிரேம பக்தியும் இரண்டும் இருந்தன."

பண்டிதரும் மணிமல்லிக்கும் ஒருவரோடொருவர் பேசத்தொடங்கினர். மணி பிரம்ம சமாஜத்தின் அங்கத்தினர். பண்டிதர் சமாஜத்தின் நல்ல அம்சங்களையும் கெட்ட அம்சங்களையும்பற்றி உக்கிரமாக வாதாடினர்.

புன்சிரிப்போடு ஸ்ரீராமகிருஷ்ணர் பண்டிதரிடம் பின்வருமாறு கூறலானர்: "மணிமல்லிக் பிரம்ம சமாஜக் கொள்கைகளை வெகுகாலமாகப் பின்பற்றி வந்துள்ளார். நீர் அவரை உமது கொள்கைக்குத் திருப்ப இயலாது. பழைய வாசனைகளை அழிப்பது எளிதான காரியமா? ஒரு காலத்தில் இந்துமத பக்தர் ஒருவர் எப்போதும் தேவியை வணங்கியும், அவரது பெயரை ஓதியும் வாழ்ந்து வந்தார். முசல்மான்கள் நாட்டை ஜெயித்தபோது, அவரை இஸ்லாம் மதத்தைத் தழுவுமாறு கட்டாயப்படுத்தினர். அவர்கள் அவரிடம் 'நீர் இப்போது ஒரு முசல்மான். "அல்லா" என்று சொல்லும். இது முதல் இனி நீர் அல்லாவின் பெயரை மட்டும் ஓதிவரவேண்டும்' என்றனர். மிக்க சிரமத்தோடு அவர் 'அல்லா' என்ற பெயரை ஜெபித்து வந்தார், ஆனல் இடையிடையே 'ஜகதாம்பாள்' என்று தவறிச் சொல்லிவிடுவார். அதைக் கேட்டதும் முசல்மான்கள் அவரை அடிக்கப்போயினர். அப்போது அவர் அவர்களை நோக்கி, 'உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். என்னைக் கொன்றுவிடாதீர். அல்லாவின் பெயரை ஜெபிக்க இயன்ற அளவு நான் முயல்கின்றேன்; ஆனல் எங்கள் ஜகதாம்பாள் என்னுள் தொண்டைவரை நிரம்பியிருக்கிருள். உங்கள் அல்லாவை அவள் வெளியே தள்ளுகிருளே' என்றனர்." (எல்லோரும் சிரித்தல்)

(பண்டிதரிடம்) "மணி மல்லிக்கிடம் தயவு செய்து ஒன்றும் சொல்லாதிரும். ருசிகள் பலவகை என்பதை நீர் அறியவேண்டும். ஜீரண சக்திகளும் பலவிதம். ஈசன் பற்பல மதங்களையும் கொள்கைகளையும் மோக்ஷ இச்சையுடையார் பற்பலர்க்குத் தக்கவாறு உண்டாக்கியிருக்கின்ருர். அனைவரும் எந்த வழியாலும் பிரம்ம ஞானத்தையடையத் தகுந்தவர்களாகமாட்டார்கள். ஆதலால் ஸாகாரப் பிரம்மத்தின் (உருவக் கடவுளின்) வழிபாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது."

அனைவரும் மௌனமாய் அமர்ந்திருந்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பண்டிதரிடம் "போய்க் கோவில்களையெல்லாம் சுற்றிப் பாரும். தோட்டத்தில் உலாவும்" என்று சொன்னார். அப்போது பிற்பகலில் ஏறக்குறைய ஐந்தரை மணி. பண்டிதர் தமது நண்பர்களோடும் அடியார் சிலரோடும் அறையை விட்டு ஏகினர்.

சிறிது நேரம் சென்றபின் குருதேவர் ம— என்பவரோடு கங்கைக் கரையில் உள்ள 'ஸ்நான கட்ட'த்திற்கு (குளிக்கும் துறைக்கு)ச் சென்றனர். ஆற்றின் கரையில் அவர் பண்டிதரைக் கண்டு, அவரிடம் "நீர் காளிகோயிற்குச் செல்லவில்லையா?" என்று கேட்டனர். பண்டிதர், "சரி, இருவரும் சேர்ந்து செல்வோம்" என்று பதில் அளித்தார். அவர்கள் கோயிலுக்கு வந்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது நெற்றி நிலத்திற் படியத் தேவியை வணங்கினர்.

செம்பருத்திப் பூக்களும் வில்வ தளங்களும் தேவியின் திருவடிகளை அலங்கரித்தன. அம்மையாரின் மூன்று கண்களும் அடியார்கள்மீது அன்பை வீசின. அம்பிகையின் கைகளில் இரண்டு அபயமும் வரமும் அளிக்கும் நிலையில் உயர்ந்திருந்தன. மற்ற இரு கைகளும் மரண அடையாளங்களைப் பிடித்திருந்தன. அம்மையார் காசிப் பட்டுச் சேலை உடுத்திருந்தார், ஆபரணங்கள் அணிந்திருந்தார். கூட்டத்தில் இருந்தாரில் ஒருவர் தேவியின் திருவுருவத்தைக் குறித்து, "சிற்பி நவின் என்பவரால் இச்சிலை செய்யப்பட்டதாக நான் கேள்வியுற்றேன்" என்று கூறினர். குருதேவர்: "ஆம், எனக்குத் தெரியும். ஆனால் எனக்கோ அம்மையார் சின்மய வடிவமாயிருக்கின்றார்" என்று மறுமொழி கூறினர்.

இருட்டும் வேளை. குருதேவர் தமது அறைக்கு மேற்கேயுள்ள அரை வட்ட வடிவமான தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்தார். பாபுராமும் ம—வும் அவரருகே உட்கார்ந்தனர். அவர் ஒருவாறு ஆனந்த பரவச நிலையில் இருந்தார்.

இராக்கால் அப்போது ஸ்ரீ ராமகிருஷ்ணரோடு கூட வாழ்ந்து வரவில்லை; ஆதலின் குருதேவர்க்கு அவரது திருமேனி சம்பந்தமான பணிவிடைகளைப் பற்றிய சங்கடங்கள் நேர்ந்து வரலாயின. பல அடியார்கள் அவரோடு வாழலானார், ஆனால் ஞான நிலைகட்கு உட்பட்டிருக்கும் சமயங்களில் அவர்க்கு எல்லாருடைய பரிசத்தையும் (தொடுதலையும்) பொறுக்க இயலாது. அவர் பாபுராமிடம் 'நீ என்னுடன் தங்கியிரு. அது மிக நன்றாயிருக்கும். தற் சமயம் உள்ள நிலையில் பிறர் என்னைத் தொட இடங் கொடுக்க முடியாது' என்று குறிப்பாகச் சொன்னார்.

(ம—விடம் பேரன்பேரடு): "இப்போது முன்போல அடிக்கடி நீ ஏன் வருவதில்லை?"

ம—: "விசேஷ காரணம் ஒன்றுமில்லை. வீட்டில் சிறிது அலுவலாய் இருக்கிறேன்."

குருதேவர் : "நேற்று பாபுராமின் உள்ளியல்பை அறியலானேன். அவனே என்னோடு வாழும்படித் தூண்ட அவ்வளவு கடுமையாக யான் முயற் சித்துக்கொண்டிருப்பதன் காரணமும் அதே. தாய்ப் பறவை தக்க காலத்தில் முட்டையைக் குஞ்சு பொரிக்கும்படி செய்கிறது. பாபுராமைப் போன்ற இளை ஞர் நெஞ்சிலே தூய்மை யுடையார். அவர்கள் இன்னும் பொன்னும் பெண்ணும் ஆன இரண்டின் ஆசை வலைக்குள் அகப்பட்டுக்கொள்ளவில்லை, அது அப் படித்தானே ?"

ம : "ஐயன்மீர், அது உண்மையே. அவர்கள் இன்றுவரை களங்க மற்றவர்."

குருதேவர் : "அவர்கள் ஒரு புதுப்பானை போன்றவர். அதில் வைக் கும் பால் புளிப்பதில்லை."

ம— : "அது சரி."

குருதேவர் : "இங்கு பாபுராம் எனக்குத் தேவை. நான் சில ஞான நிலைகளை அடையும்போது, அவன்போன்ற ஒருவன் எனக்கு அவசியமாகிறான். என்னோடு திடீரென நிலையாக வாழக்கூடாது என்று அவன் சொல்லுகிறான் ; ஏனெனில் அதனால் கஷ்டங்கள் உண்டாகுமாம். அவனது உறவினர் தொந் தரவு செய்வாராம். ஆதலால் சனி ஞாயிறு இரண்டு நாள்களும்மட்டும் இங்கு வருமாறு யான் அவனிடம் சொல்லிக்கொண்டிருக்கிறேன்."

பண்டிதர் தமது நண்பர்களோடு அறைக்குட் புகுந்தார்.

குருதேவர் (பண்டிதரிடம்) : "நீர் கீதையை வாசித்திருப்பீர், அதிற் சந் தேகமில்லை. எல்லோரும் மதித்தும் மரியாதை செய்தும் வரும் ஒரு மனித னிடம் ஈசனின் விசேஷ சக்தி உள்ளது என்று அந்நூல் கூறுகிறது."

பண்டிதர் கீதையினின்றும் அந்த சுலோகத்தை ஒப்பித்தார்.

குருதேவர் : "உம்மிடம் ஈசனது சக்தி உள்ளது என்பது நிச்சயம்."

பண்டிதர் : "யான் ஏற்றுக்கொண்டுள்ள காரியத்தை முடிக்கும் பொருட்டு விடா முயற்சியோடு நான் உழைக்கவா ?"

ஸ்ரீ ராமகிருஷ்ணர் "ஆம்" என்று சொல்லும்படி தம்மைத் தாமே வற்புறுத்திக் கொள்ளலானார். அவர் சம்பாஷணையை விரைவில் மாற்றி விட்டார்.

பண்டிதரும் அவர்தம் நண்பர்களும் குருதேவரை வணங்கியபின், விடை பெற்றுக்கொள்ளத் தயாரா யிருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பண்டிதரிடம் சொல் வார் : "மறுபடியும் வாரும். கஞ்சா குடிப்பவனோடு கூடி யிருப்பதனால் மகிழ்ச்சி உண்டாகிறது. அவர்கள் ஒருவரையொருவர் தழுவியுங் கொள்வர். ஆனால் தமது இனத்தைச் சேராதவரைக் கண்டாலோ, அவர்கள் ஒளிந்து கொள்கின்றனர். ஒரு பசு தனது கன்றுக்குட்டியின் உடலை நக்குகிறது ; ஆனால் ஒரு புதுப்பசுவைத் தனது கொம்புகளால் முட்டிப் பயமுறுத்துகின்றது."

(எல்லோரும் சிரித்தல்)

பண்டிதர் அறையை விட்டு வெளி வந்தார். ஒரு புன்சிரிப்போடு குரு தேவர், "ஒரு நாளிலே அவர் காரந் தணிந்தவரானர். எவ்வளவு பணிவுடையரா யிருந்தார் என்பதை நீங்கள் கவனித்தீர்களா? நான் கூறிய ஒவ்வொன்றையும் அவர் ஒப்புக்கொண்டார்" என்று சொன்னர்.

நிலா அரை வட்ட வடிவமுள்ள தாழ்வாரத்திலே ஒளியை வெள்ளமெனப் பொழிந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் இன்னும் அங்கேயே உட்கார்ந்திருந்தார். ம— விடை பெற்றுக்கொள்ளும் சமயமா யிருந்தது.

குருதேவர் (அன்போடு): "நீர் இப்போது போக வேண்டியது கட் டாயமா?"

ம—: "ஆம், ஐயன்மீர். யான் போய்வர விடை பெற்றுக்கொள் கிறேன்."

குருதேவர்: "அடியார்களுடைய வீடுகளைப் போய்ப் பார்க்கும் எண் ணம் என்னிடம் எழுந்துகொண்டிருக்கின்றது. உமது வீட்டிற்கும் வர எனக்கு விருப்பம். நீர் என்ன சொல்கிறீரோ?

ம—: "அது மிக நன்ரு யிருக்கும்."

வியாழன். ஜூலை 3, 1884

ஸ்ரீ ராமகிருஷ்ணர் கல்கத்தாவில் பலராம் போஸ் என்பவரது வீட்டில் உட்கார்ந்திருந்தார். அவருக்கு அருகே ராம், பலராம், பலராமின் தந்தையார், ம—, மனமோஹன், இன்னும் சில வாலிப அடியார்களும் அவரருகே இருந் தனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சில நிமிஷங்கள் தாழ்வாரத்திற்குச் சென்றனர், பிறகு மீண்டனர். அவர் போய்க்கொண்டிருக்கும்போதே, விசுவம்பரருடைய பெண் —ஆறு ஏழு வயதுக் குழந்தை—அவரை வணங்கினள். அறைக்குத் திரும் பியதும், குருதேவர் அச்சிறுமியோடும் சம வயதுள்ள அவள் தோழிகளோடும் பேச ஆரம்பித்தனர்.

குழந்தை (குருதேவரிடம்): "நான் உங்களைக் கும்பிட்டேன், நீங்கள் அதைக் கவனிக்கக்கூட இல்லையே."

குருதேவர் (சிரித்துக்கொண்டே): "அப்படியா? உண்மையாகவே அதைக் கவனிக்கவில்லை."

குழந்தை: "அப்படியானால் நில்லுங்கள். நான் மறுபடியும் உங்களை வணங்க விரும்புகிறேன்—மற்ரொரு திருவடிக்கும் வணக்கம்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிரித்தார், கீழே அமர்ந்தார். அவர் பதில் வணக்கம் செய்தனர்; தமது முகம் தரையில் படும்படி அக்குழந்தையை வணங்கினர். அவர் அவளைப் பாடச் சொன்னர், அக்குழந்தை "எனக்குப் பாடத் தெரியாது என்று சத்தியம் பண்ணுகிறேன்" என்ரூள். குருதேவர் அவளைப் பின்னும் சுட்டாயப்படுத்தியபோது, அவள் "'நான் சத்தியம் பண்ணுகிறேன்' என்று

சொன்ன பிற்பாடும் நீங்கள் என்னைக் கட்டாயம் பண்ணலாமா ?'' என்ருள். குருதேவர் குழந்தைகளோடிருந்தபோது மிக்க ஆனந்தம் அடைந்தார். அவர் களைச் சந்தோஷப்படுத்த விளையாட்டுப் பாட்டுக்களைப் பாடினர்.

அவர் பாடியதாவது ;

வாவா இங்கே உன்தலையை
வாரிச் சீவி முடிக்கட்டும்,
சீவா யெனிலோ காணுங்கால்
சீறி வைவான் நின்கணவன்.

குழந்தைகளும் அடியார்களும் சிரித்தனர்.

குருதேவர்(அடியார்களிடம்): ''பரமஹம்சர் ஐந்து வயதுள்ள குழந்தை யைப் போலிருப்பார். எல்லாம் சைதன்ய மயமாயிருப்பதை அவர் காண்கிறார். ஒரு காலத்தில் நான் கமார்ப்புகூரில் தங்கிக்கொண்டிருந்தேன். அப்போது சிவராமுக்கு நாலைந்து வயதிருக்கும். ஒரு நாள் குட்டையினருகே விட்டிற் பூச்சி களைப் பிடிக்க அவன் முயன்றுகொண்டிருந்தான். இலைகள் அசைந்துகொண் டிருந்தன. அவை சலசல என்ச் சத்தம் செய்வதை நிறுத்த, அவன் இலை களைப் பார்த்து, ''இரையாதே ! நான் ஒரு விட்டிற் பூச்சியைப் பிடிக்கவேண் டும்'' என்றான். இன்னொரு நாள் காற்றும் மழையுமாயிருந்தது. பெரு மழை பெய்தது. சிவராம் என்னோடு வீட்டிற்குள் இருந்தான். மின்னல் பளீரென்று பலமுறை விளங்கிற்று. அவன் கதவைத் திறந்துகொண்டு வெளியே போக விரும்பினன். நான் அவனைத் திட்டி நிறுத்தினேன் ; ஆனலும் பின்னும் அவன் அடிக்கடி வெளியே எட்டிப் பார்த்தான். அவன் மின்னலைக் கண்ட போது, 'அதோ பார் சிற்றப்பா ! மறுபடியும் அவர்கள் தீக்குச்சியைக் கீச்சு கின்றனர் !' என்று கூவினன்,

''பரமஹம்சர் குழந்தையைப்போல் இருக்கின்றனர். அவர்க்குத் தம் ஆளுக்கும் பிறர்க்கும் வேறுபாடு தெரியாது. உலக உறவுகளை (ஐகிக சம்பந் தங்களை)ப்பற்றிக் கவனிக்கமாட்டார். ஒருநாள் சிவராம் என்னிடம் 'சிற்றப்பா, நீ என் அப்பாவுக்குத் தம்பியா, மச்சினரா ?' என்று கேட்டான்.

''பரமஹம்சர் குழந்தைபோல் இருப்பர். தம் இருப்பிடம் முதலியவற் றைப்பற்றிய அறிகுறியொன்றையும் அவர் வைத்திரார். அவர் எல்லாவற்றை யும் பிரம்மமாகவே காண்பார். தமது சொந்தப் பிரயாணங்களில் கவனமின்றி யிருப்பார். சிவராம் துர்க்க பூஜை விழாப் பார்க்க இருதயனது வீட்டுக்குச் சென்ருன். அவன் வீட்டைவிட்டு நழுவி, அலைந்து வழிதவறிவிட்டான். ஒரு வழிப்போக்கன் அக் குழந்தையைக் கண்டு, (அப்போது அதற்கு வயது நாலே) 'நீ எங்கிருந்து வருகிருய் ?' என்று கேட்டான். அவனுக்கு அதிகம் சொல்ல முடியவில்லை. 'குடிசை' என்று மட்டும் சொன்னன். தேவியின் திருவுருவத் திற்குப் பூஜை நடத்தும் பெரிய குடிசையைப்பற்றி அவன் சொல்லிக்கொண்டி

ருந்தான். வழிப்போக்கன் அவனிடம் மேலும் 'நீயாரோடுகூட வாழ்கிறாய்?' என்று கேட்டான். பையனோ 'அண்ணனோடு' என்று மட்டும் பதில் சொன்னான்.

"சில சமயம் பரமஹம்சர் ஒரு பைத்தியக்காரனைப்போல் நடப்பார். தக்ஷிணேசுவரத்துக் கோவிலில் பிரதிஷ்டை முடிந்த சில நாட்களுக்குப்பின் ஒரு பைத்தியக்காரன் அங்கு வந்தான்; அவர் உண்மையிலே பிரம்ம ஞானம் பெற்றிருந்த ஒரு முனிவரே. அப் பைத்தியக்காரன் ஒரு கையில் ஒரு மூங்கில் கிளையையும், மற்றொன்றில் மாஞ்செடி முளைத்துள்ள ஒரு சட்டியையும் வைத் திருந்தான்; கிழிந்த செருப்புகளை அணிந்திருந்தான். அவன் சமூகக் கட் டுப்பாடுகளில் ஒன்றையும் பின்பற்றவில்லை, கங்கையில் நீராடியபின் யாதொரு சமயக் கிரியையும் செய்யவில்லை. தனது அரையாடையில் ஒரு மூலையில் வைத் திருந்த யாதோ ஒன்றை உண்டான். பின் காளி கோயிற்குள் புகுந்தான். தேவிக்குத் தோத்திரங்களைப் பாடினான். கோயில் நடுங்குவதுபோலத் தோன் றிற்று. அலதாரி அப்போது கோயிலிலிருந்தார். விருந்தினர்க்குரிய விடுதி யில் உண்ண அப் பையத்தியக்காரனுக்கு அனுமதி கிடைக்கவில்லை; ஆனல் இந்த அவமானத்தை அவன் கவனிக்கவில்லை. குப்பைக் குவியலில் அவன் உணவு தேடினான்; அங்கே நாய்கள் எறியப்பட்ட எச்சிலைகளிலுள்ள மிச்சங் களை உண்டுகொண்டிருந்தன. இடையிடையே அவன் தனக்கு உணவு கிடைப்பதற்காக நாய்களை ஒரு பக்கம் பிடித்துத் தள்ளினான். நாய்களும் அதைக் கவனிக்கவில்லை. அலதாரி அவனைப் பின்தொடர்ந்து, அவனிடம் 'நீர் யார்? பூரண பிரம்ம ஞானியா?' என்று கேட்டார். பைத்தியக்காரன் 'இஷ்! ஆம், நான் பூரண பிரம்ம ஞானியே' என்று மெல்லிய குரலில் பதி லளித்தான். அலதாரி அதைப்பற்றி என்னிடம் சொன்னபோது, எனது நெஞ்சு படபடவென்று அடிக்க ஆரம்பித்தது. நான் இருதயனைப் பற்றிக்கொண்டேன். யான் தேவியிடம், 'அம்மே, இங்கிலை வழியாக நானும் செல்லவேண்டியிருக் குமா?' என்று சொன்னேன். நாங்கள் அனைவரும் அம்மனிதரைக் காணச் சென்றோம். அவர் எங்களிடம் உயர்ந்த ஞான மொழிகளைப் பேசினர், ஆனல் பிறர் முன்பு ஒரு பைத்தியக்காரனைப்போல நடந்துகொண்டார். அலதாரி அவரை வெகுதூரம் தொடர்ந்து சென்றார், அவர் தோட்டத்தைவிட்டு வெளி யேறினர். வெளி வாயிற் கதவைத் தாண்டியதும், அலதாரியிடம் சொன்ன தாவது: 'வேறென்ன உனக்குச் சொல்லப்போகிறேன்? இக்குட்டை நீருக்கும் கங்கை நீருக்கும் யாதொரு வேறுபாடும் உனக்குத் தெரியாதபோது, உனக்குப் பூர்ண ஞானம் வந்ததாக அறிவாய்?' இவ்வாறு சொல்லிக்கொண்டே அவர் விரைவாக மேல் நடந்தார்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ம—வோடு பேசத் தொடங்கினர். மற்ற அடியார் களும் கூட இருந்தனர்.

குருதேவர் (ம—விடம்): "சசதரைப்பற்றி உனக்கு என்ன அபிப் பிராயம்?"

ம—: "அவர் மிக நேர்த்தியானவர்."

குருதேவர்: "அவர் மிக்க புத்திமானன்றே?"

ம—: "ஆம், சுவாமிகளே, அவர் பெருங் கல்வி கற்றவர்."

குருதேவர்: "கீதை சொல்லுகிறபடி. பல்லோரது மதிப்பையும் மரியாதையையும் பெறும் ஒருவனிடம் ஈசனது சக்தி உள்ளது, ஆனால் சசதர் இன்னும் ஒரு சில செய்யவேண்டியதுண்டு. வெறும் பாண்டித்தியத்தால் அவர் எதைச் சாதிக்க முடியும்? சிறிது ஞானசாதனம் பழகுதல் இன்றியமையாதது."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் வீட்டிலுள்ள தெய்வத்தைத் தரிசிப்பதற்காக உள்ளறை கட்குச் சென்றார். சில மலர்களையும் சமர்ப்பித்தார். பலராமரின் குடும்பத்து மாதர் அவரைக்கண்டு மகிழ்ந்தனர்.

குருதேவர் மறுபடியும் கூடத்திற்கு வந்தனர். பின்வருமாறு கூறினர்; "உலகப்பற்றுள்ள மனிதர் தமக்குத் தோன்றும்போதுதான் இடையிடையே பக்தியும் ஜெபமும் தவமும் பழகுவர். ஆனால் ஈசனையன்றி வேறென்றையும் அறியாதவரோ மூச்சுவிடுந்தோறும் அவனது பெயரை ஓதுவர். சிலர் மனதிற் குள் எப்போதும் 'ஓம் ராம' என்று ஜெபிப்பார். ஞானமார்க்கத்தைப் பின் பற்றுவோரும் 'ஸோஹம்' 'நான் அவனே' என்பதை ஒதி வருவார். ஈசனது நாமத்தை ஜெபித்துக்கொண்டும் நாக்கு எப்போதும் அசைந்துகொண்டும் இருப்பார் சிலர் உளர். ஓயாது நினைத்தலும் சிந்தித்தலும் வேண்டும்."

பண்டிதர் சசதர் ஒன்றிரண்டு நண்பர்களோடு அறைக்குட் புகுந்து, குருதேவரை வணங்கினர்.

குருதேவர் (சிரித்துக்கொண்டே): "மணமகன் வரவை எதிர்பார்த்துப் படுக்கையருகே காத்திருக்கும் மணமகளின் தோழிமாரைப் போன்றுள்ளோம்."

பண்டிதர் நகைத்தார். அறையில் அடியார்கள் நிரம்பியிருந்தனர்; டாக்டர் பிரதாபரும் பலராமரது தந்தையாரும் அங்கிருந்தனர். குருதேவர் தமது பேச்சைத் தொடர்ந்து நடத்தினர்.

குருதேவர் (சசதரிடம்): "ஞானத்திற்கு முதல் அடையாளம் சாந்தமான குணம், இரண்டாவது அகங்காரமின்மை. உம்மிடம் இரண்டும் உள்ளன. ஞானிக்கு மற்ற அடையாளங்களும் உள. அவன் ஒரு சாதுக்கு முன் தியாகியாவான். கருமம் செய்யும்போது சிம்ம சமானனுவான்,—உதாரணமாக அவன் பிரசங்கம் செய்யும்போது—தனது மனைவியின்முன் மஹா பண்டிதனுவான். (எல்லோரும் சிரித்தல்)

"ஆனால் விஞ்ஞானியின் இயல்போ வேறுவிதமாயிருக்கும்; சைதன்ய தேவர் ஓர் உதாரணம். அவன் குழந்தைபோலவோ. பித்தனைப்போலவோ, சடவஸ்துவைப் போலவோ நடந்துகொள்வான். குழந்தை பாவனையில் உள்ள போது, அவன் சிலவேளை குழந்தையின் கபடமற்ற தன்மையையும், சில வேளை காளைப் பருவத்திற்குரிய டம்பத்தையும், சில வேளை பிறர்க்குப்போதிக்கும்போது ஓர் இளைஞனின் பலத்தையும் வெளிக்காட்டுவான்."

எல்லோரும் மௌனமாக உட்கார்ந்திருந்தனர், மறுபடியும் குருதேவர் பண்டிதரைப் பார்த்துப் பேசலானார்.

குருதேவர்: "முற்காலத்தில் பல பெரியார் இங்கே வருவதுண்டு."

சசதர்: "பணக்காரர் என்ற பொருளிலா ?"

குருதேவர்: "அல்ல; பெரும் பண்டிதரைப்பற்றிச் சொன்னேன்."

சசதர் (தாழ்மையாக): "ஐயன்மீர், எவ்விதத் துடிப்பு ஒருவற்கு ஈசனது தரிசனத்தைத் தரும் என்பதை எங்கட்குக் கூறியருள்வீராக."

குருதேவர்: "ஒரு காலத்தில் ஒரு குரு தமது சீடனிடம், 'என்னுடன் வா. எவ்விதத் துடிப்பு ஒருவற்கு ஈசனது காட்சியை அளிக்கவல்லது என்பதை உனக்குக் காட்டுவேன்' என்றார். இவ்வாறு சொல்லிக்கொண்டே அவர் சீடனை ஒரு சிறு குளத்திற்கு அழைத்துச் சென்று, அவனது தலையை நீர்க்குள் அமிழ்த்தினர். ஒரு சிறிது நேரத்திற்குப்பின் அவர் சீடனை வெளியேற்றி, 'உனக்கு எவ்வாறு இருந்தது ?' என்று கேட்டார். சீடர் அதற்கு 'ஓ, இறந்துபோவேன் போல உணர்ந்தேன். ஒரு மூச்சுக் காற்றுக்காக நான் துடிதுடித்துக்கொண்டிருந்தேன்' என்று பதிலளித்தான்."

சசதர்: "ஆம், ஆம், அதுதான். இப்போது யான் அதை அறிகிறேன்."

குருதேவர்: "ஈசன்மீது பேரன்பு கொள்வதே எல்லாம். பக்தியே சாரம். நாரதர் இராமரிடம், உமது திருவடித் தாமரைகளில் எனக்குச் சுத்த பக்தி (தூய அன்பு) எப்போதும் இருக்கட்டும்! உமது புவன மோஹினி மாயையால் நான் மயங்காதிருப்பேனாக!' என்று வேண்டினார். இராமர் அவரிடம் 'வேறு எவ்வரமேனும் கேளும்' என்றார். 'வேண்டாம், எனக்கு வேறெதுவும் வேண்டாம். உமது தாமரைப் பாதங்களில் எனக்கு பக்தி உண்டாகுக! இது வொன்றே எனது பிரார்த்தனை என்றனர் நாரதர்."

பண்டிதர் சசதர் புறப்படத் தயாராயிருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பண்டிதர்க்கு ஒரு வண்டி கொண்டுவருமாறு ஓர் அடியாரிடம் கூறினர்.

இருள் கவியும் வேளை. தேவி கிருஷ்ணர் ராமர் ஹரி இவர்களின் நாமங்களை ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஓதத் தொடங்கினர், அடியார்கள் மௌனமாக அமர்ந்திருந்தனர். குருதேவர் மிக இனிய குரலில் நாமங்களைப் பாடினர்; அதனால் அடியார்களின் நெஞ்சங்கள் ஆழ்ந்து உருகலாயின.

8

கடவுள்-வெறி நிலை

இன்று மஹாலய அமாவாசை. இந்துக்களுக்கு ஒரு புண்ணிய தினம். பிற்பகல் இரண்டு மணிக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது அறையில் மகேந்திர முகர்ஜி, பிரிய முகர்ஜி, ம—, பாபுராம், ஹரீஷ், கிஷோரி, லட்டு என்பாரோடு அமர்ந்திருந்தார். சிலர் தரையில் உட்கார்ந்திருந்தனர், சிலர் நின்று கொண்டிருந்தனர். பிறர் அங்குமிங்கும் போய்க்கொண்டிருந்தனர். ஹாஸ்ரா தாழ்வாரத்தில் அமர்ந்திருந்தனர், இராக்கால் பலராமோடு பிருந்தாவனத்தில் இருந்தனர்.

குருதேவர் (மகேந்திர முகர்ஜிக்கும் பிறருக்கும்): "நீங்கள் இங்கே வந்து போவதால் நன்மையடைந்து வருகிறீர்கள் என்பதை அறிவேனாயின் மிகவும் மகிழ்ச்சி பெறுவேன். (ம—விடம்) ஏன் இங்கு மக்கள் வருகின்றனர்? எழுதவோ படிக்கவோ அதிகமாக எனக்குத் தெரியாது."

ம—: "ஈசனது சக்தி தங்களிடம் உள்ளது. இக் காரணத்தாலன்றோ இவ்வளவு கவர்ச்சிச் சக்தி உள்ளது, ஈசனது தன்மையே மனத்தைக் கவர்கின்றது."

குருதேவர்: "எல்லா மக்களின் மனங்களும் ஈசனிடம் கவரப்படுகின்றன என்பது எவ்வழியாலும் இல்லை. சிறப்பாகச் சிலர் மட்டும் அவ்வாறு உணர்கின்றனர். ஈசனிடம் பக்திபெற ஒருவன் நல்ல சம்ஸ்காரங்களோடு (பூர்வ வாசனைகளோடு) பிறக்கவேண்டும். இல்லாவிடில், பாக்பஜாரில் எத்தனையோ ஜனங்கள் இருக்க, நீங்கள் மட்டும் இங்கு வருவானேன்? மலக் குவியலில் நல்லது எதையும் நீர் எதிர்பார்க்க முடியாதன்றோ?

(முகர்ஜி சகோதரரிடம்); "நீங்கள் நல்ல நிலையில் இருக்கிறீர்கள். ஒரு மனிதன் யோக நெறியினின்னும் தவறிவிடுவானாயின், அவன் செழிப்பான குடும்பத்தில் மறுபிறப்பவடவான்; அங்கே ஈசனது தரிசனத்திற்காக மறுபடியும் ஞான சாதனம் பழகத் தொடங்குவான்."

மஹேந்திரர்: "யோக நெறியினின்றும் ஒருவன் தவறுவானேன்?"

குருதேவர்: "ஈசனை நினைக்கும்போதே யோகம் பழகுபவன் உலக போகத்தில் இச்சையுடையவனுவான். இந்த இச்சையே நெறியை விட்டு

அவனைத் தவறச் செய்கிறது. மறு பிறவியில், அவன் இப்பிறவியில் செயலாக மாற்ற முடியாதுபோன ஞான வாசனைகளோடே பிறப்பான்."

மஹேந்திரர்: "அப்படியானால் வழி யாது?"

குருதேவர்: "ஒரு மனிதனிடம் இச்சைகள் இருக்கும் வரை, உலக போக வாஞ்சை யுள்ளவரை, அவனுக்கு முக்தி கைகூடமாட்டாது.

"காமங்கட்கும் போக வாஞ்சைகட்கும் இடங்கொடுப்பது நன்றன்று. இக்காரணம் பற்றியே என்னுள்ளத்திலே ஆசைகள் எவை வரினும் யான் அவற்றை நிறைவேற்றுவது வழக்கம். பர்ரா பசாரில் சில வர்ணம் தீட்டிய தின்பண்டங்களை ஒரு சமயம் யான் கண்டேன்; அவற்றை உண்ண விரும்பினேன். அவற்றை எனக்கு வாங்கிவந்தார்கள், நானும் அநேகத்தை உண்டேன். அதன் பலனாக யான் நோயடைந்தேன்.

"சிறு பையனாயிருந்த நாள்களில், கங்கையில் நீராடிக்கொண்டிருந்த போது, இடுப்பைச் சுற்றி ஒரு தங்க ஆபரணம் அணிந்திருந்த ஒரு பையனைக் கண்டேன். எனக்குக் கடவுள் வெறிபிடித்த நிலையில் அதேமாதிரி ஆபரணம் எனக்கும் வேண்டும் என்ற இச்சை எழுந்தது. என்னிடம் ஒன்று கொடுக்கப்பட்டது, ஆனால் அதை வெகுநேரம் வைத்திருக்க முடியவில்லை. அதை யான் அணிந்ததும், என் உடலிற்குள் வாயு வேகமாசு மேல் நோக்கிப் பாய்ந்து வலியை உண்டாக்கியதை உணர்ந்தேன். அதன் காரணம், எனது தோலின்மீது தங்கம் பட்டதேயாகும். சிறிது நேரம் அந்த ஆபரணத்தை அணிந்திருந்து, பின் ஒரு பக்கத்தில் தூர வைக்கவேண்டியதாயிற்று. அப்படிச் செய்யாவிடில் அதை நான் பிய்த்தெறிய வேண்டியிருந்திருக்கும்.

"அந்நாளில் பல சாதுக்கள் கோயிற் பூஞ்சோலையைப் பார்க்க வருவதுண்டு. அவர்கட்கு உணவுப் பொருள்களைக் கொடுக்கத் தனியே ஒரு பண்டகசாலை இருக்கவேண்டும் என்ற விருப்பம் என் மனதில் கிளம்பிற்று. மதுரபாபு அதற்கு ஏற்பாடு செய்தனர். அந்தப் பண்டகசாலையிலிருந்து சாதுக்கட்கு உணவுப் பொருள்களும் விறகும் பிறவும் கொடுக்கப்பட்டன.

"தங்க சரிகைக் கரைபோட்ட ஒரு மிக விலையுயர்ந்த அங்கியை அணிந்து கொண்டு, வெள்ளி ஹுக்காவில் புகை குடிக்கவேண்டும் என்ற எண்ணம் ஒரு நாள் என்னிடம் உதித்தது, மதுரபாபு புதிய அங்கியையும் ஹுக்காவையும் எனக்கு அனுப்பிவைத்தார். நான் அங்கியை அணிந்துகொண்டேன், அந்த ஹுக்காவில் பலவகையாகப் புகை குடித்தேன். ஒரு சமயம் இப்படிச் சாய்ந்துகொண்டும், மறு சமயம் அப்படிச் சாய்ந்துகொண்டும், ஒரு சமயம் தலையை உயரே வைத்துக்கொண்டும், மறு சமயம் தலையைக் கீழே வைத்துக் கொண்டும் புகை குடித்தேன் பின் எனக்குள்ளே சொல்லிக்கொண்டதாவது: 'ஓ மன்மே, வெள்ளி ஹுக்கா ஒன்றில் புகை குடிப்பது என்று அவர்கள் சொல்லுவது இதுவே.' உடனே அதைத் துறந்துவிட்டேன், என் உடலின் மீது அந்த அங்கியைப் பின்னும் சில நிமிஷங்கள் வைத்திருந்தேன், பிறகு

அதை எடுத்தெறிந்தேன். நான் அதைக் காலின் கீழ் வைத்து மிதிக்கவும், அதின்மீது துப்பவும் தொடங்கி, 'இது விலையுயர்ந்த அங்கிதான். ஆனால் இது ஒரு மனிதனது ரஜோ குணத்தை வளர்க்கத்தான் செய்யும்' என்று சொன்னேன்."

ராக்கால் என்பவர் பிருந்தாவனத்திலே பலராமரோடு தங்கிக்கொண்டிருந்தார். முதலில் அந்த க்ஷேத்திரத்தைப் பற்றிப் புகழ்ந்து அவர் நல்ல கடிதங்கள் எழுதியிருந்தார். அவர் ம—விற்குப் பின்வருமாறு எழுதியிருந்தார்; "எல்லா இடங்களிலும் இது மிகச் சிறந்தது. தயவு செய்து இங்கே வந்து பாருங்கள். மயில்கள் சுற்றி ஆடுகின்றன; இங்கு ஒருவன் எப்போதும் கேட்பதும் காண்பதும் சமய சம்பந்தமான பாடலும் ஆடலும்தான், தெய்விக இன்பம் ஓயாது பெருகிக்கொண்டே இருக்கிறது." ஆனால் பின்னால் இராக்கால் சுரங்கண்டு படுத்த படுக்கையாய்க் கிடந்தார். ஸ்ரீராமகிருஷ்ணர் அவரைப்பற்றிப் பெருங்கவலை கொண்டார், அவர் நோய் தீர்ந்து எழுவதற்காகத் தேவிக்குப் பூஜை நடத்த நேர்ந்துகொண்டார். ஆதலால் ராக்காலைப் பற்றிப் பேசத் தொடங்கினர்.

குருதேவர்: "எனக்குக் கால் பிடித்துக்கொண்டு இங்கே உட்கார்ந்திருந்தபோது இராக்காலுக்கு முதல் முதலாகப் பாவகநிலை (முதிர்ந்த பக்தி, உணர்ச்சிப் பெருக்கம், ஆனந்த பரவசம், சமாதி—இந்த நிலை, ஈசனுக்குத் தன்னை ஒரு குழந்தையாகவோ வேறு உறவு கொண்டோ பக்தி செய்யும் போது, பாவனையின் முதிர்ச்சியால் வரும் ஒரு நிலை) உண்டாயிற்று. ஒரு பாகவத பண்டிதர் அறையிலே பாகவதப் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தார், ராக்கால் அவருடைய வார்த்தைகளைக் கூர்ந்து கேட்கும்போதே, இடையிடையே நடுக்கமடைந்தான். பிறகு அவன் முற்றிலும் அமைதியாயிருந்தான்.

"இரண்டாவது முறை பாவக நிலை அவனுக்கு உண்டானது பலராம் போஸ் என்பவரது வீட்டிலே, அந்த நிலையில் நிமிர்ந்து உட்கார்ந்திருக்க அவனுக்கு இயலவில்லை; அவன் தரையிலே மட்டமாகப் படுத்துக் கிடந்தான். ராக்கால் ஸகுணப் பிரம்ம வட்டாரத்தைச் சேர்ந்தவன். யாரேனும் நிர்க்குணத்தைப்பற்றிப் பேசுவாராயின் அவன் இடத்தைவிட்டுப் போய்விடுகிறான்.

"அவனுக்கு உடல் சரியாகும்போது தேவிக்குப் பூஜை நடத்துவதாக நான் நேர்ந்துகொண்டேன். அவன் தன் வீட்டையும் உறவினரையும் துறந்து, முற்றிலும் என்னிடம் சரண்புகுந்துவிட்டான். நானே அவனை இடையிடையே அவனது மனைவியிடம் அனுப்பி வைத்தேன். அவனிடம் அப்போதும் ஒரு சிறிது போக இச்சை இருந்தது.

(ம—என்பவரைச் சுட்டிக்காட்டி) "பிருந்தாவனத்திலிருந்து அவருக்கு ராக்கால் எழுதின கடிதத்தில், அது பெருமையுற்ற தலம் என்றும், மயில்கள் சுற்றியாடுகின்றன என்றும் கூறியிருக்கிறான். இப்போது அந்த மயில்களே அவனைக்

கவனித்துக் கொள்ளட்டும். அவன் என்னை உண்மையாகவே தப்ப வழியில்லாத ஒரு நிலையில் வைத்துவிட்டான்.

"நான் ஏன் சிறுவர்கள்மீது அவ்வளவு பிரியமாயிருக்கிறேன் தெரியுமா? அவர்களைக் காமமும் காஞ்சனமும் இன்னும் கறைப்படுத்தவில்லை. அவர்கள் நித்திய சித்தர் எனும் வகுப்பைச் சேர்ந்தவர் என்பதைக் காண்கிறேன்.

"நரேந்திரர் முதலில் இங்கே வந்தபோது, அவன் அழுக்கான ஆடைகளை அணிந்திருந்தான்; ஆனால் அவனுடைய கண்களும் முகமும் உள்ளே உயர்வு இருப்பதை அறிவித்தன. அச்சமயம் அவனுக்குப் பல பாட்டுக்கள் தெரியவில்லை. அவன் ஒன்றிரண்டு பாடினான்: 'இன்னொரு முறையும், மனமே நமது சொந்த இருப்பிடம் மீள்வோம்' என்பதும், 'நாத, என் வாழ்நாள் யாவும் முற்றும் வீணாக அவ்வாறு கழியவேண்டுமோ?' என்பதும்தான்.

"அவன் இங்கு வரும்போதெல்லாம், அறை நிறைய மக்கள் இருப்பினும், அவனொடு மட்டும் பேசுவேன். அவன் என்னிடம் 'அவர்களோடும் தாங்கள் பேசும்படி வேண்டுகிறேன்' என்பான்; பின் பிறரொடும் பேசுவேன்.

"நான் அவனைக் காணப் பைத்தியங்கொண்டு, யது மல்லிக் என்பவரது பூஞ்சோலை மாளிகையில் அவனுக்காக அழுதேன். போலநாத் என்பவரது கையைப் பிடித்துக்கொண்டு இங்கும் அழுதேன். 'ஐயன்மீர், தாங்கள் ஒரு வெறும் காயஸ்தப் பையனுக்காக அம்மாதிரி நடந்துகொள்ளக் கூடாது' என்று போலநாத் சொன்னார். ஒருநாள் அந்தத் 'தடிப் பிராமணன்' (குருதேவரது அடியாரான பிராண கிருஷ்ணரின் கேலிப் பெயர்) என்னிடம் கையைக் கூப்பிக்கொண்டு நரேந்திரனைப்பற்றிச் சொன்னதாவது: 'சுவாமி, அவனிடம் மிகக் கொஞ்சப் படிப்பு உள்ளது; அவனுக்காகத் தேவரீர் ஏன் இவ்வளவு பரபரப்பு அடைய வேண்டும்?"

"இந்தச் சிறுவர்களும் மற்றவர்களாகிய நீங்களும் என்னைக் காணவரும் காரணம் இன்னதென நீங்கள் எனக்குச் சொல்ல முடியுமா? என்னிடம் ஏதேனும் இருக்கவேண்டும்; இல்லாவிடில் நீங்கள் எல்லோரும் அம்மாதிரி இழுக்கப்படுவதாக, அம்மாதிரி கவரப்படுவதாக் ஏன் உணரவேண்டும்?

"ஒரு நாள் சிக்கோரிலுள்ள இருதயரது வீட்டிற்குப் போனேன். அங்கிருந்து சியாம் பசாருக்கு என்னை அழைத்துச் சென்றனர். ஏழுநாள் இரவும் பகலும் பெருங்கூட்டமாக ஜனங்கள் என்னைச் சூழ்ந்துகொண்டிருந்தனர். அவ்வளவு கவர்ச்சி! அல்லும் பகலும் கீர்த்தனமும் ஆட்டமும் தவிர வேறில்லை, ஜனங்கள் வரிசையாகச் சுவர்களின்மீது நின்றார்கள். மரங்களின்மீதும் இருந்தனர். ஏழு தடவை செத்து மறுபடியும் பிழைத்தெழும் ஒரு மனிதர் வந்திருப்பதாக எங்கும் ஒரு வதந்தி பரவினது. (செத்துப் பிழைத்தல் என்பது குருதேவர் சமாதியடைவதையும் அதனின்றும் சாதாரண நிலையைப் பின் அடைவதையும் குறித்து.) இருதயன் வெயிலினால் எனக்கு மயக்கம் வந்துவிடுமோ என்று பயந்து, கூட்டத்திலிருந்து என்னை ஒரு நெல் வயலுக்கு இழுத்துக்கொண்டு

வருவான். அங்கும் கூட்டம், வரிசையாகச் செல்லும் எறும்புகளைப்போன்று எங்களைப் பின்தொடர்ந்துவரும். இருதயன் அவர்களைத் திட்டி, 'இம்மாதிரி ஏன் எங்களைத் தொந்தரவு செய்கிறீர்கள்? நாங்கள் ஒருக்காலும் கீர்த்தனம் கேளாதவர்களா?' என்று கேட்பான்.

"தொலையிலுள்ள் கிராமங்களிலிருந்து ஜனங்கள் திரண்டு வந்தனர். அவர்கள் அங்கே இரவைக் கழிக்கவும் செய்தனர். சியாம் பசாரில் தெய்விகக் கவர்ச்சி இன்னதென அறிந்தேன். பகவான் பூலோகத்தில் தாமே அவதரிக்கும் போது, தமது யோக மாயையாகிய தெய்விக சக்தியின் துணையால் ஜனங்களைக் கவர்கின்றனர். ஜனங்கள் மந்திரவசப்பட்டவர்போல் ஆகின்றனர்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் முகர்ஜி சகோதரரிடம் பேசலாயினர். மூத்தவராகிய மஹேந்திரர் சொந்த வியாபாரத் தொழில் நடத்திவந்தார். இளையவரான பிரியநாத் 'எஞ்சினீயர்' வேலை பார்த்து வந்தார். தமது சீவனத்திற்காகச் சிறிது தேடி வைத்துக்கொண்டபின், தமது வேலையை விட்டுவிட்டார். மகேந்திரர்க்கு வயது முப்பத்தைந்தோ முப்பத்தாறோ ஆயிற்று. சகோதரர்கள் இருவர்க்கும் வீடுகள் கிராமத்திலும் கல்கத்தா நகரிலும் இருந்தன.

குருதேவர்(சிரித்துக்கொண்டே): "உமது ஞானம் சற்றே விழிப்படைந்திருப்பதனால் சும்மா இருக்கவேண்டாம். முன் செல்லும். சந்தன மரக் காட்டுக்கு அப்பால் அதைவிட விலையுயர்ந்த மற்றப் பொருள்கள் உள்ளன. வெள்ளிச் சுரங்கங்கள், தங்கச் சுரங்கங்கள் முதலியன."

பிரியநாத்(சிரித்துக்கொண்டே): "ஐயன்மீர், எமது கால்களில் விலங்குள்ளதே. எங்களால் முன் செல்ல இயலவில்லையே."

குருதேவர்: "கால்களில் விலங்கு இருந்தால் என்ன? முக்கியமானது மனதுதானே. பந்தம் மனத்தைச் சேர்ந்தது, முக்தியும் மனத்தைத் சேர்ந்தது."

பிரியநாத்: "ஆனால் மனம் எனக்கு அடங்கவில்லையே."

குருதேவர்: "அது எப்படி? அப்பியாச யோகம் என்பதொன்று உண்டு. அப்பியாசத்தால் அடையும் யோக நிலை அது. அப்பியாசத்தைத் தொடர்ந்து செய்து வாரும்; நீர் எந்த வழியில் அதைச் செலுத்தினாலும் உமது மனம் அவ்வழியே செல்வதைக் காண்பீர்."

அப்போது இருட்டும் சமயம், கோயிலிலே மாலைப் பூஜைக்காக உபயோகிக்கும் மணிகள் தாளங்கள் முதலிய கருவிகளின் ஒலி காதில் விழுந்தது. குருதேவர் பாபுராமிடம் "என்னோடு காளி கோயிலுக்கு வா" என்றார். அவரும் பாபுராமும் கோயிலை நோக்கிப் புறப்பட்டனர்; ம—வும் கூட வந்தனர். ஹரிஷ் தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும், குருதேவர், "இதென்ன அவன் ஆனந்த பரவச நிலையில் இருக்கின்றானா?" என்று சொன்னார்.

குருதேவரும் அடியார்களும் முற்றத்தின் வழியாகப்போய், ராதா காந்தரது கோவிலுக்கு முன்பே ஒரு நிமிஷம் நின்று, பூஜையைக் கவனித்தனர். பின்

அவர்கள் காளிகோயிற்குச் சென்றனர். கை கூப்பிக்கொண்டே குருதேவர் தேவியிடம் "தாயே! தேவி! பிரம்மமயீ!" என்று துதித்தனர்.

கோயிலுக்கு முன்னுள்ள உயர்ந்த மேடையை அடைந்து, அவர் திருவுருவத்தின் முன்பு தாழ்ந்து பணிந்தார். ஆரதி நடந்துகொண்டிருந்தது. அவர் கோயிற்குள் புகுந்தார். தேவிக்கு வீசினர்.

மாலை வழிபாடு முடிந்தது, அடியார்கள் தேவியின்முன் பணிந்தனர். அன்று அமாவாசை இரவு. குருதேவர் ஞான நிலையை அடைந்தார். மெல்ல மெல்ல அந்த நிலை ஆழ்ந்த பரவச நிலையாக முறுகிற்று. அவர் குடிவெறியனைப் போல் தலை சுழன்றவராய், பாபுராமின் கையைப் பற்றிக்கொண்டே தமது அறைக்குத் திரும்பினர்.

மேற்குத் தாழ்வாரத்திலே ஒரு விளக்கு ஏற்றப்பட்டது. குருதேவர் சில நிமிஷங்கள் அங்கே உட்கார்ந்துகொண்டே "ஹரி ஓம்! ஹரி ஓம்! ஹரி ஓம்!" என்று ஓதினர், வேறு தந்திர சாஸ்திர மந்திரங்களையும் உச்சரித்தார். உடனே அவர் அறைக்கு மறுபடியும் சென்று, கிழக்கு முகமாகச் சிறிய கட்டிலில் வீற்றிருந்தார். அவர் அப்போதும் தெய்விக ஊக்கத்தில் முற்றும் மூழ்கியவராய் இருந்தார். அவர் தேவியை நோக்கிப் பின்வருமாறு பேசலானர்: "அம்மே, நான் முதலில் பேசவேண்டும்; பின் நீ அப்படி நடக்கவேண்டும்— இது பேதமையன்றே? பேசுதல் என்பதன் பொருள்தான் என்ன? அது ஓர் அடையாளமே தவிர வேறெது? ஒருவன் 'நான் உண்பேன்' என்கிறான். இன்னும் இன்னொருவன் 'மாட்டேன், நான் அதைக் கேட்கமாட்டேன்' என்கிறான். சரி, தாயே, நான் உண்ணமாட்டேன் என்று சொல்லியிருபபதாகவே வைத்துக்கொள்வோம்; அப்போதும் பசியாயிருப்பதை யான் உணரமாட்டேனா? ஒருவன் உரக்கப் பிரார்த்தித்தால் மட்டும் நீ கவனித்துக்கேட்பாயா? உள்ளே ஒருவனுக்குத் துடிப்புண்டானால் அதைக் கவனிக்கமாட்டாயா? இது என்றைக்கேனும் நடக்கக் கூடியதாகுமா? நீ இருக்கிறபடியே இருக்கிறாய். அப்படியானால், நான் ஏன் பேசுகிறேன்? நான் ஏன் பிரார்த்திக்கிறேன்? நீ என்னை ஆட்டி வைக்கிறபடியே நான் ஆடுகிறேன். ஆ! எவ்வளவு புத்திக் குழப்பம்! நீ என்னைப் புத்தியினால் ஆராயச் செய்வதேன்?"

ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவ்வாறு கடவுளோடு பேசிக்கொண்டிருக்கும்போது, அடியார்கள் ஆச்சரியத்தில் மூழ்கியவராய் அவருடைய வார்த்தைகளை உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தனர். குருதேவருடைய கண்கள் அவர்களை நோக்கின.

குருதேவர்(அடியார்களிடம்): "ஈசனைக் காண ஒருவன் நல்ல பூர்வ வாசனைகள் பெற்றிருக்கவேண்டும். இம்மையிலோ இன்னொரு வாழ்விலோ ஏதாவது ஒருவகையான தவம் செய்திருக்கவேண்டும். ஏதேனும் கட்டாயம் செய்திருக்கவேண்டும்."

ஹாஸ்ரா என்பவர் அறைக்குட் புகுந்தார், சென்ற இரண்டு ஆண்டுகளாகக் கோயிற் பூஞ்சோலையிலே அவர் ஸ்ரீராமகிருஷ்ணரோடு வாழ்ந்துவந்

திருக்கிறார். அவர் முதன் முதலாகக் குருதேவரைச் சந்தித்தது, குருதேவரின் உறவினரான இருதயரது வீட்டில் சிக்கோரில் 1880-ம் ஆண்டிலே. ஹாஸ்ராவின் பிறந்த ஊர் சிக்கோருக்கு அருகேயுள்ளது; அவருக்கு அங்கே கொஞ்சம் சொத்தும் உண்டு. அவர்க்கு ஒரு மனைவியும் மக்களும் இருந்தனர். சிறிது கடனும் இருந்தது. இளம் பருவமுதலே அவர்க்குத் துறவில் விருப்பம் ஏற்பட்டிருந்தது; அதனால் அவர் சாதுக்களையும் அடியார்களையும் நாடுவார். குருதேவர் அவரைத் தம்மோடு தக்ஷிணேசுவரத்தில் வாழும்படி கேட்டுக்கொண்டார்; அவர்க்கு அவசியமாக வேண்டியவற்றை அளிக்க ஏற்பாடு செய்திருந்தார். ஹாஸ்ராவின் மனத்தே தெளிவுபடாத ஞான நிலைகள் கலந்து குழம்பிக்கிடந்தன. அவர் ஞான நெறியைப் பின்பற்றுவதாகப் பாவனை பண்ணினார்; ஸ்ரீ ராமகிருஷ்ணரது பக்தி நிலையையும், இளைஞரான அடியார்கட்காக அப்பெரியார் பட்ட துயரத்தையும் முறையானவையென ஒப்புக் கொள்ளமாட்டார். இடையிடையே அவர் குருதேவரை ஒரு மகாத்மாவாக நினைப்பார்; ஆனால் மறு சமயம் அவரை ஒரு சாதாரண மனிதராகக் கருதி அலக்ஷியமும் செய்வர். அவர் தமது பொழுதிற் பெரும்பாகத்தை ஜெப மாலையை உருட்டுவதிற் கழிப்பார்; ராக்காலையும் மற்ற சிறுவர்களையும் அப்பழக்கத்தின்மீது பராமுகமாக இருந்ததற்காகக் குறை கூறுவார். சமய ஆசாரங்களைப் பலமாக ஆதரித்துப் பேசுவார்; ஆசாரமே எல்லாம் என்று சாதிப்பார். அவர்க்கு வயது அப்போது ஏறக்குறைய முப்பத்தெட்டு.

ஹாஸ்ரா உள்ளே வந்ததும், குருதேவர் ஒரு சிறிது பாவக நிலையில் ஆழ்ந்தவராகி, அந்நிலையிலேயே பேசத் தொடங்கினர்.

குருதேவர்(ஹாஸ்ராவிடம்): "நீர் செய்து வருவது கொள்கைப்படி சரியானதுதான், ஆனால் அக் கொள்கையை உபயோகப்படுத்தும் முறை முற்றிலும் சரியானதன்று, ஒருவனையும், ஒரு புழுவையேனும், குறைகூற வேண்டாம். ஈசனிடம் பக்திக்காகப் பிரார்த்திப்பதுபோல, எவரையும் குற்றங் கூறுத தன்மைக்காகவும் பிரார்த்தியும்."

ஹாஸ்ரா: "பக்தி வேண்டும் என்னும் பிரார்த்தனைக்கு ஈசன் செவி சாய்ப்பதுண்டா?"

குருதேவர்: "நிச்சயமாக உண்டு. அதைப்பற்றி நூறுமுறை உறுதி கூறுவேன். ஆனால் பிரார்த்தனை உண்மையாயும் மனப்பூர்வமாயும் இருக்க வேண்டும்; உலகப்பற்றுள்ள மக்கள் மனைவி மக்கட்காக அழுவதுபோல, ஈசனுக்காக அழுகின்றனரா? ஒருவனது மனைவிக்கு நோய் கண்டது. அவள் நோய் தீர்ந்து எழமாட்டாள் என்று அவன் நினைத்தான்; அவனது உடல் நடுங்கத் தொடங்கிற்று, மூர்ச்சையாகும் நிலையை அடைந்தான். இம்மாதிரி ஈசனுக்காகக் கசிபவர் யார்?"

ஹாஸ்ரா குருதேவரது பாத தூளைப்பெற எத்தனித்தார்.

குருதேவர்(கூசிக்கொண்டு): "இது ஏன்?"

ஹாஸ்ரா: "தம்மோடு என்னைப் பிரியமாக வாழ வைத்திருக்கும் ஒரு வர்து பாத தூளி யான் பெறக்கூடாதா?"

குருதேவர்: "ஈசனைத் திருப்திபண்ணும்; ஒவ்வொருவரும் திருப்தி யடைவர். அவன் மகிழ்ச்சியடைந்தால், உலகமும் மகிழும்."

(ஹாஸ்ராவைப் பார்த்து): ஒரு பூரண ஞானி, ஞானம் பெற்ற பின்னும் உலகத்தாரை ஒழுங்கு படுத்துதற்காக (லோக சிக்ஷைக்காக)ப் பூஜை முதலான கிரியைகளைப் பின்பற்றி வருவார். நான் காளி கோயிற்குச் செல்கிறேன்; அதனால் பிறரும் அதையே செய்கின்றனர். மேலும், அம்மாதிரியான கிரியைகளை இயற்றும் பழக்கம் ஒருவனுக்கு ஏற்பட்டுவிட்டால், அவற்றைச் செய்யாதபோது அவன் பரபரப்படைவான்,

"ஒன்றைப்பற்றிய அறிவு உள்ளவரை, பலவற்றைப்பற்றிய அறிவும் இருக்கும். சாஸ்திரப் படிப்பால் மட்டும் நீ என்ன பெறப்போகின்றாய்? சாஸ்திரங்களிலே மணலும் சருக்கரையும் சேர்ந்ததுபோன்ற கலவையே உள்ளது. மணலினின்றும் சருக்கரையைப் பிரிப்பது மிகக் கடினம். ஆதலால் சாஸ்திரங்களின் ஸாரத்தைக் குருவிடமிருந்தோ ஒரு சாதுவிடமிருந்தோ கற்றுக்கொள்ள வேண்டும். அதன்பின் ஏன் ஒருவன் புத்தகங்களைப்பற்றிக் கருதவேண்டும்?

(அடியார்களைப் பார்த்து): "அறியவேண்டியவற்றையெல்லாம் திரட்டி வைத்துக்கொண்டு, பின் உள்ளே மூழ்கவேண்டும். ஒரு குளத்தில் ஓர் இடத்தே ஒரு பானை உள்ளே விழுந்துவிட்டதாக வைத்துக்கொள்வோம், அந்த இடத்தை இதுவெனத் தெரிந்து, அங்கே மூழ்க வேண்டுமன்றே?

"குருவினிடமிருந்து சாஸ்திரங்களின் சாரத்தைத் தெரிந்துகொண்டு, பின் சாதனம் பழகவேண்டும். ஒருவன் சரியானபடி ஞான சாதனம் பழகுவானையின் ஈசனை நேராகக் காண்பான். ஒருவன் உள்ளே மூழ்கும்போதுதான், சாதனம் ஒழுங்காகப் பின்பற்றப்பட்டதாகும். சாஸ்திரங்களிலுள்ள வார்த்தைகளைப் பற்றி விசாரிப்பதனால் மட்டும் ஒருவன் அடையும் லாபம் யாது? ஆ! என்ன முட்டாள்தனம்! நெறியைப்பற்றி அறிந்துகொள்வதிலே உயிர்போகும் அளவிற்குப் புத்தியால் விசாரிக்கின்றனர். அவர் ஒருக்காலும் மூழ்குவதில்லை, என்ன பரிதாபம்!

"ஈசன் பற்பல மார்க்கங்கட்குரிய சாதனங்களையெல்லாம் பழகும்படி செய்தான். முதலிலே புராணங்களின்படி, பின் தந்திர சாஸ்திரங்களின்படி பழகினேன். வேதற்களிற் கூறப்பட்டுள்ள சாதனங்களையும் பின்பற்றினேன். முதலில் பஞ்சவடியில் சாதனம் பண்ணினேன். துளசிச் செடிகளால் ஒரு தோட்டம் அமைத்து அதற்குள்ளே உட்கார்ந்து தியானம் பண்ணுவது வழக்கம். சில சமயம் பேராவலோடும் அன்போடும் 'தாயே! தாயே!' என்று அழுவேன்; சில சமயம் 'ராம! ராம!' என்று கண்ணீர் விடுவேன்.

"தந்திர சாதனங்களை வில்வமரத்தின் அடியில் பழகினேன். அக்காலம் புண்ணியமான துளசிச் செடிக்கும் வேறெந்தச் செடிக்கும் உள்ள வேறு

பாட்டை எனக்கு அறிய முடியாது. சில சமயம் நான் நாய்மீது சவாரி செய்து, அதற்கு 'லூச்சி'யை ஊட்டி, அதில் ஒரு பாகத்தை நானும் உண்பேன். உலக முழுவதிலும் ஈசனே நிறைந்திருந்ததை யான் நேராகக் கண்டேன்.

"வேதங்களிலுள்ள சாதனங்களைப் பழகும்போது நான் சன்னியாசி யானேன். யான் திறந்த மண்டபத்திற் படுத்துக்கொண்டு, இருதயனிடம் 'நான் ஒரு சந்நியாசி. எனது சாப்பாட்டை இங்கே உண்ணேன்' என்று சொல்வேன்.

[கோயிற் பூஞ்சோலையிலே கங்கைக்கு இறங்கும் படிகளை அடுத்து ஒரு திறந்த மண்டபம் உள்ளது. வைதிக ஹிந்து சம்பிரதாயப்படி ஒரு சன்னியாசி ஒரு வீட்டிற்குள் வாழ்வது முறையன்று.]

"நான் கடவுளைக் காணுவிடில் என்னுயிரை மாய்த்துக்கொள்வேன் என்று தேவியிடம் சபதம் பண்ணிக்கொண்டேன். நான் அவளிடம், 'அம்மே, யான் ஒரு பேதை. வேதங்களிலும் புராணங்களிலும். தந்திரங்களிலும் வேறு சாஸ்திரங்களிலும் உள்ளதை எனக்குப் போதித்தருள்வாயாக' என்று சொன்னேன். தேவி எனக்கு அளித்த பதிலாவது: "வேதாந்தத்தின் ஸாரமாவது, பிரம்மமே சத்தியம் ஜகத்து மித்தையே என்பது! கீதையின் ஸாரம் தெரிய வேண்டின், 'கீதா, கீதா' என்று தொடர்ந்து பத்துமுறை சொல்க. அப்போது 'தாகி' (தியாகி) என்னும் வார்த்தை வரும்; அது தியாகத்தை (துறவை)க் குறிக்கின்றது.

"ஈசனை உணர்ந்தபின், வேதங்களும் வேதாந்தமும் புராணமும் தந்திரமும் எவ்வளவு தொலை கீழே உள்ளன! (ஹாஸ்ராவிடம்) சமாதி நிலையில் என்னால் 'ஓம்' என்று உச்சரிக்க முடியாது. அதன் காரணம் யாது? சமாதி நிலையினின்றும் வெகு தொலை கீழே இறங்கினாலன்றி என்னால் 'ஓம்' என்னும் மந்திரத்தை உச்சரிக்க இயலாது.

"ஈசனை நேரே தெரிசித்த பின்பு, சாஸ்திரங்கள் கூறுகிறபடி, ஒருவனுக்கு உண்டாகவேண்டிய அனுபவங்கள் அனைத்தையும் யான் பெற்றேன். ஒரு குழந்தைபோலவும் பைத்தியக்காரனைப்போலவும், பேயைப் போலவும், ஒரு சடப்பொருளைப் போலவும் நடந்துகொண்டேன்.

"சாஸ்திரங்கள் சொல்லும் காட்சிகளை யான் கண்டேன். சில சமயம் உலக முழுவதும் தீப்பொறி மயமாயிருப்பதைக் கண்டேன். சில சமயம் உலகம் ஒரு பாதரசக் குளமாய் இருந்ததுபோல், திசைகள் யாவும் சோதியோடு பிரகாசிப்பதைக் கண்டேன். சில சமயம் உருக்கி வார்த்த வெள்ளியால் உலகம் ஆக்கப்பட்டிருப்பதுபோலக் கண்டேன். இன்னும் சில சமயம் திசைகள் எல்லாம் எரியும் மத்தாப்புக் சுச்சிகளின் ஒளியால் விளங்குவதாகக் கண்டேன். ஆக, எனது அனுபவங்கள் சாஸ்திரங்களிற் கூறப்பட்டுள்ளவையோடு ஒத்திருப்பதை நீர் காண்கிறீர்.

"இன்னும் ஈசனே ஜீவனுகவும் ஜகத்தாகவும் இருபத்து நான்கு தத்துவங்களாகவும் ஆகியிருக்கும் காட்சியும் எனக்கு அருளப்பட்டது. அது அனுலோம விலோம முறையைப் போன்றது. விரிவும் ஒடுக்கமும் என்ற ஒழுங்கைப் போன்றது. (அதாவது ஈசனே படைப்புக் காலத்துப் பிரபஞ்சமாகப் பரிணமிக்கிறான். பிரளய காலத்து நாம ரூபங்கள் மீண்டும் அவனிடம் மருவி யொன்றுகின்றன என்பது.)

"அந்நாளில் ஈசன் என்னை என்ன நிலையில் வைத்திருந்தான் என்பது! ஓர் அனுபவம் முடிந்ததும் இன்னொன்றுக்கு உட்படுவேன்.

"ஈசனைத் தியானத்தில் சமாதி நிலையில் யான் காண்பேன்; என்மனம் புற உலக உணர்ச்சியை மீண்டும் பெற்றதும், அதே ஈசனைக் காண்பேன். கண்ணடியில் ஒரு புறத்திற் பார்க்கும்போது, பகவானை மட்டும் காண்பேன். மறுபுறத்தில் நோக்கும்போதும் அதே பகவானைக் கண்டேன்."

அடியார்கள் முழுக்கவனத்தோடும் இவ்வார்த்தைகளை உற்றுக்கேட்டு வந்தனர்.

முகர்ஜி சகோதரர்கள் குருதேவரை வணங்கினர். அவர்களுடைய வண்டி அந்த அறைக்கு வடக்கேயுள்ள தாழ்வாரத்திற்கு அருகே தயாராயிருந்தது. குருதேவர் வடக்கை நோக்கி நின்றனர். அவர்க்கு இடப்பக்கத்தே கங்கையும், அவர்க்கு முன்னுல் வாத்திய மண்டபமும் தோட்டமும் அரண்மனையும் இருந்தன; அவர்க்கு வலப்பக்கத்தில் வெளி வாயிலுக்குச் செல்லும் பாதை இருந்தது. இரவு இருட்டாயிருந்தது; ஓர் அடியார் வந்தவர்கட்கு வழி காட்டுவதற்காக 'ஒரு 'ராந்தலைக்' கொண்டுவந்திருந்தனர். ஒவ்வொருவராக அடியார்கள் குருதேவரது திருவடிகளைத் தொட்டு வணங்கினர். குதிரைகளால் இழுக்க முடியாத அளவிற்கு வண்டியிற் பாரம் இருந்தது. குருதேவர் "வண்டியில் அளவுக்கு மிஞ்சிய மனிதர்கள் உள்ளனரன்றே?" என்று விசாரித்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் நின்றுகொண்டே இருந்தனர். வண்டி புறப்பட்டதும் அடியார்கள் பக்தவத்சல மூர்த்தியை (அடியார்கள்மீது பேரன்பும் அருளும் வாய்ந்த குருதேவரை)த் திரும்பிப் பார்த்தனர்.

வெள்ளி, செப்டம்பர் 26, 1884

ஸ்ரீ ராமகிருஷ்ணர் கல்கத்தாவிற்கு வந்திருந்தனர். அன்று துர்க்க பூஜை யெனும் பெருவிழாவின் முதல்நாள்; நகரத்திலிருந்த இந்துக்கள் அதைக் கொண்டாடி வந்தனர். ஆதர் என்பாரது வீட்டிலுள்ள தேவியின் திருவுருவத்தைக் காணக் குருதேவர் விரும்பினர். பிராம்மோ அடியாரான சிவநாதரையும் காண அவர் பிரியப்பட்டார்.

பகலில் ஏறக்குறைய உச்சிவேளை. ம— கையிற் குடைபிடித்துக்கொண்டு பிராம்மோ சமாஜக் கோயிலின் முன்புள்ள நடைபாதை வழியாக வந்துகொண்டிருந்தார். இரு மணி நேரம் ஆகியும், குருதேவர் வந்து சேரவில்லை. இடை

யிடையே ம— வைத்தியர் மஹால் நபீசரின் மருந்துச் சாலையின் படிகளில் தரைமீது அமர்ந்து, பூஜையைக் கொண்டாடி வரும் சிறுவர் கிழவர் முதலியோரது இன்பத்தையும் களிப்பையும் கவனித்து வரலானார்.

மணி மூன்றுக்குச் சற்றே பின்பு குருதேவரது வண்டி விரைந்து வந்தது. ஸ்ரீராமகிருஷ்ணர் கீழிறங்கியதும், அவர் கைகூப்பிக்கொண்டே பிரம்ம சமாஜத்தாரது கோயிலை வணங்கினர். ஹாஸ்ரா முதலான அடியார்கள் ஒரு சிலர் அவருடன் இருந்தனர். ம— குருதேவர் முன்பு வணங்கி, அவரது திருவடிகளைத் தொட்டனர். தாம் சிவநாதருடைய வீட்டுக்குச் செல்லுவதைக் குருதேவர் அவர்க்கு அறிவித்தார். சில நிமிஷங்கள் சென்றதும், பிராம்மோ சமாஜத்தைச் சேர்ந்த பல அங்கத்தினர் வந்தனர்; அவரைச் சிவநாதரது வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். ஆனால் சிவநாதர் வீட்டில் இல்லை. சிறிது நேரத்திற்குப்பின் விஜயகோசுவாமி, மகால்நபீசர், முதலான பிராம்மோ தலைவர்கள் பலர் குருதேவரை வரவேற்று, பிராம்மோ கோயிலுக்குள் அவரை அழைத்துச் சென்றனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சந்தோஷமான நிலையில் இருந்தனர். அவர் பீடத்திற்குக் கீழே ஓர் ஆசனத்தில் அமர்த்தப்பட்டனர். அங்கே பிராம்மோ அடியார்களும் குருதேவர்க்கு முன்பு உட்கார்ந்தனர்.

குருதேவர்(விஜயரிடம் சிரிப்போடு): "மற்ற சமயங்களைச் சார்ந்தவர்க்கு உள்ளே வர அனுமதி இல்லையென்று நீர் ஒரு பலகையில் எழுதித் தொங்கவிட்டிருப்பதாக நான் கேள்விப்பட்டேன். நரேந்திரனும் என்னிடம் 'நீங்கள் பிரம்ம சமாஜத்திற்குப் போகக் கூடாது. சிவநாதரது வீட்டுக்குச் செல்லுங்கள்' என்று சொன்னான்.

"ஆனால் நாம் எல்லோரும் ஒரே ஈசனிடமே பிரார்த்தனை செய்கிறோம். பொருமையும் கெட்ட எண்ணமும் வேண்டாம். சிலர் ஈசற்கு உருவம் உண்டென்பர் (ஸாகாரம் ஈசன் என்பர்), சிலர் ஈசனை அருவம் (நிராகாரம்) என்பர். உருவத்தில் நம்பிக்கையுடையார் உருவமுள்ள ஈசனைத் தியானம் பண்ணட்டும் என்றும், அருவத்தில் நம்பிக்கையுடையார் அருவ ஈசனைத் தியானிக்கட்டும் என்றும் நான் சொல்கிறேன். நான் சொல்வதின் கருத்து யாதெனில், ஒன்றே சரியெனும் பிடிவாதம் நல்லதன்று. எனது மதம் மட்டும் உண்மையென்றும், மற்ற மதங்கள் உண்மையல்ல என்றும் பாவிப்பது நல்லதன்று. சரியான மனநிலை இதுவே; எனது மதம் சரி; ஆனால் மற்ற மதங்கள் சரியோ தப்போ, மெய்யோ பொய்யோ யான் அறியேன். நான் இவ்வாறு சொல்லுவதற்குக் காரணம் இது: ஒருவன் ஈசனது தரிசனம் பெற்றாலன்றி, ஈசனது உண்மையான இயல்பை அறிய முடியாது. கபீர்தாஸ் பின்வருமாறு சொல்வதுண்டு: 'உருவத்தோடு கூடிய கடவுள் (ஸாகாரப் பிரம்மம்) எனது தாய், அருவக் கடவுள் (நிராகாரப் பிரம்மம்) எனது தந்தை. எதை இகழ்வது? எதைப் புகழ்வது? தராசின் இரு தட்டுகளும் சம நிறையுடையன.'

"உண்மை எதுவென்பதை நீர் அறிவீரா? பலவிதமான முமூக்ஷுக்கட்கும் (முத்தியில் இச்சையுடையோர்க்கும்) பலவிதமான காலங்கட்கும் தேசங்கட்கும் ஏற்றவாறு ஈசன் பலவித மதங்களை ஏற்படுத்தியுள்ளான். எல்லாச் சித்தாந்தங்களும் அத்தனை பாதைகளேயாம்; ஆனால் ஒரு பாதை எவ்விதத்திலும் ஈசனுவதில்லை. இப் பாதைகளில் யாரேனும் ஒன்றை மனமுழுதும் நிறைந்த பக்தியோடு ஒருவன் பின்பற்றுவானுயின், உண்மையாகவே ஈசனை அடைவான். ஒருவன் ஏற்றுக்கொண்டுள்ள மதத்தில் பிழைகள் இருப்பதாகவே வைத்துக்கொள்வோம்; ஒருவனிடம் உண்மையான சிரத்தை இருக்குமாயின் ஈசனே அப்பிழைகளைத் திருத்தியருளுவான், பூரி க்ஷேத்திரத்திலுள்ள ஜகந்நாதப் பெருமானைத் தரிசிக்க மனமார ஆசைகொண்டு ஒரு மனிதன் புறப்பட்டுவிட்டதாகவும், தெற்கு முகமாகச் செல்வதற்குப் பதிலாக வடக்கு முகமாக வழிதவறி அவன் போய்விட்டதாகவும் வைத்துக்கொள்வோம். வழியில் அவனைச் சந்திக்கும் யாரேனும் ஒருவர் நிச்சயமாகவே அவனிடம் 'தோழரே, அவ்வழியில் போகாதீர். தெற்கு முகமாகப் போவீராக' என்று சொல்லுவார். அவன் விரைவிலோ தாமதமாகவோ ஜகந்நாதரை அடைவான்.

"மற்ற மதங்களிற் பிழைகள் இருப்பதானலும், அது நமது அலுவலேயன்று, இவ்வுலகிற்குச் சொந்தக்காரனுகிய ஈசன் அதைக் கவனித்துக் கொள்கிறுன். நமது கடமையாவது எவ்வாறுயினும் ஜகந்நாதரைத் தரிசிப்பதே. (பிராம்மோக்களைப் பார்த்து) நீங்கள் கொள்ளும் கருத்து மெய்யாகவே நல்லதுதான். நீங்கள் ஈசனை அருவமாகக் கூறுகிறீர்கள், அது மேன்மையானதே. கற்கண்டுப் பாகால் மூடப்பெறும் ரொட்டியை (மிஸ்ரி ரொட்டியை) நேராகவோ குறுக்காகவோ கடித்து உண்டாலும், அது தித்திப்பாகவே யிருக்கும்.

"ஈசனை வேதங்கள் ஸகுணமாகவும் (குணங்களோடு கூடியவனுகவும்) நிர்க்குணமாகவும் (குணங்களற்றவனுகவும்) கூறுகின்றன, நீங்கள் ஈசனை நிராகாரம் (அருவம்) என்று மட்டும் சொல்கிறீர்கள். இது ஒரு பக்கமாகப் பேசுவதாகும், ஆனல் இதைக் கவனிக்க வேண்டாம். அவனது வடிவங்களில் ஒன்றை உண்மையாகவே நீர் அறிவீராயின், அவனது மற்ற வடிவங்களையும் அறியும் திறமை பெறுவீர், ஈசனே அவற்றைப்பற்றிய அனைத்தையும் உமக்குச் சொல்லுவான்."

விஜயர் அன்றும் சாதாரண பிராம்மோ சமாஜத்தைச் சார்ந்தவரானுர். அந்த சமாஜத்திலே சம்பளம் பெற்றுவந்த ஒரு போதகராயிருந்து வந்தார்; ஆனல் அதன் சட்டதிட்டங்கள் எல்லாவற்றிற்கும் அவர் கீழ்ப்படிய முடியாதவரானுர். உருவங்கொள்ளும் ஈசனிடத்தும் நம்பிக்கையுள்ளவரோடு அவர் கலந்து வந்தார். இது அவர்க்கும் பிராம்மோ அதிகாரிகட்கும் இடையே தவருன அபிப்பிராயங்கள் உண்டாகக் காரணமாயிற்று. பிராம்மோக்களில் அநேகர் அவரது செயலை ஒப்புக்கொள்ளாது போனுர். குருதேவர் திடீரென விஜயரைப் பார்த்து, அவரோடு பேசத் தொடங்கினுர்.

குருதேவர்(விஜயரிடம் சிரிப்போடு): "ஈசனை உருவமுள்ளவராக நம்பு வாரோடு நீர் பழகிவந்ததற்காக அவர்கள் உம்மைக் குறை கூறுவதாக எனக் குத் தெரிகிறது. அது உண்மைதானே? எந்த நிலையிலும் அசைக்க முடி யாத உறுதியுள்ள அறிவு ஒரு பக்தனுக்குக் கட்டாயம் வேண்டும். கொல்லனது பட்டரையிலுள்ள பட்டடை (அடைகல்) போல அவன் இருக்கவேண்டும். அது சம்மட்டியால் ஓயாது அடிபட்டுக்கொண்டேயுள்ளது; எனினும் அது அசையா திருக்கிறது. தீயோர் உம்மை மிகக் கொடுமையாக நடத்தலாம். உம்மை அவ தூறுகப் பேசலாம்; ஆனால் நீர் ஈசனை உண்மையாகவே தேடுவீராயின், அவற்றையெல்லாம் பொறுத்துக்கொள்ளல்வேண்டும். துஷ்டர்கட்கு நடுவே யும் ஈசனைப்பற்றி நினைப்பது இயலாத காரியமா? பழங்கால ரிஷிகளைச் சற்றே நினைத்துப் பாரும். அவர்கள் காட்டிலே எல்லாப் பக்கங்களிலும் புலிகளும் கரடிகளும் மற்றக்கொடிய மிருகங்களும் சூழ்ந்துள்ளபோதும் ஈசனைத் தியா னித்து வருவதுண்டு. தீயாரிடம் புலி கரடிகளின் இயல்பே உள்ளது. உமக் குத் தீங்கு செய்தற்காக உம்மை அவர்கள் தொடர்ந்து வருவார்கள்.

"பின் சொல்லும் பல விஷயங்களைப்பற்றி ஒருவன் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். முதலில், பெருஞ் செல்வமும் தன் ஆட்சியின் கீழே பல மனிதர் களும் பெற்றுள்ள சொற்சக்தி வாய்ந்த ஒரு மனிதனைப்பற்றி. அவன் இச்சைப் பட்டால் உமக்குத் தீங்கு செய்ய முடியும்; அவனுடன் பேசும்போது நீர் ஜாக் கிரதையாயிருக்கவேண்டும். அவன் சொல்வதை நீர் ஒப்புக்கொள்ளவும் வேண்டியிருக்கலாம். இரண்டாவது, ஒரு நாயைப்பற்றி. அது உம்மைத் துரத்தும்போதோ, குலைக்கும்போதோ, நீர் அமைதியாக நின்று, சாந்தமாகப் பேசி, அதனைச் சமாதானப்படுத்த வேண்டும். மூன்றாவது, ஒரு காளையைப் பற்றி. அது கொம்புகளைத் தாழ்த்திக்கொண்டு உம்மை நோக்கி ஓடிவரும் போது, மென்மையான குரலிற் பேசி அதைச் சாந்தப்படுத்தவேண்டும். நாலாவது ஒரு குடிகாரன். நீர் அவனது கோபத்தைக் கிளப்புவீராயின், உமது குடும்பத்தில் பதினான்கு தலைமுறைகளின் பெயரைக் கூறி, உம்மை இழிவாகப் பேசுவான். நீர் அவனிடம், 'என்ன? மாமா! சுகமா!' என்று கேட்கவேண்டும். அப்போது அவன் நிரம்ப சந்தோஷம் அடைந்து, உம தருகே உட்கார்ந்து, புகை குடிப்பான்.

"ஒரு துஷ்டன் முன்னால் நான் ஜாக்கிரதையுள்ளவன் ஆகிறேன். சிலரிடம் ஒரு பாம்பின் இயல்பு உள்ளது; எச்சரிப்பில்லாமலே அவர்கள் உம்மைக் கடிப்பர். நீர் அக்கடிக்குத் தப்பவேண்டுமானால் வெகு தூரம் விவேகத்தால் ஆராய்ச்சி செய்யவேண்டும்; இல்லையேயாயின், உமது கோபம் அளவு கடந்து கிளம்பி, பதிலுக்குத் தீங்கு செய்யும் நிலைக்கும் வந்துவிடுவீர். இடையிடையே ஒரு சாதுவின் இணக்கமும் (சேர்க்கையும்) பெரிதும் அவசியமாகும். நித்தியம் அநித்தியம் இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை உணரும் திறமையை அது அளிக்கும்."

விஜயர்: "ஐயன்மீர், எனக்குப் பொழுது கிடைப்பதில்லை. இங்குள்ள எனது கடமைகளில் சிக்கிக்கொண்டுள்ளேன்."

குருதேவர்: "நீர் ஒரு சமயபோதகர், மற்றவர்க்கு விடுமுறை நாள்கள் உண்டு; ஆனால் ஒரு சமய போதகர்க்கு அப்படியல்ல. ஒரு ஜமீனை மேற்பார்ப்பவர் அதின் ஒரு பகுதியில் ஒழுங்கை ஏற்படுத்தியதும், ஜெமீன்தார் அவனை இன்னொரு பகுதிக்கு அனுப்புவார். அதுபோல, உமக்கும் ஓய்வு காலம் இல்லை." (எல்லோரும் சிரித்தல்)

விஜயர்(கை கூப்பிக்கொண்டு): "தேவரீர் அடியேனுக்கு ஆசீர்வாதம் அருளுவீராக."

குருதேவர்: "ஓர் அறிவீனரைப்பேரல் இப்போது நீர் பேசுகிறீர். பகவான் ஒருவரே ஆசீர்வதிப்பவர்."

விஜயர்: "எங்கட்கு ஏதேனும் போதனை அருளுவீராக."

குருதேவர்: "ஒருவர் சிரத்தையுடையவராகமட்டும் இருப்பாராயின் இவ்வுலகிலும் ஈசரைத் தரிசிக்க முடியும், 'யான்' 'எனது'—இதுவே (அறியாமை) அஞ்ஞானம். ஆனால் "ஈசா, எல்லாம் நீயே, உன்னதே"—இது ஞானம்.

"நான் மக்களை மனதால் துறக்கும்படி வேண்டுகிறேன். உலகத்தை விட்டுவிடும்படி அவர்களிடம் சொல்வதில்லை. ஒருவர் பற்றற்று உலகில் வாழ்ந்து, ஈசனைச் சிரத்தையோடு நாடுவாராயின், அப்போது ஈசனை அடையும் திறமையைப் பெறுவர்.

(விஜயரை நோக்கி) "என் கண்களை மூடிக்கொண்டு யான் ஈசன்மீது தியானம் பண்ணிவந்த காலமும் உண்டு. (இது பிராம்மோக்களது முறையைக் குறிக்கின்றது.) அப்போது எனக்குள் பின்வருமாறு சொல்லிக்கொள்வேன்: 'கண்ணை மூடிக்கொண்டு நினைக்கும்போதுதான் பகவான் உள்ளனரா? என் கண்களைத் திறந்துகொண்டு நாலாபக்கமும் பார்க்கும்போது, அவர் இல்லையா?' என்று. இந்நாளில் நான் கண்ணைத் திறந்துகொண்டு எங்கும் சுற்றிப் பார்க்கும்போது, பகவான் எல்லா உயிர்களிடத்தும் வசிப்பதைக் காண்கிறேன். மனிதன், மிருகங்கள், வேறு உயிர்கள், மரங்கள் செடிகள், சூரிய சந்திரர், நிலம் நீர்—இவை அனைத்துக்குள்ளும் வசிக்கும் உயிரே (ஆத்மாவே) அவர்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் புறப்படும் சமயமாயிற்று. பிராம்மோ அடியார்கள் அவர்முன் தாழ்ந்து வணங்கினர், அவரும் பதிலுக்கு வணங்கினர். பிறகு வண்டியில் ஏறிக்கொண்டு தேவியின் விக்கிரகத்தை (திருவுருவை)த் தரிசிப்பதற்காக ஆதரது விட்டிற்குப் புறப்பட்டார்.

ஞாயிறு, அக்டோபர் 11, 1884

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தக்ஷிணேசுவரக் கோயிற் பூஞ்சோலையிலே தமது அறையிலே இருந்த சிறு கட்டிலிலே படுத்துக்கொண்டிருந்தார், அப்போது பிற்

பகல் ஏறக்குறைய இரண்டுமணி. ம—வும், பிரிய முகர்ஜியும் தரைமீது உட் கார்ந்திருந்தனர். ம— ஒரு மணிக்குத் தம் பள்ளிக்கூடத்தைவிட்டுப் பறப் பட்டு, தக்ஷிணேசுவரத்திற்கு அப்போதுதான் வந்து சேர்ந்தார்.

குருதேவர் காம காஞ்சன இச்சைகளால் ஏற்படும் அபாயத்தைக்குறித்து, அடியார்கட்கு எச்சரிக்கை செய்தார்.

குருதேவர்: "இளமை முதலே வைராக்கியமும், பகவானைப் பற்றி வரும் மனத்துயரமும் உடையராய், உலக வாழ்க்கைச் சேற்றிலே புகாதவ ராய் இருப்பவர் வேறொரு வகுப்பைச் சேர்ந்தவர். அவர்கள் மாசற்ற ஒரு குலத்தைச் சார்ந்தவர். சிறு வயது முதலே வைராக்கியம் பழகுவோர் மிக உயர்ந்த நிலையைச் சார்ந்தவர். அவர்களுடைய இலக்ஷியம் மிகத் தூயது. அவர்கள் களங்கமற்றவர்."

சிந்தியிலிருந்து ஒரு பிராம்மணர் அறைக்குட் புகுந்தனர். ஸ்ரீ ராமகிருஷ் ணரை வணங்கினர். அவர் காசியில் வேதாந்தம் கற்றிருந்தனர். அவர் பருத்த உடலும் சிரித்த முகமும் வாய்ந்தவர்.

குருதேவர்: "வாரும்! நீர் சௌக்கியமா? நீண்ட காலமாக நீர் இங்கு வரவில்லையே. என்ன காரணம்?"

பண்டிதர்(சிரிப்போடு): "உலக காரியங்களே. எனக்கு அவகாசம் மிகக் கொஞ்சமே உண்டென்பது தங்கட்குத் தெரியுமே."

பண்டிதர் கீழே அமர்ந்தார். குருதேவர் அவரோடு பேசத் தொடங்கினர்.

குருதேவர்: "நீர் காசியில் வெகு காலம் கழித்தீர். நீர் அங்கே பார்த்த வற்றை எமக்குச் சொல்லும், தயாநந்தரைப்பற்றி எங்கட்குச் சொல்லும்."

பண்டிதர்: "ஆம், யான் அவரைச் சந்தித்தேன். தாங்களும் அவரைச் சந்தித்தீர்கள். யான் கர்னல் ஆல்காட் என்பவரையும் கண்டேன். (பிரம்ம ஞான சபையார்) தியாஸபி சங்கத்தைச் சார்ந்தவர் மகாத்மாக்கள் இருப்ப தாக நம்புபவர். அவர்கள் 'சந்திர' 'சூரிய' 'நக்ஷத்திர' மண்டலங்களைப் பற்றி யும் பேசுவர். அந்த சபையைச் சார்ந்தவன் தனது 'சூக்ஷ்ம சரீரத்திலே' இந்த மண்டலங்கள் எல்லாவற்றுக்கும் போகக் கூடும். அம்மட்டா! ஆல் காட் அம்மாதிரியான பலவற்றைப் பற்றிக் கூறியுள்ளார். ஐயன்மீர், தியாஸபி யைப்பற்றித் தங்களது அபிப்பிராயம் யாதோ?"

குருதேவர்: "முக்கியமான ஒரே பொருளாவது பக்தியே. தியாஸபி யைச் சேர்ந்தவர் பக்தியை நாடுகின்றனரா? அவ்வாறு செய்வாராயின் அவர் கள் நல்லோரே. தியாஸபி ஈசுவர தரிசனத்தையே வாழ்க்கைப் பயனாகக் கொள்ளுமாயின், அது நன்றே. ஒருவன் மகாத்மாக்களைப்பற்றியும், சந்திர சூரிய நக்ஷத்திர மண்டலங்களைப் பற்றியுமே எப்போதும் நினைத்தும் முயற்சித் தும் வருவானையின், அவனுக்குப் பகவானை நாட முடியாது. மனிதன் ஒருவன் ஞான சாதனம் பழகவேண்டும், பகவானுடைய திருவடித் தாமரையிலே அன்பு வேண்டுமென்று மனங் கசிந்து அவரிடம் பிரார்த்திக்க வேண்டும்.

உலகிலுள்ள பலவகையான பொருள்களினின்றும் அவன் தனது மனத்தை இழுத்து. பகவானிடம் மட்டும் செலுத்தவேண்டும்.

"சாஸ்திரம் தரிசனம் (தத்துவம்) வேதாந்தம்—இவற்றைப் பற்றி நீர் பேசலாம்; ஆனல் இவற்றில் எதிலும் பகவானைக் காணமாட்டீர். உமது நெஞ்சு அவர்க்காகத் துயரப்பட்டாலன்றி நீர் பகவானது தரிசனம் பெறமாட்டீர். தீவிரமாக ஞான சாதனம் பழகல்வேண்டும். கொஞ்சமும் ஆயத்தம் (தயார்) செய்து கொள்ளாமல் திடீரென ஒருவன் ஈசனது காட்சியைப் பெறல் இயலுமா?

"ஒரு மனிதன் என்னிடம் 'நான் கடவுளைக் காணுததேன்?' என்று கேட்டான். என் மனதில் தோன்றியபடி யான் அவனிடம் சொன்னதாவது: 'நீர் ஒரு பெரிய மீனைப் பிடிக்க விரும்புகிறீர். முதலாவது, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். வாசனையுள்ள ஓர் இரையை நீரில் எறிக. மீன் பிடிக்கும் கருவியை (தூண்டிலை)க் கைக்கொள்க. இரையின் வாசனையால் நீரில் ஆழத்திலிருந்து மீன்வரும். நீரின் அசைவிலிருந்து ஒரு பெரிய மீன் வந்திருப்பதை அறிவீர்."

"உமக்கு வெண்ணெய் உண்ணப் பிரியம். பாலில் வெண்ணெய் உள்ளதென்று திரும்பத் திரும்பச் சொல்வதினல் மட்டும் நீர் யாது பெறுவீர்? நீர் அதற்காகப் பாடுபடல் வேண்டும். இவ்வாறுதான் வெண்ணெயைப் பாலினின்றும் பிரிக்கக் கூடும். 'பகவான் இருக்கிறார்' என்று பல முறை சொல்வதனல் மட்டும் பகவானைக் காண முடியுமா? ஞான சாதனம் பழகுதல் அவசியம்.

(பண்டிதரைப் பார்த்து) "இடையிடையே சாதுக்களோடு கூடி வாழ்தல் நன்று. ஸம்ஸாரம் (பிறவி) என்னும் நோய் மனிதனுக்கு நெடுங் காலமாயுள்ளதொன்றுயிற்று. சாது ஸங்கத்தில் (நல்லாருடைய இணக்கத்தில்) அது பெரிதும் தணிகின்றது.

'யான்' 'எனது'—இது அறியாமை (அஞ்ஞானம்). உண்மையான ஞானம் ஒருவனைப் பின் வருமாறு உணரும்படி செய்கிறது: 'பகவானே, நீரே எல்லாம் செய்து வருகிறீர். நீரே எனக்குச் சொந்தமானவர். உமக்கே வீடுகளும் கட்டடங்களும் குடும்பமும் உறவினரும் நண்பரும் உலக முழுவதும் சொந்தம். எல்லாம் உமதே!' ஆனல் அஞ்ஞானமோ அவனைப் பின்வருமாறு உணரச் செய்யும்: 'யானே ஒவ்வொன்றையும் செய்து வருகிறேன். யானே கருத்தா. வீடு கட்டடம் குடும்பம் குழந்தைகள் நண்பர் சொத்து—இவை யாவும் என்னுடையன.'

"ஒரு குரு ஒரு காலத்தில் இதையெல்லாம் ஒரு சீடரிடம் விரிவாகக் கூறி வந்தனர். அவர் சொன்னதாவது: 'பகவான் மட்டுமே உமக்குச் சொந்தம். வேறெதுவுமன்று' என்பது. சீடன் அதற்குப் பதிலாக 'ஆனல், புண்ணிய புருடரே, எனது அன்னையும், எனது மனைவியும் எனது மற்ற உறவினரும் என்னைப்பற்றி நன்கு கவனித்துக்கொள்கின்றனர். நான் இல்லாதபோது,

அவர்கட்கு எல்லாம் இருண்டு போகின்றன, அவர்கள் என்மீது வைத்துள்ள அன்பை எவ்வளவு என்பது!' என்றனர். குரு கூறியதாவது: 'அவ் விஷயத்தில் உனது கருத்து தவருனது. ஒருவரும் உனக்குச் சொந்தமல்லர் என்பதை நான் விரைவில் உனக்குக் காட்டுகிறேன். உன்னோடு இந்த ஒரு சில மாத்திரைகளையும் எடுத்துக்கொள். நீ வீடு சென்றதும், அவற்றை விழுங்கி விடு. படுக்கையிற் படுத்துக்கொள். நீ இறந்துபோய்விட்டதாக ஜனங்கள் நினைப்பர்; ஆனால் உனக்கு வெளியுலக உணர்வு இருக்கும். எல்லாவற்றையும் காணவும் கேட்கவும் செய்வாய். அப்போது உன் வீடுவந்து சேர்வேன்.'

"சீடன் போதனையின்படியே செய்தான். அவன் மாத்திரையை விழுங்கி விட்டு, உணர்வில்லாதவன் போலே படுக்கையிற் கிடந்தான். அவனுடைய தாயும் மனைவியும் மற்ற உறவினரும் அழத் தொடங்கினர். அப்போதுதான் குரு வைத்தியன் போல வேடம் பூண்டு வந்து, அவர்களுடைய துயரத்திற்குக் காரணம் யாதென்று கேட்டார். அவர்கள் அவரிடம் எல்லாவற்றையும் சொன்னதும் அவர் அவர்களிடம் பின்வருமாறு கூறினர்: 'இதோ அவனுக்கு ஒரு மருந்து உள்ளது. இது அவனைப் பிழைக்கச் செய்யும். ஆனால் ஒன்று சொல்லவேண்டியது கட்டாயம். இம்மருந்தை அவனது உறவினர் ஒருவர் முதலில் உட்கொள்ளவேண்டும்; பின் அவனுக்குக் கொடுக்கவேண்டும். ஆனால் அதை முதலில் சாப்பிடும் உறவினர் இறப்பர். அவனது அன்னையையும் அவனது மனைவியையும் பிறரையும் இங்கே காண்கிறேன். உங்களில் ஒருவர் இம் மருந்தை உட்கொள்ளத் தாமாக முன் வருவது உறுதியே. அப்போது இந்த இளைஞன் மறுபடியும் பிழைத்தெழுவான்.'

"சீடன் இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தான். முதலில் வைத்தியர் அவனது அன்னையை அழைத்தார்; அவள் துயரம் பொறுக்க மாட்டாது அழுதுகொண்டும், தரைமீது உருண்டுகொண்டும் இருந்தாள். அவர் அவளிடம் 'அம்மா, நீர் இனி அழவேண்டிய அவசியம் இல்லை. இம் மருந்தைச் சாப்பிடும். உமது மகன் உயிர்பெற்று வருவான். ஆனால் நீர் சாவீர்' என்றார். அந்தத் தாய் மருந்தைத் தன் கையில் வைத்துக்கொண்டு, யோசிக்கத் தொடங்கினாள். மிக யோசனைக்குப்பின் அவள் வைத்தியரிடம் கண்ணீர் ததும்ப இவ்வாறு கூறினாள்: 'என் மகனே, எனக்கு இன்னும் ஒரு சில குழந்தைகள் உளரே. யான் அவர்களைப்பற்றியும் நினைக்கவேண்டியிருக்கிறது. நான் இறந்துவிட்டால் அவர்களது கதி என்ன ஆகுமோ? அவர்கட்கு உணவூட்டி, அவர்களைப் பாதுகாத்து வருவார் யாரோ?' வைத்தியர் பிறகு மனைவியை அழைத்து, மருந்தை அவளிடம் கொடுத்தார். அவளும் துயரத்தால் அழுதுகொண்டிருந்தாள், கையில் மருந்தை வைத்துக்கொண்டு அவளும் யோசிக்கத் தொடங்கினாள். மருந்தின் பலனை அவள் இறந்துபோவாள் என்பது அவளது காதிலும் விழுந்திருந்தது, கடைசியாகக் கண்ணீர் வழிய அவளும், 'அவருக்கு விதிப்படி மரணம் நேர்ந்தது. நான் இறந்துவிட்டால், எனது சிறு குழந்தைகட்கு

யாது கதி? அவர்கள் உயிரோடு இருக்கும்படி யார் செய்வார்? நான் எப்படி மருந்தை உட்கொள்வது?' என்றுள். இதற்கிடையே சீடன், மாத்திரைகளின் பலன் தன்னைத் தாக்காதவாறு தடுத்து வென்றுவிட்டான்! உண்மையிலே எவரும் தனக்குச் சொந்தமானவரல்லர் என்பதை அவன் இப்போது உறுதியாக உணர்ந்துகொண்டான், அவன் படுக்கையைவிட்டு வெளியே குதித்து, தனது குருவோடுகூட அவ்விடத்தைவிட்டுச் சென்றுன். குரு அவனிடம் 'உனக்குச் சொந்தமெனப் பாராட்டுதற்கு உரியார் ஒருவரே; அவர் பகவானே' என்றனர்.

"ஆதலால் ஒரு மனிதன் நடந்துகொள்ளவேண்டிய வழியாவது: பகவானது பாத தாமரைகளின்மீது அவனுக்குப் பக்தி உண்டாகவேண்டும், பகவானைத் தனது சொந்தமாகப் பாராட்டி அன்பு செய்தலும் வேண்டும். உம்மைச் சுற்றி இவ்வுலகம் இருப்பதைப் பார்க்கிறீர். உமக்கு இரண்டே நாளைக்குத்தான் அது உள்ளதாகிறது. அதற்கு ஒன்றுமே இல்லை."

பண்டிதர்(சிரித்துக்கொண்டே): "பெரியீர், நான் இங்கே இருக்கும்போது முழுத் துறவு (வைராக்கியம்) உள்ளே கிளம்புவதை யான் உணர்கிறேன். உலக வாழ்வை விட்டுவிடவேண்டும் என்றும், விலகியோடவேண்டும் என்றும் எனக்குத் தோன்றுகிறது."

குருதேவர்: "அன்று, அன்று! நீர் ஏன் விட்டுவிடவேண்டும்? மனத்தால் துறந்துவிடும். உலகத்தின்மீது பற்றற்றுவாழும்.

"சுரேந்திரர் இடையிடையே இரவை இங்கே கழிக்க விரும்பினர், அவர் ஒரு படுக்கையைக்கொண்டு வந்தார், ஒன்றிரண்டு நாளை இங்கே கழிக்கவும் செய்தார். அப்போது அவரது மனைவியார் அவரிடம், 'நீர் பகலில் எங்கே வேண்டுமானாலும் போகலாம்; ஆனால் இரவில் நீர் வீட்டைவிட்டுப் போகக் கூடாது' என்றனர். பாவம்! சுரேந்திரர் என்ன செய்ய முடியும்? வீட்டைவிட்டு வெளியே இரவைக் கழிக்க இப்போது அவர்க்கு வழி இல்லை."

சிந்தியிலிருந்து வந்திருந்த பண்டிதர் போயினர். இருள்வரும் வேளையாயிற்று. அந்திப்பொழுது பஞ்சவடியின்மீதும் கோயில்களின்மீதும் ஆற்றின் மீதும் கவிந்தது, மாலைப் பூசை பற்பல கோயில்களிலும் ஆரம்பித்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது அறையிலுள்ள தெய்வப் படங்களின் முன்பு வணங்கினர். ஒரு சில அடியார்கள் தரைமீது அமர்ந்திருந்தனர். அறையில் மௌனம் குடிகொண்டிருந்தது.

ஒரு மணி கழிந்தது. ஈஷானும் கிஷோரும் உட்புகுந்து, ஸ்ரீராமகிருஷ்ணரை வணங்கிவிட்டுத் தரைமீது அமர்ந்தனர், ஈஷான் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ள பற்பல கிரியைகளையும் சடங்குகளையும் இயற்றுவதில் ஈடுபட்டவர். குருதேவர் சம்பாஷணையைத் தொடங்கினர்.

குருதேவர்: "'கடவுள்' வார்த்தையைத் திரும்பத் திரும்பச் சொல்லுவதனால் மட்டும் ஒருவர்க்கு ஞானம் வர முடியுமா? ஞானத்திற்கு இரண்டு

குறிகள் (இலக்ஷணங்கள்) உண்டு. முதலாவது, அனுராகம், அதாவது, ஈசன்மீது அன்பு, நீர் யுக்தியிலும் விசாரத்திலும் இறங்கலாம்; ஆனால் அன்பு இல்லையாயின் அது சற்றும் பயன் தராது. இரண்டாவது, குண்டலினியின் விழிப்பு. குண்டலினி உறங்கிக்கொண்டிருக்கும்வரை, நீர் ஞானம் பெற்றவராகமாட்டீர், நீர் மணிக்கணக்காகப் புத்தகங்களைப் படித்தும் சிந்தித்தும், தத்துவ (தரிசன) விசாரம் செய்தும் வரலாம்; ஆனால் ஈசனுக்காக உள்ளே பெருந்துயரம் உம்மிடம் இல்லையாயின் உமக்கு ஞானம் இல்லை என்பதேயாகும்.

"குண்டலினி விழிக்கும்போது, பாவக நிலையும் பக்தியும் பிரேமையும் உண்டாம். இது பக்தியோகம்.

"கருமயோகம் மிகக் கடினம், அதன் வழியாக ஒருவன் சில சக்திகளைப் பெறுவான்—அதாவது சித்திகளை அடைவான்." (கருமம் என்பது இங்கே மதக் கிரியைகளையும் வைதிகச் சடங்குகளையும் குறிக்கின்றது.)

ஈஷான்: "நான் போய் ஹாஸ்ராவைப் பார்க்கிறேன்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் மௌனமாக உட்கார்ந்தார். சிறிது நேரம் சென்றபின் ஈஷான் ஹாஸ்ராவோடு அறைக்குள் வந்தார். குருதேவர் அப்போதும் பேசாதிருந்தார். கொஞ்சம் பொழுது கழிந்ததும் ஹாஸ்ரா ஈஷானிடம் "நாம் அவரைத் தனியே விட்டுச்செல்வோம். ஒருக்கால் அவர் இப்போது தியானம் புரியலாம்" என்று காதுக்குட் சொன்னார். இருவரும் அறையை விட்டு வெளியேறினர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் இன்னும் மௌனமாயிருந்தார். சில நிமிஷங்கட்குள் அடியார்கள் அவர் உண்மையாகவே தியானத்தில் அமர்ந்திருந்ததைக் கவனித்தார். பிறகு அவர் ஜெபம் செய்தார். அவர் தமது வலது கையைத் தமது தலைமீதும், பின் தமது நெற்றியிலும், பின் தொண்டையிலும், தமது நெஞ்சிலும், கடைசியாகத் தமது கொப்பூழிலும் வைத்தார். உடலிலுள்ள ஆறுதாரங்களிலும் குண்டலினிமீது தியானம் புரிதலோ அது?

ஈஷானும் ஹாஸ்ராவும் காளிகோயிலுக்குப் போயிருந்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தியானத்தில் மூழ்கினர். இதற்கிடையே ஆதர் வந்து சேர்ந்தனர். அப்போது மணி ஏழரை.

சிறிது நேரத்திற்குப் பின் குருதேவர் காளி கோயிற்குச் சென்றனர். அவர் திருவுருவத்தை (பிரதிமையை)ப் பார்த்தார். தேவியின் திருவடியினின்றும் சில புனித மலர்களை எடுத்து, தமது தலைமீது வைத்துக்கொண்டார். அவர் தேவியின்முன் வீழ்ந்து வணங்கி, பிரதக்ஷிணம் செய்தார். அவர் சாமரம் வீசினர். தெய்வ ஆவேசத்தால் பக்தி பரவச நிலையில் இருந்ததாகத்தோன்றினர். அவர் வெளி வந்ததும், ஈஷான் பூஜாக்கிரியை இயற்றுவதைக்கண்டார்.

குருதேவர்(ஈஷானிடம்): "என்ன? நீர் இன்னும் இங்கு உள்ளீரா? நீர் இன்னும் பூஜை பண்ணிக்கொண்டிருக்கிறீரோ? ஒரு பாட்டைக் கவனியும்:

அன்னபெயர் நாஓத அந்திமத்தில் என்னுயிர்தான் அகலு மாயின்
சின்மயஞ்சார் கங்கைகையை கச்சிகாசி பிரபாசஞ் செல்வ தேனே ?
நன்மைமிகும் முப்போதும் நாமஜெபம் முறையாக நடக்கு மாகில்
பன்மைபெறும் கிரியைகளால் பணிவொடுசெய் பூசையினல் பயனும் யாதோ ?

விரைந்தணுகும் கிரியைகள்அம் மேலோனே ஒருக்காலும் மேவ மாட்டா ;
வரைந்தபல விரதமொடு மாதரும தானமுமே மதனன் ஒப்பான்
திருந்துபலி பிரார்த்தனையும் திருவடியாம்;.....

"எவ்வளவுகாலம் ஒரு மனிதன் சந்தியாவந்தனம் முதலான கிரியைகளைக் கட்டாயம் தொடர்ந்து இயற்றிவரல் வேண்டும் ? பகவானது பாத தாமரைகளிலே அவனுக்குப் பக்தி உண்டாகாதவரை, பகவானது நாமத்தை ஓதும்போது அவனுக்குக் கண்ணீர் பெருகாமலும், புளகாங்கிதம் (மயிர்க் கூச்சு) உண்டாகாமலும் இருக்கும்வரை.

"காய் உண்டானதும், பூ உதிர்கின்றது. பகவானிடத்துப் பக்தி முதிர்ந்து ஒருவன் அவரைத் தரிசிக்கும்போது, கிரியைகளை விட்டுவிடுகிறான்.

"இவ்வளவு மெதுவாக நடந்து செல்வதனல் நீர் ஒன்றும்பெற முடியாது. தீவிர வைராக்கியம் உமக்கு வேண்டும். பதினேந்து மாதங்களை ஓர் ஆண்டாக எண்ணி வருவதால் ஏதாவது உமக்குக் கிடைக்குமா ? உம்மிடம் பலமோ சக்தியோ இருப்பதாகத் தெரியவில்லை. பாலில் ஊறிய அவலைப்போல் நீர் மென்மையாயிருக்கிறீர். எழுந்திரும்! அரையை இறுக்கிக் கட்டிக்கொள்ளும்;

"எனக்கு இந்தப் பாட்டுப் பிடிப்பதில்லை;

ஆனந் தத்தோ டீசனையே அண்ணே பற்று(இ)ம் மாதிரியே
ஆன முயற்சி யொன்றுலே அவனை யடைவாய் ஒருகாலம்

'இம்மாதிரியே ஆன முயற்சியொன்றுலே அவனை யடைவாய் ஒருகாலம்' என்ற பகுதியை நான் கவனிப்பதேயில்லை. உமக்கு வேண்டுவது தீவிர வைராக்கியம்; நான் அதையே ஹாஸ்ராவுக்கும் கூறுகின்றேன்.

"தீவிர வைராக்கியம் உமக்கு என் உண்டாவதில்லையென்று நீர் என்னைக் கேட்கிறீர். அதற்கு ஒரு காரணம் உண்டு. உமக்குள்ளே ஆசைகளும், மறைந்திருக்கும் வாசனைகளும் இருக்கின்றன. ஹாஸ்ராவைப் பற்றிய உண்மையும் அதுவே. எங்கள் ஊர்ப்பக்கத்திலே குடியானவர்கள் தங்கள் நெல் வயல்கட்கு நீர் கொண்டுபோவதைப் பார்த்துளேன். வயல்கட்கு வெளியே நீர் ஒழுகிப்போவதைத் தடுத்தற்காக, அவற்றுக்கு நாலு பக்கங்களிலும் தணிந்த வரப்புகள் உண்டு; ஆனல் இவ்வரப்புகள் மண்ணுலானவையாதலின், சில சில இடங்களில் துவாரங்களை உடையனவாகும். குடியானவர்கள் தண்ணீர் கொண்டு வருவதற்காக உயிரைக் கொடுத்துப் பாடுபடுவார்கள், ஆனலும் தண்ணீர் துவாரங்கள் வழியாக வெளியே ஒழுகிப்போம். ஆசைகள் துவாரங்களாகும். நீர் ஜபமும் தவமும் பண்ணுவது உண்மையே; ஆனல் உமது ஆசைகளாகிய துவாரங்கள் வழியாக அவையெல்லாம் ஒழுகிப்போய்

விடுகின்றன. ஆசைகள் இல்லையாயின், மனம் இயல்பாகவே கடவுளைப் பார்த்து மேல் நோக்கும். அது எதைப் போன்றது தெரியுமா? அது ஒரு தராசின் கூர்முனைகளைப்போன்றது. 'காமம்' 'காஞ்சனம்' என்பவற்றின் பாரத்தாலே இருமுனைகளும் ஒன்றுக்கொன்று நேராக இருப்பதில்லை. யோகத்தினின்றும் ஒரு மனிதனை விலகச் செய்வதும் இக்காம—காஞ்சனமே. ஒரு வத்தியின் சுவாலையைக் கவனித்திருப்பதில்லையா? மிக அற்பமான காற்றும் அதை அசையச் செய்யும். யோக நிலை காற்றில்லாத இடத்திலுள்ள வத்தியின் சுவாலையைப் போன்றதாகும்.

"மனம் சிதறிக்கிடக்கின்றது. அதில் ஒரு பகுதி டாக்காவுக்கும், இன்னொரு பகுதி டெல்ஹிக்கும், இன்னொரு பகுதி கூச்சு பீஹாருக்கும் போயுள்ளது. அம் மனத்தை ஒன்று சேர்க்கவேண்டும்; ஒரு பொருளினிடத்தே அதை நிலைக்கச் செய்யவேண்டும். பதினாறு அணா விலையுள்ள துணி உமக்கு வேண்டுமாயின், வியாபாரியிடம் முழுமையாகப் பதினாறு அணாவையும் நீர் கொடுக்கத் தான்வேண்டும். மிக அற்பமான தடை இருப்பினும் யோகம் கைகூடாது. தந்திக் கம்பியில் அற்பப் பிளவு இருந்தாலும் செய்தியை அனுப்ப இயலாது போம்.

"நீர் சந்தேகமின்றி உலகில் உள்ளீர். இருந்தால்தான் என்ன? நீர் உமது கருமங்களின் பயனை ஈசனிடம் சமர்ப்பிக்கவேண்டும். உமக்கென ஒரு பலனையும் நாடக்கூடாது. ஆனால் ஒன்றைக் கவனித்துக்கொள்ளும். பக்தியாசையை ஆசையாகச் சொல்ல முடியாது. நீர் பக்திக்காக ஆசைப் பட்டு, அதற்காகப் பிரார்த்திக்கலாம். பக்தியின் தமஸைப் பழகுக; தேவியினிடம் உமது தேவையை வற்புறுத்திக் கேளும்,

"தேவி உமது சொந்தத் தாய். அவள் ஒரு மாற்றாந்தாயா? அது ஒரு செயற்கை உறவு முறையா? தேவியிடம் உமது தேவையை வற்புறுத்திக் கேட்க முடியாதாயின், வேறு யாரிடம் நீர் வற்புறுத்தக் கூடும்? தேவியிடமே சொல்லும் இம்மாதிரி:

என்அம்மே யானனது எண்மாதக் குழந்தையோ?
நின் செக்கர் விழிகளும்என் நெஞ்சினிலே பயம்வினையா.

[எட்டு மாதக்குழந்தை முழு வளர்ச்சியில்லாமையால் பொதுவாகப் பலமற்றதாய்ப் பயந்து நடுங்குவதாய் இருக்கும் என்பது பற்றி.]

"தேவி உமது சொந்தத் தாய். உமது தேவையை வற்புறுத்திக்கேளும். நீர் எப்பொருளின் பகுதியாவீரோ, அப்பொருளின் கவர்ச்சியை நீர் உணர்வீர். என்னிடத்துள்ள தேவியின் அம்சத்தால் (பகுதியால்) அன்றே எனக்கு அம்மையின்மீது கவர்ச்சி உண்டாகிறது.

"இந்நாளில் நீர் உலகக் காரியங்களைக் கவனிக்கவேண்டிய அவசியம் இல்லை, ஒரு சில நாளை ஈசனது சிந்தனையிற் கழியும். உலகிற்கு ஒன்றுமிலை என்பது உமக்குத் தெரியுமே."

குருதேவர் பின்வருமாறு பாடினார்;

நினைமின் மனமே நினைமின் இதனை
நினக்குச் சொந்தமா உரியார் எவருளர் !
புவியில்நீர் அலைவதும் அவமே யாகும்
மாயை யெனும்நுண் வலையினிற் சிக்கினீர்

ஆய்அவள் நாமம் அயராது கொண்மின்
ஒன்றிரு நாள்களே உமைப்பிரபு நாதன்
என்றே புகழ்வர் இருநிலத் தோரே.
இத்தனை மதிப்புறும் மெத்திய வடிவும்உம்

காலனும் நாதன் கைப்பற் றுங்கால்
ஓலமே கூர உருத்திடல் வேண்டும்.
வாழ்க்கையிற் காதல் மனையாட் காஉயிர்
பாழ்படு மளவும் பரபரப் புறுவீர்;

மரிக்கின் உம்மொடும் மனைவியும் வாராள்;
எரிக்கத் தரும்பிணம் இதுதீ தெனவே
விலகுவள், 'போம்நும் உல'கெனப் போவள்.

[ஆய் - தாய்]

தொடர்ந்து, குருதேவர் பின்வருமாறு கூறலானார்: "நீர் பார்த்து வரும் வேலைகளாகிய இந்த மத்தியஸ்தம் செய்தலும், தலைமை தாங்கலும்—இவை என்ன அலுவல்கள் ? மக்களின் சண்டைகளை நீர் தீர்த்து விடுவதாகவும், அவர்கள் உம்மையே மத்தியஸ்தராகக் கோருவதாகவும் நான் கேள்விப்படு கிறேன், இவ்வேலையை நீண்ட காலமாகச் செய்து வந்திருக்கிறீர். இம்மாதிரிக் காரியங்களில் கவனம் செலுத்துபவர் அவற்றைச் செய்து வரட்டும், இப் போது உமது மனதை இறைவனுடைய கமல பாதங்களில் மேலும் மேலும் அதிகமாகச் செலுத்தி வாரும்.

"சம்பு என்பவரும் 'நான் ஆஸ்பத்திரிகளையும் மருத்துவச் சாலைகளையும் கட்டப்போகிறேன்' என்றனர். அவர் பகவான்மீது பக்தியுடையவராதலின் நான் அவரிடம் 'நீர் பகவானைக் காணும்போது அவரிடம் ஆஸ்பத்திரிகளையும் மருத்துவச் சாலைகளையும் வேண்டுவீரா ?' என்று கேட்டேன்.

"கேசவ சேனர் என்னிடம்'நான் ஏன் பகவானது தரிசனம் பெறவில்லை ?' என்று கேட்டனர். பேரும் புகழும் பாண்டித்தியமும் போன்ற பொருள் களில் நீர் கருத்தாயிருப்பதால் நீர் பகவானைக் காணமாட்டீர்' என்றேன். குழந்தை தன் பழுக்காய்ப் பொம்மையைச் சுவைத்துக்கொண்டிருக்கும்வரை அதன் தாய் அதனிடம் வருவதில்லை. ஆனால் சிறிது நேரம் கழிந்தபின் அது பொம்மையைத் தூர எறிந்துவிட்டுக் கத்தும்போது, தாய் சாதப் பானையை அடுப்பிலிருந்து கீழே இறக்கிவைத்துவிட்டுக் குழந்தையிடம் ஓடி வருகிறாள்.

"நீர் மத்தியஸ்தம் பண்ணிக்கொண்டிருக்கிறீர், தேவி தனக்குள்ளே 'என் குழந்தை மத்தியஸ்தம் பண்ணுவதில் ஈடுபட்டு, மிக ஆனந்தமாயிருக் கிறது. அது அவ்வாறே இருக்கட்டும்' என்கிறாள்."

இதற்கிடையில் ஈஷான் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய திருவடிகளைப் பிடித்துக் கொண்டிருந்தார். அவர் பணிவோடு 'நான் இக் காரியங்களைச் செய்ய வேண்டும் என்பது எனது சங்கற்பமல்லவே" என்றனர்.

குருதேவர்: "அது எனக்குத் தெரியும், இது தேவியின் திருவிளை யாடல். அவளது லீலை. பலர் இவ்வுலகிலே கட்டுப்பட்டுக் கிடக்கவேண்டும் என்பது மஹாமாயை யெனும் தேவியின் திருவுள்ளம். அது எதைப்போன் றது தெரியுமா?

இப்பிறவிக் கடல்மிதக்கும் எத்தனையோ படகு!
என்மனமே அமிழ்வனவும் எத்தனையோ உரையாய்!

இன்னும்,

காற்றடி யோரிலக்ஷம் காலிற் பறந்திடுங்கால்
ஆற்ற தறுந்துய்யும் ஒன்றிரண்டு; (அ)த்—தோற்றத்தைக்
கண்டுநீ என்னம்மே கையிரண்டும் கொட்டிடுவாய்
மண்டுஞ் சிரிப்பாம்உன் வாய்.

[காலில் - காற்றில்]

நூறுயிரத்தில் ஒன்றிரண்டு பேர்களே முக்தியடைவர். மற்றோர் தேவியின் திருவுள்ளப்படி பந்தத்திற்கு உட்பட்டு வாழ்வர்.

"நீர் கண்ணும்பூச்சி விளையாட்டைப் பார்த்ததில்லையா? விளையாட்டு தொடர்ந்து நடக்கவேண்டும் என்பது தாய்ச்சியின் சங்கல்பம். எல்லாரும் அவளைத் தொட்டு, அதன்மூலம் விடுபடுவார்களாயின், விளையாட்டு நின்று விடும். ஆதலால் எல்லோரும் தன்னைத் தொடட்டும் என்று அவள் சங்கற் பிப்பதில்லை.

"நான் தேவியிடம் பின்வருமாறு பிரார்த்தித்தேன்: 'அம்மே, பேரும் புகழும் எனக்கு வேண்டாம். அஷ்டமாசித்திகளையும் யான் வேண்டேன். நூறு சித்திகளையும் வேண்டேன். அம்மே! வாழ்க்கைக்குரிய சுகங்களிலும் எனக்கு ஆசை இல்லை. அன்னாய், உனது கமல பாதங்களின்மீது சுத்த பக்தி எனக்கு உண்டாகும் வரமே அருளுக?"

அடியார்கள் மந்திரத்தாற் கட்டுண்டவர்போல ஸ்ரீ ராமகிருஷ்ணரது உப தேசத்தை உற்றுக் கவனித்தனர். அவருடைய தழல்போன்ற மொழிகள் அவர்களுடைய உள்ளங்களிற் புகுந்து, வைராக்கிய நெறி வழியாகச் செல்லும் படித் தூண்டின.

இப்போது ஈஷானிடமே சிரத்தை வாய்ந்த குரலில் அவர் பேசலானார்.

குருதேவர்: 'உம்மை முகஸ்துதி பண்ணுபவர்களின் வார்த்தைகளைக் கேட்பதனால் உம்மை மறந்துவிடாதேயும். உலகப்பற்றுள்ள ஒரு மனிதனைச்

சுற்றி முகஸ்துதி பண்ணுவோர் கூடுவர், இறந்த பசுவொன்றைச் சுற்றிக் கழுகுகள் கூடும்.

"உலகப்பற்றுள்ள மக்கள் தம்மிடம் சரக்கற்றவராவர். எதிர் நின்று புகழ்வோர் அவர்களிடம் வந்து 'தங்களிடத்தில் எவ்வளவு தயையும் ஞான மும் உள்ளன! எவ்வளவு பக்தி வாய்ந்திருக்கின்றது தங்களிடம்!' என்று சொல்வர். இவை வெறும் மொழிகளல்ல, அவர்கள்மீது எறியப்படும் கூரிய மூங்கில் அம்புகளே. எவ்வளவு பேதமை இது! இலௌகிகப் பிராம்மணப் பண்டிதர்கள் ஒரு சிலரின் நடுவே அல்லும் பகலும் இருத்தலும், அவர்களு டைய புகழ்ச்சியைக் கேட்டலும்!

"இலௌகிகர்கள் (உலகப்பற்றுள்ளவர்) மூன்று பொருள்கட்கு அடிமை களாயிருப்பர். அவர்கள் தமது மனைவியர்க்கு அடிமைகள், தங்கள் பணத் திற்கு அடிமைகள், தமது எஜமானர்களுக்கு அடிமைகள், அவர்களிடம் ஏதேனும் உள்ளே சத்து இருக்க முடியுமா?

"மத்தியஸ்தமும் தலைமையுமா? இவை எவ்வளவு அற்பம்! தயையும் பரோபகாரமுமா? இவற்றைப் போதிய அளவு நீர் பெற்றுய்விட்டது. அம் மாதிரிக் காரியங்களில் ஈடுபடவேண்டியவர் வேறொரு வகுப்பைச் சார்ந்தவர். உமது மனதைப் பகவானது தாமரைத் திருவடியிலே ஈடுபடுத்தற்கு ஏற்ற காலம் இப்போது நேர்ந்துள்ளது. நீர் பகவானைத் தரிசிப்பீராயின், மற்ற எல்லாவற்றையும் பெறுவீர். முதலில் பகவான், பின் தயை, பரோபகாரம், பிறரைக் கடைத்தேற்றுதல். இவற்றைப்பற்றி உமக்குக் கவலை எதற்கு?

"இதுவே உமக்குள்ள சங்கடம். உலக வாழ்வைத் துறந்த ஒரு சன்னி யாசி உமக்குச் சிறிது ஞானோபதேசம் அளிப்பாராயின் மிக நன்றாகும். பிராம் மணப் பண்டிதனுயினும், வேறெவனுயினும் சரி, உலகப்பற்றுள்ள மனித னுடைய புத்திமதி சரியாயிராது.

"பித்துக்கொள்ளும்! பக்தியால் பித்துக்கொள்ளும்! ஈஷான் பித்தராகி விட்டார், உலக காரியங்களைச் செய்ய அவர்க்கு இனி இயலாது என்பதை ஜனங்கள் அறியட்டும். அறிந்தால், ஜனங்கள் உம்மிடம் மத்தியஸ்தத்திற்கும் தலைமைக்கும் பின் ஒருக்காலும் வாரார். இந்த பூஜா சாமான்களைத் தூர எறியும், ஈஷான் என்ற பெயர்க்குப் பொருத்தமாக வாழும்." (முற்றும் துறந்த சிவபெருமானுக்குப் பெயர் ஈசானர்.)

ஈஷான் பின்வரும் பாடலை ஒப்பித்தார்:

அன்பாலுன் மீதெனக்கே அருளுக அன் னுய்பித்து
என்பால்பின் எற்றுக்கோ ஞானமும் விசாரமுமே?

குருதேவர்: "பைத்தியமா! அதுவேதான்! ஒருநாள் சிவநாதர் என்னிடம் 'ஈசனைப்பற்றிய அளவு மிஞ்சிய நினைவால் ஒருவன் அறிவை இழந்துவிடுகிறான்' என்றார். அதற்கு மறுப்பாக யான் 'என்ன? அறிவு (சைதன்ய) வடிவான பொருளின் சிந்தனையால் அறிவை எவனேனும் என்றே

னும் இழக்க முடியுமா? ஈசர் நித்திய சுத்த போத ரூபர், அவரது அறிவின் மூலம் ஒருவன் ஒவ்வொன்றையும் அறிகிறான்; அவரது அறிவின் மூலம் உலக முழுதும் அறிவுடையதாகத் தோன்றுகிறது."

ஈஷான் ஸ்ரீராமகிருஷ்ணரது திருவடியைத் தொட்டுக்கொண்டும் அவரது மொழியைக் கவனித்துக்கொண்டும் உட்கார்ந்திருந்தனர், இடையிடையே கல்லாலான காளிதேவியின் பிரதிமையின்மீது அவர் தமது பார்வையைச் செலுத்தினர். விளக்கொளியில் தேவி புன்சிரிப்போடு இருந்ததாகத் தோன்றினாள். உயிருள்ள தேவி பிரதிமையின் வழியாகத் தன்னைத் தோற்றுவித்துக் கொண்டு, வேதமொழிகளைப்போல் புனிதமான குருதேவரின் மொழிகளைக் கேட்டு ஆனந்தமடைந்ததுபோல் இருந்தாள்.

ஈஷான் (பிரதிமையைச் சுட்டி): "உமது புனித வாயினின்றும் வந்த மொழிகள் உண்மையிலே அங்கிருந்து உதித்தனவே."

குருதேவர்: "யான் யந்திரம், அவள் யந்திரி (யந்திரத்தை ஆட்டுபவள்); அவள் என்னை ஆட்டிவைக்கிறபடி யான் ஆடுகிறேன். அவள் என் வழியாகப் பேசுகிறபடி யான் பேசுகிறேன். கலியுகத்தில் ஈசனது வார்த்தையை ஒரு குழந்தையோ பைத்தியக்காரனோ அம்மாதிரியான வேறெருவனோ அவனது வாய் மூலமாக அன்றி எவனும் கேட்பதில்லை என்பர்."

குருதேவர் எழுந்திருந்தார். கோயிலுக்கு முன்னுள்ள மேடையின்மீது அவர் ஏறி, தரையின்மீது நெற்றி பொருந்தத் தேவியை வணங்கினர். அடியார்கள் விரைவாக அவரைச் சூழ்ந்து, அவருடைய திருவடிகளிற் பணிந்தனர். அவர்கள் அனைவரும் அவரது அருளை யாசித்தனர்.

ஞாயிறு, அக்டோபர் 26, 1884

பிற்பகல் வேளை, பல அடியார்கள் குருதேவரது அறையிற் கூடியிருந்தனர். அவர்கட்கிடையே மனமோஹனர், மகிமாசரணர், ம— மூவரும் இருந்தனர், ஈஷானும், ஹாஸ்ராவும் பின்வந்து சேர்ந்தனர்.

ஓர் அடியார்: "ஐயன்மீர், தாங்கள் ஈசானரைத் தரிசிப்பதாகக் கேள்விப்படுகிறோம். அப்படியானால் எங்கட்கு அவரைக் காட்டியருளும்."

குருதேவர்: "எல்லாம் பகவானது திருவுள்ளத்தைப் பொறுத்தது. ஒரு மனிதன் யாது செய்ய முடியும்? பகவானது நாமத்தைப் பாடி வரும் போது சில சமயம் கண்ணீர் பெருகுகின்றது, மற்ற சமயங்களில் கண்களில் ஈரப்பசையே இருப்பதில்லை. பகவானைப் பற்றித் தியானிக்கும்போது, சில நாள்களில் மிகுதியாக ஞான விழிப்பு உண்டாவதை உணர்கிறேன்; சில நாள்களில் யான் ஒன்றையும் உணர்வதில்லை.

"ஒரு மனிதன் கட்டாயம் வேலை செய்யவேண்டும். அப்போதுதான் அவன் ஈசனது காட்சியைப் பெறுவான். ஒரு நாள் உயர்ந்த ஞான நிலையில் இருந்தபோது, ஹால்தார்புகூர் குளத்தின் காட்சியைக் கண்டேன். தாழ்ந்த

வருணத்தைச் சார்ந்த ஒரு கிராமத்தான் பாசியை ஒரு பக்கம் ஒதுக்கிவிட்டுத் தண்ணீர் மொள்ளுவதைப் பார்த்தேன். இடையிடையே அவன் தன் உள்ளங் கையில் தண்ணீரை யெடுத்துச் சோதித்துப் பார்த்தான். அந்த ஞானக்காட்சி யில் எனக்கு ஒன்று விளக்கமாகக் காட்டப்பட்டது; அதாவது, நீரை மூடும் பாசியை ஒதுக்காமல் நீரைக் காணமுடியாது என்பது. அது போன்றே கரும மின்றிப் பக்தியைப் பெறுதலோ ஈசனது தரிசனமோ கை கூடாது, கருமம் என்னும்போது, தியானம் ஜெபம் முதலியவை குறிக்கப்படுகின் றன. பகவானது நாம குண கீர்த்தனமும் கருமமே. தான தருமங்களும் யக்ஞமும் பிறவும் இதில் அடங்கும்."

மகிமாசரண்: "அது உண்மைதான் ஐயா, கருமம் அவசியம் என்பது உறுதியே. ஒருவன் பாடுபட்டு உழைக்கவேண்டும். அப்போதுதான் வெற்றி கிடைக்கும். வாசிக்க எவ்வளவோ உள்ளது! சாஸ்திரங்கட்கு முடிவில்லை."

குருதேவர்(மகிமாசரணிடம்): "சாஸ்திரங்களில் எவ்வளவு உங்களால் வாசிக்க முடியும்? வெறும் விசாரத்தால் என்ன லாபம்? எதற்கும் முன்னில் ஈசனைக் காண முயலுக. குரு மொழியில் நம்பிக்கை வையுங்கள். குரு உங்கட்கு இல்லாவிடில் மனமுருகி ஈசனிடம் பிரார்த்தியுங்கள். அவன் தன்னுடைய சொரூபத்தை உங்கட்குத் தெரியச் செய்வான்.

"புத்தகங்களின்மூலம் பகவானைப்பற்றி என்ன தெரிந்துகொள்வீர்? நீங் கள் சந்தைக்குத் தொலையில் இருக்கும்வரை, இன்னதென்று அறிய முடியாத ஓர் இரைச்சலை மட்டும் கேட்பீர்கள். நீங்கள் அங்கே உண்மையாக வந்ததும், முற்றிலும் வேறுபாடான காட்சி கிடைக்கிறது, நீங்கள் ஒவ்வொன்றையும் தனியாகத் தெளிவாகக் கேட்கிறீர்கள், பார்க்கிறீர்கள். 'இதோ உங்கட்கு உருளைக்கிழங்கு. இதை எடுத்துக்கொண்டு பணங் கொடுங்கள்' என்று ஜனங்கள் சொல்வது உங்கட்குக் கேட்கின்றது.

"தொலையிலுள்ளபோது கடலின் கோஷம் மட்டும் உங்கள் காதில் விழு கிறது. அதற்கு அருகே செல்லுங்கள். பல தோணிகள் மிதந்து செல்வதை யும், பறவைகள் பறப்பதையும், அலைகள் சுருள்வதையும் காண்பீர்கள்.

"புத்தகப் படிப்பிலிருந்து பகவானைப்பற்றிய உண்மையான உணர்ச் சியைப் பெறமுடியாது. புத்தகப் படிப்பினின்றும் மிகவும் வேறுபட்ட ஒன்றுகும் இவ்வுணர்ச்சி. புத்தகங்கள், சாஸ்திரங்கள், விஞ்ஞானம்—இவை பகவானது தரிசனத்திற்குப் பின்பு வெறுந்தூசியும் துரும்புபோலத்தோன்றும்."

மகிமாசரண்: "எவ்விதக் கருமத்தாலே நாம் பகவானை அடையக் கூடும்?"

குருதேவர்: "பகவானை இந்தக் கருமத்தால் தரிசிக்கலாகும், அந்தக் கருமத்தால் தரிசிக்க முடியாது என்பதில்லை. பகவானது தரிசனம் பெறுதல் அவரது அருளைப் பொறுத்தது. எனினும், நெஞ்சிலே ஒரு சிறிது பகவானுக் காகத் துயரமடைந்து, ஒரு சிறிது முயற்சி செய்வது கட்டாயம். எவனிடம்

மனத்துயரம் (வியாகுலம்) உண்டாகுமோ அவன் பகவானது அருளைப் பெறுவான்.

"பகவானை அடைய ஒருவனுக்குச் சில அனுகூலமான நிலைமைகள் அவசியம் வேண்டும்; அவையாவன: சாது சங்கம், விவேகம், ஸத்குரு லாபம் (நல்ல குருவைப் பெறுதல்). ஒருக்கால் அவனுடைய தமையன் குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொள்வான்; ஒருக்கால் அவனுடைய மனைவி வித்யா சக்தி (ஞானத்திற்கேற்ற குணங்கள்) உடையவளாவாள், தரும வழியிற் செல்பவளாவாள்; ஒருக்கால் அவன் மணம் புரியாதவனுயிருக்கலாம், அதாவது, உலக வாழ்விற் சிக்கிக்கொள்ளாதவனுயிருக்கலாம். இம்மாதிரியான நிலைமைகள் வந்தடையும்போது அவன் வெற்றி பெறுகிறான்.

"நீர் மனத்தால் துறக்கவேண்டும். பற்றற்ற நிலையிலே இல்லறத்தானுக வாழ்க. உலகத்தைவிட்டு நீர் எங்கே செல்வீர்? காற்றில் உலவும் எச்சிலிலை போல உலகில் வாழ்க. அம்மாதிரியான இலையைச் சில சமயம் காற்று வீட்டுக்குள்ளே எறியும், சில சமயம் ஒரு குப்பைக் குவியலின்மீது எறியும். காற்று அடிக்கும் இடமெலாம் இலையும் செல்லும்; ஒரு சமயம் நல்ல இடத்திற்கும் இன்னொரு சமயம் கெட்ட இடத்திற்கும் அது செல்லும். இப்போது பகவான் உம்மை உலகில் வைத்திருக்கிறார். அது நன்றே, இங்கே யிரும். இங்கிருந்து உம்மைத் தூக்கி இதனினும் நல்ல இடத்தில் வைக்கும்போது, அப்போது யாது செய்வது என்பதைப்பற்றி நினைக்கப் போதுமான அவகாசம் கிடைக்கும்.

"பகவான் உம்மை உலகில் வைத்துள்ளார். அதைப்பற்றி உம்மால் என்ன செய்ய முடியும்? எல்லாவற்றையும் அவரிடமே ஒப்புவித்துவிடும். அவரது திருவடியிலே சரணம் புகுந்துவிடும். பின் உமக்கு யாதொரு குழப்பமும் இருக்காது. அப்போது ஒவ்வொன்றும் பகவானது செயலே என்பதை நீர் உணரப்பெறுவீர். எல்லாம் 'ராமரது இச்சை'யைப் பொறுத்தது."

ஓர் அடியார்: "'ராமரது இச்சை'யெனும் கதை யாது?"

குருதேவர்: "ஒரு கிராமத்தில் ஒரு நெசவுக்காரர் இருந்தார். அவர் பக்தி வாய்ந்தவர். எவரும் அவரை நம்புவர், அவர்மீது அன்பாயிருப்பார். அவர் தமது சாமான்களைச் சந்தையிலே விற்பது வழக்கம். வாடிக்கைக்காரன் ஒருவன் அவரிடம் ஒரு துண்டின் விலையை விசாரிக்கும்போது, நெசவுக்காரர் சொல்லுவார்: 'ராமரது இச்சையாலே நூல் விலை ஒரு ரூபாய், நெசவுக்கூலி நாலணு, ராமரது இச்சையாலே லாபம் இரண்டணு. ராமரது இச்சையால் துண்டின் விலை ஒரு ரூபாய் ஆறணு.' ஜனங்கட்கு நெசவுக்காரரிடம் இருந்த நம்பிக்கையினால், வாடிக்கைக்காரன் உடனே அவ்விலையைக் கொடுத்துத் துண்டைப் பெற்றுக்கொள்வான். நெசவுக்காரர் உண்மையான பக்தர். இரவில் அவர் உண்டபின் நெடுநேரம் பூஜையறையில் பகவானைத் தியானித்துக் கொண்டும் இருப்பார், ஒரு நாள் இரவில் நெடும்பொழுதாகியும் நெசவுக்காரர்க்குத் தூக்கம் வரவில்லை. அவர் பூஜையறையில் உட்கார்ந்து, இடையிடையே,

புகை குடித்துக்கொண்டிருந்தார்; அச்சமயம் ஒரு கொள்ளைக்காரக் கூட்டம் அவ்வழியே செல்ல நேர்ந்தது. அவர்கட்குத் தம் சாமான்களைச் சுமக்க ஓர் ஆள் வேண்டியிருந்தது; நெசவுக்காரரை நோக்கி 'எங்களோடு வா' என்றார். அவ்வாறு சொல்லிக்கொண்டே அவர்கள் அவரது கையைப் பிடித்து இழுத்துச் சென்றனர். ஒரு வீட்டில் கொள்ளையடித்தபின், நெசவுக்காரது தலைமீது சாமான் சுமையொன்றை வைத்து, அதைக் கொண்டுபோகும்படி அவரை ஏவினர். திடீரெனப் 'போலீஸ்'காரர் வரவே, திருடர்கள் ஓட்டம் பிடித்தனர். ஆனால் நெசவுக்காரரைச் சுமையுடனே கைதியாக்கினர். அவரை அடைத்து வைத்தனர். மறுநாள் 'மாஜிஸ்டிரேட்'டின் முன்பு விசாரணைக்காக அவரைக் கொண்டுவந்து நிறுத்தினர். கிராமத்தார் நடந்ததைத் தெரிந்துகொண்டு கச்சேரிக்கு வந்தனர். அவர்கள் 'மாஜிஸ்டிரேட்'டினிடம், 'கௌரவ எஜமான்களே இந்த மனிதர் ஒருக்காலும் திருடியிருக்க முடியாது' என்றனர். அதைக் கேட்டதும் அதிகாரி அந்த நெசவுக்காரரைத் தமது வாக்கு மூலத்தைக் கொடுக்கும்படி சொன்னார்.

"நெசவுக்காரர் சொன்னதாவது; 'எஜமானே, ராமரது இச்சையால் நான் இரவுச் சாப்பாட்டை முடித்தேன். பின் ராமரது இச்சையால் நான் பூஜையறையில் உட்கார்ந்திருந்தேன். ராமரது இச்சையால் அப்போது இரவில் வெகு நேரமாய்விட்டது. ராமரது இச்சையால் நான் பகவானைப்பற்றி நினைத்துக்கொண்டும், அவரது நாமகுண கீர்த்தனஞ் செய்துகொண்டும் இருந்தேன்; அப்போது ராமரது இச்சையால் ஒரு கொள்ளைக் கூட்டத்தார் அவ்வழியே சென்றனர். ராமரது இச்சையால் அவர்கள் என்னைத் தங்களோடு இழுத்துப் போனார்கள், ராமரது இச்சையால் அவர்கள் ஒரு வீட்டில் கொள்ளையிட்டனர். ராமரது இச்சையால் என் தலைமீது சுமையை வைத்தனர், அச் சமயம் ராமரது இச்சையால் போலீஸார் வந்து என்னைக் கைதியாக்கினர், பின் ராமரது இச்சையால் போலீஸார் வந்து என்னை இரவில் அடைத்து வைத்தனர். இன்று காலை ராமரது இச்சையால் என்னை எஜமான் முன்பு கொண்டுவந்து நிறுத்தினர்.' நெசவுக்காரர் ஒரு பக்தர் என்பதை மாஜிஸ்டிரேட் உணர்ந்து அவரை விடுதலை செய்ய உத்தரவிட்டார். வீட்டுக்குப்போகும் வழியில் நெசவுக்காரர் தமது நண்பரிடம், 'ராமரது இச்சையால் என்னை விடுதலை செய்துவிட்டனர்' என்றனர்.

"ஒரு மனிதன் இல்லறத்தில் இருப்பதா துறவி யாவதா என்பது ராமரது இச்சையைப் பொறுத்ததாகிறது. ஒவ்வொரு காரியத்தையும் பகவானிடம் ஒப்புவித்துவிட்டு, உலகத்தில் உமது கடமைகளை இயற்றிவாரும். உம்மால் வேறு என்ன செய்ய முடியும்?

'இல்லறத்தான் ஒரு ஜீவன்முக்த ஞகிவிடின், அவன் பிரியப்பட்டால் உலகத்தில் எளிதாக வாழக்கூடும். ஞானம் பெற்றவன் 'இந்த இடம்' 'அந்த இடம்' என்று வேறுபாட்டைக் காணமாட்டான். எல்லா இடங்களும் அவனுக்கு

ஒரேமாதிரிதான். 'அந்த இடம்' என்று நினைப்பவன் 'இந்த இடத்தை'யும் நினைப்பான்.

யான் கேசவரை முதலில் ஜெயகோபாலரது பூஞ்சோலை மாளிகையிலே சந்தித்தபோது, 'தமது வால் விழப்பெற்றவர் இவர் ஒருவரே' என்று நான் கூறினேன். இதைக் கேட்டதும் ஜனங்கள் சிரித்தனர். கேசவர் அவர்களிடம் 'சிரிக்காதிர், அவரது வார்த்தையில் ஏதேனும் பொருள் இருக்கவேண்டும். அவரையே கேட்போம்' என்றனர். அதன்பின் நான் கேசவரிடம் 'தவளைக் குஞ்சு வால் விழாதிருக்கும்வரை, தண்ணீரிலே மட்டும் அது வாழ்கின்றது. உலர்ந்த தரையில் அங்குமிங்கும் ஓட முடியாது. ஆனால் அதற்கு வால் விழுந்ததும், அது தரைமீது தத்திச் செல்கின்றது; அப்போது தரை நீர் இரண்டிலும் அது வாழக்கூடும். அதுபோல மனிதனுக்கு அவனது அஞ்ஞான வால் விழும் வரையிலும், அவன் உலக வாழ்வெனும் நீரில்தான் வாழமுடியும். ஆனால் அவ் வால் விழுந்ததும், அதாவது ஈசனைப்பற்றிய ஞானம் பெற்றதும் அவன் ஜீவன்முக்தனைப்போல் திரிவான்; அன்றுகில், பிரியம் இருப்பின் இல்லறத்தும் வாழக்கூடியவனுவான்,"

மகிமாசரணும் மற்ற அடியார்களும் குருதேவருடைய வார்த்தைகளைக் கவனித்துக் கேட்டுக்கொண்டு, மந்திரவசப்பட்டவர்போல இருந்தனர்.

குருதேவர்: "ஒரு நாள் நான் தேவேந்திரநாத் தாகூரை மதுர பாபு வோடு சென்று கண்டேன். நான் மதுரரிடம் 'தேவேந்திரநாத் தாக்கூர் ஈசனைப் பற்றிச் சிந்திப்பதாக யான் கேள்விப்பட்டேன், அவரைப் பார்க்க எனக்கு விருப்பம்' என்றேன். மதுரர் அதற்கு மறுமொழியாக, 'சரி, நான் தங்களை அவரிடம் அழைத்துச் செல்கிறேன். நாங்கள் இந்து கல்லூரியில் பள்ளித் தோழர்களாயிருந்தோம். அவரோடு நான் மிக்க நட்புடையவன்' என்று சொன்னர். நாங்கள் தேவேந்திரரது வீட்டுக்குச் சென்றோம். மதுரரும் தேவேந்திரரும் வெகுகாலமாக ஒருவரையொருவர் பார்த்திருக்கவில்லை. தேவேந்திரர் மதுரரிடம் 'தாங்கள் சற்றே மாறுதல் அடைந்திருங்கிறீர்கள் வயிற்றைச் சுற்றித் தங்கட்குச் சதை வளர்ந்துள்ளது' என்று சொன்னர். மதுரர் என்னைக்குறித்துப் பேசியதாவது: 'அவர் தங்களைக் காண வந்துள்ளனர். அவர் ஈசனைப்பற்றிய பைத்தியங்கொண்டவர்; யான் தேவேந்திரரது சரீர இலக்ஷணங்களைக் காண விரும்பி, அவரிடம் 'உமது உடலை யான் பார்க்கட்டும்' என்றேன். அவர் தமது மேலங்கியை உயர்த்த, சிவப்பு வண்ணங்கொண்ட நல்ல நிறமுடையரானதை யான் கண்டேன். அவரது தலைமயிர் அதுவரை நரைக்காதிருந்தது.

" ஆரம்பத்திலே நான் தேவேந்திரரிடம் ஒரு சிறிது கர்வம் இருப்பதைக் கவனித்தேன். அது இயல்பேயன்றே? அவரிடம் அவ்வளவு செல்வமும், அவ்வளவு பாண்டித்தியமும், அவ்வளவு பேரும் புகழும் பெற்றிருந்தார். அந்த அகந்தையின் கீற்றைக் கவனித்து, யான் மதுரரிடம் 'சரி, அகந்தை ஞானத்தின் விளைவா? அஞ்ஞானத்தின் விளைவா? பிரம்மஞ்ஞானியொருவனுக்கு " நான்

ஒரு பண்டிதன். நான் ஒரு ஞானி, நான் பணக்காரன்'' என்ற உணர்ச்சி எழக் கூடுமா ?' என்று கேட்டேன்,

'' தேவேந்திரரிடம் பேசிக்கொண்டிருக்கும் போது, ஒரு மனிதனது இயல்பை உள்ளவாறு அறியக்கூடிய மன நிலையில் திடீரெனப் புகுந்தேன். உள்ளுக்குள்ளே ஹீ ஹீ என்று சிரித்தேன். அந்நிலையில் பண்டிதர்களையும் புத்தகப்படிப்புள்ளவர்களையும் யான் துரும்பென மதிப்பேன். ஒரு பண்டித ரிடம் விவேகமும் வைராக்கியமும் இல்லையெனக் கண்டால், அவரை ஒன்றுக் கும் உதவாத் துரும்பெனக் கருதுவேன். ஒரு கழுகு உயரப் பரந்தாலும், அதன் பார்வை கீழுள்ள ஒரு பிணக்குழியின்மீது பதிந்து கிடக்கும்; இக் கழு கைப்போன்றவர் அப் பண்டிதர் என்பதை நான் காண்கின்றேன்.

'' தேவேந்திரர் தமது வாழ்க்கையில் யோகம் போகம் இரண்டையும் இணைத்திருந்ததை யான் பார்த்தேன். அவர்க்குப் பல குழந்தைகள் எல்லாம் சிறு வயதுடையனவாய் இருந்தன. குடும்ப வைத்தியர் அங்கே இருந்தார். ஆக, அவர் ஞானியாயிருப்பினும் அவர் இலௌகிக வாழ்க்கையில் ஈடுபட் டிருந்தார் என்பதை நீர் அறியலாம். யான் அவரிடம் 'நீர் உலகத்தில் வாழ்ந்து, ஈசனைப்பற்றிச் சிந்திக்கிறீர் என்று கேள்விப்பட்டுள்ளேன். ஈசனைப்பற்றி ஏதேனும் எமக்குச் சொல்லும்' என்று வேண்டினேன்.

'' அவர் வேதங்களினின்றும் சில மந்திரங்களை ஒப்பித்தார். 'இப் பிரபஞ் சம் ஒரு சர ராந்தலைப்போன்றது; ஒவ்வோர் உயிரும் அதில் உள்ள ஒரு விளக் காகும்' என்று அவர் கூறினர். ஒரு காலத்தில் பஞ்சவடியில் தியானித்துக் கொண்டிருக்கும்போது, அதைப்போன்ற காட்சியை யானும் பெற்றேன், அவரது வார்த்தைகள் எனது காட்சிக்குப் பொருத்தமாயிருந்ததை யான் அறிந்தேன். அவரது வார்த்தையை விளக்குமாறு அவரையே வேண்டினேன். அவர் சொன்ன தாவது : 'பகவான் தமது சொந்த மகிமையை வெளிப்படுத்தும் பொருட்டே மனிதரைப் படைத்தனர். அது இல்லையெனில், யாரால் இப் பிரபஞ்சத்தை அறிய முடியும் ? சர ராந்தலில் விளக்குகள் இல்லையாயின் எல்லாம் இருண்டு போகும். சர ராந்தலையும் ஒருவன் பார்க்க இயலாது.'

'' நாங்கள் நீண்டநேரம் பேசினோம். தேவேந்திரர் மகிழ்ச்சியடைந்து என் னிடம், 'தாங்கள் எங்களது பிராம்மோ சமாஜ விழாவிற்கு வரவேண்டும்' என்ற னர். 'அது ஈசனது சங்கற்பத்தைப் பொறுத்தது. எனது மன நிலைமையை நீர் அறியக் கூடுமே. ஈசன் என்னை இன்னபோது இன்ன நிலையில் வைப் பான் என்பதை அறிய முடியாது' என்று யான் பதிலளித்தேன். தேவேந் திரரோ 'இல்லை, இல்லை; தாங்கள் கட்டாயம் வரவேண்டும். ஆனால் ஆடை யணிந்துகொண்டு. உடலை ஒரு சால்வையால் போர்த்திக்கொண்டு வாருங்கள். அவ்வாறு செய்யாவிடில் தங்களது துப்புரவின்மையைக் கருதி ஏதேனும் துன் பந்தரும் மொழியை யாரேனும் கூற நேரலாம். அது என்னைப் புண்படுத்தும்' என்று வற்புறுத்துவாராயினர். அதற்கு நான் 'அது முடியாது, என்னால்

அவ்வாறு வாக்களிக்க இயலாது. என்னால் ஒரு பாபுவாக (பிரபுவாக) முடியாது' என்று மறுமொழி கூறினேன். தேவேந்திரரும் மதுரரும் சிரித்தனர்.

"அதற்கு மறுநாளே தேவேந்திரரிடமிருந்து மதுரர்க்கு வந்த கடிதத்தில் யான் விழாவிற்கு வரக்கூடாது என்று எழுதப்பட்டிருந்தது. எனது உடலை ஒரு சால்வையால் போர்த்துக்கொள்ளாமல் இருத்தல் மரியாதைக் குறைவாகும் என்றும் அவர் எழுதினர். (அனைவரும் சிரித்தல்)

"இன்னொரு பெரிய மனிதர் உளர்—சேனைத் தலைவர் எனப்படுபவர். இவர் இலௌகிக (உலகப்பற்றுள்ள) மனிதராயினும், அவர் ஈசனிடத்துப் பேரன்புடையவர். (மகிமரிடம்) ஏதாவது ஒரு சமயம் அவரொடும் பேசுக. அவர் வேதம் வேதாந்தம் கீதை முதலிய சாஸ்திரங்களை மனப்பாடம் பண்ணியவர். நீ அவரிடம் பேசும்போது இதைக் கண்டு பிடித்துக்கொள்வாய்.

"சேனைத் தலைவரது மனைவியார் என்னிடம் 'அவர் உலக வாழ்வின் இன்பத்தை அனுபவிப்பதில்லை. இக் காரணம் பற்றியே அவர் உலக வாழ்வைத் துறந்துவிடுவதாக ஒரு சமயம் கூறினார்' என்றனர். அடிக்கடி அந்த ஆசையை அவர் வெளியிட்டதும் உண்மைதான்.

"சேனைத் தலைவர் அடியார்களது குடும்பமொன்றிற் பிறந்தவர். அவரது தந்தையார் ஒரு போர் வீராயிருந்தார். போர்க்களத்தும் சிவபெருமானை ஒரு கையால் அவர் வணங்குவர் என்பதையும், உருவிய வாளை மற்றொரு கையிற் பிடித்திருப்பார் என்பதையும் கேட்டுளேன்.

"சேனைத் தலைவர் வைதிக ஆசாரத்திற் பற்றுடையவர். யான் கேசவ சந்திர சேனரைப் பார்த்து வந்தமையால், அவர் ஒரு மாதகாலம் இங்கு வருவதை நிறுத்திவிட்டார். கேசவர் ஆசாரப் பிரஷ்டர் (ஆசாரத்தினின்றும் தவறியவர்) என்று அவர் என்னிடம் கூறினர்; அவர் ஆங்கிலேயரோடு உணவருந்தினவர், தமது பெண்ணை அன்னிய ஜாதியில் மணம் புரிந்தவர், தமது சுய ஜாதியையும் இழந்துவிட்டார். யான் சேனைத் தலைவரிடம் 'அக் காரியங்களைப்பற்றி எனக்கென்ன கவனம்? கேசவர் ஈசனது நாமத்தைப் பாடுகின்றனர்; ஆதலின் ஈசனைப் பற்றிக் காதாரக் கேட்குமாறு அவரிடம் செல்கிறேன். யான் கனியை மட்டும் உண்கிறேன், முட்களைப்பற்றிக் கவனிப்பானேன்?' என்று சொன்னேன். ஆனால் சேனைத் தலைவர் பிடிவாதமாயிருந்தார். அவர் என்னிடம் 'நீர் ஏன் கேசவரைப் பார்க்கவேண்டும்?' என்று வினவினர். யான் கடுமையான குரலில் 'அவரிடம் பணம் பறிக்கச் செல்லவில்லையே. ஈசனது நாமத்தைக் கேட்கவே அங்குச் செல்கிறேன். நீர் வைஸிராயின் (அரசப் பிரதிநிதியின்) வீட்டுக்குச் செல்வது எப்படி? அவர் மிலேச்சராயிற்றே. அவரோடுகூட நீர் எப்படி இருக்கலாகும்?' என்று பதில் உரைத்தேன். அது அவரை ஒரு சிறிது சும்மா இருக்கச் செய்தது.

"ஆனால் அவர் ஒரு பெரும் பக்தர். பூஜை சமயத்தில் அவர் கற்பூர ஆரத்தியை சமர்ப்பிக்கின்றனர், அவர் தோத்திரங்களைச் சொல்லும்போது,

அவர் முற்றிலும் வேறான ஒருவராகின்றனர். அவர் மனம் அதில் ஆழ்ந்து விடுகின்றது.

(மஹிமரிடம்) "நீர் 'ஓம்' என்பதன் பொருளை 'அ' 'உ' 'ம்' என்பதைக் கொண்டு மட்டும் விரித்துரையும்."

மஹிமர்: "'அ' 'உ' 'ம்' எனும் மூன்றெழுத்துக்களும் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் எனும் மூன்றையும் குறிக்கும்."

குருதேவர்: "ஆனால் நான் ஒரு மணியின் ஒலியை உதாரணமாகக் கொள்கிறேன்; 'டாம்', ட—ஆ—ம். லீலை நித்யத்தில் லயமடைவதாகும் (ஒடுங்குவதாகும்) அது; தூலம் சூக்குமம் காரணம் மூன்றும் மஹா காரணத்தில் ஒடுங்குகின்றன; விழிப்பு கனவு உறக்கம் மூன்றும் துரியத்தில் ஒடுங்குகின்றன. மணியை அடித்தல், ஒரு கனமான எடை ஒரு பெருங் கடலுக்குள் விழுவதுபோன்றது. அலைகள் கிளம்ப ஆரம்பிக்கின்றன; நித்தியத்தினின்றும் லீலை கிளம்புகின்றது, தூல சூக்கும காரண சரீரங்கள் மஹா காரணத்தினின்றும் தோன்றுகின்றன. துரியத்தினின்றும் உறக்கம் கனவு நனவு எனும் நிலைகள் வெளிப்படுகின்றன. இவ் அலைகள் மஹா சமுத்திரத்தினின்றும் கிளம்பி, மறுபடியும் மஹா சமுத்திரத்தினிடம் ஒடுங்குகின்றன. நித்தியத்திலிருந்து லீலையும், லீலையிலிருந்து நித்தியமும். ஆகையால் யான் மணியின் ஒலியாகிய 'டாம்'ஐ உதாரணமாகக் கொள்கிறேன். யான் இப்பொருள்களையெல்லாம் தெளிவாகக் கண்டுள்ளேன். எல்லையற்ற சித் சமுத்திரம் (உணர்வுக் கடல்) ஒன்று உள்ளது என்பது எனக்குத் திவ்விய காட்சியில் அருளப்பட்டுள்ளது. அதனிடத்தினின்றும் லீலா உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் வருகின்றன; அதிலே அவை மீண்டும் ஒடுங்குகின்றன."

மஹிமர்: "அம்மாதிரியான உண்மைகளின் காட்சியைப் பெற்றவர்கள் சாஸ்திரங்களை எழுதவில்லை. அவர்கள் தமது சுய அனுபூதிகளிலே மூழ்கியிருந்தனர்; அவர்கட்கு எழுதப் பொழுது ஏது? எழுதுவதற்கு ஓர் அளவிற்குக் கணக்குப் பார்க்கும் மனம் ஒன்று அவசியம். பிறர் அவ்வுண்மைகளை ரிஷிகளிடமிருந்து (கண்டவரிடமிருந்து) கற்றுக்கொண்டு, நூல்களை எழுதினர்."

சனிக்கிழமை டிசம்பர் 6, 1884.

ஆதர் கல்கத்தாவின் வடக்குப் பகுதியில் ஸோமாபஜாரில் வாழ்ந்து வந்தார். ஏறக்குறைய ஒவ்வொருநாளும் அவர் கச்சேரியில் தமது கடினமான வேலையை முடித்துவிட்டு, பிற்பகலில் நேரஞ்சென்று வீட்டுக்குத் திரும்புவார்; அதன் பின் ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசிக்க வருவார். கல்கத்தாவிலுள்ள தமது வீட்டிலிருந்து ஒரு வாடகை வண்டியில் அவர் தக்ஷிணேசுவரம் செல்லுவார். குருதேவரைத் தரிசிப்பது ஒன்றே அவர்க்கு ஆனந்தம். ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணர் பேசுவதைச் சிறிதேனும் கேட்பது அவர்க்கு அரிதாகும். ஏனெனில், குருதேவரை வணங்கிவிட்டுக் கோயில்கட்கும் போயபின் அவர் குருதேவரது

வேண்டுகோட்கு இணங்கித் தரைமீது விரித்திருக்கும் ஒரு பாயிற் படுத்துக் கொண்டு விரைவில் உறங்கிவிடுவார். ஒன்பது பத்து மணிக்கு அவரை எழுப்பி வீடு திரும்பச் செய்வார், ஆயினும் தக்ஷிணேசுவரத்து வாழ்ந்த தெய்வப் புருடரைத் தரிசிக்க இயன்றதே தமது பேறு எனக் கருதினர். ஆதரது வேண்டுகோட்கு இணங்கி ஸ்ரீராமகிருஷ்ணர் அடிக்கடி அவரது வீட்டிற்குச் செல்வார். அவர் அவ்வாறு வரும் சமயமெல்லாம், ஞான விழா நடைபெறும். அடியார்கள் பெருந்தொகையினர் கூடுவர்; ஆதர் அவர்கட்கு நல்ல விருந் தளிப்பார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது பரிவாரங்களோடு ஆதரது வீட்டிற்கு வந்து சேர்ந்தார். ஒவ்வொருவரும் ஆனந்தமாயிருந்தனர், ஆதர் பெருஞ் செலவு தாம் செய்து விருந்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். பல புதிய மனிதரும் வந்திருந்தனர். ஆதரது அழைப்பிற்கு இசைந்து வேறு சில 'டெபுடி மாஜிஸ் டிரேட்'களும் அங்கிருந்தனர்; அவர்கள் குருதேவரை நன்கு கவனித்து, அவரது புனிதத் தன்மையை மதிப்பிட விரும்பினர். அவர்கட்கிடையே பத் தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மிக உயர்ந்த இலக்கிய நிபுணராய் விளங்கிய பங்கிம் சந்திர சாட்டர்ஜீயும் ஒருவர். அவர் தற்கால வங்காள இலக்கிய நூல்களை இயற்றியவருள் ஒருவர்; சமூக சம்பந்தமாகவும் மத சம் பந்தமாகவும் எழுதியவர். இந்தியா இங்கிலாந்தின் சேர்க்கையைப் பெற்றதன் பயனைத் தோன்றியவர் பங்கிம். அவர் இந்து சாஸ்திரங்கட்குத் தற்காலத் திற்கு ஏற்ற பொருள் கூறினர். சமூகச் சீர்திருத்தங்களையும் போற்றி வந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் அடியார்களோடு இன்பமாகப் பேசிக்கொண்டிருக்க ஆதர் தமது நண்பர்களிற் சிலரை அறிமுகப்படுத்தினர்.

ஆதர்(பங்கிம்மை அறிமுகப்படுத்தும்போது): "ஐயன்மீர், இவர் ஒரு பெரும் பண்டிதர், பல நூல்களை இயற்றியுள்ளார். தங்களைக் காண இங்கு வந் துள்ளனர். அவரது பெயர் பங்கிம் பாபு."

குருதேவர் (சிரித்துக்கொண்டே): "பங்கிம்! உம்மை வளையச் செய் தது யாது?" ('பங்கிம்' என்ற மொழிக்குப் பொருள் 'வளைந்தது.')

பங்கிம் (சிரித்துக்கொண்டே): "ஏன், சோடுகளே அதற்குக் காரணம். நம் வெள்ளைக்கார எசமானரின் உதைகளே என் உடலை வளைத்தன."

குருதேவர்: "அப்படியன்று, நண்பரே! ஸ்ரீ கிருஷ்ணரை வளையச் செய்தது அவரது பிரேமையே. ராதையின் மீதுள்ள பிரேமையால் அவரது உடல் மூன்று இடங்களில் வளைவதாயிற்று. அவர் 'திரிபங்கி' ஆனர். ஸ்ரீ கிருஷ் ணரது வடிவத்திற்கு இவ்வாறு காரணம் கூறுவர். அவர்க்கு நீலமேக வண்ணம் எவ்வாறு வந்தது என்று உமக்குத் தெரியுமா? அவர் அவ்வளவு குட்டையா யிருப்பதேன்? தமது கைம் முழத்தின்படி மூன்றரை முழமே இருப்பதேன்? பகவானைத் தொலையிலிருந்து பார்க்கும்வரை அவ்வாறு அவர் தோன்றுகிறார். கடலின் நீரும் தொலையிலிருந்து பார்ப்பார்க்கு அவ்வாறே நீலமாகத் தோன்று

கிறது. ஆனல் நீர் கடலினருகே சென்று, உமது கையில் நீரை எடுப்பீராஞல், அது நீலமாக உமக்குத் தோன்றுது; அது மிகத் தெளிவாய், ஒளி உட்புகுந்து செல்லும்படியாய் இருக்கும். அம்மாதிரியே, சூரியனும் வெகு தொலேயில் இருப்பதால் சிறியதாய்த் தோன்றுகிறது; அதனருகே நீர் செல்லுவீராயின், அதனேச் சிறியதாகக் காணமாட்டீர். பகவானது உண்மை இயல்பை உணரும் போது, அவர் நீலமாகவோ சிறியவராகவோ தோன்றுர். ஆனல் அது வெகு தூரத்திலுள்ள ஒரு தரிசனம்; அதைச் சமாதியிலன்றிப் பெற முடியாது. 'நான்' 'நீ' உள்ளவரை, நாமமும் உருவமும் இருக்கும். எல்லாம் பகவானது லீலே'. 'நான்' 'நீ' என்று உணரும்வரை, பலவகை உருவங்களின் மூலம் பகவான் விளங்குவதை ஒருவன் உணர்வான்,"

பங்கிம்: "ஐயன்மீர், தாங்கள் பிரசாரஞ் செய்யாததேன்?"

குருதேவர்: "பிரசாரமா? மனிதனது கருவமன்ருே அவனுக்குப் பிரசார நினேவை உண்டாக்குகிறது? மனிதன் ஓர் அற்பப் பிராணியே. பகவான் ஒருவரே பிரசாரஞ் செய்வார்—சூரிய சந்திரர்களேப் படைத்து, இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒளியை அளித்த அவரே செய்வார். பிரசாரஞ் செய்வது அவ்வளவு அற்பமான காரியமா? பகவானே உமக்கு முன் தோன்றிப் பிரசாரஞ் செய்யும்படி கட்டளேயிடும்வரை, உம்மால் பிரசாரஞ்செய்ய இயலாது, நீர் பிரசாரஞ்செய்யும்போது உம்மை ஒருவரும் தடுக்க முடியாது. நீர் ஆணேயைப் பெறவில்லே, ஆயினும் தொண்டை கட்டும்படி கதறுகிறீர். இரண்டு நாள் மக்கள் நீர் சொல்வதைக் கவனிப்பார். பின்பு அதை முற்றும் மறந்துவிடுவர். அது வேறெந்தக் கிளர்ச்சியையும் போன்றது; நீர் பேசும்வரை ஜனங்கள் 'ஆ! அவர் எவ்வளவு நன்ருகப் பேசுகிறூர்!' என்பர்; நீர் நிறுத்தினதும், எல்லாம் பறந்துபோம். பகவான் உமக்குமுன் காட்சியளித்து, ஆணேயையும் தருவாராயின், நீர் பிரசாரஞ் செய்யவும் மக்கட்குப் போதிக்கவும் வல்லவராவீர். இல்லாவிடில் உமக்குச் செவி சாய்ப்பார் யார்?"

அங்கு வந்திருந்தவர் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தனர்.

குருதேவர் (பங்கிம் இடம்): "நீர் பெரும் பண்டிதர் என்பதாகவும் பல நூல்கள் எழுதியிருப்பதாகவும் தெரிந்துகொண்டேன். மனிதனது கடமையைப் பற்றி நீர் யாது நினேக்கிறீர் என்பதை எனக்குச் சொல்லும். இறந்தபின் அவனேடு கூடச்செல்வது யாது? உமக்கு மறுமையில் நம்பிக்கை யுண்டோ?"

பங்கிம்: "இனி வரப்போகும் பிறவியா? அது என்ன?"

குருதேவர்: "உண்மையே. ஞானம் பெற்றபின் ஒருவன் இறப்பானேயின், அவன் வேறேர் உலகம் போகவேண்டிய அவசியம் இல்லே. அவனுக்கு மறு பிறவி இல்லே. ஆனல் அவன் ஞானம் அடையாதவரை, அவன் ஈசனது தரிசனத்தைப் பெருதவரை, அவன் இப்பூமியிற் பிறக்க மறுபடியும் வர வேண்டும்; அதைத் தப்ப அவனுக்கு முடியாது. அம்மாதிரியான ஒருவனுக்கு இனிவரும் பிறவி (மறுமை) உண்டு. ஈசனது தரிசனம் பெற்றபின், ஞானம்

அடைந்தபின், அவன் முக்தனாகிறான். அவனுக்கு அதன்பின் பூமிக்குத் திரும்ப வருதல் இல்லை. அவித்த நெல்லை விதைத்தால் அது முளையாது. அதுபோல் ஞானத் தீயால் ஒருவன் அவிந்துவிடுவானால், சிருஷ்டியெனும் லீலையில் அவன் பின் கலந்துகொள்ளல் இயலாது. அவித்த நெல்லை விளைப்பதால் உமக்கு வரும் லாபம் எது?

(பங்கிம்மை நோக்கிச் சிரிப்போடு) "சரி. மனிதனின் கடமைகளைப்பற்றி நீர் என்ன சொல்கிறீர்?"

பங்கிம்(சிரித்துக்கொண்டே): "அவற்றைப்பற்றி என்னைக் கேட்பீராகில், அவை உண்ணலும் உறங்கலும் இனம் பெருக்கலுமே என்பேன்.

குருதேவர்(கடுகடுப்போடு): "ஏ, சீச்சீ, உமக்கு வெட்கமில்லை! அல்லும் பகலும் நீர் செய்வது எதுவோ அதுவே உமது வாயில் வரும். உண்பதையே ஒருவன் ஏப்பம் விடுகிறான். முள்ளங்கி உண்டவனிடம் முள்ளங்கி ஏப்பமே வரும்; இளநீரைக் குடிப்பவன் இளநீர் ஏப்பம் விடுவான்; பகலும் இரவும் நீர் 'காமினி' (பெண்) 'காஞ்சனம்' (பொன்) இரண்டிற்கும் நடுவே வாழ்வீர்; ஆதலின் உமது வாயினின்றும் அவற்றைப்பற்றிய மொழிகளே வெளி வருகின்றன. உலகப் பொருள்களைப்பற்றிச் சதா நினைப்பதனால், ஒருவனிடம் கணக்குப் பார்க்கும் இயல்பும் கபடமும் உண்டாகின்றன. இதற்கு மாறாக, அவன் ஈசனைப்பற்றி நினைப்பதனால் கபடமற்றவனாகின்றான். பகவானைக் கண்டவன் ஒருவன் ஒருக்காலும் நீர் சற்றுமுன் சொன்னதைச் சொல்லான். ஒரு பண்டிதன் ஈசனைப்பற்றி நினையாதவனையும், விவேகமும் வைராக்கியமும் இல்லாதவனையும் இருப்பின், அவனுக்குக் கல்வியினால் ஆன பயன் என்ன?

"பண்டிதன் பல நூல்களும் சாஸ்திரங்களும் கற்றுள்ளான் என்பதில் ஐயமில்லை; அவன் புத்தகங்களில் உள்ளதைக் கடகட என்று ஒப்பிக்கலாம், நூல்களை எழுதியிருக்கலாம். ஆனால் அவன் காமப்பற்று உடையவனாயின், பணமும் புகழுமே முக்கியம் என்று நினைப்பானாயின், அவனைப் பண்டிதன் என்னலாமா? ஈசன்மீது சிந்தனையில்லாதவன் எவ்வாறு பண்டிதனாவான்?

"சிலர் அடியார்களைப் பற்றிப் பின்வருமாறு சொல்லலாம்: 'அல்லும் பகலும் இம் மக்கள் ஈசனைப் பற்றிப் பேசுகின்றனர். இவர்கள் பித்துக்கொண்டவர், அறிவை இழந்து விட்டனர். ஆனால் நாம் எவ்வளவு கெட்டிக்காரர்! பணம், புகழ், விஷய சுகம் எனும் மூன்றாலும் நாம் இன்பம் அனுபவிக்கிறமாதிரிதான் எப்படியென்பது!' காகமும் தன்னை ஒரு சாமர்த்தியமுள்ள பறவையாக நினைக்கிறது; அது அதிகாலையில் எழுந்ததும் முதன்முதலாகச் செய்வது யாது? பிறர் மலத்தையே உண்டு தன் வயிற்றை நிரப்புதலே. அதன் கர்வ நடையை நீர் பார்த்ததில்லையா? மிக்க சாமர்த்தியம்தான்!"

மோனமே குடிகொண்டிருந்தது அங்கு.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தொடர்ந்து கூறியதாவது; 'ஆனால் ஈசனை நினைப்பவரும், தமது விஷயப்பற்று நீங்குவதற்காக இரவும் பகலும் பிரார்த்திப்போரும்,

பகவானது பாதமலரினின்று பெருகும் அமுதத்தையன்றி வேறெதையும் இன்ப மாகக் கொள்ளாதவரும், உலக இன்பங்களை வேம்பாக உணர்பவரும் அன்னம் போன்றவர். அன்னத்தின்முன் பாலையும் நீரையும் கலந்து வைப்பின், அது நீரை விட்டுப் பாலை மட்டும் குடிக்கும். நீர் அன்னத்தின் நடையைக் கவனித் திருப்பதில்லையா? அது முன்னேக்கி நேராக ஒரே திசையிற் செல்கிறது, அது போன்றே மெய்யடியார்களும், அவர்கள் பகவானை நோக்கி மட்டும் செல்வார். அவர்கள் வேறென்றையும் நாடார். வேறெதையும் இன்பமாக நினையார்.

(பங்கிம்மிடம் பேரன்பொடு) "என்னுடைய வார்த்தைகளால் நீர் மனத் தாங்கல் அடையாதிருக்கவேண்டுகிறேன்."

பங்கிம்: "ஐயன்மீர், இனிய சொற்களையே கேட்க இங்கு வந்தவன் அல்லேன்."

குருதேவர்(பங்கிம்மிடம்): "காமம் காஞ்சனம் இரண்டு மட்டுமே உலகம்; அவை மட்டுமே மாயையாகும்; அவற்றினால்தான் நீர் கடவுளைக் காணவோ நினைக்கவோ முடியாதவரானீர். ஒன்றிரண்டு குழந்தைகளைப் பெற்றபின் கணவனும் மனைவியும் அண்ணனையும் தங்கையையும் போன்று வாழவேண்டும், கடவுளைப் பற்றியே பேசவும் வேண்டும். பின் இருவரது மனமும் ஈசனை நோக்கி இழுக்கப்படும்; மனைவி கணவனுக்கு ஞான நெறியில் துணையாயிருப்பாள். மிருக உணர்ச்சியைக் கைவிடாமல் எவனும் பேரின்பத் தைச் சுவைக்கமாட்டான். பக்தன் தனக்கு அந்த உணர்ச்சி நீங்கத் துணை செய்யுமாறு இறைவனிடம் பிரார்த்திக்கவேண்டும். அது மனப்பூர்வமான பிரார்த்தனையாகவேண்டும். பகவான் நம்மை உள்ளிருந்து அடக்குபவர், அந்தர்யாமி; நமது பிரார்த்தனை உண்மையானதாயின் (முழு மனதோடு கூடிய தாயின்), அவர் நமது பிரார்த்தனையைக் கேட்பது உறுதி.

"பொன்னைப்பற்றியோ? பஞ்சவடிக்குக் கீழுள்ள கங்கைக் கரையிலே அமர்ந்துகொண்டு, 'ரூபாய் களிமண்ணே, களிமண் ரூபாயே' என்று யான் சொல்லிக்கொள்வதுண்டு, பின் இரண்டையும் கங்கையில் எறிந்துவிடுவேன்!"

பங்கிம்: "உண்மையா அது? பணம் களிமண்ணா! ஐயன்மீர், தங்க ளிடம் சில காசுகள் இருப்பின் தாம் ஏழைகட்கு உதவலாம். பணம் களி மண்ணையின், ஒருவன் பிறர்க்குத் தானங்கொடுக்கவோ நன்மை செய்யவோ இயலாதே."

குருதேவர்(பங்கிமிடம்): "தான தருமம்! நன்மை செய்தல்! பிறருக்கு நன்மை செய்ய உமக்கு இயலும் என்று நீர் எப்படித் துணிந்து கூற முடியும்? மனிதன் தன்னைப்பற்றி எவ்வளவோ பெருமையாகப் பேசிக்கொள்கிறான்! ஆனால் அவன் தூங்கும்போது அவனது வாயிலே ஒருவன் அழுக்கு நீரை ஊற்றினாலும், அவன் அதை அறியவும் மாட்டான்; அவனது வாய் நிரம்பி அது வழியும், அப்போது அவனது பெருமைப் பேச்சும், கர்வமும், அகந்தையும் எங்கே போயின?

"ஓர் இல்லறத்தான் உண்மையான பக்தனுயின், அவன் தன் கடமைகளைப் பற்றின்றிச் செய்து வருவான்; அவன் தனது கரும பலனை—அவனது லாபமோ நஷ்டமோ, அவனது சுகமோ துக்கமோ, எதையும்—பகவானுக்குச் சமர்ப்பித்துவிடுகிறன்; இரவும் பகலும் பக்தி யொன்றுக் காகவே பிரார்த்திக்கிறன். இதுதான் நிஷ்காம கருமம் (பயன் கருதாத வினை) எனப்படும். ஒரு துறவியும் தனது கருமத்தை யெல்லாம் அம்மாதிரியான பற்றற்ற நிலையிலே இயற்றவேண்டும்; ஆனல் இல்லறத்தானைப் போல அவனுக்குக் கவனிக்கவேண்டிய லௌகிக (உலக நடைக்குரிய) கடமைகள் இல்லை.

"ஓர் இல்லறத்தான் பற்றற்ற நிலையிலே தருமஞ் செய்வானுயின், அவன் உண்மையாகவே தனக்கும் பிறர்க்கும் நன்மை செய்பவனுகிறன். எல்லா உயிர்களிலும் உறையும் பகவானுக்கே அவன் பணி செய்கிறன்; அவன் பகவானுக்குப் பணி செய்யும்போது மெய்யாகத் தனக்கே பணி செய்வதன்றிப் பிறர்க்கன்று. ஒருவன் எல்லா உயிர்களின் மூலமும்—மனிதர்கள் மூலமாக மட்டுமன்றி, மிருகங்கள் முதலான வேறு உயிர்களின் மூலமாகவும்—இறைவனுக்குப் பணி செய்வானுயின்; அவன் பெயரையோ, புகழையோ, மரணத்திற்குப் பின் சுவர்க்கத்தையோ நாடானுயின்; தனது பணியைப் பெறுபவரிடமிருந்து யாதொரு கைம்மாறையும் நாடானுயின்; இம் மனநிலையோடு தனது பணியை அவன் நடத்தி வருவானுயின்,—அவன் உண்மையாகவே நிஷ்காம (பற்றற்ற) கருமம் புரிபவனுவான். அத்தகைய தன்னயமற்ற கருமத்தால் அவன் தனக்கே நன்மை செய்துகொள்ளுகிறன். இது கருமயோகம் எனப்படும். இதுவும் பகவானை அடைய ஒரு வழி. ஆனல் இது மிக்க கடினம், கலியுகத்திற்குப் பொருத்தமானதன்று.

"ஆதலால் நான் சொல்வதாவது; அம்மாதிரிப் பற்றற்ற நிலையில் கருமம் புரிபவன்—அன்பாயும் பரோபகாரச் சிந்தனையுடையவனுயும் இருப்பவன்—தனக்கே நன்மை செய்பவனுவான். பிறர்க்கு உதவி செய்தலும், பிறர்க்கு நன்மை செய்தலும்—இது பகவான் ஒருவரது வேலையே, மனிதர்க்காகச் சூரிய சந்திரர்களையும், தாய் தந்தையரையும், பழங்களையும், மலர்களையும், தானியத்தையும் படைத்த அந்த இறைவரது தொழிலே. பெற்ருரிடம் நீர் காணும் அன்பு பகவானது அன்பே; அதை அவர்க்குப் பகவான் அளித்தது, தமது படைப்பைப் பாதுகாத்தற்காக. இளகிய சித்தமுடையாரிடம் நீர் காணும் இரக்கம் பகவானது இரக்கமே (தயையே). அதை அவர்க்குப் பகவான் அளித்தது திக்கற்றவரைப் பாதுகாத்தற்காக. நீர் தரும சிந்தனையுடையராயினும் ஆகாவிடினும், அவர் தமது தொழிலை எதாவது ஒரு வழியில் நடத்திக்கொள்வார். எதுவும் அவரது செயலைத் தடுக்க முடியாது.

"அவ்வாருயின், மனிதனது கடமை யாது? வேறெதுவா யிருக்கலாம் அது? பகவானிடம் சரணம் புகுந்து, அவரைத் தரிசிக்குமாறு மனத்துயரத்தோடு (துடிப்போடு) அவரிடம் பிரார்த்தனை செய்தலே.

(பங்கிம்மை நோக்கி) "புத்தகங்களையும் சாஸ்திரங்களையும் படியாமல் ஈசனைத் தரிசிக்க முடியாது என்பர் சிலர். முதன் முதலாக இவ்வுலகத்தையும் அதிலுள்ள உயிர்களையும் பற்றி அறியவேண்டும் என்றும், முதன்முதலாக 'விஞ்ஞானம்' கற்கவேண்டும் என்றும் அவர்கள் நினைக்கின்றனர். முதலில் ஈசனது படைப்பை அறியாமல் ஈசனை அடைய முடியாது என்று அவர்கள் நினைக்கின்றனர். எது முதலாவது—'விஞ்ஞான'மா, ஈசனா? நீர் என்ன சொல்கிறீர்?"

பங்கிம்: "முதன்முதலாக இவ்வுலகிலுள்ள பற்பல பொருள்களையும் பற்றி நாம் அறிதல் வேண்டும் என்பதே எனது கருத்தும். இவ்வுலகினைப் பற்றிக் கொஞ்சமேனும் அறியாமல் ஈசனை நாம் அறிவது எப்படி? நாம் முதலில் புத்தகங்களின் மூலம் அறியவேண்டும்."

குருதேவர்: "அந்த ஒரே கூக்குரல் உங்கள் எல்லோரிடமிருந்தும் வருகின்றது. ஆனால் பகவான் முதலிலும், பின்னர் அவரது படைப்பும் அன்றோ? நீர் இறைவனை அறியும்போது, மற்ற யாவற்றையும் அறிகிறீர்; ஆனால் அற்பப் பொருள்களைப் பற்றி அறிவதில் அப்போது உமக்குக் கவனம் இருப்பதில்லை. அதுவே வேதங்களிலும் கூறப்பட்டுள்ளது. நீர் ஒருவரை நேரிற் பார்க்கும்வரை, அவரது குணங்களைப் பற்றிப் பேசுகிறீர்; ஆனால் அவர் உமக்கு முன் வந்ததும், அப்பேச்செல்லாம் நின்றுவிடுகிறது. அவரோடு பேசுவதிலேயே ஆனந்தத்தில் மூழ்கிவிடுகிறீர். அவரது குணங்களைப் பற்றிப் பின் பேசமாட்டீர்.

"முதலில் ஈசனை அடையும், பின்பு படைப்பையும் மற்றப் பொருள்களையும் பற்றி நினையும். ஒன்றை நீர் அறிந்தால் எல்லாவற்றையும் அறிவீர். ஒன்று என்னும் இலக்கத்திற்குப் பின் ஐம்பது சுழியை எழுதினால், பெரும் இலக்கம் ஒன்று உண்டாகும்; ஆனால் ஒன்றை அழித்துவிடின், எதுவும் இல்லாது போகும். ஒன்றே பலவற்றையும் உண்டாக்கும். முதலில் ஒன்று, பின் பல. முதலில் பகவான், பின் அவராற் படைக்கப்பட்ட உயிர்களும் உலகமும்.

"கசிந்த நெஞ்சோடு பகவானிடம் பிரார்த்தியும். அது மனப்பூர்வமான தாயின், உமது பிரார்த்தனையை அவர் கவனித்துக் கேட்பார், ஒருக்கால் அவர் உம்மைச் சாதுக்களோடு சேரும்படி ஏவுவார்; அவர்களோடு நீர் கூடியிருப்பீர்; அச்சேர்க்கையால் ஞான நெறியில் முன் செல்ல உமக்கு உதவிவரும். ஒருக்கால் யாரேனும் 'இதைச் செய்யும், நீர் பகவானைக் காண்பீர்' என்று உம்மிடம் சொல்வார்.

"குருவின் மொழிகளில் நம்பிக்கை அவசியம், குரு சச்சிதானந்தமேயன்றி வேறில்லை. ஈசனே குரு. குழந்தையைப்போல அவருடைய மொழிகளில் நீர் நம்பிக்கை வைப்பீராயின், நீர் பகவானை அடைவீர். கபடமோ கணக்குப் பார்க்கும் இயல்போ, வழக்காடும் புத்தியோ பெற்றுள்ள ஒருவரால்

பகவானை அடைய முடியாது. நம்பிக்கையும் சிரத்தையும் கட்டாயம்வேண்டும். வெளி வேடம் உதவாது. சிரத்தையுடையார்க்கு ஈசன் மிக அருகில் உள்ளான். பொய்வேடம் புனைபவனுக்கு ஈசன் மிக மிகத் தொலையில் இருப்பான்.

" ஈசனுக்காகக் குழந்தையைப்போல மனம் வருந்தித் துடிக்கவேண்டும். தாயைக் காணுதபோது குழந்தை மனக்கலக்கமே யடைகிறது. அதன் கையில் ஒரு தின் பண்டத்தைக் கொடுத்து நீர் சாந்தப்படுத்த முயலலாம். ஆனல் அது ஏமாந்து போகாது. 'வேண்டாம், என் அம்மாவிடம் நான் போகவேண்டும்' என்று மட்டும் சொல்லும். ஈசனுக்காக அம்மாதிரியான மனத்துயரம் ஒருவன் அடையவேண்டும், அந்த வருத்தத்தை எவ்வளவு என்பது! குழந்தை தன் தாய்க்காக எவ்வளவு துயரப்படுகிறது! அதன் தாய் நினைவை அது மறக்கும் படி செய்ய எதனலும் இயலாது. எவனுக்கு உலக இன்பங்களின் அனுபவம் ருசியற்றதாகத் தோன்றுமோ, உலகத்திலுள்ள எதனினும்—பணம், புகழ், உண்டி உடை முதலியன, விஷய சுகம் என்பவற்றில்—இன்பமடையாதவன் எவனே, அவனே தேவியின் தரிசனத்திற்காக மனப்பூர்வமாகத் துயரப்படுபவனுவான், அவனிடம் மட்டுமே, தேவியம்மை தனது மற்றக் கடமைகளையெல்லாம் விட்டு ஓடி வருகிறாள்.

" அமைதியற்றுத் துயரப்படும் அந்நிலையே வேண்டிய அனைத்தும் ஆகும், நீர் எந்த நெறியைப் பின்பற்றினலும் — இந்துவாயோ, முசல்மானையோ, கிறிஸ்துவனையோ, சாக்தனையோ, வைஷ்ணவனையோ, பிராம்மோவாயோ நீர் இருப்பினும்—அமைதியற்றுத் துயரப்படுதலே உயிர்நிலை யாகும். பகவான் நம்மிடம் அந்தர்யாமியாயுள்ளார். தவருன பாதையில் நீர் செல்வதாயினும், குற்றமில்லை—நீர் பகவானுக்காக ஆருத் துயரமுறுதல் வேண்டும் என்ப தொன்றே. அவரே உம்மைச் சரியான பாதைக்குக் கொண்டு வருவார்."

பிராம்மோ சமாஜத்தைச் சேர்ந்த திரைலோக்யர் பாடத் தொடங்கினர். உடனே ஸ்ரீராமகிருஷ்ணர் எழுந்து நின்று புற உலகத்தை மறக்கலாயினர், அவரது மனம் முழுதும் உண்முகமாயிற்று, அவர் சமாதியில் அழுந்தினர். அடியார்கள் அவரைச் சுற்றி வட்டமாக நின்றனர். கூட்டத்தை விலக்கிக் கொண்டு பங்கிம் குருதேவரது அருகே வந்து, அவரை உற்று நோக்க ஆரம் பித்தார். அதுவரை எவரையும் சமாதி நிலையில் அவர் கண்டவரல்லர்,

சிறிது நேரம் சென்றபின் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒருவாறு தமது உணர்வு மீளப்பெற்றவராய், ஆனந்த பரவச நிலையிலே ஆடத் தொடங்கினர், அது ஒருக்காலும் மறக்க முடியாத ஒரு காட்சி. பங்கிம்மும் அவருடைய வெள்ளைக் கார மோகமுற்ற நண்பர்களும் ஆச்சரியத்தோடு அவரை நோக்கி வந்தனர். இது ஈசுவர ஆவேச நிலையா? அடியார்களும் வியப்புமிகுந்தவராய் அவரைக் கவனித்து வந்தனர்.

பாடலும் ஆடலும் முடிவடைய, குருதேவர் தமது ஆசனத்து அமர்ந் தனர். எல்லோரும் அவரைச் சுற்றி உட்கார்ந்தனர்.

பங்கிம்(குருதேவரிடம்): "ஐயன்மீர், பக்தியை உண்டாக்குவது எப்படி?"

குருதேவர்: "அமைதியற்றுத் துயரடைவதினால்—ஒரு குழந்தை தன் தாயினைக் காணத் துயருறுவது போன்ற நிலையால். குழந்தை தாயினிடமிருந்து பிரிக்கப்படும்போது மனக்கலக்கமுற்று, அவளுக்காகத் துயரப்பட்டு அழுகிறது. பகவானுக்காக இம்மாதிரி ஒருவன் அழுவானனால். அவரைக் காணவும் இயலும்.

"பொழுது விடியுமுன் கீழ்வானம் அடியிலே சிவக்கின்றது, அப்போது விரைவில் சூரியோதயம் ஆகும், அதுபோல ஒரு மனிதன் இறைவனுக்காக மனத்துயரம் அடைவதை நீர் காண்பீராயின் அவனுக்கு வெகு காலம் ஈசனது தரிசனத்தைப் பெறக் காத்திருக்கும் அவசியமில்லை என்பது மிக நிச்சயம்,

(பங்கிம்மிடம்) "உமக்கு யான் ஒன்று சொல்லுகிறேன், நீரின் மேற்புறத்திலே மிதப்பதனால் உமக்கு வரும் லாபம் என்ன? நீர்க்குள்ளே சற்று மூழ்கும். மணிகள் நீர்க்கு அடியிலே ஆழத்தில் உள்ளன. ஆதலால் நீர்க்கு மேலே உமது கைகளையும் கால்களையும் அடிப்பதனால் நன்மை யாது? உண்மையான மணி கனமுள்ளதாகும். அது மிதக்காது; அடிவரை அமிழ்ந்துவிடும், உண்மையான மணியைப்பெற, நீர் ஆழ்ந்து மூழ்கவேண்டும்."

பங்கிம்: "ஐயா எங்களால் யாது செய்ய முடியும்? நாங்கள் ஒரு மிதப்போடு சேர்த்துக் கட்டப்பட்டுள்ளோம். அது எங்களை மூழ்கவொட்டாது தடுக்கிறது," (அனைவரும் சிரித்தல்)

குருதேவர்: "ஒருவன் ஈசனை நினைக்கமட்டும் செய்வானகில், எல்லாப் பாவங்களும் மறைந்துவிடும். அவரது நாமம் மரணமென்னும் விலங்கையும் நொறுக்கும், நீர் மூழ்கவேண்டும்; இல்லாவிடில் நீர் மணியைப் பெறமாட்டீர்."

பங்கிம் குருதேவர் முன்பு தாழ்ந்து வணங்கினர். அவர் விடைபெற்றுக் கொள்ளும் தருணமாயிருந்தது.

பங்கிம்: "ஐய, நீர் நினைக்கிறபடி நான் அவ்வளவு மூடன் அல்லேன். நான் பிரார்த்திக்க வேண்டியது ஒன்று உள்ளது. உமது புனிதமான திருவடிகளின் தூளால் எனது இல்லத்தை அலங்கரிக்கத் திருவுள்ளம் கொள்வீராக."

குருதேவர்: "அது நேர்த்தியானதே. பகவானது திருவுள்ளமானால் நான் போவேன்."

பங்கிம் விடைபெற்றார்; ஆனால் அவரது மனம் வேறு விஷயத்தில் ஊன்றிக்கிடந்தது. அவர் கதவுவரை சென்றதும், தமது சால்வையை அறையில் விட்டுச் சென்றதை அறிந்தார்; அவர் மேலாடையின்றி உள்ளங்கியோடுமட்டும் இருந்தனர். ஒரு பிரபு அவரது சால்வையை அவர்க்குக் கொடுத்தார்.

ஆதர் குருதேவர்க்கும் அடியார்கட்கும் விருந்து வழங்கினர், மாலையில் வெகுநேரம் கழிந்த பின்னரே அடியார்கள் வீடு திரும்பினர். குருதேவரது

அற்புதப் பிரேமை வடிவத்தையும் அவருடைய ஞான மொழிகளையும் தம் நெஞ் சத்து வைத்துப் போற்றிக்கொண்டே வந்தனர்.

பங்கிம் ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தமது இல்லத்திற்கு வருமாறு அழைத்திருந் தமையால், சில நாள்கட்குப்பின் குருதேவர் கிரீஷையும் ம—வையும் அவரது கல்கத்தா இல்லத்திற்கு அனுப்பினர். அச்சமயம் பங்கிம் அவ்விரு அடியார்க ளொடும் குருதேவரைப்பற்றி வெகு நேரம் வழக்காடிக்கொண்டிருந்தார். ஸ்ரீராம கிருஷ்ணரைத் தாம் மீண்டும் பார்க்க விரும்புவதாக அவர்களிடம் கூறினர். ஆனல் அந்த ஆசை நிறைவேறுது போயிற்று.

9

சில நெருங்கிய சீடர்கள்

புதன், மார்ச்சு 11, 1885

பள்ளிக்கூட வேலைப் பொழுது கழிந்ததும், ம— பலராமருடைய வீட்டிற் குச் சென்றார்; அங்கே குருதேவர் கூடத்தில் தமது அடியார்களும் சீடர்களும் சூழ்ந்திருக்க அமர்ந்திருத்தலைக் கண்டார். குருதேவரது முகத்தே ஓர் இனிய புன்சிரிப்பு ஒளி வீசிக்கொண்டிருந்தது; அவ்வொளி அறையிலுள்ளாருடைய முகங்களிற் பிரதிபலித்து அவற்றை ஆனந்த மாக்கியது. குருதேவரது பக்கத் தில் ஓர் ஆசனத்தில் அமரும்படியாக ம— வேண்டிக்கொள்ளப்பட்டார்.

குருதேவர் (கிரீஷிடம்): "இந்த விஷயத்தைப் பற்றி நீர் நரேந்திரனுடன் வழக்காடி, அவன் இன்ன சொல்கிறான் என்பதைப் பாரும்."

கிரீஷ்: "பகவான் அனந்தமானவர் என்றும், நாம் பார்க்கும் பொருள் களோ மக்களோ பகவானின் பாகங்கள் என்று சொல்லுவது கூட நாம் சொல்ல முடியாது என்றும் நரேந்திரர் கூறுகிறார். அனந்தமான பொருளினிடம் பாகங் கள் ஏது? அது இயலாதது."

குருதேவர்: "பகவான் எவ்வளவு பெரியவராயும் அனந்தமாயும் இருப்பினும், அவரது ஸாரமான பாகம் மனிதன் மூலமாக அவரது சங்கற்பம் ஒன்றினாலே பிரகாசிக்கக் கூடும், பிரகாசிக்கத்தான் செய்கிறது. பகவான் மனிதனாக அவதரித்தலை உவமானத்தால் விளக்கவொண்ணாது. ஒவ்வொரு வரும் தாமே அதை உணர வேண்டும், நேர் காட்சியினால் தரிசிக்கவேண்டும். உவமானம் நமக்குக் கண நேரக் காட்சி போன்ற அற்பக் காட்சியைத்தான் தரும். ஒரு பசுவின் கொம்புகளாயோ கால்களாயோ வாலாயோ தொடுவதனால் நாம் உண்மையாகவே பசுவைத்தான் தொடுகிறோம்; ஆனால் ஒரு பசு சம் பந்தமான முக்கியப் பொருள் பாலே; அது மடி வழியாக வருகிறது. பக வானது அவதாரம் மடியைப் போன்றது. பகவான் மக்கட்குப் பக்தியையும் பிரேமையையும் போதிப்பதற்காக இடையிடையே தாமே மனிதனாக அவதரிக் கிறார்."

கிரீஷ்: "நரேந்திரர் 'பகவானைப் பற்றிய எல்லாவற்றையும் அறிய எப் போதாயினும் இயலுமா? அவர் அனந்தமானவர்' என்று சொல்லுகிறார்."

குருதேவர் (கிரீஷிடம்): "பகவானைப் பற்றிய ஒவ்வொன்றையும் எவ ரால் அறிய இயலும்? பகவானது அம்சம் சிறியதாயினும் பெரியதாயினும், எந்த அம்சத்தையேனும் அறியும் திறமை மனிதனுக்கு உண்டோ? பகவானைப் பற்றிய ஒவ்வொன்றையும் அறியும் அவசியந்தான் என்ன? அவரை நாம் தரி சிக்க மட்டும் கூடுமாயின் அது போதியதாகும். அவரது அவதாரத்தைத் தரி சிக்கமட்டும் செய்வோமாயின், நாம் பகவானையே தரிசிப்பவராவோம். ஒருவர் கங்கைக்குச் சென்று, அதன் நீரைத் தொடுவதாக வைத்துக்கொள்ளும். அவர் அப்போது 'ஆம், யான் கங்கையைக் கண்டும் தொட்டும் உள்ளேன்' என்று சொல்வர். அப்படிச் சொல்வதற்கு அவர் ஹரித்துவார முதல் கங்கா சாகரம் வரை நதியின் முழு நீளத்தையும் தொடவேண்டிய அவசியம் இல்லை. (சிரிப்பு)

"நான் உமது பாதத்தைத் தொட்டால், உம்மைத் தொட்டதாக ஆவது நிச்சயம். (சிரிப்பு) ஒருவர் சமுத்திரத்திற்குப் போய் அதன் நீரில் ஒரு சிறிதை மட்டும் தொடுவரானல், அவர் சமுத்திரத்தையே தொட்டார் என்பது நிச்சயம். தீ யெனும் பூதம் அங்நிலையில் எல்லாப் பொருள்களிலும் உள்ளது; ஆனல் மரத்தில் அது மிக்க அளவிற்கு உள்ளது."

கிரீஷ் (சிரிப்போடு): "நான் தீயை நாடிக்கொண்டிருக்கிறேன். எங்கே அது கிடைக்கக் கூடுமோ, அவ்விடம் நான் போகவேண்டியது இயல்புதானே."

குருதேவர் (சிரிப்போடு): "ஆம், தீ ஒரு பூதமான நிலையில், வேறெப் பொருளிலும் விட மரத்தில் அதிகம் இருக்கிறது. நீர் ஈசரை நாடினல், அவரை மனிதரிடம் நாடும். வேறெப் பொருளினும் பார்க்க மனிதனிடம் அதிகமாக அவர் தம்மை வெளிப்படுத்துகிறார். ஒரு மனிதர் பிரேமை பெற்றவராய், பிரேமை பொங்கி வழிபவராய், பகவானிடம் பித்துக் கொண்டவராய், அவர்மீ துள்ள அன்பால் வெறிகொள்பவராய் இருக்கக் காண்பீராகில், அவர் மூலமாகப் பகவான் தாமே அவதரித்துள்ளார் என்று நிச்சயமாக அறிந்துகொள்ளும்.

(ம—இடம்) "பகவான் எல்லாப் பொருள்களிலும் உளர் என்பதில் ஐய மில்லை. அவரது சக்தி வெளிப்படும் அளவுகள் வெவ்வேறு உயிர்களில் வெவ் வேருயுள்ளன. அவரது சக்தி மிகமிக உயர்ந்த அளவிற்கு வெளிப்படுதல் ஓர் அவதாரத்தின் மூலமாகத்தான். இன்னும் சில அவதாரங்களில் பகவானது சக்தி முழுவதும் வெளிப்படுவதும் உண்டு."

கிரீஷ்: "பகவான் மனம் வாக்குகட்கு எட்டாதவர் என்று நரேந்திரர் சொல்கின்றனர்,"

குருதேவர்: "அது முற்றிலும் உண்மையன்று. அவர் சாதாரண மன தால் அறிய முடியாதவர் என்பதில் சந்தேகமில்லை; ஆனல் சுத்த மனத்தினல் அவரை உண்மையாகவே அறியக்கூடும். மனமும் புத்தியும் காம காஞ்சனப் பற்றுகளினின்றும் விடுபட்டதும், அக்கணமே அவை சுத்தமடைகின்றன. சுத்த மனமும், சுத்த புத்தியும் ஒன்றேயாம். சுத்த மனதால் பகவான் அறியப்

படுகிறார். பண்டைக்காலத்து ஞானிகளும் ரிஷிகளும் பகவானைக் காண வில்லையா? தமது உள்ளுணர்விலேயே எங்கும் பரந்த அகண்ட சைதன்யத்தை அவர்கள் உணர்ந்தனர்.

கிரீஷ்(புன்சிரிப்போடு): "நரேந்திரரை யான் வழக்கில் தோற்கடித்தேன்."

குருதேவர்: "இல்லை; அவன் என்னிடம் 'கிரீஷ் கோஷ் என்பவர்க்குப் பகவான் மனிதராக அவதாரம் பண்ணுவதில் அவ்வளவு நம்பிக்கை இருக்கும் போது, அவரிடம் யான் என்ன சொல்வது? அவ்வளவு நம்பிக்கையைக் குலைப் பது சரியன்று' என்றனர்.

"நரேந்திரன் மிக உயர்ந்ததொரு வகுப்பைச் சார்ந்தவன். அவன் வாய்ப் பாட்டிலும், வாத்தியத்திலும், கல்வியிலும்—ஒவ்வொன்றிலும் பிறரை மிஞ்சிய வனாகின்றான். இன்னும் இந்திரிய அடக்கம் உடையவன். அவன் மெய்ம்மை யுள்ளவன், விவேகமும் வைராக்கியமும் உடையவன். இத்தனை குணங்களும் அவன் ஒருவனிடம் உள. (ம—விடம்) நீர் என்ன சொல்கிறீர்? அவன் அசாதாரணமான நல்ல தன்மையுடையவனன்றோ?"

ம—: "ஆம் அவன் அப்படித்தான்."

குருதேவர்(ம—விடம் ஒரு பக்கமாக): "அவர் (கிரீஷைக் குறித்து) மிக்க சிரத்தையும் நம்பிக்கையும் உடையவர்."

ம— கிரீஷை நோக்கினர், அவரது மிகுதியான நம்பிக்கையைக் கண்டு ஆச்சரியமடைந்தார். கிரீஷ் சிறிது காலமாகத்தான் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்துகொண்டிருந்தார்; ஆயினும் அவரது ஞான சக்தியை அதற்குள்ளே கிரீஷ் உணர்ந்துவிட்டார், ம—வுக்கு அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரோடு ஞானமென் னும் பலமான கயிற்றால் பிணிக்கப்பட்டுள்ள ஒரு பழகிய நண்பராகவும் தோன்ற லானார். குருதேவரின் அடியார்களாகிய கழுத்தாரத்திலுள்ள மணிகளில் கிரீஷ் ஒருவரானார்.

மெல்ல மெல்லப் பொழுது இருண்டது. மாலையிருள் கல்கத்தாவின்மீது கவிந்தது. ஒரு கணப்பொழுதிற்குச் சுறுசுறுப்புமிக்க அந்நகரின் ஓசை அடங்கியதாயிற்று. கண்டா மணிகளும் சங்குகளின் ஒலியும் பல இந்துக்களின் வீடுகளில் மாலை வழிபாடு நடப்பதை அறிவிக்கலாயின. ஈசனின் அடியார்கள் தமது உலகக் கடமைகளை ஒதுக்கிவைத்துவிட்டுத் தம் உள்ளங்களைப் பிரார்த் தனையிலும் தியானத்திலும் செலுத்தலாயினர். பகலும் இரவும் கூடும் சந்தியா வேளை குருதேவரது உள்ளத்தில் எப்போதும் ஒரு பரவச நிலையினை உண்டு பண்ணும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தேவியின் இனிய திருநாமத்தைப் பாடத் தொடங்கிய தும், அறையிலிருந்த அடியார்கள் அவரைப் பார்க்கலானார். பாடல் முடிந்ததும் அவர் பிரார்த்தனை செய்யத் தொடங்கினர். பகவானோடு சதா உறவாடிக்கொண் டிருக்கும் ஒருவர்க்குப் பிரார்த்தனை எப்படி அவசியமாகும்? வழி தவறிச் செல்லும் இயல்புடைய மக்கட்குப் பிரார்த்தனை செய்யும் வழியைப் போதிக்க

அவர் திருவுள்ளங்கொண்டனர்போலும். தேவியை நோக்கி அவர் கூறிய தாவது: "அன்னாய், உனது அருளுக்கே என்னை ஒப்புவிக்கிறேன்; உனது புனிதமான திருவடிகளிலே நான் புகலடைகிறேன். தேக சுகங்கள் எனக்கு வேண்டாம்; பெயரையும் புகழையும் யான் வேண்டேன். எட்டு சித்திகளையும் நான் நாடவில்லை. உன்மீது சுத்த பக்தி எனக்கு உண்டாகும்படி கருணை கூர்ந்து எனக்கு வரம் அளிப்பாயாக. ஆசையால் வடுப்படாத ஒரு பக்தி, எவ்வித சுயநயப் பலன்களாலும் மாசுறுத ஒரு பக்தி, பக்தி செய்தற்காகவே அன்பர்களால் வேண்டப்படும் ஒரு பக்தி—இதையே யான் பெறுக. அம்மே, உலகை மோகத்திற்குள்ளாக்கும் உன் மாயையால் யான் மயங்காதவாறும், உனது அறியவொண்ணுத மாயையின் வலிமையால் தூண்டப்படும் காம காஞ் சனப் பற்றுகட்கும் உலக இச்சைகட்கும் யான் ஒருநாளும் ஆளாகாதவாறும் எனக்கு அருளுக. தாயே, பூஜை செய்யும் வகையை யான் அறியேன்; தவம் என்னிடம் இல்லை; பக்தியோ ஞானமோ என்னிடம் இல்லை. என்மீது தயை கூர்க, உனது எல்லையற்ற கருணையால் உனது திருவடித் தாமரையில் எனக் குப் பக்தியை அருளுக."

அவரது நெஞ்சின் ஆழத்தினின்றும் வெளிவந்த இப் பிரார்த்தனையின் ஒவ்வொரு மொழியும் அடியார்களின் உள்ளங்களைக் கிளரச் செய்யலாயிற்று. அவரது குரலின் இனிமையும், அவரது முகத்தில் அமைந்த குழந்தைக்குரிய எளிமையும் அவர்களுடைய உள்ளங்களை உருக்கின.

கிரீஷ் குருதேவரைத் தமது வீட்டிற்கு அழைத்தார். அந்த இரவே அவர் கட்டாயம் வரவேண்டும் என்றும் சொன்னர்.

குருதேவர்: "அதிக நேரமாகுமென்று உமக்குத் தோன்றவில்லையா?"

கிரீஷ்: "இல்லை, ஐயன்மீர், தாங்கள் விருப்பப்படி எவ்வளவு பொழு தானலும் திரும்பலாம். நாடக சாலையில் உள்ள ஒரு சண்டையைத் தீர்ப்பதற் காக இன்றிரவு நான் அங்கே செல்லவேண்டி இருக்கிறது."

குருதேவர் கிரீஷினது வீட்டிற்குப் புறப்படத் தயாராயிருந்தபோது, இரவு ஒன்பது மணி ஆயிற்று. பலராமர் அவர்க்கு இரவுக்குரிய உணவைத் தயா ரித்து வைத்திருந்தமையால், ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரிடம் "நீர் எனக்காகத் தயாரித்துள்ள உணவைக் கிரீஷினது இல்லத்திற்கு அனுப்பிவிடும். நான் அதை அங்கே உண்டு களிப்பேன்" என்றனர். அவர்க்குப் பலராமரது மனத்தைப் புண்படுத்த விரும்பவில்லை.

குருதேவர் பலராமரது வீட்டின் இரண்டாவது மாடியினின்றும் கீழே இறங் கும்போதே அவர் ஆனந்த பரவசம் நிரம்பியவரானர். குடி வெறியில் இருந் ததுபோல் அவர் தோன்றினர், நாராயணரும் ம—வும் அவரது அண்டையில் இருந்தனர்; சற்றே பின்னல் ராம் என்பவரும் மற்ற அடியார்களும் வந்தனர். அவர் கீழ்க்கட்டடம் வந்ததும், அவர் முழுதும் வசமிழந்தவரானர். அவர் அடி தவறிக் கீழேவிழுவாரோ என்று அஞ்சிய நாராயணர் அவரது கையைப் பிடித்துக்

கொள்வதற்கென முன் வந்தார். குருதேவர் இச் செயலால் வருத்தமுற்ற தாகக் காட்டினர், சிறிது பொழுது கழிந்ததும், அவர் நாராயணரிடம் பேரன் போடு "நீர் எனது கையைப் பிடித்துக்கொள்வீரானால், யான் குடிவெறியில் இருப்பதாக மக்கள் நினைப்பர், நானகவே நடந்துகொள்வேன்" என்று சொன்னர்,

கிரீஷினது வீடு வெகு தூரத்தில் இல்லை. குருதேவர் போஸ்பாராலேன் என்னும் தெருவிலுள்ள பாதைச் சந்திப்பைத் தாண்டிச் சென்றனர். திடீரென அவர் விரைவாக நடக்கத் தொடங்கினர். அடியார்கள் பின்னடையலானர். சிறிது பொழுதிற்குள் நரேந்திரர் தொலையிலே வருவதாகக் காணப்பட்டார். மற்ற வேளைகளில் குருதேவரது ஆனந்தம் நரேந்திரரை நினைத்தமாத்திரமோ, அவரது பெயரைச் சொன்ன அளவிலேயோ அளவு கடந்து நிற்கும்; ஆனல் இப்போதோ அவர் தம் பிரிய சீடரோடு ஒரு மொழியும் பேசினரல்லர். குரு தேவரும் அடியார்களும், கிரீஷ் வசித்துவந்த தெருவிற்குட் புகுந்ததும், அவர் பேசும் திறமை பெறலானர். அவர் நரேந்திரரிடம் "குழந்தாய், நீ சௌக்கியமா? என்னல் உன்னுடன் அப்போது பேச முடியவில்லை" என்று கூறினர். குரு தேவர் பேசிய சொல் ஒவ்வொன்றிலும் எல்லையற்ற ஆதரம் பெருகி ஓடிற்று.

கிரீஷ் குருதேவரை வரவழைத்தற்கென வாயிலில் நின்றனர். ஸ்ரீ ராம கிருஷ்ணர் வீட்டிற்குட் புகுந்ததும், கிரீஷ் அவரது திருவடியில் வீழ்ந்து வணங் கித் தண்டமெனத் தரைமீது கிடந்தார். குருதேவரது கட்டளை பிறந்ததும், அவர் எழுந்து நின்று தமது தலையால் அவர் தம் பாதங்களைத் தொட்டனர். ஸ்ரீராமகிருஷ்ணரை இரண்டாவது மாடியிலுள்ள கூடத்திற்கு அழைத்துச் சென்றனர். அடியார்கள் அவரைப் பின்தொடர்ந்து கீழே அமர்ந்து, குருதேவரது தரிசனம் பெறவும் அவரது திருவாயினின்றும் சிந்தும் ஒவ்வோர் மொழியையும் கவனித்துக் கேட்கவும் ஆவலாயிருந்தனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமக்கென ஒதுக்கிவைத்திருந்த ஆசனத்தே அமரப் போகையில், ஒரு செய்தித்தாள் அதனருகே கிடந்ததை அவர் காணலானர். அத்தாளை அப்புறப்படுத்துமாறு யாரோ ஒருவர்க்குச் சாடை காட்டினர், செய் தித்தாள் ஒன்றில் உலகப்பற்றோடு சேர்ந்த விஷயங்களே—வம்பும் பழியுமே—அடங்கியிருத்தலின், அவர் அதைத் தூய்மையற்றதெனக் கருதுவார். தாளை நீக்கியதும் அவர் ஆசனத்து அமர்ந்தனர்.

அவருடைய அடியார்களிற் பலர் அறையில் இருந்தனர்: நரேந்திரர் கிரீஷ், ராம், ஹரிபாதர், பலராம், ம—. பகவான் நர உடலில் தம்மை அவதரிக் கச் செய்யவல்லவர் என்பதை நரேந்திரர் நம்புவதில்லை. ஆனல் கிரீஷோ அதற்கு உடன்படாதவர்; இடையிடையே எல்லாம் வல்ல பகவான் தமது அறிய வொண்ணுத சக்தியாலே நர உடலைத் தரித்து, ஒரு தெய்வீக நோக் கத்தை நிறைவேற்றும் பொருட்டுப் பூவுலகிற்கு இறங்குகிறார் என்ற நம்பிக்கை அவரிடம் கொழுந்துவிட்டெரியும்.

குருதேவர் கிரீஷிடம் "நீரும் நரேந்திரனும் ஆங்கிலத்திலே வழக்காடலைக் கேட்க எனக்கு விருப்பம்" என்றனர்.

வாதம் தொடங்கினது; ஆனால் அவர்கள் வங்காள மொழியில் பேசலாயினர். நரேந்திரர் சொன்னதாவது: "பகவான் எல்லையற்றவர், அவரை அறிதல் நமக்கு எவ்வாறு இயலும்? அவர் ஒவ்வொரு மனிதனிடத்தும் உறைகிறார். ஒருவனிடத்து மாத்திரம் அவர் தமது பிரகாசத்தை வெளிப்படுத்துகிறார் என்பதன்று."

ஸ்ரீராமகிருஷ்ணர் (அன்போடு): "நரேந்திரன் சொல்வதை நான் முற்றிலும் ஒப்புக்கொள்கிறேன். பகவான் எங்கும் உள்ளவரே. ஆனால் அவரது சக்தியின் பிரகாசம் வெவ்வேறு உயிர்களிடத்து வெவ்வேறாக உள்ளது என்பதையும் நீங்கள் ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும். சில இடங்களில் அவரது அவித்யா சக்தியின் பிரகாசம் உள்ளது, மற்ற இடங்களிலோ அவரது வித்யா சக்தியின் பிரகாசம் உள்ளது. பகவானது சக்தி வெவ்வேறு கருவிகள் வாயிலாக வெவ்வேறு அளவுகட்கு—அதிகமாகவோ குறைவாகவோ—வெளிப்படுகிறது. ஆதலின் எல்லா மனிதரும் சமமல்லர்."

ராம்: "இவ் வீண் வாதங்களால் என்ன பயன்?"

குருதேவர் (கடுகடுத்து): "இல்லை, இல்லை; இதிலெல்லாம் பொருள் ஒன்று உள்ளது."

கிரீஷ் (நரேந்திரரை நோக்கி): "பகவான் நர உடலைத் தரித்துக்கொள்வதில்லை என்பதை நீர் எப்படிக் கண்டீர்?"

நரேந்திரர்: "பகவான் 'மனம் வாக்குகட்கு அப்பாலானவர் பகவான்' என்பதனால்."

குருதேவர்: "அப்படியன்று, அது உண்மையன்று. சுத்த புத்தியால் அவரை அறியக்கூடும். சுத்த புத்தியும் சுத்த ஆத்மனும் ஒன்றே. பண்டைய ரிஷிகள் தமது சுத்த புத்தியைத் துணைக்கொண்டு, நேருக்கு நேராக சுத்த ஆத்மனைத் தரிசித்தனர்."

கிரீஷ் (நரேந்திரரிடம்): "பகவான் தாமே தமது மனித அவதாரத்தின் வாயிலாக மக்கட்குப் போதிக்கின்றனர்; இல்லையேல், ஞான இரகசியங்களை வேறு யார் அவர்கட்குப் போதிப்பர்? பகவான் மனித உடலை எடுப்பது, மனிதர்க்குத் தெய்வ ஞானத்தையும் தெய்வ அன்பையும் வழங்குவதற்காக, இல்லாவிடில் யார் போதிப்பார்?"

நரேந்திரர்: "ஏன்? பகவான் நமது சொந்த நெஞ்சிலே வாசம் பண்ணுகின்றனர். நெஞ்சிற்குள்ளிருந்து நமக்குப் போதிப்பது நிச்சயம்."

குருதேவர் (அன்போடு): "ஆம், ஆம், நமக்குள் அந்தர்யாமியான நிலையிலே அவர் நமக்குப் போதிப்பார்."

வரவர நரேந்திரரும் கிரீஷும் சூடாக வாதம்பண்ணத் தலைப்பட்டனர். பகவான் அனந்தமாயின், அவரிடம் பகுதிகள் எப்படி இருக்கக்கூடும்? ஹாமில்

டன் யாது கூறினர்? ஹெர்பர்ட் ஸ்பென்ஸர், டிண்டல், ஹக்ஸ்லி—இவர் களுடைய அபிப்பிராயங்கள் எவையெவை? இப்படியே மேலும் மேலும் பிறவும்.

குருதேவர்(ம—விடம்): "எனக்கு இந்த வாதங்கள் பிடிப்பதில்லை. நான் எதற்காக வழக்காடல் வேண்டும்? பகவானே எல்லாம் என்பதை நான் தெளிவாகக் காண்கிறேன். அவரே எல்லாமும் ஆகியுள்ளார். இருப்பதெல் லாம் பகவானே என்பதை நான் காண்கிறேன். அவரே ஒவ்வொன்றும்; இன் னும் அவர் ஒவ்வொன்றுக்கும் அப்பாலானவரும். எனது மனமும் புத்தியும் அகண்டத்தில் லயமடையும் நிலைக்கு யான் வருகிறேன்.

"ஆனல் ஒருவன் தனக்குள் இருக்கும் சைதன்யத்தை விழிக்கச் செய்யா மல், எங்கும் பரந்துள்ள சைதன்யத்தைத் தரிசித்தல் இயலாது. எவ்வளவு காலம் ஒருவன் தர்க்கம் பண்ணுகிறான்? அவன் ஈசனைத் தரிசியாதிருக்கும் வரைதான். ஆனல் வெறும் வார்த்தைகள் பயன்படா. நானே, அவரே ஒவ் வொன்றும் ஆகியுள்ளார் என்பதைத் தெளிவாகக் காண்கின்றேன். உள்ளே இருக்கும் சைதன்யம் ஈசனது கருணையால் விழிப்படையும்படிசெய்யவேண்டும். இவ்விழிப்பினல் ஒரு மனிதன் சமாதிநிலையுட் புகுகிறான். அவனுக்கு உடலுண்டு என்ற நினைவு அடிக்கடி மறக்கும். பகவானைப்பற்றிய பேச்சா யிருந்தாலன்றிப் பேச்சு அவனுக்குப் பிடிப்பதில்லை. உலக விஷயமான பேச்சு அவனுக்கு வருத்தத்தைத் தரும். உள்ளிருக்கும் சைதன்யத்தை விழிக்கச் செய்வதால் ஒருவன் ஸர்வ வியாபகமான சைதன்யத்தைத் தரிசிக்கிறான்."

வழக்கு ஓய்வடைந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ம—விடம் சொல்லியதாவது: "விசாரிப்பதால் ஒரு மனிதன் ஈசனைப்பற்றி ஒருவித ஞானத்தையும், தியானிப் பதால் வேருெருவித ஞானத்தையும் சம்பாதிக்கிறான்; ஆனல் ஈசனே தன் னைத் தன் பக்தனுகிய அவனுக்குக் காட்டியருளும்போது, அவன் மூன்றுவது வகையான ஒரு ஞானத்தைப் பெறுகிறான், பகவான் தாமே தமது பக்த னுக்கு அவதாரத்தின் இயல்பை—அவர் எவ்வாறு நரவடிவில் லீலை புரிகிறார் என்பதை—விளக்கமாகக் காட்டியருளுவாராயின், அவ்விஷயத்தைப் பற்றித் தர்க்கம் செய்யவோ, விரிவாகக் கூறலை நாடவோ அவசியமில்லை. அது எதைப்போன்றுள்ளது தெரியுமா? ஒரு மனிதன் ஓர் இருட்டறையில் இருப்ப தாக வைத்துக்கொள்வோம். அவன் ஒரு தீக்குச்சியை ஒரு தீப்பெட்டியின் மீது உரைத்துக்கொண்டேயிருக்கிறான்; திடீரென ஒளி வருகிறது. அதுபோல பகவான் நமக்கு இவ்விதமாகத் தெய்விக ஒளியைப் பளீரென மின்னச்செய்வா ராயின், நமது சந்தேகங்கள் யாவும் நாசமடையும். ஈசனை ஒருவன் என்றே னும் விசாரத்தால் மட்டும் அறிய முடியுமா?"

ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரைத் தம் அருகே உட்காருமாறு வேண்டினர். அவர் இவரது உடல் நலத்தைக் குறித்து ஆதரத்தோடு விசாரித்தார்; மிக்க பிரியத்தையும் அவரிடம் காட்டினர்.

நரேந்திரர்(குருதேவரிடம்): "ஏன், மூன்று நான்கு நாள்களாக நான் காளியின்மீது தியானம் பண்ணியுள்ளேன். ஆயினும் யாதொரு பயனும் பெற வில்லை."

குருதேவர்: "குழந்தாய், எல்லாம் சரியான காலத்தில் கிடைக்கும். காளி பிரம்மனைத் தவிர வேறில்லை. பிரம்மன் என்று அழைக்கப்படுவது எதுவோ அது உண்மையிலே காளிதான். தேவி ஆதி சக்தியாவாள், அந்த சக்தி செயலற்றிருக்கும்போது யான் அதைப் பிரம்மன் என்றழைக்கிறேன். அது படைத்துக் காத்து அழிக்கும்போது, அதைச் சக்தியென்றோ காளியென்றோ அழைப்பேன். நீ பிரம்மன் என்றழைப்பதை நான் காளி என்றழைப்பேன்."

இரவில் அப்போது நெடும்பொழுதாகிவிட்டது. கிரீஷ் தமக்கு நாடக சாலைக்குப் போகவேண்டியிருந்தமையின் ஹரிபாதரை ஒரு வண்டி கொண்டு வருமாறு வேண்டினர்.

கிரீஷ்: "நான் நாடக சாலைக்குச் செல்லவேண்டியிருக்கிறதே, தங்களை இங்கே விட்டுச் செல்லவேண்டியிருக்கிறதே!"

குருதேவர்: "அப்படியன்று, நீர் இரண்டையும் பிடித்துக்கொள்ள வேண்டும்."

கிரீஷ்: "நாடக சாலையை இளைஞர்களிடம் விட்டுவிடவேண்டும் என்று யான் நினைத்துக்கொண்டிருக்கிறேன்."

குருதேவர்: "வேண்டாம், வேண்டாம். அது நிரம்ப சரி. நீர் பலர்க்கும் நன்மை செய்துகொண்டு வருகிறீர்."

நரேந்திரர் மெல்லிய குரலில் "ஒரு கணத்திற்கு முன்னால் அவர் (கிரீஷ்) அவரை (ஸ்ரீ ராமகிருஷ்ணரை) ஓர் அவதாரம் என்று அழைத்துக்கொண்டிருந்தார்; இப்போதோ அவரது மனத்தை நாடக சாலை இழுத்துக்கொண்டு போகிறது" என்றனர்.

நரேந்திரர் குருதேவரது பக்கத்தே அமர்ந்திருந்தனர். குருதேவர் அவரைக் கூர்ந்து நோக்கினர்; திடீரெனத் தமது பிரிய சீடருக்கு அருகே சென்றனர். நரேந்திரர்க்குப் பகவான் நர வடிவந் தரித்தலில் நம்பிக்கையில்லை; ஆனால் அதனால் என்ன? ஸ்ரீ ராமகிருஷ்ணரது நெஞ்சில் தம் சீடர்மீதுள்ள அன்பு மேலும் மேலும் பொங்கி வழியலாயிற்று. அவர் நரேந்திரரிடம் "ஒரு மனிதன் பகவானைப்பற்றி வழக்காடும்வரை அவன் அவரைத் தரிசித்தவனாகான். நீங்கள் இருவரும் வழக்காடிக்கொண்டிருந்தீர். எனக்கு அது பிடிக்கவில்லை.

"நீ பகவானை அணுக அணுக, உனது தர்க்கமும் வழக்காடலும் குறைந்துவரும். அவரை அடையும்போது, அவ்வமயம் எல்லா ஒலிகளும்—தர்க்கமும் வழக்கும்—நின்றுவிடும். அப்போது நீ சமாதியை அடைகிறாய். பகவானோடு மோனமாக நெருங்கி அளவளாவுகின்றாய்." (மனங்கலந்து நிற்கின்றாய்.)

குருதேவர் மெதுவாக நரேந்திரரது உடலைத் தடவுவாராகி, "ஹரி ஓம்! ஹரி ஓம்! ஹரி ஓம்!" என்னும் தூய மொழிகளை இனிமையாக ஓதிக்

கொண்டே பேரன்போடு அவரது மோவாயைத் தொடலானார். அவர் விரைவில் புற உலகை மறந்து வரலானார். அவரது கை நரேந்திரரது பாதத்தைத் தொட்டது. இன்னும் அந்நிலையில் அமர்ந்தவராய் அவர் நரேந்திரரது உடலை மெதுவாகத் தடவலானார். மெல்ல மெல்ல அவரது உள்ளத்தில் ஒரு மாறுதல் தோன்றலாயிற்று. கை கூப்பிக்கொண்டே அவர் நரேந்திரரிடம் "ஒரு பாட்டைப் பாடு ; அப்போதுதான் என் மனம் சரியாகும். எனது சொந்தக் கால்களின்மீது நிற்க வேறு எவ்விதத்தில் எனக்குத் திறமை உண்டாகும்?" என்று உரைத்தார்.

பிறகு குருதேவர் வெளியுலகை முற்றும் மறந்தார். அறையிலுள்ள எவரையும் அவர் கவனிக்கவில்லை; அவரது பக்கத்திலிருந்த பிரிய நரேந்திரரையும் அவர் கவனிக்கவில்லை ; அவரது பக்கத்திலிருந்த பிரிய நரேந்திரரையும் அவர் அறியவில்லை. தாமே எங்கு அமர்ந்திருந்தார் என்பதையும் அவர் தெரிந்துகொள்ளவில்லை. அவர் பகவானிடம் முழுதும் லயமடைந்துவிட்டார். திடீரென அவர் எழுந்து நின்று, "பிரேமை மதுவைக் குடித்து ஆழ்ந்த வெறி கொண்ட !" என்று கூக்குரலிட்டனர். அவர் தமது ஆசனத்தில் மீண்டும் அமர்ந்ததும், "ஓர் ஒளி வருவதை யான் காண்கிறேன் ; அது எங்கிருந்து வருகிறதென்பதை அறியேன்" என்று முணுமுணுத்துக்கொண்டனர்.

இப்போது நரேந்திரர் பாடலானார் :

நின்முகத்தின் தரிசனத்தால் நெஞ்சமர்என் துயரனைத்தும் நீக்கி விட்டாய்;
நின்அழகின் மாயமதால் நீயெனுளம் தனைமயக்கி நின்பாற் சேர்த்தாய் ;
நின்உருக்கண் டேழுலகம் ஒழிவிலாத நீள்துயரம் மறந்த என்ருல்
என்சா எனைப்பற்றி ஏழையேன் எளிமையினேன் யாது ரைப்பேன்?

இப் பாட்டைக் கவனித்தலும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் மறுபடியும் ஆழ்ந்த சமாதியிற் புகுந்தார். அவரது கண்கள் மூடியிருந்தன. அவரது உடல் ஆனந்தத்தால் ஊடுருவப்பட்டிருந்தது,

சமாதி நிலையினின்றும் கீழிறங்கியதும், அவர் தம்மைச் சுற்றி நோக்கி. "என்னை யார் கோயிற் பூஞ்சோலைக்கு அழைத்துச் செல்வர்?" என்றனர், தோழன் இல்லாதபோது மனக்குழப்பம் அடையும் ஒரு குழந்தையைப் போன்று அவர் தோன்றினர்.

இரவில் நெடும்பொழுதாயிற்று. இரவும் இருட்டாயிருந்தது. குருதேவரைத் தக்ஷிணேசுவரத்திற்கு அழைத்துச் செல்வதற்காக அமர்த்தப்பட்ட வண்டியின் அருகே அடியார்கள் நின்றனர். அவர் மெதுவாக உள்ளே வண்டியில் ஏறி அமர அவர்கள் உதவி புரிந்தனர். ஏனெனில் அப்போதும் ஆழ்ந்த சமாதியில் இருந்தனர். வண்டி தெரு வழியே செல்ல ஆரம்பித்தது ; அவர் அதை ஆசையோடு நோக்கியவண்ணமாயிருந்தனர்.

விரைவில் அடியார்கள் தங்கள் வீடு நோக்கித் திரும்பலானர்; மெல்லிய தென்றற் காற்று அவர்களுடைய முகத்தே வீசியது, சிலர் முற்கூறிய பாட்டின் பின்வரும் அடிகளைத் தமக்குள்ளே மெல்லப்பாடிக்கொண்டிருந்தார்,

நின்முகத்தின் தரிசனத்தால் நெஞ்சமர்என் துயரனைத்தும் நீக்கி விட்டாய்
நின்அழகின் மாயமதால் நீயெனுளம் தனைமயக்கி நின்பாற் சேர்த்தாய்

சனி, மே 9, 1885.

பிற்பகலில் ஏறக்குறைய மூன்று மணி இருக்கும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பலராமரது வீட்டுக் கூடத்தில் ஆனந்தமான நிலையில் அமர்ந்திருந்தார். பல அடியார்கள் அங்கிருந்தனர். பலராம் அங்கில்லை. அவர் உடல்நலங்கருதி இடமாறுதற்காக 'மாங்கைர்' சென்றிருந்தார். அவரது மூத்த குமாரி ஸ்ரீ ராம கிருஷ்ணரையும் அடியார்களையும் அழைத்திருந்தார்; அவ் வமயத்தை ஒரு விருந்தாற் சிறப்பித்தனர். குருதேவர் உண்டபின் இளைப்பாறிக்கொண் டிருந்தார்.

திரும்பத் திரும்ப குருதேவர் ம—விடத்தில் "நான் உதார மனமுடைய வனு? எனக்குச் சொல்லு" எனக் கேட்டனர்.

பவநாத் (சிரிப்போடு): "நீங்கள் ஏன் அவரைக் கேட்கின்றீர்கள்? அவர் மௌனமாகத்தானே இருப்பார்."

ஓர் அடியார்: "ஐயன்மீர், பகவானது கிருபையை எவ்வாறு ஒருவன் பெறலாம்?"

குருதேவர்: "பகவானுக்கு ஒரு குழந்தையின் குணம் உண்டு. ஒரு குழ்ந்தை தனது ஆடையின் முந்தியிலே மணிகளை வைத்துக்கொண்டு உட் கார்ந்திருக்கிறது. பல மனிதர் அதன் அருகே சாலை வழியாகச்செல்கின்றனர். அவர்களிற் பலர் அம்மணிகளைத் தருமாறு அதனைக் கெஞ்சுகின்றனர். அது மணிகளைத் தன் கையினால் மறைத்து வைத்துக்கொள்கிறது; தன் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டு "மாட்டேன், ஒன்றையும் யான் கொடுக்க மாட்டேன்" என்று சொல்லுகிறது. ஆனால் வேறொருவன் அவ்வழியே வரு கிறான். அவன் தனக்கு மணிகள் வேண்டும் என்றுகூடக் கேளாதிருக்க, குழந்தை அவனைத் தொடர்ந்து ஓடி, மணிகளைப் பெற்றுக்கொள்ளும்படி அவனைக் கெஞ்சி அவனிடமே அவற்றைக் கொடுத்துவிடுகிறது.

"வைராக்கியமின்றி எவனும் ஈசனது தரிசனம் பெறமுடியாது. எனது வார்த்தைகளை யார் ஏற்றுக்கொள்வர்? எனது மனை பாவனைகளை அறியக் கூடியவனுய், என்னிடம் அனுதாபங்கொண்டவனுயுள்ள ஒரு துணைவனை நான் நாடிக்கொண்டிருக்கிறேன். நான் ஒரு பேரடியாரைக் கண்டதும், 'அவர் எனது இலக்ஷியங்களை ஏற்றுக்கொள்வார்' என்று எனக்குள் சொல்லிக்கொள்கி றேன். ஆனால் பின்னளில் அவர் வேறு வழியில் நடப்பதை யான் காண் கிறேன்.

"ஒருக்கால் மதுரபாபு ஆனந்த பரவச நிலையில் இருந்தார், அவர் ஒரு குடிவெறியனைப்போல ஒழுகலானர். தமது வேலையைக் கவனிக்க முடியாதவ ரானர். இதைக் கண்ட அனைவரும் 'அவர் இதுபோன்று நடப்பாராயின்,

அவரது வேலையை யார் கவனிப்பார்? இப் பூசாரிச் சிறுவர் (அக்காலம் காளி கோயிற் பூசாரியாயிருந்த ஸ்ரீ ராமகிருஷ்ணர்) அவரை மயக்கிவிட்டார் என்பது நிச்சயம்' என்றனர்.

"நரேந்திரர் ஆரம்பத்தில் என்னைக் காணவந்த சமயங்களில் ஒன்றில் நான் அவனது மார்பைத் தொட்டேன், அவன் உணர்வை இழந்தான். உணர்வு திரும்பியதும், அவன் அழுதுகொண்டே "தாங்கள் என்னை அப்படிச் செய்தது எதற்காக? எனக்கு ஒரு தந்தை இருக்கிறாரே! ஒரு தாயார் இருக்கிறாரே!' என்று சொன்னான். இந்த 'யான்' 'எனது' என்பவை அறியாமையால் விளைவன."

நரேந்திரர்: "பகவான் தாமே மனிதனாக அவதரிக்கின்றார் என்பதை ருசுவில்லாமல் யான் எப்படி நம்புவது?"

கிரீஷ்: "நம்பிக்கையொன்றே போதுமானது. இப்பொருள்கள் எல்லாம் இங்குள்ளன என்பதற்கு ருசு யாது? நம்பிக்கையொன்றே ருசு."

ஓர் அடியார்: "புற உலகம் நமக்கு வெளியே உள்ளது என்பதை ருசுப்படுத்தத் தத்துவ நூல் கற்றவர்க்கு முடிந்ததா? ஆனால் அதில் தடுக்க முடியாத நம்பிக்கை தமக்கு உள்ளது என்றே அவர்கள் கூறுகின்றனர்."

கிரீஷ்(நரேந்திரரிடம்): "பகவானே உம்முன் தோன்றினாலும், நீர் நம்ப மாட்டீர். பகவான் தாமே மனிதனாகப் பிறந்துள்ள ஈசர் என்று சொல்லட்டும்; அப்போதும் நீர் அவரைப் பொய்யரென்றும் ஏமாற்றுக்காரர் என்றும் சொல்வீர்."

யோகின்(சிரிப்போடு): "அவர் (அதாவது, குருதேவர்) நரேந்திரரது மொழிகளை இனி ஏற்றுக்கொள்ளார்."

குருதேவர்(சிரிப்போடு): "யதுமல்லிக் என்பவரின் பூஞ்சோலை மாளிகையிலே நரேந்திரன் என்னிடம் 'நீர் காணும் ஈசனின் வடிவங்கள் உம்மது மனத்தின் கற்பனை' என்றான். நான் ஆச்சரியமடைந்து, அவனிடம் 'ஆனால், அவை பேசுகின்றனவே!' என்று சொன்னேன். நரேந்திரன் 'ஆம், நீங்கள் அவ்வாறு நினைத்துக்கொள்ளலாம்' என்று மறுமொழி கூறினான். நான் கோயிலுக்குச் சென்று, தேவியின் முன்பு அழுதேன்; பின்வருமாறு சொன்னேன்: 'அம்மே! இது என்ன? இதுவெல்லாம் பொய்யா? நரேந்திரன் எவ்வாறு அப்படிச்சொல்லக்கூடும்?' இவ்வாறு சொன்னதும், அம்மை(தேவி) எனக்கு ஒரு காட்சியால் விளக்கினள். நான் சைதன்யத்தை—அகண்ட சைதன்யத்தை—கண்டேன். அச்சைதன்யத்தினாலாய ஒரு தெய்விக வடிவையும் கண்டேன். அத் தெய்விக வடிவம் என்னிடம் 'உன் வார்த்தைகள் உண்மையில்லையாயின், அவை நடக்கும் செயல்களோடு ஒத்திருப்பதேன்?' என்று கேட்டது. அதன்பின் நரேந்திரனிடம் 'துஷ்ட! நீ என் உள்ளத்தில் அவ நம்பிக்கையை உண்டுபண்ணினாய். இனி ஒருக்காலும் இங்கு வராதே' என்றேன்."

வாதம் தொடர்ந்து நிகழ்ந்தது. நரேந்திரர் வழக்காடிக்கொண்டிருந்தனர். அவர் அப்போது இருபத்திரண்டுக்குச் சற்றேமேற்பட்ட வயதினராயிருந்தார்.

நரேந்திரர் (கிரீஷ், ம—முதலியோரிடம்): "சாஸ்திரம் சொல்லும் வார்த்தைகளை நான் எப்படி நம்புவது? மஹா நிர்வாண தந்திரம் ஒரிடத்தில், பிரம்ம ஞானத்தை ஒருவன் பெற்றுலன்றி நரகம் செல்கிருன் என்று கூறுகின்றது; இன்னெரு இடத்தில் அதே சாஸ்திரம் அம்பிகையாகிய பார்வதியை வழிபடாமல் முக்தியடைவதில்லை என்கிறது. மனு தம்மைப்பற்றியே மனு ஸம்ஹிதையிற் பேசுகிருர். மோஸஸ் என்பார் தமது மரணத்தைப்பற்றியே மெண்டாடியக் என்னும் புத்தகத்தில் பேசுகிருர்.

"ஈசன் இருப்பதற்கு யாதொரு ருசுவும் இல்லாமையின் ஈசன் இல்லையென்று சாங்கிய தரிசனம் கூறுகின்றது. இன்னும், வேதங்களை ஒருவன் ஒப்புக்கொள்ளல் கட்டாயம் என்றும், அவை எப்போதும் உள்ளன என்றும் அதே தரிசனம் சொல்கின்றது,

"ஆனல் இவை உண்மையல்ல என்று நான் சொல்லவில்லை. எனக்கு அவை விளங்கவில்லையென்று மட்டும் சொல்கிறேன். அவற்றை எனக்கு விளக்கிக் காட்ட வேண்டுகிறேன். சாஸ்திரங்கட்கு மக்கள் தத்தம் மனதிற்குத் தோன்றுகிறபடியே பொருள் கூறுகின்றனர். அவற்றில் எந்த விளக்கத்தை நாம் ஒப்புக்கொள்கிறது? ஒரு சிவப்பான பொருள் வழியாக வரும் வெண்மையான ஒளி சிவப்பாகத் தோன்றுகிறது. பச்சையான பொருள் வழியாக வரும் ஒளி பச்சையாகத் தோன்றுகிறது."

ஓர் அடியார்: "கீதையில் பகவானுடைய மொழிகள் உள்ளனவே,"

குருதேவர்: "சரி, கீதை எல்லா சாஸ்திரங்களின் ஸாரம். ஒரு ஸந்நியாஸி வேருெரு புத்தகத்தைத் தன்னிடம் வைத்திருக்கலாம், வைத்துக் கொள்ளாமலும் போகலாம்; ஆனல் எப்போதும் ஒரு சிறு கீதை அவனிடம் இருக்கும்."

ஓர் அடியார்: "கீதை கிருஷ்ணபிரானுடைய மொழிகளல்லவா?"

நரேந்திரர்: "கிருஷ்ணனே, அன்றி வேறெவனே யாரறிவார்!"

நரேந்திரருடைய இவ்வார்த்தைகளைக் கேட்ட ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆச்சரியமடைந்தனர்.

குருதேவர்: "இது ஒரு அழகான வாதம். சாஸ்திரங்கட்கு இருவகையாகப் பொருள் கூறலாம்: வார்த்தைகட்குரிய பொருள், உண்மைப்பொருள். உண்மைப் பொருளை மட்டும் ஒருவன் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதாவது, பகவானுடைய வார்த்தைகட்கு ஒத்திருக்கும் பொருளையே கொள்ளவேண்டும். ஒரு கடிதத்தில் எழுதியுள்ள வார்த்தைகட்கும், எழுதியவருடைய நேர்மொழிகட்கும் பெரும் வேறுபாடு உண்டு. சாஸ்திரங்கள் ஒரு கடிதத்திலுள்ள வார்த்தைகள் போல; பகவானுடைய வார்த்தைகள் நேர் வார்த்தைகளே, தேவியின் நேர் வார்த்தைகட்கு ஒத்திராத எதனையும் யான் ஒப்புக்கொள்வதில்லை."

மறுபடியும் சம்பாஷணை அவதாரத்தைப் பற்றியதாயிற்று.

நரேந்திரர்: "பகவானிடத்து நம்பிக்கை வைப்பதே போதும். அவர் என்ன செய்துகொண்டிருக்கிறார் என்பதைப் பற்றியோ, அவர் எங்கிருந்து தொங்குகிறார் என்பதைப்பற்றியோ எனக்குக் கவலையில்லை. இப் பிரபஞ்சம் அளவற்றது, அவதாரங்களும் அளவற்றன."

"பிரபஞ்சம் அளவற்றது, அவதாரங்களும் அளவற்றன" என்ற மொழிகளைக் கேட்டதும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கை கூப்பிக்கொண்டு "என்ன ஆச்சரியம்!" என்றனர்.

ம— ஏதோ ஒன்றைப் பவநாத்தினிடம் மெல்லக் காதிற்குள் உரைத்தார்.

பவநாத்: "ம— என்னிடம் 'யான் யானையைப் பாராதவரை அது ஓர் ஊசியின் காது வழியாகச் செல்லக்கூடியதா என்பதை எவ்வாறு அறிய முடியும்? அதுபோல, எனக்குப் பகவானைத் தெரியாதாயின், அவர் மனிதனாக அவதாரம் பண்ண முடியுமா, முடியாதா என்பதை யுக்தியால் எவ்வாறு அறிய முடியும்?' என்கிறார்."

குருதேவர்: "பகவானுக்கு எல்லாம் இயலும். அவரே மந்திர சக்தியால் வசப்படுத்துபவர். மந்திரவாதி கத்தியை விழுங்குகிறான், மறுபடியும் அதை வெளியே எடுக்கிறான்; அவன் கற்களையும் செங்கல்களையும் விழுங்குகிறான்."

ஓர் அடியார்: "ஒரு மனிதன் தனது உலகக் கடமைகளை இயற்ற வேண்டும் என்றும் அவன் அவற்றைத் துறக்கக் கூடாது என்றும் பிராம்மோக்கள் கூறுகின்றனர்."

கிரீஷ்: "ஆம், அம்மாதிரி ஏதோ ஒன்றை அவர்களுடைய செய்தித்தாள் ஒன்றில் யான் கண்டேன். ஆனால் ஈசனை அறிதற்காக ஒரு மனிதனுக்கு அவசியமாகும் எல்லாக் கருமங்களையும் செய்து முடித்தல்கூட அவனுக்கு இயலாது; எனினும் அவன் உலகக் கடமைகளைப் பற்றிப் பேசுகிறான்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு சிறிது புன்சிரிப்புச் செய்து, ம—வைப் பார்த்து, 'அவர் சொல்வது சரிதான்' என்று சொல்வதுபோலக் கண் ஜாடை காட்டினார்.

கடமைகளை இயற்றுதலாகிய இம்முறை மிகமிகக் கடினமான ஒன்று என்பதை ம— உணர்ந்தார்.

பூர்ணர் வந்து சேர்ந்தார்.

குருதேவர்: "நாங்கள் இங்கு இருப்பதை உமக்கு யார் கூறினர்?"

பூரணர்: "சாரதா."

குருதேவர்(அடியார்களான மங்கையர்களிடம்): "அவர்க்குக் கொஞ்சம் சிற்றுண்டியைக் கொடுங்கள்."

நரேந்திரர் பாட ஆயத்தம் பண்ணிக்கொண்டிருந்தார், குருதேவரும் அடியார்களும் அவரது சங்கீதத்தைக் கேட்க ஆவலாயிருந்தனர், நரேந்திரர் பாடலானார்:

சிவனேநின் இடியேறு திடுமெனப்புல் வெளிமீதும்
நிவந்தமலை வான்மீதும் நேர்ஆட்சி செலுத்திடுமால்.
அறவரசே! தேவதேவ! அரும்பாழே! காலகால!
மறமொழித்தே உய்வியெனை மங்களமாம் சிவப்பொருளே.

நாராயணரது வேண்டுகோளுக்கு இணங்கி, நரேந்திரர் பின்வருமாறு பாடலானார்:

வருகஎன் அன்னாய் வருகஎன் ஆருயிர்ப்
பாவையே! நெஞ்சின் மேவிய இன்பமே!
என்னுளக் கமலத் தெழுந்தருள், இருந்தருள்.
நின்முகங் காண நெடுநாள் ஏங்கினேன்.
அந்தோ! இனிய அன்னாய் உலகில்
வந்தநாள் முதலா வருந்தினேன் பெரிதும்
அனைத்தையும் பொறுத்தேன்—அறிகுவை யன்றே?
மனக்கணால் நின்னை மகிழ்ந்து நோக்கியே
அன்னாய் அலர்த்துக என்னுளக் கமலம்,
நின்னையான் காண நீயருள் ஆங்கே.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சமாதியில் இருந்தார். அவர் ஒரு தலையணைமீது அமர்ந்து, தமது கால்களைத் தொங்கவிட்டுக் கொண்டும், வடக்கை நோக்கிக் கொண்டும், சுவரின்மீது சாய்ந்துகொண்டும் இருந்தார். அடியார்கள் அவரைச் சுற்றி அமர்ந்திருந்தனர். குருதேவர் மெல்ல மெல்லப் புற உலக உணர்ச்சியை மீண்டும் பெற்று வந்தனர்.

அப்போது மாலைப்பொழுது கழிந்து நேரமாய்விட்டது. கூடத்தில் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன.

குருதேவர் (பரவச நிலையில்): "இங்கே வேறெவரும் இல்லை; ஆதலின் யான் உங்களிடம் இதைக் கூறுகிறேன். எவனொருவனுக்குப் பகவானை அறியும் ஆசை தன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழுமோ அவன் பகவானைத் தரிசிப்பது நிச்சயம். அவன் தரிசித்தே ஆகவேண்டும், ஈசனைக்காண எவன் துடிப்பானோ, ஈசனைத் தவிர வேறெதனையும் நாடானோ அவன் மட்டும் ஈசனை அடைவது உறுதி."

சனிக்கிழமை ஜூன் 13, 1885

பிற்பகலில் சுமார் மூன்று மணிக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது அறையில் பகலுணவானபின் இளைப்பாறிக்கொண்டிருந்தார். ஒரு பண்டிதர் தரைமீது விரித்திருந்த பாயில் உட்கார்ந்திருந்தார். அறையின் வடவாசல் அண்டையில் ஒரு பிராம்மண மங்கை நின்றாள்; அவள் சிறிது காலத்திற்கு முன்பு தனது ஒரே மகனை இழந்து, துயரத்தில் ஆழ்ந்திருந்தாள். கிஷோரி என்பவரும் அறையில் இருந்தார். ம— வந்து, குருதேவரை வணங்கினர். துவிஜாவும் இன்னும் ஒரு சில அடியார்களும் அவரோடு வந்திருந்தனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய உடல் நல்ல நிலையில் இல்லை. அவர் தொண்டைப் புண்ணால் வருந்திக்கொண்டிருந்தார். இப்போது கடுங்கோடை நாள்கள். ம—வும் உடல் சுகமிலாது இருந்தார்; சிறிது காலமாக ஸ்ரீ ராமகிருஷ்ணரை அடிக்கடி தரிசிக்க இயலாதவராயிருந்தார்.

குருதேவர் (ம—வை நோக்கி): "நீர் சௌக்கியமா? உம்மைக் காண்பதே நன்றாயிற்று. நீர் அனுப்பிய வில்வப் பழம் மிக நல்லதாயிருந்தது."

ம—: "ஐயன்மீர், முன்னிலும் இப்போது உடல் சிறிதே நலமாயிருக்கிறது."

குருதேவர்: "இப்போது வெயில் மிகக் கடுமையாயுள்ளது. இடையிடையே ஒரு சிறிது பனிக்கட்டியை உட்கொள்ளுக. நானே வெப்பம் அதிகமாயிருப்பதை உணர்ந்து வருகிறேன்; அதனால் மிகுதியாக 'ஐஸ் கிரீம்' (பனிக்கட்டிப் பாலாடை)ஐ உண்டேன். அக்காரணத்தால், இந்தத் தொண்டைப் புண் உண்டாயிற்று, உமிழ் நீர் மிகக்கெட்ட நாற்றம் உள்ளதாகிறது.

"நான் தேவியம்மையிடம் 'அம்மே, என்னைக் குணப்படுத்துக. இனி யான் பனிக்கட்டியை உண்ணமாட்டேன்' என்று சொல்லியிருக்கிறேன், பிறகு நான் பனிக்கட்டியையும் உண்ணேன் என்று அம்மையிடம் சொன்னேன். நான் தேவியிடம் வாக்களித்து விட்டேனதலின், இவற்றை நான் உண்ணமலிருப்பது உறுதியே. ஆனால் சில சமயம் நான் மறதியுடையவனாகிறேன். ஞாயிற்றுக் கிழமைகளில் மீன் உண்ணமாட்டேன் என்று ஒரு முறை நான் சொன்னேன்; ஆனால் ஒரு ஞாயிற்றுக்கிழமை நான் அதை மறந்து மீனை உண்டேன். ஆனால் தெரிந்தே நான் என் வாக்கைமீறிச் செய்யமாட்டேன்."

ஓர் அடியார் சிறிது பனிக்கட்டி கொண்டுவந்திருந்தார். திரும்பத் திரும்ப குருதேவர் ம—விடம் 'நான் அதைச் சாப்பிடலாமா?' என்று கேட்டார்,

ம—தாழ்மையோடு "தேவியைக் கேளாமல் தாங்கள் அதை உண்ண வேண்டாம்" என்று கூறினர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பனிக்கட்டியை உண்ணவில்லை. குருதேவர் அவதாரத்தைப்பற்றிப் பேசத் தொடங்கினர்.

குருதேவர் (ம—விடம்): "பகவான் தாமே மனிதனாக அவதாரம் பண்ணும் காரணம் உமக்குத் தெரியுமா? மனித சரீரத்தின் மூலம் ஒருவர் அவருடைய மொழிகளைக் கேட்கக் கூடும் என்பதனாலே. அவர் அதன் மூலம் லீலை (திருவிளையாடல்) புரிந்தருளுகிறார். அவர் மனித உடல் மூலம் தெய்விக ஆனந்தத்தை அனுபவிக்கிறார். ஆனால் தம் இதர அடியார்கள் மூலம் பகவான் தமது ஒரு சிறிய அம்சத்தை (பகுதியை) மட்டும் வெளிப்படுத்துகிறார். மிகுதியாக உறிஞ்சியும் ஒரு சிறிது ரசத்தையே அளிக்கும் ஒரு பொருளைப் போன்றவர் ஓர் அடியார், அதிகமாக உறிஞ்சிய பின்னும் ஒரு சொட்டுத் தேனை மட்டும் தரும் ஒரு பூவைப்போன்றவர். (ம—விடம்) இதை நீ அறிகின்றாயா?"

ம—: "ஆம், ஐயன்மீர், மிக நன்றாக அறிகிறேன்."

குருதேவர்: "பிறவி வாசனைகள் என்ற ஒன்றுண்டு. ஒருவன் தன் முற்பிறவிகளில் பல நற்கருமங்களைச் செய்திருக்கும்போது, கடைசிப்பிறவியில் அவன் கபடமற்றவனாகிறான்; அவன் ஓரளவு பித்தனைப்போல நடக்கிறான்.

"உண்மையை உரைப்போமாயின் ஒவ்வொன்றும் பகவானது இச்சைப் படி நடக்கிறது. அவர் 'சரி' என்று சொல்லும்போது, எல்லாம் நடக்கின்றன; அவர் 'வேண்டாம்' என்னும்போது, எல்லாம் அப்படியே நின்றுவிடுகின்றன."

பிராம்மண மங்கை இன்னும் வடக்கு வாயிலண்டையில் நின்றனள். அவள் ஒரு விதவை. அவளுடைய ஒரே மகளை மிக்க உயர் குடியில் பிறந்த வரும், கல்கத்தாவிலே 'ராஜா' என்ற பட்டம் பெற்ற ஒரு பெருநிலக்காரரு மான ஒருவர்க்கு மணம்புரிவித்திருந்தனள். மகள் தாயின் வீட்டுக்கு வரும் போதெல்லாம் விவ்லைச் சேவகர் பலர் அவளோடுகூட வருவது வழக்கம். அப்போது தாயின் நெஞ்சத்தே கர்வம் பெருகிற்று. சில நாள்கட்கு முன்பு தான் மகள் இறந்துபோனாள்; இப்போது துயரத்தால் தன்வசம் அற்றவ ளானாள். கழிந்த சில நாட்களாக, பாக்பசாரிலுள்ள தனது இல்லத்திலிருந்து குருதேவரிடம் ஒரு பைத்தியக்காரியைப்போல் ஓடிக்கொண்டிருந்தாள். தணிக்க முடியாத தனது துயரத்தை அவிக்க யாதேனும் ஒரு வழியை ஸ்ரீ ராமகிருஷ்ணர் அருளுவாரோ என்பதை அறிய ஆவலாயிருந்தாள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் சம் பாஷணையை மீண்டும் தொடங்கினர்.

குருதேவர்(ம—விடம்): "உண்மையாதெனில், பகவான் ஒருவரே மெய்; மற்றவை யாவும் பொய். மனிதர், பிரபஞ்சம், வீடு, மக்கள்—இவை யாவும் ஜாலவித்தைக்காரனது இந்திர ஜாலம் போன்றன. ஜாலவித்தைக்காரன் தனது மாத்திரைக்கோலை அடித்துக்கொண்டே, 'வருக மயக்கம்! வருக குழப்பம்!' என்கிறான். பிறகு அவன் சபையோரிடம், 'பாணையின் மூடியைத் திறவுங்கள்; பறவைகள் அதிலிருந்து ஆகாயத்திலே பறப்பதைப் பாருங்கள்' என்று சொல்கிறான். ஆனால் அவ்வித்தைக்காரன் மட்டும் மெய்; அவனது ஜாலமோ பொய். பொய் ஒருகணம் இருந்து, பின் மறைகிறது.

"ஈசன் கடலைப்போன்றவன்; உயிர்கள் அதன் குமிழிகளைப்போன்றன. உயிர்கள் அங்கே பிறந்து, அங்கே மடிகின்றன. குழந்தைகள் ஒரு பெரிய குமிழியைச் சுற்றியுள்ள சில சிறு குமிழிகளைப்போன்றன.

"ஈசன் ஒருவனே மெய், அவன்மீது அன்பை வளர்ப்பதற்காக முயற்சி செய்க, அவனது தரிசனத்தைப்பெறும் வழியைக் கண்டுபிடி, துயரப்படுவ தனால் உனக்கு வரும் லாபம் என்ன?"

எல்லோரும் மௌனமாக உட்கார்ந்திருந்தனர். பிராமண மங்கை "நான் இப்போது வீட்டுக்குச் செல்லலாமா?" என்றனள். குருதேவர் அன்போடு அவளிடம் "உனக்கு இப்போது போகவேண்டுமா? வெப்பம் கடுமையாக இருக்கிறதே, இப்போது செல்வதேன்? பின்பு ஒரு வண்டியிலே அடியார்க ளோடு நீ செல்லலாமே?" என்று மொழிந்தார்.

காப்டன் (சேனைத் தலைவர்) தமது குழந்தைகளோடு வந்தனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் கிஷோரியிடம் "குழந்தைகட்கு நீர் கோயில்களைக் காட்டி வாரும்" என்றனர், அவர் தலைவரிடம் பேசத்தொடங்கினர். ஸ்ரீராம கிருஷ்ணர் வடக்கு நோக்கி, சிறிய கட்டிலின்மீது அமர்ந்திருந்தார். அவர் தலை வரை அதே கட்டிலில் தமக்கு முன்பே உட்காரும்படி வேண்டினர்.

ஓர் அடியார்: "கிருஷ்ண சரித்திரம் ஒன்று பங்கிம் எழுதியிருக்கிறார்."

குருதேவர்: "காமம் போன்ற ஆசாபாசங்கள் ஒருவற்கு அவசியம் என்று பங்கிம் சொல்வதாக நான் கேள்விப்படுகிறேன்."

ஓர் அடியார்: "ஞானத்தின் நோக்கமாவது, உடல் மனம் ஆவி சம் பந்தமான நமது பற்பல திறமைகளை வெளிப்படுத்தலே என்று தமது பத்திரிகை யில் அவர் எழுதியுள்ளார்."

தலைவர்: "அப்படியா? காமம் முதலியவை அவசியம் என்று அவர் நம்புகிறார்? ஆனால் ஸ்ரீ கிருஷ்ணர்க்குத் தமது லீலா சுகத்தை இவ்வுலகில் அனுபவிக்க முடியும் என்றும், பகவான் தாமே மனித வடிவங்கொண்டு அவ தரித்து, பிருந்தாவனத்தில் இராதையோடும் கோபிமாரோடும் கூடி விளையாடல் புரியும் திறமையுள்ளவரென்றும், அவர் நம்புவதில்லையே."

குருதேவர்(சிரித்துக்கொண்டு): "ஆனால் இப்பொருள்களெல்லாம் சமா சாரப் பத்திரிகையில் எழுதப்படவில்லையே. அவற்றை அவர் எப்படி நம்ப முடியும்?

"ஒருவன் தனது நண்பனிடம் 'நேற்று, நகரில் ஒரு பகுதி வழியாகச் சென்றுகொண்டிருந்தபொழுது, ஒரு வீடு சடார் என்று விழுந்ததைக் கண் டேன்' என்றான். அந்த நண்பன் அவனிடம் 'சற்றே பொறு. அதைச் சமா சாரப் பத்திரிகையில் நான் தேடிப்பார்க்கட்டும்' என்றான். ஆனால் அந்தச் செயல் பத்திரிகையில் கூறப்பட்டில்லை. உடனே அம்மனிதன் 'ஆனால் பத் திரிகையில் அது சொல்லப்படவில்லையே' என்றான். அவனது நண்பனை 'நான் என் கண்ணைக் கண்டதன்றே அது?' என்று மறுமொழி கூறினான். அதற்கு அம்மனிதன் 'அது இருக்கிறபடி இருக்கட்டும். அது பத்திரிகையில் இல்லாதவரை யான் அதை நம்பமாட்டேன்' என்று பதிலளித்தான்.

"பகவான் மனிதனாக வந்து விளையாடுவார் என்பதைப் பங்கிம் எவ்வாறு நம்பக்கூடும்? அவர் தமது ஆங்கிலக் கல்வியிலிருந்து அதைப் பெறவில்லையே. பகவான் தாமே முழுமையாக மனித வடிவில் அவதரிக்கிறார் என்பதை விளக்க மாகக் கூறுதல் மிகக் கடினம். அது அப்படித்தான் அல்லவா? வரம்பு கடந்த பரம்பொருள் மூன்றரை முழம் உயரமுள்ள இம் மனித உடலில் வெளிப் படுதல் ஆச்சரியமன்றே!"

தலைவர்: "கிருஷ்ணர் பகவானே. அவரை வருணிக்கும்போது 'முழுமை' 'அம்சம்' என்பது போன்ற மொழிகளை உபயோகிக்க வேண்டியவ ராகிறோம்."

குருதேவர்: "முழுமையும் பகுதியும் நெருப்பையும் அதன் பொறி களையும் போன்றன. பகவானது அவதாரம் பக்தர்கட்காகவே, ஞானிகட் காகவன்று."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவ்வாறு தலைவரோடும் பிற அடியார்களோடும் பேசிக் கொண்டிருக்கும்போது, ஜயகோபாலசேன் என்பவரும், பிராம்மோ சமாஜத் தைச் சார்ந்த திரைலோக்யரும் வந்து சேர்ந்தனர். அவர்கள் குருதேவரை வணங்கிவிட்டுக் கீழே அமர்ந்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் திரைலோக்யரைப் புனிசிரிப்போடு நோக்கி, சம்பாஷணையைத் தொடர்ந்தனர்.

குருதேவர்: "ஈசனைக் காண முடியாதது அகங்காரத்தினால்தான். பக வானது மாளிகையின் வாயில் முன்பு அகங்காரம் எனும் அடித்தூறு கிடக்கின் றது. அக்கட்டையைத் தாவிச் செல்லாமல் மாளிகைக்குட் பிரவேசிக்க முடியாது.

"முன் ஒரு காலத்தில் ஒரு மனிதன் பேய்களை வசப்படுத்தும் திறமை யைப் பெற்றிருந்தான். ஒரு நாள் அவனுடைய கட்டளைக்கு இணங்கி ஒரு பேய் தோன்றிற்று. அது சொன்னதாவது: 'நான் உனக்கு இன்ன செய்ய வேண்டும் என்று இப்போது சொல்லுக. ஏதேனும் ஒரு வேலை எனக்குக் கொடுக்க உன்னால் இயலாத அக்கணமே நான் உனது கழுத்தை ஒடித்து விடுவேன்.' அம்மனிதனுக்குச் செய்யவேண்டிய காரியங்கள் பல இருந்தன. அவற்றையெல்லாம் ஒவ்வொன்றாக அப்பேயைக்கொண்டு செய்து முடித்தான். கடைசியாக, பேய்க்குக் கொடுக்க அவனிடம் யாதொரு வேலையும் இல்லாதவ னானான். பேய் அவனிடம் 'இப்போது நான் உனது கழுத்தை ஒடிக்கப்போகி றேன்' என்றது. அம்மனிதன் 'ஒரு நிமிஷம் காத்திரு. நான் விரைவில் திரும்புகிறேன்' என்று பதிலளித்தான். அவன் தனது குருவிடம் ஓடினான்; 'ஐயன்மீர்! யான் பேராபத்திற்கு ஆளாயிருக்கிறேன். எனது சங்கடம் இதுவே' என்று தனது சங்கடத்தை எடுத்துரைத்தான். 'நான் இப்போது என்ன செய் வது?' என்று கேட்டான். இதைச்செய். இந்தச் சுருளும் தலை மயிரை நேராக்கும்படிப் பேயினிடம் சொல்க' என்று குரு மொழிந்தார். பேய் அதனை நிமிர்த்தற்காகப் பகலும் இரவும் பாடுபட்டது. ஆனால் சுருண்ட தலைமயிரை நேராக்க அதற்கு எப்படி இயலும்? தலைமயிர் சுருண்டே இருந்தது.

"அதுபோல, அகங்காரம் ஒரு கணம் மறைவதாகத் தோன்றும்; ஆனால் மறுகணம் அது தோன்றுகிறது. அகங்காரத்தை ஒருவன் துறந்தாலன்றி, அவன் ஈசனது அருளைப் பெறுவதில்லை.

"தக்க வயது வராத ஒரு சிறுவனுக்கு ('மைனர்'க்கு)த்தான் ஒருவனைப் பாதுகாப்பவனை நியமிப்பது உண்டு. அச் சிறுவனுக்குத் தனது சொத்தைப் பத்திரமாகப் பாதுகாக்க முடியாது; ஆதலால் அரசன் அவனுக்காகப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறான். 'அதுபோல, நாம் நமது ஆணவத்தைத் துறந்தாலன்றி ஈசன் நமது பொறுப்புக்களைத் தான் ஏற்றுக்கொள்வதில்லை.

"ஒருநாள் இலக்ஷ்மியும் நாராயணரும் வைகுண்டத்தில் அமர்ந்திருக்கும் போது, திடீரென நாராயணர் எழுந்திருந்தார். இலக்ஷ்மிதேவி அவருடைய திருவடிகளைப் பிடித்துக்கொண்டிருந்தாள். தேவி அவரிடம், 'நாத, தாங்கள் எங்குச் செல்கிறீர்கள்?' என்றார். 'என் அடியார்களில் ஒருவர் பேராபத்திற்கு உள்ளானார்! யான் அவரைக் காப்பற்றல் அவசியம்' என்று பதிலளித்தார் நாராயணர். இம் மொழிகளைக் கூறியதும் அவர் வெளியே சென்றார். ஆனால் அவர் உடனே திரும்பிவிட்டார். இலக்ஷ்மிதேவி 'நாதா, தாங்கள் அவ்வளவு விரைவில் திரும்பியதேன்?' என்றார். நாராயணர் சிரித்துக் கொண்டே, "அந்த அடியார் என்மீது கொண்ட பக்தியில் மூழ்கியவராய், சாலை வழியே சென்றுகொண்டிருந்தார். வண்ணார்கள் சிலர் புல்லின்மீது துணிகளை உலர்த்திக்கொண்டிருந்தார். அந்த அடியார் அத்துணிகளின்மீது நடந்து சென்றார். இதனால் வண்ணார்கள் அவரைப் பின் தொடர்ந்து, தமது கம்புகளால் அவரை அடிக்கத் தொடங்கினர். ஆதலால் அவரைக் காப்பாற்றும் பொருட்டு நான் வெளியே ஓடினேன்" என்றார். 'அப்படியானால் தாங்கள் ஏன் திரும்பி வந்தீர்கள்?' என்று கேட்டாள் தேவி. நாராயணர் சிரித்தார்; 'அடியாரே அவர்கள்மீது எறிவதற்காக ஒரு செங்கல்லைக் கையில் எடுப்பதைக் கண்டேன். (எல்லோரும் சிரித்தல்) ஆதலின் யான் திரும்பி வந்தேன்' என்றார்."

திரைலோக்யர்: "அகங்காரத்தை நீக்குவது மிகக் கடினம், தாங்கள் போக்கிவிட்டதாக மக்கள் நினைப்பது மட்டுந்தான்."

குருதேவர்: "கௌரி என்பவர் தமக்கு அகங்கார உணர்ச்சி கிளம்பாதிருத்தற்காக 'நான்' என்று தம்மைக் குறித்துச் சொல்லிக்கொள்ளமாட்டார். 'இது'வென்று அதற்குப் பதிலாகச் சொல்லுவர். நானும் அவரையே மாதிரியாகப் பின்பற்றி, 'நான்' என்பதற்குப் பதிலாக 'இது' என்று என்னைக் குறித்துச் சொல்லலானேன். 'நான் சாப்பிட்டாயிற்று' என்பதற்குப் பதிலாக 'இது சாப்பிட்டாயிற்று' என்று சொல்வேன். மதுரர் இதைக் கவனித்து, என்னிடம் ஒரு நாள் 'எந்தையே, இது என்ன? நீங்கள் ஏன் அவ்வாறு பேசவேண்டும்? அவர்கள் அப்படிப் பேசட்டும். அவர்கட்கு அகங்காரம் உள்ளது. உங்களிடம் அது நீங்கிவிட்டது; நீங்கள் அவ்வாறு பேசவேண்டியதில்லையே' என்று சொன்னார்.

"சாதன நிலையிலே ஒருவர் பகவானை அவருடைய எல்லாக் குணங்களைக்கொண்டும் வருணிக்க வேண்டும். ஒரு நாள் ஹாஸ்ரர் நரேந்திரரைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னார்: 'பகவான் எல்லையற்றவர். அவரது பெருமை எல்லையற்றது. நீ சமர்ப்பிக்கும் தின் பண்டங்களையும் பழங்களையும் அவர் ஏற்றுக்கொள்வார் என்றோ, உனது சங்கீதத்தைக் கேட்பாரென்றோ நீ நினைக்கிறாயா? இது உன்னுடைய தவறான கருத்து.' நரேந்திரர் உடனே பத்து கெஜம் கீழே தாழ்ந்துவிட்டார். ஆதலால் நான் ஹாஸ்ரரிடம் 'கெட்ட பயலே! இந்த இளைஞரிடம் நீ இப்படிப் பேசினால் இவர்கள் எந்நிலையில் இருப்பார்?'

என்று கூறினேன். ஒரு மனிதன் பக்தியை விட்டுவிட்டு எப்படி வாழ்வான்? பகவானிடம் எல்லையற்ற பெருமை உண்டு என்பதில் ஐயமில்லை; ஆயினும் அவர் தமது அடியார்கட்கு அடங்கி நடப்பவரேயாவர். ஒரு தனவந்தரது வாயில் காப்போன், தனது எஜமானர் தமது தோழர்களோடு அமர்ந்திருந்த கூடத்திற்கு வந்தான். அவன் அறையில் ஒரு பக்கம் நின்றான். தனது கையில் அவன் ஏதோ ஒன்றைத் தனது துணியால் மூடிவைத்திருந்தான். அவன் மிகவும் தயங்கிக்கொண்டிருந்தான். எஜமானர் அவனைப் பார்த்து, 'வாயில் காப்போய், உனது கையில் என்ன வைத்திருக்கிறாய்?' என்று கேட்டார். மிக்க தயக்கத்தோடே அவ்வேலைக்காரன் துணிக்கு அடியிலிருந்து ஒரு சீதாப் பழத்தை எடுத்து, தனது எஜமானர் முன்பு வைத்து, 'ஐய, தாங்கள் இதை உண்ணவேண்டும் என்பது என் விருப்பம்' என்றான். எஜமானர் தமது வேலைக்காரனது சிரத்தையைக் கண்டு வியந்தார். பேரன்போடு அவர் அக்கனியைக் கையில் எடுத்து 'ஆ! இது ஒரு மிக நேர்த்தியான சீதாப்பழம். இது உனக்கு எங்கிருந்து கிடைத்தது? இதைப் பெறுவதற்காக நீ பெரிதும் வருத்தப்பட்டிருக்கவேண்டும்' என்றார்.

"உலக போகத்தை விரும்பும்வரை ஒரு மனிதன் கருமத்தை விட முடியாதவனாவான். போக இச்சை ஒருவனிடம் இருக்கும்வரை அவன் கருமஞ் செய்கிறான்.

"கங்கையில் நங்கூரமிடப்பட்டிருந்த ஒரு கப்பலின் பாய் மரத்தில் ஒரு பறவை பறந்த நிலையில் உட்கார்ந்தது. மெதுவாகக் கப்பல் கடலுக்குள்ளே சென்றது. பறவைக்குத் தன்னினைவு வந்ததும், எத்திசையிலும் அதற்குக் கரை தென்படவில்லை. நிலத்தைக் காணும் ஆசையோடு அது வடக்கு நோக்கிப் பறந்தது; அது வெகு தூரம் சென்றது, மிக்க களைப்புற்றது. எனினும் கரையைக் காண முடியவில்லை. அது யாது செய்ய முடியும்? அது கப்பலுக்கே மீண்டு, பாய் மரத்தில் அமர்ந்தது, வெகு நேரம் சென்றபின் பறவை மறுபடியும் பறக்கலாயிற்று. ஆனால் இம்முறை கிழக்கு முகமாகச் சென்றது. அத்திசையிலும் அதற்குக் கரையைக் காண இயலவில்லை; எப் பக்கத்தும் வரம்பற்ற கடலையன்றி வேறெதையும் காணவில்லை. மிகவும் களைப்புற்று அது திரும்பவும் கப்பலுக்கே போய் பாய் மரத்தில் அமர்ந்தது. வெகுநேரம் உட்கார்ந்திருந்தபின் அப்பறவை தெற்கு நோக்கிப் பறந்தது. பின்பு மேற்கு முகமாகவும் சென்றது. எத்திக்கிலும் கரைக்குரிய அடையாளமும் அது காணாது போகவே அது மறுபடியும் பாய்மரத்திற்கே வந்து தங்கலாயிற்று. அது பின் அதைவிட்டுச் செல்லாது, மேலும் முயற்சி செய்யாது அங்கேயே அமர்ந்திருந்தது. அதன்பின் அது பரப்பரப்பையோ கவலையையோ அடையவில்லை. அதற்குக் கவலை நீக்கினமையால் அது பின்னும் முயற்சி செய்யாதிருந்தது."

தலைவர்: "இந்த உதாரணம் எவ்வளவு அழகியது!"

குருதேவர்: "உலகப் பற்றுடையார் சுகத்தைத் தேடிப் பூமியின் நாலு மூலைகட்கும் அலைந்து திரிகின்றனர். அவர்கள் அதை எங்கும் காண்பதில்லை. அவர்கள் சோர்வடைகின்றனர், அலுத்துப்போகின்றனர்—அவ்வளவே. காம காஞ்சனப் பற்றால் அவர்கள் துயரத்தையே அனுபவிக்கின்ற சமயத்தில், வைராக்கியம் துறவு இரண்டையும் நோக்கி ஒரு கிளர்ச்சி எழுகின்றதை அவர்கள் உணர்கின்றனர். பெரும்பாலார் காம காஞ்சனங்களை முதலில் அனுபவியாமல் அவற்றைத் துறக்க இயலாதவராவர்.

"ஆனால் இவ்வுலகில் அனுபவித்தற்கு யாது உள்ளது? சுகம் சிறிது நேரமே உள்ளது. இக்கணம் அது தோன்றுகிறது. மறுகணம் அது மறை கிறது.

"மாறாது மழையைச் சொரிந்துகொண்டேயிருக்கும் கருமேகம் மூடிய வானம் போன்றது உலகம்; சூரியனது முகம் தெரிவது அபூர்வமாகிறது; பெரும்பாலும் உலகில் துயரமே உள்ளது. காமம் காஞ்சனம் எனும் மேகங் களால் சூரியன் புலப்படுவதில்லை, சிலர் என்னிடம் 'ஐயன்மீர், ஈசன் இம் மாதிரியான உலகத்தைச் சிருஷ்டித்ததேன்? இதனின்றும் வெளியேற நமக்கு வழியில்லையா?' என்று கேட்கின்றனர். அதற்கு நான் 'வெளியேற வழி யில்லை என்பது ஏனே? பகவானையே சரணமடையும். அனுகூலமான காற் றடிக்கவேண்டும் என்றும், காரியங்கள் உமக்கு அனுகூலமாகவே அமைய வேண்டும் என்றும், துயரமிகுந்த நெஞ்சொடு அவரிடம் பிரார்த்தியும். உயிர் துடிக்க அவரையே வேண்டுவீராயின் அவர் உமக்குச் செவி சாய்ப்பார்' என்று பதிலுரைப்பேன்."

மாலைப்பொழுதாயிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ணரது அறையில் ஒரு விளக்கை ஏற்றினர், தூபம் போட்டனர். பல கோயில்களிலும் கட்டிடங்களிலும் விளக்கு களைக் கொளுத்தினர். வாத்தியம் பாணர் மண்டபத்தே முழங்கியது. விரை வில் மாலைப்பூஜை கோயில்களில் தொடங்கும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிறிய கட்டிலில் உட்கார்ந்தார். பற்பல தெய்வங்களின் பெயர்களை ஓதிக்கொண்டே அவர் தேவியின்மீது தியானம் பண்ணினர். மாலைப்பூஜை முடிந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடியார்களுடன் இடையிடையே பேசிக்கொண்டே அறையில் அங்கும் இங்கும் நடக்கலானர்.

விரைவில் நரேந்திரர் வந்து சேர்ந்தார். அவருடன் சரத் என்பவரும் ஒன்றிரண்டு வேறு இளைஞரான அடியார்களும் வந்தனர். அவர்கள் அனை வரும் குருதேவரை வணங்கினர்.

நரேந்திரரைக் கண்டதும் ஸ்ரீ ராமகிருஷ்ணரது அன்பு பொங்கிவழியலா யிற்று. குழந்தையின் மீதுள்ள பிரியத்தைக் காட்ட அதன் மோவாயைத் தொடுவதுபோல, அவர் பேரன்போடு நரேந்திரரது மோவாயைத் தொட்டனர். அன்பு பெருகுங் குரலில் அவர் 'ஆ, நீ வந்தாயா?' என்றனர்.

செவ்வாய், ஜூலை 28, 1885

ஸ்ரீ ராமகிருஷ்ணர் நந்தபோஸ் என்பவராற் சேர்த்து வைக்கப்பட்டிருந்த இந்து மத தெய்வங்களின் படங்களைக் காண்பதற்காக அவரது மாளிகைக்குச் சென்றார். அங்கிருந்து, புத்திரியை இழந்த சோகத்திற்கு ஆளான பிராம்மண மங்கையின் வீட்டிற்குச் சென்றார். அது ஒரு பழைய செங்கற் கட்டிடம். அதற்குட் புகுந்து குருதேவர் தமது இடப்பக்கமிருந்த பசுக்கொட்டத்தைக் கடந்து சென்றார். அவரும் அடியார்களும் மேலே மாடிக்குச் சென்று, ஆசனங்களில் அமர்ந்தனர். ஜனங்கள் அங்கே வரிசை வரிசையாக நின்றுகொண்டிருந்தனர். மற்றவர் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் அனைவரும் ஸ்ரீ ராமகிருஷ்ணரது தரிசனத்தை ஒரு கணமேனும் பெற ஆவலாயிருந்தனர்.

பிராம்மண மங்கைக்கு ஒரு சகோதரியார் இருந்தனர்; இருவரும் விதவையர். அவ்விருவரின் சகோதரர்களும் தத்தம் குடும்பங்களோடு அதே வீட்டில் வாழ்ந்து வந்தனர். பிராம்மணி ஸ்ரீ ராமகிருஷ்ணரை வரவேற்க ஏற்பாடுகள் செய்வதற்காகப் பகலெல்லாம் வேலை செய்துகொண்டிருந்தார். குருதேவர் நந்தபோஸின் மாளிகையிலிருந்தபோது, அம்மையார் மிக்க பரபரப்புள்ளவராய், சில நிமிஷங்கட்கு ஒரு தரம் வீட்டிற்கு வெளியே வந்து அவர் வருகிறாரா என்று பார்க்கலாயினர். நந்தரது வீட்டிலிருந்து அம்மையாரின் இருப்பிடம் வருவதாக அவர் வாக்களித்திருந்தார். அவர் வரக் காலதாமதமாயினமையால் அவர் ஒருவேளை வராதிருப்பாரோ என்று எண்ணினர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு ஜமக்காளத்தின்மீது அமர்ந்திருந்தார். ம—நாராயணர், யோகின், தேவேந்திரர் முதலான ஒரு சிலரும் பாயின்மீது அமர்ந்திருந்தனர். சில நிமிஷங்கள் கழிந்ததும், இளைய நரேனும் வேறு சில அடியார்களும் வந்தனர். பிராம்மணியின் சகோதரியார் குருதேவர் முன்பு வந்து, அவரை வணங்கினர். அவ் அம்மையார் அவரிடம் 'சகோதரி, தாங்கள் இங்கே வரக் காலதாமதமான காரணத்தை விசாரிப்பதற்காக நந்தபோஸின் மாளிகைக்குச் சற்று முன்புதான் சென்றாள். அவள் விரைவில் இங்குவந்து விடுவாள் என்றனர்.

கீழ்த்தளத்திலே ஒரு சத்தம் கேட்டது; அந்த அம்மையார் "அதோ அவள் வருகின்றனள்!" என்றார். அம்மையார் கீழே சென்றனர். ஆனால் பிராம்மணி வரவில்லை.

ஸ்ரீ ராமகிருஷ்ணர், தம்மை அடியார்கள் சூழ, அங்கே புன்னகை பூத்தவராய் உட்கார்ந்திருந்தார்.

ம—(தேவேந்திரரைப்பார்த்து): "என்ன மகத்தான காட்சி! இளையோரும் முதியோரும், ஆண்களும் பெண்களும்—இம்மக்கள் அனைவரும் இவரை ஒரு கணமாயினும் தரிசிக்கவும், இவருடைய மொழிகளைக் கேட்கவும் ஆவலாய், வரிசையாக நின்றுகொண்டிருக்கும் இக் காட்சி!"

தேவேந்திரர்(குருதேவரிடம்): "இந்த இடம் நந்தரது மனையைவிட மேலானது என்று ம— சொல்லுகிறார், இம் மக்களின் பக்தி ஆச்சரியமானது."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிரித்தார்.

பிராம்மணியின் சகோதரியார் "இதோ சகோதரி வருகிறாள்" என்றனர்.

பிராம்மணி அம்மையார் வந்து குருதேவரை வணங்கினர். அம்மையார் ஆனந்தத்தால் தம்மை மறந்தவரானர். ஒருவாறு நாத் தழுதழுப்ப, பின்வருமாறு கூறலானர்: "இந்த ஆனந்தம் எனக்கு அளவு மிஞ்சியது. ஒருக்கால் அதைத் தாங்காது இறக்கவும் செய்யலாம். நண்பர்களே, யான் எப்படி வாழும் திறமை பெறுவேன் என்று எனக்குக் கூறுங்கள். எனது பெண் சண்டி, வில்லையணிந்த சேவகர்கள் பின் தொடர, வீதியின் இரு பக்கத்தும் ஆயுதபாணிகளாய்க் காவலர் வரிசையாக நிற்க, இவ்வீட்டிற்கு வருங்காலத்தும் யான் ஆனந்தப் பூரிப்பால் இம்மாதிரி உடல் நடுங்கியதில்லை. ஆ! இப்போது அவளது மரணத்தைப்பற்றிய துயரம் ஓர் இம்மியளவும் என்னிடம் இல்லை. அவர் (ஸ்ரீராம்கிருஷ்ணர்) வரமாட்டாரோ என்று பயந்தேன். பின்பு நினைந்தேன்; 'அவர் வராது போயின், அவரை வரவேற்பதற்கும் உபசரிப்பதற்கும் விரும்பித் தயாராக வைத்திருந்த பொருள்களையெல்லாம் கங்கையில் நான் எறிந்துவிடவேண்டும். யான் அவரிடம் இனிப்பேசவே கூடாது. அவர் வேறிடம் போவாராயின், யான் அங்கே சென்று, தொலையிலிருந்து அவரை நோக்கிவிட்டுப் பின் திரும்பிவிடவேண்டும்' என்று.

"யான் இப்போது எவ்வளவு ஆனந்தமாயுள்ளேன் என்பதை நான் போய் ஒவ்வொருவராகச் சொல்லட்டும். எனக்கு நல்ல அதிர்ஷ்டம் கிடைத்ததை யோகின் என்பவரிடம் போய்ச் சொல்லட்டும்."

பின்னும் ஆனந்தத்தில் மூழ்கியவளாய், அவள் கூறுவாள்: "ஓர் உழைப்பாளி ஓர் அதிர்ஷ்டச் சீட்டில் ஓர் இலக்ஷம் ரூபாய் பரிசு பெற்றான். அச் செய்தி அவனது காதை எட்டியதும், அவன் அடைந்த ஆனந்தம் ஒன்றாலேயே இறந்தான். ஆம், அவன் உண்மையாகவே மெய்யாகவே இறந்தான். அதே மாதிரி எனக்கும் நிகழுமோ என்று நான் அஞ்சுகிறேன். நண்பர்களே, என்னை ஆசீர்வதியுங்கள்; மாட்டீர்களாயின் நான் இறப்பது உறுதி."

பிராம்மணி அடியார்களைக் கண்டதும் மிகப்பெரு மகிழ்ச்சியை அடைந்தாள். அவள் கூறியதாவது: "உங்களை எல்லாம் இங்கே கண்டு யான் எவ்வளவு ஆனந்தம் பெறுகிறேன்! யான் சிறிய நரேனையும் அழைத்துவந்துளேன்; அவன் இல்லாவிடில் நம்மை வேறு யார் சிரிக்கச் செய்வார்."

அவள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்போதே, அவளுடைய சகோதரி மேலே வந்து, "அக்கா. கீழே வா. நீ இங்கே தங்கிவிட்டால் நான் எப்படிக் காரியங்களை நடத்த முடியும்? நானே எல்லாவற்றையும் செய்ய இயலுமா?" என்றாள்

ஆனல் அப்பிராமணியார் ஆனந்தத்தில் முழ்கியிருந்தார், குருதேவரையும் அடியார்களையும் விட்டுத் தமது கண்களை இழுக்க அவள் முடியாதவளானுள்.

சிறிது நேரம் கழிந்ததும், அம்மையார் மிக்க மரியாதையுடன் ஸ்ரீராமகிருஷ்ணரை இன்னேர் அறைக்கு அழைத்துச்சென்று, அவர்க்குத் தின்பண்டங்களையும் மற்ற சிற்றுண்டிகளையும் சமர்ப்பித்தாள். அடியார்கள் மாடிமீது உபசரிக்கப்பட்டனர்.

அப்போது இரவு ஏறக்குறைய மணி எட்டு ஆயிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ணர் புறப்படத் தயாராயிருந்தார். அவர் வாசலுக்கு வந்தபோது, பிராம்மணியார் தமது சகோதரரது மனைவியிடம் குருதேவரை வணங்குமாறு கூறினர். பிறகு அம்மையாரின் சகோதரரில் ஒருவர் குருதேவரது திருவடியைத்தொட்டு வணங்கினர். அவரைக்குறித்து அம்மையார் "அவன் எனது சகோதரரில் ஒருவன்! அவன் ஒரு பேதை" என்று கூறினர். குருதேவரோ "இல்லை, இல்லை அவர்கள் அனைவரும் நல்லவரே" என்று மறுத்துரைத்தார்.

ஒருவர் பாதையை ஒரு விளக்கின் உதவியால் காட்டினர். சில இடங்களில் இருட்டாயிருந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் பசுத்தொழுவத்தின் முன் நின்றார். அடியார்கள் அவரைச் சூழ்ந்து கூடினர். ம— குருதேவரை வணங்கினர்; குருதேவர் கனு என்பவரின் அன்னையாரது இல்லத்திற்குப் புறப்படுவதாய் இருந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் கனுவின் அன்னையாரது இல்லத்தின் கூடத்திலே அமர்த்தப்பட்டார். அது தெரு மட்டத்திலிருந்து. அந்த அறையை ஒரு பாடகர் கூட்டம் அமர்த்தியிருந்தது. பல இளைஞர் குருதேவரை மகிழ்வித்தற்காக இடையிடையே தமது கருவிகளைக்கொண்டு இன்னிசை பாடினர். இரவு எட்டரை மணி ஆகியது. நிலவு வெள்ளம் தெருக்களையும் வீடுகளையும் வானத்தையும் நிறைத்தது. அன்று பௌர்ணமிக்கு அடுத்த முதல் நாள்.

பிராம்மணியாரும் அங்கு வந்திருந்தனர், கூடத்தையும் உள்ளறைகளையும் மாறி மாறிப் பார்த்து வந்தனர். சில நிமிஷங்கட்கு ஒருமுறை அவர் கூடத்திற்குவந்து, குருதேவரை நோக்குவார். அண்டை வீடுகளிலுள்ள சில இளைஞரும் ஜன்னல்களின் வழியாக அவரை நோக்கினர். அவ்வட்டாரத்திலுள்ள இளையோரும் முதியோரும் இம் மஹானைக் காணும் பொருட்டுக் கூட்டங் கூடினர்.

இளய நரேன், வீதியிலுள்ள பையன்கள் ஜன்னல்களின்மீது ஏறுவதைக் கண்டான். அவன் அவர்களைப் பார்த்து "நீங்கள் இங்கு இருப்பதேன்? போங்கள்! வீட்டுக்குச் செல்லுங்கள்!" என்று சொன்னன். குருதேவர் அன்போடு 'அவர்கள் இருக்கட்டும்" என்று உரைத்தார். இடையிடையே அவர் "ஹரி ஓம்! ஹரி ஓம்!" என்ற மந்திரத்தை ஓதி வந்தார். சிறிது

நேரத்திற்குப்பின் பிராம்மணியார் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் "தயவு செய்து உள்ளே வாருங்கள்" என்று அழைத்தார்.

குருதேவர்: "எதற்காக?"

பிராம்மணியார்: "சிற்றுண்டிகள் இங்கே பரிமாறப்பட்டுள்ளன. தயவு கூர்ந்து வாருங்கள்."

குருதேவர்: "அவற்றை இங்கே கொண்டுவந்தால் என்ன?"

பிராம்மணியார்: "கனுவின் அன்னையார் தங்களது திருவடித் தூளால் இவ்வறையைப் புனிதமாக்கும்படி தங்களைப் பிரார்த்திக்கின்றனர். அப்போது இவ்வறை காசியாக மாறும்; இதில் இறப்பவர் எவராயினும், அவர்க்குப் பின்னால் துன்பம் நீங்கும்."

பிராம்மணியாரும் அக்குடும்பத்து இளைஞரும் கூடவர, ஸ்ரீராமகிருஷ்ணர் உள்ளே சென்றார், அடியார்கள் வெளியே நிலாவிலே உலாவிக்கொண்டிருந்தார், ம—வும் விநோதரும் வீட்டிற்குத் தெற்கேயுள்ள தெரு வழியே திரிந்துகொண்டே தமது பிரிய குருதேவரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளிற் பலவற்றை ஞாபகப்படுத்திக்கொண்டிருந்தனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் பலராமரது வீட்டிற்குத் திரும்பிவிட்டார். கூடத்திற்கு மேற்கேயுள்ள சிறிய அறையில் அவர் இளைப்பாறிக்கொண்டிருந்தார். அப்போது அதிகப் பொழுதாயிற்று; பதினெரு மணியாகப் பதினைந்து நிமிஷமே இருந்தது.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் யோகினிடம் "எனது காலை மெதுவாகத் தடவுக" என்றனர், ம— அருகே உட்கார்ந்திருந்தனர். யோகின் அவரது காலைத் தடவிக்கொண்டிருக்கும்போது, குருதேவர் திடீரென "எனக்குப் பசியெடுக்கிறது! மாவாற் செய்த அப்பத்தை நான் உண்பேன்" என்றனர்,

பிராம்மணியார் குருதேவரோடும் அடியார்களோடும் பலராமரது வீட்டிற்கும் சென்றிருந்தனர். அம்மையாரது தம்பிக்கு மத்தளம் கொட்டத் தெரியும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் "நரேந்திரனே வேறெரு பாடகனை பாட விரும்பும்போது, இவ் அம்மையாரது தம்பியை அழைத்தல் நமது காரியத்திற்கு அனுகூலமாகும்" என்று உரைத்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிறிது அப்பத்தை உண்டனர். யோகினும் மற்ற அடியார்களும் அறையை விட்டுப் புறப்பட்டார். ம— குருதேவரது திருவடியைத் தடவிக்கொடுத்துக்கொண்டிருந்தார். அவர்கள் ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டிருந்தனர்.

குருதேவர் (பிராம்மணியாரையும் அவரது உறவினரையும் குறித்து): "ஆ அவர்கள் எவ்வளவு ஆனந்தமாயிருந்தனர்!"

ம—: "என்ன ஆச்சரியம்! இயேசுநாதரது காலத்தில் இரு மங்கையர் சம்பந்தமாக இதேமாதிரிச் செயல் நிகழ்ந்தது, அவர்களும் சகோதரிகளே, கிறிஸ்துவினிடம் ஈடுபட்டவர்களே. அவர்கள் மார்த்தாவும் மேரியும்."

குருதேவர்(ஆவலாக): "அக் கதையை எனக்குச் சொல்லு."

ம—: "இயேசு கிறிஸ்துவும் தேவரீரைப்போலத் தமது அடியார்களோடு அவர்களுடைய வீட்டுக்குச் சென்றனர். அவரைக் கண்டதும் சகோதரிகளில் ஒருத்தி பிரேமையால் வரும் ஆனந்தத்தில் ஆழ்ந்தார். மற்றொரு சகோதரி தானே வேறு துணையின்றி இயேசு நாதரை உபசரிப்பதற்காக உணவைத் தயாரித்து வந்தாள். அவள் இயேசுநாதரிடம் வந்து, 'குருநாதரே, எனது சகோதரி எவ்வளவு தவறு செய்து வருகிறாள் என்பதைத் தாங்களே கண்டு தீர்மானித்துக்கொள்ளுங்கள். அவள் தங்களோடு அறையில் உட்கார்ந்திருக்கிறாள், நானே எல்லாக் காரியங்களையும் செய்து வருகிறேன்' என்று முறையிட்டாளாம். இயேசு நாதரோ 'உனது தங்கை உண்மையாகவே பாக்கியசாலி. மனித வாழ்க்கைக்கு அவசியமான ஒரே பொருளாகிய பிரேமையை அவள் முதிரச் செய்திருக்கிறாள்' என்று பதில் மொழிந்தார்."

குருதேவர்: "சரி, இதையெல்லாம் பார்த்தபின்பு உனக்கு என்ன உணர்ச்சி உண்டாகிறது?"

ம—: "கிறிஸ்துவும் சைதன்ய தேவரும் தாமும்—இம்மூவரும் ஒரு வரேயாவார், ஒரே புருடர் இம்மூவராகவும் உதித்தனர்."

குருதேவர்: "ஆம், ஆம், ஒருவரே, ஒருவரே. உண்மையில் ஒருவரே. அவர் மட்டுமே இம்மாதிரி இங்கே வாழ்கின்றனர் என்பதை நீர் பார்க்கவில்லையா?"

இதைக் கூறும்போதே ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது விரலால் தமது உடலைச் சுட்டிக் காட்டினார்.

ம—: "பகவான் தாமே பூமியில் எவ்வாறு அவதரிக்கிறார் என்பதை அன்று தாங்கள் தெளிவாக விளக்கினீர்கள்."

குருதேவர்: "நான் சொன்னதை எனக்குச் சொல்க."

ம—: "ஒரு நிலப்பரப்பு அடிவானம்வரை பரந்திருப்பதாகவும், அதற்கப்பாலும் இருப்பதாகவும் கற்பனை பண்ணிக்கொள்ளும்படி எங்களிடம் சொன்னீர்கள். அது யாதொரு தடையுமின்றிப் பரந்துள்ளது. ஆனால் நமக்கு முன் ஒரு சுவர் இருப்பதனால் நாம் அதைக் காண முடியாதவராகிறோம். அச்சுவரில் ஒரு வட்டமான துவாரம் இருக்கிறது. அத் துவாரத்தின் வழியாக அந்த எல்லையற்ற நிலப்பரப்பின் ஒரு பகுதியைக் காண்கிறோம்."

குருதேவர்: "அத்துவாரம் இன்னதென்பதைச் சொல்லுக."

ம—: "தாங்களே அத்துவாரம், தங்கள் மூலம் எல்லாவற்றையும் காணலாகும்—அதாவது, முடிவற்ற அந்த எல்லையில்லாப் புல்வெளி முழுமையையும் காணலாகும்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் பெரிதும் மகிழ்ச்சியடைந்தனர். ம—வின் முதுகைத் தட்டிக்கொடுத்து, அவர் 'நீர் அதையறிந்திருக்கிறீர் என்பதைக் காண்கின்றேன், அது நன்றே!' என்றனர்.

ம—: "அதை அறிவது உண்மையாகவே மிகக் கடினம். பகவான் தாமே பரிபூரணப் பிரம்மமாயிருந்தும், அச்சிறு உடலில் எப்படி வசிக்கக் கூடும் என்பதை முற்றிலும் கிரகிப்பது இயலவில்லை.

"தாங்கள் இயேசுவைப்பற்றியும் கூறினீர்கள்."

குருதேவர்: "நான் கூறியது என்ன?"

ம—: "யதுமல்லிக் என்பவரின் பூஞ்சோலை இல்லத்திலே இயேசு நாதரின் படத்தைக் கண்டதும் தாங்கள் சமாதியை அடைந்துவிட்டீர்கள். இயேசு படத்திலிருந்து கீழிறங்கி, தங்களது உடலில் லயிப்பதை நீங்கள் தரிசித்தீர்கள்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிறிது நேரம் மௌனமாயிருந்தார். பிறகு அவர் ம—விடம் கூறியதாவது: "எனது தொண்டைக்கு நேர்ந்துள்ளதில் ஒருக்கால் ஒரு பொருள் உண்டு போலும். (தொண்டைப்புண் வந்ததைக் குறிக்கும் பேச்சு). எல்லோர் முன்பும் என்னை அற்பமாக ஆக்கிக்கொள்ளாமல் இருக்கும்பொருட்டும், எல்லா வகையான இடங்கட்கும் யான் சென்று பாடியாடாதிருக்கும்பொருட்டு இது நிகழ்ந்துள்ளது."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் கொசுவலைக்குள்ளே படுத்துக்கொண்டார். ம—அவர்க்கு வீசினர். குருதேவர் ஒரு பக்கமாகத் திரும்பிப்படுத்தார். பகவான் தாமே எவ்வாறு மனித உடலில் அவதரிக்கிறார் என்பதை அவர் ம—வுக்குக் கூறினர். மேலும் அவருடைய ஞான இலக்ஷியத்தைப்பற்றியும் கூறினர்.

குருதேவர்: "ஆரம்பத்திலேயே யான் தெய்விக வடிவங்களைக் காணவில்லை; அம்மாதிரியான நிலைகள் வழியாகவே சென்றேன். இப்போதும் அடிக்கடி அவ்வடிவங்களைக் காண்பதில்லை."

ம—: "பகவான் தமது லீலைகளை நடத்துதற்காக ஏற்றுக்கொள்ளும் வடிவங்கள் அனைத்துள்ளும், நரவடிவத்தில் அவர் புரியும் லீலையையே மிகவும் விரும்புகிறேன்."

குருதேவர்: "அது போதுமானது. நீரும் என்னைப் பார்க்கின்றீர்."

ஞாயிறு, ஆகஸ்டு 9, 1885

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தக்ஷிணேசுவரத்திலே தமது அறையில் உட்கார்ந்திருந்திருந்தார். அப்போது இரவு எட்டு மணி. குருதேவர் மகிமாசரணோடு பேசிக் கொண்டிருந்தார். ராக்கால், ம—, மகிமாசரணின் ஒன்றிரண்டு தோழர்கள்—இத்தனை பேரும் அறையில் இருந்தனர். மகிமாசரண் இரவுப்பொழுதையும் கோயிற் பூங்காவனத்திலே கழிப்பதாய் இருந்தார்.

குருதேவர்: "இங்கே வரும் இளைஞர்கட்கு இரண்டு விஷயங்களைமட்டும் தெரிந்துகொள்வதே போதுமானது. இவற்றை அவர்கள் அறிந்துகொள்வராயின், மிகுதியான சாதனமும் தவமும் பழகும் அவசியம் அவர்க்கு இராது. முதலில், நான் இன்னார் என்பது; இரண்டாவது அவர்கள் இன்னார் என்பது. இளைஞரிற் பலர் அந்தரங்கர் என்னும் வகுப்பினைச் சார்ந்தவர்.

" அந்தரங்க வகுப்பைச் சேர்ந்தவர் முக்தியடையார். வடமேற்குத் திசையில் யான் மறுபடியும் மனித உடலைத் தரித்துக்கொள்ள வேண்டியதாகும்."

மகிமாசரண் சாஸ்திரங்களிலிருந்து சில சுலோகங்களை ஒப்பித்தனர். அவர் தந்திர சாஸ்திரங்களைச் சார்ந்த பற்பல ஞானனுபவக் கிரியைகளை வருணித்தார்.

குருதேவர்: " எனது ஆன்மா சமாதியிற் புகும்போது, வரம்பற்ற இடமாகிய மஹாகாசத்திலே ஒரு பறவையைப்போல் பறந்துகொண்டிருக்கிறது என்று சிலர் சொல்கின்றனர்.

" ஹ்ரிஷிகேசத்திலிருந்து ஒரு சமயம் சாது ஒருவர் வந்திருந்தார். அவர் என்னிடம் ' ஐந்து வகையான சமாதிகள் உள்ளன. தாங்கள் அவை எல்லாவற்றையும் அனுபவித்திருக்கிறீர்கள் என்பதை அறிகிறேன். இந்த சமாதிகளில் (குண்டலினி சக்தி) ஞான சக்தி மேலெழுந்து செல்லும் உணர்ச்சி, ஓர் எறும்பு, ஒரு மீன், ஒரு குரங்கு, ஒரு பறவை, ஒரு பாம்பு என்பவை இடம் விட்டு இடம் பெயர்ந்து செல்வது போன்ற உணர்ச்சியை முறையே போன்றதாகும்' என்று என்னிடம் சொன்னார்.

" சில சமயங்களில் ஓர் எறும்பு நகர்ந்து செல்வது போன்றே குண்டலினி சக்தி முதுகெலும்பு வழியாக மேலே கிளம்புகின்றது.

" சில சமயங்களில் சமாதியில் ஆன்மா ஒரு மீனைப்போன்று தெய்விக ஆனந்தக் கடலிலே இன்பமாக நீந்துகிறது.

" சில சமயங்களில் யான் ஒரு பக்கமாகப் படுக்கும்போது குண்டலினி சக்தி குரங்கைப்போல என்னைத் தள்ளுவதையும், என்னோடு ஆனந்தமாக விளையாடுவதையும் உணர்கிறேன். நான் அமைதியாக இருக்கிறேன். அச் சக்தி, ஒரு குரங்கைப்போலத் திடீரென ஒரு குதியில் ஸஹஸ்ராரத்தைச் சேர்கிறது. இக் காரணத்தினால்தான் நீர் என்னை வெடுக்கெனக் குதித் தெழுவதைப் பார்க்கிறீர்.

" இன்னும் சில சமயங்களில் ஒரு கிளையிலிருந்து மற்றொன்றுக்குத் தாவிச் செல்லும் ஒரு பறவையைப்போலக் குண்டலினி சக்தி கிளம்புகிறது. அது தங்கும் இடம் நெருப்பைப்போல உணரப்படுகின்றது. அது ஓர் ஆதாரத்திலிருந்து மற்றோர் ஆதாரத்திற்குத் துள்ளிப் படிப்படியாய்த் தலைக்குச் செல்லலாம்.

" சில சமயம் குண்டலினி சக்தி ஒரு பாம்பைப்போல மேலே செல்லுகிறது. அது வளைந்து வளைந்து சென்று, இறுதியில் தலையைச் சார்கிறது. நானும் சமாதியிற் புகுகின்றேன்.

" ஒருவனது குண்டலினி கிளம்பாதவரை, அவனது ஞான போதமும் விழிப்படைவதில்லை.

" குண்டலினி மூலாதாரத்தில் வாசம் பண்ணுகிறது. அது கிளம்பும் பொழுது, அது சுழுமுனை நாடி வழியாகச் செல்கிறது; சுவாதிஷ்டானம் மணிபூரகம் முதலிய ஆதாரங்கள் வழியாகப்போய், முடிவிலே தலையைச் சார்

கிறது. இதுதான் மஹாவாயு என்னும் ஞானசக்தியின் சஞ்சாரம் எனப்படும். அது சமாதியில் முடிகிறது.

"நூல்களை வாசிப்பதினால் மட்டும் ஒருவனது ஞானபோதம் விழிப்படைவதில்லை. ஒருவன் பகவானிடம் பிரார்த்திக்கவேண்டும். சாதகன் பகவானைக் காணுமையால் உயிர் துடிப்பானுயின், குண்டலினி கிளம்பிவிடும். வெறுங் கல்வியாலும் கேள்வியாலும் ஞானத்தைப் பற்றிப் பேசுவதா! அதனால் யாது கைகூடும்?

"இம் மனநிலையை அடையுமுன்பு, குண்டலினி இன்னவாறு கிளப்பப்படுகிறது, பற்பல ஆதாரங்களில் உள்ள தாமரைகள் இன்னவாறு மலர்கின்றன, இவையெல்லாம் இன்னவாறு சமாதியில் முடிகின்றன—இவ்வளவும் எனக்கு அருட்காட்சியால் விளக்கப்பட்டது. இது ஒரு மிக இரகசியமான அனுபவம். இருபத்திரண்டு இருபத்து மூன்று வயதுள்ள ஒரு சிறுவன், என்னை முற்றிலும் ஒத்திருப்பவன், சூழுமுனை நாடிக்குள் புகுந்து அத்தாமரைகளோடு நெருங்கிப் பழகித் தனது நாக்கினால் அவற்றைத் தொடுவதை நான் கண்டேன். அவன் மூலாதாரத்தினின்றும் தொடங்கி, இலிங்கம் கொப்பூழ் முதலான இடங்களிலுள்ள ஆதாரங்கள் வழியாகச் சென்றான். அந்தந்த ஆதாரங்களில் இருக்கும் பற்பல தாமரைகளும்—நான்கிதழ், ஆறிதழ், பத்திதழ் முதலியவற்றை உடையன—சாய்ந்து கிடந்தன. அவன் தொட்டதும் அவை யாவும் நிமிர்ந்து நின்றன.

"அவன் நெஞ்சை அடைந்ததும்—அது தெளிவாக ஞாபகம் உள்ளது—அங்குள்ள தாமரையோடு பழகி, அதனைத் தனது நாவால் தொட்டபோது, தலை கீழாகத் தொங்கிக்கொண்டிருந்த பன்னிரண்டு இதழ் வாய்ந்த தாமரை நிமிர்ந்து நின்று, அலர்ந்தது. பிறகு அவன் தொண்டையிலுள்ள பதினறு இதழ் வாய்ந்த தாமரைக்கும், நெற்றியிலிருந்த ஈரிதழ்த் தாமரைக்கும் சென்றான். கடைசியாகத் தலையிலுள்ள ஆயிர இதழ் வாய்ந்த தாமரை மலர்ந்தது. அது முதல் யான் இந் நிலையில் இருந்து வருகிறேன்,"

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தரைக்கு இறங்கி, மகிமாசரணரது அருகாமையில் அமர்ந்தார். ம—வும், இன்னும் சில அடியார்களும் அவர்க்கு அருகே இருந்தனர், ராக்காலும் அறையில் இருந்தார்.

குருதேவர்(மகிமரிடம்): "வெகு காலமாக என் ஞான அனுபவங்களை உங்களிடம் கூற விரும்பினேன்; ஆனால் கூற இயலவில்லை. இன்று உங்களிடம் சொல்லவேண்டும் என்று தோன்றுகிறது.

"வெறும் சாதனத்தால் எனது மன நிலையைப் போன்ற ஒன்றை ஒருவர் அடைய முடியும் என்று நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் அது அப்படியல்ல. இங்கே (தம்மையே சுட்டிக்கொண்டு) சிறப்பாக ஏதோ ஒன்று உள்ளது."

ராக்காலும் ம—வும் பிறரும் தம்மிடம் குருதேவர் கூற நினைத்ததைக் கேட்பதில் ஆவலுடையவரானர்.

குருதேவர்: "பகவான் என்னிடம் பேசினார். அது அவரது தரிசனம் மட்டும் அன்று. ஆம், அவர் என்னிடம் பேசினார். ஆலமரத்தின் அடியில் இருந்தபோது, பகவான் கங்கையிலிருந்து வருவதைக் கண்டேன். அப் போது நாம் அவ்வளவு சிரித்தோம்! என்னோடு விளையாடுவார் போன்று அவர் எனது விரல்களைச் சொடக்குப் போட்டார், பின்பு அவர் பேசினார். ஆம், அவர் என்னிடம் பேசலானார்.

"மூன்று நாள் நான் தொடர்ந்து அழுதேன், வேதங்கள், புராணங்கள், தந்திரங்கள், மற்ற சாஸ்திரங்கள்—இவற்றில் உள்ளவற்றையெல்லாம் அவர் எனக்கு விளங்கக் காட்டியருளினார்.

"ஒரு நாள் அவர் (பகவான்) எனக்கு மஹா மாயையெனும் தேவியின் மாயையைக் காட்டியருளினார். ஓர் அறைக்குள் ஒரு சிறு ஒளி வளரத் தொடங் கியது; கடைசியாகப் பிரபஞ்ச முழுவதையும் வியாபித்துக்கொண்டது.

"மேலும், பச்சைப்பாசி மூடியிருந்த ஒரு பெரிய ஏரியைக் காட்டினார். காற்று பாசியில் ஒரு சிறிதை ஒதுக்கிற்று. உடனே நீர் தென்படலாயிற்று; ஆனால் கண்ணிமைப் பொழுதிற்குள், எல்லாப் பக்கங்களிலும் இருந்து பாசி குதித்துக்கொண்டே வந்து, மறுபடியும் நீரை மறைத்துவிட்டது. நீர் சச்சி தானந்தத்தைப் போன்றதென்றும், பாசி மாயையைப் போன்றதென்றும் அவர் எனக்கு விளக்கியருளினார். மாயையினால் சச்சிதானந்தம் காணப்படுவதில்லை. இடையிடையே அதை ஒரு கணம் திடீரெனக் காணக்கூடுமாயினும், மறுப டியும் மாயை அப்பரம்பொருளை மூடிக்கொள்கிறது.

"அடியார்கள் வருமுன்னே அவர்களுடைய இயல்பை எனக்குக் காட்டி யருள்கிறார் பகவான். பஞ்சவடியிலே, ஆலமரத்திற்கும் வகுள மரத்திற்கும் இடையே, சைதன்யரது கோஷ்டி பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் இருப் பதை யான் கண்டேன்; அக்கோஷ்டியிலே பலராமரைக் கண்டேன். அவர் இருந்திராவிடில், எனக்குக் கற்கண்டையும் வேறு பொருள்களையும் தருவார் எவர்? (ம—வைச் சுட்டிக்காட்டி) யான் அவரையும் கண்டேன்.

"கேசவரை நேரே சந்திப்பதற்கு முன்னமே நான் அவரைப் பார்த்திரு திருந்தேன், நான் அவரையும் அவருடைய கூட்டத்தாரையும் எனது சமாதியிற் பார்த்திருந்தேன். என் முன்னிலையில் ஓர் அறை நிறைய மக்கள் உட்கார்ந் திருந்தனர். ஒரு மயில் தனது வாலை விரித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தது போல் கேசவர் காணப்பட்டார்; வால் அவருடைய கூட்டத்தாரைக் குறித்தது. கேசவரது தலைமீது ஒரு மாணிக்கத்தைக் கண்டேன். அது அவரது ராஜஸ குணத்தைக் குறித்தது. அவர் தமது சீடர்களிடம் 'அவர் (குருதேவரைக் குறித்து) சொல்லி வருவதைக் கவனத்தோடு கேட்குமாறு உங்களை வேண்டு கிறேன்' என்றனர். நான் தேவியிடம் 'அம்மே! இம்மனிதர்கள் "ஆங்கி லேய"ருடைய கருத்துக்களை உடையவராயிற்றே, நான் ஏன் அவர்களிடம் பேசவேண்டும்?' என்று கேட்டேன். அப்போது தேவி, கலியுகத்தில் இவ்

வாறுதான் இருக்கும் என்று என்னிடம் விரித்துரைத்தாள், கேசவரும் அவரைப் பின்பற்றினரும் இங்கிருந்து (தம்மையே குறித்து) ஹரியின் நாமத்தையும் தேவியின் நாமத்தையும் பெற்றனர்.

(தம்மையே சுட்டிக்காட்டி) "இங்கே ஏதேனும் விசேஷமானது (சிறப்பானது) இருத்தல் வேண்டும். வெகு காலத்திற்கு முன்பு கோபால சேன் என்னும் ஓர் இளைஞன் என்னை வந்து பார்ப்பதுண்டு. என்னிடம் வசிக்கும் பகவான் தமது திருவடியைக் கோபாலரது மார்பின்மீது வைத்தார். கோபாலன் ஆனந்த பரவச நிலையிலே 'தேவரீர் இங்கே வெகு காலம் காத்திருக்கவேண்டும். உலகப் பற்றுள்ள மனிதரொடு வாழ்தல் எனக்கு முடியாது' என்று சொன்னான். அவன் என்னிடம் விடைபெற்றுச் சென்றான். பிற்பாடு அவன் இறந்ததாக நான் கேள்விப்பட்டேன். அவனே நித்யகோபாலனாகப் பிறந்தான் போலும்.

"பல ஆச்சரியமான ஞானக் காட்சிகளைப் பெற்றிருக்கிறேன். அகண்ட சச்சிதானந்தத்தின் தரிசனத்தை யான் பெற்றேன். அதற்குள்ளே இரு கூட்டங்களையும், அவ்விரண்டிற்கும் இடையே ஒரு வேலியையும் கண்டேன். ஒரு பக்கத்திலே கேதார் சுனி முதலானவர், ஸகுண ஈசனிடம் நம்பிக்கை கொண்டவர் இருந்தனர். மற்றொரு பக்கத்தில் செங்கலின் தூள் குவியல் போன்ற ஒளி மயமான ஓர் இடம் இருந்தது. அதற்குள் நரேந்திரன் சமாதியில் மூழ்கியவனாய் அமர்ந்திருந்தான். அவன் சமாதியில் ஆழ்ந்திருப்பதைக் கண்டு 'ஓ நரேந்திர!' என்று உரக்கக் கத்தினேன், அவன் தனது கண்களை ஒரு சிறிது திறந்தான். அவன் இன்னொரு வடிவத்திலே சிம்லாவில் ஒரு காயஸ்த குடும்பத்தில் பிறந்திருப்பதாக நான் உணரலானேன். உடனே நான் தேவியிடம் 'அம்மே, அவனை மாயையில் சிக்கச்செய்; இல்லாவிடில் அவன் சமாதியில் தனது உடலை உதறியெறிந்துவிடுவான்' என்று உரைத்தேன், ஸகுண பகவானிடம் நம்பிக்கையுள்ள கேதார் உள்ளே எட்டிப் பார்த்தான், நடுங்கிக் கொண்டே ஓடிவிட்டான்.

"ஆதலால், தேவியே இவ்வுடலில் வாசம் பண்ணுகிறாள் என்றும், அடியார்களோடு விளையாடுகிறாள் என்றும் நான் உணர்கிறேன். முதன் முதலாக என் மனம் திவ்விய நிலையினை அடைந்தபோது, எனது உடல் சோதியை வீசியது. எனது மார்பு எப்போதும் செந்நிறமாயிருந்தது. அப்போது நான் தேவியிடம் 'தாயே, உன்னை வெளிப் பக்கத்தும் காட்டாதே. உள்ளே சென்றருள்க' என்று சொன்னேன். இக் காரணத்தினாலேயே எனது நிறம் இப்போது இவ்வளவு மங்கலாய் உள்ளது. எனது உடல் இப்போதும் சோதி மயமாய் இருக்குமாயின். ஜனங்கள் என்னைப் பெருந்துயரத்திற்கு உள்ளாக்கி இருப்பார், இங்கே எப்போதும் ஒரு கூட்டம் என்னைச் சூழ்ந்திருக்கும். இப்போது வெளிப்பிரகாசம் ஒன்றுமில்லை. அதனால் (மக்கட்) பதர்கள் தொலையில் நிற்கும் நிலையில் உள்ளேன். உண்மையான அடியார்கள் மட்டுமே இப்போது என்னுடன் இருப்பார், இந்நோய் எனக்கு வந்த காரணம் தெரியுமா?

அதற்கும் அதே கருத்துத்தான். எவர்க்கு என்மீதுள்ள பக்தியில் ஒரு சுய நலக் கருத்து மறைவாய் இருக்குமோ அவர்கள் இந்நோயைக் கண்டதும் ஓடிவிடுவர்.

"என்னிடம் ஓர் ஆசை இருந்தது. நான் தேவியிடம் "அம்மே, யான் அடியார்கட்கு அரசனுயிருப்பேன்' என்று சொன்னேன்.

"இன்னும் பின்வரும் எண்ணம் என் உள்ளத்தில் உதித்தது: 'எவனெருவன் மனப்பூர்வமாக இறைவனிடம் பிரார்த்திக்கிருனே, அவன் நிச்சயமாக இங்கு வருவான், அவன் வந்து தீரவேண்டும்.' இது இப்போது நிகழ்ந்து வருவதைக் காண்கிறீரா? அம்மாதிரி மக்களே வருகின்றனர்.

"இவ்வுடலிற்குள் வசிப்பவர் இன்னுர் என்பதை எனது பெற்ருர் அறிவர். தந்தையார் கயையில் ஒரு கனவு கண்டார். அக்கனவில் ரகுவீர் அவரிடம் 'யான் உனது மகனுகப் பிறப்பேன்' என்று கூறினர்.

"இறைவனெருவனே இவ்வுடலிற்குள் வசிக்கின்ருன். காமம் காஞ்சனம் எனும் இரண்டையும் துறந்த துறவு எவ்வளவினது என்பது! இதை யானே சாதித்திருக்கக் கூடுமா? ஒரு மங்கையைக் கனவிலும் யான் என்றேனும் அனுபவித்ததில்லை.

"நங்தா (தோத்தாப்புரி) எனக்கு வேதாந்தம் போதித்தார். மூன்று நாளில் யான் சமாதியை அடைந்தேன். மாதவியின் அடியிலே எனது சமாதியைக் கண்டதும் அவர் முற்றிலும் ஆச்சரியமடைந்து, 'ஆ! இது என்ன!' என்று கூச்சலிட்டார், பின்பு, இவ்வுடலில் வசிப்பவர் இன்னுர் என்பதை அறியப் பெற்ருர். அவர் என்னிடம் 'எனக்குப்போக அனுமதி அளி' என்று சொன்னுர். தோத்தாப்புரி கூறிய இம்மொழிகளைக் கேட்டதும் யான் சமாதியடைந்து, 'யான் வேதாந்த உண்மையைத் தரிசிக்கும்வரை நீர் போக முடியாது' என்றேன்.

"அல்லும் பகலும் அவருடன் யான் வாழ்ந்தேன். நாங்கள் வேதாந்தம் மட்டுமே பேசினேம். பிராம்மணி அம்மையார் (ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்குத் தந்திர சாதனங்களைப் போதித்தவர்) 'வேதாந்தத்தைக் கவனித்துக் கேளாதே. அது உனக்கு ஈசன்மீதுள்ள பக்தியைக் கெடுக்கும்' என்று என்னிடம் சொல்வ துண்டு.

"யான் தேவியிடம் 'அம்மே, எனக்கு ஒரு தனவந்தரைத் தருவாயாக, நீ தாராயெனில், நான் இவ்வுடலைப்போற்றும் திறமையுள்ளவனுதல் எப்படி? எனக்கு அருகே சாதுக்களையும் அடியார்களையும் வைத்திருத்தல் எவ்வாறு முடியும்?' என்று உரைத்தேன், இக்காரணத்தால் மதுரபாபு பதினன்கு வருஷ காலமாக வேண்டியவெல்லாம் எனக்கு அளித்து வந்தார்.

"என்னுள் வசிப்பவர் எந்தக் குறிப்பிட்ட வகை அடியார்கள் என்னிடம் வருவார் என்பதை முன்னமே எனக்குச் சொல்லிவிடுகிறர், எனக்குக் கௌரங்கரது தரிசனம் உண்டாகும்போது, கௌரங்கருடைய பக்தர்கள்

வருவார் என்பதை யான் அறிகிறேன், நான் காளியின் தரிசனம் பெறும் போது, சாக்தர்கள் வருகின்றனர்.

மாலைப் பூஜை நடக்கும் வேளையில் மாளிகையின் (மதுர பாபு தக்ஷிணேசுவரத்தில் தங்கும் மாளிகையின்) மேல் தளத்திலிருந்து அழுதுகொண்டே, 'ஆ, நீங்கள் எல்லோரும் எங்கு இருக்கின்றீர்கள்? என்னிடம் வாருங்கள்!' என்று கதறுவதுண்டு. பார்த்தீரா? அவர்கள் யாவரும் ஒவ்வொருவராக இங்கே கூடுகின்றனர்.

"யான் எல்லாவகையான சாதனங்களையும் பழகியுள்ளேன்: ஞான யோகம், கருமயோகம், பக்தியோகம் மூன்றையும், ஆயுள் விருத்திக்காக ஹடயோகப் பயிற்சிகளையும் பழகியிருக்கின்றேன். இவ்வுடலில் வேறொரு புருடர் இருக்கின்றார். இல்லையெனில், சமாதியடைந்தபின்னும், அடியார்களோடு வாழ்தலும், பக்தியை அனுபவித்தலும் எனக்கு எவ்வாறு இயலும்? கோர்சிங் என்னைப்பார்த்து, 'சமாதியென்னும் பூமியினின்றும் கீழிறங்கியவரான ஒரு புருடரை யான் இதுவரை கண்டதில்லை. நீர் நானக் என்பவரேயல்லாது வேறொருவர் அல்லீர்' என்று சொல்வதுண்டு,

"உலகப்பற்றுள்ள மக்கட்கு மத்தியிலே யான் வாழ்கிறேன்; எல்லாப் பக்கங்களிலும் காமம் காஞ்சனம் இரண்டையுமே காண்கின்றேன். எனினும் இதுவே எனது மன நிலை; ஓயாத சமாதியும், பக்திப் பரவசமும். இக்காரணத்தினலன்றே, பிரதாப் என்பார் (பிரம்ம சமாஜத்திலே புகழ்பெற்ற ஓர் அங்கத்தினர், பிரதாப் சந்திரமுசும்தார் என்பது முழுப்பெயர்) எனது சமாதியைப் பார்த்துவிட்டு, 'ஈதென்ன புதுமை! அவர் பேய் பிடித்தவர்போலே உள்ளனரே' என்று கூறலானர்?"

"ஸ்ரீ ராமகிருஷ்ணரின் இணையற்ற அனுபவங்களின் வரலாற்றைக் காதாற் பருகிய நிலையிலே, ராக்கால் ம— முதலியோர் மௌனமாயிருந்தனர்.

ஆனல், மகிமாசரண் இம்மொழிகளின் உட்கருத்தை அறிந்தனரோ? இவற்றைக் கேட்ட பின்னும் அவர் குருதேவரிடம் "உமது பண்டைய பிறவிகளிற் செய்திருந்த உமது புண்ணிய நற்கருமங்களின் பலனுக இவையெலாம் உமக்கு நிகழ்ந்தன" என்றனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு சாது, பகவானது பக்தர் என்ற நினைவே மகிமரிடம் இன்னும் இருந்தது. குருதேவர் மகிமரது வார்த்தைகட்குத் தலையசைத்து, "ஆம், பழைய வினைகளின் பயனே. பகவான் பல மாளிகைகளையுடைய ஒரு பிரபுவைப் போன்றவர். இங்கே (தம்மையே) குறித்து) அவருடைய கூடங்களுள் ஒன்று உள்ளது. ஒரு பக்தன் பகவானது உறைவிடமான கூடம்" என்று உரைத்தார்.

தேய்பிறையில் சதுர்த்தசி தினத்தன்று காலை ஒரு மணி. அப்போது எங்கும் மையிருட்டாய் இருந்தது. ஒன்றிரண்டு அடியார்கள் கங்கையின் கரையிலே 'காங்கிரீட்' தளத்தின்மீது நடந்துகொண்டிருந்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் விழித்திருந்தார். அவர் வெளியே வந்து, அடியார்களிடம் "நடுநிசியில் இவ்வேளை

யில் அநாஹத தொனி ஒருவர்க்குக் கேட்கும் என்று நந்தர் என்னிடம் சொன்னார்'' என்று கூறினர்.

அதிகாலைப் பொழுதிலே மகிமாசரணும் ம—வும் குருதேவரது அறையில் தரைமீது படுத்திருந்தார். ராக்கால் ஒரு கூடாரக் கட்டிலில் உறங்கினர். இடையிடையே ஸ்ரீராமகிருஷ்ணர் ஐந்து வயதுக் குழந்தை போன்று ஆடையின்றி அங்குமிங்குமாக அறையிலே உலவினர்.

வெள்ளி, ஆகஸ்ட் 28, 1885

பொழுது விடிந்தது. ஸ்ரீராமகிருஷ்ணர் விழித்திருந்தார், தேவியின்மீது தியானித்துக்கொண்டிருந்தார். அவர்க்கு நோய் இருந்தமையால் அடியார்கள் தேவியின் திருப்பெயரை அவர் இனிமையாகப் பாடுவதைக் கேட்கும் பாக்கியத்தை இழந்திருந்தனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிறு கட்டிலில் அமர்ந்திருந்தார். அவர் ம—வை நோக்கி ''சரி, எனக்கு ஏன் இந்த நோய் உண்டாயிற்று?'' என்று கேட்டார்.

ம— : ''மக்கட்குத் தேவரீரை அணுகும் தைரியம் உண்டாக வேண்டுமாயின் தேவரீர் எல்லா வழியாலும் அவர்களை ஒத்திருக்கவேண்டும். ஆனால், இவ்வளவு நோய்க்குத் தேவரீர் ஆளாயிருந்தும், தேவரீர் பகவானைத் தவிர வேறெதையும் அறியாதவராய் இருப்பதைக் கண்டு அவர்கள் ஆச்சரியம் அடைகின்றனர்.''

குருதேவர்(சிரிப்போடே): ''பலராம் என்பவரும், 'தங்கட்கும் நோய் வரக்கூடுமாயின், எங்கட்கு நேரும் நோய்களைப்பற்றி நாங்கள் ஆச்சரியப்படுவானேன்?' என்பர். பிரம்மமும் பஞ்ச பூதங்களாகிய கண்ணியிற் சிக்கிக் கண்ணீர் விடுகிறது.''

ம—. ''இயேசுநாதரும் தமது அடியார்களின் துன்பத்தைக் கண்டு ஒரு சாதாரண மனிதனைப்போல் அழுதார்.''

குருதேவர்: ''அது எப்படி?''

ம—: ''மேரி மார்த்தா என்னும் இரு சகோதரிகள் இருந்தனர். லாசரஸ் அவர்கட்கு சகோதரர். இம்மூவரும் இயேசுநாதரிடம் ஈடுபட்டிருந்தனர். லாசரஸ் இறந்தார். இயேசு அவர்களது வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். வழியில் சகோதரிகளில் ஒருத்தியான மேரி அவரைச் சந்திப்பதற்காக வெளியே ஓடிவந்தாள். அவள் அவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி, அழுதுகொண்டே ''நாதரே, தேவரீர் இங்கு இருந்திருப்பின் எனது சகோதரர் இறந்திருக்கமாட்டார்'' என்று சொன்னாள். அவள் அழுததைக் கண்ட இயேசுநாதரும் அழுதனர்.

''பிறகு இயேசுநாதர் லாசரஸ்ஸின் கல்லறைக்குச்சென்று, அவரைப் பெயர்சொல்லி அழைத்தார். உடனே லாசரஸ் மறுபடியும் உயிர் பெற்றுக் கல்லறையைவிட்டு நடந்து வந்தார்.''

குருதேவர்: "ஆனால் அக்காரியங்களை என்னற்செய்ய இயலாது."

ம—: "அதற்குக் காரணம் தங்கட்கு அவ்வாறு செய்யப் பிரியமில்லாமையே. இவை அற்புதங்கள்; ஆதலால் தங்கட்கு அவற்றில் கவனமில்லை. இக் காரியங்களால் மக்களது கவனம் அவர்களது உடல்களை நோக்கி இழுக்கப்படுகிறது, அப்போது அவர்கள் மெய்யான பக்தியைப்பற்றி நினைப்பதில்லை. இதனாலே தாங்கள் அற்புதங்களைச் செய்வதில்லை. ஆனால் தங்கட்கும் இயேசுகிறிஸ்துவுக்கும் பல ஒப்புமைகள் உண்டு."

குருதேவர்(சிரித்துக்கொண்டு): "வேறு எவை?"

ம—: "தாங்கள் உங்களுடைய அடியார்களைப் பட்டினியிருக்கவோ வேறு தவம் பழகவோ சொல்வதில்லை. தாங்கள் உணவைப்பற்றிக் கண்டிப்பான விதிகளை ஏற்படுத்துவதில்லை. கிறிஸ்துவின் சீடர்களும் ஒய்வு நாளைப் பின்பற்றுவதில்லை; ஆதலின் (யூதர்கட்குள் வைதிக விதிகளை அனுசரித்து வந்த வகுப்பினராய) பாரிசீயர் என்பார் அவர்களைக் குற்றஞ் சாட்டலானார். அப்போது இயேசுநாதர் 'அவர்கள் சாப்பிட்டது நன்றே. அவர்கள் மாப்பிள்ளையோடு இருக்கும்வரை, அவர்கள் உல்லாசமாயிருத்தல் வேண்டும்' என்று சொன்னார்."

குருதேவர்: "அதன் பொருள் யாது?"

ம—: "சீடர்கள் பகவானுடைய அவதாரமாகிய புருடரோடு வாழும் வரை, அவர்கள் உல்லாசமாயிருக்கவேண்டும் என்றே கிறிஸ்து பொருள் கொண்டார், அவர்கள் எதற்காகத் துக்கப்படல் வேண்டும்? ஆனால் அவதார புருடர் பரமபதத்தில் தமது சொந்த இருப்பிடத்திற்கு மீண்டதும், அவர்கட்குத் துயரமும் கஷ்டமும் படும் காலம் வரும்."

குருதேவர்(சிரித்துக்கொண்டே): "கிறிஸ்துவினிடம் உள்ளது போன்ற வேறு ஏதேனும் என்னிடம் காண்கின்றீரா?"

ம—: "ஆம், ஐயன்மீர் 'ஞானிகள் இன்னும் காமம் காஞ்சனம் என்பவற்றுல் தொடப்படாதவர்கள். போதனையை ஏற்றுத் தம்மோடு ஒன்றாக்கிக் கொள்ளும் திறமையுடையவராவர். அது ஒரு புதுப்பானையில் பாலை ஊற்றி வைப்பதுபோன்றது; தயிர் உறைத்த பானையில் பாலை வைப்பின் அது புளித்துப்போம்' என்று தாங்கள் சொல்லுகிறீர்கள். கிறிஸ்துவும் அவ்வாறே பேசினார்."

குருதேவர்: "அவர் சொன்னது யாது?"

ம—: "புதுச் சாராயத்தைப் பழைய குப்பியில் வைத்தால், குப்பி உடைந்துபோகலாம். பழைய துணியைப் புதுத்துணியோடு ஒட்டுப்போட்டால் பழந்துணி கிழிந்து போகிறது.

"மேலும், தேவரீரும் தேவியும் ஒன்றெனத் தேவரீரே கூறுகின்றீர், அதுபோலக் கிறிஸ்துவும் 'யானும் எனது பரம பிதாவும் ஒன்றே' என்றார்."

குருதேவர்(சிரித்துக்கொண்டே): "வேறு ஏதாவது உண்டா?"

ம—: "நீர் எங்களிடம் 'நீ சிரத்தையோடு பகவானை அழைப்பாயாயின் பகவான் உன் வார்த்தையை உற்றுக் கேட்பது உறுதி' என்று சொல்கிறீர். அதுபோலே கிறிஸ்துவும் 'தட்டு, உனக்குத் திறக்கப்படும்' என்று சொன்னார்."

குருதேவர்: "சரி, பகவான் தாமே மறுபடியும் அவதரித்திருக்கிறார் எனின், அது ஒரு கலையின் அவதாரமா, அம்ச அவதாரமா, பூர்ண அவதாரமா? சிலர் அதனைப் பூரணவதாரம் என்கின்றனர்."

ம—: "ஐயன்மீர், கலையின் அவதாரம் அம்சாவதாரம் பூரணவதாரம்— என்பவற்றின் பொருள் எனக்கு நன்கு விளங்கவில்லை. ஆனால் தாங்கள் விரிவாக உரைத்தபடி, ஒரு சுவரிலுள்ள வட்டமான துவாரம் என்னும் கருத்தை நான் அறிந்துள்ளேன்."

குருதேவர்: "அதைப்பற்றி எனக்குச் சொல்லுக."

ம—: "சுவரிலே வட்டமான துவாரம் உள்ளது. அதன் வழியாகப் பார்க்கும்போது, சுவரின் மறுபுறத்தில் உள்ள புல் வெளியின் ஒரு பகுதியைப் பார்க்க முடியும். அதுபோல, தங்கள் வழியாக அகண்ட பரம்பொருளின் ஒரு பகுதியைப் பார்க்கின்றனர்."

குருதேவர்: "உண்மையே, ஒரு சமயம் ஐந்தாறு மைல் புல்வெளியை நீர் பார்க்கக் கூடும்."

ம— குருதேவரை வணங்கிவிட்டு விடைபெற்றுச் சென்றார். ஸ்ரீ ராம கிருஷ்ணர் அன்போடு "நாளை அதிகாலையிலே வாரும். மழைக்காலத்துக் கடுமையான வெயில் உடலுக்குக் கேடுவிளைக்கின்றது" என்று அவரிடம் கூறினர்.

செவ்வாய், செப்டம்பர் 1, 1885

ஸ்ரீ ராமகிருஷ்ணர் நீராடும் தறுவாயில் இருந்தார். ஓர் அடியார் குருதேவரது அறையின் தெற்குத் தாழ்வாரத்தில் அவரது உடலின்மீது எண்ணெய் தேய்த்துக்கொண்டிருந்தார். ம— தமது நீராட்டத்தைக் கங்கையில் முடித்துவிட்டு அங்கே வந்து, குருதேவரை வணங்கினர்.

நீராடியபின் ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு சிறு துணியைத் தமது உடலில் சுற்றிக் கொண்டு, தொலையிலிருந்தே கோயிலிலுள்ள தெய்வங்களைக் கைக்கூப்பிக் கும்பிட்டார். அவர் தமது நோய் காரணமாகக் கோயில்கட்குச் செல்ல முடியாதவரானார்.

அன்று புண்ணியமான ஜென்மாஷ்டமி நாள், ஸ்ரீ ராமகிருஷ்ண பகவானது பிறந்த நாள். ராம் என்பவரும் மற்ற அடியார்களும் ஸ்ரீராமகிருஷ்ணர்க்காகப் புது ஆடைகளைக் கொணர்ந்திருந்தனர். அவர் அவற்றை அணிந்து கொண்டார். அழகிய தோற்றமுடையவரானார். மறுபடியும் அவர் தெய்வங்களை வணங்கினர்.

காலையில் பதினெரு மணியாயிற்று. அடியார்கள் கல்கத்தாவிலிருந்து மெல்ல வந்துகொண்டிருந்தனர். பலராம் நரேந்திரர் இளைய நரேன் நவகோபால்

என்பவரும், காடோலாவிலிருந்து ஒரு வைஷ்ணவரும் வந்தனர். ராக்காலும் லாட்டுவும் ஸ்ரீராமகிருஷ்ணரோடு தங்கிக்கொண்டிருந்தனர். ஒரு பஞ்சாபி சாது சில நாள்களாகப் பஞ்சவடியிலே தங்கிவந்தனர். தோட்டத்திலே நடை பாதை வழியாக அவர் போய்க்கொண்டிருந்தார். குருதேவர் "அவர்க்கு என் மீது கவர்ச்சியில்லை. அவர் ஒரு ஞானியின் மனை பாவனையை உடையவர். மரத்தைப்போல ஈரமற்றவராக அவரைக் காண்கிறேன்" என்றனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அடியார்களும் குருதேவரது அறைக்குச் சென் றிருந்தனர்.

காடோவாவிலிருந்து வந்திருந்த வைஷ்ணவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தனர். அவர் 'மாறுகண்' உடையவராயிருந்தார்.

வைஷ்ணவர்: "ஐயன்மீர், மனிதனுக்கு மறுபிறப்பு உண்டா?"

குருதேவர்: "இறக்கும் வேளையில் ஒரு மனிதனது மனத்தில் உள்ள இயல்புகளோடே அவன் மறுபடியும் பிறக்கிறான் என்று கீதையிற் சொல்லப் பட்டிருக்கிறது. பரத மன்னர் மரணவேளையில் தமது மானைப்பற்றி நினைத்தார். மானாக மறுபடியும் பிறந்தார்."

வைஷ்ணவர்: "நேரே பார்த்தவன் ஒருவன் அதைப்பற்றிக் கூறினால் தான் மறுபிறப்பில் நம்பிக்கையுடையவனாவேன்,"

குருதேவர்: "நண்பரே, எனக்கு அதைப்பற்றித் தெரியாது. எனது சொந்த வியாதியையே என்னால் குணப்படுத்த முடியவில்லை; மரணத்திற்குப் பின் இன்னது நடக்கிறது என்பதை உம்மிடம் சொல்லும்படி என்னைக் கேட்கிறீர்!

"நீர் பேசிக்கொண்டிருப்பது உமது அற்ப மனதையே காட்டுகிறது. பக்தியை வளர்த்துவர முயலுவீராக. தெய்வ பக்தியைப் பெறுதற்காகவே நீர் மனிதப் பிறவி எடுத்துள்ளீர். மாங்கனிகளை உண்பதற்காகவே நீர் மாந்தோப் பிற்கு வந்துள்ளீர். தோப்பில் இத்தனையாயிரம் கிளைகளும் இத்தனை இலக்ஷம் இலைகளும் உள்ளன என்பதை அறிவது எப்படி அவசியம்? மரணத்திற்குப் பின் இன்ன நடக்கிறது என்பதைப் பற்றிய கவலை எதற்கோ? அது எவ்வளவு பேதைமை!"

கிரீஷ்கோஷ் ஒன்றிரண்டு தோழர்களோடு ஒரு வண்டியில் வந்திறங்கினார். அவர் குடிவெறியிலிருந்தார். அவர் அறையிற் புகும்போதே அழுதுகொண் டிருந்தனர். அவர் தமது தலையை ஸ்ரீ ராமகிருஷ்ணரது திருவடியிலே வைத்த வாறே அழுதனர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் பேரன்போடு அவரை முதுகிலே தட்டிக்கொடுத்தார். அவர் ஓர் அடியாரிடம் "அவர்க்குப் புகை குடிக்க ஏற்பாடு செய்யும்" என்றார்.

கிரீஷ் தமது தலையை நிமிர்த்திக் கூப்பிய கையோடு, "நீரே பூரணப் பிரம்மம்! அது அப்படியில்லையாயின், எல்லாம் பொய்யே. உமக்கு என்னால் எவ்விதமான பணியும் செய்ய முடியாமைக்காக வருந்துகிறேன்" என்று

சொன்னர். இவ்வார்த்தைகளிலே அமர்ந்திருந்த நெஞ்சக் கனிவு பல அடி யார்களை அழச் செய்தது.

கிரீஷ் பின்னும் தொடர்ந்து கூறுவார்: "பிரபோ! நான் உமக்கு ஒரு வருஷம் பணிசெய்யும் வரத்தை எனக்கு அளித்தருள்வீராக. யார்க்கு மோக்ஷம் வேண்டும்? எவரும் அதை எங்கும் காணலாம். அதன்மீது யான் துப்பு கிறேன். ஒரு வருஷ காலம் நீர் எனது பணியை அங்கீகரிப்பதாக என்னிடம் சொல்லியருளுக."

குருதேவர்: "இங்கே உம்மைச் சுற்றியுள்ளவர் நல்லவரல்லர். சிலர் உம்மைக் குற்றங் கூறலாம்."

கிரீஷ்: "எனக்கென்ன கவலை. நீர் தயவு கூர்ந்து—"

குருதேவர்: நிரம்ப சரி. நான் உமது வீட்டுக்கு வரும்போது நீர் எனக்குப் பணி செய்யலாம்—"

கிரீஷ்: "அல்ல, அப்படியல்ல, இங்கே உமக்குப் பணி செய்ய எனக்கு விருப்பம்."

கிரீஷ் வற்புறுத்தினர், குருதேவரோ "சரி, அது பகவானது இச்சையைப் பொறுத்தது."

குருதேவரது தொண்டை நோயைக் குறித்து, கிரீஷ் சொல்வார்: "தயவு கூர்ந்து நீர் 'அது குணமாகட்டும்' என்று சொல்லும், நான் அறைந்து ஓட்டி விடுகிறேன். காளி! காளி!"

குருதேவர்: "நீர் என்னைப் புண்படுத்துவீர்."

கிரீஷ்: "ஏ தொண்டையே, குணமடைக! (அவர் பேயை யோட் டும் மந்திரவாதியைப்போன்று தொண்டையின்மீது ஊதுகிறார்.) உமக்கு முற் றும் சரியாகவில்லையா? இதற்குள் நீர் குணமடையவில்லையெனின், எனக்கு உமது திருவடியில் ஏதேனும் பக்தியிருக்குமாகில் நிச்சயமாக நீர் குணமடைவீர். நீர் குணமடைந்துவிட்டீர் என்று சொல்லும்."

குருதேவர் (கடுத்த குரலில்): "என்னைத் தனியே விட்டுவிடும். என்னால் அவ்வார்த்தைகளைச் சொல்ல முடியாது. எனது நோயைக் குணமாக்கும்படி என்னால் தேவியைக் கேட்க முடியாது.

"சரி, பகவானது இச்சை அதுவானால் நான் குணமடைவேன்."

கிரீஷ்: "நீர் என்ன ஏமாற்றப் பார்க்கிறீர். எல்லாம் உமது இச்சையே."

குருதேவர்: "வெட்கமில்லை! திரும்பவும் அதை ஒருக்காலும் சொல் லாதீர். என்னை நான் கிருஷ்ணனது பக்தனைக் கருதுகிறேன். கிருஷ்ணனை வன்று. நீர் உமது இஷ்டப்படி நினைத்துக்கொள்ளலாம். நீர் உமது குருவை பகவானைக் கருதலாம், ஆயினும் நீர் பேசுகிறபடி சொல்வது தவறு. அம் மாதிரி மறுபடியும் நீர் கூறக்கூடாது."

கிரீஷ்: "நீர் குணமடைவீர் என்று தயது செய்து சொல்லும்."

குருதேவர்: "உமக்குத் திருப்தியானால் சரி."

கிரீஷ் இன்னும் குடிக்கு வசமாயிருந்தார். இடையிடையே அவர் ஸ்ரீராம கிருஷ்ணரிடம் "சரி, நீர் இந்தத்தடவை உமது திவ்விய அழகோடு பிறவாதது எப்படி?" என்று கேட்டார்.

சில கணங்கட்குப் பிறகு அவர் "அறிந்தேன். இந்தத் தடவை வங்காளம் உய்வடையும்" என்று கூறினர்.

ஓர் அடியார் தமக்குள்ளே "எதற்காக வங்காளம் மட்டும்? முழு உலகிற்கும் உய்வுண்டாம்" என்று சொல்லிக்கொண்டார்.

கிரீஷ் அடியார்களைப் பார்த்து, "அவர் ஏன் இங்கு இருக்கிறார் என்பதை உங்களில் யாரேனும் அறிகின்றீர்களா? மக்கள் முக்தி பெறுவதற்காகவே. அவர்களுடைய துயரத்திற்கு இரங்கி அவர் மனித உடல் தரித்து வந்துள்ளனர்."

வண்டிக்காரன் கிரீஷைக் கூப்பிட்டுக்கொண்டிருந்தான். அவர் எழுந்திருந்து அவனை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். குருதேவர் ம—விடம் "அவரைக் கவனியும். அவர் எங்கே போகிறார்? அவர் வண்டிக்காரனை அடிக்கமாட்டாரென நம்புகிறேன்" என்று சொன்னர். ம— கிரீஷோடு கூடச் சென்றார்.

விரைவில் கிரீஷ் திரும்பி வந்தார். அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பிரார்த்தித்து "பகவானே, பாவ நினைவு இம்மிகூட என்னிடம் உண்டாகாதபடி அவ்வளவு தூய்மையை (சித்த சுத்தியை)க் கொடுத்தருளும்" என்று வேண்டினர்.

குருதேவர்: "நீர் முன்னமே தூயராயுள்ளீர். உம்மிடம் அவ்வளவு விசுவாசமும் (நம்பிக்கையும்) பக்தியும் உள்ளன! நீர் ஆனந்த நிலையில் உள்ளீர் அல்லவா?"

கிரீஷ்: "இல்லை ஐயன்மீர், யான் கெட்டுள்ளதாக உணர்கிறேன். எனக்குக் கவலைகள் இருக்கின்றன. இக்காரணம் பற்றியே யான் அவ்வளவு சாராயம் குடித்துள்ளேன்."

சில நிமிஷங்கள் சென்றபின் கிரீஷ் சொல்லுவார்: "பகவானே, பூரண பிரம்மத்திற்குப் பணிசெய்யும் உரிமையை அடியேனும் பெற்றேனே என்பதைக் கண்டு நான் பேராச்சரியம் அடைகிறேன்; இவ்வுரிமையைப்பெற யான் என்ன தவம் செய்தேனே?"

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது நடுப்பகல் உணவை உண்டார். அவர் நோயினால் சிறிதே உட்கொண்டார்.

குருதேவர்க்கு உள்ள இயல்பான மனப்போக்கு யாதெனில் பகவத் அனுபவம்(மெய்ஞ்ஞான உணர்வு)எனும் பூமிக்குப் பறந்துசெல்லுதலே. அவர் உடலுணரும் நிலைக்குத் தம் மனத்தை வற்புறுத்திக் கீழே இழுத்து வருவார். ஒரு குழந்தையைப்போல அவர் அடியார்களிடம் "நான் ஒரு சிறிதே உண்டுளேன். யான் இப்போது இளைப்பாறிக் கொள்கிறேன், நீங்கள் சிறிது நேரம் வெளியே போகலாம்" என்று சொன்னர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் சில நிமிஷங்கள் இளைப்பாறினர். அடியார்கள் அறைக்குத் திரும்பினர்.

காட்டோவாவிலிருந்து வந்த வைஷ்ணவர் வழக்காடிக்கொண்டிருந்தார்.

குருதேவர்(வைஷ்ணவரிடம்): "சுறு சுறு என்ற சத்தத்தை நிறுத்தும்! ஈரவெண்ணெயை நெருப்பிற் சுட வைக்கும்போது, அது அந்தச் சத்தம் உண்டாக்கும். ஒருமுறை பகவானுல் அடையும் ஆனந்தத்தைச் சுவைத்தானுனுல், வழக்காடும் ஆசை அவனைவிட்டுப் பறந்துவிடும். புத்தகங்களிலிருந்து (மேற்கோள்களை எடுத்து) ஒப்பிப்பதனுல் உமக்கு என்ன கிடைக்கும்? பண்டிதர்கள் பாக்களை ஒப்பிக்கிறீர்கள். வேறென்றும் செய்வதில்லை."

டாக்டர் ராக்கால் ஸ்ரீராமகிருஷ்ணரைச் சோதிப்பதற்கு வந்தார். குருதேவர் ஆத்திரத்தோடு "உள்ளே வாரும், கீழே உட்காரும்" என்று அவரிடம் சொன்னர்.

வைஷ்ணவரோடு நடந்த சம்பாஷணை தொடர்ந்தது.

குருதேவர்: "மனிதனிடம் கண்ணியமும் விழிப்பும் இருக்கவேண்டும். யாரிடம் ஞான உணர்வு கிளம்பிவிட்டதோ, அவரே இந்தக் கண்ணியமும் விழிப்பும் உடையராயிருப்பர்; அவரே மனிதரெனத் தகுந்தவர். ஞானம் உதயமாகாதபோது மனிதப் பிறவி வீணுகும்."

ஒரு குழந்தையைப்போல ஸ்ரீராமகிருஷ்ணர் மருத்துவரிடம் "ஐய, எனது தொண்டையைக் குணப்படுத்துவீராக" என்று வேண்டினர்.

டாக்டர்: "உம்மைக் குணப்படுத்தவேண்டும் என்று என்னிடம் சொல்கிறீரா?"

குருதேவர்: "மருத்துவர் நாராயணரே. நான் ஒவ்வொருவரையும் மதிக்கிறேன்."

டாக்டர் ஸ்ரீ ராமகிருஷ்ணரது தொண்டையைச் சோதிக்க ஆரம்பித்தார். குருதேவர் அவரிடம் "டாக்டர் மஹேந்திர சர்க்கார் ஒரு பசுவின் நாக்கை அமுக்கிப் பார்ப்பதுபோல, எனது நாக்கை அமுக்கினர்" என்றார்.

ஒரு குழந்தையைப்போல ஸ்ரீராமகிருஷ்ணர் மருத்துவரின் சட்டையின் விளிம்பை மறுபடியும் மறுபடியும் இழுத்து, அவரிடம் "ஐய, எனது பிரிய ஐய, எனது தொண்டையைக் குணப்படுத்தும்" என்று சொல்லலானர். தொண்டையைப் பரிசோதிக்கும் கருவியைப் பார்த்து, அவர் புன்சிரிப்போடு, "எனக்கு அது தெரியும். அதில் பிரதிபலிப்பதை நீங்கள் பார்ப்பீர்கள்" என்று சொன்னர்.

நரேந்திரர் பாடினர். ஆனுல் குருதேவரது நோயினுல் அதிகப்பாட்டுப் பாடவில்லை.

10

சியாம்புகூரில் ஸ்ரீராமகிருஷ்ணர்

ஞாயிறு, அக்டோபர் 18, 1885

ஸ்ரீ ராமகிருஷ்ணரது நோயைப் புற்று நோயென மருத்துவர்கள் குறிப் பிட்டுக் கண்டுபிடித்துவிட்டனர்; அவரது நோயைத் தீர்த்தற்கும் அவரது அண்டையிலிருந்து அதற்கு வேண்டியன செய்தற்கும் சரியான ஏற்பாடுகளைப் பண்ணத் தக்ஷிணேசுவரத்தில் முடியவில்லை. ஒரு மருத்துவர் இடைவிடாது அவரைக் கவனித்து வருவது அவசியமாயிற்று; அந்த உதவியைக் கோயிற் பூஞ்சோலையில் அளிக்க இயலவில்லை. மேலும் கல்கத்தாவில் வாழ்ந்த அடி யார்கட்குத் தக்ஷிணேசுவரத்தில் ஒவ்வொரு நாளும் அவருடன் இருத்தலும் மிக அசௌகரியமாகத் தோன்றிற்று. ஆதலால் வயது முதிர்ந்த அடியார்கள் கல்கத்தாவிலே பாக்பசாரிலே ஒரு சிறிய இரு மாடிகளைக்கொண்ட வீட்டை வாடகைக்கு அமர்த்தி, குருதேவரை அங்கே அழைத்துவந்திருந்தனர். ஆயி னும் ஸ்ரீராமகிருஷ்ணர்க்கு அவ்வீடு பிடியாமையால் பலராமரது வீட்டிற்குப் போயிருந்தனர், ஒரு சில நாளைக்குள் கல்கத்தாவின் வடபகுதியில் உள்ள சியாம்புகூரில் ஒரு புது வீட்டை ஏற்பாடு செய்து, குருதேவரை அங்கு அழைத்துப் போயிருந்தனர். டாக்டர் மஹேந்திரலால் சர்க்கார் என்பவர் அவர்க்கு வேண்டிய சிகிச்சை செய்து வந்தனர். புதுக் கட்டிடத்தில் இரு பெரிய அறைகளும் இருசிறு அறைகளும் மேல் மாடியில் இருந்தன. பெரிய அறைகளில் ஒன்று கூடமாக உபயோகப்பட்டது. மற்றொன்றில் குருதேவர் வசித்தனர். இரு சிறிய அறைகளில் ஒன்று அடியார்கட்கு உறங்குவதற்குரிய அறையாக, மற்றொன்றைத் தூய அம்மையார் அங்கே வந்திருந்தபோது தமது அறையாகக் கொண்டனர். மாடியின் மேல் தளத்திற்குப் போகும் வாயிலில் ஒரு சிறிய மூடிய சதுரமான இடம் இருந்தது; அங்கே தூய அம்மையார் (ஸ்ரீ ஸாரதா தேவியார்) பகலில் தங்கி, குருதேவரது உணவைத் தயாரித்து வந்தனர்.

அப்போது பிற்பகல், மருத்துவர் சர்க்கார் தமது குமாரர் அமிருதரோடும் ஹெம் என்பவரோடும் வந்து சேர்ந்தனர். நரேந்திரரும் மற்ற அடியார்களும் அங்கே இருந்தனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு பக்கமாக அமிருதரோடு பேசிக்கொண்டிருந்தார்.

அவரைப் பார்த்துக் குருதேவர் "நீ தியானம் பண்ணுவதுண்டா?" என்று கேட்டனர். அவர் மேலும் "தியானத்தில் என்ன உணர்ச்சி உண்டாகும் என்பது தெரியுமா? மனம் எண்ணெயின் தாரைபோலத் தொடர்ந்து ஒன்றையே பற்றுகின்றது—அது ஒரு பொருளையே நினைக்கிறது; அந்த ஒரு பொருளும் பகவானேயாகும். அது வேருென்றையும் பற்றி நினைப்பதில்லை."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடியார்களோடு பேசிக்கொண்டிருந்தனர்.

குருதேவர் (டாக்டரிடம்): "உமது மகனுக்குப் பகவானது அவதாரத்திலே நம்பிக்கையில்லை; அது முற்றும் சரியே. அவனுக்கு அதில் நம்பிக்கையில்லாவிடில் குற்றமில்லை.

"உமது மகன் ஒரு நேர்த்தியான பையன். அவன் வேறு எப்படி இருப்பான்? நல்ல 'பம்பாய்'த் தினுசு மாமரத்திலே புளிப்பான மாங்கனிகள் உண்டாகுமா? அவர்க்குப் பகவானிடம் உள்ள நம்பிக்கை எவ்வளவு உறுதியாக உள்ளது? எவருடைய மனம் பகவான்மீது நிலை நிற்குமோ அவரே உண்மையான மனிதராவர். எவனிடம் மெய்ஞ்ஞான உணர்வு உதயமாகி விட்டதோ, 'பிரம்மமே சத்தியம், மற்றவை யாவும் மித்தையாம்' என்னும் உறுதி எவர்க்கு உண்டாகிறதோ அவரே மனிதராவர். உமது மகனுக்குப் பகவானது அவதாரத்தில் நம்பிக்கையில்லை; ஆனல் அதனல் என்ன? பகவான் இருக்கிறார் என்பதையும், இப் பிரபஞ்சம் முழுவதையும் அதிலுள்ள உயிர்களும் அவரது சக்தியின் பிரகாசமே, ஒரு செல்வவானையும் அவனுடைய தோட்டத்தையும் போலே அவரும் அவரது பிரபஞ்சமும் என்பதையும் அவன் நம்புவதே போதும்.

"சிலர் பத்து அவதாரங்கள் என்றும், வேறு சிலர் இருபத்து நான்கு என்றும், மற்றும் சிலர் அவதாரங்கள் கணக்கற்றவை என்றும் சொல்கின்றனர். எங்கேனும் பகவானது சக்தியின் பிரகாசத்தைச் சிறப்பாகக் காணின் பகவான் தாமே அங்கு அவதரித்திருக்கிறார் என்று தெரிந்துகொள்ளலாம். அது எனது அபிப்பிராயம்.

"இன்னெரு கொள்கையும் உண்டு; அதன்படி பகவானே நீர் பார்ப்பதெல்லாம் ஆயிருக்கின்றனர். பாரமார்த்திகப் பொருள் எதுவோ அதற்கு வியாவகாரிக நிலையும் உள்ளது; வியாவகாரிகப் பொருளுக்குப் பாரமார்த்திக நிலையும் உள்ளது. பாரமார்த்திகத்தை நீர் ஒதுக்கிவைத்துவிட்டு, வியாவகாரிகத்தை மாத்திரம் அறிய உமக்கு முடியாது. வியாவகாரிகம் ஒன்று இருப்பதனல்தான், நீர் அதைப் படிப்படியாகத் தாண்டி, அப்பாலுள்ள பாரமார்த்திகத்தை அடைய முடியும். 'நான்' எனும் உணர்ச்சி இருக்கும்வரை ஒரு மனிதற்கு வியாவகாரிகத்தைத் தாண்டி அப்பாற்செல்ல இயலாது."

டாக்டர்: "முற்றிலும் உண்மையே."

பகவான் மனிதரைப் படைத்துவிட்டு, ஒவ்வோர் ஆஞ்மாவும் வரம்பற்ற முன்னேற்றம் அடையவேண்டும் என்று விதித்தார் என்பது டாக்டர் சர்க்காரது

அபிப்பிராயம். ஒரு மனிதன் மற்றொரு மனிதனைவிட மேலானவன் என்பதை அவர் நம்பமாட்டார். இக்காரணத்தால் பகவான் அவதரிக்கிறார் என்கிற கொள்கையை அவர் நம்புவதில்லை.

டாக்டர்: "வரம்பற்ற முன்னேற்றத்தில் எனக்கு நம்பிக்கை உள்ளது. முன்னேற்றத்திற்கு வரம்புண்டாயின், உலகத்திலே ஓர் ஐந்தாறு வருஷம் மட்டும் வாழ்வதால் வரும் பயனென்ன? அதைவிட எனது கழுத்தைச் சுற்றி ஒரு கயிற்றை மாட்டிக்கொண்டு தூக்குப் போட்டுக்கொள்வது எனக்கு அதிகப் பிரியம்.

"அவதாரம்! அது யாது? மலங்கழிக்கும் ஒரு மனிதன் முன்பு பதுங்குவதா! அது பொருந்தாத செயல். ஆனால் ஒரு மனிதனை இறைவனது ஒளியின் பிரதிபிம்பம் என்று நீர் பேசுவீராயின், ஆம், அதனை நான் ஒப்புக்கொள்ளுவேன்."

கிரீஷ் (சிரித்துக்கொண்டே): "ஆனால் நீர் பகவானது ஒளியைப் பார்த்திருப்பதில்லை."

டாக்டர் சர்க்கார் அதற்குப் பதில் சொல்லத் தயங்கிக்கொண்டிருந்தார். அவரருகே அமர்ந்திருந்த ஒரு நண்பர் அவரது காதில் ஏதோ ஒன்றை மெதுவாகச் சொன்னார்.

டாக்டர் (கிரீஷைப் பார்த்து): "நீரும் ஒரு பிரதிபிம்பத்தைத் தவிர வேறெதைப் பார்த்திருக்கின்றீர்?"

கிரீஷ்: "நான் அதைக் காண்கிறேன்! நான் ஒளியைக் காண்கின்றேன்! ஸ்ரீ கிருஷ்ணன் பகவானது அவதாரம் என்பதை யான் நிரூபித்துவேன்! இல்லாவிடில் என் நாக்கை அறுத்தெறிந்துவிடுவேன்!"

குருதேவர்: "இதெல்லாம் பயனற்ற பேச்சு, புத்திக் கலக்கமடைந்த ஒரு நோயாளியின் புலம்பலைப் போன்றது அது. புத்திக் கலக்கமடைந்த ஒரு நோயாளி 'ஒரு குளத்துத் தண்ணீர் முழுமையையும் குடிப்பேன்; ஒரு முழுப்பானைச் சோற்றையும் உண்பேன்' என்று சொல்லுகிறான். மருத்துவனை, 'சரி, சரி, அவற்றையெல்லாம் நீ பெறுவாய். உனக்கு நோய் நீங்கி உடம்பு தேறிவரும் காலத்தில் உனக்கு வேண்டியதையெல்லாம் தருவோம்' என்று சொல்லுகிறான். பூரண ஞானம் பெற்றதற்கு அறிகுறிகள் உண்டு. ஒன்று யாதெனில், தருக்கம் ஓய்ந்துவிடுதலே."

டாக்டர்: "பூரண ஞானத்தை ஒருவன் நிலையாக வைத்திருக்கக் கூடுமா? எல்லாம் பகவான் என்று நீர் கூறுகின்றீர். அவ்வாறாயின், இந்தப் பரமஹம்ச உத்தியோகத்தை நீர் ஏன் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்? இம்மக்கள் உம்மோடு கூட இருப்பானேன்? நீர் ஏன் மௌனமாயிருக்கக் கூடாது?"

குருதேவர் (சிரித்துக்கொண்டே): "தண்ணீர் அமைதியாயிருந்தாலும் அசைந்தாலும் அலைகளாகச் சிதறினாலும் தண்ணீர் தண்ணீரேயாம்.

"பகவானே சுத்த மனதாகவும் சுத்த புத்தியாகவும் உள்ளே வாசம் பண்ணுகிறார். நான் யந்திரம், அவர் அதை ஆட்டிவைப்பவர் (யந்திரி). நான் வீடு, அவர் உள்ளே வாழ்பவர்."

டாக்டர்: "நான் ஒன்று உம்மைக் கேட்கிறேன். உமது நோயைப் போக்கும்படி என்னை நீர் ஏன் வேண்டுகிறீர்?"

குருதேவர்: "'நான்' என்னும் 'ஜாடி'யை உணரும்வரை யான் அவ்வாறு பேசுவேன். எல்லாப் பக்கங்களிலும் நீர் நிறைந்த ஒரு பெருங்கடலை நினையும், அதில் ஒரு ஜாடி அமிழ்த்தப்பட்டுள்ளது. ஜாடிக்கு உள்ளேயும். வெளியேயும் நீர் உள்ளது, ஆனால் ஜாடி உடைந்தாலன்றி நீர் ஒன்றுவதில்லை. 'நான்' எனும் 'ஜாடி'யை என்னிடம் வைத்திருப்பவர் பகவானே."

டாக்டர்: "'யான்' என்பதற்கும், இன்னும் நீர் பேசிவரும் மற்றவற்றுக்கும் பொருள் யாது? நீர் எனக்கு அதை விரித்துக் கூறவேண்டும்' பகவான் நம்மிடம் வேடிக்கை பண்ணிக்கொண்டிருக்கிறார் என்பதா உமது கருத்து?"

கிரீஷ்: "அவர் நம்மிடம் வேடிக்கை பண்ணவில்லை என்பதை நீர் எப்படிக் கண்டீர்?"

குருதேவர்(சிரித்துக்கொண்டே): "நம்மிடம் இந்த 'நான்' என்பதை (அகங்காரத்தை) வைத்திருப்பவர் பகவானே. இதெல்லாம் அவரது லீலையே, அவரது திருவிளையாடலே. ஓர் அரசனுக்கு நான்கு குமாரர்கள் உளர். அனைவரும் அரசகுமாரரே; ஆனால் அவர்கள் விளையாடும்போது, ஒருவர் மந்திரியாகவும். இன்னொருவர் 'போலீஸ்' அதிகாரியாகவும், மற்றையோர் வேறுவிதமாகவும் விளையாடுகின்றனர். அரச குமாரராயினும் போலீஸ் அதிகாரியாக விளையாடுகின்றனர்.

(டாக்டரிடம்) "கேளும், நீர் ஆத்மாவை உணருவீராயின், நான் சொன்னதையெல்லாம் உண்மையென அறிவீர். ஈசனைத் தரிசித்த பின்பு எல்லா சந்தேகங்களும் மறைந்துவிடுகின்றன."

டாக்டர்: "எல்லா சந்தேகங்களையும் ஒழித்தல் என்றுவது இயலுமா?"

குருதேவர்: "நான் உம்மிடம் சொல்லியுள்ள அவ்வளவையும் என்னிடமிருந்து அறிந்துகொள்ளும். ஆனால், அதிகம் அறிய விரும்புவீராயின் நீர் தனிமையிலே பகவானிடம் பிரார்த்திக்கவேண்டும். அவர் ஏன் அப்படி விதித்திருக்கிறார் என்பதை அவரிடமே கேளும்,"

டாக்டர் மௌனமாயிருந்தார்.

குருதேவர்: "சரி, உமக்குத் தருக்க விசாரணையில் பிரியம். ஒரு சிறிது வேதாந்த விசாரத்தைக் கவனியும். ஒரு ஜால வித்தைக்காரன் ஓர் அரசரிடம் தனது ஜால வித்தையைக் காட்டுதற்காக வந்தான், வித்தைக்காரன் ஒரு சிறிது அப்பாற் சென்றதும், அரசர் தம்மை நோக்கிக் குதிரையேறி வரும்

ஒருவன் நெருங்குவதைக் கண்டார், அவன் பளபளவென்று மின்னும் உடைகளை அணிந்திருந்தான்; தனது கைகளிற் பற்பல ஆயுதங்களையும் தரித்திருந்தான், அரசரும் சபையோரும் தம்முன் கண்ட நிகழ்ச்சியில் எது உண்மை என்பதை விசாரிக்கத் தொடங்கினர். குதிரையோ, உடைகளோ, கவசமோ உண்மையில்லை என்பது வெளிப்படை, கடைசியாக ஒரு சிறிதும் சந்தேகமின்றி, சவாரி செய்பவனே அங்கிருந்தான் என்பதை அவர்கள் கண்டுபிடித்தனர். இதன் கருத்து யாதெனில், பிரம்மம் ஒன்றே மெய், உலகம் மித்தை என்பதே. நீர் விசாரிப்பீராயின், ஒன்றுகூட மிஞ்சுவதில்லை.''

டாக்டர்: ''இதற்கு நான் எதிர்த்துரைக்கவில்லை.''

குருதேவர்: ''ஆனால் மித்தையைப் போக்குவது எளிதன்று. ஞானம் அடைந்த பின்னும் அது போகத் தயங்கும். ஒரு மனிதன் புலியைப் பற்றிக் கனவு கண்டான். பிறகு விழித்தான். கனவும் மறைந்தது. ஆனாலும் அவனது நெஞ்சின் படபடப்பு அப்போதும் நிற்கவில்லை,

''சில திருடர் ஒரு வயலுக்கு வந்து சேர்ந்தார். அந்நியர்களைப் பயமுறுத்தற்காக மனித வடிவங்கொண்ட ஒரு வைக்கோற் பொம்மை அங்கே வைக்கப்பட்டிருந்தது. திருடர்கள் அவ்வுருவத்தைக் கண்டு பயந்து, வயலுக்குட் செல்ல மனந்துணியாதிருந்தனர், ஆயினும் அவர்களில் ஒருவன் அருகே சென்று அது வைக்கோற் பொம்மையே என்பதைக் கண்டுபிடித்தான். அவன் தன் தோழர்களிடம் மீண்டு, 'அஞ்சுவதற்கு யாதொன்றுமில்லை' என்று கூறினான். ஆனால் பின்னும் அவர்கள் போக மறுத்தனர்: தங்களது நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டேயிருந்ததென்றனர். பின் அத்துணிவான திருடன் பொம்மையைத் தரைமீது வைத்து, 'அது ஒன்றுமில்லை, அது ஒன்றுமில்லை' என்று கூறினான். இதுதான் 'நேதி' 'நேதி' என்னும் முறையாகும்.''

டாக்டர்: ''இவை நேர்த்தியான மொழிகளே.''

குருதேவர்(சிரித்துக்கொண்டே): ''எம்மாதிரி மொழிகள்?''

டாக்டர்: ''நேர்த்தியானவை.''

குருதேவர்: ''அப்படியாயின் எனக்குத் 'தாங்க்யூ' என்று சொல்லும்'' [குருதேவர் 'தாங்க்யூ' என்ற மொழிகளை (உமக்கு நன்றியென்பது பொருள்) ஆங்கிலத்திலேயே உரைத்தார்.]

டாக்டர்: ''என் மனதில் உள்ளதை நீர் அறியீரோ? உம்மிடம் வந்து உம்மைக் கண்டு போதற்காக யான் அவ்வளவு துன்பமும் ஏற்கிறேன்!''

ஸ்ரீ ராமகிருஷ்ணர் டாக்டர் சர்க்காரைச் சிறிது சிற்றுண்டி அருந்துமாறு வேண்டினர். அடியார்கள் அவர்க்குத் தின்பண்டங்களை வழங்கினர்.

டாக்டர் (உண்ணும்போதே): ''தின்பண்டங்கட்காக 'தாங்க்யூ' என்று இப்போது சொல்கிறேன்; ஆனால் உமது போதனைகட்காக அன்று. அதற்குத் 'தாங்க்யூ' என்று வார்த்தைகளை எதற்காகச் சொல்லவேண்டும்?''

அக்டோபர் 22, 1885

இன்று துர்க்க பூஜை கழிந்து சில நாள்கட்குப்பின், வியாழக்கிழமை மாலை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் இரண்டாவது மாடியில் தமது அறையில் உள்ள படுக்கைமீது உட்கார்ந்தார்; டாக்டர் சர்க்காரும், ஈஷானும் மற்ற அடியார்களும் கூட இருந்தனர். டாக்டர் சர்க்கார் அலுவல் மிகுந்த வைத்தியராயிருப்பினும் நெடும்பொழுதை—சில சமயம் ஆறு ஏழு மணி நேரத்தையும்—ஸ்ரீராமகிருஷ்ணரோடு கூடியிருந்து கழிப்பார், அவர்க்குக் குருதேவர்மீது பேரன்பு இருந்தது; அதனால் அவருடைய அடியார்களைத் தமது உற்றார் உறவினராகவே கருதி வந்தார். அறையிலே ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. வெளியுலகில் நிலா ஒளி பிரகாசித்துக்கொண்டிருந்தது.

இல்லற அன்பராகிய ஈஷானைப் பார்த்துக் குருதேவர், "உலகத்தில் தனக்குரிய கடமைகளை இயற்றுபவனும், அதே சமயம் பகவானது பாத தாமரையிலே பக்தி பூணுபவனும் ஆன இல்லறத்தான் உண்மையாகவே பாக்கியவான். அவன் உண்மையிலே ஒரு வீரன். தலைமீது கனமான இரண்டு மணங்குப் பாரத்தைச் சுமந்துகொண்டு, அதே சமயம் ஒரு கலியாண ஊர்வலத்தையும் கவனிக்கும் ஒரு மனிதனைப்போன்றவன் அவன். மிக்க ஞான சக்தியின்றி எவனும் அத்தகைய வாழ்க்கையை நடத்த முடியாது. இன்னும் அம்மாதிரியான மனிதன் சேற்றுமீன் போல்வான்; சேற்று மீன் மண்ணிலே வாழ்ந்தும், அதனால் அழுக்கடைவதில்லை. மேலும் அத்தன்மை வாய்ந்த இல்லறத்தானை ஒரு நீர்க்கோழிக்கும் ஒப்பிடலாம். அது அடிக்கடி தண்ணீரில் மூழ்கிக்கொண்டேயிருக்கிறது; ஆயினும் ஒரு முறை மட்டும் தன் சிறகுகளை அடித்து உதறுவதனால், ஈரத்தின் அடையாளமும் இல்லாதபடி உதறி விடுகிறது.

"நீர் கேட்கலாம்; 'இல்லறத்தார் ஒருவர், துறவியொருவர்—இவ்விரு நிலைகளிலும் உள்ள ஞானிகளின் அனுபூதிகட்குள் ஏதேனும் வேறுபாடு உண்டா?' என்று. இருவரும் ஒரே வகுப்பைச் சார்ந்தவரே என்பது அதற்கு மறுமொழி. அவர்கள் இருவரும் ஞானிகளே; அவர்கட்கு ஒரே அனுபூதியும் உண்டு. ஆனால் ஓர் இல்லற ஞானிக்கோ அஞ்சக் காரணம் உண்டு, அவன் காமகாஞ்சனங்கட்கு நடுவே வாழும்வரை, அவனால் தனது அச்சத்தை முற்றிலும் ஒழிக்க இயலாது. கரி நிறைந்த அறையில் நீர் எப்போதும் வாழ்வீராலை, உமது உடலில் அழுக்கேறுவது உறுதியே; அது மிகமிகச் சிறியதாயே இருக்கட்டும். நீரும் எவ்வளவோ சாமர்த்தியமுடையராயினும் சரி, மாசடைவது நிச்சயம்.

"நெல்லை வறுக்கும்போது, ஒரு சில நெல்கள் வறுக்கும் சட்டியிலிருந்து வெளியே குதித்துவிழும். இவை மல்லிகைப் பூவைப்போல் தம்மீது ஒரு சிறிதும் மாசின்றி வெண்மையாயிருக்கும். ஆனால் வறுக்குஞ் சட்டியில் உள்ள நெல்களும், புது மல்லிகைப் பூவைப்போல் மறுவற்றனவாகாவிடினும், நல்

லவையாம். அவை ஒருவாறு கருகியிருக்கும். அம்மாதிரியே உலகினைத் துறந்த ஒரு துறவி மெய்ஞ்ஞானத்தை அடைவானுயின், வெண்மையான மல்லிகைப்பூப்போல மாசற விளங்குவான்; ஆனால் உலகமென்னும் வறுக்கும் சட்டியில்தங்குபவன், மெய்ஞ்ஞானம்பெற்றபின்னும், ஒரு சிறிதே மாசடைவான். (எல்லோரும் சிரித்தல்)

"உலகத்தில் வாழும் ஞானியிடம் ஒரு சிறிது களங்கம் இருக்குமாயினும் இது அவனுக்குத் தீங்கு செய்யாது. சந்திரனிடத்துக் களங்கம் இருப்பதிற் சந்தேகமில்லை; ஆனால் அது அதன் ஒளியைத் தடுப்பதில்லை."

டாக்டர்: "இந்திரியங்களை அடக்குவது மிகக் கடினம். அவை முரட்டுக் குதிரைகளைப் போன்றன; அவற்றின் கண்களைப் பக்க மூடிகளால் மறைத்தல் வேண்டும். சில குதிரைகள் விஷயத்திலோ அவை பார்க்க முடியாதபடி முற்றும் கண்களை மறைத்தலும் அவசியமாகும்."

குருதேவர்: "ஒரு முறையேனும் ஒருவன் ஈசனது கருணையைப் பெறுவானுயினும், ஒருமுறையேனும் ஈசனது தரிசனத்தை அவன் பெறுவானுயினும், ஒருமுறையேனும் அவன் ஞானம் அடைவானுயினும், அவன் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. அப்போது காமம் குரோதம் முதலிய ஆறும் அவனுக்கு எவ்விதத்திலும் தீங்கிழைக்க இயலாது போகும்.

"நாரதர் பிரஹ்லாதர் போன்ற நித்திய சித்தர்களோ தமது கண்கள் மீது மூடிகளையிட்டு மறைக்கும் தொந்தரவுக்கு ஆளாகும் அவசியமற்றவராவார். தனது தந்தையின் கையைப் பிடித்துக்கொண்டிருக்கும் குழந்தை, நெல் வயலிலேயுள்ள ஒடுக்கமான வரப்பின்மீது நடந்து செல்லும்போது, கவனமில்லாத ஒரு கணத்தில் தனது கையை நழுவ விடலாம்; அதனற் பள்ளத்தில் விழவும் செய்யலாம். ஆனால் தந்தையே குழந்தையின் கையைப் பிடித்துக்கொள்வராயின், வேறு விதமாக நடக்கும். அப்போது குழந்தை ஒருக்காலும் பள்ளத்தில் விழாது."

டாக்டர்: "ஆனால் தனது குழந்தையைக் கையாற் பிடித்துக்கொள்வது ஒரு தந்தைக்கு முறையல்லவே."

குருதேவர்: "அது முற்றிலும் அதைப்போன்றதன்று. பெரிய ஞானியர் குழந்தைபோன்ற இயல்பினையுடையவராவர். ஈசன் முன்பு அவர்கள் எப்போதும் குழந்தைகளைப்போல இருப்பர், அவர்களிடம் அகந்தை இராது. அவர்களுடைய பலம் பகவானுடைய பலமே; ஈசனுகிய தமது பரம பிதாவின் பலமேயாகும். தமதென்று கூறுவதற்குரிய யாதொன்றும் இல்லாதவர். அதை அவர்கள் உறுதியாக உணர்ந்தவர்கள்."

டாக்டர்: "ஒரு குதிரையின் கண்களைப் பக்க மூடிகளால் முதலில் மறையாது ஒரு குதிரையை முன்செல்லச் செய்வது உமக்கு இயலுமா? காமம் குரோதம் முதலியவற்றை முதலிலேயே அடக்காமல் ஒருவனுக்கு ஈசனது தரிசனம் பெற முடியுமா?"

குருதேவர்: "நீர் கூறுவது விவேகம் பழகும் நெறிப்படியே சரியாகலாம். அந்நெறி வழியாகவும் ஈசனை அடையலாம். ஒரு சாதகன் முதன் முதலாகத் தனது சித்தத்தைத் தூய்மையாக்கவேண்டும் என்று ஞானிகள் சொல்வர். முதலில் அவனுக்கு வேண்டுவது ஞான சாதனம்; பிறகு அவன் ஞானமடைவான்.

"ஆனால் பக்திநெறி வழியாகவும் ஈசனைத் தரிசிக்க இயலும். பக்தனுக்குப் பகவானது பாத தாமரையிலே அன்பு முதிர்ந்து, அவரது நாமத்தையும் குணங்களையும் பாடுதலிலே ஆனந்தம் உண்டானதும், அவன் தன் இந்திரியங்களை அடக்குதற்காகத் தனி முயற்சி செய்யவேண்டியிராது. அம்மாதிரியான பக்தனுக்கு இந்திரியங்கள் தாமாகவே அடங்கிவிடும்.

"ஒரு மனிதன் தனது மகனை அப்போதுதான் இழந்து, அவனது மரணத்தைக் குறித்துத் துயரப்பட்டுக்கொண்டிருப்பதாக வைத்துக்கொள்ளும், அதே நாளில் பிறரோடு சண்டை போடவோ, ஒரு நண்பரது வீட்டில் விருந்துண்டு மகிழவோ, அவனுக்கு மனம் வருமா? அதே நாளில் அவன் பிறர் முன்பு தனது அகந்தையைக் காட்டவோ போகங்களை அனுபவிக்கவோ முடியுமா?

"ஒரு விட்டில் பூச்சி ஒளியைக் காணுமாயின் அது அதன்பின் இருளில் இருக்க முடியுமா?"

டாக்டர் (புன்சிரிப்போடு): "முடியாது என்பது நிச்சயம். அது தீயை நோக்கிப் பறந்து சென்று மாயவே பிரியப்படும்."

குருதேவர்: "இல்லை யில்லை, அது அப்படியன்று. பகவான்மீது பக்திகொண்டவன் விட்டிலைப்போலத் தன்னை எரித்து அழித்துக்கொள்ள மாட்டான். அவன் பாய்ந்து புகும் ஒளி ஒரு மணியின் ஒளியைப் போன்றது. அந்த ஒளி பிரகாசமுடையது என்பதிற் சந்தேகமில்லை; ஆனால் அது குளிர்ந்தும் ஆறுதலாயும் இருக்கின்றது. அவ்வொளி அவனது உடலைக் கருக்குவதில்லை; அது ஆனந்தத்தையும் சாந்தியையும் அவனுக்கு அளிக்கின்றது.

"விவேகமும் ஞானமும் பழகும் மார்க்கத்தைப் பின்பற்றி ஒருவன் பரம்பொருளை அடைவதுண்டு. ஆனால் இது மிகமிகக் கடினமான பாதை. 'நான் உடலன்று, மனமன்று, புத்தியுமன்று; துயரம் நோய் துன்பம் இவற்றுக்கு நான் அப்பாலானவன்; யான் சச்சிதானந்த வடிவினேன்; இன்ப துன்பங்கட்கு அதீதமானவன்; இந்திரியங்கட்கு யான் வசமல்லேன்' என்பது போன்ற வார்த்தைகளைச் சொல்வது மிக எளிதே; ஆனால் இக்கருத்துக்களை மனதோடு ஒன்றவைத்து, அவ்வாறே அவற்றைப் பழகுதல் மிக அருமையாம். எனது கையில் ஒரு முள் கீறி இரத்தம் பெருகுவதை யான் நேரே காண்பதாகக் கொள்வோம்; அப்போது 'ஏன்? எனது கையை முள் கீறவில்லையே! எனக்கு எல்லாம் சரியாய்த்தான் இருக்கிறது' என்று சொல்வது எனக்கு வழக்காகுமா? அவ்வாறு சொல்லும் திறமை பெறவேண்டின், யான் முதன்முதலாக ஞானதீயில் முள்ளையே எரிக்கவேண்டும்."

டாக்டர்(அடியார்களைப் பார்த்து): "இவர் (ஸ்ரீ ராமகிருஷ்ணர்) புத்தகங்களைப் படித்திருப்பாராயின். அவர்க்கு அவ்வளவு அறிவைப் பெறுவது இயலாததாயிருக்கும். பாரடே (என்னும் விஞ்ஞானி) இயற்கையோடு அளவளாவினர்; அக்காரணத்தால் அவர் பல விஞ்ஞான உண்மைகளைக் கண்டுபிடிக்கும் திறமை பெற்றார். புத்தகங்களை வாசிப்பதனால் மட்டும் அவர் அவ்வளவு அறிந்திருக்க முடியாது. கணித நூல் வாய்பாடுகள் மூளைக்குக் கலக்கத்தை மட்டும் உண்டுபண்ணும்; சுயமாக விசாரணை செய்யும் நெறிக்கு முட்டுக்கட்டை போடும்."

குருதேவர்: "ஒரு காலத்தில் யான் பஞ்சவடியில் தரைமீது படுத்துக் கொண்டு தேவியினிடம் பின்வருமாறு பிரார்த்தனை பண்ணினேன்: 'அம்மே கருமிகள் (கருமங்களில் ஈடுபட்டவர்கள்) தமது கிரியைகளோடு கூடிய பூஜையினால் உணர்வதையும், யோகிகள் தமது யோகத்தால் உணர்வதையும், ஞானிகள் விவேகத்தால் உணர்வதையும் எனக்குக் காட்டியருளுக.' யான் தேவியோடு அளவளாவியதை எவ்வளவு என்பேன்! இதையெல்லாம் யான் எவ்வாறு வருணிக்க முடியும்? ஆ! யான் என்ன நிலை வழியாகச் சென்றேன்! உறக்கம் என்னைவிட்டு முற்றும் விலகிவிட்டது."

அவர் பின்னும் தொடர்ந்து கூறியதாவது: "யான் புத்தகங்களை வாசித்திருக்கவில்லை. ஆயினும் மக்கள் எனக்கு மரியாதை காட்டுகின்றனர்; காரணம் யாதெனில், தேவியின் திருப்பெயரை யான் ஓதுகிறேன் என்பதே. சம்புமல்லிக் என்னைப் பற்றிப் பேசும்போது, "இதோ ஒரு பெருவீரர் உளர்; அவரிடம் வாளோ கேடயமோ இல்லை!" என்றார். (சிரிப்பு)

(டாக்டரைப்பார்த்து): "பகவான் ஒரே சமயம் ஓர் எல்லையுற்ற மனிதனாகவும், உலகமெல்லாம் பரந்த ஆன்மாவாகவும் இருக்கக் கூடும் என்பதை அறிவது மிக அரிது. பாரமார்த்திகமும் வியாவகாரிகமும் அவருடைய இரண்டு நிலைகள். நமது அற்ப புத்தியைக்கொண்டு பகவான் மனித வடிவங் கொள்ளமுடியாது என்று நாம் எவ்வாறு வற்புறுத்திக்கூறமுடியும்? நமது அற்ப அறிவாலே இக்கருத்துக்களையெல்லாம் நம்மால் என்றேனும் அறிய இயலுமா?

"ஆதலால் சாதுக்கள் மஹான்கள் முதலியோருடைய வார்த்தைகளில், ஈசனது தரிசனம் பெற்றவர்களுடைய மொழிகளில் நம்பிக்கை வைத்தல் வேண்டும். ஒரு வக்கீல் தம் வழக்குகளைப்பற்றி ஓயாது நினைத்துக்கொண்டிருப்பதுபோல். அவர்கள் சதா ஈசனைப்பற்றி நினைத்து வருவார்கள்.

"ஒரு மனிதன் கபடமற்றவனாக இருந்தாலன்றி, அவனுக்கு ஈசனிடம் நம்பிக்கை எளிதாக உண்டாக முடியாது, உலகப் பற்றிலே தோய்ந்துள்ள மனத்திற்குப் பகவான் தூரத்திலிருக்கின்றனர். இலௌகிக (உலக சம்பந்தமான) அறிவு பல சந்தேகங்களையும், கல்வி செல்வம் முதலியவற்றால் வீணையும் பலவித அகந்தையையும், உண்டாக்குகின்றது. (டாக்டரைச் சுட்டி) ஆனால் அவர் கபடமற்றவர்.

"பகவானை நாடுவார்க்குச் சாதுக்களோடு (தூய மக்களோடு) அடிக்கடி பழகுதல் (நல்லார் இணக்கம்) அவசியம். உலகப்பற்றுள்ள மக்களின் நோய் (ஊறிய) நாட்பட்ட நோயாகிவிட்டது என்று கூறலாம். சாதுக்களின் புத்தி மதியைப் பின்பற்றி அவர்கள் நடக்கவேண்டும். அவர்களது புத்திமதியைக் காதால் கேட்பதனால் மட்டும் இவர்கட்கு என்ன லாபம்? கொடுக்கப்பட்ட மருந்தை இவர்கள் உண்பது மட்டும் போதாது, பத்தியத்தையும் கண்டிப்பாகப் பின்பற்றவேண்டும். பத்தியம் முக்கியம்."

டாக்டர்: "வேறெல்லாவற்றையும் பார்க்க அதிகமாகப் பத்திய உணவே குணத்தைக் கொடுப்பதாகிறது,"

கிரீஷ் (டாக்டரிடம் சிரிப்போடு): "நீர் இங்கு மூன்று நான்கு மணி நேரங்களா முன்னமே இங்கு செலவு செய்துவிட்டீரே. உம்முடைய நோயாளிகட்கு என்ன செய்யப் போகிறீர்?"

டாக்டர்: "சரி எனது தொழிலும் என் நோயாளிகளுமா? உம்முடைய பரமஹம்சராலே யான் எல்லாவற்றையும் இழக்கப்போகிறேன்!" (எல்லோரும் சிரித்தல்)

(கிரீசர், ம—, மற்ற அடியார்கள்—இவர்களைப் பார்த்து) "நண்பர்களே, என்னையும் உங்களில் ஒருவராகக் கருதுங்கள், வைத்தியன் என்ற நிலையில் நான் இதைச் சொல்லவில்லை. ஆனால் நீங்கள் என்னை உங்களில் ஒருவராகக் கருதுவீராயின், நான் உங்கட்குரியவனே.

(குருதேவரை நோக்கி) "உம்மை வருத்திக் கொண்டிருக்கும் நோய், நோயாளி மக்களுடன் பிறர் பேசுவதற்கு இடங்கொடாது. ஆனால் யானே அவ்விதிக்கு விலக்காவேன். நான் இங்கு இருக்கும்போது நீர் என்னிடம் பேசலாம்." (அனைவரும் சிரித்தல்)

குருதேவர்: "எனது நோயைக் குணமாக்கும். பகவானது பெயரையும் புகழையும் என்னால் பாட முடியவில்லை."

டாக்டர்: "தியானமே போதும்."

குருதேவர்: "உமது கருத்தென்ன? எதற்காக நான் ஒன்றையே திரும்பத் திரும்பச் செய்யும் ரசமற்ற வாழ்க்கை வாழவேண்டும்? நான் எனது மீனைப் பலவகையாகத் தயாரித்து உண்பேன்; கறிமீன், வறுத்த மீன், ஊறுகாய் மீன் முதலியவாக்கி ரசம் அனுபவிப்பேன். சில சமயம் யான் கிரியைகளோடு ஈசனை வழிபடுவேன்; சில சமயம் அவரது பெயரை ஓதுவேன்; சில சமயம் யான் அவரைத் தியானிக்கிறேன்; சில சமயம் அவரது பெயரையும் புகழையும் பாடுகிறேன்; சில சமயம் அவரது பெயரைக்கூறி ஆடுகிறேன்."

டாக்டர்: "நானும் செய்ததையே செய்து அருவருப்பை உண்டு பண்ணுவதில்லை,"

குருதேவர்: "உமது குமாரன் அமிருதன் பகவானது அவதாரத்தை நம்புவதில்லை. அதனால் என்ன கேடு? ஈசனை (வடிவற்றவனாக) நிராகார

மென நம்புபவனும் ஈசனது தரிசனம் பெறுகிறான். ஈசனை (வடிவுடையவனாக) ஸாகாரமென நம்புபவனும் தரிசனம் பெறுகிறான். ஈசனை அடைவதற்கு இரண்டு பொருள்கள் அவசியம்; அவையாவன: நம்பிக்கையும் சரண மடைதலும். மனிதன் இயல்பாகவே அறிவற்றவன். பிழைகளியற்றல் அவனுக்கு இயல்பேயாகும். நீர் எந்த நெறியைப் பின்பற்றினும், வியாகுலம் (பெருந் துயரம்) மிக்க நெஞ்சோடு நீர் பகவானிடம் பிரார்த்திக்கவேண்டும். அவரே ஆன்மாவினை உள்ளே அடக்கியாள்பவர் (அந்தர்யாமி). உமது பிரார்த்தனை மனப்பூர்வமானதாயின், பகவான் அதற்குச் செவி சாய்ப்பது உறுதி. நீர் சகுணமான ஈசனை இலக்ஷியமாகப் பின்பற்றினாலும், நிர்க்குணமான பரம் பொருளை இலக்ஷியமாகப் பின்பற்றினாலும். நீர் அவரைக் காணுதற்காகப் பெருந்துயரடைவீராயின், நீர் ஈசனையே அடைவீர்.

"உமது மகன் அமிருதன் ஒரு நேர்த்தியான பையன்."

மருத்துவர்: "அவன் உமது சிஷ்யன்."

குருதேவர் (புன்சிரிப்போடு): "சூரியனுக்குக் கீழுள்ள இப்பூமியிலே எனது சிஷ்யன் எனப்படுபவன் ஒருவனும் இல்லை. அதற்கு மாறாக நானே ஒவ்வொருவனுக்கும் சிஷ்யனாவேன். எல்லோரும் பகவானுடைய குழந்தைகளே. எல்லோரும் பகவானுடைய அடிமைகளே. யானும் பகவானது குழந்தை, யானும் பகவானுடைய அடிமை. 'அம்புலி மாமா' ஒவ்வொரு குழந்தைக்கும் மாமா!"

சனிக்கிக்மை அக்டோபர் 24, 1885

அன்று பிற்பகலில் ஏறக்குறைய ஒரு மணி, ஸ்ரீராமகிருஷ்ணர் சியாம்பு கூரில் உள்ள வீட்டின் இரண்டாவது மாடியில் அமர்ந்திருந்தார். டாக்டர் சர்க்கார், நரேந்திரர், மஹிமாசரண், ம—முதலான அடியார்களும் அறையில் இருந்தனர். 'ஹோமியோபதி' மருத்துவ முறையைக் குறித்துக் குருதேவர் டாக்டர் சர்க்காரிடம், "நீர் செய்துவரும் இச்சிகிச்சை முறை மிக நல்லது" என்றனர்.

டாக்டர்: "ஹோமியோபதி முறைப்படி மருத்துவன் நோயின் அடையாளங்களை வைத்தியப் புத்தகத்தைக்கொண்டு சரிபார்க்கவேண்டும்; அது மேற்றிசை சங்கீதம் போன்றது. பாடகன் தன்முன்னுள்ள தாளில் பாட்டைச் சுரப்படுத்தி எழுதியிருப்பதையே பின்பற்றுவான்.

"கிரீஷ் கோஷ் எங்கே? வேண்டாம். அவரைத் தொந்திரவு படுத்த வேண்டாம். அவர் நேற்றிரவு உறங்கவில்லை."

குருதேவர்: "சரி, யான் சமாதியிலிருக்கும்போது அபின் கஷாயம் குடித்தது போல வெறிகொண்டிருப்பதாக உணர்கிறேன். அதைப்பற்றி நீர் என்ன சொல்லுவீரோ?"

டாக்டர் (ம—விடம்) : "அந்நிலையில் நரம்புத் தானங்கள் தொழில் செய்யாது நின்றுவிடுகின்றன, இதனால் உறுப்புகள் மரத்துப் போகின்றன, மேலும், சக்தியெல்லாம் மூளையை நோக்கிப் பாய்தலின், கால்கள் தள்ளாடுகின்றன. பிடரியிலே 'நீள மூளை'யெனும் நரம்புத்தானம் ஒன்று உள்ளது; அதற்குத் தீங்கு உண்டாகும்போது, ஒருவன் இறக்கலாம்."

மகிமா சக்கரவர்த்தி குண்டலினியை வருணிக்கத் தொடங்கினர். அவர் சொன்னதாவது : "சுழுமுனை நாடி முதுகெலும்புக்குள் இருக்கும் கயிறு போன்ற நரம்பிற்குள்ளே அது வழியாக நுட்பமான வடிவிலே ஓடுகின்றது. எவரும் அதைக் காண இயலாது. இதுவே சிவபெருமானது திருவார்த்தை."

டாக்டர் : "சிவபெருமான் மனிதனை அவனது முதிர்பருவத்தில் மட்டும் பரிசோதித்தார். ஆனால் ஐரோப்பியர்களோ கருவாயிருந்த காலமுதல் முதிர் பருவம் வரையுள்ள மனித வாழ்க்கை நிலைகள் எல்லாவற்றிலும் அவனைச் சோதித்துள்ளனர். பல நாட்டுச் சரிதங்களை ஒப்பிட்டுப் பார்த்து அறிவது நன்று. 'சாந்தால்' ஜாதியாரின் வரலாற்றினின்றும், காளி ஒரு சாந்தால் மங்கையென்பதை அறிகிறோம். அவள் வீரத்தோடு போர் புரிபவளாயிருந்தாள்," (அனைவரும் சிரித்தல்)

"தயவு செய்து சிரிக்காதீர், உடற் கூறுகளை ஒப்பிட்டுப் படித்தலினால் மனிதர் எவ்வளவு பெரும்பயனை அடைந்திருக்கின்றனர் என்பதை நான் உங்கட்குக் கூறுகிறேன். கனைய நீர் பித்த நீர் என்னும் இரண்டு நீர்களின் செயல் கட்கும் உள்ள வேறுபாடு முதலில் தெரியாதிருந்தது. ஆனால் பிற்காலத்தில் கிளாட் பெர்நார்டு என்பவர் ஒரு முயலின் வயிறு, கல்லீரல் இன்னும் மற்ற உறுப்புகள் இவற்றை ஆராய்ந்து, பித்த நீரின் தொழிலுக்கும் கணை நீரின் தொழிலுக்கும் வேறுபாடு உள்ளது என்பதை மெய்ப்பித்தனர். ஆதலால் தாழ்ந்த மிருகங்களையும் கவனித்தல் வேண்டும் என்பது அறிவிற்குப் பொருத்தமானதே. மனிதனைப்பற்றி மட்டும் கற்றல் போதுமானதன்று.

"இதுபோன்று, மதங்களை ஒப்பிட்டுப் படித்தலும் பெரும்பயனைத் தரக் கூடியதாகும்.

"அவருடைய (குருதேவருடைய) மொழிகள் நமது நெஞ்சிற்குள் நேரே புகுவானேன் ? அவர் பற்பல மதங்களின் உண்மைகளையும் அனுபூதியால் உணர்ந்துள்ளனர். இந்து கிறிஸ்தவ மகம்மதிய சாக்த வைஷ்ணவ சமயங்களுக்குரிய சாதனங்களை அவரே பழகியிருக்கின்றனர். தேனீக்கள் பற்பல மலர்களினின்றும் மதுவைச் சேர்த்தால்தான் நல்ல தேனை உண்டாக்கக் கூடும்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரைப் பாடும்படி வேண்டினர். நரேந்திரர் பின் வருமாறு பாடினர் :

மன்னர்க் கரசே எனக்குன்னை மகிழ்ந்தே காட்டி யருளுதியால்
நீன்பாற் கருணை இரந்திடுவேன் நின்னைக் கென்மீ துய்த்திடுக.

துன்னுஞ் செந்தீ யூலையென்னுந் தொன்மைப் பூமி தனில்வெந்தே
என்வாழ் வீணாநான் சமர்ப்பித்தேன் ஈசா நின்தா மரையடியே.
அந்தோ எனது நெஞ்சமதில் ஆழ்ந்து பாவம் பதிந்துளதால்
பந்த மாயை வலைப்பட்டுப் பாரில் இறந்தேன் போலானேன்.
அந்த முறுமென் ஆருயிரே அருள்மா மேக நாயகனே
பிந்தா துன்றன் அருளமுதால் பிழைக்கச் செய்வாய் பெருமானே

குருதேவர்: "அந்தப்பாட்டையும்—'இருப்பதெல்லரம் நீயே' என்னும் பாட்டையும் பாடுக"

டாக்டர்: "ஆ!"

நரேந்திரர் அப் பாட்டைப் பாடினர்.

பாடல் முடிந்தது. டாக்டர் சர்க்கார் கிட்டத்தட்ட மந்திரத்தாற் கட்டுண்டவரைப்போன்று அங்கே உட்கார்ந்திருந்தார். சிறிது நேரஞ் சென்ற பின், கைகளைக் கட்டிக்கொண்டு மிகத் தாழ்மையாக அவர் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் "இப்போது விடைபெற எனக்கு அனுமதி தாருங்கள். நான் நாளை மறுபடியும் வருவேன்."

டாக்டர் சர்க்கார் விடைபெற்றுச் சென்றார். அப்போது மாலை வேளை. பௌர்ணமிக்கு அடுத்த நாள் இரவு. ஸ்ரீ ராமகிருஷ்ணர் எழுந்து நின்று சமாதியில் ஆழ்ந்தார். நித்திய கோபாலர் பயபக்தியோடு அவரருகே நின்றார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆதனத்தில் அமர்ந்தார். நித்திய கோபால் அவருடைய திருவடிகளைத் தடவிக்கொண்டிருந்தார். தேவேந்திரரும் காளிபாதரும் இன்னும் பல அடியார்களும் அவரது பக்கத்தில் அமர்ந்திருந்தனர்.

இளைஞர்களில் ஒரு சிலர் குருதேவர்க்கு வேண்டிய சிகிச்சையை அவரவர்க்குரிய முறைப்படி செய்தற்காக அங்கே தங்கவேண்டுமென ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ம— என்பவரும் இரவை அங்கே கழிப்பதாயிருந்தார்.

ஞாயிறு, அக்டோர் 25, 1885

காலையில் ஏறக்குறைய ஆறரை மணி; அப்போது ம— சியாம்புகூருக்கு வந்து சேர்ந்து, ஸ்ரீராமகிருஷ்ணரிடம் அவருடைய நலத்தைப்பற்றி விசாரித்தார். குருதேவரது நிலைமையைப்பற்றி டாக்டர் சர்க்காரிடம் தெரிவிப்பதற்காக அவர் போய்க்கொண்டிருந்தார். குருதேவர் ம— விடம் "அதிகாலை வேளையில் எனது வாயில் நீர் நிறைய ஊறுகிறது என்றும், அதனால் எனக்கு இருமல் உண்டாகிறதென்றும் டாக்டரிடம் சொல்லும். நான் நீராடலாமா என்பதைப்பற்றியும் அவரிடம் கேளும்" என்று கூறினர்.

ஏழு மணிக்குப்பின் ம— டாக்டர் சர்க்காருடைய வீட்டுக்கு வந்து, குருதேவரது நிலைமையைப்பற்றி அவரிடம் கூறினர். மருத்துவரின் பழைய ஆசிரியரும், இன்னும் ஒன்றிரண்டு நண்பர்களும் அறையில் இருந்தனர். டாக்டர் சர்க்கார் தமது ஆசிரியரிடம், "காலை மூன்று மணிமுதல், ஐயன்மீர், நான்

பரமஹம்சரைப்பற்றியே நினைத்துக்கொண்டிருக்கிறேன். எனக்குத் தூக்கமே வரவில்லை. இப்போதும் அவர் என் உள்ளத்தில் இருக்கின்றனர்.'' என்று சொன்னர்.

டாக்டருடைய நண்பர்களில் ஒருவர் அவரிடம் ''சிலர் பரமஹம்சரை பகவானது அவதாரம் என்று சொல்வதாக யான் கேள்விப்படுகிறேன். நீர் அவரைத் தினமும் பார்த்து வருகிறீர். அதைப்பற்றி உமக்கு என்ன தோன்று கிறது?''

டாக்டர்: ''மனிதரான நிலையில் அவரிடம் மிக உயர்ந்த மதிப்புள்ளவ னாகிறேன்.''

ம— (டாக்டருடைய நண்பரிடம்): ''டாக்டர் சர்க்கார் அவர்க்கு வைத்தி யம் பார்த்து வருவது அவரிடம் வைத்துள்ள மிக்க அன்பைக் காட்டுகிறது.''

டாக்டர்: ''அன்பா? அதற்கு என்ன அர்த்தம்?''

ம—: ''அவர் மீதன்று. நம்மீது.''

டாக்டர்: ''பரமஹம்சர் காரணமாக எனக்கு உண்டாகும் உண்மை யான நஷ்டத்தை நீர் அறியீர். பாரும், ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று நோயாளிகளைப் போய்ப் பார்க்கத் தவறிவிடுகிறேன். மறுநாள் நானக அவர் களுடைய விடுகட்குச் செல்லும்போது, அவர்கள் அழையாமலே நான் பார்க்கப் போதலால், அவர்களிடமிருந்து பணம் எதையும் ஏற்க முடியாது. நான் போய்ப் பார்ப்பதற்காக அவர்களிடம் கட்டணம் எப்படிப் பெறமுடியும்?''

ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் போய்ப்பார்த்து வரும்படி டாக்டரை 'ம' வேண்டிக் கொண்டு, வீடு திரும்பினர்.

மாலையில் சுமார் மூன்று மணிக்கு ம— குருதேவரிடம் வந்து, தமக்கும் டாக்டர் சர்க்கார்க்கும் நடந்த சம்பாஷணையை ஒப்பித்தார்,

ம—: ''காலை மூன்று மணிக்கே அவர் விழித்தெழுந்ததாகவும், அது முதல் தங்களையே நினைத்துக்கொண்டிருந்ததாகவும் அவர் என்னிடம்சொன்னர். நான் அவரைக் கண்டபோது மணி எட்டு. 'இப்போதும் பரமஹம்சரது நினைவு மனதில் உள்ளது' என்று அவர் என்னிடம் கூறினர்.''

குருதேவர் (சிரித்துக்கொண்டே): ''பாரும், அவரோ ஆங்கிலம் கற்றுள் ளார். என்மீது தியானிக்கும்படி யான் அவரைக் கேட்டுக்கொள்ளலாமா? ஆயினும் அவர் தாமாகவே அவ்வாறு செய்து வருகின்றனர்,''

ம—: ''அவர் தங்களைப்பற்றிப் பேசும்போது 'மனிதரான நிலையில் அவரிடம் மிக உயர்ந்த மதிப்புள்ளவனாகிறேன்' என்றும் கூறினர்.''

குருதேவர்: ''வேறு எதையேனும் பற்றிப் பேசினரா?''

ம—: ''நான் அவரிடம் 'நோயாளியைப்பற்றி நீர் என்ன யோசனை இன்று கூறப்போகிறீர்?' என்று கேட்டேன். அவர் 'யோசனையா? அதுஒழி யட்டும்! நானே மறுபடியும் அவரிடம் போகவேண்டியிருக்கும். வேறு என்ன யோசனை சொல்வது?' என்றார். (ஸ்ரீராமகிருஷ்ணர் சிரிக்கிறார்) மேலும் அவர்

ஒவ்வொரு நாளும், எனக்கு எவ்வளவு பணம் நஷ்டம் என்பது உமக்குத் தெரியாது. தினமும் இரண்டு மூன்று பேர்களைப் போய்ப் பார்க்கத் தவறி விடுகிறது' என்றார்."

நரேந்திரநாதர் உள்பட அறையில் பல அடியார்கள் இருந்தனர். விஜய கிருஷ்ணகோசுவாமி வந்தார். குருதேவரது திருவடியைத் தொட்டுப் பக்தி யோடு தலையில் தூளை அணிந்துகொண்டார். சில பிராம்மோ அடியார்களும் அவரோடு வந்தனர். விஜயர் பிரம்ம சமாஜத்தோடு தமக்கு இருந்த சம்பந் தத்தை அறுத்துவிட்டு, சுதந்திரமாக ஞான சாதனம் பழகிக்கொண்டிருந்தார். அவரது பக்தி சிரத்தை காரணமாக ஸ்ரீராமகிருஷ்ணர் அவர்மீது மிகப் பிரியமா யிருந்தார். விஜயர் குருதேவரது சீடராகாவிடினும் அவரிடம் மிக்க மரியாதை காட்டி வந்தார். அவர் 'டாக்கா'வில் வெகு காலம் வசித்திருந்தார். சமீப காலத்திற்குமுன் வட இந்தியாவில் பல புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித் திருந்தார்.

மஹிமா சக்கரவர்த்தி (விஜயரிடம்) : "ஐய, பல தூய ஸ்தலங்களை யும் புதிய நாடுகளையும் தாங்கள் பார்த்து வந்திருக்கிறீர்கள். தங்களுடைய அனுபவங்களிற் சிலவற்றைத் தயவு செய்து எமக்குச் சொல்வீர்களாக."

விஜயர்: "யான் என்ன சொல்வது? நாம் இப்போது அமர்ந்திருக் கும் இவ்விடத்திலேயே எல்லாம் உள்ளன என்பதை நான் உணர்கிறேன். இந்த அலைச்சலாற் பயனில்லை. வேறிடங்களில் நான் பார்த்ததெல்லாம் அவரிடத்து (குருதேவரிடத்து என்ற பொருளில்) உள்ளதில் ஐம்பதில் ஒரு பங்கோ, இருபதில் ஒரு பங்கோ, மிஞ்சினால் நாலில் ஒரு பங்கோதான். இங்கு மட்டுந்தான் இறைவனின் முழுப்பிரகாசத்தையும் (நூறில் நூறு பங்கும்) நான் காண்கிறேன்."

மஹிமர்: "ஐய, நீர் கூறுவது சரியே. இன்னும் அவரே (குருதேவரே) நம்மை அலையும்படிக்கோ, ஓரிடத்தே அமர்ந்திருக்கும்படிக்கோ செய்கிறார் என்பேன்."

குருதேவர் (நரேந்திரரிடம்) : "விஜயரின் மனம் எவ்வளவு மாறிவிட்டது என்பதைக் காண்க. அவர் முற்றிலும் வேறுபட்ட ஒருவராய்விட்டார். வற்றக் காய்ச்சியதால் தண்ணீர் முழுதும் அற்றதாய குழம்புப் பால்போல அவர் உள்ளார். பார்த்தாயா, ஒருவரது கழுத்தையும் நெற்றியையும் பார்த்து, அவரைப் பரமஹம்சரென யான் கண்டுபிடித்துவிட இயலும். ஆம், எனக்கு ஒரு பரமஹம்சரைக் கண்டுபிடிக்க முடியும்."

மஹிமர் (விஜயரிடம்) : "ஐயன்மீர், நீர் இப்போது குறைவாகச் சாப் பிடுவதுபோல் தோன்றுகிறது. அது அப்படித்தானே?"

விஜயர் : "ஒருக்கால் அது சரியாயிருக்கும். (குருதேவரை நோக்கி) தங் களது நோயைப்பற்றிக் கேள்விப்பட்டு, தங்களைக் காண வந்துள்ளேன். இன்னும், டாக்காவிலே—"

குருதேவர்: "டாக்காவைப்பற்றி என்ன?"

விஜயர் பதில் சொல்லாது, சிறிது நேரம் மௌனமாயிருந்தார்.

விஜயர்: "அவர் (குருதேவர் என்ற பொருளில்) தம்மைத் தாமே வெளிக் காட்டினாலொழிய அவரை அறிதல் அரிது. இங்கு மட்டுமே நூறுக்கு நூறு இறைவனது பிரகாசம் உள்ளது."

குருதேவர்: "அன்று கேதார் 'வேறிடங்களில் நமக்கு உண்ணுதற்கு ஒன்றும் கிடைப்பதில்லை; ஆனால் இங்கேயோ நமக்கு வயிறு நிரம்பக் கிடைக்கிறது!' என்றனர்."

மஹிமர்: "வயிறு நிரம்புதற்கு மட்டும் என்பானேன்? அது வயிறு நிரம்பி வழிகிறது."

விஜயர் (குருதேவரிடம் கை கட்டிக்கொண்டு): "தாங்கள் இன்னார் என்பதை நான் இப்போது உணர்ந்துவிட்டேன். தாங்கள் எனக்குச் சொல்ல வேண்டியதில்லை."

குருதேவர் (ஆனந்த பரவசநிலையில்): "அவ்வாறாயின், அப்படியாகுக!"

விஜயர்: "ஆம், நான் அறிந்துவிட்டேன்" என்று சொல்லிக்கொண்டே குருதேவர் முன்பு வீழ்ந்து வணங்கினர். அவர் குருதேவருடைய திருவடிகளைத் தமது மார்பின்மீது வைத்து அவற்றைப் பற்றிக்கொண்டார். குருதேவர் சித்திரம்போன்று, அசையாது ஆழ்ந்த சமாதியில் அமர்ந்தார். அடியார்கள் இக்காட்சியால் தமது உணர்ச்சிகளைத் தாங்க இயலாதவரானர். சிலர் கண்ணீர் சொரிந்தனர், சிலர் பக்திப் பாடல்களைப் பாடினர். எல்லோரும் ஸ்ரீராம கிருஷ்ணரை வைத்த கண் வாங்காது நோக்கிக்கொண்டிருந்தனர். அவர்கள் தங்கள் தங்களது ஞானப்பக்குவத்திற்கு ஏற்றவாறு பலவாறுக அவரைக் காணலானர்; ஒரு சிலர் அவரைப் பரம பக்திமான் என்றும், வேறு சிலர் அவரைச் சாது என்றும், இன்னும் சிலர் அவதார புருடர் என்றும் கருதலானர்.

மஹிமா சரண் கண்ணீரைப் பெருக்கிக்கொண்டே "பாரும், பாரும், இப் பிரேமை வடிவினை" என்று தொடங்கும் பாடலைப் பாடினர்.

இடையிடையே அவர் பிரம்மானுபவத்தைக் கணப்பொழுது பெற்றவர் போன்று இவ்வாறு பாடினர்:

'துரியம், ஸச்சிதானந்தம், துவைத அத்வைத விவர்ஜிதம்' (ஏகம் அநேகம் இரண்டையும் கடந்தது).

நவகோபாலர் அழுதுகொண்டிருந்தார். பூபதி பாடியதாவது:

போற்றி அபார பரப்பிரம்ம புகலும் அகாதப் பொருளானாய்
சாற்றும் பரத்திற் பரமானாய் சாரப் பொருளிற் சாரமுமீ
ஊற்றே யானாயாய் பிரேமையினுக் குண்மை யென்னும் ஒளியாவாய்
ஏற்றம் பெறும்பே ரின்பத்தின் இயல்பாம் மூல ஆதரவே.

நானா விதமாம் மங்களமும் நல்ல ரசமும் சேருலகம்
ஆனா நின்னுள் உதித்திடும்ஓர் அரிய கவியாம்; அதன்முழகு

தானு வழியும் திசையெங்கும், சகத்தில் ஆதி மாகவீநீ;
பானு சசிவிண் எழில்மறைதல் பகர்நின் உள்ளப் பாட்டினிலே.

ஊன மில்லா முழுநீல உடையில் அமைத்த நன்மணிபோல்
வானத் தொளிரும் உடுக்கணம்நின் மகிமை வரையும் எழுத்தேயாம்
ஆன பருவம் ஆறுகொண்ட ஆண்டும் மகிழ்சேர் நிலத்தினெடும்
கானஞ் செய்யும் நின்புகழைக் காலமுள் ளளவும் பரம்பொருளே.

பூவின் வண்ணம் விளக்கிடும்நின் பொருவொன் றில்லா எழில்வளத்தை
மேவும் பெருநீர் அமைதியும்நின் வியனுர் ஆழ்ந்த அடக்கமதை
யாவும் வெருவும் இடியேறுன் எஞ்சா ஆணை விளைபயத்தை
பாவும் ஆழ்ந்த நின்னுண்மை பாழ்த்த உள்ளம் அறிந்திடுமோ ?

விந்தை மூழ்கி யுகமுழுதும் விரும்பி யுள்ளம் தியானிக்கும்
வந்தித் திடுவர் ஆனந்த வயப்பட் டெண்ணில் சூரியரும்.
எந்தா யுன்னைச் சந்திரரும் எழிலார் விண்மீன் கோடியுமே
நந்தாப் படைப்பைக் காணுமக்கள் நயனம் பொழியும் இன்பமழை.

எங்கும் பரந்த மெய்ப்பொருளே ஏத்துவர் நின்னைத் தேவர்கணம்
தங்கும் நன்மைக் களஞ்சியமே; தருவாய் எமக்கே மெய்ஞ்ஞானம்
பொங்கும் பிரேமை மெய்யன்பு பூர்ண சாந்தி அருளெமக்கே
எங்கட் கீவாய் அடைக்கலம்நின் இணையார் புனிதத் திருவடிக்கே.

நீண்ட நேரங் கழிந்தபின் ஸ்ரீ ராமகிருஷ்ணர் உலக நினைவு மீளப்பெற்றார்.

குருதேவர்(ம—இடம்): "அந்த ஆவேச நிலையில் ஏதோ ஒன்று என்னிடம் நிகழ்கிறது. இப்போது என்னைப்பற்றி யானே வெட்கப்படுகிறேன், அந்நிலையில் என்னை ஒரு பேய் பிடித்து ஆட்டுவதுபோல உணர்கிறேன், யான் எனது சொரூபமே இல்லாதவனுகிறேன். அந்நிலையிலிருந்து கீழே இறங்கும்போது எனக்குச் சரியாக எண்ணவும் முடிவதில்லை. எண்ண முயலும்போது 'ஒன்று, ஏழு, எட்டு' என்பது போன்று வேறு எதையேனும் சொல்லுகிறேன்."

நரேந்திரர்: "அதன் காரணம், எல்லாம் ஒன்றுய் இருப்பதே."

குருதேவர்: "அன்று, அது ஒன்றையும் இரண்டையும் கடந்தது."

மஹிமர்: "ஆம்; தாங்கள் கூறுவது சரியே; 'துவைத அத்வைத விவர்ஜிதம்' (ஒன்றுமன்று, இரண்டுமன்று)"

குருதேவர்: "அங்கே அறிவு கருகி வீழ்ந்துவிடுகிறது. ஈசனைப் பாணி டித்தியத்தால் உணர முடியாது. வேதங்கள், புராணங்கள், தந்திரங்கள் ஆகிய சாஸ்திரங்கட்கு அவர் அப்பாற்பட்டவர்."

சம்பாஷணை இவ்வாறு நடந்துகொண்டிருக்கும்போது, டாக்டர் சர்க்கார் அறைக்குட் புகுந்து ஆசனத்தில் அமர்ந்தார். அவர் குருதேவரைப் பார்த்து 'தங்கட்குச் சளி பிடிக்குமோ என்ற பெருங் கவலையால் யான் இன்று காலை மூன்று மணிக்கே விழித்துவிட்டேன். அம்மட்டோ! தங்களைப் பற்றி இன்னும் பலவாறு நினைத்தேன்' என்றனர்.

குருதேவர்: "யான் இருமிக்கொண்டிருக்கிறேன்; எனது தொண்டை புண்ணுகிவிட்டது. இன்று அதிகாலையில் என் வாயில் ஜலம் நிறைய ஊறிற்று. என் உடல் முழுதும் வலி உள்ளது."

டாக்டர்: "இன்று காலை அதைப்பற்றியெல்லாம் கேள்விப்பட்டேன்."

மகிமாசரண் தேசத்தின் பல இடங்கட்கும் தாம் போயிருந்ததைப்பற்றிக் கூறி, இலங்கையில் எவனும் சிரித்ததில்லை என்று உரைத்தார். டாக்டர் சர்க்கார் "அது அப்படியே உண்மையாய் இருக்கலாம். ஆனலும் நான் அதைத் தீர ஆராயவேண்டியிருக்கும்" என்றனர். (அனைவரும் சிரிக்கின்றனர்)

சம்பாஷணை வாழ்க்கைக்குரிய கடமைகளைப்பற்றியதாக மாறிற்று.

குருதேவர்(டாக்டரிடம்): "ஒரு மருத்துவனின் கடமை மிக உயர்ந்ததெனப் பலர் நினைக்கின்றனர். மருத்துவன் தன் நோயாளிகட்கு இலவசமாகவும், தயையாலும், அவர்களது துயரத்தால் மனமிரங்கியும் மருந்து கொடுப்பானுயின், அவன் உயர்ந்த மனிதன் என்பதில் ஐயமில்லை. அப்போதுதான் அவனது தொழிலை மிக மேன்மையுற்றது எனச் சொல்லலாம். ஆனல், ஒரு மருத்துவன் தனது தொழிலைப் பணத்திற்காக நடத்தி வருவானுயின், அவன் கொடுமையுள்ளவனுய் இரக்கமற்றவனுய் மாறிவிடுவான்."

டாக்டர்: "தாங்கள் கூறுவது சரியே. அம்மன நிலையோடு ஒரு மருத்துவன் தனது கடமைகளைச் செய்வானுயின் அது தவறு என்பதில் சந்தேகமில்லை. ஆனல் உங்கள்முன் என்னைப்பற்றிப் பெருமையாகக் கூற விருப்பமில்லை."

குருதேவர்: "ஆனல் மருத்துவன் பிறரது நன்மைக்கென்றே சுயநலமின்றித் தன்னை ஈடுபடுத்திக் கொள்வானுயின், மருத்துவத் தொழில் மிக மேன்மையானது என்பது நிச்சயந்தான்.

"இல்லறத்தானது தொழில் எதுவாயினும், இடையிடையே சாதுக்களின் மத்தியில் வாழ்தல் அவனுக்கு அவசியம். ஒரு மனிதனிடம் பக்தி இருப்பின், அவனே சாது சங்கத்தை (நல்லார் இணக்கத்தை) நாடுவான்."

அன்று யாரேனும் பாடுவார்களோ என்று டாக்டர் சர்க்கார் விசாரித்தார்.

குருதேவர் (நரேந்திரரிடம்): "நீ ஏன் சிறிது பாடக்கூடாது?"

நரேந்திரர் பாடலானுர்:

அன்னுய்நீ எனைப்பித்த னுக்கிடுக அன்பால்;
அவசியமோ ஞானமும்வி சாரணையும் எனக்கே?
உன்னன்பாம் மதுவூட்டி உயர்வெறிய னுக்கு;
உண்மையடி யாருளத்தை உணர்த்தாதே கவர்வோய்!

ஆரன்புக் கடலிலெனை ஆழ்த்தியமிழ்த் திடுக;
அந்தோஇவ் வுலகமுற்றும் அறிவிழந்தார்க் கில்லம்!
பேரின்பத் தாற்குனிப்பார், பிறர்விழிநீர் சொரிவார்;
பெருங்களிப்பி னுற்சிரிப்பர் பின்னுமொரு சாரார்.

புத்தர்பிரான் கௌராங்கர் புகழ்ஏசு மோஸஸ்
புதுப்பிரேமை மதுமாந்திப் போதையினிற் கிடந்தார்;
மெத்துமிந்தப் பித்தர்குழு மேவியுளம் மகிழும்
மேன்மைவரம் யான்பெறுவ தெந்நாளோ அன்னாய்!

அடியார்களிடத்தே ஒரு புதுமையான மாறுதல் தோன்றலாயிற்று. பாவனை சமாதியில் (பிரேமையால் வரும் சமாதியில்) ஆழ்ந்தவர்போல, அவர்கள் அனை வரும் பைத்தியங்கொண்டனர். பண்டிதர் தமது பாண்டித்தியப் பெருமையை மறந்து எழுந்து நின்று,

'அன்னாய் நீ எனைப்பித்த னாக்கிடுக அன்பால்
அவசியமோ ஞானமும்வி சாரணையும் எனக்கே?'

என்று கத்தலானார்.

இத் தெய்விக ஆவேசத்தின் வசப்பட்டு முதன்முதலாக எழுந்து நின்ற வர் விஜயரே, பிறகு ஸ்ரீ ராமகிருஷ்ணரும் தமது வேதனைமிக்க ஆபத்தான நோயைப்பற்றிய அனைத்தையும் மறந்தவராய்க் கிளம்பினர். அவர் முன்பே அமர்ந்திருந்த டாக்டரும் எழுந்து நின்றனர். நோயாளியும் மருத்துவரும், இருவரும் நரேந்திரரது சங்கீதத்தால் மயங்கித் தம்மை மறக்கலானார். இளைய நரேனும் லாட்டுவும் சமாதியில் ஆழ்ந்தார். அந்த அறையின் ஆகாசமே மின் சார சக்தி நிறைந்ததாயிற்று. ஒவ்வொருவரும் தெய்வ சாந்நித்யத்தை உணர்ந் தனர். புகழ்பெற்ற விஞ்ஞானியான டாக்டர் சர்க்காரும் இப் புதுமைக் காட் சியைக் கூர்ந்து நோக்கியவராய் மூச்சின்றி நின்றார். சமாதியிற் புகுந்த அடி யார்கள் புற உலகைச் சற்றும் உணராதவரானார். அனைவரும் அசைவற்றுத் தூக்கப்பட்டவர் போல் நின்றனர். சிறிது நேரத்திற்குப்பின் நினைவு உலகிற் குக் கீழிறங்கியதும், அவர்களிற் சிலர் சிரித்தனர், சிலர் அழுதனர், அயலான் ஒருவன் அவ்வறைக்குட் புகுந்திருப்பானையின், அங்கே குடிகாரர் பலர் கூடி யிருந்ததாகவே எண்ணியிருப்பான்.

சிறிது பொழுது கழிந்ததும், அடியார்கள் தமது ஆசனங்களில் அமரலும், ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது சம்பாஷணையை மீண்டும் தொடங்கினர். அப்போது ஏறக்குறைய மாலை எட்டு மணியாயிற்று.

குருதேவர்: "பாவனை சமாதியின் பயனை நீங்கள் இப்போதுதான் கவனித்துள்ளீர்கள். உமது 'விஞ்ஞானம்' அதைப்பற்றி என்ன கூறுகிறது? அது வெறும் ஏமாற்று என்று நினைக்கிறீரா?"

டாக்டர் (குருதேவரிடம்): "அத்தனை மனிதர் அதனை அனுபவித்துள்ள போது அதை இயல்பானதென்றே நான் சொல்லவேண்டும். அது ஏமாற்று யிருக்க முடியாது. (நரேந்திரரிடம்) நீ

'அன்னாய் நீ எனைப்பித்தன் ஆக்கிடுக அன்பால்
அவசியமோ ஞானமும்வி சாரணையும் எனக்கே?'

என்னும் அடிகளைப் பாடியபோது, என்னால் என்னை அடக்க முடியவில்லை. நான் குதித்தெழுந்து நிற்கும் தருவாயில் இருந்தேன். மிக்க சிரமத்தோடு எனது உள்ளக் கிளர்ச்சியை யான் அடக்கினேன். 'யான் என் உணர்ச்சி வேகத்தை வெளிக்காட்டக் கூடாது' என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன்."

குருதேவர் (புன்சிரிப்போடு டாக்டரிடம்): "சுமேரு மலையைப்போன்று நீர் அசைக்க முடியாதவராய் சலியாது இருக்கின்றீர். நீர் மிக ஆழ்ந்த மனப் பான்மையுடையீர். ஒரு யானை ஒரு சிறு குட்டையுட் புகுமாயின், எல்லாப் பக்கங்களிலும் நீர்த்துளி சிதறப்படும். ஆனால் அது ஒரு பெரும் ஏரிக்குள் மூழ்கும்போது, அவ்வாறு நிகழ்வதில்லை; எவரும் அதைக் கவனிப்பதில்லை."

டாக்டர்: "எவரும் உங்களைப் பேச்சில் தோற்கடிக்க முடியாது." (சிரிப்பு)

சம்பாஷணை வேறு விஷயங்களை நோக்கித் திரும்பியது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் தக்ஷிணேசுவரத்தில் தாம்பெற்ற சமாதிவகைகளைப் பற்றி டாக்டரிடம் வருணிக்கலானார். சினம் காமம் முதலிய பகைகளை அடக்கும் வழியையும் அவர்க்குக் கூறினர்.

டாக்டர்: "தாங்கள் ஒரு சமயம் சமாதியால் மெய்ம்மறந்து தரைமீது கிடந்தபோது, ஒரு தீயோன் தனது செருப்புக் காலால் தங்களை உதைந்ததாக யான் கதை கேட்டதுண்டு."

குருதேவர்: "ம—விடமிருந்து நீர் அதைக் கேட்டிருக்கவேண்டும். அந்த மனிதன் காளி கட்டத்துக் காளிகோயிலில் உள்ள ஒரு பூசாரியாகிய சந்திர ஹால்தார் என்பவனே. அவன் மதுரபாபுவின் மாளிகைக்கு அடிக்கடி வருவதுண்டு. ஒரு நாள் பாவனைசமாதி நிலையில் தரைமீது கிடக்கலானேன். அறை இருட்டாயிருந்தது. மதுரரின் தயவைப் பெறுதற்காக யான் அந்நிலையிலிருப்பதாக நடித்தேன் எனச் சந்திர ஹால்தார் நினைத்தான். அவன் அறைக்குட் புகுந்து, தனது செருப்புக்காலால் என்னைப் பலமுறை உதைந்தான். அதனால் என் உடலில் கருந்தடங்கள் உண்டாயின. அதைப்பற்றி மதுரபாபுவிடம் சொல்ல ஒவ்வொருவரும் விரும்பினர். ஆனால் யான் அதைத் தடுத்து விட்டேன்."

டாக்டர்: "இதுவும் ஈசனது சங்கற்பத்தால் நிகழ்ந்ததே. கோபத்தை அடக்கி மன்னிக்கப்பழகும் வகையை மக்கட்குத் தாங்கள் இதனால் போதித்தீர்கள்."

இதற்கிடையில் மற்ற அடியார்களோடு சம்பாஷிப்பதில் விஜயர் ஈடுபட்டிருந்தார்.

விஜயர்: "யாரோ ஒருவர் எப்போதும் என்னோடு நடந்துகொண்டிருப்பதுபோல உணர்கிறேன். தூரத்தில் நிகழ்வதைக்கூட அவர் எனக்குக் காட்டியருள்கிறார்."

நரேந்திரர்: "பக்கத்திருந்து பாதுகாக்கும் தேவதையைப்போல."

விஜயர்: "டாக்காவிலே யான் அவரை (குருதேவரை)த் தரிசித்துளேன். நான் அவரது உடலையும் தொட்டுள்ளேன்."

குருதேவர் (புன்சிரிப்போடு): "அவர் வேறொருவராயிருந்திருத்தல் வேண்டும்."

நரேந்திரர்: "யானும் அவரைப் பலமுறை தரிசித்துளேன். (விஜயரிடம்) உமது வார்த்தையில் நம்பிக்கை எனக்கு இல்லை என்று யான் எப்படிச் சொல்ல முடியும்?"

செவ்வாய் அக்டோபர் 27, 1885

மாலையில் ஐந்தரை மணி, டாக்டர் சர்க்கார் சியாம்புகூரிலே குருதேவரது அறைக்கு வந்தார். அவரது நாடியின் நிலையை உணர்ந்தார். அவசியமான மருந்தையும் விதித்தார். நரேந்திரர், கிரீஷ், டாக்டர் துக்காரி, இளைய நரேன், ராக்கால், ம—, ஸரத், சியாம்பாஸு முதலான பல அடியார்கள் இருந்தனர்.

டாக்டர் சர்க்கார் குருதேவரது நோயைப்பற்றி ஒரு சிறிது பேசினார்; முதல்வேளை மருந்தை அவர் உண்பதைக் கவனித்தார், பின் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சியாம்பாஸு என்பவரோடு பேசத் தொடங்கினர். டாக்டர் சர்க்கார் "தாங்கள் சியாம்பாஸுவோடு பேசிக்கொண்டிருத்தலின், யான் உங்களிடம்விடை பெற்றுக்கொள்கிறேன்" என்று உரைத்துக்கொண்டே புறப்படத் தொடங்கினர்.

குருதேவரும் ஓர் அடியாரும் டாக்டரிடம் 'சில பாடல்களைப் பாடிக் கேட்க விருப்பமா?' என்று விசாரித்தார்.

டாக்டர் சர்க்கார் (குருதேவரிடம்): "எனக்கு அது மெத்தப் பிரியந் தான். ஆனால் சங்கீதம் கேட்டதும் நீங்கள் ஆட்டுக் குட்டியைப்போலத் துள்ளிக் குதிக்கிறீர்கள். பலவித ஆட்டங்களையும் தொடங்கிவிடுகிறீர்கள். உங்களது உணர்ச்சியை அடக்குதல் உங்கட்கு அவசியம்."

டாக்டர் சர்க்கார் மறுமுறை ஆசனத்தில் அமர்ந்தார். நரேந்திரர், தம்பூர் மிருதங்கம் ஒலிக்க, இனிய குரலிலே பாட ஆரம்பித்தனர்:

"அடரிருளில் அன்னையின் அருவுளழில் ஜொலிப்பதனால்
இருண்டமலைக் குகையினிலே இருந்தவத்தோர் தியானிப்பார்;
கரையொழிந்த இருள்மடியில் நிருவாணப் பேரலைமேல்
தவழ்ந்துவரும் சாந்திவெள்ளம் வற்றாதே பெருகிடுமால்,

இருளாடை புனைந்தவளாய் பாழ்வடிவந் தரித்தவளாய்
சமாதியெனும் கோயிலின்கண் தனித்துறையும் நீயாரோ?
அபயவடிக் கமலமிசை ஆர்வமின்னல் ஒளிபொழியும்
சின்மயமாம் முகத்திலெழும் உரத்தகுரற் கோரதகை."

டாக்டர் சர்க்கார் ம—விடம் "இப்பாட்டு அவர்க்கு ஆபத்தாகும்" என்றார். டாக்டர் யாது கூறினர் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் ம—வைக் கேட்டனர்; "இப்

பாடல் தங்களது மனத்தைச் சமாதியில் ஆழ்த்துமோ என்று இந்த டாக்டர் அஞ்சினர்" என்று ம—பதிலளித்தார்.

இதற்கிடையில் குருதேவர் புறவுலக உணர்வை ஒருவாறு இழக்கலானர். மருத்துவரைப் பார்த்து அவர் கைகளைக் கட்டிக்கொண்டவராய், 'இல்லை, இல்லை, நான் ஏன் சமாதியில் அழுந்தவேண்டும்?" என்றனர். இவ்வார்த்தை களைக் கூறி முடித்ததும் அவர் ஈசுவர ஆவேச நிலையில் ஆழ்ந்துவிடலானர். அவரது உடல் அசைவற்றது. கண்கள் நிலைத்த பார்வையின ஆயின. அவரது பேச்சு நின்றுவிட்டது. புற உலகினைச் சற்றும் உணராதவராய், கல்லினிற் செதுக்கிய ஒரு சிலை போல அங்கே அமர்ந்திருந்தார். அவரது மனமும் அகங்காரமும் ஞானேந்திரியங்களும் உண்முகமாயின. அவர் முற்றிலும் வேறு பட்ட ஒரு புருடராகத் தோன்றினர்.

நரேந்திரர் தமது நெஞ்சும் உயிரும் உருகிவழிந்ததுபோலப் பின்னும் தொடர்ந்து இவ்வாறு பாடினர்;

என்ன சுந்தர சோபை யாமிது ! வதன மாயம்என் விழிக்குது !
என்ன தின்னுயிர் நாத னுனவன் எனது புன்குடில் புக்கனன்.
பிரேமை ஊற்றுகள் நெஞ்சி லின்றெழும் பெருகி யோடும்எண் திசையிலும்.
அருமைக் காதல சொல்லெ னக்குநீ ஆர்வ மேவிய சுவாமியுன்
கமல பாதமுன் என்ன மாநிதி காணிக் கையென வழங்குவேன் !
என்றன் ஆருயிர் வாழ்வுங் கொண்டிடு, இன்னும் யாதுனக் களிப்பன்யான்?
என்ன தென்பது ஸர்வ மும்பெறு, ஏற்றருள் எனது யாவுமே.

பாடலின் நடுவே ஸ்ரீ ராமகிருஷ்ணர் புறஉலக உணர்வை மீண்டும் பெற் ரூர். நரேந்திரர் அப்பாட்டை முடித்ததும் குருதேவர் தமது சம்பாஷணையைத் தொடர்ந்து நடத்தி, அனைவரையும் மந்திரவசப்பட்டவரைப் போன்று ஆக் கினர். அடியார்கள் அவரது திருமுகத்தை நோக்கி ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். அவரது நோய் தரும் கூரிய வலியில் ஒரு திவலையையும் அங்கே காண முடி யாது போயிற்று. தெய்விக ஆனந்தம் அங்கே ஒளி வீசிற்று,

டாக்டரைப் பார்த்துக் குருதேவர் கூறுவார்: "இந்தப் பொய்யான லஜ்ஜையை (கூச்சத்தை) விட்டுவிடும், பகவானுடைய நாமத்தைக் கூறுவதில் உமக்குக் கூச்சம் எதற்காக? 'கூச்சத்திற்கோ பகைமைக்கோ பயத்திற்கோ ஆளான ஒருவனுல் ஈசனைத் தரிசிக்க முடியாது' என்பது மெய்யான பழ மொழி. இம்மாதிரிப் பேதைமையான நினைவுகளை விட்டுவிடும்; உதாரணமாக, 'நான் எவ்வளவு பெரிய மனிதன்! பகவானது பெயரைக் கூவிக்கொண்டே நான் நடனமாடுவதேன்? இதைப்பற்றிக் கேள்விப்படும் மற்றப் பெரியார்கள் என்னைப்பற்றி என்ன நினைப்பர்? டாக்டர் ஆடிக்கொண்டும் ஹரநாமம் பாடிக்கொண்டும் இருந்தது என்ன துர்பாக்கியம் என்று சொல்லி என்மீது இரங்குவரே'—இம்மாதிரியான மூடக் கருத்துக்களை விட்டுவிடும்."

டாக்டர்: "மக்கள் இன்ன சொல்லுகிறார்கள் என்பது பற்றி நான் ஒரு நாளும் கவலைப்படுவதில்லை. அவர்களுடைய அபிப்பிராயங்களை நான் ஒரு பொருளாக மதியேன்."

குருதேவர்: "சரி, அதைப்பற்றி உமக்குள்ள பலமான உணர்ச்சியை நான் அறிவேன். (அனைவரும் சிரித்தல்)

"ஞானம் அஞ்ஞானம் இரண்டையும் தாண்டிச் செல்வீராக. அப்போது தான் நீர் ஈசனது காட்சியைப் பெறுவீர். பல பொருள்களை அறிதல் அஞ்ஞானம். பாண்டித்தியத்தைப்பற்றிய பெருமையும் அஞ்ஞானமே. எல்லா உயிர்கட்குள்ளும் ஈசனே உறைகிறான் என்பதைப் பற்றிய சலியாத உறுதியான அறிவு ஞானமாகும். ஈசனோடு நெருங்கிப் பழகி அறிதல் அதனினும் மிக்கதாகிய விஞ்ஞானமாகும். ஞானம் அஞ்ஞானம் எனும் இரண்டிற்கும் அப்பாலானவன் ஈசன்."

சியாம் பாஸு: "ஐயன்மீர், ஞான அஞ்ஞானங்களை ஒருவன் தாண்டி நிற்கும்போது என்ன மிஞ்சுகிறது?" -

குருதேவர்: "நித்திய சுத்த போத ரூபம். அதனை எவ்வாறு உமக்குத் தெளிவாக்க முடியும்? ஒரு சிறு பெண் தனது தோழியை 'அம்மா, தோழி, உனது கணவர் இங்கு இருக்கிறாரே. அவரோடு என்னமாதிரி இன்பம் நீ அனுபவிக்கின்றனையோ?' என்று ஒரு நாள் வினவினாள். அதற்கு மறுமொழியாக அத்தோழி, 'என் கண்ணே, உனக்கு ஒரு புருஷன் கிடைக்கும்போது நீயே அதனை அறிந்துகொள்வாய். அதை உனக்கு நான் எவ்வாறு விளக்க முடியும்?' என்றனர்.

"பிரம்மம் இன்னது என்பதை வார்த்தைகளால் வருணிக்க முடியாது. சச்சிதானந்தப் பொருளோடு விளையாடி அளவளாவும் (ரமிக்கும்) ஆனந்தத்தை வார்த்தைகளால் எவனும் எடுத்துரைக்க இயலாது. அதனை மெய்யாக உணர்ந்தவன் எவனோ அவனே அறிவான்."

டாக்டர் சர்க்காரைப் பார்த்து ஸ்ரீ ராமகிருஷ்ணர் பின்னும் தொடர்ந்து பேசலானார்: "இதோ பாரும். அகங்காரம் நீங்கும்வரை ஒருவன் ஞானத்தை அடைய முடியாது. ஒரு பழமொழி உண்டு:

என்று பெறுவேன் முத்தி?
'நான்' இறக்கும் போதே,

'யான்' 'எனது'—இது அஞ்ஞானம். 'நீ' 'உனது'—இது ஞானம். உண்மை அடியான் ஒருவன் கூறுவான்; 'பகவானே, நீரே கருத்தா; நீரே எல்லாம் இயற்றுகிறீர். நான் ஒரு கருவியே; நீர் என்னை ஆட்டிவைக்கின்றபடி ஆடுகிறேன். இவையனைத்தும்—செல்வம், சொத்து, அம்மட்டோ! இப் பிரபஞ்சம் முழுமையும்—உமக்கே உரிமையாம். இவ்வீடும் இந்த உறவினரும் உம் முடைய பொருள்களே; என்னுடையனவல்ல. யான் உமது அடிமை; உமது ஏவலின்படி உமக்குப் பணி செய்வதே எனது உரிமை.'

' ஒரு சில நூல்களைப் படித்துள்ளவர் அகங்காரம் நீங்கியவராகார். ஒரு சமயம் யான் காளிகிருஷ்ண தாக்கூரோடு ஈசனைப்பற்றிப் பேசினேன். உடனே அவர் 'எனக்கு அதைப்பற்றிய யாவும்தெரியும்' என்றார். நானே, 'டில்லியைப் பார்த்துவிட்டு வந்தவன் அதைப்பற்றிப் பெருமை பேசுவானே ? தனவான் ஒருவன் ஒவ்வொருவனிடமும் தான்கனவான் என்கிறானே?' என்றேன்."

சியாம்: "ஆனால் காளிகிருஷ்ண தாக்கூர் உம்மீது மிக்க மதிப்பு உடையர்."

குருதேவர்: "ஆ ! கர்வத்தால் ஒருவனது அறிவு எவ்வாறு சுழலுகிறது என்பது ! தக்ஷிணேசுவரத்துக் கோயிற் பூஞ்சோலையிலே ஒரு தூப்புக்காரி இருந்தாள் ! அவளுடைய பெருமைதான் என்ன ! எல்லாம் ஒரு சில நகைகளே அவள் அணிந்திருந்தமைபற்றித்தான். ஒரு நாள் அவள் செல்லும் வழியிலே சில மனிதர் ஒரு பக்கமாகச் சென்றுகொண்டிருந்தனர். அவர்களை நோக்கி அவள் 'ஏ 'ஜனங்களே ! வழியை விட்டு விலகிச் செல்லுங்கள் !' என்று கத்தினாள். ஒரு தூப்புக்காரி அம்மாதிரிப் பேசக்கூடுமானால் பிறருடைய பெருமையைப்பற்றி என்ன சொல்வது ?"

சியாம்: "சுவாமி, ஈசனே எதற்கும் கருத்தா ஆனால், ஒரு மனிதன் தனது பாவங்கட்காகத் தண்டிக்கப்படுவதேன் ?"

குருதேவர்: "ஒரு தட்டானைப்போல நீர் பேசுகிறீரே !"

நரேந்திரர்: "அதாவது, சியாம் பாபுவிடம் ஒரு தட்டானது புத்தி உள்ளது என்பதே. தட்டான் பொருள்களை ஒரு நுட்பமான தராசைக் கொண்டு எடை பார்க்கிறான் அன்றே ? அது போல."

குருதேவர்: "நான் சொல்வதாவது : எனது மூடப் பையனே, மாங்கனிகளை உண்டு மகிழ்ந்திரு. தோப்பிலே எத்தனை நூறு மரங்கள், எத்தனை ஆயிரம் கிளைகள், எத்தனை கோடி இலைகள் உள்ளன என்பதை நீ கணக்கிடுவதால் பயன் யாது ? மாங்கனிகளை உண்ணவே நீ இத் தோப்பிற்கு வந்துள்ளனை. அவற்றை உண்டு திருப்தியடை.

(சியாமிடம்) "நீர் இவ்வுலகில் மனிதப் பிறவி எடுத்ததே ஈசனை வழிபடுவதற்காக ; ஆதலால் அவரது பாத கமலங்களில் பக்தியைச் செலுத்த முயலும். மற்றப் பொருள்கள் ஒரு நூற்றைப்பற்றி அறிய ஏன் அவதிப்படுகின்றீர் ? தத்துவ ஆராய்ச்சியினால் உமக்கு என்ன லாபம் ? பாரும். ஒரு 'அவுன்ஸ்' மது உமக்கு வெறியுண்டாக்கப் போதுமானதாகும். அப்படியிருக்க, மதுக் கடையிலே எத்தனை 'காலன்' மது உள்ளது என்பதைக் கண்டுபிடிக்க முயல்வதாற் பயன் யாது ?"

டாக்டர்: "அப்படியேதான். அதற்கும் மேலாக. ஈசனது மதுக் கடையில் உள்ள மதுவோ அளவு படாதது. அதற்கு வரம்பில்லை."

குருதேவர் (சியாமிடம்) : "நீர் கடவுளுக்கு உமது வக்காலத்தைக் கொடுக்கலாகாதா ? உமது பொறுப்புகளையெல்லாம் அவர்மீது அமர்த்தி

விடும்.. உமது பொறுப்பை ஒரு யோக்கியமான மனிதனிடம் ஒப்பிப்பீராயின், அவன் தன்து அதிகாரத்தை உம்மீது தவருகச் செலுத்துவானு? பகவான் உமது பாவங்கட்காக உம்மைத் தண்டிப்பாரா இல்லையா என்பதை அவரே அறிவார்.''

டாக்டர்: ''பகவானது மனதில் இருப்பதை அவரே அறிவார். ஒரு மனிதன் அதை எப்படி ஊகிக்கக் கூடும்? கணக்குப் பார்க்கும் திறமைக்கு அப்பாற்பட்டவர் பகவான்.''

குருதேவர் (சியாமிடம்): ''கல்கத்தா மக்களாகிய உங்களுடைய பேச்சு இதுவொன்றேதான். நீங்கள் எல்லோரும் 'சமமாயிராமை என்ற குற்றம் ஈசனையும் கறைப்படுத்துகிறது' என்பீர்; காரணம், அவர் ஒருவனை சுகமாகவும், இன்னொருவனைத் துக்கமாகவும் படைத்திருப்பதே. இத் தீயோர் தம்மிடம் காண்பதையே பகவானிடமும் காண்கின்றனர்.''

சியாம்: ''சூக்ஷ்ம சரீரத்தைப்பற்றி நிரம்பக் கேள்விப்படுகிறோம். யாரேனும் அதை நமக்குக் காட்ட இயலுமா? ஒரு மனிதன் இறக்கும்போது சூக்ஷ்ம சரீரம் தூல சரீரத்தை விட்டு வெளியேறுகிறது என்பதை யாரேனும் மெய்ப்பிக்க முடியுமா?''

குருதேவர்: ''உண்மை அடியார்கள் இவற்றை உமக்குக் காட்டுவதைப்பற்றி இம்மியும் கவனிக்கமாட்டார். பெரிய மனிதனெனப்படும் ஏதோ ஒரு முட்டாள் அவர்களை மதித்தலையும் மதியாமையையும் பற்றி அவர்கட்கு என்ன கவலை? ஒரு பெரிய மனிதனைத் தாம் அடக்கியாளவேண்டும் என்னும் ஆசை அவர்களுடைய மனதில் ஒருக்காலும் புகுவதில்லை.''

சியாம்: ''தூல உடலுக்கும் சூக்கும உடலுக்கும் வேறுபாடு யாது?''

குருதேவர்: ''ஐந்து தூல பூதங்களாகிய உடல் தூல உடல் எனப்படும். சூக்கும உடலோ மனம் புத்திசித்தம் அகங்காரம் என்பவற்றுல் ஆனது. இன்னும் ஒரு காரண உடலும் உள்ளது; இதன் துணையால் ஒருவன் பகவானது ஆனந்தத்தைப் பெற்று, அவரோடு கலந்து இன்புறுகிறுன். இவையனைத்திற்கும் அப்பால் இருப்பது மகா காரணம். அதனை மொழியால் உரைத்திட முடியாது.

''வார்த்தைகட்குச் செவி சாய்ப்பதால் மட்டும் யாது பயன்? ஏதாவது செய்யவேண்டும். ஒரு மனிதன் பற்பல நம்பர் நூல்களை இது நாற்பதாம் நம்பர், இது நாற்பத்தொன்றும் நம்பர் எனப் பிரித்தறியவேண்டுமாயின், அவன் அத்தொழிலாளியாயிருத்தல் வேண்டுமன்றே? நூல் வியாபாரம் செய்பவர்க்கு ஒருவகை நூல் இன்ன நம்பர் எனக் கூறுவதில் சிரமமே இல்லை. ஆதலால் நான் சொல்வதாவது: ஒரு சிறிது ஞானசாதனம் பழகும்; அப்போது தூலம் சூக்ஷ்மம் காரணம் மகா காரணம் என்னும் இவற்றையெல்லாம் நீர் அறிவீர். பகவானிடம் பிரார்த்திக்கும்போது, அவரது பாத பதுமங்கள்மீது பக்தி வேண்டும் என்றே கேளும்.

"யான் தேவியிடம் பக்திக்காகவே பிரார்த்தித்தேன். யான் தேவியின் கமல பாதங்களில் மலர்களை இட்டுக் கை கூப்பிக்கொண்டே பின்வருமாறு சொன்னேன்: 'அம்மே, இதோ உனது அஞ்ஞானமும், இதோ உனது ஞானமும். இவ்விரண்டையும் கொண்டு உன்மீது தூய அன்பே எனக்குக் கொடு. இதோ உனது சுசி (தூய தன்மை), இதோ உனது அசுசி, இவ்விரண்டையும் கொண்டு, உன்மீது சுத்த பக்தியையே எனக்குக் கொடு. இதோ உனது புண்ணியம், இதோ உனது பாவம்; இதோ உனது நன்மை, இதோ உனது தீமை; இவை யெலாம் கொண்டு, உன்மீது சுத்த பக்தியையே தருக. இதோ உனது தருமம், இதோ உனது அதர்மம்; இவ்விரண்டையும் நீ கொண்டு, உன்மீது சுத்த பத்தியையே எனக்குத் தருக!

"தருமம் என்பதன் பொருள் நல்ல செயல்களே, தானங் கொடுத்தல் போன்றது. நீர் தருமத்தை ஏற்றுக்கொள்வீராயின், அதருமத்தையும் ஏற்றல் வேண்டும். புண்ணியத்தை ஏற்றுக்கொள்வீராயின், பாபத்தையும் ஏற்றல் வேண்டும். ஞானத்தை ஏற்பீராயின், அஞ்ஞானத்தையும் ஏற்கவேண்டிய தாகும். தூய்மையை ஏற்பீராயின், தூய்மையின்மையையும் ஏற்கவேண்டிய தாகும். ஒரு மனிதன் ஒளியை அறிவதுபோன்றது அது; அப்போது அவன் இருளையும் அறிந்தவனுவான். ஒருவன் ஒன்றை அறிவானுயின், அவன் பல வற்றையும் அறிபவனுவான். அவன் நன்மையை அறிவானுயின், தீமையையும் அறிந்தவனுவான்.

"பன்றியின் இறைச்சியைத் தின்பவனுயினும், பகவானது திருவடிக் கமலத்துப் பக்தி விடாதிருப்பவன் பாக்கியவானே. ஆனல் ஒருவன் உலகப் பற்றுடையவனுயிருப்பின், அவன் அவித்த காய்கறிகளும் சாதமும் மட்டும் உண்டு வாழினும், அவன்—"

டாக்டர்: "அவன் பதரே. ஆனல் இங்கே ஒரு விஷயம் குறுக்கே பேச அனுமதி வேண்டுகிறேன். புத்தர் பன்றியின் இறைச்சியைத் தின்று, அதன் பலனுகக் குன்ம நோய் பெற்றார். அவ்வலியைப் போக்கவேண்டி, அபினேயுண்டு, மெய்ம்மறந்திருப்பர். நிர்வாணம் முதலானவற்றின் பொருளை நீங்கள் அறிவீர்களா? புத்தர் அபினேயுண்ட பின்பு அறிவிழந்து கிடப்பர். அவர்க்கு வெளியுலகப் பிரக்ஞை இராது, இதைத்தான் அவர்கள் 'நிர்வாணம்' என்பர்!"

நிர்வாணத்திற்கு இம்மாதிரிக் கூறிய புதிய பொருளைக்கேட்டு அனைவரும் சிரிக்கலானர். பேச்சு மேலும் நடக்கலாயிற்று.

சியாம்: "ஐய, தேவரீர் 'தியாஸபி' (பிரம்மஞ்ஞானம் என்னும் பெயர் கொண்ட ஒரு கொள்கை)யைப் பற்றி யாது நினைக்கிறீர்?"

குருதேவர்: "அதைப்பற்றிச் சுருங்கச் சொல்வேன்; சீடர்களைச் சேகரித்துக்கொண்டு போவார் ஒரு தாழ்ந்த நிலையினைச் சார்ந்தவராவார். கங்கைமீது நடந்து செல்லவும், தூர தேசத்தில் ஒருவன் பேசுவதை இங்கிருந்து

கேட்டறியவும், இவைபோன்ற பிற செய்யவும், மானத சித்திகளை விரும்புவோரும் அதே நிலையினரே. அம்மாதிரியான மக்கட்கு ஈசன்மீது சுத்த பக்தி உண்டாவது மிக அரிது."

சியாம்: "ஆனால் 'தியாசபி'க்காரர் இந்து மதத்தை மறுபடியும் நிலை நாட்ட முயன்றுகொண்டிருக்கின்றனர்."

குருதேவர்: "அவர்களைப்பற்றி எனக்கு அதிகம் தெரியாது."

சியாம்: "ஆன்மா மரணத்திற்குப்பின் எங்கே செல்கிறது? சந்திர மண்டலத்திற்கா, நக்ஷத்திர மண்டலத்திற்கா, வெறொரு மண்டலத்திற்கா— என்பதைத் 'தியாஸபி'யால் அறியலாம்."

குருதேவர்: "அறியலாம். ஆனால் எனது சொந்த மன நிலையை நான் உமக்குக் கூறுகிறேன். ஒரு சமயம் ஒரு மனிதன் அனுமாரைப் பார்த்து 'இன்றைக்கு என்ன திதி?' என்று கேட்டான். அனுமார் அளித்த மறுமொழியாவது: 'இன்ன வாரம், இன்ன திதி, இன்ன நக்ஷத்திரம் என்பது போன்றவற்றைப் பற்றி யான் ஒன்றும் அறியேன். எனது தியானம் ராமர்மீதுதான்.' இதுவே எனது மனநிலையும்."

சியாம்: "மஹாத்மாக்கள் இருப்பதாக தியாஸபிக்காரர் நம்புகின்றனர். தங்களுக்கு நம்பிக்கையுண்டா?"

குருதேவர்: "எனது மொழிகளில் உமக்கு நம்பிக்கை இருக்குமாகில், நான் 'ஆம்' என்பேன். ஆனால் நீர் இந்த சமாசாரங்களை விட்டுவிடும். எனது உடல் சற்று நலமடைந்தபின், மறுபடியும் இங்கே வாரும். என்னிடம் உமக்கு நம்பிக்கை உண்டாயின், மனச்சாந்தி அடைய உமக்கும் ஒரு வழி கண்டுபிடிக்கப்படும். பணமோ துணியோ நன்கொடையாக நான் ஏற்றுக்கொள்வதில்லை என்பதை நீரும் கவனித்திருக்கவேண்டும். நாங்கள் இங்கே பண வசூல் செய்வதும் இல்லை. இக்காரணத்தால்தான் அத்தனை பேர் வருகின்றனர். (சிரிப்பு)

(டாக்டரிடம்) "நீரும் மனவருத்தப்படமாட்டீராயின், நான் உமக்கு ஏதோ ஒன்று சொல்கிறேன். இதுதான் அது. பணம், புகழ், பிரசங்கம் போன்றவையெல்லாம் போதிய அளவு நீர் பெற்றுயிற்று. இனி ஒரு சில நாள் உமது மனத்தை ஈசனிடம் செலுத்தும். இடையிடையே இங்கும் வாரும். ஈசனைப் பற்றிய மொழிகளைக் கேட்பதனால் உமது ஞான ஊக்கம் எரியத் தொடங்கும்."

சிறிது நேரம் சென்றபின், விடைபெறுவதற்காக டாக்டர் எழுந்து நின்றதும், கிரீஷ் சந்திரகோஷ் அறைக்குட் புகுந்து, குருதேவர் முன்பு தாழ்ந்து பணிந்தார். டாக்டர் சர்க்கார் அவரைக் கண்டு மகிழ்ந்து, மறுபடியும் தமது ஆசனத்தில் அமர்ந்தார்,

டாக்டர் (கிரீஷைச்சுட்டி): "நான் இங்கே இருக்கும்வரை அவர் வருவதில்லை என்பது தெரிந்ததே. நான் புறப்பட ஆரம்பித்ததும், அவர் அறைக்குட் புகுகிறார்."

டாக்டர் சர்க்கார் ஏற்படுத்தியுள்ள 'விஞ்ஞான சங்கத்'தைப்பற்றி அவரும் கிரீஷும் பேசத் தொடங்கினர்.

குருதேவர்: "அங்கு என்னை ஒரு நாள் அழைத்துச்செல்வீரா?"

டாக்டர்: "தாங்கள் அங்கு சென்றால். ஈசனது விசித்திரமான செயல்களைக் கண்டதும். மெய்ம்மறந்து பரவசமடைவீர்களே."

குருதேவர்: "ஆம் உண்மைதான்."

டாக்டர் (கிரீஷிடம்): "நீர் என்ன செய்தாலும் அவரைப் பகவானாக வணங்காதிரும். இந்த நல்ல மனிதர்க்குத் தலை சுற்றும்படி நீர் செய்து வருகிறீர்."

கிரீஷ்: "நான் வேறென்ன செய்யக்கூடும்? நான் இப்பிறவிக் கடலைத் தாண்டிக் கரையேறும்படி செய்த ஒருவரை வேறு எவ்விதமாகக் கருதுவேன்? அதற்கும் மேலே சந்தேகம் எனும் கடலையும் கடக்கச் செய்தனரே. நான் புனிதமென மதியாத எதுவும் அவரிடத்தில் இல்லை."

டாக்டர்: "நான் அவரது பாததூளியை அணிந்துகொள்ளக் கூடாதா? இதோ பாரும்."

டாக்டர் ஸ்ரீராமகிருஷ்ணரை வணங்கித் தமது தலையால் குருதேவருடைய திருவடிகளைத் தொட்டார்.

கிரீஷ்: "ஆஹா! தேவர்கள் இப்போது 'இம்மங்களமான வேளை பாக்கியமுள்ளதாகுக!' என்று வாழ்த்துகின்றனர்."

டாக்டர்: "ஒரு மனிதனுடைய பாதங்களைத் தொடுவதில் ஆச்சரியப்படத்தக்கது யாது உள்ளது? யான் ஒவ்வொருவருடைய பாத தூளியையும் தலையில் அணிந்துகொள்வேன். நீங்கள் யாவரும் எனக்கு உங்களது பாத தூளியைக் கொடுங்கள்."

டாக்டர் எல்லா அடியார்களுடைய பாதங்களையும் தொட்டனர்.

நரேந்திரர் (டாக்டரிடம்): "நாங்கள் அவரை (குருதேவரைக் குறிக்கிறார்) பகவான் போன்ற ஒரு புருடராக நினைக்கிறோம், அது எதைப்போல என்பது உங்கட்குத் தெரியுமா? தாவரப் படைப்புக்கும் விலங்குப் (மிருகப்) படைப்புக்கும் இடையேயுள்ள ஓர் உயிர் தாவரமா விலங்கா என்று தீர்மானிக்க இயலாத ஒரு நிலையில் உள்ளது; அதுபோன்றே, மனித உலகிற்கும் தெய்வ உலகிற்கும் இடையேயுள்ள ஒரு நிலையில் ஒருவனை மனிதனை தெய்வமா என்று கூறுதல் மிகமிக அரிதாகின்றது."

டாக்டர்: "என் அருமை இளைஞரே, அதுசரி; ஆனால் தெய்விக விஷயங்கட்கு உவமானங்கள் பொருத்தமாகா."

நரேந்திரர்: "அவரைத் தெய்வமென்று யான் சொல்லவில்லை. அவர் தெய்வம் போன்ற மனிதர் என்பதுதான் நான் சொல்லி வருவது."

டாக்டர்: "அம்மாதிரி விஷயத்தில் நாம் நமது உணர்ச்சிகளை அடக்கி விடல் வேண்டும். அவை யெழுந்து வெளிவருதல் கெட்டதே. என்னுடைய

உணர்ச்சிகளே அறிவார் ஒருவருமில்லை! எனது மிகச் சிறந்த நண்பனும் என்னைக் கடுமையான தயவற்ற மனிதனாக நினைக்கிறானே. உங்களைப்போன்ற மக்களும் ஒருநாள் என்னை உங்களது செருப்பால் அடித்து வெளியில் தள்ளவும் செய்யலாம்."

குருதேவர்: "அம்மாதிரிச் சொல்லாதிரும்! அவர்கள் உம்மிடம் எவ்வளவு பேரன்புடையவர்! மண அறையிலே மணமகளின் கன்னித் தோழிமார் மணமகனது வரவை எதிர்ப்பார்த்து நிற்பதுபோன்றே அவ்வளவு ஆவலோடு உமது வரவையும் எதிர்பார்த்து நிற்கின்றனர் அவர்கள்."

கிரீஷ்: "ஒவ்வொருவரும் உம்மீது மிக உயர்ந்த மதிப்புடையர்."

டாக்டர்: "எனது மகனும், எனது மனைவியும்கூட, என்னை ஒரு கல் நெஞ்சன் என்கின்றனர். நான் பண்ணும் ஒரே பாவமாவது, எனது உணர்ச்சிகளை நான் வெளிக்காட்டுவதில்லை என்பதே."

கிரீஷ்: "அப்படியாயின், உமது நண்பர்க்காகவேனும் மனமிரங்கி உமது நெஞ்சக் கதவைத் திறந்துவிடுதல் அறிவுடைமையாகும்; ஏனெனில் அதனாலன்றி வேறுவழியில் உம்மை உமது நண்பர்களுக்கு அறிய இயலாது போகின்றது."

டாக்டர்: "எனது உணர்ச்சிகளும் உமது உணர்ச்சிகளைவிட அதிகமாகப் பொங்கியெழுகின்றன என்று சொன்னால் நம்புவீரோ? (நரேந்திரரிடம்) யான் தனியே கண்ணீர் சொரிகிறேன்."

(ஸ்ரீராமகிருஷ்ணரிடம்) "சரி, நான் ஏதேனும் சொல்லலாமோ? நீர் தெய்வ ஆவேச நிலையிலுள்ளபோது நீர் உமது திருவடியைப் பிறருடைய உடல்கள் மீது வைக்கின்றீர். அது நல்லதன்று."

குருதேவர்: "அந்தச் சமயம் நான் பிறரைக் காலால் தொடுவதை அறிகிறேன் என்று நீர் நினைக்கிறீரா?"

டாக்டர்: "அவ்வாறு செய்வது சரியன்று என்று உணர்கிறீரன்றே?"

குருதேவர்: "நான் சமாதியில் அனுபவிப்பதை உமக்கு எப்படி யான் விளக்க முடியும்? அந்நிலையிலிருந்து கீழிறங்கியதும், எனது நோய்க்குச் சமாதிதான் காரணமோ என்று சிலசமயம் யான் நினைக்கிறேன். சமாசாரம் யாதெனில் ஈசனைப் பற்றிய நினைவு என்னைப் பித்தனாக்குகிறது. இதெல்லாம் எனது கடவுட் பித்தினால் விளைந்தவை. யான் அதை எவ்வாறு தடுக்க முடியும்?"

டாக்டர்: "இப்போது அவர் எனது கருத்தை ஒப்புக்கொள்கிறார். அவர் தமது செயலுக்காக வருத்தத்தைத் தெரிவிக்கிறார். அச்செயல் பாவமானது என்பதை அவர் உணர்கிறார்.

குருதேவர் (நரேந்திரரிடம்): "நீ மிக்க அறிவாளி. நீ என் பதில் உரைக்கக் கூடாது. அதையெல்லாம் டாக்டருக்கு விளக்கமாகச் சொல்லு."

கிரீஷ் (டாக்டரிடம்): "ஐய, நீர் சொல்வது தவறு. சமாதி வேளையில் தமது அடியார்களுடைய உடல்களைத் தொடுவதற்காக அவர் தம் வருத்தத்

தைத் தெரிவிக்கவில்லை. அவரது சொந்த உடலோ தூயது, எவ்விதப் பாவத் தாலும் தீண்டப் படாதது. அவர் பிறரை இவ்வாறு தொடுவது அவர்களது நன்மைக்காக. தொடப்பட்டவர்களுடைய பாவங்களைத் தம்மீது சுமத்திக் கொள்வதனால் இந்நோய் தமக்கு வந்ததோ என்று சில சமயம் அவர் கருது கிறார்.

"உமது சொந்த அனுபவத்தையே நினைத்துப்பாரும். ஒரு காலம் நீர் சூலை நோயால் வருந்தினீர். இரவில் வெகுநேரம்வரை உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்ததற்காக அச்சமயம் நீர் வருத்தப்படவில்லையா? அதனால் இரவில் வெகுநேரம்வரை படித்தல் என்பதே கெட்ட காரியம் என ருசுப்படுத்திய தாகுமா? அவரும் (ஸ்ரீராமகிருஷ்ணரும்) தமக்கு நோய் உண்டானதைப்பற்றி வருத்தமடையலாம். அதனால் பிறரது நன்மைக்காக அவரவரைத் தொடுதல் கெட்டது என அவர் உணர்ந்ததாகாது."

டாக்டர் சர்க்கார் ஒருவாறு மனங்குழம்பியவராகி, கிரீஷிடம் "நான் உமக்குத் தோற்றதை ஒப்புக்கொள்கிறேன். உமது திருவடித்தூளை எனக் குத் தருவீராக" என்றனர். அவர் கிரீஷை வணங்கினர்.

டாக்டர் (நரேந்திரரிடம்): "அவரைப்பற்றி (கிரீஷைக் குறித்து) வேறு என்ன சொன்னாலும் அவரது அறிவின் திறமையை எவரும் ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும்."

நரேந்திரர் (டாக்டரிடம்): "அதே விஷயத்தை நீர் வேறொரு நிலையி னின்றும் நோக்கலாம். உமது உடலின் நலத்தையோ சுகத்தையோ சற்றும் கரு தாமல் நீர் உமது வாழ்க்கையை விஞ்ஞானவித்தை ஆராய்ச்சிக்காக ஒப்படைக் கக்கூடும் அன்றோ? ஆனால் பிரம்ம வித்தையோ எல்லா வித்தைகளிலும் மிக்க மேன்மையுடையதாகும். அவ்வாறாக, பிரம்மத்தைக் காண்பதற்கென அவர் தமது உடல் நலத்தையும் ஆபத்துக்கு உள்ளாக்குவது இயல்பேயன்றோ?"

டாக்டர்: "இயேசு, சைதன்யர், புத்தர், மகம்மது என்பவர் உள்பட எல்லா மதச் சீர்திருத்தக்காரரும் முடிவிலே ஆணவம் நிறைந்தவராயினர், அவர்களில் ஒவ்வொருவரும் 'நான் சொல்வதெல்லாம் மட்டும் உண்மையாம்' என்றனர். இது நம்மை எவ்வளவு நடுங்கச் செய்கின்றது!"

கிரீஷ் (டாக்டரிடம்): "இப்போது ஐய, நீரும் அதே தவறுக்கு ஆளா கிறீர். நீர் அவர்கள் எல்லோரையும் அகங்காரமுடையவர் எனக் குற்றஞ் சாட்டுகிறீர். நீர் அவர்களைக் குறை கூறுகிறீர். அதே காரணத்தால் உம்மை யும் அகங்காரமுடையவரெனக் குற்றஞ் சாட்டலாமன்றோ?"

டாக்டர் சர்க்கார் மௌனமாயிருந்தார்.

நரேந்திரர் (டாக்டரிடம்): "தெய்வ வழிபாட்டை அடுத்துள்ள வழி பாட்டை நாங்கள் அவர்க்கு அளிக்கிறோம்."

இம்மொழிகளைக் கேட்டதும் குருதேவர் ஒரு குழந்தையைப்போல் கொல் லெனச் சிரித்தார்.

வியாழன் அக்டோபர் 29, 1885

காலை ஏறக்குறையப் பத்துமணி; ஸ்ரீராமகிருஷ்ணரது நிலைமையை அறிவிப்பதற்காக ம— கல்கத்தாவில் சங்காரிதோலாவில் உள்ள டாக்டர் சர்க்காருடைய விட்டிற்கு வந்து சேர்ந்தார். உடனே தாமதமின்றி அவர்கள் டாக்டருடைய வண்டியில் ஏறினர். டாக்டர் பல நோயாளிகளைப் போய்ப் பார்த்தனர். பாத்தூரிய கட்டாவிலே தாக்கூர் குடும்பத்தினரது வீடு ஒன்றிற்குட் புகுந்தார்; அங்கே குடும்பத் தலைவரால் தாமதம் ஏற்பட்டது. வண்டிக்கு மீண்டதும் அவர் ஸ்ரீராமகிருஷ்ணரது நோயைப்பற்றியும், அவரைப் பாதுகாக்கவேண்டிய வகையைப்பற்றியும் பேசத் தொடங்கினர்.

டாக்டர்: "அவரைத் தக்ஷிணேசுவரத்திற்குத் திரும்ப அனுப்புவதாக உங்கட்கு எண்ணமுண்டா?"

ம—: "இல்லை, ஐயன்மீர். அது அடியார்கட்குப் பெரிதும் அசௌகரியத்தை உண்டுபண்ணும். அவர் கல்கத்தாவில் இருப்பின், அவர்கள் எப்போதும் வந்து பார்த்துப் போகலாம்."

டாக்டர்: "ஆனால் இங்கே செலவு மிகுதியாகின்றதே."

ம—: "அடியார்கள் அதைப் பொருளாகக் கருதார். அவர்கட்கு வேண்டுவதெல்லாம் அவர்க்குப் பணி செய்யப்பெற வேண்டும் என்பதே. செலவைப்பற்றிப் பேசுவதனாலோ, அவர் கல்கத்தாவில் வாழ்ந்தாலும் தக்ஷிணேசுவரத்தில் வாழ்ந்தாலும், செலவை அவர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும். அவர் தக்ஷிணேசுவரத்திற்கு மறுபடியும் போவாராயின், அடியார்கட்கு எப்போதும் அவரைப்போய்ப் பார்த்தல் இயலாது போகும்; அதனால் அவர்கட்குக் கவலை விளையும்."

டாக்டர் சக்காரும் ம—வும் சியாம்புகூருக்கு வந்து சேர்ந்தார்; குருதேவர் அடியார்களோடு அறையில் உட்கார்ந்திருப்பதைக் கண்டார். டாக்டர் பாதுரியும் அங்கு இருந்தார்,

டாக்டர் சர்க்கார் குருதேவரது நாடியைச் சோதனை செய்தார்; அவரது நிலைமையைப்பற்றி விசாரித்தார், சம்பாஷணை ஈசன்பக்கமாகத் திரும்பிற்று.

டாக்டர் பாதுரி: "யான் உம்மிடம் உண்மையை உரைக்கட்டுமா? இதெல்லாம் கனவைப்போல் மித்தையே,"

டாக்டர் சர்க்கார்: "எல்லாம் மயக்கமா? அப்படியானால், அம்மயக்கம் யாருடையது? அனைவரும் அதை மயக்கம் என அறிவாராயின், அவர்கள் பேசுவதேன்? ஈசனை மெய்யென்றும், அவனது படைப்பைப் பொய்யென்றும் என்னால் நம்ப முடியாது!"

குருதேவர்: "அது ஒரு நல்ல பாவனை. இறைவனை ஆண்டவனாகவும், தன்னை அவரது அடிமையாகவும் கருதுதல் ஒருவற்கு நன்று. ஒரு மனிதன் தனது உடலை மெய்யாக உணரும் வரையும், 'நான்', 'நீ' எனும் வேறுபாட்டை உணரும் வரையும், ஆண்டான்—அடிமை உறவைக் கொள்

ஞதல் நன்று; 'நான் அவனே' என்னும் கருத்தைப் போற்றுவது நல்ல தன்று."

"வேறொன்று உங்கட்குக் கூறுகிறேன். ஓர் அறையை ஒரு பக்கமாக நின்று பார்த்தாலும். அறையின் நடுவே நின்று காணினும், நீங்கள் பார்ப்பது ஒரே அறையைத்தான்."

டாக்டர் பாதுரி (டாக்டர் சர்க்காரிடம்) : "நான் சற்றுமுன்பு சொன்னதை நீர் வேதாந்தத்திற் காண்பீர். நீர் சாஸ்திரங்களைக் கற்பது கட்டாயம். அப் போதுதான் நீர் அறிவீர்."

டாக்டர் சர்க்கார்: "எதற்காகவோ? இந்த ஞானத்தையெல்லாம் அவர் (ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் குறித்து) பெற்றது, சாஸ்திரங்களைக் கற்றுத் தானே? அவரும் எனது கருத்தை ஆதரிக்கிறார்; சாஸ்திரங்களை வாசியா மலே ஒருவன் ஞானியாக இயலாதா?"

குருதேவர்: "ஆனால் நான் கேட்டது எத்தனையோ சாஸ்திரங்களை!"

டாக்டர் சர்க்கார்: "ஒரு மனிதன் கேள்வியால் மட்டும் அறிவாளியின், அவன் பொருளைத் தவறுக அறியலாம். உங்களது விஷயத்தில் வெறுங் கேள்வியோடு நின்றுவிடவில்லை."

குருதேவர் (டாக்டர் சர்க்காரிடம்) : "நீர் என்னைப் பித்தனெனப் பேசிய தாக நான் அறியப் பெறுகிறேன். இக்காரணம் பற்றியே அவர்கள் (ம—முதலியோரைச் சுட்டி) உம்மிடம் சொல்லப் பிரியப்படுவதில்லை."

டாக்டர் சர்க்கார் (ம—வைப் பார்த்து): "உங்களை (குருதேவரைக் குறிக்கிறது) பைத்தியமென யான் கூறுவானேன்? ஆனால் யான் உங்களது அகங்காரத்தைப் பற்றிக் கூறினேன். தாங்கள் தங்களது பாத தூளை மக்கள் தலையில் அணிய ஏன் அனுமதிக்கிறீர்கள்?"

ம—: "அன்றேல் அவர்கள் அழுகின்றனர்."

டாக்டர் சர்க்கார்: "அது அவர்களது தவறு; அவர்கட்கு அதைக் கூறிவிடவேண்டும்."

ம—: "அவர்கள் அவரது பாததூளைப் பெறுவதற்கு நீர் ஏன் ஆக்ஷேபிக்கிறீர்? ஈசன் எல்லா உயிர்களிடத்தும் உறைவதில்லையா?"

டாக்டர் சர்க்கார்: "நான் அதற்கு ஆக்ஷேபிக்கவில்லை. அவ்வாறு யின் நீர் ஒவ்வொருவரது பாததூளையும் பெறவேண்டியது அவசியமன்றே?"

ம—: "ஆனால் சிலரிடத்துப் பகவானது பிரகாசம், மற்றரிடத்து உள்ளதைவிட அதிகமாயுள்ளது. எங்கும் தண்ணீர் உள்ளது; ஆனால் அதிக நீரை ஓர் ஏரியிலும், ஓர் ஆற்றிலும், கடலிலும் காண்கிறீர். புதிதாக விஞ்ஞான சாஸ்திரத்தில் தேர்ச்சிப்பட்டம் பெற்ற ஒருவர்க்கு, பாரடே என்பார்க்கு அளிக்கும் மதிப்பைக் காட்டுவீரா?"

டாக்டர் சர்க்கார்: "அதனை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நீர் ஏன் அவரை ஈசன் என்கிறீர்?"

ம—: "நாம் ஏன் ஒருவரையொருவர் வணங்குகிறோம்? பகவான் ஒவ்வொருவரது நெஞ்சத்தும் வாசஞ்செய்கிறார் என்பதே அதன் காரணம். நீர் இவ்விஷயத்தில் மிக்க சிந்தனையைச் செலுத்தியிருக்கவில்லை."

குருதேவர் (டாக்டர் சர்க்காரிடம்): "சில மக்களிடத்து ஈசனின் பிரகாசம் மற்றாரிடத்து இருப்பதைவிட அதிகமாக உள்ளது என்பதை நான் உம்மிடம் முன்னமே கூறியுள்ளேன். சூரியனுடைய கதிர்களை பூமி ஒருவகையாகவும், ஒரு மரம் இன்னொரு வகையாகவும், ஒரு கண்ணாடி இன்னும் ஒருவகையாகவும் பிரதிபலிக்கின்றன. வேறு பொருள்களினும் மிக நன்றாக ஒரு கண்ணாடி பிரதிபலிப்பதை நீர் காண்கின்றீர்."

டாக்டர் சர்க்கார் பதில் உரைக்கவில்லை. எல்லாரும் பேசாதிருந்தனர்.

குருதேவர் (டாக்டர் சர்க்காரிடம்): "இங்கே (தம்மிடத்தில் என்பது பொருள்) உமக்கு அன்புள்ளதை நீர் அறிவீர். என்மீது அன்பு செலுத்துவதாக நீர் கூறினீரன்றோ?"

டாக்டர் சர்க்கார்: "நீர் இயற்கையின் குழந்தையாவீர். இதனாலன்றோ யான் உம்மிடம் இதையெல்லாம் கூறுகிறேன், உமது பாதத்தைத் தொட்டு மக்கள் உம்மை வணங்குவதைக் காணல் என்னைத் துன்புறுத்துகிறது. 'இவ்வளவு நல்லார் ஒருவரை அவர்கள் கெடுத்து வருகின்றனரே' என்று எனக்குள் சொல்லி வருகிறேன். கேஷப்சேன் என்பவரும் தமது அடியார்களால் அம்மாதிரிக் கேடடைந்தனர். நான் சொல்லுவதைத் தாங்கள் கேளுங்கள்—"

குருதேவர்: "நீர் சொல்வதைக் கேட்பதா? நீர் உலோபி. காமி. அகங்காரி."

டாக்டர் பாதுரி (டாக்டர் சர்க்காரிடம்): "அதாவது உம்மிடம் ஒரு ஜீவனுடைய—தேகம் பெற்றுள்ள ஒருவனுடைய—இயல்புகள் உள்ளன. அவ்இயல்புகளாவன: காமம், உலோபம், அகங்காரம், பணத்திற் பேராசை, பெயருக்கும் புகழுக்கும் துடிப்பு என்பவை. எல்லா தேகிகட்கும் (தேகம் பெற்றுள்ளவர்க்கும்) இந்த குணங்கள் உண்டு."

டாக்டர் சர்க்கார் (குருதேவர்க்கு): "நீங்கள் அவ்வாறு பேசுவீர்களாயின், யான் உங்களது தொண்டையை மட்டும் சோதித்துவிட்டு வெளியேறுவேன். ஒருவேளை அதுவே உங்கட்கு வேண்டுவதுபோலும். அவ்வாறாயின் நாம் வேறெதையும் பற்றிப் பேசக்கூடாது. ஆனால் உமக்கு வழக்கு வேண்டுமாயின், எனக்குச் சரியென்றுபடுவதை நான் கூறுவேன்,"

எல்லோரும் மௌனமாயிருந்தனர்.

குருதேவர் (டாக்டர் சர்க்காரிடம்): "நீர் கீதையையும் பாகவதத்தையும் வேதாந்தத்தையும் படியும்; இதையெல்லாம் நீர் அறிவீர். பகவான் தமது படைப்பில் இல்லையா?"

டாக்டர் சர்க்கார்: "ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பொருளில் இல்லை. அவர் எங்கும் இருக்கிறார். அவரைத் தேடிக்காண முடியாது."

சம்பாஷணை வேறு விஷயங்களைப்பற்றித் திரும்பியது. ஸ்ரீராமகிருஷ்ணர் எப்போதும் ஈச்வர சம்பந்தமான பாவனை நிலைகளை அனுபவித்துக்கொண்டிருந்தனர், அதனால் அவரது நோய் வளரும் என்று டாக்டர் சொன்னார், டாக்டர் சர்க்கார் அவரிடம் "நீங்கள் உங்களது உணர்ச்சியை (பக்தி பாவனையால் எழும் உணர்ச்சியை) அடக்கிவிடவேண்டும். என் உணர்ச்சிகளும் பெருங்கிளர்ச்சி அடைகின்றன. தங்களிலும் மிக அதிகமாக யான் கூத்தாடமுடியும்."

இளைய நரேன் (புன்சிரிப்போடு) : "உமது (பாவனை) உணர்ச்சி ஒரு சிறிது பொங்குமாயின், நீங்கள் என்ன செய்வீர்களோ?"

டாக்டர் சர்க்கார்: "எனது அடக்கும் சக்தியும் வளரும்."

குருதேவரும், ம—வும்: "இப்போது நீர் அப்படிச் சொல்லலாம்!"

ம—: "நீர் பக்தி பரவச நிலையினை அடைந்து விடுவீராயின், நீர் இன்ன செய்வீர் என்று எங்கட்குச் சொல்லக்கூடுமா?"

சம்பாஷணை பணத்தைப்பற்றி எழுந்தது.

குருதேவர் (டாக்டர் சர்க்காரிடம்) : "யான் அதைப்பற்றிச் சற்றேனும் நினைப்பதில்லை. இது உமக்கு நன்றாகத் தெரியும் அன்றோ? இது ஒரு வெளி வேடமன்று."

டாக்டர் சர்க்கார்: "எனக்கும் பண இச்சை இல்லையே—உம்மைப் பற்றிப் பேசுவதேன்? எனது பணப்பெட்டி திறந்தே கிடக்கிறது."

குருதேவர்: "ஜதுமல்லிக் என்பவரும் வேறிடம் சென்ற மனத்தராயுள்ளார், அவர் உண்ணும்போது அவரது மனம் வேறிடம் சென்று விடுவதனால் உணவு நல்லதா கெட்டதா என்பதையும் அவர் அறியாது போகிறார். யாரேனும் ஒருவர் 'அதை உண்ணதேயும், அது நல்ல ருசியுடையதன்று' என்று அவரிடம் சொல்லும்போது, அவர் 'என்ன! இந்த உணவு கெட்டதா? ஆம், அது அப்படித்தான்!' என்கின்றனர்.

பகவானைப் பற்றிய தியானத்தால் வரும் அன்னியபர நிலைக்கும் (வேறேரிடத்து மனஞ்செல்லுதலுக்கும்) உலக நினைவுகளில் அழுந்தியிருப்பதால் வரும் அன்னியபர நிலைக்கும் உள்ள வேறுபாடு கடல்போலப் பெரிது என்பதைக் குருதேவர் குறிப்பாக உணர்த்தினரா?

டாக்டர் சர்க்காரைச் சுட்டி, ஸ்ரீராமகிருஷ்ணர் அடியார்களிடம் புன்சிரிப்போடு சொல்வாராயினர்: "ஒரு பொருளை அவிக்கும்போது அது மெதுவாகின்றது. முதலில் அவர் மிகக் கடினமாயிருந்தார். இப்போது அவர் உள்ளிருந்து மெதுவாகி வருகின்றனர்."

டாக்டர் சர்க்கார்: "ஒரு பொருளை அவிக்கும்போது, அது வெளியிலிருந்து மெதுவாவதற்குத் தொடங்குகிறது. இப்பிறப்பில் அது எனக்கு நேராதோ என்று அஞ்சுகிறேன்." (எல்லோரும் சிரிக்கின்றனர்)

டாக்டர் சர்க்கார் விடைபெற்றுச் செல்லும் தருவாயில் இருந்தார். அவர் ஸ்ரீராமகிருஷ்ணரோடு பேசிக்கொண்டிருந்தார்.

டாக்டர்: "மக்கள் தங்களுடைய திருவடிகளைத் தொட்டு வணங்குவதைத் தாங்கள் தடுக்கக் கூடாதா?"

குருதேவர்: "அகண்ட சச்சிதானந்தத்தை எல்லோராலும் அறிய முடியுமா?"

டாக்டர் சர்க்கார்: "மக்கட்குத் தாங்கள் சரியானது இன்னது என்று கூறலாகாதா?"

குருதேவர்: "மக்கட்கு ருசிகள் பலவிதம். மேலும், ஞானவாழ்விற்கு அனைவரும் சமமான தகுதியுடையவரல்லர்."

டர்க்டர் சர்க்கார்: "அது எவ்வாறே?"

குருதேவர்: "ருசியில் வேறுபாடு இன்னது என்பதை நீர் அறியீரோ? சிலருக்கு மீன் கறி ருசியுள்ளது, சிலர்க்கு மீன் வருவல், சிலர்க்கு மீன் ஊறுகாய்; இன்னும் சிலர்க்கோ சத்து நிறைந்த உணவாகிய மீன் பொங்கலிலே ('பிலாவ்' என்பதில்) ருசி. அப்போதும் தகுதியிலே வேறுபாடு உள்ளது. முதலில் ஒரு வாழை மரத்தைக் குறியாக வைத்து எய்யக் கற்றுக்கொள்ளும்படி மக்கட்குச் சொல்கிறேன்; பின் ஒரு விளக்கின் திரிமீதும், அதன்பின் பறக்கும் பக்ஷிமீதும் எய்யச் சொல்கிறேன்."

அந்தி வேளையாயிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ணர் இறைவனைப்பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தவரானார். அச்சமயத்திற்கு அவர் தமக்கு வலியைத்தரும் நோயை முற்றிலும் மறந்தார். பல நெருங்கிய அடியார் அவர்க்கு அருகே அமர்ந்து, வைத்த கண் வாங்காது அவரை நோக்கிக்கொண்டிருந்தார். வெகுநேரம் சென்றபின், அவர்க்குப் புறஉலக ஞாபகம் வந்தது. அவர் ம—விடம் மெல்லிய குரலில் 'என் மனம் அகண்ட பிரம்மத்தில் முழுதும் லயமடைந்தது. அதன்பின் நான் பல பொருள்களைக் கண்டேன். டாக்டர்க்கு ஞான விழிப்பு உண்டாகும் என்பதைக் கண்டேன். ஆனல் இன்னும் சிறிது காலம் செல்லும். யான் அவர்க்கு அதிகம் சொல்ல வேண்டியது இராது. அதே நிலையில் இருக்கும்போது இன்னொருவரையும் கண்டேன். என் மனம் 'அவரையும் இழுத்து விடுக' என்று என்னிடம் கூறிற்று. அவரைப் பற்றிப் பின் உமக்குக் கூறுவேன்."

வெள்ளி, அக்டோபர் 30, 1885

சுமார் பத்தரை மணிக்கு ம— டாக்டர் சர்க்கார் வீட்டிற்கு வந்தார். அவர் இரண்டாவது மாடிக்கு ஏறி, கூடத்திற்கு அருகேயுள்ள நடைபாதையில் ஒரு நாற்காலிமீதிலே அமர்ந்தார். டாக்டர் சர்க்காருக்கு முன்புள்ள ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் சுவர்ண மீன்கள் வைக்கப்பட்டிருந்தன. இடையிடையே டாக்டர் சர்க்கார் சில ஏலக்காய்த் தோல்களைப் பாத்திரத்திற்குள் எறிந்தனர். மறுபடியும் மா உருண்டைகளைக் குருவிகட்கு எறிந்தார். ம—வும் அவரைக் கவனித்தார்.

டாக்டர் (சிரித்துக்கொண்டே ம—விடம்): "பாரும், அடியார்கள் பகவானை உற்று நோக்கிக்கொண்டிருப்பது போன்றே இந்தச் சுவர்ண மீன்கள் என்னையே கூர்ந்து நோக்கிக்கொண்டிருக்கின்றன. நான் நீர்க்குள் எறிந்துள்ள உணவை அவை கவனிக்கவில்லை. ஆதலால் நான் உமக்குச் சொல்வதாவது; பக்தியால் மட்டும் நீர் அடையப்போகும் லாபம் யாது? உமக்கு ஞானமும் வேண்டும்."

டாக்டர் சர்க்காரும் ம—வும் கூடத்திற்குட் புகுந்தனர். அங்கே சுற்றிலும் எங்கும் புத்தகங்கள் நிறைந்த அலமாரிகள் இருந்தன, டாக்டர் சிறிது நேரம் ஓய்வு பெற்றார். ம— புத்தகங்களை எடுத்துப் பார்த்தார். பாதிரியார் பாரர் என்பாரது 'இயேசுவின் சரித்திரம்' எனும் நூலைப் பொறுக்கி, ஒரு சில பக்கங்களை வாசித்தார். முதலாவது 'ஹோமியோபதி' ஆஸ்பத்திரி பெரும் எதிர்ப்பையும் கவனியாமலே தொடங்கப்பட்டது என்று டாக்டர் சர்க்கார் ம—விடம் சொன்னார். அது சம்பந்தமாக 1386-ம் ஆண்டுக் 'கல்கத்தா வைத்தியப் பத்திரிகை'யில் வெளியிடப்பட்டிருந்த கடிதங்களை வாசிக்குமாறு அவர் ம—வை வேண்டினார். டாக்டர் ஹோமியோபதியிற் பெரிதும் ஈடுபட்டிருந்தனர்.

ம— மங்கரது 'புதிய சமய சாஸ்திரம்' எனப்படும் இன்னொரு புத்தகத்தை எடுத்தார். டாக்டர் சர்க்கார் அதனைக் கவனித்தார்.

டாக்டர்: "மங்கர் தமது முடிபுகளை அழகான வழக்குகளாலும் யுக்திகளினாலும் நிலைநாட்டியுள்ளனர். ஒரு சைதன்யரோ ஒரு புத்தரோ ஒரு இயேசு நாதரோ சொல்லியுள்ளார் என்பதனால் மட்டும் ஒன்றை நீங்கள் நம்புவது போன்றதன்று அது."

ம— (சிரித்துக்கொண்டே): "ஆம், சைதன்யரையோ புத்தரையோ நாம் நம்பக் கூடாது; ஆனால் மங்கரைக் கட்டாயம் நம்பவேண்டும்!"

டாக்டர்: "நீர் என்ன சொன்னாலும் சரி."

ம—: "நாம் யாரேனும் ஒருவரைப் பிரமாணமாகக்கொண்டு அவரது வார்த்தையை எடுத்துக் கூறவேண்டும்; ஆதலால் அவர் மங்கராயிருந்தாலென்ன?" (டாக்டர் சிரிக்கிறார்)

டாக்டர் சர்க்கார் ம—வுடன் வண்டிக்குள் எறினர். வண்டி சியாம்புகூரை நோக்கிச் சென்றது. அப்போது பகலில் உச்சிவேளை. அவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்தனர், இடையிடையே குருதேவரைக் காண வந்துகொண்டிருந்த டாக்டர் பாதுரி என்பவரைப் பற்றிச் சம்பாஷணை நடந்தது.

ம— (சிரித்துக்கொண்டே): "உம்மைப்பற்றிய பேச்சு வரும்போது நீர் கல்லிலிருந்தும் செங்கலிலிருந்தும் மறுபடியும் பிறவி அனைத்தையும் தொடங்க வேண்டும் என்று பாதுரி கூறினார்."

டாக்டர் சர்க்கார்: "அது எப்படியோ?"

ம—: "எப்படியெனில், மஹாத்மாக்கள், லிங்க சரீரங்கள் முதலியவற்றில் உமக்கு நம்பிக்கையில்லாமையால். ஒருக்கால் பாதுரி 'தியாஸபி'

கொள்கையை நம்புபவர் போலும். மேலும், பகவானது அவதாரத்தை நீர் நம்புவதில்லை. அக்காரணத்தால், நீர் இம்முறை இறந்தபின் உமக்கு மனிதப் பிறவி நிச்சயமாக நேராதென்று கேலியாக அவர் உரைத்தார். அது உமக்குத் தொலையிலுள்ளதாகும். நீர் ஒரு மிருகமாகவோ, பறவையாகவோ, அம் மட்டோ, ஒரு மரமாகவோ, ஒரு செடியாகவோ கூட நீர் பிறக்கமாட்டீர். நீர் கல்லிலிருந்தும், செங்கல்லிலிருந்தும் மறுபடியும் பிறவி முழுதும் தொடங்கி யாகவேண்டும். பின்பு, எத்தனையோ பல பிறவிகட்குப்பின் நீர் மனிதப் பிறவியை அடையலாம்."

டாக்டர் சர்க்கார்: "என்ன கருணை!"

ம—: "மேலும் பாதுரி கூறியதாவது: உமது பௌதிக சாஸ்திர ஞானம் பொய்யான ஞானமாம். அம்மாதிரியான அறிவு கண நேரமே இருப்ப தாம். அவர் ஒரு உவமை கூறினர். இரு கிணறுகள் இருப்பதாக வைத் துக்கொள்வோம். ஒன்றிற்குத் தண்ணீர் அடியிலுள்ள ஊற்றினின்றும் வரு கிறது. மற்றொன்றிற்கு அம்மாதிரியான ஊற்று இல்லை; மழை நீர் நிரம்பி யுள்ளது. அதனால் இரண்டாவது கிணற்று நீர் நீண்ட காலம் இராது. உங் களது பௌதிக சாஸ்திர அறிவும் மழை நீரைப் போன்றது. அது வற்றி விடுகிறது."

டாக்டர் சர்க்கார் (புன்சிரிப்போடு): "அப்படியா?"

வண்டி கார்ண்வாலிஸ் தெரு வந்து சேர்ந்தது. டாக்டர் சர்க்கார் அதில் டாக்டர் பிரதாப் மசூந்தாரை ஏற்றிக்கொண்டார். பிரதாப் ஸ்ரீ ராமகிருஷ்ணரை அதற்கு முந்தின நாள் போய்ப் பார்த்திருந்தார். அவர்கள் விரைவில் சியாம்பு கூரைச் சேர்ந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது அறையில் இரண்டாவது மாடியில் பல அடியார்க ளோடு அமர்ந்திருந்தார்.

பிரதாப் டாக்டர் பாதுரியின் மகளுடைய கணவர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரிடம் அவரது மாமனாரைப்பற்றிப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தார்.

குருதேவர் (பிரதாப் இடம்): "அவர் எவ்வளவு பெரிய மனிதராகிவிட் டார்! அவர் பகவானைத் தியானிக்கிறார். தமது ஒழுக்கத்தில் தூய்மையைப் பின்பற்றுகிறார். மேலும், அவர் பகவானுடைய பகுதிகள் இரண்டையும்— ஸகுணம் நிர்க்குணம் எனும் இரண்டையும்—ஒப்புக்கொள்கிறார்.

(டாக்டர் சர்க்காரைப்பார்த்து) "டாக்டர் பாதுரி உம்மைப்பற்றி யாது கூறி னர் என்பதை நீர் அறிவீரோ? அவர் கூறியதாவது: உமக்கு இப்பொருள் களில் நம்பிக்கை இல்லை யாதலின், அடுத்த சதுர்யுகத்தில் உமது உலக வாழ்வை 'ஒரு கல்லிலிருந்தோ, செங்கல்லிலிருந்தோ தொடங்கவேண்டி யிருக்கும், என்பது." (அனைவரும் சிரித்தல்)

டாக்டர் சர்க்கார் (சிரிப்போடே): "ஒரு கல்லிலிருந்தோ செங்கலி லிருந்தோ நான் வாழ்வைத் தொடங்குவதாகவும், பல பிறப்புகட்குப் பின்

மனிதப் பிறவியைப் பெறுவதாகவும் வைத்துக்கொள்வோம்; ஆனால் யான் இவ்விடம் வந்ததும், கல்லிலிருந்தோ செங்கலிலிருந்தோ மறுபடியும் தொடங்க வேண்டியிருக்கும் போலும்" (டாக்டரும் பிறரும் எல்லோரும் சிரித்தல்)

குருதேவர் நோயோடிருந்தும் ஆவேச நிலை அடைவதைப்பற்றிய பேச்சு எழுந்தது.

பிரதாப்: "நேற்று தாங்கள் ஈசுவர ஆவேச நிலையில் இருந்ததை யான் கண்டேன்,"

குருதேவர்: "அது தானாகவே நிகழ்ந்தது; ஆனால் அது ஆழ்ந்ததாயிருக்கவில்லை."

டாக்டர் சர்க்கார்: ஆவேச நிலையும் பேச்சும் தங்கட்கு இப்போது நல்லனவாகா."

குருதேவர் (சர்க்காரிடம்): "எனது சமாதியில் நேற்று உம்மை யான் கண்டேன். நீர் அறிவுச் சுரங்கமாக இருப்பதாக அறிந்தேன்; ஆனால் எல்லாம் வறண்ட அறிவே. நீர் திவ்விய ஆனந்த ரஸத்தைச் சுவைத்தவர் அன்று. (டாக்டர் சர்க்காரைக் குறித்து, பிரதாப் இடம்) அவர் என்றேனும் திவ்விய ஆனந்தத்தைச் சுவைப்பாராயின் மேலும் கீழும் ஒவ்வொன்றும் ஆனந்தம் நிரம்பியிருப்பதைக் காண்பார். தாம் சொல்வதெல்லாம் சரியென்றும், பிறர் கூறுவது தவருனது என்றும், அப்போது அவர் உரைக்கமாட்டார். கூர்மையான வலிமையுள்ள அழுத்தமான வார்த்தைகள் அப்போது அவரிடத்தினின்றும் வாரா?"

அடியார்கள் மௌனமாயிருந்தனர்.

திடீரென ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு ஞான நிலையினை அடையலானார். டாக்டர் சர்க்காரை நோக்கி, "மஹேந்திர பாபு, பணத்தில் உமக்கு இவ்வளவு பைத்தியம் ஏன்? மனைவியிடம் அவ்வளவு பற்றுதல் ஏன்? பெயரிலும் புகழிலும் அவ்வளவு அவா எதற்காக? இவற்றையெல்லாம் விட்டுவிடும் இனி; முழு மனதோடும் ஈடுபட்டு, சித்தத்தை இறைவனிடம் திருப்புவீராக. தெய்விக ஆனந்த அனுபவத்தைப் பெறுவீராக."

டாக்டர் சர்க்கார் ஒரு மொழியும் புகலாமல் மௌனமாய் இருந்தார். அடியார்களும் பேசாதிருந்தனர்,

குருதேவர்: "ஞானி எவ்வாறு தியானிப்பார் என்பதை நங்தர் (நிருவாணியாயிருந்த தோதாப்புரி என்பார்) என்னிடம் இவ்வாறு சொல்வதுண்டு: எங்கும் நீரே; மேலும் கீழும் எல்லா உலகங்களிலும் நீர் நிரம்பியுள்ளது; ஒரு மீனைப் போன்று மனிதன் அந்நீரிலே ஆனந்தமாக நீந்திக்கொண்டிருக்கிறான். உண்மையான தியானத்தில் நீர் இதையெல்லாம் மெய்யாகக் காண்பீர்.

"ஞானி தியானிக்கும் இன்னொருவகை உண்டு தெரியுமா? எல்லையற்ற ஆகாயத்தையும், அதிலே ஒரு பறவை தனது சிறகுகளை விரித்துக்கொண்டு ஆனந்தமாகப் பறப்பதையும் நினையும். ஆகாசம் சித் (சைதன்ய) ஆகாசம்; ஆத்மாதான் பறவை. பறவை ஒரு கூட்டுக்குள் சிறைப்பட்டிருக்கவில்லை,

அது சைதன்ய ஆகாசத்தே பறக்கின்றது. அதன் ஆனந்தத்திற்கோ வரையறை இல்லை."

தியானத்தைப் பற்றிய இம்மொழிகளை அடியார்கள் பெருங்கவனத்தோடு கேட்டுக்கொண்டிருந்தனர். சிறிது நேரஞ் சென்றபின் பிரதாப் தம் சம்பாஷணையை மறுபடியும் தொடங்கினர்.

பிரதாப் (டாக்டர் சர்க்காரிடம்) : "ஒருவர் ஆழ்ந்து நினைக்கும்போது எல்லாம் நிழல்மாதிரியாக இருப்பதைச் சந்தேகமின்றிக் காண்கிறான்."

டாக்டர் சர்க்கார் : "நீர் நிழலைப்பற்றிப் பேசுவீராயின், மூன்று பொருள்கள் அவசியமாகும் ; அவையாவன : சூரியனும், பொருளும், நிழலும். பொருளின்றி ஏதேனும் ஒரு நிழல் உண்டாவது எவ்வாறு இயலும் ? நீர் சொல்கிறீர்; பகவானே மெய்ப்பொருள், அவரது படைப்பு பொய்யானது என்று ; யான் சொல்வதாவது, படைப்பும் உண்மையே என்பது."

பிரதாப் : "மிக நன்று. கண்ணாடியில் நீர் பிரதி பிம்பத்தைக் காண்பது போல், உமது மனமாகிய கண்ணாடியில் இப் பிரபஞ்சத்தை நீர் காண்கிறீர்."

டாக்டர் சர்க்கார்: "ஆனால் பொருளின்றி அதன் பிம்பம் எவ்வாறு உண்டாகும் ?"

நரேந்திரர்: "ஏன் ? ஈசனே பொருள்."

டாக்டர் சர்க்கார் மௌனமாய் இருந்தார்.

குருதேவர் (டாக்டர் சர்க்காரிடம்): "நீர் மிக அழகான ஒன்றை உரைத்தீர். மனம் ஈசனோடு கலந்து ஒன்றுவதன் பயனாக சமாதி உண்டாகிறது என்பதை இதற்கு முன் வேறெவரும் கூறவில்லை. நீரே அதை உரைத்தீர்.

"ஈசனை அளவுக்கு மிஞ்சி நினைப்பதனால் ஒருவன் தனது அறிவை இழந்துவிடுகிறான் என்று சிவநாதர் கூறினர். வேறு வழியாக அதைக்கூறின், உலகெங்கும் பரந்த சைதன்யத்தைத் தியானிப்பதால் அசைதன்யம் (அறிவின்மை) உண்டாகிறது என்பதாம். இதை நினைத்துப் பாருங்கள் ! போதஸ்வரூபமாய் உள்ளவனும், தனது போதத்தால் உலகமுழுவதற்கும் போதத்தை ஊட்டுபவனுமான ஈசனைப்பற்றிய சிந்தனையால் போதமற்ற நிலை வருமாம் !

"உமது 'விஞ்ஞானம்' என்ன சொல்கிறது ? இதுவும் இதுவும் ஒன்று சேர்ந்து அதை உண்டாக்குகிறது ; அதுவும் அதுவும் கூடி இதை உண்டாக்குகிறது. இம்மாதிரி விஷயங்களைப் பற்றிச் சிந்திப்பதால், அளவிற்கு மிஞ்சி சடப் பொருள்களைக் கையாளுவதால்—அறிவை இழக்கச் சந்தர்ப்பம் அதிகமாக வாய்க்கும்."

டாக்டர் சர்க்கார் : "அம்மாதிரிப் பொருள்களிலும் ஒருவர் ஈசனைப் பார்க்க இயலுமே.'

ம—: "அவ்வாறுயின், அதனினும் மிகத் தெளிவாக மனிதனிடத்தும், இன்னும் மிக நன்றாக ஒரு மகாத்மாவிடத்தும் ஈசனைக் காணக்கூடும். ஒரு மஹாத்மாவினிடம் ஈசனது பிரகாசம் மிக அதிகமாகும்."

டாக்டர் சர்க்கார்: "ஆம், மனிதனிடம் அதிகம் என்பதில் ஐயமில்லை."

குருதேவர்: "எவனது சைதன்யத்தால் சடப்பொருளும் சைதன்ய முடையதாகத் தோன்றுகிறதோ, கைகளும் கால்களும் உடலும் அசையுமோ, அந்த ஈசனைத் தியானிப்பதால் சைதன்யமற்றவனுவதாம்! உடல் தானுக அசைகின்றது என்பர் மக்கள்; ஆனால் ஈசனே அதை அசையச் செய்கிறுன் என்பதை அவர்கள் அறியார். நீர் கையைப் பொசுக்குகிறது என்று சொல்லுவர். ஆனால் நீர் எவ்விதத்தும் கையைப் பொசுக்க மாட்டாது; நீரிலுள்ள சூடே, நீரிலுள்ள நெருப்பே பொசுக்குகிறது. இந்திரியங்கள் தமது தொழிலைத் தாமே செய்கின்றன என்பான் மனிதன்; ஆனால் போத சொருபியான ஈசனே உள்ளே வசிக்கிறுன் என்பதை அவன் அறியான்."

டாக்டர் சர்க்கார் எழுந்தார். அவர் விடைபெறுவதற்குத் தயாராயிருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் எழுந்து நின்ருர்.

டாக்டர் சர்க்கார்: "மக்கள் இறைவனை அழைப்பது ஒரு முட்டுப்பாடு நேரும்போதுதான். வெறும் விளையாட்டுக்காகவோ அவர்கள் 'ஈசா! நீ, நீ' என்கின்றனர்? உங்களது தொண்டையிலுள்ள அந்தச் சங்கடத்தினுலன்ருே நீங்கள் ஈசனைப்பற்றிப் பேசுகிறீர்கள்?"

குருதேவர்: "எனக்குச் சொல்வதற்கு யாதொன்றும் இல்லை."

டாக்டர் சர்க்கார்: "ஏன் இல்லை? நாம் பகவானது மடியில் கிடக்கிறேம். நாம் அவரிடம் கூசாது தாராளமாகப் பழகுகிறேம். ஆக, நமது நோயைப்பற்றி அவர்க்கல்லாது வேறு எவர்க்குச் சொல்வோம்?"

குருதேவர்: "நீர் சொல்வது சரியே. எப்போதாவது ஒருமுறை அவரிடம் அதைப்பற்றிப் பேச நான் முயல்கிறேன்! ஆனால் அது பலிப்பதில்லை."

டாக்டர் சர்க்கார் வெளியேறினர். ம— ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கு அருகே உட்கார்ந்து, டாக்டர் சர்க்காரது வீட்டிலே தமக்கும் அவர்க்கும் நடந்த சம்பாஷணையைத் திரும்பக் கூறினர்.

ம—: "அவர் 'ஒரு சைதன்யரோ ஒரு புத்தரோ ஒரு கிறிஸ்துவோ ஒன்றைக் கூறினர் என்பதனல் மட்டும் அதை நான் நம்புவது கட்டாயமா? அது முறையன்று' என்றனர்."

குருதேவர்: "அவர் இவ்விடத்தை (தம்மையே குறிப்பிட்டு) நினைத்துக்கொண்டிருக்கிறர். அவரது நம்பிக்கை வளர்ந்து வருகிறது. அகங்காரத்தை முற்றும் நீக்கிவிடுதல் இயலுமா? அவ்வளவு பாண்டித்தியம்; அவ்வளவு புகழ்! அவரிடம் அவ்வளவு பணமும் உள்ளது! ஆனலும், நான் சொல்வதை அவர் அவமரியாதை செய்வதில்லை."

சனிக்கிழமை அக்டோபர் 31, 1885

காலையில் ஏறக்குறையப் பதினெரு மணி. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடியார்களோடு தமது அறையில் உட்கார்ந்திருந்தார். மிஸ்ரா என்னும் பெயருடைய

ஒரு கிறிஸ்தவ அடியாரோடு அவர் பேசிக்கொண்டிருந்தார். மிஸ்ரா வட மேற்கு இந்தியாவில் ஒரு கிறிஸ்தவ குடும்பத்திற் பிறந்தவர், 'குவேக்கர்' என்ற மதப்பிரிவைச் சேர்ந்தவர். அவர் முப்பத்தைந்து வயதானவர். ஐரோப்பிய உடை அணிந்திருந்தார் எனினும், அவர் அந்த அன்னிய நாட்டு உடையின் கீழ் ஒரு சன்னியாசிக்குரிய காவியாடை உடுத்திருந்தார். அவருடைய சகோதரர்களில் இருவர் ஒருவரது மணத்திற்கெனக் குறிப்பிட்டிருந்த நாளிலே மரித்தனர். அன்றே மிஸ்ரர் உலகத்தைத் துறந்துவிட்டார்.

மிஸ்ரர்: "எல்லா உயிர்களிடத்தும் வாழ்பவர் இராமரே."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் மிஸ்ரருக்குக் காதில் விழும்படி இளைய நரேனிடம் கூறியதாவது; "ராமர் ஒருவரே; ஆனால் அவர்க்கு ஆயிரம் திருநாமங்கள் உண்டு, கிறிஸ்தவர்களால் 'ஆண்டவன்' என்னப்படுபவரையே இந்துக்கள் 'ராமர்' 'கிருஷ்ணர்' 'ஈசுவரர்' முதலிய பெயர்களால் அழைக்கின்றனர்."

மிஸ்ரர்: "இயேசு மேரியின் குமாரரல்லர், அவர் கடவுளே. (அடியார்களைப் பார்த்து) இப்போது அவர் (ஸ்ரீராமகிருஷ்ணரைச் சுட்டி) நீங்கள் அவரைப் பார்க்கிறபடி உள்ளார்—இன்னும் அவர் கடவுளாகவும் உள்ளார். அவரை இன்னரென்று அறிய உங்கட்கு முடியவில்லை. இப்போது நேராக எனது கண்களால் பார்க்கிறேன் எனினும், முன்பு அவரை ஞானக் காட்சிகளில் கண்டுள்ளேன்."

குருதேவர்: "உமக்கு ஞானக் காட்சிகள் உண்டாகின்றனவா?"

மிஸ்ரர்: "யான் வீட்டில் வாழ்ந்த காலத்தும், ஜோதியைத் தரிசிப்பதுண்டு. பின்பு இயேசுவின் தரிசனம் பெற்றேன். அந்த அழகை யான் எவ்வாறு வருணிக்கக் கூடும்? அந்த அழகோடு ஒப்பிட்டு நோக்கும்போது ஒரு பெண்ணின் அழகு எவ்வளவு அற்பமாகிறது!"

சிறிது நேரம் சென்றபின், மிஸ்ரா தமது கால் சட்டையைக் கழற்றிவிட்டு, அடியிலே அணிந்திருந்த காவி அரையாடையை அடியார்கட்குக் காட்டினர்.

உடனே ஸ்ரீ ராமகிருஷ்ணர் வெளியே பாதை வழியாகச் சென்றார். அறைக்கு மீண்டு, அடியார்களை நோக்கி, "அவர் (மிஸ்ராவைக் குறித்து) வீர நிலையில் நிற்பதை யான் கண்டேன்" என்று உரைத்தார். இவ்வார்த்தைகளைக் கூறியதும் அவர் சமாதியிற் புகுந்தார். அவர் மேற்கு நோக்கித் திரும்பி நின்றார்.

ஒருவாறு உணர்வு மீண்டதும், அவர் தமது பார்வையை மிஸ்ராவின்மீது நிலைநாட்டிச் சிரிக்கத் தொடங்கினர். இன்னும் ஆவேச நிலையில் நின்றவராய் அவரது கையைக் குலுக்கி, மறுபடியும் சிரிக்கலானர், அவரது கைகளைப் பிடித்துக்கொண்டு, "நீர் தேடுவதை அடைவீர்" என்றனர்.

மிஸ்ரா(கைகளைக் கட்டிக்கொண்டு): "அன்று முதலே எனது மனம் உயிர் உடல் மூன்றையும் தங்களிடம் ஒப்பித்துவிட்டேன்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் அப்போதும் ஆவேச நிலையில் உள்ளவராய், சிரித்துக் கொண்டிருந்தார்.

டாக்டர் சர்க்கார் வந்து சேர்ந்தார். அவரைக் கண்டதும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சமாதியிற் புகுந்தார். அவரது ஆவேசம் சற்றே தணிந்ததும், அவர் 'முதலில் தெய்விக வெறியால் எழும் ஆனந்தம், பின் காரணத்திற்கும் காரணமான சச்சிதாநந்தம்'' என்றனர்.

டாக்டர்: "ஆம்."

குருதேவர்: "யான் உணர்வற்ற நிலையில் இல்லை."

குருதேவர் தெய்விக ஆனந்தத்தால் வெறியுற்றிருப்பதாக டாக்டர் உணர்ந்தார். அதனால் அவர் "இல்லை, இல்லை தாங்கள் முற்றிலும் உணர்வோடிருக்கிறீர்கள்" என்றனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிரிப்புற்றவராய் இவ்வாறு சொல்லலானார்;

சாதா ரணமது நான்குடியேன்
சந்தத மின்ப மதுக்குடிப்பேன்
மாதா காளியின் நாமமதை
மறவா தோதும் போதினிலே
உள்ளத் தேயெழும் வெறிகாண்பார்
ஓதுவர் என்னைக் குடியனென்றே.

டாக்டர் அவ்வார்த்தைகளைக் கவனிக்கும் போதே, அவரும் கிட்டத்தட்ட ஆவேச நிலையினை அடையலானார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் மறுபடியும் தெய்வ ஆவேச நிலையில் ஆழ்ந்தார்; தமது திருவடியை டாக்டரது மடிமீது வைத்தார். சில நிமிஷங்கட்குப் பின் அவர் வெளியுலக உணர்வைப் பெற்றதும், தமது பாதத்தை எடுத்துக்கொண்டார். அவர் டாக்டரிடம், "அன்று நீர் எவ்வளவு அழகான வார்த்தையை உரைத்தீர்!—'நாம் பகவானின் மடிமீது கிடக்கிறோம். அவரிடம் அல்லாது வேறு எவரிடம் நமது நோயைப்பற்றிப் பேசுவது' என்று. நான் பிரார்த்திப்பது கட்டாயமானால், நான் அவரிடமே பிரார்த்திப்பது உறுதி" என்று சொன்னார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இம்மொழிகளைக் கூறும்போது, அவருடைய கண்களில் நீர் நிரம்பியது. மறுபடியும் அவர் தெய்விக ஆவேச நிலையிற் புகுந்து, டாக்டரிடம், "நீர் மிகத் தூய்மையுடையவர்; இல்லாவிடில் நான் எனது காலை உமது மடியில் வைத்திருக்க முடியாது" என்று கூறினார். பின்னும் அவர் தொடர்ந்து பேசியதாவது: "'ராம ஆனந்தத்தைச் சுவைத்திருப்பவன் ஒருவனே சமாதானம் அடைவான்.' இவ்வுலகம் யாது? அதில் என்ன உள்ளது? பணத்திலோ, செல்வத்திலோ, சரீரத்திலோ இருப்பது யாது? 'மனமே, ராமரை அறி! வேறெவரை நீ அறியவேண்டும்?'"

வெள்ளி நவம்பர் 6, 1885

அன்று காளி பூஜை நாள், ஸ்ரீ ராமகிருஷ்ணரது இஷ்ட தெய்வமான தேவியம்மையை வழிபடும் தினம். காலை ஏறக்குறைய ஒன்பது மணி இருக்கும்; குருதேவர் புதிய ஆடை அணிந்துகொண்டு, சியாமப்புகூரில் அப்போது வாழ்ந்து

வந்த கட்டடத்தில் இரண்டாவது மாடியில் உள்ள தெற்கு அறையில் நின்றனர். மத்திய கல்கத்தாவில் தாந்தானியாவில் உள்ள தேவியம்மையை, மலரும் இள நீரும் சருக்கரையும் பிற தித்திப்பான பண்டங்களும் கொண்டு வணங்கும்படி ம—விடம் அவர் சொல்லியிருந்தார். கங்கையில் நீராடியபின், ம— பூஜையை முடித்துவிட்டு, சியாம்புகூர்க்கு வெறுங்காலோடு வந்தார். அவர் பிரசாதத்தைத் தம்மோடு கொணர்ந்திருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது செருப்புகளை நீக்கி விட்டு, பெரும் பக்தி சிரத்தையோடு பிரசாதத்தில் ஒரு சிறிதை உண்டு, ஒரு சிறிதைத் தமது தலைமீதும் இட்டுக்கொண்டனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ம—வோடு அறையில் உலவிக்கொண்டிருந்தார். அவர் செருப்பை அணிந்திருந்தார். நோயின் துன்பம் இருந்தும், அவரது முகம் ஜோதி வீசிக்கொண்டிருந்தது.

குருதேவர்: "இப்பாட்டும் மிக நல்லது; 'இவ்வாழ்வாவது மயக்க மயம்.'"

ம—: "ஆம், ஐயன்மீர்."

திடீரென ஸ்ரீ ராமகிருஷ்ணர் எழுந்தார். அவர் தமது செருப்புகளைக் கழற்றி ஒரு பக்கம் வைத்தார், அசையாது நின்றார். அவர் சமாதியில் ஆழ்ந் தார். அன்று தேவியை வணங்கும் நாள். அவர் அடிக்கடி சமாதி நிலைக்குச் சென்றதன் காரணம் அதுதானே? நீண்ட நேரம் கழிந்தபின் அவர் பெருமூச் செறிந்து, தமது உணர்ச்சியை மிக்க சிரமத்துடன் அடக்கியவர்போல் அடக்கிக் கொண்டார்.

ஏறக்குறைய மணி பத்து. ஸ்ரீ ராமகிருஷ்ணர் தலையணைமீது சாய்ந்து கொண்டு, தமது படுக்கையின் மீது அமர்ந்திருந்தார். அடியார்கள் அவரைச் சுற்றி உட்கார்ந்திருந்தனர். ராமர், ராக்கால், நிரஞ்சன், காளிபாதர், ம— முத லான பலரும் அங்கிருந்தனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ம—விடம் சொன்னார். "இன்று காளி பூஜை நாள். தேவியை வணங்கச் சில ஏற்பாடுகள் செய்வது நன்று. அடியார்களிடம் அதைப் பற்றிப் பேசும்."

ம— கூடத்திற்குச் சென்று, குருதேவர் கூறியதை அடியார்களிடம் உரைத் தார். காளிபாதரும் பிறரும் அந்த ஏற்பாடுகள் சம்பந்தமாகச் சுறுசுறுப்பா யிருந்தனர்.

அன்று அமாவாசை இரவு. ஏழு மணிக்கு அடியார்கள் இரண்டாவது மாடியில் ஸ்ரீ ராமகிருஷ்ணரது அறையில் காளி பூஜைக்கு ஏற்பாடு செய்தனர். மலர்கள், சந்தனம், வில்வதளங்கள், செம்பருத்திப்பூ, பாயசம், பலவகைத் தீஞ்சுவைப் பண்டங்கள், இன்னும் பூஜைக்குரிய மற்றைய சாமான்கள் குரு தேவரது முன்னிலையில் வைக்கப்பட்டிருந்தன. அடியார்கள் அவரைச் சுற்றி

அமர்ந்திருந்தனர். சரத், சசி, ராம், கிரீஷ், சுனிலால், ம—, ராக்கால், நிரஞ்சன், இளைய நரேன் பிறரோடும் இருந்தனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஓர் அடியாரிடம் சிறிது தூபம் கொண்டுவரும்படிக் கூறினர். சிறிது நேரத்திற்குப் பின் அவர் எல்லாப் பொருள்களையும் தேவிக்கு சமர்ப்பித்தனர். ம— அவரது அருகே உட்கார்ந்திருந்தார். ம—வைப் பார்த்து, அவர் அடியார்களிடம் "சிறிது தியானம் செய்க" என்றனர். அடியார்கள் தமது கண்களை மூடிக்கொண்டனர்.

சற்றுப் பின் கிரீஷ் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய திருவடி மீது ஒரு மலர் மாலையை இட்டனர். ம— பூவும் சந்தனமும் இட்டனர். ராக்காலும் ராமும், மற்ற அடியார்களும் அவரைப் பின்பற்றி அவ்வாறே செய்தனர்.

நிரஞ்சன் ஸ்ரீ ராமகிருஷ்ணரது திருவடியில் ஒரு மலரை இட்டு, "பிரம்ம மயி, பிரம்மயி" என்று கூறி, குருதேவரது திருவடியைத் தமது தலையால் தொட்டு அவர் முன்பு விழ்ந்து வணங்கினர். அடியார்கள் "ஜய மா!" "தேவிக்கு ஜே!" என்று கூச்சலிட்டனர்.

இமைக்கும் பொழுதிற்குள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சமாதியில் ஆழ்ந்தார். அவரது முகத்திலே தெய்வீக ஜோதி திகழ்ந்தது. அவருடைய திருக்கரங்கள் இரண்டும் அன்பர்க்கு வரந்தரும் நிலையிலும் அபய மளிக்கும் நிலையிலும் உயர்த்தப்பட்டன. காளி தேவியின் திருவடிவங்களில் எவரும் காணும் நிலையே அது. அவரது உடல் அசைவற்றிருந்தது; வெளி யுலக உணர்ச்சி யற்றவரா யிருந்தார். அவர் வடக்கு நோக்கி அமர்ந்திருந்தார். ஜகன்மாதாவே அவரது உடல் மூலம் தம்மைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தனரா? ஆச்சரியத்தால் பேச்சற்றவராய், அடியார்கள் ஸ்ரீராமகிருஷ்ணரை உற்று நோக்கிக்கொண்டிருந் தனர்; தேவியம்மையின் திருவுருவமாகவே அவர் அவர்கட்குத் தோன்றினர்.

அடியார்கள் தோத்திரப் பாக்கள் பாடத் தொடங்கினர்; ஒருவர் முதலில் தொடங்க, பிறர் ஒன்று சேர்ந்து அதையே திரும்பப் பாடலானார்.

வர வர ஸ்ரீ ராமகிருஷ்ணர் வெளி யுலக உணர்ச்சியை மீண்டும் பெற லானார். "சுதாதரங்கிணி மயமான சியாம அன்னையே" (தெய்வ வெறி யலை கள் நிறைந்த தேவியே) என்னும் பாட்டைப் பாடும்படி அடியார்களை வேண்டினர். அவர்களும் அதனைப் பாடினர்.

அப்பாட்டு முடிந்ததும், "சிவபெருமானெடும் விளையாடி மகிழ் என் அம்மையைக் காணீர்" எனும் பாடலையும் பாடும்படி அடியார்களை வேண்டினர். அடியார்கள் அதனையும் பாடினர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடியார்களை மகிழ்விக்கும் பொருட்டு ஒரு சிறிது பாயசத்தைச் சுவைத்தனர்; ஆனால் உடனே அவர் பக்தி பரவச நிலையில் ஆழ்ந்தனர்.

சில நிமிஷங்கட்குப் பின் அடியார்கள் குருதேவர் முன்பு வீழ்ந்து வணங்கி, கூடத்திற்குட் சென்றனர். அங்கே அவர்கள் பிரசாதம் அருந்தி இன்புற்றனர்.

இரவில் ஒன்பது மணி. சுரேந்திரரது இல்லஞ்சென்று, காளி பூஜையிற் கலந்துகொள்ளுமாறு அடியார்கட்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்லியனுப்பித்தனர்.

அவர்கள் ஸிம்லா தெருவில் சுரேந்திரரது மனையினை அடைந்தனர், மிக்க அன்போடு அவர்கள் வரவேற்கப்பட்டனர். சுரேந்திரர் இரண்டாவது மாடியிலுள்ள கூடத்திற்கு அவர்களை அழைத்துச் சென்றனர். இல்லமெங்கும் விழாவின் இனிமை நிரம்பியிருந்தது; அடியார்களின் பாட்டுகளாலும் சங்கீதத்தாலும் ஆனந்தமே எங்கும் குடிகொண்டிருந்தது. குருதேவரின் பிரிய சீடர் சுரேந்திரர் அளித்த பெரு விருந்துண்டு களித்தபின், அடியார்கள் தமது வீடுகட்குத் திரும்பியபோது இரவில் வெகு நேரமாயிற்று.

11

காசிப்பூரில் குருதேவர்

புதன்கிழமை, டிசம்பர் 23, 1885

டிசம்பர் 11-ம் தேதி வெள்ளிக்கிழமையன்று, கல்கத்தாவைச் சேர்ந்த ஓர் உட்பகுதி யாகிய காசிப்பூரில் உள்ள ஓர் அழகிய மாளிகைக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் அழைத்து வரப்பட்டார். இம் மாளிகையைச் சுற்றி ஐந்து ஏக்கர் நிலமும், அதிலே பழமரங்களும் பூச்செடிகளும் நிறைந்த ஒரு தோட்டமும் இருந்தன. இங்கேதான் குருதேவரது வாழ்க்கை யாகிய நாடகம் முடிவுறலாயிற்று.

காசிப்பூரிலே அவர் வெகுநாட்கு முன்னமே தக்ஷிணேசுவரத்தில் தாம் தொடங்கியிருந்த ஞானதானப் பணியை முடிப்பதற்காக முன்னும் மிக்க ஊக்கத்தோடு முயன்று வந்தார். தமது உடல் வாழ்வின் முடிவு நெருங்கிக்கொண்டிருப்பதை உணர்ந்த அவர் தமது ஞானச் செல்வங்களையெல்லாம் தாராளமாக அனைவர்க்கும் அளித்து வரலானார். பழம் விற்பவர்கள் தமது பழங்களைக் கொணர்ந்து, முதலில் விலைபேசி முடிவு பண்ணுகின்றனர். ஆனால், மாலை நேரத்தில் சந்தை கலையும் சமயம், பழங்களை யோசனையின்றி வந்த விலைக்குக் கொடுத்துப் போவார்; ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவர்களில் ஒருவரைப்போலானார். இங்கே அவருடைய ஞான சக்திகள் வேறெவ்விடத்திலும் இல்லாத மிக்க அளவிற்குப் பிரகாசித்ததை அடியார்கள் கண்டனர். தமது முடிவைப்பற்றி அவர் முன்னுணர்ந்து கூறிய பின்வரும் மொழிகள் நிறைவேறியதை இங்கே அவர்கள் கண்டனர்: "நான் போகுமுன் எல்லாவற்றையும் பலர் அறிய வெளியிடுவேன்." "ஏராளமாக மனிதர் இவ்வுடலின் பெருமையை உணரவும், தமக்குள்ளே மெல்லப் பேசிக்கொள்ளவும் ஆரம்பிக்கும்போது, தேவி அதனை எடுத்துக்கொண்டு விடுவாள்." "அடியார்கள் அந்திம காலத்திலே அந்தரங்கரென்றும், பகிரங்கரென்றும், பிரிக்கப்படுவார்கள்." இன்னும் பிறவும். நரேந்திரரது தலைமையின் கீழ் இளைஞரான சீடர்கள் திரண்டு, தக்க காலத்தில் உலகைத் துறந்து, ஈசுவர தரிசனத்திற்கும் மன்னுயிர்ப் பணிக்கும் என்றே கங்கணங் கட்டிக்கொண்டு முன் நிற்பர் என்பதை இங்கே முன்னுணர்ந்து உரைத்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் காப்பதற்காக இளைஞரான அடியார்கள் காசிப்பூர்ப் பூஞ்சோலை மாளிகையிலே வாசஞ் செய்யலானார்; எனினும் அவர்களிற் பலர்

இடையிடையே தமது சொந்த இல்லங்கட்கும் போய் வருவதுண்டு. இல்லற அடியார்கள் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் குருதேவரைக் காண வருவார்; அவர்களிற் சிலர் சில சமயங்களில் இரவையும் அங்கே கழிப்பர்.

டிசம்பர் 23-ம் தேதி காலை ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடியார்கள் மீது தமக்கு இருந்த அன்பைத் தங்கு தடையின்றி வெளியிடலானார். காளிபாதரது மார்பைத் தொட்டுக்கொண்டு, அவர் "உனது ஆன்மா விழித்தெழுவதாக!" என்று உரைத்தார். ஆதரம் பெருக அவர் காளிபாதருடைய மோவாயைத் தடவி, "இறைவனை மனமாரக் கூவி யழைத்தவர் எவரெவரோ, நித்திய சமய அனுஷ்டானங்களை இயற்றி வந்தவர் எவரெவரோ, அவர்கள் யாவரும் இங்கே வருவது உறுதி" என்றனர். அன்று காலையில் இரு மாதர் அவரது சிறப்பான ஆசீர்வாதங்களைப் பெற்றனர். சமாதி நிலையில் இருந்தபோது அவர் தம் திருவடிகளால் அவர்களுடைய நெஞ்சுகளைத் தொட்டனர். அவர்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். அழுதுகொண்டே அவர்களில் ஒருவர் "தங்களது அன்பை என்னென்பது!" என்று கூறினர். இன்று அவருடைய அன்பு உண்மையாகவே எல்லா எல்லைகளையும் மீறியதாயிற்று. சிந்தியூர்க் கோபலர்க்கு அருள் வழங்க அவர் விரும்பி, ஓர் அடியாரிடம் "கோபாலனை இங்கு அழைத்து வா" என்றார்.

மாலைப்பொழுது வந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஜகன்மாதாவைப் பற்றிய தியானத்தில் மூழ்கியிருந்தார். சிறிது நேரத்திற்குப்பின் சில அடியார்களோடு அவர் மிக இனிமையாகப் பேசத் தொடங்கினர். காளி, சூனிலால், ம—, நவகோபாலர், சசி, நிரஞ்சனர் இன்னும் சிலரும் இருந்தனர்.

குருதேவர்: "இந்நோய் நீங்கி யான் முன்போலாக எவ்வளவு காலம் பிடிக்கும் என்று நீர் எனக்குச் சொல்லக்கூடுமா?"

ம—: "அது ஒரு சிறிது அதிகமாயுள்ளது; இன்னும் சில நாள் செல்லும்."

குருதேவர்: "எவ்வளவு காலம்?"

ம—: "ஒருக்கால் ஐந்து ஆறு மாசங்கள் ஆகலாம்."

இதைக் கேட்டதும் ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு குழந்தைபோலப் பொறுமையற்றவராய், "அவ்வளவு காலமா? உனது கருத்து யாது?" என்று கேட்டனர்.

ம—: "நோய் முற்றும் குணமாக, என்பதே கருத்து."

குருதேவர்: "அப்படியா? சரி, எனக்குக் கவலை ஒழிந்தது. நீ ஒன்றை எனக்கு விளங்கக் கூறுவாயா? இத்தனை தரிசனங்களும், இவ்வளவு ஆவேச நிலையும், சமாதியும் பெற்றிருந்தும், நான் இவ்வாறு பிணியோடிருப்பதேன்?"

ம—: "உமது துயரம் பெரிதே என்பதில் ஐயமில்லை; ஆனால் அதற்கு ஓர் ஆழ்ந்த பொருளுண்டு."

குருதேவர்: "அது யாது?"

ம—: "தங்களது உள்ளத்தில் ஒரு மாறுதல் நிகழ்ந்து வருகின்றது. நிராகார ஈசனின்மீது அவ்வுள்ளம் திருப்பப்படுகிறது. தங்களது 'வித்யா அஹங்கார'மும் மறைந்து கொண்டுவருகிறது."

குருதேவர்: "அது உண்மையே. பிறர்க்கு யான் போதிப்பதும் முடிவாகப்போகிறது. இனி அதிகமாகக் கற்பிக்க எனக்கு இயலாது, எல்லாம் பகவானே எனக் காண்கிறேன். சில சமயம் 'நான் யார்க்குப் போதிப்பேன்?' என்று எனக்குள்ளே சொல்லிக் கொள்கிறேன். பார்த்தீரா? யான் ஒரு வாடகை வீட்டில் குடியிருப்பதனால் எல்லாவித அடியார்களும் இங்கு வந்து கொண்டிருக்கின்றனர். எனது பிரசங்கங்களை உலகிற்கு அறிவிக்க வேண்டி, சசாதரையும் கிருஷ்ணப் பிரசன்னரையும் போன்று, ஒரு பலகையில் விஷயத்தை எழுதிக் தொங்கவிட வேண்டியிராதென்று யான் நம்புகிறேன்." (குருதேவரும் ம—வும் சிரிக்கின்றனர்.)

[சசாதரும் கிருஷ்ணப் பிரசன்னரும் ஸ்ரீ ராமகிருஷ்ணரது சம காலத்தவரான இரண்டு புகழ்பெற்ற இந்து மதப் பிரசாரகர்.]

ம—: "இந்நோயில் வேறொரு நோக்கமும் உள்ளது. முடிவாக அடியார்களை இருதரமாகப் பிரித்தலே அது, அடியார்கள் ஐந்து ஆண்டுகாலம் தவஞ்செய்தாலும் பெற முடியாத அனுபூதிகளை இச் சில நாள்களில் பெற்றுள்ளனர். அவர்களுடைய அன்பும் பக்தியும் விரைவாகப் பெருகி வருகின்றன."

குருதேவர்: "அது உண்மையாகலாம்; ஆனால் நிரஞ்சன் வீட்டுக்குத் திரும்பிப்போனன். (நிரஞ்சனிடம்) உனது மனோபாவனை எப்படி உள்ளது என எனக்குக் கூறு."

நிரஞ்சன்: "முன்பு நான் தேவரீரை நேசித்தேன் என்பதில் ஐயமில்லை; ஆனால் இப்பொழுதோ தேவரீர் இல்லாது வாழ்தலும் முடியாததாய் விட்டது."

ம—: "ஒருநாள் இவ்விளைஞர் எவ்வளவு உயர்வுடையவர் என்பதையும் அறிந்தேன்."

குருதேவர்: "எங்கேயோ?"

ம—: "ஐயன்மீர் ஒருநாள் சியாம்புகூர் வீட்டில் ஒரு மூலையில் யான் நின்றேன். அவர்களில் ஒவ்வொருவரும் கிட்டத்தட்ட வெல்ல முடியாதன எனத்தக்க இடையுறுகளையும் தாண்டி இங்குவந்து, தங்கட்குப் பணி செய்வதற்காகத் தம்மை ஒப்படைத்துள்ளனர்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் இம்மொழிகளைக் கவனித்துக் கேட்டலும், அவரது மனம் உண்முகமாயிற்று, ஒரு சில நிமிஷங்கள் அவர் மௌனமாயிருந்தார். சற்றே பொழுதில் அவர் சமாதி நிலைக்குச் சென்றுவிட்டார்.

வெளியுலக உணர்வை மீண்டும் பெற்றதும், அவர் ம—விடம் ஒவ்வொன்றும் வடிவமுள்ள நிலையிலிருந்து வடிவமற்ற நிலைக்குச் செல்வதைக்

கண்டேன், நான் கண்ட எல்லாவற்றையும் உங்கட்குக் கூற எனக்கு விருப்பம்; ஆனால் என்னால் இயலவில்லை. வடிவமற்ற நிலையை நோக்கிச் செல்லும் இந்த சுபாவம் எனது அந்திமகாலம் நெருங்குவதை உணர்த்தும் அறிகுறியே யாகும். அது அவ்வாறில்லையா ?"

ம — (ஆச்சரியத்தோடு) : "அது அவ்வாது ஆகலாம்."

குருதேவர்: "இப்போதும் யான் வடிவற்ற (நிராகார) அகண்ட சச்சி தானந்தத்தைக் கண்டுகொண்டிருக்கிறேன் — அப்படியேதான் அது..... ஆனால் எனது உணர்ச்சிகளை மிக்க வருத்தப்பட்டு அடக்கி வைத்துளேன்.

"சீடர்களை இருதரமாகப் பிரிப்பதைப்பற்றி நீ கூறியதும் உண்மையே; யார் யார் அந்தரங்க (உள்) வகுப்பையும், யார் யார் பஹிரங்க (வெளி) வகுப் பையும் சேர்ந்தவர் என்பதை இந்நோய் காட்டிக்கொண்டுள்ளது. உலக வாழ் வைத் துறந்து இங்கே வசிப்பவர் அந்தரங்க வகுப்பைச் சார்ந்தவர். இடை யிடையே இங்குவந்து பார்த்துவிட்டு, 'தங்களது உடல் நிலைமை எப்படி ?' என்று விசாரிப்போர் பஹிரங்க வகுப்பினராவர்.

(ம—வைப் பார்த்து) "பகவான் தம் அடியார்கட்காக ஒரு மனித உடலைத் தரிக்கும்போது, அவருடைய அடியார்களிற் பலர் அவரோடு பூலோகத்திற்கு வருகின்றனர். அவர்களிற் சிலர் அந்தரங்கர், சிலர் பகிரங்கர், சிலர் அவரது உடலுக்குரிய தேவைகளை அளிப்பவர். (அன்ன தாதாக்கள்)

"யான் பத்துப் பதினெரு வயதினனாயிருந்த சமயம், ஒரு புல்தரை வழி யாகத் தேவி கோயிலுக்குப் போய்க்கொண்டிருந்தபோது முதல் முதலாகப் பக்தி பரவச நிலையை யான் அடைந்தேன். என்ன காட்சி அது! யான் வெளியுலகை முழுதும் மறந்தவனாக ஆனேன்.

"என் வயது இருபத்திரண்டோ இருபத்து மூன்றோ ஆனபோது, தேவி என்னிடம் காளிகோவிலில் ஒரு நாள் 'உனக்கு அக்ஷரன்' ஆகப் பிரியமா?' என்று கேட்டாள். அந்த வார்த்தைக்குப் பொருள் எனக்கு விளங்கவில்லை. யான் அதைப்பற்றி அலதாரியிடம் கேட்டேன். அவர் "க்ஷர என்பதன் பொருள் ஜீவன், உயிருள்ள பிராணி; அக்ஷர என்பது பரமாத்மா எனப் பொருள்படும்' என்றனர்.

"காளி கோவிலில் மாலைப் பூஜை வேளையில் யான் அரண்மனையின் மேற்றளத்திற்குச்சென்று, "அடியார்களே, நீங்கள் எங்கே இருக்கின்றீர்? விரைவில் என்னிடம் வருக! உலகப்பற்றுள்ளவர்களுடைய சேர்க்கையால் இறந்துபோவேன்!" என்று புலம்புவேன். இதையெல்லாம் 'ஆங்கிலேயரு'க் குச் சொன்னேன். அவர்கள் அதை எனது மனதினால் ஏற்பட்ட பொய்த் தோற்றம் என்றனர். 'ஒருக்கால் அப்படியாகலாம்' என்று எனக்குள்ளே சொல்லிக்கொண்டு, யான் அமைதியானேன். ஆனால் இப்போது அதெல்லாம் உண்மையாகி வருகிறது; அடியார்கள் வந்துகொண்டிருக்கின்றனர். (ஆங்கி லேயர் - ஆங்கிலம் கற்ற பிராம்மோக்கள்.)

"என் அன்ன தாதாக்கள் (உடல் தேவைகளை அளிப்போர்) ஐவரையும் ஒரு காட்சியில் தேவி எனக்குக் காட்டியருளினள்; முதலாவது மதுர பாபு; இரண்டாவது, யான் அப்போது சந்தித்திராத சம்புமல்லிக். தலையிலே குல்லாவை யணிந்திருந்த நல்ல நிற மனிதர் ஒருவரைக் காட்சியிற் கண்டேன். பல நாள் கழிந்ததும், யான் முதன்முதல் சம்புவைச் சந்தித்தபோது, அக்காட்சியின் நினைவு எனக்கு மறுபடியும் உதித்தது. அந்த ஆனந்த பரவச நிலையில் யான் கண்டவர் அவரே என்பதை உணர்ந்தேன். இன்னும் மூவரான என் அன்னதாதாக்களை இதுவரை கண்டறியவில்லை. ஆனால் அவர்கள் அனைவரும் நல்ல நிறம் உடையவர்களே. சுரேந்திரர் அவர்களில் ஒருவரைப் போலத் தெரிகிறார்.

"சசியும் சரத்தும் கிறிஸ்து நாதரைப் பின்பற்றியவர்களுள் இருந்ததாக யான் காட்சி கண்டேன்.

"பஞ்சவடியில் ஆலமரத்தின் கீழ் எனக்கு ஒரு குழந்தையின் தரிசனம் கிடைத்தது. இருதயன் என்னிடம் 'அப்படியானால் உமக்கு ஒரு மகன் பிறப்பான்' என்றனன். யான் அவனிடம் 'எல்லா மங்கையரையும் யான் தாயாகக் கருதுகிறேன். எனக்கு மகன் உண்டாவது எவ்வாறு இயலும்?' என்றேன். அக் குழந்தையே இராக்கால்.

"விஜயர் இவ்வடிவத்தை (தம்மையே குறித்து) ஒரு தரிசனத்திற் கண்டார். அதற்கு என்ன காரணம் கூறுகிறீர்? விஜயர் என்னிடம் 'யான் இப்போது தங்களைத் தொடுவதுபோன்றே அவ்வாறே அதைத் தொட்டேன்' என்றனர்,

"எனது கடைசிக் காலத்தில் யான் பாயசம் அருந்தியே உயிர் வாழ வேண்டியிருக்கும் என்பதாக எனக்குக் காட்சி அருளப்பட்டது. இப்போது உண்டாயுள்ள நோயிலே எனது மனைவி எனக்கு ஒரு நாள் பாயாசம் ஊட்டினாள். யான் கண்ணீர் சொரிந்து, 'கடைசி காலத்தில் பாயசம் அருந்தி உயிர் வாழ்தலோ இது? எவ்வளவு வருத்தமான வாழ்வு!' என்றேன்."

திங்கள், ஜனவர் 4, 1886

அன்று கிருஷ்ணபக்ஷச் சதுர்த்தசி. பின்மாலை 4 மணிக்கு ஸ்ரீ ராம கிருஷ்ணர் தமது அறையிலே அமர்ந்திருந்தார். தக்ஷிணேசுவரத்திலுள்ள காளி கோயிலிலிருந்து ராமசாட்டர்ஜி என்பவர் தமது உடலின் நிலைமையை விசாரிப்பதற்காக வந்திருந்தனர் என அவர் ம—விடம் கூறினர். கோயிற் பூஞ்சோலையிலே அப்போது மிக்க குளிர் உண்டோ என்று ம—விடம் அவர் கேட்டார்.

நரேந்திரர் வந்து சேர்ந்தனர். இடையிடையே குருதேவர் அவரைக் கண்டு புன்சிரிப்புக்கொண்டார். அன்று குருதேவர்க்குத் தம் அருமைச் சீட

ரிடம் இருந்த அன்பு கரையற்றதாயிற்று என ம—விற்குத் தோன்றிற்று. நரேந்திரர் அழுதிருந்தார் என்பதை அவர் ம—விற்கு ஜாடையால் உணர்த்தினர். பின்பு அவர் அமைதியானர். நரேந்திரர் வீட்டிலிருந்து புறப்பட்டது முதல் வழியெல்லாம் அழுதுகொண்டே வந்தனர் என மறுபடியும் ஜாடையால் உணர்த்தினர்.

எவரும் பேசினரல்லர், நரேந்திரர் தொடங்கினர்.

நரேந்திரர்: "இன்று அங்கே போகவேண்டுமென்று நினைத்துக்கொண்டிருக்கிறேன்,"

குருதேவர்: "எங்கே?"

நரேந்திரர்: "தக்ஷிணேசுவரத்திற்கு. வில்வ மரத்தடியில் ஒரு நெருப்பை வளர்த்துக்கொண்டு, அருகே தியானிக்கக் கருதுகிறேன்."

குருதேவர்: "இல்லை. வெடி மருந்துக் களஞ்சிய அதிகாரிகள் அதற்கு இடங்கொடுக்கமாட்டார்கள். பஞ்சவடி ஒரு நேர்த்தியான இடம். பல சாதுக்கள் அங்கே ஜெபம் தியானம் பழகியுள்ளனர். ஆனல் அங்கே கடுங்குளிராயிருக்கும், இடம் இருட்டாகவும் இருக்கும்."

மறுபடியும் சில நிமிஷங்கட்கு எல்லாரும் மௌனமாயிருந்தனர்.

குருதேவர் (நரேந்திரரிடம் சிரித்துக்கொண்டு): "நீ உனது படிப்பைத் தொடர்ந்து நடத்தமாட்டாயா?"

நரேந்திரர் (குருதேவரையும் ம—வையும் பார்த்துக்கொண்டு): "யான் படித்துள்ளதையெல்லாம் மறக்கும்படிச் செய்யும் ஒரு மருந்தை யான் காண்பேனுயின் என் மனம் பெரிதும் நிம்மதியடையும்."

அறையிற் கூடஇருந்த பெரிய கோபாலரும் "யானும் நரேந்திரனேடு செல்வேன்" என்றனர்.

காளிபாத கோஷ் ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்காக ஒரு பெட்டி நிறைய திராக்ஷை வாங்கி வந்திருந்தார்; அது குருதேவர் பக்கத்தில் கிடந்தது. குருதேவர் ஒரு சிலவற்றை நரேந்திரர்க்குக் கொடுத்து, மீதத்தை அடியார்கள் பொறுக்கிக்கொள்ளுமாறு தரையிற் கொட்டினர்.

மாலைவேளை; நரேந்திரர் கீழ்மாடியிலுள்ள அறையில் உட்கார்ந்திருந்தனர். அவர் புகை குடித்துக்கொண்டும், ம—விடம் தமது ஆன்ம தாகத்தை வருணித்துக்கொண்டும் இருந்தார், வேறெவரும் அங்கில்லை.

நரேந்திரர்: "சென்ற சனிக்கிழமையன்று யான் இங்கே தியானித்துக் கொண்டிருக்கும்போது, திடீரென எனது நெஞ்சில் ஒரு புதுமையான உணர்ச்சியைப் பெற்றேன்."

ம—: "அது குண்டலினியின் விழிப்பே."

நரேந்திரர்: "ஒருவேளை அப்படியிருக்கலாம். யான் இடைபிங்களை யென்னும் நாடிகளைத் தெளிவாகக் கண்டேன். எனது மார்பைத் தொட்டுப் பார்க்கும்படி ஹாஸ்ராவை வேண்டினேன். நேற்று யான் அவரை (குரு

தேவரை என்ற பொருளில்) மேல் மாடியிற் கண்டு, அதைப்பற்றி அவரிடம் சொன்னேன். யான் அவரிடம் 'மற்றெல்லோரும் தமக்குரிய ஞானக் காட்சிகளைப் பெற்றுவிட்டனரே; எனக்கும் ஏதாவது அருளுவீராக, எல்லோரும் வெற்றியடைந்துள்ளனர்; யான் மட்டும் திருப்தியுறுது இருக்கவா?' என்றேன்."

ம—: "அவர் உம்மிடம் யாது கூறினர்?"

நரேந்திரர்: "அவர் 'உனது குடும்பக் காரியங்களை முதலில் முடிவு பண்ணிவிட்டுப் பின் என்னிடம் ஏன் வரக்கூடாது? உனக்கு எல்லாம் கிடைக்கும். உனக்கு வேண்டியது யாது?' என்று கேட்டார். அதற்கு மறுமொழியாக, 'தொடர்ந்து மூன்று நான்கு நாள்கள் சமாதியிலே மூழ்கியிருக்கவும், இடையிலே ஏதோ ஒருமுறை சிறிதே உண்ணும்பொருட்டு விவகார உலகிற்குக் கீழிறங்கவும் எனது விருப்பம்' என்று உரைத்தேன். அதைக் கேட்டலும் அவர் 'நீ அற்ப மனதுள்ளவன். அதனினும் உயர்ந்த நிலையொன்று உள்ளது. "உள்ளதெல்லாம் நீயே—" இப்பாடலை நீயே பாடுகின்றனை அன்றே?' என்றனர்."

ம—: "ஆம்; சமாதியிலிருந்தும் கீழிறங்கினவன், அதன்பின், பகவானே ஜகத்தாகவும், ஜீவர்களாகவும், உள்ள பொருள்கள் எல்லாமாகவும் ஆயிருப்பதைக் காண்கிறான் என்று அவர் எப்போதும் சொல்வார். ஈசுவரகோடிகள் மட்டுமே அந்த நிலையை அடையக்கூடும். ஒரு சாதாரண மனிதன் மிஞ்சினால் சமாதி அடையக் கூடும்; ஆனால் அவன் அந்நிலையினின்றும் கீழிறங்க இயலாது."

நரேந்திரர்: "அவர் (குருதேவர்) என்னிடம் 'உனது குடும்ப காரியங்களை முடிவு பண்ணிவிட்டுப் பின் என்னிடம் வா. நீ சமாதியினும் உயர்ந்த நிலையினை அடைவாய், யான் இன்று காலை வீடு சென்றேன். எனது ஜனங்கள் என்னை 'வீடு வாசல் இல்லாதவன்போல நீ ஏன் அலைந்து கொண்டிருக்கிறாய்? உனது சட்டப் பரீக்ஷை சமீபிக்கின்றது, உன் படிப்பைப் பற்றிய கவனம் உனக்கில்லை. வாழ்க்கையில் ஒரு குறிப்புமின்றித் திரிகிறாய்' என்று கண்டித்தனர்."

ம—: "உன் தயார் ஏதாவது சொன்னாளா?"

நரேந்திரர்: "இல்லை. அவள் எனக்கு உணவளிப்பதிலே ஆவலாயிருந்தாள். அவள் எனக்கு மானின் மாமிசம் தந்தாள். எனக்கு மாமிசம் உண்ண மனமில்லையெனினும் சிறிது உட்கொண்டேன்."

ம—: "அதன் பின்?"

நரேந்திரர்: "எனது பாட்டியார் வீட்டில் நான் படிக்கும் அறை ஒன்றுண்டே, அங்கே சென்றேன். நான் படிக்க முயன்றபோது, படிப்பது பயங்கரமான காரியம்போல், பேரச்சம் ஒன்று என்னைப் பற்றிக்கொண்டது. எனது நெஞ்சிலே எனக்குள் பெரும் போர் நடந்தது. யான் கண்ணீர் கொட்டி அழுதேன். எனது வாழ்க்கையில் அவ்வளவு வருத்தத்தோடு யான் அழுததே

யில்லை, யான் எனது புத்தகங்களை விட்டுவிட்டு ஓடினேன். வீதிகள் வழியாக ஓடினேன். எனது செருப்புகள் எனது கால்களிலிருந்து நழுவின—எங்கே விழுந்தனவோ யான் அறியேன்—ஒரு வைக்கோற் போரைத் தாண்டி ஓடினேன்; என் உடம்பெல்லாம் வைக்கோல் ஒட்டிக்கொண்டது. காசிப் பூருக்குச் செல்லும் பாதை வழியாக ஓடிக்கொண்டே வந்தேன்.''

நரேந்திரர் சிறிது நேரம் பேசாதிருந்துவிட்டு, மறுபடியும் சொல்லலானார்.

நரேந்திரர்: ''விவேக சூடாமணியைப் படித்தது முதலாக, யான் பெரும் மனச் சோர்வுக்கு ஆளாகிவிட்டேன். அதிலே சங்கராசாரியார் சொல்வதாவது: 'அடைதற்கு அரியன மூன்று உள; அவை இறைவனது அருளால் மட்டும் பெறக்கூடியவை; அவையாவன: மனிதப்பிறவி, மோக்ஷ இச்சை, ஒரு மஹாஜனச் சரணமாக அடைதல்.' இதைப் படித்ததும், யான் இம் மூன்றையும் பெற்றுள்ளது உறுதி. பெருந்தவத்தின் பயனாக யான் ஒரு மனிதனாகப் பிறந்துளேன், பெருந்தவத்தின் பயனாகவே யான் மோக்ஷ இச்சையும் பெற்றுளேன், இன்னும் பெருந்தவத்தாலே யான் அத்தகைய மகாபுருடரது துணையையும் அடைந்துளேன்' என்று எனக்குளே சொல்லிக் கொண்டேன்.

ம—: ''ஆ!''

நரேந்திரர்: ''உலகவாழ்வில் எனக்கு இனி ருசியில்லை, உலகத்து வாழ்பவருடைய சேர்க்கையையும் நான் விரும்பேன்—ஒன்றிரண்டு அடியார்களின் இணக்கத்தையே விரும்புவேன்.''

நரேந்திரர் மறுபடியும் மோனமாயிருந்தார். தீவிரமான வைராக்கியமென்னும் தீ அவரிடம் எரிந்து கொண்டிருந்தது. அவரது மனம் ஈசனைக் காணத் துடித்துக்கொண்டிருந்தது. அவர் சம்பாஷணையை முன்போல் தொடங்கினர்.

நரேந்திரர் (ம—விடத்தில்): ''நீங்கள் சாந்தி பெற்றுவிட்டீர்கள்; ஆனால் என் மனமோ அமைதியற்றதாகிறது. நீங்கள் உண்மையாகவே பாக்கியசாலிகள்.''

ம—அதற்கு மறுமொழி கூறாது, மௌனமாயிருந்தார். அவர் தமக்குளே சொல்லிக்கொண்டதாவது: ''இறைவனைக் காண ஏங்கவேண்டும் என்றும், அவ்வாறு ஏக்கம் பிடித்தாலன்றி அவரது தரிசனம் கிட்டாது என்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்வதுண்டு.''

இருட்டும் சமயம் வந்ததும், ம—மேல்மாடிக்குச் சென்றார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அங்கே உறங்கியதைக் கண்டார்.

இரவில் ஏறக்குறைய ஒன்பது மணியாயிற்று. நிரஞ்சனும் சசியும் குருதேவர்க்கு அருகே உட்கார்ந்திருந்தனர். அவர் விழித்திருந்தார். இடையிடையே அவர் நரேந்திரரைப் பற்றிப் பேசினர்.

குருதேவர்: ''நரேந்திரனது மனநிலை எவ்வளவு ஆச்சரியமானது? இந்த நரேந்திரனே பகவானுடைய வடிவங்களில் நம்பிக்கையற்றவனாயிருந்தான்.

இப்போது அவனது மனம் பகவானைக் காண எப்படித் துடித்துக் கொண்டிருக்கிறது, பாருங்கள்.''

''மனம் இவ்வாறு ஈசனைக் காண ஏங்கித்துடிக்கும்போது, அத்தரிசனம் பெற நீண்டகாலம் காத்திருக்கவேண்டியதிராது என்பதை அறிவீர். கிழக்கே அடிவானத்தில் இளஞ் சிவப்புநிறம் உண்டாதல், சூரியன் விரைவில் உதிக்கும் என்பதற்கு அறிகுறியாகும்.''

இன்று ஸ்ரீ ராமகிருஷ்ணரது நோய் அதிகமாயிருந்தது. மிக்க துயரத்திற்கு இடையிலும் அவர் நரேந்திரரைப்பற்றிப் பல விஷயங்கள் கூறினார்; ஆனால் பெரும்பாலும் ஜாடைகளால்தான்.

இரவிலே நரேந்திரர் தக்ஷிணேசுவரம் புறப்பட்டார். அமாவாசையிரவாதலின் அன்று வெகு இருட்டாயிருந்தது. அவரோடு ஒன்றிரண்டு அடியார்கள் சென்றனர். ம—இரவைக் காசிப்பூர்த் தோட்டத்திலே கழிக்கலானார். துறவிகளின் நடுவே தாம் அமர்ந்திருந்ததாக அவர் கனவு கண்டார்.

ஞாயிறு, மார்ச்சு 14, 1886

ஸ்ரீ ராமகிருஷ்ணர் மேல்மாடியிலுள்ள பெரிய அறையிலே வடக்கு முகமாக எழுந்தருளியிருந்தார். மாலை வேளை. அவர்க்கு நோய் கடுமையாயிருந்தது. நரேந்திரரும் இராக்காலும் அவருடைய திருவடிகளை மெல்லப் பிடித்துக் கொண்டிருந்தார். ம—அருகே அமர்ந்தார். குருதேவர் ஜாடை காட்டி, அவரையும் தமது காலைப் பிடிக்கும்படி வேண்டினார். ம—அவ்வாறே செய்தார்.

முந்தின ஞாயிறன்று அடியார்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரது பிறந்த நாளைக் கொண்டாடினர்; அன்று பூஜையும் பிரார்த்தனையும் நடந்தன. அதற்கு முந்திய ஆண்டுப் பிறந்தநாள் விழா தக்ஷிணேசுவரத்தில் மிக்க விமரிசையாகக் கொண்டாடப்பட்டது; ஆனால் இவ்வாண்டிலே, அவரது நோய் காரணமாக, அடியார்கள் மிக்க துயருற்றனர். அதனால் விழா இல்லாது போயிற்று.

தூய அம்மையார் குருதேவரது பணிவிடையில் அல்லும் பகலும் ஊன்றியிருந்தார். இளைஞரான சீடர்க்குள் நரேந்திரர், இராக்கால், நிரஞ்சன், ரத், சசி, பாபுராம், யோகின், லாட்டு, காளி என்பவர் தோட்ட மாளிகையிலே அவரோடு தங்கிவந்தனர். வயது முதிர்ந்த அடியார்கள் நித்தமும் அவரைப் பார்க்க வந்தனர்; அவர்களிற் சிலர் இடையிடையே இரவையும் அங்கே கழிக்கலானார்.

அன்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமக்கு நோய் கடுமையானதாக உணர்ந்தனர். நடுநிசியில் தோட்டத்தே நிலா வெள்ளம் பெருகிற்று; ஆனால் அடியார்களின் நெஞ்சங்களில் அது யாதொரு கிளர்ச்சியையும் எழுப்பவில்லை. அவர்கள் துயரக் கடலில் அழுந்தியிருந்தனர். தாங்கள் வசித்து வந்த அழகிய நகரினைப் பகைவரது சேனை வளைந்து கொண்டதுபோல அவர்கள் உணர்ந்தனர். எங்கும்

பூரண அமைதி குடிகொண்டிருந்தது. தென்திசையினின்றும் வீசிய காற்றினால் உண்டாய இலைகளின் சலசலப்பு ஒலி நீங்கலாக, இயற்கையில் அரவ மொன்றும் இல்லாததாயிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ணர் விழித்திருந்தார். ஒன்றிரண்டு அடியார்கள் அவரருகே மோனமாக உட்கார்ந்திருந்தனர். சில சமயங்களில் அவர் தூங்குவது போலும் தோன்றினர்.

ம—அவரது பக்கத்தில் அமர்ந்திருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஜாடையால் அவரை அருகே வருமாறு வேண்டினர். அவரது வருத்தம் காணச் சகியாத நிலையிலிருந்தது. மிக மெல்லிய குரலில் மிக்க சிரம்த்தோடு அவர் ம—விடம் பின்வருமாறு சொல்லலானர்.

"உங்கள் எல்லோரையும் அழச் செய்யுமோ என்னும் அச்சத்தால் யான் எவ்வளவோ துயரத்தையும் பொறுத்துக் கொண்டிருந்தேன். ஆனால் நீங்கள் அனைவரும் 'அவ்வளவு துயரம் உண்டாக்குகிறதே! உடல் போகட்டும்' என்று சொல்வீராயின், யான் என்னுடலை விட்டு விடலாம்."

இம்மொழிகள் அடியார்களின் நெஞ்சங்களைத் துளைத்தன. அவர்கட்குத் தந்தையும் தாயும் இரக்ஷகருமான அவரன்றே அம்மொழிகளைக் கூறினர்! அவர்கள் யாது சொல்லக்கூடும்? எல்லோரும் வாய்திறவாதிருந்தனர், சிலர் "இது இன்னொரு சிலுவை வதையோ? அடியார்கட்காக உடலைப் பலி யிடுதலோ இது?" என்று நினைத்தனர்.

இரவில் ஒலி அடங்கிய சமயம். ஸ்ரீ ராமகிருஷ்ணரது நோய் மாறி முன் னினும் கேவலமாயிற்று. அடியார்கள் இன்ன செய்வதென அறியாது திகைத் தனர். அவர்களில் ஒருவர் கல்கத்தாவிற்குப் புறப்பட்டனர். அன்றிரவே கிரீஷ் தம்முடன் உபேந்திர, நவகோபால் எனும் இரு வைத்தியர்களை அழைத் துக் கொண்டு பூந்தோட்ட மாளிகைக்கு வந்தார்.

அடியார்கள் குருதேவர்க்கு அருகே அமர்ந்தனர், அவர் ஒரு சிறிது குணமடைந்ததுபோல உணர்ந்தனர்; அவர்களிடம் "நோய் உடலைப்பற்றியது. அது இருக்கவேண்டியபடியே இருக்கிறது; உடல் பஞ்ச பூதங்களினாலாயது" என்று கூறினர்.

கிரீஷிடம் திரும்பி, அவர் "யான் ஈசனின் பல உருவங்களைக் கண்டு வருகிறேன். அவற்றுள் இதையும் (தமது சொந்த வடிவத்தையும்) காண் கிறேன்" என்றனர்.

திங்கட்கிழமை மார்ச்சு 15, 1886

காலை ஏறக்குறைய ஏழுமணிக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கு ஒரு சிறிது நோய் குறைந்ததாகத் தோன்றிற்று. அவர் அடியார்களிடம், சில சமயம் மெல்லிய குரலிலும், சில சமயம் ஜாடைகளாலும் பேசலானர். நரேந்திரர், இராக்கால், லாட்டு, ம—, சிந்தி ஹர்க் கோபாலர் முதலியோர் அறையில் இருந்தனர்.

அவர்கள் முன்னிரவில் குருதேவர் பட்ட துயரத்தை நினைத்துப் பேச்சற்றவராய், முகமலர்ச்சியற்றவராய் இருந்தனர்.

குருதேவர் (அடியார்களிடம்): "யான் இப்போது காண்பதை நீங்கள் அறிவீர்களா? பகவானே இவையனைத்தும் ஆயினர் என்பதைக் காண்கிறேன். மனிதரும் மற்ற உயிர்களும் தோலால் ஆக்கப்பட்டிருப்பதாகவும், பகவானே இந்தத் தோல் உறைகட்குள்ளே வசித்துக் கைகளையும் கால்களையும் தலைகளையும் அசைப்பதாகவும் எனக்குத் தோன்றுகிறது. இதற்கு முன்பு ஒரு முறை இதுபோன்ற காட்சியைப் பெற்றேன்; அப்போது வீடுகள், தோட்டங்கள் பாதைகள், மனிதர்கள், ஆடுமாடுகள்—எல்லாம் ஒரே பரம்பொருளால் ஆக்கப் பட்டிருப்பதைக் கண்டேன்; அனைத்தும் மெழுகாற் செய்யப்பட்டன போல இருந்தன.

"ஈசனே பலிக்கட்டையாகவும் பலியிடுவோனாகவும் பலியாகவும் ஆயிருப் பதை யான் காண்கிறேன்."

அனைத்தும் ஒரே பரம் பொருளொடு ஒன்றித்து நின்ற நிலையை முழுதும் அவர் உணர்ந்தனர்; தடுமாற்றம் விளக்கும் இந்த அனுபூதியை அவர் வருணிக்கும்போதே உணர்ச்சி வசப்பட்டவராய், "ஆ! இதென்ன காட்சி!" என்று வியந்தார்.

உடனே ஸ்ரீ ராமகிருஷ்ணர் சமாதியிற் புகுந்தார். அவர் தமது உடலையும் வெளியுலகையும் முற்றும் மறக்கலானார். அடியார்கள் மனங் குழம்பினர். இன்ன செய்வதென அறியாது அவர்கள் சும்மா இருந்தனர்.

சற்று நேரத்தில் குருதேவர் உலக உணர்ச்சியை ஒருவாறு பெற்றதும், "இப்போது யாதொரு வலியும் எனக்கு இல்லை. யான் பழைய நன்னிலையையே மீண்டும் பெற்றுவிட்டேன்" என்றனர்.

இன்ப துன்பங்கட்கும் நன்மை தீமைகட்கும் அப்பாலான, (குருதேவரது) இந்நிலையைக் கவனித்த அடியார்கள் ஆச்சரியமுற்றனர்.

அவர் லாட்டுமீது பார்வையைச் செலுத்தி, "அதோ லாட்டு உள்ளான். அவன் தலையைச் சாய்த்துத் தனது அங்கையால் தாங்கி நின்றான். பகவானே தமது தலையைக் கைமீது தாங்கிக்கொண்டிருப்பது போலக் காண்கிறேன்" என்று மொழிந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடியார்களை நோக்கினார்; அவர்கள்மீது அவர்க்கிருந்த அன்பு ஆயிரம் வாய்க்கால்களாகப் பெருகியோடிற்று. ஒரு தாய் தனது குழந்தைகளின் மீதுள்ள ஆதரத்தைக் காட்டுவதுபோல, ராக்கால் நரேந்திரர் எனும் இருவரது முகத்தையும் மோவாயையும் அவர் தடவினர்.

சிறிது நேரஞ் சென்றபின் அவர் ம—விடம் "இவ்வுடல் இன்னும் சில நாள் காப்பாற்றப்படுமாயின், பலர் ஞான விழிப்பு நிலையை அடைவர்" என்று கூறினர்.

அவர் ஒரு சில நிமிஷங்கள் சும்மா இருந்தனர்.

"ஆனால் இது நடக்கப்போவதில்லை. இந்தத் தடவை உடல் காப்பாற்றப் படாது."

அடியார்கள் குருதேவருடைய அடுத்த வார்த்தைகளை ஆவலோடு எதிர் பார்த்து நின்றனர்.

"பகவானது சங்கற்பம் அவ்வாறில்லை. இந்தத் தடவை உடல் காப்பாற் றப்படாது. யான் கபடமின்றியும் பேதையாயும் இருப்பதைக் கண்டு, மக்கள் என்னைப் பயன்படுத்திக்கொள்ளாமலிருப்பதற்காகவும், யான் கபடமின்றியும் பேதையாயும் இருப்பதனால் எல்லார்க்கும் எல்லாவற்றையும் கொடுத்துவிடா மல் இருப்பதற்காகவும்தான் அது. இக்கலியுகத்தில் மக்கள் தியானத்திலும் செபத்திலும் பிரியமற்றவராயுள்ளார்."

ராக்கால் (ஆதரத்தோடு): "பகவான் உமது உடலை இன்னுஞ் சிறிது காலம் காப்பாற்றும்படி பகவானிடம் தயவுகூர்ந்து சொல்வீராக."

குருதேவர்: "அது இறைவனது திருவுள்ளத்தைப் பொறுத்தது."

நரேந்திரர்: "உமது திருவுள்ளமும் இறைவனது திருவுள்ளமும் ஒன் றாகி விட்டன."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் மௌனமாக இருந்தார். அவர் ஏதோ ஒன்றைப்பற்றி நினைத்துக் கொண்டிருப்பதாகத் தோன்றிற்று.

குருதேவர் (நரேந்திரர் ராக்கால் முதலியோர்க்கு): "யான் இறைவ னிடம் பேசினும் எதுவும் நடவாது. நானும் தேவியும் ஒன்றாகிவிட்டதை இப் போது காண்கிறேன்."

அடியார்கள் அறையில் வாய்திறவாது உட்கார்ந்திருந்தனர். ஸ்ரீ ராம கிருஷ்ணர் அவர்களைப் பேரன்பு பெருக நோக்கினர். பின்பு அவர் தமது கையைத் தமது நெஞ்சின்மீது வைத்தனர். அவர் பேசுவதாக இருந்தார்.

குருதேவர் (நரேந்திரர்க்கும் பிறர்க்கும்): "இதில் இருவர் உளர். ஒருவர் தேவியார்—"

அவர் சும்மா இருந்தார். அதை அடுத்து அவர் சொல்லப் போவதைக் கேட்பதில் ஆவல் மிக்கவராய் அடியார்கள் அவரை நோக்கினர்.

குருதேவர்: "ஆம், ஒருவர் தேவியார், மற்றொருவர் அவரது அடியார். அடியாரே தமது கையை ஒடித்துக்கொண்டவர், அடியாரே இப்போது நோயுற் றிருப்பவர். உங்கட்குத் தெரிகின்றதா?"

அடியார்கள் ஒருமொழியும் புகலாது அமர்ந்திருந்தனர்.

குருதேவர்: "அந்தோ! (ஐயோ) யான் இதையெலாம் யாரிடத்து உரைப்பேன்? என்னை அறிவார் யார்?"

சிறிது நேரம் தாமதித்து அவர் சொன்னார்:

"பகவான் மனிதராகிறார், ஓர் அவதாரமாகிறார், தமது அடியார் களோடு பூவுலகிற்கு வருகிறார். அடியார்களும் அவரோடு உலகைவிட்டுச் செல் கின்றனர்."

ராக்கால்: "ஆதலால் நீர் எங்களைப் பின்னே விட்டுவிட்டு, முன்னே செல்லலாகாது என்று நாங்கள் வேண்டுகிறோம்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் புன்முறுவல் பூத்தவராய்ப் பின்வருமாறு கூறலானார்:

"பஜனைக் கூட்டத்தார் ஒருவர் திடீரெனத் தோன்றுகிறார், ஆடுகிறார், பாடுகிறார், அம்மாதிரியே திடீரெனப் போய் விடுகின்றனர். அவர்கள் வருகின்றனர், திரும்பிச் செல்கின்றனர்; ஆனால் அவரை இன்னாரென அறிவார் எவரும் இல்லை."

குருதேவரும் அடியாரும் சிறிதே சிரித்தனர்.

சில நிமிஷங்கள் சென்றபின், அவர் சொன்னதாவது:

"மனித உடலை ஒருவர் ஏற்கும்போது துன்பம் தடுக்கமுடியாததாகும். "இடையிடையே யான் எனக்குள்ளே 'மறுபடியும் யான் பூமிக்கு வாரா திருப்பேனாக!" என்று சொல்லிக் கொள்கிறேன். ஆனால் வேறொன்று உள்ளது. நல்ல அறுசுவை விருந்துகளை வெளியே உண்ட பின்பு, ஒருவற்கு எளிய வீட்டு உணவு சுவையாயிருப்பதில்லை.

"அன்றியும், மனித உடலை ஏற்றதும் அடியார்கட்காகவே."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரைப் பேரன்பு ததும்ப நோக்கினார்.

குருதேவர் (நரேந்திரரிடம்): "ஒரு பறையன் ஒரு சுமை இறைச்சியைத் தூக்கிக்கொண்டு சென்றான். சங்கராசாரியார் கங்கையில் நீராடியபின் பக்கத்திலே சென்றுகொண்டிருந்தார். திடீரெனப் பறையன் அவரைத் தொட்டனன். சங்கரர் கண்டிப்போடு "என்ன! நீ என்னைத் தொட்டனை!" என்றனர். அவன் அதற்கு மறுமொழியாக 'வணங்குதற்குரியீர், நான் உம்மைத் தொடவுமில்லை. நீர் என்னைத் தொடவுமில்லை. என்னோடு யுக்தி வாதம் பண்ணும்; நீர் உடலா, மனமா, புத்தியா? நீர் இன்னார் என்பதை விசாரணையாற் பிரித்தறியும். நீர் சுத்த பற்றற்ற முக்த ஆத்மா, சத்வம் இரஜஸ் தமஸ் என்னும் முக்குணங்களாலும் பாதிக்கப்படாதவர்' என்றான்.

"பிரம்மம் எதைப் போன்றது என்பதை நீ அறிவாயோ? அது காற்றைப் போன்றது, நல்ல மணங்களையும் கெட்ட மணங்களையும் காற்று ஏற்றுக் கொள்ளுகிறது. ஆனால் காற்றோ தன்னிலையில் விகாரமடையாதுள்ளது."

நரேந்திரர்: "ஆம், ஐயன்மீர்."

குருதேவர்: "பிரம்மம் குணங்கட்கும் மாயைக்கும் அப்பாலானது; வித்யா மாயைக்கும் அவித்யா மாயைக்கும் அப்பாலானது. காமமும் காஞ்சனமும் அவித்யா மாயை. போதம், துறவு, பக்தி முதலிய ஆத்மீய குணங்கள் வித்யா மாயையின் சிறப்புகள். சங்கரர் வித்யா மாயையை வைத்திருந்தார்; நீயும் அங்குள்ள பிறரும் என்னைப் பற்றிக் கவலை கொள்வதும் இவ்வித்யா மாயையினால்தான்."

நரேந்திரர்: "யான் துறவைப்பற்றிப் பேசும்போது சிலர் என்மீது கோபங் கொள்கின்றனர்."

குருதேவர் (மெல்லிய குரலில்): "துறவு அவசியமேயாம்."

(அவருடைய உறுப்புகளைச் சுட்டி) "ஒரு பொருள் மற்றொன்றின்மேல் வைக்கப்பட்டிருப்பின், இரண்டாவதைப் பெற முதலாவது பொருளை நீ கட்டாயம் அப்புறப்படுத்தியாகவேண்டும். முதலாவது பொருளை அப்புறப்படுத்தாது இரண்டாவது பொருளை நீ பெற முடியுமா?"

நரேந்திரர்: "உண்மையே."

குருதேவர் (நரேந்திரரிடம் மெல்லிய குரலில்): "எல்லாப் பொருளும் இறைவனில் மட்டும் நிறைந்திருப்பதை ஒருவன் காணும்போது, அவன் வேறெதையேனும் காண்பானா?"

நரேந்திரர்: "ஒருவன் உலகைத் துறத்தல் கட்டாயமா?"

குருதேவர்: "சற்றே முன்பு உன்னிடம் சொல்லவில்லையோ?—'எல்லாப் பொருளும் இறைவனில் மட்டும் நிறைந்திருப்பதை ஒருவன் காணும்போது, அவன் வேறெதையேனும் காண்பானா?' என்று. ஒருவன் அப்போது உலகம் போன்ற ஏதேனும் ஒரு பொருளைக் காண்பானா?

"நான் கருதுவது மனத் துறவை. இங்கு வந்துள்ளவரில் ஒருவரேனும் உலகப் பற்றுள்ளவரல்லர். அவர்களிற் சிலரிடம் அற்ப ஆசையிருந்தது,—உதாரணமாக, மாதர்மீது ஆவல் இருந்தது. (இராக்காலும், ம—வும் புன்சிரிப்புக் கொள்கின்றனர்.) அவ்வாசையும் நிறைவேறியாய்விட்டது.

குருதேவர் நரேந்திரரை ஆர்வத்தோடு நோக்கினர்; அன்பால் குருதேவரது உள்ளம் பூரித்தது. அடியார்களைப் பார்த்தவாறே 'என்ன மகிமை!' என்றனர்.

புன் சிரிப்போடே நரேந்திரர் குருதேவரிடம் 'எதன் மகிமை?' என்று கேட்டனர்.

குருதேவர் (புன்சிரிப்போடு): "ஒரு மகத்தான துறவிற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து வருவதைக் காண்கின்றேன்."

நரேந்திரரும் அடியார்களும் குருதேவரை மௌனமாக நோக்கினர். ராக்கால் சம்பாஷணையை மறுபடியும் தொடங்கினர்.

ராக்கால் (புன்சிரிப்போடு குருதேவரிடம்): "நரேந்திரன் இப்போது தங்களை உண்மையாகவே நன்றாக அறியத் தொடங்கிவிட்டான்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிரித்துக்கொண்டே பின்வருமாறு கூறலானார்: "ஆம், அது அப்படியேதான். வேறு பலரும் அறியத் தொடங்குகின்றனர் என்பதையும் காண்கின்றேன். (ம—விடம்) அது அவ்வாறுதானே?"

ம—: "அப்படியே ஐயா."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது பார்வையை நரேந்திரரிடமும் ம—விடமும் செலுத்தினர்; தமது கைச்சாடையால் அடியார்களின் கவனத்தை அவர்கள் மீது திருப்பினர். அவர் முதலில் நரேந்திரரையும் பின்னர் ம—வையும் சுட்டிக் காட்டினர். இராக்கால் குருதேவரது குறிப்பை உணர்ந்து அவரிடம் புன் சிரிப்போடு, "நரேந்திரனிடம் வீர பாவனையும் அவரிடம் (ம—விடம்) சகி பாவனையும் உள்ளன என்பது தங்களது கருத்தன்றே?" என்றனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிரித்தனர்.

நரேந்திரர் (புன்சிரிப்போடு இராக்காலிடம்) : "அவர் (ம—வைக் குறித்து) அதிகமாகப் பேசுவதில்லை; கூசுகின்றார். அவரைப் பகவானது சகி என்று தாங்கள் சொல்லுங் காரணம் அதுதானே ?"

குருதேவர் (புன்சிரிப்போடு நரேந்திரரிடம்) : "சரி, என்னை நீ எவ்வாறு நினைக்கிறாய் ?"

நரேந்திரர் : "நீங்களோ வீரரும், கடவுளின் தோழியும், பிற எல்லாமும் ஆவீர்கள்."

இம்மொழிகள் ஸ்ரீ ராமகிருஷ்ணரது உள்ளத்தில் தெய்விக உணர்ச்சியைப் பொங்கச் செய்தன. அவர் தமது கரத்தைத் தம் நெஞ்சின்மீது வைத்து, ஏதோ சொல்லத் தொடங்கியவர்போலிருந்தார்.

அவர் நரேந்திரரிடமும் பிற அடியார்களிடமும் சொன்னதாவது ;

"எல்லாப் பொருள்களும்—உள்ளன யாவும்—இங்கிருந்து வந்துள்ளதெனக் காண்கிறேன்."

அவர் நரேந்திரரிடம் சாடையால் "நீ அறிந்துகொண்டது யாது ?" என்று வினவினர்.

நரேந்திரர் : "படைக்கப்பட்ட பொருள்கள் யாவும் தங்களிடமிருந்து வந்துள்ளன."

குருதேவரது முகத்திலே ஆனந்தம் ஒளி வீசிற்று. அவர் இராக்காலைப் பார்த்து "அவன் சொன்னது உன் காதில் விழுந்ததா ?" என்றார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரைப் பாடும்படி வேண்டினர். நரேந்திரர் ஒரு பாடலைப் பாடினர். அவரது மனத்தினிடம் துறவு நிறைந்திருந்தது. அவர் பாடியதாவது :

தாமரை யிதழ்மேல் தத்தளி நீர்போல்
பூமிசை நரனின் பொலன்மிகு வாழ்வும் ;
தோமறு சாதுவின் துணைகண மேனும்
நாமமி கும்பவக் கடற்கொரு நாவாய்.

[பூமிசை - பூமியில். நாமம் - பயம். நாவாய் - தோணி,]

நரேந்திரர் ஒன்றிரண்டு வரிகளைப் பாடியதும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரிடம் சாடையால் "நீ என்ன பாடல் பாடுகின்றனை ? அது ஓர் அற்பமான பாவனை, மிக சாதாரணமான ஒன்றே" என்று தெரிவித்தார்.

இப்போது நரேந்திரர் தம்மைக் கோபிமார்களில் ஒருவராகப் பாவித்து, கிருஷ்ணன்மீது கோபிகட்குள்ள பிரேமையைப் பற்றிப் பாடலானார் :

"என்ன புதுமையிவை வாழ்முறையும் சாமுறையும் !
மன்னுபிருந் தைச்சிறுவன் வாரா தகன்றனனால்.
இவ்வேழைக் கோபி இறந்திடுவாள் என்தோழி.
கொவ்வைக் கனிவாயன் கோவிந்தன் என்னினும்

கட்டழகு மிக்க காரிகையைக் காதலித்தான்,
கிட்டான் எனைமறந்தான் கெட்டேன் சூதிலியாய்.

அத்தகைய அன்பன் அருந்தெய்வக் காதலன்
மித்தைப் புறஅழகை மேவுவ னென்றேயார்
எண்ணி யிருந்திருப்பார் இன்னுயிர்த் தோழீ ?
பெண்ணை பேதையேன் முன்பறி யேனிதனை
சோர னவனழகிற் சொக்கியவன் சேவடியை
ஆரவென் மார்வத் தணைக்கத் துடிதுடித்தேன்.

இன்னமும் வாழ்வுஏன் ? யமுனை நதிவீழ்ந்து
என்னுயி நீப்பேன் இரும்நஞ்சை யுண்டிடுவேன்,
கண்டம் இறுகவே கட்டிடுவேன் ஓர் கொடியை,
அண்டைத் தமாலமதைத் தூக்குமர மாக்கொள்வேன்.
அத்தனையுந் தோழீ பலியா தகன்றிடுமேல்,
அத்தன் பெயரோதி ஆருயிரைப் போக்கிடுவேன்.

[பிருந்தைச் சிறுவன் - பிருந்தாவனக் கிருஷ்ணன், காரிகை - பெண், தமாலம் - ஒரு வகை மரம். சூதிலி - சூதில்லாதவள்.]

ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அடியார்களும் அப்பாடலால் மிகவும் மன முருகினர், குருதேவரும் ராக்காலும் அன்புக் கண்ணீர் சொரிந்தனர். நரேந்திரரோ கோகுலத்துக் கோபியர் தம் ஆருயிர்க் காதலனை கண்ணன்மீது கொண்ட காதல் வெறி மிக்கவராய்ப் பின்வருமாறு பாடலானார்.

கண்மணீ கண்ணை நீயெனக் குரியை.
என்னயான் சொல்வேன் மன்னு நினக்கே ?
என்றுமே சொல்வதி யாதெனக் குண்டு ?
நின்றேன் பெண்ணைய் நின்முன் பேறிலீ.
உரைப்ப தீதெனத் தெரியேன் யானே.

கைக்கண் ணிடிநீ கருங்குழற் கோர்மலர்
மெய்க்கா தலநினை விழைமல ராக்கிச்
சுரிகுழற் குள்ளே பரிந்துனைச் சூடுவேன்.
கரத்துள் மறைப்பேன், காண்பார் எவருனை ?

வெற்றிலை இதழ்க்குநீ, விழிக்குநீ அஞ்சனம் ;
கற்றினம் மேய்க்குங் கண்ணை நின்னையே
தீட்டுவேன் இதழ்க்கு, மீட்டுமென் விழிக்கே.
என்றன் உடலுக் கினிய சாந்துநீ,
என்கழுத் திற்கோர் ஏற்ற ஆர(ம்)நீ.

நின்னையே பூசுவேன் என்னுடல்; அதனால்
ஆகமும் உயிரும் ஆறிடும் தாபம்.
ஓகையோ டுன்னை ஒண்கழுத் தாரமா
அணிவேன்; நெஞ்சிற் கருகே நீயும்
மணிமார் வத்தே மகிழ்ந்து படுத்திரு.

என்உடற் கருநிதி, என்மனை வாழ்வோய்,
பறக்கும் புள்ளிற் கிறகே போலவும்
நீந்தும் மீனிற கேந்துநீர் போலவும்
நீயெனக் கானுய் மாயோய் பெரும !

[பேறிலீ - பாக்கியமற்றவள். சுரி குழல் - சுருண்ட கூந்தல். கற்றினம் - கன்றுக் கூட்டங்கள். மீட்டும் - மறுபடியும், சாந்து - சந்தனம். ஆகம் - மார்பு. ஓகை - சந்தோஷம்.]

வெள்ளி, ஏப்பிரல் 9; 1886

பிற்பகல் ஐந்து மணி இருக்கும். நரேந்திரர், காளி, நிரஞ்சனர், ம— என்பவர்கள் காசிப்பூர் பூஞ்சோலை மாளிகையிலே கீழ்த்தளத்திலே பேசிக் கொண்டிருந்தனர். காளியோடும் தாரகரோடும் புத்த கயையைப் பார்க்கச்சென்ற நரேந்திரர் அப்போதுதான் திரும்பி வந்திருந்தனர். அப் புண்ணிய தலத்திலே அவர் புத்தரது திருவுருவத்தின் முன்பு ஆழ்ந்த தியானத்தில் லயித்திருந்தார் அவர் போதிமரத்திற்கும் தமது வணக்கத்தைச் செலுத்திவிட்டு வந்தார்; எம்மரத்தின் அடியிலே புத்தர் பெருமான் நிருவாணம் அடைந்தனரோ, அம் மரத்தினின்றும் உண்டாயது அது.

மேல் மாடியில் இருந்த பெரிய கூடத்தில் தமது படுக்கைமீது அமர்ந் திருந்தனர் ஸ்ரீ ராமகிருஷ்ணர். அப்போது மாலை நேரம். ம—அவ்வறையிலே தனியாக அமர்ந்து குருதேவர்க்கு வீசிக் கொண்டிருந்தார். சிறிது பொழுது கழிந்தபின் லாட்டு உள்ளே வந்தார். நரேந்திரர் அறைக்குட் புகுந்து ஓரிடத்து அமர்ந்தார். சசி, ராக்கால், வேறு ஒன்றிரண்டு அடியார்களும் உள்ளே வந் தனர். குருதேவர் தமது காலைப் பிடிக்குமாறு நரேந்திரரிடம் சொன்னர். 'உண்டனையோ?' என்றும் நரேந்திரரிடம் கேட்டார்.

குருதேவர் (புன்சிரிப்போடு ம—இடம்): "அவன் அங்கே (புத்த கயை என்னும் இடத்திற்கு) சென்றான்."

ம—→ (நரேந்திரரிடம்): "புத்தருடைய கொள்கைகள் யாவை?"

நரேந்திரர்: "தமது தவத்தால் உணர்ந்ததை அவர்க்கு வார்த்தையாற் கூற முடியவில்லை. ஆதலால் அவரை நாஸ்திகர் என்கின்றனர்."

குருதேவர் (சாடை காட்டி): "நாஸ்திகர் என்பானேன்? அவர் நாஸ் திகர் அல்லவே. அவர்க்குத் தமது உள் அனுபவத்தை வார்த்தையால் வெளி யிட முடியாத அவ்வளவே தான்; 'புத்தர்' என்பதன் பொருள் இன்னது என்பதை நீ அறிவையோ? போத ரூபமாயுள்ளதைப் பற்றிய தியானத்தால் போதத்தோடு ஒன்றுதலென்பதே; போத வடிவமாகவே ஆதல் என்பதே."

நரேந்திரர்: "ஐயன்மீர், அது சரி. மூன்றுவகையான புத்தர் உள் ளனர்; அவராவார்: புத்தர், அருகதர், போதிசத்துவர்."

குருதேவர்: "இதுவும் பகவானது லீலையே: புதிய பகவத் லீலை."

"எதற்காகப் புத்தரை நாஸ்திகர் என்னல் வேண்டும்? ஒருவன் தனது (ஆத்ம)சொரூபத்தை உணர்ந்ததும், அவன் அடையும் நிலை 'அஸ்தி' (உள்ளது) 'நாஸ்தி' (இல்லது) எனும் இரண்டிற்கும் இடையிலுள்ள ஒன்றாகிறது."

நரேந்திரர் (ம—விடம்): "ஒன்றுக்கொன்று மறுப்பானவை ஒன்று கூடும் நிலை அது. நீர்வாயுவும் (ஹைட்ரஜன்) பிராணவாயுவும் (ஆக்ஸிஜன்) இணைந்து ஒன்றும்போது தண்ணீர் உண்டாகிறது; அதே நீர்வாயுவும் பிராண வாயுவும் பிராண—நீர்வாயு ஊதுகுழலிற்கும் பயன்படுகின்றன. (அதாவது, அளவுமிக்க சூட்டையும் உண்டாக்குகின்றன).

"அந்நிலையில் கருமம் அகருமம் இரண்டும் இயலுவனவாம்; அதாவது, ஒருவன் 'தான்' அற்ற கருமம் புரிகின்றான்.

"இந்திரிய விஷயங்களில் (பொருள்களில்) அழுந்திக்கிடக்கும் உலகப் பற்றுள்ள மக்கள் 'அஸ்தி'—எல்லாம் உள்ளது— என்கின்றனர். ஆனால் மாயாவாதிகளோ 'நாஸ்தி'—ஒன்றும் இல்லை—என்கின்றனர். ஒரு புத்தரின் அனுபூதியோ 'அஸ்தி' 'நாஸ்தி' இரண்டிற்கும் அப்பாற்பட்டது."

குருதேவர்: "இந்த 'அஸ்தி'யும் 'நாஸ்தி'யும் பிரகிருதியின் குணங் களாம். மெய்ப்பொருள் இரண்டிற்கும் அப்பாற்பட்டது."

அடியார்கள் சிறிதுநேரம் மௌனமாயிருந்தனர்.

குருதேவர் (நரேந்திரரிடம்): "புத்தர் என்ன போதித்தனர்?"

நரேந்திரர்: "அவர் ஈசனின் இருப்பையோ இல்லாமையையோ ஆராய வில்லை. ஆனால் அவர் தமது வாழ்வு முழுவதும் பிறரிடம் கருணையைச் செலுத்தி வந்தனர்.

"ஒரு வல்லூறு ஒரு பறவையின்மீது பாய்ந்தது; அதை விழுங்கும் தறுவாயில் இருந்தது. அப் பறவையைக் காக்குமாறு புத்தர் அவ்வல்லூறுக் குத் தம் உடற் சதையை ஈந்தனர்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் பேசாதிருந்தனர். நரேந்திரர் புத்தரைப்பற்றி மேலும் மேலும் ஊக்கம் பொங்கப் பேசினர்.

நரேந்திரர்: "அவரது துறவு எவ்வளவு மகத்தானது! இளவரசரா யிருந்தும், அவர் அனைத்தையும் துறந்தார். ஒரு மனிதன் ஒன்றுமில்லாதவனு யின், செல்வமேயில்லாதவனுயின், அவனது துறவை எவ்வளவினது என்பது? புத்த பதவியை அடைந்து நிருவாண அனுபூதி பெற்றபின் புத்தர் ஒருமுறை தமது இல்லத்திற்குச் சென்றனர்; தமது மனைவி, மகன் முதலான அரச குடும் பத்தினர் பலர்க்கும் துறவு வாழ்வைப் பூணுமாறு போதித்தனர். அவரது துறவு எவ்வளவு தீவிரமானது! ஆனால் வியாசரது நடத்தையைப் பாருங்கள்! தமது குமரரான சுகதேவரிடம் 'மகனே, இல்லறத்தானுயிருந்து ஞானம் பழகுக' என்று கூறி, அவர் உலகந் துறத்தலைத் தடுத்தனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் வாய்பேசாதிருந்தார். இன்னும் அவர் ஒருமொழியும் புகலவில்லை.

நரேந்திரர்: "புத்தர் சக்தியையோ, அதுபோன்ற ஒன்றையோ பொருட்படுத்தவில்லை, அவர் நிருவாணம் ஒன்றையே நாடினர். அவரது வைராக்கியம் எவ்வளவு தீவிரமாயிருந்தது! போதிமரத்தடியில் இவர் தியானத் திற்காக அமர்ந்தபோது, 'யான் நிருவாணம் அடையாது போவேனையின், என் உடல் இங்கே உலர்ந்தழிவதாக' என்று சபதஞ் செய்துகொண்டனர். எத் தகைய உறுதியான தீர்மானம்!

"இவ்வுடலே பெரும்பகை; அதனை அடக்கி யொடுக்காமல் ஏதேனும் பெற இயலுமா?"

சசி: "இறைச்சியை உண்டு ஒருவன் சத்துவகுணத்தை வளர்க்கிறான் என நீயே கூறுகின்றனை. புலாலே உண்ணல் வேண்டும் என நீயே வற்புறுத்து கின்றனை."

நரேந்திரர்: "நான் புலால் உண்கிறேன் என்பதில் ஐயமில்லை; ஆனால் எனக்கு அரிசியை உண்டு வாழ்தலும் இயலும், உப்பின்றி வெறும் சாதத்தையும் உண்ணக்கூடும்."

சில நிமிஷங்கட்குப்பின் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பேசலானர். சாடை காட்டி நரேந்திரரிடம் புத்தருடைய தலையிலே அவர் குடுமியைப் பார்த்ததுண்டா என்று வினவினர்.

நரேந்திரர்: "பார்க்கவில்லை. அவர் ஒருவகையான கிரீடம் அணிந் திருப்பதுபோலத் தோன்றுகிறது; அடுக்கடுக்காக, ஒன்றின்மேல் ஒன்றாக அமைந்த உருத்திராக்ஷ மாலைகளாலாய முடியைத் தரித்திருப்பவர் போல அவர் தோன்றுகிறார்."

குருதேவர்: "அவருடைய கண்களோ?"

நரேந்திரர்: "அவர் சமாதியில் இருப்பதாக அவை காட்டுகின்றன."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் மறுபடியும் மௌனமானர். நரேந்திரரும் மற்ற அடி யார்களும் அவரை உற்று நோக்கினர். திடீரென ஒரு புன் முறுவல் அவரது முகத்திலே திகழ்ந்தது; அவர் நரேந்திரரோடு பேசத் தொடங்கினர். ம— அவர்க்கு வீசிக்கொண்டிருந்தார்.

குருதேவர் (நரேந்திரரிடம்): "சரி, இங்கே நீ ஒவ்வொன்றையும்—சாதா ரணக் கடலையையும் புளியையும் கூட—காண்கின்றனையன்றே?"

நரேந்திரர்: "அந்நிலைகளையெல்லாம் அனுபூதியால் கண்ட பின்பு, தாங்கள் இப்போது தாழ்ந்த பூமிக்கு வந்து வாழ்கின்றீர்கள்."

ம— (தமக்குள்ளே): "ஆம், அந்த இலக்ஷியங்களையெல்லாம் அனுபூதி யால் உணர்ந்த பின்பு, அவர் இப்போது ஒரு பக்தராக வாழ்கின்றனர்."

குருதேவர்: "யாரோ ஒருவர் என்னைத் தாழ்ந்த பூமியில் வைத்துப் பிடித்துக்கொண்டிருப்பதுபோலத் தோன்றுகிறது."

இவ்வாறு சொல்லிக்கொண்டே ஸ்ரீராமகிருஷ்ணர் ம—வின் கையிலிருந்து விசிறியைப்பெற்று, "யான் இவ்விசிறியைக் காண்பது போலவே என் முன்னே

நேரே கர்ண்பது போலவே, சரியாய் அதேமாதிரியாக யான் ஈசனைக் கண்டுளேன். இன்னும் கண்டதாவது—''

இம் மொழிகளைக் கூறியதும், அவர் தமது கையை நெஞ்சின்மீது வைத்து, நரேந்திரரிடம் சாடை காட்டி, ''நான் கூறியதைச் சொல்ல உனக்கு முடியுமா?'' என்று கேட்டனர்.

நரேந்திரர்: ''யான் அறிந்துளேன்.''

குருதேவர்: ''என்னிடம் சொல்க.''

நரேந்திரர்: ''தாங்கள் கூறியது என் காதில் நன்குக விழவில்லை.''

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சாடையால் மறுபடியும் ''ஈசனும், இந் நெஞ்சில் உறைவோனும் ஒருவரே என்பதைக் கண்டுளேன்'' என்றனர்.

நரேந்திரர்: ''ஆம், ஆம்! 'ஸோஹம்'—யான் அவனே.''

குருதேவர்: ''ஒரு கோடு மட்டும் இரண்டையும் பிரிக்கின்றது.—அதுவும், யான் தெய்விக ஆனந்தத்தை அனுபவித்தற்காகவே.

நரேந்திரர் (ம—விடம்): ''மஹாத்மாக்கள், தாம் முக்தியடைந்த பின்பும் பிறரும் முக்தியடைதற்கு உதவி புரியும் பொருட்டு, அகங்காரத்தை ஒழிக்காது வைத்திருந்து, உடலைப்பற்றிய இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

''அது கூலி வேலையைப் போன்றது, நாம் கூலி வேலையைக் கட்டாயத்திற்காகச் செய்கிறோம்; ஆனால் மஹாத்மாக்கள் தமது சொந்த இச்சைப்படியே அவ்வாறு செய்கின்றனர்.''

மறுபடியும் அனைவரும் மௌனமானார். சிறிது பொழுது கழிந்தபின் ஸ்ரீ ராமகிருஷ்ணர் மீண்டும் பேசத் தொடங்கினர்.

குருதேவர் (நரேந்திரரிடமும் பிறரிடமும்): ''மச்சு தெளிவாகப் புலப்படுகிறது; ஆனால் அதைக் கிட்டுவது மிக மிக அரிது.''

நரேந்திரர்: ''அப்படியே.''

குருதேவர்: ''ஆனால் அதைக் கிட்டிய ஒருவன் ஒரு கயிற்றைக் கீழே தொங்கவிடுவானையின், அக்கயிற்றைப் பிடிக்கும் மனிதனை மேலே இழுக்க அவனுக்கு முடியும்.''

ராக்கால் (மற்ற அடியார்களிடம்): ''இதிலே நிறுத்திக் கொள்வோம். அவர் முன்னரே மிகுதியாகப் பேசியாயிற்று. அது அவரது நோயை வளர்க்கும்.''

செவ்வாய், ஏப்பிரல் 13, 1886

ஸ்ரீ ராமகிருஷ்ணர் அடியார்களோடு உட்கார்ந்திருந்தார். ஒரு பைத்தியக்காரி குருதேவரைத் தரிசிப்பதற்காக ஒவ்வொருவரையும் தொந்தரவு பண்ணிக் கொண்டிருந்தாள். அவள் அவரைக் காதலராகப் பாவனை பண்ணிவந்தவள்; பலமுறை பூந்தோட்ட மாளிகைக்குள் ஓடி, குருதேவரது அறைக்குள் திடீரெனப் புகுவாள். அடியார்கள் அவளை அடிக்கவும் செய்தனர்; ஆனாலும் அது அவளது செயலைத் தடுக்கவில்லை.

சசி: "அவள் மறுபடியும் வருவாளாயின், அவளை இவ்விடத்தை விட்டுத் தள்ளுவேன்!"

குருதேவர் (இரக்கத்தோடு): "செய்யாதே, அப்படிச் செய்யாதே! அவள் வந்து போகட்டும்."

ராக்கால்: "ஆரம்பத்தில், பிறர் குருதேவரைக் காணவரும்போது யானும் அவர்கள்மீது பொறுமை கொள்வதுண்டு, ஆனால், எனது குரு லோககுருவுமாவார் என்பதை அவர் அருளால் எனக்குக் காட்டினர். நம் மவர் ஒரு சிலர்க்காகவா அவர் பிறவியெடுத்தார்?"

சசி: "அக்கருத்தோடு யான் கூறவில்லை. ஆனால் அவர் நோயுற் றிருக்கும்போது அவள் எதற்காக அவரைத் தொந்தரவு படுத்தவேண்டும்? அவள் அவ்வளவு பெரும் பீடை!"

ராக்கால்: "நாம் அனைவரும் அவர்க்குத் தொந்தரவே அளிக்கிறோம். பூரண நிலையை அடைந்தபின் நாம் எல்லோரும் அவரிடம் வந்தோமா? நாம் அவர்க்குத் துயரம் அளிக்கவில்லையா? நரேந்திரரும் வேறு சிலரும் ஆரம்பத்தில் எவ்வாறு நடந்து கொண்டனர்! அவரோடு அவர்கள் வழக்காடியதை எவ்வாறு என்பது!

சசி: "நரேந்திரர் வாயாற் சொன்னதையெல்லாம் செயல்களால் நிறை வேற்றினர்."

ராக்கால்: "டாக்டர் சர்க்கார் அவரிடம் எவ்வளவு முரடராக ஒழு கினர்! ஆராய்ந்து பார்த்தால் எவரும் குற்றமற்றவரல்லர்."

குருதேவர் (ராக்காலிடம் இரக்கத்தோடு): "நீ ஏதேனும் உண்ணுவாயா?"

ராக்கால்: "இப்போது வேண்டாம்; பிறகு உண்பேன்."

ஸ்ரீராமகிருஷ்ணர் ம—விடம் சாடைகாட்டி, அவர் அங்கே உண்ணப் போகிறாரா என்று கேட்டார்.

ராக்கால் (ம—விடம்): "தாங்கள் இங்கே உணவருந்துங்கள். அவர் தங்களை வேண்டுகின்றனர்."

ஸ்ரீராமகிருஷ்ணர் தமது படுக்கைமீது அமர்ந்திருந்தனர். அவர் ஐந்து வயதுப் பையனைப் போலக் காணப்பட்டார். அதே சமயம் அப்பைத்தியக்காரி படிவழியாகி ஏறிக் கதவருகே நின்றனள்.

ம—(தாழ்ந்த குரலில் சசியிடம்): "அவரை வணங்கிவிட்டுப் போகும்படி அவளிடம் சொல்லுக. சந்தடி செய்யாதே."

சசி அவளைக் கீழ்மாடிக்கு அழைத்துச் சொன்றனர்.

அன்று வங்காள வருஷப் பிறப்புநாள். பல அடியார்களான மாதர்கள் வந்து சேர்ந்தனர். அவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரையும் தூய அம்மையாரையும் வணங்கினர். பலராம், மனமோஹன் என்பவரின் மனைவியாரும், பாக்பசார் பிராம்மணியும் அவர்களுள் இருந்தனர். அவர்களிற் பலர் தங்களோடு குழந்தைகளையும் அழைத்து வந்திருந்தனர். மங்கையரிற் சிலர் குருதேவர்து

திருவடியில் மலர்களை இட்டினர். ஒன்பது பத்து வயதுள்ள இரு சிறுமியர் ஒரு சில பாடல்களைப் பாடினர்.

அன்று பிற்பகல். ம—வும் இன்னும் சில அடியார்களும் குருதேவருக்கு அருகே அமர்ந்திருந்தனர். நரேந்திரர் உள்ளே வந்தார். குருதேவர் சொல்லுவது போலவே, அவர் உறையினின்று வெளிவந்த வாளைப்போல் தோன்றினர்.

நரேந்திரர் குருதேவர்க்கு அருகே அமர்ந்து, அவரது காது கேட்க மாதர் மீது தமக்கிருந்த முழு அருவருப்பை வெளியிட்டார். இறைவனைக் காணும் நெறிக்கு மாதர்கள் எவ்வளவிற்கு இடையூறுகின்றனர் என்பதை அடியார்கட்கு எடுத்துரைத்தார்,

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சும்மா இருந்தார். அவர் நரேந்திரரது வார்த்தையைக் கவனித்துக் கேட்டார்.

நரேந்திரர் மீண்டும் "எனக்கு வேண்டுவது சாந்தியே. ஈசனையும் யான் பொருட்படுத்தவில்லை."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு மொழியும் புகலாது அவரைக் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தார். இடையிடையே நரேந்திரர் 'ஸத்தியம், ஞானம், அனந்தம் பிரம்ம' என்று ஓதி வந்தனர்.

வெள்ளி, ஏப்பிரல் 16, 1886

சந்திரன் பேரொளியைச் சொரிந்து, சோலையின் பாதைகளிலும், மரங்களிலும், குளத்தின் நீரிலும் தனது வெண் கதிர் வெள்ளத்தைப் பாய்ச்சிக்கொண்டிருந்தான். கிரீஷ், ம—, லாட்டு முதலான ஒரு சில அடியார்களும் குளத்திற்குச் செல்லும் படிகளின்மீது உட்கார்ந்திருந்தனர். மாலிகை குளத்திற்கு மேற்புறமாக இருந்தது. ஒரு விளக்கு இரண்டாவது மாடியில் உள்ள குருதேவரது அறையில் எரிந்தது. ஸ்ரீராமகிருஷ்ணர் தமது படுக்கைமீது அமர்ந்திருந்தனர். அறையில் பல அடியார்கள் இருந்தனர். அன்று மாலை நரேந்திரர் காளி தாரக் மூவரும் தக்ஷிணேசுவரம் சென்றிருந்தனர். இரவுப் பொழுதைப் பஞ்சவடியில் தியானத்திற் கழிக்க அவர்கள் கருதினர்.

கிரீஷ், லாட்டு, ம— மூவரும் ஸ்ரீ ராமகிருஷ்ணரது அறைக்குச் சென்றனர். சசியும், ஒன்றிரண்டு அடியார்களும் குருதேவரது அண்டையிலிருந்து பணி செய்து வந்தனர். பாபுராம், நிரஞ்சன், ராக்கால் மூவரும் அறைக்குட் புகுந்தனர். அது ஒரு பெரிய அறை. சில மருந்துகளும், இன்னும் சில பொருள்களும் படுக்கையருகே வைக்கப்பட்டிருந்தன. வடகோடியிலுள்ள ஒரு வாசல் வழியாக அறைக்குள் புகுவது வழக்கம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கு இரவெல்லாம் பக்கத்திருந்து பணிசெய்ய வேண்டியிருந்தமையால் அடியார்கள் தமக்குள் முறை வைத்துக்கொண்டு விழித்திருக்க

லானூர். அவர்க்குக் காவலாயிருக்கும் அடியார் ஸ்ரீராமகிருஷ்ணரது கொசு வலையைக் கட்டிவிட்டு, தாம் தரைமீது ஒரு பாயில் படுத்திருப்பார்; இல்லை யாயின், இரவெல்லாம் உட்கார்ந்தே பொழுது போக்குவர். ஸ்ரீராமகிருஷ்ணர் தமது நோய்காரணமாகச் சிறிதே உறங்குவராதலின், அவர்க்குக் காவலாயிருப் பவர்க்கும் தூக்கம் அற்பமாகத்தான் இருக்கும்.

அன்று மாலை ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒருவாறு நல்ல நிலையிலிருந்தார். அடி யார்கள் குருதேவரை வணங்கிவிட்டு, தரைமீது அமர்ந்தனர். குருதேவர் ம— விடம் விளக்கைத் தம்மருகே கொண்டுவருமாறு வேண்டினர். அவர் கிரீஷைப் பேரன்போடு வரவேற்றார்.

குருதேவர் (கிரீஷிடம்): "உமது உடம்பு முற்றும் நலமா? (லாட்டு வைப்பார்த்து) அவர்க்குக் குடிக்கப் புகை தயார் செய், வெற்றிலையும் அவர்க்குக் கொடு."

சில நிமிஷங்கட்குப் பிறகு, கிரீஷுக்குக் கொஞ்சம் சிற்றுண்டி அளிக்கு மாறு லாட்டுவிடம் அவர் கூறினர். அதைக் கொண்டுவர ஏற்பாடு செய்திருப்ப தாக லாட்டு சொன்னார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தார். ஓர் அடியார் அவர்க்குச் சில பூமாலைகளை சமர்ப்பித்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒவ்வொன்றாக அவற்றைத் தமது கழுத்தில் அணிந்துகொண்டார். அடியார்கள் அவரை ஆச்சரியத்தோடு நோக்கினர். அவர் தமது கழுத்தினின்றும் இரு மாலைகளைக் கழற்றி, அவற் றைக் கிரீஷுக்குக் கொடுத்தார்.

இடையிடையே ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிற்றுண்டி வந்து சேர்ந்ததா என்று கேட்டுக்கொண்டிருந்தார்,

ம— குருதேவர்க்கு வீசிக்கொண்டிருந்தார். படுக்கைமீது சந்தனக் கட்டை விசிறியொன்று இருந்தது; அது அவர்க்கு ஓர் அன்பர் அளித்த காணிக்கை. குருதேவர் அதை ம—விடம் கொடுத்தார்; ம— அதால் தொடர்ந்து அவர்க்கு விசிறிக்கொண்டிருந்தார். அவர் ம—விற்கு இரு மாலை களை அளித்தார்.

ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுகட்கு முன்பே ஏழோ எட்டோ வயதுள்ள ஒரு மகளை ம— இழந்திருந்தார். அக் குழந்தை குருதேவரைப் பன்முறை பார்த்திருந்தது. லாட்டு ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் ம—வைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்.

லாட்டு: "ம— தமது இறந்த குழந்தைக்குச் சொந்தமான சில புத் தகங்களைக் கண்டதும், நேற்றிரவு வருத்தப்பட்டு அழுதார். அவரது மனை வியோ துயரத்தால் ஏறக்குறையப் பைத்தியங்கொண்டவள்போல் ஆனாள். அவள் மற்றக் குழந்தைகளைக் கொடூரமாக நடத்துகிறாள். அவர் இடையிடையே இங்கே இரவைக் கழிப்பதனால், அவள் இல்லத்தில் ஒரு சச்சரவை உண்டு பண்ணுகிறாள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் அதைக்கேட்டுக் கவலை கொண்டவர்போல் தோன்றினர்.

கிரீஷ்: "அதைப்பற்றி ஆச்சரியமடைய வேண்டியதில்லை. பகவத் கீதை உபதேசம் பெற்ற பின்னும், அருச்சுனன் தனது மகன் அபிமன்யு இறந்த துயரத்தால் மூர்ச்சித்தான் அன்றே?"

கிரீஷுக்குச் சிற்றுண்டியை ஒரு தட்டில் அளித்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அதில் ஒரு சிறிதை உண்டார். கிரீஷ் மிச்சத்தைப் பிரசாதமாக அங்கீகரித்தனர். அவர் குருதேவர்க்கு முன்னே அமர்ந்து உண்ணத் தொடங்கினர், அவர்க்குப் பருகத் தண்ணீர் வேண்டியிருந்தது. அறையின் தென்மேற்கு மூலையில் ஒரு மண் கூஜா இருந்தது. அப்போது ஏப்பிரல் மாதம், பகலில் வெப்பம் மிகுதியாயிருந்தது. ஸ்ரீராமகிருஷ்ணர் "இங்கே நல்ல தண்ணீர் உள்ளது" என்றனர்.

குருதேவர்க்கு நோயின் கடுமையால் எழுந்து நிற்கவும் போதிய பலம் இல்லாது போயிற்று. ஆனால் சீடர்கள் எதைக் கண்டு வியப்பில் மூழ்கினர்—தெரியுமா? படுக்கையை விட்டு அவர் முழு நிர்வாணமாக எழுந்து, கூஜாவை நோக்கிச் செல்வதை அவர்கள் கண்டனர்! அவரே தண்ணீரைக் கிண்ணத்தில் ஊற்றுவதாய் இருந்தார். அடியார்கள் அச்சத்தால் சுமாராக விரைந்துபோயினர். குருதேவர் கிண்ணத்தில் நீரை நிறைய ஊற்றினர். அது குளிர்ந்திருக்கிறதோ என்று பார்ப்பதற்காக ஒன்றிரண்டு சொட்டு நீரைத் தமது கையில் ஊற்றிக் கொண்டார். அது அவ்வளவு குளிர்ந்திருக்கவில்லை என்பதைக் கண்டார்; ஆனால் அதனினும் சிறந்த நீரைக் காணுமையால், மனமின்றி அதைக் கிரீஷுக்கு அளித்தார்.

கிரீஷ் பணியாரங்களை உண்டுகொண்டிருந்தார். அடியார்கள் சூழ உட்கார்ந்திருக்க, ம— ஸ்ரீராமகிருஷ்ணர்க்கு வீசிக்கொண்டிருந்தார்.

கிரீஷ் (குருதேவரிடம்): "தேவேன் பாபு உலகைத் துறப்பதாகத் தீர்மானித்துவிட்டார்."

நோய் காரணமாக ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்குப் பேச முடியவில்லை. உதட்டிலே விரலை வைத்துக்கொண்டு, அவர் கிரீஷிடம் சாடைகளால், "அவரது மனைவி மக்கட்கு யார் உணவளிப்பார்?" என்று கேட்டார்.

கிரீஷ்: "யான் அறியேன்."

மற்ற அடியார்கள் மௌனமாயிருந்தார். கிரீஷ் பணியாரங்களை உண்ணும்போதே மறுபடியும் பேசத் தொடங்கினர்.

கிரீஷ்: "ஐயன்மீர், இவ்விரண்டில் எது அதிக புத்திசாலித்தனமாகும்—மன வருத்தத்தோடு உலகினைத் துறப்பதா? அன்றேல், இல்லற வாழ்வு நடத்திக்கொண்டே, இறைவனிடம் பிரார்த்திப்பதா?"

குருதேவர்(ம—விடம்): "நீர் கீதை வாசித்திருப்பதில்லையா? பற்றற்ற நிலையில் நின்று ஒருவன் தனது உலகக் கருமங்களை இயற்றுவானையின், எல்லாம் மித்தையென்று உணர்ந்தபின், உலகத்தே வாழ்வானையின், அவன் மெய்யாகவே ஈசனைக் காண்பான்.

"மனவருத்தத்தோடு உலகைத் துறப்பார் தாழ்ந்ததொரு வகுப்பினைச் சார்ந்தவராவார்.

"இல்லற ஞானி யாரைப் போன்றுள்ளான், தெரியுமா? அவன் கண்ணுடி வீட்டில் வாழும் மனிதனைப் போன்றவன். உள்ளும் புறமும் அவன் காணக் கூடும்?"

மறுபடியும் அறையில் மோனமே இருந்தது.

குருதேவர் (ம—விடம்): "சிற்றுண்டி சூடாயும் சிறந்ததாயும் உள்ளது."

ம— (கிரீஷிடம்): "ஆம், அது பாகு என்பவரின் கடையினின்றும் வாங்கப்பட்டது. அக்கடை புகழ்பெற்றது."

குருதேவர் (சிரித்துக்கொண்டே): "ஆம், புகழ்பெற்றதே."

கிரீஷ்: "உண்மையாவே பணியாரங்கள் நேர்த்தியாயுள்ளன."

(குருதேவரிடம்) "ஐயன்மீர், எனது மனம் இப்போது மிகவுயர்ந்த நிலையில் உள்ளது. அது கீழே இறங்குவதேன்?"

குருதேவர்: "உலகப்பற்றுள்ள வாழ்வை நடத்தும்போது, அது எப்போதும் நிகழ்வதேயாம். சிலசமயம் இல்லறத்தானது மனம் உயரச்செல்கிறது; சிலசமயம் அது கீழே இறங்குகிறது. சிலசமயம் அவனிடம் பக்தியுணர்ச்சி ஏராளமாக எழுகின்றது; சிலசமயம் அது குறைகின்றது. இது நிகழ்வதற்குக் காரணம், அவன் காம காஞ்சனங்கட்கு நடுவே வாழ்வதுதான். சிலசமயம் ஓர் இல்லறத்தான் ஈசனைப் பற்றித் தியானிக்கவோ, அவனது நாமத்தைப் பாடவோ செய்கிறான்; சிலசமயம் காம காஞ்சனங்களின் மீது மனத்தைத் திருப்புகிறான். அவன், ஒரு சமயம் பணியாரத்தும், மறுசமயம் மலத்தின் மீதோ அழுகும் புண்ணின்மீதோ அமரும் ஒரு சாதாரண ஈயைப்போல் இருக்கிறான்.

"ஆனால் துறவிகளின் நிலைமையோ முற்றிலும் வேறுபட்டதாகும். காம காஞ்சனங்களினின்றும் அவர்கள் தமது மனங்களை முழுதும் இழுத்து இறைவன் மீதே நிலை நிறுத்த வல்லவராவார். அவர்க்குப் பேரின்பத்தை (தெய்விக ஆனந்தத்தை) மட்டும் அனுபவிக்க முடியும், உண்மையான துறவிக்கு இறைவனைத்தவிர வேறெதனையும் அனுபவிக்க இயலாது. உலகப்பொருள்களைப் பற்றி மக்கள் பேசும் இடங்களினின்னும் அவன் விலகிவிடுவான், ஞானப் பேச்சிற்கே அவன் செவிசாய்ப்பான். தேனீக்கள் தேனை உறிஞ்சுவதற்காக மலர்கள் மீது மட்டும் உட்காரும்; அவை வேறொன்றையும் அனுபவிப்பதில்லை."

கிரீஷ் தமது கைகளைக் கழுவச் சிறிய மச்சுக்கு (தட்டட்டிக்கு)ச் சென்றார்

குருதேவர் (ம—விடம்): "ஒரு மனிதன் தன் முழுமனதையும் ஈசன் மீது நிறுத்த, அவனது அருளை அவசியம் பெறவேண்டும். சரி, கிரீஷ் அநேக பணியாரங்களைத் தின்றுள்ளார். இன்றிரவு வேறெதையும் உண்ணுதிருக்கும்படி அவரிடம் சொல்லும்."

கிரீஷ் அறைக்குத் திரும்பிவந்து, குருதேவர் முன்பு அமர்ந்தார். அவர் வெற்றிலையை மென்றுகொண்டிருந்தார்.

குருதேவர் (கிரீஷிடம்): "ராக்கால், இது நன்று இது தீது என்பதையும் மெய்ப்பொருள் இது பொய்ப்பொருள் இது என்பதையும், இப்போது உணர்ந்து விட்டான். அவன் குடும்பத்தோடு வாழ்கிறான் என்பதில் ஐயமில்லை. ஆனால் பொருள் இன்னது என்பதை அறிவான். அவனுக்கு மனைவி உண்டு. ஒரு மகனும் அவனுக்குப் பிறந்துள்ளான். ஆனால் இவையனைத்தும் பொய்யானவை (மித்தை), நிலையற்றவை என்பதை உணர்ந்துளான். ராக்கால் உலகத்தின் மீது பற்றுள்ளவனுகான்.

"அவன் சேற்றுமீன் போன்றவன். அம்மீன் சேற்றிலே வாழினும் அதன் உடலில் ஒரு சிறிது சேறும் இருப்பதில்லை."

கிரீஷ்: "ஐயன்மீர், இதெல்லாம் எனக்கு விளங்குவதில்லை. தங்கட்குப் பிரியம் இருக்குமாயின், எவரையும் தூய்மையுள்ளவராகவும் பற்றற்றவராகவும் செய்யத் தங்கட்குத் திறமையுண்டு. உலகப்பற்றுள்ளவனுயினும் துறவியா யினும் எவனையும் நல்லவனுக்கத் தங்கட்கு இயலும். மலய மாருதம் எல்லா மரங்களையும் சந்தனமரமாக்குகின்றது என்பது எனது நம்பிக்கை."

குருதேவர்: "அவற்றில் உட்பொருள் யாதேனும் இருந்தாலன்றி ஆவ தில்லை. உதாரணமாக, பருத்திபோன்ற சில, சந்தனமரமாக மாறுவதில்லை."

கிரீஷ்: "அதை யான் கவனிப்பதில்லை."

குருதேவர்: "ஆனால் அதுதானே நியதி."

கிரீஷ்: "ஆனால் தேவரீரைப் பற்றிய ஒவ்வென்றும் நியதியை மீறியதே யாகும்."

அடியார்கள் பேராச்சரியத்தோடு இந்தச் சம்பாஷணையைக் கவனித்துக் கொண்டிருந்தனர். இடையிடையே ம—வின் கையிலிருந்த விசிறி அசையாது நின்றது.

குருதேவர்: "சரி, அது உண்மையாகலாம். பக்தியெனும் ஆறு கரை புரண்டு பெருக்கெடுக்கும்போது, சுற்றியுள்ள இடத்தில் எல்லாம் வெள்ளம் ஒரு கழியின் ஆழமுள்ளதாகும்.

(ம—விடம்) "ஒருவனுக்குப் பக்தி உண்டாகும்போது, வேறெதுவும் அவனுக்கு அவசியமில்லை."

ம—: "அவசியமில்லை, ஐயன்மீர்."

ஸ்ரீராமகிருஷ்ணரைத் தனது காதலராகக் கருதிய பைத்தியக்காரியைப் பற் றியபேச்சு எழுந்தது. அடியார்கள் அவளை 'பாக்ளி' (பைத்தியக்காரி) என்றழைப் பார். குருதேவரை அணுக வொட்டாது, அவளைத் தடுக்க முயன்றுவந்தனர்.

குருதேவர் (கிரீஷுக்கும் பிறர்க்கும்): "பாக்ளி என்மீது மதுர பாவ னையை (காதலராகத் கருதுதலை)க் கொண்டுள்ளாள். ஒருநாள் அவள் தக்ஷி ணேசுவரம் வந்தாள், திடீரென அவள் அழத் தொடங்கினுள். 'அழுவானேன்?"

என்று யான் கேட்டேன். "எனக்குத் தலைவலிக்கின்றதே!' என்றாள் அவள். (அனைவரும் சிரித்தல்). மற்றொரு நாள் அவள் தக்ஷிணேசுவரம் வந்தபோது நான் உண்டுகொண்டிருந்தேன். அவள் திடீரென என்னிடம் 'நீர் என்மீது பிரியமாயிருக்கமாட்டீரா?' என்றனள். அவளது மனதில் எழுந்த நினைவு இன்னதென அறிய எனக்கு இயலவில்லை; நான் சாப்பிட்டுக் கொண்டே இருந்தேன். அப்போது அவள் 'மனதால் என்னை ஏன் நீர் வெளியேற்றுகின்றீர்?' என்று வினவினாள். 'உனது பாவனை யாது? என்று அவளிடம் விசாரித்தேன். என்னை அவள் தனது காதலராகக் கருதியதாகச் சொன்னாள். 'அப்படியா? ஆனால் எல்லா மாதரையும் தேவியின் அம்சங்களாகப் பாவிக்கிறேன். எல்லா மாதரும் எனக்குத் தாய்மார் ஆவாரே' என்றேன். அதைக் கேட்டதும் அவள் 'அதையெல்லாம் யான் அறியேன்' என்றனள். அப்போது யான் ராம்லாலை அழைத்து அவனிடம் 'ராம்லால், அவள் சொல்வதைக்கேள்! அவள் என்ன பேசிக்கொண்டிருக்கிறாள்?' "மனதால் வெளியேற்றுதல்" என்பதன் பொருள்யாது?' என்றேன். இப்போதும் அவளிடம் அம் மனோபாவனை உள்ளது."

கிரீஷ்: "பாக்ளி பாக்கியம் பெற்றவளே! அவள் பைத்தியங்கொண்டவளாகலாம். அடியார்களுடைய அடிகளையும் பெறலாம். ஆனால் அவள் நாள் முழுவதும் உம்மையே பற்றித் தியானிக்கிறாள். அவள் உம்மை எப்படித் தியானித்தாலும் சரி, அவளுக்கு என்றைக்கும் கேடுவாராது.

"ஐயன்மீர், அதைப்பற்றி யான் உணர்ந்ததை எவ்வாறு சொல்வது? யான் முன்பு இருந்ததையும், தேவீரையே தியானித்ததினால் இப்போது யான் எப்படி உளேன் என்பதையும் நினைத்துப் பாரும். முன்பு யான் சோம்பேறியாயிருந்தேன்; இப்போது அச்சோம்பல் பகவானிடம் சரணாகதியாக மாறிவிட்டது. முன்பு யான் பாவியாயிருந்தேன்; இப்போது யான் பணிவுடையனானேன். வேறு யாது என்னைச் சொல்லக்கூடும்?"

அடியார்கள் மௌனமாயிருந்தனர். ராக்கால் தமக்குப் பாக்ளிமீதுள்ள இரக்கத்தை வெளியிட்டார், அவர் கூறியதாவது: "அவளது நிலையைக் கருதி வருந்துகிறேம். அவள் அவ்வளவு தொந்தரையை உண்டுபண்ணுகிறாள், அதற்காக அவள் துன்பமும் அடைகிறாள்."

நிரஞ்சன் (ராக்காலிடம்): "நீ அவ்வாறு இரக்கப்படுவதற்குக் காரணம் நினக்கு ஒரு மனைவி இல்லத்து இருப்பதே. ஆனால் எங்கட்கு அவளைக் கொல்லவும் முடியும்."

ராக்கால் (கடுமையாக): "எவ்வளவு தற்பெருமை! அவர் முன்பு (ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் குறித்து) நீ அம்மாதிரி மொழிகளைக் கூற எப்படித் துணிந்தாய்?"

குருதேவர் (கிரீஷிடம்): "காமமும் காஞ்சனமுமே உலக வாழ்வாகின்றது. மக்களிற் பலர் பணத்தைத் தமது இரத்தமாகவே கருதுகின்றனர். ஆனால் நீ

எவ்வளவு ஆசை பணத்தில் வைத்திருப்பினும், ஒருக்கால் எந்நாளாயினும் அதில் ஒரு துளியும் மிச்சமின்றி உன் கை வழியாக ஒழுகிவிடும்,

"இறைவனை வழிபடவோ, சாதுக்கட்கும் அடியார்கட்கும் தொண்டாற்றவோ பணத்தைத் செலவு செய்பவர் மட்டுமே அதனை நல்வழியில் பயன்படுத்தியவராவர். அவர்களது செல்வம் பலனைத் தரும்.

"மருத்துவர்கள் அளிக்கும் எதனையும் என்னால் உண்ண முடிவதில்லை. மருத்துவர்கள் என்னும்போது, மனிதரின் துயரத்திற்கு விலையாகப் பணம் பெறுவோரையே குறிக்கிறேன், அன்னரது பணம் இரத்தமும் சீழுமேயாம்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் இது சம்பந்தமாக இரு மருத்துவர்களைக் கூறினர்.

கிரீஷ் : "டாக்டர் ராஜேந்திர தத்தர் உதார குணமுடையவர். அவர் எவரிடமிருந்தும் ஒரு காசும் பெறுவதில்லை. அவர் பணத்தைத் தான தருமங்களிற் செலவு செய்கிறார்."

சனி, ஏப்பிரல் 17, 1886

இன்று பௌர்ணமி இரவு, சிறிது காலமாக நரேந்திரர் தினந்தோறும் தக்ஷிணேசுவரம் சென்றுகொண்டிருந்தார். அவர் பெரும்பொழுதை பஞ்சவடியிலே தியானத்திலும் சமாதியிலும் கழித்து வரலானார். இன்று அவர் தக்ஷிணேசுவரத்தினின்றும் மாலையில் திரும்பி வந்தார். தாரகரும் காளியும் அவருடன் இருந்தனர்.

இரவில் எட்டு மணியாயிற்று. பூஞ்சோலை மாளிகையின் பொலிவை (அழகை) நிலாவும் தென்றலும் சோபிக்கச் செய்தன. அடியார்களிற் பலர் கீழ் மாடியிலுள்ள அறையில் தியானித்துக்கொண்டிருந்தனர். அவர்களைக் குறித்து நரேந்திரர் ம—விடம் "அவர்கள் தமது உபாதிகளை ஒவ்வொன்றாக உதிர்த்து வருகின்றனர்" என்று உரைத்தார்.

சில நிமிடங்கட்குப்பின் ம— ஸ்ரீராமகிருஷ்ணரது அறைக்கு வந்து, தரை மீது அமர்ந்தார். குருதேவர் தமது சிறு துணியையும் காளாஞ்சியையும் சுத்தமாக்குமாறு அவரிடம் சொன்னர். ம— தொட்டியில் அவற்றைச் சுத்தம் செய்தனர்.

மறுநாட்காலை ஸ்ரீராமகிருஷ்ணர் ம—வை அழைத்துவரச் சொன்னர். ம—கங்கையில் நீராடிக் குருதேவரை வணங்கிய பின், மாடிக்குச் சென்றிருந்தனர். ஸ்ரீராமகிருஷ்ணர் ம—விடம் அவரது துயரத்தால் நொறுங்கிய மனைவியைப் பூஞ்சோலை மாளிகைக்கு அழைத்து வரும்படிக்கும், அங்கே அவள் உண்ணலாம் என்றும் சொன்னர்.

குருதேவர் ம—விடம் சாடை செய்து, "அவளை வரச் சொல்க. இங்கே இரண்டு நாள் அவள் தங்கட்டும். அவள் குழந்தையையும் கொண்டுவரலாம்" என்று கூறினர்.

ம—: "அப்படியே ஆகுக. அவட்கு ஈசனிடம் முதிர்ந்த பக்தி உண்டாகுமாயின், அது நேர்த்தியாகும்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் மறுபடியும் கைச்சாடை காட்டிக் கூறியதாவது: "ஆ! துபரம் பக்தியை வெளியே பிடித்துத் தள்ளும். அவனும் அவ்வளவு பெரிய டையனுயிருந்தான்!"

"கிருஷ்ண கிஷோர்க்கு இரு குமாரர்கள் இருந்தனர். பவநாத்திற்குச் சமவயதுடையவராயிருந்தனர் அப்பிள்ளைகள். அவர்களில் ஒவ்வொருவரும் இரு பல்கலைக்கழகப் பட்டங்கள் பெற்றிருந்தனர். அவர்கள் இருவரும் இறந்தனர். கிருஷ்ணகிஷோர் ஞானியாயிருந்தும் முதலில் மனதை யடக்க மாட்டாதவராயினர். எனக்குக் குழந்தை யின்மையால் யான் எவ்வளவு பாக்கியசாலி!

"கிஷோரி ஏன் வருவதில்லை?"

ஓர் அடியார்: "அவர் ஒவ்வொரு நாளும் கங்கைக்கு நீராடவருகிறார்."

குருதேவர்: "ஆனல், இங்கு ஏன் அவர் வருவதில்லை?"

அடியார்: "யான் அவரை வரச் சொல்லுகிறேன்."

குருதேவர்: "கிரீஷ் ஏன் வரவில்லை?"

ம—வின் குடும்பத்தைச் சார்ந்த இரு இளம் பெண்கள், ஒன்பதுவயதும் பத்துவயதும் முறையே உள்ளவர்கள், தேவியைப் பற்றிய பல பாடல்களைப் பாடினர். சியாம்புகூரில் ம—வின் இல்லத்திற்கு அவர் எழுந்தருளியபோது அவர்க்காக அவர்கள் முன்பு பாடினவரே. அவர்களுடைய பாடல்களால் குருதேவர் மிக்க மகிழ்ச்சியடைந்தனர், அவர்களுடைய பாட்டு முடிந்தபின், அடியார்கள் அப்பெண்களைத் தமக்காகக் கீழ்மாடியிலே பாடுமாறு வரவழைத்தனர்.

குருதேவர் (ம—விடம்): "பெண்கட்கு இனிப் பாடல்களைக் கற்பிக்க வேண்டாம். அவர்கள் தாங்களாகவே பாடுவாராயின், அது வேறு. கண்டவர்கள் முன்னெல்லாம் பாடுவதனல் அவர்கள் தமது நாணத்தை இழப்பர். மாதர்க்கு நாணம் மிக அவசியமானது."

மலர்களும் சந்தனமும் குருதேவர் முன்பு ஒரு பூக்கூடையில் வைக்கப் பட்டன. அவர் தமது படுக்கையில் அமர்ந்தவாறே, அப்பொருள்களைக் காணிக்கையாகக் கொண்டு தம்மையே வழிபட்டார். சிலசமயம் மலர்களையும் சந்தனத்தையும் தமது தலைமீதும், சில சமயம் தமது தொண்டையிலும், சில சமயம் தமது நெஞ்சிலும், சில சமயம் தமது நாபியிலும் அவர் இடலானர்.

கொன்னகரைச் சார்ந்த மனமோஹன் உள்ளேவந்து குருதேவரை வணங்கிவிட்டு, ஓரிடத்து அமர்ந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அப்போதும் தமது ஆத்மாவை வழிபடுவதில் மனமூன்றியிருந்தார், அவர் தமது கழுத்தின்மீது ஒரு பூமாலையைச் சாத்திக் கொண்டார், சிறிது பொழுது கழிந்த பின் அவர் மனமோஹனைக்கண்டு மனமகிழ்ச்சியடைந்தவராகத் தோன்றினர், அவர்க்குச் சிலமலர்களை அளித்தார். ம—வும் ஒரு மலரைப் பெற்றனர்.

காலையில் ஏறக்குறைய மணி ஒன்பதாயிற்று. குருதேவரும் ம—வும் பேசிக்கொண்டிருந்தனர். சசியும் அறையில் இருந்தார்.

குருதேவர் (ம—விடம்): "நரேந்திரனும் சசியும் எதைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்? எதை ஆராய்ந்து கொண்டிருந்தனர்?"

ம— (சசியிடம்): "நீங்கள் எதைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தீர்கள்?"

சசி: "உம்மிடம் அதைப்பற்றிக் கூறியது நிரஞ்சனு?"

குருதேவர்: "நீங்கள் எதைப்பற்றி வழக்காடிக் கொண்டிருந்தீர்கள்? 'ஈசன்' 'அஸ்தி' 'நாஸ்தி' முதலிய மொழிகள் என்காதில் வீழ்ந்தன.'

சசி (சிரிப்போடு): "நரேந்திரனே யான் அழைக்கட்டுமா?"

குருதேவர்: "சரி"

நரேந்திரர் உள்ளே வந்து, ஓர் ஆசனத்து அமர்ந்தார்.

குருதேவர் (ம—விடம்): "அவனிடம் ஏதாவது கேள். (நரேந்திரரிடம்) நீங்கள் எதைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தீர்கள் என்பதை எங்களிடம் சொல்லுக."

நரேந்திரர்: "எனக்கு அஜீரணம் உள்ளது, தங்களிடம் சொல்ல என்ன இருக்கின்றது?"

குருதேவர்: "உனது அஜீரணம் நீங்கும்."

ம— (சிரித்துக்கொண்டே): "புத்தரது அனுபூதியைப் பற்றி எங்கட்குச் சொல்லுக."

நரேந்திரர்: "அவரைப் பற்றி நீங்கள் என்னைப் பேசச் சொல்ல நான் புத்தராகி விட்டேனு?"

ம—: "ஈசனது இருப்பைப் பற்றிப் புத்தர் யாது உரைக்கின்றார்?"

நரேந்திரர்: "ஈசன் உள்ளதாக நீர் எப்படிக் கூற முடியும்? இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தவர் நீரே? பெர்க்கிளி என்ற தத்துவ ஆராய்ச்சி யாளர் அதைப் பற்றிக் கூறுவதை நீர் அறியீரோ?"

ம—: "ஆம், அறிவேன். அவரது கொள்கைப்படி, புற உலகப் பொருள்களின் இருப்பு அவற்றைக் காண்பானைப் பொறுத்துள்ளது. இந்திரி யங்கள் உலகைக் காணும்வரை, உலகம் உள்ளது."

குருதேவர்: "நங்தா (தோத்தாப்புரி என்பவர்) இவ்வாறு சொல்வ துண்டு: 'உலகம் இருப்பது மனதில் மட்டுமே, உலகம் மறைவதும் மனதில் மட்டுமே! ஆனால் 'நான்' என்ற உணர்ச்சி உள்ளவரை ஈசனோடு ஆண்டான்–அடிமை உறவையே பாவிக்கவேண்டும்."

நரேந்திரர் (ம—விடம்): "தருக்கத்தால் ஈசன் இருப்பதை நீர் எவ் வாறு நிரூபிப்பீர்? ஆனால் நீர் நம்பிக்கையை ஆதாரமாகக் கொள்வீராயின், ஆண்டான்—அடிமை உறவை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அதை நீர் ஒப்புக்கொள்வீராயின்,—ஒப்புக்கொள்ளாதிருக்க வழியுமில்லை—ஈசன் அன்பு வடிவினன் என்றும் நீர் கூறியாகவேண்டும்.

"இவ்வுலகிலுள்ள துயரத்தை மட்டும் நீர் நினைக்கிறீர்? எவ்வளவு சுகத்தையும் உமக்குப் பகவான் அளித்துள்ளார் என்பதை நீர் ஏன் மறக்கிறீர்? அவர் நம்மிடம் கொண்டுள்ள அன்பை என்னென்பது! அவர் நமக்கு மூன்று அரும்பெரும் பொருள்களை அளித்துள்ளார்; அவையாவன: மனிதப் பிறவி, ஈசனைக்காணும் பேரவா, ஒரு மஹா புருடரின் துணை என்பன."

அனைவரும் பேசாதிருந்தனர்.

குருதேவர் (நரேந்திரரிடம்): "யாரோ ஒருவர் பரம்பொருள் என்னுள் இருப்பதை யான் தெளிவாகக் காண்கின்றேன்."

நரேந்திரர் கீழ்மாடிக்குச் சென்றார். அவர் தமக்குள்ளே பின் வருமாறு பாடிக்கொண்டிருந்தார்:

நின்முகக்காட் சியினுலென் நிறைதுயரை ஈசாநீர் நீக்கி விட்டீர்.
இன்முகத்தின் எழில்மாய்ம் என்னுளத்தை மயக்கியதோ டீர்க்கு மந்தோ!
மன்னுமுடி யாத்துயரை மறந்தனவால் ஏழுலகும் நின்னைக் கண்டே;
பின்னையெனைப் பற்றியான் பேசுவதேன் ஏழையேன் சிறிய னேனே.

நரேந்திரரிடம் சிறிது அஜீரணம் இருந்தது. அவர் ம—விடம் "பக்தி நெறியைப் பற்றுபவனுக்கு உள்ளம் சிறிது கீழிறங்கி உடலைச் சார்கிறது இல்லையேல் நான் யார்? மனிதனுமல்லேன், இறைவனுமல்லேன். இன்பமோ துன்பமோ எனக்கேது?" என்றனர்.

இரவில் எறக்குறைய மணி ஒன்பது. சுரேந்திரரும் இன்னும் ஒரு சில அடியார்களும் ஸ்ரீராமகிருஷ்ணரது அறைக்குட் புகுந்து, பூமாலைகளை அவர்க்குச் சமர்ப்பித்தனர். பாபுராம், லாட்டு, ம—இவர்களும் அறையில் இருந்தனர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் சுரேந்திரரது மாலையைத் தமது கழுத்தில் அணிந்து கொண்டனர். அனைவரும் அமைதியாக இருந்தனர். திடீரெனக் குருதேவர் சுரேந்திரர்க்குச் சாடைகாட்டித் தம்மருகே வருமாறு வேண்டினர்; சீடர் படுக்கையருகே வந்ததும், ஸ்ரீராமகிருஷ்ணர் தமது மாலையைக் கழற்றிச் சுரேந்திரரது கழுத்தில் இட்டனர், சுரேந்திரர் குருதேவரை வணங்கினர். ஸ்ரீராம கிருஷ்ணர் சாடையால் தமது காலைத் தேய்க்குமாறு அவர்க்கு உணர்த்தினர். சுரேந்திரர் திருவடிகளை மெல்லப் பிடித்தார்.

12

குருதேவர்க்குத் தமது அடியார்கள் மீதுள்ள அன்பு

புதன், ஏப்பிரல், 21 1886

ம—வும் நரேந்திரரும் காசிப்பூர் மாளிகைப் பூஞ்சோலையிலே உலாவிக் கொண்டிருந்தனர். நரேந்திரர் பெரிதும் கவலைக்கு ஆளாயிருந்தார்; காரணம் அவர் தமது குடும்பத்தின் பணக்கஷ்டங்களைத் தீர்க்க அதுவரை இயலாமையே.

நரேந்திரர்: "'வித்யாசாகர் பள்ளிக்கூட'த்து வேலையை நான் பொருட் படுத்தவில்லை. நான் கயைக்குப் போவதாக நினைத்துக்கொண்டிருக்கிறேன். அங்குள்ள ஒரு ஜமீன்தார் தமது ஜமீன் காரியங்களை நடத்த ஒருவர் வேண்டும் என்று சொல்லக் கேள்விப்பட்டேன். கடவுள் என்ற பொருள் இல்லை."

ம— (சிரித்துக்கொண்டு): "நீர் இப்போது அப்படிச் சொல்லலாம்; ஆனால் பின்னளில் நீர் வேறுவிதமாகப் பேசுவீர். ஈசனைத் தரிசிக்குமுன் சந் தேகப்படுதல் என்னும் நிலையும் ஒன்று உண்டு, இம்மாதிரியான படிகள் வழியாக ஒருவன் கட்டாயம் செல்லவேண்டும், பின்னும் வெகுதூரம் செல்ல வேண்டும்; இம்மாதிரித்தான் ஒருவன் பகவானைக் காணக்கூடும், இதுவே குருதேவர் சொல்வது."

நரேந்திரர்: "நான் அந்த மரத்தைப் பார்ப்பது போல எவராவது ஈசனைப் பார்த்துள்ளனரா?"

ம—: "ஆம், நமது குருதேவர் அவ்வாறு ஈசனைக் கண்டுள்ளனர்."

நரேந்திரர்: "அது மயக்கக் காட்சியாயிருக்கலாம்."

ம—: "ஒரு குறிப்பிட்ட நிலையில் ஒருவர் அனுபவிப்பது எதுவாயினும் அந்நிலையில் அவர்க்கு அது உண்மையேயாம். நீர் ஒரு தோட்டத்திற்குப் போயிருப்பதாகக் கனவு காண்கிறீர் என்று வைத்துக்கொள்வோம். கனவு நிகழ்ந்துகொண்டிருக்கும்வரை, தோட்டமும் உமக்கு உண்மையே. ஆனால் உமது மனது மாறுதலை அடையும்போது—உதாரணமாக, கனவு நிலையிலிருந்து நீர் விழிக்கும்போது—அதனைப் பொய்யாக நினைக்கிறீர். ஈசனைக் காணக் கூடிய நிலையை உமது மனம் அடையும்போது, ஈசன் உண்மையாவதை அறிவீர்."

நரேந்திரர்: "எனக்கு வேண்டுவது உண்மையே. அன்றொரு நாள் யான் ஸ்ரீ ராமகிருஷ்ணரோடும் பெருவழக்காடினேன்."

ம— (சிரித்துக்கொண்டு) : "நடந்ததென்ன ?"

நரேந்திரர் : "அவர் என்னிடம் 'சிலர் என்னைக் கடவுள் என்றழைக்கின்றனர்' என்று கூறினர். 'ஆயிரம்பேர் உம்மைக் கடவுள் என்றழைக்கட்டும்; யான் அதனை உண்மையென அறியாதவரை உம்மைக் கடவுள் என்று அழைக்க மாட்டேன் என்பது உறுதி' என்று மறுமொழி கூறினேன். அவர் 'அநேக சொல்வது நிஜமாகவே உண்மை ; அது தர்மம்' என்று அவர் கூறினர். அதற்குப் பதிலாக 'மற்றவர் ஒன்றை உண்மையெனப் பறையறையட்டும். யானே அதனை உண்மையென உணராவிடில் அவர்கள் சொல்வதைக் கவனிக்கமாட்டேன் என்பது நிச்சயம்' என்று யான் சொன்னேன்."

ம— (சிரித்துக்கொண்டே) : "உமது மன நிலை மேற்றிசைப் பண்டிதர்களின்—உதாரணமாக, கோபர்னிகஸ் பார்க்ளி என்பவர்களின்—மன நிலையைப் போன்றுள்ளது. உலகம் முழுவதும் சூரியனே சுற்றிவருவதாகக் கூறி வந்தும், கோபர்னிகஸ் அதைப் பொருட்படுத்தவில்லை, எல்லோரும் புற உலகத்தை உண்மையாகக் கூறியும், பார்க்ளி அதிற் கவனம் செலுத்தவில்லை."

நரேந்திரர் : "தாங்கள் தத்துவ ஆராய்ச்சியின் வரலாற்றைப் பற்றிய ஒரு நூலை எனக்குத் தர முடியுமா ?"

ம— : "யார் எழுதியது ? லியூயிஸ் எழுதியதா ?"

நரேந்திரர் : "இல்லை, ஓவர்பெக் என்பார் எழுதியது. எனக்கு ஜெர்மானிய ஆசிரியரது நூலைக் கற்பது அவசியம்."

ம— : "நீர் சற்று முன்பு 'யான் அம்மரத்தைக் காண்பதுபோல எவரேனும் ஈசனைக் கண்டதுண்டா ?' என்றீர். பகவானே உம்முன் மனித வடிவில் வந்து, 'நானே பகவான்' என்று சொல்வதாகவே வைத்துக்கொள்வோம். நீர் அதை அப்போது நம்புவீரா ? லாஸரஸ் என்பவரது கதை உமக்கு ஞாபகம் இருப்பது நிச்சயம். தமது மரணத்திற்குப்பின் லாஸரஸ் ஏப்பிரகாமிடம் 'யான் மறுபடியும் பூவுலகிற்குச் சென்று, எனது நண்பர்கள் உறவினர்களிடம் நரகமும் இறப்பிற்கு அப்பால் வாழ்வும் உள்ளன என்று சொல்வேன்' என்றனர். ஏப்பிரகாம் அதற்குப் பதிலாக 'அவர்கள் உன்னை நம்புவர் என்று நீ நினைக்கிறுயா ? தங்களிடம் அம்மாதிரிச் சொல்பவன் ஒரு பொய் வேஷக்காரன் என்பர்' என்று உரைத்தார். ஈசனைத் தருக்கத்தால் (யுக்தியால்) அறிய முடியாதென்று குருதேவர் கூறுகிறார். நம்பிக்கையால் மட்டுமே ஒருவன் அறிவையும், அறிவிற்கு அப்பாற்பட்ட ஞானத்தையும் பெறுகிறான். நம்பிக்கையால் மட்டும் ஒருவற்கு ஈசரைக் காணவும், அவரோடு நெருங்கிப் பழகவும் இயலும்."

அப்போது பிற்பகலில் மூன்று மணி. ஸ்ரீ ராமகிருஷ்ணர் படுக்கையில் அமர்ந்திருந்தார். தக்ஷிணேசுவரத்திலிருந்து வந்திருந்த ராம்லால் அவரது திருவடியைப் பிடித்துக்கொண்டிருந்தார். சிந்தி எனும் ஊரைச் சார்ந்த கோபாலரும் ம—வும் அறையில் இருந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ம—விடம் சன்னல்களைச் சாத்திவிட்டுத் தமது பாதங்களைப் பிடிக்குமாறு வேண்டினர், குருதேவரது வேண்டுகோளின்படி பூரணர் காசிப்பூர் பூந்தோட்டத்திற்கு ஒரு வாடகை வண்டியில் வந்திருந்தார். ம— வண்டி வாடகையைக் கொடுப்பதாயிருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் கோபாலரிடம் சாடைகாட்டி, பணத்தை ம—விடமிருந்து அவர் பெற்றனரா என்று கேட்டார், கோபாலர் 'ஆம்' என்று விடையளித்தார்.

இரவு ஒன்பது மணிக்கு சுரேந்திரர் ராம் முதலியோர் கல்கத்தாவிற்குத் திரும்புந் தருணத்தில் இருந்தனர், அப்போது புழுக்கமாயுள்ள ஏப்பிரல் மாதம்; ஸ்ரீ ராமகிருஷ்ணரது அறை பகல் வேளையில் மிகச் சூடாயிற்று; ஆதலின், சுரேந்திரர் அறையைக் குளிர்ந்திருக்கும்படிச் செய்ய, வைக்கோலாற் செய்த சில தட்டிகளைக் கொணர்ந்திருந்தார்,

சுரேந்திரர்: "என்ன, ஒருவரும் இவ் வைக்கோல் தட்டிகளைத் தொங்க விடவில்லையே. இங்கு எவரும் ஒன்றையேனும் கவனிப்பதில்லை."

ஓர் அடியார் (சிரித்துக்கொண்டு): "இங்குள்ள அடியார்கள் பிரம்மஞ் ஞான நிலையில் இப்போது இருக்கின்றனர். அவர்கள் 'ஸோஹம்' பாவனையில் —நானே அப்பிரம்மம் என்ற நிலையில்—உள்ளனர். உலகம் அவர்கட்குப் பொய்யானது. அவர்கள் அதனினும் தாழ்ந்த நிலைக்கு இறங்கி, ஈசனைத் தமது எஜமானனுகவும், தம்மை அவருடைய தாசராகவும் கருதும்போது, அவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்குப் பணி செய்வதில் கருத்தைச் செலுத்துவர்." (எல்லோரும் சிரித்தல்)

வியாழன், ஏப்பிரல் 22, 1886

மாலையில் ராக்கால், சசி, ம— மூவரும் காசிப்பூர்த் தோட்டத்திலே உலாவிக்கொண்டிருந்தனர்.

ம—: "குருதேவர் ஒரு குழந்தையைப் போன்று உள்ளார். முக்குணங் கட்கும் அப்பாற்பட்டவர்."

சசியும், ராக்காலும்: "அவரே அதைக் கூறியுள்ளார்."

ராக்கால்: "கோபுர உச்சியில் இருப்பவர்போல அவர் உள்ளார்; அங்கிருந்து அவர் எல்லா சமாசாரத்தையும் பெறுகிறார், எல்லாவற்றையும் காண்கிறார். ஆனால், பிறர் அங்கே செல்லவோ, அவரைக் கிட்டவோ இயலாது."

ம—: "அவர் 'அம்மாதிரியான நிலையில் ஒருவர் சதாக் காலமும் பகவானைத் தரிசிக்கிறார்' என்று சொல்லியுள்ளார், அவரிடம் உலகப்பற்று எள்ளளவும் இல்லை. அவரது உள்ளம் விரைவில் தீப்பற்றும் உலர்ந்த விறகைப்போல் உள்ளது."

சசி: "அவர் பலவகையான புத்திகளைப்பற்றிச் சாரு என்பவரிடம் அன்று வருணித்தார், எந்தப் புத்தி வழியாக ஒருவன் ஈசனை அடைவானோ, அதுவே சரியான புத்தி; ஆனால் ஒரு 'டெபுடி மாஜிஸ்திரேட்'டோ வக்கீலோ

ஆவதற்கும், ஒரு வீட்டைப் பெறுவதற்கும் உதவும் புத்தியோ அற்ப புத்தியாகும்,"

ம—: "எவ்வளவு அற்புதமான மொழிகள்!"

சசி: "காளி என்பவர் குருதேவரிடம், 'ஆனந்தம் பெறுவதால் என்ன பயன்? பில் என்னும் சாதியாரும் (காட்டுச் சாதியார்) ஆனந்தமாயிருக்கின்றனர். காட்டு மனிதரும் (நாகரீகமற்றவரும்) ஆனந்த வெறியினால் எப்போதும் பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் உள்ளனர்' என்று சொன்னர்.

ராக்கால்: "அதற்கு அவர் (குருதேவர்) காளியிடம்: 'என்ன கருதுகின்றனை? பிரம்மானந்தமும் உலக சுகமும் ஒன்றேயாகக்கூடுமா? சாதாரண மனிதர் உலக சுகத்தினில் திருப்தியடைகின்றனர். உலகப் பொருள்களின் மீதுள்ள பற்றை ஒருவன் முற்றும் ஒழித்தாலன்றிப் பிரம்மானந்தத்தைச் சுவைக்க முடியாது. பணத்தாலும் ஐம்புலன்களின் அனுபவத்தாலும் இன்பமுண்டு; பகவானைக் காண்பதனால் விளையும் பேரின்பமும் உண்டு. இவ்விரண்டும் என்றேனும் ஒன்றே ஆகக்கூடுமா? ரிஷிகள் பிரம்மானந்தத்தைப் பருகினர்."

ம—: "காளி தற்சமயம் புத்தர்மீது தியானஞ் செய்கிறார்—இக்காரணத்தால் அவர் ஆனந்தத்திற்கும் அப்பாற்பட்ட நிலையைப்பற்றிப் பேசுகிறார்."

ராக்கால்: "ஆம், காளி குருதேவரிடம் புத்தரைப்பற்றிப் பேசினர். ஸ்ரீ ராமகிருஷ்ணரோ அவரிடம் 'புத்தர் பகவானின் அவதாரம். அவரை வேறெருவரோடு நீ எப்படி ஒப்பிட முடியும்? அவர் பெரியாராவது போலே, அவரது போதனையும் பெருமை வாய்ந்ததாகும்' என்று சொன்னர். காளி அவரிடம்: 'உண்மையாகவே ஒவ்வொன்றும் பகவானது சக்தியின் பிரகாசமேயாகும். உலக சுகமும் பிரம்மானந்தமும் இரண்டும் அதே சக்தியின் பிரகாசமே (விளக்கமே)யாகும்' என்றனர்."

ம—: "குருதேவர் அதற்கு என்ன மறுமொழி கூறினர்?"

ராக்கால்: "அதற்குப் பதிலாக அவர் 'அது எப்படிக் கூடும்? குழந்தையை உண்டாக்கும் சக்தியும் ஈசனது தரிசனத்தைப் பெறச்செய்யும் சக்தியும் ஒன்றுகுமா?' என்று கேட்டார்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் இரண்டாவது மாடியில் தமது அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தார். நரேந்திரர், ராக்கால், சசி, சுரேந்திரர், ம—, பவநாத் முதலான அடியார்கள் கூட இருந்தனர். டாக்டர் மஹேந்திர ஸர்க்காரும், டாக்டர் ராஜேந்திர தத்தரும் அவரைச் சோதிப்பதற்காக அங்கிருந்தனர். அவரது நிலை வரவரக் கேவலமாகி வந்தது.

வீட்டு வாடகை அறுபது ரூபாய்க்கும் எழுபது ரூபாய்க்கும் இடையிலிருந்தது. சுரேந்திரர் செலவிற் பெரும்பாகத்தை ஏற்றனர்; தமது பெயரில் வீட்டை வாடகைக்கு வாங்கியிருந்தனர். மற்ற இல்லற அடியார்களும் தமது சக்திக்கு ஏற்றவாறு பண உதவி புரிந்திருந்தனர். ஒரு சமையற்காரனும் ஒரு

வேலைக்காரியும் இல்லத்திலுள்ளாரது நலத்தைப் பார்துகாப்பதற்காக அமர்த்தப் பட்டிருந்தனர்.

குருதேவர் (டாக்டர் சர்க்காரிடத்தும் பிறரிடத்தும்) : "செலவு ஏறிக்கொண்டே போகிறது."

டாக்டர் சர்க்கார் (அடியார்களைச் சுட்டி) : "ஆனல் அவர்களோ அதைத் தாங்கத் தயாராயிருக்கின்றனர், அவர்கள் பணத்தைச் செலவு செய்யத் தயங்குவதில்லை. (ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம்) இப்போது பார்த்தீர்களா பணம் அவசியம் என்பதை ?"

குருதேவர் (நரேந்திரரிடம்) : "நீ ஏன் பதில் சொல்லவில்லை ?"

நரேந்திரர் பேசாதிருந்தார். டாக்டர் சர்க்கார் பின்னும் பேச்சைத் தொடங் கினர்.

டாக்டர் சர்க்கார் : "பொன் அவசியம், பெண்ணும் அவசியம்."

ராஜேந்திரர் : "ஆம், அவருடைய (ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய) பத் தினியார் அவர்க்கு உணவு சமைத்துக்கொண்டிருக்கிறார்."

டாக்டர் சர்க்கார் (குருதேவரிடம்) : "பார்த்தீர்களா ?"

குருதேவர் (சிரித்துக்கொண்டே) : "ஆம்—ஆனல் மிக்க கஷ்டம் !"

டாக்டர் சர்க்கார் : "கஷ்டங்கள் இல்லையேல், எல்லோரும் பரம ஹம்சரா யிருப்பார்."

குருதேவர் : "ஒரு மாது என்னைத் தொடுவாளாயின், எனக்கு நோய் உண்டாகிறது. உடலில் அந்த இடம், கொம்பு மீன் ஒன்று கொத்தினதுபோல, வலி தருகின்றது."

டாக்டர் சர்க்கார் : "யான் அதை நம்புகிறேன். ஆனல் பெண்கள் இல்லாமல் எவ்வாறு தங்கட்குக் காரியம் நடக்கும் ?"

குருதேவர் : "கையில் பணம் வைத்தேனையின், எனது கை திருகி மேலே செல்கின்றது ; எனது மூச்சு நின்றுவிடுகிறது. உலகத்திலே ஞான வாழ்வு நடத்துதற்காகப் பணம் செலவு செய்வதில் தீங்கு யாதொன்றும் இல்லை —உதாரணமாக, பகவானை வழிபடவும், சாதுக்கட்கும் அடியார்கட்கும் பணி விடை செய்தற்கும் பணம் செலவு செய்தலில் கேடு இல்லை.

"ஒரு பெண்ணின் மூலம் மாயையுலகில் ஒருவன் சிக்கிக்கொள்வானையின், அவன் ஈசனை மறக்கிறான். ஜகன்மாதாவாகிய தேவியே, பெண்வடிவம் என் னும் மாயை வடிவத்தைத் தரித்திருக்கிறாள். இதைச் சரியாக அறிந்தவன் உல கிலே மாயை வாழ்வை நடத்தப் பிரியப்படான். ஆனல் எல்லா மாதரும் தேவி யின் வடிவங்களே என்பதை மெய்யாக உணர்பவன் இவ்வுலகிலே ஞான வாழ்வை நடத்தலாம். ஈசனை உணராமல், ஒரு பெண்ணின் உண்மையான சொரூபத்தை எவனும் அறிய முடியாது."

சில நிமிஷங்கள் கழிந்த பின், டாக்டர்கள் விடை பெற்றுக்கொண்டு சென்றனர். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் ம—வும் சம்பாஷணையில் ஈடுபட்டிருந்தனர்.

குருதேவர் மாதரைப் பற்றித் தாம் இன்னவாறு உணர்ந்திருந்தார் என்பதை ம—விடம் சொல்லிக்கொண்டிருந்தார்.

குருதேவர் (ம—விடம்): "பெண்ணும் பொன்னும் இன்றி என்னால் வாழ்க்கை நடத்த முடியாதென அவர்கள் கூறுகின்றனர். எனது மனதின் நிலைமையை அவர்கள் அறியார்.

"யான் ஒரு மாதைத் தொடுவேனாயின், எனது கை உணர்ச்சியற்றுப் போகிறது, அதில் வலியுண்டாகிறது. நட்புரிமையோடு ஒரு மாதை அணுகி, அவளிடம் பேசத் தொடங்குவேனாயின், எங்கட்கு இடையே ஒரு தடை வைக்கப் பட்டிருப்பதாக உணர்கிறேன். அத் தடையைத் தாண்ட எனக்கு இயலாது போகின்றது.

"யான் தனியாயுள்ளபோது ஒரு மங்கை எனது அறைக்குட் புகுவாளாயின், உடனே யான் குழந்தைபோலாகி, அவளை எனது தாயாகக் கருதுகிறேன்."

ம—இம்மொழிகளைக் கூர்ந்து கேட்டபோது, அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரது மேன்மையுற்ற மனநிலையைக் கண்டு ஆச்சரியத்தால் மோனமானார். பவநாத், நரேந்திரர் இருவரும் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டு தூரத்தில் உட்கார்ந்திருந்தனர். பவநாத் மணம் புரிந்திருந்தவர், தமக்கு ஒரு அலுவலைத்தேட முயன்று கொண்டிருந்தார்; ஆதலின் காசிப்பூரிலே அடிக்கடி ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் காண அவர்க்கு இயலாது போயிற்று. அவர் ம—விடம் "வித்யாசாகர் புதிய பள்ளிக்கூடம் ஒன்றைத் தொடங்க விரும்பியதாக யான் அறிகிறேன். எனக்குப் பிழைப்புக்கு வழிதேடவேண்டும். எனக்கு அப்பள்ளிக் கூடத்தில் ஓர் அலுவலைப் பெறமுடியுமா?" என்று கேட்டிருந்தார். பவநாத் உலகவாழ்விலே சிக்கிக்கொண்டமைபற்றிப் பெருங்கவலை கொண்டிருந்தார். பவநாத் இருபத்துமூன்றே இருபத்து நான்கோ வயதுடையவர்.

குருதேவர் (நரேந்திரரிடம்): "அவனுக்கு ஏராளமாகத் தீரத்தை அளி."

நரேந்திரரும் பவநாத்தும் சிரித்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் சாடைகாட்டிப் பவநாத்திடம், "பெருவீரனுய் இரு. அவள் தனது முகமூடிக்குள் அழுது கொண்டிருக்க நீ காணினும், உன்னை மறந்துவிடாதே. ஆ! பெண்கள் அழுவது எவ்வளவு என்பது—அவர்கள் தம் மூக்கைச் சிந்தும்போதும்!"
(நரேந்திரர், பவநாத், ம—சிரிக்கின்றனர்.)

"உனது மனதை உறுதியாக இறைவன்மீது நிறுத்து. வீரபுருஷனுவான் ஒரு பெண்ணோடு வாழ்ந்தும் உடலைப் பற்றிய இன்பங்களை நாடாதவனே. உனது மனைவியிடம் இறைவனைப்பற்றி மட்டும் பேசுக."

சிறிது பொழுது சென்றபின் ஸ்ரீ ராமகிருஷ்ணர், பவநாத்திடம் சாடையால் "இன்று இங்கே உண்ணுக" என்று அறிவித்தார்.

பவநாத்: "அப்படியே; எனது உடல் முற்றும் நன்றுயுள்ளது. என்னைப் பற்றித் தாங்கள் கவலைப் படவேண்டாம்."

சுரேந்திரர் உள்ளே வந்து உட்கார்ந்தார். அடியார்கள் குருதேவர்க்கு ஒவ்வொருநாள் மாலையிலும் பூமாலைகளை அளித்து வந்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது கழுத்தைச் சுற்றி அம்மாலைகளை அணிந்துகொண்டார். சுரேந்திரர் அறையில் அமைதியாய் அமர்ந்திருந்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் மிக்க சந்தோஷ மான நிலையில் இருந்தனர்; அவர்க்கு இருமாலைகளைக் கொடுத்தனர். சுரேந் திரர் குருதேவரை வணங்கிவிட்டு, அவற்றைத் தமது கழுத்தில் போட்டுக் கொண்டார்.

எல்லாரும் மோனமாக இருந்து, ஸ்ரீ ராமகிருஷ்ணரை நோக்கினர். சுரேந் திரர் மறுபடியும் குருதேவரை வணங்கி, எழுந்து நின்றார். அவர் வெளியேறத் தயாராயிருந்தார். சன்னல்களின்மீது வைக்கோல் தட்டிகளைத் தொங்கவிடு மாறு பவநாத்தை அவர் வேண்டினர்.

ஹிராநந்தர் தம் இரு நண்பர்களுடன் உள்ளே வந்தனர். அவர் கல்கத் தாவிலிருந்து ஏறக்குறைய இரண்டாயிரத்து இருநூறு மைல்கட்கு அப்பாலுள்ள சிந்து நாட்டிற் பிறந்தவர். 1883-ல் அவர் தம் கல்லூரிக் கல்வியைக் கல்கத் தாவிலே முடித்தபிறகு, அவர் தமது நாடு திரும்பினார்: 'சிந்து டைம்ஸ்' 'சிந்து சுதார்' எனும் இரு பத்திரிகைகளை ஆசிரியராக இருந்து நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். கல்கத்தாவில் கல்விகற்கும்போது, அவர் பன்முறையும் கேசவ சந்திர சேனைப் பார்த்தும், அவரை நெருங்கி அறிந்தும் இருந்தார். ஸ்ரீராம கிருஷ்ணரைத் தக்ஷிணேசுவரத்திலுள்ள காளிகோயிலில் சந்திக்கவும், அங்கே குருதேவரோடு சில சமயங்களில் இரவைக் கழிக்கவும் பெற்றிருந்தார். ஸ்ரீராம கிருஷ்ணர் நோயுற்றதைக் கேள்விப்பட்டு, அவரைக் காணுமாறு அவர் சிந்து தேசத்திலிருந்து கல்கத்தாவிற்கு இச்சமயம் வந்திருந்தார். குருதேவரும் ஹிரா நந்தரைக் காண மிக ஆவலா யிருந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஹிராநந்தரைச் சுட்டி, சாடைகளால் ம—விடம் "மிக நேர்த்தியான இளைஞன். அவனை நீர் அறிவீரா?" என்று கேட்டார்.

ம—: "ஆம், அறிவேன்."

குருதேவர் (ஹிராநந்தரிடமும் ம—விடமும்): "ஒரு சிறிது பேசுக. நீங் கள் இருவரும் பேசுவதைக் கேட்க எனக்கு விருப்பம்."

ம— மௌனமா யிருக்க, ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரிடம் "நரேந்திரன் இங்கு உள்ளானை? அவனைக் கூப்பிடு" என்றனர்.

நரேந்திரர் அறைக்குட் புகுந்து, குருதேவரது அருகே அமர்ந்தனர்.

குருதேவர் (நரேந்திரர்க்கும் ஹிரானந்தர்க்கும்): "நீங்கள் இருவரும் பேசு வதைக் கேட்க எனக்குப் பிரியம்."

ஹிராநந்தர் சிறிது பொழுது மௌனமாயிருந்து, பின் பெரிதும் தயங்கிப் பேசத் தொடங்கினர்.

ஹிராநந்தர் (நரேந்திரரிடம்): "இறைவனது அடியார் ஒருவர் துன்புறு வதேன்?"

அவருடைய மொழிகள் அமுதம் போன்று இனியவாயின. அவரது நெஞ்சம் அன்பு நிறைந்திருந்ததை அறையிலுள்ள ஒவ்வொருவரும் உணரக் கூடியவராயினர்.

நரேந்திரர்: "இப்பிரபஞ்ச அமைப்பு முறை அசுரத்தன்மை யுள்ளது. யான் இதனினுஞ் சிறந்த உலகினைப் படைத்திருப்பேன்."

ஹிராநந்தர்: "துன்ப மின்றி இன்பத்தை ஒருவன் உணரல் இயலுமா?"

நரேந்திரர்: "நான் பிரபஞ்ச அமைப்பைப் பற்றி ஒரு திட்டம் வகுக்க வில்லை. இப்போதுள்ள அமைப்பைப் பற்றிய எனது கருத்தைத் தெரிவித்தது மட்டுமே."

"ஆனால் இவ்வழக்குகளைத் தீர்க்க நமக்கு ஒன்றில்மட்டும் விசுவாசம் இருத்தல்வேண்டும்; அது யாதெனில் 'ஸர்வம் கடவுள்மயம்' என்பதே. எல்லாம் கடவுளே என்ற நம்பிக்கை உண்டாயின், எல்லா ஐயங்களும் மறைந்துவிடும், நிகழ்வனவற்றுக் கெல்லாம் கடவுளே பொறுப்பாவார்."

ஹிராநந்தர்: "அவ்வாறு சொல்வது எளிது."

நரேந்திரர் சங்கரரது 'நிர்வாண ஷட்க'த்தைப் பாடினர்:

அனித்திய மனமும் புத்தியு மன்றிவ் ஆணவம் சித்தமு மன்று
இனித்திடும் நாவும் செவியுமே அன்றுநான் இருகணும் நாசியுமன்று
நுனித்துள வானும் வாயுவு மன்று நுவலுநீர் தீமணுமன்று
தனித்துநித் தியமாய்ப் போதநல் வடிவாம் தற்பதப் பொருளாஞ் சிவோகம்.

இயங்கிடும் பிராண வாயுநா னன்றுமற் றியம்புமோர் வாயுஐந் தன்று
முயங்கிடும் ஏழுதா துக்களு மன்று மூடுமைங் கோசமு மன்று
வயங்கிடு கால்கை வாக்கொடு கரும மன்னுமிந் திரியம்ஐந் தன்று
தயங்கிடா நித்திய போதநல் வடிவாம் தற்பதப் பொருளாஞ் சிவோகம்.

வெம்பகை உலோப மோகநா னன்று விருப்பொடு வெறுப்புநா னன்று
தம்பமாம் ஆணவம் மதமுநா னன்று தருமமோ முத்தியோ அன்று
பம்புமோர் உள்ளத் தாசைநா னன்று பற்றிடும் பொருளுநா னன்று
சம்பவ மறியா நித்திய போதமாம் தற்பதப் பொருளாஞ் சிவோகம்.

சுகத்தையும் அறியேன் துக்கமும் அறியேன் துணையறம் மறமுநான் அறியேன்
மிகத்துதி தலமோ மந்திரம் வேள்வியோ வேதமோ ஒன்றுநான் அறியேன்
இகத்தினில் உண்போன் அன்றுமற் றுணவும் யானுணுந் தொழிலுமோ அன்று
சகத்துருக் கரந்தொளிர் நித்திய போதமாம் தற்பதப் பொருளாஞ் சிவோகம்.

எனக்கொரு மரணமோ அச்சமோ அற்பமும் இல்லையோர் சாதிவேற் றுமையும்
மனக்கினி தாமோர் அன்னையோ தந்தையோ மண்ணினிற் பிறவியோ இல்லை
கனக்குண நண்பனே துணைவனே இல்லை கண்ணியக் குருவோ சீடனே
தனக்கொரு நிகரிலா நித்திய போதமாம் தற்பதப் பொருளாஞ் சிவோகம்.

உருவமோ கருத்தோ எனக்கிலை அணைத்தினும் உருக்கரந் தொளிர்பவன் யானே
மருவுபூ தலத்திடை எங்கணு முளனெனி னும்புலன் எதிற்குமோ எட்டான்

கருவுறு பிறப்பொழி முக்தியும் யானீலை கருத்தினுக் கெட்டுமோர் பொருளீலை
கருவுக லறியா நித்திய போதமாம் தற்பரப் பொருளதாஞ் சிவோகம்.

[மனும் - மண்ணும். மனக்கினிது - மனதிற்கு இனியது.]

ஹிராநந்தர் : "நன்று!"

ஸ்ரீ ராமகிருஷ்ணர் (ஹிராநந்தரிடம் சாடையால்) : "அவனுக்குப் பதில் சொல்லுக."

ஹிராநந்தர் : "ஓர் அறையை மூலையிலிருந்து பார்த்தாலும், நடுவிலிருந்து நோக்கினாலும் எல்லாம் ஒன்றே. 'இறைவனே, நான் உனது அடிமை' என்றோ, 'ஸோஹம்' (அவனே நான்) என்றோ ஒருவன் சொல்லினும். அவன் உணர்வது ஒரே ஈசுவர சைதன்யந் தான். ஓர் அறைக்குள் புக ஒருவற்குப் பல வாயில்கள் உண்டல்லவா?"

அனைவரும் மௌனமா யிருந்தனர். ஹிராநந்தர் நரேந்திரரிடம் "இன்னும் கொஞ்சம் பாடுவீராக" என்று வேண்டினர். நரேந்திரர் கௌபீன பஞ்சகத்தைப் பாடினர் :

வேதாந்தச் சோலையிலே மேவியென்றும் அலைந்திடுவன்
யாதானும் பிச்சைதனை ஏற்றுமகிழ்ந் திடுவனென்றும்
ஒதுதுயர் சற்றுமிலா உள்ளத்தான் முன்செல்வான்
கோதில்லாப் பாக்கியத்தான் கோவணமே அணிந்திருப்பான்.

உறைவிடமாக் கொண்டிடுவான் ஒருமரத்தின் அடிநிழலில்
நிறைவளத்தால் குறையுணவை நித்தமகிழ்ந் துண்டிடுவன்
மறைவொன்றே கருதியுடை மாண்பிழிவு பாராதான்
குறைவில்லாப் பாக்கியத்தான் கோவணமே அணிந்திருப்பான்.

உளத்திருப்தி முழுதாமால் உள்ளூறும் இன்பமதால்
வெளித்திரியும் இந்திரிய விழைவுமுற்றும் அடக்கிடுவான்
களித்துசதாத் தனிப்பிரமம் கலங்காது சிந்திப்பான்
கொளவரிய பாக்கியத்தான் கோவணமே அணிந்திருப்பான்.

[மாண்பிழிவு - மாண்பு, இழிவு; உயர்வு, தாழ்வு.]

ஸ்ரீ ராமகிருஷ்ணர் 'களித்து சதாத் தனிப்பிரம்மம் கலங்காது சிந்திப்பான்' என்ற வரியைக் கேட்டதும், அவர் மிக மெல்லிய குரலில் "ஆ!" என்று வியந்தார். பிறகு சாடையால் அடியார்கட்கு "அது ஒரு யோகியின் தனிக் குணம்" என்று குறிப்பிட்டார்.

நரேந்திரர் பஞ்சகத்தை இவ்வாறு முடித்தார் :

எணமுடல்பால் நிகழ்விகாரம் எவையெனினும் சாக்ஷியாய்
கணமுமெய்ப் பொருளினையே கருதியுள்ளே நோக்குவான்
நனுமுளிடம் புறவிடமோ நடுவிடமோ அறியாதான்
குணமிக்க பாக்கியத்தான் கோவணமே அணிந்திருப்பான்.

[நணும் உள் இடம் - பொருந்தும் உள் இடம்]

கேளில்லாப் பிரம்மமொன்றே கிளத்துவான் முத்திமொழி
நாளெல்லாம் 'நான் பிரம்மம்' என உன்னும் ஞானத்தான்
ஆளியெனத் திரிந்திடுவான் அங்கையிலாண் ஏற்றிடுவான்
கோளில்லாப் பாக்கியத்தான் கோவணமே அணிந்திருப்பான்.

[கிளத்துவான் - சொல்லுவான்.]

மறுபடியும் நரேந்திரர் பாடலானார் :

தியானிப்பாய் பூரணமாம் பேரின்ப வடிவத்தை
தியானிப்பாய் அருவத்தை சகத்தினுக்கோர் மூலமதை ;
செவியினுள்ளே கேட்பவனே உளத்தினுள்ளே நினைப்பவனே,
நாவிலுள்ளே நவில்வோனைத் தான்உலகிற் கதிதானேயே !

குருதேவர் (நரேந்திரர்க்கு) : " அதையும் பாடு—'இருப்பதெல்லாம் நீயே யாவாய்' என்பதை."

நரேந்திரர் பாடலானார் :

என்னெஞ்சை உன்னுடே இணைத்திட்டேன், இருப்பதெல்லாம் நீயே யாவாய்
நின்னையே கண்டுளேன்யான் நினையொழிய வேறென்றும் இல்லை யன்றே
என்இறைவ, காதற்கோர் இன்னுயிரே, அனைத்திற்கும் உறையுள் நீயே
மன்னநீ உறையாத மாண்புடைய நெஞ்செங்கே வழுத்து வாயே.

நெஞ்சனைத்தும் விலக்கின்றி நீபுகுந்தாய், இருப்பதெலாம் நீயே யானாய்
மிஞ்சுமதி இருடியரோ வெறுமடனே முகம்மதியன் இந்து தானே
எஞ்சலிலா தாக்குவைநின் இச்சையினால், இருப்பதெல்லாம் நீயே யாவாய்
அஞ்சலெனக் காபாவோ அமரரது விண்ணுலகோ எங்கும் உள்ளாய்.

நின்முன்னே எல்லோரும் நெடுங்கிடையா வீழ்வர்எலாம் நீயே யானாய்
இந்நிலமே தொடங்கிமேல் ஏழுலகும், விண்முதல்மண் அடியீறுக
என்விழிமுன் நினைக்காண்பேன் எங்கணுமே ; இருப்பதெலாம் நீயே யானாய்
உன்னிடினும் ஆழ்ந்துனையே உணரேன்யான் இதிலையம் ஒன்று மில்லை.

நினக்கினையா யாதுளது நிகழ்த்துதற்கே, ஜாபர்எனும்
எனக்கேநீ உணர்த்தினாய் இருப்பதெலாம் நீயென்றே.

[மடன் - அறிவிலாதவன். எஞ்சலிலாது - குறைவிலாது. அஞ்சலென - 'பயப்படாதே' யென்று. காபா - மெக்காவிலுள்ள புனித சிலை. எலாம் - எல்லாம், ஜாபர் . இப்பாடலைப் பாடியவர்.]

குருதேவர் " நெஞ்சனைத்தும் விலக்கின்றி நீ புகுந்தாய் " என்ற வரியைக் கேட்டதும், சாடையினால் அவர் " ஒவ்வொருவர் நெஞ்சத்தும் இறைவன் உறைகிறான். அவனே அந்தர்யாமி " என்று குறிப்பிட்டார்.

நரேந்திரர் " என் விழிமுன் நினைக்காண்பேன். எங்கணுமே ; இருப்பதெலாம் நீயே யானாய் " என்ற வரியைப் பாடியதும், ஸ்ரீராமகிருஷ்ணர் அவரிடம் " ஆம் ; இருப்பதெலாம் நீயேயானாய். ஆதலால் 'நீ, நீ, நானன்று நீயே' என்று நீர் சொல்லும்."

நரேந்திரர்: "எனக்கு ஒன்று கொடும், நான் உமக்கு ஓர் இலக்ஷம் கொடுப்பேன். நீயே நான்; நானே நீ. என்னைத் தவிர யாதொன்றும் இல்லை."

நரேந்திரர் 'அஷ்டாவக்ர ஸம்ஹிதை'யினின்றும் சில பாடல்களை ஒப்பித்தார். அறை மறுபடியும் மோனமாயிற்று.

குருதேவர் (நரேந்திரரைச் சுட்டி ஹிராநந்தரிடம்): "அவன் உறையற்ற வாளைக் கையிலேந்தி நடப்பவன்போல் தோன்றுகிறான். (ஹிராநந்தரைச் சுட்டி ம—விடம்) எவ்வளவு அமைதி! பாம்பாட்டிமுன் கட்டுப்பட்டு அடங்கியிருக்கும் படம் விரித்த நாகம்போல."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் உண்முக நிலையில் ஆழ்ந்தார். ஹிராநந்தரும், ம—வும் அவரருகே அமர்ந்திருந்தார். அறையில் முழு அமைதியே குடிகொண்டது. குருதேவரது உடல் உரைக்கவொண்ணாத வலியால் துடித்துக்கொண்டிருந்தது. அடியார்கள் இந்நோயின் கொடுமையைப் பொறுக்க முடியாதவரானர். ஆனால் எப்படியோ குருதேவர் தமது வருத்தத்தை மறக்குமாறு அவர்களைச் செய்தனர். தொண்டையிலே அவர்க்கு நோய் இம்மியும் இல்லாதவர்போல் முகத்தே ஜோதி வீச அவர் அமர்ந்திருந்தார்.

அடியார்கள் தமது அன்புக் காணிக்கைகளாகப் பூக்களையும் மாலைகளையும் அவர் முன்பு சமர்ப்பித்திருந்தனர். அவர் ஒரு பூவைப் பொறுக்கி, அதைக் கொண்டு முதலில் தமது தலையைத் தொடுவர், பின்னர் தமது தொண்டையையும் நெஞ்சையும் கொப்பூழையும் தொடுவர். அவர் பூக்களைக் கொண்டு விளையாடும் ஒரு குழந்தைபோல அடியார்கட்குத் தோன்றினர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்குத் தெய்விகக் காட்சிகளும் பாவனைகளும் உண்டாகும் போதெல்லாம் அவரது உடலுக்குள்ளே ஒரு ஞானசக்தி குண்டலினி மேலெழுவதுண்டு என்று அவர் தமது அடியார்களிடம் சொல்வார்.

இப்போது அவர் ம—வோடு பேசலானர்.

குருதேவர்: "அச்சக்தி எப்போது மேலெழுந்தது என்பது எனக்கு நினைவில் இல்லை. இப்போது என்னிடம் ஒரு குழந்தையின் மனநிலையே உள்ளது. இக்காரணம் பற்றியே யான் இம்மாதிரி மலர்களோடு விளையாடிக் கொண்டிருக்கிறேன். யான் இப்போது இன்ன காண்கிறேன் என்பதை நீர் அறிவீரா? என்னுடல் மூங்கில் துண்டுகளால் ஆக்கப்பட்டு, ஒரு துணியால் மூடப்பட்ட ஒரு கூடுபோலிருப்பதை யான் காண்கிறேன். கூடு அசைகிறது. அது அசையும் காரணம், அதனுள்ளே யாரோ ஒருவர் வசிப்பதே.

"இன்னும், இவ்வுடல், விதைகளைச் சுரண்டி எடுத்தபின் உள்ள ஒரு பூஷணிக்காயைப் போல இருப்பதாகக் காண்கிறேன். இவ்வுடலுக்குள்ளே காமமோ உலகப்பற்றோ எள்ளளவும் இல்லை. அது உள்ளே மிகத் துப்புரவாய் உள்ளது; மேலும்—"

ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கு அதற்குமேல் பேசுவது மிக்க வலியை உண்டாக்குவதாயிற்று. மிகப் பலக்குறைவாக இருப்பதாக அவர் உணர்ந்தார்.

குருதேவர் அடியார்களிடம் இன்ன கூற விரும்பினர் என்பதை விரைவாக ம—ஊகித்து, "நீங்கள் இறைவனையே உங்கட்குள்ளே பார்க்கிறீர்கள்" என் பதே அது என்றனர்.

குருதேவர்: "உள்ளேயும் வெளியேயும். அகண்ட சச்சிதானந்தத்தை யான் உள்ளேயும் வெளியேயும் காண்கிறேன். இந்த உறையை ஒரு ஆதாரமாகப் பெயரளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. ('உறை' என்னும் மொழியால் தமது உடலைக் குறிக்கிறார்,) உள்ளேயும் வெளியேயும் அது இருக்கின்றது. யான் இதைத் தெளிவாகக் காண்கிறேன்."

ம—வும் ஹிராநந்தரும் அவரது மிக வுயர்ந்த மெய்ஞ்ஞான நிலையைப் பற் றிய இம்மொழிகளைக் கூர்ந்து கவனித்தனர். சில நிமிஷங்கட்குப் பின் ஸ்ரீ ராம கிருஷ்ணர் அவர்களை நோக்கினர், மறுபடியும் சம்பாஷணையைத் தொடங்கினர்.

குருதேவர்: "நீங்கள் அனைவரும் என்னுடைய உறவினரைப் போன்றே தோன்றுகிறீர்கள். உங்களில் எவரையும் புதியவராக யான் கருதுவதில்லை.

"உங்கள் அனைவரையும் அத்தனை உறைகளாக (உடல்களாக) யான் காண்கிறேன், தலைகள் அசைந்துகொண்டிருக்கின்றன,

"என் மனம் பகவானோடு ஒன்றுபட்டுள்ளபோது உடலின் துயரம் ஒரு பக்கமாக ஒதுங்கி விடுவதை யான் கவனிக்கிறேன்.

"இப்போது யான் இது வொன்றையே காண்கிறேன்: அகண்ட சச்சிதா நந்தம் தோலால் மூடப்பட்டுள்ளது; தொண்டையிலுள்ள இப்புண் அதன் ஒரு பக்கத்தில் உள்ளது."

குருதேவர் மறுபடியும் மௌனமானார். சில நிமிஷங்கட்குப் பின் அவர் "பிரகிருதியின் குணங்கள் புருஷன் மீது சுமத்தப்படுகின்றன; புருஷனின் குணங்கள் பிரகிருதியின் மீது சுமத்தப்படுகின்றன. ஆதலால் உடல் நோயடை யும்போது ஒரு மனிதன் 'நான் நோயடைந்துளேன்' என்கிறான்" என்று உரைத்தார்."

குருதேவர் அப்போதுதான் கூறியதன் பொருளை அறிய ஹிராநந்தர் விரும் பினர்; ஆதலால் ம—அவரிடம் "வெந்நீர் கையைப் பொசுக்கும்போது, நீரே பொசுக்கினதாக மக்கள் கூறுகின்றனர்; ஆனால் உண்மை யாதெனில் சூடே பொசுக்குகிறது" என்று கூறினர்.

ஹிராநந்தர் (குருதேவரிடம்): "ஈசனின் அடியார் ஒருவர் துன்புறுங் காரணம் இன்னதென எங்கட்குச் சொல்லியருள்வீராக."

குருதேவர்: "உடலே துன்புறுகின்றது."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் பின்னும் ஏதோ சொல்லப் போவதாகத் தோன்றினர். ஹிராநந்தரும் ம—வும் ஆவலோடு அவருடைய மொழிகளை எதிர்பார்த்தனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர்: "உமக்குத் தெரிகின்றதா?"

ம— ஹிராநந்தரிடம் மெல்லிய குரலில் "மனிதர்கட்குப் போதிப்பதற்காக உடல் வருந்துகிறது. அவரது வாழ்வு, அறியாததை வேண்டியபோது அறி

விக்கும் ஒரு புத்தகம்போல உள்ளது. அவ்வளவு அதிகமாக உடல் வருந்தும் போதும், அவரது மனம் நூற்றுக்கு நூறு பங்கு பகவானோடு ஒன்றுபட்டுள்ளது" என்று சொன்னார்.

ஹிராநந்தர்: "ஆம், கிறிஸ்துவைச் சிலுவையில் வைத்து அறைந்தது போன்று உள்ளது அது, ஆனாலும் ஆச்சரியம் குறையவில்லை—எல்லா மக்களும் இருக்க, அவர் மட்டும் அவ்வாறு ஏன் துயரமடையவேண்டும்?"

ம—: "தேவியின் திருவுள்ளம் அது என்று குருதேவர் கூறுகிறார். அவள் அவரது உடலின் வழியாகத் திருவிளையாடல் புரிந்தருளும் வகை இதுவே."

இரண்டு அடியார்களும் ஒருவரோடொருவர் காதுக்குள் மெதுவாகப் பேசிக் கொண்டிருந்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் சாடையால், ம—எதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார் என்று ஹிராநந்தரைக் கேட்டார். ஹிராநந்தர்க்குச் சாடையை அறியமுடியாமையாலே, ஸ்ரீ ராமகிருஷ்ணர் அதைத் திரும்பக் காட்டினார்.

ஹிராநந்தர்: "தங்களது நோய் மனிதர்கட்குப் போதிப்பதற்காக என்று அவர் கூறுகிறார்."

குருதேவர்: "ஆனால் அது அவரது ஊகமேதான்."

(ம—விடமும் ஹிராநந்தரிடமும்) "எனது மன நிலை மாறிக்கொண்டிருக்கிறது. ஒவ்வொருவரிடமும் 'உனது சைதன்யம் உதயமாகட்டும்' என்று நான் சொல்லக்கூடாதென்று நினைக்கிறேன். கலியுகத்தில் மக்கள் அவ்வளவு பாவிகளாயிருக்கின்றனர்! அவருடைய சைதன்யத்தை நான் உதிக்கச் செய்வேனாயின் அவர்களுடைய பாவங்களாகிற பாரத்தையும் நான் ஏற்றுக்கொள்ளவேண்டியதாகும்."

ம— (ஹிராநந்தரிடம்): "சரியான காலத்தன்றி மக்கட்கு அவர் ஞான உதயத்தை உண்டாக்கமாட்டார். எவனுக்குக் காலம் வருமோ, அவனுக்கு ஞானத்தை உதிக்கச் செய்வர்."

வெள்ளி, ஏப்பிரல் 23, 1886

அன்று 'குட்பிரைடே' (சுபவெள்ளிக்கிழமை) என்ற கிறிஸ்தவ நன்னாள். ஹிராநந்தனர் காசிப்பூர்ச் சோலை மாளிகையிலே தமது நடுப்பகல் உணவை உண்டிருந்தார். பிற்பகல் ஏறக்குறைய ஒரு மணிக்கு அவர் ஸ்ரீராமகிருஷ்ணரது திருவடிகளைத் தடவிக்கொண்டிருந்தார். ம— அருகே உட்கார்ந்தார். லாட்டுவும், இன்னும் ஒன்றிரண்டு அடியார்களும் அறைக்கு உள்ளும் வெளியுமாகப் போய்க்கொண்டிருந்தார். ஹிராநந்தர் சிறிது காலம் காசிப்பூர்ப் பூஞ்சோலை மாளிகையிலே தங்கியிருக்கவேண்டும் என்பது குருதேவரது மனமார்ந்த விருப்பம்.

ஹிராநந்தர், குருதேவருடைய திருவடிகளைப் பிடித்துக்கொண்டிருந்த போதே, அவரோடு பேசிக்கொண்டிருந்தார். ஒரு குழந்தைக்கு ஆறுதல் சொல்ல முயல்பவர்போல அவர் மிக இனிய குரலில் பேசினர்.

ஹிராநந்தர்: "அவ்வளவு மனக்கவலை தங்கட்கு எதற்கோ? வைத்தியரிடம் தங்கட்கு நம்பிக்கை இருக்குமாயின் தங்கட்குச் சாந்தியை அனுபவிக்க முடியும். தாங்கள் ஒரு குழந்தையே."

குருதேவர் (ம—விடம்): "எனக்கு எப்படி டாக்டரிடம் நம்பிக்கை இருக்கமுடியும்? நான் நோய்தீர்ந்து மீளமாட்டேன் என்றார் டாக்டர் சர்க்கார்."

ஹிராநந்தர்: "அதைப்பற்றி நீங்கள் ஏன் அவ்வளவு கவலைகொள்ள வேண்டும்? நடப்பது நடந்தே யாகவேண்டும்."

ம—(ஹிராநந்தரிடம் ஒருபக்கமாக): "அவர் தம்மைப்பற்றிக் கவலை கொள்ளுவதில்லை. அவரது உடற் பாதுகாப்பு அடியார்களின் நலத்திற்காகவே."

அன்று புழுக்கமாயிருந்தது; அறை உச்சிவேளையில் மிகச்சூடாகிவிட்டது, வைக்கோல் தட்டிகள் ஜன்னல்களின்மீது தொங்கவிடப் பட்டிருந்தன. ஹிராநந்தர் அவற்றைச் சரிப்படுத்தினர். குருதேவர் அவரை நோக்கினர்.

குருதேவர் (ஹிராநந்தரிடம்): "பைஜாமா'வை (கால் சட்டை) அனுப்ப மறந்து விடாதேயும்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிந்து தேசத்தில் அணியும் பைஜாமாவைத் தரித்துக் கொள்வராயின் அவருக்கு அது அதிக வசதியாயிருக்கும் என அவரிடம் ஹிராநந்தர் கூறியிருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவர்க்கு அதை நினைவூட்டினர்.

ஹிராநந்தர் நன்றாக உண்டிருக்கவில்லை. சாதம் நன்றாகச் சமைக்கப் பட்டிருக்கவில்லை. குருதேவர் அதற்காக மிக வருந்தி, அவர்க்குச் சிற்றுண்டி சிறிது பெற விருப்பமா என்று அவரைத் திரும்பத் திரும்பக் கேட்டார். குருதேவர்க்கு நேயிலை பேசவும் முடியவில்லை; ஆயினும் அவர் கேள்வியைக் கேட்டுக் கொண்டேயிருந்தார். அவர் லாட்டுவைப் பார்த்து, "நீயும் அந்த சாதத்தை உண்டனையோ?" என்றார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கு உடலின்மீது ஆடையை வைத்திருக்க இயலாது. அவர் ஏறக்குறைய எப்போதும் ஒரு குழந்தையைப்போன்று நிருவாணியாயிருந்தார். ஹிராநந்தர் தம்முடன் ஒன்றிரண்டு பிராம்மோ நண்பர்கள் சிலரையும் அழைத்து வந்திருந்தனர். ஆதலால் இடையிடையே குருதேவர் ஆடையை அரைவரை இழுத்து முடிக்கொண்டார்.

குருதேவர் (ஹிராநந்தரிடம்): "என்னுடலை ஒரு துணியால் மூடிக் கொள்ளாவிட்டால் என்னை நாகரிகமற்ற ஒரு மனிதனாக நினைப்பீரோ?"

ஹிராநந்தர்: "அதனால் தங்கட்கு என்ன வேறுபாடு உண்டாகப் போகிறது? தாங்கள் ஒரு குழந்தைதானே."

குருதேவர் (பிராம்மோ அடியார் ஒருவரைச் சுட்டி): "ஆனால் அவரிடம் அம்மாதிரியான நினைப்பு இல்லையே."

ஹிராநந்தர் போவதற்கு விடை பெற்றுக்கொள்ளும் சமயமா யிருந்தது. இன்னும் ஒரு சில நாள்களில் அவர் சிந்து நாட்டுக்குப் புறப்படுவதா யிருந்தார்.

குருதேவர் (ஹிராநந்தரிடம்): "நீர் சிந்துநாடு போகாவிட்டாலோ?"

ஹிராநந்தர் (சிரித்துக்கொண்டு): "ஆனால் எனது வேலையைச் செய்ய அங்கே எவரும் இல்லையே. எனக்குக் கடமைகள் உள்ளன."

குருதேவர்: "நீர் எவ்வளவு சம்பாதிக்கிறீர்?"

ஹிராநந்தர் (சிரித்துக்கொண்டு): "எனது வேலைக்குப் பெரிய சம்பளம் எனக்குக் கிடைக்கவில்லை."

குருதேவர்: "ஆனாலும், எவ்வளவு?"

ஹிராநந்தர் சிரித்தார்.

குருதேவர்: "நீர் இங்கு வாழ்ந்தால் என்ன?"

ஹிராநந்தர் மறுமொழி கூறவில்லை.

குருதேவர்: "நீர் உமது வேலையை விடுவதாக வைத்துக்கொள்வோம்."

ஹிராநந்தர் ஒன்றும் சொல்லவில்லை. அவர் போவதற்கு விடை பெற்றுக் கொள்ளத் தயரா யிருந்தார்.

குருதேவர்: "மறுபடியும் என்னை நீர் எப்பொழுது பார்ப்பீர்?"

ஹிராநந்தர்: "நாளைக்கு அடுத்த நாள் யான் சிந்துவுக்குப் புறப்படு வேன். அன்று காலை யான் தங்களைக் காண்பேன்."

ம— குருதேவரது பக்கத்தில் அமர்ந்திருந்தனர்.

குருதேவர் (ம—விடம்): "அவர் ஒரு நல்ல இளைஞர்; அப்படித்தானே?"

ம—: "ஆம், ஐயன்மீர், அவரிடம் மிக இனிய தன்மை உள்ளது."

குருதேவர்: "சிந்து தேசம் கல்கத்தாவிலிருந்து இரண்டாயிரத்து இரு நூறு மைல் தொலையில் இருப்பதாகக் கூறினர் அவர்; என்னைப் பார்ப்பதற் காக அவ்வளவு தொலையிலிருந்து வந்துள்ளனர்."

ம—: "உண்மையே. மெய்யான அன்பு இல்லாவிடில் அது இயலாது."

குருதேவர்: "என்னைச் சிந்து தேசம் அழைத்துச் செல்ல அவருக்கு மிகப் பிரியம்."

ம—: "பிரயாணம் மிக்க வருத்தந் தருவது. ரயில் வழியாகப் போக நாலைந்து நாள் செல்லும்."

குருதேவர்: "பல்கலைக் கழகப் பட்டங்கள் மூன்று அவர் பெற்றுள் ளனர்."

ம—: "ஆம், ஐயன்மீர்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் களைப்புற்றிருந்தார். அவர்க்குச் சிறிது இளைப்பாற விருப்பம். சன்னல்களின் மரக்கதவுகளிலுள்ள தட்டுகளைத் திறந்து வைக்கும் படிக்கும், தமது படுக்கைமீது புல்லுப்பாயை விரிக்கும்படிக்கும் அவர் ம— விடம் கூறினர். ம— அவர்க்கு விசிறிக்கொண்டிருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கு உறக்கம் வருவதுபோல் இருந்தது.

சிறிது நேரம் கண்ணை மூடியபின்பு ஸ்ரீ ராமகிருஷ்ணர் ம—விடம் "நான் உறங்கினேனு?" என்று கேட்டார்.

ம—: "ஒரு சிறிது."

அப்போது பிற்பகல் வேளை. பல அடியார்கள் குருதேவரது அறையில் அமர்ந்திருந்தனர். நரேந்திரர், சரத், சசி, நித்திய கோபால், கிரிஷ், ராம், ம—, சுரேஷ் அங்கிருந்தனர்.

கேதார் உள்ளே புகுந்தார். இதுவே குருதேவரை அவர் சிறிது காலத்திற்குள் முதல் முறை பார்க்கவந்த சமயம். டாக்காவிலே தமது உத்தியோகக் கடமைகள் சம்பந்தமாகத் தங்க நேர்ந்தபோது, அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரது நோயைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணரது அறைக்குட் புகுந்ததும், அவர் குருவேரது திருவடிகளைத் தொட்டுத் தூளைத் தலையில் அணிந்து கொண்டு, மகிழ்ச்சியோடு பிறர்க்கும் அதை வழங்கினர். அடியார்கள் தலை வணங்கி அதை ஏற்றனர். ஒரு மொழியும் பேசாது அனைவரும் உட்கார்ந்திருந்தனர். ஸ்ரீராமகிருஷ்ணர் இன்பப் பரவச நிலையினை அடைவார் போலிருந்தார். இடையிடையே அவர் தமது உணர்ச்சிப் பெருக்கை அடக்க முயலுவார் போன்று பெருமூச்செறிந்தார்.

குருதேவர் கேதாரது கவனத்தை நரேந்திரரிடம் செலுத்தியபின் கூறியதாவது: "அவன் அனைத்தையும் துறந்துவிட்டான். (அடியார்களிடம்) கேதார் நரேந்திரனிடம் ஒருநாள் 'நீ இப்போது தருக்கம் பண்ணிவழக்காடலாம், ஆனால் முடிவில் ஹரிநாமத்தை ஓதிக்கொண்டே தரையில் உருளுவாய்' என்று கூறினர்."

சுரேந்திரர் மற்ற அடியார்கட்குப் பின்பக்கம் அமர்ந்திருந்தார். குருதேவர் புன்சிரிப்போடு அவரை நோக்கி, கேதாரிடம் "அவனது இயல்பு எவ்வளவு இனியது, பாத்தாயா!" என்றார். கேதார் குருதேவரது குறிப்பை உணர்ந்தவராய், சுரேந்திரரிடம் சென்றார்.

சுரேந்திரர் மிக்க ரோஷக்காரர் (மானமுடையவர்). அடியார்களிற் சிலர் காசிப்பூர்ப் பூஞ்சோலை மாளிகை சம்பந்தமான செலவுகட்காக இல்லற அடியார்களிடமிருந்து பணவசூல் செய்து கொண்டிருந்தனர். சுரேந்திரர் இதனற் கோபங் கொண்டனர்; காரணம், அவர் தாமே அச்செலவிற் பெரும் பகுதியை ஏற்றுக்கொண்டிருந்தமையே.

சுரேந்திரர் (கேதாரிடம்): "இப்புனித மனிதர்கள் அனைவர்க்கும் பக்கத்தில் நான் எவ்வாறு உட்கார முடியும்? சில நாட்கு முன்பு அவர்களிற் சிலர் (நரேந்திரரைக்குறித்து) துறவிக்குரிய காவியாடைகளை அணிந்து, புத்தகயைக்கு யாத்திரை சென்றனர். அங்கே இங்குள்ளவரினும் பெரிய சாதுக்களைக் காண விரும்பினர்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சுரேந்திரர்க்கு ஆறுதல் சொல்ல முயன்று கொண்டிருந்தனர். அவரிடம் குருதேவர் "நீ சொல்வது சரி, அவர்கள் குழந்தைகளேயாவர். இன்னது நல்லது என்பதை அவர்கள் அறியார் என்று கூறினர்.

சுரேந்திரர் (கேதாரிடம்): "நமது குருதேவர்க்கு நமது உள்ளப்பான்மை தெரியாதோ? அவர் பணத்தைப் பொருட்படுத்துவதில்லை. நமது உள்ளப் பான்மையே அவரை மகிழ்விக்கின்கிறது."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சுரேந்திரருடைய வார்த்தைகளை ஒப்புக்கொண்டதற்கு அறிகுறியாகத் தமது தலையை அசைத்தனர்.

அடியார்கள் குருதேவர்க்காகப் பற்பல உணவுகளைக் காணிக்கையாகக் கொணர்ந்து, அவற்றை அவர் முன்பு வைத்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது நாவில் ஒரு பருக்கையை எடுத்து வைத்தபின், தட்டைச் சுரேந்திரரிடம் கொடுத்தார். அடியார்கட்குப் பிரசாதத்தை வழங்குமாறு சுரேந்திரரிடம் சொன்னார். சுரேந்திரர் அதனைக் கீழ்மாடிக்கு எடுத்துச் சென்றார்.

குருதேவர் (கேதாரிடம்): "நீயும் கீழ்மாடிக்குச் செல்வது நன்று; சென்று, அனைத்தையும் சுரேந்திரர்க்கு விளக்கமாகக் கூறுக. அவர்கள் சூடாக எவ்வாதமும் பண்ணுதபடிப் பார்த்துக்கொள்க."

ம—ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்கு விசிறிக் கொண்டிருந்தார், குருதேவர் அவரிடம் "நீ ஒன்றும் உண்ணமாட்டயோ?" என்று கேட்டார். ம—வையும் கீழ் மாடிக்கு அவர் அனுப்பினர்.

அப்போது ஏறக்குறைய அந்திவேளை. கிரீஷும் ம—வும் பூஞ்சோலையி லுள்ள சிறு குளத்திற்கு அருகே உலவிக் கொண்டிருந்தனர்.

கிரீஷ்: "குருதேவரைப் பற்றி நீர் ஏதோ எழுதிவருகிறதாக யான் அறியலானேன். அது உண்மையா?"

[ஸ்ரீ ராமகிருஷ்ணரது மரணத்திற்குப் பின்பு ம—குருதேவருடைய சம்பாஷணை களைப் பற்றிய தமது குறிப்புகளை ஐந்து தொகுதிகளாக வெளியிடலானார். 'ஸ்ரீ ராம கிருஷ்ண கதாமிர்தம்' என்ற வங்காளமொழி முதனூல் பின்பு ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. பின்பு அது ஆங்கிலத்தில் சுருக்கி எழுதப்பட்டது, இச்சுருக் கத்தின் மொழிபெயர்ப்பே இந்நூல்.]

ம—: "யார் அதை உம்மிடம் கூறினரோ?"

கிரீஷ்: "யான் அதைப் பற்றிக் கேள்வி யுற்றிருக்கிறேன். அதனை நீர் எனக்குக் கொடுப்பீரா?"

ம—: "அவ்வாறு செய்வது சரியென்று யான் உணர்ந்தாலன்றி நான் அதனைப் பிறரிடம் கொடேன், யான் எழுதி வருவது எனக்காகவே, பிறர்க் காக அன்று."

கிரீஷ்: "உமது கருத்து யாதோ?"

ம—: "யான் இறந்தபின் உமக்கு அது கிடைக்கலாம் என்பதே."

அப்போது மாலைவேளை. குருதேவரது அறையில் விளக்கு ஏற்றப் பட்டது. அமிருத லால என்னும் ஒரு பிராம்மோ அடியார் உள்ளே வந்தார், ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமக்கு அவரைப் பார்க்க ஆவலாயிருப்பதாகச் சொல்லி யிருந்தார், ம—வும் ஒரு சில ஏனைய அடியார்களும் அங்கு இருந்தனர். குரு

தேவர்க்கு முன்பு ஒரு வாழையிலையின்மீது ஒரு மல்லிகைப்பூ மாலை இருந்தது. அறையில் அமைதி நிலவுற்றிருந்தது. ஒரு பெரும் யோகி மௌனமாக இறைவனோடு கலந்து அளவளாவிக்கொண்டிருப்பதுபோல அப்போது தோன்றிற்று. இடையிடையே குருதேவர் அம்மாலையைச் சிறிதே தூக்கினார்; அதைத் தமது கழுத்தில் அணிந்துகொள்ள விரும்பியதுபோலத் தோன்றிற்று.

அமிருதர் (அன்போடு): "அதைத் தங்களது கழுத்தில் அணியலாமா?"

ஸ்ரீ ராமகிருஷ்ணர் மாலையை ஏற்றுக்கொண்டனர். அவர் அமிருதரோடு நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார். அமிருதர் விடைபெற்றுக்கொள்ளப் போகும் சமயம் குருதேவர் "மீண்டும் வருக" என்றனர்.

அமிருதர்: "அவ்வாறே ஐயன்மீர். எனக்கும் வர மிக்க பிரியந்தான். ஆனால் யான் வெகு தொலையில் வசிக்கிறேன்; அதனால் எனக்கு எப்போதும் வர இயலுவதில்லை."

குருதேவர்: "இங்கு வாரும்; வண்டி வாடகையை இங்கிருந்து பெற்றுக்கொள்ளலாம்."

குருதேவர்க்கு அமிருதர் மீதிருந்த அன்பைக் கண்ட அடியார்கள் பெரு வியப்பில் ஆழ்ந்தனர்.

மறு நாள் ம— தமது மனைவியாரோடும் மகனோடும் பூஞ்சோலை மாளிகைக்கு வந்தனர். அந்தப் பையனுக்கு வயது ஏழு. அம்மனைவியார் தமது குமாரர்களில் ஒருவரை இழந்தமையால் பெருந்துயரமுற்று, கிட்டத்தட்டப் பைத்தியங்கொண்டவள்போல் இருந்தார்; குருதேவரது வேண்டுகோளுக்கு இணங்கியே அவர் தமது மனைவியாரையும் உடன் அழைத்து வந்திருந்தார்.

அன்று குருதேவர் தமது பக்கத்தில் இருந்து, பணிசெய்யும் பேற்றை ம—வின் மனைவியார்க்குப் பலமுறை அளித்தார். அம்மங்கையாரது நலத்திலே அவர் தமது கவனத்தைப் பெரிதும் செலுத்தியதாகத் தோன்றிற்று. மாலையில் தூய அம்மையார் குருதேவர்க்கு உணவளிப்பதற்காக அவரது அறைக்கு வந்தனர். ம—வின் மனைவியார் ஒரு விளக்கையெடுத்துக்கொண்டு அம்மையாருடன் வந்தனர். குருதேவர் அம்மங்கையாரின் இல்லக் காரியங்களைப் பற்றிப் பல கேள்விகளைக் கேட்டார், மறுமுறை பூஞ்சோலை மாளிகைக்கு வந்து தூய அம்மையாரோடு சில நாள் தங்கும்படி மங்கையாரை வேண்டினர்; கைக் குழந்தையையும் கூட எடுத்துக்கொண்டு வரும்படிச் சொல்வதற்கும் மறக்கவில்லை. குருதேவர் தமது ஆகாரத்தை உண்டு முடித்தபின், ம—வின் மனைவியார் பாத்திரங்கள் தட்டுகள் முதலியவற்றை அப்புறப்படுத்தினர். அவரோடு சில நிமிஷம் குருதேவர் பேசிக்கொண்டிருந்தார்.

மாலை ஏறக்குறைய ஒன்பது மணிக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது அறையில் அடியார்களோடு உட்கார்ந்திருந்தார். அவர் தமது கழுத்தில் ஒரு மாலையை அணிந்திருந்தார், ம—வைக் கண்டதும் அவரது மனைவியாரைத் தூய அம்மையாரோடு பூஞ்சோலை மாளிகைக்கு வந்து சில நாள் தங்குமாறு தாம் வேண்டிக்

கொண்டிருப்பதாக அவரிடம் கூறினர். அவரது அன்பு ம—வின் நெஞ்சை உருக்கியது.

ம— அவர்க்கு விசிறிக்கொண்டிருந்தார். குருதேவர் தமது கழுத்திலிருந்து மாலையைக் கழற்றித் தமக்குள்ளே ஏதோ சொல்லிக்கொண்டிருந்தார். பின் அருளார்ந்த நிலையிலே அவர் அம்மாலையை ம—விற்கு வழங்கினர்.

13

விண்ணகம் புக்கபின்

1886-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் மண்ணக வாழ்வை ஒழித்தனர். அதனால் அவருடைய அடியார்களும் சீடர்களும் துயரக் கடலிற்குள் மூழ்கினர். நடுக்கடலில் தமது கப்பல் உடைந்ததைக் கண்ட மனிதர்கள்போல் அவர்கள் ஆனார். ஆனால், பலமான ஓர் அன்புக் கயிறு அவர்களனைவரையும் ஒன்றுகப் பிணைத்தது; அதனால் ஒருவரையொருவர் துணையாகக்கொண்டு, உறுதியும் துணிவும் பெற்றனர். உலகப் பற்றுள்ள மக்களின் நட்பில் ஆனந்தங் கொள்வது அவர்கட்கு இயலாததாயிற்று; ஆதலின் தமது குருதேவரைப் பற்றிய பேச்சு ஒன்றிலே மட்டும் விருப்பங்கொள்ளலானார். "இனி அவரை யாம் மறுபடியும் தரிசிக்கமாட்டோமா?"—என்ற ஓர் எண்ணமே நனவிலும் கனவிலும் அவர்களிடம் குடிகொண்டிருந்தது. தனியே இருந்தபோது அவர்க்காக அழுவார்; கல்கத்தாவிலுள்ள தெருக்களிலே நடந்துசெல்லும்போது, அவரைப் பற்றிய நினைவிலே ஆழ்ந்துவிடுவர். ம—விடத்தில் குருதேவர் ஒருமுறை இவ்வாறு உரைத்தார்: "எனது மரணத்திற்குப் பின்பு என்னை நினைந்து கண்ணீர் சொரிந்து கொண்டே அலைவீர்கள் என்பதை நான் உணர்கிறேன்; இக் காரணத்தால் இவ்வுடலைக் கழிப்பது எனக்கு வருத்தந் தருவதாகிறது." அவர்களிற் சிலர் நினைத்ததாவது: "அவரோ இப்போது உலகில் இல்லையே, அவரைப் பறிகொடுத்தும், இன்னும் நம் வாழ்வில் இன்பமடைவது எவ்வளவு ஆச்சரியம்! நாம் விரும்பினால் நமது உடல்களை ஒழிக்க நமக்கு முடியுமே; இருந்தும் அவ்வாறு நாம் செய்யவில்லையே." பகவானைக் காணத் தவித்து, நெஞ்சம் நிறைந்த பக்தியோடு அவரை அழைக்கும் அடியார்கட்குப் பகவான் தமது காட்சியை அருளுவர் என ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவர்களிடம் பன்முறை கூறியிருந்தனர். சிரத்தை மேவும் நெஞ்சினின்றும் எழும் பிரார்த்தனைக்குப் பகவான் செவி சாய்க்கிறார் என அவர் அவர்கட்கு உறுதிமொழி அளித்திருந்தனர்.

குருதேவரின் சீடர்களுள் மணமாகாத இளைஞர் அவரது அந்தரங்க வகுப்பினைச் சார்ந்தவர்; அவர்கள் காசிப்பூர்ப் பூந்தோட்ட மாளிகையில் இரவும் பகலும் குருதேவருடனிருந்து பணிசெய்து வந்தனர். அவர் மறைந்த

பின், அவர்களிற் பலர் மனதில்லாமலே தமது குடும்பங்கட்குத் திரும்பினர். அவர்கள் இன்னும் முறைப்படித் துறவு பூணவில்லை. சிறிது காலம் அவர்கட்குக் குடும்பப்பெயர்களே, வழங்கிவந்தன, ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணர் அவர்களை மனத்தால் உலகைத் துறக்கும்படிச் செய்திருந்தனர். துறவிகட்குரிய காவி யாடைகளை அவர்களிற் பலர்க்குக் கொடுத்து, அவரே அவர்களைத் துறவு நிலையிற் புகுத்தி யருளினர் (அவர்கட்குச் சந்நியாசம் அளித்திருந்தனர்).

குருதேவருடைய பணியாளர்களில் இரண்டு மூன்று பேர்கட்குக் குடி யிருக்க இடம் இல்லாதிருந்தது. அவர்களிடம் பரந்த நெஞ்சுடைய சுரேந்திரர் பின்வருமாறு கூறலானார்: ''சகோதரர்களே, நீங்கள் எங்கே அலைவீர்கள்? நாங்கள் ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்துகிறோம், நீங்கள் அங்கே நிலையாக வாழ்ந்து, அதை நமது குருதேவருடைய கோயிலாக ஆக்கிக் கொள்ளுங்கள். இல்லறத்தாராகிய நாங்கள் ஆறுதல் பெறும் பொருட்டு அங்கே வருவோம்; எல்லா நாளும், பகலும் இரவும், உலகிலுள்ள எமது மனவிமக்களோடே கழிக்க எங்கட்கு எவ்வாறு இயலும்? காசிப்பூரில் குருதேவர் வாழ்ந்த காலத்து அவர்க்காகச் சிறிது தொகை கொடுத்து வந்ததுண்டு. உங்களது செலவுகட் காக இப்போதும் அதை மகிழ்ச்சியோடு தருவேன்.'' அவ்வண்ணமே கல்கத் தாவின் சுற்றுப்புறத்தில் பாரநகரில் அவர்கட்காக ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தினர்; இந்த இடம் நாளடைவில் ஒரு மடமாக மாறிவிட்டது.

முதலில் சிலமாசங்கள்வரை சுரேந்திரர் மாசம் முப்பது ரூபாய் கொடுத்து வந்தார். மற்றச் சீடர்களும் ஒல்வொருவராக மடத்தைச் சேர்ந்ததும், அவர் தமது உதவித் தொகையை இரட்டிக்கச் செய்து, பின்னர் நூறு ரூபா யாக்கினர். அவ்வீட்டுக்கு மாதவாடகை ரூபாய் பதினென்றே. சமையற்கார ருக்கு மாதம்ஆறுரூபாய் சம்பளம் கொடுத்தனர், மீதி உணவிற்கே செலவிடப் பட்டது.

இளைய கோபால் குருதேவரது படுக்கையையும், அவர் தினமும் உப யோகித்து வந்த ஏனைய பொருள்களையும் காசிப்பூர்ப் பூஞ்சோலை மாளிகையி லிருந்து கொணர்ந்தனர், காசிப்பூரிலே சமையல் செய்துவந்த பிராமணரே புதிய மடத்திற்கும் அமர்த்தப்பட்டனர், முதலாவது நிலையான சாது, மூத்த கோபால். சசி இரவுகளை அங்கே கழிக்கலானார். ஆரம்பத்தில் சரத், சசி, பாபுராம், நிரஞ்சன், காளி எனும் ஐவரும் தமது வசதிக்குத் தக்கபடி இடை யிடையே மடத்தைப் பார்க்க வருவதுண்டு. குருதேவர் காலமானபின் பிருந்தா வனஞ் சென்றிருந்த தாரக் என்பவர் சில மாசங்கட்கு அப்பால் கல்கத்தாவிற் குத் திரும்பிவந்தார். விரைவில் மடத்தைச் சார்ந்த நிலையான சாதுவானார், ராக்கால், யோகின், லாட்டு, காளி எனும் நால்வரும், மடந் தொடங்கிய சமயம், தாய அம்மையாரோடு பிருந்தாவனத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார். காளி ஒரு மாசத்திலும், ராக்கால் சிலமாசங்கள் கழிந்த பின்னும், யோகின் லாட்டு இருவரும் ஓராண்டுக்குப் பின்னும் கல்கத்தாவிற்குத் திரும்பினர். இல்லறச்

சீடர்கள் அடிக்கடி தமது சகோதரத் துறவிகளைப் பார்க்கவந்து, தியானத்திலும் படிப்பிலும் அவர்களோடு மணிக்கணக்காகப் பொழுது போக்கினர்.

சிறிது காலங் கழிந்தபின், நரேந்திரர், ராக்கால், நிரஞ்சன், சரத், சசி, பாபுராம், யோகின், தாரக், காளி, லாட்டு—இவர்கள் அனைவரும் முடிவாக உலகவாழ்வைத் துறந்துவிட்டனர், சாரதா பிரசன்னவும் சுபோத்தும் சிறிதுகாலம் கழித்து, அவர்களைச் சேர்ந்தனர். நரேந்திரரிடத்தில் மிகவும் அன்பு வாய்ந்த கங்காதர் மடத்திற்கு ஒழுங்காக வந்து கொண்டிருந்தார். காசியில் சிவ பெருமானுடைய கோயிலில் மாலைவழிபாடு நடைபெறும்போது பாடும் தோத்திரப்பாடல் ஒன்றைத் தமது சகோதரர்கட்குக் கற்றுக்கொடுத்தவர் அவரே. அவர் தவம் பண்ணுவதற்காகத் திபேத்து சென்றிருந்தார்; இப்போது திரும்பி வந்துவிட்டமையால் மடத்திலே வாழலானார். ஹரி முதலில் மடத்திற்கு வந்து போய்க்கொண்டிருந்து, சிறிது காலத்திற்குள் துறவு பூண்டவரானார். குருதேவருடைய துறவிச் சீடர்களின் தொகை இவ்வாறு முடிவுபெற்றது.

[குருதேவர் மரித்த உடனே உலகினைத்துறந்த அவருடைய சீடர்களின் புதுப்பெயர்கள் (சந்நியாச நாமங்கள்) பின்வருவன :

நரேந்திரர்	—	சுவாமி விவேகாநந்தர்
ராக்கால்	—	சுவாமி பிரம்மாநந்தர்
யோகின்	—	சுவாமி யோகாநந்தர்
நிரஞ்சன்	—	சுவாமி நிரஞ்சனாநந்தர்
லாட்டு	—	சுவாமி அத்புதாநந்தர்
பாபுராம்	—	சுவாமி பிரேமாநந்தர்
தாரக்	—	சுவாமி சிவாநந்தர்
ஹரி	—	சுவாமி துரியாநந்தர்
சரத்	—	சுவாமி சாரதாநந்தர்
சசி	—	சுவாமி ராமகிருஷ்ணாநந்தர்
காளி	—	சுவாமி அபேதாநந்தர்
கங்காதர்	—	சுவாமி அகண்டாநந்தர்
கோபால் (மூத்தவர்)	—	சுவாமி அத்வைதாநந்தர்
ஸாரதாபிரசன்ன	—	சுவாமி திரிகுணாதீதாநந்தர்
சுபோத்	—	சுவாமி சுபோதாநந்தர்

பாக்பசாரைச் சார்ந்த ஓர் இளைஞராகிய துளசி என்பார் கல்கத்தாவிலும் தக்ஷிணேசுவரத்திலும் சில தடவைகள் குருதேவரைத் தரிசித்து, அவருடைய ஆசிகளையும் பெற்றிருந்தார், இப்போது அவர் மடத்திற்கு அடிக்கடி வரலானார். சொற்ப காலத்திற்குள் மடத்துச் சாதுக்களில் ஒருவரானார். சுவாமி விவேகாநந்தரால் முறைப்படி ஞான வாழ்க்கைக்குரிய தீக்ஷை அருளப்பெற்ற அவர் உலக வாழ்வைத் துறந்து, சுவாமி நிர்மலாநந்தர் எனும் பெயரைப் பெற்றனர்,]

சுரேந்திரர் உண்மையாகவே பாக்கியம் பெற்ற ஓர் ஆன்மா. ஸ்ரீ ராம கிருஷ்ணரது பெயரோடு பின்பு இணைக்கப்பட்ட பெரும் துறவோர் சங்கத்திற்கு (சன்னியாச பரம்பரைக்கு) அடிப்படையை அமைத்தவர் அவரே. அவரது பக்தி

யாலும் தன்னல மறுப்பினாலுமே, அம்மடத்தினைச் சார்ந்த சிரத்தையார்ந்த புருடர்கட்கு மெய்ஞ்ஞானம் பெறுதற்காக உலகத்தைத் துறத்தல் கை கூடுவ தாயிற்று. அவர் மூலமாகவே ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவர்களைத் தமது போதனைக் கும், காம காஞ்சனத் தியாகத்திற்கும், பரம்பொருட் காட்சிக்கும் வடிவங்க ளாக உலகில் வாழுமாறு செய்தனர்.

மடத்திலே சகோதரர்கள் பெற்றோரற்ற பிள்ளைகளைப்போல—திக்கற்றவர் களைப்போல—வாழ்ந்தார்கள். சில சமயம் தமது வீட்டு வாடகை கொடுக்கப் பணமற்றவராயிருப்பார்; சில சமயம் மடத்திலே அவர்கட்கு உணவில்லாது போகும். சுரேந்திரர் அங்கு வந்து, இக் காரியங்கள் அனைத்தையும் முடித்து விட்டுச் செல்வார். அவரே இத்துறவிகள் அனைவர்க்கும் மூத்த சகோதரர் ஆனார். பின்னாளில் அவரது மெய்யன்பை நினைத்தபோதெல்லாம் இந்த முதல் மடத்தில் வாழ்ந்த துறவியர் நன்றியாற் கண்ணீர் சிந்துவர்.

இப் புதிய மடத்திற்குக் குருதேவருடைய அடியார்கள் "பாரநகோர் மடம்" என்னும் பெயரை வழங்கலானார். நரேந்திரர், ராக்கால் முதலான மற்ற இளஞ் சீடர்களும் தீவிர வைராக்கியம் நிறைந்த உள்ளத்தராயிருந்தனர். ஒரு நாள் ராக்காலின் தந்தையார் மடத்திற்கு வந்து, ராக்காலை வீட்டிற்குத் திரும்புமாறு வேண்டினார். அதற்கு மறுமொழியாக ராக்கால் "இங்கே வரு கின்ற சங்கடமும் தங்கட்கு எதற்காகவோ? யான் இங்கே மிக்க ஆனந்த மாக இருக்கிறேன். தாங்கள் என்னை மறக்கும்படிக்கும், நானும் தங்களை மறக்கும்படிக்கும், இறைவனிடம் பிரார்த்தித்தருள்வீர்களாக!" என்று உரைத் தனர். இளைஞரான சீடர்கள் ஒருவர்க்கொருவர் இவ்வாறு பேசிக்கொள்வர்: "நாம் ஒருக்காலும் இனி உலகத்தாரது பற்று நிறைந்த வாழ்க்கைக்கு மீள மாட்டோம். காம-காஞ்சனத் துறவையே குருதேவர் நமக்குக் கட்டளையிட் டருளினர். நமது குடும்பங்கட்குச் செல்ல எவ்வாறு நமக்கு முடியும்?"

சசி மடத்திலே நித்திய பூஜை செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண் டிருந்தார். குருதேவரது தூய திருமேனியின் மிச்சப்பொருள்கள் பலராமரது இல்லத்தினின்றும் கொணரப்பட்டன; ஸ்ரீ ராமகிருஷ்ணரை நித்தமும் பூஜை மண்டபத்தில் வழிபட்டனர். நரேந்திரர் வீட்டுக் காரியங்களை மேற்பார்த்து வந்தனர். அவரே மடத்திற்குத் தலைவர். அவர் தமது சகோதர சீடர்களிடம் "கீதையில் விதிக்கப்படும் நிஷ்காம கருமங்கள் (பயனை விரும்பாத கருமங்கள்) ஆவன: பூஜையும் ஜெபமும் தியானமும் பிறவுமேயாம்; உலக வாழ்விற் குரிய கடமைகளல்ல" என்று கூறுவார். மடத்துச் சகோதரர்கள் தாம் ஞான ஊக்கம்பெற அவரையே சார்ந்திருப்பார். அவரும் "நாம் சாதனம் பழகுதல் வேண்டும்; இல்லையாயின் நாம் இறைவனைத் தரிசிக்க இயலாதவராவோம்" என்று அவர்கட்குப் போதிப்பார்.

அவரும் அவருடைய சகோதர சீடர்களும் முனிவர்க்குரிய இயல்பு நிரம் பியவராகி, அல்லும் பகலும் ஞான சாதனம் பழகுவதிலே ஈடுபட்டிருந்தனர்.

வாழ்க்கையில் அவர்கள் கொண்ட ஒரே குறிக்கோளாவது, இறைவனது காட்சியைப் பெறுதலே. கடுமையான சாதன (தவ) வாழ்க்கைக்கென வேதங்களும் புராணங்களும் தந்திரங்களும் விதித்துள்ளவற்றையெல்லாம் தமது நெஞ்சங்கள் திருப்தியடையும்வரை பின்பற்றி வந்தனர். ஜெபம் தியானம் சாஸ்திர ஆராய்ச்சி—இவற்றில் அவர்கள் தமது முழுப்பொழுதையும் கழித்தார். தெய்வ சாந்நித்தியத்தை (தெய்வத்தின் முன்பு இருப்பதான உணர்ச்சியை) அனுபவிக்க இயலாது போகுந்தோறும், அவர்கள் நரக வேதனையை (கொடுந் துயரத்தை) அடைவர். அவர்கள் தவம் பயின்றனர்; சில சமயங்களில் தனியாக மரத்தடியிலும், சில சமயம் ஒரு மயானத்தும், சில சமயம் கங்கைக் கரையிலும் பழகினர். இன்னும் சில காலங்களில் அவர்கள் பகல் முழுதும் மடத்திலுள்ள தியான அறையில் ஜெபத்திலும் சிந்தனையிலும் ஆழ்ந்திருப்பர்; சில வேளைகளில் ஆனந்த பரவச நிலையில் பாடவும், ஆடவும் ஒன்று கூடுவர். அவர்களில் அனைவரும், சிறப்பாக நரேந்திரரும் இறைவனைக் காணும் ஆசைத்தீக்கு இரையாயினர். இடையிடையே அவர்கள் ஒருவர்க் கொருவர் "இறைவனைக் காணும் பொருட்டு நாம் இறக்கும்வரை பட்டினி கிடக்க வேண்டாமோ?" என்று கூறிக்கொள்வர்.

திங்கட்கிழமை, பெப்ரவரி 21, 1887

நரேந்திரர், ராக்கால், நிரஞ்சன், சரத், சசி, காளி, பாபுராம், தாரக், சாரதா, பிரசன்ன—இவர்கள் மடத்தில் வாழ்ந்து வந்தனர். நாள் முழுதும் இந்த சாதுக்கள் இன்று சிவராத்திரி தினத்தைக் கொண்டாடும் பொருட்டு உண்ணாவிரதம் இருந்தனர். சரத், காளி, நிரஞ்சன், சாரதா நால்வரும் தூயஜெகந்நாத க்ஷேத்திர யாத்திரைக்காக, அடுத்த ஞாயிறன்று பூரிக்குச் செல்வதாகத் திட்டம் அமைத்துக்கொண்டிருந்தனர். யோகின், லாட்டு இருவரும் பிருந்தாவனத்தில் இருந்தார், இதுவரை புதிய இடத்தை அவர்கள் பார்த்ததில்லை.

நரேந்திரரது தந்தையாரின் மரண காலம் முதலே அவரது குடும்பத்தார் ஒரு வழக்கிலே மாட்டிக்கொண்டிருந்தனர்; அவ்வழக்கைக் கவனித்தற்காக அன்று மாலை நரேந்திரர் கல்கத்தாவுக்குப் போயிருந்தார். காலை ஒன்பது மணிக்கு ம— மடத்திற்கு வந்து சேர்ந்தனர். தாரக் அவரைக் கண்டு, சிவ பெருமான் புகழைப் பாடத்தொடங்கினர்; ராக்காலும் சேர்ந்துகொண்டனர். அவர்கள் பாடும்போதே ஆடலானார். நரேந்திரர் சமீபகாலத்திற்கு முன்பு தான் அப்பாடலை இயற்றியிருந்தார்.

சசி கோயிலில் காலை வழிபாட்டை முடித்தார். சரத் அதன்பின் தம்பூராவின் சுருதியோடு சிவபெருமானைப்பற்றிப் பாடினர்.

நரேந்திரர் கல்கத்தாவிலிருந்து அப்போதுதான் வந்திருந்தனர். இன்னும் நீராடவில்லை. காளி அவரிடம் வழக்கைப்பற்றி விசாரித்தார். "அதைப் பற்றிய கவலை உனக்கு ஏன்?" என்று நரேந்திரர் கடுமையாகப் பதில் அளித்தார்.

நரேந்திரர் கங்கையில் நீராடிவிட்டு, மடத்திற்குத் திரும்பினர். அவர் தமது ஈர ஆடையையும் துண்டையும் கையில் ஏந்தி வந்தார். சாரதா நரேந்திரரின் முன்பு வீழ்ந்து வணங்கினர். அவரும் சிவராத்திரி விரதம் இருந்தார்; கங்கைக்கு நீராடச் சென்றுகொண்டிருந்தார். நரேந்திரர் பூஜையறைக்குட் புகுந்து, ஸ்ரீ ராமகிருஷ்ணரது படத்தின்முன் வணங்கினர். ஸ்ரீ ராம கிருஷ்ணரை நித்தமும் தெய்வமாக அங்கே வழிபட்டு வந்தனர். சில நிமிஷ நேரம் நரேந்திரர் தியானத்தில் ஆழ்ந்திருந்தார்.

மாலையில் சிவபெருமானை வழிபடுதற்காக ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. வில்வதளங்கள் பூஜைக்காகச் சேர்க்கப்பட்டன. வில்வக் கட்டையை ஹோமத்திற்கெனக் குச்சி குச்சியாகத் துண்டித்து வந்தனர்.

மாலையில் மடத்துப் பூஜையை ஏற்றுக்கொண்டிருந்த சசி பற்பல தேவர்கள்–தேவியர்களின் படங்களின் முன்பு தூபங் காட்டினர்,

மடத்தின் எல்லைச் சுவர்க்குள் இருந்த வில்வ மரத்தின்கீழ் சிவ பூஜை நடைபெறுவதாயிருந்தது. நான்கு சாமங்களிலும் நான்கு முறை பெருமானை வழிபடுவதாயிருந்தது. சகோதரர்கள் வில்வ மரத்தின் அடியில் கூடினர். பூபதியும் ம—வும் கூட இருந்தனர். மடத்தைச் சார்ந்த இளைஞரான சாதுக்களில் ஒருவர் பூஜையை ஏற்றுக்கொண்டிருந்தார். காளி கீதையிலிருந்து சுலோகங்களை வாசித்தனர். இடையிடையே அவர் நரேந்திரரோடு வாதாடினர்.

காளி: "நானே எல்லாம். படைப்பவனும் காப்பவனும் அழிப்பவனும் யானே."

நரேந்திரர்: "படைப்பது எனக்கு எவ்வாறு இயலும்? வேறெரு சக்தி என்மூலம் படைக்கிறது. நமது பற்பல செயல்களும்—நமது நினைவுகளும் கூட—அதே சக்தியால் உண்டாக்கப்படுகின்றன."

ம— (தமக்குள்ளே): "குருதேவர் இவ்வாறு சொல்வதுண்டே: 'தியானிப்பவன் தானே என்னும் உணர்ச்சி ஒரு மனிதனிடம் இருக்கும்வரை, அவன் ஆதி சக்தியின் ஆட்சிக்கு உட்பட்டவனே. சக்தி தேவியை ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும்' என்று."

காளி சிறிது நேரம் மௌனமாகச் சிந்தித்துப் பின்பு "நீர் சொல்லும் கருமங்கள் மித்தையே (பொய்த் தோற்றமே). நினைவு எனப்படும் ஒரு பொருளும் இல்லை. இப்பொருள்களைப்பற்றிய நினைவே எனக்கு நகைப்பை ஊட்டுகிறது."

நரேந்திரர்: "'ஸோஹம்' (அவனே நான்) என்பதில் அடங்கியுள்ள 'அஹம்' (நான்) இந்த அஹங்காரமன்று. மனம் உடல் முதலிய உபாதிகளை ஒழித்தபின் மிஞ்சுவதே அது."

கீதா பாராயணத்தை முடித்தபின், காளி "சாந்தி! சாந்தி! சாந்தி!' என்று உச்சரித்தார்.

நரேந்திரரும் மற்ற அடியார்களும் எழுந்து நின்று, பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் மரத்தைச் சுற்றிச்சுற்றி வந்தனர். இடையிடையே அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து "சிவ குரு! சிவ குரு!" என்று கூவினர்.

இன்று சுக்கில பக்ஷ சதுர்த்தசி, நடுநிசி. மையிருள் திசைகள் எங்கும் நிறைந்தன. மக்கள், பறவைகள், மிருகங்கள்—யாவும் மோனத்தில் ஒடுங்கியிருந்தன. இளைஞரான துறவிகள் காவியாடைகளை உடுத்திருந்தனர். தொண்டையார எழுந்த குரல்களிலே அவர்கள் பாடிய "சிவகுரு!" என்னும் ஒலிகள் மழை முகில்களின் (மேகங்களின்) முழக்கங்களைப்போல எல்லையற்ற ஆகாயத்திலே கிளம்பி, அகண்ட சச்சிதானந்தத்தில் மறைந்தன.

வழிபாடு முடிவு பெற்றது. உதய சூரியன் கீழ்வானத்திற்குச் செந்நிறம் தீட்டி வந்தான். இரவும் பகலும் சந்திக்கும் அந்தத் தூய காலை அந்தியாகிய புனித பிராம்ம முகூர்த்தத்திலே இளமை வாய்ந்த அடியார்கள் கங்கையில் தமது நீராட்டத்தை முடித்தனர்.

காலையில் அடியார்கள் பூஜையறைக்குச் சென்று, தெய்வத்தின் முன்பு பணிந்து, பெரிய அறையில் வரவரக் கூடினர். நரேந்திரர் புதிய காவியாடையை உடுத்தியிருந்தார். அவரது உடையின் பிரகாசமான ஆரஞ்சு நிறம் அவரது முகத்தினின்றும் உடலினின்றும் சொரியப்பட்ட தெய்விக ஒளியோடு மருவி ஒன்றுயிற்று; அவரது முகமும் உடலும் தூளதொறும் பாரமார்த்திக ஜோதியை வீசியது. அவரது முகத்திலே நெருப்புப்போன்ற காந்தி நிறைந்திருந்தது; எனினும், அன்பின் மென்மையும் அதிலே தோய்ந்திருந்தது. அதீத சச்சிதானந்தக் கடலினின்றும் கிளம்பி குருதேவரது உபதேசத்தைப் பரப்பத் துணைபுரிவதற்கென மனித உடல் தரித்த ஒரு குமிழிபோல அவர் அனைவர்க்கும் தோன்றினர். எல்லோருடைய கண்களும் அவர்மீது பதிந்து நின்றன. நரேந்திரர் அப்போதுதான் இருபத்து நான்கு வயது நிரம்பியவராயிருந்தார்; இவ்வயதிலேதான் சைதன்யர் எனும் பெரியார் உலகைத் துறந்தார்.

பலராம் அடியார்களது காலைச் சிற்றுண்டிக்காக மடத்திற்குப் பழமும் பணியாரங்களும் அனுப்பியிருந்தார். ராக்கால், நரேந்திரர் முதலான இன்னுஞ் சிலரும் அவற்றை உண்டனர். ஒன்றிரண்டு கவளங்களை உண்டபின், அவர்களிற் சிலர் "உண்மையாகவே பலராம் அருள் பெற்றவராவர்!" என்று கூவினர். அனைவரும் சிரித்தனர்.

நரேந்திரர் இப்போது ஒரு பையனைப்போல வேடிக்கை பண்ணத் தொடங்கினர். அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணராக நடிக்கத் தொடங்கினர். அவர் தமது வாயில் ஒரு பணியாரத்தை வைத்துக்கொண்டு, சமாதியில் இருந்தவர்போல் அசையாது நின்றார். அவருடைய கண்கள் இமைகொட்டாது நின்றன. ஓர் அடியார் எழுந்து முன் வந்து, அவர் கீழே விழுந்து விடாவண்ணம் அவரது கையைப் பிடித்துக்கொள்வதுபோலப் பாசாங்கு பண்ணினார். நரேந்திரர் கண்களை மூடிக்கொண்டனர். சிறிது நேரம் சென்றபின், பணியாரம் முன்

போல் வாயில் இருந்த வண்ணமே, அவர் கண்களைத் திறந்து, ''எனக்கு—எல்லாம்—சரியாகி—விட்டது'' என்று நீட்டிப் பேசினர். அனைவரும் உரக்கச் சிரித்தனர்.

இப்போது ஒவ்வொருவர்க்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. ம— இந்த ஆச்சரியமான ஆனந்தச் சந்தையைப் பார்த்துக்கொண்டே யிருந்தார். அடியார்கள் மகிழ்ச்சியோடு 'ஜெய் குருமஹராஜ்!' (குருதேவர்க்கு வெற்றி உண்டாகுக!) என்று கத்தினர்கள்.

திங்கள், மார்ச்சு 25, 1887

ம— என்பவர் தமது சகோதர சீடரைப் பார்ப்பதற்காகப் பாரநகோர் மடத்திற்கு வந்தனர். தேவேந்திரரும் அவருடன் வந்து சேர்ந்தனர். ம— என்பார் அடிக்கடி மடத்திற்கு வந்துகொண்டிருந்தனர்; இடையிடையே ஒன்றிரண்டு நாள்கள் அங்கே தங்குவதும் உண்டு. முந்திய வாரம் மடத்தில் அவர் மூன்று நாளைக் கழித்தார். இந்த இளைஞர் பலரின் தீவிர வைராக்கியத்தைக் கவனித்து வருவதில் அவர் மிக்க ஆவலுடையவராய் இருந்தார்.

அப்போது மாலைவேளை. ம— இரவுப்பொழுதை மடத்தில் கழிக்க எண்ணினர். சசி பூஜை யறையிலுள்ள விளக்கை ஏற்றினர்; பகவானது திருநாமத்தை ஓதினர். பின்பு பல அறைகளிலும் உள்ள தேவதேவியரின் படங்கள் எல்லாவற்றின் முன்பும் தூபம் அளித்தார். மாலை வழிபாடு தொடங்கிற்று. சசி ஆராதனையை நடத்தினர். மடத்து சாதுக்களும், ம—வும், தேவேந்திரரும் கை கூப்பிக்கொண்டு நின்று, ஆரதிப் பாடலைப் பாடினர்.

பூஜை முடிந்ததும், நரேந்திரரும் ம—வும் ஒருவரோடொருவர் பேசலானர். நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தாம் பல முறை சந்தித்தபோது நிகழ்ந்தவற்றை ஞாபகப்படுத்திக்கொண்டிருந்தார்.

நரேந்திரர்: ''நான் குருதேவரைப் பார்க்கச் சென்ற ஆரம்ப காலத்தில் ஒரு நாள் அவர் சமாதி நிலையில் நின்றவராய் என்னைப் பார்த்து, 'நீ வந்துவிட்டாயா!' 'என்ன ஆச்சரியம்!' என்றனர். அதைக் கேட்டதும், 'என்னை நீண்ட காலம் அறிந்தவரைப்போலப் பேசுகின்றனரே' என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன். பிறகு அவர் என்னிடம் 'எப்பொழுதாவது நீ ஜோதியைக் காண்பதுண்டா?' என்று கேட்டனர். யான் அதற்கு மறுமொழியாக 'ஆம், ஐயன்மீர். நான் தூங்கு முன்பு, என் நெற்றிக்கு அருகே ஜோதியைப் போன்ற ஒன்று உருண்டு வருவதாக உணர்கின்றேன்' என்றேன்.''

ம—: ''இப்போதும் அது உமக்குத் தெரிகிறதா?''

நரேந்திரர்: ''யான் அதை அடிக்கடி காண்பதுண்டு. யது மல்லிக் என்பாரது பூந்தோட்ட மாளிகையிலே குருதேவர் ஒரு நாள் என்னைத் தொட்டுக் கொண்டே, தமக்குள்ளே ஏதோ ஒன்றை முணு முணுத்தார். யான் உணர்வற்ற

வனானேன். அவர் என்னை அன்று தொட்டத்தின் பயன் ஒரு வெறி போன்று ஒரு மாதக் காலம் நீடித்து நின்றது.

"எனக்கு மணம் புரியும் யோசனை நடந்து வருவதை அவர் கேள்வியுற்றதும், காளி தேவியின் திருவடியைப் பற்றிக்கொண்டே அவர் அழுதார். கண்ணீர் சிந்திக்கொண்டே அவர் தேவியிடம் 'அன்னாய்! அனைத்தையும் தலை கீழாக்கி அருள்க! நரேந்திரனை உலக வாழ்வில் மூழ்கி யிறக்க விடாதே!" என்று பிரார்த்தித்தார்.

"எனது தந்தையின் மரணத்திற்குப்பின் எனது அன்னையாரும் என் சகோதரர்களும் பட்டினியா யிருந்தனர். குருதேவர் ஒரு நாள் அன்னதா குஹா என்பவரைச் சந்தித்தபோது, அவரிடம் 'நரேந்திரனது தந்தையார் இறந்து விட்டனர். அவனது குடும்பம் கொடிய வறுமை நிலையில் உள்ளது. அவனுடைய நண்பர் இப்போது அவனுக்குப் பண உதவி செய்தால் மிக நலமா யிருக்கும்' என்றனர்.

"அன்னதா சென்றதும் நான் அவரைக் கண்டித்தேன். 'இவற்றை யெல்லாம் பற்றி அவரிடம் தாங்கள் கூறியதேன்?' என்று வினவினேன். இவ்வாறு யான் கடிந்துரைத்ததற்காக அவர் அழுதுகொண்டே, 'அந்தோ! (ஐயோ!) நினக்காக யான் வீடுதோறும் பிச்சை யெடுக்கவும் செய்வேனே' என்று உரைத்தார்.

"அவர் எங்களைத் தமது அன்பால் வசமாக்கினர். உமது கருத்தும் அதுவே யன்றே?"

ம—: "அதைப் பற்றி எள்ளளவும் சந்தேகமில்லை, அவரது அன்பு முழுதும் தன்னலமற்றதா யிருந்தது."

நரேந்திரர்: "ஒரு நாள் நான் அவரோடு தனியே இருந்தபோது, அவர் என்னிடம் யாதோ ஒன்று உரைத்தார். வேறெவரும் அங்கில்லை. இங்கு எவரிடமும் அதனைத் திரும்பக் கூறுதிருப்பீராக."

ம—: "இல்லை, செய்யேன். அவர் கூறியதென்ன?"

நரேந்திரர்: "அவர் என்னிடம் 'யோக சித்திகளை உபயோகித்தல் எனக்கு இயலாது; ஆனால் உன் மூலமாக அங்ஙனம் செய்வேன். நீ என்ன சொல்கிறாய்?' என்று கேட்டார். 'கூடாது, நீர் அதைச் செய்யக்கூடாது' என்று மறுமொழி அளித்தேன்.

"அவருடைய மொழிகளைக் கேட்டுச் சிரிப்பதுண்டு. அவரிடமிருந்து இவற்றையெல்லாம் பற்றி நீர் கேட்டிருப்பது கட்டாயம். அவர் பெற்ற கடவுட் காட்சிகள் யாவும் அவரது மனத்திலே எழுந்த மயக்கக் காட்சிகளே என்று அவரிடம் சொன்னேன்.

"அவர் அதற்குப் பதிலாக 'யான் அரண்மனை மாடிமீது ஏறி, "அடியார்களே! நீங்கள் எல்லோரும் எங்குள்ளீர்? அடியார்களே! என்னிடம் வாருங்கள். நான் சாகுந்தறுவாயில் உள்ளேன். உங்களை யான் காணவிடில் யான்

இறப்பது உறுதி'' என்று கத்துவேன். தேவி என்னிடம் ''அடியார்கள் வருவார்'' என்றனள். பார்த்தாயா? ஒவ்வொன்றும் மெய்யாகி வருகிறது' என்று உரைத்தார்.

''வேறு யாது கூற எனக்கு முடியும்? மோனமாயிருந்தேன்.

''ஒரு நாள் அவர் தமது அறையின் கதவை அடைத்துவிட்டு, தேவேந்திர பாபுவிடமும் கிரீஷ் பாபுவிடமும் என்னைக் குறித்து 'இவன் இன்னன் என்பதை இவனிடம் சொன்னால், இவன் உடலை வைத்திருக்கமாட்டான்' என்றனர்.''

ம—: ''ஆம், அதைக் கேட்டுளோம். பலமுறை அவர் எங்களிடமும் திரும்பத் திரும்பக் கூறினர். காசிப்பூர்ப் பூஞ்சோலை மாளிகையிலே பெற்ற நிர்விகற்ப சமாதி நிலையில் உமது உண்மையான சொரூபத்தை ஒரு சமயம் நீர் அறியவந்தீர். இது உண்மையன்றோ?''

நரேந்திரர்: ''ஆம், அந்த அனுபவத்தில் எனக்கு உடலில்லை என்ற உணர்ச்சி உண்டாயிற்று. எனது முகத்தை மட்டும் என்னால் காண முடிந்தது. குருதேவர் மேல்மாடி அறையில் இருந்தார். எனக்கு அந்த அனுபவம் ஏற்பட்டது கீழ் மாடியிலே. யான் அழுதுகொண்டிருந்தேன். 'எனக்கு என்ன நேர்ந்துள்ளது?' என்றேன். மூத்த கோபால் குருதேவரது அறைக்குச் சென்று, 'நரேந்திரன் அழுதுகொண்டிருக்கிறான்' என்றார்.

''நான் குருதேவரைக் கண்டதும், அவர் என்னிடம் 'இப்போது நீ அறிந்து விட்டனை. ஆனால் திறவுகோலை என்னிடமே வைத்திருக்கப் போகின்றேன்' என்றனர்.

''நான் அவரிடம் 'எனக்கு நேர்ந்தது யாது?' என்று கேட்டேன்.

''அடியார்களை நோக்கித் திரும்பியவராய் அவர் 'தன்னை இன்னன் என அறிவானையின், உடலை வைத்திருக்கமாட்டான். ஆனால் அவனுடைய கண் கட்கு முன்பு ஒரு திரை போட்டுவிட்டேன்' என்றனர்.

''ஒரு நாள் அவர் என்னிடம் 'உனக்கு வேண்டுமாயின் உனது நெஞ்சிலே ஸ்ரீ கிருஷ்ணரைத் தரிசிக்கக்கூடும்' என்று கூறினர். அதற்கு மறுமொழியாக 'கிருஷ்ணரிடமோ வேறு எந்த அம்மாதிரியான அறிவீனத்திலோ எனக்கு நம்பிக்கை இல்லை' என்று உரைத்தேன். (ம—வும் நரேந்திரரும் சிரிக்கின்றனர்)

''நான் ஆச்சரியமான ஒன்றைக் கவனித்துள்ளேன். சில மனிதர்களையோ பொருள்களையோ இடங்களையோ காணுந்தோறும், முற்பிறவியொன்றில் அவர் களையோ அவற்றையோ முன்பே யான் கண்டிருப்பதுபோன்ற உணர்ச்சி எனக்கு உண்டாகிறது. அம்மனிதரும் பொருள்களும் எனக்குப் பழகினவை யாகவும் இருப்பதை உணர்கிறேன்; ஒரு நாள் கல்கத்தாவில் ஆம்ஹெர்ஸ்ட் தெருவில் ஸரத் என்பாரது வீட்டிற்குச் சென்றேன். உடனே யான் ஸரத்தினிடம் ''இவ்வீடு எனக்குப் பழக்கமானதுபோல் தோன்றுகிறது. இந்த அறைகளும், வழிகளும் மற்ற இடங்களும் பலபல நாள் நான் அறிந்தவையாக எனக்குத் தோன்றுகிறது என்றேன்.''

"நான் செய்தது ஒவ்வொன்றிலும் எனது சுயேச்சையையே பின்பற்று வது வழக்கம். குருதேவர் ஒருக்காலும் தலையிட்டதில்லை. 'சாதாரண பிரம்ம சமாஜம்' என்பதின் அங்கத்தினனுகச் சேர்ந்தது தங்கட்குத் தெரியுமே."

ம—: "ஆம், யான் அறிவேன்."

நரேந்திரர்: "பிரம்ம சமாஜக் கூட்டங்கட்கு மாதர் வருவதைக் குரு தேவர் அறிவார். ஒரு மனிதனுக்கு முன்னல் மாதர் அமர்ந்திருக்கும்போது அவர்களோடு சேர்ந்து அவன் தியானிக்க இயலாது: ஆதலால் பிரம்ம சமாஜத் தியானத்தை அவர் கண்டித்தார். ஆனல் அங்கே நான் செல்வதை அவர் தடுக்கவில்லை. ஆனல் ஒரு நாள் அவர் என்னிடம் 'நீ பிரம்ம சமாஜ அங்கத் தினனுனதைப்பற்றி ராக்காலிடம் சொல்லாதே; சொல்லுவையாயின் அவனும் அம்மாதிரி ஆக விரும்புவான்' என்று உரைத்தார்."

ம—: "உம்மிடம் அவரினும் மிக்க மனேபலம் உள்ளது. இக்காரணம் பற்றியே நீர் சமாஜத்துக்குச் செல்வதைக் குருதேவர் தடுக்கவில்லை."

நரேந்திரர்: "எனக்குத் தற்போதுள்ள மனநிலையை யான் பெற்றது மிக்க துயர வருத்தங்களின் பயனுகவே. அம்மாதிரியான எத்துயரத்தையும் தாங்கள் அனுபவிக்கவில்லை. சோதனைகளும் கடுந்துயரங்களும் இன்றி, எவ னும் தன்னை இறைவனிடம் ஒப்படைத்து, அவனையே புகலாகப் பற்றிக் கிடத் தல் இயலாது என்பதை நான் இப்போது உணர்கிறேன்.

"சரி, அந்த—என்பார் அவ்வளவு அடக்கமும் ஒடுக்கமும் உடையவராய் இருக்கின்றனரே ! அவர் முழுதும் 'தான்' அற்றவர். நான் எப்படித் தாழ்மையை வளர்க்கக்கூடும் என்பதைத் தாங்கள் எனக்குச் சொல்லமுடியுமா ?"

ம—: "உமது அகங்காரத்தைப்பற்றிப் பேசும்போது குருதேவர் 'அது எவருடைய அகங்காரம் ?' என்று கேட்டார்."

நரேந்திரர்: "அவரது கருத்து யாது ?"

ம—: "பகவானே நும் மூலமாகப் பல காரியங்களை இயற்றுதற்காக நும்மிடம் இந்த அஹங்காரத்தை வைத்திருக்கிறார் என்பதே குருதேவரது கருத்து."

சம்பாஷணை இப்போது மற்றைய அடியார்களைப்பற்றியதாயிற்று.

நரேந்திரர்: "குருதேவர் விஜய கோசுவாமியைப்பற்றிக் கூறும்போது, 'அவர் கதவைத் தட்டிக்கொண்டிருக்கிறார்' என்றனர்."

ம—: "அதாவது, இன்னும் அவர் அறைக்குட் புகுந்தபாடு இல்லை. சியாம்புகூரில் விஜயர் குருதேவரிடம் 'டாக்காவிலே தங்களை இதே தூலவடித் திலே, இதே உடலிலே கண்டேன்' என்றார். நீரும் அங்கிருந்தீரே."

நரேந்திரர்: "தேவேந்திர பாபுவும் ராம் பாபுவும் உலக வாழ்வைத் துறக்கப் பிரியப்படுகின்றனர். அவர்கள் கடுமுயற்சி செய்கின்றனர். இரண்டு ஆண்டுகட்குப்பின் உலக வாழ்க்கையை விட்டுவிடப்போவதாக ராம்பாபு என் னிடம் தனிமையில் உரைத்தார்."

ம—: "இரண்டு ஆண்டுகட்குப் பின்னு? அவருடைய குழந்தை கட்கு வேண்டிய ஏற்பாடு செய்த பின்பா?"

நரேந்திரர்: "மேலும், அவர் தமது தற்போதைய வீட்டை வாட கைக்கு வைத்துவிட்டு, சிறிய வீடொன்று வாங்குவாராம். மற்ற உறவினர்கள் அவரது மகளின் கலியாணத்திற்கு ஏற்பாடு செய்வாராம்."

வெள்ளி ஏப்பிரல் 8, 1887

காலையில் ஏறக்குறைய எட்டு மணிக்கு இரு அடியார்கள்—ஒருவர் இல் லறத்தார், மற்றொருவர் துறவி—பாரநகோர்த் திருமடத்திலே ஓர் அறையில் பேசிக்கொண்டிருந்தனர்; அப்போது ம—உள்ளே நுழைந்தார். அடியார்கள் சம வயதினர். இருபத்து நான்கோ இருபத்தைந்தோ பிராயம் உடையவர். ம— மடத்தில் மூன்று நாள் தங்க நினைத்தனர், அவர் கோயிலுக்குச்சென்று இறைவனை வணங்கினர். நரேந்திரர், ராக்கால் முதலான சகோதரர்களைப் பார்த்துவிட்டு, கடைசியாக இரண்டு அடியார்களும் பேசிக்கொண்டிருந்த அறைக்கு வந்தனர். இல்லற அடியார் உலகைத் துறக்க விரும்பினர். அவரை அவ்வாறு செய்யவேண்டாம் என்று சொல்லித் தடுக்க முயன்றுகொண்டிருந் தார் அத்துறவி.

துறவி: "உமக்கு உலகத்தில் உள்ள ஒரு சில கடமைகளை ஏன் முடித்துவிடக் கூடாது? விரைவில் அவற்றைப் பின்னல் விட்டுச் செல்வீர்.

"ஒரு மனிதனிடம் 'நீ நரகத்திற்குப் போவாய்' என்பது சொல்லப்பட்டது, அவன் ஒரு சிநேகிதனிடம் 'நரகம் ஏதைப்போன்றிருக்கும்?' என்று கேட் டான். உடனே அந்த நண்பன் ஒரு சுண்ணாம்புக் கட்டியினல் தரைமீது நரகத்தின் படம் வரையத் தொடங்கினன். படம் வரைந்து முடிந்ததும், அம் மனிதன் அதன்மீது படுத்து உருண்டான்; நான் நரகத்திற்குப் போயா யிற்று!' என்றான்."

இல்லறத்தார்: "எனக்கு உலக வாழ்விற் சுவையில்லை. ஆ! நீங் கள் இங்கு எவ்வளவு ஆனந்தமாய் இருக்கிறீர்கள்!"

துறவி: "உமக்கு வேண்டுமாயின் நீரும் உலகை என் துறக்கக் கூடாது? அதைப்பற்றி அவ்வளவு தூரம் பேசுவதேன்? ஆனல் நான் திரும்பவும் கூறுகின்றேன், கேளும்: கடைசி முறையாக விளையாட்டை நீர் அனுபவித்தாலென்ன?"

சசி முறையான வழிபாட்டை முடித்துவிட்டார். ஏறக்குறையப் பதினெரு மணிக்கு மடத்து சகோதரர்கள் நீராடியபின் கங்கையினின்றும் மீண்டனர். அவர்கள் புது ஆடைகளை அணிந்து, கோயிலுக்குச் சென்று, இறைவனை வணங்கிச் சிறிது நேரம் தியானித்தனர்.

உணவை இறைவற்கு இட்டபின், அவர்கள் தாமும் உண்டனர். ம—வும் அவரோடு உண்டனர்.

அப்போது மாலைவேளை. தேவர் தேவியர் படங்கட்கு முன்பு தூபம் காட்டப்பட்டது; பூஜை நடைபெற்றது. ராக்கால், சசி, மூத்த கோபால், ஹரிஷ் என்பார் பெரிய அறையில் அமர்ந்திருந்தனர். ம—வும் அங்கிருந்தார். கோயிலிலே குருதேவர்க்குச் சமர்ப்பிக்கும் (அளிக்கும்) உணவைப் பற்றி ஜாக்கிரதையாயிருக்குமாறு ராக்கால் தமது சகோதரரில் ஒருவர்க்கு எச்சரிக்கை செய்தார்.

ராக்கால் (சசி முதலானோர்க்கு): "ஒரு நாள் குருதேவர் சாப்பிடுமுன்னமே அவர்க்கென வைத்திருந்த சிற்றுண்டியில் ஒரு பகுதியை யான் உண்டேன். இதை அறிந்ததும் அவர் 'உன்னைப் பார்க்கவும் என்னால் முடியாது. அம்மாதிரியான காரியத்தை உனக்கு எப்படிச் செய்ய முடிந்தது?' என்று கேட்டார். நான் கண்ணீர் சொரியலானேன்."

மூத்த கோபால்: "ஒரு நாள் காசிப்பூரில் நான் அவரது உணவிலே பலமாக மூச்சுவிட்டேன். அதைக் கண்ட அவர் 'அந்த உணவைக் கொண்டுபோ' என்று சொன்னார்."

ம—வும் நரேந்திரரும் தாழ்வாரத்திலே உலாவிக்கொண்டும், பழைய நிகழ்ச்சிகளை ஞாபகப்படுத்திக்கொண்டும் இருந்தனர்.

நரேந்திரர்: "எதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை."

ம—: "இறைவனுடைய வடிவங்களில் நம்பிக்கை இல்லை என்பது தானே நுமது கருத்து?"

நரேந்திரர்: "முதலில் குருதேவர் சொன்னவற்றிற் பெரும்பகுதியை நான் ஒப்புக்கொள்ளவில்லை. ஒருநாள் அவர் என்னிடம் 'அவ்வாறுயின், நீ இங்கு வருவதேன்?' எனக் கேட்டார். 'நான் தங்களைக் காண வருவதல்லாது, தாங்கள் சொல்வதைக் கேட்க வரவில்லை' என்று பதிலளித்தேன்."

ம—: "அதற்கு அவர் என்ன பதில் கூறினர்?"

நரேந்திரர்: "அவர் மிக மிக மகிழ்ச்சியடைந்தார்."

சனிக்கிழமை ஏப்பிரல் 9, 1887

மடத்து சாதுக்கள் உண்ட பின்பு சற்றே இளைப்பாறிக்கொண்டிருந்தனர். மடத்திற்கு மேற்கேயுள்ள ஒரு தோட்டத்தில் ஒரு மரத்தடியில் நரேந்திரரும் ம—வும் உட்கார்ந்தனர். அது ஒரு தனிமையான இடம்; வேறெருவரும் அங்கில்லை. நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் கூடியபோது தமக்கு உண்டான பல வகை அனுபவங்களையெல்லாம் ம—விடம் ஞாபகத்தினின்றும் எடுத்துரைத்து வந்தார். நரேந்திரர்க்கு அப்போது ஏறக்குறைய இருபத்து நான்கு வயது, ம—வுக்கு முப்பத்திரண்டு.

ம—: "அவரை நீர் முதல்முறை பார்க்கச்சென்ற சமயம் நிகழ்ந்தது உமக்கு மிகத் தெளிவாயிருக்குமே."

நரேந்திரர்: "அன்று இரு பாட்டுகளைப் பாடினேன்."

நரேந்திரர் அப்பாட்டுக்களை ம—வுக்காகப் பாடினார் :

இன்னும் ஒருமுறைநாம் ஏகுவோம் நம்முறையுள் ;
என்னெஞ்சே அன்னியமாம் இவ்வுலகில்—என்னே
புதியார்தம் வேடம் புனைந்துதிரி கின்றேம் ?
மதியில் ஒருகுறிப்பும் வையோம்—விதிவசமாய்
எண்டிசையும் வாழுமுயிர் எல்லாம்ஐம் பூதமும்நீ
கண்டறி யாப்புதிய காண் ; அவற்றில்—உண்டோநிற்(கு)
ஒருரிமை ? யாயினும்நீ உன்னைமறந் தன்னியர்பால்
பேரார்வம் கொள்வதென் பேதைநெஞ்சே—பாரினிலே
சொந்தமுனக் காவாரைத் தூமனமே இவ்வண்ணம்
அந்தோ மறந்திடுவா யால்.

மெய்ப்பொருளைச் சாரும் வியன்நெறியில் ஏறிடுக
எய்ப்பொன்றும் இல்லாதே என்மனமே—உய்ப்பிற்கா
அன்பாம் விளக்கை அருந்துணையாக் கொண்டிடுக
துன்பம் வழிநடுவே தோன்றுதே—இன்பமாய்ச்
செல்ல மறைவாகச் சீர்குணமாங் கைப்பொருளை
மெல்லக் கொணர்க விழிப்பாக—வல்லஇரு
கள்ளர் வழிபறிக்காக் காத்திருப்பர் பேராசை
எள்ளுமொரு மோகம் எனும்பெயரார்—கொள்க மனச்
சாந்தி யடக்கமிவை சந்ததமும் காவலராம்
பாந்த முனக்காகும் பார்.

நல்லா ரிணக்கம் நடுவழியே தங்குமிடம்
செல்வாய் இளைப்பங்கே தீர்ந்திடுவாய்—செல்லும்
நெறிபற்றி ஐயம் நிகழ்ந்திடினும் ஆங்கே
நிறுகாவல் செய்வார்பால் நீசென்—றுறுதிபெறு;
அச்சம் வழியில் அகத்தெழினும் ஈசனின்
மெச்சுதிரு நாமம் விளம்பிடுக—நிச்சயமாய்
மார்க்கந் தனையாளும் மன்னிறைவன் தாளிணையிற்
சேர்ப்பான் மறலி சிரம்.

பின்னும் பாடினார் :

நலன்சற்று மின்றியென் நாளெல்லாம் வீணே
உலந்தொழிதல் ஈசா உனது திருவுளமோ ?
ஆசைநிறை வேறுமென்றே அல்லும் பகலும்யான்
நேசத்தால் நோக்குவேன் நெஞ்சு துடிதுடித்தே.
எல்லா உலகிற்கும் ஈசனாய் நீயிருப்பாய்
நல்லாய் இரவலனாய் நான்மட்டும் போவேனே ?

என்நெஞ்சில் நீவந் தெழுந்தருள வேண்டுமென
இந்நிலையில் உன்னையான் யாங்ஙனம் வேண்டுகெனே ?
ஏழையேன் நெஞ்சமெனும் எளியகுடி சைக்கதவம்
பாழாய் நனிதிறந்து பாங்காய்க் கிடப்பதன்றே ?

ஒருமுறை யேனும் வளம்புகுந் தாங்கே
பெருந்தாகந் தீரப் பெரும அருளாயே.

[உறையுள் - வசிக்கும் இடம், தூ - பரிசுத்தம், வியன் - பெருமை, உய்ப்பு - வழி யிற் செலுத்துதல், பாந்தம் - ஒழுங்கு, உலந்து - அழிந்து.]

ம—: "உமது பாடல்களைக் கவனித்த பின்பு அவர் கூறியதென்ன?"

நரேந்திரர்: "அவர் சமாதியடைந்தார். ராம் பாபுவிடம் அவர் 'இப் பையன் யார்? அவன் எவ்வளவு அழகாகப் பாடுகிறான்!' என்றார். என்னை மறுபடியும் வரும்படி வேண்டினார்."

ம—: "அடுத்த தடவை நீர் அவரை எங்கே கண்டீர்?"

நரேந்திரர்: "ராஜ்மோஹனின் இல்லத்திலே. மூன்றுமுறை அவரைக் கண்டது தக்ஷிணேசுவரத்திலே. இந்த சமயம் அவர் சமாதியிற் புகுந்தார். என்னை இறைவனுகவே பாவித்து என்னைப் புகழத் தொடங்கினார். என் னைப் பார்த்து 'ஏ நாராயண, எனக்காக நீ இவ்வுடலைத் தரித்துளாய்' என்றார். ஆனால் 'இதை வேறெவரிடமும் சொல்லாதிருப்பாயாக' என்றார்."

ம—: "வேறென்ன அவர் கூறினார்?"

நரேந்திரர்: "என்னை நோக்கி 'நீ எனக்காக இவ்வுடலைத் தரித்துள் ளாய். யான் தேவியிடம் "அன்னாய்! காம காஞ்சனங்களினின்றும் முற்றும் விடுபட்ட சில உண்மையான அன்பர்களின் கூட்டுறவை யான் அனுபவித்தா லன்றி யான் இம் மண்ணில் எவ்வாறு வாழ்வேன்?" என்று சொன்னேன்' என்றனர். பிறகு அவர் என்னிடம் 'நீ நேற்றிரவு என்னிடம் வந்தனை, என்னை எழுப்பினை, "நான் இங்கே இருக்கிறேன்" என்று கூறினை' என்று உரைத் தார். ஆனால் யானோ அதில் யாதொன்றையும் அறியாது போனேன். எங்களது கல்கத்தா வீட்டிலே யான் நன்கு உறங்கினதுதான் எனக்குத் தெரியும்."

ம—: "வேறு வழியாக உரைத்தால், ஒரே சமயம் நீர் இருக்கவும் செய் வீர், இல்லாதும் போவீர். பகவான் ஒரு சமயம் அருவமாகவும் உருவமாகவும் இருப்பது போன்றது அது."

நரேந்திரர்: "ஆனால் நீர் இதை எவரிடமும் உரைக்கக் கூடாது. காசிப்பூரிலே அவர் தமது சக்தியை என்னுட் புகுத்திவிட்டார்."

ம—: "காசிப்பூர்ப் பூந்தோட்ட மாளிகையிலே ஒரு மரத்தடியில் எரியும் தீ முன்பு நீர் வழக்கப்படித் தியானம் பண்ணியபோது அது நிகழ்ந்ததன்றே?"

நரேந்திரர்: "ஆம், ஒரு நாள் தியானம் புரியும்போது எனது கையைப் பிடித்துக்கொள்ளுமாறு காளியை வேண்டினேன். காளி என்னிடம் 'யான் உனது உடலைத் தொட்டபோது, மின்சார அதிர்ச்சியைப் போன்ற ஒன்று எனது உடலைத் தாக்கியதாக உணர்ந்தேன்' என்றான்,

"இங்கே ஒருவரிடமும் நீர் இதைக் கூறக்கூடாது. அவவாறு எனக்கு வாக்கு அளியும்."

ம—: "உம்மிடம் அவர் தமது சக்தியை ஊட்டியதில் ஒரு தனி நோக்கம் உள்ளது. அவர் உம்மூலம் பெருங்காரியம் இயற்றுவார். ஒரு நாள் குரு தேவர் ஒரு துண்டுத் தாளில் 'நரேன் மக்கட்குப் போதிப்பான்' என்று எழுதினர்."

நரேந்திரர்: "ஆனால் நானே அவரிடம் 'அம்மாதிரிக் காரியம் ஒன்றும் நான் செய்யமாட்டேன்' என்று கூறினேன். அதற்குப் பதிலாக அவர் 'உன் எலும்புகளே அதைச் செய்யும்' என்றார். அவர் ஸரத் என்பானை என்னிடம் ஒப்பித்துள்ளார். ஸரத் இப்போது இறைவனைக் காணத் தவிக்கிறான். குண்டலினி அவனிடம் விழித்துவிட்டது. குருதேவர் என்னை நாராயணர் என்று அழைப்பதுண்டு."

ம—: "ஆம், அவர் அழைப்பது எனக்கும் தெரியும்."

நரேந்திரர்: "காசிப்பூரிலே அவர் 'இப்போது திறவுகோல் என் கையில் உள்ளது. தன்னை இன்னான் என்று அறிந்ததும் இவன் தனது உடலை எறிந்துவிடுவான்' என்றனர்."

ம—: "நீர் நிர்விகற்ப சமாதியிலிருந்தபோது அவர் அதைச் சொன்னார் அன்றோ?"

நரேந்திரர்: "ஆம், அச்சமயம் எனக்கு உடல் இல்லாதது போன்று தோன்றிற்று. எனது முகம் மட்டும் இருந்ததாக உணர்ந்தேன்.

"பரீக்ஷைக்குத் தயாராவதற்காக யான் வீட்டிலே சட்டம் படித்துக்கொண்டிருந்தேன். திடீரென்று எனக்குள்ளே "யான் செய்து வருவது யாது?' என்று சொல்லிக்கொண்டேன்."

ம—: "குருதேவர் காசிப்பூரில் இருந்தபோது அது நிகழவில்லையா?"

நரேந்திரர்: "ஆம்; பைத்தியக்காரனைப்போல, யான் எனது வீட்டை விட்டு வெளியே ஓடினேன். அவர் என்னிடம் 'உனக்கு வேண்டுவது யாது?' என்று கேட்டார். 'சமாதியிலே மூழ்கியிருக்க எனக்கு விருப்பம்' என்றேன். 'எவ்வளவு அற்ப மனது உனக்கு உள்ளது! சமாதியைத் தாண்டி அப்பாற் செல்க! சமாதி மிக அற்பமான பொருளே' என்றார் அவர்."

ம—: "ஆம், ஞானத்திற்குப்பின் விஞ்ஞானம் என்ற நிலை உண்டென்று அவர் கூறுவர். மாடியை அடைந்தபின் படிக்கட்டு வழியாக மேலும் கீழும் செல்வது போன்றது அது. உம்மைப்பற்றி அவர் வேறென்ன கூறினர்?"

நரேந்திரர்: "ஒருநாள் யான் அவரிடம் 'இறைவனின் உருவங்களும், அவைபோன்ற பிறவும்—உமது காட்சிகளில் தோன்றும் இவையெல்லாம்—மயக்கக் காட்சிகளே' என்று உரைத்தேன். என் வார்த்தைகளில் அவர்க்கு மிக்க நம்பிக்கை இருந்தமையால் அவர் கோயிலிலுள்ள தேவியிடம் சென்று, யான் அவரிடம் கூறியதைத் தெரிவித்தார். அவர் தேவியிடம் 'அப்படியானால் இவை மயக்கக் காட்சிகளா?' என்று கேட்டார். பிற்பாடு அவர் 'இவையெலாம் உண்மையே எனத் தேவி எனக்குக் கூறினாள்' என்றார்."

"அவர் என்னிடம் இதைச்சொன்னது உமக்கும் ஒருக்கால் நினைவிருக்கலாம்: 'நீ பாடும்போது இங்கே (தமது நெஞ்சைச் சுட்டி) வாழ்கின்ற ஈசனுர் பாம்பைப் போன்று சீறுவதுபோல் தோன்றுகிறது; பின்பு தமது படத்தை விரித்து, அசையாது அமைதியாகத் தம்மை நிறுத்திக்கொண்டு உனது சங்கீதத்தை உற்றுக் கேட்கிறுர்.'

"என்னைப் பற்றிப் பல அவர் கூறியுள்ளார் என்பதில் ஐயமில்லை; ஆனல் யான் என்ன அனுபூதி பெற்றுளேன்?"

ம—: "நீர் இவ்வினைஞரைக் காத்து வருபவராகி விட்டீர். முழுப் பொறுப்பும் உம்மதே. இம்மடத்தில் உமது சகோதரர்களைப் பேணி வளர்க்க வேண்டியவர் நீரே."

நரேந்திரர்: "நாங்கள் இங்கு பழகிவரும் ஞான சாதனங்கள் எவையெவையோ அவை யாவும் குருதேவரது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து யாம் இயற்றி வருவனவே. ஆனலும், ராம்பாபு எமது ஞான சாதனங்கட்காக எம்மைக் கண்டித்தல் புதுமையே. 'நாங்கள் அவரை (ஸ்ரீ ராமகிருஷ்ணரை)க் கண்டுள்ளோம். அம்மாதிரியான சாதனம் எங்கட்கு எப்படி அவசியமோ?' என்கிறுர் அவர்."

ம—: "ஜனங்கள் அவரவரது நம்பிக்கைப்படி நடக்கட்டுமே."

நரேந்திரர்: "ஆனல் குருதேவர் எங்களிடம் சாதனம் பழகுமாறு கூறினர்."

நரேந்திரர் தம்மிடம் குருதேவர்க்கு இருந்த அன்பைப் பற்றி மறுபடியும் ம—வுக்குச் சொல்லிக்கொண்டிருந்தார்.

நரேந்திரர்: "எனக்காக அவர் எத்தனை முறை தேவியிடம் பிரார்த்தித்தனர் என்பது! எனது தந்தையின் மரணத்திற்குப் பின் வீட்டில் எனக்கு உணவு இல்லாது போய், எனது அன்னையும் சகோதரிகளும் சகோதரர்களும் பட்டினி கிடக்க நேர்ந்தபோது, குருதேவர் எனக்குப் பொருள் கொடுக்குமாறு தேவியை வேண்டினர்."

ம—: "ஆம், அதை நான் அறிவேன். நீர் ஒரு முறை என்னிடம் சொன்னீர்."

நரேந்திரர்: "ஆனல் எனக்குப் பணம் யாதும் கிடைக்கவில்லை. தேவி அவரிடம் 'அவனுக்கு எளிய உணவும் உடையும் கிடைக்கும்' என்று சொன்னதைக் குருதேவர் என்னிடம் கூறினர்.

"என் மீது அவர் வைத்த அன்பை எவ்வளவு என்பது! ஆனல் என் உள்ளத்தே ஓர் அசுத்த எண்ணம் நுழைந்த போதெல்லாம் அவர் உடனே அதை அறிந்து விடுவார். அன்னதா என்பவரோடு சுற்றி வந்தபோது சில சமயம் யான் கெட்ட மக்களது சேர்க்கையில் இருக்க நேர்ந்தது. அச் சமயங்களில் குருதேவர் என் கையிலிருந்து பெறும் எந்த உணவையும் உண்ண மாட்டாராயினர். அவர்க்குத் தமது கையை ஒரு சிறிது மட்டும் உயர்த்த இயலும்;

கையைத் தமது வாய்க்குக் கொண்டு வர இயலாது போகும். அம்மாதிரியான சமயம் ஒன்றில் அவர் நோயாளியா யிருந்தபோது, அவர் தமது கையை அவரது வாய்க்கு மிக அருகே கொணர்ந்தார், ஆனால் அது உள்ளே செல்ல முடிய வில்லை. அவர் என்னிடம் 'நீ இன்னும் தயாராகவில்லை' என்றார்.

"இடையிடையே எனக்குப் பெரும் சந்தேகம் உண்டாகிறது. பாபுராமின் இல்லத்தில் ஒன்றுமே இல்லாததுபோல—ஈசன் எனும் பொருளே இல்லாதது போல—எனக்குத் தோன்றிற்று."

ம—: "குருதேவர் தாமே அங்கிலை வழியாகச் சென்றிருப்பதாகக் கூறியதுண்டு."

ம—வும் நரேந்திரரும் மௌனமா யிருந்தனர். பிறகு ம— "நீங்கள் அனை வரும் உண்மையாகவே பாக்கியசாலிகள்! அல்லும் பகலும் குருதேவரையே நீங்கள் நினைத்து வருகின்றீர்கள்."

நரேந்திரர்: "ஆனால் அது எவ்வளவு அற்பம்! நாங்கள் இறைவனைத் தரிசிக்கவில்லையே என்பதால் உடலை விட்டுவிடத் துணிவும் எங்கட்கு இன்னும் வரவில்லையே."

அப்போது இரவா யிருந்தது. நிரஞ்சன் பூரியிலிருந்து சற்று முன்புதான் திரும்பி வந்திருந்தார். மடத்து சாதுக்களும் ம—வும் அவரை மிக்க ஆனந்தத் தோடு வரவேற்றனர். நிரஞ்சன் அவர்களிடம் தமது அனுபவங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். அவர்க்கு அப்போது வயது இருபத்தைந்து.

மாலை வழிபாடு முடிந்தது. சாதுக்களிற் சிலர் தியானம் பண்ணிக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்களிற் பலர் நிரஞ்சனைச் சுற்றிப் பெரிய அறையிலே கூடியிருந்தனர். அவர்கள் பேசிக்கொண்டிருந்தனர். ஒன்பது மணிக்குப் பிறகு சசி இறைவனுக்கு நைவேத்தியம் சமர்ப்பித்தனர் (உணவை அளித்தனர்).

மடத்து சாதுக்கள் தமது இரவுச் சாப்பாட்டை முடித்தனர்; வீட்டிலே செய்த ரொட்டி, ஒரு சிறிது காய்கறி, ஒரு சிறிது வெல்லக்கட்டி—இவையே அவர்க்கு உணவாயின,

சனிக்கிழமை, மே 7, 1887

அன்று வைகாசிப் பௌர்ணிமை. நரேந்திரரும் ம—வும் கல்கத்தாவிலே ம—வின் இல்லத்தில் படிக்கும் அறையிலுள்ள ஒரு கட்டிலின்மீது அமர்ந் திருந்தனர். அவர்கள் பேசிக்கொண்டிருந்தனர். நரேந்திரர் வருவதற்குச் சற்று முன்பே ம—பள்ளிக்கூடத்திலே கற்பித்துவந்த பாடப் புத்தகங்களான 'வெனிஸ் வியாபாரி', 'கோமஸ்', பிளாக்கி என்பவர் இயற்றிய 'தற்பயிற்சி' எனும் நூல்களைப் படித்துக்கொண்டிருந்தார்.

நரேந்திரரும், மடத்தைச் சார்ந்த மற்ற சகோதரர்களும் ஈசனைத் தரிசிப்பதற்காக நெஞ்சம் துடித்துக்கொண்டிருந்தனர். தீவிர வைராக்கியம் எனும் நெருப்பு அவர்களுடைய நெஞ்சங்களிலே கொழுந்துவிட்டெரிந்தது.

நரேந்திரர்: "யான் எதையும் பொருட்படுத்துவதில்லை. நான் உம்மோடு பேசிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறீர்; ஆனால் இந்த நிமிஷமே எழுந்து ஓடவேண்டும் என்பதுபோல உணர்ச்சி எனக்கு உண்டாகிறது."

நரேந்திரர் சிறிது நேரம் மௌனமாயிருந்தார். பின்பு அவர் "ஈசுவர தரிசனத்திற்காக யான் பட்டினி கிடந்து இறப்பேன்" என்றார்.

ம—: "அது நன்று. இறைவனுக்காக எதுவும் ஒருவர் செய்யலாம்."

நரேந்திரர்: "ஆனால் எனது பசியை அடக்க இயலாது போனாலோ?"

ம—: "அப்படியானாலோ ஏதேனும் உண்ணும்; மறுபடியும் ஆரம்பியும்."

நரேந்திரர் ஒரு சில நிமிஷங்கள் பேசாதிருந்தார்.

நரேந்திரர்: "ஈசன் இல்லையென்றே தோன்றுகிறது. யான் எவ்வளவோ பிரார்த்தனை பண்ணுகிறேன்; ஆனால் பதிலே இல்லை—இம்மியளவு கூட இல்லை.

"எத்தனை தரிசனங்களை யான் பெற்றுளேன்! தங்கமயமான எழுத்துக்களோடு பிரகாசிக்கக் கண்ட மந்திரங்கள்தான் எத்தனை! காளி தேவியைப் பற்றிய காட்சிகள் எத்தனை! இன்னும் எத்தனை தெய்வ வடிவங்கள்! ஆனால் இன்னும் யான் சாந்தி பெறவில்லையே.

"நீர் எனக்குத் தயவு கூர்ந்து ஆறு காலணா கொடுப்பீரோ?"

நரேந்திரர் இந்தப் பணம் கேட்டது, பாரநகோர் மடம் போவதற்கு வேண்டிய வண்டி வாடகைக்காகவே. அப்போதுதான் ஸ்டீமரி ஒரு வண்டியில் வந்து இறங்கினர். நரேந்திரர்க்கு ஒத்த வயதுடைய அவர் மடத்து சாதுக்களின் மீது பிரியமும் அன்பும் கொண்டவர். அவர் மடத்திற்கு அருகே வாழ்ந்தவர், கல்கத்தாவில் வேலை பார்த்து வந்தார். வண்டி அவர்க்குச் சொந்தமானது. நரேந்திரர் பெற்ற பணத்தை ம—விடம் திரும்பக் கொடுத்து விட்டு, தாம் ஸ்டீமரியோடு அவரது வண்டியில் போவதாகக் கூறினர். அவர் ம—விடம் அவர்கட்குக் கொஞ்சம் சிற்றுண்டி வழங்கும்படி வேண்டினர்.

ம— இரு நண்பர்களோடும் பாரநகோர் மடம் சென்றார். சகோதரர்கள் மடத்தில் பொழுது போக்கின வகையையும் சாதனம் பழகின வகையையும் பார்க்க விரும்பினர். குருதேவரான ஸ்ரீ ராமகிருஷ்ணரது இயல்பு சீடரின் நெஞ்சங்களில் இன்னவாறு பிரதிபலிக்கப்பட்டுள்ளது என்பதைக் காணப் பிரியப்பட்டார். நிரஞ்சன் மடத்தில் இல்லை. அவர் உலகிலே தமக்கு ஒரே உறவினரான தமது அன்னையாரைக் காணும் பொருட்டுத் தம் வீடு சென்றிருந்தார். பாபுராம், ஸரத், காளி மூவரும் பூரிக்குப் போயிருந்தார். அவர்கள் அங்கே சில நாள் தங்கக் கருதினர்.

நரேந்திரர் மடத்து சாதுக்களின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தார். பிரசன்ன சென்ற சில நாள்களாகக் கடுமையான சாதனம் பழகி வந்தார். ஒரு நாள் நரேந்திரர் இறைவனது காட்சியைப் பெறுதற்காகப் பட்டினி கிடந்து வந்து இறக்கவும் தாம் விரும்பியதாக அவரிடம் சொல்லி யிருந்தார். (ஸாரதாப் பிரசன்ன குருதேவருடைய இளைய சீடர்களில் ஒருவர்; அவரை ஸ்ரீ ராம கிருஷ்ணரும் அவருடைய சீடர்களும் 'பிரசன்ன' என்றழைப்பது வழக்கம்.) நரேந்திரர் கல்கத்தாவிற்குச் சென்றிருந்த சமயம் பிரசன்ன மடத்தை விட்டு, இங்குள்ள ஒருவர்க்கும் தெரியாத ஓர் இடத்திற்குச் சென்றுவிட்டார். நரேந் திரர் அதைப் பற்றிக் கேள்விப் பட்டதும், அவர் தமது சகோதரர்களிடம், "இராஜா அவனைப் போகவிடுவானேன்?" என்று கேட்டார், ஆனால் அச் சமயம் ராக்கால் உலாவுதற்காகத் தக்ஷிணேசுவரக் கோயிலுக்குச் சென்றிருந் தமையால், மடத்தில் இருக்கவில்லை.

நரேந்திரர்: "ராஜா மடத்திற்கு வரட்டும்! நான் அவனைக் கண்டிக் கிறேன். அவன் பிரசன்னனைப் போக விடுவானேன்? (ஹரிஷைப் பார்த்து) நீர் உமது கால்களை அகல வைத்து நின்றுகொண்டு அவனிடம் அப்போது பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தீர் என்பது எனக்கு நிச்சயம். அவன் வெளி யேறுவதை உம்மால் தடுக்க முடியவில்லையா?"

ஹரீஷ் (மிக மெல்லிய குரலில்) "சகோதரர் தாரக் அவனைப் போக வேண் டாம் என்று தடுத்தார். ஆனாலும் அவர் வெளி யேறிவிட்டனர்" என்று மறு மொழி கூறினர்.

நரேந்திரர் (ம—விடம்): "பார்த்தீரா, நான் எவ்வளவு மிகுதியான சங் கடத்திற்குள் அகப்பட்டுக்கொண்டேன் என்பதை! இங்கும் யான் மாயையுலகிற் சிக்கிக்கொண்டேன். இச்சிறுவன் எங்கே போயிருக்கிறானோ? யார் அறிவார்?"

ராக்கால் தக்ஷிணேசுவரத்தினின்றும் திரும்பினர். பிரசன்ன மடத்தை விட்டு வெளி யேறியதைப் பற்றி நரேந்திரர் அவரிடம் சொன்னர். பிரசன்ன நரேந்திரர்க்கென ஒரு கடிதத்தை விட்டுச் சென்றார். அக்கடிதத்தின் ஸாரம் இது: "யான் பிருந்தாவனத்திற்கு நடந்தே செல்கிறேன். இங்கே வாழ்வது எனக்கு மிக ஆபத்தாயுள்ளது. இங்கே என் மனத்தில் ஒரு மாறுதல் நிகழ்ந்து வருகின்றது. முன்பு என் பெற்றோர்களையும் மற்ற உறவினரையும் பற்றி யான் கனவு காண்பதுண்டு. பின் மாயையின் வடிவமான பெண்ணையும் பற்றிக் கனவு கண்டேன். யான் இரு முறை துயரமடைந்தேன்; வீட்டிலுள்ள உற வினரிடம் மறுபடியும் போகவேண்டியதாயிற்று. ஆதலால் அவர்களை விட்டு வெகு தூரம் செல்லுகின்றேன். குருதேவர் என்னிடம் ஒரு முறை 'உன் வீட்டிலுள்ளார் எதையும் செய்யக் கூடியவர்; ஒருக்காலும் அவர்களை நம் பாதே' என்று கூறினர்."

ராக்கால் அப்போது "அவன் வெளியேறியதற்கு இவையே காரணங்கள், ஒருநாள் அவன் 'நரேந்திரன் தன் அன்னையையும் சகோதர சகோதரிகளையும்

பார்க்கும் பொருட்டு அடிக்கடி வீடு செல்கிறான்; அவன் குடும்ப வழக்கையும் மேற்பார்த்து வருகிறான். யானும் அவனைப் பின்பற்றி வீடுசெல்ல விரும்பு வேனே என்று அஞ்சுகிறேன்' என்றான்."

நரேந்திரர் மௌனமாயிருந்தார்.

ராக்கால் யாத்திரை செல்வதைப்பற்றி அவர்களிடம் பேசிக்கொண் டிருந்தார். "இங்கே தங்குவதனால் யாதொன்றும் நாம் பெறவில்லையே, குரு தேவர் சதாகாலமும் நம்மிடம் கூறிவந்தது, இறைவனைக் காணவேண்டும் நாம் என்றே. நாம் வெற்றி பெற்றுவிட்டோமா?" என அவர் உரைத்தார்.

ராக்கால் படுத்துக் கொண்டார். மற்றைய அடியார்கள் படுத்துக் கொண்டோ உட்கார்ந்து கொண்டோ இருந்தனர்.

ராக்கால்: "நருமதை நதிக்கரைக்கு நாம் செல்வோம்."

நரேந்திரர்: "திரிவதனால் நீ யாது பெறப்போகின்றனை? ஞானத் தைப்பற்றி இவ்வளவு நீ பேசிவருகிறாயே, ஞானத்தை என்றேனும் ஒருவர் பெறமுடியுமா?

ஓர் அடியார்: "பின்னை நீங்கள் எதற்காக உலகத்தைத் துறந்து விட் டீர்கள்?"

நரேந்திரர்: "நாம் ஈசனைத் தரிசிக்கவில்லை என்ற காரணத்தால் நாம் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டே இருக்கவேண்டுமோ? நீர் என்ன சொல்லுகிறீர்?"

நரேந்திரர் வெளியேறிவிட்டுச் சிறிது நேரம் சென்றபின் திரும்பி வந் தனர். ராக்கால் இன்னும் படுத்துக்கொண்டிருந்தார்.

கீழே படுத்துக்கொண்டிருந்த மடத்து சாது வேறொருவரும், இறைவனது பிரிவை ஆற்றுமையால் பெரும் துயரம் அடைந்தவர்போலப் பாவித்துக் கொண்டு, "யாரேனும் தயவு கூர்ந்து ஒரு கத்தியை எனக்கு உதவமாட்டீரோ? எனக்கு இவ்வாழ்வாற் பயனில்லை. இத் துயரம் இனி யான் பொறுக்கமாட் டேன்!" என்று கோபத்தை மூட்டும் முறையில் மொழிந்தார்.

நரேந்திரர் (சிரத்தையுள்ளவர்போல் பாவனை செய்து கொண்டு): "அது அங்கே உள்ளது. உன் கையை நீட்டி, அதை எடுத்துக்கொள்க."

ஒவ்வொருவரும் சிரித்தனர்.

மறுபடியும் பிரசன்னைவைப் பற்றிய பேச்சு எழுந்தது,

நரேந்திரர்: "இதிலும் நாம் மாயையில் சிக்கிக் கொண்டுள்ளோம். எதற்காக நாம் சன்னியாசிகள் ஆனோமோ?"

அப்போது இருட்டாகும் வேளை. பூஜை அறையிலே ஸ்ரீ ராமகிருஷ்ணரது படத்தின் முன்னும், மற்ற அறைகளில் உள்ள தேவர் தேவியர்களின் படங் களின் முன்னும் சசி தூபங் காட்டினர்.

மாலை வழிபாடு தொடங்கிற்று. மடத்து சாதுக்களும் மற்றைய அடியார் களும் கோயிலின் கதவண்டை கூப்பிய கையராய் நின்றுகொண்டு, ஆரதியைக்

கவனித்தனர். பின்பு அவர்களனைவரும் ஒன்று சேர்ந்து, சிறுமணியும் பெரு மணியும் உடன் ஒலிக்க, சிவத் தோத்திரப்பா ஒன்றைப் பாடலானார்.

இரவுச் சாப்பாடு முடிந்தபோது பதினெரு மணி ஆயிற்று. சகோதரர் கள் ம—விற்கு ஒரு படுக்கையைத் தயாரித்துவிட்டு, அனைவரும் உறங்கச் சென்றனர்.

நடு ராத்திரியில் ம—விழிப்புடையராய் இருந்தார். தமக்குள்ளே அவர் "ஒவ்வொன்றும் முன் இருந்தவண்ணமே உள்ளது. அதே அயோத்தியை தான்—ராமர் மட்டும் அங்கு இல்லை" என்று சொல்லிக் கொண்டார். ம— அரவமின்றித் தமது படுக்கையை விட்டுச் சென்றார். அன்று வைகாசிப் பௌர்ணிமைநாள்; புத்தரது பிறப்பும் நிர்வாணப்பேறும் மறைவும் நிகழ்ந்த நாளாதலின், அது பௌத்தர்க்கு மூவகையாலும் புனித நாளாயிற்று. ம— கங்கைக் கரையிலே தனியாக நடந்துகொண்டே, குருதேவரைத் தியானித்துக் கொண்டிருந்தார்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. ம—முந்தியநாள் அங்கு வந்திருந்தார், புதன் கிழமைவரை அங்கே தங்குவதாகத் திட்டம் அமைத்துக் கொண்டிருந்தார். இல்லற அடியார்கள் பொதுவாக ஞாயிற்றுகிழமைகளில் மடத்திற்கு வரலானார்.

'யோக வாசிஷ்டம்' எனும் நூலை ஒருவர் வாசித்து விளக்கிக்கொண்டிருந் தார் மடத்திலே. இந்நூலின் போதனைகளில் ஒரு சிறிதைப் பற்றி ஸ்ரீ ராம கிருஷ்ணரிடமிருந்தே ம— கேட்டிருந்தார். அது ஜீவப் பிரம்ம ஐக்கியத்தைப் பற்றியும், உலகத்தின் மித்தையைப் பற்றியும் போதிப்பது. குருதேவர் அவரை யும் மற்ற இல்லற அடியார்களையும் அத்வைத வேதாந்த முறைப்படி ஞான சாதனம் பழகக்கூடாது என்று தடுத்திருந்தார்; காரணம் யாதெனில், தேகத் தோடு ஆத்மாவை ஒன்று படுத்திக்கொள்வோனுக்கு ஜீவப் பிரம்ம ஐக்கிய பாவனை கேடுவிளைக்கும் என்பதே. அம்மாதிரியான அடியார் ஒருவர்க்கு, ஈசனை ஆண்டானாகவும் தம்மை அடிமையாகவும் கருதுதலே மேலானதெனக் குருதேவர் கூறுவதுண்டு.

சம்பாஷணை 'யோகவாசிஷ்ட'த்தைப் பற்றியதாயிற்று.

ம—: "சரி, 'யோகவாசிஷ்டத்'திலே பிரம்ம ஞானம் எவ்வாறு வரு ணிக்கப்பட்டுள்ளது?"

ராக்கால்: "பசியும் தாகமும் துன்பமும் இன்பமும் பிறவும், யாவும் மாயையே. மனத்தை நாசஞ் செய்தலே பிரம்ம ஞானத்திற்கு ஒரே சாதன மாகும்."

ம—: "மன நாசத்திற்குப் பின் மிஞ்சுவது பிரம்மமே. இது உண்மை யன்றே?"

ராக்கால்: "ஆம்."

ம—: "ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவ்வாறு சொல்லுவது உண்டு. நங்தா (தோத்தாப்புரி) அவ்வாறு அவர்க்குப் போதித்தார்."

நரேந்திரரும் மற்ற அடியார்களும் நீராடுவதற்காகக் கங்கைக்குச் சென்றனர். ம—வும் அவர்களோடு சென்றார். வெயில் மிக்க கடுமையாயிருந்தது; ஆதலின் ம— தமது குடையை எடுத்துக்கொண்டார். பாரநகோரி லிருந்து வந்திருந்த அடியாராகிய ஸரத் என்பவரும் குளிப்பதற்காக அவர்களோடு சென்றார். அவர் அடிக்கடி மடத்திற்கு வருபவர்.

ம— (ஸரத்திலிடம்) : "மிக்க சூடாயுள்ளது."

நரேந்திரர்: "குடையைக் கொணர்ந்ததற்கு அதுதான் சாக்குப் போலும் ?"

ம— சிரித்தார்.

மடத்து சாதுக்கள் காவியுடை தரித்திருந்தனர்.

ம— (நரேந்திரரிடம்) : "உண்மையாகவே கடுமையான வெயில் இது. வெயிலின் கடுமைக்கு ஆற்றாது ஒருவர் மூர்ச்சித்து விழவும் கூடும்."

நரேந்திரர்: "உமக்குத் துறவு நெறியிலே செல்ல இடையூருயிருப்பது உமது உடலே என்பதை அறிகிறேன். அப்படித்தானே? தேவேந்திர பாபு, உம்மைத்தான் கேட்கிறேன்—"

ம— சிரித்துவிட்டுத் தமக்குள்ளே "உடல் மட்டும்தானே ?" என்று சொல்லிக்கொண்டார்.

நீராடியபின் அடியார்கள் மடத்திற்குத் திரும்பினர். அவர்கள் தமது கால்களைக் கழுவிவிட்டுப் பூஜையறைக்குட் புகுந்தனர், தெய்வத்தை வணங்கி விட்டு, அவர்கள் மலர்களைக் காணிக்கையாக அளித்தனர்.

மடத்தின் எல்லைச் சுவர்க்கு மேற்கே மரங்கள் நிறைந்த ஒரு பெரிய நிலம் இருந்தது. ம— ஒரு மரத்தடியில் அங்கே தனியாக அமர்ந்திருந்தார்; அப்போது திடீரெனப் பிரசன்ன தோன்றினர். அப்போது பிற்பகலில் ஏறக் குறைய மூன்று மணி இருக்கும்.

ம—: "இத்தனை நாளாக நீர் எங்குப்போயிருந்தீர் ? ஒவ்வொருவரும் உம்மைப்பற்றி அவ்வளவு கவலைப்படலாயினரே. நீர் நுமது சகோதரர்களைப் பார்த்தாயிற்று? எப்போது வந்தீர் ?"

பிரசன்ன : "இப்போதுதான். ஆம், அவர்களைப் பார்த்தாயிற்று,"

ம—: "நீர் பிருந்தாவனம் செல்வதாக ஒரு குறிப்பு எழுதி வைத்து விட்டுச் சென்றீர் அன்றே ? நாங்கள் உம்மைப்பற்றிப் பெருங்கவலையுற் றோம். நீர் எவ்வளவு தூரம் சென்றீர் ?"

பிரசன்ன : "கொன்னகர் வரைதான்."

[கங்கைக்கு மறுகரையிலே பாரநகோரிலிருந்து சில மைல்கள் தூரத்திலுள்ள ஒரு சிற்றூர் இது.]

இருவரும் நகைத்தனர்.

ம— : "உட்காரும். அதைப்பற்றியதெல்லாம் என்னிடம் சொல்லும். முதலில் நீர் எங்கே தங்கினீர் ?"

பிரசன்ன : "தக்ஷிணேசுவரக் கோயில் தோட்டத்தில் இரவை அங்கே கழித்தேன்."

ம— (சிரித்துக்கொண்டே) : "ஹாஸ்ராவின் தற்கால மன நிலை எவ்வாறு உள்ளது?"

பிரசன்ன : "ஹாஸ்ரா என்னிடம் 'என்னைப்பற்றி யாது நினைக்கிறாய்?' என்று கேட்டார்."

இருவரும் நகைத்தனர்.

ம— (புன்சிரிப்போடு) : "நீர் என்ன பதில் அளித்தீர்?"

பிரசன்ன : "நான் ஒன்றும் கூறவில்லை."

ம—: "பிறகு?"

பிரசன்ன : "நான் அவர்க்காகப் புகையிலை கொணர்ந்தேனே என்று அவர் என்னைக் கேட்டார்."

இருவரும் நகைத்தனர்.

பிரசன்ன: "அவர்க்குக் கையாளாயிருக்குமாறு என்னை வேண்டினார்." (சிரித்தல்)

ம—: "அதன்பின் எங்கே சென்றீர்?"

பிரசன்ன : "மெல்ல மெல்ல யான் கொன்னகர்க்குச் சென்றேன். இரவை வெட்ட வெளியிற் கழித்தேன். பின்னும் பிரயாணஞ்செய்யக் கருதி வடநாட்டுக்குச் செல்ல, ஒரு ரயில்வே 'டிக்கட்டு' (சீட்டு) வாங்கப் போதிய பணம் அங்கே என்னுல் சேகரிக்க முடியுமா என்று சில சீமான்களைக் கேட்டேன்."

ம— : "அவர்கள் என்ன கூறினர்?"

பிரசன்ன : "அவர்கள் 'உமக்கு ஒரு ரூபாயோ கூடவோ கிடைக்கலாம். ஆனுல் யார் உமக்கு முழுத்தொகையையும் கொடுப்பார்?' என்று சொன்னர்கள்."

இருவரும் நகைத்தனர்.

ம— : "உம்மோடு எடுத்துக்கொண்டு சென்ற பொருள்கள் எவை?"

பிரசன்ன: "ஒன்றிரண்டு துணிகளும், குருதேவரது படமும். யான் எவரிடமும் அப்படத்தைக் காட்டவில்லை."

சசியின் தகப்பனர் மடத்திற்கு வந்தார். அவர் தமது குமாரரை வீட்டிற்கு அழைத்துச் செல்ல விரும்பினர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் நோயுற்றிருந்தபோது, சசி ஒன்பது மாத காலம் வழுவாத ஊக்கத்தோடு அவர்க்கு அருகிருந்து நோய்க்கு வேண்டியன இயற்றி வந்தார். தமது புலமையின் திறமைக்காகப் பிரவேசப் பரீக்ஷையில் உதவிச் சம்பளம் ஒன்றையும் பெற்றிருந்தார். பி. ஏ., வரை படித்திருந்தார், ஆனுல் பரீக்ஷைக்கு அவர் எழுதவில்லை. ஏழை அந்தணரான அவரது தந்தையார் வைதிக சிரத்தை வாய்ந்த ஓர் இந்து! தமது காலத்திற் பெரும்பகுதியை ஞான சாதனத்திற் கழித்தார். சசி அவரது

மூத்த குமாரர். கல்வி கற்று முடித்தபின் அக்குமாரர் பொருள் தேடி, குடும்பத்தின் பணச் சங்கடங்களையெல்லாம் தீர்ப்பார் என்று, அவருடைய பெற்றோர் நம்பியிருந்தனர். ஆனால் சசியோ இறைவனைத் தரிசித்தற்காக இல்வாழ்வைத் துறந்துவிட்டார், அவர் தமது தந்தையாரையும், அன்னையாரையும் பற்றி நினைக்கும்போதெல்லாம், அவரது நெஞ்சத்தைக் கூரிய பெருந்துயரம் குடைய லாயிற்று. பலமுறை அவர் தமது நண்பர்களிடம் கண்ணீர் பெருக்கிக்கொண்டே பின்வருமாறு கூறினர்; "எனது கடமையைப்பற்றி மனம் குழம்புகிறது. அந்தோ! என் பெற்றோர்க்குப் பணிசெய்ய எனக்கு இயலாது போயிற்றே! யான் அவர்கட்கு ஒரு சிறிதும் பயனற்றவனானேன். அவர்கள் என்மீது எவ்வளவு பெரு நம்பிக்கை வைத்திருந்தனர்! எமது வறுமை காரணமாக எனது அன்னையார் யாதொரு நகையும் அற்றவரானார். அவர்க்குச் சில நகைகளை அணியும் ஆசையை நான் பேணி வளர்த்தேன். ஆனால் இப்போதோ என் நம்பிக்கைகள் எல்லாம் பாழாயின! வீட்டுக்குத் திரும்புதலும் எனக்கு இனி முடியாத காரியம். எனது குருநாதர் காம—காஞ்சனங்களைத் துறக்குமாறு எனக்குக் கூறினர். யான் வீட்டுக்குத் திரும்புதல் இனி இயலாதுதான்."

ஸ்ரீ ராமகிருஷ்ணர் மறைந்தபின், சசி தமது குடும்பத்திற்குத் திரும்ப வந்து விடுவார் என்று அவரது தந்தையார் எதிர்பார்த்திருந்தனர். குமாரர் சில நாள் வீட்டில் தங்கவும் செய்தார்; ஆனால் மடம் புதிதாக ஏற்படுத்தியபின் அவர் அங்கே அடிக்கடி செல்லத் தொடங்கினர். சில நாள்கட்குப் பின் மடத்து சாதுக்களில் ஒருவராக அங்கேயே வாழத் தீர்மானித்துவிட்டார். இடையிடையே அவருடைய தந்தையார் அவரை வீட்டுக்கு வருமாறு தூண்டுவதற்காக மடத்திற்குச் செல்வதுண்டு; ஆனால் அவர் அக்காரியத்தில் வெற்றி பெறவில்லை.

இன்று, தமது தந்தையார் வந்திருப்பதை அறிந்ததும் சசி வேறொரு வாசல் வழியாக மடத்தைவிட்டு ஓடிவிட்டார். தந்தையாரைச் சந்திப்பதில் அவர்க்கு விருப்பமில்லை.

சசியின் தந்தையார்க்கு ம—வைத் தெரியும். அவர்கள் இருவரும் மேல் தாழ்வாரத்தில் சேர்ந்து உலாவிக்கொண்டே பேசினர்.

சசியின் தந்தையார்: "இவ்விடத்திற்கு அதிகாரி யார்? நரேந்திரரே சேட்டைக்கெல்லாம் காரணமாவார். சிறிது காலம் இந்த இளைஞர் யாவரும் வீட்டுக்குத் திரும்பி, தங்கள் பாடங்களைப் படிப்பதில் ஈடுபட்டிருந்தனர்."

ம—: "இங்கே எஜமானர் எவரும் இல்லை. அவர்கள் அனைவரும் சமமானவர். நரேந்திரர் என்ன செய்யமுடியும்? எவனாவது தனது சொந்த இச்சைக்கு மாறுக வீட்டைத் துறந்துவிடக் கூடுமா? உதாரணமாக இல்லறத்தாராகிய யாம் நமது இல்வாழ்வை முற்றும் விட்டுவிட வல்லவராயுள்ளோமா?"

சசியின் தந்தையார்: "நீர் செய்வது சரியானதே. நீர் உலகத்திற்கும் இறைவற்கும் ஒரே சமயம் பணி செய்து வருகிறீர். உமது முறையைப் பின்பற்றி ஒருவர் ஞானம் பழக இயலாதா? இதைத்தான் சசி செய்யவேண்டும்

என்பது எமது பிரியம். அவன் வீட்டிலே வாழட்டும். இங்கும் வந்து போகட்டும். அவனது அன்னை அவனுக்காக எவ்வளவு அழுகிறாள் என்பதை உம்மால் நினைக்க முடியாது.''

ம— துயரமுற்று ஒன்றும் பேசாதிருந்தார்.

சசியின் தந்தையார்: '' சாதுக்களைத் தேடவேண்டுமென்று நீர் சொல்லு வீராயின், நல்ல சாது ஒருவரைக் கண்டுபிடிக்கும் இடம் யான் அறிவேன். சசி அவரிடம் செல்லட்டும்.''

ராக்காலும் ம—வும் காளியின் அறைக்குக் கிழக்கேயுள்ள தாழ்வாரத்தில் உலவிக்கொண்டிருந்தனர்.

ராக்கால் (சிரத்தையோடு): ''ம—, நாம் சாதனம் பழகுவோம்! யாம் இல்வாழ்வைக் கடைசி முறையாகத் துறந்துவிட்டோம். 'இல்லத்தைத் துறந்தும் நீங்கள் ஈசனது தரிசனம் பெறவில்லையே; பின்னை ஏன் இவ்வளவு ஆர்ப் பாட்டம்?' என்று யாரேனும் கேட்கும்போது, நரேந்திரர் நன்றாக எதிர்த்துப் பதிலுரைப்பர். 'யாம் இறைவனைக் காணப் பெறவில்லையாயின், மக்களைப் பெறுதலும் கட்டாயமோ?' என்று அவர் இடித்துரைப்பர். ஆ! இடை யிடையே நரேந்திரர் எவ்வளவு அழகான பொருள்களைக் கூறுகின்றனர். நீர் அவரையே கேட்டல் மிக நன்று.''

ம—: ''நீர் கூறுவது உண்மையே. நீரும் ஈசனைக் காணத் துடிப்பதை யான் காண்கிறேன்.''

ராக்கால்: ''ம—, எனது மனநிலையை யான் எவ்வண்ணம் உரைப் பேன்? இன்று உச்சிவேளையில் நருமதையைச் சாரும் பேரவா என் உள் ளத்து எழுந்ததை உணர்ந்தேன். ம—, தயவுகூர்ந்து சாதனம் பழகும்; பழகாவிடின் நீர் வெற்றி பெறமாட்டீர்.

''ஒருமங்கையின் முகத்தைப் பாராதிருத்தலே போதுமெனப் பலர் நினைக்கின்றனர். மங்கையைக் கண்டதும் விழிகளைத் தரைமீது திருப்புவதனால் மட்டும் நீர் யாது பெறுவீர்? நரேந்திரர் நேற்றிரவு மிக நன்றாக அக்கருத்தை வெளியிட்டார்; 'காமம் உள்ளவரைதான் ஓர் ஆணுக்குப் பெண் இருப்பது தோன்றும். காமம் நீங்கும்போது, ஆண்-பெண் வேறுபாடு அவனுக்குத் தோன்றாது' என்றார் அவர்.''

ம—: ''அது எவ்வளவு உண்மை! ஆண்-பெண் வேறுபாடு குழந்தை கட்கு இல்லையே.''

ராக்கால்: ''ஆதலால் ஞானசாதனம் பழகுதல் நமக்குக் கட்டாயம் என்பேன். மாயைக்கு அப்பாற் செல்லாது ஒருவன் ஞானம் பெறமுடியுமா?

''பெரிய அறைக்கு யாம் செல்வோம். சில பிரபுக்கள் பாரகோரிலிருந்து வந்துள்ளனர். நரேந்திரர் அவர்களோடு பேசிக் கொண்டிருக்கிறார். நாம் அங்கே சென்று அவர் கூறுவதை உற்றுக்கேட்போம்.''

ம—அறைக்குட் புகவில்லை. அவர் வெளியே உலவிக்கொண்டிருந்த போதே, அவரது சம்பாஷணையிற் சிறிது அவரது காதில் விழலாயிற்று.

நரேந்திரர்: "சந்தியா முதலான வழிபாடுகட்குக் குறிப்பிட்ட காலமோ இடமோ இல்லை."

பிரபு: "ஐயன்மீர், ஞானசாதனம் பழகுவதனால் மட்டும் ஒருவன் ஈசுவர தரிசனம் பெறக் கூடுமா?"

நரேந்திரர்: "தரிசனம் இறைவனது அருளைப் பொறுத்தது; அது வின்றி வெறும் பூஜையும் பிரார்த்தனையும் சற்றும் பயன்படா. ஆதலால் இறை வனிடம் சரணம் புகுதல் வேண்டும்."

பிரபு: "நாங்கள் இடையிடையே இங்கு வந்து, தங்கட்குத் தொந்தரவு கொடுக்கலாமோ?"

நரேந்திரர்: "உங்கட்குப் பிரியம் இருக்கும்போதெல்லாம் வாருங்கள். நாங்கள் நீராடுவது கங்கையிலே உமது 'கட்டத்திலே' (துறையிலே) தான்."

பிரபு: "அதை நான் பொருட்படுத்தவில்லை. ஆனால் பிறரும் அத் துறையை உபயோகியாது பார்த்துக்கொள்ளுங்கள்."

நரேந்திரர்: "நாங்கள் உமது துறையைப் பயன்படுத்தோம், உமது கருத்து அதுவாயின்."

பிரபு: "அன்று, எனது கருத்து அதுவன்று. ஆனால் பிறர் அதை உபயோகப்படுத்தக் காண்பீர்களாயின், நீங்கள் போகாதிருப்பது மிக நன்று."

பொழுது கருகும் வேளை. மாலைப் பூஜை முடிந்துவிட்டது. அவர்கள் பெரிய அறையில் கூடினர். ம—வும் அங்கே அமர்ந்திருந்தனர். பிரசன்ன 'குரு கீதை'யினின்றும் சில பாடல்களை வாசித்துக்கொண்டிருந்தனர்.

நரேந்திரர் பாடலானார்:

பிரமா னந்த சொரூபியாய் ஞான முக்தி ஸாரமதாய்
பரமா னந்தந் தருவோராய் ஆகா சம்போற் பரந்தவராய்
அருமா மறையின் முடிய:தாய் சுத்த நித்ய நிரஞ்சனராய்
ஒருமா சாக்ஷி குணங்கடந்த அதீத குருவை வணங்குவனே

நரேந்திரர் தமது இனியகுரலிற் பாடினமையால், அடியார்களின் உள்ளங்கள் காற்றில்லாத இடத்துள்ள வத்திச் சுடர்போல, அமைதி யாயின. ராக்கால் காளியின் அறையில் அமர்ந்திருந்தார். பிரசன்ன அவரருகே அமர்ந்திருந்தார். ம—வும் அங்கே இருந்தார்.

ராக்கால் தமது மனைவியையும் குழந்தையையும் பின்னேவிட்டு, உலக வாழ்வைத் துறந்திருந்தனர். தீவிர வைராக்கியம் எனும் தீ அல்லும் பகலும் அவரது நெஞ்சத்துக் கொழுந்து விட்டெரியலாயிற்று. அவர் தனியே நருமதை யின் கரைக்கோ வேறெருரு புண்ணிய தலத்திற்கோ போவதாக ஆழ்ந்த

யோசனையோடு தீர்மானித்துக் கொண்டிருந்தார். எனினும் பிரசன்னனை மடத்தைவிட்டு ஓடாதிருக்குமாறு தூண்ட முயன்று கொண்டிருந்தார்.

ராக்கால் (பிரசன்னனிடம்): "உனக்கு எங்கே செல்ல விருப்பம்? இங்கே சாதுக்களோடு சேர்ந்து நீ வாழ்கின்றனை. அவர்களைப் பிரிந்து செல்லுதல் பேதமையன்றே? நரேந்திரரைப் போன்ற வேறொருவரை நீ எங்கே காணப்போகின்றனை?"

பிரசன்னன்: "என் பெற்றோர்கள் கல்கத்தாவில் வாழ்கின்றனர். அவர்களுடைய அன்பால் இழுக்கப்படுவேனோ என்று அஞ்சுகிறேன். இக்காரணம் பற்றியே தொலையிலுள்ள ஓரிடத்திற்கு ஓட எனக்கு விருப்பம்."

ராக்கால்: "குருதேவரைப்போல அவ்வளவு தீவிரமாக நமது பெற்றோர்கள் நம்மை நேசிக்கமுடியுமா? இந்த அன்பையெல்லாம் பெறும் தகுதியை அடைய நாம் அவர்க்கு என்ன செய்துள்ளோம்? நமது உடல் உள்ளம் உயிர் மூன்றின் நலத்தையும் நாடுவதில் அவர் அவ்வளவு ஆவலாயிருப்பானேன்?"

ம— (தமக்குள்): "ஆ! ராக்கால் கூறியது உண்மையே. இதனாலன்றே ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் போன்ற ஒருவர் 'காரணங் கருதாத கருணைக்கடல்' என்று வருணிக்கப் படுகின்றனர்?"

பிரசன்னன் (ராக்காலிடம்): "இவ்விடத்தைவிட்டு ஓடிவிடவேண்டும் என்பது போன்ற உணர்ச்சி உமக்கும் உண்டாகவில்லையா?"

ராக்கால்: "நருமதை ஆற்றின் கரையிலே சிலநாள்களைக் கழிக்க வேண்டும் என்ற ஒரு எண்ணம் இடையிடையே எனக்கும் உண்டாகிறது. 'அம்மாதிரியான ஓரிடம் சென்று, ஒரு தோட்டத்தில் சாதனம் பழகட்டும்' என்று எனக்குள்ளே சொல்லிக்கொள்கிறேன். ஆனால் உலகப்பற்றுள்ள மக்கட்குச் சொந்தமான ஒரு தோட்டத்தில் வாழ என் மனம் தயங்குகிறது."

தாரக் பிரசன்னன் இருவரும் பெரிய மண்டபத்தில் பேசிக்கொண்டிருந்தனர். தாரக் தமது அன்னையை இழந்திருந்தார். அவரது தந்தையாரும், ராக்காலின் தந்தையாரைப்போல், இரண்டாம் மணம் புரிந்துகொண்டனர். தாரக் என்பவருக்கும் மணம் ஆகியிருந்தது; ஆனால் தமது மனைவியை இழந்துவிட்டனர். இப்போது மடமே அவர்க்கு வீடு. அவரும் பிரசன்னனை அங்கே வாழும்படித் தூண்ட முயன்றுகொண்டிருந்தனர்.

பிரசன்னன்: "என்னிடம் ஞானமுமில்லை, பக்தியுமில்லை. எனக்கு ஆதாரமாக உலகில் யாது உள்ளது?"

தாரக்: "ஞானம் பெறுவது அரிது என்பதில் ஐயமில்லை; ஆனால் உன்னிடம் பக்தி யில்லை என எவ்வாறு கூற முடியும்?"

பிரசன்னன்: "இறைவனுக்காக யான் இதுவரை அழுததறியேன். என்னிடம் பக்தி உள்ளது என்று எப்படிக் கூற இயலும்? இத்தனை நாளும் யான் பெற்ற அனுபூதி யாது?"

தாரக்: "ஆனல் நீ குருதேவரைக் கண்டுள்ளனையே; அதன் பின்னும் உன்னிடம் ஞானம் இல்லையென ஏன் கூறுகின்றனை?"

பிரசன்னு: நீ பேசுவது எவ்வகை ஞானத்தைப்பற்றி? எதைப்பற்றிய ஞானம்? நிச்சயமாய் இறைவனைப்பற்றியதுதான். ஆனல் எனக்கு ஈசனின் இருப்பைப்பற்றிய உறுதியும் இல்லையே."

தாரக்: "ஆம், அது உண்மையே. ஞானிக்கு ஈசன் இல்லை."

ம— (தமக்குள்ளே): "இறைவனை நாடுவார் பிரசன்னுவுக்கு இப்போது அனுபவமாயுள்ள நிலைவழியே செல்கின்றனர் என்று குருதேவர் கூறுவது உண்டே. அந்நிலையில் சிலசமயம் ஒருவற்கு ஈசனது உண்மையைப் பற்றிய சந்தேகமும் உண்டாகிறது. தாரக் பௌத்த சித்தாந்தத்தை இப்போது வாசித்து வருவதாக நான் அறிகின்றேன். ஞானிக்கு ஈசன் இல்லை என்று அவர் கூறும் காரணம் அதுவே. ஆனல் ஞானியும் பக்தனும் கடைசியாக ஒரே முடிவான இடத்தை அடைவர் என்று ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வதுண்டு."

நரேந்திரரும் பிரசன்னுவும் தியான அறையில் பேசிக்கொண்டிருந்தனர். ராக்கால், ஹரிஷ், இளைய கோபால் மூவரும் அறையின் வேறொரு பகுதியில் அமர்ந்திருந்தனர். சிறிது நேரம் சென்றபின் மூத்த கோபால் உள்ளே வந்தனர்.

நரேந்திரர் கீதாசுலோகங்களை வாசித்து, அவற்றைப் பிரசன்னுவுக்கு விளக்கிக் கொண்டிருந்தார்:

"இறைவன் எல்லா உயிர்களின் இருதயங்களிலும் வாழ்கின்றன், அருச்சுன, தனது மாயையால் அவன் எல்லா உயிர்களையும் சக்கரத்தில் ஏற்றப்பட்டுள்ளன போலச் சுழற்றுகிறன். பாரதா, முழுமனதோடும் அவனையே சரணெய்து. அவனருளால் பரம சந்தியாகிய நித்திய ஸ்தானத்தை அடைவாய். எல்லா அறங்களையும் விட்டுவிட்டு என்னையே சரண்புகு. எல்லாப் பாவங்களினின்றும் நான் உன்னை விடுவிக்கிறேன்; துயரப்படாதே."

நரேந்திரர்: "கிருஷ்ணன் கூறியதைக் கவனித்தாயா? 'சக்கரத்தில் ஏற்றப் பட்டுள்ளன'—பகவான் தமது மாயையால் எல்லா உயிர்களையும் சக்கரத்தில் ஏற்றப்பட்டுள்ளன போலச் சுழலச் செய்கிறர். பகவானை அறிய நாடுவதோ? நீ புழுக்களுள்ளே ஓர் அற்பப் புழுத்தானே—நீயா பகவானை அறியப் போகின்றனை? ஒரு கணம் சற்றே சிந்தித்துப் பார்; மனிதன் எம் மட்டும்? தலைக்கு மேலே வானில் ஒளிரும் கணக்கற்ற நக்ஷத்திரங்களில் ஒவ்வொன்றும் ஒரு சூரிய மண்டலத்தைக் குறிக்கின்றது. நமக்குரிய இப்பூமி ஒரு சூரிய மண்டலத்தின் ஒரு பகுதியே யாகும்; அதுவும் நமக்கு அளவுக்கு மிஞ்சிப் பெரிதாகும். ஒரு புழுவைப்போன்று மனிதன் இப்பூமியின்மீது ஊர்ந்து செல்கின்றன்; இப்புவியோ சூரியனோடு ஒப்பிடும்போது ஒரு சிறு பந்தே யாகும்."

நரேந்திரர் பாடலானார் :

இங்நிலத்து மண்ணிலே யாம்பிறந்தோம், எம்விழியை
மன்னிய தூளே மறைத்திடுமால்—இன்னும்
புழுதியோ டாடல் புரிந்திடுவோம், சேய்போல்
பழுதறியோம் ஈசாஇப் பாரில்—எழஅறியாத்
தீனர் தமக்குற்ற சீரார் துணையேயாம்
ஈனர், எமக்குறுதி ஈ.

ஒருபிழைக்கா எம்மை உனதுமடி நின்றும்
தெருவிலெறி வாயோ திறலோய்—திருமுகத்தை
வேறு புறந்திருப்பி மீளாத நிர்க்கதிக்கே
சீறியெமைத் தள்ளுவையோ செய்வாயேல்—ஊறெமக்கே?
உய்ந்திடவே மாட்டோம் ஒருகாலும் ; பேதுற்று
நய்ந்தே கிடந்திடுவோம் நாம்.

அந்தோ குழவியர்யாம் அவ்வுளத்தோம், வைக்கினடி
எந்தாய் இடறிவிழுந் தேங்குவோம்—நொந்தார்க்கே
கோரமுகங் காட்டுவதேன் கோபக் குறியெமக்கெந்
நேரமும் வேண்டுங்கொல் நிகழ்த்து.

சிறியர்யாம் எம்பால் சினங்கொள்ளேல் மீறிச்
செறுபிழையைச் செய்திடினும் சீரு—திறைவாநீ
இன்சொல் இயம்பி(டு) எமைத்தூக்கி நூறுமுறை
நன்கு நிறுத்திடினும் நாம்பின்னும்—நின்கண்முன்
நூறு முறைவீழ்வேம் நொய்ம்மை மனத்தார்க்கு
வேறுசெய லுண்டோ வீளம்பு.

[ஆடல் - விளையாடல். சேய் - குழந்தை. பழுது - குற்றம். ஈனர் - ஒன்றுமற்றவர். ஈ - தா. திறலோய் - வலிமையுடையவனே. ஊறு எமக்கே - எமக்கே தீங்கு. பேது - மயக்கம். குழவியர் - குழந்தைகள். அவ்வுளத்தோம் - குழந்தைக்குரிய மனமுடையோம். எந்தாய் - தந்தையே. வேண்டுங்கொல் - வேண்டுமோ. நிகழ்த்து - சொல்லு. சீறுது இறைவா நீ என்று பிரிக்க. நொய்ம்மை - பலவீனம்.]

பிறகு அவர் பிரசன்னாவிடம் "நீ இறைவனது திருவடியிலே சரணம் புகுந்து விடு. அவனது திருவுளப்படியே நடக்கட்டும் என்று முழுவதும் உன்னை அவனிடமே ஒப்புவித்து விடு" என்று சொன்னார்.

"ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய மொழிகள் உனக்கு நினைவில்லையோ? பகவான் சர்க்கரைக் குன்று; நீ ஓர் எறும்பே. உன் வயிறை நிரப்ப ஒரு துகள் (பொடி) போதுமே: ஆயினும் முழுக்குன்றையும் வீட்டுக்குக் கொணர நினைக்கின்றனை! இக்காரணத்தினாலேதான் நான் காளியையும் கண்டித்து 'அறிவற்றவனே, உனது அங்குல நாடாவையும் அடிக்குச்சியையும் கொண்டு, கடவுளை அளக்க நினைவோ?' என்று கேட்டேன்.

"பகவான் கருணைக்கடல். அவருக்கு அடிமை யாகி, அவரிடம் அடைக் கலம் புகுக. அவர் மனமிரங்குவார். "நினது கருணை முகத்தாலே என்னை எப்போதும் காத்துவா. பொய்யினின்றும் மெய்க்குச் செலுத்து. இருளினின் றும் ஒளிக்குச் செலுத்து. சாவினின்றும் சாவாமைக்குச் செலுத்து. உன்னை எனக்குக் காட்டி யருள்க. உனது கருணை முகத்தாலே எப்போதும் என்னைக் காத்துவா" என்று அவரிடம் பிரார்த்தனை செய்க."

பிரசன்ன : "ஒருவன் பழக வேண்டிய ஞான சாதனம் யாது?"

நரேந்திரர் : "அவரது நாமத்தை ஓதுக."

பிரசன்ன : "இப்போது நீ இறைவன் உளன் என்று சொல்லிக்கொண் டிருக்கிறாய். மறு முறையில், சார்வாகர் முதலான பல அறிஞர்களுடைய கொள்கைப்படி உலகம் தானாகவே உண்டாயது என்று நீயே சொல்கின்றனை."

நரேந்திரர் : "நீ ரசாயன நூல் கற்றிருக்கவில்லையோ? பற்பல மூலப் பொருள்களை இணைந்து ஒன்றாகச் செய்வது ஏது? நீர்வாயு, உயிர்வாயு, மின் சாரம் இம்மூன்றையும் ஒன்றாக இணைத்து நீரை உண்டாக்குவது, ஒரு மனித னுடைய கையே. அறிவோடு கூடிய ஒரு சக்தியின் இருப்பை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர்; ஞானமய மாவதும், எல்லா நிகழ்ச்சிகளையும் நடத்தி வைப்பதும் அச்சக்தியே."

பிரசன்ன : "பகவான் அன்புடையவர் என்பதை நாம் அறிவது எப்படி?"

நரேந்திரர் : "வேதங்களே 'உனது கருணை முகம் எதுவோ' என் கின்றன. ஜான் ஸ்டுவர்ட் மில் என்பவரும் அதையே கூறினர். 'மனிதரின் நெஞ்சங்களிலே அன்பை நிலை நாட்டியுள்ள அந்த இறைவனிடம் எவ்வளவு கருணை இருத்தல் வேண்டும்?' என்றார் அவர். குருதேவரும் 'நம்பிக்கையே இன்றியமையாதது. பகவான் உளர். அவர் நமக்கு மிக அருகே உளர். நம்பிக் கையின் மூலமே அவரை ஒருவன் காண்கிறான்' என்று சொல்வதுண்டு.

பிரசன்ன : "சில சமயங்களில் பகவான் இல்லை என்று நீ சொல் கிறாய்; இப்போதோ இவற்றையெல்லாம் நீ சொல்லி வருகிறாய்! உனது வார்த்தைகள் முன்பின் ஒத்திருப்பதில்லை. நீ உனது அபிப்பிராயங்களை மாற் றிக்கொண்டு வருகின்றனை."

அனைவரும் சிரித்தனர்.

நரேந்திரர் : "நிரம்ப சரி! இப்போது நான் சொல்லியதை இனி ஒருக் காலும் மாற்றமாட்டேன். ஒருவனுக்கு ஆசைகளும் விருப்பங்களும் உள்ள வரை, அவனுக்குக் கடவுளது இருப்பைப் பற்றிய சந்தேகமும் இருக்கும், ஒரு மனிதன் ஏதாவது ஓர் ஆசையைப் போற்றி வருகிறான். கற்கவோ, பல்கலைக் கழகப் பரீக்ஷையில் தேறவோ, ஒரு பண்டிதனாகவோ, இம்மாதிரியான வேறொன் றிலோ ஒருக்கால் அவனுக்கு ஆசை உள்ளது."

நரேந்திரர் உணர்ச்சி பொங்கிய நிலையில் தழுதழுத்த குரலில் மறுபடியும் பாடலானார் :

வாழிஎம் ஈசா! வாழியெந் தலைவா !
பேரெவ் வொன்றும், பெருநலம் யாவும்
மாரு தருள்வோய், வாழிநீ! வெல்க !
அச்சமும் துயரும் ஆபத் துந்தீர்த்
தெச்சம யும்உய் வளித்திடும் எந்தாய்!
உலகமும் புரப்பாய் ! இலகுநின் வெற்றி !

அகாத அகண்ட அளவிலரய் ஒப்பிலாய்
மகாஉல கேச மாநிலத் துனக்கிணை
உண்டோ ஒருவர்! அண்டம் பரந்தமெய்ப்
பொருளே; ஜெயஜெய; பரமான் மாவே!

உலகெலாம் புகழும் உத்தமக் கருணைசேர்
வடிவாய் வந்தோய் அடிபணி குவன்யான்
வாழ்விலும் சாவிலும் வாய்க்கும் என்புகலே
தாழ்ந்தடி பணிகுவன் வாழ்கநீ வெல்க,

வேண்டுவ தீதே; வேறெரு வரம்யாம்
யாணடும் வேண்டேம் ; இதுவே வேண்டுவம்:
இம்மைமெய்ஞ் ஞானமும் அம்மையில் நின்திரு
வடிவக் காட்சியும் வழங்கி யருள்க.
முடிவிலாய். வெல்க! முதல்வா, வாழ்க !

[இலக - விளங்குக. அகாத - மிக்க ஆழம் உடையவனே. பணிகுவன் - பணி வேன். யாண்டும் - எப்போதும்.]

மறுபடியும் நரேந்திரர் பாடலானார் : பகவான் நமக்கு மிக அருகே இருப் பதை—கஸ்தூரிமானுக்கு அருகே கஸ்தூரி இருப்பதுபோல்—எடுத்துரைத்து, தமது சகோதர சீடர்களைப் பரமானந்தத்தை நிறையக் குடிக்குமாறு பாடலில் வேண்டினார் :

பிரேமையெனும் கிண்ணமதில் பெருகியுள அரியின்பம் பருகி, அன்ப !
வருவெறியில் மூழ்கிடுக ; மதலையெனும் பருவமதை அழுகை தன்னில்,
மருவிளமை மாதர்வசம் கழித்தனீ ; வாயுகபம் மலியும் மூப்பில்
ஒருசுடலை நண்ணுதற்காப் பிணப்படுக்கை எதிர்நோக்கி உலவு வாயால்,

கத்தூரி தன்உந்தி கமழ்ந்திடினும் மானறியச் செய்வார் உண்டோ ?
அத்தகையே மனிதனும்அழைத்தேக வழிகாட்டி, அறிவு றுத்தச்
சுத்தசற் குருவொருவர் துணையின்றேல் திரிகுவனுல் புவியின் மீதே,
மெத்தமயங் கியநான மிருகமது கானமெலாம் சுழல்வ தேபோல்.

[அரி - விஷ்ணு. மதலை - குழந்தை. சுடலை - சுடுகாடு. உந்தி - நாபியில். இன் றேல் - இல்லையாயின். திரிகுவன் - திரிவான். நானம் - கத்தூரி. மிருகம் - மான்.]

ம—இதையெலாம் தாழ்வாரத்திலிருந்தே கேட்டனர்.

நரேந்திரர் எழுந்தார். அறையைவிட்டுச் செல்லும்போதே "இந்த இளைஞர்களோடு பேசியதால் என்மூளை கொதிப்படைந்து விட்டது" என்று குறை கூறினர்.

அவர் ம—வைத் தாழ்வாரத்தே கண்டு, "எனக்குக் குடிக்கத் தண்ணீர் தருவீரோ?" என்றனர்.

மடத்து சாதுக்களில் ஒருவர் நரேந்திரரிடம் "கடவுள் இல்லையென்று நீர் இன்னும் கூறுவதேன்?" என்றனர்.

நரேந்திரர் சிரித்தனர்.

திங்கள், மே 9. 1887

மறுநாட்காலை ம—மட்டும் தனியே தோட்டத்திலுள்ள மரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர் தமக்குள்ளே சொல்லிக் கொண்டதாவது: "மடத்து சாதுக்களைக் காமம் பொருளாசை இரண்டையும் துறக்கும்படி ஸ்ரீராம கிருஷ்ணர் செய்துவிட்டனர். பகவானைத் தரிசிப்பதில் அவர்கள் எவ்வளவு ஆவலாயுள்ளனர்! இவ்விடம் உண்மையாகவே பரமபதம் ஆகிவிட்டது; இங்கே வாழும் சகோதரர்கள் நாராயணவடிவமானவர். குருதேவர் மறைந்து, இன்னும் பல நாள்கள் ஆகவில்லை; அக்காரணத்தால் அவர் கொண்ட கருத்துக்களும் இலக்ஷியங்களும் அவ்வண்ணமே இங்கு மாறுதுள்ளன. ஒரு சிலரை அவர் உலகவாழ்விலே புகுத்தி வைத்துள்ளனரே, அது ஏன்! அவர்கட்குக் கதிபெற வழியில்லையோ?"

மாடியிலுள்ள அறையிலிருந்து நரேந்திரர் மரத்தடியில் தனியாக அமர்ந்திருக்கும் ம—வைக் கண்டார், அவர் கீழே இறங்கினர்.

நரேந்திரர்: "உலகிலே பற்றற்ற வாழ்வை நடத்துவதையும் பிறவற்றையும் பற்றி நீர் பேசலாம்; ஆனலும், காம காஞ்சனத் தியாகம் இல்லாது நீர் ஒன்றையும் பெறமாட்டீர். வேதாந்த போதனைகளில் அகமகிழாதும், பிரம்மானந்த அமுதத்தைக் குடியாதும் இருக்கும் ஒரு மனிதனது வாழ்க்கை வீணேயாகின்றது. சன்னியாசிக்குரிய ஒரு கௌபீனத்தை அணியாத மனிதனுக்கு முக்தி யடைதல் இயலாது. உலகம் துறக்கப்படவேண்டும். ஒரு மனிதன் உலகப்பற்றில் ஏன் சிக்கிக்கொள்ளவேண்டும்? மாயை வலையில் அவன் ஏன் மாட்டிக்கொள்ள வேண்டும்? மனிதனது உண்மையான சொரூபம் யாது? அவன் மங்களமான சிவனே, ஆனந்தமும் சைதன்யமும் உருவாகி வந்தவன்."

நரேந்திரர் கிருஷ்ணஷ்டகம் (கிருஷ்ண பகவானது வைபவத்தைப் பற்றிய எட்டுப் பாடல்கள்) எனும் தோத்திரத்தைப் பாடினர். ம— அதைக் கவனித்துக் கேட்டவாறே மந்திரத்தாற் கட்டுண்டவர்போல் இருந்தார். அவர் தமக்குள்ளே சொல்லிக்கொண்டதாவது: "நரேந்திரரது வைராக்கியம் எவ்வளவு தீவிரமாயுள்ளது! மடத்திலுள்ள மற்ற சகோதரர்களுடைய நெஞ்சங்களில் வைராக்

கியத் தீயை அவர் மூட்டியதும் இவ்வாறே. அவர்களுடைய முன்பே இருப்ப தனால் மட்டும், குருதேவருடைய இல்லற அடியார்களின் உள்ளங்களில் காம காஞ்சனத் தியாக ஆசை உதிக்கின்றது. இம்முற்றத் துறந்த சகோதரர்கள் எவ்வளவு பாக்கியசாலிகள்! குருதேவர் எம்மைப்போன்ற சிலரை உலக வாழ்வில் வைத்திருப்பதேன்? எங்கட்கு அவர் ஒரு வழி காட்டுவாரா? எங்கட்கு வைராக்கிய மனப்பான்மையை அவர் அளிப்பாரா? அன்றேல், உலகப்பற்றால் எங்களை மயக்குவாரா?"

உண்டபின் அனைவரும் இளைப்பாறிக் கொண்டிருந்தனர், மூத்த கோபால் சிலபாடல்களைப் பார்த்து எழுதிக் கொண்டிருந்தார். நிரஞ்சன் தமது தாயாரைப் பார்க்கப் போயிருந்தார். ஸரத், பலராம், காளி பூரியில் இருந்தனர்.

நரேந்திரர் ஒன்றிரண்டு சகோதரர்களோடு கல்கத்தாவிற்குச் சென்றார். தமது குடும்ப சம்பந்தமான வழக்கை (வியாஜ்ஜியத்தை) அவர் தாமே கவனித்துக் கொள்ள வேண்டியதாயிற்று. அவர் மாலையில் திரும்பி வருவதாக நினைத்திருந்தார்; சகோதரர்கள் அவரது பிரிவைப் பொறுக்கமாட்டாதவரானார்.

பிற்பகலில் ரபீந்திரர் வந்து சேர்ந்தார்; அவர் தோற்றத்தில் ஒரு பைத்தியக்காரனைப் போன்றிருந்தார். அவர் வெறுங்காலோடிருந்தார், அரையில் அணிந்திருந்த கருப்புக்கரை ஆடையில் ஒரு பாதிதான் இருந்தது. அவருடைய விழிகள் ஒரு பைத்தியக்காரனுடைய விழிகளைப்போல் உருண்டு கொண்டிருந்தன. எல்லோரும் அவரைச் 'சமாசாரம் என்ன?' என்று ஆத்திரத்தோடு விசாரித்தார்.

அவர் சொல்வார்: "எனது மூச்சு சரியாகட்டும்! சீக்கிரம் எல்லாவற்றையும் உங்களிடம் சொல்கிறேன். நான் வீட்டுக்குத் திரும்பிப்போகவே மாட்டேன்—இது உறுதி. உங்கள் அனைவரோடும்கூட இவ்விடத்திலேயே தங்குவேன். அவள் உண்மையாகவே துரோகிதான்! தோழர்களே, உங்களிடம் ஒன்று சொல்லுகிறேன். ஐந்து ஆண்டுகளாக என்னிடமிருந்த குடிக்கும் பழக்கத்தை யான் அவட்காக நிறுத்திவிட்டேன். சென்ற எட்டு மாதங்களாக யான் ஒரு சொட்டும் குடிக்கவில்லை. ஆனால் அவள் துரோகிதான்!"

மடத்து சகோதரர்கள் 'தயவுபண்ணி அமைதியாயிரும்! நீர் எப்படி வந்தீர்?" என்று வினவினர்.

ரபீந்திரர்: "கல்கத்தாவிலிருந்து வெறுங்காலோடு நடந்து வந்தேன்."

அவருடைய ஆடையில் மறுபாதியை எங்கே இழந்தார் என்பதை அறிவதில் சகோதரர்கட்கு விருப்பம்.

ரபீந்திரர்: "நான் அவளுடைய இடத்தைவிட்டு வரும்போது, அவள் எனது துணியைப் பிடித்து இழுக்க ஆரம்பித்தாள். அதில் ஒரு பாதி இதனுற் கிழிந்துவிட்டது."

சகோதரர்கள் அவரைக் கங்கையில் நீராடிக் கொதிப்பைத் தணித்துக் கொள்ள வேண்டினர்; அதன்பின் அவரது கதையைக் கேட்பதாகக் கூறினர்.

ரபீந்திரர் கல்கத்தாவிலே ஒரு மதிப்புள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர்க்கு இருபது இருபத்திரண்டு வயதாயிருந்தது. அவர் தக்ஷிணேசுவரக் கோயிலிலே ஸ்ரீ ராமகிருஷ்ணரை முதன் முதலாகச் சந்தித்தார்; அப் பெரியாரது சிறப்பான ஆசீர்வாதத்தையும் பெற்றார். ஒரு சமயம் அவர் குருதேவரோடு மூன்று நாள் தங்கியிருந்தார், அவரது தன்மையிலே இனிமையும் மென்மையும் இருந்தன; குருதேவர் அவரைப் பிரியமாக நேசித்து வந்தார். ஒரு நாள் அவர் ரபீந்திரரிடம், "நீ சிறிது காலம் காத்திருக்கவேண்டும்; இன்னும் சில அனுபவங்களை நீ பெறத்தான்வேண்டும். இப்போது ஒன்றும் செய்ய முடியாது. திருடர்கள் ஒரு வீட்டைச் சூறையாடும்போது போலீஸ் காரர் அதிகமாகச் செய்ய முடியாது என்பது உனக்குத் தெரியுமே. கொள்ளை ஏறக்குறைய முடியும் சமயம் போலீஸ்காரர் அவர்களைக் கைதிகளாக்குவர்" என்று கூறினர்.

ரபீந்திரரிடம் பல குணங்கள் இருந்தன. அவர் கடவுளிடத்து பக்தி வாய்ந்தவர், ஏழைகட்குப் பணிசெய்வதில் ஈடுபட்டவர். அவரிடம் ஞான வாழ்விற்கு வேண்டிய குணங்கள் பல இருந்தன. ஆனால் ஒரு பரத்தையின் வலையில் சிக்கிவிட்டனர். பின்பு திடீரென அம்மாது தம்மிடம் நன்றியற்றவளானதை அவர் கண்டுகொண்டனர். ஆதலால் அவர் உலக வாழ்க்கைக்குத் திரும்பச் செல்வதில்லை என்ற உறுதியோடு, ஒழுங்கு குலைந்த நிலையிலே மடத்திற்கு வந்துவிட்டார்.

ஓர் அடியார் ரபீந்திரரோடு கங்கைக்குச் சென்றார். அங்குள்ள புனித மனிதர்களின் சேர்க்கையாலே ரபீந்திரர்க்கு ஞானம் உதயமாகவேண்டும் என்பது அவரது அந்தரங்க விருப்பம். ரபீந்திரர் நீராடி முடிந்தபின், அடியார் அருகேயிருந்த மயானத்திற்கு அவரை அழைத்துச் சென்று, அங்கே சுற்றிலும் கிடந்த பிணங்களை அவர்க்குக் காட்டி, "மடத்துச் சகோதரர்கள் பகவானைப் பற்றித் தியானம் பண்ண இடையிடையே இங்குதான் வருவர். இது தியானத்திற்கு நல்ல இடம். இங்கே உலகத்தின் அநித்தியத் தன்மையை ஒருவன் தெளிவாகக் காண்பான்" என்று கூறினர்.

ரபீந்திரர் தியானத்திற்காக மயானத்தில் கீழே உட்கார்ந்தார். ஆனால் அவரால் வெகுநேரம் தியானிக்க முடியவில்லை; அவரது மனம் சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்தது.

ரபீந்திரரும் அந்த அடியாரும் மடத்திற்குத் திரும்பினர். இறைவனை வணங்குதற்காக அவர்கள் பூஜை அறைக்குச் சென்றனர். அடியார் அவரிடம் "மடத்து சகோதரர்கள் இவ்வறையில் தியானம் செய்வர்" என்று உரைத்தார்.

ரபீந்திரர் தியானத்திற்கு அங்கே உட்கார்ந்தனர்; அங்கேயும் அதிக நேரம் தியானிக்க அவர்க்கு முடியவில்லை.

அடியார்: "உமது மனநிலை எப்படி உள்ளது? உமது மனம் இன்னும் மிகச் சஞ்சலமாய் (பரபரப்பாய்) உள்ளதோ? ஆசனத்தை விட்டு நீர் எழுந்த காரணம் அதுதானே? ஒருக்கால் உமது மனம் நன்றாக ஒடுங்கவில்லை போலும்."

ரபீந்திரர்: "உலக வாழ்க்கைக்கு இனித்திரும்பேன் என்பது உறுதி; ஆனால் மனமோ பரபரப்பாய் உள்ளது."

ம—வும் ரபீந்திரரும் பேசிக்கொண்டிருந்தனர். வேறெவரும் அங்கில்லை. புத்தரது சரித்திரத்திலிருந்து சில கதைகளை ம— அவர்க்குக் கூறிவந்தார். அக்காலம் மடத்து சாதுக்கள், புத்தர் சைதன்யர் இருவருடைய வாழ்க்கைச் சரிதங்களை ஒழுங்காக வாசித்து வந்தனர். சில தேவ மாதர்கள் பாடிய பாட்டைக் கேட்டதும் புத்தர்க்கு ஞானக்கண் திறந்தது என ம—ரபீந்திரரிடம் கூறினர்.

ம— அப்பாடலைப் பாடினார்;

அமைதிபெறப் புலம்புகின்றேம் அந்தோயாம் பெற்றிலமால்;
எங்கிருந்து வந்தோம்யாம் ஏகுவதெங் கோ அறியோம்,
நகையழுகை வட்டமிதில் நாம்சுழல்வோம் பன்முறையும்;
விழையுநெறி முடிவதெங்கே வெறும்வினையாட் டேற்றுக்கோ?
இவ்வுண்மை யறியமனம் ஏங்குகின்றேம் அதுவீணே.

[விழையும் - விரும்பும். ஏற்றுக்கோ - எதற்கோ.]

அன்றிரவு நரேந்திரர் தாரக் ஹரிஷ் மூவரும் கல்கத்தாவிலிருந்து திரும்பி வந்தனர். அவர்கள் "நாம் உண்டது எவ்வளவு பெரிய விருந்து!" என்று சொன்னர். கல்கத்தாவில் ஓர் அன்பர் அவர்கட்கு விருந்தளித்ததனர்.

மடத்து சகோதரர்கள் பெரிய அறையில் கூடினர்கள். நரேந்திரர் ரபீந்திரரது கதையைக் கேட்டனர். அவர்க்குப் புத்திமதியளிக்கும் வகையில் அவர் பின் வருமாறு பாடலானர்:

ஒழித்திடுக உன்மோகம்! ஒதுக்கிடுக தீயவுரை!
விழித்திடுக, இறையுணர்க, விடுபடுக துயரினின்றும்!
பழித்தசுகம் சின்னட்கே, பரனேநனி மறந்தனீர்,
கழித்திடுக இக்கேலி! 'கதியுயிர்க்கார்' ஆய்ந்திடுக.

[உயிருக்குக் கதி யார் என்பதை ஆராய்க.]

சில நிமிஷங்கள் கழிந்தபின், சகோதரர்கள் காளியின் அறைக்குச் சென்றனர். கிரிஷ் கோஷ் அப்போதுதான் தமது புது நூல்களில் இரண்டை மடத்திற்கு அனுப்பியிருந்தார்; அவை யாவன: 'புத்தரது சரிதை,' 'சைதன்யரது சரிதை' என்பன.

புது மடம் ஏற்பட்டது முதலே, சசி குருதேவரது பூஜைக்கும் சேவைக்குமாக முழுமனதோடும் தம்மை ஈடுபடுத்தியிருந்தனர். அவரது பக்தியைக் கண்டு அனைவரும் ஆச்சரியத்தில் மூழ்கினர். ஸ்ரீ ராமகிருஷ்ணரது தூலத் திருமேனியை

அவர் நோயால் வருந்திய காலத்துப் பாதுகாத்து வந்தது போன்று, இப்போதும் அதே மாறுத ஊக்கத்தோடு கோயிலறையிலும் அவர் குருதேவரை வணங்கி வந்தார்.

மடத்து சாது ஒருவர் புத்தர் சைதன்யர் இருவரது சரிதங்களினின்றும் சில பகுதிகளை உரக்க வாசித்துக்கொண்டிருந்தார். சைதன்யரது சரித்திரத்தை வாசிக்கும்போது அவர் ஒருவாறு கேலி பேசலானர். நரேந்திரர் அப்புத்தகத்தை அவரது கையினின்றும் பிடுங்கி, "ஒரு நல்ல பொருளை நீ இவ்வாறு கெடுக்கின்றாய்!" என்றனர்.

சைதன்யர் தமது அன்பைப் பிராமணன் முதல் பறையன்வரையிலும் அனைவரிடமும் வழங்கினர் என்பதை விரிவாக உரைக்கும் அத்தியாயத்தை நரேந்திரர் வாசித்தனர்.

ஒரு சகோதரர்: "ஒருவர் மற்றொருவர்க்கு அன்பைக் கொடுக்க முடியாது என்று யான் சொல்கிறேன்."

நரேந்திரர்: "ஆனால் குருதேவர் அதை எனக்கு அளித்தார்."

சகோதரர்: "சரி, உம்மிடம் அது இருப்பது உமக்கு உறுதிதானா?"

நரேந்திரர்: "அன்பைப்பற்றி உனக்கு என்ன அறியமுடியும்? நீ வேலைக்காரரது வகுப்பைச் சேர்ந்தவன். நீங்கள் அனைவரும் எனக்குக் குற்றேவல் செய்து என்காலைப் பிடித்துவிடவேண்டும். நீங்கள் எல்லாவற்றையும் அறிந்து விட்டதாக நினைத்துக் கொண்டு தற்புகழ்ச்சியால் மகிழவேண்டாம். இப்போது போய், எனக்குப் புகைகுடிக்க ஏற்பாடு செய்யுங்கள்."

அனைவரும் சிரித்தனர்.

சகோதரர்: "யான் நிச்சயமாக அது செய்யமாட்டேன்."

ம—(தமக்குள்ளே): "ஸ்ரீராமகிருஷ்ணர் மடத்திலுள்ள எல்லா சகோதரர் கட்கும் தைரியத்தை ஊட்டியுள்ளார். அது நரேந்திரரது தனியுரிமையன்று, இந்த அந்தரங்க ஊக்கம் இல்லாமல் காம காஞ்சனங்களைத் துறத்தல் இயலுமா?"

மே 10, 1887

அன்று செவ்வாய்க்கிழமை, தேவியை வணங்குதற்கு ஒரு மிக நல்லநாள். மடத்திலே தேவிக்குப் பூஜையைத் தனியே செய்வதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

ம— நீராடுவதற்காகக் கங்கைக்குப் போய்கொண்டிருந்தார். ரபீந்திரர் தன்னந் தனியே மாடியின்மீது உலாவிக்கொண்டிருந்தார்; நரேந்திரர் நிர்வாண ஷட்கத்தைப் பாடிக்கொண்டிருந்ததை அவர் கேட்டார்:

எனக்கொரு மரணமோ அச்சமோ அற்பமு மில்லையோர் சாதிவேற் றுமையும்
மனக்கினி தாமோர் அன்னையோ தந்தையோ மண்ணினிற் பிறவியோ இல்லை

கனக்குண நண்பனே துணைவனே இல்லை கண்ணியக் குருவோ சீடனே
தனக்கொரு நிகரிலா நித்திய போதமாம் தற்பதப் பொருளாம் சிவோஹம்.

உருவமோ கருத்தோ எனக்கிலை அனைத்தினும் உருக்கரந் தொளிர்பவன் யானே
மருவுபூ தலத்திடை எங்கணும் உளனெனி னும்புலன் எதற்குமோ எட்டான்
கருவுறு பிறப்பொரு முத்தியும் யானிலை கருத்தினுக் கெட்டுமோர் பொருளிலை
சருவுத லறியா நித்திய போதமாம் தற்பரப் பொருளதாஞ் சிவோகம்.

ரபீந்திரர் நீராடுவதற்காகக் கங்கைக்குச் சென்றார். சிறிது பொழுதில் அவர் ஈர ஆடையை உடுத்திக்கொண்டு மடத்திற்குத் திரும்பினர்.

நரேந்திரர் ம—விடம் மெல்லிய குரலில் "அவன் கங்கையில் நீராடியுள்ளான். இப்போது அவனைத் துறவு நிலைக்குட் புகுத்துவது (சன்னியாச ஆசிரமம் கொடுப்பது, நல்லதாகும்" என்று கூறினர்.

நரேந்திரரும் ம—வும் புன்சிரிப்பு அரும்பினர்.

பிரசன்ன ரபீந்திரரைத் தம் ஈர ஆடையை மாற்றிக்கொள்ளும்படிக் கூறி, ஓர் உலர்ந்த காவியாடையை அவரிடம் கொடுத்தார். நரேந்திரர் ம—விடம் "இப்போது அவன் துறவிக்குரிய காவி யாடையை அணியப்போகிறான்" என்றனர்.

ம— (புன்சிரிப்போடு): "எவ்வகைத் துறவோ?"

நரேந்திரர்: "ஏன்? காம காஞ்சனத் தியாகமே (துறவே)."

ரபீந்திரர் காவி யாடை யணிந்து, காளியின் அறைக்குள் தியானம் பண்ணப் புகுந்தார்.

அனுபந்தம்

ஸ்ரீ சைதன்யர்

வங்காளத்திலே வைணவமதத்திற்குப் பெரும் ஆசாரியராய் விளங்கிய சைதன்யர் என்பவர் நவத்வீபம் என்னும் நதியாவில் கி. பி. 1485-ல் பிறந்தார். அக்காலத்தே நதியா ஒரு கல்வி நிலையமாகப் புகழ் பெற்றிருந்தது; சிறப்பாகத் தருக்க சாஸ்திர பாடசாலை அங்கே விளங்கியது. இந்தியாவிலுள்ள எல்லாப் பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் அங்குவந்து சமஸ்கிருத பாடசாலைகளிற் கல்விபயின்றனர்.

சைதன்யரின் தந்தையாராகிய ஜகந்நாத மிச்ரா ஓர் அந்தணர்; அஸ்ஸாமிலுள்ள ஸில்ஹெட்டிலிருந்து அவர் தமது கல்வியைப் பூரணமாக்குவதற்காக நதியாவிற்கு வந்திருந்தார், பலரும் அறிந்த ஒரு பண்டிதரின் புதல்வியாரான சசி தேவியை அவர் மணந்துகொண்டு, இந்து மதப்படி இல்லற வாழ்விலே அமர்ந்தார். அவர்க்குப் பத்துக் குழந்தைகள் இருந்தன; எட்டுப் பெண் குழந்தைகளும் மதலைப் பருவத்திலே மரித்துவிட்டன; இரு புதல்வர்களுள் மூத்தவர் விசுவரூபர் எனும் பெயருடையவர்; இளையவர் விச்வம்பரர் பிற்காலம் சைதன்யர் எனும் நாமம் பெற்றனர். விசுவரூபரது மனம் நதியாவிலுள்ள ஞான ஆகாயத்தினுலே நல்ல மாறுதலை அடையலானது. அதனால் அவர் பதினேருவது வயதிலே, மணம் புரிவிக்க ஏற்பாடுசெய்திருந்த நாளைக்கு முன்னால் இரவிலே துறவு பூண்டு, தண்டமும் பிச்சை ஓடும் கையில் ஏந்தி. ஞானத்தை நாடி உலகத்தை விட்டுவிட்டனர்.

இப்போது விசுவம்பரரே பெற்றோர்கட்கு ஆறுதல் அளிக்கக்கூடிய ஒருவரானர்; அவர் நிம்ப மரத்தடியில் ஒரு குடிசையில் பிறந்தமையாலே பிரியத்தால் 'நிமாய்' என்று அழைக்கப்பட்டார். அவர்க்கு ஐந்து வயதானதும், அதே வயதுள்ள மற்றப் பிள்ளைகளைப்போன்று பள்ளிக்கூடம் சென்றிருக்கவேண்டும்; ஆனால் அவரது தாயார் தடுத்தமையால் அவர் வீட்டிலே இருந்தார். தமக்கிருக்கும் ஒரே குழந்தையும் மூத்தவனைப்போல் வீட்டைவிட்டு வெளியேறி விடுமோ என்ற பயத்திற்குச் சசிதேவியார் வசப்பட்டிருந்தார்.

நிமாய் விளையாட்டும் சுறுசுறுப்பும் நிறைந்தவனாய் இருந்தான். சாஸ்திரம் படித்த வைதிகப் பிராம்மணர்களைத் தனது சிறுபிள்ளைத்தனமான விளையாட்டுகளால் தொந்தரவு படுத்துவதிலும், அந்தத் தலத்திற்குரிய ஒழுங்கான அமைதி

யான பழக்க வழக்கங்களைத் தலைகீழாக்குவதிலும் அவனுக்குப் பிரியம். அவன் மற்றப் பிள்ளைகளைச் சேர்த்துக்கொண்டு சோலைகளிலுள்ள பழங்களைத் திருடுவான். வேறு இனிய குறும்புகளும் செய்து வருவான். சிறுமிகளிடம் சேட்டை செய்வான்; வயது முதிர்ந்த அந்தணர்கள் பூஜை செய்யும்போது, அவர்களுடைய விக்கிரகங்களை எடுத்துக்கொண்டு, அடிக்கடி ஓடிவிடுவான்; அவர்கள் குளித்துக்கொண்டிருக்கும்போது அவர்களுடைய ஆடைகளை எடுத்து ஒளித்து வைப்பான். ஜாதி மரபுகளைச் சற்றும் மதிக்கமாட்டான்; அசுத்தமான குப்பையையும், பிராம்மணர்களால் தீண்டத் தகாதவற்றையும் அவன் கூசாமல் தொடுவான்;—இம்மாதிரியான செயல்களால் தன்னுடைய பெற்றோர்கட்கு நடுக்கத்தை உண்டுபண்ணுவான். தாயார் அவனைக் கண்டித்தால், "நீ என்னைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதில்லை. யான் படியாதவன். இது சுத்தம், இது அசுத்தம் என்பதை என்னால் எப்படி அறிய முடியும்? என் கண்ணுக்குச் சுத்தமோ அசுத்தமோ எதிலும் இல்லை. எல்லாப் பொருள்களும் எனக்குச் சமமாகவே உள்ளன" என்பான். அம்மறுமொழியிலே ஜாதி விதிகளையும் கட்டுப்பாடுகளையும் தாண்டியுள்ள ஓர் உண்மையான சன்னியாசியின் மனப்பான்மை வெளித் தோன்றியது.

ஆறுவது வயதிலே ஜகந்நாதரின் அக்கம் டக்கத்தாரது கட்டாயத்திற்கு இணங்கி, நிமாயை ஒரு சம்ஸ்கிருத பாடசாலைக்கு அனுப்பித்து, கங்காதாஸர் என்னும் ஒரு பண்டிதரிடம் ஒப்பித்தார். இவ்வாறு நிமாய் ஒரு பிராம்மணனுக்குரிய முதலாவது ஆசிரமமாகிய பிரம்மசரியத்தைப் பின்பற்றுபவனானான். இச் சிறுவன் பிஞ்சிலே பழுத்தவனாயிருந்தான்; சிறிது காலத்தே வியாகரணம் தருக்கம் இரண்டிலும் சிக்கலான விஷயங்களைப் பற்றிப் பண்டிதர்களோடு வழக்காடலானான்; ஆனாலும் இளமைக்குரிய முழுச் சுறுசுறுப்பும் ஊக்கமும் இப்போதும் குன்றாது அவனிடம் இருந்தன; அதனால் நதியாவிலுள்ள சிந்தனை மிகுந்த வணங்குதற்குரிய பெரும் பண்டிதர்களைக் கேலி பண்ணுவதில் மகிழ்ச்சியடைந்து வந்தான்.

இருபதாவது வயதிலே நிமாய் பெரும் புகழ்பெற்று விளங்கியமையால், தாமே கங்கைக்கரையிலே ஒரு சொந்தப் பாடசாலையை ஏற்படுத்தலானார்; பல மாணவர்கள் அவரது புத்தியிலும் உயர்ந்த தருக்க வன்மையிலும் ஈடுபட்டு அதனை நாடிவரலானார். இதுவரை அவர் வெளிப்பார்வைக்குத் தமது அறிவை வளர்ப்பதிலே கண்ணாயிருந்தார், அவரிடம் ஞான ஊக்கத் தீ அந்தரங்கமாக எரிந்து வந்ததைக் காணவல்லார் எவரும் இல்லை; எனினும் அது அவரைப் பிற்காலம் ஒரு மதாசாரியாரது மேம்பட்ட பதவியை வகிக்கும்படி உயர்த்தியது. நதியாவிலுள்ள தலைமைப் பண்டிதர்க்குரிய ஐயவாதமும் பாண்டித்தியச் செருக்கும் அவரிடமும் திகழலாயின. அக்கால வழக்கப்படி, காசியிலும் வேறிடங்களிலும் உள்ள கலா நிலையங்களிலிருந்தும் பெயரோங்கிய அந்நாளைய வித்துவான்கள் தருக்கம் வியாகரணம் நாவன்மை முதலிய கலைகளிலே பிறரோடு

வாதப்போர் புரிவதற்காகவும், தோற்றவரிடமிருந்து தமது வெற்றியை ஒப்புக் கொள்ளும் 'விஜயப் பத்திரங்'களைப் பெறுவதற்காகவும் நதியாவிற்கு வருவ துண்டு; அவர்களைச் சில அறிவுப் போட்டிகளில் நிமாய் தோல்வியடையச் செய்தார்.

சிறிது காலத்தில் நிமாய் மணம்புரிந்துகொண்டு, அந்தணர்க்குரிய இரண் டாவது ஆசிரமமாகிய இல்லற நிலையில் அமர்ந்தார். அவரது தந்தையார் இதேசமயம் இறந்தார். அதற்குப் பின் அவர் தந்தையாரது குடும்பம் வாழ்ந்து வந்த கிழக்கு வங்காளத்திற்கும் அஸ்ஸாமுக்கும் சென்றார். அங்கேயுள்ள பண்டிதர்களோடு அவர் மிக்க சாமர்த்தியமாக வழக்காடியமையால் அவரது புலமைக்குரிய புகழ் வளர்ந்தது. அவர் ஊருக்குத் திரும்பியதும், தமது மனைவி யார் பாம்புக்கடியால் இறந்தமையை அறிந்து துயரடைந்தார். தமது அன்னை யார்க்கு ஆறுதல் அளிக்கக் கருதி அவர் மறுமணம் புரிந்து கொண்டார். ஆனால் தந்தையார் நற்கதி பெறுமாறு அவர்க்குப் பிண்டமும் உதகமும் (உணவும் நீரும்) அளித்தற்காகக் கயைக்கு விரைவில் யாத்திரை செய்தார்; அன்னையாரும் மனமின்றியே சம்மதிக்க வேண்டியதாயிற்று.

இக்கயா யாத்திரையோடு அவரது வாழ்க்கையில் ஒரு பெரும் மாறுதல் விளையலாயிற்று. இந்துமதம் புத்தமதம் இரண்டிற்கும் சம்பந்தமுள்ள தூய நினைவுகளினூலே அந்தத் தலம் புனித மடைந்திருந்தது. இத்தலத்தில்தான் ஈசுவரபுரி என்னும் ஒரு வைணவ குருவுக்கு அவர் ஆட்பட்டவரானார்; ஸ்ரீ கிருஷ்ணனையே பரதெய்வமாக வழிபடும் பக்தி நெறியின் இரகசியங்களை அவர்க்கு அப்பெரியார் உபதேசிக்கலானார். பெரிய கோயிலிலுள்ள விஷ்ணுவின் சந்நிதியில் அவர் சமாதி யடைந்தார்; அவருடைய தோழர்கள் நதியாப் பாட சாலைக்கு அவரைக் கொண்டு வரும்வரை உலக நினைவு அவர்க்கு முற்றும் மீள வில்லை. அவரது ஞான மனப்பான்மை முழுவதும் மாறிவிட்டது. எதிர் வாதியை வழக்கால் குழம்பச் செய்வதில் மனமகிழும் தமது அறிவுமேற்பாட்டை உணர்ந்து செருக்குற்றிருக்கும் பண்டித இயல்பு அவரிடம் அடியோடு மறைந் தது. கிருஷ்ணனது பெயரையும் புகழையும் பாடுவதிலும், பக்தியைப் பற்றிப் பிரசங்கம் செய்வதிலும் அவர் இப்போது மணிக்கணக்காகப் பொழுதைப் போக்கத் தொடங்கினர். அகங்காரம் மிக்க பண்டிதர் இப்போது தாழ்மை யுற்றவர்க்குள் மிகத் தாழ்ந்தவராக ஆனர். அவர் கிருஷ்ண பகவானையும் அவரது பிரேமையையும் பற்றிப் பேசும்போதே, கண்ணீர் கன்னத்தில் வழிந்து கொண்டிருக்கும்.

சைதன்யர் தமது தோழர்கட்குப் பின் வருமாறு கூறுவதுண்டு: ஒரு மரத்தைப்போல் இருங்கள்; மரம் தனது கிளைகளை வெட்டுபவனுக்கும் நிழலை அளிக்கின்றது. நீரின்றி வற்றலானலும் அது எவரிடமும் நீரை வேண்டுவ தில்லை. மழையையும் புயலையும் சூரியனின் கொளுத்தும் கிரணங்களையும் அது பொறுக்கின்றது; ஆயினும் மணங்கமழும் மலர்களையும் சுவை மிகும் கனி

களையும் அது தருகின்றது. ஒரு மரத்தைப்போலப் பிறர்க்குப் பொறுமை யொடு பணி செய்க; இதுவே நீங்கள் வாழ்க்கையிற் கடைப்பிடித்தற்குரிய ஒழுங்காகட்டும்."

பணிவுக்கு ஓர் உதாரணமாக நடக்கும் பொருட்டு, உயர்குலத்துதித்த அந்தணரான அவர் ஆற்றுக்குச் சென்று, மூப்பால் தளர்ந்தவர்களுடைய மூட்டைகளைச் சுமந்தும் துணிகளைத் தோய்த்தும் அவர்கட்கு உதவுவார்; யாரேனும் அவரது பிராம்மணப் பிறவியைக் கருதி, அவருடைய பணியை ஏற்றுக் கொள்ளத் தயங்கினும், அவர் "உங்களை வேண்டிக்கொள்கிறேன். என்னைத் தடுக்க வேண்டாம். நான் உங்கட்குப் பணி புரியும்போது, ஈசனையே காண்கிறேன். இவை போன்ற சிறு செயல்கள் எனக்குப் புனிதத்தை ஊட்டுகின்றன" என்பார்.

அவருடைய யாத்திரைகள் ஒன்றில் ஒருமுறை ஒரு கோயிலில் ஒரு பிராம்மணரைச் சூழ்ந்துகொண்டிருந்த ஒரு கூட்டத்தாரோடு கலந்துகொண்டார். அந்தப் பிராம்மணர் தமது உச்சரிப்பிலும் இலக்கணத்திலும் இயற்றிய பிழைகளால் பிறரிடம் ஏற்பட்ட கேலியையும் சிரிப்பையும் பொருட்படுத்தாமல், கண்ணீர் பெருக ஆனந்த பரவசத்தோடே கீதையைப் பாராயணம் செய்துகொண்டிருந்தார். இதைக் கண்டு மனமுருகிய நிமாய் "ஐயன்மீர்! இவ்வளவு பேராநந்தங்கொள்ளும்படி இச் சுலோகங்களிலே என்ன ஆழ்ந்த பொருளைத் தாங்கள் காண்கிறீர்களோ? அதை உரைத்தருள்க" என்று வேண்டினர். அந்தணரும் "யான் ஒன்றும் படிக்காதவன்; வார்த்தைகளின் பொருளை அறியேன். ஆனால் யான் கீதையை வாசிக்கும்போது, நீல மேனியும் அழகும் வாய்ந்த கண்ணபிரான் அருச்சுனரது தேரிலே அமர்ந்து ஞாலோபதேசம் செய்வதையே காண்கின்றேன். இக் காட்சியே என்னை ஆனந்தக் கண்ணீரைப் பொழியச் செய்கிறது" என்று பதிலளித்தார். சைதன்யர் அவரைத் தழுவிக் கொண்டு, "கீதையை வாசிக்க நீரே உண்மையான தகுதிபெற்றவர்; ஏனெனில் அதன் பொருளின் ஸாரத்தை நீரே அறிந்துள்ளீர்" என்று உரைத்தார்.

அவருடைய பாண்டித்தியப் பெருமை முழுதும் மறைந்தது. வைதிக இந்து மதத்தின் சிக்கலான கிரியைகளைப் பின்பற்றுவதற்குப் பதிலாக. அவர் பாடுவோரும் ஆடுவோருமாகிய கீர்த்தனைக் கூட்டத்தாரை அமைத்தார்; இக் கூட்டத்தார்க்கு அவரும், அவரது முக்கிய சீடராகிய நித்தியாநந்தரும் தலைமை வகிக்க, அவர்கள் கோயில்களிலும் வீட்டு முற்றங்களிலும் ஒன்று கூடி நின்று ஹரியின் புகழையும், மன்னுயிர்மீது அவர்க்குள்ள அன்பையும் பாடிக் கொண்டே வீதி வழியே திரளாகச் செல்வார்.

நதியாவிலுள்ள பிராம்மணவருணத்தாரின் உள்ளங்களிலே இளைஞரான சைதன்யரின் மதபோதனைகளில் அடங்கிய பக்திப் பெருக்கினால் சற்றும் மன வெழுச்சி உண்டாகவில்லை; எனினும், அக்கீர்த்தனைகளால் பொதுமக்களின் உள்ளங்களிலே பரபரப்பு உண்டானமையாலும், அக்கீர்த்தனைக் கூட்டங்

களிலேதாழ்ந்த ஜாதியார் கலந்திருந்தமையாலும், உயர்குலத்தாரது மனம் கலக்க மடையலாயிற்று. சைதன்யர் ஜாதிவிதிகளை வெளிப்படையாக மீறியது பிராம் மணர்கட்கு அருவருப்பை உண்டாக்கிற்று. அவர்கள் அவரது செயலைக் கண்டித் தனர். விதிகளை மீறுவதனால் கேடுகள் வருமென்று பயமுறுத்தினர்; இவை பயனற்றன வாதலைக் கண்டதும், முசல்மான் அதிகாரிகளிடம் முறையிடலானர்; ஆனால் முசல்மான் மதத்தைச் சார்ந்த நீதித்தலைவரோ, சைதன்யரது திருமுகத் திலே தெய்விக ஆனந்தம் ஒளி வீசுவதையும், அவருடைய தோழர்களின் ஞான ஊக்கத்தையும் கண்டு அவர்பால் உள்ளக் கவர்ச்சியடைந்தார். இதனால் அவர்களைத் தண்டிப்பதற்குப் பதிலாக, அவர் தமது ஆசிகளோடு அவர்களை அனுப்பிவிட்டனர். சைதன்யரைப் பின்பற்றியவர்களுள் முசல்மான்கள் பலரும் இருந்தனர்.

இந்த சமயம் சைதன்யர் சன்னியாசியாசிரமம் பெறவேண்டுமெனத் தீர் மானித்தார். அவரது அன்னையாரின் அனுமதியைப் பெறுதல் அவர்க்கு மிகக் கஷ்டமாயிற்று. ஆனால் இயன்றமட்டும் தமது பேரார்வத்தைக் காட்டி அவ ருடைய திருவடிகளைப் பிடித்துக்கொண்டு, துறவியானபின்பும் முன்போல் எப்போதும் அவருடைய கட்டளைக்கு இணங்கி ஒழுகுவதாக வாக்களித்து அவரைத் தேற்றினர். அன்னையார்க்குத் தம்மைப்பற்றிய சமாசாரம் எளிதாக எட்டும் பொருட்டும், நதியாவிலே தம்மைக் காணும் பொருட்டும், சைதன்யர் பூரியையே தலைமையிடமாகக் கொள்ளவேண்டும் என்பதற்கு இருவரும் சம்ம தித்தனர். சன்னியாசம் பெற்றதும் உடனே, கிருஷ்ணனது பாலிய வாழ்க்கை யோடு சம்பந்தப்பட்ட பிருந்தாவனத்திற்கு அவர் யாத்திரையாகப் புறப்பட்டார். அத்தூய தலத்திலே அவர் பலமுறை பிரேமையாற் பரவசமடையலானர்.

சைதன்யர் தமது வாழ்க்கையிற் கடைசிப் பதினெட்டு ஆண்டுகளை ஜகந் நாதரது கோயிலுக்கு அருகே பூரியிற் கழித்தனர். அவர் பக்தியையே போதித்து வந்தனர்; அதில் அடங்கிய மூன்று முக்கியமான கொள்கைகள் ஆவன; ஜீவர்களிடத்து தயையும், பகவானது நாமத்திலே ருசியும், பக்தர்கட்கு ஸேவை யும். அவர் தம்மைப் பின்பற்றுவோருடைய நெஞ்சங்களிலே கொழுந்துவிட் டெரியும் பக்தியை மூட்டினர். வங்காளத்தும் ஒரிசாவிலும் பக்தியலையொன்று பரந்து தாக்கிற்று; சிறப்பாக அது பொதுமக்களுடைய ஞான வாழ்வைச் செழிக்கச் செய்தது. அவருடைய அந்தரங்க அன்பர்கள் விரைவில் அவரை இறைவனின் அவதாரமாக உணரலானர்.

சைதன்யர் இயற்கையழகுகளில் சிறப்பாக மகிழ்ச்சியடைந்தனர். இனிமை மிக்க சூரியாஸ்தமனத்திலும், கம்பீரமான ஆற்றிலும், பூக்கள் மலியும் அசோக மரச் சோலையிலும் அவரது மனம் ஆழ்ந்து ஈடுபடும். காட்டு மிருகங்களையும் கானகத்து வாழும் ஏனைய உயிர்களையும் கட்டுப்படுத்தும் அவரது சக்தி வியப் பிற்கே இடமாயது என்பர். நாட்டிலிருந்த பல தனவந்தர்கள் உள்பட ஆயிரக் கணக்கான மக்கள் அவரை வழிபடலானர்; எனினும் பாரத நாட்டுப் பெருங்

குரவர்கள் அனைவரையும்போல் கடுந்தவ வாழ்வையே பின்பற்றினர்; அன்றியும் அவர்க்கு நெருங்கிய சீடராக விரும்பியவரிடத்து எவ்வித போக நுகர்ச்சியையும் கடுமையாகக் கண்டித்து வந்தார்.

பூரியிலே அவரது வாழ்வு பெரும்பாலும் கடவுள் வெறி நிலையிலே கழியலாயிற்று. ஆனந்த பரவச நிலையிலே நிகழ்ந்த சம்பாஷணைகளும் ஆழ்ந்த தியானமும், பிரேமைச் சுவை தோய்ந்த மனுதீத நிலைகளும் நித்திய நிகழ்ச்சிகளாயின. ஒரு நாள் தன்னை மறந்த நிலையிலே ஹரிநாம ஸங்கீர்த்தனம் பண்ணும் போதே கடலில் விழ்ந்தனர்; பின்னர் சில செம்படவர்களின் வலைகளிலே சிக்கி, உணர்வற்ற நிலையிலிருக்கும்போதே, வெளியிலே இழுக்கப்பட்டார். அவரது ஞான ஊக்கத்தின் வெம்மையால் அவரது உடல் வலிமை விரைவில் தேய்ந்து மாய்ந்துவிட்டது. தாமே நிலை நாட்டிய வைணவத் துறவியர் (கோசுவாமிகளின்) சங்கத்தின் பொறுப்பிலே அவர் தமது பெரும்பணியை ஒப்புவித்தார்; பின் 1533-ம் ஆண்டில் 48-வது வயதில் அவர் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

கால வரிசைப்படி ஸ்ரீ ராமகிருஷ்ணரது வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு

1775 ஸ்ரீ ராமகிருஷ்ணரின் தந்தையாரான குதிராமின் பிறப்பு.

1791 ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அன்னையாரான சந்திரா தேவியின் பிறப்பு.

1805 குதிராமின் மூத்த குமாரரான ராம் குமாரின் பிறப்பு.

1814 குதிராம் கமார்புகூரிலே குடியேறுகிறார்.

1826 குதிராமின் இரண்டாவது குமாரர் ராமேச்வரரின் பிறப்பு.

1835 குதிராமின் கயா யாத்திரை.

1836 ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பிறப்பு, பெப்ரவரி 18, ஏறக்குறைய காலை 5-15 மணி.

1843 குதிராமின் மரணம்.

1845 ஸ்ரீ ராமகிருஷ்ணரது உபநயனம்.

1850 ராம் குமார் கல்கத்தாவில் தமது பாடசாலையை ஆரம்பித்தல்.

1852 ஸ்ரீ ராமகிருஷ்ணர் கல்கத்தாவிற்கு வருதல்.

1853 தூய அன்னையாரின் பிறப்பு, டிசம்பர் 22.

1855 தக்ஷிணேசுவரக் காளி கோயில் கட்டப்பட்டது. தக்ஷிணேசுவரத்தில் இருதய். ஸ்ரீ ராமகிருஷ்ணர் விஷ்ணுகோயிற் பூஜாரி யானதும், பின் காளி கோயிற் பூஜாரி யானதும்.

1856 ராம் குமாரின் மரணம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் கடவுள் தரிசனம் பெறலும், அவரது முதலாவது கடவுள் வெறியும்.

1857 வைத்தியர் கங்கா பிரசாத்தின் கீழ் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிகிச்சை பெறல்.

1858 ஹலதாரி தக்ஷினேசுவரத்திற் பூஜாரியாதல். ஸ்ரீ ராமகிருஷ்ணர் கமார்ப் புகூர் போதல்.

1859 ஸ்ரீ ராமகிருஷ்ணரது திருமணம்.

1860 தக்ஷிணேசுவரம் திரும்பல். மதுரின் காட்சி.

1861 ராணி ராசமணியாரின் மரணம். பிராம்மணியைச் சந்தித்தல். பிராம் மணியின் கீழ் தந்திரசாதனம் பழகல். இரண்டாவது கடவுள் வெறி.

1863 தந்திர சாதனமுடிவு. பண்டிதர் பத்மலோசனரைச் சந்தித்தல். சந்திரா தேவி தக்ஷிணேசுவரம் வாழ வருதல்.

1864 ஜடதாரியின் கீழ் ஸ்ரீராமகிருஷ்ணர் வாத்ஸல்ய பாவனை பழகல். மதுர பாவனை பழகல். தோத்தாப்புரி சன்னியாச தீக்ஷை அளித்தல்,

1865 அக்ஷயன் ஹலதாரிக்குப் பதிலாக அமரல். தோத்தாப்புரி தக்ஷிணேசு வரத்தை விட்டு நீங்கல்.

1866 ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆறுமாசம் அத்வைத நிலையில் இருத்தல். நோய். மகம்மதிய மதசாதனம் பழகல்.

1867 கமார்ப்புகூரில் ஸ்ரீ ராமகிருஷ்ணர். பிராம்மணி விடைபெறல்.

1868 யாத்திரை. கங்காமாயியைச் சந்தித்தல்.

1870 மதுரோடு யாத்திரை. கோலுடோலாவிலுள்ள ஹரி சபையில் ஸ்ரீ ராம கிருஷ்ணர். கால்நா, நவத்வீப் போதல்.

1871 மதுரின் மரணம்.

1872 தூய அன்னையார் தக்ஷிணேசுவரத்திற்கு முதல் முறை வரல். சோடசி பூஜை.

1873 ராமேஸ்வரது மரணம்.

1874 தக்ஷிணேசுவரத்திற்கு மறுமுறை தூய அன்னியார் வரல்.

1875 கேஷப் சந்திரசேன் என்பவரை ஸ்ரீ ராமகிருஷ்ணர் முதன்முறை போய்ப் பார்த்தல். கமார்ப்புகூர்க்குக் கடைசிமுறை செல்லல்.

1876 சந்திரா தேவியின் மரணம்.

1877 கேஷப் என்பவரோடு நெருங்கிப் பழகுதல். தூய அன்னையார் தக்ஷி
1878 ணேசுவரத்திற்கு மூன்றும் முறை வருதல்

1879 சீடர் வரவு தொடங்குதல்.

1880 ராக்கால் நரேந்திரர்—இருவரையும் சந்தித்தல்.

1881 ஹிருதயை வெளியேற்றல்.

1882 பண்டிதர் வித்யாசாகரைப் போய்ப்பார்த்தல். தூய அன்னையார் மறு படியும் தக்ஷிணேசுவரம் வரல்.

1884 கேஷப் என்பவரின் மரணம். பண்டிதர் சசாதரைச் சந்தித்தல். கோபால் மா. தூய அன்னையார் கடைசிமுறை தக்ஷிணேசுவரம் வாழ வரல்.

1885 பாணிஹட்டிக்குக் கடைசிமுறை போதல். நோயும், சியாம்புகூர்க்குப் போதலும். டாக்டர் சர்க்காரோடு பழகல். காசிப்பூர்க்குப் போதல்.

1886 காசிப்பூரில் சிகிச்சை. சீடர்களைச் சேர்ந்து வாழுமாறு அமைத்தல். ஆகஸ்டு 16 அன்று, இரவு 1 மணி 2 நிமிஷம் விண்ணகம் புகல்.

14911

UNIVERSITY EXTENSION LIBRARY MADURAI

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

விஷய சூசிகை

அ

அகங்காரம் : அதைத் துறந்தால் அருள்—339. ஆராய்ந்தால் இல்லை —179. ஈசனைக் காணத் தடை—339. ஒழியாது ஞானம் இல்லை—247. காம குரோதங்களின் தோற்றம் மட்டும்—198. சச்சிதானந்தக் கடலில் மரக் குச்சி—258. சாடிபோல—365. ஞானி அகங்காரம்—258. தீய அகங்காரம் —197, 296. பக்த அகங்காரம்—180, 197, 198, 258, 270, 271, 296. (சமாதிக்குப் பின்னும்) 198. படிப்பால் நீங்காது—385. பழுத்தது, பழுக் காதது—230, 231. பிரம்மானுபூதியில் இல்லை, உப்புப்பொம்மைபோல—180, மறைவது அருமை—137. முத்திக்குப் பின்னும்—426.

அடித்தவனே : பால் கொடுக்கிறான் (கதை) — 211.

அடியார்கள் : இருவகையாகப் பிரிய, நோய்—409, 410. உடன் பகவான் அவதரித்தல் — 418. சமாதிக்குப் பின் அவர்களை நாடல் — 238. சமாதியடைதல்—380. தற்காப்பு (கதை)—340. துன்புறுங்காரணம்—449. நெஞ்சு ஈசன் உறைவிடம்—165. பல்குநி போன்றவர் —130. பஜனைக் கூட்டத்தார் போல—419. மூவகை — 254. பெற்ற உறுதி மொழி—222. வரக் குருதேவர் கதறல்—354, 410, 465. வருகையைக் குருதேவர் முன் னறிதல் — 351, 353.

அந்தரங்கர் : 348, 349, 410, 458.

அப்பியாச யோகம் : 285.

அபிப்பிராய பேதச்சண்டை—171.

அமிருதர் — 371, 372, 445.

அருச்சுனன் : குறிவைத்தல்—251.

அருவநிலை : இலக்ஷியம்—235. ஈசன்—158, 159. சத்தியம்—219.

அருள் : கருத்தா உணர்ச்சி ஒழிதல்—201. காட்சிக்கு அவசியம்—201.

அலதாரி : 278.

அவதாரங்கள் : அறிகுறி பிரேமை—323. அறிதற்கரியன, தரிசனம் போதும்—323. ஈசனது விளக்கம் அதிகம்—261. எண்ணிக்கை — 363. காரணம்—336. சமாதிக்குப் பின்னும் வாழ்பவர்—184. பக்தர்கட்காக—339. பசுவின் மடிபோல் — 322. பற்றி வழக்கு — 364, 365. நிர்க்குணப் பிரம்மத் தில் தோன்றல் — 160. மூவகை — 357. விளக்கம் — 347.

அவித்த நெல்—258, 315, அவித்தால் மெதுவாதல் — 395.

அவுன்ஸ் மது : போதும் — 385.

அற்புதங்கள் : குருதேவர்க்கு இயலா — 356.

அறையொன்றே : எங்கிருந்து பார்ப்பினும் — 393.
அன்பைக் கொடுக்கலாம் — 493.
அன்னதாதாக்கள் — 411.
அன்னம் போலிரு — 268, 316. போன்றவர் — 316.
அன்னிய பரநிலை — 395.
அனுஹத தொனி — 355.
அஸ்தி நாஸ்தி — 424.
அஷ்டாவக்ர ஸம்ஹிதை — 448.

ஆ

ஆசைகள் : அவசியம் வாழ்விற்கு — 255. ஒன்றிரண்டு குருதேவரிடம் உள்ளன — 255. துவாரங்கள் போல் — 300. நிறைவேற்றல் — 282.
ஆடை அணியக் குருதேவர்க்கு இயலாமை — 451.
ஆண்டான் அடிமை உறவு — 137. எதுவரை — 392, 393. நன்று — 199.
ஆணி யடித்தல்போல் (மண்ணிலும், கல்லிலும்) — 272.
ஆதர்சேன்—216, 228, 246, 312.
ஆதாரங்கள் ஆறு — 182, 183, 349, 350.
ஆதேசம் : ஞானத்தட்டு வாராது — 266. போதகர்க்கு வேண்டும் — 265. மக்கள் தாமாகக் கூடுவர் — 266.
ஆனந்தம் : மூன்று வகை — 270.
ஆஸ்பத்திரி : கட்டல் — 302.

இ

இங்கு வரும் இளைஞர் அறியவேண்டியன — 348.
இந்திரிய அடக்கம் : கடினம் — 368. பக்தியால் பெறலாம் — 369.
இயேசுநாதர் : போல் குருதேவர் — 347, 355, 356, 357. லாஸரஸ் கல்லறையில் — 355.
இருதயரது கன்று — 231,
இல்லறத்தார் : குழந்தை பெற்றபின் — 316. துறவிகட்கும் அவர்க்கும் ஞான வேறுபாடு — 273, 367. நற்கதி அவர்க்கும் உண்டு — 223. நாமம் சொல்லல் அவர்க்குப் பெருமை—208. பிரம்மஞானம் அவர்க்கு அரிது—247. புத்திமதி குருதேவர் கூறல் — 143 முதல் 162 வரை. மனம் கீழ் இறங்கும் — 431. வாழவேண்டிய வகை — 202. விடுவிக்கப்படாததேன் — 203. **வீரர்** — 367.
இலையெண்ணுது கனியுண்ணல் (கதை) — 187, 358, 385.
இலௌகிகர் : அடிமைகள் — 304. சாதாரண ஈப்போல் — 431.

ஈ

ஈசன்: அருளைப்பெற வழி — 148, 331. அழுதலும் துடித்தலும் அவனைக்காண — 113, 170, 180, 245, 280, 287, 296, 302, 319, 325, 342, 414, 415. அறிதற்கு அரியான் — 187, 224, 226, 234, 323. ஆறு திவ்விய சக்திகள் — 135. இச்சைப்படி யாவும் நடக்கும் — 337. உருவமும் அருவமும் ஆவான் — 179, 182, 204, 208, 291. எல்லா மதங்களாலும் அவனை அடையலாம் — 207. எல்லாம் வல்லவன் — 154, 334. ஒளியைத் தன்மீது திருப்பல் — 202. கருத்தா ஈசனே — 186. காட்சி: அதற்கு அவசிய மாவன — 372; அனுகூல நிலை — 307; என்பதன் பொருள் — 146; ஏன் நமக்கு இல்லை — 296; காட்சியால் சந்தேகம் இன்மை — 254; காட்சிக்குப் பிரேமைக்கண் — 147, 199, சித்த சுத்தி — 200. பூர்வ வாசனை — 286 பூஜை — 254. முழுத்துறவு அவசியமா — 168. பெற்ற குறிகள் 212. குழந்தை போல் — 331. சக்திப் பிரகாசம் அவனுக்குப் பல அளவு — 327. சக்தியை வற்புறுத்துவதேன் — 184, 239. சகுணம் நிர்க்குணம் — 292. சந்தேகப் படும் நிலை ஈசனைப்பற்றி — 485. சமமாய் அனைவரிடம் இராமை — 386; சர்க்கரைக் குன்று — 486. சிரிக்கும் இரு சமயம் — 242. சுத்த மனதால் அறியப்படுபவன் — 323, 324. ஞான அஞ்ஞானங்கட்கு அப்பால் — 384. தன் நகைகளைக் காப்பாற்றுதேன் — 184. திருவுள்ளப்படி நமது காட்சி — 305, இல்லற துறவற வாழ்வும் — 308. தேவைபெற அவனிடம் வற்புறுத் தல் — 245. நம் நெஞ்சினைக் காண்பான் — 213. நமக்கு அளித்துள்ள மூன்று கொடைகள் — 437. நமக்குச் சொந்தம் (கதை) — 297. நம்பிக்கையால் அவனை அறியலாம், தருக்கத்தால் அன்று — 439. நெஞ்சில் அவனை எழுந் தருளச் செய் — 156. பக்தனே அவன் வாழும் கூடம், பக்தனது நெஞ்சே அவனது உறைவிடம் — 156, 165, 238, 354. பக்தியை வளர்த்தல் — 213. பச்சோந்தியைப்போல — 181. படைப்பைப்பற்றிய அறிவு ஈசனுக்குப் பின் — 318. பலவகையாக அவனை அனுபவித்தல் — 219. பிரார்த்திக்கும் முறை — 245, 325. புத்தகப் படிப்பும் ஈசனும் — 306, 378. பெருங்காந்தம் — 194. மடியிற் கிடத்தல் — 403. மனிதனிடம் அவனை நாடுக — 323. மாற்றுந்தாயன்று — 301. மிதமிஞ்சிய கடவுள் நினைவால் அறிவை இழப்பதுண்டா — 147, 304. மூவகைக் கவர்ச்சியால் அவரை அடையலாம் — 113. மெய்ப்பொருள் — 337. யாவும் ஈசனே — 238, 290, 294, 328, 417. லீலை — 365. வக்காலத்து அவனுக்குக் கொடு — 217, 385.

உ

உடல் நினைவு — 224.

உடற்கூடும்: உள்ளே பகவானும் — 448.

உணவும்: பக்தியும் — 387. சத்வகுணமும் — 425.

உத்தரகீதை — 247, 248.
உத்தியோகத்தால் வரும் தாழ்வு — 194.
உப்புப்பொம்மை : கடலின் ஆழங்காணல் — 133.
உபாயம் : அன்பொடு பிரார்த்தனை — 217.
உமாநாதர் — 241.
உருவ ஈசன் : அருவத்தினின்றும் தோன்றல் — 409. கற்பனையன்று — 332. சத்தியம் — 219. மயக்கக் காட்சியன்று — 472. வழிபாடு — 109, 110, 159.
உலக இச்சை : அற்றவரும் ஜெபமும் — 279. உடையவனுக்கும் நம்பிக்கை உண்டு — 158. உடையாரது ஞானம் — 216. உடையாரது பக்தி கணப்பொழுதே — 246. உடையாருக்குப் பிரசங்கம் பதியாது — 264. உடையாரும் பட்டுப்பூச்சியும் — 214. எனும் காற்று மனச்சுடரைச் சலிக்கச் செய்யும் — 144. நீங்கத் தீவிர வைராக்கியம் அவசியம் — 192. பெற்றுள்ள மக்கள் வருணனை — 191, 371. முகஸ்துதிக்கு ஆளாக்கும் — 304. முக்திக்கு இடையூறு — 158. மூன்று பொருள்கட்கு அடிமையாக்கும் — 304. விஷசுர நோய் போன்றது — 170.
உலகம் : ஈசனது மாயை — 257 ; காரண காரிய முறையற்றது — 257 ; சரராந்தலைப்போன்றது — 309 310 ; வாழும் முறை அதில் — 268. சம்பந்தமான அறிவால் சந்தேகமும், அகந்தையும் — 370. தரும் போகம் — 341. ஒரே சக்தியின் பிரகாசம் — 441. கணப்பொழுதிற்கே — 342. கருமகாரணம் 341. வேறு, பிரம்மானந்தம் வேறு — 441.
உலகிற்கு நன்மை : செயல், கடவுளை அடைந்தபின் — 174 ; தனக்கே நன்மை — 140 ; நாம் அதற்கு அதிகாரிகள் அல்ல — 173.
உள்ளும் புறமும் : சச்சிதானந்தம் — 440 ; உடல்கள் உறைகளே — 449.
உறவினர் : சொந்தமன்று (கதை) — 297.

எ

எட்டுவிதக் கட்டுகள் — 234.
எல்லாம் பரம்பொருள் — 417.
எறும்பைப்போன்றிரு — 268.
எஜமானரும் : வேலைக்காரனும் (கதை) — 341.

ஏ

ஏரியும் : மாயையும் (கதை) — 351.

ஓ

ஓம் : என்பதன் பொருள் — 312.

க

கங்காமாயி — 161

கங்கை: கரையிலே பாவம் காத்திருத்தல் — 206. கங்கையைத் தொட — 323.

கஞ்சா; குடிப்பவன்போல — 275.

கட்டுண்டவர்; இயல்புகள் — 119, 120

கடமை: இயற்றல் கடினம் — 334. எதுவரை கட்டாயம் — 146. கர்ப்ப முற்ற மருமகள் கதை — 140, 141. செய்யும் முறை — 111, 145, 173. யாது — 317.

கடலும்: குமிழியும்போல் — 337.

கடவுள்: அருவம் உருவம் — 108, 109, 181; காட்சிக்குரிய சாதனங் கள் — 113. பச்சோந்திக் கதை — 181.

கடியாதே, சீறுக (கதை) — 117. 118.

கண்ணும்பூச்சி: விளையாட்டைப்போல் — 303.

கதாம்ருதம் — 454.

கபடமற்றவர்: தரிசனம் பெறுவர் — 225.

கபீர்தாஸ்: உருவ அருவ நிலைகளின் சம்பந்தம் — 162, 291.

கல்கத்தா: மக்களின் பரபரப்பு — 172.

கருமம்: அவசியம் — 145, 306, 317. கடினம் — 174. தியாகம் — 183. புரியும் முறை — 135, 317. யோகம் — 140, 299. வரவரக் குறையும் — 140.

கல்பதரு — 271.

கலியுகத்தில்: ஈசனது வார்த்தை வரும் வழி — 305. பக்தி ஏற்ற மார்க்கம் — 134, 174, 264. மக்கள் பாவிகள் — 450.

கற்றல், கேட்டல், காணல் — 269.

கன்றை நினைந்த பசு: கதறுவது போல — 272.

காகத்தின்: சாமர்த்தியம் — 315.

காந்தம்: மண் மூடிய ஊசியும்போல — 201; இரும்பு தானே அத னிடம் வரல் — 266.

காம குரோதங்கள்: முதலிகள் — 155. எப்போது அஞ்சவேண்டாம் — 368.

காமினிகாஞ்சனம் — 112. கட்டாயம் துறத்தல் சன்னியாசிக்கு — 247, 316. சுவாதீனத்தைப் பறிப்பன (ஜெய்பூர் பூசாரிகள் கதை) — 193, 194. தியாகம் — 157, 489. தொடமுடியாத குருதேவர் — 442, 443. பண ஆசை — 434. மருத்துவரது பணம் — 434. மாயை — 316. யோகத்தை விட்டு விலக்கும் — 301,

காலத்தால்: எதுவும் கிடைக்கும் — 329. ஞான உதயம் — 450.

காளி: ஆதிசக்தியே — 167. எல்லார்க்கும் விடுதலை ஏன் அளிப்பதில்லை — 168. கருநிறத்தின் காரணம் — 167, சாந்தால் மங்கை — 373. படைப்பு — 167. படைப்புக்கு விதைசேர்த்தல் — 167. பந்தமோக்ஷம் அளிப்பவள் — 167. பிரம்மனே — 167, 329.

காளிகிருஷ்ணதாக்கூர் — 385.

கிரீந்திர — 260.

கிரீஷ்: கரையேற்றப்பட்டது குருதேவரால்—389; குருதேவரது நோயைப் போக்க ஊதல் — 359. நம்பிக்கை — 324, 358. நரேந்திரரோடு வாதம் — 327. பணிசெய்யும் வரம் வேண்டல் — 359. விஞ்ஞான சங்கத்தைப்பற்றி — 389. வீட்டில் குருதேவர் — 326.

கிருஷ்ண கிஷோர்: அவரது கடவுட் பைத்தியம் — 150, அவரது விசுவாசம் — 149. கம் போன்றவர் — 150.

கிருஷ்ணன்: நீலவண்ணம் ஏன் — 314.

கிறிஸ்தவ மதமும் பாவமும் — 169.

கீதை: உட்கருத்து — 136. சாரம் — 289, 333. சைதன்யர் கண்ட காட்சி — 137.

குடியானவன் (கதை) — 192, 193.

குண்டலினி சக்தி: கிளம்பாதவரை ஞானமில்லை — 342, 350. கிளம்பும் ஐந்துவகை — 349. விழித்தல் — 298.

குமரி: வணக்கம் — 252.

குரு: அகங்காரம் அற்றவர் — 173. அருள் — 223. அவசியம் — 219, 318. ஆணையின்றேல் கேலி — 172. சாஸ்திரப் படிப்பும் குருவும் — 288. தகுதியற்ற குரு — 195. பரம்பொருளே — 171. போதிக்க ஈசனது ஆணை வேண்டும் — 172, 195. மூவகை — 178, 179.

குருதேவர்: அடியார் வருகையை முன்னறிதல் — 225. அவரைக் காலால் உதைத்தவன் — 380. அவரை நாடிவருபவர் — 225. அவித்யா அகங்காரம் அவரிடம் மறைதல் — 409. ஆசைகள் ஒன்றிரண்டு பெற்றவர் — 255. நிறைவேற்றல் — 282. உடலின் சோதி—352. உடலைப்பற்றிய பிரார்த்தனையும் காட்சியும் — 255. உடற்கவனம் அவர்க்கு ஏன்—256. உலகப்பேச்சில் வெறுப்புடையர் — 151. எலும்பு இடம் பிறழ்தலும் அதைரியமும் — 244, 249, 252. கணக்குத் தெரியாதவர் — 203. காசிப்பூரில் — அத்தியாயம் 11. காமினிகாஞ்சனம் தொடமுடியாமை — 442, 443; மத்தியிலும் ஓயாத சமாதி — 354. காரணம் கருதாத கருணைக்கடல் — 484. காளி பூஜை நாளில் சமாதி—404, 405. கிரீஷோடு பேசல் — 323 முதல் 329 வரை; கிரீஷைப்பற்றி — 324. கிறிஸ்து தரிசனம் — 348; கிறிஸ்துவைப் போல — 355, 356, 357. குண்டலினிமீது தியானம் — 299. கேசவரோடு

பேசல் — 165 முதல் 188 வரை. கோபுர உச்சியில் இருப்பவர்போல — 440. சசதரரோடு சம்பாஷணை — 264 முதல் 275 வரை. சித்திரம் எழுதுவதில் வல்லவர் — 203. சியாம்பசாரில் 'செத்துப் பிழைத்தல்' — 289. சியாம்பு கூரில் — 362 முதல் 406 வரை. சிறுவர்மீது அவர்க்குள்ள அன்பு — 284. சிஷ்யரைப்பெற்ற உணர்ச்சியற்றவர் — 373. தந்தையாரின் கனவு கையில் — 353. தம் உணவைப்பற்றி ஜாக்கிரதை — 469, 473. தனவந்தரைப் பெறவேண்டல் — 353. துறவின் அளவு — 353. தேவியிடம் அளவளாவல் — 351; சுத்தபக்திவேண்டல் — 170, 235; பேச்சு — 286. தேவேந்திரநாத் தாக்கூரைப்பற்றி — 309, 310. நரலீலையிற் பிரியம் உற்றவர் — 261, நரேந்திரரின் மண ஏற்பாட்டைக் கேட்டு அழல் — 465; நரேந்திரருக்காகப் பணம் கேட்டல் — 465; நரேந்திரரைப்பற்றி — 322, 323, 324, 327. நோய்க் காரணம் — 348, 391; நோய் தீரார்க்காரணம் — 418; நோயின் கடுமை — 415; நோயின் கருத்து — 353, 355, 409. பரவசநிலை — 319, 378, (முதலாவது) 410. பனிக்கட்டி உண்ணல் — 326. பாவக உணர்ச்சி பெறல் — 240. புண்ணிய தலத்தில் ஞானக்கிளர்ச்சி — 160, 161. பெற்ற அனுபவங்கள் — 221, 222, 289, 290; அனைத்தும் சைதன்யம் — 254; செடி விச்வரூபத்திற்குப் பூச்சென்டு — 255. தம்மிடம் தேவியாரும் அடியாரும் — 418; நிர்விகற்ப சமாதி — 353; பகவானும் தோல் உறையும் — 417; பலர் அவரிடம் வரக்காரணம் — 227; விராட்சொரூபக்காட்சி — 255. பெற்ற ஞானக்காட்சிகள்: அந்திமத்தில் பாயசம் அருந்தலைப்பற்றி — 411; அன்ன தாதாக்களைப்பற்றி — 411; இராக்காலைப்பற்றி — 411; சசி, சரத்தைப்பற்றி — 411. மிருகக் காட்சிச்சாலை போதல் — 250. முதற்சமாதி அனுபவம் — 188. மூன்று வார்த்தைகள் அவரைக் குத்தும் — 171. வாழ்வு ஒரு புத்தகம் — 450. வித்தியாசாகரைப்பற்றி — 229. ஹிருதயரது கன்றைப் பற்றி — 231.

குழந்தையைப் பிடித்தலும்: குழந்தை பிடித்தலும் (கதை) — 368.

கூச்சம் — 383.

கேசவர்: குருதேவர் அவர்க்காக நேர்ந்துகொள்ளல் — 106. குருதேவர் அவரது வீட்டில் — 237 முதல் 242 வரை. குருதேவரது சம்பாஷணை அவரொடு — 163 முதல் 188 வரை. சாதுசங்க வசதி பெருமை — 261, 262. பக்தர் — 236. நோய் நீங்கக் குருதேவரது பிரார்த்தனை — 247. நோயுற்ற காரணம் — 239, 240, 241. மயிலைப்போல் — 351. விஜயரும் கேசவரும் — 171.

கேதார் — 453.

கோபம்: அவசியம் — 118.

கோபாலசேன் — 190, 252.

கோயிற் பூசாரிகள் (கதை) — 193.

கோர்சிங் — 252, 354.

கௌபீன பஞ்சகம் — 446, 447.
கௌரி பண்டிதரும்: 'இது'வும் — 340.

ச

சக்தி: தேவியும் பிரம்மமும் ஒன்றே — 167. பிரகாசம் உயிர்களிடம் அளவு வேறுபாடு — 136.
சங்கராசாரியாரும் பறையரும் — 419.
சசதர்: குருதேவரோடு பேசல் — 263 முதல் 285 வரை.
சசி: பூஜை — 460. தகப்பனார் மடம் வரல் — 480, 481.
சடசமாதி — 270,
சந்தியாவந்தனம் — 104, 300.
சம்புமல்லிக் — 174, 186, 370.
சமாசாரப் பத்திரிகை — 338.
சமாதி: அதன்பின் கடமை இல்லை — 182, 183. அதன்பின்னும் வாழ்பவர் — 184, 354. உப்புப் பொம்மைபோல் — 133, நீண்டு நிலைத்திருக்க இயலாமை—135.
சர்க்கார் (டாக்டர்); அவர்க்கு ஞானவிழிப்பு — 396. உணர்ச்சி மிக்கவர் — 390, கிரிஷோடு வழக்காடல் — 364, 365. குருதேவர் மீது நினைவு— 375. குருதேவரால் நஷ்டம் — 375. சம்பாஷணை — 363 முதல் 376 வரை, 379 முதல் 401 வரை. பணம் மனைவிப் பைத்தியம் — 399. பாததூளி அணிதல் — 389. வறண்ட அறிவுச் சுரங்கம் — 399.
சரணாகதி — 148, 342, 486.
சருக்கரைக் குன்றும் எறும்பும் — 133.
சனக மன்னர் — 208, 209.
சாக்கிரதை: துஷ்டனிடம் — 293. முன்று விஷயங்களில் — 293.
சாதகப்புள் போல்—214.
சாதனம்: அதன் அவசியம் — 144, 159. எதுவரை பழகல் — 143, தனியிடத்தில் — 158. பழகுபவர் நான்கு வகை — 146, 147.
சாது: சங்கம் — 296, 371, 379. சின்மய வடிவம் — 149.
சாலவித்தைக் காரன் (கதை)—365, 366.
சாஸ்திரம்: பொருள் இருவகை—333; விதி அவசியமா — 269.
சித்தசுத்தியும் தரிசனமும் — 201. 369.
சித்தர்கள்: இருவகை — 214.
சியாம் — 385 முதல் 388 வரை.
சிரத்தை — 319.
சிவநாதர் — 176, 183, 184, 304, 400.
சிவராம்—277.

சீடர் ஆக்குமுன் சுபாவம் அறிதல் — 371,

சுகர்: பிரம்மக்கடலில் மூழ்கவில்லை—133. பெரிய எறும்புபோல்—132.

சுத்தமனம்: சுத்த புத்தி, சுத்த ஆத்மன் மூன்றும் ஒன்று — 324, 327. பகவானே —365.

சுரக்கலவை — 264.

சுரேந்திரர் —152, 453, 454, 458.

சுவர்ணமீன்கள் — 396.

சுழுமுனை: நாடி — 349, 350, 373.

செயநாராயணர் (பண்டிதர்) 250.

சேற்றுமீன் — 432.

சேஷத்தலைவர் — 311, 338.

சைதன்யர்: உலக இச்சையைப்பற்றி —158.

ஞ

ஞானம்: அடைந்தபின் சங்கம் நடத்தல் — 230. உதிக்கப் பாவம் ஏற்றல் — 450. குண்டலினி கிளம்பினால் — 349. நாணம் பகை பயம் உதவாது — 204. ஞானக்காட்சிகள் (குருதேவரின்) — 352- ஞானத்தீயும் முள்ளும் — 369. ஞானதானம் (காசிப்பூரில்) — 407 408. ஞானநெறியும் பக்தி நெறியும் — 135. ஞானம் அஞ்ஞானம் — 384. ஞானமும் நோயும் — 239, 240, 241. ஞானயோகம் — 179. யாரும் பெறலாம் — 213. விழிக்கப்பெற்றவர்க்கு அடையாளம் — 214. விழிப்பு — 328. வேறுபாடு (விசாரம் தியானம் அருட்காட்சி இவற்றில்) — 328.

ஞானி: அவருடைய அறிகுறிகள் — 259, 279, 299. சாதகப்புள் போன்றவர் — 214. ஞானியும் பக்தனும் யோகியும் மெய்ப்பொருளைக் காணுமவகை — 166. ஞானியும் படிப்பும் — 393. பிறர்க்காகப் பூஜைசெய்பவர் — 288. புண்ணியம் பாவம் கடந்தவர் — 211.

த

தங்கச் சுரங்கம்: — 255.

தட்டானது புத்தி: — 385.

தயாநந்தர்: — 295.

தையும்: கருமமும் — 131. பந்தம் — 230. பற்றும் — 187, 188.

தரிசனத்திற்குப்பின்: உடல் — 269.

தருக்கம்: (ஆங்கிலத்தில்) — 122. ஈசனைப்பற்றி — 436. தரிசனம் வரை — 328, 329. வேண்டாம் — 234.

தருமம்: தானமும் — 316. முடவரும் — 256.

தற்கொலை: செய்தபயன் — 190. பாவம் — 190.

தியானம்: ஞானியின் — 399, 400. நிலையில் உணர்ச்சி — 363. மாதர் முன் இயலாது — 467. முறைகள் மூன்று — 110.

திருடர்: பொம்மைக்கு அஞ்சுதல் — 366. மூவர் கதை — 220.

திரைலிங்கசுவாமி: — 210.

திரைலோக்யர்: 254, 319, 340.

தீயாரொடு பழகுதல்: — 116.

துடிப்பு: ஈசனுக்காக — 206.

துயரம்: ஈசனுக்காக — 372. உயர்ந்த மனநிலை அதன் பயன் — 467.

துறத்தல்: அவசியம் — 420. எப்போது — 217. மனத்தால் — 294, 298, 307, 420. மனவருத்தத்தோடு — 431.

துறவி: கடுமையான விதிகள் அவர்க்கு ஏன் — 247. காமகாஞ்சன ஆசை — 247. துறவிச்சீடரின் புதுப்பெயர்கள் — 459. தேனீயைப்போல் — 431.

தூப்புக்காரியின்: கருவம் — 385.

தெய்விகக் கவர்ச்சி — 255.

தென்னைமட்டையின்: தழும்புபோல — 198.

தேவி: அம்மை — 239. தேவியே எல்லாம் — 252. தேவியே நான் — 248.

தேவேந்திரநாத் தாக்கூர்: குருதேவரது கருத்து அவரைப்பற்றி — 309, 310.

தொண்டைவரை: அம்பாள் (கதை) — 273.

தோத்தாப்புரி: 233, 353, 436.

தோழர்: நால்வர் கதை — 230.

ந

நம்பிக்கையின்: வலிமை — 120, 121, 319.

நரலீலை — 251, 261, 348.

நரேந்திரர்: அடிக்கடி வரவேண்டப்படல் — 125. அதிபுத்திசாலி — 122. அவரது மிடுக்கு — 126. அவரைப்பற்றிக் குருதேவர் — 322, 323, 324, 327. அவருடைய அனுபவங்கள்; குண்டலினி விழிப்பு — 412; இடைபிங்கலைக் காட்சி — 412. அழுகையும் துடிப்பும் — 414. இரண்டாந்தடவை குருதேவரைக் கண்டது — 471. ஈசனைப்பற்றி; வாதம் — 333; காட்சி — 352. உடல்விடும் காலம் — 466. உணர்வு இழத்தல் எனக்கு வேண்டாம் — 332. உம்மைக் காணவருகிறேன், கேட்க அன்று — 469. உறையினின்றும் வெளிவந்த வாள்போல் — 428. கடவுள் இல்லை யென முறையிடல் — 438, 475. காசிப்பூரில் நிகழ்ந்தவை — 471 முதல் 474 வரை. காளியோடு வழக்காடல் — 462. கிரீஷோடு வாதம் — 327. கீதைப் பாடம் — 485. குருதேவர்: தொட்ட

தால் அவர்க்குவந்த வெறி — 465; பகவான்போன்ற புருஷர் எனல் — 389. பிரேமை குருதேவர்க்கு அவரிடம் — 284; முதன் முறை கண்டது — 470. சமாதிக்கு அப்பாலான நிலை — 472. சமாதியில் மூழ்கும் ஆசையும் கண்டனமும் — 413. சோதிக்காட்சி — 464. நண்பரோடு வரல் — 148. நாஸ்திகம் கற்றல் — 256. நித்தியர் — 121. நிர்விகற்ப சமாதியில் இருத்தல் — 466. படித்ததை மறக்கும் மருந்தில் ஆசை — 412. பழம்பிறவி உணர்ச்சி — 466. பாடல் — 151. புத்த கயை செல்லல் — 423. பையனைப்போல் வேடிக்கை செய்தல் — 463. யோகசித்திகளில் வெறுப்பு — 465. வீரபாவனை — 420.

நாம ஜெபம்: அதன் மகிமை — 120. அதில் ருசி 213. அதோடு துடிப்பின் அவசியம் — 206, 320. பாவத்தை வெல்லும் — 169. புத்தகம் முழுவதும் 'ராம'—136. மரணத்தை எதிர்க்கும் ஆயுதம் — 217.

நாரத பக்தி — 264; நாரத பிரஹ்லாதர் — 368.

நானக்: குருதேவரே அவர்—354. சம்பிரதாய சாதுக்கள் — 154.

நித்தியகோபால் — 205.

நிதிகுவிந்த அறைபோல் — 159.

நிர்வாண ஷட்கம் — 445.

நிரஞ்சன் — 409.

நீர்க்கோழிபோல் — 268, 367.

நீர்ப்பாம்பை விழுங்கிய தவளைக் கதை — 195.

நெஞ்சக் கோயில் — 156.

நெய் காய்ச்சலும் ஒலியும்போல் — 134.

நேதி: முறையின் முடிவு — 135.

ப

பக்தன்: குழந்தைபோல — 198. சர்க்கரையாக விரும்பான் — 165. பட்டடைபோல் — 293. பல்குநதிபோல் — 130.

பக்தி: அவசியம்—138, 139, 298. இந்திரிய அடக்கம் அதனால்—369. உலகத்துயரம் அதை வெளியே தள்ளும் — 435. எனும் எண்ணெய் பூசல் — 111. எனும் வெண்ணெய் — 112. கலியுகத்திற்கு மார்க்கம் — 134, 174. காயானது பழுத்தது—200. சுத்த பக்தி — 246, 303. செய்யத் தனியிடம் — 111, 112. ஞானசாதனம் — 154. ஞானமும் பக்தியும்—273. தேவை (குடநீர் போதும்)—182. பித்து — 304. பிரம்மஞானம் தரும் — 198. முக்குண பக்தி — 177. ராக, வைதி — 200.

பகவானது: வேலை — 317.

பங்கிம் சந்தர் சட்டர்ஜி: அவரது நூலைப்பற்றி — 338. உலகப் பொருள் நினைவு—315. குருதேவரோடு சம்பாஷணை—313 முதல் 320 வரை. பெயர்க்காரணம் — 313.

பச்சோந்திக் கதை — 181.

பஞ்சாபி சாது — 358.

பட்டுப்பூச்சியும்: உலகப்பற்றுடையாரும் — 214.

பண்டிதர்: இயல்பு — 131. சாதுக்கள் அல்லர் — 232. தோணியில் ஒரு பிரயாணியோடு செல்லல் (கதை) — 251. நோயுற்ற கனிபோல், கழுகுகள்போல் — 131.

பணம்: உபாதி — 196. தேடும் நோக்கம் — 145.

பத்மலோசன்: கதை — 156.

பரதரும் மானும் — 358.

பரமஹம்ஸர்: குழந்தைபோல்—277. பைத்தியக்காரனைப்போல்—278.

பரோபகாரம்: தனக்கே நன்மை — 317.

பலராம் போஸ்—127, 142, 276, 325.

பலியும்: கட்டையும், பலியிடுவோனும் ஈசன் — 417.

பவநாத் — 209, 334. பெருவீரனுயிரு எனும் புத்திமதி — 443.

பவாஹாரி பாபா: குருதேவரது படம் அவரிடம் — 164.

பற்றுள்ளவர்க்கும் நற்கதி — 120.

பறவையும்: கப்பலின் பாய்மரமும் (கதை)—341.

பாடல்கள் (முதல் வார்த்தை வரிசையில்): அடரிருளில் அன்னுய் — 382. அம்மைகாளி — 138. அமைதிபெறப் புலம்புகின்றேம் — 492. அன்னுய் இத்துயர் — 245. அன்னுய் எனைப்பித்தன் — 379, 380. அன்னை பெயர் நாஓத — 178, 300. அனித்திய மனமும் புத்தியும் — 445. ஆடுவதும் ஈசா — 253. ஆழ்ந்து மூழ்குக அருமை நெஞ்சே — 185. இந்நிலத்து மண்ணிலே யாம் — 486. இப்பிறவிக்கடல் மிதக்கும் — 303. இறையியல்பை அறிவதற்கா — 138, 139. இன்னும் ஒரு மூறை நாம் — 470. எண முடல்போல் நிகழ்விகாரம் — 446. எத்துணைத்தியானம் — 146. என் நெஞ்சில் ஆழ்ந்துறையும் — 186. என் நெஞ்சை உன்னேடே — 447. என் பரம எனக்கெல்லா — 215. என்ன சுந்தரசோபை — 383. என்ன புதுமை யிவை வாழ்முறையும் — 421. என்னம்மே யானுனது — 301. எனக்கொரு மரணமோ — 493. ஒழித்திடுக உன்மோகம் — 492. கண்மணி, கண்ணு — 422. காற்றுடியோரிலக்ஷம் — 303. சங்கூதினீ கலக்கமெழ — 156. சாதாரணமது நான் — 403. சிவனே நின் இடியேறு — 325. ஞானவானிற் பிரேமை — 152, 153. தாமரை இதழ்மேல் தத்தளி — 421. தியானிப்பாய் பூரணமாம் — 447. நின் முகக் காட்சியினுல் — 437. நின்முகத்தின் தரிசனத்தால் — 330, 331. நின் னடியின் நிழல்நாடி — 253. நினைமின் மனனே — 302. பிரம்மமது ஒன்றே — 248. பிரம்மாநந்த சொரூபியாய் — 483. பிரேமையெனும் கிண்ணமதில் — 488. போற்றி அபார பரப்பிரம்மம் — 377. மலர்ந்த முகத்தொடும் — 151.

மறையோர் வழிபடுவர் — 248. மன்னர்க்கரசே — 373. மூழ்குக நெஞ்சே — 155. வருக அன்னுய் வருக — 335. வாவா இங்கே உன் தலேயை — 277. வாழி எம் ஈசா — 488, வேதாந்தச் சோலேயிலே — 446.

பாதூரி (டாக்டர்) — 392, 393, 394, 397.

பாபுராம் — 274, 275.

பாரநகோர் மடம் — 460. சிவராத்திரி — 462, 463. தவ வாழ்வு — 461. தீவிர வைராக்கியம் — 475. பிரசன்ன வெளியேறல், மீளல் — 476. 479, 480.

பாஷை : சுடாதன, சுடப்பட்டன — 258. புதுப்பாஷை போன்றவர் — 265.

பிரகிருதி புருஷன் : குணங்கள் மாறிச் சுமத்தப்படல் — 345, 449.

பிரசங்கம் : ஈசனே அடைந்தபின் — 156. பயன்பெறக் கட்டளே வேண்டும் — 172.

பிரசாரம் : கருவத்தால் விளேவது — 314.

பிரணவ ஓசை — 248.

பிரதாப்சந்திரர் — 398, 399. குருதேவரைப்பற்றி — 354.

பிரதிமை : சைதன்ய வடிவம் — 159.

பிரம்மஞ்ஞான சபை — 295, 387, 388, 397, 398.

பிரம்மம் : அதன் இயல்பு — 248. ஆத்மன், பகவான் மூன்றும் ஒன்று — 165. உழைப்பு அதைப் பெற அவசியம் : 134. எச்சிற்படாத பொருள் — 132. காற்றைப்போல் — 419. சக்தி — 139, 140. சகுணம் — 180. சர்க்கரைக்குன்று — 133. சொல்லுக்கடங்காதது — 133, 384. ஞானம் — 132. ஞானம் பெற்றபின் பேச்சு — 134. தேவி — 139. பக்தியால் அடைதல் — 198. பகவானுதல் — 125. பனிக்கட்டியும் பிரம்மக் கடலும் — 179. ருசிபேதம் — 273. வேதாந்த மதத்தின்படி — 165.

பிராணகிருஷ்ணர் — 257.

பிராம்மணமங்கை — 337. அவரது சகோதரி — 344. குருதேவர்மீது பக்தியும் ஆனந்தமும் — 344, 346. மார்த்தா மேரிபோல் — 347.

பிராம்மோக்கள் : ஆணேயின்றிப் போதனே — 266. இந்துமத கொள்கைக்குத் திரும்பார் — 273. குறுகிய மதக்கொள்கை — 260. சங்கம் உண்டாக்கும் திறமை — 260.

பிரார்த்தனே : உயர்ந்த வகை — 325, 387. கேட்குமா — 271, 316. செய் — 487.

பிருந்தாவனம் : தூயது — 162.

பிரேம பக்தி — 199, 200, 201. இரு லக்ஷணங்கள் — 212.

புண்ணியத்தலமும் : ஞானக்கிளர்ச்சியும் — 160.

புத்தகக் கல்வி : தரிசனத்திற்கு அவசியம் இல்லே — 318, 370.

புத்தர்: அவதாரம் — 441. ஈசனைப்பற்றி — 436. துறவு — 424. நாஸ்திகர் அல்லர் — 423, 424. போதனை — 424. மூன்றுவகை — 423. வைராக்கியம் — 425.

புத்தி: பலவகை — 440.

புல் தின்ற புலி: கதை — 223.

புல்லாங்குழல் — 219.

பூபதி — 377.

பூனைக்குட்டி போல் — 114.

பெண் ஆமையைப்போல் — 111.

பெண்கள்: கெட்டவரா — 218. தேவியம்மை வடிவம் — 194. பாடல் கற்றல் — 435.

பேச்சு: பயனற்றது — 272.

பேயும்: தலைமயிரும் (கதை) — 339.

பைத்தியம்: ஈசன் நினைவினாலா, சடப்பொருள் நினைவினாலா — 400, 401. பைத்தியக்காரி — 426, 427, 432, 433.

பைரவி பிராம்மணி — 353.

ம

ம: — கடல் பொங்கும் காரணம் — 208. கருத்து குருதேவரைப்பற்றி — 125, 157. சகி பாவனை — 420. சசதரைப்பற்றி — 279. தியான நிலை — 158. மனைவியார் — 455. விக்கிரக வழிபாடு — 259. ஸாக்கிரட்டீஸைப்பற்றி — 227

மக்கள்: பதர் — 176. வேறுபாடு — 394, 396.

மகாத்மாக்கள் — 295, 388.

மகிமாசரண் — 244, 246, 306 முதல் 312 வரை, 349, 354, 376.

மங்கர் — 397.

மணிலால் மல்லிக் — 210, 222, 273.

மதங்கள்: ஈசனை அடையும் வழிகள் — 207. பிழைபட்டன — 292. மதச்சண்டை — 260. மதவெறி — 207. முத்திப் பாதைகள் — 292.

மதுசூதனர் (மருத்துவர்) — 246.

மதுரபாபு: பரவசநிலை — 381.

மயிலும் அபினுருண்டையும் — 124.

மரணம்: தடுத்தற்கரியது — 217. தயாராயிருத்தல் — 216. நினைவு — 137. பின்வாழ்வு — 257.

மருத்துவர்: கடமை — 379. மூவகை — 178.

மலயமாருதம் போல் — 432.

மறுபிறவி: உண்டு — 185, 358,

மனம்: அதைக் கடவுளிடம் நிறுத்தல் — 110. ஊட்டும் சாயம் பெறும் 168. சிதறிய மனம் — 301. நரகம் செல்லல் மனதால் — 468. பந்த முத்திகள் அதற்கே — 285. பாவனைக்கு ஏற்ற லாபம் — 213. புலம்ப நிலை — 233. மூழ்க மனதால் — 320. யாவும் மனமே — 169. வலிமையால் முக்தனுதல் — 169. வாழும் பூமிகள் — 182, 183.

மனமோகன் (கொன்னகர்) — 435.

மனிதர்: உண்மை மனிதர் — 363. சுபாவம் பலவகை — 171. நான்கு வகையினர் — 191.

மனைவி: தற்கொலை செய்யினும் ஞானவாழ்வு — 157. மக்களைக் காத்தல் கடமை — 107.

மாங்காய்: தோலின் அவசியம் — 218.

மாதரது சேர்க்கை — 241.

மாயை: அதன் காட்சி — 351; அதனுற் சொரூப மறதி — 220, 276 அவசியம் — 218. இருவகை — 218, 219.

மார்த்தா மேரி — 347, 355.

மித்தை போக்கல் — 366.

மிடுக்கும் உழவுமாடும் — 126.

மிஸ்ரா — 402. சோதிக்காட்சி, வீரநிலை — 402.

மீன்கூடை: கதை — 262.

முக்குணம்: இயல்புகள்—176, 177. பக்தி—177. பற்றிய கதை—220.

முகர்ஜி சகோதரர் — 281, 285, 290.

முதலையின் முதுகுத் தோல்போல் — 264, 272.

மெய்ப்பொருள்: ஞானியும், பக்தனும், யோகியும் காணும் வகை—166.

ய

யதி பஞ்சகம் — 218.

யது மல்லிக் — 271, 272, 395.

யந்திரம், யந்திரி — 305.

யானை: கண்ட குருடர் கதை — 207, 208. குட்டை புகல் — 381. வடிவ ஈசன் — 115.

யுக்தி: பகவானை அறியாது — 338.

யோகம், அதனின்றும் தவறுவதேன் — 281. நிலைத்த மனம் தேவை — 144. பலவகைகள் குருதேவர் பழகல் — 354. போக இணைவு — 310.

யோகவாசிஷ்டம்: குருதேவரது கருத்து — 478.

யோகி: அவனது இலக்ஷியம் — 166. அவனது பார்வை — 145. இருவகை — 160.

ர

ரபீந்திரர் — 490, 491, 492, 494.

ரசமற்ற வாழ்வு — 371.

ராக்கால்: குருதேவரோடு வாழ்தல் — 244. குழந்தை பாவனை — 203. கோபம் — 249. சமாதி பெற்றமை — 283. சாதனம் அவசியம் — 482. தீவிர வைராக்கியம் — 483.

ராம்லால் — 215.

ராமரது இச்சை (கதை) — 307 முதல் 309 வரை.

ராமரைப்பற்றி: அனுமார் — 137.

ல

லாட்டு — 151; பகவானைக் தோன்றல் — 417.

வ

வக்காலத்து: ஈசனுக்குக் கொடு — 385.

வஞ்சகமும்: கைகளின் கனமும் — 242.

வரம்பற்ற முன்னேற்றம் — 364.

வழக்காடுதல்: எதுவரை — 180, 328, 361. வீண் — 328.

வறுக்கும் நெல்போல் — 368.

வாசனையின்: வலிமை — 226, 337.

வால்: விழப்பெற்றவர் — 309.

வாழ்க்கை: தூக்கம் — 233.

விசயர்—171, 376. அவர்க்கு உபதேசம் — 291 முதல் 294 வரை. அவரது தூரக்காட்சி — 381. கதவைத் தட்டிக்கொண்டிருக்கிறார் — 467. குருதேவரோடு சம்பாஷணை — 189 முதல் 209 வரை. குருதேவரை வணங்கல் — 377.

விசாரம்: ஈசனை அறியாது — 328. ஒழிக — 271. புத்தியைக் கலக்கும் — 203.

விஞ்ஞானி—135. அவனிடம் பக்தி — 137. இயல்பு — 279.

விட்டிற்பூச்சி—369. அழியான் பக்தன் அதைப்போல் — 369.

வித்தியாசாகர்—128. ஈசனைப்பற்றி முறையிடல் — 187. கப்பல் போன்றவர் — 142. குருதேவர் அவரைப்பற்றி — 188. குருதேவரோடு சம்பாஷணை — 130 முதல் 142 வரை. பக்குவம் பெற்றவர் — 143.

விதையற்ற பூசணிபோல்: உடல் — 448.

வியாசர்: இயற்றிய மூன்று தோஷங்கள் — 208. இல்லறத்தில் ஞானம் பெறு —424.

வியாவகாரிகம்: பாரமார்த்திகமும் — 363.



ம—: "அறிவு ஒரு விதத்திலாவது நமக்கு நன்மை செய்கிறது; நமக்கு ஒன்றும் தெரியாது என்றும், நாம் ஒன்றுக்கும் உதவாதவர் என்றும் உணரும் படி நம்மைச் செய்கிறது."

குருதேவர்: "சரி நீ சொல்வது! யான் ஒன்றுக்கும் உதவாதவன், நான் ஓர் ஆளு மில்லை.

"ஆங்கில வான சாஸ்திரத்தில் உனக்கு நம்பிக்கை உண்டா?"

ம—: "மேற்றிசை வான சாஸ்திர விதிகளை உபயோகித்துப் புதிய உண்மைகளைக் கண்டு பிடித்தல் இயலும். யுரானஸ் என்னும் ஒரு கிரகத்தின் ஒழுங்கற்ற சலனத்தைக் கவனித்தறிந்த வான நூலார் தமது தூரதரிசினி என்னும் கருவி வழியாக ஆகாயத்தை நோக்கி, நெப்சூன் வானத்தில் பிரகாசிப் பதைக் கண்டுபிடித்தனர். அவர்கள் கிரகணங்கள் உண்டாகும் காலங்களையும் முன்னரே அறிவிப்பார்."

குருதேவர்: "ஆம், அது அப்படித்தான்."

வண்டி சென்றுகொண்டே இருந்தது. அவர்கள் ஆதரது வீட்டிற்கு அருகே வந்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ம—விடம் "உண்மையில் நிலைத்து நில், ஈசனை அடைவது நிச்சயம்" என்று கூறினர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆதரது வீட்டுக்கு வந்து, கூடத்தில் ஓர் ஆசனத்தில் அமர்ந்தார். ராம்லால், ஆதர், ம—, முதலிய அடியார்களும் அவரருகே உட்கார்ந்தனர். ராக்கால் தமது தந்தையோடு கல்கத்தாவில் தங்கிக்கொண்டிருந்தார்.

குருதேவர் (ஆதரிடம்): "நான் வருவதாக நீர் ராக்காலிடம் சொல்லவில்லையா?"

ஆதர்: "ஆம், நான் அவர்க்குச் சொல்லியனுப்பித்தேன்."

குருதேவர் ராக்காலைக் காண ஆவலாயிருப்பதைக் கண்டு, ஆதர் உடனே அவரை அழைத்து வருதற்கெனத் தமது வண்டியை அனுப்பித்தனர். ஆதர் அன்று குருதேவரைக் காணத் துடித்துக்கொண்டிருந்தார். ஆனால் ஸ்ரீ ராமகிருஷ்ணர் வரப்போவதைப் பற்றி அவர்க்கு நிச்சயமாய்த் தெரியாது.

ஆதர்: "நெடு நாளாகத் தேவீர் இங்கு எழுந்தருளவில்லை. எழுந்தருள வேண்டுமென்னு இன்று நான் ஈசனிடம் பிரார்த்தனை செய்தேன். நான் கண்ணீரும் விட்டேன்."

குருதேவர் மனமகிழ்ந்து, புன்சிரிப்போடு "என்ன சொல்லுகிறாய்? அப்படியா?" என்று கூறினர்,

அப்போது அந்தி வேளை. விளக்குகள் கொளுத்தப்பட்டன. ஸ்ரீ ராமகிருஷ்ணர் தேவியைக் கைகூப்பி வணங்கினர், தியானத்தில் ஆழ்ந்தவராய் அமைதியாய் உட்கார்ந்திருந்தனர். பின் ஈசனது நாமங்களைத் தமது இனிய குரலில் "கோவிந்த! கோவிந்த! ஸச்சிதானந்த! ஹரி! ஹரி!" என்று பாடத்

தொடங்கினர். அவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் அடியார்களுடைய காதுகளில் அமுதை ஊற்றின.

ஆதர் ஸ்ரீ ராமகிருஷ்ணர்க்குப் பழங்களும் தின்பண்டங்களும் வழங்கினர்.

ஞாயிறு, ஜூலை 22, 1883

இன்று விடுமுறை நாளாதலின், அதன் பயனைப் பல இல்லற அடியார்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தக்ஷிணேசுவரக் கோயிற் பூஞ்சோலையில் அவரது அறையில் தரிசிக்க வந்தனர். ஆதர், ராக்கால், ம— எனும் மூவரும் கல்கத்தாவிலிருந்து ஒரு வாடகை வண்டியில் வந்திருந்தனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது நடுப்பகல் உணவை யுண்டபின், ஒரு சிறிது இளைப்பாறிக்கொண்டார். அவ்வறை முழுதும் தூய்மையும் பரிசுத்தமும் குடிகொண்டிருந்தன. சுவர்களிலே தேவர்கள் தேவிகள் இவர்களின் படங்கள் தொங்கின; அவற்றுள் ஒன்று; மூழ்கிக்கொண்டிருக்கும் பீட்டரைக் கிறிஸ்து நாதர் ஆபத்தினின்றும் காப்பாற்றும் படம். அறைக்கு வெளியே நறுமண மலர்களைச் சுமந்துகொண்டிருந்த செடிகள் இருந்தன; கங்கை தெற்கு முகமாக ஓடுவதையும் காணலாகும். குருதேவர் வடக்கு நோக்கிச் சிறு கட்டிலிலே உட்கார்ந்திருந்தார்; அடியார்களோ தரையில் விரிக்கப்பட்டிருந்த பாய்களின்மீதும் கம்பளங்களின்மீதும் உட்கார்ந்திருந்தனர். எல்லோருடைய கண்களும் அவரை நோக்கித் திரும்பியிருந்தன.

ஓர் அடியார்: "தாங்கள் பண்டிதர் வித்தியாசாகரைச்சந்தித்தீர்களே, அவரைப்பற்றித் தங்களது அபிப்பிராயம் யாதோ?"

குருதேவர்: "வித்யாசாகரிடம் பாண்டித்தியமும் தயையும் இரண்டும் உள்ளன. ஆனால் அவரிடம் (அந்தர்திருஷ்டி) உண்முகக் காட்சி இல்லை. பொன் அவர்க்குள் மறைந்து கிடக்கிறது. அவர் அதை மட்டும் கண்டுபிடித்திருப்பாராயின், அவரது கருமங்கள் குறைந்திருக்கும்; கடைசியில் ஒன்றுமில்லாமல் நின்றுவிடும். ஈசன் தமது நெஞ்சில் வாழ்வதை மட்டும் அவர் அறிந்திருப்பாராயின், அவரது மனம் ஈசனை நோக்கி நினைவாலும் தியானத்தாலும் திருப்பப்பட்டிருக்கும். சிலர் நெடுங்காலம் நிஷ்காம (பயன் கருதாத) கருமத்தைச் செய்து தீரவேண்டும்; அதன் பின்பே அவர்கட்கு வைராக்கியம் பழகவும், தம்முடைய மனங்களை ஞான இலக்ஷியத்தை நோக்கித் திருப்பவும் முடியும், முடிவில் ஈசனிடத்து இலயம் அடைந்துவிடுகின்றனர்.

"வித்யாசாகர் செய்துவரும் கருமங்கள் நல்லவை. தயை ஒரு மேன்மையான குணம். தயைக்கும் மாயைக்கும் (பற்றுக்கும்) மிக்க வேறுபாடு உண்டு. தயை நல்லது, ஆனால் மாயை அப்படியன்று. மாயையாவது ஒருவரது மனைவி, மக்கள், அண்ணன், தம்பி, தங்கை, தமக்கை, மருமகன், தந்தை, தாய் என்பவரிடம் காட்டும் அன்பு. ஆனால் தயையோ, யாதொரு வேறுபாடுமின்றி, படைக்கப்பட்ட எல்லா உயிர்கள்மீதும் சமமாக அன்பு செய்தலாம்."

அதை அறிய அது பிரியப்படுவதும் இல்லை. அது அறிவதெல்லாம் 'எனக்கு ஓர் அம்மா இருக்கிறாள், கவலை எனக்கு எதற்காக?' என்பதே. ஒரு வேலைக் காரியின் குழந்தைக்கும் தனக்கு ஒரு தாய் இருப்பது தெரியும். அது எஜமான னது குழந்தையோடு சண்டை போட்டாலும், 'யான் எனது அம்மாவிடம் சொல் வேன், எனக்கு அம்மா இருக்கிறாளே' என்று சொல்லும். எனது மனோ பாவனையும் ஒரு குழந்தைக்குரிய தொன்றே."

திடீரென ஸ்ரீராமகிருஷ்ணர் ம—வின் கவனத்தை இழுத்து, தனது மார் பைத் தொட்டுக்கொண்டே, "சரி இங்கே ஏதாவது இருக்கவேண்டும். அப் படித்தானே?" என்று கேட்டார்,

ம— ஆச்சரியத்தோடு குருதேவரை நோக்கினாள். அவர் தமக்குள்ளே "தேவியே குருதேவரது நெஞ்சில் வசிக்கிறாளா? தேவியே மனித வர்க்கத் தின் நலங்கருதி இம் மனித உடலை எடுத்துக்கொண்டாளோ?" என்று அவர் தமக்குள் சொல்லிக்கொண்டார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தேவியிடம் பின்வருமாறு பிரார்த்தித்துக்கொண்டிருந் தார்: "அம்மே! பிரணவ சொரூபிணி! தேவீ, உன்னைப்பற்றி என்னென்ன சொல்லுகிறார்கள்! ஆனால் அவற்றில் ஒன்றையாவது யான் அறியேன். தேவீ, யான் ஒன்றுமறியேன். உனது திருவடியிலே யான் சரணம் புகுந்துவிட்டேன். என்னைக் காக்குமாறு உன்னிடமே வேண்டுகின்றேன். தேவீ, உனது திருவடி யின்மீது சுத்த அன்பு—அதாவது, யாதொன்றையும் பதிலாக வேண்டாத பக்தி—எனக்கு உண்டாகும்படி மட்டும் பிரார்த்திக்கிறேன், அம்மே உனது ஜகன்மோஹன (உலகத்தோரை மோகிக்கும்படி செய்யும்) மாயையால் என்னை மயக்காதே. என்னைக் காப்பாற்றும்படி வேண்டுகிறேன். உன்னிடம் யான் சரணமடைந்துளேன்."

கோயிலில் மாலைப் பூஜை முடிந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் மறுபடியும் ம—வோடு தமது அறையில் அமர்ந்திருந்தார்,

குருதேவர்: "நிராகார ஈசனை (அருவக் கடவுளை) உனது இலக்கிய மாக ஒப்புக்கொண்டுள்ளனை அல்லவா?"

ம—: "ஆம், ஐயன்மீர். ஆனால் தேவீர் சொல்வதையும் யான் நம்பு கிறேன்—அதாவது, ஈசனுக்கு எல்லாம் இயலும் என்பதை. ஈசனுக்கு உருவங் களைக் கொள்வதும் முற்றிலும் முடியும்."

குருதேவர்: "நல்லது. இன்னும் சைதன்ய மயமான நிலையில் உயிர்ப் பொருளும் சடப்பொருளும் ஆன பிரபஞ்ச முழுவதும் அவர் வியாபித்துள்ளார். உன்னிடம் ஒன்று கேட்கிறேன், பணத்தை நோக்கி உன்மனம் ஓடுகின்றதா?"

ம—: "இல்லை, ஐயன்மீர். ஆனால் கவலை நீங்கி இருக்கும் பொருட்டும் கவலையின்றி ஈசனை நினைக்கும் திறமை அடையும் பொருட்டும். பணம் சம் பாதிக்க நினைக்கிறேன்."

குருதேவர்: "அது முற்றிலும் இயல்புதானே."

ம—: "அது பண ஆசையா? யான் அப்படிக் கருதவில்லை."

குருதேவர்: "நீ சொல்வது சரி. இல்லாவிடில் உன் குழந்தைகளை யார் காப்பாற்றுவார்கள்? நீ உன்னைக் கருத்தாவாக நினையாது போனால் அவர்கள் கதி என்னவாகும்?"

ம—: "ஒருவன் தனக்குக் கடமை உண்டென்று நினைக்கும்வரை ஞானமடைய முடியாதென்று யான் கேள்விப்பட்டிருக்கிறேன். கடமை பொசுக்கும் சூரியனைப்போன்றது."

குருதேவர்: "உனது தற்கால பாவனை இருக்கட்டும். கடமையைப் பற்றிய உணர்ச்சி தானாக நழுவும்போது அது வேறுவிதமாக மாறும்."

புதன், நவம்பர் 28: 1883

மாலை இரண்டு மணிக்கு கேசவ சந்திரசேனர் வாழ்ந்து வந்த 'அல்லிக் குடிசை'க்கு முன்னால் 'வட்டச் சாலை'யின் நடைபாதையின்மீது ம—அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருந்தார். அவர் ஸ்ரீராமகிருஷ்ணரது வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். கேசவரது நோய் கவலைக்கிடமான நிலையினை அடைந்திருந்தது; அவர் நோய் தீர்ந்து எழுதற்கு ஏறக்குறைய ஒரு வழியுமில்லை என்பதாயிற்று. குருதேவர் கேசவரிடம் மிக்க நேசம் உடையவராதலின், தக்ஷிணேசுவரத்திலிருந்து அவரைக் காணுதற்காக வந்துகொண்டிருந்தார்.

ஏறக்குறைய ஐந்து மணிக்கு ஒரு வண்டி 'அல்லிக் குடிசை'க்கு முன்பு நின்றது; லாட்டு முதலான பல அடியார்களோடும் ராக்காலோடும் ஸ்ரீ ராம கிருஷ்ணர் வெளியே வந்தார். அவரைக் கேசவரது உறவினர் வரவேற்று, அவரையும் அடியார்களையும் மாடியில் கூடத்திற்குத் தெற்கேயுள்ள தாழ்வாரத்திற்கு அழைத்துச் சென்றனர். குருதேவர் கட்டிலின்மீது அமர்ந்தார்.

வெகுநேரம் காத்திருந்தபின் அவர் கேசவரைக் காணப் பரபரப்புள்ளவரானார். கேசவர் இளைப்பாறிக்கொண்டிருப்பதாயும், விரைவில் அங்கு வருவாரென்றும் அவருடைய சீடர்கள் கூறினர். ஸ்ரீ ராமகிருஷ்ணரது பரபரப்பு அதிகமாகவே, அவர் கேசவருடைய சீடர்களை நோக்கி "இதைக் கேளுங்கள்; அவர் என்னிடம் வரும் அவசியம் யாது? நான் உள்ளே சென்று அவரைப் பார்க்க முடியாதா?" என்றார்.

பிரசன்னர் (தாழ்மையாக): "ஐயன்மீர், அவர் சில நிமிஷங்களில் இங்கு வருவார்.

குருதேவர்: "போங்கள்! நீங்களே இவ்வளவு பிரமாதப்படுத்துகிறீர்கள். நான் உள்ளே செல்வேன்."

பிரசன்னர் குருதேவரது கவனத்தைத் திருப்பும்பொருட்டு, கேசவரைப் பற்றிப் பேசத் தொடங்கினர். "கேசவர் இப்போது முற்றிலும் வேறுபட்டவராயிருக்கின்றனர், தங்களைப் போல அவர் தேவியிடம் பேசுகிறார். தேவி சொல்

இந்நூலிலே ஞானவாழ்க்கைக்கு வேண்டிய பற்பல உபதேசங்களும், பல மதக் கருத்துக்களும், கொள்கைகளும் ஸமரஸ முறையிலே மிகத் தெளிவாக விளைவிடை ரூபமாக விளக்கப்பட்டுள்ளன. பிறவித் துயரத்தால் வாடுவார்க்கும், முக்தி இச்சை ஓங்கப்பெற்றார்க்கும், ஞானவாழ்க்கையில் பற்பல படிகளிலே நிற்பார்க்கும், பண்டிதர்க்கும் பாமரர்க்கும்—அனைவர்க்கும் இந்நூல் ஆறுதலையும் ஊக்கத்தையும் மனத்தூய்மையையும் வைராக்கியத்தையும் ஞான ஒளியையும் ஊட்டும் என்பதில் ஐயமில்லை. 'எல்லாப் பொருளும் இதன்பால் உள; இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை' என்று இதனைப்பற்றிக் கூறுதல் உண்மையாகவே பொருத்தமாயிருக்கும். ஸ்ரீராமகிருஷ்ணரின் 'உபதேச மொழிகள்' என்னும் நூலிற் கண்ட போதனைகள் இன்னின்ன சந்தர்ப்பங்களில் இன்னவாறு இன்னின்னார்க்கு அளிக்கப்பட்டன என்பதை இந்நூல் நன்கு தெரிவிக்கின்றது. இன்னும் அம் மாபெருங் குரவரின் திவ்ய வாழ்க்கையையும், அருட்செல்வத்தையும், பேரன்பையும், தற்போத மொழிந்து மெய்ப்போதம் தலையெடுத்துள்ள மேன்மையையும், அளவற்ற ஞானத்தையும், பக்திப் பரவச நிலையையும் படம் பிடித்துக்காட்டவும் உதவுகின்றது.

இந்நூலைக் கற்றுப் பல்லோரும் சந்தேகந் தீர்ந்து, தத்தம் நெறிகளிலே பயனடைந்து, இறைவனுடைய அருள்பெற்று, இன்புற்று உய்வடைவாராக.

ஆக்கியோன்

சொல்வது என்பதை எனக்குப் போதிப்பாயாக. உன்து திருவுள்ளம் எங்கணும் உயர்ந்த அதிகாரம் பெற்றதாகின்றது; அது உன் குழந்தைகட்கு நன்மையை விளைப்பதாகின்றது. எனது சங்கற்பம் உனது சங்கற்பத்தோடு மருவி ஒன்றுகட்டும்; என்னை நினது கருவியாக்கிக் கொள்க."

ஆழ்ந்த நிலைக்குரியனவும் மிக நெருங்கிய உறவுக்குரியனவும் ஆன காட்சிகளை அவர் பெறலானார். தேவியைக் காண்பதற்காக அவர்க்குத் தியானம் பண்ணவேண்டிய அவசியம் அதன்பின் ஏற்படவில்லை. புற உலகின் உணர்வு இருக்கும்போதே, கோயில்களையும் மரங்களையும், நதியையும், சுற்றிலுமுள்ள மனிதர்களையும் நேரே தெளிவாகக் காண்பது போன்றே, அவர் தேவியையும் காணலானார்.

ஒரு சமயம் மதுர் பாபு பூஜையைக் கவனிப்பதற்காகப் பிறர் அறியாதவண்ணம் கோயிலுக்குட் புகுந்தார். இளைய பூசாரியின் பக்தியிலும் நேர்மையிலும் அவரது மனம் ஆழ்ந்து ஈடுபடலாயிற்று. ஸ்ரீராமகிருஷ்ணர் கல்லுருவத்தை உயிருள்ள தேவியாக மாற்றிவிட்டதாக அவர் உணர்ந்தார்.

ஒரு நாள் ஸ்ரீராமகிருஷ்ணர் காளிக்கு அளிக்கப்படவேண்டிய உணவை ஒரு பூனைக்கு ஊட்டினார். பூஜை ஒழுங்காக நடைபெறுவதற்குள்ள பொறுப்பாளராகத் தம்மைக் கருதிவந்த கோயிற் பூஞ்சோலை மேற்பார்வையாளர்க்கு இது பொறுக்க முடியாததாயிற்று. அவர் ஸ்ரீராமகிருஷ்ணரது பைத்தியக்காரச் செயலை மதுர் பாபுவுக்கு அறிவித்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணரே அந்நிகழ்ச்சியை இவ்வாறு அறிவித்துள்ளார்: "காளி கோயிலில் தேவியே ஒவ்வொரு பொருளாகவும் ஆகியிருப்பதை அவளே எனக்குக் காட்டியருளினாள். எல்லாம் சைதன்யம் நிரம்பி இருப்பதையும் அம்மையே எனக்குக் காட்டினாள். உருவம் சைதன்ய மயம், பீடம் சைதன்ய மயம், நீர்க் கலங்கள் சைதன்யமயம், கதவின் அடியிலுள்ள கல்லும் சைதன்யமயம், பலிங்குத் தள வரிசையும் சைதன்யமயம் — எல்லாம் சைதன்யமயம். அறையிலுள்ள ஒவ்வொரு பொருளும் ஆனந்தத்தில்—பிரமானந்தத்தில்–மூழ்கியிருப்பதையும் கண்டேன். காளி கோயிலின் முன்பு ஒரு தீயோனைக் கண்டேன். ஆனால் அவனிடத்தும் தேவியின் சக்தி அசைந்துகொண்டிருப்பதைக் கண்டேன். இக்காரணம் பற்றியே தேவிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய உணவை ஒரு பூனைக்கு ஊட்டினேன். காண்பதெல்லாம், பூனை உட்பட, யாவும் தேவியே என்பதை யான் தெளிவாகக் கண்டேன். தேவிக்காக வைத்திருந்த நைவேத்தியத்தை யான் பூனைக்கு ஊட்டினேன் என்று கோயிற் சோலை மேற்பார்வையாளர் மதுர் பாபுவுக்கு எழுதலானார். ஆனால் மதுர்பாபு எனது மன நிலையை உட்புகுந்து நோக்கி அறிந்திருந்தார். அவர் (மானேஜருக்கு) மேற்பார்வையாளர்க்கு எழுதிய பதிலில் 'அவர் பிரியப்படியே எதையும் செய்யட்டும். நீர் எதையும் அவரிடம் சொல்லக் கூடாது' என்று உத்தரவிட்டார்.